வர்கள் இந்தி திணிக்கப்பட வேண்டுமென்ற விதத்திலே ஒரு
டைரக்ஷன் கொடுப்பார்களென்று சொன்னால், அந்த எக்சிக்
யூடிவ் உத்தரவை ஒரு மாநில சர்க்கார் தூக்கி எறிய முடியாது.
அப்படிதூக்கிஎறிந்தால், Non Compliance of directions given by the
Cent என்றுசொனால்ட்டியேபோடலாம். நடவடிக்கைஎடுக்கலாம்.
இந்திய அரசியல் சட்டத்திலே வழி வகுக்கப்பட்டிருக்கிறது.
ஆகவே, இந்தித் திணிப்பை எதிர்ப்பதற்காக, எங்களுடைய தேக்கு
மரத் தேகங்களை பலியிடுவோம் என்று நாம் முயற்சிக்கலாம்.
உயிர்விடுவதற்கு தயாராக இருக்கலாம். சிறைச்சாலைகளை
நிரப்புவதற்குத் தயாராக இருக்கலாம். தடியடிப் பிரயோகத்
தைச் சந்திப்பதற்கு, கண்ணீர் பிரயோகத்தைச் சந்திப்பதற்குத்
தயாராக இருக்கலாம். காரணம், இப்போதெல்லாம் அவை
சாதாரணமான சம்பவங்களாக ஆகி விட்டன, நம்முடைய ஆட்
சியிலே. ஆகவே, நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால்,
சட்ட ரீதியாகத் தடுத்து நிறுத்துகிற அதிகாரம் நமக்கு இருக்
கிறதா என்றால், இல்லை. ஆகவேதான் மாநிலங்களுக்கு அதிக
அதிகாரம் வேண்டுமென்ற அளவிலே நாம் சொல்கிறோம்.

அது மட்டுமல்ல, மாநில சர்க்காருக்கு என்று அதிகாரம்
கொடுக்கப்பட்டதற்குப் பிறகு மத்திய சர்க்கார் அதிலேயும் சட்
டத்தை இயற்றலாம். 7-ஆவது ஷெட்யூல் என்று இன்றைக்குப்
பட்டியல் இருக்கிறது. அதிலேயும் சட்டத்தை இயற்றலாம் என்ற
நிலைமை இன்றைக்குச் சட்ட ரீதியாகவே பாதுகாக்கப்
பட்டிருக்கிறது. அதுவும் தவறானது.

அது மட்டுமல்ல, இன்றைக்குப் பல்வேறு மசோதாக்கள்—
நம்முடைய சபாநாயகர் அவர்களுக்குத் தெரியும்—இங்கு நிறை
வேற்றப்படுகின்றன. இந்த மாநில சர்க்கார் நிறைவேற்றுகிறது
என்றால், அனுமதிக்காக அங்கே போகவேண்டியதாக இருக்கிறது

கலைஞர் அவர்கள் இங்கே ஒரு மிகப் புரட்சிகரமான மசோ
தாவைக் கொண்டு வந்தார்கள்; ஆலயங்களில் அர்ச்சகர்களாக,
ஆதி திராவிடர்களும் இருக்கலாம் என்ற ஒரு கருத்தைத் கலைஞர்
அவர்கள் வலியுறுத்தி இங்கே ஒரு மசோதாவைக் கொண்டு வந்
தார்கள். ஐயாவே கோவிலை ஒப்டக் கொள்ளாதவர் ஆயிற்றே?
ஐயாவே, கடவுளை ஒப்புக் கொள்ளாதவர் ஆயிற்றே?
அர்ச்சகரைப் பற்றி பேசியிருக்கிறாரா என்றெல்லாம் கலைஞர்
அவர்கள் பேசாமல், அது வேறு விவகாரம் என்று பிரச்னைக்குப்
போகாமல், ஆதி திராவிட மக்களும் மனிதர்கள்தான், யார்
வேண்டுமானலும் அர்ச்சகர்காளக இருக்கலாம். ஆகவே,
disc: mination of thebasis of castesஇருக்கக்கூடாது என்று சொல்லி
கலைஞர் அவர்கள் அந்த மசோதாவைக் கொண்டு வந்தார்கள்.





ஆனால், சுப்ரீம் கோர்ட்டிலே, மன்னிக்க வேண்டும், சூத்திரர்
கள் தான் என்று தெளிவாகவே தீர்ப்பு வழங்கியாகிவிட்டது.
ஆதி திராவிடர்கள் அர்ச்சகர்களாக வர முடியாது என்று இந்த
நவீன காலத்திலேகூட இந்த 20 ஆம் நூற்றாண்டிலே கூட, தீர்ப்பு
வழங்கப்பட்டுவிட்டது. இப்போது என்ன நிலைமை. மாநில சர்க்
கார் இருக்கிறது. அந்த சட்டத்திற்கு உயிர் கொடுக்க முடியுமா,
உயிர் கொடுக்க முடியாது. அதற்கு யார் உயிர் கொடுக்கலாம்
என்றால், அந்த அதிகாரம் மத்திய சர்க்காரில்பராளுமன்றத்
திலே இருக்கிறதே தவிர, மாநில சர்க்காருக்குக் கிடையாது.
வேலையில்லா திண்டாட்டம் இருக்கிறது, நேஷனலைஸடு பாங்கு
கள் இருக்கின்றன. ஆனால், ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு இங்கே
நிர்வாகத்திலே பங்கு இருக்கிறதா? என்று கேட்டால் இல்லை.
பாரத் ஹெவி எலக்டரிகல் இருக்கின்றது. போர்ட் டிரஸ்ட் இருக்
கிறது. அதிலே வேலை வாய்ப்பு கொடுக்க முடியுமா என்று
கேட்டால் முடியாது. தொழில்களைத் துவக்குவதிலே பல சிக்
கல்கள் இருக்கின்றன. அதைப் போலவே விலைவாசி ஏற்றத்
துக்கு மிக முக்கியமாக இருப்பது கருப்புப் பணம். அதை
பிடிகக முடியுமா—இன்றைக்குக் கருப்புப் பணத்தின் பேரிலே
பல பேர்கள் இன்றைக்கு சமூக விரோதிகளாக இந்தக் காரியத்தை
செய்துகொண்டு இருக்கிறார்கள். அந்த அதிகாரம் வேண்டும்
என்று நம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
சட்ட மன்ற உறுப்பினர் சொன்னார். அதை நான் வரவேற்
கிறேன். காரணம் அந்தக் கருப்புப் பணத்தை கண்டு பிடிப்பது
எப்படி, அந்த அதிகாரத்தை நமது முதலமைச்சருக்குக் கொடுத்
தால்தான் சிறப்பாக இருக்கும். அதிலே எனக்கு நம்பிக்கை
இருக்கிறது. ஆகையினாலே இதுபோன்ற அதிகாரங்களை எல்
லாம் நம்முடைய மாநில சர்க்காருக்கு வழங்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நம்முடைய மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்
பினர் திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய
இந்த சட்ட திருத்தத்தை, மன்னிக்க வேண்டும், சட்டம் திருத்தப்
பட வேண்டும், மாநிலத்துக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற
கோரிக்கைகளை வலியுறுத்தி ஏற்றுக் கொண்டு, அதற்கு அடுத்து
ஒன்றை மட்டும் மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன். திராவிட
முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் நாங்கள் மாநில
சுயாட்சிகொள்கையில் உறுதியாக இருக்கிறோம். தேர்தல் கூட்டு
என்பது வேறு விவகாரம். அதற்காக கொள்கையை நாங்கள் விட
வில்லை. ஆனால் எப்போது எங்களுடைய பிரச்சினையை
வலியுறுத்துவது என்ற வித்தையை அல்லது விதத்தை
நம்முடைய ஆளும்கட்சிக் காரர்கள் இன்றைக்குச் சொல்ல
வேண்டிய அவசியம் இல்லை. காரணம் நான் அவர்களைப்
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழ்
தெரியாத நீதிபதி நீதிமன்றத்திலே இருக்கக் கூடாது

[திரு. அ. ரகுமான்கான்] [1981 மார்ச் 5

என்று தெளிவாகச் சொல்லிவிட்டு, அதை எதிர்ப்பேன் என்றும் சொல்லிவிட்டு, டெல்லியிலே அவர்கள் மத்திய சர்க்காரிடத்திலே கடிதம் எழுதி இருக்கிறார்களா என்று கேள்வி பார்லிமெண்டிலே கேட்டபோது, மறுக்கப்படு கிறது. நான் கேட்கிறேன், சவாலாகவே கேட்கிறேன், முத லமைச்சர் கடிதத்தை எழுதி இருக்கிறாரா, எழுதி இருந்தால் அந்தக் கடிதத்தை இங்கே வையுங்கள் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அதைப் பற்றி மாண்பு மிகு எதிர்க்கட்சித் தலைவர் ஏதாவது கூறி இருக்கிறாரா ?

***திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவர் அவர் களே, அருமை நண்பர் ரகுமான்கான் நல்ல இளைஞர். நன்றாக பல விஷயங்களை சொல்லி இருக்கிறார். அதற்காக அவரைப் பாராட்ட வேண்டும். ஆனால் ஒன்று சொன்னார், என்னுடைய பெயரைச் சொல்லி அமபேத்கார் அவர்கள் சொன்னார்கள். நான் சொல்லுகிறேன் அம்பேத்கார் அவர்களே சொன்னார்கள். (குறுக்கீடு) அவர் சொன்னதையே சொல்கிறேன் '' 1956- ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலே நான் தான் சட்டத்தை இயற்றி னேன். அந்தச் சட்டம் மக்களுக்கு நன்மை பயக்கும் என்று எண்ணினேன். அது நன்மை பயக்கவில்லை'' என்கிறபோது கோவிந்த வல்லபாய் பந்த் அவர்கள் சொன்னதை இங்கே நினைத்துப் பார்க்கிறேன். '' நீங்கள்தானே உருவாக்கினீர்கள்'' என்று கேட்டார்கள். ''ஆம் நான்தான் சட்டத்தை உருவாக்கி னேன். மக்களுக்கும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நன்மை பயக்கும் என்று எண்ணினேன். அது இல்லை என்பதால் அதைக் கொளுத்துவது '' என்று கூட சொன்னார்கள். நான் இந்த விவாதத்திலே பேசியபோது கூட என்ன சொன்னேன் என்றால், மத்திய அரசு கொடுத்த பணத்தை மாநில அரசு ஆதி திராவிடர்களுக்கு அந்த மக்களுக்கு சரியாகப் பயன்படுத்தாத நிலை. இரண்டாவது ஜாதி கேரும் வகையில் ஜாதி பேரால் இருக்கிற வீடுகள் என்ற அவல நிலை. அரசியல் சாசனச் சட்டத்திலே 17 ஆவது பிரிவின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டது என்று சொன்னாலும் தீண்டாமை இன்றும் நாட்டிலே இருப்பது சபாநாயகர் அவர்களுக்குக் கூட நன்றாகத் தெரிந்திருக்கின்ற விஷயம். மேலும் அவர்கள் சொன்னபோது இருக்கின்ற அதி காரத்தை நீங்கள் சரியாக இந்த சமுதாய மக்களுக்குக் கொடுக் காமல், இன்னும் சொல்லப் போனால், கலைஞர் அவர்கள் காலத்திலே 5,000 ரூபாய் செலவில் இலவச வீடு கட்டிக் கொடுக் கப்பட்டது. அதற்கு அரசின் ஒத்துழைப்பு இருந்தது. மாநில அளவிலே அதிகாரம் இருந்தும் அது நிறுத்தப்பட்டுவிட்டது. இப்படி எல்லாம் சட்டங்கள் இருந்தும் கொடுக்கப்பட்ட சட் டத்தை 1952 முதல் இன்று வரை அரசு உத்திரவுகளை ஒழுங்காக கடைப்பிடிக்காத காரணத்தால் இந்த மக்களுக்காக உத்தி



1981 மார்ச் 5] [திரு. எல். இளையபெருமாள்]

யோகத்தில் கொடுத்த அதிகாரத்தை நீங்கள் உபயோகப்படுத்தா மல் இருக்கும்போது ஏன் உங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் தான் அண்ணல் அம்பேத்கார் அன்று என்ன சொன்னாரோ அந்தக் கருத்தைத்தான் என்னுடைய நிலைமையிலே நான் சொன்னேனே தவிர, சகோதரர் ரகுமான் கான் அவர்கள் சொன்னதைப்போல அவருடைய வாக்கு வாதத்தில் நான் குறுக்கிட்டு சொல்லவில்லை. இதிலே ஒன்றை யும் நீங்கள் மறைக்க முடியாது. கொடுத்த அதிகாரத்தை பயன் படுத்தாமல் இருக்கும்போது அதிக அதிகாரம் உங்களுக்குக் கொடுக்க தேவையில்லை, கொடுத்தாலும் உங்களிடம் எனக்கு நம்பிக்கை இல்லை, நீங்கள் துஷ்பிரயோகம் செய்து ஏமாற்று கிறீர்கள் என்று வருத்தத்தோடு சொன்னேன் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1—20]

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஒரு மாநில அரசு மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்று வதற்கு தன்னிடத்தில் உள்ள அதிகாரங்களை அல்லது மாநில சுயாட்சி மூலமாகப் பெறக் கூடிய—இன்னும் பெறவில்லை— எதிர்காலத்தில் பெறக்கூடிய அதிகாரங்களைத் தவறாகப் பயன் படுத்துவார்களானால் அந்த மாநில அரசை மாற்றுவதற்கு அந்த மாநிலத்தில் இருக்கிற மக்களுக்கு உரிமை உண்டு. அப்ப டிப்பட்ட உரிமை இருக்கிற நேரத்தில் மத்திய அரசு எந்தவித மான பயமும் இல்லாமல் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை சுய ஆட்சியை வழங்கலாம் என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து.

## 8. அறிவிப்பு

### பேரவை அலுவல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற் கிணங்க ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பேரவையின் நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்ட மாறுதல் செய்யப் பட்டுள்ளது :—

6—3—1981 (வெள்ளிக்கிழமை) அன்று அரசு அலுவல்கள் என்ற தலைப்பில் முதல் இனமாக அறிவிக்கப்பட்டிருந்த தமிழ் நாடு 1981-ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும் என்பது அன்றைய நிகழ்ச்சி நிரலில் மற்ற சட்ட முன்வடிவுகளுக்குப் பிறகு கடைசி இனமாக எடுத்துக் கொள்ளப்பெறும்.

பேரவைக் கூட்டம், 1980-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் [illegible]-ஆம் நாளன்று ஒத்திவைக்கப்படும்.

## 7. தனியார் அலுவல்கள் (தொடர்ச்சி).

### தனித் தீர்மானம்

### மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் (தொடர்ச்சி.)

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந்துள்ள சீராகவும், வேகமாகவும் இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்கள் முன்னேற வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்கின்ற வாய்ப்பு பெற்றமைக்கு நன்றி தெரிவித்து, அந்த வாய்ப்பின் அடிப்படையில் ஒரு சில கருத்துக்களைக் கூற முன் வருகிறேன். எல்லோரும் 45 நிமிடம் 50 நிமிடம் பேசிவிட்டு, சபை முடிவதற்கு 5 நிமிடம் இருப்பதற்கு முன்பு, என்னை அழைத்து இருக்கிறார்கள். நேரம் குறுகி இருக்கிறது என்ற அடிப்படையில் மீண்டும் இந்தத் தீர்மானத்தின் மீது வலியுறுத்திப் பேசுகின்ற வாய்ப்பு இந்த அவையில் ஏற்படுமானால் தொடர்ந்து நான் பேசுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களைக் கேட்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

இந்தப் பேச்சைப் பேசுகிறபோது, இடையிடையே ஆளுகின்ற கட்சியை எதிர்க்கின்றவர்களை கொஞ்சம் வேகமாகவும், நாசூக்காகவும், திட்டியோ அல்லது வசை பாடியோ அல்லது மறைமுகமாகத் தாக்கியோ அல்லது அவர்கள் நடந்து வந்த பாதைகளை அடையாளம் காட்டியோ பேசி மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கிற நிலையில் நான் இல்லை என்பதையும் அது என்னுடைய வேலை இல்லை, அது எனக்குத் தேவை இல்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகிறேன். என்னுடைய உரையைத் துவக்குவதற்கு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன ஒரு கருத்தை உங்கள் மத்தியில் வலியுறுத்தி, அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இருபத்தோரு ஆண்டுகளுக்கு முன்பு இந்த மாமன்றத்தில்—1960 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5 ஆம் நாளில் பேசியிருக்கிறார்கள். வெள்ளைக்காரர் ஏகாதிபத்தியம் போய் இன்று உள்நாட்டு ஏகாதிபத்தியம் வந்து இருக்கிறது. வெள்ளைக்காரர் ஏகாதிபத்தியத்தை மற்றவர்களிடத்தில் அளித்து விட்டுப் போய் விட்டார்கள். இப்போது இருக்கும் நிலைமையைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கு இந்த மாமன்றத்தில் நான் வாய்ப்பு பெற்று இருக்கிறேன். அந்த





வாய்ப்பின் அடிப்படையில் உரிமைகளை தனி நபர்கள் அல்லது உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வது நியாயம் என்ற அடிப்படையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பல கருத்துக்களை அன்று எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் என்று மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பது—பெங்களூரில் இருக்கிற நாட் விமானத் தொழிற்சாலையில் பங்கு கேட்பது அல்ல, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பது, சித்தரஞ்சன் இன்ஜின் தொழிற்சாலையில் பங்கு கேட்பது அல்ல, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பது, விசாகப்பட்டினத்தில் இருக்கும் கப்பல் கட்டும் தொழிற்சாலையில் பங்கு கேட்பது இல்லை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பது—பல கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்துக் கட்டப்பட்ட பக்ராநங்கல் திட்டத்தில், பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கட்டப்பட்ட கோசி திட்டத்தில், உலகத்தைச் சுற்றி தார் ரோடே போடலாம் என்கிற அளவிற்கு சிமெண்ட்டையும் கல்லையும் உபயோகித்து வட நாட்டில் கட்டப்பட்டு இருக்கின்ற பக்ரா நங்கல் திட்டத்திலோ, அல்லது கோசி திட்டத்திலோ கிடைக்கும் லாபத்தில் தமிழகத்திற்கு பங்கு கேட்பதற்காக மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் கேட்கவில்லை. பிலாய் ஆனாலும், பத்ராவதி ஆனாலும், ரூர்க்கேலா ஆனாலும் அங்கிருக்கிற கனி வளங்களிலிருந்து கிடைக்கிற பணம் எல்லாம் அல்லது செல்வ செழிப்பு எல்லாம் இந்த மாநிலத்திற்குத் தேவை என்ற அடிப்படையில் இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரம் கேட்கவில்லை.

1927-ல், 1930-ல், 1920-ல் கூடிய காங்கிரஸ் கட்சியினுடைய மாநாட்டுத் தீர்மானமே இந்த மாநிலத்தில் அல்லது எல்லா மாநிலங்களிலும் தியாக உணர்வுகளை, விடுதலை உணர்வுகளை வெள்ளையனை வெளியேற்றுகின்ற வழிவகைகளை ஆராய்ந்து, தீர முடிவெடுத்து, நாடு முன்னேற்றத்திற்குச் செல்லவேண்டுமென்று சொன்னால் இந்த நாட்டின் மொழிவாரி மாநிலங்களை ஆதரிக்க வேண்டும்; மொழிவாரியாக மக்களுக்கு உணர்வுகளை, ஏற்படுத்த வேண்டுமென்ற அந்த காங்கிரஸ் கட்சியினுடைய பழைய கொள்கையின் அடிப்படையில்தான் இன்று மாநிலங்களுக்கு நாம் அதிக அதிகாரம் கேட்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பது, யார் கையிலே அந்த அதிகாரத்தைக் கொடுப்பது, கொடுக்கப்பட்ட அந்த அதிகாரத்தால் பெற்ற பலன்கள் செவ்வனே செயல்படுத்தப் பட்டதா என்பதை மாண்புமிகு பெரியவர் அருமை இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் எடுத்துச் சொன்னார். யார் கையிலே மாநில அதிகாரங்களைக் கொடுப்பது என்பதில் பிரச்சினை இல்லை. அதைத் தடுப்பதற்கு திட்டம் இருக்கிறது, சட்டம் இருக்கிறது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

[திரு. கோவைத்தம்பி] [1981 மார்ச் 5

ஆனால் நான் புதிய கருத்து ஒன்றைச் சொல்கிறேன் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பது என்பது பலருடைய பிரச்சினையாக இருந்தாலும் ஒன்றை முதலிலே இந்திய தேசிய காங்கிரசைச் சேர்ந்தவர்கள் நன்றாக, உன்னிப்பாக, உற்று நோக்கிக்கொள்ள வேண்டுமென்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம் பேசிய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் கூட, நாயனார் அவர்கள் கூட தமிழ் நாட்டுக்கு முதலமைச்சரா? தமிழ்நாட்டுக்கு இரண்டு முதலமைச்சர்களா என்ற கேள்வியை எழுப்பினாரே. 500 மைல்களுக்கு அப்பால் இருந்து நாயனார் அவர்கள் தமிழ்நாட்டைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்ல முடியாது என்ற நினைவு தேசிய நீரோட்டத்தில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்களுக்கு இருக்கும்போது 1500 மைல்களுக்கு அப்பால் இருக்கிறவர்கள் சொல்லுகின்ற ஒரு கருத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனப்பக்குவம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்திருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது இந்திய தேசிய நீரோட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை விட அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இந்த தேசிய ஒருமைப்பாட்டில் மிகப்பெரிய நம்பிக்கை இருக்கிறது......

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவரவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் என்ற பிரச்சினையிலே நான் நேற்று பேசவில்லை. ஆனால் ஒரு மாநிலத்தில் இருக்கிற ஒரு சட்டமன்ற உறுப்பினரை குறைகூறி பேசியதை வைத்து, அதை ஏற்றுக் கொள்கிற முதலமைச்சர் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருக்கிறாரே என்பதால் தமிழ்நாட்டை ஆளுவது தமிழ்நாட்டு முதலமைச்சரா அல்லது கேரளத்தினுடைய முதலமைச்சர் நாயனாரா என்று கேட்டேனே தவிர மாநிலத்தினுடைய அதிகாரத்திலே அல்லது பொருளாதாரத் திட்டத்திலே அல்லது சமூகத் திட்டத்திலே அல்லது அரசியல் பிரச்சினையிலே பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவைத்தம்பி :** உதாரணம் என்று சொல்வதானால் அதறகு காலம் இல்லை. 1960 ஆம் ஆண்டு ஒய். பி. சவான் அவர்கள் மகாராஷ்டிரத்தினுடைய முதலமைச்சராக இருந்த போது ஆந்திராவைப்பற்றி என்ன சொன்னார் என்று சொன்னால் அதற்கு 10 அல்லது 15 நிமிடங்கள் தேவைப்படும். ஆகவே, அந்த கருத்தில் அடிப்படையிலே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்ற அடிப்படையிலே மற்ற மாநிலங்களை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் மதிக்கிறது என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகின்ற கருத்துக்கள் எல்லாம், [illegible]



1981 மார்ச 5] [திரு. கோவைத்தம்பி]

தேசமானாலும் அல்லது ஸ்ரீலங்கா ஆனாலும் அல்லது மலேஷியா ஆனாலும் அல்லது மக்கள் சைனாவானாலும் உலகத்தை, ஆசியாவைச் சுற்றியிருக்கிற நாடுகளை தயவுசெய்து உற்றுப்பார்க்க வேண்டும் என்றும், இந்தியா உருவாக்கப்பட்ட இந்தியா, இந்தியா ஒன்றுபடுத்தப்பட்ட இந்தியா, இந்தியாவை பலப்படுத்துவதற்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முன்னணியில் நிற்கிறது.

ஆனால் 3 அடி அஸ்திவாரம் தோண்டி, அதன் மேலே அங்குலம் அங்குலமாக வீடுகள் கட்டவேண்டுமென்றுதான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நினைத்துக்கொண்டிருக்கிறதே ஒழிய, அஸ்திவாரத்தை 3 அங்குலம் தோண்டி, 3 அடி உயரத்தில் கட்டிடம் கட்டுவதானால் அந்தக் கட்டிடம் நிற்காது என்பதை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கட்டிடத்தை எழுப்புவதற்கு எவ்வளவு அஸ்திவாரம் தேவைப்படுகிறது என்ற உணர்வின் அடிப்படையில் எழுப்பப்படுகிற கட்டிடம் நிலைத்து நிற்பதைப் பார்க்கலாம். தேசிய ஒருமைப்பாட்டில் பேசுகின்ற மொழி உணர்வுகளை, கலாச்சார உணர்வுகளை, பண்பாட்டு உணர்வுகளை, நாகரிக உணர்வுகளை, தங்களுடைய இன உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு இந்திய தேசிய நீரோட்டத்தில் தடை இருக்குமானால் அந்தத் தடை மிகவும் பயனளிக்க கூடிய தடையாக இருக்காது என்பதையும், அதனால் தேசிய ஒற்றுமைக்கு பலவீனம் ஏற்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்** (திரு. ஜே. எஸ். இராசு): திரு. கோவைத்தம்பி அவர்கள் அடுத்த தனியார் அலுவல்கள் நாளன்று தொடர்ந்து பேசுவார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்: எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

59. 1981 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1981).

[1981 மார்ச் 6

களை எக்ஸ்ரே மூலம் பரிசோதிக்க வேண்டும். அப்படி எக்ஸ்ரே
மூலம் பார்க்கிறபோது ஒரு துளை போட்டார்கள். அந்தத்
துளையே. .பெய்லூருக்குக் காரணமாகப் போய்விட்டது. ஆக இப்
படியெல்லாம் நடைமுறைக் குறைபாடுகள் பி.எச்.இ.எல். நிறு
வனத்தில் இருக்கின்றன. இருந்தாலும் அவர்கள் நம் நாட்டின்
பொறியாளர்கள் என்ற வகையில் அனுபவரீதியாக ஒவ்வொன்றாக
நாம் இவற்றைச் சரிசெய்து சீராக அமைக்க வேண்டியிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தமிழ்நாட்டில் மின் நிலையங்
கள், அது தூத்துக்குடி அனல் மின்நிலையமாக இருந்தாலும்
சரி அல்லது எண்ணூர் அனல் மின் நிலையமாக இருந்தாலும் சரி
பழுதடைந்துவிடுகிற காலங்களில் அது விரைவாகப் பழுது பார்க்க
ப்படாமல் மாதக் கணக்கில், ஆண்டுக்கணக்கில் காலதாமத
மாகி வருகிறது என்று சொல்லப்படுவது உண்மையா? தூத்துக்
குடி மின் நிலையத்தில் இயந்திரங்கள் பழுதடைந்தபோது எவ்
வளவு காலம் அது பழுதுபார்க்கப்படாமல் இருந்தது? எப்போது
அது சரிபார்க்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்
பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாதாரணமாக
அனல் மின் நிலையங்கள் உற்பத்தியில் ஈடுபட்டு ஒரு ஆண்டு
வரை சில அடிப்படைத் தொந்தரவுகள் இருக்கும். ஆனால்
ஒரு ஆண்டுக்குப் பிறகு அது சரியாக இயங்கிவிடும். தூத்துக்
குடியில் உள்ள முதல் யூனிட்டைப் பொறுத்த வரையில்
ஜூலை 1979-ல் இருந்து ஜூலை 1980 வரை அது சரியாக
இயங்கவில்லை. அதில் பல்வேறு குறைபாடுகள் எல்லாம் இருந்
தன. அதனால் நமக்குச் சிரமங்கள் ஏற்பட்டன. ஆனால் அக்
டோபர் 1980-ல் இருந்து, அதாவது நிலக்கரிக்கு மாற்றப்பட்டு
இந்த ரிப்பேர்கள் எல்லாம் செய்த பிறகு சராசரியாக மாதம்
ஒன்றுக்கு 75 மில்லியன் யூனிட்டுகள் தருகின்றன. 150 மில்லி
யன் யூனிட்டு வரை தரவேண்டும், ஆனால் இந்த 75 மில்லியன்
யூனிட்டுகளே, தொடர்ந்து வந்தாலே நமக்குப் போதுமானது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தத் தூத்துக்குடி அனல் மின்
நிலையத்தில் இரண்டாவது ஜெனரேட்டர் 1980 ஆம் ஆண்டு
டிசம்பர் மாதம் 17-ஆம் நாளன்று உற்பத்தி தொடங்கியதாக
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இரண்
டாவது ஜெனரேட்டர் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்
கிறதா? அதில் மின் உற்பத்தியின் அளவு எவ்வளவு? மூன்றாவது
ஜெனரேட்டர் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரண்டாவது
யூனிட்டைப் பொறுத்தவரையில் ஜனவரியிலிருந்து அது இயங்க
ஆரம்பித்திருக்கிறது. ஜனவரியில் 36·15 மில்லியன் யூனிட்ஸ்
கொடுத்திருக்கிறது. பிப்ரவரியில் 15·6 மில்லியன் யூனிட்ஸ்



1981 மார்ச் 6]

கிடைத்திருக்கிறது. அதுவும் 75 மில்லியன் யூனிட்டுகள் மாதத்திற்கு தரவேண்டும். அது ஓரளவு தரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். மூன்றாவது யூனிட்டைப் பொறுத்தவரையில் 1982 மார்ச் மாதம் உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ரா. உமாநாத் : சாதாரணமாக நம் நாட்டில் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பிருக்கிறபோது வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதில்லை என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட விஷயம். ஆனால் சமீபத்தில் நமது அமைச்சர் அவர்கள்—பத்திரிகைகளில் பார்த்தேன்—இந்த மின் நிலையங்களுக்கு வேண்டிய இயந்திரங்களை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது தவிர வேறு வழியில்லை என்று கூறியிருப்பதாகப் பார்த்தேன். அப்படி அவர்கள் சொல்வதற்கான காரணங்கள் என்ன? வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வது என்பதில் இப்போது அர்சாங்கத்தின் நிலை என்ன? அதற்கு மத்திய அரசின் ரீஆக்ஷன் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அனல் மின் நிலையங்கள் எப்படி இயங்குகின்றனவோ அதைப் பொறுத்துத்தான் நம் மின் வசதி. அமையும் ஆனால் அனல் மின் நிலையங்கள் பொறுத்து நாம் ஒரு உறுதியான நிலையை அது பி.எச்.இ.எல். நிறுவனமாக இருந்தாலும் சரி—அல்லது மாநில மின்சார வாரியமாக இருந்தாலும் சரி—இன்னும் எய்தவில்லை. இந்தச் சூழ்நிலையில் ஒரு பகுதிக்கு நாம் வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்து போடுவோமானால்—வெளிநாட்டிலிருந்து கருவிகள் இறக்குமதியாக வேண்டும் என்று நான் சொல்லவில்லை—நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். நெய்வேலியில் ரஷ்யன் டிஸைன் போட்டுக் கொண்டிருக்கிறோம்—ஒரு பிரச்னையும் இல்லை. அப்படிப் போடுவோமானால் இங்கே ஏதாவது பிரச்னை ஏற்பட்டால்கூட அது நமக்கு உதவும். ஹாப்பி மிக்ஸ் என்ற அடிப்படையில் இப்போது அனல் மின் நிலையங்களுக்கு வெளிநாட்டிலிருந்து இப்படிப்பட்ட கருவிகள் பெற வேண்டும் என்று விரும்புகிறோம். யூனியன் எனெர்ஜி மினிஸ்ட்ரியைப் பொறுத்த வரையில் அனுதாபமாக கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பி. எச். இ. எல். நிறுவனத்தை நடத்துகிற அமைச்சர் அதை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அதுதான் நிலைமை.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு விரிவான விளக்கத்திற்குப் பிறகும் கேட்பதற்கு கேள்வி இருக்கிறதா என்ன? திரு. அம்பிகாபதி.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மின்சாரம் மிகவும் முக்கியமான ஒரு பிரச்னையாக இருக்கிறது, பகலிலே மின்சாரம் இருந்தால் இரவிலே இருப்பதில்லை. இரவிலே இருந்தால் பகலிலே இருப்பதில்லை. எப்பொழுதும் மின்சாரத்தை தொடர்ச்சியாக தருவது இல்லை. இந்த நிலையில் நெய்வேலியில் இருக்கிற ரஷ்யன் டிசைன் நன்றாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நேற்றுக்கூட போலியோ தடுப்பு மருந்துகளில் ரஷ்யன் மருந்து நன்றாக இருப்பதாக நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சென்னார்கள். எனவே, நெய்வேலியில் இருக்கிற அந்த டிசைனைப் போலவே, ஒரு டிசைனைச் செய்து அதை தூத்துக்குடியில் அமைக்காததற்கு என்ன காரணம்? ஏனென்றால் அப்படிப்பட்ட நல்ல டிசைன்களை அமைக்காமல், மிக மோசமான டிசைன்களைப் பயன்படுத்துவதினால், தமிழகத்தில் மின்சாரம் பாதிக்கப்பட்டு, மின்சாரத் துறை அமைச்சர் மீது அபாண்டம் ஏற்படுகிற வகையில் கடுமையான நிலைமை ஏற்பட்டிருப்பதைத் தவிர்க்க அரசு என்ன பரிகாரம் காணப்போகிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி நிறுவனத்தைப் பொறுத்த வரையில் அது ஆரம்பத்திலேயே ஒரு தனி திட்டமாக, ஆகிய செலவுகளெல்லாம் ரஷ்யன் உதவியோடு பெறப்பட்டு, இயங்கி வருகிறது. ஆகையினால் அதிலே விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டாலும் அதே முறையில்தான் மேற்கொள்வார்கள். ஆனால் தூத்துக்குடி அனல் மின் திட்டம் நாமே போட்டது. நம் ஊரிலேயே செய்யப்படுகிற பொருள்களை வாங்கி அதை அமைக்க முயற்சி செய்திருக்கிறோம். அதனால் இந்தக் குறைபாடுகள். நாமே நம்முடைய காரியங்களைச் செய்துக் கொள்கிறபோது ஏற்படுகிற சிரமம்தான் மின்சாரத் துறை அமைச்சருக்கும் இப்போது ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

சின்னாத்தரபுரம் அருகே பவர் ஹவுஸ்.

*வினாஎண். 397—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் சின்னத்தாராபுரம் அருகே ஒரு பவர் ஹவுஸ் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.



திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சின்னதாராபுரம் பகுதிக்கு பள்ளிப்பட்டு, கரூர் ஆகிய பகுதிகளில் இருக்கிற பவர் ஹவுசிலிருந்துதான் மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. அவை சரிவர சப்ளை செய்யப்படாத காரணத்தால், அங்கேயுள்ள தொழிலாளர்கள் மிகவும் அவதியுறுகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு, சின்னதாராபுரம் பகுதியில் ஒரு பவர் ஹவுஸ் கட்டும் திட்டத்தை அரசு மறு பரிசீலனை செய்ய முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சின்னதாராபுரம் அருகே ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்பதற்காக மின் தேவை வளர்ச்சி இப்பகுதிகளில் இருக்கிறதா என மின் வாரியத்தால் ஆராயப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட வளர்ச்சி இருந்தால், துணை மின் நிலையம் அமைப்பது அவசியமா என்று பார்த்து பிறகு அனுமதி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமசாமியாபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்து.

*வினா எண். 398—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி இராமசாமியாபுரம் அரிசனக் குடியிருப்பில் 1980 ஜூன் இறுதி வாரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைகள் தீ விபத்தால் பாதிக்கப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு என்ன நிவாரணம் அளித்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) 1980-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22-ஆம் நாள் அன்று காலை 11 மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டது. பாதிக் கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை 20.

(ஆ) முழுதும் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் 17-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 200 வீதமும், பகுதி பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் 3-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 50 வீதமும் வழங்கப்பட்டது. மற்றும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 கிலோ அரிசியும், 1/2 லிட்டர் மண்ணெண்ணெயும், ஒரு வேட்டியும் ஒரு புடவையும் வழங்கப்பட்டது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தீ பிடித்து அதனால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் 200 ரூபாய் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அந்த மக்கள் மிக மிக ஏழை எளிய மக்களாதலால், அந்த 200 ரூபாயை வீடு கட்டிக் கொள்ளாமல் செலவு செய்து விடுகிறார்கள். இதனால் அவர்களுக்கு 200 ரூபாயைக் கொடுப்பதற்குப் பதிலாக தீ பிடிக்காத ஆஷ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஓடுகள் போட்டு வீடுகட்டும் வகையில் அவர்களுக்கு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஓடுகளை வாங்கி வழங்குவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

அதேபோன்று சிறு தியேட்டர்கள் அதாவது கீத்து கொட்டகைகள் போட்ட தியேட்டர்கள் தீ பிடித்து எரிந்து 40 பேர்கள் பாதிக்கப்பட்டபோது இத்தகைய தியேட்டர்களுக்கு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஓடுகளைத்தான் போடவேண்டும் என்று அரசு ஆணையிட்டதே, அதைப்போல குடியிருப்புகளுக்கும் கீத்து கொட்டகைகள் போடக்கூடாது என்றும் ஆஸ்பெஸ்டாஷ் சிமெண்ட் ஓடுகள்தான் போட வேண்டும் என்றும் அரசு ஆணையிட முன் வருமா என்றும் அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதிலிருந்து நான் தெரிந்து கொண்டது, செமி பர்மனென்ட் பெர்மிட் வழங்கப்பட்டுள்ள சினிமா தியேட்டர்களுக்கு ஏ. சி. ஷீட்டுகளை வாங்கிப் போடவேண்டும் என்று சொன்னது போல, இதுபோன்ற குடியிருப்புகளுக்கும் ஏ.சி.ஷீட்டுகளை அரசு வாங்கிப் போட வேண்டும் என்று சொல்கிறார் என நினைக்கிறேன். ஆனால் அவர்களுக்கு இழப்பு நிவாரணமாகக் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட தொகை 200 ரூபாய்தான். அதற்குள் இந்த ஏ. சி. ஷீட்டுகளை வாங்கிக் கொடுக்க முடியாது. ஆனாலும் மற்ற ஓடுகளை வாங்கிப் போட்டுக்கொள்ள அது உதவியாக இருக்கும். அவர்களுக்கு ஒரு நிவாரண உதவியாக இந்த 200 ரூபாய் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே தீ விபத்து தொடர்ந்து ஒரே இடத்திலே பல தடவைகள் நடைபெற்றுக்கொண்டு வருவது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஏன் நடைபெறுகின்றது என்பதைப் பற்றி அரசு ஆய்வு செய்ததா? கடந்த 3 ஆண்டுகளாக எத்தனை தீ விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது? அதற்காக இந்த அரசு எவ்வளவு தொகை நிவாரணமாக அளித்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்?



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூராவும் எங்கெங்கே தீ பற்றிக் கொண்டிருக்கின்றது என்ற விவரம் என் கையில் இல்லை தனிக் கேள்வி கேட்டால் சொல்லப்படும். சம்பந்தப்பட்ட தீ விபத்து நெல் அவித்துக்கொண்டிருந்த வீட்டில் தீப் பற்றி, மற்ற குடிசைகளுக்குப் பரவியிருக்கின்றது என்ற விவரம் என்னிடத்தில் இருக்கிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி நம்முடைய மாநிலத்திலே தீயினாலும் வெள்ளத்தாலும் அதிகமாக குடிசைவாழ் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்போது இம்மாதிரி 200 ரூபாய் கொடுக்கிறார்கள். இந்த 200 ரூபாய் உண்மையிலேயே போதாது. எனவே, கலெக்டருக்கு உத்தரவு போட்டு கிராமப் பகுதிகளில் 3,000 ரூபாய் அளவிலே வீடுகள் கட்டுவதற்கு, அந்தக் கடனைக் கொடுக்க உடனடியாக அமுல்படுத்த அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, 100 ரூபாயிலிருந்து இப்பொது 200 ரூபாய் கொடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. துரைராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீப் பிடித்தால் நிவாரணமாக 200 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். அது பாராட்டத்தக்கது. ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த நிலையை அடையும்போது அவர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டுவதற்கு 500 ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, இப்படி பலவிதமாக உதவிசெய்வதை உள்ளிட்டு, மொத்தமாக 500 ரூபாய் இந்த அரசாங்கம் கொடுத்தால், அதிலே தற்காலிகமாக ஒரு நல்ல குடிசையைக் கட்டிக் கொள்வார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தீப் பற்றிக் கொண்டால் ரூ. 2,000 வரைக்கும் தக்காவிக் கடன் கொடுக்கப்படுகிறது. தக்காவிக் கடனுக்கு வட்டி மிகவும் குறைவு. ஆதி திராவிட மக்களுக்கு தக்காவிக் கடனில் வட்டி இல்லை. மற்றவர்களுக்கு வட்டி உண்டு. ரூ. 2,000 வரை கொடுக்கிறோம். அதை வைத்துக்கொண்டு, அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்ள முடியும். அக்கடன் நீண்ட கால தவணையில் வசூலிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1981 மார்ச் 6

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதையே முதலில் சொல்லியிருக்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பிடுவது இன்றைக்கு இருந்தாலும், சட்டத்தின் கீழ் அது வரவில்லை. அது பேந்துவாரம். பேத்துவாரத்தைப் பொறுத்த வரையில் தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திசை திருப்பி விடுகிறார்கள். இதிலிருப்பது .. .. ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குற்றச்சாட்டாக சொல்லக்கூடாது. குற்றச்சாட்டை நான் அனுமதிக்க முடியாது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, திசை திருப்பவில்லை. 75:25 என்பதிலே, இதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதிலே அதிக அக்கரை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 75:25 வாரத்தை எப்படி நிர்ணயிப்பது என்பது சட்டத்திலே தெளிவாக இல்லை. விளைந்தது 75:25 என்று நிர்ணயிக்கிற போது களத்துமேட்டிலே நிர்ணயித்துக் கொள்ளவும், அங்கு பார்த்து கொடுப்பதற்கு ஸ்பெஷல் அதிகாரி நியமிக்கவும் வகை செய்தால் இந்தச் சட்டத்தைச் சரியாக அமல் செய்ய முடியும். இது குறித்து அரசு ஏதாவது ஆலோசனை செய்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் இந்தத் தடை உத்தரவு வாங்கப்பட்டதே அல்லாமல் மற்ற இடங்களில் இதைச் செயல்படுத்துவதற்கு சிக்கல் இல்லை. இதை அதிகமாக நடைமுறைப் படுத்துகிற மாவட்டங்கள் தஞ்சை, திருச்சி மாவட்டங்களாகும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நான் அங்கே செல்கிற போது சம்பந்தப்பட்ட விவசாயிகளை அது எப்படி நடக்கிறது என்று கேட்டிருக்கிறேன். உறுப்பினர் மாண்புமிகு அம்பிகாபதி அவர்களைக் கேட்டிருக்கிறேன். சரியாகத்தான் நடைமுறைப் படுத்தப் படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கேயாவது சிக்கல் இருந்தால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு செய்யும். தேவையானால் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கும் இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக கொள்கிறேன்.



1981 மார்ச் 6]

**திரு. என். பழனிவேல் :** பேரவைத் தலைவர் அவர்களே, 75—25 வாரம் என்பதற்கு எந்தெந்த மாவட்டங்களில் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள், எந்தெந்த மாவட்டங்களில் வாங்கவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பதோடு இந்த வார குத்தகை இடங்களில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஸ்டே வாங்கிய மாவட்டத்தைச் சொன்னால் போதும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, தடை உத்தரவு வாங்கியதற்கும் மாவட்டத்திற்கும் சம்பந்தமில்லை. தனியார்கள்தான் வாங்கியிருக்கிறார்கள். அந்த லிஸ்ட் என்னிடத்தில் இல்லை. என்றாலும் திருப்புதுறை ஆதீனம் போன்றவர்கள் வாங்கி இருக்கிறார்கள். நீதிமன்றங்களில் நாமும் வழக்காடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

**திரு. பொ. உத்திராபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 75—25-ல் இன்றைக்குத் தனியார்கள் ஹைகோர்ட்டிலே ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு சட்டமும் போடுகிறபோது சட்டத்தில் இருக்கிற ஓட்டையை வைத்து தனியார்கள் ஸ்டே வாங்குவதினால் எந்த நோக்கத்திற்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேறுவதில்லை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எட்டு கலம், 7 கலம் என்று குத்தகை அளக்கப்படுகிறது.

களத்துமேட்டிலே கண்டுமுதலுக்கு மிராஸ்கள் வர மறுக்கிறார்கள். தனியாக அதிகாரிகள் போட்டு இந்த வாரத்தை ஒழுங்காகக் கொடுக்கச் செய்ய அரசு உத்தரவாதம் கொடுக்குமா? நிறைவேற்றப்பட்ட சட்டத்தை அமல்படுத்தாமல் தனியார்கள் ஸ்டே வாங்கக்கூடிய ஆபத்திலிருந்து தடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, சட்டத்தை நிறைவேற்றுகிறபொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இது ரொம்ப நல்ல சட்டம் என்று சொல்லி எல்லோரும் சேர்ந்துதான் நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்போது இதிலே எந்த ஓட்டையோ உடைசலோ இருப்பதாகத் தெரிவிக்கவில்லை. எந்தச் சட்டத்திற்கும் இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டத்தின்படி தடை உத்திரவு வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. தடை உத்திரவே கொடுக்கக் கூடாது என்றால் அதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்தினால் ஒழிய முடியாது. எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் தடை உத்திரவு இன்றுள்ள நிலையில் வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. 75:25 கொடுக்க வேண்டுமென்பதற்காக இந்த அரசு எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது.

[1981 மார்ச் 6

சட்டமன்றத்திலே கேள்விகளைக் கேளுங்கள், பதில் சொல்
கிறேன், ஆனால் எங்காவது கொடுக்க வில்லையென்றால்
அதைப்பற்றி சொன்னால் உடனடியாக அதுபற்றி நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது, எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

## தமிழ்க்கலைக் களஞ்சியம்

*வினா எண் 400—திரு. என். கிட்டப்பா : திரு. து. புரு
ஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் தமிழ்க் கலைக் களஞ்
சியம் வெளியிடும் பணி நிறுத்தப்பட்டு விட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(ஆ) தமிழ் வளர்ச்சிக் கழகம் ஓர் தனிப்பட்ட நிறுவனம்.
அந்த நிறுவனத்திற்குத் 'தமிழ் கலைக்களஞ்சியம்' இரண்டா
வது பதிப்புக்காக அரசு மொத்தம் ரூபாய் 5 இலட்சம் மானிய
மாக அளித்திருந்தது. தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கும் களஞ்சிய
வெளியீட்டுப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்களுக்கும்
ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல் காரணமாக இப்பணியை தமிழ்
வளர்ச்சிக் கழகம் நிறுத்தி விட்டது. பணியாளர்கள் 1979-ஆம்
ஆண்டு ஜூன் திங்கள் முதல் தேதியிலிருந்து நீக்கப்பட்டனர்.
தமிழ் வளர்ச்சிக் கழகக் கலைக் களஞ்சிய அலுவலகத்தை கலைத்து
விட்டதாக அந்நிறுவனத்தார் அறிவித்து விட்டார்கள். இந்நிலை
யில் இப்பணியைத் தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனத்தின் மூலம்
தொடர தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. து. புருஷோத்தமன் :** தலைவர் அவர்களே, தமிழ்க்
கலைக் களஞ்சியத்திலே பணியாற்றிய ஊழியர்கள் வேலை
நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களென்று சொன்னார்கள்.
அவர்களை மீண்டும் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள அரசு
ஏற்பாடு செய்யுமா ? வேலை நீக்கம் செய்யப்பட்ட பழைய
ஊழியர்களையே இந்த நிறுவனத்திலேயும் பணியாற்றச் செய்ய
அரசு ஆவன செய்யுமா ?



1981 மார்ச் 6]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர்
அவர்களே, அந்தப் பணியை தமிழ்நாடு அரசு, பாட நூல் நிறு
வனத்தின் மூலம் எடுத்துச் செய்ய இருக்கிறது. அப்படிச் செய்
கிறபோது பணியிழந்த ஊழியர்களில் தகுதியுள்ளவர்களுக்கு
வாய்ப்பு அளிக்கப்படும்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்
களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மொழியியல்
துறையிலிருந்து தமிழ்க் கலைக் களஞ்சியமும் தமிழ் அகராதி
யொன்றும் வெளியிடுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு
அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, அதை அரசு ஏற்று அண்ணா
மலைப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறை அதை வெளி
யிட உதவ முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழ்க் கலைக்
களஞ்சியம் இப்போது இங்கே பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது.
அந்த அடிப்படையில் நூல்களை வெளியிடுகின்ற ஒரு திட்டம்
எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. அவர்களுடைய திட்டம்
வேறு. அந்தத் திட்டத்தைப் பற்றி தனிக் கேள்வி போட்டு
பதிலைப் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, நம்முடைய
பாட நூல் நிறுவனத்தின் மூலமாக தமிழ்க் கலைக் களஞ்சியம்
ஒன்றை வெளியிட அரசு முயற்சிப்பதாக அமைச்சர் சொன்னார்.
ஏடறியாக் காலத்திலிருந்து தமிழ்நாட்டு வரலாற்றை முழுமை
யாக எந்த நூல் வெளியிடும் கழகமும் வெளியிடவில்லையே,
அப்படிப்பட்ட கலைக் களஞ்சியத் தைத்தொகுத்து அதற் காக
நம்முடைய அரசு திட்டம் தயாரித்து வெளியிடுவதற்கு முன்
வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பாட நூல் நிறு
வனத்தை தமிழ்நாடு அரசின் சார்பில் செய்ய வேண்டிய பணி
களுக்காக நாம் பயன்படுத்திக் கொள்கிறோம். தொகுக்கின்ற
பணிகளையெல்லாம் தனிக் குழுக்கள் போட்டு அவர்கள்
தான் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்க் கலைக் களஞ்சியத்
திற்குத் தொகுப்பாளர்கள் குழு போட்டு அவர்கள்தான் தொகுப்
பார்கள். பிறகு அச்சிடுகின்ற பணியைத்தான் பாட நூல்
நிறுவனம் செய்து வருகிறது. அது போன்று வேறு சில நூல்
களையும் நாம் செய்கிறோம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது
போல மேலும் மதுரை மாநகரத்தில் குடிதண்ணீர் பிரச்சினை
வரக்கூடாது என்பதற்காக,. நீண்டகாலத் திட்ட அளவுக்கு
மேற்கே பாயும் கள்ளாறு நதியைத் தடுத்து அதனின்று
கிடைக்கும் நீர் மதுரைக்கு பயன்படும் வகையில் ஒரு குறிப்புத்
திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. அண்மையில் திருவனந்த
புரத்தில் நடந்த தென் மண்டல குழுக் கூட்டத்தில் விவாதிக்
கப்பெறவிருக்கும் நிகழ்ச்சி நிரலில் இப்பொருள் விவாதிப்பதற்
காக சேர்க்கப்பட்டது. அக்கூட்டத்தின் நடவடிக்கைகள் எதிர்
பார்க்கப்படுகிறது.

**திரு. எஸ். ஆண்டித் தேவர் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மதுரையில், ஆற்றுக்கு வட பக்கத்திலே
உள்ள அத்தனை மதுரை வாழ் மக்களுக்கும் சரியாசக்குடிதண்ணீர்
கிடைப்பதில்லை. அதைப் போக்குவதற்கு ஏதாவது திட்டம்
இருக்கிறதா? அதைப் போலவே உலகத் தமிழ் மாநாட்டின்போது
ஏற்படுத்திய குளியல் அறைகளுக்குத் தண்ணீர் சப்ளை செய்ததன்
மூலமாகக் குடிதண்ணிர் தட்டுப்பாடு அதிகமாக ஏற்பட்டிருப்ப
தாகச் சொல்லப்படுகிறது. இதற்கு அரசு என்ன நடவடிக்கை
எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எல். இராகவானந்தம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடைமுறைப்படுத்த
இருக்கிற திட்டம் 302'26 இலட்சம் மதிப்பீட்டில் மதுரை
மாநகரின் குடிநீர் பற்றாக் குறையைப் போக்குவதற்காக போடப்
பட்டதுதான், அடுத்து குளியல் அறைக்குத் தண்ணீர் கொடுத்த
தன் மூலமாக பாதிப்பு ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள். அது
பற்றித் தகவல் சேகரித்து, இந்த அரசு ஆவன செய்யும் என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, மதுரை மாநகர் எல்லைக்குள்ளே இருக்கக் கூடிய சுமார்
10க்கும் மேற்பட்ட கண்மாய்கள் இன்றைக்கு மேடிடப்பட்டு,
அவைகள் எல்லாம் வீடுகளாக ஆக்கப்பட்டிருக்கின்றது. அந்தக்
கண்மாய்களிலிருந்து பாசன வசதி பெற்று வந்த நூற்றுக்ககணக்
கான ஏக்கர் நிலங்களும் குடியிருப்புகளாக மாற்றப்பட்
டுள்ளன. ஆகவே, அந்த 10 கண்மாய்களுக்கும் ஏற்கெனவே
வைகை அணையிலிருந்து வழங்கப்பட்டு வந்த நீரை மதுரை
நகருக்கு குடிதண்ணீர் சப்ளை செய்வதற்காக வழங்க அரசு
உத்தரவு இடுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத்
தலைவர் அவர்களே அப்படி ஒரு உத்தேசம் இல்லை.



**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் குடிதண்ணீர் அபிவிருத்தித் திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஆனால் இப்பொழுது மதுரை நகரத்திலே கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. மின்சார வெட்டின் காரணமாக இது மேலும் கடுமையாக உள்ளது. மதுரை நகராட்சி சபையே நீரேற்றுக் கிணறுகளுக்கு ஜெனரேட்டர் பொருத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கிணறுகளுக்கு ஜெனரேட்டர்களைப் பொருத்தி தற்போது இருக்கக் கூடிய தண்ணீர் பஞ்சத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி செய்த ஏற்பாட்டின் மூலமாக அவ்வளவு தட்டுப்பாடு இருக்காது என்று அரசு கருதுகிறது. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் மீது மதுரை மாநகராட்சி மேயர்அவர்களைக் கேட்டு, ஆவன செய்ய அரசு முயற்சி எடுக்கும்.

## கூவம் நதியின் துர் நாற்றத்தைப் போக்கும் திட்டம்.

*வினா எண் 411—திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் கூவம் துர்நாற்றத்தைப் போக்க அரசின் நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** சென்னை நகரின் கழிவு நீர் கூவம் நதியில் கலந்து அதை அசுத்தப்படுத்துவதை கட்டுப்படுத்தவும் தடுக்கவும் அரசு ஆணைப்படி சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து கூவம் ஆற்றில் கலக்கும் கழிவு நீர் நிலை பற்றி விவரமாக ஓர் ஆய்வு நடத்திஅதனைத் தடுத்து கட்டுப்படுத்துவதற்கான வழி முறைகளை ஆராய்ந்து அதன்படி கீழ்க்கண்ட செயற் பணிகள் திட்டமிடப்பட்டு படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(1) கூவம் ஆற்றில் கலக்கும் கழிவு நீர் நிலைகளை மாற்றி அமைத்து நகரின் புறப்பகுதியில் கொடுங்கையூர், கோயம்பேடு, நேசப்பாக்கம், மற்றும் பெருங்குடி ஆகிய 4 இடங்களிலுள்ள புல் பண்ணைகளுக்கு தனி நீரேற்றுக் குழாய்கள் மூலம் திருப்பி விடுதல்.

[1981 மார்ச் 6

(2) நகரிலுள்ள கழிவு நீரேற்று நிலையம், மற்றும் கழிவு நீரேற்று குழாய்களில் கொள்ளளவு மற்றும் செயல் திறனை அதிகப்படுத்துதல்.

**திரு. ஓ. சிவப்பிரகாசம் :** எடுக்கப்படும் நடவடிக்கைகள், முந்திய அரசாங்கம் எடுத்த கூவம் சீர்திருத்த நடவடிக்கைகள் போல் அல்லாமல் சிறப்புடையதாக இருக்க அரசாங்கம் சிறப்பு கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எடுக்கும் செயல் கள் பயன் உள்ளதாக இருக்கும்படி அரசாங்கம் பார்த்துக் கொள் ளும்.

**திரு. சி. கோபால் :** கூவத்தின் துர்நாற்றத்தை நீக்க கூவம் ஆற்றைச் சுற்றி சிமென்ட் பைப்களால் மூடிவிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ? அப்படியிருந்தால் வீராணம் திட்டம் கைவிடப்பட்டு வெயிலிலும் மழையிலும் கிடக்கிற சிமென்ட் பைப்களை பயன்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதைப் பற்றி நான் ஏற்கனவே படித்து விட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 412, 413, 414, 415 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உடல்நிலை சரியாக இல்லாததால் ஒத்தி வைக்கப்படுகின்றன.

**பத்திரிகையாளர்களுக்கான 3 வது ஊதியக்குழு.**

குறுகிய கால வினா எண் 9—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பத்திரிகையாளர்களுக்கு 3-வது சம்பள கமிஷன் சிபாரிசுகளை அமுல் நடத்த அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

(ஆ) அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசிடம் இருந்து தாக்கீது ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில் மேல் நடவடிக்கை என்ன எடுக்கப்பட் டுள்ளது ?



1981 மார்ச் 6]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே,

(அ) பத்திரிகையாளர்களின் சம்பள விகிதங்கள் பற்றிய தொழில் நீதி மன்றங்களின் ( Tribunals) பரிந்துரைகளை மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளபடி எல்லா பத்திரிகை நிறு வனங்களும் அமுல் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) ஆம்,

(இ) தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள் மேற்கண்ட சம்பள விகிதங்களை எல்லா பத்திரிகை தொழிலாளர்களுக்கும் கிடைக்குமாறு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். பத்திரிகை நிறுவனங்கள் சம்பள விகிதங்களுக்குப் புறம்பாகவும், பகுதி நேர நிருபர்களை வேலை நீக்கம் செய்தல் போன்ற தொழிலாளர் நலனுக்கு விரோதமாகவும் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாத வாறு பார்த்துக் கொள்ள தொழிலாளர் நலத்துறை அலுவலர் களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்கொண்டு சம்பள விகிதங்களை அமல் நடத்துவது சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண இன்று 11 மணிக்கு முத்தரப்பு கூட்டம் நடத்துவதாக இருந்தது. ஆனால் அமைச் சருக்கு அலுவல்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால் அந்தக் கூட்டம் 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ஆம் நாள் அன்று காலை 11 மணிக்கு நடப்பதாக இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** தமிழ்நாடு பத்திரிகை நிருபர் கள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ப்ரா விடன்ட் பண்ட் வசதி கிடையாது. அவர்களுக்கு ஈ.எஸ்.ஐ. வசதிகளும் கிடையாது. எனவே, பலேல்கர் அவார்ட்படி உள்ள சிபார்சுகளை ஏற்காத தமிழ் பத்திரிகைகளுக்கு விளம்பரத்தை யும், பத்திரிகை காகிதக் கோட்டாவையும் நிறுத்த அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இந்த ஊதியத்தை அமல்படுத்தும் அதிகாரம் மாநில அரசுக்கு உள்ளது. 12-ஆம் தேதி நடக்க இருக்கும் கூட்டத்தில் நடைபெறும் விஷயங்களைப் பார்த்து அதன் விளைவுகளை ஒப்பிட்டு அரசாங்கம் ஏற்ற நட வடிக்கை எடுக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** * * பல ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கிறது. அதற்கு அரசாங்க விளம்பரமும், பத்திரிகை காகித கோட்டாவும் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்தப்

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1981 மார்ச் 6

பத்திரிகை நிர்வாகம் ஊழியர்கள் சட்டம் பொருந்தாது என்று சொல்கிறார்கள். இது தடுக்கப்படுமா? ஊழியர்கள் சட்டத்திலிருந்து தப்பிக்க சென்னையிலிருந்து * * மதுரைக்கு மாற்ற முயற்சி செய்கிறார்கள், அதையும் தடுக்க அரசு முன்வருமா?

**திரு. துரைமுருகன் :** அதை நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சம்பளக் கமிஷன் என்று வரும்போது தனிப்பட்ட பத்திரிகைகளைப் பற்றி குற்றச்சாட்டுகள் சொல்லக்கூடாது; * * என்றிருப்பதை நீக்குகிறேன்.

(முற்பகல் 10–10)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** * * * பத்திரிகை அமுல்படுத்துவதாக சொல்லியிருக்கிறது (குறுக்கீடு).

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தற்போது இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டதன் மூலமாக, தங்களுடைய தீர்ப்பு வழங்கப்பட்டதற்குப் பின்னர் எப்படி பதில் சொன்னாலும் கூட, அது வேறு கருத்தாக உருவாகும். ஆகவே, அந்தப் பத்திரிகை பெயர் வந்தது முறையல்ல. அந்தப் பெயர் வந்ததற்குப் பின்னால், அது நல்லதோ தீயதோ அந்தப் பத்திரிகையின் பெயர் இந்த அவைக் குறிப்பிலே இடம் பெறாமல் இருப்பது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தனிப்பட்ட பத்திரிகையைப் பற்றிப் பேசக்கூடாது. பொதுப்படையாகப் பேச வேண்டும். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் சட்டத்தில் விதியிருக்கிறதா என்றெல்லாம் கேட்கக் கூடாது. அந்தப் பெயரை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கவும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே வேலை செய்யக்கூடிய ஒர்கிங் ஜர்னலிஸ்ட், நான்-ஒர்கிங் ஜர்னலிஸ்ட் அனைவரும் இந்தத் திட்டத்தின் மூலம் பலன் பெற வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது. எனவே 12-ஆம் தேதி நடக்கயிருக்கும் கூட்டத்தில் அவைகளைப் பற்றியெல்லாம் விவாதிக்கும். இந்தப்பரிந்துரையை அமுல்படுத்துவதில் இந்த அரசு மிகுந்த அக்கறை காட்டி, அதை செயல்படுத்தும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1981 மார்ச் 6]

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, இது பாலேகர் அவார்ட் பரிந்துரையை அமுல்படுத்துவது பற்றியது. பல்வேறு மாநிலங்களில் இதை அமுல்படுத்தியிருக்கின்றார்கள். முத்தரப்பு கூட்டம் நடத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைக் கூட்டுவதற்கு முன்னதாக பத்திரிகை நிர்வாகங்களுக்கு அவற்றை அமுல்படுத்துவதற்கு ஒரு பிரஷர் கொடுப்பதற்குப் பல்வேறு மாநிலங்களில் அமுல்படுத்தாத பத்திரிகைகளுக்கு, அரசாங்கத்தின் அட்வடைஸ்மென்ட் கொடுக்கப்பட மாட்டாது என்று அவர்கள் பண்ணியிருக்கிறார்களே, அந்த மாதிரி இங்கே நம்முடைய அரசு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் எப்போதும் பிரஷர் கொடுக்க வேண்டுமென்று சொல்வார்கள். இந்தக் கொள்கையை நாங்கள் பின்பற்றவில்லை. அண்ணாவின் பெயரில் நடத்தக்கூடிய கட்சிக்கு, தனி முறை உண்டு. கஜோலிங் முதலில் கொஞ்சம் நைசாக சொல்லியபிறகு, ஸ்டேஜ் பை ஸ்டேஜாக, கடைசியில் பிரஷரைக் கொடுப்போம். உடனே பிரஷர் கொடுப்பது என்பதில் அந்தக் கட்சிக்கும், இந்தக் கட்சிக்கும் ஒத்து வராது. எனவே நாங்கள் இதிலே அவர்களைக் கூப்பிட்டு, இதைச் செயல்படுத்துங்கள் என்று சொல்லுவோம், செயல்படுத்தவில்லை என்றால், அதன் விளைவுகள் என்னவென்று சொல்லுவோம், அது நன்றாக இருக்காது என்று சொல்லுவோம், அதற்குப் பிறகு அமுல்நடத்தவில்லை என்று சொன்னால் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லுவோம், அப்படிச் செய்யவில்லை என்று சொன்னால் நடவடிக்கை எடுப்போம். இப்படி ஸ்டேஜ் பை ஸ்டேஜாகச் செய்வோம். சில பத்திரிகைகள் தருகிறோம் என்று எழுதியிருக்கிறார்கள்; சில பத்திரிகைகள் தொலைபேசி மூலம் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கொடுக்க மாட்டோம் என்கிற தைரியம் யாருக்கு வருகிறது என்பது 12 ஆம் தேதி தெரியும். இந்த அரசைப் பொறுத்தவரையில் அதை அமுல்படுத்துவதில் அக்கறை இருக்கிறது. உங்கள் டாக்டிஸ் வேறு, எங்கள் டாக்டிஸ் வேறு.

**திரு. எம். சின்னராஜ் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அரசு செய்துள்ள சிபார்சை, பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு நடத்தாத பத்திரிகைகள் எவை எவை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் எல்லாம் 12 ஆம் தேதி கிடைக்கும், தற்சமயம் என்னிடத்தில் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதே பொருள்பற்றி ஒரு குறுகிய கால வினாவை எழுப்புவதற்கு நான் அமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, அவர்கள் இதைப்பற்றி எழுப்பவேண்டாம் என்று......................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது [illegible] வினாவைப்பற்றிச் சொல்லுங்கள். உங்களுக்கும், [illegible] என்ன நடந்தது என்பதைப் பற்றிச் சொல்லக்கூடாது. [illegible] பூராவும் சொல்வதற்கு இது நேரமில்லை. குற்றச்சாட்டாகக் கேள்வி நேரத்தில் சொல்லக்கூடாது. கேள்வியாகக் கேளுங்கள். நான் அனுமதி தருகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவிலே பல்வேறு உறுப்பினர்கள் பங்கு கொண்டிருக்கிற காரணமே இது பத்திரிக்கைத் தொழிலே ஈடுபட்டிருக்கக்கூடிய பத்திரிகைத் தொழிலாளர்களுக்கு, அவர்கள் மேம்பாடு காண வேண்டுமென்ற ஒரே நோக்கம்தான். பீகார், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் இதனை அமுல் படுத்தாத பத்திரிகைகளுக்குஅரசு விளம்பரம் கொடுப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆரம்பத்திலேயே 'பிரஷர்' கொடுக்கவேண்டாம் என்று சொன்னார்கள். அந்தத் தொழிலிலே இருக்கிற பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் அவல நிலையைக் கருதி விரைவிலே செயல் படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே,

Und r S ct on 17 (b) cf the Act actual enforc ment has to be done by t e State G v rnm nt.

என்போர்ஸ் செய்யவேண்டியது அரசினுடைய கடமை; இதை முழுமையாகச் செய்யும் என்பதை நான் சொல்கிறேன். இதை ஒரு வித்தியாசம் எப்படி செய்வது என்பது; இந்த அரசுக்கென்று ஒரே ஒரு அணுகு முறை இருக்கிறது; புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அந்த அணுகுமுறையைக் கையாளும்.

**திரு. துரைமுருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிக்கைத்தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீட்டுவசதி வாரியப் பொறுப்பையும் வகிப்பதால் இந்த நேரத்தில் உங்கள் மூலமாகக்கேட்கிறேன்—கோட்டாக்கள், வீடுகள் ஒதுக்கப்படுவது சரியாகக் கிடைக்கவில்லை என்பதை......................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்களுக்கு மேலும் எத்தனையோ இலாக்காக்கள் இருக்கலாம்.

**திரு. மு. அம்பிகாபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரிக்கையாளர்களுக்கு மூன்றாவது சம்பளக் கமிஷன் சிபார்சு செய்யப்பட்டது, எந்த தேதியில் செய்யப்பட்டது. இதை நம் மாநிலத்தில் அமுல்படுத்துவதற்கு கோரிக்கை விடுக்கிறோம், வேண்டுகோள் விடுக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்

1981 மார்ச் 6]

னார்கள். இதைப் பத்திரிகையாளர்கள் அமுல் நடத்தாதது மட்டுமல்ல, பத்திரிக்கைத் தொழிலாளர்களைக் கொத்தடிமை போல் வைத்திருக்கிறார்கள், சம்பளம் கொடுப்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பத்திரிக்கை ஆபீசிற்குள் போக வேண்டாம், பிரச்சினையைப்பற்றிப் பேசவும்.

**திரு. மு. அம்பிகாபதி :** அமுல் நடத்தாத பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்க மாட்டோம் என்றாலே வேலை நடக்கும். இரண்டாவது சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு பத்திரிக்கை கோட்டா கொடுக்க மாட்டோம் என்று எழுதினாலும் இதை அவர்கள் அமுல்படுத்துவார்கள். எந்தெந்தப் பத்திரிக்கை இன்னும் அமுல்படுத்தவில்லை, எந்தத் தேதியில் சிபார்சு ஆனது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வாரா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பட்டியலைப் படித்தால் அதிக நீளமாக இருக்கும் என்பதால் தான் படிக்கவில்லை. சில பத்திரிகைகள் அமுல்படுத்தி இருக்கின்றது. சில பத்திரிக்கைகள் அமுல் படுத்துவதாக தொலைபேசி மூலம் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் பேசி ஒரு முழுமையான உருவம் கிடைப்பதற்கும் இன்னும் ஒரு ஆறு நாள் காத்திருக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய பொறுப்பிலிருந்து மாநில அரசு நழுவாது. இதில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் நீங்கள் நினைக்கிறபடி நாங்கள் நடக்கவேண்டுமென்று நீங்கள் நினைக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். ....we have got our own methods modus operandi.

**திரு. ப. நெடுமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 12 ஆம் தேதி நடந்த இருக்கிற கூட்டத்திலே எடுக்கப்படுகிற முடிவினை, சி. பி. எம். சொல்கிற அந்த 'பிரஷர், முறையிலே இல்லாவிட்டாலும், அழுத்தமான முறையிலே இந்த அரசு அமுல் நடத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எல். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மிக அழுத்தமான முறையிலே கையாண்டாலும் வெடித்து விடும். அமரர் அண்ணா அவர்கள் சொல்வார்கள், 'சாப்ட் பெடலிங்' என்று சொல்வார்கள் "our steps are measured" செயல்படும்போது "h step slowly" என்றுதான் சொல்வார்கள். அதே முறையே வைத்து இந்த அரசு நடக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு) ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கு

## 2. தகவல் கோரல்.

### திருச்சி, கோவை சிறைச்சாலைகளில் அளிக்கப்படும் உணவு.

*டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய முன் அனுமதியோடு, இங்கே ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த அரசின் கவனத்திற்கு, குறிப்பாகவும், சிறப்பாகவும், சிறைச்சாலைத் துறை நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரு ஒரு மனிதாபிமான பிரச்சினை. தமிழ் நாட்டில் அண்மையில் நடைபெற்ற அரசாணை எரிப்புப் போராட்டத்தில், பல சிறைச்சாலைகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தொண்டர்கள் பல்லாயிரக்கணக்கில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். இரண்டொரு சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேலூரைப் பொறுத்தவரையில் ஓரளவு அந்தக் குறைபாடு நீக்கப்பட்டிருக்கின்றது. அப்படி நீக்கப்பட்டதற்கு நான் அரசிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்தில், திருச்சி, கோவை போன்ற இடங்களில் இன்னும் அந்தக் குறைபாடுகள் நீக்கப்படாமல் இருக்கின்றன. நேற்று திருச்சி சிறைச்சாலையிலுள்ள கைதிகள் உண்ணாமலேயே இருந்திருக்கிறார்கள் ;

[முற்பகல் 10–20]

அங்கே அவர்கள் நடத்தப்படுகின்ற முறையும் கொடூரமானதாகவும் ஈவு இரக்கமற்றதாகவும் இருக்கிறது என்று எனக்குச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஒரு வேளை அங்குள்ள அதிகாரிகளுக்குத் தகுந்த வசதி வாய்ப்புகளை கொடுக்காத காரணத்தாலோ அல்லது செய்துகொடுக்க விரும்புகின்ற வசதி வாய்ப்புகள் துரிதமாகப் போய்ச் சேராத காரணத்தாலோ அந்த நிலை ஏற்பட்டிருக்கக் கூடும் என்று கருதுகிறேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்களும் உறுதியளித்தார்கள். உடனடியாகக் கவனிக்கப்படும் என்று. அந்தத் துறை அமைச்சர் அவர்களும் என்னிடத்திலும் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களிடத்திலும் இது குறித்துப் பேசி உடனடியாக ஆவன செய்வதாகச் சொன்னார்கள். இருந்தும்கூட அங்கு எதுவும் நடைபெறவில்லை. தங்களுடைய அனுமதியோடு இங்கே இந்தப் பொட்டலத்தைக் காட்ட விரும்புகிறேன். தங்களிடத்திலே காட்டினேன் அனுமதியைப் பெற்று. (வேகாத சோளப் பொட்டலத்தைக் காட்டினார்கள்) இது அங்குள்ள கைதிகளுக்குத் தரப்படுகிற உப்புமா. அளவு அல்ல இது ; இது உப்புமா





வுக்குத் தரப்படுகிற சோளத்தின் நொய்யும் அல்ல, சமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட வழங்கப்படுகிற உப்புமா, நான் எடையைச் சொல்லவில்லை. தரத்தைச் சொல்லுகிறேன். அமைச்சர் அவர்களும் கருணை கூர்ந்து இதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாத்திரம் உரிய பிரச்சினையல்ல, இந்த மன்றத்திலே இருக்கிற எல்லா எதிர்க்கட்சிகள், ஆளுங்கட்சியிலே உள்ள மனிதாபிமானம் உள்ள அத்தனை பேருக்கும் உரிய பிரச்சினை என்ற காரணத்தினால் உடனடியாக ஆவன செய்வதற்கு அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ளுமா என்று கேட்டு இந்தப் பிரச்சினையை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடந்த போராட்டத்தையொட்டி வேலூர், திருச்சி, கோவை போன்ற சிறைகளில் இருக்கின்ற கைதிகளுக்கு குறிப்பாக குடிதண்ணீர் பற்றவில்லை என்ற பிரச்சினையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் என்னிடம் நேரடியாகக் கூடச் சொன்னார்கள். உடனடியாக திடீரென சற்று 1000-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கு எடுத்துச் செல்லப்பட்டதால் அதிகாரிகளுக்கு நிர்வாகச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது, அந்த நிலைமையில் பிரைவேட் லாரிகளைக் கூட ஏற்பாடு செய்து தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதுபோல் வேலூரில் அந்தக் குறை நீக்கப்பட்டது. பேராசிரியர் அவர்கள் நேற்றுப் பிற்பகலில் திருச்சி சிறையிலே இருக்கிற பிரச்சினை பற்றிச் சொன்னார்கள், மாண்புமிகு உறுப்பினர் அன்பிலும் அதைப் பற்றிச் சொன்னார்கள். உடனடியாக உத்திரவுபோடப்பட்டு அங்கே குடிநீர்ப் பிரச்சினை நீக்கப்பட்டுவிட்டது. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உப்புமா பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது சிறையிலே உணவினுடைய தரத்தை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே சோள உப்புமாவுக்குப் பதிலாக அரிசி மாவை, அரிசியினால் ஆன மாவை தரவேண்டுமென்றுகூட நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்தப் பிரச்சினை ஒரு வேளை அதிகப்படியான கைதிகள் வந்த காரணத்தால் நிர்வாகப் பிரச்சினை ஏற்பட்டதோ எது எப்படியிருந்தாலும், சிறை அதிகாரிகளோடு தொடர்புகொண்டு கைதிகளுக்கு தகுந்த வசதிகளைச் செய்வதற்கும் உணவு போன்றவற்றில் இருக்கிற குறைபாடுகளையும் போக்குவதற்கும் அரசு ஆவன செய்யும்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கத்திவாக்கம் நகரியத்தில் சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். கத்திவாக்கம் நகரியத்தில் சுடுகாட்டுக்குச் செல்வதற்கான வழி மூடப்பட்டதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை அரசுக்கு வலியுறுத்த பேரவை உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் நேற்று இரவு முதல் உண்ணா விரதம் மேற்கொண்டுள்ளதால் அங்கு பதட்ட நிலை ஏற்பட்டுள்ளதால் அதுபற்றி விவாதிக்கப் பேரவையில் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன், எஸ். என். இராமசாமி, டாக்டர் கே. சௌரிராஜன், பி. தீர்த்தராமன், ரா. உமாநாத், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, தி. கா. நல்லப்பன், ப. பொன்னுரங்கம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்.

இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுருக்கமாக திரு சித்தன் அவர்கள் சொல்லவேண்டும்.

**திரு. என். எஸ், வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கத்திவாக்கம் நகரியத்திலே நீண்டநாட்களாக ஒரு சுடுகாடு இருந்து வருகிறது. அந்தச் சுடுகாட்டிற்குச் செல்கின்ற வழியை எண்ணூர் பவுண்டரி நிறுவனம் வாங்கிக் கொண்டிருக்கிறது. அதன் காரணத்தினால் அந்த வழி அடைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை சமீப காலமாக எழுந்து அது பற்றி 23 ஆம் தேதியன்று அந்த ஊர்ப் பெரியவர்கள், காவல் துறையினர், நிர்வாகத் துறையினர் அனைவரும் சேர்ந்து பேசி சுமுகமாகத்தீர்ப்பதற்குப்பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது.

வேறு இடத்திலே சுடுகாட்டுப் பாதை அமைக்கப்படும் வரையில் இந்த வழியாகப் பிணம் எடுத்துச் செல்வதற்கு அந்தச் சொந்தக்காரர்கள் வழி கொடுக்க வேண்டுமென்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால் திடீரென்று எண்ணூர் பவுண்டரி நிர்வாகத்தினர் அந்தச் சுடுகாட்டுப் பாதையை அடைத்துவிட்ட காரணத்தினால் அந்தப் பாதை வழியாகப் பிணங்களை எடுத்துச் செல்ல முடியாத அளவிற்குச் சோகமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இன்றைக்குக் காலையிலேகூட ஐயப்பன் என்ற சிறுவன் இறந்து சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை உருவாகியிருக்கிறது. எனவே, இந்தப் பிரச்னையைப் பற்றி அரசியல் பெருமக்களிடமும், அதிகாரிகளிடமும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் எடுத்துச்சொல்லியும் கூட அவர்கள் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது மனிதாபிமானமிக்க பிரச்னை, எல்லோரையும் பாதிக்கும் பிரச்னை என்பதாலே அரசின் கவனத்தை ஈர்க்கின்ற முறையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் நேற்றிரவு முதல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

இந்தப் பிரச்னை ஆளுங்கட்சி தவிர எல்லாக் கட்சியினருக்கும் உள்ள மிக முக்கியமான பிரச்னையாக இருப்பதால், திரு. குமரி அனந்தன் அவர்களோடு வேறு சில கட்சியினரும் உண்ணாவிரதத்தை ஏற்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்கும் எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் இடையில் அரசியல் ரீதியாகக் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இது மனிதாபிமானப் பிரச்னையாக இருப்பதால் இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று எடுத்துச் சொல்லி, வாழும்போதுதான் நிம்மதியாக இருக்க முடியவில்லை என்றாலும் சாகின்றபொழுதும் நிம்மதியாகப் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கின்ற பிரச்னை என்பதாலும் தமிழகத்தில் இதுபோன்ற பிரச்னைகள் இனிமேல் எழக்கூடாது என்பதற்காகவும் இப்பிரச்னை பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையில் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவரவர்களே, கத்திவாக்கம் நகரியத்திலே பரம்பரையாக, பல்லாண்டுக் காலமாகப் பாதையாக இருந்த அந்தச் சுடுகாட்டுப் பாதையை எண்ணூர் பவுண்டரி நிர்வாகம் இன்றையதினம்மூடியிருப்பதால், சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை தடைப்பட்டிருப்பதால் பல பெரியவர்கள், ஊர் முக்கியஸ்தர்கள், மற்றும் எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் ஆகியோர்கள் அத்தனைபேர்களுடனும் எங்களுடைய இயக்கத் தலைவர் இலக்கியச் செல்வர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1981 மார்ச் 6

கத்திவாக்கம் ஊராட்சியாக இருந்த நேரத்திலேயேகூட அங்கே அந்தப் பாதை வேண்டுமென்று கேட்ட நேரத்திலே மறுக்கப் பட்டிருக்கிறது ; பிறகு, அது பேரூராட்சியாக ஆனதற்குப் பிறகு அந்தச் சுடுகாட்டுப் பாதையை எண்ணூர் பவுண்டரி தனக் குச் சொந்தமாக ஆக்க வேண்டுமென்று எண்ணிய காலத்தி லேயும் அது மறுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று அது நகரிய மாக ஆனதற்குப் பிறகும் மறுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், 1977ஆம் ஆண்டிலே, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் இல்லாத காலத்திலே ஸ்பெஷல் ஆபீசர் திரு. கணபதி என்பவர், தனி அதிகாரி அவர்கள் அந்தச் சுடுகாட்டுப் பாதையை எண்ணூர் பவுண்டரிக்கு வழங்கியிருக்கிறார்கள். அதை எதிர்த்துக் கத்திவாக்கம் பொதுமக்கள் வழக்குத் தொடர்ந்தார்கள். ஆனால், எக்ஸ்பார்ட்டி என்ற முறையில் அவர்களுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது.

பிறகு 1981ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22ஆம் தேதி யன்று டி.எஸ்.பி. திரு. கருப்பையா அவர்களும், வட்டார ஆட்சித் தலைவரவர்களும், நிர்வாக முக்கியமானவர்களும், ஊர்ப் பொது மக்களும் கலந்து மூன்று மாத காலத்திற்குள் மாற்று ஏற்பாடு செய்து தருகிறோம், அதுவரையில் பொறுமையாக இருங்கள், அது வரையில் பாதையை அடைக்க மாட்டோம் என்று கேட்டுக் கொண்டு, அதற்கு ஒப்புதல் அளித்த பிறகும்கூட, திடீரென்று மூந்தாநாள்—அதாவது 4ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள், வட்டார ஆட்சித் தலைவரவர்கள் மற்றும் எண் ணூர் பவுண்டரி நிர்வாகத்தினர் ஆகியோர் கலந்துரையாடிய பொழுது 1981ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22ஆம் தேதி என்ன ஒப்பந்தம் செய்யப்பட்டதோ அதை நிர்வாகம் கடைப் பிடிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தும், 5ஆம் தேதி காலை 3 மணிக்கு இரவோடு இரவாகப் பாதையை அடைத்து விட்டார்கள்.

இதனால் பொதுமக்கள் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை தடைப்பட்டிருக்கிறது. வேறொரு பாதையை அவர்கள் சொல் கிறார்கள். அந்தப் பாதையை நான் நேற்று இரவு பார்த்தேன். அந்தப் பாதையிலே 11 இரயில்வே லைன்கள் இருக்கின்றன ; கூட்ஸ் டிரெயின்கள் எந்த நேரத்திலும் இருக்கின்ற நிலைமை இருக்கிறது ; இரயில்வே என்ஜின்களுக்கு டீசல் போடும் இடம் ஆகவும் அது இருக்கிறது. எனவே, அந்தப் பாதையிலே செல்ல வேண்டுமென்றால் அது சௌகரியப்படாது.



1981 மார்ச் 6] [திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

[முற்பகல் 10–30]

இதற்காக மாண்புமிகு அமைச்சரோடுகூட, நேற்று இரவு தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, அமைச்சர் அவர்கள் சொல்லியுங்கூட, அந்த எண்ணூர் பவுண்டரி நிர்வாகம் அந்தக் கோரிக்கையினை ஏற்க மறுத்துவிட்டது. இன்றையதினம் அங்கே ஒரு சிறுவன் இறந்திருக்கிறான். ஒரு வாரத்திற்கு முன்னதாக அவனுடைய தாயார் இறந்திருக்கிறார். அந்தத் தாயாரு டைய மரணத்திற்குப் பிறகு, தன்னுடைய மனைவி, மகன் இறந்த துயரம் தாங்காமல் இருந்தவர், மகனுடைய ஈமக் கிரியைகளைக் கூடச் செய்ய வழியில்லாமல், பாதையற்று, இன்றையதினம், அந்தத் தொழிலாளி துடித்துக் கொண்டிருக்கிறான். இன்றைய தினம் பாதையை உடனடியாகத் திறந்து வைக்க வேண்டும். இல்லையென்றால், அங்கே பயங்கரமான சூழ்நிலை ஏற்படும் என்ற காரணத்தினால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் கேட் டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மிகவும் ''சென் சிட்டிவ் இஷ்யூ'' என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சுடுகாட்டுக்குப் போகும் பாதைகள் தடுக்கப் பட்டதால் பல விபரீதங்கள் நம்முடைய மாநிலத்திலே இதற்கு முன் நடந்திருக்கின்றன. அந்த அளவிற்கு ரொம்ப வெடிப்பினை உண்டாக்கக்கூடிய பிரச்னை என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நான் மற்றவர்கள் சொன்ன பாயின்ட்டை மீண்டும் ரிப்பீட் பண்ணவில்லை. ஆனால், இப்பொழுது அங்கே டென்ஷனில் இருக்கிறார்கள். ஏன் என்றால், 4 வயதுக்குழந்தை இறந்து, எடுத்துக் கொண்டு போக வேண்டியதில்.டிலே ஆவதால், ஒவ்வொரு நிமிஷமும் டென்ஷன் அதிகமாகி, அது கிளாஷிலே கொண்டு போய் விடக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட பாதையை எப்படித்தான் அந்தக் கம்பெனிக்குக் கொடுத்தார்கள் என்பது நமக்குப் புரியாத விஷயம். ஏனென்றால், ஊராட்சியிருந்த காலத்திலே அவர்கள் மறுத்தார்கள் ; பேரூராட்சி இருந்த காலத் திலே மறுத்தார்கள் ; நகரியம் வந்து மறுத்துள்ளது. ஆனால், ''எலக்டட் கவர்ன்மென்ட்'' இல்லாத நேரத்திலே, கவர்னர் ரூல் இருக்கிற நேரத்திலே, அந்தக் கம்பெனி வாங்கியிருப்பதாகத் தெரிகிறது.

நாம் டிஸ்கஸ் பண்ண வேண்டிய முக்கியமான விஷயம் இப்படி, டி. எஸ். பியும், நிர்வாகமும், பொதுமக்களும் சேர்ந்து 23ஆம் தேதி உண்டாக்கிய ஒப்பந்தத்தையே அந்தக் கம்பெனி மீறி அந்தப் பாதையை அடைத்திருக்கும்போது, போலீஸ் அந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்குப் பாதுகாப்பு கொடுப்பதா ?

அல்லது, அரசாங்கப் பிரிதிநிதியும் சேர்ந்து உள்ளடக்கிய முறையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறுகிற நிர்வாகத்திற்கு ஆதரவு கொடுப்பதா என்ற சீரியஸ் பிரச்னை எழுகிறது.

போலீஸ் அங்கே இல்லையென்று சொன்னால், அந்தப் பிரச்னையே வந்திருக்காது. உண்ணாவிரதம் வந்திருக்காது, அங்கே அந்தப் பாதையிலே பிணம் போயிருக்கும்.

அது மட்டுமல்ல, மாற்று ஏற்பாடுகள் என்று அரசாங்கத்திடம் சொல்லியிருக்கிறார்கள். மாற்று ஏற்பாடுகளை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனக்கு முன்னாலே ஒரு அங்கத்தினர் சொன்ன மாதிரி, நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அதில், 11 இரயில்வே லைன்கள் தாண்டிப்போக வேண்டுமாம். அதுவும், டீசல் ஃபில் அப் பண்ண வேண்டிய இடமும் அந்தப் பாதையிலே இருக்கிறதாம். ஆகவே, பிணத்தைத் தூக்கிக் கொண்டு, இத்தனை லைன்களைத் தாண்டி, டீசல் ஃபில் அப் பண்ணுவதைத் தாண்டிப், போவதென்றால், இன்னும் தகராறு ஏற்படும். ஆகவே அந்த மாதிரி இல்லாமல், மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்களுடைய லைஃப்பும் ப்ரெஷியஸ் லைஃபாக இருப்பதால், அங்கே கலகம் எதுவும் ஏற்படாமல் இருப்பதற்கு, உடனடியாக அரசாங்கம் தலையிட வேண்டிய விஷயமாக இருப்பதால், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயம் எவ்வளவு முக்கியமான விஷயம் என்பதை எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். சுடுகாட்டிற்குச் செல்லக்கூடிய பாதையை அடைப்பது பெரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு சம்பவம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். இதே மாதிரி திருத்துறைப்பூண்டி தொகுதியிலே, திருத்தங்கல் என்ற கிராமத்திலே, சுடுகாட்டுப் பாதையைத் தனியார் அடைத்ததன் காரணமாக, 3, 4 மாதங்களுக்கு முன்னால், அந்த அரிசன மக்கள் ஒரு பிணத்தைக் கொண்டு போக முடியாமல், அங்குள்ள பாதையிலே, அதாவது, ரோட்டிலே வைத்துக் கொளுத்திவிட்டார்கள். போலீஸ் என்ன செய்திருக்க வேண்டுமென்றால், அந்த மாதிரி பாதையை யார் தடுத்தார்களோ, அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அந்தப் பிணத்தை எப்படி ரோட்டிலே போட்டுக் கொளுத்தலாம் என்று அவர்கள்மீது வழக்கு போட்டு நடந்து கொண்டிருக்கிறது.

அதே மாதிரியாக, திருவொற்றியூரிலே தனியாருடைய ஒரு தொழில் நிறுவனத்திற்கு அந்த இடத்தைக் கொடுக்கக்கூடிய நேரத்தில், இந்த அரசாங்கம், மாற்று ஏற்



பாட்டை, மாற்று இடத்தை, மாற்றுப் பாதையைக் கொடுத்து விட்டு, அந்த இடத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அரசாங் கம் புறம்போக்கு இடத்தை அந்தத் தனியாருக்குவழங்கியதன் காரணமாக, அந்த வட்டாரத்திலுள்ள மக்கள், இறந்து விட்ட வர்களை, அத்தியாவசியமாக, சுடுகாட்டிற்குக் கொண்டுபோக முடியாத நிலை ஏற்படுகிறது என்ற காரணத்தினால், இது எவ் வளவு மிகப் பெரிய பாதகத்தை ஏற்படுத்தும் என்பதை சிந் தித்துப் பார்க்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அதே மாதிரியாக பல இடங்களிலே சம்பவங்கள் நடந்துகொண்டிருக் கின்றன. ஆகவே, அது சம்பந்தமாக, அரசாங்கம் உடனடியாக அந்தப் பாதையில் வைத்துள்ள போலீஸ் பாதுகாப்பை அகற்றி விட்டு, அந்தப் பாதையைத் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், நிலைமை மோசமாகும். அது சம்பந்தமாக இன்றைக்கு மாண்புமிகு திரு. குமரி அனந்தன் தலைமையிலே, அந்தவட்டாரத்தைச் சேர்ந்த, அனைத்துக் கட்சி யைச் சேர்ந்த 100 பேர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் நேற்றி லிருந்து. இது எவ்வளவு பெரிய முக்கியமான, பதட்டமான சூழ்நிலையை உண்டாக்கியிருந்தால், 100 பேர் சேர்ந்து உண்ணா விரதம் இருப்பார்கள் என்பதை எண்ணிப்பார்த்து, இந்தப் பாதையை உடனடியாகத் திறந்து விட வேண்டும். அப்படி யில்லையென்றால், எல்லாக்கட்சிகளும் சேர்ந்து, அதை எதிர்த்து, அந்தப் பாதையை திறந்து விட்டு, தடையை மீறிப் போகக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, பல இடங்களில் அப்படி சுடுகாட்டுப் பாதையை அடைக்கிற நிலை இருந்து கொண்டிருக் கிறது. இதையெல்லாம் பற்றி, என்ன செய்வது என்பதைப் பற்றி விவாதிப்பதற்கும், மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர் களும், மற்றக் கட்சித் தலைவர்களும், மற்றும் 100 பேர்களும் உண்ணாவிரதம் இருக்கின்ற சூழ்நிலையில், அதைப்பற்றியெல் லாம் விவாதிக்க வேண்டிய அத்தியாவசியமான காரியமாக இது இருப்பதால், அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் உறுப்பினர்கள் காலை 8½ மணிக்கே கொடுத்துவிடவேண்டும். இல்லாவிட்டால் சபையிலே அமைச்சர்களை பதில் சொல்லவைப்பது கடினமாக இருக்கும் இனிமேல் இந்த முறையைக் கடைப்பிடிக்க எண்ணி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. ப. பொன்னு ரங்கம், இரண்டு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூர் பகுதியில் அந்தச் சுடுகாட்டுப் பாதையை அடைத்து அதன் மூலம் இப்போது பதட்டமான சூழ்நிலை அங்கே

[திரு ப. பொன்னுரங்கம்] [1981 மார்ச் 6

இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்களும் இதைக்
கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். கடந்த மாதம் 23ஆம்
தேதி நடந்த கூட்டத்தில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி 3 திங்களுக்குள்
அதைக் காலி செய்துதரவேண்டும் என்றும், 3 மாதங்களுக்கு
அந்தக் கம்பெனி பொறுத்திருக்கவேண்டும் என்றும் முடிவெடுக்
கப்பட்டது. டி.எஸ்.பி., சைதாப்பேட்டை தாசில்தார் இவர்கள்
இருந்து எடுத்த முடிவை அந்தக் கம்பெனியினர் மீறி இருக்கிறார்
கள். அதனாலேதான் இந்தப் பதட்டநிலை ஏற்பட்டுள்ளது.
இன்று காலையிலேகூட ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது.
அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு குழந்தை இறந்திருக்கிறது.
திலகவதி அம்மையார் என்ற பெண்ணுக்குப் பிறந்த அந்தக்
குழந்தையின் பெயர் அய்யப்பன். அந்தப் பிணத்தை வைத்துக்
கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டி
ருக்கிறார்கள். அய்யப்பனுக்கே இந்தக் கதி என்றால் மற்றவர்
களுக்கு என்ன கதி? அங்கே ஒரு டென்ஷன் இருக்கிறது. இது
குறித்துத் தீர விசாரித்தறிய விவாதிப்பதற்கு இந்த அவையின்
இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றித் தாங்கள் ஒரு தீர்ப்பினை
வழங்கியிருக்கிறீர்கள். ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒரு மணிக்கு
முன்னதாகத் தரவேண்டும் என்று விதி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம்
8½ மணிக்குத் தரவேண்டும் என்று விதியில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் தீர்ப்பை
வழங்குவதற்குத் தற்போது தங்களுக்கு என்ன அவசியம் வந்தது
என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் 10
மணிக்குத்தான் கொடுக்கப்பட்டது என்று சொல்வதிலே இருந்து
எந்த அளவுக்குத் தகவல் தரமுடியும் என்பது உங்களுக்கு
நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன், திரு. நவநீத
கிருஷ்ணபாண்டியன் ஆகியோர்காலையிலேயே கொடுத்துவிட்டார்
கள். பொன்னுரங்கம் மட்டும்தான் 10 மணிக்குக் கொடுத்தார்.
அதற்காகத்தான் அந்த ரூலிங்கை கொடுத்தேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
உறுப்பினர்கள் இந்த அவையை ஒத்திவைத்து இதுபற்றி
வாதிடவேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அதைப் பற்றி



1981 மார்ச் 6] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

நான் தெரிவிக்கிறபோது, நேற்று இரவு 8 மணிக்குத்தான்
மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள்
தொலைபேசி மூலமாக என்னிடத்திலே பேசினார்கள். அவர்கள்
பேசுகின்றபோது அந்த இடுகாட்டுப் பாதையை அடைத்து
இருக்கிறார்கள். அதில் உடனடியாகத் தலையிட்டு அதை நீங்கள்
சரிசெய்யவேண்டும் என்று சொன்னார்கள். அவர் என்னிடத்திலே
8 மணிக்குப் பேசியபிறகு நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்
தில் தொலைபேசி மூலம் பேசினேன். எண்ணூர் பவுன்டரி
நிர்வாகத்தினரிடமும் பேசினேன். அதற்குப் பிறகு, எஸ். பி.
யிடம் பேசினேன், டி. ஐ. ஜி.-யிடம் பேசினேன். அவர்களிடம்
பேசி அவர்களை அனைவரையும் அந்த இடத்திற்குச் செல்லும்
படி கேட்டுக்கொண்டேன். அவர்களும் அந்த இடத்திற்குச்
சென்று பேசினார்கள். அதற்குப் பிறகு இரவு 10, 10.30மணிக்கு
எனக்குக் கிடைத்ததகவல், 8.45 மணிக்கே அவர்கள் உண்ணா
விரதம் ஆரம்பித்திருக்கிறார்கள்.

எனக்குத் தகவல் கிடைத்த அதே நேரத்தில், இந்தச் செய்தி
தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவர் அவர்களுக்கும் கிடைத்து
அவரும் டி. ஐ. ஜி.-யிடம் தொடர்பு கொண்டு, நிலைமைகளை
ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்
டார்கள். இதை டி. ஐ. ஜி. என்னிடம் தொலைபேசியில்
சொன்னார். இதை எல்லாம் இங்கே சொல்லுவதற்குக் காரணம்
இது குறித்து எங்கள் கவனத்திற்கு வந்த உடனேயே எவ்வளவு
விரைவாக எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது
என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். நடைபாதை என்று
சொல்லுகிறபோது 43 ஏக்கர் ஆர்ஜிதம் செய்து கொடுத்திருக்
கிறார்கள்.

[முற்பகல் 10-40]

அது தனியாருக்குக் கொடுக்கப்பட்டது என்றாலும், அது
கொடுக்கப்பட்டதன் நோக்கம், அங்கே செய்யப்படுகிற காம்
போனென்ட்ஸ் எல்லாம் டிபென்ஸ் டிபார்ட்மென்ட்டிற்குச்
செல்கிறது. டிபென்ஸ் டிபார்ட்மென்ட் உபயோகத்திற்குத்
தேவையான பெரிய பெரிய இயந்திரங்களில் பயன்படுத்தப்படுகிற
பொருள்களைத் தயாரிக்க அந்த நிறுவனம் இருக்கிறது என்கிற
காரணத்தால், அப்படி கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.
நாங்கள் வந்ததும் கொடுத்தோமா அல்லது அதற்கு முன்பே
கொடுக்கப்பட்டதா என்ற கேள்விக்கு இடம் இல்லை. இது
தொடர்ந்து 1968—69 ஆம் ஆண்டில் இருந்தே ஒரு வரலாறுபோல்
இருக்கிறது என்பதைத் தொலைபேசி மூலம் நேற்றுப் பேசுகிற
போது அறிந்தேன். ஆகவே, அந்த நிலத்தைக்கொடுக்கவேண்டிய
ஒரு 'நெசஸ்ஸிடி' இருந்ததால்தான் கொடுக்கப்பட்டது என்று
தெரிவித்துக்கொள்கிறேன். அந்த 42 ஏக்கர் நிலம் கொடுக்கப்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மார்ச் 6

பட்டதில் பாதை போடப்பட்டு இருந்தாலும், செக்யூரிட்டி ரீசன்சுக்காக, இன்டஸ்டிரியல் செக்யூரிட்டிக்காக அதில் பொது மக்கள் போகக் கூடாது என்று சொல்லப்படுகிறது. அங்கே பணிசெய்கிறவர்களே தகுந்த பாஸ் இல்லாமல், அத்தாட்சி இல்லாமல் செல்ல முடியாது. இது எல்லாம் சரி என்று நான் சொல்ல வரவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை. இவைகளை யெல்லாம் நேற்று இரவு 8 மணிக்குத்தான் தகவலாக அறிந்தேன். அதற்கு வேண்டிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு ஆர். டி. ஓ. அவர்களும், போலீஸ் அதிகாரி அவர்களும், அவர்களிடத்தில் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு) இப்போது வந்துள்ள தகவல்படி தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இப்படிப்பட்ட முக்கியமான விஷயம் குறித்து நேரடியாகச் சென்று அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக அங்கே சென்றுள்ளதாக எனக்கு எழுதி அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, அரசு இந்தப் பிரச்னையில் உடனடியாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் இந்தப் பிரச்னை யில் அரசு எடுத்துக்கொண்டுள்ள அக்கறையைக் கவனத்தில் கொண்டு, உண்ணாவிரதம் இருப்பவர்களை அதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இது குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதை அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இத்தீர் மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 4. அறிக்கை அளித்தல்.

### விதி 107 (1)-ன் கீழ்—திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 107-ன்கீழ் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச் சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 6ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் உடுக்குறியிட்ட சட்டமன்ற வினா எண் 117 (பழைய எண் 531) சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. அவ்வமயம் நடந்த விவாதத்தின்போது உறுப்பினர் திரு. சி. கோபால் அவர்கள் பின்வரும் துணை வினாவினைக் கேட்டிருந்தார்.



1981 மார்ச் 6] [திருமதி கோமதி சீனிவாசன்]

" மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிக்கும் நேரத்தில் ஆண்டுக்கு 10 கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டில் வடாற்காடு மாவட்டத்தில் எங்கேயாவது அமைக் கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன். "

அதற்கு, " பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் அமைப்பதைப் பற்றி ஒன்றும் தகவல் வரவில்லை" என்பதற்குப் பதிலாக கீழ்க்கண்ட திருத்திய பதிலை அளிக்க விரும்புகிறேன்.

" 1980—81-ஆம் ஆண்டில் கால்நடை மருந்தகம் ஆரம் பிக்க உத்தேசித்திருந்த 10 இடங்களில் வடாற்காடு மாவட்டம் லத்தேரியும் ஒன்றாகும். (அரசு ஆணை எண் 1642, வேளாண் மைத் துறை, நாள் 18—8—1980-ல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.)"

## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற அறிக்கைக்கான திருத்தங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : " பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர் நடத்தை விதிகள் செய்வது குறித்து " மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்கள் கொடுத்துள்ள திருத்தங்கள் எடுத்துக் கொள்ளப்படு கின்றன.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன் :—

" பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர் நடத்தை விதிகள் செய்வது குறித்து 1980-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19-ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழில் வெளி யான 1979-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19-ஆம் நாளிடப் பெற்ற கல்வித் துறையின் 2358-ஆம் எண் அரசாணையில் வெளி யாகி, 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9-ஆம் நாளன்று பேரவை முன் வைக்கப் பெற்ற அறிவிப்பில் கீழ்க்கண்ட திருத் தங்கள் செய்யப்பட வேண்டும் ".

### RULE-2.

*Add* the word "lawful" before the word "Instruction" in line 4 of the Note under Rule-2.

RULE-3.

*Delete* the words "and not do anything which is unbecoming of an University employee" occurring in lines 4 and 5.

RULE-5

*Delete* Rule 5.

RULE 6(i)

*Delete* the portions after the words "integrity of India", occurring in lines 4, 5 and 6.

RULE 6 (ii)

*Delete* Rule 6 (ii).

(i) *Delete* the words beginning from "Security of the State" and ending with decency or morality occurring in line 4.

(ii) Delete the words 'incitement to an offence' occurring in line 6.

(iii) *Delete* the words "University or Administration" occurring in line 8.

(iv) Delete the portion beginning from "(*b*) the resort to" and ending with "Employees of the University" occuring in lines 9, 10, 11 and 12.

RULE 8·

(i) *Delete* sub-clauses a, b (i) and b (ii).

(ii) *Add* "Enquiry Commission", "Tribunals" and such other statutory or quasi statutory enquiry bodies after the word "Police" occurring in line 4.

RULE-13

*Delete* Rule 13.



Rule-16

*Add* the words "with simultaneous advance copy of the Syndicate, or Government or to any authorities of the University as the case may be" after the words "through the proper channel" occurring in line 4.

Rule-17

*Delete* Rule 17.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் இத் திருத்தங்களை வழிமொழிகிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்தத் திருத்தங்களை பொறுத்தவரையில் சாதாரண திருத்தங்களாக இருந்திருந்தால் நான் இதை ஒரு முக்கியமான பிரச்சினையாக எடுத்திருக்க மாட்டேன். இது அரசாணை மூலம் வெளியிடப்பட்டிருக்கிற விஷயம். முக்கியமான விஷயமாக இருக்கிறது என்பதால் சொல்கிறேன். நான் குறிப்பிட விரும்புவதை எல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு, முடிவு செய்வது நல்லது.

முதலிலே நான் கூற விரும்புவது இந்தத் திருத்தம் அரசியல் விதிகளுக்கு முற்றிலும் புறம்பானது, ஒருதலைப் பட்சமானது, பணியாளர்களுக்கு பெருத்த பாதகம் விளைவிக்கக் கூடாது ; பணியாளர்களின் எதிர்காலத்தையே பாதிக்கக் கூடியது. இந்த விதிகள் யாருக்குப் பொருந்தும் என்பது பற்றி 19-ஆவது பிரிவில் கூறப்பட்டிருக்கிறது.

"For purposes of these rules, employee includes members of both sexes of teaching, research and non-teaching departments of the University."

என்று அதில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் 1978-ஆம் ஆண்டு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில்—ஜஸ்டிஸ் பேக் தலைமையிலான 7 நீதிபதிகள் கொண்ட 'புல்ஃபெஞ்ச்' தீர்ப்பில் அவர்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின்படி கல்வி நிலையங்கள் தொழில் சச்சரவு சட்டப்படி (இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்) தொழில் என்பதாகும்.

அந்தத் தீர்ப்பின்படி இது ஒரு இண்டஸ்ட்ரி ஆகும். அதில் சொல்லியிருக்கிறபடி டீச்சிங் அண்ட் நான்-டீச்சிங் ஸ்டாப்—அவர்கள் தொழிலாளர்கள் என்று கருதப்படுவார்கள் என்றும் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதுதான் ரொம்ப முக்கியம். இதற்குத்தான் கல்வித் துறையில் வெளியிட்டிருக்கிற அரசாணை வேட்டு வைக்கிறது. பாரா 82-ல்.

"So long as services are part of the wealth of a nation—and it is obscurantist to object to it—educational services are wealth, are "industrial." We agree with Isaacs, J.

அப்படி என்று சொல்லிவிட்டு, அவர்கள் அக்ரி பண்ணக்கூடிய விஷயத்தை கோட் பண்ணி சொல்லியிருக்கிறார்கள். பாரா 113-இல்.

"We will now move on to a consideration of education as an industry. If the triple tests of systematic activity, co-operation between employer and employee and production of goods and services were alone to be applied, a university, a college, a research institute or teaching institution will be an industry."

என்று தெளிவாக அந்த ஜட்ஜ்மென்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தொழிற்சங்கங்கள் சட்டத்தின் கீழ் அவர்கள் சங்கம் அமைத்து பதிவு செய்து கொள்ள உரிமை உண்டு. அந்த தொழிற்சங்க உரிமையை ஏற்றுக் கொண்டுதான் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர்கள் சங்கம் என்று பதிவு செய்து 1015 எம்.டி.எஸ். என்று லேபர் டிபார்ட்மென்டில் பதிவு செய்திருக்கிறார்கள்.

[முற்பகல் 10-50]

இங்குதான் விஷயமே வருகின்றது. இவர்களுக்கு சர்வீஸ் காண்டக்ட் ரூல்ஸ் அமைப்பதற்கு ஜி.ஓ..போட அரசுக்கு அதிகாரமில்லை. இதுதான் முதல் பாயின்ட். இன்டஸ்ட்ரியல் எம்ப்ளாய்மெண்ட் ஸ்டேண்டிங் ஆர்டர்ஸ் ஆக்ட் என்று இருக்கின்றது. ஆகவே அந்த ஆக்டின் கீழ் நியமிக்கப்பட்ட சர்ட்டிபையிங் ஆபீசர்தான் ஸ்டாண்டிங் ஆர்டர்ஸுக்கு சான்றிதழ் கொடுக்க வேண்டும். ஆகவே ஜி.ஓ. மூலம் நீங்கள் வெளியிட்டிருக்கக்கூடிய இந்த விதிகள் அனைத்தும் அடிபட்டுப் போகிறது. சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட் பேஸிஸ்லே.

இரண்டாவதாக சர்ட்டிபையிங் ஆபீஸர் சர்ட்டிபை செய்கிறபொழுதும் ஸ்டாண்டிங் ஆர்டர் ஆக்டில் உள்ள 'மாதிரி ஸ்டாண்டிங் ஆர்டர்' படிதான் செய்ய வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட் இருக்கிறது. அந்தமாதிரி ஸ்டாண்டிங் ஆர்டர்ஸுக்கு மாறான விதிகள் கொடுக்கப்பட்டால் அது செல்லாது என்று சுப்ரீம் கோர்ட் டெசிஷன் இருக்கின்றது.. ஆகவே நீங்கள் டேபிளிலே வைத்திருக்கக் கூடிய சர்வீஸ் காண்



டக்ட் ரூல்ஸின் சரத்துக்கள் அநேகமாக அத்தனையும் மாதிரி ஸ்டாண்டிங் ஆர்டர்ஸுக்கு முற்றிலும் மாறாக இருக்கிறது. ஆகவே ப்ரெலிமினரி பாயின்டிலேயே அந்த லீகல் பொஸிஷன் பற்றி க்ளியராக சொன்னதற்குப் பிறகு லிட்டிகேஷனுக்கு இடம் கொடுக்காமல் அந்தப் பழைய முறையை ஒப்பன் பண்ணுவதுதான் சரியாக இருக்கும். ஆனால் சட்ட விரோதம் என்றாலும் மெஜாரிட்டியை வைத்து நிறைவேற்றிவிடுவது என்ற முடிவுக்கு வந்தால் தவறு. எங்களுடைய அமென்ட்மென்ட்ஸ் ரொம்பவும் முக்கியத்துவமானது.

நீங்கள் வெளியிட்டிருக்கக்கூடிய ஜி.ஓ. விலே அடங்கிய விதிகளில் உள்ள அணுகு முறை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அந்த ஜி. ஓ.வின் மூலம் ஒட்டுமொத்தமாக ஆசிரியர்களை, அறிஞர்களை சமூக விரோதிகள் போல், விரும்பத்தகாதவர்கள் போல் நேர்மையற்றவர்கள் போல், நெறிகெட்டவர்கள் போல், நாட்டுப் பற்றற்றவர்கள் போல் பாவிக்கிறீர்கள். ஆகவேதான் நான் அமென்ட்மென்ட்ஸைக் கொடுத்திருக்கிறேன்.

Integrity and devotion to duty.

என்று அதிலே நோட் இருக்கின்றது. அதிலே லாஸ்ட் டு சென்டன்ஸ்லே

'Failure to obey the instructions given by the superior officers or to execute propmptly the administrative responsibilities will constitute improper conduct.'

என்று இருக்கின்றது. பெய்லியர் டு ஒபே இன்ஸ்ட்ரக்ஷன் என்று மொட்டையாக இருக்கின்றது. அதன்படி பார்த்தால் எந்த இன்ஸ்ட்ரக்ஷனை வேண்டுமானாலும் ஒபே பண்ண வேண்டும் என்று அர்த்தமாகிவிடும். அந்த வகையிலே அதை மிஸ்யூஸ் பண்ணுவதற்கு உபயோகமாகிவிடும்.

திருமதி ஜெயா துளசி என்பவர் டெலிபோன் ஆப்பரேட்டராக 1972-லே இருந்து இருக்கிறார்கள். சமீபத்திலே லைப்ரரியிலே புஸ்தகம் அடுக்குகின்ற பணிக்கு அவரை மாற்றியிருக்கிறார்கள். அவருடைய டியூட்டி மதியம் 12 மணியிலிருந்து இரவு 8 மணி வரை. பணியை முடித்து விட்டு பெருங்களத்தூருக்குப் போகவேண்டும். 8 மணிக்குப் பிறகு ட்ரெயின் பிடித்து வீடு போய்ச் சேர வேண்டும் என்றால்

It is very risky for a women to go at such a time. But she has to carry out the instructions.

ஆனால் அது குறித்து அப்பீல் பண்ணப்பட்டது. ஆனால், இன்ஸ்ட்ரக்ஷனை மீறக் கூடாது என்று இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட விதியினைப் போட்டால் நிலைமை என்னவாகும்! ஆகவேதான் லாபுல் இன்ஸ்ரடக்ஷன் என்று திருத்த வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் லாபுல் அன்ட் ரீசனபிள் என்று சேர்த்து திருத்தினால் கூட தவறில்லை. ஆகவே அதை அவ்வாறு திருத்த வேண்டும்.

அடுத்து ஒரு அமெண்ட்மெண்ட். Rule 3.

It has been stated that 'He shall show courtesy and attention in all transactions and not do anything which is unbecoming of an University employee'

Under this Research scholors, Professors and others will come under the judgement which I have quoted.

இது ஒரு வேக் டெர்மாக இருக்கின்றது.

It is a vague term. Who is to decide ?

அதாவது தகுதி என்று போட்டால் தகுதியை யார் டிசைட் பண்ணுவது? இதிலே பல தகராறுகள் உருவாக வழி இருக்கின்றது. பெரிய அதிகாரியைக் காக்காய் பிடிப்பது கூட ஒரு தகுதி என்றுதான் வருகின்றது. ஆகவே தகுதி என்ற டெர்மைப் போட்டால்

It will be used for victimisation.

அதனால் அதை டெலிட் பண்ண வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன். அடுத்த அமெண்ட்மெண்ட் பார் கிளாஸ் 5.

'Taking part in elections: No employee shall canvass or otherwise interefere with or use his influence in connection with or take part in an election to any legislature or local authority provided........etc. etc. etc.

அதை அப்படியே டெலிட் பண்ண வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன்.





அதாவது எலக்ஷனிலே பங்கெடுக்கக் கூடாது, கேன்வாஸ் செய்யக்கூடாது என்று சொல்வது தவறு. டிரேட் யூனியன் ஆக்டின் கீழ் அந்த ஊழியர்கள் வருகிறார்கள். ஆனால் ட்ரேட் யூனியன் ஆக்டில் அவர்கள் எலக்ஷனிலே பார்ட்டிசிப்பேட் செய்வதைத் தடை செய்யவில்லை.

இந்தியாவின் கான்ஸ்டிட்யூஷனிலே பன்டமெண்டல் ரைட்ஸ் என்பதிலேயும் கேன்வாஸ் பண்ணுவது தவறு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் நீங்கள் அதைத் தடை செய்கிறீர்கள். ஆகவே பன்டமென்டல் ரைட்டையே மீறுகிறீர்கள். ஆனால் தற்போது எந்தவிதத்திலே நிலைமை போய்க்கொண்டிருக்கின்றது என்றால் ரூலிங் பார்ட்டியைச் சேர்ந்தவர்கள் ஓப்பனாகவே எலக்ஷனிலே கலந்து கொள்ளலாம். அவர்கள் மேடை ஏறிக்கூட பேச முடிகிறது.

அப்போதிருக்கும் ஆளும் கட்சியை ஆதரித்து அந்த டீச்சர்கள் பிரச்சாரம் செய்தால்—அவர்கள் பயப்பட மாட்டார்கள். நம்முடைய பார்ட்டி ஆட்சிதானே. ஆக்ஷன் எடுக்க மாட்டார்கள் என்று தைரியமாக இருப்பார்கள். ஆனால் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவாக அவர்கள் யாராவது பிரச்சாரம் செய்தால், அவர்கள் மீது இந்தச் சட்டப்பிரிவின் படி ஆக்ஷன் எடுத்து சார்ஜ்ஷீட் கொடுக்கலாம். அதனால் பொதுவாகவே இது அவர்களுடைய அடிப்படை உரிமையை பாதிக்கிறது என்பது மட்டும் அல்ல, அப்போசிஷன் பார்ட்டிகளுக்கு பிரச்சாரம் செய்தால் தவறு என்ற வகையில் பாதிக்கக் கூடிய நிலைமையும் வரும். ஆகவே தான் இந்தப் பிரிவை டிலிட் பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

அடுத்து பிரிவு—6.

Joining of Associations: ( ) No employee shall join or continue to be a member of an association, the objects or activities of which are prejudicial to the interests of the sovereignty and integrity of India or to the interests of the University or to public order or morality provided that the Associations/Unions recognised by the university either on *de jure* or *de facto* basis would not attract the rule.

இதிலே டு தி இண்டர்ஸ்ட் ஆப் தி யூனிவர்சிட்டி என்பதிலிருந்து கடைசி வரைக்கும் டிலிட் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் "பல்கலைக் கழகத்தின்

[திரு. ரா. உமாநாத்] [1981 மார்ச் 6

இண்டிரஸ்டுக்கு பாதகமாக '' என்று இருக்கக் கூடாது. மாணவர்களிடத்திலே டொனேஷன் வாங்குவது தவறு என்று நாம் சொல்கிறோம். அமைச்சர் அவர்கள் கூட வாங்கக் கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால் அப்படி வாங்குவது இண்டிரஸ்ட் ஆப் தி யூனிவர்சிடி என்ற அடிப்படையில்தான் என்று அவர்கள் நினைத்தால், அது தவறு இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இந்தச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் அப்படி நிதி வசூலிப்பது தவறு என்று எடுத்துச் சொல்லும் ஒரு பொசிஷனைக் கொண்டு வந்தால் இந்தச் சட்டப்பிரிவின் கீழ் கட்டாயமாக அந்தச் சங்க உறுப்பினர்களின் மீது யூனிவர்சிடி ஆக்ஷன் எடுக்க முடியும். அதேபோல பொதுஜன அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் செயல்படக்கூடாது என்றும் குறிப்பிடப்பெற்றுள்ளது. சாதாரணமாக ஊர்வலம் நடத்தி, கோஷங்கள் போட்டால் கூட, இது பொதுஜன அமைதிக்கு பங்கம் என்று வந்து, இந்தப் பிரிவின்கீழ் அவர்கள் மேல் ஆக்ஷன் எடுக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதையும் நீக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

அடுத்து இதிலே மிக வேடிக்கையாக இருப்பது என்னவென்றால்,

'Provided that the Associations / Unions recognised by the University........'

என்று சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் அந்தச் சங்கங்கள் செய்யக் கூடாது என்று முதலிலே விரிவாகச் சொல்லிவிட்டு, யூனிவர்சிடியினால் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக இருந்தால் என்று சொன்னால், அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்கு இந்த விதிகள் பொருந்தாது, அவர்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம், இம்மாரலாக கூட நடக்கலாம் என்று அர்த்தம் காணும் வகையில் இந்தப் பிரிவு தப்பாக கொடுக்கப்பெற்றிருக்கிறது. அதைத்தான் திருத்த வேண்டும் என்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு வேண்டுமென்றால், இன்னொருமுறை அந்தப் பிரிவை படித்துக் காட்டுகிறேன்.

'....Provided that the Associations/Unions recognised by the University either on *de jure* or *de facto* basis would not attract this rule.'

என்று ஒரு தப்பான பிரிவு இருக்கிறது. இதை முழுவதுமாக நீக்க வேண்டும் என்று நான் என்னுடைய திருத்தத்திலே கொடுத்திருக்கிறேன்.



1981 மார்ச் 6] [திரு. ரா. உமாநாத்]

அடுத்து கிளாஸ் 6 செக்ஷன்—2, இதிலே

'No employee shall be a member/office bearer of an Association of this University in respect of a category of staff to which he does not belong'

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே ஒரு
சீரியஸான விஷயம். இப்படி ஒரு பிரிவைப் போட்டு பிரிவு மனப்
பான்மையை அரசே என்கரேஜ் பண்ணக்கூடாது. இன்றைக்கு
நம்முடைய சர்க்காரும், மற்றத் தலைவர்களும் எல்லோரும்
சொல்லிக் கொண்டிருப்பது-ஜாதி இன பேதங்கள் பார்க்கக்
கூடாது. மக்களுக்குள் பிரிவுகள் இருக்கக் கூடாது என்று.—

We should not look into this in that angle.

குறுகிய நோக்கத்தோடு நாம் பார்க்கக் கூடாது. ஒரு யூனிவர்
சிட்டியிலே இருக்கிற கேட்டகிரி சர்வீஸ்லே இருந்தாலும் இன்
னொரு கேட்டகிரியிலே அல்லது யூனிவர்சிட்டியிலே இருந்தாலும்
அதனுடைய ஆபீஸ் பேரராக இருக்கக் கூடாது என்று சொல்வது
சரியல்ல. ஒரே பல்கலைக் கழகத்தில் தனித்தனி பிரிவு மனப்
பான்மை இருக்க வேண்டும் என்று இந்த கிளாஸ் மூலம் அரசு
என்கரேஜ் பண்ணுகிறார்கள் என்று அர்த்தம். நம்முடைய
நாட்டில் டெமாக்ரஸி இருக்கிறது. அந்த ஜனநாயக ஓட்டெடுப்
பின்படி யாரை வேண்டுமானாலும் தேர்ந்தேடுக்க உரிமை இருக்
கிறது. அது இந்த சட்டப்பிரிவின்கீழ் மறுக்கப்பெறுகிறது
என்பது மட்டும் அல்ல, அது வேண்டுமென்றே கொண்டு வரப்
பட்டிருக்கிற கிளாஸ்-பிரிவு என்று கூட சொல்ல விரும்புகிறேன்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[முற்பகல் 11—00]

Non-teaching staff Union.

இது ரெஜிஸ்டர்ட் யூனியன். இதில் ஒரு தலைவர் தேர்ந்
தெடுக்கப்படுகிறார். அவரை அவர்களுக்கு பிடிக்கவில்லை, இதே
பல்கலைக் கழகத்தில். அவர், எலக்ட்ரிக்கல் என்ஜினியரிங்
லெக்சரர். அவரைத் தடுக்கத்தான் இந்தக் க்ளாஸ் கொண்டு
வரப்பட்டிருக்கிறது. அவர் ப்ரிசிடென்ட்டாக இருக்கிறார்.
அவரை ஸஸ்பென்ட் செய்திருக்கிறார்கள். எலக்ஷன் வருகிறது.
ஸஸ்பென்ஷனில் இருப்பவர்கள் எலக்ஷனில் நிற்கக் கூடாது
என்று ஒரு ரூல் கொண்டு வந்தார்கள். இப்போது நிலை
என்னவென்றால் ஹைகோர்ட் டயரக்ட்வ் கொடுத்திருக்கிறது.
அவர் நாமினேஷனை ஒத்துக்கொள்ளவேண்டும் ; நாமினே
ஷனை ஒத்துக்கொண்டு விட்டார்கள். கான்வாஸ் செய்ய காம்பஸ்

உள்ளே போகவேண்டுமா இல்லையா? ஆனால் அவரை உள்ளே விட மாட்டேன் என்றால் எப்படி? ஆகவே இப்படிப் பட்ட நிர்வாகத்தின் கையில் இந்த ஷரத்துக்களைக் கொடுத்தால் என்ன நடக்கும் என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே அந்த க்ளாஸ் இருக்கக்கூடாது. அடுத்தபடியாக நம்பர் 7.

Demonstrations and/strikes. No employee shall engage himself or participate etc., the interests of the University, public orders, decency or morality, incitement to an offence....

அதையெல்லாம் நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதெல்லாம்,—சாதாரண ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படு கின்றன. தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பண்ட மன்டல் ரைட்ஸ் மறுக்கப்படுக்கின்றன.

டீஸன்ஸி மொராலிட்டியை மீறக் கூடாது என்றிருக்கிறது. நான் கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். டீஸன்ஸி, மொராலிட்டி என்று சொல்லுகிற போது அதற்கு பலரும் பல அர்த்தம் கொடுக்கிறார்கள்.

இதே யூனிவர்ஸிட்டியில், மொராலிட்டி பாதிக்கும் வகையில் என்று சொல்கிறபோது நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ராஜீ என்ற ஒரு அட்டென்ட்டென்ட் காம்பஸ்க்கு உள்ளே அவருக்கு ஒரு அவுட் ஹௌஸ் கொடுத்து அதில் முப்பது வருடங் களாக அவர் இருந்து வருகிறார். அதில் 25 வருடங்கள் ஹஸ் பன்ட், வொய்ஃபாக அவர் குடும்பம் நடத்துகிறார். காம்பஸ்க்கு உள்ளேயே அவர் 25 ஆண்டுகளாக குடும்பம் நடத்துகிறார். இப்போது சங்க விஷயமாக அவர் சேரவில்லை என்பதற்காக பழி வாங்க என்ன செய்கிறார்கள் என்றால், 25 ஆண்டுகளாக ஹஸ்பென்ட் அண்ட் வொய்ஃபாக வாழ்ந்தவர்களை இப்போது இம்மாரல் பர்பஸ்க்காக ஒரு பெண்ணை இரவு அழைத்து வந்து காலையில் போக விடுகிறார் என்று சொல்கிறார்கள். 25 ஆண்டு கள் ஹஸ்பென்ட்-வொய்ஃபாக அங்கு வாழ அனுமதித்திருக் கிறார்கள். ஆனால், இப்போது பழி வாங்கவேண்டும் என்பதற் காக இம்மாரல் பர்ப்பஸ்க்காக இருக்கிறார்கள் என்று சொல் கிறார்கள். மனைவியுடன் உறவு கொள்வது, சேர்ந்திருப்பது எப்படி இம்மாரல் ஆகும். அவர்களை ஸெப்பரேட் செய்ய முடியவில்லை. அவர்கள் ஹஸ்பென்ட் அன்ட் வொய்ஃபாக வாழ்வது 'நோன் பாக்ட்' எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்போது எவிக்ஷன் நோட்டீஸ் கொடுத்து அரஸ்ட் செய்திருக் கிறார்கள்.





It can be used for such a serious thing.

கான்ஸெப்ட் ஆப் மொராலிட்டியே சரியாக இல்லை.

அடுத்து, 'மிஸ்காண்டக்ட்' என்று இதில் வருகிறது. 'மிஸ் காண்டக்ட்' என்பதன் 'கன்ஸெப்ஷன்' என்ன என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். திரு ஜி. ஆர். கணேசன் என்பவர் பேரில் கொடுத்த குற்றச்சாட்டு பற்றி, அதை மட்டும் படித்துக் காட்டு கிறேன். அவர் கிண்டி என்ஜினியரிங் கல்லூரியின் எம். ஐ. டி. யைச் சார்ந்த நான்—டீச்சிங் ஸ்டாப் ஊர்வலத்திற்கு தலைமை தாங்கி ராஜ்பவனுக்குச் சென்று ஒரு மகஜர் சமர்ப்பித்தார். அதில் வைஸ்-சான்சிலரையும், ரெஜிஸ்ட்ராரு விமர்சனம் செய்யப்பட்டிருந்தார்கள்.

கவர்னரிடம் மகஜர் கொடுத்தால் அது ஒரு 'மிஸ் காண்டக்ட்'. நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். துணைத் தலைவர் அவர்களைக் கேட்கிறேன், இந்த மன்றத்தைக் கேட் கிறேன், இப்படிப்பட்ட ஒரு 'கன்ஸெப்டை' வைத்திருக்கக் கூடிய நிர்வாகத்தினிடம் இப்படியொரு அதிகாரத்தைக் கொடுத் தால் எவ்வளவு மோசமான நிலைக்குக் கொண்டு போய் விடும் என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்து க்ளாஸ் 8-ல்

Connection with press or Radio or Television, etc.

அந்தக் க்ளாஸ் பூராவும் ரெஸ்ட்ரிக்ட் பண்ணப்பட்டிருக்கிறது. அது பூராவும் பத்திரிகைகளில் எழுதக் கூடாது என்று வருகிறது. ரேடியோ, டெலிவிஷனில் பேசக் கூடாது அனுமதி யில்லாமல் என்றிருக்கிறது. புத்தகங்கள் எழுதக்கூடாது என் றிருக்கிறது. அக்கடமிக் ஆக்டிவிட்டீஸ் பூராவும் தடை செய்யப் பட்டிருக்கிறது. மனிதனை குருடனாக்க கூடிய ஒரு விளைவை உண்டாக்கக்கூடிய ஒரு க்ளாஸ். ஆகவே அதை நீக்க வேண்டும் என்று சொல்கிறேன். க்ளாஸ் 8(d)-ல்

An employee of the University shall not except with the sanction of the University give evidence in connection with any enquiry conducted by any person, committee or authority other than the Courts and Police.

என்று போடப்பட்டிருக்கிறது. நான் அதோடு சில ஐடம்களை சேர்க்கிறேன். அவர்கள் முன்னால் கொடுக்கலாம் என்று, அதா வது,

[திரு, ரா. உமாநாத்] [1981 மார்ச் 6

Enquiry Commissions, Tribunals, and such other statutory or quasi judicial bodies other than Courts and Police—

அவர்கள் முன்னாலே கோர்ட், போலீஸ் அனுமதியில்லாமல் எப்படி சாட்சியம் கொடுக்கலாம் என்றிருக்கிறதோ, அதே மாதிரி நான் குறிப்பிட்டிருக்கின்ற இந்த ஸ்தாபனங்கள் முன்னாலே கொடுக்கலாம் என்பது அதனுடைய அர்த்தமாக வரும்.

அடுத்து, இனால் 13. Partiality in official duties. An employee shall not be partial in his performance of his official duties and he should be objective in his approach.

நான் இதை 'டிலீட்' பண்ணவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

Objectivity—What is the norm for objectivity?

யதார்த்த பூர்வமாக நடக்கவில்லை என்று சொன்னால் நடவடிக்கை ரிஜிஸ்திராருக்கும், வைஸ் சான்சலருக்கும் அவர்கள் கையாட்களாக செயல்படுவது யதார்த்தபூர்வமாகவா? அந்த 'கான்செப்ட்' எதற்காக இருக்கிறது? இல்லையென்றால் இன்டிபென்டென்டாக நடப்பது, யதார்த்தமாக நடப்பது சிலருக்கு இருக்கிறது. நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இது விண்டிக்டிவ்.

For punishment and victimisation it will open the flood gates.

அடுத்து, 16-வது ஷரத்து.

Sending representations : An employee shall not make representations to Syndicate, or Government or to any Authorities of the University direct and all representations shall be made through the proper channel.

என்று போடப்பட்டிருக்கிறது. நான் 'ஆட்' பண்ணச் சொல்வது.



1981 மார்ச் 6] [திரு, ரா, உமாநாத்]

"with simultaneous advance copy to Syndicate or Government or to any authorities of the University as the case may be"

என்பதைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்.
அது ரொம்ப அவசியம். ஏனென்றால் எப்படி இந்த விஷயத்தில்
ரெப்ரசென்டேஷன் விஷயத்தில், சர்வாதிகார மனப்பான்மை
அந்த குறிப்பிட்ட யூனிவர்சிடியிலே இருக்கிறது என்பதைச்
சொல்கிறேன். யூனிவர்சிடி அதாரடீஸ் சார்பாக 6, 7 பெண்கள்
எம்பளாயிகளுக்கு ஒரு லாயர் நோட்டீஸ் கொடுக்கப்படு
கிறது. அதுவும் எப்படி? எம். எல். ஏ.க்களுக்கு நீங்கள்
ரெப்ரசன்டேஷன் கொடுத்தீர்கள் என்பதற்காக லாயர் நோட்
டீஸ். நம்மைத்தான் டைரக்டாக அட்டாக் பண்ணுவதற்குப்
பதிலாக, இன்டைரக்டாக தாக்கியிருக்கிறார்கள்.

It is our right to receive the representations.

யார் கொண்டு வந்து கொடுத்தாலும், அந்த ரெப்ரசன்டேஷனை
நாம் பெற்று கவர்ன்மென்ட் இடத்திலே எந்த முறையில்
கொண்டு போவது நம்முடைய உரிமை. உங்களுக்கு உரிமை
இல்லையென்று நேராகச் சொல்வதற்குப் பதிலாக, அந்த உரிமை
யைப் பயன்படுத்தக்கூடிய எம்ப்ளாய்சுகளுக்கு, எம். எல்., ஏக்
களிடம் ஏன் ரெப்ரசன்டேஷன் கொடுத்தீர்கள் என்று லாயர்
நோட்டீஸ். அவர்கள் கேஸ் போட்டு, அவர்களும் ஆஜராகாமல்
அல்லது எப்படியோ எக்ஸ்-பார்டி வாங்கி, இதிலே ஒன்றுமில்லை

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, விதிகளில் உள்ள திருத்தங்களைப்
பற்றித்தான் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது என்று நாங்கள்
அவையிலே கருதிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அவர் எங்
கெங்கோ உள்ள சார்ஜுகளை எல்லாம் எடுத்துப் படித்துக்
கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு இதற்கே நேரம்
சரியாகி விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே, அருள்
கூர்ந்து இது தேவையானது தானா என்பதைத் தாங்கள் தீர்
மானிக்க வேண்டும்.

திரு. என். சங்கரய்யா : ரொம்ப அபூர்வமாக டெலிகேட்
லெஜிஸ்லேஷனிலே வரக் கூடிய விஷயம் மிக முக்கியமாக இருக்கக்
கூடிய காரணத்தினால், பல்கலைக் கழகத்திலே உள்ள ஊழியர்
களை பாதிப்பதால் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே
இப்படி வரும் போது ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொன்னால்
விதிகள் தவறாக இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்ட
முடியும். பின்னர் அது உண்மையில்லை என்று அரசாங்கத்திடம்

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்
களே, இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்ட்டை இதற்கு நாம்
அப்ளை பண்ணுவது சரி வராது. என்றாலும் தனியொரு
மசோதா கொண்டு வரவேண்டும், அது சட்டமாக வேண்டும்
என்கிற எண்ணம் தான் இப்போது செயல்படுத்தப் படாமல்
இருக்கிறது. அதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும். இப்
போதிருக்கிற இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டை இதில் சேர்ப்ப
தற்கில்லை.

அதற்கு அடுத்து ஒரு கேட்டகிரியிலே இருக்கின்றவர்கள்,
இன்னொரு பொறுப்புக்கு வரக் கூடாது என்பதை நாம் எல்லா
தரப்பிலும் சொல்கிறோம். கல்வித் துறையிலே எடுத்துக்
கொண்டால் 40, 50 பேர்களுக்கு மேல் வந்து தங்களுடைய
கோரிக்கையை சொல்கிறார்கள். நாம் யாரையும் தடுக்கவோ,
அவர்களுடைய உரிமையை மறுக்கவோ இல்லை. பத்து பேர்
சேர்ந்து வந்தால் கூட அவர்கள் கூட எங்களிடத்திலே பேசு
கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை கொடுக்கிறார்கள்.
யாரையும் நாங்கள் மதிக்காமல் கூட இல்லை. நாம் விரும்புவது,
குறிப்பாக இப்போது பி. டி. ஆசிரியர்கள் நான்-டீச்சிங் ஸ்டாஃ
பாக போய் அவர்கள் ஆபீஸ் பேரராக இருப்பார்களேயானால்
அவர்கள் தங்களுடைய கஷ்டங்களை, கோரிக்கைகளை சொல்
வதற்கு சகலவிதமான உரிமைகளும் தரப்பட்டிருக்கிறது என்ப
தோடு கூட மற்றவர்கள் சங்கங்களுக்குப் போய் இவர்கள் பணி
யாற்றுவதன் மூலம் தங்களுடைய பொறுப்பை, கடமையை சரி
வர நிறைவேற்ற முடியாது.

பல்கலைக் கழக ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால் 1, 2
மணி நேரம் கூட வகுப்பு இருக்காது. அதற்காக அவர்கள் 8
மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்த
வில்லை. காரணம் அவர்கள் படிக்க வேண்டும், வேறு பல
தயாரிப்புகளை அவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது, காரியங்
களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் இப்
படிப்பட்ட சங்கங்களால் தங்களை முழுமையும் ஈடுபடுத்திக்
கொள்வார்களானால் நிச்சயமாக அவர்கள் முக்கியமான கடமை
யைச் செய்ய முடியாது. இதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை.
அது நாட்டிற்கு பெரிய இழப்பாகி விடும். மற்றபடி அவரவர்கள்
தங்களுக்குள் சங்கத்தை வைத்துக்கொள்வதிலே ஆட்சேபணை
இல்லை. இப்போது கூட ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் சங்
கத்தைப் பற்றிச் சொன்னார்கள். பெரும்பான்மையானவர்கள்
ஒரு சங்கம் வைத்து அவர்கள் நல்ல முறையிலே அணுகிக்
கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கே இருக்கின்ற சூழ்
நிலையைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்களே என்பதுதான்.
சங்கம் அவர்கள் வைக்காமல் இல்லை, சங்கம் வைத்து நடத்தக்





கூடிய தகுதி அவர்களுக்கு இல்லாமல் இல்லை. எல்லாக் காரியங்
களையும் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக
ஒவ்வொரு பிரிவையும் எடுத்துக் கொண்டால் படித்தவர்கள்தான்
இருக்கிறார்கள், விவரம் தெரியாதவர்கள் இல்லை, வேறு ஒரு
பிரிவினர் தங்களுக்கு தலைமை தாங்க வேண்டுமென்ற நிலைமை
இல்லை, அங்கே படியாதவர்களோ அல்லது விவரம் தெரியாதவர்
களோ அல்லது அனுபவம் இல்லாதவர்களோ இல்லை. நான்-
டீச்சிங் ஸ்டாபை எடுத்துக் கொண்டால் பட்டதாரிகள் இருக்
கிறார்கள். அவர்களே தங்களுடைய கோரிக்கைகளை, குறை
களை எடுத்துச் சொல்லக்கூடிய தகுதியையும் திறமையையும்
பெற்றவர்களாக இருக்கிறார்கள். எல்லோரும் படித்தவர்கள்
தான், ஆகவே மற்றவர்கள் அதிலே போய் இருந்து கொண்டு
குழப்பம் விளைவிக்கக் கூடாது என்பதுதான். மற்றபடி எல்லா
உரிமைகளையும் தருவதற்குத் தான் விரும்புகிறோம். அரசியல்
சார்பு என்பது, இது போன்ற கல்வி நிறுவனங்களிலே அரசியல்
சார்பு வெளிப்படையாகவே இயங்க ஆரம்பித்து விட்டால்
மாணவர்கள் மத்தியில் அது சரியான முன் மாதிரியாக இருக்காது.
அரசியல் போர்க்களமாக கல்வி நிறுவனங்கள் ஆகிவிடக் கூடும்.
ஒரு கட்டுப்பாட்டோடு தங்களுடைய அறிவுப் பணியிலே முழுமை
யாக கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காகத்தான் சொல்
கிறோம். எம்.எல்.சி. எலக்ஷனில் ஆசிரியர் தொகுதி வருகிறது,
பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், முனிசிபாலிட்டியைச்
சேர்ந்தவர்கள் அனுமதியைப் பெற்றுக் கொண்டு அதிலே நிற்
கிறார்கள், வோட்டு கேட்கிறார்கள், பிரச்சாரம் செய்கிறார்கள்,
அதை இப்போது நாம் யாரும் தடுப்பதில்லை. அரசியல் கட்சி
களோடு தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டு வெளிப்படையாக
செய்யும் பொழுது பல்கலைக் கழகத்தின் நலனைக் கருதி,
நாட்டின் நலனைக் கருதி நாம் இந்தக் காரியங்களைச் செய்
கிறோம். மற்றபடி திரு. உமாநாத் அவர்கள் சொன்ன கருத்துக்
களை பல்கலைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.
பல்கலைக் கழகம் என்பது ஒரு தன்னாட்சி நிறுவனம் ஆகும்.
அவர்கள் ஆட்சி மன்றக் குழுவிலே இந்தக் கருத்துக்களை எல்லாம்
பரிசீலிக்கலாம். அவர்கள் இங்கே சொன்ன கருத்துக்களை எல்
லாம் நாங்கள் தடுக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. அந்தக்
கருத்துக்கள் எல்லாம் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவிற்கு
அனுப்பப்படும், அவர்கள் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம்,
நாமே அதை மாற்ற ஆரம்பித்தால், இந்த சட்டமன்றமே
சட்டத்தைச் செய்யலாம், அதைத் திருத்தலாம் என்ற உரிமைகள்
இருந்தாலும் இது போன்ற காரியங்களிலே செய்ய முற்பட்டால்
தன்னாட்சி தன்மை அழிந்துபடும், அது இல்லாமல் போய்விடும்.
நாமே உருவாக்கிய சட்டம் அது. நாமே விரும்புகிற ஒன்றுதான்,
எல்லோரும் விரும்புகின்ற ஒன்றுதான், அரசு விரும்புகிற
ஒன்று தான். உங்களுடைய கருத்துக்களை பல்கலைக் கழகத்
திற்கு அனுப்புகிற காரியத்தை அரசு செய்யும். தேவைப்

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 மார்ச் 6

படுமானால் அதை அவர்கள் எடுத்துக் கொள்ளலாம், அதிலே அரசு குறுக்கே நிற்காது என்று சொல்லி இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி :

" பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர் நடத்தை விதிகள் செய்வது குறித்து 19—1—1980 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 19—12—1979 ஆம் தேதியிடப் பெற்ற கல்வித் துறையின், 2358 ஆம் எண் அரசாணையில் வெளியாகி, 9—7—1980 ஆம் தேதியன்று பேரவை முன் வைக்கப்பெற்ற அறிவிப்பில் கீழ்க் கண்ட திருத்தங்கள் செய்யப்பெற வேண்டும்.

Rule-2.

*Add* the word "lawful" before the word "instruction" in lime 4 of the Note under Rule-2.

Rule-3.

*Delete* the words "and not do anything which is unbecoming of an University employee" occurring in lines 4 and 5.

Rule-5.

*Delete* Rule 5.

Rule-6 (i)

*Delete* the portions after the words "integrity of India", occurring in lines 4, 5 and 6.

Rule 6(ii)

*Delete* Rule 6 (ii)

(i) *Delete* the words beginning from "Security of the State" and dening with decency or morality occurring in line 4.

**(ii) Delete the words 'incitement to an offence' occurring in line 6.**



1981 மார்ச் 6] [திரு. செ. அரங்கநாயகம்]

(iii) *Delete* the words "University or Administration occuring in line 8.

(iv) Delete the portion beginning from "(*b*) the resort to" and ending with "Employees of the University" occurring in lines 9, 10, 11 and 12.

Rule-8

(i) *Delete* sub-clauses a, b (i) and b(ii).

(ii) *Add* "Enquiry Commission", "Tribunals" and such other statutory or quasi statutory enquiry bodies after the word "Police" occurring in line 4.

Rule-13

*Delete* Rule 13.

Rule-16.

*Add* the words "with simultaneous advance copy of the Syndicate, or Government or to any authorities of the University as the case may be" after the words "through the proper channel" occurring in line 4.

Rule-17.

*Delete* Rule 17.

திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

[முற்பகல் 11-20]

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### அ. தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/1981) ஆய்வு செய்வதற்காக 27 உறுப்பினர்கள் அடங்கிய (18 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 9 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக்குழு ஒன்றை அமைக்க சட்டமன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்பெற வேண்டும்.

1. திரு. ஜி. கிருஷ்ணராஜ்
2. திரு. கே. சௌந்தரராசன்
3. திரு. கோவைத் தம்பி
4. திரு. வி. கருப்புசாமி பாண்டியன்
5. திரு. கே. குப்புசாமி
6. திரு. கே. எம். அப்துல்ரசாக்
7. திரு. பாபு கோவிந்தராசன்
8. திரு. எம். சின்னசாமி
9. திரு. கே. பாலசுப்பிரமணியம்
10. திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்
11. திரு. எஸ். ரத்னராஜ்
12. திரு. என். வி. என். சோமு
13. திரு. வெ. இராஜசேகரன்
14. திரு. டி. மணி
15. திரு. ஆர். தியாகராஜன்
16. திரு. கே. தனுக்கோடி தேவர்
17. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
18. டாக்டர் கே. சௌரிராஜன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.



### (ஆ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் பதவிக் காலம்) நீட்டித்தல் சட்ட முன்வடிவுகள் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1981 முதல் 28/1981 வரை).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே,
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தனி அதிகாரி
களின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான சட்ட முன்வடிவுகள்
ஆறு இருக்கின்றன. அவைகளை இங்கே ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த
ஆறு சட்ட முன்வடிவுகளையும் ஒன்றாகவே விவாதத்திற்கு
எடுத்துக் கொண்டால் மிகவும் நன்மை பயக்கக்கூடிய காரியமாக
இருக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளின் மீது
தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்த பிறகு பதில்
சொல்வதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டிஸ்கஷன்
காமனாக இருக்கட்டும்; மூவ் செய்வதைத் தனித்தனியாகச்
செய்யலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாமன்றத்தினுடைய துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள்
இந்த மசோதாக்களைப் பற்றி சபையிலே சொல்கிறபொழுது, பல்
வேறு மசோதாக்களும் ஒரே பொருள் குறித்து வருகின்றன.
மாநகராட்சி, பஞ்சாயத்து யூனியன் இவைகளெல்லாம் வருகின்
றன. ஸ்பெஷல் ஆபீசர்கள் பதவிக் காலத்தை நீட்டிப்பது சம்ப
ந்தமானது இந்த மசோதாக்கள், இங்கே பல்வேறு உறுப்பினர்
கள் இருக்கிறோம். ஆகவே, ஒவ்வொரு மசோதாவாக எடுத்துக்
கொண்டால்தான், ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனியாக
வாய்ப்பு இருந்தால்தான் தங்கள் கருத்துக்களைப் பரவலாகச்
சொல்வதற்கும், உறுப்பினர்கள் அதிகமான அளவில் பேசுவதற்
கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதிகமாக உறுப்பினர்கள் தங்
கள் எண்ணத்தை, கருத்துக்களைச் சொல்லும் முறையிலே
வாய்ப்பு கிடைக்கின்ற காரணத்தை அடிப்படையாக வைத்து
தனித்தனியாக எடுத்துக்கொள்வதுதான் சரியாக இருக்கும் என்
பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பி. ஏ. சி-யிலே
முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக எடுத்துக் கொள்ள
லாம் என்று.

திரு. அ. ரகுமான்கான் : மாமன்றத்தினுடைய துணைத் [1981 மார்ச் 6
தலைவர் அவர்களே, ஒரு திருத்தம், இந்த முனிசிபாலிட்டிகள், கார்ப்பரேஷன் இவைகளைத் தனித்தனியாக எடுத்துக்கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களைப்பற்றி ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்று நடந்த அலுவல் ஆய்வு குழுவிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒரே விவாதமாக எடுத்துக் கொள் ளலாம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணை தலைவரவர்களே; மாண்புமிகு அமைச்சரவர்கள் 6 சட்ட முன் வடிவுகளையும் ஒன்றாக முன்மொழிந்துவிட்டு. அதற்குப்பிறகு விவாதத்தைத் தொடங்குவதுதான் சரியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர் களே, ''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதி காரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' என்று மொழிகிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத் தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 24/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' என்று மொழிகிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1981) ஆய்வுக்கு † எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று மொழிகிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 26/1981) ஆய்வுக்கு † எடுத்துக் கொள்ளப் பெற வேண் டும்'' என்று மொழிகிறேன்.

* 1931-ம் ஆண்டு, மார்ச் மாதம் 2-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

† 1981-ம் ஆண்டு, மார்ச் மாதம் 2-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' என்று மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு † (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1981) ஆய் வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று மொழிகிறேன்.

* திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகளுடைய தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற மசோதாக்களின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். ஒரே நேரத்தில், நம்முடைய தமிழ்நாடு அரசு 12,000-க்கு மேற்பட்ட ஊராட்சித் தலைவர் களைக் கலைத்து, தனி அதிகாரிகளை நியமனம் செய்துவிட்டு, கிராம நிர்வாகமே அடியோடு ஸ்தம்பித்து விட்டிருக்கிற ஒரு சூழ்நிலையில் இன்றையதினம் தமிழ்நாட்டிலே கிராமங்கள் இருந்து வருகின்றன என்பதை நான் உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன் நாங்கள் கூட நினைத்தோம் ; ஊராட்சிகளைக் கலைத்ததைப் பற்றிக் கூட கருத்து வேறுபடவில்லை. ஆனால், உடனடியாகத் தேர்தலை நடத்தி விட்டிருப்பார்களானால், இன்றைய தினம் கிராமத்திலே இருக்கிற பல்வேறு பிரச்சினைகள், பொதுமக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறுவதற்கு ஒரு பெரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால், அரசாங்கம், ஏற்கனவே இருந்த உள்ளாட்சித் துறை அமைச்சரானாலும், இன்றைய தினம் இருக்கிற நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரானாலும் அடிக்கடி வானொலியின் மூலமாகவோ, அல்லது பத்திரிகைகளிலோ, தேர்தல் நடைபெறும், தேர்தல் நடைபெறும் என்று சொல்லி, அவர்கள் சொல்கின்ற அந்த ஆருடத்தை வேண்டுமானால், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் நாட்டிலே இருக்கிற பொதுமக்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர, ஆனால் தேர்தல் வருமா என் பதிலே உள்ளபடியே எனக்கெல்லாம் ஒரு பெரிய ஐயப்பாடே எழுகின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள

*1981-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

† 1981-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள், இந்தத் திருத்தங்களை நிறைவேற்று கின்ற பல கால கட்டங்களிலே எல்லாம். இன்றை தினம் இவர் கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் இன்றைய தினம் மாறுதலாகத் தெரிகிறதே தவிர, வேறொன்றும் அல்ல. அப்பொழுது அரசாங்கம் சொல்லியது, 18 வயதானவர்களுக் கெல்லாம் வாக்குரிமை வழங்க இருக்கிறோம். இளைஞர்கள் எல்லாம் அந்தப் பொறுப்புக்கு வர வேண்டும், இளைஞர்கள் எல்லாம் வாக்களிக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தி னுடைய நோக்கம். அதற்காக, இந்தத் தேர்தலைத் தள்ளி வைக்கிறோம் என்று அன்றையதினம் சொன்னார்கள். ஆனால், இன்றையதினம் 18 வயதானவர் பற்றிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் எப்பொழுது என்று கேட் டால், இப்பொழுது மத்திய அரசாங்கம் சொல்கிறது, நாட்டிலே மக்கள் தொகை கணக்கெடுக்கிறார்கள். இப்பொழுது தேர்தல் நடத்த வேண்டாம் என மத்திய அரசாங்கம் கேட்டுக் கொண் டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அமைச்சர் கொடுத்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்திலே கூட, 6 மாத காலத்திற்குக் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கிறோம். ஆனால், 3 மாத காலத்திலேகூட தேர்தல் வந்து விடுமேயானால், அதை ரத்து செய்து விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். 6 மாத காலத்திலே தமிழ்நாட் டிலே கடுமையான வறட்சி. குடிப்பதற்கே தண்ணீரில்லை. இந்த நிலையிலே, அமைச்சர் அவர்கள் அடுத்து சொல்லப் போகிற ஆருடம், நாங்கள் தேர்தலை நடத்தலாம் என்றுதான் இருந தோம். ஆனால் வறட்சி; அரசியலமைப்புச் சட்டத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. வறட்சிக் காலங்களிலே தேர்தலை நடத்த வேண்டாம் என. ஆகவே, தேர்தலைத் தள்ளி வைக்கப் போகிறோம் என்கின்ற காரணத்தைக் காட்டி, திருத்தத்தினை எதிர்காலத்திலே அமைச்சர் அவர்கள் கொண்டு வரப் போகி றார்கள். அதுதான் அடுத்து வருகிற ஆருடமே தவிர, தமிழ் நாட்டிலே தேர்தல் வரப் போவதில்லை என்று திட்டவட்டமாக நாங்கள் நம்பிக் கொண்டிருக்கிறோம். மக்களிடத்திலே பேரா தரவு பெற்று நீங்கள் எல்லாம் இன்றைய தினம் ஆட்சிக்குக் கூட வந்திருக்கிறீர்கள். ஆனால், 234 சட்டமன்ற உறுப்பினர்களும், 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும்தான் தமிழ் நாட்டிலே மக்க ளுக்குப் பணியாற்றத் தகுதி பெற்றிருப்பதாக நாம் நினைத்து விடக் கூடாது. நம்மைப் போன்று ஆயிரக்கணக்கான நண்பர்கள், தோழர்கள், எல்லா கட்சியிலுமே, எப்பொழுது ஊராட்சி மன்றத் தேர்தல் வரும்? நாம் ஏன் ஓர் உறுப்பினராக வந்து பணியாற்றக் கூடாது? தலைவராக வருவதற்கு நமக்கு ஒரு வாய்ப்பை மக்கள் அளிக்க மாட்டார்களா? அல்லது, பெருந்

தலைவராக வர வாய்ப்பு அளிக்க மாட்டார்களா என்று பல்வேறு கட்சிகளிலே இருக்கிற பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணம் உடையவர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வந்து மக்களுடைய குறைகளைப் போக்கக் கூடிய வாய்ப்பை அளிக்காமலே நாம் இருக்கிறோம்.

இன்றைய தினம் ஊராட்சிகளுக்குத் தனி அதிகாரிகளை நீங்கள் நியமனம் செய்கிறீர்கள். ஒரு ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஆணையாளர் தான் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற எல்லா ஒன்றியங்களுக்கும் தனி அதிகாரி. 40-க்கு மேற்பட்ட, 50, 55, 60 என்று இப்படி பல்வேறு வகையிலே, ஒன்றிய மன்றங்கள் ஒன்றியக் குழுக்களிலே அடங்கியிருக்கின்றன. இன்றைய தினம் என்ன நடந்துக் கொண்டிருக்கிறது? எல்லா ஊராட்சி மன்றங்களுடைய தலைவர்களிடத்திலே இருந்த அந்த செக் புத்தகங்கள் கமிஷனரிடத்திலே இருக்கின்றன. தினசரி கமிஷனர் அவர்களால் ஒரே காலத்திலே, ஊராட்சி மன்றங்களுடைய கணக்கிலேயிருந்து செக்குகள் எடுக்கப்படுகின்றன. ஏறகனவே, சட்டம் வந்தபொழுது நாங்கள் சொன்னோம்.

(முற்பகல் 11–30)

தலைவர்கள் இருக்கின்றபோது, பஞ்சாயத்துத் தலைவர்கள் பணத்தை எடுத்துச் செலவழிக்கின்றபோது அதை அவருக்குக் கீழே பணியாற்றக்கூடிய இ.ஓ.பி. ஆடிட் செய்கிறார். அதே போன்று ஊராட்சி ஒன்றியத்திலே உள்ள நிதியில் இருந்து, வளர்ச்சிப் பணிகளுக்காக சிறு சிறு வேலைகள் செய்கிறோம் என்றால் அதை மெஷர்மென்ட் செய்கின்ற அதிகாரம் அங்கே உள்ள ஓவர்சியரிடம் இருக்கின்றது. இப்போது தலைவர்கள் எல்லாம் போய் அவை தனி அதிகாரிகளிடத்திலே இருப்பதால் அவரின் கீழே பணிபுரிகின்ற ஓவர்சீயர்களும், இ.ஓ.பி.க்களும் அதை சரி பார்க்க வேண்டும் என்று சொல்வது நியாயம் இல்லை என்று இந்த மன்றத்திலே சொல்லப்பட்டு, நமது எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் கேட்டுக் கொண்டார்கள். அந்த நேரத்தில் இந்தத் துறையில் முன்னால் அமைச்சராக இருந்தவர்களும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் ஒரு உறுதியைத் தந்தார்கள். அந்த முறை இதுவரையில் மாற்றப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அதற்கான விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட காரியங்கள்தான் இன்றைய தினம் கிராமங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விளக்கு எரியவில்லை என்று சொன்னால் அன்றைய தினம் ஊராட்சி மன்றத்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1981 மார்ச் 6

தலைவர்களே பொறுப் பேற்றார்கள். இன்றைய தினம் குடிக்கத் தண்ணீர் இல்லை. நேற்றையதினம் கூட சொன்னோம் ஒதுக்கப்பட்ட பணம் போதாது என்று சொன்னோம். எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் பணம் இருக்கின்றது. இருக்கிற பணத்தை அந்தக் கிராமங்களில் இருக்கிற கிணறுகளை, ஆழப் படுத்தக் கூடிய கிணற்றைக் கூட, அந்த கிணற்றை 5 அடி 6 அடி ஆழப்படுத்தினால் தண்ணீர் கிடைக்கும். பொது மக்களுடைய குடிநீர் பிரச்சினையை ஓரளவுக்கு அது போக்கும் என்கின்ற நிலை இருந்தாலும்கூட, ஆணையாளர்கள் அதிலே கவனம் செலுத்த முடிகிறதா என்றால் முடியவில்லை. நாங்கள் கேட்டால் சொல்லுகிறார்கள், யாரும் வரமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு எத்தனையோ பணிகள். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற அந்தப் பணிகளை அவர்கள் பார்க்க வேண்டும். அவர்களை கொண்டு போய் இத்தனை ஊராட்சி மன்றங்களுடைய தனி அதிகாரிகளாக நியமனம் செய்துவிட்டு, கிராமத்தினுடைய நிர்வாகமே இன்றையதினம் அந்த வகையில் சீர்கேடு அடைந்திருக்கிறது. அதே போன்று பேரூராட்சிகள், மற்ற கிராமங்களிலே இருக்கின்ற தலைவர்கள் ஊராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் இல்லாமல் இருக்கும் நிலை உள்ளது. சாதாரணமாக இன்றைய தினம் இருக்கிற ஒரு ஆணையாளர் ஊராட்சி மன்றத்தினுடைய தீர்மானம் நிறைவேற்றுகிறார். ஊராட்சி மன்றத்தின் நிதியில் இருந்து இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் அதற்கு அனுமதி பெறவேண்டும் என்றால் கோட்ட வளர்ச்சி அதிகாரிக்குப் போக வேண்டும். தனிப்பட்ட தலைவர்கள் இருந்தால், அவர் கோட்ட வளர்ச்சி அதிகாரியை அணுகி இந்தக் காரியத்திற்காக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம். அதற்கு இத்தனை ஆயிரம் ரூபாய் செலவாகின்ற நிலைமை இருக்கிறது. அந்த ஊராட்சி மன்றத்தில் நிதி கூட இருக்கிறது. இது பொதுமக்களுடைய மிக முக்கியமான பிரச்சினை. எனவே இதற்கு நீங்கள் அனுமதி தாருங்கள் என்று கேட்கலாம். ஆனால் இன்றையதினம் ஒன்றியத்தினுடைய ஆணையாளர் கோட்ட வளர்ச்சி அதிகாரிகளின் கீழே பணியாற்றக் கூடியவர்கள். அவர் என்ன செய்கிறார் நாம் ஏன் கோட்ட வளர்ச்சி அதிகாரியிடம் போக வேண்டும், என்ற காரணத்தினால் அவர்கள செல்வது இல்லை. இப்படி இன்றையதினம் சாதாரணமாக கிராமத்தினுடைய நிர்வாகமே ஸ்தம்பித்துக் கொண்டு இருக்கிறது என்பதை துணைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே கிராம அதிகாரிகள் இல்லை. இன்றைய தினம் ஊராட்சி மன்றத்தில் தலைவர்கள் இல்லை. கிராமங்களிலே முக்கியமான பொறுப்பிலே இருந்த மணியம்கள், கர்ணங்கள் ஊராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் போன்றவர்



1981 மார்ச் 6] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

களை இந்த அரசாங்கம் அவசரச் சட்டத்தின் மூலமாக ஒழித்து விட்டது. அவர்கள் இன்றையதினம் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள் அது என்ன ஆகுமோ எனக்குத் தெரியாது. இப்படி, பட்ட ஒரு சூழ்நிலை இன்றைய தினம் கிராமங்களிலே இருக்கிறது. சாதாரணமாக ஏழை எளிய மக்கள் வறுமைக் கோடு, வறுமைக் கோடு என்று சொல்லிவிட்டால் மட்டும் போதுமா? வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற அந்த ஏழை எளிய மக்களுக்கு கிடைக்க வேண்டிய குடிநீர், விளக்கு வசதி ரோடு வசதி மற்றும் சாதாரண பிரச்சினைகள் கூட தீர்வு கிடைக்க முடியாத ஒரு பயங்கரமான நிலை இருக்கின்றது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாக மெத்தப் பணிவோடு நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். சட்டமோ தயாராக இருக்கின்றது. மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிய இருக்கிறது. வறட்சி என்று காரணம் காட்டியோ அல்லது வேறு எந்தக் காரணம் காட்டியோ நீங்கள் மறுபடியும் ஆகூடம் சொல்லுகின்ற பணியை செய்யக் கூடாது. செய்யக்கூடாது என்று இந்த நேரத்தில் மெத்தப் பணிவோடு வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. இல. லக்ஷ்மன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள நிர்வாகங்களைக் கலைத்துவிட்டு தனி அதிகாரிகளை நியமிப்பது குறித்து இங்கே மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். அதை மேலும் நீட்டிப்பதன் விளைவாக நாட்டிலே ஜனநாயகத்தை நாம் வேர் தோண்டி புதைப்பதாக நான் கருதுகிறேன். ஜனநாயகத்தின் அடித்தளமான பஞ்சாயத்துக்களை தேர்தல் இல்லாமல் இன்றைக்கு எதேச்சாதிகாரமாக தனி அதிகாரிகள் கொண்டு நடத்துவது பெயரே—தனி அதிகாரி— அந்த முறையில் ஜனநாயகம் இன்றைக்கு நாட்டிலே செத்துக்கொண்டு இருக்கிறது என்பதைத்தான் இந்த நேரத்தில் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். இந்தத் தனி அதிகாரிகள் தங்களுடைய நிலையில் தங்களுடைய பொறுப்பிலே என்னென்ன செய்கிறார்கள் என்று பார்க்கும்போது மிகவும் வேதனைக்குரியதாக இருக்கின்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருந்தபோது அந்தக் கிராம மக்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்யக்கூடிய நிலை இருந்தது. அந்த நிலை மாறி இன்றைக்கு ஏழை மக்களிடம் இருந்து வசூலித்த வரிப்பணத்தை, சேர்த்து வைத்ததை எல்லாம் இன்றைக்கு பல ஊழல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்கள் பணங்கள் எல்லாம் முறைகேடாக செலவழிக்கப்படுகின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் மற்றவர்களுக்கும் வந்திருக்கும். அதை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சர் அவர்களால் முடியவில்லை என்பதை

[திரு. இல. பலராமன்] [1981 மார்ச் 6

சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்த நிலை மேலும் நீடித்துக்கொண்டே இருக்குமானால், அது வருத்தத்திற்குரிய ஒரு நிகழ்ச்சி என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் தொகை கணக்கு எடுக்கிற காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டது என்பதை இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அடுத்து, இன்னொரு காரணத்தையும் சொல்லியிருக்கிறார்கள். வாக்காளர்களுக்கு போட்டோ வழங்குவதில், அடையாள அட்டைகள் வழங்குவதில் உள்ள காலதாமதத்தை இரண்டாவது காரணமாகக் காட்டியிருக்கிறார்கள். தேர்தல் நடத்துவது என்பது நம்முடைய வரையறைக்குள்ளே நம்முடைய மாநில அரசுக்குள்ளே வருகிற ஒரு தனி அதிகாரம் ஆகும். மக்கள் தொகை கணக்கெடுக்கிறபோது தேர்தல் கூடாது என்று மத்திய அரசு ஆணையிடுகிற முறையில் சொல்லியிருக்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இதற்காக நீங்கள் வேறு காரணங்களைச் சொல்லியிருக்கலாம். இயற்கை சூழ்நிலை உங்களுக்கு ஒத்து வரவில்லை. எங்கும் வறட்சி, பஞ்சம், தண்ணீர் இல்லை, இந்த நிலைமைகளில் தேர்தலைச் சந்திக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தயங்குகிறது, காலம் தாழ்த்துகிறது என்று இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிலைமை நீடித்துக்கொண்டு போனால் கிராமங்களில் ஊழல்கள் மலிவதற்கு அதிக வாய்ப்பு ஏற்பட்டு விடும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். குறிப்பாக போளூர் ஒன்றியத்தின் தலைவர் இல்லாத காரணத்தால், அந்தத் தலைவரின் பொறுப்பில் இருக்கிற ஆணையாளர் கிராமங்கள் தோறும் சென்று மக்கள் படும் அவல நிலையை அறிந்து அதற்குப் பரிகாரம் காணவேண்டும். ஆனால் உங்கள் நிர்வாகத்தில் இருக்கும் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் என்ன செய்கிறார் என்றால் சுற்றுலா சென்றுகொண்டு இருக்கிறார்கள். கடந்த 10 நாட்களுக்கு முன்னால், குடிக்கத் தண்ணீர் இல்லை என்று சொல்வதற்காகப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு சென்று இருந்தேன். அங்கே ஆணையாளர் இல்லை. எங்கே என்று கேட்டபோது, சுற்றுப்பயணம் சென்று இருப்பதாக சொன்னார்கள். அதுவும் பஞ்சாயத்து யூனியன் நிதியில் இருந்து சுற்றுப் பயணம் செல்ல இருக்கிற வாய்ப்பைப் பயன் படுத்திச் சென்று இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே 10 நாளாக யாரும் இல்லை. யார் கிணறு வெட்டுவது, யார் மக்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்வது என்று கேட்டால் அதற்கு ஒருவரும் அங்கே கிடையாது. அப்படிப்பட்ட ஒரு அவல நிலை அங்கே இருந்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 மார்ச் 6] [திரு. இல. பலராமன்]

அதேபோல, டி.டி.ஓ. மாவட்ட வளர்ச்சி அதிகாரி அவர்கள் ஏதோ தன்னிச்சையாக மக்கள் குழு கூட்டத்தைக் கூட்டுகிறார். அதற்கான நோட்டீஸ் நாளை காலை 10 மணிக்கு மீட்டிங் என்றால், முதல் நாள் இரவு 8 மணிக்குத்தான் வரும். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அப்படித்தான் வருகிறது. எனக்கு அந்த அனுபவம் இருக்கிறது. அங்கே சென்று பார்த்தால் அந்தக் கூட்டத்தை திடீரென்று கான்சல் செய்து இருப்பார்கள். அந்த அளவிற்கு அங்கே நிர்வாகம் நடந்து கொண்டு இருக்கிறது. மேலும் அந்த மக்கள் குழு எந்தவிதமான அதிகாரம் இல்லாமல் என்ன செய்ய முடியும்? அவர்கள் தீர்மானம் போட்டால் அதற்கு எந்தவிதமான மரியாதையும் கிடையாது. அதற்குப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். குறிப்பாக, போளூர் ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் பல குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து அமைச்சர் அவர்களிடத்தில் நான் சொல்லி இருக்கிறேன். அதற்குரிய எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர்கள் அங்கேயே இருந்து மேலும் தவறுகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து நிர்வாகம் ஊழல் நிர்வாகமாகப் போய்விட்டது என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ளமாட்டார்கள். வருத்தப் படமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்குப் பரவலாக சூழ்நிலை இருக்கிறது. மக்கள் குழுவில் ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்த போதிலும் அவர்களையும் மதிப்பது இல்லை. மக்கள் குழுவிற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாத காரணத்தால், அங்கேயுள்ள மோசமான நிலமைகளைப் போக்க மக்கள் குழுவிற்கு சில அதிகாரங்கள் வழங்க அரசு உத்தரவுகளைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

இங்கே, வேலைக்கு உணவுத் திட்டம் என்ற திட்டத்தைச் செயல் படுத்துகிறோம். அது நல்லமுறையில் செயல்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் தரப்பிலிருந்து சொன்னார்கள்; ஆளும் கட்சி தரப்பிலிருந்தும் கூட சொன்னார்கள். அது உண்மை தான். கோடிக்கணக்கான ரூபாய்க்கு மத்திய அரசு அளிக்கும் உதவியை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளவில்லை. அதனால் இன்றைக்குக் கிராம மக்களுக்கு வேலை கிடைக்க வில்லை; உணவும் கிடைக்கவில்லை. பலத்த மோசடி பல்வேறு இடங்களிலே பல்வேறு வகைகளிலே நடந்திருக்கிறது. கிராம சேவக்குகள் முதல் மேல்மட்டம் வரையில் ஊழல் நடந்திருக் கிறது என்று நான் அறிகிறேன். அந்த அளவுக்கு மத்திய அரசின் உதவி வீணாக்கப்படுகிறது. ஆகவே, இந்த தனி அதிகாரிகள் நீடிக்கும் நிலை மேலும் இருக்கக்கூடாது; அவர்கள் பதவி காலத்தை நீட்டிக்கக்கூடாது.

[திரு. இல. பலராமன்] [1981 மார்ச் 6

மேலும் தேசிய கிராம அபிவிருத்தித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை நாம் அமுல்படுத்த இருக்கிறோம். அதிலும் என்ன நிலை? எந்தக் கிராமத்திற்கு என்ன செய்யலாம் என்று மக்கள் பிரதிநிதிகளிடம் கூட ஆலோசனை கேட்பது கிடையாது. அதிகாரிகள் நினைத்தபடி ஏதோ ஒன்றைச் செய்கிறார்கள்; அதன் பிறகு அதற்கு அங்கீகாரம் தாருங்கள் என்று கேட்கிறார்கள். எந்தெந்த கிராமத்தில் எந்தெந்த வேலையை அல்லது எப்படிப் பட்ட வேலைகளை எடுத்துக்கொள்ளலாம் என்று மக்கள் குழுவிலே கேட்பதில்லை. மக்கள் குழுவிலேகேட்டு, மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டு, என்ன செய்ய வேண்டுமென்று முடிவு செய்து, ஆலோசனை பெற்று, வேலைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய ஆணைகளை அரசு பிறப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்;

எங்களுடைய ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் ஒரு குற்றச்சாட்டை அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்கள்; எனக்கும் அனுப்பியிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு டெண்டர்கள் விட்டிருக்கிறார்கள். அந்த டெண்டர்கள் நாமினேஷன் முறையில் கொடுத்திருக்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு. அதைப்போன்று இலட்சக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்களை நிறைவேற்றும் போது, அந்தத் திட்டங்களை எல்லாம் ஏழை எளிய மக்களுக்கு நல்லமுறையிலேயே பயன்படும் விதத்தில் செயல்படுத்த வேண்டும். தற்போது அந்த அளவுக்கு நல்ல முறையில் செயல் படுத்தவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது. நல்லமுறையில் காரியங்கள் நடக்க அரசு உத்தரவிட வேண்டும் எனறு கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த தனி அதிகாரிகள் பதவி காலத்தை 6 மாதம் நீட்டிப்பது என்பதை இதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். இந்தக் காலத்திற்குள் எப்படியாவது தேர்தல் நடைபெற்று, மக்கள் பிரதிநிதிகள் அங்கே வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி வந்தால் தான் ஜனநாயகம் வளரும், நாடு சுபிட்சமாக இருக்க முடியும், மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் ஒன்றைக் கூறினார்கள். கிராம மக்களுக்கு தண்ணீர் கூட கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தப் பிரச்சனையை நிவர்த்தி செய்வதற்கு அரசுக்கு சில சங்கடங்கள் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறட்சிப் பகுதி என்று இன்று அரசு கூறினாலும் அங்கே போர் வெல்ஸ் என்ற முறையில் 500



1981 மார்ச் 6] [திரு. இல. பலராமன்]

பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு ஒன்றியத்திற்கு 3. 4 என்று கிடைத்தாலும், நிலைமை சீரடையாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட பிரச்சனைகளை விரைவிலே தீர்த்துவைக்க, குறைபாடுகளைப்போக்க மக்கள் குழுக்களை நியமித்து, மக்களோடு இணைந்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

எங்கள் மாவட்டத்திலே இது போன்ற விஷயங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் மக்கள் பிரதிநிதிகளைக்கூட கலந் தாலோசிப்பதில்லை. அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் இது வரையில் மாவட்ட வளர்ச்சி மன்றத்தைக் கூட்டவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட அழைத்து, மாவட்டத்தில் இருக்கிற பிரச்சனையை கவனிக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டி ருப்பதால் எங்கள் மாவட்டத்தில் ஜனநாயக சீர்கேடு ஏற் பட்டிருக்கிறது. தமிழகத்தில் இந்தமாதிரி நிலைமை இல்லாமல், மேலும் நீடிக்காமல் இருக்க அரசு உறுதியாக, உறுதுணையாக இருக்க வேண்டும். அப்படியானால்தான் கிராமங்கள் மறுமலர்ச்சியடைய முடியும், கிராம மக்கள் சுபீட்சமாக வாழமுடியும். ஆகவே, தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை மேலும் நீட்டிக் காமல் இருக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நகராட்சிகள் தனி அதிகாரிகள் ஆயுள் காலத்தை நீட்டிக்கக்கூடிய இந்த மசோதாவிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் கடந்த 6 ஆண்டுகளாக இல்லாமல் இருக்கின்றன.

1969–70-ல்தான் அந்தத் தேர்தல்கள் நடந்தன. அன்றிலிருந்து தனி அதிகாரிகள் தான் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். ஆகவே இன்றைக்கு ஊராட்சியானாலும் சரி, நகராட்சியானாலும் சரி, எந்தவிதமான வேலைகளும் ஒழுங்காக நடைபெறவில்லை என்பது அனைவருக்குமே தெரியும். ஆங்காங்கே தனி அதிகாரிகளாக இருக்ககூடியவர்கள் அதிகாரிகள் லெவலில் ஏதோ ஒன்றைப் பேசி முடிவு செய்து சில

[திரு. என். பழனிவேல்] [1981 மார்ச் 6

வேலைகளைத் தான் செய்கிறார்களே தவிர மக்களுடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு எந்த ஒரு நகராட்சியிலும், பேரூராட்சியிலும் செய்வது கிடையாது. ஆகவே இந்தத் தனி அதிகாரிகளின் காலத்தை நீடித்துக்கொண்டே போவது என்பதில் ஒரு முடிவே காண முடியாதோ என்கின்ற ஒரு அச்சத்தை இன்றைக்கு ஏற்படுத்தி இருக்கின்றது. சென்ற முறை இதே ஆட்சி இருந்தபோதும் கூட தேர்தல் நிச்சயமாக நடைபெறும் என்று அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு காளிமுத்து அவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது வந்திருக்கின்ற அமைச்சரவர்கள் 18 வயது வந்தவர்களை எல்லாம் வாக்காளர் பட்டியலிலே எடுத்துக்கொண்ட பிறகு தேர்தல் நடைபெறும் என்று சொன்னார்கள். அதன் பிறகு சென்ஸஸ் கணக்கு முடியும் வரை தேர்தலே நடத்தக்கூடாது என்று மத்திய அரசு ஆணையிட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்படியே நாம் காரணங்களைத்தான் கண்டு கொண்டிருக்கிறோமே தவிர காரியங்கள் நடைபெறக்கூடிய முறையிலே அரசு ஈடுபடவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இனிமேலாவது இந்தக் காலம் கடத்தும் நிலையிலே தள்ளிப்போட்டுக்கொண்டே போகாமல் தேர்தல் நடத்துவதற்குரிய ஆணையை அரசு பிறப்பிக்கவேண்டும்.

அடுத்து இன்றைக்கு ஆலோசனைக் குழுக்கள் என்று சொல்கிறார்கள். இந்தக் குழுக்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது ஒரு குறிப்பிட்ட நாளில் 4 மணிக்கு இந்த ஆலோசனைக் குழு கூடும் என்று மூன்று மாதம் நான்கு மாதத்திற்கு ஒரு முறை தனி அதிகாரிகள் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அங்கே போய்ப் பார்த்தால் அவர்கள் வரவில்லை என்று கூடச் சொல்வார்கள். அப்படியே வந்திருந்தாலும், திரு பலராமன் அவர்கள் குறிப்பிட்டது போன்று தெருப் பஞ்சாயத்து மாதிரி ஏதேதோ பேசிவிட்டு போய்விடுவார்களே தவிர தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாத நேரத்திலே என்னென்ன 'வேலைகளைச் செய்யவேண்டும் என்ற வகையிலே பேசப்படுவதில்லை. ஆகவே அந்த அதிகாரியும் எதுவும் சொல்வது கிடையாது. அந்தக் குழுவிற்கும் எந்த அதிகாரமும் கிடையாது. ஆகவே இந்த ஆலோசனைக் குழு என்பது வெறும் கண்துடைப்பு வேலை தான். இது தேவையில்லை. ஆகவே உடனடியாகத் தேர்தலை நடத்தியாகவேண்டும். இப்போதுள்ள நிலைமைக்குத் தேர்தல் தான் பரிகாரம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நகரசபைகளை எடுத்துக்கொண்டால் சுகாதார வசதிகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. பல நகராட்சிகளிலே போதிய நிதி வசதி இல்லை என்றுகூடச்



1981 மார்ச் 6] [திரு. என். பழனிவேல்]

சொல்லப்படுகின்றது. பழனி நகராட்சியை எடுத்துக்கொண்டால் நிதியில்லை என்ற காரணத்தால் சிப்பந்திகள் போடுவதே பெரும் பிரச்சினையாக இருக்கின்றது என்று சொல்கிறார்கள்.

சுகாதார வசதி மட்டுமல்ல. குடிநீர் பிரச்சினையும் இன்றைக்கு அப்படித்தான் இருக்கின்றது. பழனி நகராட்சிக்கு கொடைக்கானலிலிருந்து குடிநீர் வந்துகொண்டிருக்கின்றது. ஆனால் தற்போது அங்கே சீசன் ஆரம்பித்துவிட்டது என்ற காரணத்தினால் பழனிக்கு தண்ணீர் வருவதை நிறுத்திவிட்டார்கள். பழனி நகராட்சிக்கு நாள் ஒன்றுக்கு 70 லட்சம் கன அடி தண்ணீர் கிடைத்துக்கொண்டிருந்த நிலைமைக்குப் பதிலாக இன்றைக்கு 20 லட்சம் தண்ணீர்தான் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதுபற்றி நேற்றைய தினம் போன் பண்ணி எனக்குத் தெரிவித்தார்கள். ஆகவே அங்கே தண்ணீர் பஞ்சம் அதிகமாகிவிட்டது. இது சம்பந்தமாக நகராட்சி அதிகாரிகள் கலெக்டருக்கும் எழுதி இருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் ஆஃப் முனிசிபாலிட்டிக்கும் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இது குறித்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்தாலொழிய பழனி நகர மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆகவே அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆணையிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நகரசபை சிப்பந்திகளுக்கு குடும்ப நல நிதி நான்காண்டு காலமாகக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். சுகாதார சிப்பந்திகள் மிகவும் கீழான நிலையில் உள்ளவர்கள். அவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள். ஆகவே அவர்களுடைய பிரச்சினையிலே அரசு காலதாமதம் செய்யாமல் உடனடியாக அவர்களுக்கு குடும்ப நல நிதி கிடைப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து இன்றைக்கு பல நகராட்சிகளிலே வரிகளை வசூலிப்பதற்குக் கூட சக்தியற்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே அதையும் போக்குவதற்கு நான் ஏற்கெனவே சொன்னதுபோல் தேர்தல் ஒன்றுதான் பரிகாரம் காண முடியும்.

அடுத்து தன்னிறைவுத் திட்டம் பற்றி நேற்றைய தினம் கூட மாண்புமிகு அமைச்சரவர்களிடம் குறுகியகால வினா ஒன்று கேட்ட போது இன்னும் 20 நாட்களில் அதைச் செய்து முடிப்போம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் திரு. செல்லமுத்து அவர்களின் தொகுதியிலுள்ள கீவளூர் ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்ட வேலைக்காக இன்னும் கல் கூட போடப்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில் எப்படி 20 நாட்களில் செய்து முடிப்பார்கள் என்பது தெரியவில்லை.

[திரு. என். பழனிவேல்] [1981 மார்ச் 6

[முற்பகல் 11–50]

அதைப்போலவே பல ஊராட்சிகளிலும் இப்படி தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பல வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அவைகள் பாதியிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் பேஸ்மெண்ட் மட்டும் போட்டு வைத்திருக்கிறார்கள். அதோடு நிற்கிறது. ஆகையினால் இந்த வேலைகளை எல்லாம் உண்மையிலேயே 20 நாளில் முடித்துவிட முடியாது. ஆகவே தயவு செய்து அதற்கான காலத்தை மேலும் 3 மாதங்களுக்கு நீட்டித்துக் கொடுக்க வேண்டும். அது நியாயமான கோரிக்கை. அதை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, இந்த அவையில் அறிவிப்பார்கள் என்றும் எதிர் பார்க்கிறேன்.

அதைப் போலவே இன்றைக்கு நகரசபையானாலும் சரி, ஊராட்சி ஒன்றியங்களானாலும் சரி, தனி அதிகாரிகளுடைய நிலையை நினைத்துப் பார்த்தால் பெரிய வேதனையாக இருக்கிறது. அங்கேயுள்ள தனி அதிகாரிகள் எல்லாம் ஊழல் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை எல்லாம் நிச்சயமாக சொல்லமுடியும். அவர்கள் அமைச்சர் அவர்களின் பெயர்களை சொல்லிக்கொண்டு ஊழல் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்களிடத்திலே பலபேர் போய் முறையீடு செய்வார்கள். அவர்களும் ஆகட்டும் பார்க்கலாம் என்று சொல்வார்கள். ஆனால் இந்த தனி அதிகாரிகள் அமைச்சர்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு, 2 ஆயிரம் 3 ஆயிரம் என்று லஞ்சத்தைப் பெற்றுக் கொண்டு அங்கு வேலைகளுக்கு ஆட்களை நியமித்துக் கொண்டு ஊழல்களை செய்து வருகிறார்கள்.

பழனி ஊராட்சி ஒன்றியத்தில் 2 ரிகார்ட் கிளார்க் போஸ்ட்டுகள் நியமனத்திற்காக ஒருவரிடமிருந்து 3,000 ரூபாயை திண்டுக்கல் கோட்ட வளர்ச்சி அதிகாரி லஞ்சமாக வாங்கியிருக்கிறார். இதை நான் மாவட்ட கலெக்டரிடத்திலே கூட புகாராக எழுதி சொல்லியிருக்கிறேன். ஆனால் எந்தவித நடவடிக்கையை எடுக்கப்போகிறாரோ எனக்குத் தெரியவில்லை. இப்படி இந்த அதிகாரிகள் அரசினுடைய பெயரைக் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தன்னிச்சையாக நடந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள், அந்த அதிகாரிகளை இடம் விட்டு இடம் என்ற அளவில் மாறுதல் செய்து விட்டு, விட்டுவிடக் கூடாது, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** துணைதலைவர் அவர்களே தனிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். எப்பொழுதுமே குற்றச் சாட்டுகள்



1981 மார்ச் 6] [திரு ப. குழந்தைவேலு]

சொல்கிற நேரத்தில் ஆதாரத்தோடு தான் சொல்ல வேண்டும், என்கிற விதி இருக்கிறது. அதனால், அவர் கூறிய குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருந்து, இங்கேயே தந்தால் உடனடியாக நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல்:** துணைத்தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். ஆதாரம் என்பதை எந்த அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? இங்கே உள்ள உறுப்பினர்கள் நேராக போய் அவர்களை கையும் களவுமாக பிடித்துக் கொண்டு வந்து நிறுத்த முடியுமா? என்னைப் பொருத்தவரையில், எனக்குத் தெரிந்த வரையில், நான் சொன்னது—அப்படி நடைபெற்றது உண்மை. அதைப் பற்றி மாவட்ட கலெக்டரிடம் கூட புகார் கொடுத்திருக்கிறேன். என்னுடைய கடிதம் அவரிடம் இருக்கிறது. அதுதான் ஆதாரம். அமைச்சர் அவர்கள் அதை வாங்கிப் பார்த்துக் கொள்ளலாம். நான் உண்மையைத் தான் சொல்கிறேன். பொய் சொல்லவில்லை. மனசாட்சிக்கு தெரிந்த உண்மை இது. இதை யாரும் மறுக்கவும் முடியாது என்றுக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து நகராட்சியின் வருமானம் கிடைக்காத காரணத்தால் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கின்றன. அந்தச் சூழ்நிலையை மாற்ற அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய கடைகள் கட்டுதல், சினிமா தியேட்டர்கள் கட்டுதல், நகரப் பேருந்துகளை கூட விடலாம். அத்தகைய பணிகளை நடத்தி நகராட்சிகளின் வருமானத்தை பெருக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பழனி நகரத்தில் பேருந்து நிலையம் ஒன்றை கட்டும் திட்டம் 3 ஆண்டுகளாக, தயாரிக்கப்பட்டு, பரிசீலனை செய்து, தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஆலோசனைக் குழுவில் கூட அனுமதி வழங்கப் பெற்றிருக்கிறது. ஆனால் இன்று வரையில் வேலை மட்டும் தொடங்கப் பெறவில்லை. பழனி நகராட்சியில் 100-க்கணக்கான பேருந்துகள் தினமும் வருகின்றன. யாத்ரிகர்கள் அதிகமாக வரக்கூடிய இடம் அது. வரும் பேருந்துகளை கோவிலைச் சுற்றி நிறுத்திவிடுகிறார்கள். பக்தர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது இந்நிலை. இல்லையென்றால் நினைத்த இடத்தில் நிறுத்திவிட்டுப் போய் விடுகிறார்கள். போக்குவரத்துக்கே அது பெரிய இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பேருந்து நிலையத்தை கட்ட ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு என். பழனிவேல்] [1981 மார்ச் 6

அதேபோல் பழனியில் தினசரி மார்க்கெட் இருக்கிறது. அதை ஏலத்தில் விடுகிறார்கள். ஏலத்தில் விடும்போது வாரத்தில் 6 நாட்கள் ஒருவருக்கும், 7-ஆம் நாள், ஞாயிற்றுக் கிழமை, சந்தை தினத்தில் வேறு ஒருவருக்கும் கொடுத்து விடுகிறார்கள். இதனால் அங்கே 6 நாட்களாக வியாபாரம் செய்துக் கொண்டிருந்த அந்த சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அந்த சிறு வியாபாரிகளைக் காக்கும் முகமாக, 7 நாட்களும், ஒருவருக்கே அவை விடப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் ஆணை யிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை நான் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலும் சொன்னேன். தனி அதிகாரி யிடத்திலும் சொன்னேன். ஆனால் ஏனோ காரியம்தான் நடக்க வில்லை. ஏன் என்றும் எனக்கு விளங்கவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் அந்த டெய்லி மார்க்கெட் ஏலம் விடும் விஷயத்தில் கவனம் செலுத்தி, ஒரே மாதிரியாக 7 நாட்களும் ஒருவருக்கே விடப்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்து அந்த வியாபாரிகளைக் காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இந்த நகராட்சிகளின் நிலைமை தற்போது எப்படி இருக் கிறது என்று கேட்டால், அது 100 ஆண்டுகள் முடிந்து நகராட்சி யாக இருந்தாலும் சொந்தக் கட்டிடம் கூட இல்லாத நிலையில் தான் இருக்கிறது.

நூறாண்டுகள் முடிந்துவிட்டன. பேராருட்சிக்கு சொந்தக் கட்டிடம் இல்லை. தனியார் கட்டடங்களில்தான் வாடகைக்கு இருக்கின்றன. எந்தவிதமான வசதிகளும் இல்லாத நிலையில் அது ஒரு பேரூராட்சிதானா என்று சொல்லக் கூடிய அளவில் பல இடங்கள் இருக்கின்றன. எனது தொகுதியிலும், ஆயக்குடியில் நூறு ஆண்டுகளாகியும் சொந்தக் கட்டடம் இல்லாமல் இருக் கிறது. ஆகவே சொந்தக் கட்டடங்கள் இல்லாத பேரூராட்சி களுக்கு அரசு சிறப்பு நிதி வழங்கி; கடனாகவோ அல்லது மானிய மாகவோ கொடுத்து சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொள்வதற் கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வசதி, சுகாதார வசதி, சாலை வசதி, நூல் நிலை யங்கள் போன்றவை பல நகராட்சிகளில், பேரூராட்சிகளில் இடையாது. குறிப்பாகச் சொல்லப் போனால் நகராட்சிகளின் நகரத்தைச் சுற்றியுள்ள இடங்களில் குடிசைகள் போட்டுக்கொண் கொண்டு ஏழை எளிய மக்கள் புறம்போக்கு நிலங்களில் குடியிருக் கிறார்கள். அவர்களுக்கு குடும்பக் கார்டுகள் கிடையாது. யாரிடம் சென்று கேட்பது, எங்கே போய் கேட்பது என்று தெரியாமல் இருக்கிறார்கள். அமைச்சர் இது எனக்கு சம்பந்தப்பட்டதல்ல என்று சொல்லாமல் இது உள்ளாட்சித் துறையின் கீழ் இருப்பதால் சொல்கிறேன். ஆகவே அந்த மக்களுக்கு குடும்பக் கார்டுகள்

1981 மார்ச் 6] [திரு. என். பழனிவேல்]

கொடுக்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆணையிட்டால் கொடுக்கக்கூடிய சில பொருள்களாவது கிடைக்கக் கூடும். ஆகவே இதை அரசு தன் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டு எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள் கிறேன். வணக்கம்.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மசோதாவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சில கருத்துக்களைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக தமிழ்நாட்டில் நக ராட்சிகளுக்கும், பேருராட்சிகளுக்கும் தேர்தல்கள் நடைபெற்று 11 ஆண்டுகள் முடிந்துவிட்டன. இந்த 11 ஆண்டுகளாக நகரப் புறங்களில், கிராமப்புறங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லை. அதன் காரணமாக, இன்று பல்வேறு நகராட்சிகளும், பஞ்சாயத்து யூனியன்களும் சீர்கேடு அடைந் திருக்கின்றன என்பதைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இன்று ஆளுகிற அகில இந்திய அண்ணா திராவிட முன் னேற்றக்கழகம் ஆட்சி பீடத்திற்கு வந்தபிறகு மக்கள் குழுக்களை நியமித்தார்கள். அந்த மக்கள் குழுக்கள் எப்படி செயல்படுகின் றன என்று பார்த்தால் இவர்கள் மீண்டும் ஆட்சி பீடத்திற்கு வந்த பிறகு அந்தக் குழுக்கள் கூடியதாக எனக்குத் தகவல் இல்லை. எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கிரா மப்புறங்களுக்கு வாக்காளப் பெருமக்களைச் சந்திக்கச் செல்கிற போது, சென்று அவர்கள் குறைகளைப் பற்றி கேட்கிறபோது நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களா அல்லது பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்களா அல்லது நகராட்சி உறுப்பினர்களா என்று சந்தேகிக்கக்கூடிய அளவிற்கு அந்த மக்கள் தங்கள் குறை களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கிராம மக்கள் தங்களுக்கு வேண்டிய குடிநீர், தெரு விளக்கு வசதி போன்ற வற்றைக்கூட சட்டமன்ற உறுப்பினர்களிடம் சொல்லிக் கொண் டிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அங்கு தேர்ந்தெடுக் கப்பட்ட அமைப்புகள் இல்லாததுதான் காரணம்.

தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கிராமப்புற மக்களுக்கு குடிக்க தண்ணீர், சுகாதார வசதி, பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்த வேண்டுமென்றால் அதற்கு தேர்ந் தெடுக்கப்பட்ட அமைப்புகள் இருந்தால்தான் அவற்றை சீராக செயல்படுத்த முடியும். ஆனால் இன்றைக்கு தன்னிறைவுத் திட் டத்தின் கீழ் பல திட்டங்களை ஓராண்டு காலத்திற்குள் நிறை

[திரு. மு. அப்பாதுரை] [1981 மார்ச் 6

ஏற்றவேண்டும் என்று சொல்லும்போது அங்குள்ள அதிகாரிகள்
தங்கள் விருப்பத்திற்கேற்றாற்போல் 20,000 ரூபாய் செலவு
செய்ய வேண்டிய சாலையாக இருந்தாலும் சரி அல்லது பால
மாக இருந்தாலும் சரி ரூபாய் 40,000-க்கு டெண்டர் விட்டு
அப்படி தவறான முறைகளை கடைப்பிடித்து வருகிறார்கள்.

வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில்
நடைபெறக்கூடிய வேலைகள், அதற்காக எவ்வளவு ஆட்கள்
வேலை செய்தார்கள், அவர்களுக்கு எவ்வளவு அரிசி வழங்கப்
பட்டது, எவ்வளவு மூட்டை அரிசி யூனியனுக்கு வந்தது என்ப
தொன்றும் தெரியாமல் முறைகேடுகள் நடந்துக் கொண்டிருக்
கின்றன. அமைச்சர் அவர்கள் தூத்துக்குடிக்கு வந்திருந்தபோது
அங்குள்ள நகராட்சியை பார்வையிட்டார்கள். அங்கே 200-க்கு
மேற்பட்ட பைல்கள் காணவில்லை என்று அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். அப்படி பைல்கள் காணாமல் போகின்றன என்று
சொன்னால், அப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டிருக்கிறது
என்று சொன்னால் அங்கே நிர்வாகம் எப்படி நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன். இப்படிப்பட்ட முறைகேடுகள்
நடக்கின்றது என்று சொன்னால் அதற்கு காரணம் தேர்ந்
தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாததேயாகும்.

அதேபோன்று ஒன்றியங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள்
செல்லும்போது மக்கள் குழு கூடுவதில்லை. மக்கள் குழுக்கள்
சரியாகக் கூடுவதில்லை. சில சமயங்களில் மக்கள் குழு கூடி
இருக்கிறது. இந்தப் பொருள்கள்பற்றி பேச இருக்கிறோம்,
வாருங்கள் என்று ஒரு சில தினங்களுக்கு முன்னால்தான் தகவல்
வருகிறது.

[நண்பகல் 12-00]

நாங்கள் செல்வதற்கு முன்னால், அங்கே இருக்கின்ற அதிகாரி
மற்ற அதிகாரிகள் வரவில்லை, எனவே இன்றைக்கு கூட்டம் ஒத்தி
வைக்கப்படுகின்றது என்று சொல்லிவிடுகிறார்கள், அப்படிப்
பட்ட சூழ்நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. அதனால் எங்க
ளால் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு பணம்
செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைக்கூட அறிந்துகொள்ள முடி
யாத நிலைதான் இருக்கிறது.



1981 மார்ச் 6] [திரு. மு. அப்பாதுரை]

அதேபோன்று சாலை வசதி, குடிநீர் வசதி, மற்றும் பல
வசதிகளை பஞ்சாயத்துக்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும்
செயல்படுத்துகின்றபோது, இன்றைக்கு அங்கே மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லை. தவிர, ஏற்கெனவே
அங்குள்ள தலைவர்கள் சேமித்து வைத்த பல்வேறு நிதிகள் இன்
றைக்கு தவறான முறையிலே, வீணாக செலவழிக்கப்பட்டிருக்
கின்றது என்பதை நான் இந்த மன்றத்தில் சுட்டிக்காட்ட கடமைப்
பட்டிருக்கிறேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் 2, 3
இடங்களில் இப்படி நடந்திருக்கிறது. இதைப்பற்றி நான்
அமைச்சர் அவர்களிடம் சொல்ல இருக்கிறேன். இப்படிப்பட்ட
தவறான நிலையிலே, இன்றைக்கு கிராமங்களிலே, அதிலும்
குறிப்பாக தமிழகத்திலே வறட்சி நிவாரண வேலைகள் துரிதமாக
செய்யப்படவேண்டுமென்று சொல்லப்படுகின்றது. இந்த வறட்சி
நிவாரண வேலைகள் மூலம் முழுமையான பயனை மக்களுக்கு
கொடுக்கவேண்டுமென்று, கிராமங்கள்தோறும், நகராட்சிகள்
தோறும், செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்
கள். ஆனால், அங்கே இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட
அமைப்புகள் இல்லை. இன்றைக்கு வாக்காளர் கணக்கெடுப்பு
வேலைகள் முடிந்து 2 ஆண்டுகள் ஆகின்றன! இருந்தாலும்
இன்னும் தேர்தல் நடத்தப்படவில்லை இந்த சூழ்நிலைதான்
இன்றைக்கு இருக்கிறது. எனவே உடனடியாக தேர்தலை
நடத்தவேண்டும். இந்த நிலை இல்லையென்று சொன்னால்
இடையிலே அதிகாரிகள் அந்தப் பணத்தை, வீண் விரயம் செய்
வார்கள். மக்களுக்கு பலன் கிடைக்காமல் போகக்கூடிய ஒரு
அபாய சூழ்நிலைதான் இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தில் தோழமைக் கட்சி என்ற
முறையிலே நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் உடனடியாக இந்த தேர்தலை நடத்தித் தரக்கூடிய
சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்படி இல்லையென்றால்
தன்னிறைவுத் திட்டம், குடிநீர் திட்டம், வேலைக்கு உணவுத்
திட்டம், வறட்சி நிவாரணத் திட்டம் என்று இப்படி என்ன
திட்டங்கள் போட்டாலும் சரி, அதனுடைய பலன் ஏழை எளிய
மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு, அடித்தளத்திலே இருக்கக்
கூடிய மக்களுக்கு கிடைக்காமல் போகும். எனவே, அந்த அடிப்
படையில் உடனடியாக தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்
கையை எடுக்கவேண்டுமென்று, விடைபெறுகிறேன். நன்றி.
வணக்கம்.

[1981 மார்ச் 6

திரு. எஸ். ஆண்டித் தேவர் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 6 சட்ட முன்வடிவுகளை இந்த சட்ட மன்றத்திலே வைத்து, அவைகள்மீது கருத்துக்கள் சொல்லுமாறு கேட்டிருக்கிறார்கள். அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவைகளில் தனி அதிகாரிகள் நியமிப்பு நீட்டித்தலைப்பற்றி என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சி மன்றங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ...ினர்கள் இருந்தார்கள்; அந்த ஊராட்சி மன்றங்களைக் கலைத்தார்கள். அதே போல் நகராட்சி மன்றங்களைத் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கலைக்கப்பட்டு ஏறத்தாழ 10 ஆண்டுகள் தேர்தலே நடைபெறாமல் இருக்கிறது. அதன் காரணமாக, தனி அதிகாரிகள் நியமித்து, ஏறத்தாழ 2 ஆண்டு கள் அவர்கள் கையிலே நிர்வாகம் இருக்கிறது. இந்த தனி அதிகாரிகள் காலத்தை நீட்டித்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நீட்டித்துத் தருவது என்பது ஒன்று. அப்படி நீட்டித்துத் தருவதன்மூலம் எந்த அளவுக்கு பாதகத்தைத் திணிக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தனி அதிகாரிகளின் கையிலே ஒப்படைப்பதன் மூலம், ஆளும் பொறுப்பிலே இருக்கின்ற நாம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம், ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்து வருகிறோமா என்பதைப் பார்க்கவேண்டும். இந்த ஆட்சி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்போது ஊராட்சி ஒன்றியங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாமையால் நாம் செய்கின்ற நன்மைகள் எந்த அளவுக்கு மக்களுக்குப் போய்ச் சேருகிறது என்பதைப் பார்க்கும்போது, இதற்கு அதிகாரிகள் தடையாக இருக்கிறார்கள் என்பதை நாம் தெள்ளத் தெளிவாக அறிந்த பின்னரும், இப்படி தனி அதிகாரிகளுக்கு பதவிக் காலத்தை நீட்டித்துத் தருவது, குழுவிற்கு நீட்டித்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள் அங்கே குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தாலும், இந்தக் குழுக்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவர்கள் எதை எதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதை யெல்லாம் தெளிவாகச் சொல்லவில்லை, ஆகவே இந்தக் குழுக்கள் கூடினால் கூட, யாரோ அவர்கள் வந்து விட்டுச் சொல்லி விட்டுப் போகிறார்கள் என்று கருதப்படுகிறதே தவிர அதற்கு நிவாரணம் செய்யக் கூடிய அதிகாரம் இந்தக் குழுவிற்கு இருப்பதாகத் தோன்றவில்லை. அப்படிப்பட்ட நிலையில், இந்த தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்தால், எப்படி ஏழை எளிய மக்களுக்கு இந்த அரசால் ஒதுக்கப்படும் நிதி, மானியம் செலவழிக்கப்படும் என்பதற்கு ஒரு உதாரணத்தை, அதுவும் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அவல நிலையை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்,



1981 மார்ச் 6] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதியில் இருக்கிற செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் நீண்ட நெடுங்காலமாக தனி அதிகாரியின் அதிகாரத்தில் இருப்பதால் முப்பது இலட்சம் ரூபாய் அந்த ஒன்றியத்தில் இருக்கிறது. அது செலவழிக்கப்படவில்லை, ஒன்பது ஆண்டுகாலமாக அந்த தொகையை வைத்திருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள் கேட்டு அது பயன்படுத்தப்பட வேண்டுமென்று, அந்த ஒன்றியத்தின் முன்னேற்றத்துக்கு அடிப்படையிலே கேட்டதால், இப்போது என்ன செய்திருக்கிறார்கள் என்றால் 'ரோடு ரோலர்' என்ற இலட்சக்கணக்கான ரூபாய்க்கு அந்த ஒன்றியத்தின் பொது நிதியை எடுத்து வாங்கியிருக்கிறார்கள். யாருக்கு ஆதாயம்? பொதுப்பணித் துறை இருக்கிறது. நெடுஞ்சாலைத் துறை இருக்கிறது; அவற்றிற்கு மானியம் வழங்கப்படுகிறது. இப்படி வாங்கிவிட்டதால் 30 இலட்ச ரூபாய் இருந்த ஒன்றியத்தில் இப்போது 7 இலட்சம் ரூபாய் கூட இல்லை. அதிலே சிறு சேமிப்பு போன்ற சேமிப்புகளுக்காக பத்திரங்கள் வாங்கிவிட்டு அந்த அதிகாரிகள் அமைதியாக இருக்கிறார்கள். 30 இலட்சம் ரூபாய் அந்த ஒன்றியத்தின் முன்னேற்றத்திற்காக செலவழிக்கப்பட்டிருக்குமேயானால் அது நன்றாக இருந்திருக்கும். மத்திய அரசால் பிற்படுத்தப்பட்ட பிரதேசம் என்று சொல்லப்படுகிற அந்த உசிலம்பட்டி பகுதி இன்னும் தன்னிறைவு திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. காரணம் நான் அமைச்சர் அவர்களையோ, அல்லது இங்கிருப்பவர்கள் யாரையும் குறையாகச் சொல்லவில்லை. இந்த நிலையை எடுத்துச் சொல்பவர்கள், அந்த ஒன்றியத்தில் இருப்பவர்கள் எழுதியிருப்பார்களேயானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேர்த்து இருப்பார்கள். எங்கள் மாவட்டத்திலே பெரியாறு பாய்கின்ற பகுதி ஒட்டுமொத்தமாக தன்னிறைவு திட்டத்திலே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே எடுத்து கூறுகிறோம். ஆனால் அமைச்சர் அவர்கள் தனி அதிகாரிகளிடமும், மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமும் கேட்கிறபோது தவறான தகவல்களை கொடுப்பதின் மூலம் அங்குள்ள மக்கள் என்ன நினைக்கிறார்கள், இந்த அரசு ஏதோ பாதகம் செய்கிறது, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆளும் கட்சியாக இல்லாத காரணத்தாலே இப்படி நிறைவேறுகிறது, என்று நல்ல அரசின் மீது தவறாக நினைக்கிற அளவுக்கு இந்த தனி அதிகாரிகள் செய்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால் தான் எங்கள் இயக்கத்தின் சார்பாக சொல்கிறேன், தனி அதிகாரிகள் பதவி காலத்தை நீட்டிப்பதை தவிர்த்து, உடனடியாக தேர்தல் நடத்தி அங்கிருக்கிற மக்களுடைய குறைகளை தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் செய்வதற்கு உதவிகரமாக இருக்கும்படி உத்தரவின்னை பிறப்பிக்க கேட்கிறேன். என்னுடைய தொகுதியில் ஒரு பகுதியில் 80 குளங்கள் ரிப்பேர் ஆகியிருக்கின்றன. ...ங்கள் எங்கே போய் சொல்லவேண்டுமென்று சொன்னால் பெரியகுளம்

கோட்டப்பொறியாளரிடம் சொல்ல சொல்கிறார்கள். ஒரு இடத்தில் ஆறு மாதத்திற்கு மேல் 4,000 ரூபாய் செலவு செய்த பம்ப் செட் இரண்டு தினங்களில் காயில் எரிந்து போய்விடுகிறது. இப்படிப்பட்ட செயல்களை தேர்ந்தெடுக்க பட்டவர்கள் இருந் திருந்தால் அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்க முடியும். ஊராட்சி மன்றங்கள், நகராட்சிமன்றங்களுக்கும் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் இல்லாத காரணத்தால் இதுபோன்ற வைகள் நிகழ்கின்றன. உசிலம்பட்டி ஊராட்சியின் பஸ் நிலையம் ஏறத்தாழ 35 ஆண்டுகளாக கம்பம், கோட்டயம், கேரளா வரைக்கும் 5 நிமிடத்திற்கு ஒரு பஸ் போய் வந்து கொண்டிருக்கிறது—சீர்செய்யப்படவில்லை. தீர்மானம் போட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. பணம் ஒதுக்கியாகிவிட்டது. தனி அதிகாரிகள் இருக்கிற காரணத்தால் அதை செய்வதில் சாதகம் இல்லையென்று வைத்திருக்கிற ஒரு நிலை; அவர்கள் எடுத்துக் கொண்டு அதை செய்வதற்கு தயங்குகிறார்கள். ஊராட்சி மன்றங்கள் இருக்குமேயானால் அது நடந்திருக்கும். அங்கே கருச்சட்டாம்பட்டி என்று ஊர் இருக்கிறது. அது நகராட்சி எல்லையில் இருக்கிற இடம். குழாயில் தண்ணீர் வரவில்லை. ஏன் என்று கேட்டேன்? மழை காலத்தில்தான் வரும் என்று சொன்னார்கள். மழை காலத்தில் 25 அடி தண்ணீர் வரும். அங்கே குழாய் புதைக்கப்பட்டிருக்கிறது. வறட்சி காலத்தில் தண்ணீர் வராது. 150 அடி ஆழம் போட்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளே இருக்கக்கூடியது 25 அடி குழாய். 100 அடி குழாயை விற்று விட்டார்கள். மண்ணுக்குள்ளே இருப்பதாலே தெரியாது என்று செய்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 12.10]

அந்த அளவுக்கு தவறுகளை அரசுக்குச் சுட்டிக்காட்டுவதற்குக் கூட நல்ல எண்ணத்திலே சொல்வதற்குக்கூட தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் இல்லாத காரணத்தினால் இப்படிப்பட்ட நிலைமை இருந்துகொண்டிருக்கிறது.

மதுரை நகரத்திலே உள்ளாட்சித் துறை மூலமாக நகரத் திற்குட்பட்ட நடைபாதைகளை ஏலத்திற்கு விடுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பஸ் நிலையத் திலிருந்து நேராகச் செல்கிற திண்டுக்கல் ரோடில்—அது மிக ஜன நடமாட்டம் உள்ள பகுதி—உள்ள நடைபாதைகளை நகராட்சி ஏலத்திற்கு விட்டிருக்கிறது. ஏலத்தில் எடுத்த வியாபாரிகள் கடைகளை வைத்திருக்கிறார்கள், ஆனால் போலீசார் அவர்களுக்குத் தொல்லைகள் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. கடைகளைத் தூக்கி எறிகிறார்கள், பெண்கள் பழங்கள், மற்ற பொருட்களை வைத்துக்கொண்டிருக் கிறார்கள், அந்தக் கூடைகளை நடு ரோடிலே தூக்கியெறிகிறார்கள், காலால் உதைக்கிறார்களென்ற





நிலைமை இருக்கிறது. நகராட்சி ஏலத்திற்கு விட்டதை எடுத்த வர்கள் தான் கடைகளை வைத்திருக்கிறார்கள், ஆனால் அவர்களுக்கு போலீசார் மிகுந்த தொல்லைகளைக் கொடுக் கிறார்கள். ஒன்று நகராட்சி அப்படி நடைபாதைகளை ஏலத் திற்கு விடுவது நிறுத்தப்படவேண்டும், அல்லது ஏலம் எடுத்தவர் களுக்குத் தொல்லை கொடுக்காமல் இருக்கும்படி போலீசாருக்கு சொல்லவேண்டும். நகராட்சி அதிக ஜன நெருக்கமுள்ள அந்தப் பகுதியை ஏலம் விடுகிறது, ஆனால் போலீசார் ஒழுங்கு என்ற முறையிலே அவர்களுக்குத் தொல்லைகளைக் கொடுக்கிறார்கள், 50,60 ஆயிரம் என்று ஏலத்திற்கு விடப்படுகிறது, அப்படி எடுத்தவர்கள் காலை 7 மணிக்கு மேல் லாரிகளைக் கொண்டு வந்து நிறுத்தி ஏற்றவோ இறக்கவோ கூடாது என்று அவர்கள் மீது போலீசார் வழக்குத் தொடுக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. மார்க்கட் பகுதியாக இருப்பதால் நகரத்திற்கு காய் கறிகள் இங்கே இறக்கப்படுவதற்கு இங்கிருந்து ஏற்றப்படுவதற்கு வேறு வழியில்லை, ஏலம் எடுத்தவர்கள் லாரியை வைத்து ஏற்றக் கூடாது இறக்க கூடாது என்று போலீஸ் சொல்கிறது, அதனால் அரசாங்கத்திற்குத்தான் கெட்ட பெயர் ஏற்படுகிறது. இதனால் டிரைவர்களுக்கும் அவர்களுக்கும் கூட தகராறு வருகிறது. இந்த அரசுக்கு கெட்ட பெயர் வரக்கூடாது என்ற காரணத்தினால் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்தலைத் தள்ளிப்போடுவது பழக்கமாக வந்துவிட்டது என்ற காரணத் தினால் இப்போதும் தள்ளிப்போட்டால் இந்த அரசைப்பற்றி பொதுமக்கள் தவறாகப் பேசுவார்கள். 4, 5 தடவை நீட்டிப்புக் கேட்கப்பட்டு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு முறை மத்திய அரசு தடைவிதித்தது என்று சொல்லப் பட்டது, ஏற்றுக்கொள்கிறேன், இன்னொரு முறை சென்சஸ் நடைபெற்றது—ஏற்றுக்கொள்கிறோம், தனி அதிகாரி கள் நியமனத்தில் சிக்கல் என்று சொல்லப்பட்ட அந்த முறையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்போது சென்சஸ் நடந்துமுடிந்துவிட்டது, எங்களுக்குக் கிடைத்த தகவல்பிரகாரம் ஆகவே உடனடியாக தேர்தலை நடத்துவதற்கு முன்வர வேண்டும். இல்லாவிட்டால் ஊராட்சிகள், ஒன்றியங்களில் நிர்வாகமே நடக்காமல் நின்றுவிடும். விளக்கு எரியவில்லை என்று இந்த மன்றத்திலே விவாதிக்க வேண்டுமா. இப்படிப்பட்ட நிலைமையை தேர்தல் நடத்தப்படுவதன் மூலமாக தவிர்க் கலாம். காலத்தை நீட்டித்துக்கொண்டே போகக்கூடாது. சில குழுக்களைப் போட்டிருக்கிறீர்கள். அந்தக் குழுக்களுக்கு அதிகாரம் இல்லை. அதையாவது வரையறுத்துக் கொடுக்க வேண்டுமென்றும் அதற்கு அமைச்சர் அவர்கள் நல்ல வழிவகை களைச் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு ப. பொன்னுரங்கம் : நம்முடைய எல். ஏ. மினிஸ்டர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மசோதாபற்றி இங்கே பேசிய உறுப்பினர்கள் பேசும்போது ஊராட்சிகள், ஒன்றியங்கள் பற்றிப் பேசினார்கள், நான் சென்னை மாநகராட்சிபற்றி பேச விரும்புகிறேன். சென்ற ஆண்டே கூட நான் பேசியிருக்கிறேன், அமைச்சர் அவர்கள் கோபித்துக்கொண்டார்கள், ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் என்பதிலே போடுவது முறையாக இல்லையே என்று சொன்னேன். இப்போதும் அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்ற முறையிலேதான் சொல்கிறேன். ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸல்.

The Commissione , Corpo t o of M d s, h s bee entrusted w th ce sus work, e Gover ment of I d h ve equested the State Gove nment ot to ent ust ny ot e mpo t t work to the Comm ssio er, Corpor t o of M dr s, until t e census work is over. "

என்று இருக்கிறது. ஆனால் கமிஷனரிடத்திலே அந்த சென்சஸ் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். ஆனால் ஸ்பெஷல் ஆபீசருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கிறோம். எனவே, போடும்பொழுது கொஞ்சம் முறையாகப் போடலாம். நீங்கள் சொல்லலாம். அட்மினிஸ்ட்ரேடிவ் ஒர்க்கைக் கமிஷனர்தானே பார்க்கிறார் என்று சொல்லலாம். இப்படி ஒர்க்கை என்ட்ரஸ்ட் செய்திருப்பது கமிஷனருக்கு ; ஆனால் எக்ஸ்டென்ஷன் ஸ்பெஷல் ஆபீசருக்கு. இது என்ன முறை ?

அடுத்து, இந்த பில்லை நீங்கள் இரண்டு முறை கொண்டு வருகிறீர்கள். இதற்கு முன்னால் மதிப்பிற்குரிய அமைச்சர் மாண்புமிகு திரு காளிமுத்து அவர்கள் இந்த இலாக்காவைப் பொறுப்பேற்றிருந்தார்கள், அவர்கள் மூன்று முறை இம் மாதிரி கொண்டு வந்தார்கள். இப்படி இதைச் சொல்லத்தான் அமைச்சரை மாற்றி மாற்றிப் போட்டிருக்கிறார்கள்.

அப்பொழுது அவர்கள் சொன்னார்கள், என்ன ரீசன் என்பதற்குச் சொன்னார்கள், மஸ்டர் ரோல் வழக்கு இருக்கிறது. அது முடியட்டும் என்று சொன்னார்கள். பிறகு எலக்ட்டோரல் ரோல் தயார் செய்ய வேண்டும், அது முடியட்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது நீங்கள் சொல்வது, சென்சஸ் இருக்கிறது, அது முடிய வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில், பத்திரிகையில் பார்த்த வரையில், ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் வைத்திருப்பதாகத் தெரிகிறது. கேரளாவிலேகூட முனிசிபாலிட்டி எலக்ஷன் நடந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த ஒர்க் இருக்கும்பொழுதே அடிஷனலாக எடுத்துச் செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச்

வறட்சி நிவாரண வேலை என்று சொல்ல வேண்டுமென்றால், கலெக்டர்களிடத்திலே ஒப்படைக் சொல்கிறோம். அதைக் அடிஷனல் பார்டன்தான், அதற்காக கிறோம்; அது அவர்களுக்கு அடிஷனல் செய்யக் கூடாது, வறட்சி அவர்கள் கலெக்டர் வேலையைச் செய்ய வேண்டுமென்று நினைக்கி நிவாரண வேலையைத்தான் செய்ய வேண்டுமென்று செய்வார்கள். றோமா? அது அல்ல. அவர்கள் செய்வார்கள்.

ஆனால் நீங்கள் எதனையோ மனத்தில் வைத்துக்கொண்டு அவர்கள் மீது பழியைப் போடுகிறீர்கள். ஸ்பெஷல் ஆபீசருக்கு வேலையிருக்கிறது. கமிஷனருக்கு வேலையிருக்கிறது என்று சொல்கிறீர்கள். ஒரு அச்சத்தின் காரணமாகச் சொல்கிறீர்கள்.

கிராமப்புறங்களில் வறட்சி நிலை இருக்கிறது. அதற்காக அறிவிக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் சென்னை நகரைப் பொறுத்தவரையில் வறண்ட நிலை இல்லை. வளமான நிலைமை இருக்கிறது. எங்கு பார்த்தாலும் ரோடு களில் சாக்கடை நீரோடு மலமும் கலந்து ஓடுகின்ற வளமான நிலைமை இருக்கிறது. என்னுடைய பகுதியில் மீனாட்சியம்மன் பேட்டை என்ற இடத்தில் அரிசனங்கள் வாழும் பகுதியில், காலை 8 மணி முதல் 11 மணி வரையில் வளர்ச்சியான, செழிப் பான நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். பூப்போன்ற மலங்கள் வளமாக வந்து கொண்டிருக்கக்கூடிய அப்படிப்பட்ட அவலமான நிலைமையிருக்கிறது.

இப்பொழுது மாநகராட்சியிலே என்ன நடக்கிறது? லைட் போஸ்ட் இருக்கிறது, அதற்கு லைட் வேண்டுமென்று கேட்கி றோம், விளக்கு போடுங்கள், டியூப் போடுங்கள் என்று பொது மக்கள் கேட்கிறார்கள். ஆனால் என்ன நடக்கிறது? நான்கு நாட்கள் கழிந்து என்ன செய்கிறார்கள் என்றால் அந்தப் போஸ்டையே காலி செய்துவிடுகிறார்கள். போஸ்ட் இருந்தால் தானே விளக்கு வேண்டுமென்று கேட்கிறீர்கள், போஸ்டே கிடை யாது என்று சொல்கிறார்கள்.

"It is causing a lot of inconvenience" குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.

போன கூட்டத்திலேயே நான் சொன்னேன், இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு உரிய மரியாதையைத் தேடித் தாருங்கள், கவுன்சிலர் நிலைமைக்கு, பஞ்சாயத்து போர்டு உறுப்பினர் நிலை மைக்கு ஆக்கிவிடாதீர்கள். (குறுக்கீடு) நான் எல்லா உறுப்பினர் களுக்கும் பொதுவாகவே சொல்கிறேன். விளக்கு எரியவில்லை என்றால், சாக்கடை சரியாக இல்லையென்றால் அப்படிப்பட்ட நிலையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அதைக் கவனிக்கவேண்டிய அவலமான நிலைமை இருக்கிறது. எனவே, எம். எல். ஏ.க்களை

மதிக்கின்ற அளவிற்கு அவர்களுக்கு உரிய மரியாதையைத் தேடி தாருங்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டு கொள்கிறேன். ஆனால் அமைச்சரவர்கள் குறிப்பாகச் சொல்வது என்னவென்றால், நீங்கள் இன்னும் ஒரு வருட காலத்திற்கு பஞ்சாயத்து போர்டு உறுப்பினராகவே இருங்கள், கவுன்சிலரா கவே இருங்கள், ஒரு வருடம் கழித்துப் பார்க்கலாம் என்ற முறையில் சொல்கிறார்கள். எம்.எல்.ஏ., பதவியோடு கூட அடிஷனலாக இந்த வேலையையும் செய்யுங்கள் என்பது மாதிரி சொல்கிறார்கள்.

[பிற்பகல் 12–20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்ரவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள் ; அந்தத் திருத்தத்தை மட்டும் படித்து விடுங்கள்.

THIRU P. PONNURANGAM : I c n spe k. I m ent tled to spe k because I h ve g ven t e amendment on the Bill. I m the only person w o h s g ver the m dment on the Bill. It has been approved by t e Government. I m ent tled to spe k on the B ll.

எல்லோரையும் விட எனக்குத் தான் ரைட் அதிகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரைட்டைப் பற்றி உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அது சரி, ஆனால் உறுப்பின ரவர்களின் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்ட பட்டியலில் அவருடைய பெயர் வரவில்லை. இருந்தாலும் அவருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர கள் திருத்தம் கொடுத்தவர் என்ற முறையில் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக் கிறது.

திரு. சு. பாலன் : துணைத் தலைவரவர்களே, உறுப்பினர் அமென்ட்மெண்ட் கொடுத்திருக்கிறார் அதனால் தான் அவருடைய பெயரைச் சேர்த்துக் கொடுக்கவில்லை, அவருக்குப் பேச உரிமை இருக்கிறது என்ற காரணத்தால்,

திரு. ப. பொன்னுரங்கம் : ஆகையினாலே இதுபோன்ற அவல நிலை கள் சென்னை மாநகரத்தில் குறிப்பாக, என் தொகுதியாகிய இராயபுரம் தொகுதியில், பெரும்பாலான கழிப்பிடங்கள் இருக் கின்றன ' பப்ளிக் கன்வீனியன்ஸ் ', மதுரையிலே கட்டினீர்கள் ; கவர்ச்சியானது, பயனுள்ளது என்றெல்லாம் சொல்கிறீர்கள். ஆனால், கட்டியவை என்ன நிலைமையில் இருக்கின்றன என்று தெரியுமா ? என் தொகுதியைப் பொறுத்தமட்டில், ஆடு தொட்டிப் பகுதியில், பெருபாலும், ஆதிதிராவிட மக்கள் வாழும் பகுதியில் அன்றாடம் அடைப்பு,. மீனாட்சியம்மன் பேட்டை



பகுதியில்; அரிசனங்கள் வாழும் பகுதியில் அன்றாடம் அடைப்பு அதைப் போல தண்டையார்பேட்டை, பனைமரத்தொட்டி, வெட்டித் தோட்டம் போன்ற பகுதிகளில் அடைப்பு.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நான் அமைச்சர் அவர்களுக்கு உண்மையைச் சொல்வதற் காகச் சொல்கிறேன். விளக்கு இல்லாத காரணத்தினால், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால், ¼ மைல் தூரத்தி லுள்ள ஒரு நண்பர் வீட்டிற்கு நான் சைக்கிளில் செல்லும் போது, விளக்கு இல்லாமையால், ஒரு நாயின்மேல் ஏற்றினேன். நல்லவேளை, மனிதன்மேல் ஏற்றவில்லை. ஆனால், மனிதனாக இருந்திருந்தால், என்னை உதைத்திருப்பான். ஆகவே, இப்படிப்பட்ட அவல நிலை தொடர்ந்து இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா ? அப்படி இருப்பது சரியானதுதானா? ஜனநாயக நாட்டில்.

அதுவும் சென்னையைப் பொறுத்தபட்டில், ரோடுக்கு ரோடு காரிலே போவார் கவுன்சிலர். டெய்லி ஒரு ரவுண்ட் வருவார். அவரோடு ஓவர்சீர் வருவார். மதிப்பிற்குரிய அண்ணன் செல்வ ராஜ் கூட கவுன்சிலராக இருந்தார். மக்கள் குறைகளைச் சொல் வார்கள். அந்த வாய்ப்பை நீங்கள் ஏற்படுத்தித் தர மறுக்கி றீர்கள். இதனால், தனி அதிகாரி தவறு செய்கிறார் என்று சொல்லமாட்டேன். அவர் தன் சக்திக்கேற்ப வேலை செய் கிறார். ஆனால், 150 மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் செய்து கொண்டிருந்த வேலையை ஒரே ஒரு அதிகாரி செய்ய முடியுமா ? ஆகவே தேர்தலை விரைவாக வைப்பதன் மூல மாக, இது போன்ற குறைகளைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, இன்னொரு லோக்கல் அட்மினிஷ்டிரேஷன் மினிஸ்டர் வந்தால், அவர் இரண்டு முறை முன்மொழிவார் பில்லை. அந்த நிலைக்கு ஆளாக்காமல் நீங்கள் இந்தத் தேர்தலை நடத்துங்கள். சென்சஸ்கூட, பெரும்பாலான பகுதி களில் முடிந்தாயிற்று. சென்னையிலே, எங்கள் வீட்டுக்கெல்லாம் வந்து போய்விட்டாயிற்று. சாதாரணமாக, ஆர்டினன்ஸ் மூல மாகத்தான் இதனைச் செய்வார்கள். இதற்கு மே 30-ஆம் தேதி வரையில் காலம் இருக்கிறது. ஆகவே, அதற்கு முன்னால் ஆர்டினன்ஸ் போட முடியாது. 30-க்குப் பிறகு, கவர்னர் ஆர்டினன்ஸ் போட்டு, அதற்குப் பிறகு கொண்டு வரலாம். ஆனால், முன்கூட்டியே கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே ஒரு உள்நோக்கம் இருக்கிற மாதிரி தெரிகிறது. சென்சஸ் முடியப்போகிறது, இப்பொழுது 6 மாதம் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, இது ரொட்டினாக, வாழையடி, வாழையாக வருகிறது.

திறமையில்லாத டாக்டர்கள் ரிப்பீட், ரிப்பீட் என்று எழுது வார்களே, அந்த மாதிரி ரிப்பீட் ஒன் டூயல். ஆகவே, ரிப்பீட் லாவாக இருப்பதால், அதை எதிர்த்து, தேர்தலை உடனே அரசாங்கம் நடத்த வேண்டுமென்று வலியுறுத்தி, அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவை மாற் றுத் தலைவர் அவர்களே, இன்று கிராம ஆட்சி முறையிலே, அரசு அமைந்து, 1971 ஆம் ஆண்டிற்குப் பிறகு, கிராம ஆட்சியாக இருந்தாலும் சரி, நகராட்சியாக இருந்தாலும் சரி, நிச்சயமாக எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல, மிக அவல நிலைமையில் இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அரசு என்ன காரணத்திற்காக காலம் கடத்துகிறது இன்றைய அரசாங்கமாக இருந்தாலும் சரி நேற்றைய அரசாங்கமாக இருந்தாலும்சரி யாராக இருந்தாலும் அதில் அதிக கவனம் செலுத்தாமல் இருப்பது, நாம் நிச்சயமாகச் செய்ய வேண்டிய கடமைகளை மறந்துவிட்டு, அரசியல் காரண மாகவோ, அல்லது வேறு காரணமாகவோ நாம் மக்களை அலட்சியப்படுத்துகிறோம் என்றுதான் நினைக்க வேண்டிய ஒரு சந்தேகம் வருகிறது.

குறிப்பாக, சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால், இன்னும் 10 ஆண்டுகளுக்குள்ளாக நிச்சயமாக, மனிதர்கள் வாழ்வதற்குக் கேடாக இருக்கக்கூடிய நிலைமை உருவாகிவிடும் என்ற அச்சம் இருக்கிறது. சென்னை நகரிலே போடப்பட்ட பைப்புகள் எல்லாம், 1920, 1925, 1930 ஆம் ஆண்டுகளிலே போடப்பட்ட பைப்புகள். குடிநீராக இருந்தாலும் சரி, அல்லது கழிவு நீராக இருந்தாலும் சரி, அந்த பைப்புகள் இன்று வரை யிலும் புதுப்பிக்கப்படவில்லை. அவைகள் புதுப்பிக்கப்பட வேண் டுமானால், நிச்சயமாக, ரூபாய் 60 கோடி அல்லது ரூபாய் 100 கோடியானாலும் சரி, தமிழகத்திற்கே தலைநகரமாக இருக்கிற இடத்தில், நாம் கடந்த காலத்திலே வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலே செய்த வேலைகளுக்கு மேல் ஒன்றும் செய்யாமல் இருக்கிறோம். இன்னும், ஜனப்பெருக்கம் அதிகமாகிக் கொண் டிருக்கிறது. அந்த அதிகத்திற்கு ஏற்ற அளவிற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். வசதிகள் செய் யப்படுகின்றன. ஆனால், வீடுகளில்லாமல், வழி இல்லாமல், அவைகளைச் சீர்திருத்தம் செய்யாமல், அதற்கு வேண்டிய தொகைகளை ஒதுக்காமல், கமிஷனர் அவர்களையோ, அல்லது சுகாதார அதிகாரிகளையோ நாம் மாறி, மாறி, உறுப்பினர்களோ அல்லது மந்திரிகளோ, புகழ்வதோ, இகழ்வதோ, என்றால், அது நம்மை நாமே குறை கூறிக்கொண்டிருக்கிறோம் என்று பொருள். அதன் முக்கியத்துவத்தைக் கவனிக்காமல் இருப்பதற்கு வெட்கப் பட வேண்டியது நாம்தான் என்று இந்த மாமன்றத்திலே மிக வேதனையோடு சொல்கிறேன்.

1981 மார்ச் 6] [திரு. எல். இளையபெருமாள்]

கிராமத்து மக்களுக்காவது நல்ல காற்று கிடைக்கிறது. வருங்காலத்திலே நகரத்தில் வாழ்கிற மக்கள் நோய்களாலே பீடிக்கப்பட்டு கொள்ளை நோயால் அவதியுறுகிற நிலை இருக்கிறது. அதற்குக் அரசு நீதிலே அதிகம் கவனம் செலுத்தாமல் இருப்பது தான் காரணம், என்று அரசைத்தான் நாம சொல்ல வேண்டும். வேறு யாரையும் சொல்ல முடியாது. அதற்கும் மேலாக நண்பர் பொன்னுரங்கம் அவர்கள் சொன்னதைப்போல காலையிலே எழுந்தால் பஞ்சாயத்து மெம்பருக்காவது சிறிது மரியாதை இருக்கும். அதற்கும் கீழே நம்மை எண்ணுகிறார்கள். அதற்காக பொதுமக்களைக் குறை சொல்லிப் பயனில்லை. அவர்கள் என்ன செய்வார்கள். எங்கு எடுத்தாலும் ஊழல். இதற்கு அரசியல்வாதிகளாகிய நாம், நமக்கு மனசாட்சி இருந்து அதை நினைத்துப் பார்ப்போமேயானால் நல்லது. நாம் மனசாட்சியை விற்றுவிட்டதாகத்தான் அர்த்தம் என்பதை நான் சொல்லத் தான் வேண்டும். அதை சொல்வதற்கு யாரும் வருத்தப்படத் தேவையில்லை. அப்படி வருத்தப் பட்டாலும் பயனில்லை. இங்கே இருக்கிற நிலையிலே அங்கே வசதி வாய்ப்புகளைக் கொடுக்க மறந்திருக்கிறோம். அதிகாரிகள் உறவுக்காரர்களுக்கு, வேண்டியவர்களுக்கு, சலுகைகள் செய்கிறார்கள். வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற எல்லையிருக்கு இடம் கொடுக்கிறார்கள். யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நகரத்திலே வாழும் தொழிலாளர்களுக்கு, அந்தத் தொழிலுக்குக் கொடுக்க வேண்டிய செருப்புக் கூட கொடுக்க முடியாத அவல நிலை சென்னையில் இருக்கின்றது. வசதிகளும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் ஊதியத்திலே நிறுத்தி வைத்து பணம் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. ஆசிரியர்கள் தவறு செய்தார்கள் என்பதால் தண்டித்து, அவர்கள் கோர்ட்டிலே வழக்காடி அவர்கள் தங்களுடைய வேலைகளைப் பெற்றாலும் அதைக் கூட கவனித்து செய்கின்ற அளவுக்கு முடிவெடுக்க முடியவில்லை. இவைகளுக்கு எல்லாம் காரணம் தேர்தல் முறை அற்றதும், 150 கவுன்சிலர்கள் செய்ய வேண்டிய வேலையை ஒரு கமிஷனரும் அல்லது ஸ்பெஷல் ஆபீசரும் அல்லது ஒரு ஹெல்த் ஆபீசரும் சேர்ந்துக் கொண்டு இந்த 150 டிவிசன்களிலே உள்ள விஷயங்களைக் கவனிப்பது முடியாத காரியம் என்று நிச்சயமாக நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். தெரிந்திருந்தும் நாம் காலத்தைப் போக்குவது நல்லதல்ல. இப்போது கூட 18 வயது உள்ளவர்களை நாம் எடுக்க வேண்டும் என்று சொன்னோம். அவைகளும் முடிந்து விட்டன. எனவே இதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதுபோலவே மாநகராட்சியிலே மதுரை மாநகராட்சியாக இருந்தாலும், புதிதாக ஏற்படப் போகிற கோயம்புத்தூர் மாநகராட்சியாக இருந்தாலும் சரி அந்த நிலையிலே செய்ய வேண்டிய காரியங்களுக்கு அங்கு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவிகளைக் கூட கொடுக்காத நிலையில் எப்படி கார்ப்பரேஷனாக செய்யப் போகிறோம். ஜனத்தொகை இருக்கிறது என்று சொல்வார்கள். வருமானத்தைப் பற்றிச் சொன்னார்கள். வருமானத்தைக் குறைக்க வேண்டுமானால் பல இடங்களை ஒதுக்கி விட்டால் வருமானம் குறையும். ஜனத் தொகையும் குறையும் அல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை நாம் உருவாக்கினால் பல பகுதிகளைச் சேர்த்தால் பணமும் அதிகரிக்கும், ஜனத்தொகையும் அதிகரிக்கும். அதில் எது நல்லது என்று எண்ணுகிறபோது நாம் வாய்ப்பு வசதிகளை உருவாக்கிக் கொண்டு கார்ப்பரேஷனை உருவாக்குவதும் நல்லது. அல்லது உருவாக்கத் துணிந்த பிறகு அதற்குப் போதிய வருவாயை உண்டாக்குவதற்காக மட்டுமல்ல, அரசு முதலீடாக முன் பணத்தை, தனியாக, சிறப்பாக கொடுத்து அந்த மாநகராட்சி என்று சொல்வதற்கு வேண்டிய ஒரு மரியாதையைக் கொடுக்கின்ற ஒரு சுகாதார வாழ்க்கையை உருவாக்குகிற நிலைமையை நாம் உருவாக்க வேண்டும்.

இன்னும் குறிப்பாகச் சொன்னால் அன்னியர் ஆட்சியிலே மாநகராட்சி உருவாக்கப்பட்டபோது, தாழ்த்தப்பட்ட மக்கள் பின்தங்கிய மக்கள், மலை வாழ் மக்கள் ஆகியவைகளில் பிரதிநிதிகள் ஓராண்டு காலத்திற்கு அல்லது இரண்டு ஆண்டு காலத்திற்கு மேயராக வரலாம் என்று வாய்ப்பு உண்டாக்கினார்கள். ஆனால் நாம் சுதந்திரம் பெற்ற பிறகு மதுரையிலேயும் இன்னும் வரப்போகின்ற கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் நிச்சயமாக இந்த மக்கள் வருவதற்கு வாய்ப்பு வசதிகளை உண்டாக்குவார்களோ மாட்டார்களோ என்ற சந்தேகமான நிலையில் மக்கள் இருக்கிறார்கள். அந்த சந்தேகத்திற்கு இடம் கொடுக்காமல் அந்தத் தேர்தல்களில் இவர்களுக்குத் தனித் தொகுதி முறையை கொடுக்க வேண்டும் என்ற நிலையிலே அமைச்சர் அவர்கள் ஏன் கேபினெட்டாக இருந்தாலும் தீர்க்கமாக யோசித்து, அன்னியர் ஆட்சியிலே இந்த மக்களுடைய அவல நிலையை எண்ணிக் கொடுத்த உதவியை ஏன் சொந்த சகோதரர்கள் மறுத்திருக்கிறார்கள். இனியாவது மறுக்காமல் இருப்பதற்கு வழி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30)

பஞ்சாயத்து ஆட்சி முறையிலே, யூனியன் ஆட்சி முறையிலே நாம் திரும்பத் திரும்பச் சொன்னோம். குழுக்கள் போடுகிறோம் என்று சொல்கிறோம். அதில் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்களைப் போடுகிறோம். எம்.பி.க்கள் கிட்டத்தட்ட 6–7 மாதம் டெல்லி



யில் இருக்க வேண்டியிருக்கிறது. எம்.எல்.ஏ.க்கள் 3 அல்லது 5 மாதங்கள் இங்கே இருக்க வேண்டியிருக்கிறது. அதனால் அங்கே போடுகின்ற குழுக் கூட்டங்களை அவர்கள் இஷ்டப்படி போட்டுக் கொண்டு கையெழுத்துப் போடும் அவலநிலை இருக்கிறது. ஆகவே, இந்தத் தேர்தல் நடத்துவதில் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும், எவ்வளவு சிரமம் இருந்தாலும், உடனடியாகத் தேர்தல் நடத்துவது நல்லது. அது தள்ளிப் போட்டுக் கொண்டு போகப்படுமானால், என்னதான் காரணங்களைச் சொன்னாலும் மக்கள் அரசைச் சந்தேகப்படுவதற்கு ஆரம்பித்து விடுவார்கள். தங்களை அரசு அலட்சியப்படுத்துகிறதோ என்று நினைக்க ஆரம்பித்து விடுவார்கள். அதற்கு இடம் அளிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால், கல்யாண மேஸ்திரி தோட்டம் என்ற இடம் இருக்கிறது. அங்கே பணம் இல்லை. இருந்த பணத்தைக் கொள்ளை அடித்துச் சென்று விட்டார்கள் அரசியல்வாதிகள், கட்சிக்காரர்கள், அதற்கு வழக்குத் தொடுத்தால் அரசு சரியான வக்கீல் கூடப் போடாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அரசு வக்கீல் என்று போடுகிறவர்கள் சாதாரணமாக விருப்பு, வெறுப்பு காரணமாக சொந்த காரணத்திற்காக போடப்படுவதால், அந்தப் பதவியில் அவர்கள் இருந்துகொண்டு திறமையாக வாதாடமல் இருக்கின்ற அவலநிலை இருக்கிறது. இவைகளையெல்லாம் தவிர்க்க வேண்டுமானால், உடனடியாக அந்த பஞ்சாயத்து, யூனியன் அமைப்புகளுக்குத் தேர்தல் கொண்டு வரவேண்டும். ஒரு அமைச்சராலோ அல்லது ஒரு அதிகாரியாலோ அந்த நிலைமைகளைச் சீர்திருத்த முடியாது. ஆகவே, அரசை உடனடியாக தேர்தல் நடத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே இரண்டு நாட்களுக்கு முன்னாலே சொன்னார்கள் மத்திய அரசு தேர்தலை ஒத்தி வைக்கவேண்டும் என்று சொன்னதாகச் சொன்னார்கள். இப்போது தான் அதைச் சொல்லியிருக்கக்கூடும், மக்கள் கணக்குத் தொகை எடுக்கிற காரணத்தால். ஆனால், 1977 முதல் 1980 வரையில் நீங்கள் தான் ஆட்சிப்பொறுப்பில் இருந்தீர்கள். அதைப்போலவே, 1971 ஆம் ஆண்டுவரை பஞ்சாயத்து தேர்தல் முறை இருந்தது. பிறகு 1976 வரையிலும் தேர்தல் நடத்தவில்லை. அதைப்போலவே, 1977 ஆம் ஆண்டுக்குப்பிறகு 1980 வரையில் நீங்கள் தேர்தல் நடத்தவில்லை. இப்படியே தள்ளிப்போட்டுக்கொண்டு வருகிறீர்கள். இந்தத் தேர்தல் நடத்துவதில் பெரிய கஷ்டம் ஒன்றும் இல்லை. ஏன் நாம் பின் வாங்கவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை.

அதைப்போலவே, இந்த அரசு அதாவது பஞ்சாயத்து யூனியமாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து போர்டாக இருந்தாலும் சரி, நகராட்சி மன்றமாக இருந்தாலும் சரி,

மாநகராட்சியாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு என்று சொந்தமான அரசு நிலங்கள் இருக்கின்றன. அதை பொது மக்களுக்குத் தேவையானதா இல்லையா என்பதைப் பார்த்து, நகராட்சி மன்றம் அல்லது மக்கள் பிரதிநிதிகள் இருக்கிறபோது ஆராய்ந்து பார்த்துச்சொல்வார்கள். ஆனால் அந்த அதிகாரத்தை இப்போது தனி அதிகாரிகள் வைத்துக்கொண்டு இருப்பதாக அறிகிறேன். அந்த உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். சில இடங்களில் அந்த தனி அதிகாரி சொந்தவிருப்பு காரணமாகவோ அல்லது ஆளும் கட்சி எம்.எல்.ஏக்கள் மிரட்டினார்கள் என்பதற்காகவோ போட்டுக் கொடுத்து விடுகிற அவலநிலை இருக்கிறது. இங்கே காலையில் சொல்லப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு குமரி அனந்தன் உண்ணா விரதம் குறித்து. என்ன காரணம்? அரசாங்கத்தால் வழி பாதைகள் என்று அங்கீகரிக்கப்பட்ட பாதையில் செல்வதற்கு யாரும் தடை சொல்லமுடியாது. ஒருவருடைய சொந்த நிலமாக இருந்தால் கூட ஒரு 15 ஆண்டு காலம் அந்த வழியாக மக்கள் சென்று வர பாதை அமைத்துக் கொண்டு விட்டால் அந்த வழியாகப் போகக்கூடாது என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. ஆனால் இந்த நிலைமை எப்படி எழுந்தது, ஏன் கவனிக்காமல் விட்டு விட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்படவேண்டுமானால் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பெறவேண்டும்.

கர்நாடக மாநிலத்திலும், ஆந்திர மாநிலத்திலும், தாழ்த்தப் பட்டோருக்கு அவர்களின் நலிவுற்றத் தன்மை காரணமாக அவர்கள் மற்றவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு செல்ல முடியாது என்கிற காரணத்தால், பஞ்சாயத்துத் தேர்தல் களிலும், யூனியன் தேர்தல்களிலும், பஞ்சாயத்து போர்ட் தேர்தல்களிலும்—நம்முடைய நாட்டில் பஞ்சாயத்து போர்ட் இல்லை அரசியல் சட்டத்தில் நிர்ணயத்துள்ள 18 சதவிகிதம் இட ஒதுக்கீட்டைச் செய்து இருக்கிறார்கள். அந்த முறையை தமிழ் நாட்டிலும் கொண்டு வேரவேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். நான் முதலமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். அவர்களும் சர்வ கட்சித் தலைவர்களைக் கலந்து, இத்தகைய ஏற்பாடுகளைச் செய்வோம் என்ற உறுதியைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சரவர்களும் இதிலே கவனம் செலுத்த வேண்டும். நாடு சுதந்திரம் பெற்ற பின்னால் தமிழ்நாட்டிலே இருக்கிற 375 பஞ்சாயத்து யூனியன்களில் ஒருவர்கூட வரவில்லை. இரண்டு பேர்கள் வந்தார்கள். ஒருவர், கம்யூனிஸ்ட் காங்கிரஸ் சார்பிலே கம்யூனிஸ்ட் சார்பிலே வந்தார். இன்னொருவர் இண்டிபென்டன்டாக வந்தார். அதுவும் ஒரே ஒரு தடவை தான் வந்தார்; அப்புறம் வரவே முடியவில்லை.



இந்த அவல நிலைகளைப் போக்க, குறைகளைத் தீர்க்க சட்டத்தை மட்டும் போட்டுவிட்டால் போதாது. இருக்கின்ற நிலைகளை அரசு சீர்தூக்கிப் பார்த்து, வேண்டிய ஏற்பாடு களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நடைபெறாமல் இருப்பதற்கு பல காரணங்களைச் சொன்னார்கள். கிராமங்களிலே வறட்சி என்று சொன்னார்கள். அதை நானும் உணர்வேன்; நானும் ஒரு கிராமத்தைச் சேர்ந்த வன்தான். ஆனால் நகரங்களில் அப்படி இல்லை. இங்கேயாவது தேர்தலுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். நகரம் என்று அழகான பெயர் இருக்கிறது. ஆனால் வெள்ளையன் காலத்திலே இருந்த சீர்கேடுகள், அவலங்கள் அப்படியே இருக்கின்றன. நாம் அதை மாற்றவில்லை.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண் டால் கூட, இங்கேயும் பல சீர்கேடுகள் இருக்கின்றன. மின்சார சப்ளை சரியாக இல்லை. ரோடுகளிலே லைட் சரியாக எரி வதில்லை. கார்ப்பரேஷனைக் கேட்டால் மின்சாரம் இல்லை என்கிறார்கள்; மின்சார வாரியத்தைக் கேட்டால் அவர்கள் லைட் போடவில்லை என்று சொல்கிறார்கள்; அவர்கள் கார்ப்பரேஷனைத்தான் கேட்கவேண்டுமென்று சொல்கிறார்கள். கார்ப்பரேஷனிலே கேட்டால், அவர்கள் எங்கள் ரோடுகளை கெடுத்து விடுவார்கள். அப்புறம் நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே 'ட்ரெயினேஜ் ஸ்கீமை' தனியாகப் பிரித்துவிட்டார்கள். மெயின்டனன்ஸ் தனியாகப் போய்விட்டது. ஆகவே, பல வேலைகள் சரியாக நடைபெற வழியில்லை. ஓரளவுக்காவது வேலை ஒழுங்காக நடைபெற வேண்டுமானால் கார்ப்பரேஷன், ட்ரெயினேஜ் ஸ்கீம், எலக்ட்ரிசிட்டி போர்டு, சுகாதார டிபார்ட்மென்ட்— இவர்கள் எல்லோரும் சேர்ந்து இரண்டு மாதத்திற்கு ஒரு தடவையாவது அமைச்சரின் தலைமையிலே கூடி ஆலோசனை நடத்த வேண்டும். அந்த நேரத்தில் ரெவின்யூ டிபார்ட்மென்ட், பி. டபிள்யூ. டி. மற்றும் உள்ள எல்லா இலாகாவினரும் அங்கே வரவேண்டும். இப்போது அவர்களுக்குள்ளே கோவார்டி னேஷனும் கிடையாது; கோவாப்பரேஷனும் கிடையாது; எல் லோரும் பிரிந்திருக்கிறார்கள். ரெவின்யூ போர்டு போனபிறகு இங்கே இந்த அவல நிலை ஏன்? அரசும், அரசியல்வாதி களும்தான் இதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். வேறு யாரும் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, இன்றைக்கு இருக்கிற அவலங்களையும் சீர்கேடுகளையும் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி

## பாகம் 3

### பொதுப்பணித்துறை

### 1981–82–ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டங்கள் திட்டச்செயல்கள்

| | | தொடராச் செலவினம். (ரூ. இலட்சத்தில்) |
| --- | --- | --- |
| 1. | பூண்டியிலுள்ள நீரியல் மற்றும் நீரியக்க நிலையத்தில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல். | 1.50 |
| 2. | குன்னூர் உபகோட்டத்தில் பணியாற்றும் உதவி இளநிலை பொறியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல். | 1.00 |
| 3. | குன்னூர் உபகோட்டத்தில் பணியாற்றும் உதவி நிர்வாகப் பொறியாளருக்கு குடியிருப்பு இல்லம் கட்டுதல். | 1.55 |
| 4. | நீலகிரி மாவட்டம் கூடலூர் உபகோட்டத்தில் பணியாற்றும் உதவி/இளநிலை பொறியாளருக்கு குடியிருப்பு இல்லம் கட்டுதல். | 0.40 |
| 5. | சிதம்பரம் மற்றும் சிவகங்கை கோட்டங்களில் பணியாற்றும் இரு கோட்டப் பொறியாளர்களுக்குக் குடியிருப்பு இல்லம் கட்டுதல். | 1.20 |
| 6. | தாராபுரம், திருவாடானை, தேவகோட்டை மற்றும் செய்யாறு உப கோட்டங்களில் பணியாற்றும் உதவி நிர்வாகப் பொறியாளர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல். | |
| 7. | 15 இடங்களில் நிர்வாகப் பொறியாளர் உதவி/இளநிலைப் பொறியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல். | 5.28 |
| 8. | பொதுப்பணித்துறை அலுவலகங்கள் உள்ள 40 இடங்களில் கழிவிருப்பு அறைகள் கட்டுதல். | 4.00 |

திட்ட இனத்தில் சேரா செயல்.

| | | |
| --- | --- | --- |
| 9. | பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவில் மின்சாரப் பகுதியை விரிவாக்கும் நோக்கில் ஒரு கோட்டம் மற்றும் உப கோட்டங்கள் தோற்றுவித்தல். | 5.48 |

---

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1981 மார்ச் 6

மாசி 23, ரௌத்திரி-திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'' நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று.''

நாவன்மையாகிய நலம் ஒருவகைச் செல்வம். அந்த நா நலம் தனிச் சிறப்புடையது. ஆகையால், மற்ற எந்த நலங்களிலும் அடங்குவது அன்று.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தூத்துக்குடி அனல்மின் நிலையம்.

*வினா எண். 396— திரு. கு. ரமணி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இரண்டு ஜெனரேட்டர்கள் ஓட ஆரம்பித்து எவ்வளவு காலமாகியுள்ளது ?

(ஆ) அவைகளின் மின் உற்பத்தி எவ்வளவு ?

(இ) அவைகளில் இயந்திரக் கோளாறு ஏதேனும் ஏற்பட்டுள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் என்ன ?

கள் சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவுகளைப் பற்றி, அந்த தனி அதிகாரிகளுடைய பதவியை இன்னும் நீட்டிப்பது குறித்து அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

தேர்தல் உடனடியாக நடக்க வேண்டுமென்பதுதான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும்கூட. ஆனால் இன்றையதினம் இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமை என்ன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி நண்பர்கள் உணர்வார்கள். ஏற்கெனவே இந்த அரசு ஆட்சிப் பீடத்தில் இருக்கும்போது உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த காலத்தை நிர்ணயித்தது. அதன் பிறகு அரசியல் அபார்ஷன் ஏற்பட்டு, தேர்தல் என்கிற கரு உருவாகாமல் போனது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதனால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் தேர்தல் நடைபெற்று, நாங்கள் வந்து, மீண்டும் கருத்தரிப்பு உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு இன்னும் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாமல் இருப்பதற்கு 18 வயது நிரம்பியவர்களை எல்லாம் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற காரணம் ஒன்று. அடுத்து, தேர்தல் கமிஷன் புதிய சீர்திருத்தங்கள் இப்போது தேவையில்லை; பிரித்தல், சேர்த்தல் கூடாது என்று சொல்லியிருக்கிறது; அதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட விதிமுறைகள் இருக்கின்ற காரணத்தால் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை இந்த அரசுக்கு இருக்கிறதே தவிர, தேர்தலுக்கு பயந்து அல்ல; தேர்தலை நடத்தக்கூடாது என்ற எண்ணம் இந்த அரசுக்கும் இல்லை; அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இல்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் அதேநேரத்தில் இங்கே பேசும்போது பலர் சொன்னார்கள்; காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூட சொன்னார்கள். தேர்தலை நடத்த உங்களுக்கு பயம் என்றும், தேர்தலை நடத்த எந்த சட்டமும் குறுக்கிடவில்லை என்றும் சொன்னார்கள்.

[பிற்பகல் 12-40]

அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதற்காகத் தனிப்பட்ட முறையில் விமர்சனம் செய்ய நான் தயாராக இல்லை. ஆனால் இன்றைய தினம் என்ன நிலைமை இருக்கின்றது என்றால் உள்ளாட்சித் தேர்தலை நடத்தாத காரணத்தால், கிராமங்



களின் வளர்ச்சி எங்கேயாவது பாதிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை 30 ஆண்டு காலத்திலே இதுவரை இருந்த எந்த ஆட்சியும் அதாவது காங்கிரஸ் கட்சி ஆட்சியும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் என்னென்ன திட்டங்களைப் போட்டார்களோ அதைவிட தீவிரமாகவும் வேகமாகவும் திட்டங்களைப் போட்டு இந்த மூன்றாண்டு காலத்திலே கிராமங்களுக்கு ஏராளமான காரியங்களைச் செய்திருக்கிறோம் என்பதை மறந்துவிட முடியாது. தேர்தல் நடைபெறவில்லை என்பது உண்மை. ஆனால் அந்தத் தேர்தல் நடைபெறாத காரணத்தால் கிராமங்களிலே வளர்ச்சி ஏற்படவில்லை என்று யாராவது சொல்ல முடியுமா என்றால் முடியாது. ஏனென்றால் 30 ஆண்டு காலத்திலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில்தான் கிராமங்களுக்குப் போதிய அளவில் பாதைகளைப் போட்டிருக்கிறோம். நகரங்களோடு இணைக்கப்படாத கிராமங்களே இருக்கக்கூடாது என்ற வகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னைற்றக் கழக அரசு நடவடிக்கை எடுத்து அதற்குரிய காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

அடுத்து தன்னிறைவுத் திட்டம் என்று சொல்லக்கூடிய திட்டத்தை இதுவரை யாரும் செயல்படுத்தாத அளவுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெகு வேகமாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல. போடப்பட்ட பாதைகளுக்கு போதிய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. இந்த மூன்றாண்டு காலத்திலே மட்டும் விடப்பட்ட பஸ்கள் எத்தனை, முன்பிருந்த பஸ்கள் எத்தனை என்பதைப் பற்றி எதிர்க்கட்சி நண்பர்கள் உணருவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அதுமட்டுமல்ல. குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏராளமான திட்டங்களைப் போட்டு குடிநீர் கிடைக்கின்ற வகையில் எல்லா வழிவகைகளையும் செய்திருக்கிறோம்.

குடிசைகளுக்கு மின்னொளி வழங்கவேண்டும் என்ற திட்டத்தை உள்ளாட்சி மன்றங்கள் இல்லாத நிலையிலே கூட தேர்தலே நடைபெறாமல் இருந்தாலும் கூட மிகத் திறமையாக, இந்த அரசு நடத்திக் கொண்டு வருகிறது.

அதுமட்டுமல்ல. கல்வித்துறையை எடுத்துக்கொண்டால், முன்பு கல்லூரிகள் என்று சொன்னால் நகராட்சி அந்தஸ்திலே அல்லது மாநகராட்சி அந்தஸ்திலே உள்ள இடங்களில்தான் இருந்தன. ஆனால் இப்போது 10 ப்ளஸ் 2 என்கிற கல்வி கிராமப் பகுதிகளிலிருந்து 3 மைல் 2 மைல் தூரத்திற்குள்ளாகவே இருக்கக்கூடிய அளவுக்கு மிக அதிக அளவில் ஏற்பாடுகளைச் செய்

திருக்கிறோம் என்பதை மறந்துவிட முடியாது. ஆகவே தேவை
யானவை அனைத்தையும் இந்த அரசாங்கம் செய்து கொண்
டிருக்கிறது.

ஆகவே, தேர்தல் நடத்தப்படவில்லை என்பது ஒரு திருஷ்டி
பரிகாரமாக இருக்க முடியுமே தவிர அதுவே நிவாரணமாக
ஆகிவிட முடியாது.

> ''ஓர் தட்டிலே நெல்லும்—ஓர் தட்டிலே பொன்னும்
> ஒக்கவிற்ற கார் தட்டிய பஞ்சத்திலும்
> ஈகைக்கு இதோ நானிருக்கிறேன்—என
> மார்தட்டிய வள்ளல்.''

என்ற வகையில் கிராம மக்களின் தேவைகளை எல்லாம் எண்
ணிப்பார்த்து, 'ஆயிரம் கடனிருந்தாலும் அவரம்பருப்பு சாரு
தான், தொளாயிரம் கடனிருந்தாலும் தொவரம்பருப்பு சாரு
தான்' என்ற முதலாளிகளின் நிலையினையும் 'ஆடிக்கும்
கஞ்சிதான், அமாவாசைக்கும் கஞ்சிதான்' என்ற தொழிலாளு
களின் நிலையினையும் எண்ணிப் பார்த்து அந்த வகையில்
எல்லா வகையிலான திட்டங்களையும் போட்டு அதற்கான
வழிவகைகளைச் செய்து கொண்டு வருகிறது இந்த அரசு
என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆனால் என்ன செய்தாலும்
எப்படிச் செய்தாலும் அதை எதிர்த்துக்கொண்டுதான் இருப்
போம் என்று சொல்லி எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுகளைச்
சொல்வதை பார்க்கின்றபோது எனக்கு சேக்ஸ்பியரின் ஒத்தல்லோ
நாடகம்தான் நினைவுக்கு வருகிறது. அதாவது 'மோட்டிவ்'
'மோட்டிவேட்டட், ஈகோ'. எந்தவிதமான காரணமும் இல்லாமல்
காரியமும் இல்லாமல் எதிர்ப்பது அல்லது ஏதாவது சொல்லிக்
கொண்டிருப்பதுதான் எதிர்க்கட்சியினரின் தொழில் என்று
கருதக் கூடாது. உருப்படியான பிரச்சினைகளைப் பற்றி எடுத்
துச் சொல்லவேண்டும்.

அடுத்து எங்களைப் பார்த்து 'உங்களுடைய தேர்தல் சின்ன
மும் இரட்டை இலை, உங்களுடைய நிலையும் இரட்டை நிலை'
என்று பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்டார்
கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்
டுக்கும் நடுவிலே ஆதாரத் தண்டு ஒன்றும் இருப்பதை கவனிக்க
வேண்டும். ஆகவே எங்களுடைய நிலைமை துலாபாரத்தைப்
போன்று நடந்துகொள்வதுதான். ஆனால் பிரதான எதிர்க்கட்சி
யினரின் சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தம் இருப்பதாகவே
தெரியவில்லை. மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி
என்பது அந்தக் கட்சியின் கொள்கை. ஆனால் மத்தியில் சுய
ஆட்சி, மாநிலத்தில் கூட்டாட்சி என்று தேர்தல் காலத்தில்
தீர்மானம் போட்டனர். அவசரகாலச் சட்டத்திற்கு எதிர்ப்பு



என்று தெரிவித்தனர். ஆனால் அவசரகாலச் சட்டத்தால்
எதிர்க்கட்சிக்காரர்களை கைது செய்தனர். தேசிய பாது
காப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சி
மத்தியிலே கொண்டு வந்த சட்டத்தை ஆதரிப்பார்கள். ஆனால்
தேசிய பாதுகாப்புச் சட்டத்தை இங்கே மாநிலத்தில் எதிர்ப்பார்
கள், இதுதான் நிலைமை.

அடுத்து உயர்த்தப்பட்ட சம்பளத் தொகையை தி.மு.க.
எம்.எல்.ஏ.க்கள் வாங்க மாட்டார்கள் என்று சபையிலே அறிவிக்
கப்பட்டது. ஆனால் அதை முதலிலே வாங்கியவர்கள் திராவிட
முன்னேற்றக் கழகத்தினர்தான். இதுதான் வெளியிலே அவர்
களது நடைமுறை.

அடுத்து அரிஜனங்கள் வயது வரம்பு நிர்ணயம் பற்றி ஆளுநர்
ஆட்சியின்போது வெளியிலே பேசினார்கள் அவர்கள். ஆனால்
அந்த சட்டத்தை உருவாக்கியதே திராவிட முன்னேற்றக்
கழகத்தின் ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
அடுத்து அரசு நிகழ்ச்சிகளில் திராவிட முன்னேற்றக் கழகம்
கலந்துகொள்ளாது என்றும் புறக்கணிப்பு என்றும் பகிரங்கமாக
அறிவித்தது. ஆனால், அரசு நிகழ்ச்சிக்கு அழைப்பு இல்லை,
தங்களது பெயர் இல்லை என்று ஒப்பாரி வைப்பது யார் என்று
கேட்கிறேன்.

எனவே ஓட்டடைகள் தாக்குவதால் கட்டிடங்கள் இடியாது
என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. பெரியசாமி: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, கரு இடையில் கலைந்து விட்டதாகச் சொன்
னார்கள். சாதாரணமாக கருவிற்கு 10 மாதம் என்று சொல்
வார்கள். ஆனால் தனி அதிகாரிகள் விஷயத்தில் எத்தனை
மாதம் ஆகிவிட்டது. 2, 3 வருஷங்கள் ஆகிவிட்டதே. இன்னும்
தேர்தல் வரவில்லையே. அதனால் அதை கரு என்று சொல்வது
தவறு என்று குறிப்பிட விரும்புகிறேன்.

*திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, தனி அதிகாரிகளுடைய பதவி காலத்திதை நீட்டித்துக்
கொண்டு வந்திருக்கிற இந்த சட்ட முன்வடிவின் மீது இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன்.

இன்றைய தினம் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றி
யங்கள் ஆகியவற்றின் தேர்தல்களையெல்லாம் தள்ளி வைத்து,
மேலும் அந்த தனி அலுவலர்களின் பதவிகளை நீட்டித்துக்
கொண்டு போவதின் மூலம் தமிழகம் முழுவதும் கடந்த
5 ஆண்டு காலமாக தொடர்ச்சியாக நகரப்புறமானாலும்

[திரு. என். ஏ. பூங்காவனம்] [1981 மார்ச் 6

கிராமப்புறமானாலும், அந்தப்பகுதிகளிலே உள்ள மக்கள் நகராட்சியோடு இருந்த தொடர்பை இப்போது இழந்தவர்களாக இருக்கிறார்கள்—அந்த நிலைதான் நீடித்துக்கொண்டே போகிறது. இதை நீங்கள் பார்க்கவேண்டும் என்று சொன்னால், நான் அமைச்சர்களுக்கு பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர் என்ற முறையில் அல்லாது, சாதாரணப் பிரஜைகளாக, நீங்கள் தெரிந்த கிராமங்கள் அல்லாத பகுதிகளுக்குச் சென்று பாருங்கள், அப்போது உங்களுக்குத் தெரியும் ஊராட்சி களுக்கும், நகராட்சிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரஜைகள் எவ்வளவு அவசியம் என்பது.

நகராட்சிகள் செயல்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித் தனியாக கமிட்டி போட்டிருப் பார்கள். அந்தந்த வேலைகளை அந்தந்த கமிட்டியினர் நிறை வேற்றி வைப்பார்கள். உதாரணமாகக் கட்டிடம் கட்டுவது என்று சொன்னால், கட்டிட அமைப்புக் குழு என்று ஒரு கமிட்டி இருக்கும், அதே போல சுகாதாரக் குழு, மின்சாரக் குழு, கல்விக் குழு என்று ஒவ்வொன்றிற்கும் தனித் தனியாக இருக்கும். அப்படி 9 குழுக்கள் இருந்தன. வேலைகளை அப்படி அவர்கள் அந்த மன்றத்தினுள்ளேயே பகிர்ந்து கொண்டார்கள்.

அவை அனைத்தையும் கலைத்து, மன்றங்களையும் கலைத்து, 4 ஆண்டு காலம் கடந்து, மேலும் அவர்களுக்கு அந்த தனி அலுவலர்களுக்கு பதவியை நீட்டித்துக் கொண்டே போக வேண் டும் என்று சொல்வது நல்லது அல்ல. இப்போது ஒரு ரோடு போடுவதோ, அல்லது கல்வி நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதோ, அல்லது வேறு ஏதாவது வேலைகளோ இருந்தால் இப்போது எப்படி நடக்கிறது என்று சொன்னால்—முன்பெல் லாம் அதற்கென போடப்பெற்ற குழுக்களே அதை பரிசீலிக்கும். அதில் மக்கள் பிரதிநிதிகள் இருப்பார்கள். இப்போது ஆலோ சனைக் குழு என்று மக்களின் பிரதிநிதிகளை—அதாவது எம்.எல்.ஏ.க்கள் போன்றவர்களை போட்டு, ஒரு குழு அமைக்கப் பெற்றிருந்தாலும் கூட, அந்தக் குழு அதிகாரங்கள் அற்று இருக் கிறது. அதற்கு எந்தவித அதிகாரமும் இல்லை. ஆலோசனை களைத்தான் சொல்லலாம். அதற்கு மாறாக அதிகாரிகள் குழு இருக்கிறது. கமிஷனர் இருக்கிறார். ஸ்பெஷல் ஆபீஸர் இருக் கிறார், பி.டி.ஓ. இருக்கிறார், பி.ஏ. இருக்கிறார். இப்படிப் பட்டவர்களைக் கொண்ட அந்தக் குழுதான், தானே டெண்டர் கள் போட்டு, அதை தானே பிரித்து, தாமாகவே வேலைகளையும் பிரித்துக் கொடுக்கிறது. ஆகவே, பொது மக்களின் பணமும் வீணாகிறது—வேலைகளும் ஒழுங்காக நடப்பது இல்லை. அரசு ஆணைக்கும் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லாமல் வேலைகள் நடந்துக்கொண்டிருக்கின்றன.



1981 மார்ச் 6] [திரு. என். ஏ. பூங்காவனம்]

உதாரணமாக, மக்களுடைய பிரச்னைகள் தீர்க்கப்படவேண்
டும் என்று, அரசாங்கம் தன்னிறைவுத் திட்டங்கள், தீட்டி அதை
கிராமப்புறங்களில் செயல்படுத்தி வருகிறது. அந்த வேலைகளை
யார் பரிசீலனை செய்வது. நிதி ஒதுக்கி விட்டால் மட்டும்
போதாது. அவைகளை பரிசீலனை செய்ய வேண்டும், மேற்
பார்வைகள் இட வேண்டும். இவைகளை யார் செய்வது /
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததினால், வேலைகள்
எல்லாம் பாதியில் நிற்கின்றன. அவைகளைப் போய் நாம்
கேட்டால், நடக்கிற வேலைகள் கூட நடக்காமல் பாதிக்கப்
பட்டுவிடும். ஆகவே வேலைகள் பாதிக்காமல் இருக்க வேண்
டுமே என்பதற்காகவே நாங்கள் ஒன்றும் சொல்லாமல் இருக்க
வேண்டிய நிலை இருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். போளூரிலே, நம்
முடைய மாண்புமிகு உறுப்பினர் நண்பர் பலராமன் கூட அங்கே
தான் இருக்கிறார்கள். அந்தப் போளூரிலே பஞ்சாயத்துக்குச்
சொந்தமாக காலி இடத்தை, அந்த அதிகாரிகள் கடை கட்டி
விட்டிருக்கிறார்கள். இப்போது அந்த இடத்தை அவர்கள்
அசைன்மெண்ட் செய்து வெளியாருக்கு மாற்றியிருக்கிறார்கள்.
கடை பஞ்சாயத்தைச் சேர்ந்தது. அது தற்போது கொடுக்கப்
பட்டிருப்பது வெளியார்களுக்கு. இப்படி பல ஊழல்களை
வரிசையாக தர முடியும். தொடர்ந்து இவைகள் நீடிக்க வேண்
டுமா என்று, அந்தத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்
கொள்கிறேன்.

அவர் மிக மிக சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய இளைஞர்.
அவரே இதை ஒத்தி வைத்திருக்கிறாரே என்று வருத்தமாக
இருக்கிறது. தேர்தல் நடத்துவார் என்று எதிர் பார்த்தால்,
அதைத் தள்ளிக் கொண்டே போகின்ற நிலையைக் கொண்டு
வந்திருக்கிறாரே என்று வருத்தமாக இருக்கிறது. கடைசியாக
ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்போதெல்லாம்
பஞ்சாயத்துக்களுக்கு, ஊராட்சிகளுக்கு, ஊராட்சி ஒன்றியங்
களுக்கு ரோடு வேண்டும், பள்ளிக்கூட கட்டிடம் கட்ட வேண்டும்
என்று சொன்னால், அமைச்சர்களை அந்தப் பகுதிக்கு கூட்டிக்
கொண்டு போக வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அமைச்சர்
வருகிறார்கள் என்று சொன்னால், தானே அங்கு ரோடு, பள்ளிக்
கூடம், கட்டிடம் எல்லாம் ஏற்பட்டு விடும். அது சின்ன ரோடாக
இருந்தாலும் சரி, அமைச்சர் அவர்களைக் கூட்டிக் கொண்டு
போனால்தான் அந்த வேலை நடக்கும் என்ற நிலை இருக்கிறது.
எங்களுடைய தொகுதிக்கு துரதிருஷ்டவசமாக எந்த அமைச்சரும்
இன்னும் வரவில்லை. ரோடு போட வேண்டும் என்று கேட்டு
9 மாதங்கள் ஆகிவிட்டது. 5, 6 முறை மனு கொடுத்திருக்
கிறோம். ஆகவே, அமைச்சர் அவர்கள் 234 தொகுதிகளையும்,
ஒன்று போலவே பாவித்து—ஒரே நிலையில் பாவித்து எல்லா

இடங்களுக்கும் சென்று, தேவையான வசதிகளை மக்களுக்குச் செய்துக் கொடுக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு, தனி அதிகாரிகளுடைய பதவியை ஒரு மூன்று மாதம் என்று வேண்டுமானாலும் நீட்டித்து விட்டு, அந்த மூன்று மாதத்திற்கு பிறகு தேர்தலை கொண்டு வந்து அங்கே மக்கள் பிரதிநிதிகளை வைத்து நிர்வாகம் செய்கிற ஒரு நிலையைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12–50)

**திரு. கு. பலன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்தச் சட்டப் பேரவையில் ஏழு சட்ட முன்வடிவுகள் வைக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியின் தனி அதிகாரி பதவியை நீட்டிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்களும், பெரியவர் திரு. இளையபெருமாள் அவர்களும் இன்று சென்னையினுடைய சீர்கேட்டினைப் பற்றி மிக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். ஒரு காலத்தில் சென்னை மாநகராட்சியில் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் இருந்தபோது மாநகராட்சியின் பணிகள் நன்றாக நடந்தன. அன்றையதினம் நாங்கள் பதவியில் இருந்த போது சிங்காரச் சென்னை என்று சொன்னார்கள். இன்றையதினம் சிங்காரச் சென்னை எந்தளவிற்கு சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதை மன்ற உறுப்பினர்கள் சென்னை நகரைச் சுற்றி பார்க்கும்போது அதை உணரக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது.

இன்று சென்னையில் இரவு நேரங்களில் மின் விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. ஆனால் நெடுஞ்சாலைகளில் இருக்கிற விளக்குகள் நல்ல முறையில் எரிந்து இரவு பகல் நேரம் போல் காட்சி அளிக்கிறது. ஆனால் ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள், குடிசை வாழ் மக்கள் இருக்கக்கூடிய தெருக்களில் விளக்குகள் சரிவர எரிவதில்லை. குடிசைகளில் வாழ்பவர்கள் தங்கள் வீடுகளில் படுக்க இடமில்லாமல் இரவு நேரங்களில் அவர்கள் படுக்கைகளை எடுத்து வந்து வீதிகளில் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கடந்த எட்டாண்டுகளாக வீதிகள் எல்லாம் பள்ளமும் குழியுமாக இருந்துக் கொண்டிருக்கின்றன. பள்ளிக்கூடக் கட்டடங்களை எடுத்துக் கொண்டால் கடந்த எட்டாண்டுகளாக பள்ளிக்கூட கட்டடங்கள் சரியான முறையில் கட்டப்படாமல் அவை மிகவும் மோசமான நிலையில் இருந்துக் கொண்டிருக்கின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் சொல்லி அவர்கள் மிக அனுதாபத்தோடு பார்க்கிறார்கள், கேட்கிறார்கள். நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் ஆணையர் ஒரு தீர்ப்பு அளிக்கிறார். தனி அதிகாரி ஒரு தீர்பபு அளிக்கிறார். ஆணையர் சிபார்சு செய்தால் தனி அதிகாரி



அதற்குக் குறுக்கே நிற்கிறார். இன்றையதினம் மாநகராட்சியின் வேலைகள் இப்படித்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சியின் வருமானம் இன்றைக்கு ஏறக்குறைய 21 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். அந்த 21 கோடி ரூபாயில் 18 கோடி ரூபாய் அலுவலர்களுக்கு மட்டும் செலவாகிவிடுகிறது என்று தனி அதிகாரி கடந்த மாதம் அவர்களது அறிக்கையில் சொல்லியிருக்கிறார். அப்படி 18 கோடி ரூபாய் அலுவலர்களுக்குப் போக மீதி மூன்று கோடி ரூபாயை வைத்துக் கொண்டு சென்னை மாநகராட்சி செய்ய வேண்டிய வேலைகளை எப்படிச் செய்ய முடியும் என்ற ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். இந்த நிலையைப் பார்க்கிறபோது சென்னை மாநகராட்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த சர்க்கார்தான் பணம் கொடுக்க வேண்டும் என்ற முறையில் சொல்கிறார்கள். நிர்வாக அதிகாரி இன்றையதினம் வீட்டு வரியை ஏற்றியிருக்கிறார். ஆனால் அப்படி ஏற்றிய வரியைக் குறைப்பதற்கு சம்பந்தப்பட்ட நகரமன்ற உறுப்பினர்கள் இல்லை என்ற காரணத்தால் வீட்டு சொந்தக்காரர்கள் இந்த வரியை ஏராளமாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இத்தகைய நிலைகள் எல்லாம் மாறுவதற்கு உடனடியாகத் தேர்தல் நடத்தியாக வேண்டும்.

துப்புரவு வேலைகளை எடுத்துக் கொண்டால், இன்றையதினம் ஒரு வீதியில் ஒரு நாள் குப்பை எடுத்தால் மூன்று நாட்களுக்குப் பிறகுதான் துப்புரவு வேலை நடக்கிறது. காரணம் என்னவென்றால் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வண்டிகள் சரியாகக் கொடுக்கப்படவில்லை. மாடுகள் சரியாகக் கொடுக்கப்படவில்லையென்ற புகார் இருந்துக் கொண்டிருக்கிறது. சென்னை நகரை 150 வட்டங்களாக பிரித்த நேரத்தில் ஆட்களை பகிர்ந்துக் கொண்டபோது ஒவ்வொரு வட்டத்திற்கும் வேண்டிய ஆட்கள் சரியாக இல்லாததால் இன்றையதினம் பணிகளைச் சரிவர செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதால் இந்தக் குறைகளையெல்லாம் போக்க நகரமன்ற உறுப்பினர்கள் இருந்தால்தான் செய்ய முடியும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே உடனடியாக தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும், அப்போதுதான் சென்னை மாநகராட்சியின் நிலை சீர்படும். முன்பெல்லாம் சென்னையில் உள்ள மக்கள் தொழிலாளர்களாலும் சரி மற்றவர்களானாலும் சரி தினந்தோறும் கடற்கரைக்குப் போகாமல் ஆங்காங்குள்ள பூங்காக்களில் அமர்ந்திருப்பார்கள். ஆனால் இன்று அந்தப் பூங்காக்கள் மண் மேடுகளாக காட்சியளிக்கின்றன.

அது மட்டுமல்ல. படித்த வாலிபர்கள், மற்றவர்கள் எல்லாம் விளையாடுவதற்கு நல்ல விளையாட்டுத் திடல் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இன்றையதினம் அங்கேயெல்லாம் சாக்கடைத் தண்ணீர் தேங்கி நிற்கின்ற நிலையைத்தான், இந்த அவல நிலைதான் இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்

கொள்ள விரும்புகிறேன். இவைகளையெல்லாம் போக்குவதற்கு நம்முடைய இந்த அரசு உடனடியாகத் தேர்தலை நடத்துவது தான் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு, இப்போது மக்கள் கணக்கெடுப்பு நடக்கிறது என்று சொல்கிறார்கள். இது 5-ஆம் தேதியோடு முடிவடைந்து விட்டது. அந்தக் காரணத்தினாலே இதை மேலும் நீட்டிக்கத் தேவையில்லை என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்கிறது, அதற்குப் பின் தேர்தலை நடத்தலாம் என்று மத்திய சர்க்கார் சொல்வதாக சொல்கிறார்கள். இப்போது கணக்கெடுப்பு வேலை முடிந்து விட்டதால், உடனடியாக மத்திய சர்க்காருக்கு எழுதி, இந்த வேலை முடிந்து விட்டது, எனவே, தேர்தலை நடத்துவதற்கான வழிவகைகளைச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சிப் பணிகளைக் கவனிப்பதற்கு சென்னை சட்டமன்ற உறுப்பினர்களின் ஒருங்கிணைந்த குழுவை அமைத்து, இந்தப் ப ணிகளை முறையாகச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும், இப்படி தனி அதிகாரியின் பதவிக் காலத்தை ஓராண்டிற்கு நீட்டிக்கக் கூடாது என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி டி. யசோதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தேர்தல்களை ஒத்தி வைக்க நாம் தனி அதிகாரிகளின் நியமனத்தை நீட்டிக்க வேண்டுமென்ற மசோதா வந்திருக்கின்றது என்பது சொல்லாமலேயே தெரிகிறது. இன்றைக்கு உள்ள உண்மை நிலையை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஊராட்சிகளிலே இன்றைக்கு தன்னிறைவுத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் இங்கே வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், ஒரு தனி அதிகாரி தனக்கு இருக்கின்ற வேலைப் பளுவின் காரணமாக, அவற்றை நிறைவேற்ற முடியவில்லை. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதுபோல, பல மன்ற உறுப்பினர்கள் யோசித்து செய்ய வேண்டிய காரியங்களை ஒரு தனி அதிகாரியால் செய்ய இயலாத காரணத்தினால், குருவித் தலையிலே பனங்காயை வைத்த நிலை கிராமங்களிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இன்றைக்கு உண்மை நிலையை சொல்ல வேண்டுமென்று சொன்னால், அமைச்சர் அவர்கள் இந்த தன்னிறைவுத் திட்டத்தை 20 நாட்களுக்குள் முடிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இது எப்படி முடியும்? நம்முடைய தேர்தல் ஜூன் மாதத்திலே முடிந்து, ஜூலைக்கு மேல்தான் அந்த வேலை





களே ஆரம்பித்திருக்கின்றது என்று நினைக்கிறேன். இதுபோன்ற நிலையில் அவர்கள் இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற காலம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அந்த வேலைகள் முழுமையாக நடைபெறாமல் பாதியிலேயே நின்றுக் கொண்டிருக்கிறது. இப்படி நின்றுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலேதான், மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர்கள் நாங்கள் பல திட்டங்களைப் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். சாலைகள் போட்டிருக்கிறோம், வசதிகளைச் செய்திருக்கிறோம் என்று அவர்கள் சொல்வது, எப்படி இருக்கிறதென்றால், ஒரு கணவன் மனைவிக்கு பூ வாங்கிக் கொடுத்து பெருமைப்படுவதுபோல் இருக்கிறது. அதைப்போல் ஆளுங் கட்சிக்காரர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப் படுகிறேன்.

இன்றைக்கு நிறைவேற்றப்படாத திட்டங்களை எண்ணிப்பார்க்கின்ற போது, உண்மையிலேயே அது வேதனைக்குரியதாக இருக்கிறது. உதாரணமாக, பிச்சுவாக்கத்திலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு குடிநீர்த் தொட்டியைத் திறப்பதற்காக அங்கே வருகை தந்தார்கள். அந்தக் குடிநீர்த் தொட்டி திறக்கப் பட்டதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்? அந்த விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் வருகை தந்திருந்தார்கள். நானும், அங்கு சென்றிருந்தேன். ஆனால், அந்தக் குடிநீர்த் தொட்டியில் இரண்டு பையன்கள் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள் தொட்டியினுள்ளே இருந்த அந்தப் பையன்களை வெளியே அனுப்புங்கள் என்று நான் சொன்னேன். வெளியே வரவில்லை. ஏனென்று கேட்டால் நமது அமைச்சர் அங்கே குடிநீர்த் தொட்டியைத் திறக்கின்ற நேரத்தில், இரண்டு பையன்கள் அந்த தொட்டியிலே உட்கார்ந்துகொண்டு, சரியாக தண்ணீர் அந்த பைப்பி வழியாக வருவதற்கு உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அமைச்சர் அவர்கள் குழாயைத் திறக்கின்றபோது, அப்படி அ பையன்கள் விடுகின்ற தண்ணீரைப் பிடிப்பதற்கு குழாய்க்கருகில் பெண்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள்.

[பிற்பகல் 1—0C].

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ய சாதா அவர்கள் பேசும் போது ஒரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள். அந்த விழாவில் நானும் அவர்களும்தான் கலந்து கொண்டோம். மேல்நிலைத் தொட்டி திறப்பு விழா. அங்கே சிறுவர்களை உட்கார வைத்து குடத்தின் மூலம் தண்ணீர் ஊற்றி மக்களை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணம் கண்டிப்பாக இந்த அரசுக்கு கிடையாது. அது போன்ற நிலைமைகள் முன்பிருந்த ஆட்சி காலத்தில் நடந்திருக்கின்றன. ஆனால் அதை கவனத்தில் வைத்துக் கொண்டு களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திருமதி டி. யசோதா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே
நான் இங்கேகுற்றச் சாட்டை கூறவேண்டுமென்று கூறவில்லை.
அமைச்சரவர்கள் வருவதற்கு முன்பே நான் இதைச் தடுத்து
நிறுத்தி விட்டேன். இன்னொரு அரசாங்கம் இதைத் செய்தாலும்
கூட நீங்கள் செய்வதற்கு பொதுமக்கள் உங்களை அனுப்பிவைக்க
வில்லை. அவர்கள் செய்தது குற்றம் என்பதைத் தெரிந்து
தான் உங்களை அனுப்பிவைத்திருக்கிறார்கள். குற்றச்
சாட்டுகள் நேராத வண்ணம் அரசாங்கம் பார்த்துக்கொள்
ளும் நிலை தனி அதிகாரியால் முடியவில்லை என்பதைத்தான்
சொல்லிக்கொள்கிறேன். அங்கே வெறும் கிணறு இருந்தது.
பம்ப் செட் போட்டு வைத்திருந்தார்கள். மாவட்ட ஆட்சித்தலை
வரை பார்த்து இதுபோன்ற போலியான விழாக்கள் தேவை
யில்லை, அமைச்சர் வந்தால் அவரிடத்தில் சொல்வேன் என்று
சொல்லிய பிறகு, ஆட்சித் தலைவர் அங்கே இருந்த போலீஸ்
அதிகாரி கண்ணன் என்பவரை அனுப்பி அமைச்சர் அந்த இடத்
திற்கு வராமல் அனுப்பி சுங்குவார்சத்திரத்திற்குத் திசை திருப்பி
இரண்டாவது நிகழ்ச்சியிலேதான் அமைச்சர் அவர்களும் நானும்
கலந்து கொண்டோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்
கிறேன். அங்கே இருக்கும் தனி அதிகாரிகளும், ஆளும் கட்சியின்
சகோதரர்களும் அமைச்சர் அவர்களை வைத்து பல நிகழ்ச்சி
களை நடத்த வேண்டுமென்ற ஒரு அவாவினால் இப்படிப்பட்ட
போலியான விழாக்கள் ஏற்பாடு செய்யப்படுகிற நிலைமைகள்
ஏற்படுகின்றன. இவைகள் தனி அதிகாரிகளால் உருவாக்கப்
படுகிற நிலைகள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடுவாஞ்சேரி என்ற இடத்தில் அரசாங்கத்தின் மூலமாக 13
ஆயிரம் ரூபாய் வரையில் 11 வருடங்களுக்கு முன் ஒதுக்கப்
பட்டது, ஒரு பள்ளிக்கூடம் கட்டப்படுவதற்காக. இன்றைக்கு
அது 50 ஆயிரமாக உயர்ந்தும் பள்ளிக் கூடம் உருவாக்கப்பட
வில்லை. தனி அதிகாரிகளால் இதை செயல்படுத்த முடிய
வில்லை. தனி அதிகாரிகளுக்கு அந்தந்தப் பகுதிகளை பற்றிய
அக்கறை நிச்சயமாக இல்லை. அவர்கள் அந்த பகுதியைச்
சேர்ந்தவர்கள் இல்லை. அரசாங்கத்தில் வேலை பார்ப்பவர்கள்
பற்றற்ற சூழ்நிலையில் பணிபுரிந்து வருகிறார்கள். பகுதியின்
முன்னேற்றத்திற்காக எதுவும் செய்வதில்லை.

விருத்தாசலம் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் நகராட்சி
யாக மாறி 11 வருட காலம் ஆகிறது. இது வரையில் தனி அதி
காரியின் அதிகாரத்தில் தான் இருந்து வருகிறது. அங்கு மாட்டுச்
சந்தையில் ஒரு மாட்டிற்கு நகராட்சி கட்டணமாக கொடுக்க
வேண்டியது 0 50 பைசா. ஆனால் அங்கிருப்பவர்கள் வசூலிப்
பதோ 1·50 ; சில நேரங்களில் விற்கப்பட்ட மாடுகளுக்கு 10,
15 ரூபாய் என்று வசூல் செய்கிறார்கள். தலைச்சுமை என்று
காய்கறி, கீரை விற்பவர்களிடமிருந்து 0·25 பைசா நகராட்சி



கட்டணமாக வசூலிக்கப்படவேண்டும். ஆனால் அங்கே ஒவ்வொரு
வரிடத்திலும் 1 ரூபாய் வாங்குகிறார்கள். 0175 பைசா கூடுதலாக
வசூலிக்கப்படுகிறது. இவை எல்லாம் தனி அதிகாரிகளுக்கு தெரி
யாதா, என்றால் இல்லை, அவர்களுக்குத் தெரியும். தெரிந்தே
இவைகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக இன்னும்கூடச் சொல்ல வேண்டுமானால்,
அந்த அதிகாரியைப் பொறுத்தவரைக்கும் அவருக்கு திருச்சிராப்
பள்ளி சொந்த ஊர், பெரும்பாலும் அவர் அங்கே யே தங்கிக்
கொண்டு விருத்தாச்சலத்திற்கு எப்போதாவது போவது வருவது
என்ற நிலைமை தான் இருக்கிறது. இதுபோன்ற கேவலங்கள்
எல்லாம் உருவாகின்றன. ஒரு தனி அதிகாரிக்கு இருக்கின்ற
மிகப் பெரிய அதிகாரத்தின் காரணமாக என்ன நடக்கிறது என்
பதைப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எவ்
வளவு சிரமப்பட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஒரு தனி
அதிகாரிக்கு இருக்கின்ற பெரிய அதிகாரத்தைப் பயன்படுத்திக்
கொண்டு திருப்பத்தூருக்கு அமைச்சர் அவர்கள் சென்றபோது
ஓட்டை டாக்சியிலே வந்த காரணத்தால் வேட்டிகூட கிழிக்கப்
பட்டது அதற்குப் பிறகு அவர் கோபப்பட்டார் என்று அறிந்த
வுடன், நான் வருத்தப்பட்டேன். தனி அதிகாரி உள்ளாட்சித்
துறை அமைச்சரை வரவேற்பதற்கும் அவர் செல்வதற்காக அர
சாங்கத்தின் காரை தரவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது
என்றால் தன்னிச்சையாக அவர் எப்படி செயல்படுகிறார் என்
றால் இப்படிப்பட்ட நிலைமைகளை தனி அதிகாரிகள் செய்
கிறார்கள் என்பதை பார்க்கிறபோது தான் தேர்தலை நடத்தி
இவைகளையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அமைச்சருக்கே இந்த நிலைமை என்றால் எங்களுக்கு
எப்படிப்பட்ட நிலைமை என்பதை இந்த மாமன்றத்திலே உள்ள
அத்தனை பேர்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். தனி அதிகாரிகளும் மற்ற அலுவலர்களும் அங்கே
எப்படி இயங்குகிறார்கள், என்ன நடக்கிறது என்பதையெல்லாம்
ஆராய்வதற்காக மேற்பார்வை என்ற முறையிலே இருக்கிறார்கள்,
அப்படிப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கூட சில
நேரங்களிலே மாற்றிவிடுகிற காரணத்தினாலே இதுபோன்ற
தவறுகள் தொடர்ந்து மேலும் மேலும் நடந்துகொண்டே இருக்
கின்றன. இவைகளையெல்லாம் தடுப்பதற்கு தேர்தல்களை உட
னடியாக நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் சார்ந்திருக்கின்ற பேரியகத்தின் சார்பாக நான் கேட்
டுக் கொள்கிறேன், காலவரையற்ற நீட்டிப்பை நீங்கள் விட்டு
விட்டு ஜனநாயகத்தின்மீது பற்றுக்கொண்ட நீங்கள் உடனடியாக

எப்படி மதுரை மாநகராட்சிக்குத் தேர்தலை நடத்தினீர்களோ அதைப்போன்று இவைகளுக்கும் பஞ்சாயத்துக்களிலிருந்து மாநக ராட்சிகள் வரையிலும் தேர்தல்களை நடத்தி மக்கள் தீர்ப்புக்கு தலைவணங்குங்கள் என்று கேட்டுக் கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரி வித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலை வர் அவர்களே, இன்றைக்கு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மசோதாக்களின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன் னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விரும்பு கிறேன். இங்கே இந்த மசோதாக்களின் மீது நடைபெற்ற விவா தத்திலே ஆளுங்கட்சியைச் சேர்ந்த டாக்டர் சமரசம் அவர்கள் கலந்துகொண்டு பேசியபோது எதிர்க்கட்சியினர் ஏதாவது எதிர்த் துக் கொண்டிருக்கிறார்கள், ஏதாவது குறை சொல்லிக்கொண் டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவருக்கு நான் பணி வன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுங்கட்சி தவறு செய் தால், அல்லது அதிகாரிகள் தவறு செய்தால் அதை எதிர்ப்பது எங்களுடைய வேலை, மக்களுக்கு குறைகள் இருக்குமானால் அதைச் சொல்வதற்கும், ஆளுங்கட்சித் தரப்பிலே அல்லது அர சாங்கத்தின் தரப்பிலே குறைகள் இருக்குமானால் அதை அரசி னுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்ற வேலை கடமை எங் களுக்கு இருக்கிறது. ஆகவே எங்களுடைய கடமையை நாங்கள் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சிக்கும், பஞ்சாயத்துக்களுக்கும், ஒன்றியங்களுக்கும் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற முறையிலே 359 பஞ்சாயத்து யூனியன்களுக்கு 103-க்கு மேற்பட்ட நகராட்சி கள் இவைகளுக்கு எல்லாம் தனி அதிகாரிகள் நிர்வாகம் ஏற் கெனவே இருந்துகொண்டிருக்கிறது. இனியும் அவர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற நிலைமையை ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். நாம் அவர்களுடைய பதவிக் காலத்தை இன்னும் நீட்டிக்கிறோம் என்று சொன்னால் என்ன அர்த்தம் என்றால் தனி அதிகாரிகள் மீண்டும் தப்பு செய்வதற்கு அவர்களுக்கு அனுமதியளிக்கிறோம் என்று பொருள். நாம் இனியும் அவர்களுக்கு பதவிக்காலத்தை நீட்டித்துக் தருகிறோம் என்று சொன்னால் அவர்கள் தப்புகளை யும் தவறுகளையும் செய்து தப்புத்தாளங்களாக நடக்கும் நிலையை நாம் அனுமதித்து இருக்கிறோம் என்றுதான் மறை முகமாகப் பொருள். ஆகவே கடுமையாக நான் இதை எதிர்க் கிறேன்.

தேர்தல் இருக்குமானால் அங்கே ஆளுங்கட்சித் தரப்பிலே உள்ளவர்கள் வரலாம், எதிர்க்கட்சித் தரப்பிலே உள்ளவர்கள் வரலாம். மக்கள் பிரதிநிதிகள் வரலாம். மக்களுடைய குறை



களை எடுத்துச் சொல்லி மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படி மக்கள் பிரதிநிதிகள் இல்லாத பொழுது என்ன நடக்கிறது? குறைகள் ஏற்படுகின்றபொழுது எங்கே போய்ச் சொல்லமுடியும்?

[பிற்பகல் 1-10]

மாண்புமிகு அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் வெளிப் படையாகவே சொல்கிறார்கள். அது பத்திரிகையிலே வந்திருக் கிறது, அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். கார்ப்பரேஷன் பள்ளியிலே சாராயம் காய்ச்சப்படுகிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய பிள்ளைகள் படிப்பதற்காகத் தான் பள்ளிகளுக்குப் போகிறார்களே தவிர குடிப்பதற்காகவோ, சாராயம் காய்ச்சுவதற்காகவோ, அல்ல. மெட்ராஸ் கார்ப்ப ரேஷன் பள்ளிகளிலே சாராயம் காய்ச்சப்படுகிறது என்று மது விலக்குக் கொள்கையிலே நம்பிக்கை வைத்திருக்கின்ற ஒரு சர்க் கார் சொல்கிறது என்றால் இந்த ஆட்சியிலே இருக்கின்ற இப்படிப் பட்ட நிலைமைகளை அமைச்சரவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அப்படிச் சுட்டிக் காட்டியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கி றேன். இதையெல்லாம் அங்கே சொல்வதற்கு மக்கள் பிரதி நிதிகள் இருக்க வேண்டாமா? மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் அங்கேபோய் சொல்லலாம். அப்படி இல்லாத காரணத்தால்தான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நேரடி நிர்வாகத்தில் இருப்பதால்தான் இங்கே நாங்கள் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர் கள் தூத்துக்குடியிலே நடந்த ஒரு பொதுக்கூட்டத்திலே சொன் னார்கள் என்று கருதுகிறேன். அதை அவர்கள் மறுக்க மாட் டார்கள் என்று நான் நம்புகிறேன். தூத்துக்குடி முனிசிபா லிட்டியிலேயே இருநூற்றுக்கும் மேற்பட்ட ஃபைல்கள் காணாமற் போய்விட்டன என்று அவர்கள் பேசியிருப்பதாகப் பத்திரிகைச் செய்தி வாயிலாக அறிந்தோம்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் பொதுக்கூட்டத்தில் பேசவில்லை; நகராட்சி மன்றக் கூட்டத்திலேதான் பேசினேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** அமைச்சரவர்களுக்கு நன்றி. அந்த பைல்கள் எப்படிக் காணாமல் போயின? ஒரு ஆட்சியின் கீழ் நிர்வாகத்திலே இருக்கின்ற நகராட்சியிலே இருநூற்றுக்கும் மேற்பட்ட பைல்கள் திருட்டுப் போகின்றன. விசாரித்துப் பார்த்தால் காணாமல்போன பைல்கள் திரும்ப வந்து விடுகின்றன என்று சொல்கிறார்கள். காணாமற்போன பைல்கள் எப்படி வந்தன? அதற்கு யார் பொறுப்பு? அதற்கு நடவடிக்கை உண்டா? திடீரென்று அமைச்சரவர்கள் எப்படிச் சொன்னார்கள்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, காணாமல்போன பைல்கள் திரும்ப வந்து விட்டன என்று நான் இன்னும் சொல்லவில்லையே? மாண்புமிகு உறுப்பினரவர்கள் கற்பனையாக எதையாவது நினைத்துக் கொண்டு தயவு செய்து பேசிக் கொண்டு இருக்க வேண்டாம். ஏனென்றால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது, ஆகவே நடவடிக்கையிலே இருப்பதைப்பற்றி எப்படிச் சொல்ல முடியும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாமன்றத் துணைத் தலைவரவர்களே, அமைச்சர்வர்களுக்கு ரொம்பவும் நன்றி. காணாமற் போனவை காணாமற் போனவயாக இருக்கின்றன. திரும்பக் கிடைத்துவிட்டன என்று நான் கூறிய தகவலை அவர்கள் மறுக்கிறார்கள், ரொம்ப நன்றி.

**திரு. கோவைத்தம்பி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இருநூறு பைல்கள் காணாமற்போய் விட்டதாகச் சொன்னதாகச் சொன்னார்கள். அதில் அந்த நகராட்சியைப் பொறுத்தவரையில் மஸ்டர் ரோல் வழக்கு சம்பந்தப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சவரவர்கள் அறிவிப்பார்களா?

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத் துணைத் தலைவர் அவர்களே, மஸ்டர் ரோல் வழக்கு ஏற்கெனவே சென்னை நகரத்தில் இருக்கிறது. நம்முடைய உறுப்பினரவர்கள் கேட்டார்கள் அதில் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். தூத்துக்குடியில் அப்படி இருப்பதாகத் தகவல் இல்லை.

தூத்துக்குடி நகராட்சியிலே பைல்கள் காணாமற்போய்விட்டன என்பதை அமைச்சரவர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். அது இந்த ஆட்சியின் நிர்வாகத்திற்குச் சரியான சான்றிதழ் ஆகும்.

இம்மாதிரி தப்பு நடக்கக் கூடாது என்பதற்காகத்தான், சரியான முறையில் நிர்வாகம் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் மக்கள் பிரதிநிதிகள் சென்னை மாநகராட்சி போன்ற, இடத்தில், பஞ்சாயத்து யூனியன்களில் இருக்க வேண்டும், முனிசிப்பாலிட்டிகளில் இருக்க வேண்டும், எனவே தேர்தல் வர வேண்டுமென்று சொல்கிறோம்.

அதுமட்டுமல்ல, கலைஞர் காலத்தில் அரசு ஊழியர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் என்று கொடுக்க, அந்தக் குடும்பம் நடுத்தெருவிலே நிற்கக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் காரணமாகக் கொண்டு வரப்பட்டது. அதில் அரசியல் கிடையாது. ஆனால் இன்றைக்கு உள்ள நிலைமை என்னவென்றால், மெட்ராஸ் கார்ப்பரேஷனிலே இன்



றைக்கு ''நான்-எஸ்டாப்ளிஸ்மெண்ட்'' என்று சொல்லப்படுகின்ற வகையில், நகர சுத்தித் தொழிலாளர்களாக இருப்பவர்கள் மற்றும் எலக்ட்ரிசிட்டி டிப்பார்ட்மென்டிலே வேலை செய்பவர்கள் இறந்தால் இன்றைக்கு அவர்கள் குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் கிடைக்காது. ஆனால் கலைஞர் காலத்தில்-திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அவ்வாறு கொடுக்கப்பட்டது; திடீரென்று அது நிறுத்திப் பட்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் இதைப்பற்றி கேட்கலாம். இது தப்பு இல்லையா என்று சுட்டிக் காட்டலாம். ஆகவே, இன்றைக்கு இந்தத் தேர்தல்கள் அவசியம் வர வேண்டும்; தனி அதிகாரிகளை நம்பிக்கொண்டிருப்பது சரியாக இருக்காது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தத் தேர்தல் நடைபெறுவதற்குக் காலதாமதம் ஆகிறது என்பது மட்டுமல்ல; இந்தத் தேர்தல் நடைபெறாமல் இருக்க என்ன காரணம் என்று பார்த்தால் அமைச்சர்கள் தரப்பிலேயும் சரி; ஆளுங்கட்சித் தரப்பிலேயும் சரி; தேர்தலைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதை நிச்சயமாக நான் வரவேற்கிறேன். நீங்கள் பயப்பட மாட்டீர்கள். பயப்பட வேண்டாம். தேர்தலை நடத்த வேண்டுமென்று எண்ணம் இருக்கிறது. அதை வரவேற்கிறேன்.

ஆனால் நீங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு சொல்லியிருக்கின்ற காரணங்கள் ஒவ்வொன்றையும் பரிசீலித்துப் பார்த்தால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் ஒவ்வொரு காரணத்திற்காகக் கொண்டு வந்திருக்கிறீர்கள். முன்பு மஸ்டர் ரோல் வழக்கு என்று சொன்னார்கள்; பிறகு புறநகர்ப் பகுதிகளை இணைக்க வேண்டுமென்ற காரணத்தைச் சொன்னார்கள். கடைசியாக போன செஷனிலே என்ன நடந்தது என்றால், 18 வயது இளைஞர்கள்—இளமை ஊஞ்சலாடுகின்ற இளைஞர்கள் அரசியலிலே கவனம் செலுத்தி மக்கள் பிரதிநிதிகளாகப் பங்கு பெற்று செயலாற்றுவதற்காக வாக்காளர் உரிமை அவர்களுக்குத் தரப்பட வேண்டும், அதற்காக வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது.

இப்பொழுது, கடைசியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகையினாலேதான் இந்தத் தேர்தல் தள்ளி வைக்கப்படுகிறது என்ற ஒரு காரணம் சொல்லப்படுகிறது. அதற்கிடையிலே நான் ஒன்றைக் கேட்கிறேன், இதே சட்டமன்றக் கூட்டத் தொடரிலே தேர்தல் நடத்துவதற்கு முன்பாகவே சில சட்டங்கள் எல்லாம் வரும் என்று சொன்னீர்கள். தாய்க் குலத்தை இந்தச் சர்க்கார் பரிவோடு கவனிக்கிறது. எங்களுடைய புரட்சித் தலைவர் பரிவோடு கவனிக்கிறார். அந்தத் தாய்க்குலத்திற்குத் தனியாக இடம் ஒதுக்கீடுகள் இருக்கும், அதிக வாய்ப்புகள் தரப்படும். அந்த விதத்திலே மசோதாக்கள்

வரும் என்று சொன்னீர்களே, அதை சென்சஸ் எடுத்து முடிந்து
தேர்தல் நடைபெற்று முடிந்ததற்குப் பிறகு, நீங்கள் கொண்டு
வரப் போகிறீர்களா ? ரெயில் போனதற்குப் பிறகு மதுரைக்கு
டிக்கெட் எடுத்துப் போய் என்னதான் பயன் ? ஆகையினாலே,
நான் கேட்கிறேன், ரெயிலிலே போக வேண்டுமென்று முடிவு
எடுத்ததற்குப் பிறகு, அதிலே தான் போக வேண்டும். எந்த
அர்த்தத்திலே அதைச் சொல்கிறேன் என்றால், காரியம் முடிந்
ததற்குப் பிறகு, அதைக் கொண்டு வருவதிலே பயன் இடையாது.
தேர்தல் நடப்பதற்கு முன்பாகவே, அந்த மசோதா இந்த அவை
யிலே கொண்டு வரப்பட வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு இருக்கும்
என்று இங்கே சொல்லப்பட்டது. மசோதாக்கள் எல்லாம்
இங்கே கொண்டு வரப்படவில்லை.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள்
கொடுத்திருக்கக் கூடிய குறிப்பிலே சொல்கிறார், மிகத் தெளி
வாகச் சொல்கிறார். The Commissioner, Corporation of Madras
has been entrusted with the Census work அதாவது, மாநகராட்சி
யிலே இருக்கக்கூடிய கமிஷனர் இந்த சென்சஸ் வேலையைப்
பார்க்கும் பொறுப்பு அவரிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.
The Government of India have requested that the State Govern-
ment should not entrust any other important work to the Commis-
sioner வேறு வேலைகளை அவரிடத்திலே கொடுக்காதீர்கள். இந்த
மக்கள் தொகை கணக்கெடுப்பு வேலையை மட்டும் அவரிடத்
திலே கொடுங்கள் என்ற பொருள்பட அதிலே இருக்கிறது. அதை
நான் குறை சொல்லவில்லை. மக்கள் தொகை கணக்கெடுப்பு
வேலையை கமிஷனர் செய்து கொண்டிருக்கிறார். The electorol
rolls of the Corporation of Madras may be
prepared only after the Census work is over. ஆகையினாலே,
இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்ததற்குப் பிறகுதான்
தேர்தல் நடைபெறும் என்ற ஒரு காரணம் சொல்லப்படுகிறது.

நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன், இன்றைக்கு இந்த
சென்சஸ் ஓர்க்குக்கு, கார்ப்பரேஷனிலே இருக்கக்கூடிய அல்லது
மற்ற அரசு நிறுவனங்களிலே வேலை பார்க்கக் கூடியவர்களை
அனுப்புகின்ற காரணத்தினாலே பல பள்ளிக் கூடங்களிலே வாத்தி
யார்களே இல்லாமல், பாடங்களையெல்லாம் பிள்ளைகள் படிக்கா
மல், இன்றைக்கு பாதகமாக சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த
சென்சஸ் வேலையைக் கவனித்துக் கொண்டிருக்கிற காரணத்
தினாலே, இன்றைக்குப் பல்வேறு முக்கியமான வேலைகள் கெட்
டுப் போயிருக்கின்றன. மாணவர்களைப் பாதிக்கக் கூடிய ஒரு
நிலைமை, பள்ளிகளை பாதிக்கக்கூடிய ஒரு நிலைமை இருந்து
கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் பல்வேறு அலுவல்கள்



எல்லாம் அதனாலே கெட்டுப் போயிருக்கின்றன. படித்த இளை
ஞர்கள், வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் எவ்வளவோ பேர்கள்
இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பட்டதாரிகளை எல்லாம்
உண்மையாக இந்தச் சர்க்கார் பயன்படுத்திக் கொள்ளலாம்.
அதற்குப் பதிலாக, இவர்களை அனுமதிப்பது கூடாது என்று
சொல்லவில்லை. நடைமுறையிலே, இருக்கக்கூடிய நிர்வாகத்
திலே, எவ்வளவு சிரமங்கள், சிக்கல்கள் ஏற்படுகின்றன என்
பதைச் சுட்டிக் காட்டுவதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து, இன்னொன்று, மிக முக்கியமான விஷயம். இந்த
சென்சஸ் விவ்காரம் இருக்கிறதே, மக்கள் தொகை கணக்கெடுப்பு
அது யாராக இருந்தாலும், சட்டத்தின் முன்னாலே எல்லோரும்
சமம்தான். சரியான தகவலைத்தான் எல்லோரும் கொடுக்க
வேண்டும். என்னுடைய மதம் என்னவென்று கேட்டால்,
எனக்கு மதத்திலே நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ,
என்னுடைய மதம் என்ன என்பதை நான் சொல்லவேண்டும்.
அமைச்சர் அவர்களைப் பார்த்து உங்கள் மதம் என்னவென்று
கேட்டால், மத நம்பிக்கை இல்லையென்று கூடச் சொல்லலாம்.
அதுவேறு விவகாரம். ஆனால், மதம் என்ன என்பது சொல்லப்
பட்டாக வேண்டும். சென்சஸ் தானே முக்கியம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மசோதாவிலே
பேசுங்கள். மசோதாவிலே சென்சஸ் வராது.

திரு. அ. ரகுமான்கான் : மசோதாவில் இருப்பதை நான்
திரும்ப வாசிக்கிறேன். only if the Census work is over
இந்த சென்சஸ் ஓர்க் முடிந்ததற்குப் பிறகுதான் தேர்தல் வாக்
காளர் பட்டியல் தயாரிக்கப்பட இருக்கிறது. அதற்குப் பிறகு
தான் தேர்தல் நடைபெறவிருக்கிறது...........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு இரகுமான்கான் அவர்கள்
சட்டப் பிரிவுகளைப் பற்றி நன்றாகச் சொல்லிக் கொண்டு
வந்தார்கள். தொடர்ந்து அப்படியே சொல்லுமாறு கேட்டுக்
கொள்ளுகின்றோம். சென்சஸ் ஓர்க் என்பது மத்திய அரசு
செய்வது. அதற்கு நாம் உதவி செய்கிறோம். அந்தச் சட்டப்
பிரிவுகளுடைய நோக்கத்தில் வருகின்ற கணக்கே தவிர, சட்டப்
பிரிவில் வருவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
நன்றாக அறிவார்கள். வேறு பிரச்னைகளுக்குப் போனால்,
இருக்கிற நேரம் போதாது.

[1981 மார்ச் 6

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தவறாக என்னைப் புரிந்து கொண்டார்கள். நான் யாரையும்
குறை சொல்லவில்லை. மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த
பிறகு வாக்காளர் பட்டியல் தயார் செய்ததற்குப் பிறகு, தேர்தல்
நடைபெற வேண்டியதாக இருக்கிறது. அதிலே தவறான
தகவலை யாரும் கொடுக்கக் கூடாது. * *

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே * * *
என்று உறுப்பினர் சொல்கிறார். அதற்கும் இந்த பில்லுக்கும்
சம்பந்தம் கிடையாது. எனவே, அந்த வார்த்தைகளை நீங்கள்
நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * *
பற்றி இப்பொழுது சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கு
கிறேன்.

[பிற்பகல் 1-20].

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்ல விரும்புவது எல்லாம்
இன்றைக்கு மாநகராட்சியிலே மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு
ஆலோசனைக் கமிட்டி இருந்தால் மக்களுடைய குறைகளை
எல்லாம் தீர்க்க முடியும்.

சென்னை மாநகரத்தில் இன்றைக்கு எம்.எல்.ஏ.க்கள் இருக்
கிறார்கள். ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று வித்தியாசம்
பார்க்காமல் மக்கள் கமிட்டியைப் போட ஏற்பாடு செய்ய வேண்
டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான விஷயத்தை இன்றைக்கு நம்முடைய
அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய
வனாக இருக்கிறேன். அமைச்சருக்கு அது தெரியாமலும் இருக்
கும். மாநகராட்சியிலே தனி அதிகாரிகள் இருக்கிறார்கள்.
அவர்கள் நிர்வாகத்திலே பல தப்புகளைச் செய்கிறார்கள். அவை
கள் நடைபெறக் கூடாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு திருநெல்வேலி
யிலே அங்கே இருக்கிற பஸ் ஸ்டாண்டுக்கு அருகில் பல கட்டடங்
கள் இருக்கின்றன. அவைகள் சர்க்காருக்குச் சொந்தமானவை,
நகராட்சிக்குச் சொந்தமானவை. ஆனால் அந்தக் கட்டடங்கள்
கடந்த 10 ஆண்டு காலமாக ஏலம் விடப்படாமல் தனிப்பட்ட
முறையிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதில் தவறு இருக்
குமோ என்று அஞ்சுகிறேன். இதற்குச் சரியான விளக்கத்தை
அமைச்சர் அவர்கள் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப் பெற்றது.



1981 மார்ச் 6] (திரு. அ. ரகுமான்கான்]

அடுத்து இங்கே இருக்கக்கூடிய சென்னை மாநகராட்சியில்
உள்ள சுகாதாரத் துறையில், இங்கே உள்ள மலேரியா பிரிவில்
பணிபுரியக் கூடிய டெம்பரரி லேபரர்ஸ், தற்காலிகத் தொழி
லாளிகள் ஒரு நாளைக்கு 7 ரூபாய், 8 ரூபாய் வாங்கிக்கொண்டு
கஷ்டப்படுகின்றவர்கள் இருக்கின்றார்கள். அங்கே 2 இடங்கள்
காலியாகின்ற நிலை ஏற்பட்டது. அந்த 2 இடங்களுக்கும்
யாரைப் போட்டார்கள். எம்ப்ளாய்மென்டு எக்சேஞ்சிலே
இருந்து கூப்பிடாமல் தப்பாக போடப்பட்டார்கள். அன்றைக்கு
இருந்த கமிஷனர் ஆறுமுகம் அவர்கள் அந்த உத்தரவை நீக்கி
விட்டார்கள். அது நீக்கப்பட்ட பிறகு பழையபடியே அந்த
இரண்டு பேர்களும் முறைப்படி இல்லாமல் சட்டத்திற்குப் புறம்
பாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே பல பேர்கள்
வேலைக்குக் காத்திருந்தும், அப்ளிகேஷன் போட்டு இருந்தும்
அவர்களுக்கு எல்லாம் போடாமல், தங்களுக்கு மிகவும் வேண்டிய
வர்கள் என்ற முறையில் இந்த 2 பேர்களைப் போட்டு இருக்கிறார்
கள். அவர்கள் யார் என்று கேட்டால், அமைச்சர் அவர்கள்
தமிழர் ஆராய்ச்சி செய்கின்றவர்கள், அவர்கள் இரண்டு பேர்
களும் மலையாளிகள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.
அந்த உத்தரவு என்னிடத்திலே இருக்கிறது. அதை அமைச்சரி
டம் கொடுக்கிறேன். அவர்கள் இந்தத் தவறுகள் இனி நடக்கா
மல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லி என்பேச்சை முடித்துக்கொள்
கிறேன். ஒரு முனிசிபாலிடிக்குச் சொந்தமான இடம்; அங்கே
ஒரு தியேட்டர் அதிபர், ஒரு சினிமா கொட்டகை அதிபர்
அந்த இடத்தை என்ன செய்தார் என்று சொன்னால், அந்த
இடத்தை அந்தத் தியேட்டருக்குள்ளே எடுத்துக்கொள்கிறார்.
அங்கே விளக்குகள் எரிந்துகொண்டு இருக்கின்றன. வீதியைத்
தன் பக்கத்திலே ஆக்கிரமிப்புச் செய்கிறார். அதை மீண்டும்
எனக்கு அசைன்மெண்ட் செய்யவேண்டும் என்று மனு கொடுக்கி
றார்கள். அதற்கு மக்கள் பிரதிநிதிகள் இருந்தபோது அது
கொடுக்கக்கூடாத இடம். காரணம் அந்த இடம் மக்கள்
நடமாட்டத்திலே இருக்கக்கூடிய இடம். ஆகையினாலே
அது சினிமா கொட்டகைக்குள்ளே போகக் கூடாது. அசைன்
மென்ட் செய்யக்கூடாது என்று மறுப்பு தெரிவிக்கிறார்கள்.

ஆனால் திடீரென்று நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்த
அசைன்மென்ட் ஆர்டர் போட்டிருக்கிறாரா என்று எனக்குத்
தெரியாது. எனக்குக் கிடைத்த தகவல், போடப்பட்டிருக்
கிறது. பைல் நம்பர் கூட எனக்கு சொல்லப்பட்டிருக்கிறது.
அதைப் பார்த்தால் நன்றாகத் தெரியும். இன்றைக்கு அந்த
இடம் எப்படி இருக்கிறது என்று கேட்டால், ஆக்கிரமிக்கப்
பட்டிருக்கிறதா, அசைன்மென்ட் செய்யப்பட்டிருக்கிறதா

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் முதல் யூனிட் 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8 ஆம் நாள் அன்றும், இரண்டாம் யூனிட் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் நாள் அன்றும் இயக்கப்பெற்றது.

(ஆ) முதல் யூனிட் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை 503.370 மில்லியன் யூனிட்டு மின்சாரம் உற்பத்தி செய்துள்ளது.

(இ) மற்றும் (ஈ) : ஆம். துவக்க நிலையில் ஏற்படும் சில கோளாறுகளும் இயந்திர வடிவமைப்பில் சில தவறுதல்களும் முதல் யூனிட்டில் ஏற்பட்டன, அவை :—

(1) பர்னர் டில்ட் மெகானிசமில் (Burner tilt mechanism) உள்ள இடர்ப்பாடு.

(2) ஏர் பிரிஹீட்டரில் (Air Preheater) ஏற்பட்டுள்ள அடைப்புக்கள்.

(3) போதிய வேக்குவம் (Vaccum) இல்லாமை.

(4) டிஏரேட்டரில் (Deaerater) உள்ள குறைகள்.

(5) கிளாண்ட் கூலரில் ( Gland Cooler ) உள்ள கசிவு கள்.

இந்த இடர்ப்பாடுகள் நீக்கப்பட்டு 1980 ஆம் ஆண்டு செப் டம்பர் திங்கள் 28 ஆம் நாள் முதல் திருப்திகரமான நிலையில் இயங்கி வருகிறது..

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நம்முடைய மின் சாரப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக அரசு நடத்திக் கொண்டு வரக்கூடிய ஒரு பெரிய மின் நிலையம் தூத்துக்குடி மின் நிலையம். அந்த மின் நிலையத்திற்கு வரக்கூடிய இயந்திரங்கள் வருகின்ற போதே இப்படிப்பட்ட கோளாறுகள் ஏற்படுவதற்கு என்ன கார ணம் ? இயந்திர வடிவமைப்புக்களில் சில கோளாறுகள் என்று சொன்னால் நமக்குப் பல இலட்சக்கணக்கானரூபாய்கள் நஷ்டம் ஏற்படும் அல்லவா ? அவ்வாறு நஷ்டம் ஏற்படுவதோடு மட்டு மல்லாமல் நம்முடைய மின்சாரப்பற்றாக்குறையும் மிகவும் தீவிரப் படுமல்லவா ? ஆகவே, இப்படிப்பட்ட கோளாறான இஞ்ஜின் களை வாங்குவதை முதலிலேயே தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே இந்த இயந்திரங்கள் முழுவதும் பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்கப்படுகிறது. இந்தியாவிலேயே அத் தகைய நிறுவனம் அது ஒன்றுதான். வேறு நிறுவனங்கள் இடை யாது. பெல் நிறுவனம அரசு நிறுவனம்தான். ஆக இந்தப் பொருட்கள் எல்லாம் அங்கிருந்துதான் வாங்கப்படுகின்றன. அவர் கள் அளித்துள்ள பொருட்கள் சம்பந்தப்பட்ட குறைபாடுகள் குறித்து அந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அங்கே உள்ள பொறியாளர்களையும் அழைத்து வந்து அந்த இயந்திரங் களையெல்லாம் ஓரளவுக்குச் சரிசெய்து இப்போது அவை சரியாக இயங்கிக்கொண்டிருக்கின்றன.





திரு கு. ரமணி: தலைவர்களே, அந்த இயந்திரங்கள் எல்லாம் பெல் நிறுவனத்திடமிருந்து பெறப்படுகின்றன என்பது உண்மை. அங்கே வாங்குவது பற்றி எந்தவிதமான குறையும் நான் சொல்லவில்லை. ஆனால், அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய இயந்திரங்கள் இப்படிப்பட்ட நிலைமைக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. அதனால், நமக்கும் நஷ்டம் ஏற்படுகின் றது. போதிய மின் உற்பத்தி செய்ய முடியாததால் மின்சாரப் பற்றாக்குறை அதிகமாகிறது. அதனால், மற்ற மாநிலங்களிடம் நாம் மின்சாரம் கேட்டு வாங்க வேண்டி இருக்கின்றது. சில காலத்திற்கு முன்பு எண்ணூர் அனல் மின் நிலையத்திலே உள்ள இயந்திரங்களில் கோளாறுகள் ஏற்பட்டு அதற்காக வெளிநாடு களிலே இருந்து எக்ஸ்பர்ட்ஸை எல்லாம் அழைத்துக்கொண்டு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே, இதற்கெல்லாம் ஒரு நிரந்தரப் பரிகாரமே காண முடியாதா ? பெல் நிறுவனம் அனுப்புகின்ற இயந்திரங்களிலே ஏற்படுகின்ற கோளாறுகள் கார ணமாக நமக்கு ஏற்படுகின்ற நஷ்டத்திற்கும் அவர்களையே பொறுப்பேற்கச்சொல்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த நஷ்டத்தை அவர்களே ஏற்றுக்கொள்ளச் செய்யலாம். ஆனால், அவர்களிடமிருந்து இயந்திரங்கள் வாங்குகின்றபோது அந்த நஷ்டத்தை எல்லாம் சேர்த்து அதன் தலையிலே சுமத்தி விடுவார்கள். குறிப்பாக ''ஷாப் வெல்டிங்'' என்பதைப் பொறுத்த வரையில் அவர்கள் செய்கின்ற ''வெல்டிங்'' சரி யில்லை. அதில் க்வாலிட்டி இன்ஸ்பெக்ஷன் பண்ணவேண்டும் என்று சொல்லி அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு இனிமேல் அந்த முறையை மேற்கொள்வதாகக் கூறியிருக்கிறார்கள். கண்ட் ரோல் வால்வைப் பொறுத்தவரை ரஷ்யன் டிசைன் வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதில் ரஷ்யா அனுபவ ரீதியாக சில மாற்றங்களை மறுபடியும் கொண்டுவந்திருக்கிறது அந்த ட்ராயிங்கை இவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், பழைய ட்ராயிங்படி வால்வுகளைக் கொடுத்துவிட்டார் கள். இந்த ரஷ்யன் டிஸைனை அதில் அவர்கள் போடவில்லை. இனிமேல், நாங்கள் அப்படிச் செய்கிறோம் என்று சொன்னார்கள். அதைச் செய்து நமக்குக் கொஞ்சம் கூடுதலாக அந்தப் பொருட் களைத் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சில வெல்டிங்

என்றும் தெரியவில்லை. ஏற்கெனவே மக்கள் பிரதிநிதிகள் மறுத்ததை நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர் யார் என்று கேட்டால், அந்த தியேட்டர் அதிபர் ஒருவர் இருக்கிறார். அந்த சம்பவம் எங்கே நடந்தது என்று கேட்டால் நான் இடத்தைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டால், ஆதாரத்தைச் சொல்லவும் தயாராக இருக்கிறேன். எது வேண்டுமானாலும் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். நான் சொல்லக்கூடிய குற்றச்சாட்டைப் பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அமைச்சர் பதில் சொல்லப்போகிறார்கள். தயவு செய்து யாரும் கவலைப்பட வேண்டாம். நான் ஒரு பயங்கரமான குற்றச்சாட்டை இங்கே சொல்ல விரும்புகிறேன். என்ன குற்றச்சாட்டு என்றால் அமைச்சருக்கு மிகவும் வேண்டியவர் ஒருவர், அவருக்கு இந்த அசைன்மெண்ட். இந்த அசைன்மெண்ட் விவகாரத்தில் அமைச்சர் என்ன முடிவு எடுத்தார் இதிலே தப்பு நடைபெற்றிருக்கிறதா என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் இங்கே விளக்க வேண்டும். மௌனமாக இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆக, நான் சொல்ல விரும்புவது, மாநகராட்சித் தேர்தல்கள் விரைவில் நடைபெற வேண்டும், நகராட்சித் தேர்தல்கள் விரைவில் வரவேண்டும், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் இவற்றில் எல்லாம் மக்கள் பிரதிநிதிகள் வந்தால்தான் நிர்வாகம் செம்மையாக நடக்கும், அங்குள்ள தனி அதிகாரிகள் பல தவறுகளைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இங்கே சென்னை போன்ற நகரங்களில் மிகவும் மோசமான சுகாதார நிலைமை இருக்கிறது. அவைகள் சீர்திருத்தப்பட வேண்டும். ஆங்காங்கு ஆலோசனைக் கமிட்டிகள் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டதாக அமைக்கவேண்டும். கடைசியாக நான் சொல்ல விரும்புவது நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் நான் பல குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறேன். இங்கே முனிசிபாலிட்டிக்குச் சொந்தமான இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கிறது. அதிலே அமைச்சருக்கு ஏதேனும் சம்மந்தம் உண்டா ? அந்த இடத்தை ஆக்கிரமிப்புச் செய்தவர், அமைச்சர் அவர்களுக்குச் சொந்தக்காரரா என்பது என்னுடைய குற்றச்சாட்டு என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

*திரு. கு. ரமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாமன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ள பல்வேறு சட்டமுன்வடிவுகளின் மீது ஏற்கெனவே எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை.





கோவை மாநகராட்சி (தனி அதிகாரிகள்) நியமனம் குறித்து சட்ட முன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

துரதிருஷ்டவசமாக 1975ஆம் ஆண்டில் இருந்து தேர்தல்கள் இல்லாமல் விசேஷ அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் அவைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஜூன் மாதம் வந்தால் 6 வருஷம் ஆகிறது. இப்படி காலம் நீடித்துக் கொண்டே போனால் மோசமான, படுமோசமான நிலை இந்த நகராட்சிப் பகுதியில் ஏற்பட்டு விடும். ஏற்கெனவே அங்கே இருக்கும் மக்களுக்கு நல்ல சுகாதார வசதிகள் இல்லை, குடிநீர் வசதிகள் இல்லை, அமைச்சர் அவர்களுக்கும் கூட அனுபவங்கள் கிடைத்துள்ளன என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் மற்றொன்றையும் கூற விரும்புகிறேன். எல்லா மாநகராட்சிகளுக்கும், உள்ளாட்சிகளுக்கும் தேர்தல் நடந்தாலும், அவற்றோடு கோவை மாநகராட்சிக்கு தேர்தல் நடத்த முடியாது. கோவை மாநகராட்சிகளுக்கான சட்டம் கொண்டு வந்து, அது நிறைவேற்றப்பட்டு, அதற்கு ஸ்பெஷல் ஆபீசர் நியமித்து, அதற்குப் பிறகுதான் அங்கே தேர்தல் நடத்த வேண்டியிருக்கிறது. இந்த நிலையைப் போக்குவதற்கான வகையில் இப்போதே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஓட்டர் லிஸ்டுகள் புதுப்பிக்கப்படுகின்றன. 18 வயது எய்தியவர்கள் ஓட்டர் லிஸ்டில் சேர்க்கப்படுகிறார்கள். பஞ்சாயத்து தேர்தல், நகராட்சித் தேர்தல் நடக்கிற காலத்தில், இந்த கோவை மாநகராட்சிக்குப் தேர்தல் நடத்த வகை செய்யும் முறையில் அந்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வாருங்கள். அதில் காலதாமதம் செய்தால், இன்னும் நிலைமை மோசமாகப் போய்விடும். அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த மாநகராட்சிக்குப் பொறுப்பான விசேஷ அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். ஒரு ஆண்டில் 3 பேர் கூட மாற்றப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் மக்களுக்குத் தேவையான பணிகளை சரிவர கவனிக்க முடியவில்லை. மக்களுக்குத் தேவையான சுகாதார திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அந்த நகரம் தற்போது குப்பைகூளங்களாக இருந்துகொண்டு, ஒரே நாற்றம் அடித்துக் கொண்டு இருக்கிறது. இதை அங்குள்ள ஜனங்கள் மட்டும் அல்ல, அங்கே வந்துபோகிற ஜனங்களும் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலை வந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் ?

(திரு. கு. ரமணி) [1981 மார்ச் 6

அங்கேயுள்ள அதிகாரிகள் திறமையானவர்கள் இல்லையா?
ஏன் இதைக் கவனிக்க முடியவில்லை என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திற்கு முன்பு இருந்த சட்டமன்றத்தில்
இருந்த இரண்டு மந்திரிகளோடு கலந்துபேசி, அந்தக் கோவை
மாநகராட்சியில் உள்ள 700-க்கும் மேற்பட்ட சுகாதாரப்
பணியாளர்கள் இடம் நிரப்பப்ப வேண்டும் என்று கேட்டோம்
இரண்டு அமைச்சர்களுடன் பேசிய பிறகு 300 பேருக்கு வேலை
கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்போது அது 200 என்று
முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அறிகிறேன். சுகாதாரப்
பணியாளர்கள் தேவையான அளவிற்கு, பூரணமான
அளவிற்கு நியமிக்கப்பட்டால்தான் அந்த நகரம் நல்ல
சுகாதாரத்தோடு இருக்க முடியும். அங்கே 7 லட்சம் மக்கள்
தற்போது இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் இந்த
700 பதவிகளை காலியாக வைத்து இருப்பது சரியல்ல. ஆகவே,
அந்தச் சுகாதாரப் பணியாளர்களை முழு அளவிற்கு நியமிக்க
அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்
அனுமதியோடு, அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

(முற்பகல் 1-30)

**திரு. கு. ரமணி :** அதேமாதிரி இன்று அங்கே நகராட்சி
ஆணையாளர் இல்லை. இருந்த ஆணையாளர் மாற்றப்பட்
டிருக்கிறார். தப்பு செய்கிற அதிகாரிகளை மாற்றுவதை
நாங்கள் மறுக்கவில்லை. தப்பு செய்கிறவர்களை தகுந்த
காலத்தில் கண்டுபிடித்து, தகுந்த தண்டனையோடு மாற்றலாம்.
ஆனால் ஒரு அதிகாரி நல்ல அதிகாரியாக இருந்தால் அவரை
குறைந்தது மூன்று ஆண்டு காலத்திற்காவது அங்கே பணிபுரிய
அனுமதிக்க வேண்டும். இல்லை என்றால் இப்படிப்பட்ட
பெரிய மாநகராட்சி நிர்வாகம் சீர்குலைந்துவிடும்; நிர்வாகம்
பண்ணமுடியாத அளவுக்கு குழப்பம் ஏற்படும்.

இன்றைக்கு கோவை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால்
கல்விப் பிரிவிலே பெருத்த சீர்கேடு நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. அமைச்சருடைய கவனத்திற்குக் கூட
அது வந்திருக்கிறது என்று கருதுகிறேன். ஆசிரியர்,
ஆசிரியைகளுக்கு பதவி உயர்வு கொடுப்பது, அல்லது வருஷாந்
திர சம்பள உயர்வு கொடுப்பது போன்ற காரியங்களுக்கு சேர
வேண்டிய பணபாக்கிக்கள் எல்லாம் 4,5 வருஷங்களாக அப்படியே
நின்றுபோய் இருக்கின்றன. காரணம் கல்விப் பிரிவில் இருக்கி
றவர்கள் கைக்கூலி வாங்குகிறார்கள்; இதைக் கேட்பார் யாரும்
இல்லை. இதைப்போல பல பிரச்சனைகள் இருக்கின்றன.



1981 மார்ச் 6] (திரு. கு. ரமணி)

அவரிடம்
ஒரு சந்தர்ப்பத்திலே ஒரு கமிஷனர் வந்தார்.
சொன்னதில் ஒரு மாதத்திற்குள் அவ்வளவு பேர்களுக்கும்
பாக்கி இல்லாமல் கொடுக்கவேண்டுமென்ற உத்தரவு போட்டார்;
அந்த காலத்திற்குள் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது.
இப்போது மறுபடியும் பழைய நிலை வந்துவிட்டது.

ஒரு ஹையர் செகண்டரி பள்ளி தலைமை ஆசிரியர் பதவி
ரெகுலரைஸ் செய்து, முழு சம்பளமும் 4, 5 வருஷங்களாக
கொடுக்காமல் இருக்கிறார்கள். சம்பளத்தில் பாக்கி இருக்கி
றது. இதற்கு எல்லாம் காரணம், அங்கே இருக்கிற அதி
காரிகளை கேள்வி கேட்க யாரும் இல்லை; மக்கள் பிரதிநிதிகள்
அங்கே இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்
இருந்தால் இதையெல்லாம் எடுத்துச் சொல்லி கேட்க முடியும்.

அதைப்போல்தான் மற்றுமுள்ள அபிவிருத்தி வேலைகள் கூட
நட கவில்லை. கேட்டால் கான்ட்ராக்டர்கள் கான்ட்ராக்ட்
எடுக்க வரவில்லை என்று சொல்கிறார்கள். எங்கள் பகுதி
யிலே சித்தாபுதூர் என்ற இடத்திலே ஒரு எலிமெண்டரி பள்ளி
இருக்கிறது. அங்கே 2,000-க்கு மேற்பட்ட பிள்ளைகள் படிக்
கிறார்கள். அங்கே 8 வகுப்பு அறைகள் கட்ட இரண்டு வரு
ஷத்திற்கு முன்னால் கல்வி அமைச்சர் வந்து அஸ்திவாரக் கல்
நாட்டினார். அது அப்படியே இருந்து, இப்போது அந்தக்
கல்லை பிடுங்கிக்கொண்டுபோய் எஞ்ஜினீயரிங் இலாகாவில்
வைத்திருக்கிறார்கள்; இரண்டு வருஷம் ஆகிவிட்டது; கட்ட
டம் கட்ட நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வளவு பெரிய
பள்ளிக்கு வகுப்பறை இல்லை. இப்போது அங்கே பெண்கள்
உயர்நிலைப்பள்ளி ஒன்று ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கும்
சரியான முறையில் இடவசதி இல்லை. இப்படிப்பட்ட காரி
யங்களை எல்லாம் செய்யவேண்டுமென்று அவர்களை, கேட்க
மக்கள் பிரதிநிதிகள் இல்லை; அதிகாரிகளை கேட்பாரில்லை
என்ற காரணத்தால் அதிகார வர்க்கம் எதையும் சரியாக செய்ய
வில்லை.

அதைப்போலத்தான் ஆலோசனைக் குழுவும் இருக்கிறது.
ஆலோசனைக் குழு இருக்கிறது என்று சொல்கிறார்கள், அவ்வளவு
தான். கோவை நகராட்சியில் ஆலோசனைக் குழு கட்டப்பட்டு
6 மாதம் ஆகிறது. கலெக்டர் வந்து விசேஷ அதிகாரியாக
பொறுப்பேற்றுக்கொண்டார். அவர் ஒருதடவை கூட்டத்
திற்கு நோட்டீஸ் கொடுத்தார். நான் சட்டமன்ற கூட்டத்
தில் கலந்துகொண்டிருக்கும்போது அங்கே குழு நடக்க
ஏற்பாடு நடந்தது. அதில் எப்படி கலந்துகொள்ள முடியும்?
அப்படி இருந்தும் பிறகு நடப்பதாக இருந்த அந்த குழு நடக்க
வில்லை. பின்னால் அவர் போய்விட்டார். வேறு ஒருவர்
வந்திருக்கிறார். அந்தக் குழுவில் ஆலோசனை சொல்லுங்கள்
என்று சொல்கிறார்கள். ஆனால் ஆலோசனை சொல்கிறவர்கள்

(திரு. கு. ரமணி) [1981 மார்ச் 6

பொம்மை மாதிரிதான் இருக்க வேண்டியிருக்கிறது.
சொல்லுகிற ஆலோசனைக்கு என்ன செய்கிறார்கள் என்பதை
தெரிந்துகொள்ள முடியாது. அங்கே அதிகாரிகள் மட்டத்திலே
ஒரு கவுன்சில் இருக்கிறது. அவர்கள் ஒரு முடிவு செய்கிறார்கள்.
அந்த கவுன்சில்தான் அதிகாரம் படைத்ததாக இருக்கிறது.
நாம் சொல்கிற ஆலோசனைப்படி ஒன்றும் நடப்பதில்லை.

இப்போது சுடுகாட்டுப் பாதை சம்பந்தமாக மாண்புமிகு
உறுப்பினர் குமரி அனந்தன் உண்ணாவிரதம் இருக்கிறார் என்
றால் அதற்கும் இந்த அதிகார வர்க்கம்தான் காரணம்.
இங்கே மட்டும் இப்படி அல்ல; பல்வேறு இடங்களிலே இப்படி
நடக்கிறது. கோவை மாநகராட்சியில் காந்திபுரத்தில் ஒரு
சுடுகாடு இருக்கிறது. அங்கே தண்ணீர் வந்து சுடுகாட்டை
அரித்துப்போய்விட்டது. மனித உடல் எலும்பை எல்லாம்
அரித்துக் கொண்டு போகிறது ஒரு பக்கம். இன்னொரு
பக்கத்தில் முனிசிபாலிட்டி குப்பையைக் கொட்டுவதற்கு இடம்
இல்லை என்று சொல்லி, 100 வண்டிக்கு மேற்பட்ட குப்பை
களை அங்கே தினமும் கொண்டுபோய் கொட்டிவிடுகிறார்கள்.
மழை பெய்தபோது அது அழுகி, இப்போது ஒருவித ஜலஸ்
தொல்லை அதிகமாகிவிட்டது, பல்வேறு வியாதி ஆரம்ப
மாவதற்கு வேறு எங்கும் போகவேண்டாம்.
ஜெனரேடிங் ப்ளேசாக இருக்கிறது. அதுதான்

அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது.
நான் பல தடவை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். இதைப்பற்றி
அங்கேயா குப்பையைக் கொட்டுவது என்று கேட்டால் அங்கே
இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் ரொம்பவும் நயமாக
குப்பை கொட்டுவதற்கு வேறு இடம் இல்லை என்று சொல்
கிறார்கள். அப்படியானால் சுடுகாட்டிலேதான் குப்பை
கொட்டுவதா? நடைபாதையைத்தான் சுகாதாரக் கேடாக
ஆக்குவதா? ஆகவே இதற்கெல்லாம் தேவையான
ஊழியர்களை நியமிக்காமல் இருப்பது, ஆசிரியர்களுக்குக்
கொடுக்கவேண்டிய பாக்கிப் பணத்தைக் கொடுக்
காமல் இருப்பது, இவைகளையெல்லாம் செய்யாமல் இருப்பது
காரியங்கள் நடக்காமல் இருப்பது, செய்ய வேண்டியவை செய்யப்
படாமல் இருப்பது இப்படியே போய்க்கொண்டிருந்தால்
நிலைமை என்னவாகும். இதையெல்லாம் நான் சொல்லுவது
இந்த அரசைக் குறை சொல்லவேண்டும் என்பதற்காக அல்ல,
இந்த மாதிரிப் பிரச்சினைகளிலே மாண்புமிகு அமைச்சரவர்கள்
தலையிட்டால் கூட இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படுமா?
என்று நினைக்கின்ற அளவுக்கு அவ்வளவு பயங்கரமாக இருக்
கின்றது. ஆகவே இதற்கெல்லாம் காரணம் தேர்ந்தெடுக்கப்
பட்ட அமைப்புக்கள் இல்லை என்பதுதான். சில குறிப்பிட்ட
நகராட்சிகளுக்கு ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்று
முனிசிபாலிட்டி இன்ஸ்பெக்டர் போன்றவைகளுக்கு உத்தர



1981 மார்ச் 6] (திரு. கு. ரமணி)

விட்டால் கூட அதன்படி அவர்கள் நடப்பதில்லை. ஆகவே
மக்கள் பணத்தையும் கொடுத்து மிகக் கடுமையான நிர்ப்பந்
தத்திற்கும் ஆளாக வேண்டிய சூழ்நிலை இன்றைக்கு இருக்
கின்றது. ஆகவே இதனை மாண்புமிகு அமைச்சரவர்கள்
உணர்ந்து மற்ற மாநகராட்சித் தேர்தலை நடத்துகின்ற
போது கோவை மாநகராட்சித் தேர்தலையும் நடத்தவேண்டும்
என்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு அமர்கிறேன்.

*திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு சட்டப் பேரவைத்
துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய தனி அதிகாரி
களின் பதவி நீடிப்பு சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில்
சில விளக்கங்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்
ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சிகளில்
இன்றைக்கு இருக்கின்ற தனி அதிகாரிகளின் நிர்வாகம் மிகவும்
மோசமாகப் போய்க்கொண்டிருக்கின்ற காரணத்தால் பல்வேறு
கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்
துக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலே நம்முடைய மாபெரும்
தலைவர் மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் ஊராட்சி
ஒன்றியச் சட்டங்களைக் கொண்டு வந்த பிறகு தமிழ்நாடு
இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. ஆனால்
அந்தப் பெருமை இன்றைய தினம் அழிந்து தனி அதிகாரிகள்
போடப்பட்டதற்கு பிறகு ஊழலுக்கு இடமளிப்பதாக மாறி
விட்டது.

இன்றைய தினம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள்
இல்லாத காரணத்தால் சுகாதார வசதியாக இருந்தாலும்,
விளக்கு வசதியாக இருந்தாலும், குடி தண்ணீர் பிரச்சினையாக
இருந்தாலும், வேறு எந்தவிதமான பிரச்சினையாக இருந்
தாலும் எதுவுமே மக்களுக்கு சரியான அளவிலே கிடைக்கின்ற
நிலைமை இல்லை. மேலும் தன்னிறைவுத் திட்டத்தை நிறை
வேற்றுவதற்கு உடனடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கள்
தேவை.

பல ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே ஆசிரியர்கள் இல்லாத
நிலையில் படிப்பு பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆசிரியர்கள்
நியமிக்கின்ற அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருப்
பதாலும் அவர் சரியான காலத்தில் ஆசிரியர்களை நியமிக்காத
தாலும் இன்றைய தினம் படிப்பு பாதிக்கப்பட்டிருக்கின்றது.
படிப்பின் தரம் குறைந்து கொண்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல. ஊழலுக்கும் இடமளிக்கிறது. மதுரை
யிலே உலகத் தமிழ் மாநாடு நடந்ததற்குப் பிறகு பேரறிஞர்கள்
பலர் தஞ்சைக்கு வந்திருந்தனர். அப்போது அவர்களுக்கு
சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டு அவர்களுக்கு விருந்தும்
கொடுக்கப்பட்டது. அவ்வாறு அன்றைய தினம் தஞ்சை

நகராட்சியின் மூலம் நடத்தப்பட்ட உணவு விருந்தில் கிட்டத்
தட்ட 20 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கின்றது.
ஆனால் அது குறித்து அரசு அனுமதிக்கின்றதா என்று கேட்டால்
அரசு அனுமதிக்கவில்லை, அரசின் ஜி.ஓ. இல்லை. ஆகவே
அரசின் அனுமதி இன்றி தனி அதிகாரிகளே தங்களது இஷ்டத்
திற்கு அவ்வாறு செய்திருக்கின்ற நிலை இன்றைய தினம் ஏற்
பட்டிருக்கின்றது.

அடுத்து கள்ளக்குறிச்சி பேரூராட்சியில் மோட்டார் மாற்றத்
தின் காரணமாக குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றது.

[பிற்பகல் 1-40]

அதேபோல தென்னாற்காடு மாவட்டம் திருவலங்கம் என்ற
கிராமத்தில் 1957ஆம் ஆண்டு ஓ.எச்.டி. கேட்டு ஏறத்தாழ
13,000 ரூபாய்க்கு பைப் லைன்களை வாங்கிப் போட்டப்
பிறகும், அந்த திட்டம் இன்னும் நிறைவேறாமல் இருக்கின்றது
என்பதையும் கூறிக் கொண்டு, நம்முடைய கிராம மக்களைக்
காப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட,
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இருந்தால்தான் எல்
லாத் திட்டமும் சரிவர நடைபெறும் என்பதையும் வலியுறுத்தி,
இந்த அதிகாரிகள் பதவி நீட்டிப்பை ஆட்சேபிக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இப்போது தனி அதிகாரிகள் என்றால் D.D.O. தான். தனி
அதிகாரியாக இருக்கிறார். நான் கடந்த 11 ஆண்டுகளாக
ஊராட்சி மன்ற பெரும் தலைவராக இருந்திருக்கிறேன். அப்
போது எல்லாம் ஆர்.டி.ஓ. தான் நிர்வாகத்தை கவனிப்பார்.
நான் நன்றாக க னித்திருக்கிறேன். ஆர்.டி.ஓ. வினரின்
வேலைத்திறன் நன்றாக இருக்கும். ஆனால் அது D.D.O.
இடத்தில் மாற்றப்பட்டதற்குப் பிறகு, அன்றைய தினம்
இருந்த—அப்போது நடைபெற்ற வேலைக்கும், தற்போது
நடைபெறுகிற வேலைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கையில் குறை
வாகத்தான் இருக்கிறது. ஆகவே அந்த தனி அதிகாரிகளுடைய
நிர்வாகத்தைக்கூட டி. டி. ஓ. விற்கு கொடுக்காமல் ஆர்.டி.ஓ.
இடத்திலே போகவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
அப்போதுதான் மேலும் ஊழல்கள் நடைபெறுவதை தவிர்க்க
முடியும் என்பதைக் கூறிக்கொண்டு, இன்றைய சூழ்நிலையில்
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தான் தேவை என்பதைக்
கூறிக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப்பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே ஜனநாயகத்தினுடைய ஊற்றுக்
கண்களாக விளங்குகின்ற ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்
நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள், தேர்தல்





இல்லாமல், மக்களுடைய பிரதிநிதிகளால் ஆளப்படாமலேயே
நீண்ட காலமாக இருந்து வருவதை தவிர்த்து, தேர்தல் வேண்டும்
என்று நாட்டு மக்களும் எல்லா அரசியல் கட்சிகளும் கேட்டுக்
கொண்டிருக்கிற இந்த நேரத்தில் தேர்தல் இப்பொழுது இடை
யாது, இன்னும் 6 மாதத்திற்குப் பிறகு தான் தேர்தல் வர
தமிழகத்தில் வாய்ப்பு ஏற்படும். அது வரையில் தனி அலுவலர்
கள் என்கிற ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்
களே, அவர்களே தொடர்ந்து ஆளட்டும் என்ற வகையில், இப்
படிப்பட்ட ஒரு சட்ட திருத்தத்தை நம்முடைய உள்ளாட்சித்
துறை அமைச்சர் அவர்கள் அரசின் சார்பாக கொண்டு வந்தி
ருக்கிறார்கள். அதைப் பற்றி, நான் சார்ந்திருக்கிற திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சுருக்கமாக சில கருத்துக்களைத்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் 1957-லே
முதன் முறையாக தேர்நதெடுக்கப்பட்டு பணியாற்ற வந்த
நேரத்தில், 58 ஆம் ஆண்டு, கிராம பஞ்சாயத்துக்களுக்கு அதிக
மான உரிமைகளை, அதிகமான அதிகாரங்களை தரவேண்டும்
என்று ஒரு திருத்தம் வந்த நேரத்தில், அறிஞர் அண்ணா
அவர்கள் அதை வரவேற்று பேசியதோடு மட்டும் அல்லாமல்,
இருக்கிற அதிகாரங்கள் ஊராட்சிகளுக்கு போதாது. மேலும்
அதிகமான அதிகாரங்கள் தேவை. கிராமப்புறங்களில் இருக்கிற
விவசாயிகளை—பொதுமக்களை நம்பி அதிகமான அதிகாரங்
களை—அவர்களுக்கு தரவேண்டும் என்று இந்த மாமன்றத்தில்
முழங்கியிருக்கிறார்கள்.

இருக்கிற அதிகாரங்கள் ஊராட்சிகளுக்கு போதாது மேலும்
கூடுதலான அதிகாரங்கள் அவைகளுக்கு தேவை என்று சொன்ன
அண்ணாவின் பெயரால் ஆளுகின்ற அரசு, இந்த அமைப்புகளுக்கு
தேர்தலே வராத அளவுக்கு அதை தடை செய்கிற வகையில்
தனி அதிகாரிகளை நியமித்துக் கொண்டு, மேலும் மேலும்
அவர்களுக்கு கால நீட்டிப்பைக் கொடுத்துக் கொண்டே போகிற
ஒரு கொடுமை ஜனநாயகத்திற்கு நல்லது அல்ல என்பதை, எதற்
கெடுத்தாலும் அண்ணாவின் பெயரை சொல்லிக் கொண்டிருக்கிற
நண்பர்கள், மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு தெரி
விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம ராஜ்யம் வேண்டும் என்று தேச பிதா மகாத்மா
காந்தி அவர்கள் கனவு கண்டார்கள். அந்தக் கனவை நனவாக
ஆக்குகிற வகையில், ஏற்கனவே இருந்த அரசாங்கம் கிராமங்
களுக்கு நல்ல உரிமைகளை வழங்கி, முறைப்படுத்தப்பட்ட கிராம
ஆட்சியை உருவாக்கியது. பேரறிஞர் அண்ணா அவர்கள், அவர்
களுக்கு அதிக அதிகாரங்களைத் தாருங்கள் என்று சொன்னார்.
ஆனால் இன்றைக்கு முற்றிலும் மாறாக வரும் வரும் என்று

[திரு. ஜே. எஸ். இராசு] [1981 மார்ச் 6

எதிர்பார்க்கப்படுகிற ஸ்தல ஸ்தாபன தேர்தல்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போவது ஜனநாயகதிற்கு நல்லது அல்ல என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் மட்டும் அல்ல. தமிழகத்திலே உள்ள கிராமப்புறங்களிலே வாழ்கிற குடி மக்களும் கூட தேர்தல் நிச்சயமாக வரும் என்று எதிர்ப்பார்த்தார்கள். இடைக் காலத்தில், தமிழ்நாட்டில் இப்பொழுது எப்படி வறட்சி நிலவுகிறதோ அதைப் போல வறட்சி நிலவியதோ என்னவோ, அந்த நேரத்திலே ஒரு புலவர் இடைக்காலப் புலவர்

" செய்வேன் என சொல்லி செய்யாது உலோபரைப்போல்
பெய்யின் என காட்டும் பேர் முகிலே " என்று பாடினார்.

மேகங்கள் வருகின்றன. மேகங்கள் மீது காற்று படுகிறது. மழை பெய்யும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் மழை பெய்யவில்லை. இதைப் பார்த்த கவிஞன் பாடுகிறான் " செய்கிறேன் செய்கிறேன், நிதி தருகிறேன், நன்கொடை தருகிறேன் என்று சொல்லிவிட்டு செய்யாமல் ஒதுங்கிப் போகிற லோபியைப் போல் வருகிறேன் வருகிறேன் என்று மேகங்கள் கறுத்தாலும் மழைபெய்யாமலே போய்விடுகிறது என்று உவமைகூறினான். அதே போல் தமிழக மக்கள் தமிழக அரசை ஒரு பாரி வள்ளலாக தேர்தலைக் கொண்டுவரும் ஒரு அரசாங்கம் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் நீங்கள் உள்ளபடியே லோபியைப் போல் தேர்தல்கள் வராது என்றளவிற்கு எச்சரிக்கை தருவதுபோல் இன்றைக்கு தனி அதிகாரிகளை நியமித்து அவர்களுக்கு இன்னும் ஆறு மாத காலம் நீட்டிப்புத் தர வேண்டும் என சட்டம் கொண்டுவந்திருக்கிறீர்கள். எங்களுக்கு அது கூட முக்கியம் இல்லை. தேர்தல்கள் வரும் என்று மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து காலம் முதல் மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு காலம்வரை அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உங்கள் பழைய பேச்சுக்களை, நாளேடுகளை, காலையில் வந்த நாளேடுகளாலும், மாலையில் வந்த பேப்பர்கள் ஆனாலும் ஒழுங்குபடுத்தி தேதி வாரியாக ஆண்டு வாரியாக பாருங்கள். எவ்வளவு முறை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். தேர்தல் வரும் வரும் என்று, நிச்சயம் வரும் என்றீர்கள். ஆறு மாதங்களுக்குள் தேர்தல் வரும், நாங்கள் பயப்படவில்லை, நாங்கள் சந்தித்தே தீருவோம் என்று நீங்கள் மேடைகளில் முழங்கவில்லையா ? அதைப் பார்த்து தேர்தல்கள் வரும் என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கவில்லையா ? வோட்டு போடுவதற்கு தமிழக மக்கள் சளைத்தார்களா ? எவ்வளவோ தேர்தல்கள் வந்திருக்கின்றன, மக்கள் வோட்டு போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதில் கஷ்டமில்லை. தேர்தல்கள் வர வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் தேர்தல்களைத்தான் நீங்கள் கொண்டுவரவில்லை. ஏன் தேர்தலைக் கொண்டுவர அஞ்சுகிறீர்கள்



1981 மார்ச் 6] [திரு. ஜே. எஸ். இராசு]

இராம ராஜ்யம் வரவேண்டும் என்று காந்தியார் கனவு கண்டார்கள். அந்த கிராம ராஜ்யம் நல்ல முறையில் அமைய வேண்டுமென்று அண்ணா அவர்கள் ஊக்கப்படுத்தினார். ஆனால் நீங்களோ இராம ராஜ்யம் என்பதை தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதன் மூலம் அதிகாரிகள் ராஜ்யமாக ஆக்குவதற்கு வழிவகை செய்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை நான் மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். எங்கள் தரப்பில் மட்டுமல்ல, ஆளும் கட்சி தரப்பில் உள்ள நண்பர்களும் இந்தத் தேர்தல்கள் இல்லாததால் ஏற்படுகிற இடைஞ்சல்களை நிச்சயமாக அறிவார்கள் (மணி அடிக்கப்பட்டது).

சில மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதைப் போல் சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் செய்ய வேண்டிய தோடு கூட ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், செய்ய வேண்டிய வேலைகளையும் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விளக்குகள் எரியவில்லை என்றால் மோட்டார் பம்ப் செட்களில் பழுது ஏற்பட்டு அதை புதுப்பிக்க வேண்டுமென்றால், குழாய் விளக்குகள் பழுதடைந்து புதிதாகப் பொருத்த வேண்டுமென்றால், பம்ப் செட்கள் பல கிராமங்களில் தண்ணீருக்கு அடியில் மூழ்கி இன்றைக்கு அப்படியே இருக்கின்றன, அவற்றை வெளியே எடுத்துப் போடாத நிலையில் அவைப் பற்றிக் கவனிக்க தனி அதிகாரி ஆட்சியில் வாய்ப்பில்லாத நிலை இருக்கிறது. இப்போது கேணிகளில் தண்ணீர் இல்லை. தண்ணீர் இருக்கிற காலத்தில் கூட ஒரு உருளை பழுதுபட்டால் அதைப் போட அல்லது பழுது பார்க்க மக்கள் யாரிடம் செல்வார்கள் என்று பிரச்னை இருக்கிறது. முன்பு ஊராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் இருந்த போது தலைவர்கள் தங்கள் கைப்பணத்தைப் போட்டு உருளை அல்லது விட்டத்தை போட்டுவிட்டு பழுதுபார்த்துவிட்டு பின்னர் ஒன்றிய நிதியிலிருந்து வாங்கிக் கொள்வார்கள் அந்த பணத்தை. இது நடைமுறை. அந்த நடைமுறை பாழாக்கப்பட்டு மக்கள் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஜெனரல் பண்ட் என்று ஒவ்வொரு ஒன்றியத்திலும் இலட்சக் கணக்கான ரூபாய் பலஆண்டுகளாக சேமித்து வைகப்பட்டிருந்தது. கடந்த ஒன்றிரண்டு ஆண்டுகளில் எல்லா யூனியன்களிலும் சேர்த்து வைத்திருந்த பல கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களது அனுமதி, அல்லது ஆலோசனை அல்லது மேற்பார்வை இல்லாமல் அதிகாரிகள் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒன்றியங்களில் செலவு செய்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் மண் போட்டு—ரோடுகளில் எல்லாம் மண் போட்டு—மண்வெட்டு வேலைகள்தான் நடந்து

இருக்கிறதே தவிர நல்ல முறையில் ரோடுகள் போடப்பட வில்லை. ஆகவே விரைவில் தேர்தல்கள் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 18வயது முடிந்தவர்களுக்கு ஓட்டுரிமை வழங்கவிரும்பினோம். அதனால் தேர்தல் தள்ளிப்போடப்படுகிறது என்று கூறியதைப்போல் இனி மேல் 15 வயது பூர்த்தியானவர் களுக்கும் ஓட்டுரிமை வழங்க உத்தேசித்துள்ளோம். எனவே மேலும் ஓராண்டு தேர்தல் தள்ளி வைக்கப்படும் என்று கூறிவிடா தீர்கள். விரைவில் தேர்தலை நடத்துங்கள் எனக் கேட்டு உரையை முடிக்கிறேன்.

[பிற்பகல் 1.50]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத்தலைவர் அவர் களே, இன்று நடைபெறுகின்ற விவாதத்திலே ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், கோவை நகராட்சி, சென்னை மாநகராட்சி ஆகிய இத்துணை மன்றங்களுக்கும் 6 சட்ட முன்வடிவுகள் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ஏறத்தாழ 15 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே, தனி அலு வலர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுடைய பதவிக் காலம் இன் னும் நீடிக்கப்பட்ட வேண்டுமென்ற நிலையை மாமன்றத்திலே எடுத்துச் சொல்லி அதன் மூலம் விவாதம் நடைபெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் மானியக்கோரிக்கையிலே தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியவர்கள், இங்கே தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிப்பதிலேயே தங்க ளுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த கருத்துக்கள் மானிய கோரிக்கை வருகின்ற நேரத்தில் எனக்கு உதவியாக இருக்கும், அந்த வகையிலே இவைகளை எடுத்துச் சொன்னமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கட மைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இந்த 6 சட்ட முன்வடிவுகளிலே தனி அதிகாரி களின் பதவிக்காலம் நீட்டிக்க வேண்டுமென்று வருகின்ற நேரத் திலே, என்ன காரணத்திற்காக நீட்டிக்கப்படுகின்றது என்பதை யும், ' ஆப்ஜக்ட்ஸ் ஆண்டு ரீசன்ஸ் ' என்ற அந்தப் பகுதியில் கோடிட்டு, குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றது. குறிப்பாக 1970-லே நடந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி உறுப்பினர்கள் 5 ஆண்டு பதவிக் காலம், 1979 செப்டம்பர் மாதம் வரை பல்வேறு காரணங் களால் நீட்டிக்கப்பட்டு, 12-9-1979 அன்று ஊராட்சி நிர் வாகங்களிலே இருந்த சீர்கேடுகளை சரி செய்ய தேர்தலை நீட் டித்து, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர் களுடைய பதவிக் காலம் 11-3-1981 தேதியோடு முடிவடை கிறது. 1975 தோடு முடிவடைந்த ஊராட்சி ஒன்றியங்கள், மற் றும் உறுப்பினர்கள் பதவிகள் 1977-ஆம் ஆண்டு ஜூன் மாதம்



31-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி யின் கீழ் 1—7—1977-ல் தனி அதிகாரிகள் நியமனம் செய்யப் பட்டார்கள். அவர்கள் பதவிக்காலம் 31—3—1981 தேதியோடு முடிவடைய இருக்கிறது. ஊராட்சி சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட 15 ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் மீது குற்றஞ் சாட்டப்பட்டு, கலைக்கப்பட்டிருக்கின்றன. இந்த 15 ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் 359 ஊராட்சி ஒன்றியங்களோடு தேர்தல் நடத்தும் வகையில், குழுக்களை அமைக்கும் நாளை 1—4—1981 என்று தெளிவாக ஊராட்சி சட்டம் திருத்தப்பட்டுள்ளது. ஊராட்சி வாக்காளர் பட்டியலை 1978-ஆம் ஆண்டு புதிதாக நடக்க இருக்கும் தேர்தலுக்கு வாக்காளர் வயதை 18 என்று குறைத்து, அந்த வகையில் 1—1—1981 அன்று 18 வயதை அடைந்தவர் களின் பெயர்களை எல்லாம் சேர்த்து, திருத்தியமைக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் தயாராக எடுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி தேர்தலைக் கட்சி சார்பற்ற முறையில் நடத்த வேண்டுமென்று தீர்மானித்துள்ளோம். ஆனால், தற்போது மக்கள் கணக் கெடுக்கும் பணி நடந்து கொண்டிருக்கிறது. மைய அரசு மக்கள் கணக்கெடுப்பு முடியும் வரையிலும் தேர்தலை தள்ளி வைக்கும்படி ஏற்கனவே கேட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, மக்கட் தொகை கணக்கெடுப்புக்குப் பின்னர் ஊராட்சி தேர்தல் நடத்தும் தேதி பற்றி முடிவெடுக்க அனைத்துக் கட்சிகள் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்ட தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமை பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த மாத இறுதியில் முடிவடைய இருக்கின்ற ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் தனி அதிகாரி களின் பதவிக் காலத்தை மேலும் 6 மாத காலம் நீட்டிக்க வேண்டுமென்ற இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக பல்வேறு கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படி நீட்டிக்கப்பட்ட கால அளவை 3 மாதங்களாக குறைக்க வகை செய்யும் திருத் தத்தை அரசு முடிவு செய்துள்ளது. ஆகவே, இந்த முடிவைச் செயல்படுத்த இப்போது இது சட்டமன்றத்தின் முன் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இங்கே ஒரு சின்ன திருத்தத்தைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். கடந்த 1980-லே சட்ட முன்வடிவு எண். 42-லே யூனியன் தலைவர்களுக்கு செக் டிராயிங் பவர் உண்டு என்று கூறியிருக்கிறேன். அதற்கு மாறாக ஒரு திருத் தத்தை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராம ஊராட்சித் தலைவர்கள், நிர்வாக அதிகாரி அல்லாத பேரூராட் சித் தலைவர்கள் ஆகிய இவர்களுக்கும் செக் டிராயிங் பவர் உண்டு என்ற திருத்தத்தை மட்டும் இங்கே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.........

**திரு. அ. ரகுமான்கான் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு திருத்தம் கொண்டு வரு கிறார். இந்தத் திருத்தத்தை அவர் சொல்லி, அந்தத் திருத்தம் ஏற்படுமானால், நம்முடைய சட்டப் பேரவை விதியை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. உமாநாத் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அது பற்றி உறுப்பினர் களுக்கெல்லாம் சுற்றறிக்கை அனுப்பப்பட வேண்டும். விதி 107 என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் இந்தத் திருத் தம் கொண்டுவரப்பட வேண்டும். இப்போது திருத்தம் கொடுப் பது விதிகளுக்குப் புறம்பானது என்பது என்னுடைய அபிப் பிராயம்.

I want ruling Sir, because it is a point of order.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியிலே..........

**திரு. அ. ரகுமான்கான் :** மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இதில் உங்களுடைய ரூலிங் வேண்டும். அதற்குப் பின்னால்தான் அமைச்சர் அவர்கள் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் திருத்தம் கொடுக்கவேண்டுமென்றால் அதைத் தனியாகக் கொண்டு வரலாம்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல்கள் 1968-லும் நகராட்சி தேர்தல்கள் 69-லும் நடைபெற்றன. கோயம்புத்தூர் நகராட்சியை மாநகராட்சியாக்க அரசு தீர் மானித்ததால் கடந்த ஆண்டு ஒரு தனி அதிகாரி நியமிக்கப் பட்டுள்ளார். மற்ற நகராட்சிகளுக்கு 76-ல் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். சென்னை மாநகராட்சியில் 74-ஆம் ஆண்டு தனி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். கோவை உட்பட அனைத்து நகராட்சிகளின் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் 31—3—1981-லும் ; சென்னை மாநகராட்சியின் தனி அதி காரியின் பதவிக் காலம் 30—5—1981-ல் முடிவடைய இருக் கின்றன. கோவை நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்த இக் கூட்டத் தொடரில் ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறது. கோயம்புத்தூர் மாநகராட்சியான பிறகு புதிய வாக்காளர்கள் பட்டியல் தயாரித்து, அதன் பின் தேர்தல்கள் நடத்துவதற்கு ஆறு மாத காலத்திற்கு மேல் ஆகும். தேர்தல்களை நடத்து





வதற்கு ஆன ஒரு தனி அதிகாரி மாநகராட்சியின் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படுவார். அவர் பதவியேற்கும் வரை தற்போது உள்ள நகராட்சியின் தனி அதிகாரி தொடர்ந்து பதவி வகிக்க கோயம்புத்தூர் மாநகராட்சியின் சட்ட முன்வடிவிலே வகை செய்யப்படும். 31—3—1981 வரையிலும் முடிவடைய இருக் கிற இந்த நகராட்சிகள் தனி அதிகாரிகளின் பதவி காலத்தை மேலும் சில நாட்களுக்கு நீட்டிக்க வேண்டும். இப்போது இருக் கும் கோயம்புத்தூர் நகராட்சியின் தனி அதிகாரியின் பதவிக் காலத்தை மேலும் மூன்று மாதத்திற்கு நீட்டிக்க சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. நகராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையாளர்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டுள்ளதாலும், கணக்கெடுப்பு முடிவடையும் வரையிலும் எவ்வித மற்ற பணிகளையும் ஒப்படைக்க கூடாது என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளதாலும், மேலும் மாநகராட்சியின் வாக்காளர்கள் பட்டியலில் 18 வயது வந்தவர் களின் பெயர்களை சேர்ப்பதற்கான பணியினை 1—4—1981க்கு பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள தாலும், 1—4—1981-க்குப் பிறகு வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைத்து தேர்தலுக்கு மற்ற முன் ஏற்பாடுகளை செய்து நகராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி தேர்தல்களை நடத்த ஆறு மாத காலத்திற்கு மேல் ஆகும் ; எனவே நகராட்சி கள் மற்றும், சென்னை மாநகராட்சியின் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு நீட்டிக்கவும், தேர்தல்கள் முன்னரே நடக்குமானால் இந்தக் கால அளவை ஆறு மாத அளவாக குறைக்கவும் வகை செய்து சட்ட திருத்தம் இங்கே அரசு கொண்டு வந்திருக்கிறது. இங்கே குறிப்பாக பல்வேறு உறுப்பினர்கள் கிராமப் புறங்களில் தேர்தல்கள் நடத் தப்பட வேண்டுமென்று சொன்னார்கள்.

இந்த நேரத்தில் ஒன்றை வலியுறுத்திச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கனவே கடந்த 1980 ஜனவரி மாதத்தில் நாடாளுமன்ற தேர்தல்கள் நடந்து முடிவுகள் தெரிந்த பின்னால் கூட உடனடியாக இந்த அரசு தான் அப்போதே ஏப்ரல் மாதத் தில் தேர்தலை சந்திக்க தயார் என்ற கூக்குரலை இட்டு உடனடி யாக வெளியீடு செய்து, அந்த வெளியீட்டின் விளைவாக பல் வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆனால் யாருமே எதிர் பார்க்காத வண்ணம், ஜனநாயக விரோதமாக, சர்வாதிகாரத் தன்மையோடு இந்த அரசு கலைக்கப்பட்ட காரணத்தாலே ஏப்ரல் மாதத்திலே தேர்தல் நடைபெறவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1981 மார்ச் 6

[பிற்பகல் 2.00]

ஆகவே இந்த அரசு எதையும் எதிர்பார்த்தோ அல்லது யாருக்கும் வக்காலத்து வாங்கியோ இருக்கவேண்டிய சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது சர்வாதிகாரத் தன்மையிலே ஜனநாயகத்திற்கு விரோத மாக ஆட்சியைக் கலைத்துவிட்டார்கள் என்று கூறினார்கள். சட்டரீதியாக அரசியல் சட்டத்திற்குட்பட்டு அரசு கலைக்கப் பட்டதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா? அதை வாபஸ் வாங்கவேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, அரசியல் சாசனச் சட்டத்தில் 356—வது பிரிவின் ஒரு மாநில அரசை மைய அரசு கலைக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே காரணம் சொல்லவேண்டும். என்ன காரணத்திற்காக ஒரு ஆட்சியைக் கலைக்கிறோம் ஒரு அரசைக் கலைக்கிறோம் என்பதற்கான காரணம் காட்டியிருக்க வேண்டும். இதுவரையிலும் காட்டவில்லை. காட்டப்போவதும் இல்லை என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் ஜனநாயகத் திலே நம்பிக்கையுள்ள காரணத்தால்தான் தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்திலேகூட தேர்தலைச் சந்தித்து, மக்களைச் சந்தித்து நாங்கள் மக்களுக்காகப் பாடுபட்டு வருகிறோம், கிராமப்புறங்கள் வளரவேண்டும், ஏழ்மை நீங்கவேண்டும், அறியாமையைப் போக்கவேண்டுமென்பதற் காகத்தான் இந்த ஆட்சி பாடுபட்டு வருகிறது என்பதை மக்க ளுக்கு எடுத்துச் சொல்லி நாங்கள் ஆண்ட காலத்திலே ஏறத்தாழ 2½ ஆண்டுக் காலத்திலே செய்த நன்மைகளை அவர்கள் கூட்டிக் கழித்துப் பார்த்துத்தான் மக்கள் தீர்ப்பு அளித்து மீண்டும் இரண்டாவது முறையும் தமிழக ஆட்சிப் பொறுப்பை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே கொடுத்திருக் கிறார்கள் என்ற உண்மையை மாமன்றம் கண்டிப்பாக மறைக் கவோ மறுக்கவோ முடியாது.

அதே நேரத்தில் இன்னொன்றைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தத் தேர்தல்களை நடத்தக்கூடாது என்ற எண்ணம் எப்போதும் எங்களுக்கு இருந்தது இல்லை. எப்போது வேண்டுமானாலும் தேர்தல்களை நடத்துவதற்கு நாங்கள் தயா ராக இருக்கிறோம் என்றுதான் மாமன்றமாக இருந்தாலும் சரி வெளியேயும் மக்களிடத்திலேயும், சொல்லிக்கொண்டிருக்கிறோம். இன்னும் குறிப்பாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நேரத்திலே அதற்குப் பின்னிட்டும் தேர்தல்கள் முடிவடைந்ததற்குப் பின்னால் மைய



1981 மார்ச் 6] [திரு ப. குழந்தைவேலு]

அரசிடமிருந்து தாக்கீதுகள் வந்தன. ஒரு தாக்கீது தேர்தலைச் சீக்கிரமாக நடத்தவேண்டுமென்று விவசாயத் துறையிலிருந்து வருகிறது. அதே நேரத்திலே ஹோம் டிபார்ட்மெனடிலிருந்து இன்னொரு தாக்கீது வருகிறது. உடனடியாக தேர்தலை நிறுத்த வேண்டும், தேர்தலை நடத்தக்கூடாது என்று மைய அரசிட மிருந்து தாக்கீதுகள் வருகின்றன. இவைகளை எல்லாம் இந்த மன்றம் உணர்ந்து பார்க்கவேண்டும். ஒரு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் குறிப்பாக ஜனநாயகத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள் குடியாட்சியிலே நம்பிக்கை வைத்து உடன டியாகத் தேர்தல்களை நடத்தவேண்டுமென்று முனைப்போடு காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்ற ஒரு ஆட்சிக்கு இப்படிப் பட்ட தாக்கீதுகள் வந்த காரணத்தால்தான் உடனடியாகத் தேர்தல்களை நடத்த முடியவில்லை. தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற எண்ணமும் அதே நேரத்தில் தேர்தல்களை நடத்தி கிராமப்புறங்களுக்கு முக்கியமாக பஞ்சாயத்துக்களுக்கு அதன்மூலமாக உறுப்பினர்கள் வரவேண்டும், இன்னும் பல நன்மைகள் போய்ச் சேரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே திரு பி. எஸ். திருவேங்கடம் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் கூறியது எல்லாம் கிராம நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டது. அதே நேரத்திலே ஊராட்சி மன்றங்களைக் கலைத்துவிட்டதில் எங்களுக்குக் கருத்துவேறு பாடு இல்லை என்று சொன்னார்கள். நான் அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1980 ஆம் ஆண்டு செப் டம்பர் மாதத்திலே ஊராட்சி மன்றங்களைக் கலைத்த நேரத் திலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அவர்களைச் சார்ந்த நண்பர்களும் சொன்னார்கள், இன்று ஜனநாயகத்தை வேரறுத்து விட்டார்கள், ஜனநாயகம் தழைக்கமுடியவில்லை, அதற்கு மாறாக ஜனநாயகத்தை வேரறுத்து அதன் மூலமாக சர்வாதி காரத்தனத்தை இங்கே வேரூன்றி இருக்கிறார்கள் என்றெலலாம் அவர்களுடைய பத்திரிகைகளில் எல்லாம் கோடிட்டுக் குறிப்பிட்டு வசை மொழியால் அவர்களுக்குத் தெரிந்த இழிமொழியாலும்பழி மொழியாலும் நம்மை வசைத்து இழித்துப் பார்த்தார்கள். அப்படிப் பேசியவர்களின் பக்கத்திலே திருவேங்கடம் போன்ற நல்லவர்களும் உண்டு என்பதைப்போல் அவர்கள் அந்தக் கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையிலேயே தேர்தல் வருகிறது, தேர்தல் வருகிறது என்று அமைச்சர் பெருமக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல் எப் போது வரும், திரு திருவேங்கடம் அவர்கள் அவர்களுக்கே உரித்தான பாணியிலே பேசி ஒரு முடிவை எடுத்துவிட்டார்கள். தமிழ்நாட்டிலே இனிமேல் தேர்தல் வரப்போவதில்லை என்ற

முடிவை எடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்தால் எப்போதுமே தேர்தல்வராது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்—தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஆகவே, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற எங்களுக்கு 'ஜனநாயகத்திலே நம்பிக்கை உண்டு; குடியாட்சிலே நம்பிக்கை உண்டு. யார் யார் குடியாட்சிக்கு மாறுபட்டு, சர்வாதிகாரத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அவர்களே தேர்தலே வரப்போவதில்லை என்று நற்சாட்சிப் பத்திரத்தை வாசித்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் கூட ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே திருமதி யாசோதா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். உண்மையிலேயே மங்கையர் உலகத்திற்கே மாண்பு சேர்க்கின்ற வகையிலே நம்முடைய திருமதி யசோதா அவர்கள் இந்த மாமன்றத்திலே பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பெண்ணுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலே அவர்கள் சொல்லிய கருத்துக்கள் உண்மையிலேயே இந்த மாமன்றத்தினுடைய குறிப்பேடுகளிலே இருக்கின்றன.

நாம் ஆட்சி செய்கின்ற சில தன்மைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதைக் கோடிட்டு குறிப்பிட்டுக் காட்டி, கணவன், மனைவிக்குப் பூ வாங்கிக் கொடுப்பது பெருமை சேர்க்கக் கூடிய காரியமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன், பல கணவன்மார்கள் தங்களுடைய மனைவிமார்களுக்குப் பூ வாங்கிக் கொடுத்ததில்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, பூ வாங்கிக் கொடுக்கின்ற நல்ல கணவனைப் பாராட்டுகின்ற நல்ல மனதோடு இருக்க வேண்டுமென்பதைப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மங்கலமான பூவை ஒரு மனைவிக்கு வாங்கி கொடுக்கின்ற கணவனைப் பாராட்ட வேண்டும்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர்கள் யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள் என்று புரியவில்லை. இப்படிச் சொல்வதால் அது ஆண் குலத்திற்கே கேவலமாகப் போய்விடும்.

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கணவன் மனைவிக்குப் பூ வாங்கிக் கொடுப்பது கடமை என்னும்பொழுது அதைச் செய்யாதவர்



களை அந்த மனைவி என்ன சொல்வாள்? நான் இங்கே கணவன் என்று சொல்வது அரசாங்கத்தை, மனைவி என்று சொல்வது தமிழகத்தை என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவரவர்களே, பூ வாங்கிக் கொடுக்கட்டும். ஆனால்..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பசி நேரம் உறுப்பினரவர்கள் நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம்.

**திரு. துரைமுருகன் :** ஒரேயொரு விளக்கம் மட்டும் கேட்க விரும்புகிறேன். மனைவி பாப் வைத்துக் கொண்டிருப்பவளாக இருந்தால் என்ன செய்வார்கள்? அல்லது கிராப் வைத்துக் கொண்டிருந்தால் அப்பொழுது கணவன் என்ன செய்வார்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்பொழுது ரிப்பன் வாங்கிக் கொடுக்கலாம்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பூ வாங்கிக் கொடுத்திருக்கிறது என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக் கொண்டதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இன்னும் பல்வேறு உறுப்பினர்கள் அருமையான, அழகான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் மானியக் கோரிக்கை வருகின்ற நேரத்தில் அவர்களுக்கு நல்ல பதில் கொடுப்பேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் சில குற்றச்சாட்டுக்களைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். அருமை நண்பர் திரு. பழனிவேல் அவர்கள் தனி அதிகாரியின் மேல் குற்றச்சாட்டைச் சொல்லி, பணத்தை வாங்கிக்கொண்டார் என்று குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அப்படி யார் வாங்கியிருந்தாலும் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் அதேநேரத்தில் நம்முடைய பர்சனல் மோட்டிவின் காரணமாக, அதை மையமாக வைத்து வேண்டுமென்றே ஒருவர் மீது குற்றம் கூறுவது, களங்கம் கற்பிப்பது என்ற எண்ணம் வரக் கூடாது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த அரசு தப்புத்

[திரு. ப. குழந்தைவேலு] [1981 மார்ச் 6

தாளங்களைப் போட்டிருக்கிறது என்று அவருக்கே உரியபாணியில் அடிக்கடி தப்புத் தாளங்களைப் போட்டுப் போட்டுப் பதம் பார்த்தவர், ஆகவே.............

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே இந்த அரசு சில தவறுகளைச் செய்திருக்கிறது என்பதை அவர் இலக்கியம் கற்றவர் என்ற நம்பிக்கையோடு தப்புத் தாளங்கள் செய்திருக்கிறது என்று சொன்னேன் ஆனால், அவர் திரும்ப எனக்குச் சொல்கிறபோது, பதில் சொல்கிறபொழுது, இரகுமான்கான் தப்புத் தாளங்களைச் செய்கிறவர் என்று சொல்கிறார்கள். என்னைப் பற்றி அவர்கள் கூறியது சபைக் குறிப்பிலே இருந்தால் அதுபற்றி வெளியிலே என்னைப்பற்றித் தவறான தகவல் ஏற்படும். ஆகவே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன், சர்க்கார் மீது உள்ள குற்றச்சாட்டுக்கள் வேறு, என்னைப் பொறுத்தமட்டிலே எந்தத் தப்புத் தாளங்கள் என்பதை இந்த மாமன்றத்திலே அமைச்சரவர்கள் ஆதாரத்தோடு சொல்லக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, இந்தச் சர்க்காரின் தப்புத் தாளங்களை நான் ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறேன். அதற்கு அவர் முறையாகப் பதில் சொல்வார் என்று நான் நம்புகிறேன்.

[பிற்பகல் 2–10]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே; எங்களைப் பொறுத்த வரையில் தப்புத் தாளங்கள் போட்டு பழக்கப்பட்டவர்கள் அல்ல. அதே நேரத்தில் இங்கே நிறம் மாறாத பூக்களாகத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இதுவரையிலும் நடந்து வருகிறது என்பதை நான் பணிவன்போடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, மாநகராட்சியினுடைய பள்ளிகளில் ஒருசில இடங்களில் சாராயம் விற்கிறார்கள் என்ற உண்மையினை ஒரு கூட்டத்திலே கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நானும் அந்த விழாவிலே கலந்து கொண்டேன். அப்பொழுதே, உடனடியாக மாநகராட்சி அதிகாரிகளுக்குச் சொல்லி, ஆணையிட்டு, எங்கு அப்படிப்பட்ட நடவடிக்கைகள் இருந்தாலும், சமூக விரோதச் செயல்கள் அப்படி நடந்தாலும், உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதே நேரத்தில், என்மீதும்கூட ஒரு குற்றச்சாட்டினை இரகுமான்கான் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அவருக்குப் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.



1981 மார்ச் 6] [திரு. ப. குழந்தைவேலு]

I am a Lawyer. I am always Cautious நான் எச்சரிக்கையோடுதான் எப்பொழுதுமே இருக்கிறேன் என்பதனை நான் அவருக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுதும்கூட ஆதாரம் இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்களே தவிர, அந்த பைலில், எத்தனையாவது நம்பர் பைலில், அசைன்மென்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதனை அவர்கள் சொல்லவில்லை. வேண்டுமென்றே ஒரு போட்டோவை காட்டிவிட்டு இருக்கிறது, இருக்கிறது, என்பதனைத்தான் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நானும் கூட அவருக்குத் தெரிவித்துக் கொள்வேன், I am always Cautious நான் உண்மையிலேயே எச்சரிக்கையாக எப்பொழுதுமே இருந்துகொண்டிருக்கிறேன். எனக்கிருக்கிற நிலைமை எனக்குப் புரியும். எதிர்க்கட்சி வரிசையிலே எப்படிப்பட்ட களங்கங்களை என்மீது கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அவர்கள் கொண்டு வருவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே, நான் அவர்களுக்குகூட பணிவன்போடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வேன், உண்மையிலேயே நீங்கள் சொல்வது என்று சொன்னாலும், அங்கே நகராட்சிகளுக்கு என்ன விதிமுறைகள், என்ன அதிகாரம் இருக்கிறது என்பதனைத் தெரிந்து கொண்டுதான் விஷயங்களைப் பேசியிருக்க வேண்டும். நான் இன்னும், குறிப்பாகச் சொல்கிறேன். கடந்த 1976-லே நகராட்சிகளுடைய நிலங்களை அசைன் செய்யக் கூடாது, விற்கவோ அல்லது அதைக் குத்தகைக்கு விடவோ கூடாது என்று எமர்ஜன்சி இருந்த காலத்தில் ஏற்கெனவே ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

The ban order is in force. It has already been violated in the President's rule in between 17–2–80 and 1–6–80.

நான் இதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் ஆட்சியிலே இல்லாத நேரத்தில், 1980-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17-ஆம் நாளுக்குப் பின்னாலே, 1980-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ஆம் நாளுக்கு முன்னாலே அந்த ஆர்டருக்கு எதிரான நடவடிக்கைகள் உண்மையிலேயே எடுக்கப்பட்டிருக்கின்றன. யார் எடுத்தார்கள் என்பதனையெல்லாம் கண்டு பிடித்து இப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அசைன், செய்யக் கூடாது என்பது அல்ல; ஒரு நகராட்சிக்கு அல்லது மாநகராட்சிக்கு இடம் தேவையில்லையென்று சொன்னால், அந்த இடத்திலே எந்தவிதமான கட்டடங்களும் எழுப்ப முடியாது என்று சொன்னால், அங்கே சமூக விரோத செயல்கள் நடக்கும் என்று சொன்னால், அவைகளைத் தடுப்பதற்காகவும் கூட, ஒரு இடத்தை இன்னொருவருக்கு, அந்தப் பக்கத்திலே இருக்கின்றவருக்கு அசைன் செய்யலாம் என்கின்ற ஆணைகள் எல்லாம் இருக்கின்றன

ஆகவேதான் இங்கேயும்கூட நீங்கள் குறிப்பிடுவது யார் என்று,
எனக்குத் தெரியாது. இன்னமும் கூட இந்தமாமன்றத்திற்கு
நீங்கள் தெரிவிக்கவில்லை. ஆனால் தெரிவிக்கவில்லையென்றா
லும்கூட, உண்மைகளைச் சேகரித்து, இன்னும் உங்களுக்குக்
காலம் இருக்கிறது, வருகின்ற மானியக் கோரிக்கையிலே நீங்கள்
சொல்லலாம். இன்னும், நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய குற்றச்
சாட்டுகளுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லையென்று நான்
நினைக்கிறேன். தயவுசெய்து அந்த உண்மைகளைப் பார்க்க
வேண்டும். ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பின்னால், அதிலே,
ஏதாவது களங்கம் கற்பிக்க வேண்டுமென்றால், அல்லது நான்
அதிகார துஷ்பிரயோகம் செய்திருந்தால், அவைகளைக் கொண்டு
வர வேண்டுமென்றால், இன்னமும் கூட காலத்தை எடுத்துக்
கொண்டு அவைகளைப் பார்க்க வேண்டும். அப்படி ஏதாவது
ஆணைகள் இடப்பட்டிருக்கின்றன என்று சொன்னால்
இப்பொழுதே சொல்லலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாமன்றத்தினுடைய பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அப்படி
ஏதாவது குற்றச்சாட்டுக்கள் இருந்தால் ஆதாரங்களோடு சொல்
லுங்கள், பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று தெளி
வாகக் கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அமைச்சர் சொல்கிற
மாதிரி விளக்கம் கொடுக்க எனக்கு வாய்ப்பு கொடுத்தால்தானே
நான் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்).

துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லி இருக்கின்ற
குற்றச்சாட்டிற்கு ஆதாரத்தைச் சொல்வதற்கு முன்பாக இங்கே
நான் பைல் நம்பரைக் வைத்திருக்கிறேன். சொல்லுகிறேன்..
அதற்கு முன்பாக நான் சொல்லிய குற்றச்சாட்டை அமைச்சர்
அவர்கள் கவனத்திற்குத் திரும்பவும் கொண்டு வருகிறேன். அதா
வது முனிசிபாலிட்டிக்குச் சொந்தமான ஒரு இடம். அது மக்கள்
நடப்பதற்குப் பயன்படுத்துகிற ஒரு இடம்.....................

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர்
அவர்களே, விளக்கத்துக்குப் போக வேண்டாம். ஆணை எண்
என்ன என்று சொல்லச் சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே,
அந்தத் தியேட்டர் உரிமையாளர் அந்த இடத்தை ஆக்கிரமித்து
இருக்கிறார். அசைன்மென்ட் செய்யப்படுவதற்கு முன்பாகவே
அந்த இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது. அதற்குத்தான் நான்
போட்டோவைக் காண்பிக்கிறேன், என்று சொன்னேன்
(கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர்
கேட்ட விவரம் இருந்தால் அதைச் சொல்லிவிட்டு, சீக்கிரம்
முடித்துக்கொள்ளுங்கள். (கூச்சல், குழப்பம்).





**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே,
அந்த பைலில் இருக்கக்கூடிய உத்தரவு ஜி. நம்பர் 2379/80
பொள்ளாச்சி நாராயணா தியேட்டர், அதன் உரிமையாளர் நம்
முடைய அமைச்சர் குழந்தைவேலுவின் சொந்த மாமனார்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்
களே, இப்போதே நான் சொல்லிவிடுகிறேன் என்னுடைய சொந்த
மாமனார் நாராயணா தியேட்டர் உரிமையாளர் அல்ல. இதற்கு
மறுப்பு தெரிவிக்க முடியுமா ? என்று மாண்புமிகு உறுப்பினரை
நான் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன். உண்மையிலேயே
ஒரு களங்கத்தை என் மீது வேண்டும் என்றே கற்பிப்பதற்காக
இந்தக் குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் கொண்டு
வந்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இன்னும் ஒன்
றைக்கூட நான் சொல்லுகிறேன். ஏற்கனவே நான் குறிப்பிட்டுக்
கேட்டேன், 'எந்த ஆணையின் மீது அந்த அசைன்மெண்ட்
கொடுக்கப்பட்டிருக்கிறது என்று'. இன்னும் அதற்குத் தகுந்த
பதிலை மாண்புமிகு உறுப்பினர் சொல்லவில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** என் குற்றச்சாட்டிற்கு அமைச்சர்
அவர்கள் 'நாராயணா தியேட்டர் உரிமையாளர் என்னுடைய
மாமனார் அல்ல' என்று மறுத்து இருக்கிறார்கள். நான்
சொல்ல விரும்புவது நாராயணா தியேட்டருக்கு உள்ளேதான்
அந்த இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. 8 இலட்சம்
ரூபாய். (கூச்சல்-குழப்பம்)......

**திரு. ஆர். மணிமாறன் :** துணைத் தலைவர் அவர்களே,
''நாராயணா தியேட்டர் உரிமையாளர் மாண்புமிகு அமைச்சர்
குழந்தைவேலு அவர்களுடைய மாமனார்'' என்று இந்த அவை
யில் சாட்சியத்தோடு, ஆதாரத்தோடு மாண்புமிகு உறுப்பினர்
ரகுமான்கான் அவர்கள் எடுத்துக் கூறி இருப்பதாகச் சொன்னார்
கள்.. அதையே அவர் வலியுறுத்தி சொல்ல விரும்புகிறாரா ?
அல்லது அந்த வார்த்தைகளை திரும்பப் பெற விழைகிறாரா ?
வலியுறுத்திச் சொன்னால் அதைச் சந்திப்பதற்கு நாங்கள் தயா
ராக இருக்கிறோம்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே,
இந்த நாராயணா தியேட்டர் உரிமையாளர் அமைச்சர் குழந்தை
வேலு அவர்களின் மாமனார்தான் (குறுக்கீடு). என்று நான்
பொறுப்பேற்றுக் கொண்டுதான் பேசுகிறேன். நான் கேட்க
விரும்புவது, அமைச்சர் அவர்கள் 'நாராயணா தியேட்டர்
உரிமையாளர் என்னுடைய உறவினர் அல்ல, மாமனார் அல்ல
என்று'....

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர்
அவர்களே, வேண்டும் என்றே திசை திருப்புகிறார் அருமை
நண்பர் ரகுமான்கான் அவர்கள். நாராயணா தியேட்டர் உரிமை

யாளரை என்னுடைய மாமனார் என்று திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்ன வார்த்தைகளிலேயிருந்து நழுவ வேண்டாம் ஏனென்றால் நழுவி, நழுவிப் பழக்கப்பட்டவர்கள், தயவு செய்து நழுவுகின்ற அந்த நிலைமையை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2–20)

**திரு. அ. ரகுமான்கான் :** அந்தப் பத்திரம் பதிவு செய்யப் பட்டு இருக்கிறது. நாராயணா தியேட்டர்ஸ் உரிமையாளர் யார் என்பதை இந்தச் சபையில் நான் அறிவிக்கிறேன். அவர் அமைச்சரின் 'மாமனார்தான்' என்பதை நான் நிரூபிக்கத் தயார்.

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் நாராயணா தியேட்டர்ஸ் உரிமையாளர் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மாமனார் என்கிறார். அவருக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நாராயணா தியேட்டர்ஸ் உரிமையாளர் அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களுடைய மாமனார் இல்லை என்பதை இந்த அவையில் உள்ள இத்தனை உறுப்பினர்களின் சாட்சியத்தோடு சொல்லிக் கொள்கிறேன். திரு. ரகுமான் கான் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தயாரா? அப்படி ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவர் சொன்னதை நிரூபிக்கத் தயாராக இருக்கவேண்டும். அப்படி நிரூபிக்காவிட்டால், தம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை அவர் ராசினாமாச் செய்யத் தயாராக இருக்கிறார்களா? (குறுக்கீடு) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லாத ஒன்றை, இருக்க முடியாத ஒன்றை வேண்டுமென்றே இட்டுக்கட்டி, மாண்புமிகு, அமைச்சர் அவர்கள் மீது குற்றப் பத்திரிகை வாசிப்பது போல ஒரு போலித்தனமான நடவடிக்கைகளில் இறங்க மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் முனைந்தார் என்று சொன்னால் அதை எந்த நேரமும் சாட்சியங்களோடு நிரூபிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்தச் சவாலை அவர் ஏற்றுக் கொள்கிறாரா? அவருடைய சவாலை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**திரு. அ. ரகுமான்கான் :** சவாலை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால்......

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினை எங்கேயோ போய்க்கொண்டு இருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை 'இல்லை' என்று தெளிவாக மறுத்து இருக்கின்றார்.





அதோடு மட்டுமல்ல, வேறு பல விவரங்கள் என்றாலும் ஒரு அமைச்சருக்கு உடனடியாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் 'மாமனார்' என்று சொல்கிறபோது, மருமகனுக்குத் தெரியாமல் மாமனார் இருக்க முடியாது என்பதை இந்த மன்றம் நன்றாக அறியும். (குறுக்கீடுகள்).

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் யாரோ ஒருவரை மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்களின் மாமனார் என்று அறிமுகப்படுத்தியது தவறு. (குறுக்கீடு) உறவினர் என்று சொல்கிறபோது, நாம் எல்லோரும் உறவினர் தான். யாரை வேண்டுமானாலும் உறவினர் என்று நாம் சொல்லி விட முடியும். ஆனால், மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் திட்டவட்டமாக முதலிலே குறிப்பிட்டது—அவருடைய சொந்த மாமனார் என்பதாகும். அதை அமைச்சர் இல்லை என்று. சொல்லியிருக்கிறார். மீண்டும் 'நான் அதை நிரூபிக்கிறேன், பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன்' என்று திரு. ரகுமான்கான் சொல்வது இந்த அவையை திசை திருப்புகிற ஒரு காரியமாக எனக்குத் தெரிகிறது. மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் எந்தக் கருத்தில் சொல்கிறார் என்பது எங்களுக்கு இன்னும் தெளிவாகப் புரியவில்லை. அமைச்சர் இல்லை என்று மறுத்த பிறகு, 'மாமனார்' என்று சொன்னதையாவது திரும்பப் பெறுவதுதான் நல்ல மரபாக இருக்கும்.

**திரு. அ. ரகுமான்கான் :** நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நான் சொல்கிற கருத்துப் புரியவில்லை என்று சொன்னார்கள். அது குறித்து சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரும்பவும் பேசுவதற்கு நேரம் இல்லை. 'மாமனார்', 'இல்லை' என்பதாக இரண்டில் ஒன்று சொன்னால் போதும். இல்லையென்றால், நீங்கள் சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன் :** தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டதால், அதற்கு விளக்கம் அளிக்க திரு. ரகுமான்கான் அவர்களுக்கு, வாய்ப்புக் கொடுங்கள்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. துரைமுருகன் அவர்கள் புதிதாக விவாதத்தில் நுழைய வேண்டாம். திரு. ரகுமான்கான் 'மாமனார்' என்று சொன்னார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று மறுத்து விட்டார்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1981 மார்ச் 6

' மாமனார் ' என்று சொன்னது தவறு என்று உறுப்பினர் கருதினால், திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதை விட்டு, திரும்பவும் விளக்கமாகப் பேச முற்படுவது சரியல்ல.

திரு. அ. ரகுமான்கான் : நான் மூன்று குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறேன். ஒன்றை அமைச்சர் மறுத்திருக்கிறார்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது, மாமனாரா இல்லையா என்பதுதான் கேள்வி.

திரு. அ. ரகுமான்கான் : நான் பேசவேண்டிய கடமை இருக்கிறது. 3 குற்றச்சாட்டுக்கு ஒன்றுக்கு மட்டும் பதில் சொல்லியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) நான் பேசுவதற்குக் கொஞ்சம் நேரம் கொடுங்கள் ; 2 நிமிடமாவது கொடுங்கள்.

திரு. ஆர். மணிமாறன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்கு தாராளமாக வாய்ப்பு கொடுங்கள். 2 நிமிடங்கள் அல்ல, 5 நிமிடங்கள் வேண்டுமானாலும் கொடுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது அல்லது அமைச்சர்களே பேசுகிறபோது கூட தவறு என்று நமக்கு தெரிந்துவிட்டால் அதை ஒத்துக்கொள்வது தவறு ஆகாது. ஆனால், அது இல்லை என்று வாதிட்டுக்கொண்டிருப்பதுதான் மேலும், மேலும் பிரச்னைகளுக்கு வழி வகுக்கும். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் அமைச்சருடைய மாமனார் என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதை மாண்புமிகு இரகுமான்கான் அவர்கள் ஏற்றுக்கொள்வதுதான் உகந்ததாக இருக்கும் ; பெருந்தன்மையாக இருக்கும். தவறு நடந்துவிட்டது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றுதான் இந்த மன்றம் எதிர்ப்பார்க்கிறதே தவிர, அதை மறைப்பதற்கு இன்னும் இரண்டு குற்றச்சாட்டு, இன்னும் இரண்டு குற்றச்சாட்டு என்று சொல்வதானால் அது மரபு ஆகாது. தவறு என்று தெரிந்த பிறகும் அதை ஏற்றுக்கொள்ள மறுப்பது எந்த வகையிலும் பொருத்தமாகாது. அதனால் திரு. ரகுமான்கான் அவர்களைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொள்கிறேன். தவறு என்று தெரிந்த பிறகு நாங்கள் ஒத்துக்கொள்வதில்லையா ? தவறு என்று தெரிந்தும் அவர்கள் ஏன் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள் ?



1981 மார்ச் 6]

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய மாமனார்தான் நாராயணா தியேட்டருடைய உரிமையாளர் என்ற குற்றச்சாட்டைச் சொன்னேன். '' அப்படி இல்லை ; எனக்கே தெரியாதா ; அப்படி எதுவும் நடக்கவில்லை ; அப்படி இருந்தால் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் ; ஆதாரம் உண்டா '' என்று அமைச்சரவர்கள் கேட்டார்கள். நான் சொன்னது தவறுதானா என்பதை அந்த டாக்குமென்ட்டைப் பரிசீலனை செய்த பிறகுதான் ஒப்புக்கொள்ள முடியும் (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாமனார்-மருமகன் பார்ப்பதற்கு டாக்குமென்ட் தேவையா ? (பலத்த சிரிப்பு). எனக்கு ஒன்றும் புரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாமனார்-மருமகன் பார்ப்பதற்கு டாக்குமென்ட் வேண்டாம் ; அசைன்மென்ட் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்ப்பதற்கு டாக்குமென்ட் தேவை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது சம்பந்தமாக இப்போது நடைபெற்ற அவ்வளவு விவாதத்தையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : துணைத் தலைவரவர்களே, நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் ஒரு குற்றச் சாட்டை நியாயமான, வளமான, வழக்கமாக அவர்கள் சபைக்குக் கொடுக்கிற ஆதாரங்களோடு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அது அப்படியே இருக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : என்னுடைய குற்றச்சாட்டு சரிதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினரே தான் சொன்னது சரி என்று வலியுறுத்துவதால் நடைபெற்ற விவாதம் எல்லாம் அப்படியே இருக்கட்டும்.

திரு. அ. இரகுமான்கான் : சம்பந்தப்பட்ட டாக்குமென்ட்களை எல்லாம் கொண்டு வரட்டும். நாராயணா தியேட்டர் யாரிடம் இருக்கிறது, எப்படி வந்தது என்பதற்கான டாக்குமென்டுகளை எல்லாம் சபையில் வைத்தால் பரிசீலித்துச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ச. ராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தவறு என்று தெரிந்தும் ஏற்றுக்கொள்வதில் ஏன் தயக்கம் ?

[1981 மார்ச் 6

திரு. அ. ரகுமான்கான் : டாக்குமெண்டுகளைப் பார்த்து துவிட்டுச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாமனார் யார் என்று மருமகனுக்குத் தெரியாதா ? (குறுக்கீடுகள்) மாமனார் யார் என்று தெரியாமலா மருமகன் இருப்பார் ? (குறுக்கீடு) உண்மையைச் சொல்கின்ற சாதாரண இந்த உரிமை கூடவா அமைச்சருக்கு கிடையாது ?

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு ரகு மான்கான் அவர்கள் அமைச்சர் சொன்னதை ஏற்றுக்கொண்டு தான் சொன்னதைத் திரும்பப் பெற வேண்டும். இல்லை என் றால் வேண்டுமென்றே அவைக்குத் தவறான தகவலைத் தந்து அவை உரிமையை மீறியதாக நான் சட்டப்பேரவை விதி 248-ன் கீழ் அவர் மீது உரிமை மீறல் பிரச்சினையை இங்கே மொழிய வேண்டி வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 2–30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இறுதியாக, நான் மாண்புமிகு திரு. இரகுமான்கான் அவர்களிடம் கேட் கிறேன். " அமைச்சருடைய மாமனார் " என்று அவர்கள் சொன்னதை அமைச்சர் மறுத்த பிறகு, தாம் சொன்னது தவறு என்பதாக வாபஸ் வாங்கிக் கொள்கிறார்களா ?

திரு. அ. இரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, நான் சொல்லியது உண்மையா அல்லது உண்மைக்குப் புறம் பானதா என்பதும் அமைச்சரின் மாமனாரா இல்லையா என்பதும் இங்கே விவாதமல்ல. (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அதைத் தவறு என்று ஒத்துக்கொள்கிறார்களா ? இல்லையா ?

திரு. அ. ரகுமான்கான் : அதைத் தவறு என்று ஏற்றுக் கொள்ள முடியாது. மாண்புமிகு அமைச்சரவர்கள் உரிமைப் பிரச்சினையை கொண்டு வரலாம். அதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவர் அவர் களே, இரண்டு கருத்துக்கள் திரும்பத் திரும்பச் சொல்லப்பெறு வதால் குழப்பமான நிலைமை உண்டாகின்றது. எனவே, பேர வையின் விதிப்படி தாங்கள் இந்த அவையை நடத்திச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 6]

7. உறுப்பினர் திரு. ரகுமானகான்மீது உரிமைப் பிரச்சினை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் — துணைத் தலைவ ரவர்களே, விதி 248-ல் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக் கிறது.

" A matter of privilege must be atter after the questiors and before the list of the business for the day is entered upon.

Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business".

எனவே பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கும் போதே இப்பிரச்சினை எழுந்துள்ளது. எனவே, கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் வேண்டும் என்றே தவறான தகவலைத் தந்து, மாண்புமிகு அமைச் சரவர்கள் திரும்பத் திரும்ப அது தவறு என எடுத்துச் சொல்லியும் கூட திரு. இரகுமான்கான் தாம் சொன்னதைத் திரும்பப் பெற மாட்டேன் என்று வாதிடுவது இந்த அவை உரிமையை மீறிய செயலாகும். இப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நான் எழுப்பிய ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பன்ருட்டி திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் என் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்த உரிமைப் பிரச்சினை அனுப்பப்படுவதற்கு முன்பாக வாய்ப்புக் கொடுத்து என்னுடைய கருத்தைக் கேட்பதுதான் சபை விதி. அந்த அடிப்படையிலேதான் நம்முடைய மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்கள் என்னை அனுமதித்திருக்கிறார்கள். நான் இங்கே சொல்லியிருக்கக்கூடிய குற்றச்சாட்டுகளிலே மிக முக்கியமான குற்றச்சாட்டு ஒன்று, அசைன்மேன்ட் இல்லாமலே இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பது. இரண்டாவது.... (குறுக்கீடு-கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவை எல்லாம் ஏற்கனவே பேசியவை. ஏற்கனவே நீங்கள் உங்கள் கருத்தையும் சொல்லிவிட்டீர்கள். அதையே திரும்பவும் பேச வேண்டாம். " அமைச்சருடைய மாமனார் " என்று நீங்கள் சொன்னீர்கள் தனது மாமனார் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள்

சொல்லிவிட்டார்கள். அமைச்சர் சொன்னதை ஏற்றுக் கொண்டு நீங்கள் சொன்னதைத் திரும்பப் பெறுகிறீர்களா? இல்லையா? (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கொண்டு வந்த தீர்மானத்தை நீங்கள் வாக்கெடுப்பு நடத்தி முடித்து விட்டீர்கள். அதற்குப் பிறகு அவர் எப்படிப் பேச முடியும்? (கூச்சல்-குழப்பம்).

திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே நாங்கள் சொல்வதற்கு எங்களுக்கு சான்ஸ் தராமல் ப்ரூட்டல் மெஜாரிட்டியின் மூலம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய காரணத்தால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம். (கூச்சல்-குழப்பம்).

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)

மாண்புமிகு மின்துறை அமைச்சர், திரு. ரகுமான்கான் மீது கொண்டு வந்த உரிமை மீறல் தீர்மானத்தை அவை ஏற்று உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெறுகிறது.

## 8. ஒழுங்குப் பிரச்சினை.

### அவையில் 'சவால்கள், எதிர்ச் சவால்கள்' விடுதல்.

திரு. என். சங்கரய்யா: சார் பாயின்ட் ஆப் ஆர்டர். இதற்கு முன்னாலே, 'சவால்கள் விடுவதும், எதிர் சவால்கள் விடுவதும் ஏற்றுக் கொள்ள முடியாது' என்று நீங்களே முன்பு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் இப்பொழுது அப்படி நடைபெற்றதே, அதைப்பற்றி தங்களுடைய ரூலிங் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, சவால்கள் தேவையில்லை என்றாலும் சில நேரங்களில் தவிர்க்கக் கூட முடியாமல் வந்து விடுகிறது. அதுவுமல்லாமல் இப்போது எழுப்பப்பட்ட பிரச்சினை சவால்கள் கூட அல்ல. உண்மைக்கு மாறான தகவல்களை, தவறு என்று நன்றாகத் தெரிந்தும் கூட, தவறுகளைத் திருத்திக் கொள்ள முன் வராது பிடிவாதம் செய்கிற ஒரே காரணத்தினால் எழுந்ததே தவிர, வேறு பிரச்சினை அல்ல என்பதை மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பொதுவாக இந்தப் பேரவையில் சவால் விடுவது ஏற்றுக் கொள்ளப்படுவது இல்லை.

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினை என்னவென்றால், சவால்கள் கூடாது என்று சொன்னால் அதை நீக்க வேண்டும். இல்லாவிட்டால் இதை முன்



-தாரணமாக வைத்துக் கொண்டு, இது மாதிரியான சவால்கள் -ன்னால் அவையில் எழுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடும் என்பதைத்தான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போல, இவை சவால்கள் கூட அல்ல. உண்மைக்கு மாறாக எழுந்த விவாதத்தைப் பற்றிய பிரச்சினை. அதனால் இவை அவைக் குறிப்பில் இருக்கலாம்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நான் அதிகமாக பேச விரும்பவில்லை. ஏனென்றால் பசி வந்தால் பத்தும் பறந்து போய்விடும். இந்தச் சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிவஞானம், திரு. இராசு, திரு. ரமணி ஆகியோர் பல்வேறு கருத்துக்களை, கோவை நகராட்சியைப் பற்றியும், மற்றும் பல நகராட்சிகளைப் பற்றியும், ஊராட்சிகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு உடனடியாக தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### (ஆ) ஊராட்சிகள் (தனி அதிகாகள் நியமித்தல) திருத்தச் சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981)" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981 " நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(இ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு, 1981.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : " தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) " ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர் அவர்களே " தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) " நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு 1981.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1981) " ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1981) " நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 2–40)

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு 1981.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதி

[திரு. ப. குழந்தைவேலு] [1981 மார்ச் 6

காரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஊ) கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) சென்னை மாநகராட்சி (திருத்த)ச் சட்டமுன்வடிவு, 1981.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :



1981 மார்ச் 6] [பேரவைத் துணைத் தலைவர்]

"1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த)ச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை (7-3-1981) 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-44 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

219. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 7 ஆம் தேதியிடப்பெற்ற 32 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/1980) 21(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[1981 மார்ச் 6

220. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உணவு-கூட்டுறவுத் துணையின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் தேதியிடப்பெற்ற 648 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 119(4) விதியின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

60. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டம் முன் வடிவின் நகலும், இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981).

61. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981).

62. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1981).

63. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல் (திருத்தச் சட்ட முன் வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981).

64. 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981).

65. 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

(சனிக்கிழமை, 1981 மார்ச்சு 7) மாசி 24, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ இணரூழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணர விரித்துஉரையா தார் ”

தாம் கற்ற நூற்பொருளை பிறர் உணருமாறு எடுத்துரைக்க முடியாதவர் கொத்தாக மலர்ந்திருந்த போதிலும், மணம் கமழாத மலரைப் போன்றவர்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### அ. உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 416, 417 மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

### தாலூகாவிலுள்ள நகரம் மற்றும் பேரூராட்சிகளுக்கு பால் விநியோகம்.

* வினா எண் 336——திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது மாவட்ட தலைநகர்களில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பால் மக்களுக்கு கிடைக்கும்படியாக உள்ளது போல் தாலூக்காவிலுள்ள நகரம்/பேரூராட்சிகளுக்கும் பால் விநியோகம் செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) அப்படியானால் எந்த ஆண்டிலிருந்து வழக்கத்திற்கு கொண்டு வரக்கூடும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) பால் பெருக்குத் திட்டம் இரண்டாவது கட்டத்தின்கீழ் மாநிலத்தில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள நகரங்களில் பால் விநியோகத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) தற்பொழுது அமுலில் இருந்து வரும் பால் பெருக்
குத் திட்டம் முதல் கட்டம் 1981 ஆம் ஆண்டு மார்ச்சு 31-ல்
முடிவடைகிறது. பின் பால் பெருக்குத் திட்டம் இரண்டாம்
கட்டம் துவக்கப்பட உள்ளது. அது போது இத் திட்டம் விரிவு
படுத்தப்பட உள்ளது.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் தலைவர் அவர்களே,
மாவட்டத் தலைநகர்களில் மக்களுக்குப் பால் கிடைப்பதற்கும்
அதே போல் நகரங்களில் பால் கிடைப்பதற்கும் வசதி செய்வது
போல், மற்ற தாலுக்காக்களிலும் செய்ய வேண்டுமென்று மாண்பு
மிகு உறுப்பினர் கேட்கிறார். ஆனால், இன்றைய தினம் வறட்சி
இருக்கின்ற நேரத்தில் பால் உற்பத்தியாளர்கள் மிகவும் கஷ்டப்
படுகின்ற காரணத்தினால், மாட்டுத் தீவனங்கள், வைக்கோல்,
மற்றும் புண்ணாக்கு வகையறாக்கள் எல்லாம் விலை
அதிகமாக விற்கின்ற காரணத்தினால், பாலை வாங்கும்
பர்சேசிங் பிரைசை இந்த நேரத்தில் உயர்த்துவதற்கு அரசு முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலை
வர் அவர்களே, இந்தக் கேள்வி தாலுக்காக்களிலும், நகரப் பேரு
ராட்சிகளிலும் பால் விநியோகம் செய்யப்படுமா, இல்லையா
என்பதைப் பற்றி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்
கின்ற தகவலுக்குத் தனியர்கக் கேள்வி கேட்டால், விடை அளிக்
கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தப் பால் விநியோகத்திற்காக எல்லா மாவட்டங்களிலும் பால்
ஒன்றியங்கள் அமைப்பதாக இருந்தது. இப்போது பல மாவட்
டங்களிலே இந்தப் பால் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டாலும்,
சில மாவட்டங்களிலே இன்னும் அமைக்கப்படாமல் இருக்கின்
றது. அப்படி அமைக்கப்படாத இடங்களில் இந்தப் பால்
ஒன்றியங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக
எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலை
வர் அவர்களே, இரண்டாவது பால் விரிவுத் திட்டத்தின் அடிப்
படையில் இந்த ஒன்றியங்கள் அமைக்கப்படுகின்றன. மாண்பு
மிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை மேற்கொண்டு தக்க நட
வடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர்
களே, இரண்டாவது கட்டத்தில் நகராட்சிகளிலும், பேரூராட்சி
களிலும் பால் விநியோகம் விரிவு செய்யப்படும் என்று அமைச்சர்



அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப் பால் விநியோகம்
செய்யும்போது, விலை அதிகமாக இருப்பதைக் கருதி, மானிய
விலையில் பால் விநியோகம் செய்ய அரசு முன்வருமா ? அதே
நேரத்தில், ஏழை எளிய மக்கள் வாழக்கூடிய கிராமப்பகுதிகளிலும்
இப்படிப்பட்ட சகாய விலையில் கொடுக்க அரசு முன்வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலை
வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வு
கள் பரிசீலிக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்
களே, இரண்டாவது கட்டம் வரும்போது ஒன்றியங்களிலே இப்
படி பால் விநியோகம் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் தெரிவித்தார்கள். கிராமப்புறங்களில் அரசு திட்
டத்தின் அடிப்படையில், வீட்டுக்கு ஒரு மாடு என்றிருக்கிறது.
கூட்டுறவு முறையில் அரசாங்கம் பால் விநியோகம் செய்யும்
போது, எருமைப்பால், பசும்பால் என்றில்லாமல் கலப்படமாகக்
கிடைக்கும். இப்போது கிராமங்களில் வீட்டுக்கு ஒரு மாடு
இருக்கின்ற காரணத்தினால், இந்தப் பேரூராட்சிப் பகுதிகளிலும்,
ஒன்றியங்களிலும் இத்திட்டதனை நடைமுறைப்படுத்துவதை அரசு
கொஞ்சம் ஒத்திப்போடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்
களே, தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்
களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** பேரவைத் தலைவர் அவர்
களே, பால்வள நிறுவனம் கிராமப் பகுதிகளிலே பாலைக் குறைந்த
விலையில் வாங்கி, அதை விற்கிற போது 30 சதவீதம் இலாபம்
வைத்து விற்கிறார்கள். உற்பத்தியாளர்களுக்கு அதிகப் பணம்
கிடைக்கிற வகையில் நடவடிக்கை ஏதும் அரசு எடுக்குமா என்
பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்
களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிவு
டன் கவனிக்கப்படும்.

**திரு. ஏ. எம். சேதுராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே,
கிராமப்புறங்களிலிருந்து பாலை அதிகமாகப் பெற்று நகரங்
களில் விநியோகம் செய்கிறார்கள். பேரூராட்சி, நகராட்சி
களிலும் இந்த முறை கையாளப்படுமா ? லிட்டர் ஒன்றுக்கு
ரூ. 4.25 என பால் விலையை உயர்த்தியுள்ளதால், அரசும்
வாங்கும் விலையை உயர்த்துமா என்பதை அறிய விரும்புகி
றேன்.

[1981 மார்ச் 7

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசலிக் கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, நகராட்சி களில் கிரெடிட் சொசைட்டி மூலமாகப் பால் விநியோகம் செய் வதற்கு அரசைக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் மூலமாகப் பாலை கொடுத்து, தரமாக நல்ல பால் கிடைக்க வழிவகை செய் வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கவனத்தில் கொள் ளப்படும்.

**வீரபாண்டி, பனைமரத்துப்பட்டி வட்டாரத்தில் வாசனை திரவியம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை**

*வினா எண் 337—செல்வி வி. விசயலட்சுமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வீரபாண்டி, பனைமரத்துப்பட்டி வட்டாரங்களில் நிறைய மல்லிகைப்பூ, ரோஜாப்பூ பயிர் செய் யப்பட்டு வருகிற நிலையில், அப் பகுதியில் அரசு ஒரு வாசனை திரவியம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இம்மாதிரித் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

செல்வி வி. விசயலட்சுமி : பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகும் பூக்கள் சுமார் தினசரி 15,000 கிலோ அளவிற்கு பெங்களூர் போன்ற நகரங்களுக்கு அனுப்பப்படுவதால், உற்பத்தி யாளர்களுக்கு இலாபம் கிடைப்பதில்லை. உற்பத்தியாளர்களுக்கு இலாபம் கிடைக்கிற வகையிலே, அங்கு வேலை வாய்ப்பு அதிகமாக ஏற்படுகிற வகையிலே, இந்தத் தொழிற்சாலையை துவங்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 மார்ச் 7]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வீரபாண்டி, பனைமரத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் இன்றைக்கு பூக்கள் அதிக மாகப் பயிர் செய்யப்படுவதால், வாசனை திரவியம் தயார் செய் யும் தொழிற்சாலை ஒன்றை அங்கு துவங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதற்கு பத்து இலட்ச ரூபாய்க்கு மேல் மூலதனம் தேவைப்படுகிறது. இதற்காக இயந்திரங்கள் இறக்கு மதி செய்ய வேண்டிய நிலைமை இருப்பதால், உடனடியாக ஆரம்பிப்பதற்கு அரசு தரப்பில் உத்தேசம் இல்லை. தனியார் கள் யாராவது முன்வந்தால் தேவையான உதவிகளை அரசு செய்யும்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை தற்போது ஆரம்பிப்பதற்கு இல்லை என்று அமைச் சர் அவர்கள் சொன்னார்கள். இப்பகுதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதியாகவும் இருக்கிறது. அந்த வகையிலாவது அரசு நிச்சயமாக இந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டும். பயிரிடப்படும் பூக்களை வெளி மாநிலங் களிலிருந்து வந்து வியாபாரிகள் குறைந்த விலையில் எடுத்துச் செல்கிறார்கள், என்ற நிலைமை இருந்து வருகிறது. விவசாயிகள் பயன் பெறுகிற அளவில் பூக்களை அரசே கொள்முதல் செய்து விவசாயிகள் நியாயமான விலை பெற வகை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, இந்தப் பகுதியில் இந்தத் தொழிற்சாலை வரவேண்டு மென்று அரசுக்கு அக்கறை இருக்கிறது. உடனடியாக அரசு தரப்பில் இதில் ஈடுபட முடியாது. தனியார் யாராவது வந்தால் எல்லா செதிகளையும் அரசு செய்யும்.

[முற்பகல் 9–10]

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலத்திலிருந்து வருகின்றவர்கள் இங்கே விளைகின்ற மல்லிகை, ரோஜா போன்ற பூக்களை எல்லாம் விலைக்கு வாங்கி தங்கள் மாநிலத்திற்குக் கொண்டு சென்று அவர்களே திரவியங் களை உற்பத்தி செய்து இதே மாநிலத்திற்குக் கொண்டுவந்து அவைகளை நல்ல விலைக்கு விற்கிறார்கள். அவர்கள் இங்கே வந்து குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்து கொண்டுபோய் வாசனைத் திரவியமாக மாற்றி நம்முடைய மாநிலத்திலேயும் அதிக விலைக்கு விற்று நல்ல மார்க்கெட்டை அவர்களுக்கு ஏற் படுத்திப் பயன்பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை அரசு கருத்தில் கொண்டு அரசின் சார்பிலேயே இதுபோன்ற ஒரு தொழிற்சாலையைத் தொடங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேர்கள் தெரிவித்திருக்கிறார்கள். என்றாலும் திரு. திருப்பூர் மணிமாறன் அவர்கள் சொல்கின்ற உணர்வுகளை உணர்வு பூர்வமாக்க அரசு முயற்சி செய்யும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மல்லிகை, ரோஜா எப்படி அதிகமாக உற்பத்தியாகிறதோ அதேபோல் தஞ்சை மாவட்டத்திலே வேதாரண்யம் பகுதியிலே அதிகமான பூக்கள் உற்பத்தியாகின்றன. தனியார்கள் அவற்றைக் குறைவான விலைக்கு வாங்கி அதிகமாக லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, அரசு சார்பிலே உடனடியாக வாக்குறுதி அளிக்காவிட்டாலும் தனியார்கள் என்பதைவிட அரசு எதிர்காலத்திலாவது பரிசீலனை செய்து அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே வீரபாண்டிப்பகுதியிலே பனைமரத்துப்பட்டியிலே இம்மாதிரி வாசனைத் திரவியம் செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தத திட்டமில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பூக்கள் அதிகமாக உற்பத்தியாகும் சீசன் காலங்களிலே மலிவான விலைக்கு உற்பத்தியாளர்கள் கொண்டுபோய் கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. மதுரை மாவட்டத்திலே நிலக்கோட்டை, கொடைரோடு தாலுக்காவிலும், திண்டுக்கல் தாலுகாவிலும் நிறையப் பூக்கள் உற்பத்தியாகின்றன. அங்கே வாசனைத் திரவியங்கள் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதாக சென்ற தடவை சொன்னார்கள். இந்தத் தடவை அதை பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த யோசனைகளை அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யலாம்.

கஸ்தம்பாடி பஞ்சாயத்துப் பகுதியில் போடப்பட்ட துளைக் கிணறுகள்.

*வினா எண். 376—திரு. இல. பலராமன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் தாலுக்கா கஸ்தம்பாடி பஞ்சாயத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சுமார் 600 ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் அரசு துளைக் கிணறுகள் போட்டதின் நோக்கம் யாது ?

(ஆ) இந் நிலத்தை பயன்படுத்தும்வகையில் கால் நடைப் பண்ணை வைக்கும் உத்தேசம் ஏதும் உண்டா?





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) கஸ்தம்பாடி கிராமத்தில் உள்ள இந்தப் புறம்போக்கு நிலத்தில் புல் வளர்க்க உள்ள சாத்தியக் கூறுகளை ஆராயும் பொருட்டு பால்வள நிறுவனத்தினால் இங்கு துளைக் கிணறுகள் போட்டு நீர் வளம் ஆராயப்பட்டது. நீர் வளமும் மண் வளமும் இருந்தாலும் புல் வளர்ப்புத் திட்டம் கால்நடை பராமரிப்புத் துறையினால் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் பால்வள நிறுவனம் இத்தகு திட்டத்தை பால் கூட்டுறவுச் சங்கங்கள்/யூனியன் மூலம் செய்யலாமேயன்றி தனியானதொரு அமைப்பின் மூலம் இதனை செயல்படுத்த வேண்டியதில்லை என்று அரசு கருதியதினால் இத்திட்டம் பால்வள நிறுவனத்தினால் கைவிடப்பட்டது.

(ஆ) இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்த நிலம் ஒரு புறம்போக்கு, 600 ஏக்கர் நிலம் சதுரமாக இருப்பதால் மறுபரிசீலனை செய்து பண்ணையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ? அல்லது மத்திய அரசு கோரியிருக்கிற பண்ணையை ஏற்படுத்தக்கூடிய முறையிலே 400 ஏக்கர் தேவை என்று தமிழக அரசுக்குக் கோரியிருப்பதால் அதற்கு அந்த நிலத்தைக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழக அரசு புல் வளர்ச்சித் திட்டத்தை மேற்கொள்வதாக இல்லை. ஆனால் மத்திய அரசிடமிருந்து விவரம் வந்திருப்பதாகச் சொன்னார்கள். என்னிடம் தகவல் இல்லை. அந்தத் தகவலைச் சேகரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, நான் கேட்டதெல்லாம், அரசுப் பண்ணையாகிலும் ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்றுதான் கேட்டேன். அந்தப் பகுதி பிற்பட்ட பகுதியாகவும், விவசாயிகள் நிறைந்த பகுதியாகவும் இருப்பதாலும், நெடுஞ்சாலைக்கு அருகில் இருப்பதாலும் அங்கு பண்ணை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை அரசு உருவாக்கித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இன்றைய அரசினுடைய செயற்குறிப்பின்படி இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய உணர்வு கவனத்தோடு பரிசீலிக்கப்படும்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நிலத்தை இப்பொழுது புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வடார்க்காடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள்

இணையத்திடம் ஒப்படைத்து அவர்கள் புல் வளர்த்துப் பால் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த விலையில் மாட்டுத் தீவனத்தைச் சப்ளை செய்யும் வழிமுறைகளைப் பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கெனவே பால் வளத் துறை மூலமாக இந்தத் திட்டத்தைத் தமிழக அரசு பரிந்துரை செய்தபொழுது தமிழக அரசின் கொள்கைப்படி இப்படிப் புல் வளர்ப்புத் திட்டங்களெல்லாம் கால்நடை இலாக்காவால் செயல்படுத்துகின்ற திட்டம் என்பதால் தமிழ்நாடு பால் வள நிறுவனம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது என்று அறிவுரை கூறிய காரணத்தால் கைவிடப்பட்டது. ஆகவே, இந்த முயற்சியை தமிழ்நாடு பால் வள நிறுவனம் மீண்டும் எடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

## சித்தோட்டில் பால் பவுடர் தொழிற்சாலை.

*வினா எண் 377—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், சித்தோட்டில் நிறுவ உத்தேசித்துள்ள பால் பவுடர் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) இதில் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, (அ) இந்த வருடம், 1981 ஆவது வருடம் ஏப்ரல் மாதவாக்கில் இந்தத் தொழிற்சாலை செயல்படத் துவங்கும்.

(ஆ) இந்தத் தொழிற்சாலை மூலம் சுமார் 200 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், அருகில் உள்ள சித்தோடு என்ற அந்த நகரத்திற்கு, பவானி என்ற அந்த நகரத்திற்கு அருகில் உள்ள 250 கிராமங்களில் உள்ள 30,000 விவசாயிகள் பால் உற்பத்தி மூலம் நிரந்தர வருமானமும் பெற வாய்ப்புள்ளது என்றும், மற்றும் பால் சேகரிக்கும் வாடகை லாரி உரிமையாளர்களும் பால் விற்பனை செய்யும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும் இந்தத் தொழிற்சாலை அமைப்பதன் காரணமாகப் பயன் அடைவார்கள்.



திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுப் பால் வள நிறுவனத் தொழிற்சாலை வேலையைத் தொடங்குகின்றபொழுது ஏற்கனவே கிராமக் கூட்டுறவு பால் வள நிறுவனங்களில் வேலை செய்யும் தகுதியுள்ளவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்களா? அல்லது வேறு என்ன தகுதி உள்ளவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பால் வளநிறுவனத் தொழிற்சாலை தொடங்கப்படாததால் கிராமக் கூட்டுறவு பால் வள நிறுவனம் கிராமக் கிளைகள் ஆரம்பிக்க, அதிகாரிகள் தடையாக உள்ளது அரசுக்குத் தெரியுமா? அதை நீக்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கனவே நான் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும் நேரத்தில், வருகின்ற மார்ச்சு மாதம், அதாவது இந்த மாதம் அல்லது அடுத்த மாத இறுதிக்குள்ளாக இந்தத் தொழிற்சாலை நிச்சயமாகத் திறக்கப்படும் என்று உறுதி நல்கியிருக்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 30,000 விவசாயிகள் பயனடையத்தக்க அளவிற்கு, 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தருகின்ற முறையில் இந்தப் பால் பவுடர் தொழிற்சாலை சித்தோட்டில் ஏப்ரல் மாதம் திறக்கப்பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை வரவேற்று, அதற்கு நன்றி கூறி, நாள் ஒன்றுக்கு எவ்வளவு லிட்டர் பால் அந்தத் தொழிற்சாலையின் வாயிலாக உற்பத்தி செய்யப்படும்? பால் மட்டும் உற்பத்திச் செய்யப்படுகிறதா அல்லது உப பொருளான பவுடர் தயாரிக்கின்ற தொழிற்சாலையும் அங்கே நடைபெற இருக்கிறதா என்பதைக் கேட்டு, இதற்கு மத்திய அரசாங்கம் ஏதாவது மானியம் ஒதுக்கியிருக்கிறார்களா, தந்திருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஈரோடு சித்தோடு நகரத்திலே உருவாக இருக்கிற பால்பொடி தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 1 இலட்சம்

விட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டதாக அமைய இருக்கிறது. பால் பதப்படுத்துகின்ற காரியம் மட்டுமல்லாமல், நாள் ஒன்றுக்கு 10 டன் பால்பொடி தயாரிக்கும் திறனையும் கொண்டதாக அந்தத் தொழிற்சாலை அமைய இருக்கிறது. இந்திய பால்வள நிறுவனத்தின் வாயிலாக 30 சதவீதம் மானிய மாகவும், 70 சதவீதம் கடனாகவும் நிதி ஆதாரத்தை அந்தத் தொழிற்சாலை பெற்றிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப் பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் சாலைக்குப் பால் சப்ளை பண்ணுவதன் மூலம் 30,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள்—பால் உற்பத்தி செய்வோர்கள் நலன் அடைவார்கள் என்றால், அது ஒரு பெரிய தொழிற்சாலை என்பதில் சந்தேகம் இல்லை. அதில் உற்பத்தி செய்யக்கூடிய 10 டன் பால் பவுடரும் தமிழ்நாட்டிலேயே விநியோகம் ஆகுமா? அல்லது, இங்கிருந்து மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்படுமா ? அல்லது வெளி நாடுகளுக்கும் அனுப்பப்படுமா? அதனுடைய விநி யோகத்திற்கு என்ன ஏற்பாடு ? இவ்வளவு பால் பவுடர் உற்பத்தி யாவதை எப்படி விற்கப் போகிறார்கள் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, விநியோகம் பற்றிய விவரம் தற்பொழுது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் நிச்சயமாக அதுபற்றி விவரங்கள் அளிக்கலாம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய பால் பவுடர் தொழிற்சாலையை வட ஆற்காடு மாவட்டத்திலே ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், தர்மபுரி மாவட் டம் ஆகியவை இணைந்து ஒரு மண்டலமாக இன்றையதினம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த வடஆற்காடு மாவட்டத் திலே இருக்கிற பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளும் நலன் பெறுகின்ற வகையில் எப்படி இன்றையதினம் ஈரோடு சித் தோட்டிலே ஒரு பால்பொடி தொழிற்சாலை உருவாகிறதோ, அதைப் போல், கிருஷ்ணகிரியில் அந்த வகையில் ஒரு தொழிற் சாலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலை அண்டையிலே இருக்கிற வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற கேடயமாக, நிச்சயமாக, அந்த கிருஷ்ணகிரி தொழிற்சாலை அமையும்.



திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்கிறார்கள். ஆனால், புதிதாக அரசின் திட்டத்தில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்பட இருக்கிறதா ? அவ்வாறு ஏற்படும் தொழிற்சாலை பின்தங்கிய பகுதியான தென் ஆற்காடு சின்ன சேலத்திலே—பால் விநியோகம் நடந்து கொண் டிருக்கிறது, கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்—அங்கே, அந்தத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா? அவ்வாறு ஏற்படுத் தினால் பின்தங்கிய மக்களுக்கு நல்ல வாழ்வு கிடைக்கும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அத்தொழிற்சாலை அங்கு ஏற்படுமா என்று கேளுங்கள், வாழ்வு கிடைப்பது பின்னால், வந்த பிறகு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஈரோட்டில் சித்தோட்டில் இன்றைக்கு ரூபாய் 375 இலட்சம் மூலதனத்தில் அமைந்திருக்கிற பால் பதனிடும், பால் பொடி தயாரிப்புத் தொழிற்சாலை "முதல் பால் பெருக்குத் திட்டத்தின்" அடிப்படையிலே துவக்கப்பட்டது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியைப் பற்றி சொன்ன விவரங்களை அரசு கவனத்திலே கொள்ளும் என்பதனையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள் கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு முதலீடு ஒதுக்கும்போது, இந்தத் திட்டம் கோவை மாவட்டத்தில் இருந்தது. இப்பொழுது பெரி யார் மாவட்டமாகப் பிரிந்த பிறகு கோவை மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர் நாணயச் சங்கத்தின் சார்பாக உற்பத்தி யாகும் பாலை, அந்தப் பால் பவுடர் தொழிற்சாலைக்குப் பயன் படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனைகள் கவனிக்கப்படும்.

## படவேடு ஸ்ரீ ரேணுகாம்பாள் கோவில் திருப்பணி.

*வினா எண் 418—திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் தாலுக்கா, படவேடு ஸ்ரீ ரேணுகாம்பாள் சன்னதியில் திருப்பணி செய்ய விண்ணப்பிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) இதன் மதிப்பீடு யாது ?

(இ) இந்தச் சன்னதி எந்தத் தகுதியின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது ?

(ஈ) வேறு ஆலயத்தோடு இணைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்:** (அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் ஆலயத்திற்கு திருப்பணி செய்ய 1978-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளில் திருப்பணிக் குழு அங்கீகரிக்கப்பட்டு திருப்பணி வேலைகள் செய்ய ரூபாய் 44,000 மதிப்பீட்டிற்கு 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28 ஆம் நாள் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(இ) மேற்கண்ட ஆலயம் இரண்டாம் நிலை செயல் அலுவலர் நிர்வாகத்தில் உள்ளது.

(ஈ) இல்லை.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஒரு பழமையான, புராதனமான கோயில். ஆதி சங்கரர் போன்ற பெரியவர்கள் அந்தக் கோயிலில் வணங்கியிருக்கிறார்கள் என்ற ஒரு வரலாறு இருந்தாலும், அதை மேலும் புதுப்பிப்பதற்கு இன்றைய வரையில் அங்கீகாரம் வரவில்லையென்றுதான் நான் அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூபாய் 44,000 அளவுக்கு அங்கீகரிக்கப்பட்டது என்று கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்களா ? அந்தத் திருப்பணிக் குழு யார், யாரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சில திருப்பணிகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களுக்கும் அறநிலையைத் துறைக்கும் கோரிக்கை வைக்கப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தத் திருப்பணிக் குழுவினுடைய பட்டியல் என்னிடத்திலே இல்லை. ஆனால், இந்த 44,000 மதிப்பீடு என்பது உபயக்காரர்களால் செய்யப்படுகின்ற திருப்பணி என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 5 பேர்கள் இந்த 44,000-க்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், திருப்பணி பற்றிய வேண்டுகோள் அறநிலையத் துறைக்கு வந்திருக்கிறதா என்று விசாரித்து, அதைப் பற்றிய தகவலைப் பரிசீலித்து அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



சந்தன மரங்களைப் பாதிக்கும் "ஸ்பைக்" வியாதி.

*வினா எண் 419—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "ஸ்பைக்" வியாதியினால் வனத்துறையிலுள்ள சந்தன மரங்கள் அழிந்து வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி வியாதி பரவுவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) மற்றும் (ஆ): ஆம். சந்தன மரங்கள் ஓரளவுக்குப் பாதிக்கப்படுவது உண்மை. இந்த வியாதியைப் பற்றிய தன்மைகளைக் கண்டறியவும் இதனைக் கட்டுப்படுத்தவும் பெங்களூரிலுள்ள சந்தன மர ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சி செய்து வருகிறது. இந்த ஆராய்ச்சிக்கு வேண்டிய உதவிகளை அரசு அளித்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த "ஸ்பைக்" வியாதியினால் சந்தன மரங்கள் பாதிக்கப்பட்டு, அந்த சந்தன மரத்தில் இருந்து தயாரிக்கப்படுகின்ற சோப்பினை உபயோகப்படுத்தினால் அதன் மூலம் பெரும் வியாதிகள் வருவதாகச் சொல்லப்படுகிறதே அது அரசுக்குத் தெரியுமா ? மேலும், இந்தச் சந்தன மரங்களைப் பராமரிப்பதற்கு அதிக நிதி தேவைப்படுகிறது. அவைகளை ஏற்றுமதி செய்வதை மத்திய அரசு தடை விதித்திருக்கிறது, அதனால், நமக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, மீண்டும் இவைகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நமது அரசு மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 4, 5 கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். இந்த நோயின் மூலம், அந்த மரத்திலே இருந்து தயாரிக்கப்படுகிற சோப்பைப் பயன்படுத்துவதன் மூலம் நோய்கள் வருகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு அபாயகரமான செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தகவல் இதுவரையில் இல்லை. அது மரத்தைப் பாதிக்கின்ற நோயே தவிர, மனிதர்களைப் பாதிக்கின்ற நோய் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஏற்றுமதியைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். அது மத்திய அரசு கடந்த ஆண்டிலே இருந்து முழுமையாக ஏற்றுமதிக்குத் தடை விதித்திருக்கிறார்கள். அதனாலே பெரிய வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது, அதனாலே மத்திய அரசின் இடத்திலே மாநில அரசு இந்த ஏற்றுமதித் தடையை நீக்கவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சந்தன மரங்களைத் திருடும் கூட்டத்தைப் பிடிக்கும்போது வனத்துறை பாதுகாப்பாளர்கள், அவர்களால் தாக்கப்பட்டு இறந்தும் விடுகிறார்கள். அந்த நிலையைப் போக்க, வனத்துறை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வாகன வசதி, துப்பாக்கி, காட்டுக்குள் வீடு, போலீஸ்காரர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் இவைகளைக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சந்தன மரங்களைப் போன்ற விலை உயர்ந்த மரங்களைக் கடத்துவதை, திருடுவதைத் தடுப்பதற்கு வனத்துறை பெரிய அளவில் முயற்சி எடுத்து வருகிறது. பாதுகாப்பு பணிக்கு மேலும், அலுவலர்களை நியமிக்கவும், அவர்களுக்கு ஆயுத உதவிகள் வழங்கவும், அதற்காக வாகன வசதிகளை வழங்கவும், அரசிடத்திலே வனத்துறை பொருளாதார உதவியைக் கேட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.30]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'ஸ்பைக்' நோய் எந்தெந்த மாவட்டங்களில் உள்ள சந்தன மரங்களைப் பாதித்து இருக்கின்றன? எந்தெந்த மாவட்டங்களில் அது இருக்கிறது, எவ்வளவு காலத்திற்கு இருக்கிறது? அதைத் தடுக்க அரசாங்கம் வேறு முறைகளில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா, அல்லது அந்த ஆராய்ச்சி முடிந்த பிறகு தான் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய் பரவலாகத் தமிழ் நாட்டிலே இப்போது இல்லை. குறைந்து கொண்டு வருகிறது என்ற தகவல் தரப்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக ஜவ்வாது மலைப் பகுதியில் இது இருப்பதாகத் தெரிகிறது. அந்த நோய்க்கான காரணத்தைச் சரியாகக் கண்டுபிடிக்கவில்லை. எனவே தீவிரமான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க முடியவில்லை. என்றாலும், இப்போது பெங்களூரில் நடக்கும் ஆராய்ச்சி மூலம் விரைவில் இதனுடைய அடிப்படையை அறிந்து, அந்த நோய் ஏற்படாமல் தடுக்கும் முயற்சியை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரத்திற்கு வரும் நோய் பற்றிய ஆராய்ச்சி நடந்து வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். காலையிலே இருந்து இந்தச் சட்டமன்றப் பேரவையில் சந்தனம், மல்லிகை, ரோஜா



போன்ற கேள்விகள் மூலம் வாசனை அடித்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே. சந்தனத்தில் இருந்து வாசனைத் திரவியம் எடுக்கும் ஆராய்ச்சியை நடத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனத்தை மணக்க வைக்க ஆராய்ச்சி தேவை இல்லை. சந்தனம் இருந்தாலே மணக்கும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்கள் எந்தப் பகுதியில் அதிகமாக இருக்கின்றன ? புதிதாகச் சந்தன மரங்களை வளர்க்க அரசிடம் திட்டம் உள்ளதா ? பல பாரஸ்டுகளை வீணான முறையில் மற்றவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் சந்தன மரங்களை வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் திருப்பத்தூர், தருமபுரி பகுதிகளிலும் கோவையிலே, பெரியார் மாவட்டத்திலே சத்தியமங்கலம் பகுதியிலும் சந்தன மரங்கள் அதிகமாகக் கிடைத்து வருகின்றன. ராஜபாளையம் அருகிலும் ஓரளவிற்குச் சந்தன மரங்கள் இருப்பதாகத் தெரிகிறது. முழு அளவில் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. சந்தன மரங்கள் இயற்கையாகவே வளர்ந்து வரும் ஒன்றாக இருந்தது. கடந்த சில ஆண்டுகாலமாகப் பயிர் செய்யும் முறையை வனத்துறை மேற்கொண்டு வருவதால், அந்த மரத்தைப் பயிர்செய்கிறபோது எந்தெந்த நிலங்களில், எந்தெந்த பகுதிகளில் அதைச் செய்ய முடியுமோ, அந்தந்த இடங்களில் அந்த மரத்தை உற்பத்தி செய்யும் முறையை வனத்துறை மேற்கொண்டு வருகிறது.

## தந்தை பெரியாரின் சுயசரிதை

*வினா எண் 420 திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் சுயசரிதை வரலாற்றை தமிழ், ஆங்கிலம் தவிர மற்ற இந்திய மொழிகளிலும், உலக சிறப்பு மொழி ஏதாகிலும் மொழி பெயர்க்கும் எண்ணம் உண்டா ?

(ஆ) இதை துரிதப்படுத்தும் முயற்சி உண்டா ?

[1981 மார்ச் 7

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தந்தை பெரியார் அவர்களின் சுயசரிதை எதுவும் நூலாக வெளிவரவில்லை. தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியிடும் பணி அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூல் தமிழில் வெளியிடப்பட்ட பிறகே பிறமொழிகளில் வெளியிடுவது பற்றி பரிசீலிக்க வேண்டும்.

(ஆ) எழவில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, வடஇந்தியாவிலே இருக்கின்ற பேரறிஞர்களும், அதே போன்று உலகத்திலே இருக்கின்ற சில முக்கிய அறிஞர் பெருமக்களும் தந்தை பெரியார் அவர்கள் தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் ஆற்றிய தொண்டினையும், மூட நம்பிக்கைகளை அகற்றிட அவர்கள் செய்த சேவைகளையும் அறிந்து கொள்கிற வகையில், தந்தை பெரியார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை இந்திய மொழிகள் அனைத்திலும், மற்றும் உலக மொழிகளிலும் மொழி பெயர்ப்பு செய்யும் முயற்சியில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மேற்கொள்ளப்பட்டு இருக்கின்ற பெரியார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்று நூல் முதலில் தமிழில் எழுதப்பெற்று, பதிப்பிக்கப்பட்ட பிறகு, மற்ற மொழிகளில் வெளியிடுவது பற்றி அரசு பரிசீலிக்கும். இன்னொரு கருத்தையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றை வெளியிடுவதன் மூலம் உலகத்திலுள்ள அறிஞர் பெருமக்கள் பெரியார் அவர்களுடைய ஆற்றலைத் தெரிந்துகொள்வதற்கு முடியும் என்றாலும் அதற்கு முன்மாதிரியாகபெரியார் அவர்களாலே கூறப்பட்டு இருக்கின்ற அந்தப் புரட்சி மொழிக்கருத்துக்கள் வெளியிடப்பட்டால் தான் பெரியாருடைய முழு வடிவத்தை உலகத்தில் உள்ளவர்கள் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும். ஆகவே, அரசு இப்போது வெளியிட்டு இருக்கின்ற பெரியாரின் புரட்சி மொழிகள் என்கிற பெரியாரின் கருத்துக்கள் அடங்கிய நூலை வேறு மொழிகளில் மொழி பெயர்க்க இயலுமா என்பதைப் பற்றியும் இப்போது அரசு ஆலோசித்துக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, இப்போது பெரியாருடைய சரித்திரத்தை, வரலாற்றை நாடகமாக ஒலி-ஒளி அரங்கக்காட்சி செய்துவருகிறார்கள். அதை மக்கள் ஆர்வத்தோடு பார்த்து, பெரியார் வாழ்க்கையைப் பின்பற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிற காரணத்தால் அதை



1981 மார்ச் 7]

சினிமாப் படமாக எடுத்து, திரையிட்டு மக்களுக்கு அளிக்கும் வாய்ப்பும் வசதியும் தமிழக அரசுக்கு உண்டா என்றும் அதை நிறைவு செய்ய அரசு முன்வருமா. என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இப்போது பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி அரங்கக் காட்சியாக நடத்தும் பணிக்கு சில இலட்சம் ரூபாய்களே செலவாகிறது. திரைப்படமாக எடுத்து வெளியிடுவது என்றால் அந்த அளவில் நிற்காது. தனியார் யாராவது அதற்கு முயற்சி செய்தால் அவர்களுக்கு அரசு எந்த அளவுக்கு உதவ முடியுமோ அந்த அளவுக்கு உதவுவதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்தை பெரியார் அவர்களுடைய சரித்திரத்தையும், அவர்களுடைய கருத்துக்களையும் புத்தகமாக வெளியிட்டு மக்கள் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்போன்று இந்தியத் துணைக்கண்டமே போற்றும் அளவுக்கு வாழ்ந்த பெரும் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய சரித்திரத்தை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிட செய்தித்துறை அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தமிழகத்திலே பிறந்து இந்தியத் துணைக்கண்டம் பூராவுக்கும் அறிமுகமாகியிருக்கிற பெரும் தலைவர்களின் வரலாறுகளை அல்லது அவர்கள் தெரிவித்த கருத்துக்களை எந்த அளவுக்குப் பரப்பமுடியுமோ அந்த அளவுக்குப் பரப்ப அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, தமிழகத்திலே பிறந்து, இந்தியத் துணைக்கண்டத்திற்கு மட்டுமல்ல; உலகம் முழுவதற்கும் அறிமுகமாகி இருக்கிற தந்தை பெரியார் அவர்களுடைய புரட்சிக் கருத்துக்களையும், அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றையும் இந்தியத் துணைக் கண்டத்து மக்களுக்கு மட்டுமல்ல; உலகம் முழுவதிலேயும் இருக்கிற மக்களுக்கும் தெரிவிப்பதற்கு—அதற்கு மேலாகக்கூட பெரியார் சொத்திலிருந்து பொதுமக்கள் நிதி சேர்த்து வைத்திருக்கிறார்கள். அதைப்பயன்படுத்தி—மிகப்பெரும் அளவில் செய்ய அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அரசு எந்த அளவிலே நடவடிக்கை எடுக்கும் என்பதைப்பற்றி தான் ஒரு அமைச்சர் பதில் அளிக்க முடியும். பெரியார் சேர்த்த சொத்துக்களை வைத்திருப்பவர்கள் என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை அவர்களிடம்தான் கேட்க வேண்டும்.

[1981 மார்ச் 7

திரு. க. பாலன்: தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்கள் மூட நம்பிக்கை பற்றியும், ஜாதி ஒழிப்பு பற்றியும் சொன்ன பொன்மொழிகளைத் தமிழக அரசு திரைப்படமாகக் காட்ட முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, பெரியார் அவர்களுடைய பொன்மொழிகளைத் தமிழகத் திரைப்படங்களில் காட்டுகிற முயற்சிகளை மேற்கொள்ள திரைப்படம் எடுக்கிறவர்கள் முன்வரவேண்டும். அரசு எடுக்கின்ற திரைப்படங்களில் எந்த அளவுக்கு பெரியார் அவர்களுடைய கருத்துக்களுக்கு இடம் தர முடியுமோ அந்த அளவுக்கு இடம் தரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, சுதந்திரப் போராட்டக் காலத்திலேயும் அதற்குப் பின்னாலேயும் பெரியார் அவர்கள் மறைகின்ற வரையில் அவர்கள் வெளியிட்டிருக்கிற கருத்துக்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா? அப்படியானால்தான் அவர்களுடைய முற்போக்கான எண்ணங்களையும் நல்ல கருத்துக்களையும் அனைவரும் புரிந்து கொள்ள முடியும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நூலை வெளியிட்டு, அரசு நம்முடைய நூலகங்களிலேயும், வேறு இடங்களிலேயும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தால் சிறப்பாக இருக்கும்; அதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அதைப்போல ஒரு புத்தகத்தை 1979 ஆம் ஆண்டில் தமிழக அரசின் சார்பில் 'பெரியார் புரட்சி மொழிகள்' என்ற தலைப்பில் அவர்களுடைய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறோம். அதைத்தான் வேறு மொழிகளிலே வெளியிட இயலுமா என்பதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவதுபோல் பெரியாருடைய கருத்துக்கள் தொகுக்கப்பட்டு, வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. நெடுமாறன்: தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் அதிகமாக நம்பிக்கை வைத்து, தன்னுடைய தோட்டத்தில் இருந்த தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தக்கூடிய அளவுக்குச் சென்றார்கள். அப்படிப்பட்ட தந்தை பெரியார் அவர்களுடைய மதுவிலக்குக் கொள்கைகளை மக்களிடையே பரப்ப இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1981 மார்ச் 7]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் 70 ஆண்டுகளுக்கு முன்னாலே சொல்லப்பட்ட பெரியாரின் கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அதற்குப் பின்னாலே தந்தை பெரியார் அவர்கள் மது விலக்கைப் பற்றி வேறு கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த இரண்டு கருத்துக்களில் எதைப் பரப்புவது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்ந்தெடுத்துச் சொல்ல வேண்டும்.

(முற்பகல் 9–40)

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழக அரசு தயாரிப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அந்த வரலாற்றை ஒரு குழுவாக இருந்து எழுதுகிறார்களா? அல்லது தனிப்பட்ட ஒருவர் எழுதுகிறாரா? அப்படி எழுதப்பட்டால் அதை அச்சிடுவதற்கு முன்பாக தந்தை பெரியாரோடு மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டவர்களைக் கலந்து கொண்டு அதை வெரிஃபை செய்த பிறகு அந்த வரலாற்றை வெளியிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இத்தகைய நூல்களை வெளியிடுவதற்காக நூற்றாண்டு விழாவை ஒட்டி வல்லுநர் குழு ஒன்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேல் அவர்கள் அக் குழுவின் துணைத் தலைவர். மற்றும் உறுப்பினர்களாகப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. சிட்டிபாபு அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஏ.பி. சனார்த்தனம் அவர்களும், டாக்டர் இரா. சனார்த்தனம், M.L.C. அவர்களும், டாக்டர் மா. நன்னன் அவர்களும், திருவாரூர் கே. தங்கராசு அவர்களும், ஓய்வு பெற்ற மாவட்டப் பதிவாளர் திரு. ராஜகோபாலன் அவர்களும், திரு. பு. கணேசன் அவர்களும் இருக்கிறார்கள். திரு. நல்லரசு என்பவர் இந்தக் குழுவின் சிறப்பு அலுவலராக இருக்கிறார். ஆகவே இந்தப் பட்டியலிலே பெரியாரைப் பற்றித் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்புவார்கள் என்று கருதுகிறேன். இந்தக் குழு தொடர்ந்து பல்வேறு நூல்களை ஆய்ந்து பெரியாரோடு தொடர்பு கொண்ட பலரிடத்திலே நேரில் போய் விவரங்களைச் சேகரித்து பல கருத்துக்களைத் திரட்டிக் கொண்டிருக்கின்றது. ஆகவே நிச்சயமாக, உண்மையை அடிப்படையாகக் கொண்டு இந்த நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டிய வரலாறுகள் இந்த நூலிலே வரும்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த ஆகமும் உண்மையை மறைக்காமல் இந்த நாட்டுக்கு வரலாறுகளை எடுத்துச் சொல்லும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வேதாரண்யம்—தஞ்சாவூர் சாலை.

*வினா எண் 421—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வேதாரண்யத்திலிருந்து திருத்துறைப்பூண்டி வழியாக தஞ்சாவூர் செல்லும் சாலையை சீரமைத்து இரு வழிப்பாதையாக மாற்ற திட்டமுண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்களுடைய தொகுதியில் உற்பத்தியாகும் புகையிலை, சவுக்கு, விறகு, உப்பு போன்ற பொருட்கள் இந்தப் பாதையின் மூலமாகத்தான் திருச்சி, சென்னை போன்ற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆகவே அந்தப் பகுதி வழியாக அதிகமான அளவிலே லாரிப் போக்குவரத்து இருக்கிறது. ஆனால் தற்போது அந்தப் பாதை வழியாகப் பேருந்துகள் கூடச் செல்ல முடியாத அளவில் செப்பனிடப்படாத நிலையிலே உள்ளது. ஆகவே அந்தப் பாதையை இந்த ஆண்டு செப்பனிடவில்லை என்றாலும் அடுத்த ஆண்டிலேயாவது செப்பனிட்டு நல்லமுறையில் அமைத்துத் தருவதற்கு அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வேதாரண்யத்தைப் பொறுத்தவரையில் 4 சாலைகள் இருக்கின்றன. அந்த நான்கு சாலைகளின் மொத்த நீளம் 99 கிலோ மீட்டர். அவைகள் அனைத்தும் தார் சாலைகளாக இருக்கின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருவழிப் பாதையாக ஆக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அப்படி இருவழிப் பாதையாக ஆக்க வேண்டும் என்றால் ஒரு கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இப்போது இருக்கின்ற நிலைமையில் அதனை உடனடியாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவரவர்களே, அந்தப் பாதை ஆற்றின் ஓரமாகச் செல்கின்றது. அப்படிச் செல்கின்ற பகுதிகளில் களிமண் பகுதியாக இருக்கக்கூடிய இடங்களில்,



பாதையின் ஓரங்கள் அமுங்கிவிடுவதால் எதிரே வருகின்ற வாகனங்களுக்கு வழிவிடுகின்ற வகையில் சற்று ஒதுங்க இயலவில்லை. ஆகவே அந்தப் பாதையினை அகலப்படுத்தி விட்டால், எதிரே வருகின்ற வாகனங்களுக்கு வழிவிட்டுச் செல்வதற்கு ஏதுவாக அமையும். ஆகவே அந்த வகையில் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, வரும் ஆண்டுகளில் மாநில சாலைகள் திட்டத்தின் கீழாக அது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலிலே அமைச்சரவர்கள் பதிலளிக்கின்றபோது வேதாரண்யத்திலே உள்ள சாலைகள் நல்ல முறையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் மூதறிஞர் ராஜாஜி அவர்களும், சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களும் உப்பு சத்தியாக்கிரகம் செய்த இடத்தில் உள்ள நினைவுச் சின்னத்திற்கும் நகரத்திற்கும் இடையே உள்ள பாதை மிகவும் பாழடைந்திருப்பதாகவும் அதைச் சீரமைக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குக் கோரிக்கை வந்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.

### திருவாடானை ஒன்றிய அலுவலகக் கட்டிடம்.

*வினா எண் 422—திரு. அ. அங்குசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானையில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடானை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசு, அரசு ஆணை எண் 306-ன் கீழ் அனுமதி அளித்துள்ளது. அதனுடைய மதிப்பீடு 3.25.000 ரூபாய். நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருவாடானை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்காகக் கட்டிடம் இருந்து, அக்கட்டிடம் இடிந்து விட்ட காரணத்தினால், அந்த இடத்தில் மீண்டும் கட்டிடம் கட்டப் பெறுமானால், பலமாக இருக்காது. மண்ணினுடைய வளம் நல்ல முறையில் இல்லை என்பதாகக் கூறி அங்கே மீண்டும் கட்டிடம் கட்டக் கூடாது என்பதாக ஒரு நிலையை அரசு எடுத்துள்ளதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே, அங்கே மீண்டும் கட்டிடம் கட்டப் படுமா? கட்டப்படுமானால், பலம் உள்ளதாக இருக்கும் என்று அரசு நினைக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, திருவாடானை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீட்டைப்பற்றிச் சொன்னேன். 3½ இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பெற்றிருக்கிறது. கட்டிடம் கட்டப் பெறுகிற அந்த இடம் எப்படி உள்ளது என்பதைப்பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத்தினுடைய தன்மைகளை ஆராய்ந்து அறிந்த பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த இடத்திலே வானம் திறக்கப்பட்டிருக்கிறது. அதுவும் மார்ச் மாதத்திற்குள்ளாக அந்தக் கட்டிடம் கட்டப்பட வேண்டும் என்ற குறிப்பும் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திலே மீண்டும் கட்டிடம் கட்டும்போது பலமாக இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே, அதை மாற்றி வேறு நல்ல இடத்தில் கட்டிடத்தை அமைக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு ஒப்புதலே கடந்த 2 ஆம் தேதிதான் கொடுக்கப்பெற்றிருக்கிறது. 7 ஆம் தேதியன்று அங்கே வானம் திறக்கப்பட்டிருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். எவ்வளவு சீக்கிரத்தில் அரசு, வேலைகளை விரைந்து செயல்படுத்துகிறது என்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ள முடியும். என்றாலும், அந்த இடம் சரியில்லை என்று நிபுணர்கள் சொன்னால், அது குறித்து ஆலோசனை செய்து, செம்மையாகப் பணிகள் நடைபெறும் வகையில் அரசு வேறு இடத்திற்குக் கட்டிடம் கட்டும் இடத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கும்.

திரு. கெ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு, இப்படிப் புதிய கட்டிடங்கள் கட்டும் போது, காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு மட்டும் அனுமதி அளிக்கப் பெறுவதில்லை..........(மணியடிக்கப் பெற்றது.)



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி திருவாடானை ஒன்றியத்தைப் பற்றியது. பொதுவாகக் கேட்கக்கூடாது. உட்காருங்கள். வினா எண் 423.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 423, 424 ஆகிய இரண்டும் தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிய கேள்வியாக இருப்பதால், இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொண்டால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

## தன்னிறைவுத் திட்டம்.

*வினா எண். 423—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய அரசு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒன்றியங்களின் அபிவிருத்திக்காக நடப்பு ஆண்டு (1980–81) ஒதுக்கிய தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இத்திட்டத்திற்கு மத்திய நிதி ஒதுக்கீடு இல்லை.

*வினா எண் 424—திரு. மி. வின்செண்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் செயல்படும் முன்னோடி திட்டமான தன்னிறைவுத் திட்டம் போல் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது செயல்படுகிறதா?

(ஆ) ஆம் என்றால் அந்தத் திட்டத்திற்கும் நமது திட்டத்திற்கும் வித்தியாசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தெரிந்தவரை இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மி. வின்செண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்தத் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஏதாவது நிதி உதவி செய்கிறதா? இல்லை என்றால், மாநில அரசு தமிழகத்தின் ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திற்கும் இத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இந்த 3 ஆண்டுகளில் எவ்வளவு தொகை செலவு செய்திருக்கிறது என்பதையும் அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய தன்னிகரில்லாத்

திட்டம். இது வேறு மாநிலங்களில் செயல்படுவது இல்லை. தமிழகத்தில் மட்டும்தான் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக மத்திய அரசு ஒரு பைசா கூட நிதி உதவி செய்யவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். 3 ஆண்டுகளில் இத் திட்டத்திற்காக 270 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எத்தனை வேலைகள் எடுக்கப்பட்டன? அதில் எவ்வளவு வேலைகள் முடிந்துள்ளன? இதனால் பலன் அடைந்த கிராமங்கள் எவ்வளவு என்ற தகவல்களை அமைச்சர் தெரிவிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்?

[முற்பகல் 9–50]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 69 ஒன்றியங்கள் எடுக்கப்பட்டன. அதில் குடிநீர் விநியோகத்திற்காக 2,045 குடியிருப்புகள் எடுக்கப்பட்டன. இணைப்புச் சாலைகளுக்காக 4,445 கிலோ மீட்டர் எடுக்கப்பட்டிருக்கிறது. சிறு நீர்ப்பாசனத்திற்காக 2,760 எண்ணிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனக் குடியிருப்புகளிலிருந்து மயானத்திற்குச் செல்லக்கூடிய பாதைகள் 771 கிலோ மீட்டர் எடுக்கப்பட்டிருக்கிறது. சிறு பாசன நீர் ஆதாரங்களை மேம்படுத்த 683 ஆதாரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கிராம மருந்தகங்கள், 75 மருந்தகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தாய்-சேய் நல விடுதிகள் 228 கட்டப்பட்டு வருகின்றன. ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் 1,364 கட்டப்பட்டு வருகின்றன. ஹரிசன வீடுகள் 6,948.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: ஊராட்சி ஒன்றியங்களைத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துள்ளதுபோல் நகராட்சிகள், நகரியங்கள் இவற்றையும் இந்தத் திட்டத்தில் சேர்க்கிற யோசனை உண்டா? அப்படிச் சேர்ப்பதன் மூலம் இப்போது நகராட்சிகளிலும், நகரியங்களிலும் மிகவும் தேக்க நிலை இருப்பதால் அதை மாற்றியமைக்க முடியும். ஆகவே, இது பற்றிய விடையை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: முதல் கட்டமாகக் கிராமப்புறங்களை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். நகரங்கள், நகரியங்கள் போன்றவற்றில் என்னென்ன வாய்ப்பு வசதிகள் இருக்கின்றனவோ அந்த வாய்ப்பு வசதிகள் கிராமங்களிலும் கிடைக்க வேண்டும், இருக்க வேண்டும் என்று கிராம இராஜ்யம் காண்டாக வேண்டும் என்பதற்காகத்தான் தமிழக முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தினை முதலில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அடுத்த கட்டமாக வேண்டுமானால் நகரங்கள்,



நகரியங்கள் இவற்றை எடுத்துக்கொள்ளலாம் என்ற யோசனையைக் கூட முதல்வர் அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவைகள் எல்லாம் பிற்காலத்தில் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும்போது பரம்பரையாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் இந்த ஆண்டு வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் முன்னுரிமை கொடுத்து தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு இந்த ஆண்டே அங்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தேவையின் அடிப்படையில் இப்போது இந்தத் தன்னிறைவுத் திட்டம் நடைபெற்று வருகிறது. எங்கெங்கு குடிநீர்ப் பிரச்னை அதிகமாக இருக்கிறதோ அவைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கின்றன. மேலும் வறட்சிப் பணிகளுக்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து அது எந்த மாவட்டமாக இருந்தாலும் வறட்சிப் பணிகள் தங்கு தடையின்றி நடைபெறுவதற்குண்டான சாத்தியக் கூறுகள் ஆராய்ந்து அதற்காகத்தான் திட்டம் தீட்டப்பட்டு இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லா ஒன்றியங்களிலும் மூன்று ஆண்டுகளுக்குள் அதை விஸ்தரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் நாம் செய்து வருகிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்துகிற சமயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள்— குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் கானை, ஒலக்கூர், ரிஷிவந்தியம், முகையூர் என்ற நான்கு ஒன்றியங்களை ஜீ.ஓ. எண். 1108 டேட்டட் 16—7—1980ல் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற்பட்ட பகுதிகளை பிறகு ரத்து செய்துவிட்டு ஒன்பது மாதங்களுக்குப் பிறகு கீரப்பாளையம், மேல்மலையனூர், மேல்புவனகிரி, பண்ருட்டி என்ற யூனியன்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட யூனியன்களை ரத்து செய்து அதற்குப் பதிலாக வேறு நான்கு யூனியன்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அது, மந்திரியவர்கள் சொந்த ப்ளாக் என்ற காரணத்திற்காகவா அல்லது வேறு என்ன அடிப்படையை வைத்திருக்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. க. இராயச்சந்திரன்: வேண்டுமானால் நான் அடுத்த தடவை தொகுதியை மாற்றிக்கொள்கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1981 மார்ச 5

மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினராக
வரமுடியும் ; அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் முனிசி
பாலிட்டி போன்ற அமைப்பில் உறுப்பினராக வர முடியும்.
அந்த அளவிற்கு மாநில சுயாட்சியை அங்கே வழங்கியிருக்கிறார்
கள். மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்கியிருக்
கிறார்கள்.

அதைப் போலவே, சுவிட்ஜர்லாந்து நாட்டிலே மாநில அரசு
இராணுவத்தை வைத்துக் கொள்ளலாம். மாநில அரசு வெளி
நாடுகளோடு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று கூட இருக்
கிறது.

இன்றைக்கு மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே ஆங்கிலத்திலே
நாம் பேச முடியும்; தமிழிலே பேச முடியாது. இல்லை
யென்று சொன்னால் இந்தியிலே பேசலாம். இதுதான் இப்
பொழுது இருக்கக் கூடிய அரசியல் சட்டம். நம்முடைய முதல்
அமைச்சராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, எது
எதற்கெல்லாமோ நாங்கள் குரல் கொடுக்கிறோம் என்று சொல்
கிறார்கள். நான் கேட்கிறேன், இன்றைக்கு மெட்ராஸ்
ஹைகோர்ட்டிலே எங்களுக்கு இங்கிலீஷ் வேண்டாம், தமிழ்தான்
வேண்டும் என்றஒருதீர்மானத்தைக் கொண்டுவாருங்கள் வேண்டா
மென்று சொல்லவில்லை. அரசியல் சட்டத்தைத் திருத்தாமல்
அது முடியாது. ஆனால் சுவிட்ஜர்லாந்திலே பிரெஞ்சு மொழி
யிலே பேசலாம், ஜெர்மன் மொழியிலே பேசலாம், இத்தாலி
மொழியிலே கோர்ட் நடவடிக்கை அங்கே இருக்கிறது. அந்த
உரிமை நம்முடைய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறதா ?

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் ஐம்பது மாநிலங்களை
யும் மதிக்கின்ற விதத்திலே தேசியக் கொடியிலே 50 ஸ்டார்களைப்
போட்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அமெரிக்காவிலே
அந்த மாநிலங்களே அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்ள
லாம்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நாம் பார்க்கிறோம். கச்சத்
தீவு தமிழகத்திற்குச் சொந்தமானது என்பது நம்முடைய ஏகோ
பித்த அபிப்பிராயம். ஆனால் அது குறித்து நான் இப்பொழுது
கருத்து சொல்ல விரும்பவில்லை. அது முடிந்த பிரச்னையாகி
விட்டது. ஆனால் இன்றைக்கு அமெரிக்கா போன்ற நாடுகளில்
ஒரு மாநிலத்தின் பிரச்னையாகவே அது கருதப்பட்டு, மாநிலத்
தின் சம்மதத்தோடுதான் அது பிற மாநிலங்களுக்கோ அல்லது
பிற பகுதிகளுக்கோ தாரை வார்த்துக் கொடுக்கப்பட முடியும்.

ஆனால் இங்கே அப்படி இல்லை. நம்முடைய பண்டித
ஜவஹர்லால் நேரு அவர்கள் இருந்த நேரத்திலேயும் கூட
பி. சி. ராய் மேற்கு வங்கத்தின் முதலமைச்சராக இருந்தபொழுது



1981 மார்ச் 5] [திரு. அ. ரகுமான்கான்]

ஆனால், சுப்ரீம் கோர்ட்டிலே, மன்னிக்க வேண்டும், சூத்திரர்
கள் தான் என்று தெளிவாகவே தீர்ப்பு வழங்கியாகிவிட்டது.
ஆதி திராவிடர்கள் அர்ச்சகர்களாக வர முடியாது என்று இந்த
நவீன காலத்திலேகூட இந்த 20 ஆம் நூற்றாண்டிலே கூட, தீர்ப்பு
வழங்கப்பட்டுவிட்டது. இப்போது என்ன நிலைமை ...



1981 மார்ச் 5] [திரு. அ. ரகுமான்கான்]

கூட. அன்றைக்கு பெர்பாரி பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்பட்டது.
அப்பொழுது பி. சி. ராய் அவர்கள் வருத்தப்பட்டுப்பேசினார்
கள். மாநில வரம்பில் உள்ள எங்கள் அதிகாரத்தை அவர்கள்
கையில் பறித்துக் கொண்டார்கள் என்று கூட மாநில சர்க்காரின்
சார்பாகச் சொல்லி, அதே நேரத்திலே '' ஹானஸ்ட் பாஸிட்டி
ஸியன் '' என்ற முறையிலே தன்னுடைய கருத்தை அன்றைக்கு
எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

சோவியத் ரஷ்யாவைப் பற்றி எடுத்துக் கொண்டால் மாண்பு
மிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்
என்று நான் நம்புகிறேன். திரு. உமாநாத் அவர்கள் மிகத்
தெளிவாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். கம்
யூனிஸ்ட் நண்பர்கள், மார்க்சிஸ்ட் நண்பர்கள் இங்கே இருக்
கிறார்கள். அங்கே பதினாறுக்கும் மேற்பட்ட மாநிலங்கள் இருக்
கின்றன. ஐ. நா. மன்றத்திலே பைலோ ரஷ்யா, யூக்ரே என்ற
இரண்டு மாகாணங்கள். அவை மாகாணமாக இருந்தாலும்
ஐ. நா. மன்றத்திலே அவைகள் இன்றைக்குத் தனி நாட்டைப்
போலவே உட்கார்ந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு வர்த்தக உடன்பாடு, வெளி
நாடுகளோடு மாநிலங்கள் வைத்துக் கொள்ளலாம் ; இராணுவம்
வைத்துக் கொள்ளலாம். இப்படிப் பல்வேறு பட்ட அதிகாரங்
களை அங்கே கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் இப்பொழுதுதான் நான் அமெரிக்காவைச் சுற்றி,
ரஷ்யாவைச் சுற்றி, சுவிட்ஜர்லாந்தைச் சுற்றி உண்மையிலேயே
உலகம் சுற்றும் வாலிபனாக இவைகளை எல்லாம் பார்த்துவிட்டு
இப்பொழுது உங்களை இந்தியாவிற்கு அழைக்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற அரசியல் சட்டத்திலே
என்ன நிலைமை என்று பார்த்தால், தொல்பொருள் ஆராய்ச்சி
இலாக்கா இங்கே இருக்கிறது. மதுரையிலே கோவலன் பொட்ட
லிலே சிலப்பதிகாரச் சம்பவம் நடைபெற்றதா என்ற ஆராய்ச்சி
யைக் கூடச் செய்ய தமிழக அரசுக்கு உரிமை கிடையாது.
தொல்பொருள் ஆராய்ச்சி இலாக்கா மத்திய அரசாங்கத்தின்
கையில் இருக்கிறது. மியூசியம் மத்திய அரசாங்கத்தின் கையிலே
இருக்கிறது. மகாபலிபுரத்திலே ஒலி-ஒளிக் காட்சியை அமைக்க
வேண்டுமென்றாலும்கூட அந்த அதிகாரம் மத்திய அரசாங்
கத்தின் கையிலேதான் இருக்கிறது.

வேலூருக்கு அருகிலே பொன்னையாறு என்ற ஆறு இருக்
கிறது. பொன்னி, பொன்னி நதி என்பதுதான் அதன் உண்மை
யான பெயர் என்று அந்தப் பகுதி மக்கள் சொன்னார்கள்.
பொன்னையாறு என்பதை பொன்னி நதி அல்லது

Y2:11;31 N31
N83.14:2
122181

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஏழாவது சட்டமன்றப் பேரவையின்
இரண்டாவது கூட்டத்தொடர்

1981 மார்ச் 4, 5, 6, மற்றும் 7 ஆம் நாட்கள்

(தொகுதி XIV - எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ்நாடு அரசு
1988

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-6000 09.
[illegible] .11

D

V211,31 N81

N830

22181

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்.

**திரு. சாதிக் அலி**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : (நிதிஅமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீனளம் பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. **மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள். உள்ளிட்ட ஊரக தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி கழகம், திரைப்படச்சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. **மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** (கல்வி அமைச்சர்) தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. **மாண்புமிகு திரு. கா. காளிமுத்து** (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்: பூமிதானம், கிராமதானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதி கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துதுறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். எம். இராஜேந்திரன் (கைத்தறி-கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவாகள நலம், சீர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu

Thiru SADIQ ALI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating ot Public Works Department.

2. Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural)—Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDAM (Minister for Labour —Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minesals and Textiles.

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handloom and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHY (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare) Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.



தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்

பேரவைத் துணைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு.
3. திரு. என். எஸ். வி. சித்தன்.
4. திரு. எஸ். சிவசாமி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல.

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்),

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பா. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

* 21-6-1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.
† 23-1-1981 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

## பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

## தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்.

## விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.



## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 3 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 6 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ. வ.) |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 8 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 9 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 11 | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 12 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. வ.) |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 18 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 19 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 20 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 22 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 23 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ |
| 24 | இராசாராம், திரு. க. | பனைமரத்துப்பட்டி |
| 25 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 26 | இராசு. திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ. |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி |
| 28 | இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | | தொகுதியின் பெயர். |
|---|---|---|---|
| | (1) | | (2) |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே.கே. | .. | சாத்தூர் |
| 30 | இராமச்சந்திரன், திரு. ச. | .. | பண்ருட்டி |
| 31 | இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி. | .. | செஞ்சி |
| 32 | இராமசாமி, திரு. த. | .. | இராமநாதபுரம் |
| 33 | இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 34 | இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார் (செ. வ.) |
| 35 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | .. | இராசிபுரம் |
| 36 | இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 37 | இராஜசேகரன், திரு. வெ. | .. | இராதாகிருஷ்ண நகர் |
| 38 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | .. | தல்லி |
| 39 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | .. | ஆண்டிப்பட்டி |
| 40 | இளையபெருமாள், திரு. எல். | .. | எழும்பூர் (செ. வ.) |
| 41 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | .. | அம்பாசமுத்திரம் |
| 42 | உகம்சந்த், திரு. எஸ். டி. | .. | மதுராந்தகம் |
| 43 | உச்சி. திரு. கே. | .. | கூடலூர் |
| 44 | உத்திராபதி, திரு. பொ. | .. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 45 | உமாநாத், திரு. ரா. | .. | நாகை |
| 46 | கண்ணன், திரு. ம. | .. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 47 | கணபதி, திரு. கே. ஆர். | .. | சிதம்பரம் |
| 48 | கணேசன், திரு. இ. | .. | இடைப்பாடி |
| 49 | கணேசன், திரு. சி. | .. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 50 | கந்தசாமி, திரு. கா. வே. | .. | கிணத்துக்கடவு |
| 51 | கந்தசாமி, திரு. பி. | .. | பொங்கலூர் |
| 52 | கபாலி, திரு. டி. கே. | .. | மைலாப்பூர் |
| 53 | கருணாநிதி, டாக்டர், மு. | .. | அண்ணாநகர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | | தொகுதியின் பெயர். |
|---|---|---|---|
| | (1) | | (2) |
| 54 | கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி. | .. | பாளையங்கோட்டை |
| 55 | கருப்பையா, திரு. இரா. | .. | குளித்தலை |
| 56 | கருப்பையா, திரு. ஏ. டி. | .. | வால்பாறை (செ. வ.) |
| 57 | கல்லன், திரு. கே. | .. | உதகமண்டலம் |
| 58 | கலிதீர்த்தான், திரு. சோ. | .. | சங்கராபுரம் |
| 59 | கலியமூர்த்தி, திரு. பெ. | .. | மங்களூர் (செ. வ.) |
| 60 | நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | .. | நன்னிலம் (செ. வ.) |
| 61 | காளிமுத்து, திரு. கா. | .. | திருப்பரங்குன்றம் |
| 62 | கிட்டப்பா, திரு. என். | .. | மாயவரம் |
| 63 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | .. | காங்கேயம் |
| 64 | கிருஷ்ணசாமி. திரு. கே. ஏ. | .. | ஆயிரம் விளக்கு |
| 65 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | .. | ஆண்டிமடம் |
| 66 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | .. | நெல்லிக்குப்பம் |
| 67 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | .. | சேலம்-1 |
| 68 | கிருஷ்ணன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் |
| 69 | குப்புசாமி, திரு. என். | .. | மொரப்பூர் |
| 70 | குப்புசாமி, திரு. கே. | .. | ஒட்டன்சத்திரம் |
| 71 | குப்புசாமி, திரு. செ. | .. | வந்தவாசி (செ. வ.) |
| 72 | குமரிஅனந்தன், திரு. | .. | திருவொற்றியூர் |
| 73 | குருசாமி, திரு. ப. | .. | அந்தியூர் (செ. வ.) |
| 74 | அண்ணாதாசன், திரு. எம். | .. | திருவரும்பூர் |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. | .. | சிங்காநல்லூர் |
| 76 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | .. | வாணியம்பாடி |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. | .. | உடுமலைப்பேட்டை |
| 78 | கேசவ ஆதித்தன், திரு. சி. | .. | திருச்செந்தூர் |
| 79 | கோபால், திரு. சி. | .. | சோளிங்கர் |
| 80 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | .. | பெரியகுளம் |
| 81 | கோபாலன், திரு. ஆர். டி. | .. | கம்பம் |
| 82 | கோமதி சீனிவாசன், திருமதி. | .. | வலங்கை (செ. வ.) |
| 83 | கோவேந்தன் திரு. எம். ஆர். | .. | பேராவூரணி |
| 84 | கோவைத்தம்பி, திரு. | .. | பேரூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 86 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 87 | சட்டநாத கரையாளர் திரு. கி. | தென்காசி. |
| 88 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 89 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 92 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ. வ.) |
| 93 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம் |
| 94 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 98 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 99 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 | சிவபெருமான், திரு. மு | ஓமலூர் |
| 102 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 103 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 105 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 106 | சின்னராஜ், திரு. எம். | தொண்டமுத்தூர் |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 108 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 109 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முசையூர் |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 118 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 120 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 121 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ. வ.) |
| 122 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | அரவக்குறிச்சி |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 125 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர் |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 127 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 128 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 129 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர் |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ) |
| 133 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 135 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.) |
| 136 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 141 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 142 | திருமாண், திரு. | ஏற்காடு (செ.வ.) |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 146 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 147 | துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 148 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயினார் கோவில் (செ.வ.) |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 150 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 151 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 153 | நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 155 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 156 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 158 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 159 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 162 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 164 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 165 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 166 | பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம் |
| 167 | பழனிவேல், திரு. என். | பழனி (செ. வ.) |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ. வ.) |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. | சிவகாசி |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 175 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 176 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ. வ |
| 177 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ. வ ) |
| 178 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 180 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 181 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 182 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ. வ. |
| 183 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ) |
| 184 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 185 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 186 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ. வ.) |
| 187 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 188 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 189 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 190 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 191 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 192 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ.) |
| 193 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 194 | முசிறிப்புத்தன், திரு. ம. | திருச்சி-11 |
| 195 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 197 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ. வ.) |
| 199 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிபூண்டி |
| 201 | முனுசாமி, திரு. மு. ப | பாலக்கோடு |
| 202 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 203 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 205 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 206 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 207 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 208 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209 | ராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 210 | ராஜமாணிக்கம், திரு. எஸ். கே | முசிறி |
| 211 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 212 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 213 | (வெற்றிடம்) | |
| 214 | விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 215 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 216 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ) |
| 217 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218 | விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 219 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 220 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 221 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 222 | வீரானம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 223 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 224 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 225 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 226 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 227 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 228 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 229 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 230 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி |
| 231 | ஜெகதீசன் ஆனூர், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 | ஹாஜாஷெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 | மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |



**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். — அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். — அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. — அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. — அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி — தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்

1981 மார்ச் 4,5,6 மற்றும் 7ஆம் நாட்கள் (தொகுதி XIV எண்கள் 1—4 வரை)

உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | ii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் (தொகுதிகள் உள்பட அகரவரிசையில்) | iii |
| அரசினர் சட்ட முன்வடிவுகள் | |
| ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 | 499—503 |
| ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981 | 416—496 |
| ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவு, 1981 | 417—497<br>499—503 |
| கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1981 | 556—567 |
| கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு | 417—497<br>499—503 |
| சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு, 1981 | 417—497<br>499—503 |
| தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவு, 1981 | 416 |
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 | 417—497<br>499—503 |
| பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பா க்கிகள் (நிவாரணம்) திருத்த சட்ட முன்வடிவு | 568—600 |

| | |
|---|---|
| **ஒழுங்குப் பிரச்னை—தொடர்ச்சி** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 33—85 |
| **கவன ஈர்ப்பு** | |
| உதக மண்டலம் மருத்துவமனையில் ஒரு சிறுவனுக்கு ஏற்பட்ட மரணம் | 547—556 |
| கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கும் வாராந்திர அரிசி அளவு குறைப்பு | 283—287 |
| தென்னைமரங்களுக்கு ''தஞ்சை வாடல நோய்'' | 54—56 |
| **தகவல் கோரல்** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 268—299 |
| சட்ட மன்றத்திற்கு வானொலி தனது சொந்த நிருபரை அனுப்புதல். | 57—58 |
| திருச்சி, கோவை சிறைச் சாலைகளில் அளிக்கப் பெறும் உணவு. | 386—387 |
| பதிவு செய்யப்பெற்ற டேப். | 267—268 |
| **தனியார் அலுவல்கள்—** | |
| தனித் தீர்மானம்—மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல்—(தொடர்ச்சி). | 288—345 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிக்கைக்கான திருத்தங்கள் | 397—415 |
| பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் | 222, 345, 503—504 626—699 |
| **வினாக்கள்— விடைகள்** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 1—32 225—264 347—385 505—543 |
| உடுக்குறியிடாதவை | 626—699 |




| | | |
|---|---|---|
| கு.வி. | .. | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | .. | பொது விவாதம் |
| ஆ.உ. | .. | ஆளுநர் உரை |
| உ.பி. | .. | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | .. | கவன ஈ ப்பு |
| க.ஈ.அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச.அ.நி. | .. | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ச ஆ.நி. | .. | சட்ட முன்வடிவின் ஆய்வுநிலை இந்நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| ச பிரி.ஆ. | .. | சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்தல் |
| ச.பே. | .. | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | .. | சட்டமன்ற மேலவை |
| த.கோ. | .. | தகவல் கோரல் |
| த.வி. | .. | தன்னிலை விளக்கம் |
| தீ. | .. | தீர்மானம் |
| உ.தீ. | .. | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | .. | தனித் தீர்மானம் |
| து.மா.கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| பே.அ. | .. | பேரவையின் அலுவல் |

அரசினர் சட்டமுன்வடிவுகள் தொடர்ச்சி

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப் பெற்ற பகுதியைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரண) திருத்த சட்ட முன்வடிவு 1981 — 568—600

வாழ்க்கைப்படி வழங்கல்சட்டமுன் வடிவு 1981 — 601—623

அரசினர் தீர்மானம்

1) தமிழ்நாட்டில் வறட்சி நிலை (விவாதம்) — 58—22

2) பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறுதல் — 626

அறிக்கை அளித்தல்

மின்சார விநியோகத்தில் கட்டுப்பாடு — 624—625

விதி 107 (1)ன் கீழ் திருத்த அறிக்கை — 396—397

விதி 109ன் கீழ் திரு, உமாநாத் அளித்த அறிக்கை — 279—28

விவசாய திட்டவளர்ச்சிக் குழு அமைப்பு — 177—17

அறிவிப்புகள்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள் — 543—545

பேரவை அலுவல் — 341

மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி — 33

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி — 556

உரிமைப்பிரச்னைகள்—

அவை நடவடிக்கையை கண்காணிக்க போலீஸ் ஸ்பெஷல் பிராஞ்ச் அனுப்பிய சுற்றறிக்கை — 52—53

உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது—தீர்ப்பு — 36—38

உறுப்பினர் திரு ரகுமான்கான் மீது—தீர்ப்பு — 35—36

உறுப்பினர் திரு ரகுமான்கான் மீது — 497—498

ஊரகத் தொழில் அமைச்சர் மீது—தீர்ப்பு — 266—267

பேரவை உறுப்பினரை காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லப் பெறுவது—தீர்ப்பு — 264—265

முதலமைச்சர் மீது — 38—53

ஒத்திவைப்புத் தீர்மானம்

ஆத்தூர் காவல்துறையினர் ஓர் இளைஞரைத் தாக்கியதாக சொல்லப்பெறுவது — 545—547

கத்திவாக்கம் நகரியத்தில் சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப் பெற்றுள்ளது — 388—396

போலியோ நோயினால் சென்னையில் குழந்தைகள் பாதிக்கப் பெற்றுள்ளது — 269—279

ஒழுங்குப் பிரச்சினை

அவையில் சவால்கள், எதிர்சவால்கள் விடுதல் — 4 9



அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன் படுத்தும்முறை

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப்பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், (அ) என்றுபோடுவது, அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள்விளக்கம் வினாக்களைச் சுட்டும். எனினும், சட்ட முன்வடிவுகள் நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லா சட்ட முன்வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகரவரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப் பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும். குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப்பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது :

| | | |
|---|---|---|
| அ. | .. | அறிக்கை |
| அறிவி. | .. | அறிவிப்பு |
| அ.வி. | .. | அரை மணி நேர விவாதம் |

அ—தொடர்ச்சி


அங்காடிகள்—

தஞ்சை மாவட்டம், கூட்டுறவு, நுகர் பொருள் வாணிபக் கழகம்.

அங்குசாமி, திரு.ச.— 699

சட்டக் கல்லூரி, மாலை நேர வகுப்பு நிறுத்தம். 9—11

திருவாடானை, ஊராட்சி ஒன்றிய கட்டிடம். 525—527

திருவாடானை தொகுதி, மினி பேருந்துகள் 541—543

அச்சகம்—

திருச்சி, கட்டிடம், நிரந்தரம்—

அப்பாதுரை, திரு.மு.— 662

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல், ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவுகள். 433—435

போலியோ நோய், சென்னையில் குழந்தைகள் பாதிப்பு (ஒ.தீ.)

அம்பிகாபதி, திரு.மு.— 269

குடந்தையில் மருத்துவச் செலவு, மகாமகத்தை முன்னிட்டு.

அரங்கநாதன், திரு.எஸ்.— 642

தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ.)

தர்மபுரி, பட்டா வழங்கல். 175—176

அரங்கநாதன், திரு.மு.— 652

குன்னூர், குடிநீர், வடிகால் வாரிய வேலைகள்

தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ.) 19—20

அரங்கநாயகம், திரு.செ.— 171—172

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர் நடத்தை விதிகள் செய்வது குறித்து 9-7-80 அன்று பேரவை முன் வைக்கப்பெற்ற அறிவிப்புக்குத் திருத்தங்கள். 411, 412 —414

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குதல். (த.தீ.)

அரங்ரகாசன், திரு.வெ.— 315—319

தமிழ் நாட்டில் வறட்சி நிலை, (அ.த.தீ.)

174

அ—தொடர்ச்சி

அரசினர் தீர்மானங்கள்—

(1) தமிழ்நாட்டில் வறட்சி நிலை(விவாதம்.) 58—221

(2) பேரவை நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல் 626

அரிசனங்கள்—

அம்மாப்பட்டி, திருவில்லிபுத்தூர் தொகுதி, நில ஆர்ஜிதம். 671

கம்மசமுத்திரம், வடஆற்காடு, வீட்டு நில ஆர்ஜிதம். 672

கள்ளக்குறிச்சி, அரசினர் மாணவியர் விடுதி விரிவு படுத்தல். 656

கிளியாபட்டு, வடஆற்காடு, காலனியில் துவக்கப் பள்ளி ஆரம்பித்தல். 678

சத்திரமனை, திருச்சி மாவட்டம், வீட்டுமனை வழங்குதல். 690

தென் ஆற்காடு மாவட்டம், பட்டா வழங்கல். 650

தோட்டையூர், திருவில்லிபுத்தூர் தொகுதி குடிநீர் வசதி. 695

நிலம் கையகப்படுத்தப்பட்ட அளவு. 633

பட்டா, வீட்டு மனை, நெல்லை மாவட்டம். 665

பட்டா, வீட்டு மனைப் பட்டா, பழனி வட்டம் 630

பொம்மனாப்பாடி, திருச்சி மாவட்டம், வீட்டுமனை வழங்கல். 690

மணவாளநல்லூர், விருத்தாசலம், மனைப்பட்டா 685

வயலூர், விருத்தாசலம், வீட்டு மனை. 686

அலுவலர்கள்—

எம்.பி.பி.எஸ்., டாக்டர்கள், எண்ணிக்கை மற்றும் வேலை வாய்ப்பு. 244—247

அழகர்சாமி திரு. கோ.

உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள் (அ) 544

கத்திவாக்கம் நகரியம் சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப்பெற்றுள்ளது. (ஒ.தீ) 388, 392—393

தமிழ் நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ) 162—168

போலியோ நோய், சென்னையில் குழந்தைகள் பாதிப்பு (ஒ.தீ) 269

அறிக்கை அளித்தல்

மின்சாரம், வினியோகத்தில் கட்டுப்பாடு 624—625

விவசாய திட்ட வளர்ச்சிக்குழு அமைப்பு 177—179

அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

107 (1) விதியின்கீழ் திருத்த அறிக்கை 396—397

109-வது விதியின்கீழ் திரு உமாநாத் அளித்த அறிக்கை 279—283

அறிவிப்புகள்—

அறிவிக்கைகள், உறுப்பினர் கொடுத்தவை 543—545

பேரவை அலுவல் 341

மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி 33

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ளசெய்தி 556

அன்பழகன் திரு. க.—

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) 193—205

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குதல் (த.தீ) 314—31[illegible]
320,325, 328

அன்பழகன் திரு. தி.— 329

கடன் வழங்கல், கூட்டுறவு வங்கிகள் மூலம் 643

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) 173

ஆண்டித்தேவர் திரு. எஸ்.—

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல், ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிகள். 436—439

ஆலயங்கள்—

அன்பு இல்லங்கள், நடத்துதல் 626—627

சிவகாசி விஸ்வநாதசுவாமி கோவில் திருப்பணி 677

திருக்கல்யாணம், திருத்தேர்திட்டம் 225—229

திருத்தங்கல் நின்ற நாராயணப் பெருமாள் கோயில் பழுது பார்த்தல் 678

படவேடு ஸ்ரீ ரேணுகாம்பாள் சன்னதி

திருவில்லிபுத்தூர் வைத்தியநாதீஸ்வரர் கோவில் திருப்பணி, கோபுரத் திருப்பணி 515—516

677

வேதாரண்யம், திருத்தேர் ஓட்டுதல் 660

ஆறுமுகம் திரு. த.—

அரியலூர் சிமெண்ட் ஆலை, துணை தொழிற்சாலைகள் அமைத்தல் 653

கதர் மற்றும் கைத்தறித் துணிகள் தள்ளுபடி 257—252

தமிழ் நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) 100—102

"ஆ" தொடர்ச்சி

ஆறுமுகம் திரு. எம்.

இ. எஸ். ஐ. மருத்துவ மனை, காசநோய் பிரிவு, சிங்காநல்லூர் 14—17

சிறுவன் மரணம், மருத்துவ மனையில் உதகமண்டலம் (க. ஈ.) 555

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) 85—88

இயற்கை சீற்றங்கள்—

'இ'

இராமசாமியாபுரம் தீ விபத்து 353—356

இராகவானந்தம், திரு. எஸ்.

தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்டமுன்வடிவு, 1981 (ஆ. இ.) 416

இராசமாணிக்கம், திரு இரெ.

கடன் வழங்கல், கிராமிய வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் 698

குறுவை இருபோக சாகுபடி, நிலப்பரப்பு 698

தஞ்சை மாவட்டம் அங்காடிகள், கூட்டுறவு, நுகர்பொருள் வாணிபக் கழகம். 699

தஞ்சை மாவட்டம், வழித்தடங்கள் புதியவை 645

அனுமதி—

நுகர்பொருள் வாணிபக் கழகம், நெல் கொள்முதல் இலாபம் 644—645

பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1981

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்டமுன்வடிவு 1981 584—589

வீட்டுமனை, தாழ்த்தப்பட்டோருக்கு தஞ்சை மாவட்டம்— 628

இராசாம்பாள் திருமதி தா—

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) 151—154

தள்ளுபடி, வங்கிக்கடன், வபரம் 645—646

இராசாராமன் திரு. எஸ் —

சென்னை, ஆபாச சுவரொட்டிகள் அகற்றல் 696

சென்னை கால்நடைக் கல்லூரியில் இரத்த சேமிப்பு வங்கிதுவங்குதல் 679

விவசாயக் கடன் ரத்து சலுகை 368—370

இராசு, திரு ஜே.எஸ்.

128-202—2

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம்(தனி அதிகாரிகள்)நியமித்தல் ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவுகள். 476—480

சத்திரம்னை, திருச்சி மாவட்டம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை 690

"இ"—தொடர்ச்சி

இராசு திரு. ஜே. எஸ். தொடர்ச்சி

தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ. த. தீ.) .. 138—141

பொம்மனாப்பாடி, திருச்சி மாவட்டம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை .. 690

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.

முதலமைச்சர் மீது உரிமைப் பிரச்னை .. 48—52

இராமச்சந்திரன், திரு. ச.

அவையில் சவால்கள், எதிர் சவால்கள் விடுதல் (ஒ. பி.) .. 498

ஆத்தூர் காவல் துறையினர் தாக்குதல் இளைஞர் மீது (ஒ. தீ.) .. 546—547

உரிமைப் பிரச்னை முதலமைச்சர் மீது .. 44

தீர்மானம், விதி 25 (1) ன் படி பேரவையை ஒத்தி வைத்தல் .. 626

திரு. ரகுமான்கான் மீது உரிமைப் பிரச்னை .. 492—493, 494—495, 496—497

மின்சாரம், வினியோகத்தில் கட்டுப்பாடு (அ.) .. 62?—625

விவசாய திட்ட வளர்ச்சிக்குழு அமைப்பு (அறி.) 178—180

இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.

எம்.பி.பி.எஸ். டாக்டர்கள், எண்ணிக்கை மற்றும் வேலை வாய்ப்பு

ஒதுக்கீடு, தன்னிறைவுத் திட்டம் .. 244—247

வல்லம், தென்னாற்காடு, உணவுக்கு வேலைத் திட்டம் 1979–80, 1980–81 .. 527—532, 697

இராமசாமி, திரு. எஸ். என். .. 697

கத்திவாக்கம் நகரியம், சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப்பெற்றுள்ளது (ஒ. தீ.) .. 388

இராமசாமி, திரு. த.

தமிழ்நாட்டில் வறட்சி நிலை, (அ. த. தீ.) .. 97—100




'இ' தொடர்ச்சி.


இராமலிங்கம் திரு. செ.

பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்த சட்ட முன்வடிவு 1981. .. 568—570

போலியோ நோய், சென்னையில் குழந்தைகள் பாதிப்பு (ஒ. தீ.) .. 269

இராஜசேகரன் திரு. வெ.

சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணநகர் தொகுதி,

இராஜசேகரன் திரு. வெ.—தொடர்ச்சி

சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணநகர் தொகுதி வீடுகள், குடிசை மாற்று வாரியம் கட்டியவை. 651

இளையபெருமாள் திரு. எல்.

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல், ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவுகள். .. 444—449

சிதம்பரம்–காட்டுமன்னார்குடி சாலை, அகலப் படுத்துதல். .. 669

தென் ஆற்காடு மாவட்டம், பட்டா வழங்கல் அரிசனங்களுக்கு .. 650

பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்த சட்டச் முன்வடிவு 1981. .. 570—574

மருத்துவர்கள், கால்நடை மருத்துவ மனைகளில் 674

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் (த. தீ.) .. 340—341

'ஈ'

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு. பி.

அம்பாசமுத்திரம் நகர், தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துதல். .. 668

திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் 75:25 சட்டத்தை அமுல் படுத்துதல். .. 356—360

தொழிலாளர் காலனி, வீடுகள், மதுரை. .. 20—22

தொழிலாளர் நலன் பாதுகாப்புச் சட்டம் வேஸ்ட் காட்டன் தொழிலாளர்கள் .. 614

பக்கங்கள்.

நூல்களின் விலை, நெசவாளர் சங்கங்களுக்கு 637

விக்கிரமசிங்கபுரம் இ. எஸ். ஐ. மருத்துவமனை டாக்டர்கள் விபரம் .. 694

'உ'

உகம்சந்த் திரு. எஸ். டி.

மதுராந்தகம், தீ அணைப்பு நிலையம், ஆரம்பித்தல். .. 647

மதுராந்தகம், பொறியியல் வேளாண்மைக் கழகத்தின் டிராக்டர் வாடகை நிலையம் .. 697

உச்சி, திரு. கே.

தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ. த. தீ.) .. 141—142

உணவுப் பொருள்கள்—

கிராம மக்களுக்கு சர்க்கரை வினியோகம் .. 650

நெல் கொள்முதல்—நுகர் பொருள் வாணிபக் கழகம் .. 644—645

'உ' தொடர்ச்சி

உத்திராபதி, திரு. பொ.—

சுத்திவாக்கம் நகரியம், சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப் பெற்றுள்ளது (ஒ. தி.) .. 388

பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 .. 581—584

உமாநாத், திரு. ரா.—

உரிமைப்பிரச்சினை, "இந்து" பத்திரிகை மீது, அவை முன்னவர் விளக்கத்தில் தவறான தகவல்கள் (அறி). .. 279—281

சுத்திவாக்கம் நகரியம், சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப்பெற்றுள்ளது (ஒ. தீ.) .. 388

திருச்சி மைய சிறைச்சாலை, கைதிகள் மரணம், முருகேசன் கமிஷன் அறிக்கை .. 391—392

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர் நடத்தை விதிகள் செய்வது குறித்து—9-7-80 அன்று பேரவை முன் வைக்கப்பெற்ற அறிவிப்புக்குத் திருத்தங்கள். 367—368

397—411

.. 412—415



'உ' தொடர்ச்சி.

உள்ளாட்சி—தொடர்ச்சி. பக்கங்கள்

உரிமைப் பிரச்னைகள்—

அவை நடவடிக்கையை கண்காணிக்க போலீஸ் ஸ்பெஷல் பிராஞ்ச் அனுப்பிய சுற்றறிக்கை. .. 52—53

உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது (தீர்ப்பு) 36—38

ஊரகத் தொழில் அமைச்சர் மீது (தீர்ப்பு).. 266—267

திரு. அ. ரகுமான்கான் மீது .. .. 497—498

தீர்ப்பு .. 35—36

பேரவை உறுப்பினரை— காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லப் பெறுவது குறித்து. 234—266

முதலமைச்சர் மீது. .. 38—52

உள்ளாட்சி—

அங்கீகாரம், வீட்டு வரைபடம், கோபிச் செட்டி பாளையம். .. 532—533

ஆலங்குளம் தொகுதி, சாலை பழுது பார்த்தல் நிதி ஒதுக்கீடு. .. 689

இளையான்குடி தன்னிறைவுத் திட்டம் நிதி ஒதுக்கீடு. .. 672

காரைக்குடி நகராட்சி கட்டிடம், சொந்தமாகக் கட்டுதல் .. 653

கோபி நகர மன்ற மேல்நிலைப்பள்ளி, ஆய்வுக்கூடம் .. 646

சாலைகள், இணைப்பு சாலை இல்லாத கிராமங்கள், வட ஆற்காடு மாவட்டம் .. 633

சாலை, கீழ் அருணாசலபுரம் கிராமச்சாலை, நடுக்காட்டூர் .. 638

சிதம்பரம்— காட்டுமன்னார்குடி சாலை அகலப் படுத்தல் .. 668

சென்னை நகரம், சாலை சீரமைப்பு, அரசு நிதி உதவி 659

தன்னிறைவுத் திட்டம், ஒதுக்கீடு .. 527—532

நிதி உதவி, சிறப்புதவி, சென்னை நகருடன் இணைந்த பகுதிகள் .. 659

பரமக்குடி நகரசபை, முதல்தர நிலைக்கு உயர்த்துதல் .. 232—234

பாளையம், வேடசந்தூர் தாலுகா, பேருந்து நிலையம் .. 676

மதுரை நகர் அழகு படுத்தும் திட்டம் .. 674

மதுரை நகரப் பேருந்து நிலையம், நெரிசல் தவிர்த்தல். .. 660

உ—தொடர்ச்சி — பக்கங்கள்

உள்ளாட்சி—தொடர்ச்சி

மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், தன்னிறைவுத் திட்டம் .. 699
மரங்கள் பராமரிப்பு, (பருவழித் துறை சாலைகள் .. 642
வசதிகள், கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு .. 655
வடமதுரை, பேருந்து நிலையம் .. 676
வரிவிதிப்பு, ஆற்று மணல் எடுக்க, தேவகோட்டை 635—636
வல்லம், தென்னாற்காடு, உணவுக்கு வேலைத் திட்டம், 1979-80, 1980-81 .. 697

'ஏ'

ஏடுகள்—
பேரவை முன் வைக்கப் பெற்றவை .. 223, 345, 503—504, 626

'ஒ'

ஒத்திவைப்புத் தீர்மானம்(கள்)—
ஆத்தூர் காவல் துறையினர் ஓர் இளைஞரை தாக்கியதாகச் சொல்லப் பெறுவது .. 545—547
கத்திவாக்கம் நகரியத்தில் சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப் பெற்றுள்ளது .. 388—396
போலியோ நோயினால் சென்னையில் குழந்தைகள் பாதிப்பு .. 269—279

ஒழுங்குப் பிரச்னை—
அவையில் ''சவால்கள், எதிர் சவால்கள்'' விடுதல் குறித்து .. 498—499
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். 33—35

'ஓ'

ஓய்வூதியம்—
சென்னை மாவட்டம், மனுச் செய்தவர்கள், ஓய்வூதியம் பெற்றவர்கள் விபரம் .. 654

'க'

கட்டடம்—
ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவாடானை.. 525—527
சேலம் அரசு அச்சகம், சொந்தக் கட்டடம் .. 692—693
வாடகை, அரசு அச்சகங்கள் 693—694

பக்கங்கள்.

'க' தொடர்ச்சி.

கடன்கள்—
விவசாயக் கடன் ரத்து, சலுகை .. 368—370

கருணாநிதி டாக்டர் மு.—
சட்டமன்றத்திற்கு வானொலி தனது சொந்த நிருபரை அனுப்புதல் (த.கோ.) .. 57
டேப், உரை பதிவு செய்யப்பெற்றது பேரவைத் தலைவர் அறையில் போட்டுக் காட்டுதல் (த.கோ.) .. 267—268
திருச்சி, கோவை சிறைச் சாலைகளில் அளிக்கப் படும் உணவு (த.கோ.) .. 386—387
மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் (த.தீ.) .. 341

கருப்பையா, திரு. இரா.—
கத்திவாக்கம் நகரியம், சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப் பெற்றுள்ளது (ஒ.தீ.) .. 388
சிறுவன் மரணம், மருத்துவ மனையில், உதகமண்டலம் (க.ஈ.) .. 554—556
தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 117—119
போலியோ நோய், சென்னையில் குழந்தைகள் பாதிப்பு (ஒ.தீ.) .. 269

கல்வி—
சட்டக் கல்லூரி, சென்னை, தன்னாட்சி முறை. 362
தஞ்சாவூர், சரஸ்வதி மகால் நிர்வாகச் செலவு. 665—666
தமிழ் கலைக் களஞ்சியம் .. 330—361
நூலக ஆணைக்குழு, நியமனம், மாவட்ட வாரியாக .. 640

கல்வி—தொடர்ச்சி
பாலிடெக்னிக், மாணவர்கள் சேர்க்கை .. 631
விருத்தாசலம், கொளஞ்சியப்பர் கலைக்கல்லூரி புதிய வகுப்புகள் .. 681

கல்விக்கூடங்கள்—
சட்டக் கல்லூரி, மாலை நேர வகுப்பு நிறுத்தம். 9—11
தந்தை பெரியார் கலைக் கல்லூரி, கடலூர், பட்ட மேற்படிப்பு வகுப்புகள். .. 12
நடுநிலைப் பள்ளிகள் தமிழ்ப் புலவர்கள் நியமனம். .. 363—366
விவசாயக் கல்லூரி, குடுமியான் மலை .. 230—231
வைகை அணை காலனி, பயிற்சிப் பள்ளி. .. 657

'க'—தொடர்ச்சி


பக்கங்கள்.

கலியமூர்த்தி, திரு. பெ.—

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) .. 148—151

கலையரங்கம்—

வேலூர், அறிஞர் அண்ணா கலையரங்கம், வசூல் .. 649

கவனஈர்ப்புகள்—

உணவுப் பொருள்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி அளவு குறைப்பு (க.ஈ.) .. 283—287

சிறுவன் மரணம், மருத்துவமனை, உதகமண்டலம் .. 517—556

தென்னை மரங்கள் "தஞ்சை வாடல் நோய்" .. 54—56

கால்நடைகள்—

நடமாடும் செயற்கை முறை உள்ளீட்டுப் பணி, கொடைக்கானல் .. 261—262

காளிமுத்து திரு. க.—

தென்னை மரங்கள், தஞ்சை வாடல் நோய் (க.ஈ.) .. 54—55, 56

கிட்டப்பா, திரு. என்.—

அம்பத்தூர் தொழிற்பேட்டை சிறு, நடுத்தர, பெரிய தொழில் நிறுவனங்கள் .. 630

உதட்டுச் சாயத் தொழிற்சாலை அமைத்தல் .. 636

சென்னை கால்நடைக் கல்லூரி, இரத்த சேமிப்பு வங்கி துவங்குதல் .. 679

தமிழ்க் கலைக் களஞ்சியம். .. 360 361

கிருட்டிணமூர்த்தி திரு. சா.—

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) .. 176—177

கிருஷ்ணன், திரு. ரா.—

அரிசனங்கள். வீட்டு மனைப்பட்டா, மனுக்கள் நெல்லை மாவட்டம் .. 665

சங்கரன் கோவில், மாவட்ட முன்சிப்-கம் சப் டிவிஷனல் ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைத்தல் .. 670

சென்னை, கூவம் நதியின் துர் நாற்றத்தைப் போக்கும் திட்டம். .. 379—380

தஞ்சாவூர் சரஸ்வதி மகால், நிர்வாகச் செலவு. 665—666

நூலக ஆணைக்குழு நியமனம், மாவட்ட வாரியாக .. 640




க—தொடர்ச்சி.


மருத்துவமனைகள் நிர்வாகக் கண்காணிப்பு மக்கள் ஆலோசனைக் குழுக்கள் .. 240—244

மருத்துவ மேல்பட்டப் படிப்பு, மாணவர்கள் எண்ணிக்கை .. 632

விஸ்வநாதபுரம் பிரம்பு—மூங்கில் தொழிலாளர் சங்கம் .. 638—639

கு

குடிநீர்—

இடைச்சித்தூர், விருத்தாசலம் ஒன்றியம் பாதுகாக்கப்பட்ட நீர் வசதி .. 682

ஒட்டிமேடு, கம்மாபுரம் ஒன்றியம் குடிநீர் வசதி .. 684

காவிரி நீர் சென்னைக்குக் கொண்டு வருதல் .. 373—374

பெருவாப்பூர் காலனி, கம்மாபுரம் ஒன்றியம் குடிநீர் வசதி .. 683

மதுரை நகரில், பற்றாக்குறை 377—379

பாவிடந்தல், கம்மாபுரம் ஒன்றியம் நீர்த் தேக்கம் மோட்டார்பழுது .. 684

மு. பட்டி குடிகாடு காலனி, விருத்தாசலம் குடிநீர் திட்டம், பாதுகாக்கப்பட்டது .. 682

மு. பட்டி, விருத்தாசலம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் .. 682

மு. பதூர், விருத்தாசலம் குடிநீர்த்தேக்கம் .. 683

வசதி விரிவுபடுத்தல், திருச்சி .. 17—19

வாரிய வேலைகள், குன்னூர் .. 19—20

வேட்டக்குடி, விருத்தாசலம் குடிநீர் வசதி .. 683

குடும்ப நலம்—

அறுவை சிகிச்சையினால் இறப்பு, குடும்பங்களுக்கு இழப்பு ஈடு .. 247—251

பக்கங்கள்

தனபால், திரு. ப.

வரவு—செலவுத் திட்டம் 1981–82 பொ. வி. 324—330

தனுக்கோடி தேவர், திரு. கே.

வரவு-செலவுத் திட்டம், 1981-82, பொ. வி. 374—377

தன்னிலை விளக்கம்

திரு. ரா. உமாநாத் அளித்தல்.

தாமரைக்கனி, திரு. இரா.—

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்கள் 521—52

கழிவுநீர் வடிகால்களின் மூடிகள் .. 174

கு —தொடர்ச்சி.

குப்புசாமி, திரு. செ.—
தமிழ்நாட்டின் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 154—157

குமரி அனந்தன், திரு.—
வரதட்சணைக் கொடுமை, தற்கொலைகள் .. 29—31

குழந்தைவேலு திரு. பெ.—
தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 23/81 (ஆ.நி.) ..
தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக்குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 24/31 (ஆ.நி.) ..
தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு 25/81 (ஆ.நி.) ..
தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 26/81 (ஆ.நி.) ..
1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 27/81 (ஆ.நி.) ..
1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 28/81 (ஆ நி.) .. 418,419
480—492
499—503
மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் (த.தீ.) .. 328

குழுக்கள்—
விவசாயத் திட்ட வளர்ச்சிக் குழு அமைப்பு .. 175—180

குற்றங்கள்—
வரதட்சணைக் கொடுமை தற்கொலைகள் .. 29—31

கூட்டுறவு—
கடன் வழங்கல், கிராமிய வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் .. 698
கடன் வழங்கல், வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு. 643
தள்ளுபடி, வங்கிக்கடன், விபரம் .. 645—646
திருவில்லிபுத்தூர், நிலவள வங்கிகள் செயல்படாமை .. 657
தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனை சங்கம் .. 37[illegible] 373
வட ஆற்காடு நெசவாளர் சங்கங்கள் .. [illegible] 69



க தொடர்ச்சி.

கைத்தறி—
கதர் மற்றும் கைத்தறித் துணிகள் தள்ளுபடி .. 257—259
நெசவாளர் பாலியஸ்டர் நூல் வழங்குதல் .. 254—257

கோபால், திரு. சி.—
சோளிங்கர் மருத்துவமனை, விரிவாக்கம் .. 651

கோபாலன், திரு. ஆர். டி.—
சண்முகா நதி குறுக்கே அணை .. 25

கோபாலகிருஷ்ணன், திரு. கா.—
கொடைக்கானல், கால்நடைகள் நடமாடும் செயற்கைமுறை உள்ளீட்டுப் பணி .. 261—262
கொடைக்கானல் வழக்குகள் விசாரணை .. 371
தையல் இயந்திரம், விதவைகளுக்கு .. 649

கோமதி சீனிவாசன் திருமதி—
துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம் (அறி) .. 396—397

கோவைத்தம்பி, திரு.—
கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன் வடிவு 1982. 564—565
பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981 புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப் பெற்ற பகுதிகளைச் சார்ந்த பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்த சட்ட முன்வடிவு 1981 .. 577—585
மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் (த.தீ.) .. 305,306,
342—345

ச

சங்கம்—
சேலம் அரசினர் பிராந்திய அச்சகத் தொழிநாளர் கூட்டுறவு சங்கம், அங்கீகாரம் .. 693
விஸ்வநாதபுரம், பிரம்பு-மூங்கில் தொழிலாளர் சங்கம் .. 638—639

சங்கரய்யா, திரு. என்—
அவையில் சவால்கள், எதிர்சவால்கள் விடுதல் (ஒ.பி) .. 488 499
தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 181—186

சட்டம், ஒழுங்கு—
கீரனூர் மோசடி, ரூபாய் நோட்டு இரட்டிப்பு .. 642

சட்டநாத கரையாளர், திரு. சி.—
தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 91—954

ச. தொடர்ச்சி—

சட்ட முன்வடிவுகள்—

1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (ஆ.நி.) .. 418—503

1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (ஆ.நி.) 418—503

1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (ஆ.நி.) .. 418—503

1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு .. 418—503

1981 ம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு .. 418—503

1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு .. 418—503

கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.நி.) .. 556—567

நிறைவேற்றல் .. 567

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்த) சட்டமுன்வடிவு (ச. மு. எண். 5/81)

தமிழ்நாடு 1981ம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (ச. மு. எண். 1081) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (ச. மு. எண். 14/81) மேலவைச் செய்தி 556

தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்டமுன்வடிவு, 1981. (ஆ.கு.) .. 416

பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப் பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்த சட்டமுன்வடிவு, 1981 (ஆ.நி.) . 568—596

நிறைவேற்றல் .. 596—600

வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு 1981 (ஆ. நி.) .. 601—618

நிறைவேற்றல் .. 618—623

சத்தியமூர்த்தி திரு. வ.—

தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ. த. தீ.) .. 160—162



ச—தொடர்ச்சி.

சபாபதி, திரு. சி.—

தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ. த. தீ) .. 171

சமரசம், டாக்டர் கே.—

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல், ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவுகள். 449—453

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் (த. தீ.) .. 321
325—326

சமூகநலம்—

தையல் இயந்திரம், விதவைகளுக்கு . 649

பரனூர் தொழுநோயாளிகள் குடியிருக்கும் கட்டிடம் .. 687—688

பிச்சையெடுப்பதைத் தடுக்கும் சட்டம் . 259—261

சாமிக்கண்ணு திரு. தா.

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 127

சாலைகள்

சீரமைப்பு, வேதாரண்யம்-தஞ்சாவூர் சாலை .. 524—525

திருப்பத்தூர் சாலைகள், அகலப்படுத்தி அழகு படுத்துதல் .. 231—23

சிதம்பரம், திரு. சி. த.—

காரைக்குடி, நகராட்சி கட்டிடம், சொந்தமாக அமைத்தல் .. 653

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 61—64

சிந்தன், திரு. என். எஸ். வி.

கத்திவாக்கம் நகரியம், சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப் பெற்றுள்ளது. (ஓ.தீ.) .. 388—389

சிறைச்சாலைகள், கைதிகள் எண்ணிக்கை .. 648

திருமங்கலம் உபமின் நிலையம், விரிவாக்கல் .. 661

தென்னை மரங்கள். தஞ்சை வாடல் நோய் (க.ஈ.) 54—56

போலியோ நோய், சென்னையில் குழந்தைகள் பாதிப்பு (ஓ.தீ.) .. 269—270

மதுரை குடிதண்ணீர் பற்றாக்குறை .. 377—379

மதுரை மத்திய பஸ் நிலையம் நெரிசல் தவிர்த்தல் .. 660

விவசாயிகள் கூட்டுறவு கடன்கள் ரத்து .. 26—29

ச. தொடர்ச்சி.—


சிவசாமி, திரு. செ.
- இளையான்குடி, தன்னிறைவுத் திட்டம் நிதி ஒதுக்கீடு .. 672
- பரமக்குடி நகரவை, முதல் தர நிலைக்கு உயர்த்துதல் .. 232—234
- போலியோ நோய், சென்னையில் குழந்தைகள் பாதிப்பு (ஒ.தீ.) .. 276
- மதுரை நகர் அழகுபடுத்தும் திட்டம் .. 674
- வரிவிதிப்பு, ஆற்றுமணல் எடுக்க, தேவகோட்டை 635

சிவஞானம், திரு. ந.
- ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல், ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவுகள் .. 475—476
- தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) .. 123—125

சிவப்பிரகாசம், திரு. ஓ.
- கூவம் நதியின் துர்நாற்றத்தைப் போக்கும் திட்டம். .. 379—380
- கைத்தறி நெசவாளர்கள், பாலியெஸ்டர் நூல் வழங்குதல் .. 254—257

சிவராமன், திரு. எஸ்.
- கள்ளக்குறிச்சி, அரசினர் மாணவியர் விடுதி, விரிவாக்கல் .. 656
- தமிழ்நாட்டில் வறட்சி நிலை .. 107—109

சிறைச்சாலைகள்
- கைதிகளின் எண்ணிக்கை .. 648
- கைதிகள் மரணம், திருச்சி, முருகேசன் கமிஷன் அறிக்கை .. 367—368

சின்னசாமி, திரு. எம்.
- சோழவரம் மோட்டார் பந்தய டிக்கட்டுகள் மீது வரி .. 7—9
- வசதிகள், கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு .. 655

சுந்தரம், கே. ஆர்.
- தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 74—78
- விடுப்பு, பிரசவ விடுப்பு, பெண் தொழிலாளர்கள். .. 628—629




சு—தொடர்ச்சி


சுந்தரம், திரு. ப.
- தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 121—123
- திருப்பத்தூர் சர்க்கரை ஆலை, வடாற்காடு மாவட்டம், கரும்பு விலை நிர்ணயம் .. 670
- திருப்பத்தூர் சாலைகள் அகலப்படுத்தி, அழகுப்படுத்துதல் .. 231—232
- திருப்பத்தூர், வடாற்காடு கட்டிடம் வணிகவரி அலுவலகம் .. 63
- திருப்பத்தூர், வடாற்காடு தொழிற்பேட்டை சிட்கோ மூலம் தொடங்குதல் .. 668
- ஜோலார்ப்பேட்டை, டவுன் பஸ் விடுதல் .. 660

சுந்தரராஜ், திரு. நா.
- தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 188—193
- மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் (த.தீ.) .. 321—344
- முதலமைச்சர் மீது (உ.பி.) .. 38—42

சுப்பிரமணியன், திரு. உ.
- தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 66—71

சுற்றுலா
- செங்கல்பட்டு ஏரி, உல்லாசப் படகு .. 695
- சென்னை, வர்த்தகப் பொருட்காட்சி வருமானம் .. 685
- மதுரை நவீன வசதி ஓட்டல் .. 656

செங்கோட்டையன், திரு. கு. அ.
- கோபி நகர மன்ற மேல்நிலைப் பள்ளி ஆய்வுக்கூடம் .. 646
- கோபி, வீட்டு வரைபட அங்கீகாரம் .. 532—533

செம்மலை, திரு. செ.
- ஓமலூர் அரசு மருத்துவமனை, பிணம் அறுக்கும் கிடங்கு, பழுது .. 667
- கட்டிடங்கள், வாடகை கட்டிடங்கள், அரசு அச்சகங்கள் .. 693—694
- சேலம் அரசு அச்சகம், சொந்தக் கட்டடம் .. 692—693
- சேலம் அரசு பிராந்திய அச்சகத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் .. 693
- தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 58—65
- தொளசம்பட்டி, ஓமலூர் வட்டம், ஏரி மராமத்து .. 61

தலைவர்

தீர்ப்புரைகளும்– குறிப்புரைகளும்

உரிமைப் பிரச்சினைகள்.

பக்கம்

அவை நடவடிக்கையைக் கண்காணிக்க போலீஸ் ஸ்பெஷல் பிராஞ்ச் அனுப்பிய சுற்றறிக்கை குறித்து பேரவையில் 27-2-81 அன்று சில உறுப்பினர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்னைக்கு அரசுத் தரப்பில் பேரவை முன்னவர் தம் விளக்கத்தை அளித்தார். தலைவர் இதுபற்றி தம் தீர்ப்பை* பின்னர் அறிவிப்பதாகக் குறிப்புரைத்தார். .. .. 52—53

உறுப்பினர் ரகுமான்கான் மீது உரிமைக் குழுவிற்கு அனுப்புதல்.

"பொள்ளாச்சி நாராயணா தியேட்டர் உரிமையாளருக்கு தவறான முறையில் சலுகை காட்டப்பட்டுள்ளது. அவர் அமைச்சர் திரு. குழந்தைவேலுவின் சொந்த மாமனார்" என்பதாக திரு. ரகுமான்கான் அவர்கள் 6-3-81 அன்று பேரவையில் குறிப்பிட்டார்கள். .. .. ..

அமைச்சர் அக்குற்றச்சாட்டை மறுத்தார். எனினும் உறுப்பினர் தம் குற்றச்சாட்டைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தியதோடு தாம் சொன்னதை திரும்பப்பெறமாட்டேன் என்று வாதிட்டது, அவை உரிமையை மீறிய செயலாகும், என மின்துறை அமைச்சர் கொண்டு வந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பபெற்றது. .. .. 497—498

உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் மீது— (தீர்ப்பு)

29-1-81 அன்று திரு. அ. ரகுமான்கான் அவர்கள் செய்தி அறநிலைய அமைச்சர் மீது உரிமை மீறல் பிரச்சினையை கொண்டு வந்தபோது, அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தபிறகும் தன் குற்றச்சாட்டை வலியுறுத்தினார் என்று அவர் மீது 4-2-81 அன்று பேரவையில் ஓர் உறுப்பினரால் எழுப்பப்பெற்ற உரிமைப் பிரச்சினை மீது தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார்:

* 25-3-81 அன்று தீர்ப்பு அளிக்கப்பெற்றது.



பக்கம்.

'உறுப்பினர் ரகுமான்கான் முதலில் குற்றச்சாட்டுகளைக் கூறியபோதும், பின்னர் உரிமை மீறல் குற்றச்சாட்டை வலியுறுத்தியபோதும் அதற்கான முழு ஆதாரங்களை வைத்திருக்கவில்லை. உறுப்பினர்கள் தங்களிடமுள்ள ஆதாரங்களைப் பேரவைத் தலைவருக்கு முன்னதாகக் காட்டி, குற்றம்சாட்டப்பட்ட உறுப்பினர் அல்லது அமைச்சருக்கு முன் தகவல் அளித்தபின்தான் குற்றச்சாட்டுகளை அவையில் எழுப்பலாம் என்று இதற்கு முன் ஒரு தீர்ப்பில் நான் கூறியுள்ளேன். எனவே, தருந்த ஆதாரங்கள் இன்றி குற்றச்சாட்டுக்களை கூறினார் என்று எடுத்துக்கொள்ளலாமேயொழிய, வேறு விதமான ஆதாரங்கள் இருந்தும் அவற்றை வேண்டுமென்றே மறைத்து, மாண்புமிகு அமைச்சர் மீது குற்றச்சாட்டுகளைக் கூறினார் என்று எடுத்துக்கொள்வதற்கில்லை. மேலே குறிப்பிட்டுள்ளதுபோல் ஆதாரங்களை முன்னதாகக் காட்டிவிட்டு முன் தகவல் அளித்துவிட்டுக் குற்றச்சாட்டுகளை எழுப்பும் வழக்கம் கடைபிடிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி, இதை எல்லா உறுப்பினர்களும் கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை.' .. .. 35—36

உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது.

7-2-1982 ஆம் நாளன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு வெளியே ஒரு கூட்டத்தில் பேசிய ஒரு பேச்சு எதிர்கட்சித் துணைத் தலைவர் பொறுப்பை வேண்டுமென்றே குறைத்து மதிப்பிடுவதாக உள்ளது என்றும், மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதவியைப் பயன்படுத்தி தனது நேர்முக உதவியாளர் மூலம் அப்பேச்சின் சுருக்கமாக வெளியிட்டுள்ள அறிக்கை சட்ட மன்றத்தைத் தாழ்வுபடுத்துவதாக உள்ளது என்றும், ஓர் உறுப்பினர் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை மீது தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார் :— ..

பக்கம்.

தமது பேச்சின் சுருக்கத்தை வெளியிட்ட தமது நேர்முக உதவியாளர் அரசு சம்பளம் பெறும் அரசு அலுவலர் அல்லர், மேலும் அரசு முத்திரையுடனோ, அரசு வெளியீடாகவோ அது வெளியிடப்படவில்லை, தனிப்பட்ட முறையில் ஒரு அரசியல் கூட்டத்தில் தாம் பேசிய பேச்சு அது, ஆகவே, அதில் தன் பதவியை எந்தவிதத்திலும் முறை தவறிப் பயன் படுத்தவில்லை, ஆகையால் இதில் அவை உரிமை மீறல் எழுவதற்கில்லை என்று அமைச்சர் குறிப் பிட்டதில், மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் உள்ளதா என ஆராய்கையில், ''வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அரசின் செய்தி வெளியீடு என்பதாக எங்கும் குறிப்பிடப்பட வில்லை. மேலும் அரசு சின்னமோ அல்லது அரசு முத்திரையோ ஏதுமில்லை. ஆனால் உள்ளாட்சித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் என்னும் ரப்பர் ஸ்டாம்ப் உள்ளது. அமைச்சர் அவர்கள் அரசாங்க உதவியாளர் அல்ல என்று தெளிவுபடுத்தியுள்ளார். கூறப்பட்டுள்ள பொருள் ஒரு அரசியல் மேடையில் பேசப்பட்ட பேச்சாகும். அதனால், அவையில் உள்ளவர்கள் இயங்குவதற்கு எந்த வகையிலும் அச்சுறுத்தப் படுவதாகவோ, அல்லது தடை செய்வதாகவோ எடுத்துக்கொள்ள இயலாது. கண்ணியக் குறைவாக அமைந்துள்ளது என்று எடுத்துக்கொண்டாலும் கூட, அதைப் பற்றி அவையில் எந்தவிதமான நடவடிக் கையும் எடுக்கஇயலாது. இம்மாதிரியான செயல்கள், நமது அரசியல் பொது வாழ்வில் எந்த அளவிற்குச் செல்கிறது என்று வருத்தப்படுவதைத் தவிர இந்த அவை வேறு ஒன்றும் செய்ய இயலாது'' என்று கூறி, இதேமாதிரியான பிரச்சினையில் 1955-ல் பேரவைத் தலைவராக இருந்த திரு யூ. கிருஷ்ணாராவ் அவர் களின் ஆங்கில அறிவுரையை மேற்கோள் காட்டி, எழுப்பப்பட்ட பிரச்சினையில் உரிமைமீறல் எதுவும் இல்லை." .. .. .. 36—38

ஊரகத் தொழில் அமைச்சர் மீது.—

உறுப்பினர் ஒருவர் தாம் கைது செய்யப்பெற்றது குறித்தும், அவருக்கு மருத்துவ மனையில் அளிக்கப் பட்ட சிகிச்சை குறித்தும், மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் அளித்த தகவல்கள் தவறானவை என 10–2–1981 அன்று எழுப்பிய உரிமை மீறல் பிரச்னை குறித்து தலைவர் கீழ்க் கண்டவாறு தீர்ப்பளித்தார் :—





பக்கம்.

''மாண்புமிகு பேரவை முன்னவர் அளித்த தகவலில், குறிப்பிட்ட நிகழ்ச்சி அவைக்கு வெளி யிலே நடைபெற்றது என்றும், அது குறித்து காவல் துறையினர் அளித்த தகவல்களைத்தான் அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார் என்றும், அவர் வேண்டுமென்றே அவையை திசை திருப்ப வேண்டும் என்று கூறியதாக சொல்ல முடியாது என்றும், இதில் வழக்கொன்று விசாரணையில் உள்ளதால், உண்மை நிலை கட்டாயமாக தெரியவரும்போது, அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது எனவே, இப்பிரச்சினையை மேலெழுந் தவாரியாகப் பார்க்கும்போது, அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை." .. .. .. 266—267

பேரவை உறுப்பினரைக் காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லப்பெறுவது.—

பேரவை உறுப்பினர் ஒருவர் தன்னுடைய தொகுதிப்பணிக்காக அதிகாரிகளை காணச் செல் கையில், காவல் துறையினரால் தாக்கப்பட்டார் என்றும், பேரவையில் அவர்கள் ஆற்றிய உரைக்குப் பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இது செய்யப்பட்டதாகவும், 29-1-81 ஆம் நாளன்று பேரவையில் ஒரு உறுப்பினர் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினைக்கு தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார் :— ..

''சென்னை நகர காவல் சட்டத்தின் 41–வது பிரிவின் கீழ் அமுலில் இருந்த தடை உத்தரவை மீறி யதற்காகவும், சாலையின்குறுக்கே படுத்து போக்கு வரத்துத் தடை செய்ததற்காகவும், தடையை நீக்க வந்த காவல் துறையினரைத் தடுத்துக் கலவரம் ஏற்படக் காரணமாயிருந்ததாலும் அந்த உறுப் பினர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்ட தாகவும், இது குறித்து வழக்கு விசாரணையில் உள் ளதாகவும் அரசுத் தரப்பில் விளக்கம் தரப்பட்ட தோடு, பேரவையின் 314–வது விதியின் கீழ் அது குறித்து முறையாக பேரவைத் தலைவருக்கு அரசுத் துறையிடமிருந்து தகவல் தரப்பட்டிருக்கிறது. உறுப்பினர் தனது அறிவிப்பில் கூறியதற்கு சரியான ஆதாரங்கள் கொடுக்கவில்லை. உறுப்பினர்கள் தங்கள் தொகுதிக்கான பணிகளை ஆற்றும்போது அமுலில் உள்ள சிவில் மற்றும் கிரிமினல் சட்டங் களுக்கு உட்பட்டுத்தான் பணியாற்றவேண்டும்.

பக்கம்.

அவ்வூறின்றி அவர்கள் புறம்பாகச் செயல்பட்டு அதனால் தண்டிக்கப்பெற்றால் அல்லது நடவடிக்கை தொடரப்பட்டால், அது பேரவையின் உரிமையை மீறுவதாக ஆகாது. மேலும் இது குறித்து வழக்கொன்று நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், எழுப்பப்பெற்ற பிரச்சனையில் மேலெழுந்தவாரியாகக் கூட அவை உரிமை மீறல் எழவில்லை". .. 264—266

மாண்புமிகு முதலமைச்சர் மீது.
"அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவ மனை திறப்பு விழாவில் (இ) காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் கைலாசம் கமிஷனுக்கு மறைமுகமாக சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று நிர்பந்தம் செய்கின்ற வகையில், அந்தக் கமிஷனை மிரட்டி இந்தக் கருத்தை ஏற்க செய்கின்ற வகையிற் மாண்புமிகு முதலமைச்சர் பேசியிருப்பதாக"— பேரவை உறுப்பினர்கள் சிலர் எழுப்பிய அவை உரிமை மீறல் பிரச்சினையில், பின்னர் தீர்ப்பளிப்பதாக குறிப்புரைக்கப்பெற்றது .. .. 38—526

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

கத்திவாக்கம் நகரியத்தில் சுடுகாட்டுக்குச் செல்வதற்கான வழி மூடப்பட்டதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை அரசுக்கு வலியுறுத்த பேரவை உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் நேற்று இரவு முதல் உண்ணா விரதம் மேற்கொண்டுள்ளதால் அங்கு பதட்ட நிலை ஏற்பட்டுள்ளதால் அது பற்றி விவாதிக்க—

வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. 388—396

சென்னை நகரிலே கடந்த இரண்டு நாட்களிலே போலியோ நோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்ட 17 குழந்தைகளில் 6 பேர் இறந்து விட்டதாலும், மேலும் சிலர் அபாயகரமான நிலைமையிலே உள்ளதாலும் மக்கள் மத்தியிலே உள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க—

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. 269—279





பக்கம்.

15-2-1981 அன்று ஆத்தூர் காவல் துறையினர் 20 வயது ராஜு என்பவரைத் தாக்கியதன் விளைவாக அவரது இரு கண்களும் பாதிக்கப்பட்டதால் அவர் பார்வை இழந்த காரணத்தால் அப்பகுதி பொது மக்களிடத்திலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க—

மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. .. 545—547

ஒழுங்கு—

பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பெயரில் உறுப்பினர்கள் எல்லாவற்றையும் அவையில் எழுப்பக் கூடாது. நடைமுறை விதிகள் மாறுபடுகிற போது தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியும் .. 34

ஒழுங்குப் பிரச்சினை—

சட்டமுன்வடிவின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளிக்கையில் அமைச்சர் அவர்கள் ஒரு திருத்தத்தைச் சொன்னபோது இப்படி திருத்தம் கொண்டு வருவது சரியல்ல, அது முறையாகக் கொண்டு வரப்படவேண்டும் என்பதாக ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி
அதன் மீது தலைவர் தீர்ப்பளிக்கையில் "அமைச்சர் அவர்கள் திருத்தம் கொடுக்க வேண்டுமென்றால் அதைத் தனியாகக் கொண்டு வரலாம்" எனக் குறிப்பிட்டார். .. .. .. .. 482

கவனஈர்ப்பு—

அமைச்சர் அறிக்கையைப் படித்தபிறகு, உறுப்பினர்கள் சுருக்கமாகக் கேள்வி கேட்கவேண்டும் .. 550

சட்ட முன்வடிவு—

குறிப்பிட்ட மசோதாவில் மட்டும்தான் பேச வேண்டும். வேறு பொருள்கள் குறித்து பேசுதல் கூடாது .. .. .. .. .. 467, 605

குற்றச்சாட்டுகள் வேண்டாம் .. .. 606

தகவல் கோரல்—

தலைவர்—தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி—

பக்கம்.

சட்டமன்றத்திற்கு வானொலி தனது சொந்த நிருபரை அனுப்பவேண்டும் என்பது குறித்து எதிர்க் கட்சித் தலைவர் எழுப்பியதற்கு, ''கட்சி சார்பற்ற முறையில் வானொலியில் செய்தி வரவேண்டும் என்ற உணர்வு சரிதான். இது குறித்து இந்த அவையில் சார்பாக வானொலி நிலையத்தாருக்கு ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கிறது'' என்று குறிப்புரைக்கப் பெற்றது .. .. .. .. 5

தாங்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினைகள் எடுத்துக் கொள்ளப்பெறாதது குறத்து ஓர் உறுப்பினர் பிரச்சினையை எழுப்பியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

''உரிமைப் பிரச்சினை எடுத்துக்கொள்வதும் எடுத்துக் கொள்ளாததும் என்னுடைய உரிமை ஏற்கனவே இந்தச் சபையிலே பலமுறை அதைப் பற்றி தீர்ப்புகளை அளித்திருக்கிறேன். இது சம்பந்தமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறேன். அதை எடுத்துக் கொள்கிறேனா, இல்லையா என்பதை பற்றி என்னுடைய அறையிலேதான் கேட்கவேண்டுமே தவிர இங்கே கேட்கக் கூடாது. .. 268—269

நடைமுறை—

ஐந்தாறு சட்டமுன்வடிவுகள் ஒரே பொருள் குறித்து உள்ளதால் அவற்றை ஒன்றாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அமைச்சர் கோரியபோது ''விவாதத்தை ஒன்றாக வைத்துக்கொண்டு, நிறைவேற்றுதலை தனித்தனியாகச் செய்யலாம் என்று தீர்ப்பளிக்கப்பெற்றது .. .. .. 417

ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து அவையில் கேட்பது சரியல்ல. 544

நீக்கம்

உரிமைப் பிரச்னை குறித்து தலைவரின் தீர்ப்பு வழங்கிய பின்னர், அது பற்றிய சில பகுதிகள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் திரும்பவும் பேசப்படுவதை ஆட்சேபித்து, பேரவையில் உறுப்பினர் ஒருவர் எழுப்பிய வேண்டுகோளுக்கிணங்க அந்தப் பகுதிகள் நீக்கம் செய்யப்பெற்றன .. .. .. 56





தலைவர்—தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் தொடர்ச்சி—

பக்கம்.

நடைமுறை—தொடர்ச்சி

ஏற்கனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய வார்த்தைகளை மீண்டும் சொன்னதால் நீக்கப் பெற்றது .. .. .. .. 89

ஒழுங்குப் பிரச்னை என்ற பெயரில் உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை ஒன்றுக்கு அனுமதி மறுத்து நீக்கம் செய்யப்பெற்றது.

குறிப்பிட்ட பத்திரிகையின் பெயர் அவையிலே இடம்பெறுவது சரியல்ல என்று பேரவை உறுப்பினர் ஒருவரால் ஆட்சேபிக்கப்பட்டதால் நீக்கப்பெற்றது. 381—382

கேள்வி நேரத்தில் ஒரு உறுப்பினருக்கும், தலைவருக்கும் இடையே நடைபெற்ற ஒரு விவாதம் நீக்கப்பெற்றது .. .. .. 532

சட்டமுன்வடிவிற்கு சம்பந்தமில்லாமல் பேரவை உறுப்பினர் ஒருவரால் சொல்லப்பட்ட சில வார்த்தைகள் நீக்கப்பெற்றன .. .. 468

துணைக் கேள்வியில் ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட சில வார்த்தைகள் நீக்கப்பெற்றன. .. 226,25

பேசும் முறை—

அவையில் எடுத்துக்கொண்ட பொருளில் மட்டும் பேசவேண்டும். அவைக் குறிப்பிலிருந்து ஏற்கனவே நீக்கிய வார்த்தைகளை மீண்டும் உபயோகிக்கக் கூடாது .. .. .. .. 89

உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் பேச்சுக்களைப் பற்றி பேசவேண்டாம். அவை விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றி மட்டும் பேசவேண்டும் .. .. .. .. 329

பேரவையில் காட்டப்பெறும் பொருள்கள்.

ஓர் உறுப்பினர் சில படங்களை அவையில் காட்டி அமைச்சரிடம் கொடுக்க முற்பட்டபோது, தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:—

''பேரவைத் தலைவரிடம் முன்கூட்டியே காட்டி அவரது அனுமதியைப் பெற்ற பிறகுதான் அவையில் சமர்ப்பிக்கவேண்டும். அவையிலே போட்டோ பிரதி போன்றவற்றை திடீரென்று கொண்டு வந்து காட்டக் கூடாது (க, ஈ.) .. 55

வினாக்கள்-விடைகள்.

அமைச்சர்கள் சுருக்கமாக பதில் அளிக்கவேண்டும் (து.வி.) .. .. .. .. 32

அமைச்சருக்கு யோசனை சொல்லக்கூடாது (து. வி.) .. .. .. .. 31

கற்பனையில் கேள்விகள் கேட்கக்கூடாது (து.வி.) 28

குற்றச்சாட்டுகள், மற்ற விவரங்கள் தேவையில்லை (து.வி.) .. .. .. 384, 53

சுருக்கமாக கேட்கவேண்டும். அதன் உள் விவரங்களை விளக்க வேண்டாம். (து. வி.) .. 29

சுருக்கமாக மூலக்கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும். மிகப்பொதுவாகவும், கேட்கக்கூடாது (து.வி.) .. .. ..372,515,527

மற்ற பிரச்னைகளைப் பற்றி கேள்வி நேரத்தில் கேட்கக்கூடாது. (து.வி.) .. .. 26

தனிப்பட்ட பத்திரிகையைப் பற்றி அல்லது பெயர்களைப் பற்றிப் பேசக்கூடாது. கேள்வியாகத் தான் கேட்கவேண்டும் (து.வி.) .. .. 382

நீண்ட விளக்கமாக அமைச்சர் பதில் சொல்லிய பிறகும் அதற்கு சம்பந்தமில்லாமல் துணைக் கேள்வி கேட்கக்கூடாது என அதற்கு இசைவு மறுக்கப் பெற்றது (து வி.) .. .. .. 375

மூலக்கேள்வியை ஒட்டியிராத காரணத்தால் அனுமதி மறுக்கப்பெறும் (து வி) .. .. 32

தவசி, திரு. ஆர்.—

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. .. 102—10

தனியார் அலுவல்கள்—

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் தனித் தீர்மானம் .. .. 288—345



த—தொடர்ச்சி

தனுக்கோடித் தேவர், கே.— பக்கங்கள்

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) .. 111—112

தாமரைக்கனி, திரு. இரா.—

அம்மாப்பட்டி, திருவில்லிப்புத்தூர் தொகுதி அரிசனங்களுக்கு நில ஆர்ஜிதம் .. 671

அயன்கரிசல்குளம், திருவில்லிப்புத்தூர் நிலம் ஆக்கிரமிப்பு .. 656

அரசு பேருந்துகள், தானாக இயங்கும் கதவுகள் .. 251—252

அன்பு இல்லங்கள், கோவில்களால் நடத்தப் பெறுபவை .. 626—627

ஆலயங்கள், திருக்கல்யாணம் திருத்தேர் திட்டம் .. 225—229

இராமசாமியாபுரம் தீ விபத்து .. 353—356

இராமநாதபுரம் மாவட்டம், தீப்பெட்டித் தொழிற்கூடங்கள் ஏற்படுத்துதல் .. 673

இராமநாதபுரம் மாவட்டம், மினி பேருந்து விடுதல் .. 675

காடனேரி, திருவில்லிபுத்தூர் தொகுதி இணை கால்நடை மருத்துவமனை .. 695

கிரானூர் அருகே மோசடி, ரூபாய் நோட்டு இரட்டிப்பு .. 642

கொத்தங்குளம், முகவை மாவட்டம், மனைப் பட்டா ஏழைகளுக்கு .. 664

கோட்டையூர், திருவில்லிபுத்தூர் தொகுதி குடிநீர் வசதி .. 695

சிவகாசி விஸ்வநாதசுவாமி கோயில் திருப்பணி .. 677

செங்கல்பட்டு ஏரி, உல்லாசப்படகு .. 695

சென்னை சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி வருமானம் .. 685

திருச்சி, அரசினர் அச்சகக் கட்டிடம் நிரந்தரம் .. 662

திருச்சி, குடிநீர் வசதி விரிவுபடுத்தல் .. 17—19

திருத்தங்கல் நின்ற நாராயணப் பெருமாள் கோயில் பழுது பார்த்தல் .. 678

திருவண்ணாமலை—திருக்கோயிலூர் புதிய பேருந்து .. 664

திருவில்லிபுத்தூர் அருள்மிகு வைத்தீஸ்வரர் கோயில் கோபுரத் திருப்பணி .. 677

## த—தொடர்ச்சி


தாமரைக்கனி, இரா—தொடர்ச்சி

திருவில்லிபுத்தூர், நிலவள வங்கிகள் செயல்படாமை .. 657

திருவில்லிபுத்தூர் வட்டம், புறம்போக்கிலுள்ள மரங்கள், கணக்கிற் சேர்த்தல் .. 631—632

திருவில்லிபுத்தூர் வட்டம், மோட்டார்களுக்கு மின் இணைப்பு .. 675

தென்னை மரங்கள், தஞ்சை—வாடல் நோய் (க.ஈ.) .. 54

பத்திரிகையாளர்களுக்கான 3 ஆவது ஊதியக் குழு சிபாரிசுகள் .. 380—385

பாலம், காயாநதியின் குறுக்கே, பிள்ளையார் நத்தம் திருவில்லிபுத்தூர் வட்டம் .. 627

பால், கலப்படம், நடவடிக்கை .. 634—635

மதுரை, நவீன ஓட்டல், சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் .. 656

மரங்கள் பராமரிப்பு, பெருவழித்துறை சாலைகள் .. 642

முந்திரித் தொழிலாளர் ஊதிய விகிதம் .. 658

வத்திராயிருப்பு, சலவைத் தொழிலாளர் சமுதாயக் கிணறு .. 699

வரி ஏய்ப்பு, நடவடிக்கை .. 630—631

வரி விலக்கு, தீப்பெட்டி .. 657

வரிவிலக்கு, பொருட்களைக் கட்டி அனுப்பப் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு .. 671

வருமானம், பரிசுச் சீட்டு விற்பனை 1977–80 .. 662—663

வேதாரண்யம், புகையிலை தேக்கம் .. 669

வைகை அணை காலனி, பயிற்சிப் பள்ளி கட்டிடம் .. 657

"ஸ்பைக்" வியாதி, சந்தன மரங்கள் அழிவு .. 517—519

தாழ்த்தப்பட்டோர்—

வீட்டுமனை, தஞ்சை மாவட்டம் .. 628

திட்டங்கள்—

வேகவதி—பாலாறு இணைப்புகள் .. 22—23

தியாகராஜன் திரு. ஆர்.—

இடைச்சித்தூர், விருத்தாசலம் ஒன்றியம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் .. [illegible]

ஓட்டிமேடு, கம்மாபுரம் ஒன்றியம் குடிநீர் வசதி. 63[illegible]




## த—தொடர்ச்சி

பக்கங்கள்


தியாகராஜன், திரு. ஆர்.—தொடர்ச்சி

பெருவாப்பூர் காலனி, கம்மாபுரம் ஒன்றியம் குடிநீர் வசதி .. 683

மணவாளநல்லூர், விருத்தாசலம் அரிசனங்களுக்கு மனைப்பட்டா .. 685

மாவிடந்தல், கம்மாபுரம் ஒன்றியம் நீர்த்தேக்கம், மோட்டார் பழுது .. 684

மு.பட்டி குடிகாடு சாலனி, விருத்தாசலம் குடிநீர் திட்டம், பாதுகாக்கப்பட்டது .. 682

மு.பட்டி, விருத்தாசலம் ஒன்றியம், குடிநீர் திட்டம், பாதுகாக்கப்பட்டது .. 682

மு.புதூர், விருத்தாசலம், குடிநீர் தேக்கம் 683

வயலூர், விருத்தாசலம், அரிசனங்களுக்கு வீட்டுமனை .. 686

விருத்தாசலம் கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரி புதிய வகுப்புகள் .. 681

விருத்தாசலம் முன்சீப் கோர்ட் கட்டடம் .. 681

வேட்டக்குடி, விருத்தாசலம் குடிநீர் .. 683

திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ்—

முதலமைச்சர் மீது (உ.பி.) .. 44

திருமாறன், திரு. பெ.—

தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ.) .. 115—117

திருவேங்கடம், திரு. பெ. சு.—

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள் நியமித்தல்) ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவுகள். 419—423

கிளியாப்பட்டு வடாற்காடு மாவட்டம் அரிசனக் காலனியில் துவக்கப்பள்ளி ஆரம்பித்தல் .. 678

நார்த்தாம்பூண்டி ஆரம்பச் சுகாதார நிலையம், பெண் டாக்டர் நியமனம் .. 237—240

தீயணைப்பு—

அம்பாசமுத்திரம், நிலையம் ஏற்படுத்துதல் .. 668

உளுந்தூர்பேட்டை, நிலையம் அமைத்தல் .. 644

மதுராந்தகம், புதிய நிலையம் .. 647

தீர்த்தராமன், திரு. ப.—

கத்திலாக்கம் நகரியம், சுடுகாட்டுக்குச் செல்லும்

பக்கங்கள்

த—தொடர்ச்சி

தீர்த்தராமன், திரு. பா.—தொடர்ச்சி.

வழி அடைக்கப் பெற்றுள்ளது (ஒ. தீ.) .. 388

தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ. த. தீ) .. 187—188

தீர்மானங்கள்—

அரசினர் தனித் தீர்மானங்கள் தமிழ்நாட்டில் வறட்சி நிலை .. 58—176
179—221

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

ஆத்தூர் காவல் துறையினர் ஓர் இளைஞரை தாக்கியதாகச் சொல்லப் பெறுவது .. 545—547

கத்திவாக்கம் நகரியம் சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப் பெற்றுள்ளது குறித்து .. 388—396

(3) போலியோ நோயினால் சென்னையில் குழந்தைகள் பாதிக்கப் பெற்றுள்ளது .. 269—279

தனித் தீர்மானங்கள் (அரசு சார்பற்றவை)—

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல்-தொடர்ச்சி .. 288—345

விதி 25 (1)-ன் கீழ், பேரவை ஒத்திவைத்தல் 626

துரைமுருகன், திரு.—

கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1981 558, 559

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 130—134

துரைராஜ் திரு. பி.—

தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ) .. 177

தேர்தல்கள்—

வாக்காளர்கள், அடையாள அட்டை வழங்குதல் 262—264

தொல்பொருள்—

கங்கை கொண்ட சோழபுரம், ஆராய்ச்சி .. 12—14

போரூர் படைவீடு பகுதியில் தொல் பொருள் ஆராய்ச்சி .. 366

தொழில்கள் (ஊரக)—

அம்பத்தூர் தொழிற்பேட்டை, சிறு, நடுத்தர, பெரும் தொழில் நிறுவனங்கள் .. 680

இராமநாதபுரம் மாவட்டம், தீப்பெட்டித் தொழிற்கூடங்கள், ஏற்படுத்துதல் .. 673

பயிற்சி, பால்பண்ணை திட்டத்தில் பட்டதாரிகளுக்கு .. 658





த—தொடர்ச்சி பக்கங்கள்

வீரபாண்டி, பனை மரத்துப்பட்டி வட்டாரம், வாசனைத் திரவிய தொழிற்சாலை .. 508—510

தொழிற்சாலை—

அரியலூர் சிமெண்ட் ஆலை, துணைப் பொருள்கள் உற்பத்தி .. 653

உதட்டுச் சாயத் தொழிற்சாலை அமைத்தல் .. 636

திருப்பத்தூர், வட ஆற்காடு தொழிற்பேட்டை, ''சிட்கோ'' மூலம் .. 668

தொழிலாளர்கள்—

காலணி வீடுகள், மதுரை .. 20—22

சலவை, வட ஆற்காடு மாவட்டம், கருவிகள் வழங்கல். .. 670

நலன் பாதுகாப்புச் சட்டம், வேஸ்ட் காட்டன் தொழிலாளர். .. 641

பிரசவ விடுப்பு, பெண் தொழிலாளர்கள் சம்பளத்துடன் விடுப்பு 628—629

மாறாமலை, குமரி மாவட்டம்—கிராம்புத் தோட்டத் தொழிலாளர் குடியிருப்புக்கள் .. 643

முந்திரித் தொழிலாளர் ஊதிய விகிதம் 658

வத்திராயிருப்பு, சலவைத் தொழிலாளர், சமுதாயக் கிணறு .. 699

நல்லப்பன், திரு. தி.கா.—

கத்திவாக்கம் நகரியம், சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப் பெற்றுள்ளது (ஒ.தீ.) .. 388

கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 563

சித்தோடு, பால்பவுடர் தொழிற்சாலை 512—515

தமிழ் நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ) 186—187

போலியோ நோய், சென்னையில் குழந்தைகள் பாதிப்பு (ஒ.தீ.) 269

நவநீதகிருஷ்ணபாண்டியன் திரு. ஆர்.—

ஆலங்குளம் தொகுதி, சாலைகள் பழுது பார்த்தல், நிதி ஒதுக்கீடு .. 689

கத்திவாக்கம் நகரியம், சுடுகாட்டுக்குச் செல்லும் வழி அடைக்கப் பெற்றுள்ளது. (ஒ.தீ.) .. 388,
.. 389—391

தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ) 96—97

நாராயணசாமி, திரு. கே.— பக்கங்கள்
கீழ்பெண்ணாத்தூர், ஏரி பராமரிப்பு 646—647
சென்னைக்குக் குடிநீர் காவிரியிலிருந்து கொண்டு வருதல் .. 373—374
தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ) 112—115
நதிகள்—
ஒதுக்கீடு, பிற்பட்டோர் நலன் 658
நிலங்கள்—
நில அளவை மேம்பாடு, பெரியகுளம் 6—7
நீக்கம்—
33, 34, 35, 226
நீதிமன்றங்கள்—
கொடைக்கானல், வழக்குகள் விசாரணை. 371
சங்கரன்கோவில் மாவட்ட முன்சீப்-கம்-சப்-டிவிஷனல் ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைத்தல் 670
சென்னை உயர் நீதிமன்றம், பெயர் மாற்றம் 31—32
விருத்தாசலம் முன்சீப் கோர்ட் கட்டடம் 681
நூலகங்கள்—
கிளைகள், எண்ணிக்கை 672
நெசவாளர்—
நூல்கள் விலை, நெசவாளர்களுக்கும் சங்கங்களுக்கும் 637
நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—
அவை நடவடிக்கையைக் கண்காணிக்க போலீஸ் ஸ்பெஷல் பிராஞ்ச் அனுப்பிய சுற்றறிக்கை (உ.பி.) 53
உணவுப் பொருள்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி அளவு குறைப்பு (க.ஈ.) .. 283—287
உரிமைப் பிரச்சினை, "இந்து" பத்திரிகை மீது அவை முன்னவர் விளக்கத்தில் தவறான தகவல்கள் 281—283
சட்டமன்றத்திற்கு வானொலி தனது சொந்த நிருபரை அனுப்புதல். (த.கோ.) 58
டேப் உரை பதிவு செய்யப் பெற்றது, பேரவைத் தலைவர் அறையில் போட்டுக் காட்டுதல் (த.கோ.) .. 268
முதலமைச்சர் மீது (உ.பி.) 45—46





நெடுமாறன் திரு. ப.— பக்கங்கள்
சித்த மருத்துவர்கள், பதிவு செய்யாமை 537—538
சென்னை சட்டக் கல்லூரி, தன்னாட்சி முறை. 362
தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ) 157—160
மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் (த.தீ.) 288—308

'ப'

பரிசுச் சீட்டு—
வருமானம், விற்பனை மூலம் 1977-80 வரை 662—663
பருத்தி—
ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்டம் (ஐ.சி.டி.எஸ்.) பஞ்சாயத்து யூனியன்களில் அமுல் .. 230
பலராமன் திரு. இல.—
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல், ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவுகள் .. 423—427
கடம்மசமுத்திரம், வட ஆற்காடு, வீட்டு நில ஆர்ஜிதம் 672
கஸ்தம்பட்டி, போளூர் தாலுகா, துளைக் கிணறு, புறம்போக்கு நிலத்தில் 510—512
சூரிய வெப்ப மின் உற்பத்தி 1—4
திருப்பணி, ஸ்ரீரேணுகாம்பாள் சன்னதி, படவேடு 515—516
தொழில் பயிற்சி, பால்பண்ணை திட்டம், பட்டதாரிகளுக்கு .. 658
நிலம், அரிசனங்களுக்கு கையகப்படுத்தப் பட்டது .. 633
பாலிடெக்னிக், மாணவர் சேர்க்கை .. 631
போளூர் படவீடு பகுதியில் தொல்பொருள் ஆராய்ச்சி .. 366
மின் இணைப்பு, குடிசைகளுக்கு சலுகை மின் திட்டம் வாரியாக விபரம் .. 633—634
வட ஆற்காட்டில் இணைப்பு சாலைகள் இல்லாத கிராமங்கள் .. 633
வட ஆற்காடு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 668—669
பழனிமுத்து திரு. சி.—
ஆத்தூர் காவல் துறையினர் தாக்குதல் இளைஞர் மீது (ஒ.தீ.) .. 546
ஆத்தூர், மண்டலப் போக்குவரத்து அலுவலகம் 253

பழனிமுத்து திரு. சி.—தொடர்ச்சி — பக்கங்கள்

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 135—138

பழனியப்பன், திரு. கு. ப.—

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 82—85

பழனிவேல், திரு. என்.—

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல்

ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவுகள் .. 427—433

பட்டா, வீட்டுமனைப் பட்டா, அரிசனங்களுக்கு, பழனி வட்டம் .. 630

மின்சார வாரியம், மேம்பாடு—மைய அரசின் குறிப்புகள் .. 4—6

பள்ளிகள்—

காசிபாளையம், வேடசந்தூர் வட்டம், அரசு உயர்நிலைப்பள்ளி கட்டடம் .. 684

பாசனம்—

கீழ்ப் பண்ணாத்தூர், ஏரி பராமரிப்பு .. 646—647

சண்முகா நதி குறுக்கே அணை .. 25

தொளசம்பட்டி, ஓமலூர் வட்டம், ஏரி மராமத்து .. 655

பழுதுபார்த்தல், துரிஞ்சல் ஆற்றுவரத்துக் கால்வாய், சுவாளப்பட்டி .. 638

பாலாற்றுக்கு ஹோகேனக்கல் நீர்வீழ்ச்சி தண்ணீர் .. 24

மாம்பழத்துறை அணை, கல்குளம் .. 23—24

பாபு கோவிந்தராஜன், திரு.—

தந்தை பெரியார் கலைக் கல்லூரி, கடலூர் பட்டமேற்படிப்பு வகுப்புகள் .. 12

தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் .. 371—373

பாபு ஜனார்த்தனன் திரு.—

கணக்கெடுப்பு, மக்கள் தொகை, செய்யாறு தொகுதி .. 640

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) .. 143—145

வேலூர், அறிஞர் அண்ணா கலை அரங்கம், வசூல் .. 649





பாலகிருஷ்ணன், திரு. ச.—

சர்க்கரை விநியோகம், கிராம மக்களுக்கு .. 650

தமிழ் நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 180—181

பாலகிருஷ்ணன், திரு. வி.—

தமிழ் நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) .. 109—110

பாலங்கள்—

செய்யாற்றின் குறுக்கே, கொருக்காத்தூர் வாழைப்பந்தல் இடையே .. 236—237

பாலசுப்பிரமணியன், திரு. வேடசெந்தூர், வி. பி.—

காசிபாளையம், அரசு உயர்நிலைப் பள்ளி கட்டடம் .. 684

காசிபாளையத்தில் கால் நடை மருத்துவமனை 696

சர்க்கரை விநியோகம், கிராமங்கள் .. 650

சென்னை உயர்நீதி மன்றம், பெயர் மாற்றம் .. 31—32

தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 125—127

திண்டுக்கல் அரசு மருத்துவமனை, மருத்துவ அதிகாரிகள் .. 676

நடுநிலைப் பள்ளிகளில் தமிழ்ப் புலவர்கள் நியமனம் .. 363—366

நூலகங்கள், கிளைகள் .. 672

பால் கலப்படம், நடவடிக்கை .. 634—635

பாளையம், பேருந்து நிலையம் 676

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் (த.தீ) .. 324—325

வடமதுரை நகரப் பேருந்து நிலையம் 676

பால்வளம்—

கஸ்தம்பட்டி, போளூர் தாலூகா, புறம்போக்கு நிலத்தில் துளைக் கிணறு .. 510—512

தொழிற்சாலை பால்பவுடர், சித்தோடு 512—515

வினியோகம், நகராட்சி, பேரூராட்சி .. 505—508

பாலம்—

பிள்ளையார்குளம், திருவில்லிபுத்தூர் வட்டம் காயா நதியின் குறுக்கே .. 627

பாலன், திரு. க.—

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல்,—ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவுகள், 456—458

பாலன், திரு. சு.—தொடர்ச்சி
எம்.பி.பி.எஸ். டாக்டர்கள், எண்ணிக்கை மற்றும் வேலை வாய்ப்பு .. 244—247

பிச்சை, திரு எம்.—
தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) .. 119—121

புருஷோத்தமன், திரு. து.—
எம்.பி.பி.எஸ். டாக்டர்கள், எண்ணிக்கை மற்றும் வேலை வாய்ப்பு .. 244—247
ஓய்வூதியங்கள், மனுச்செய்தவர்கள், ஓய்வூதியம் பெற்றவர்கள் எண்ணிக்கை .. 654
கங்கை கொண்டசோழபுரம் தொல்பொருள் ஆராய்ச்சி .. 12—14
குடும்ப நல அறுவைச் சிகிச்சையினால் இறப்பு, குடும்பங்களுக்கு இழப்பு ஈடு .. 24[illegible]—251
சென்னை, சாலை சீரமைப்பு, சிறப்பு நிதி உதவி .. 659
சென்னை நகர், சைக்கிள் ரிக்ஷாக்கள் உரிமம் 667
சென்னை பாதாள இரயில் பாதை அமைக்கும் திட்டம் .. 374—377
நிதி உதவி, சிறப்பு உதவி, சென்னை நகருடன் இணைந்த பகுதிக்கு .. 659
நிதி ஒதுக்கீடு, பிற்பட்டோர் நலனுக்கு .. 658
பிச்சையெடுப்பதை தடுக்கும் சட்டம் .. 2[illegible]9—251
மின் விபத்து இறந்தவர்கள், எண்ணிக்கை .. 653—654

பூங்காவனம், திரு. என். ஏ.—
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல்,—ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவுகள். 453—456

பெருமாள், திரு என்.—
தமிழ் நாட்டில் வறட்சி நிலை, (அ.த.தீ.) .. 172—173
நடுக்காட்டூர் கீழ் அருணாசலபுரம் சாலை அமைத்தல் .. 638

பொதுச்சுகாதாரம்—
கூவம் நதியின் துர் நாற்றத்தைப் போக்கும் திட்டம் .. 379—380

பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ்.—
தமிழ் நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) 103—106



பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ்.—தொடர்ச்சி
(ஐ.சி.டி.எஸ்) ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்டம் பஞ்சாயத்து யூனியன்களில் அமுல் 230

பொன்னுரங்கம், திரு ப.—
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல். ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவுகள். 440—444
சுத்திவாக்கம் நகரியம் சுடுகாட்டிற்குச் செல்லும் வழி அடைக்கப் பெற்றுள்ளது. (ஒ.தீ.) 388, 393—394
சிறுவன் மரணம், உதகமண்டலம் மருத்துவ மனையில் (க.ஈ) 553
தென்னை மரங்கள் "தஞ்சைவாடல் நோய்", (க.ஈ) 51,55
போலியோ நோய், சென்னையில் குழந்தைகள் பாதிப்பு (ஒ.தி) 274—276

பொன்னையன் திரு. சி.—
மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குதல் (த.தீ.) 318—319

போக்குவரத்து—
அரசு பேருந்துகள் தானாக இயங்கும் கதவுகள் 251—252
இராமநாதபுரம் மாவட்டம், மினிப் பேருந்து விடுதல் 675
கட்டபொம்மன் கழகம், பஸ்களுக்கு பாடி கட்டுதல், ஒரு மாதத்திற்கு 671
கூடுதல் பேருந்துகள், நகரப்பேருந்து வழித் தடங்கள், தேனித் தொகுதி 541
சென்னை, சைக்கிள்ரிக்ஷாக்கள் உரிமம் 667
சென்னையில் பாதாள இரயில்பாதை அமைக்கும் திட்டம். 374—377
தஞ்சை மாவட்டம், வழித்தடங்கள், புதியவை அனுமதி 645
திருவண்ணாமலை—திருக்கோயிலூர், புதிய பேருந்து 664
பேருந்து, நகரப் பேருந்து, ஆற்காடு தொகுதி 629 630
பேருந்து, நகரப் பேருந்து, திண்டிவனம் ஆவணிப் பூர் 629
பொள்ளாச்சி, சேரன் கழகம், பொறியல் பிரிவு பணியாளர் எண்ணிக்கை 661
மண்டல அலுவலகம், ஆத்தூர் 253
மினிபேருந்து, திருவாடானைத் தொகுதி 541 543
ஜோலார்பேட்டை; டவுன்பஸ் விடுதல் 660

ம

மக்கள் நல்வாழ்வு
தாராபுரம், பாசனவாய்க்காலில் கழிவுநீர் கலப்பது. 234—236
பணி ஒழுங்குமுறை, அம்மை குத்தும் பணியாளர்கள்
மணி, திரு. டி.—
உணவுப் பொருள்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி அளவு குறைப்பு (க ஈ.) 283,284
கேளிக்கைவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 563—564
மாறாமலை, கன்னியாகுமரி மாவட்டம், கிராம்புத் தோட்டத் தொழிலாளர், குடியிருப்புகள் 643
மணிமாறன், திரு. ஆர்.—
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) 268—269
544
மருத்துவம்—
அதிகரித்தல், படுக்கைகள், காசநோய் மருத்துவமனை, திருவண்ணாமலை 538—541
உடைகள் சலவைச் செலவு, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோவை 627—628
ஓமலூர், அரசு மருத்துவமனை, ''பிணம் அறுக்கும் கிடங்கு'' பழுது 667
குடந்தையில் செலவு, மகாமகத்தை முன்னிட்டு, 642
சிறுவன் மரணம், மருத்துவமனையில், உதகமண்டலம் (க. ஈ.) 547—556
சென்னை கால்நடைக் கல்லூரியில் இரத்த சேமிப்பு வங்கி துவங்குதல் 679
சோளிங்கர் மருத்துவமனை, விரிவுபடுத்தல். 651
தானிப்பாடி அரசு மருத்துவமனை பெண் மருத்துவர் 666
படுக்கை எண்ணிக்கை அதிகரித்தல் உளுந்தூர்ப்பேட்டை மருத்துவமனை 534
பதிவு செய்யாமை, சித்த மருத்துவர்கள் 537—538
மருத்துவர்கள், கால்நடை மருத்துவமனைகளில் பணிபுரிவோர் 674
மேல்பட்டப் படிப்பு, மாணவர்கள் எண்ணிக்கை 632
மருத்துவமனைகள்—
ஆரம்பச் சுகாதார நிலையம், நார்த்தாம்பூண்டி பெண்டாக்டர் நியமனம் 237—2

ம—தொடர்ச்சி

மருத்துவமனைகள்—தொடர்ச்சி
இ. எஸ். ஐ., காசநோய்ப்பிரிவு சிங்காநல்லூர். 14—17
காசி பாளையம், வேடசந்தூர் வட்டம் கால்நடை மருத்துவமனை .. 696
காடனேரி, திருவில்லிபுத்தூர் தொகுதி இணை கால்நடை மருத்துவமனை .. 695
திண்டுக்கல் மருத்துவ அதிகாரிகள் எண்ணிக்கை .. 676
திருப்போரூர் அரசு மருத்துவமனை, டாக்டர்கள், படுக்கைகள் .. 686
நிர்வாகக் கண்காணிப்பு, மக்கள் ஆலோசனைக் குழுக்கள் .. 240—244
விக்கிரமசிங்கபுரம் இ. எஸ். ஐ. மருத்துவமனை டாக்டர்கள் விவரம் .. 694
மாணிக்கம் திரு. எம், எஸ்.—
சீரமைப்பு, வேதாரண்யம் தஞ்சாவூர் சாலை 524—525
தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ. த. தீ) 134—135
வீடு வருவாய்த்துறை ஆய்வாளர்களுக்கு .. 644
வேதாரண்யம், கோயில் தேர் ஓட்டுதல் .. 660
மாரிமுத்து, திரு. த
குடுமியான்மலை, விவசாயக்கல்லூரி .. 230—231
மின்சாரம்
அனல் மின் நிலையம், தூத்துக்குடி .. 357—362
சலுகை மூலம் இணைப்பு, குடிசைகளுக்கு மின் திட்ட வாரியாக விவரம். .. 633—634
சூரிய வெப்ப மின்உற்பத்தி .. 1—4
திருமங்கலம், உப மின்நிலையம், விரிவுபடுத்தல் 661
திருவில்லிபுத்தூர் வட்டம், மின்சார மோட்டார்களுக்கு இணைப்பு .. 675
பவர் ஹவுஸ், சின்னத்தாராபுரம் 352—353
வாரிய மேம்பாடு—மைய அரசின் குறிப்புகள் 4—6
விபத்து, இறந்தவர்கள் எண்ணிக்கை .. 653—654
மீனளம்
மீனவர் பயிற்சி நிலையங்கள் .. 691
முகமது இஸ்மாயில் திரு பி.
தமிழ்நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ) .. 145—148
முத்துவேல் திரு. என்.

ம—தொடர்ச்சி


பேருந்து, நகரப் பேருந்து, திண்டிவனம் ஆவணிப்பூர் .. 629

முத்தையா திரு. இரா—
தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) .. 78—82

மூர்த்தி திரு. ஜீ.
தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) .. 86—90

ய

யசோதா திருமதி டி.
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல் ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவுகள், .. 458—462

ர

ரகுமான்கான், திரு அ.
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல் ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவுகள் .. 432—470
கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1981 556—557, 559—562
மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் (த.தீ) 307—308, 321—340
முதலமைச்சர் மீது (உ.பி.) .. 43, 46—47

ரங்கசாமி திரு. க.
உளுந்தூர்பேட்டை, தீயணைப்பு நிலையம் அமைத்தல் .. 644
உளுந்தூர்ப்பேட்டை, மருத்துவமனை படுக்கைகள் அதிகரித்தல் .. 534

ரங்கசாமி திரு. ஆர்
தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ) .. 174—175

ரமணி திரு கு
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரிகள்) நியமித்தல் ஊராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவுகள் .. 470—475
தாராபுரம் பாசன வாய்க்காலில் கழிவுநீர் கலப்பது 234—236




ர—தொடர்ச்சி


திரு. கு. ரமணி—
தூத்துக்குடி, அனல் மின் நிலையம் 347—352
நோயாளிகளுக்கு உடைகள் சலவை செய்ய பணம், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் 627
பணி ஒழுங்கு செய்தல் சுகாதாரப் பணியாளர் 535—537
பொள்ளாச்சி சேரன் போக்குவரத்துக் கழக பொறியியல் பிரிவு பணியாளர் எண்ணிக்கை 661

ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு.
தமிழ்நாட்டில் வறட்சி நிலை (அ.த.தீ.) 71—74

வ

வரிகள்—
சோழவரம் மோட்டார் பந்தய புக்கட்டுகள் மீது 7—9
விலக்கு, தீப்பெட்டிக்கு 657
விலக்கு, பொருட்களைக்கட்டி அனுப்பப் பயன் படுத்தப்படும் பொருட்களுக்கு 671

வனங்கள்—
"ஸ்பைக்" வியாதி, சந்தன மரங்கள் அழிவு 517—519

வருவாய்த்துறை
அயன் கரிசல்குளம், திருவில்லிபுத்தூர் வட்டம் நிலம் ஆக்கிரமிப்பு 656
கட்டிடம், வணிகவரி அலுவலகம் திருப்பத்தூர் 636
கணக்கெடுப்பு மக்கள் தொகை, செய்யாறு தொகுதியில் 640—641
காஞ்சிபுரம், அலுவலகக் கட்டிடம் கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் 647
கொத்தங்குளம், முகவை மாவட்டம், ஏழைகளுக்கு மனைப்பட்டா 664
தண்டராம்பட்டு தொகுதி பட்டா வழங்கல், புறம்போக்கு நிலங்கள் 666—667
தர்மபுரி, பட்டா வழங்கல் 652
திருப்போரூர் தொகுதி வீட்டு மனைப்பட்டாக்கள் 688—689
புறம்போக்கில் உள்ள மரங்கள், கணக்கில் சேர்த்தல், திருவில்லிபுத்தூர் வட்டம் 631—632
வரிஏய்ப்பு, நடவடிக்கை 630—631
வீடு, ஆய்வாளர்களுக்கு 644

வாரியம்—
சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணநகர், குடிசை மாற்று வாரியம் கட்டிய வீடுகள் 651

வ—தொடர்ச்சி

விஜயலட்சுமி செல்வி வி.
வீரபாண்டி, பனைமரத்துப்பட்டி வட்டம் வாசனைத் திரவியத் தொழிற்சாலை 508—510
விவசாயம்
திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் 75.25 சட்டத்தை அமுல் படுத்துதல் 356—360
வினாக்கள்—விடைகள்
உடுக்குறியிட்ட வினாக்கள் 1—32, 225—264, 347—385.
உடுக்குறியிடாத வினாக்கள் 505—543, 626—699
வின்சென்ட் திரு. மி.
வாக்காளர்கள், அடையாள அட்டை வழங்குதல் 261—264
விஜயராகவன் திரு. பொ.
உணவுப் பொருள்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி அளவு குறைப்பு (த.ஈ) 283—286
கல்குளம் மாம்பழத்துறை அணை 23,24
தென்னைமரங்கள், தஞ்சை வாடல் நோய் (க.ஈ) 54
வீராசாமி திரு. த.
தமிழ்நாட்டில் வறட்சிநிலை. (அ.த.தீ) 168—171
வெங்கடசுப்பிரமணியம் திரு.ப.
காஞ்சிபுரம், அலுவலகக் கட்டிடம், கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் 647
கேளிக்கை வரி (திருத்த)சட்டமுன்வடிவு 1981 565—566
வேகவதி—பாலாறு இணைப்புத் திட்டம் 22—23
வெங்கடரெட்டி திரு.டி
தமிழ் நாட்டில் வறட்சி நிலை. (அ.த.தீ) 128—130
வேணுகோபால், திரு.த.
சட்டக்கல்லூரி, மாலை நேர வகுப்பு நிறுத்தம் 9—11
சலவைத் தொழிலாளர், வடஆற்காடு மாவட்டம் தொழில் கருவிகள் வழங்கல் 670
துவாளப்பட்டி, துரிஞ்சலாற்றுக் கால்வாய் பழுது பார்த்தல் 638



வ—தொடர்ச்சி

தாராபுரம், பாசன வாய்க்காலில் கழிவு நீர் கலப்பது .. 23—236
தண்டராம்பட்டு தொகுதி, புறம்போக்கு நிலம், பட்டா வழங்கல் 666—667
தானிப்பாடி அரசு மருத்துவமனை பெண் மருத்துவர் 666
தானிப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 691—692
திருவண்ணாமலை காசநோய் மருத்துவமனை படுக்கைகள் அதிகரித்தல் 538—541
மீனவர் பயிற்சி நிலையங்கள் 691
வேலை வாய்ப்பு, பார்வையற்றவர்களுக்கு 1979-80 691
வேலைவாய்ப்புகள்
உடல் ஊனமுற்றவர்கள். பார்வையற்றவர்கள் 1979-80 691
வேளாண்மை
குறுவை இருபோக சாகுபடி, நிலப்பரப்பு 698
கூட்டுறவு கடன்கள் ரத்து 26—29
தானிப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 691—692
தென்னைமரங்கள் தஞ்சை வாடல் நோய் (க.ஈ) 54—56
திருப்பத்தூர் சர்க்கரை ஆலை, வட ஆற்காடு கரும்பு விலை நிர்ணயம் 670
மதுராந்தகம் பொறியியல் வேளாண்மைக் கழகம் டிராக்டர் வாடகை நிலையம் 697
வேதாரண்யம் தொகுதி; புகையிலை தேக்கம் 669

ஜ

ஜகத்ரட்சகன், திரு எஸ்.
மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் (த.தீ) 308—321
ஜான் வின்சென்ட் திரு மி.
உணவுப் பொருள்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி அளவு குறைப்பு (க.ஈ) 283—286
ஜெயராமன் திரு. வே. இரா.
தேனி தொகுதி, கூடுதல் நகரப் பேருந்துகள் 541
பெரியகுளம் நில அளவை மேம்பாடு 6—7

ஹ

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே.

சிறுவன் மரணம், மருத்துவமனை, உதக மண்டலம் (க.ஈ. அ) 548—556

போலியோ நோய், சென்னையில், குழந்தைகள் பாதிப்பு (ஒ.தீ)

ஹேமச்சந்திரன், திரு. ஜே. 276—279

உணவுப் பொருள்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி அளவு குறைப்பு (க.ஈ) 283—285

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், பஸ் பாடி கட்டுதல் ஒரு மாதத்திற்கு 671

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**புதன்கிழமை, 1981 மார்ச் 4.**

**மாசி 21, ரௌத்திரி— திருவள்ளுவர் 2012.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு''

முகம் மட்டும் மலரும்படியாக நட்பு செய்வது நட்பன்று. நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு நட்பு செய்வதே நட்பு ஆகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சூரிய வெப்ப மின் உற்பத்தி நிலையங்கள்.

* வினா எண். 356 —திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய வெப்ப மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க மின் வாரியம் திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல், இந்தியாவிலேயே மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருப்பதைப் போக்குவதற்கு, அயல்நாடுகளில் இதுபோன்ற ஒரு ஆராய்ச்சி செய்து, அங்கேயெல்லாம் பரீட்சார்த்தமாக தனியார் வீடுகளில்கூட இதை அமைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு நிலையிருக்கும்போது இதுகுறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் இதற்

கென ஒரு துறையை ஏற்படுத்தி, ஆராய்ச்சி செய்து, தனியார்கள் உபயோகப்படுத்துவதற்கும், அரசு வாரியம் மூலமாகச் செய்வதற்கும் மேலும் ஆலோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே மட்டுமல்ல, நம்முடைய நாட்டிலேயும் கூட கல்விக் கழகங்களில் அமைத்திருக்கிறார்கள். சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக, 10 கிலோவாட் மின் திறன் கொண்ட சாதனம் ஒன்று சோதனைக்காகவும், செயல் விளக்கம் அளிப்பதற்காகவும் 'பெல்' நிறுவனத்தினரால் 1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் புது டெல்லியிலுள்ள விஞ்ஞான தொழில்துறை இலாகாவின் ஒத்துழைப்புடன் சென்னையில் உள்ள ஐ.ஐ.டி.யில் நிறுவப்பட்டது. செயல்முறைத் திட்டம் முடிந்த உடன் இந்தச் சாதனத்தைப் பிரித்தெடுத்துவிட்டார்கள். எனினும் 'பெல்' நிறுவனம் சூரிய வெப்பத்தில் இயங்கும் ஜெனரேட்டர் அமைப்பினை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இத்திட்டம் ஆரம்ப நிலையில் உள்ளது.

அதேபோல, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேகூட சூரிய வெப்பத்திலிருந்து சக்தியை எடுத்து எவ்வாறு பயன்படுத்தலாம் என்று அவர்களும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து மின்சார வாரியம் தனியாக ஒரு அமைப்பு உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது தேவையில்லையென்று கருதுகிறேன். ஏனென்றால், அண்மையில் நமது பாரதப் பிரதமர் அவர்கள் கூட இதுகுறித்து குறிப்பிடுகிறபொழுது, a Commission on alternative energy sources அதாவது, இப்பொழுதுள்ள அனல், நீர் மின் நிலையங்களுக்கு மாறாக, மாற்று வகைகளில் எப்படி மின் வசதியைப் பெருக்கலாம் என்பதைப் பற்றி ஆராய் வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசே ஒரு கமிஷனை ஏற்படுத்தும் யோசனை உள்ளது என்று கூறியிருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சி நமக்கும் பலன் அளிக்கும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, சூரிய வெப் பத்தில் மட்டுமல்லாமல் காற்றிலிருந்தும் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இதுகுறித்து ஏதாகிலும் தகவலை அரசு சேகரித்து வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காற்று, கடல் அலை, கடலிலேயிருக்கிற வெப்பத்தின் ஏற்றத் தாழ்வு இவை போன்றவைகளையெல்லாம் சேர்த்துத் தான் alternative souces of energy என்று சொல்கிறோம்.



திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாட்டுச் சாணத்தின் மூலமாக இன்றைக்கு சாண வாயு தயாரிப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா ? அப்படியானால் அதன்மூலம் கிடைக்கும் பலன்கள் என்ன என்பதை அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : alternative sources of energy முதலியன என்று சொன்னேன். அதிலே Bio-gas-ம் அடங்கும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வெப்பத்தின் அடிப்படையில் Ocean Thermal energy Conversion திட்டத்திற்கு மத்திய அரசுக்கு ரூ. 100 கோடி கேட்டு தமிழக அரசு எழுதியிருக்கிறதே அதுபற்றி மத்திய அரசிடமிருந்து தகவல் ஏதேனும் வந்திருக்கிறதா ? அதைப் பற்றி ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு இது சம்பந்தமான அன்னியச் செலாவணியைச் சந்திக்க இயலாது என்று தெரிவித்துவிட்டார்கள். அதோடு மட்டுமல்லாமல், அந்தக் கடலிலே உள்ள வெப்ப ஏற்றத்தாழ்வை வைத்து மின்சாரம் எடுப்பது இன்னும் ஆரம்பக் கட்டத்திலேதான் இருக்கிறது. வளர்ந்த நாடுகளிலே கூட இதை இன்னும் சரியான முறையிலே செயல்படுத்தவில்லை. நாமும் அமெரிக்காவிலே உள்ள General Electric Company என்ற நிறுவனத்தின் துணையுடன் தான் நிறுவுவதாக இருந்தோம். ஆனால், மத்திய அரசு அந்த நிறுவனம் தன்னுடைய பணத்திலேயே இந்த நாட்டிலே இதைச் செய்யலாமேயென்றும், நம்முடைய அன்னியச் செலாவணியை ஏன் வீணாக்க வேண்டுமென்றும் கருத்து தெரிவித்துள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, அணு மின் நிலையம், அனல் மின் நிலையம், நீர் மின் நிலையம் இவைகளை எல்லாம் நிறுவ 'ரா-மெட்டீரியல்ஸ்' மற்றும் செலவுகள் ஏராளமாகத் தேவை என்பதால், அது இல்லாத காரணத்தால், சூரிய மின் உற்பத்தி நிலையம் தேவை என்று உலகோரால் சொல்லப்படுகிறது. அந்த வகையில் தனிப்பட்ட தொழில் நிறுவனங்கள் அம்மாதிரி அமைத்துக் கொள்வதற்கு முன் வந்தால் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் அரசு ஏதாவது செயல் திட்டம் வைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்தகைய மின் உற்பத்திக்குச் செலவு அதிகமாகும். தனிப் பட்டவர்கள் இதில் ஈடுபடமுடியாது. ஒரு மாநில அரசே இதிலே ஈடுபட முடியாது என்ற காரணத்தால்தான் மத்திய

அரசு இந்தக் காரியத்தைச் செய்கிறது. ஆகவே, தனிப்பட்டவர்கள் ஏராளமான பணம் செலவழித்து மின்சார உற்பத்தியைச் செய்வதற்கு முன் வருவார்களானால் நமக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

மின்சார வாரியம் மேம்பாடு.

வினா எண் 357 — திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மின்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில மின்சார வாரியம் மேம்பாடு குறித்து மைய அரசிடமிருந்து ஏதேனும் குறிப்புகள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) மின் உற்பத்தியைப் பெருக்குதல், மின் திட்டங்களுக்கு வேண்டிய நில ஆர்ஜிதம் செய்தல், நவீன மாற்று கருவிகள் உரிய காலத்தில் தருவித்தல், தகுதியான மூலப்பொருட்களை உபயோகப்படுத்தல், வாரியத்தின் நிதி நிலைமை, தொழில்முறை உறவுகளை மேம்படுத்துதல், ஆய்வு செய்ய கண்காணிப்பு குழு மற்றும் நிர்வாகம், தொழிலாளர் முறைப்படுத்தவும் யோசனைகள் கூறப்பட்டுள்ளன.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தை மேம்படுத்துவதற்கான பெயரால் மத்திய அரசின் யோசனைகளை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இது நம்முடைய மாநிலத்தின் உரிமைகளைப் பாதிக்காது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெறும் யோசனைகளைப் பெறுவதாலேயே மாநில அரசை அது பாதிக்கும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இங்கே நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அடிக்கடி 'திருக்குறளை' நினைவுபடுத்துவது போல்

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"



திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சீர்படுத்துவதற்கு மத்திய அரசு தெரிவித்த யோசனைகள் என்னென்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அவற்றில் எந்தெந்த யோசனைகளை அரசு தற்போது அமலுக்குக் கொண்டு வந்து இருக்கிறது? குறிப்பாக, தொழிலாளர்கள் விஷயத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே ஒரு பெரிய போராட்டம் நடந்தது. அதில் தலையீடும் செய்யாமல் முடிவு எதுவும் எடுக்கப்படாமல் இருக்கிறது. இங்கே வாட்டர் ரிசோர்சஸ் முடிந்து போன காரணத்தால், அதிகப்படியான புதிய தெர்மல் நிலையங்களை அமைப்பதற்கும், மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் மின் உற்பத்தியைப் பொறுத்து மட்டுமல்ல, கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் நடந்த மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மின்வாரியம் நல்லமுறையில் இயங்க பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அது குறித்த பரிந்துரைகளை நம்முடைய அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். பாரதப் பிரதமர் அவர்களும் அதற்குப் பிறகு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவற்றிலே நாம் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அதை அரசுத் தரப்பில் எடுத்து இருக்கிறோம். மற்றபடி மின் வாரியம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை அவர்களை விட்டு எடுக்கச் சொல்லியிருக்கிறோம். உதாரணமாக, மின் உற்பத்தியை எல்லாம் ஆய்வு செய்வதற்காக ஒரு குழு அமைக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தக் குழுவை அந்தப் பரிந்துரை வருவதற்கு முன்பே நாம் போட்டு இருக்கிறோம். ஆகவே, பதில் எழுதுகிறபோது ஏற்கனவே அந்தக் குழுவை நாங்கள் அமைத்து இருக்கிறோம் என்று எழுதி இருக்கிறோம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தொழிலாளர்களுடன் நல்லுறவு என்று குறிப்பிட்டார்கள். நல்லுறவு என்றும் உண்டு.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு விவரங்களைக் கூறினார்கள். மிக்க மகிழ்ச்சி. இப்போது வறட்சி எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறது. பாசன வசதி பாதிக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு 1/2 மணி, 1/4 மணி நேரம் கரண்ட் வருகின்ற நிலை இருப்பதால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஒரு நாளைக்கு குறைந்தது 3 மணி நேரம் அல்லது 4 மணி நேரம் கரண்ட் தொடர்ந்து அளிப்பதற்கான ஏற்பாட்டினை அரசு செய்யுமா ?

[முற்பகல் 9—10]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு இது சம்பந்தம் இல்லை; என்றாலும் விரைவில் அதுபற்றிய முடிவு எடுக்கப்பட்டு, இந்த பேரவையில் அறிவிக்கப் படும்.

***Resettlement and updating of land records in Periyakulam Taluk.***

*Q. No. 358—Thiru V. R. JAYARAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

Is there any proposal to have resettlement and updating of land records in Periakulam taluk, Madurai district ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இல்லை.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** தலைவரவர்களே, வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் காலத்திலே பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக 'ரீ செட்டில்மென்ட் அன்ட் அப்டேட்டிங் ஆப் லான்ட் ரிக்கார்ட்ஸ்' பெரியகுளம் பகுதியில் செய்யப்பட வேண்டிய ஒன்று. தற்போது இந்தப் பணி மதுரை மாவட்டத்தில் எந்தெந்த வட்டங்களில் நடைபெறுகிறது? பெரியகுளம் வட்டத்திற்கும் இது விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம் இன்றைக்கு மதுரை மாவட்டத்தில் மூன்று வட்டங்களில் நடைபெறுகிறது. மேலூர், உசிலம்பட்டி, உத்தமபாளையம் ஆகிய வட்டங்கள் அவை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நில அளவை மேம்பாட்டுத் திட்டம் அவர்களுடைய வட்டத்திற்கு விஸ்தரிக்கப்படுமா என்று கேட்கிறார்கள். விரைவிலே அந்த வட்டமும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் :** தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் ரீ செட்டில்மென்ட் செய்யும்போது, கொடைக்கானல் பகுதியிலே நிறைய ஜமீன் லான்ட்ஸ் ரீ செட்டில்மென்ட் செய்யப்படாமல் அப்படியே வைக்கப்பட்டிருக்கிறது; அதை ஏழை எளிய விவசாயிகள் 'ஆக்குபை' செய்து விவசாயம் செய்து வருகிறார்கள்; அதை ரீ செட்டில்மென்ட் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, 50 ஆண்டு காலமாக இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம் கைவிடப்பட்டு, நடைமுறையில் இல்லாமல் இருந்ததால் மாநிலம் பூராவிலும் இப்படிப்பட்ட குறைபாடு இருந்துகொண்டிருக் கிறது. மாநிலம் பூராவையும் எடுத்துக்கொண்டு, எல்லா இடங்களிலும் ஒரே காலத்தில் மேம்பாடு செய்ய முடியாது. ஆகவே, இன்றைக்கு 28 வட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலை நடந்துகொண்டிருக்கிறது. அடுத்த கட்டமாக நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொடைக்கானல் பகுதியும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் மூன்று வட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டி ருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த அளவை எந்தக் காலத்திற்குள் முடிவடையும்? காலம் நீட்டிக்கப்பட்டால் மற்ற வட்டங்களுக்கு மேலும் காலதாமதம் ஏற்படும். குறிப் பாக கொடைக்கானல், திண்டுக்கல், சிறுமலை பகுதிகளில் ரீ செட்டில்மென்ட் செய்ய வேண்டுமென்று நீண்டகாலமாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்போது நடைபெறும் இடங்களில் பணி எப்போது முடிவடையும்? மற்ற வட்டங்கள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் அரசு ஒரு உத்தரவைப் போட்டு, இன்றைக்கு 28 வட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. 5 ஆண்டு களுக்குள் மாநிலம் பூராவிலும் இந்தப் பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்பது அரசின் திட்டம். அந்தவகையில் இப்போது பணி நடந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து மற்ற வட்டங்களும் எடுத்துக்கொள்ளப்படும்.

**சோழவரம் மோட்டார் பந்தயத்திற்கு விற்கப்படும் டிக்கட்டுகள் மீது வரி.**

*வினா எண் 359—**திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) சென்னை சோழவரத்தில் ஆண்டுதோறும் நடை பெறும் மோட்டார் பந்தயத்திற்கு விற்கப்படும் டிக்கட்டுகளின் மீது வரி விதிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு வரி விதிப்பின் மூலம் அரசுக்கு கிடைத்த தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. எம். சின்னசாமி :** தலைவரவர்களே, ஆண்டுதோறும் நடைபெறுகின்ற இந்த மோட்டார் பந்தயத்தில் இலட்சக் கணக்கான டிக்கட்டுகள் விற்கப்பட்டு, அதன் மூலம் பெருமளவுக்கு வருமானம் இந்த தனியார் குழுவுக்கு அல்லது சங்கத்திற்கு வருகிறது. அதன் மீது வரி விதித்தால் அரசாங்கத்திற்கு நிறைய வருமானம் கிடைக்கும். எனவே, அடுத்த ஆண்டிலாவது இந்த யோசனையை அரசு பரிசீலனை செய்து, வரி விதிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, வருவாயை மட்டும் பார்க்காமல் சில கலைகளும், விளையாட்டுக் களும் நாட்டுக்கு வேண்டும் என்பதற்காகத்தான் அவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே கேளிக்கை வரி என்பதைப் பொறுத்தவரையில் திரைப்படம், குதிரைப் பந்தயம் போன்றவைகளுக்குத்தான் விதிக்கப்படுகின்றது. ஆனால், சர்க்கஸ், இசை, நாடகம் விளையாட்டு போன்றவைகளுக்கெல் லாம் அவை நாட்டுக்கு வேண்டும் என்பதற்காகவும், வளர வேண்டும் என்பதற்காகவும் வரி விதிப்பிலிருந்து விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் :** தலைவரவர்களே, விளையாட்டு போட்டிகளுக்கு வரி விதிப்பதில்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். விளையாட்டுப் போட்டிகளைப் பொறுத்தவரையில் எவை எவைகளுக்கு லாபம் கிடைக்கின்றது, எவை எவைகளுக்கு நஷ்டம் ஏற்படுகின்றது என்பதை எல்லாம் நன்றாகத் தெரிந்து அவற்றிற்குத் தக்கவாறு வரி விலக்கோ, வரி விதிப்பதோ செய்வது நல்லது. உதாரணமாக மோட்டார் பந்தயத்தில் எப்போதும் லாபம் கிடைக்கின்றது. அதே மாதிரி கிரிக்கெட் பற்றியும் சொன்னார்கள். கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிக்கு வரி போட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் 30 இலட்சம் நஷ்டத்திலே இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. இந்த நிலையிலே சட்டத்தைக் காட்டிக் கொண்டு அதற்கு வரி போட வேண்டும் என்று சொல்கிறார்கள், இவை ரெக்ரியேஷன் ஆக்டிவிட்டிஸாக இருக்கின்றபோது இவற்றிற்கெல்லாம் வரி போட்டால் இவை அபிவிருத்தி அடையக் கூடிய ஒரு நிலை ஏற்படாது என்பதை அரசாங்கம் உணருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, நான் முதலிலேயே தெரிவித்து விட்டேன், கலைகளும், விளையாட்டுகளும் நாட்டிற்கு வேண்டும், அவை வளர வேண்டும் என்பதற்காக அவற்றிற்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டிருக்கின்றது என்று.





**திரு. எம். சின்னசாமி :** தலைவரவர்களே, இந்த மோட்டார் பந்தயத்திற்கு நிறையப்பேர் முண்டி அடித்துக் கொண்டு போகிறார்கள். ஆகவே இதை அரசே வைத்துக் கொண்டு டிக்கட் போட்டு விற்றால் நல்ல வருமானம் வரும். ஆகவே மோட்டார் பந்தயத்தை அரசே ஏற்று நடத்துமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, அதைப்பற்றி இதுவரையில் அரசு யோசிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இல. பலராமன் :** தலைவரவர்களே, இதுபோன்ற பந்தயங்களை நடத்துகின்றபோது அரசு அங்கீகாரம் பெற்று அவைகளை நடத்துகிறார்களா ? அதனுடைய வரவு செலவுக் கணக்கை அரசு தணிக்கை செய்கின்றதா ? .சோழவரம் மோட்டார் பந்தயத்தில் கடந்த ஆண்டு வந்த வருமானம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, கலைகளும், விளையாட்டுகளும் நாட்டிற்குத் தேவை என்பதாலும், அவை வளர வேண்டும் என்பதாலும் அவைகளுக்கெல்லாம் லைசன்சு முறை வைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சட்டக் கல்லூரியில் மாலை நேர வகுப்பு

*வினா எண் 360 — திருவாளர்கள் ச. அங்குசாமி, த. வேணுகோபால் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் திட்டம் தற்பொழுது நிறுத்தி வைக்கப் பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மாலை நேர வகுப்பைத் தொடர்ந்து நடத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :**

(அ) சட்டக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் திட்டம் இந்திய வக்கீல்கள் ஆலோசனை சபையின் முடிவின்படி 1980—81 ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) அதனால் மாலை நேர வகுப்புகளைத் தொடர்ந்து நடத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

[1981 மார்ச் 4

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, அரசு அலுவலகங்களில் பணி புரிபவர்களுக்கு உதவிகரமாக இருப்பதால் வழக்கறிஞர் ஆலோசனை சபைக்கு இது குறித்து வலியுறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இது ஒரு தொழில் தொடர்புடைய கல்வியாக இருப்பதால் அரசு மாலை நேர வகுப்புக்களை நடத்தக் கூடாது என்று வக்கீல்கள் சங்கம் தீர்மானம் கொடுத்திருக்கின்றது. அவர்களுடைய யோசனையின் பேரில்தான் மாணவர்களைச் சேர்க்கும் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நடத்துவதில்லை. நடத்துவதில் பயன் இல்லை.

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகம் தபால் மூலம் பி.ஜி.எல். வகுப்பு நடத்துவதற்கு வழக்கறிஞர்கள் ஆலோசனை சபை அங்கீகரித்திருக்கின்றது. ஆகவே தபால் மூலம் படித்தவர்களும் வழக்கறிஞர்களாகும் வகையில் ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்கள் எல்லாம் வழக்கறிஞர்களாகத் தொழில் புரிய மாட்டார்கள். இந்த முடிவைத்தான் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இதைத்தான் இந்தியாவில் இருக்கின்ற எல்லா வழக்கறிஞர்களும் சொல்கிறார்கள்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, சென்னையிலுள்ள சட்டக் கல்லூரிக்கு அட்டானமஸ் ஸ்டேட்டஸ் அளிக்கும் யோசனையை இந்த அரசு பரிசீலனை செய்கிறதா ?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெறுகிற முறையிலேயே அது ஒழுங்காக நடைபெற்று அந்த அடிப்படையில் அவர்கள் அட்டானமஸ் ஸ்டேட்டஸ் வேண்டும் என்று கேட்பார்களேயானால் அது பற்றி பல்கலைக் கழகம் சிந்திக்கும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் படிப்புக்கு மாலை நேரக் கல்லூரி இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், உண்மையாக கல்லூரியிலே படித்துத் தேர்விலே தோல்வி அடைந்தவர்களுக்கு, ஒரு பயிற்சி அளிக்கின்ற வகையில் இந்த மாலை நேர வகுப்புக்களை நடத்த அரசு ஆலோசனை செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1981 மார்ச் 4]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி எந்தவிதமான ஆலோசனையும் இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வக்கீல்கள் சங்கம் மாலை நேர வகுப்பு நடத்துவது குறித்து என்ன யோசனை தெரிவித்தார்கள் என்பதை அவைக்கு அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ 4 பேர் சேர்ந்து சங்கம் என்று அமைத்து அவர்கள் சொன்ன யோசனையை அரசு ஏற்றுக் கொள்வதா என்கிற முறையில் இந்தப் பிரச்னையை அணுகுவதற்கில்லை. அவர்களுடைய சங்கம் சட்டத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது. அண்டர் பார் கவுன்சில் ஆக்ட்-அட்வகேட்ஸ் ஆக்ட்டின் கீழ் அந்தச் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் அந்தச் சங்கத்தின் யோசனையை மீறி வேறு யாரும் போய் வேலை பார்க்க முடியாது. காரணம் சட்ட அடிப்படையில் அமைக்கப்பட்ட சங்கம் அது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சட்டப் படிப்பு என்பது தொழில் தொடர்புள்ள படிப்பு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால், மாலை நேரக் கல்விக்கு பி.ஜி.எல். படிப்புக்கு அனுமதிக்கலாம், இதை ஒரு அக்காடமிக் இன்டிரஸ்ட்டாகத்தான் எடுத்துப் படிக்கிறார்கள். பி.ஜி.எல். படித்தாலும் கூட பி.எல். படித்தால்தான் வக்கீல்களாக பிராக்டீஸ் செய்ய முடியும். ஆகவே, அப்படிப்பட்ட வகையில் இந்த பி.ஜி.எல். படிப்பை மாலை நேரக் கல்லூரியில் எடுத்துக்கொள்ள வக்கீல்கள் சங்கத்திற்கு மறு பரிசீலனை செய்யக் கோரி அரசு ஆலோசனை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியிலே படித்தாலே கூட, அவர்கள் கல்லூரி மாணவர்களாக இருந்தாலும்கூட தொழில் செய்வதற்கு அந்தச் சங்கத்தின் உரிமையை பெற்றாக வேண்டும் என்ற நிலைமை இருந்து வருகிறது. இப்படி இவர்களுக்கு அனுமதி கொடுத்தால் அவர்கள் போராடுவார்கள். அதனால், இந்தப் படிப்பைப் பொறுத்தவரையில் மாலை நேரக் கல்லூரி கூடாது என்று வைத்திருக்கிறோம். கரெஸ்பாண்டென்ஸ் கோர்ஸ் இருக்கிறது. அதிலே சேர்ந்து தாராளமாகப் படிக்கலாம்.

கடலூர் தந்தை பெரியார் கலைக் கல்லூரியில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி., வகுப்புகள்.

*வினா எண் 361— திரு. பாபு கோவிந்தராஜன் : மாண்பு
மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்
பாரா—

(அ) கடலூர் தந்தை பெரியார் கலைக் கல்லூரியில் எம்.ஏ.,
எம்.எஸ்.ஸி. வகுப்புக்கள் ஆரம்பிக்க பல்கலைக் கழக மானியக்
குழு அங்கீகாரம் அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், துவக்கப்பட அரசு எடுத்துக்கொண்ட
முயற்சி என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ)
கல்லூரியில் பட்ட மேற்படிப்பு துவங்க பல்கலைக் கழக மானியக்
குழுவின் அங்கீகாரம் தேவையில்லை. பல்கலைக் கழகத்தின்
இணைப்பு அனுமதி பெற்று பட்ட மேற்படிப்பு வகுப்புக்கள்
துவங்கலாம். கடலூர், பெரியார் கலைக் கல்லூரியில்
1980–81 ஆம் ஆண்டு தாவரவியலில் பட்டப்படிப்பும் (B. Sc.,
Botany) வரலாற்றுத் துறையில் இளங்கலைப் பட்டப்படிப்பும்
(B. A. History) துவங்கப்பட்டுள்ளது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி.

*வினா எண் 362—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கங்கைகொண்டசோழபுரத்தில் தொல்பொருள் ஆய்வுத்
துறையினரால் அண்மையில் ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொள்ளப்
பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் கிடைத்த புதிய சான்றுகள்
என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கங்கைகொண்ட சோழபுரம் கோயிலுக்கு அருகிலுள்ள
மாளிகைமேடு என்னும் பகுதியில் பிப்ரவரி 1980 முதல் அகழ்
வாய்வு செய்யப்பட்டு வருகிறது. இவ்வகழ்வாய்வில் சோழர்கால
அரண்மனையின் கட்டிடப்பகுதிகள், சீன நாட்டு பானை ஓடுகள்,
தந்தம், எலும்பு பொருட்களில் செய்யப்பட்ட அழகு பொருள்கள்,
வேலைப்பாடு அமைந்த கற்கள், இரும்பு ஆணிகள், கத்தியின் கைப்
பிடி முதலியன கிடைத்துள்ளன. இங்கு கிடைக்கப்பெற்ற பொருட்
களின் வாயிலாகவும், கோயில் கல்வெட்டுகளினாலும் சோழர்
காலத்தில் தலைநகரமான கங்கைகொண்டசோழபுரத்தின்
கட்டிடங்கள் எவ்வாறு சிறப்புற்று இருந்தன என அறிகிறோம்.





திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே,
கங்கைகொண்ட சோழபுரம் பகுதியிலே தொல்பொருள் ஆராய்ச்சி
செய்ததற்குப் பின்னர், பலவகையான பழமையான பொருட்
கள் கிடைத்திருப்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே
சொன்னார்கள். காஞ்சீபுரம், ஸ்ரீரங்கம், மதுரை போன்ற
இடங்களில் இதுபோன்ற தொல்பொருள் ஆராய்ச்சிகள்
செய்தால் நலமாக இருக்கும். மெய் வழிச் சாலை என்ற இடத்
தைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று
நம்புகிறேன். அங்கே தங்கச் சுரங்கம் இருப்பதாகச் சொல்
கிறார்கள். ஆகவே, நமது தொல்பொருள் ஆராய்ச்சியாளர்
களை அங்கே அனுப்பி....(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,
தங்கச் சுரங்கம் சம்பந்தப்பட்ட கேள்விகளை எல்லாம்,
அது தொடர்பான அமைச்சரிடம் கேட்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,
கங்கைகொண்ட சோழபுரம், சோழ மன்னர்களுடைய காலத்திலே
புகழ் பெற்றிருந்த இராஜராஜ சோழன் காலத்திலே 16 கல்
சுற்றளவுக்குள் இந்நகரம் பரவி இருந்ததாகக் கல்வெட்டுச் சான்று
கள் இருக்கின்றன. அங்கே இப்போதுதான் தொல்பொருள்
ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. அங்கே இன்னும் விரிவாக
ஆராய்ச்சியை மேற்கொண்டால், மேலும் பல உண்மைகள்
வெளியே வரும். இந்த ஆராய்ச்சியில், மத்திய அரசின் தொல்
பொருள் ஆய்வுத் துறை ஈடுபடுகிறதா அல்லது நம்முடைய
மாநிலத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதிலே சம்பந்தப்பட்
டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த அகழ்வாய்வை
நம் மாநில அரசின் கீழ் இருக்கிற தொல்பொருள் ஆய்வுத்துறை
தான் செய்துகொண்டிருக்கிறது. இப்போது கிடைத்திருக்கிற,
இந்தக் கட்டிடத்தின் இடிபாடுகள் இவைகள் எல்லாம் அந்தக்
காலத்து வரலாற்று உண்மைகளைப் புலப்படுத்துகிற வகையில்
இருக்கின்றன. அந்தக் காலத்தில் இருந்த அரசர்கள் வாழ்ந்த
இடம் அல்லது அரண்மனை என்று சொல்லப்படுவதன் இடி
பாடுகள் நமக்குக் கிடைக்கப் பெற்றிருப்பது இதுதான் முதல்
தடவை என்று நான் கருதுகிறேன். ஆகவே, இவைகளில் நாம்
கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு அதை நல்ல முறையில்
அந்த இடத்திலேயே மக்கள் வந்து பார்க்கக்கூடிய வகையில் ஒரு
காட்சியகம் அமைக்கும் யோசனையும் அரசுக்கு இருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : அண்மையில் மலேசியா சென்ற
சமயத்தில் கடாரத்தை வென்ற சோழன் கட்டிய கோவில், அவர்
கள் உபயோகித்த பண்டங்கள் இவைகளை அந்த நாட்டு அரசு
மிக அழகான முறையில் எடுத்து வைத்து அங்கு வருகிற
யாத்ரீகர்களுக்குத் தமிழர்களின் நாகரீகத்தையும் பண்பாட்டை

யும் காண்பிக்கும் வகையில் செய்திருக்கிறார்கள். அதேபோல், இங்கே தாய்த் தமிழகத்தில் பல்வேறு நூற்றுக்கணக்கான இடங்கள் இருந்தும்கூட தமிழகத்தில் உள்ளவர்கள் அறியக் கூடிய வகையில்கூட அவை சரியான முறையில் விளம்பரப்படுத்தப்படவில்லை. ஆகவே, அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நமது வரலாற்றுத் தொடர்பான தொல்பொருள்கள் ஆய்வினை நல்ல முறையில் செய்யவும் அதை மக்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குமான ஆர்வம் அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து நாம் எடுக்கிற பொருள்களை அந்தயிடத்தில் '' ஸைட் ம்யூசியம் '' ஒன்றை வைத்து அதை மக்கள் வந்து பார்க்கக்கூடிய வகையில் வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற முயற்சிகளை எடுத்து வருகிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற எண்ணப்படிதான் இப்போது நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 363, 364, 365 ஆகியவை கடைசியில் எடுத்துக்கொள்ளப்படும்.

**சிங்காநல்லூர் இ. எஸ். ஐ. மருத்துவமனையில் காசநோய்ப் பிரிவு.**

*வினா எண். 366— **திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை இ.எஸ்.ஐ. சிங்காநல்லூர் மருத்துவமனையில் காசநோய்ப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் காசநோய்க்கு என்று 25 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர காசநோய்க்கென்று தனிப்பிரிவு ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**திரு. கு. ரமணி :** சிங்காநல்லூரில் உள்ள இந்த இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி ஒரு பெரிய மருத்துவமனையாகும். அந்த மருத்துவமனையில் காசநோய்ப் பிரிவு, புற்றுநோய்ப் பிரிவு போன்ற விசேஷப் பிரிவுகள் ஏற்படுத்தப்படாமல் பெருவாரியாக நோயாளிகளாக செல்லக்கூடிய தொழிலாளர்கள் அதற்கான சிகிச்சைகள் பெற சென்னை அல்லது மதுரை போன்ற பகுதிகளுக்கு அனுப்பப்படுவதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? ஆகவே, உடனடியாக இவ்வளவு பெரியதொரு மருத்துவ மனையில் இந்தப் பிரிவுகளை உருவாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுக்கும் தகவல்கள் அவ்வளவு சரியாக இல்லை என்று கருதுகிறேன். மொத்தமுள்ள 500 படுக்கைகளில் 25 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்காக இந்தப் பிரிவுகளுக்கு உண்டான வல்லுநர்களை நியமனம் செய்தும் இ.எஸ்.ஐ. கீழ்வரும் நோயாளிகளுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், மருத்துவயியல், அறுவை, கண் நோய், மகப்பேறு, மகளிர் இயல் நோய், காச நோய், தோல், முடவியல், கதிர்வீச்சு, திசுநோய், நோய் குறியியல், காது, மூக்கு, தொண்டை இவற்றிற்கான பகுதிகளுக்கு தனித்தனி ஸ்பெஷலிஸ்ட்ஸ் போட்டு அவர்களுக்கு சிகிச்சை தரப்படுகிறது.

**திரு. ஆர். மணிமாறன் :** கோவை நகரைச் சுற்றிலும், சிங்காநல்லூர் பகுதியில் பஞ்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகஅதிகஅளவில் இருந்துவருகிற காரணத்தால் பஞ்சின் மத்தியில் அவர்கள் உழலவேண்டிய சூழ்நிலை இருப்பதால் அடிக்கடி காசநோய் கண்டு வேறு வசதி இல்லாமல் அவர்கள் பெருந்துறை நோக்கிப் போக வேண்டியிருக்கிறது. பெருந்துறையில் கொடுக்கப்படுகிற சிகிச்சை போன்று இங்குள்ள மருத்துவமனையி அதுபோன்ற வசதிகளை உருவாக்கித் தரக்கூடிய அளவிற்கு சிகிச்சைகள் நடைபெறுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, அதை உணர்ந்து தொழிலாளர் நலனுக்காக இப்படிப்பட்ட காச நோய்ப் பிரிவு ஒன்றை தீவிரமாக உருவாக்க அரசு முனையுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இ. எஸ். ஐ. மருத்துவமனையில் கொடுக்கப்படுகிற சிகிச்சை எந்த அளவிற்கும் தரம் தாழ்ந்தது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை யொட்டி லேபர் வெல்பேர் பண்டிலிருந்து எங்கெங்கே தனியார் தாம்பரத்தில் கட்டியிருப்பதுபோல் கட்டலாமா என்பதை அரசு பரிசீலனை செய்யும்.

[முற்பகல் 9-30]

**திரு. எம். சின்னராஜ் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் போதிய அனுபவம் பெற்ற திறமையான மருத்துவர்கள் அதாவது ஸ்பெஷலிஸ்ட் என்று சொல்லக்கூடியவர்கள், பணியாற்றுவதற்கு முன் வருவதில்லை. ஆகவே, ஈ.எஸ்.ஐ.-க்கு என்று தனியாக தகுதிவாய்ந்த டாக்டர்களை தகுதிக்கேற்ப ஊதியம் கொடுத்து நேரடியாக நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஈ.எஸ்.ஐ.-க்கு என்று செபரேட் கேடர் ஆப் டாக்டர்கள் நியமனம் செய்வது பற்றி முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே இந்த முடிவு செயல்படுத்தப்படும்.

திரு. க. பரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள், நெசவுத் தொழில் செய்யும் தொழிலாளர்கள் இந்த காச நோயால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கும் இந்த வசதிகளை விஸ்தரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : அவைத் தலைவர் அவர்களே, கோவை சிங்காநல்லூரிலே உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே மிகப் பெரிய தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றிய திரு. என். ஜி. இராமசாமி அவர்களுடைய பெயரைச் சூட்டுவதற்கான செயல் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன். போராட்டம் நடந்து சிறை சென்றவர்கள் இருக்கிறார்கள் என்பதை தொழிற் சங்கத்திலே ஈடுபட்டுள்ள அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்ற காரணத்தினால், திரு. என். ஜி. இராமசாமி அவர்களுடைய பெயர் சூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம் நடந்தது ஞாபகம் இருக்கிறது. இப்போது அப்படிப் பெயர் சூட்டுவது பற்றி அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, கோயம்புத்தூரிலே உள்ள இந்த ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை பற்றி, அங்கே உள்ள கூறுகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதிலிலே சொன்னார்கள். குறிப்பாக, பஞ்சாலைத் தொழிலாளர்கள் இந்த காச நோயினால், தொந்து நோயினால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு அங்கே உடனடியாக ஒரு விசேஷப் பிரிவை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே இதுபற்றிக் கூறியிருக்கிறேன். 500 படுக்கைகள் உள்ளதில் 25 படுக்கைகள் இதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தனியாக டாக்டர்கள் போடுவதுபற்றி, திரு. உமாநாத் அவர்கள் உட்கார்ந்துகொண்டே செய்யுங்கள் என்று சொல்கிறார், நான் நின்றுகொண்டே அதற்கான முயற்சிகளைச் செய்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.





திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியிலே பணியாற்றுகின்ற டாக்டர்கள் பிரைவேட் கன்சல்டேஷன் வைத்துக் கொள்ளக்கூடாது என்று உத்தரவு இருக்கிறது. வேறு மருத்துவ மனைகளிலே இந்த மாதிரியான கண்டிஷன் கிடையாது. ஆகவே, பல பேர் இதற்கு வருவதற்கு விருப்பப்படுவதில்லை. ஆகவே, இரண்டு பேர்களுக்கும் ஒரே விதிமுறையை ஏற்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகவே, செபரேட் கேடர் ஆப் டாக்டர்களை இதற்கென்று ரெக்ரூட் செய்யப் போகிறோம். அப்படி வரும்போது அவர்கள் தேவைகளைக் கேட்பார்கள். அப்போது கண்டிஷன்போட்டு, அதை ஏற்றுக்கொண்டு பணியாற்ற வருவார்கள்.

## திருச்சியில் குடிநீர் வசதியை விரிவு படுத்துதல்.

*—வினா எண். 367— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் குடிநீர் வசதியை விரிவுபடுத்த ஆய்வுத் தொகை எவ்வளவு கட்டப்பட்டுள்ளது ?

(ஆ) ஆம் எனில் மேற்படி நகருக்கு குடிநீர் வசதி விரிவு படுத்த எவ்வளவு பண ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ?

(இ) வேலை எப்பொழுது நடைபெற இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஒன்றும் இல்லை.

(ஆ) திருச்சி நகருக்கு குடிநீர் வசதியை விரிவுபடுத்த முதல் கட்டமாக ரூ. 130 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக ரூ. 161·30 இலட்சம் சமீபத்தில் அனுமதிக்கப்பட்டது.

(இ) முதற்கட்ட வேலைகள் அனைத்தும் முடிக்கப் பெற்று இரண்டாவது கட்ட வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டாம் கட்ட வேலை ஆரம்பிக்கும்போது, திருச்சி நகரில் புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் நகர், பெருந்தலைவர் காமராஜ் நகர், கருணாநிதி நகர்,

ஸ்டேட் பாங்கு காலனி போன்ற பகுதிகளில் தண்ணீர் வருவது கிடையாது. ஆகவே, இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும்போது, இந்தப் பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுக்க அரசு ஆய்வு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கட்ட வேலை முடிவு பெற்றவுடன் திருச்சி நகருக்கு இப்போது 20 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருவது, 30 மில்லியன் லிட்டர் தண்ணீராக வழங்கப்பட இருக்கிறது. ஆனால், குடி தண்ணீர் விநியோக முறைக்கு 173 கிலோ மீட்டர் தூரத்திற்கு டிஸட்ரிபியூஷன் பைப்புகள் போடப்பட்டுள்ளன. மேலும், இந்த விநியோக முறை வளர்ச்சி அடைந்த பகுதிகளுக்கு 73 கிலோ மீட்டர் தூரத்திற்கு விரிவுபடுத்தப்படும். தில்லை நகர், மற்றும் இராணுவப் பகுதிகளுக்கு 42 கிலோ மீட்டர் தூரத்திற்கு விநியோக முறை மாற்றியமைக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருச்சியிலே சில பகுதிகளில் குறிப்பிட்ட நேரங்களில்தான் தண்ணீர் வருகிறது. அந்த நேரம் மக்களுக்குப் பயன்படும் நேரமாக இல்லை ஆகவே, அங்குள்ள பொது மக்கள் குறிப்பிட்ட இந்த நேரத்திலே விடவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அந்த வேண்டுகோளை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுகோள் கவனிக்கப்படும்.

**திரு. இரா. கருப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரில், திருச்சி ஜங்ஷன் பகுதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி வந்து செல்லும், அவரது பார்வையில் இருக்கக்கூடிய ஒரு பகுதி. அந்தப் பகுதியிலே கட்டப்பட்டிருக்கிற தண்ணீர் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் அது இன்னும் இயங்கவில்லை. இதில் தாமதத்திற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** பேரவைத் தலைவர் அவர்களே. முதல் கட்டம் முடிந்து, இரண்டாவது கட்டம் ஆரம்பிப்பதற்கு முன் அவ்வளவு தண்ணீர், இவ்வளவு தண்ணீர் என்று அமைச்சர் அவர்கள் என்னென்னவோ சொன்னார்கள். அங்கே தண்ணீர்



ரொம்ப லிமிடெட்டாக இருக்கிறது. ஆகவே, இதில் '...பர்தர் இம்ப்ரூமெண்ட்' எப்போது எதிர் பார்க்கலாம் என்ற கால நிலையை எதிர்பார்க்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிக்குச் சென்றிருந்தபோது ஒரு யோசனை வந்தது. அங்கு கொள்ளிடம் நதி செல்கிறது. நிரம்ப தண்ணீர் போகிறது. காவிரியும் பாய்கிறது. இருந்த போதிலும் திருச்சியில் பெண்கள் குடிதண்ணீருக்காக பைப்பில் பல மணி நேரம் நிற்கிற நிலைமையைப் பார்த்தபோது, 'சர்ப்பிளஸ் வாட்டர்' வரும்போது தேக்கி வைக்கிற முறைகள் ஏதாவது செய்ய வேண்டும் என்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். அது தான் திருச்சி நகருக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு நல்ல முறையாக இருக்குமென்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஜே. எஸ். இராஜு :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தில் இருக்கிற மத்திய சிறைக்குத் தண்ணீர் எப்போதுமே பற்றாக் குறையாக இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படியே போனால் இன்னின்னார் வீட்டிற்குத் தண்ணீர் வரவில்லை, அரசுக்குத் தெரியுமா என்று கேட்பார்கள், அதற்கெல்லாம் அமைச்சர் பதில் சொல்ல முடியாது.

### குன்னூர் நகரில் குடிநீர் வடிகால் வாரிய வேலைகள்.

*வினா எண். 368—**திரு. மு. அரங்கநாதன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குன்னூர் நகரில் 1968 ஆம் ஆண்டு திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட வேலை இன்று வரை முடியவில்லை என்பது உண்மையா ?

(ஆ) எப்போது அந்த வேலை முடிவடைந்து நகராட்சிக்கு ஒப்படைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :**

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் முடிவுற்று நகராட்சியிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விட்டால்தான் அந்த வீடுகள் காலியாகும். அப்போதுதான் வெளியே காத்துக்கொண்டிருக்கிற புதிய தொழிலாளர்கள் அங்கே போய் குடிபோகமுடியும். அதற்காகத்தான் அந்த வீடுகள் இருக்கின்றன.

திரு. ப. நெடுமாறன் : தொழிலாளர்கள் குடியிருப்புகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான பாலிசி அனவுன்ஸ்மென்ட்டை செய்திருக்கிறார்கள். மதுரை மாநகராட்சி எழுத்தர்களுக்கு குடியிருப்புகளை அந்த எழுத்தர்களுக்கே மாநகராட்சி கொடுத்திருக்கிறது. ஆனால் அங்கே வேலை செய்யும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு அந்தக் குடியிருப்புகளை கொடுப்பதற்கு முன்வரவில்லை. ஏற்கெனவே எழுத்தர்களுக்கு கொடுத்திருக்கிற அந்தச் சலுகைகளை கீழ் மட்டத்திலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கும் அளிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நாம் இப்போது பேசிக் கொண்டிருப்பது மாநில அரசின் கொள்கைப்பற்றி. இந்த மாநில அரசு மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்தபொழுது பரிசீலனை செய்தது. அவைகள் வாடகை வீடுகள். It is not a hire-purchase system. It is only a rental scheme. Rent i scheme என்ற முறையிலே வாடகை வீடுகள் என்று தான் குடிபோகிறார்கள். அவர்களைத் தவிர வெளியே இருக்கிற எஞ்சிய தொழிலாளர்களுக்கும் அந்த பலன் கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் 'ரெண்டல் ஸ்கீமை' 'ரெண்டல்' ஸ்கீமாக வைத்திருக்கிறோம். மதுரையிலே hire purchase-ல் Lower-income group, M.I.G., economically weaker sections என்ற அடிப்படையிலே வீடு கட்டுகிறோம். அதிலே இவர்கள் பதிவு செய்து அந்த வீடுகளை பெறலாம்.

## வேகவதி--பாலாறு இணைப்புத் திட்டம்.

*வினா எண் 370—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேகவதி-பாலாறு இணைப்புத் திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரின் முதல் நிலை ஆய்வில் உள்ளதால், திட்ட மதிப்பீடு பற்றிய விபரங்கள் தற்போது இல்லை.



திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : எப்போது இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு நிலையிலேதான் இந்தத் திட்டம் இருக்கிறது. ஆய்வு விரைவில் முடிக்கப்படும் என்ற தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் திட்டத்தை எடுத்துக் கொள்வது பற்றி அரசு முடிவு செய்யும்.

## கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறை அணை.

*வினா எண் 371—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுக்காவில் மாம்பழத்துறை அணை கட்டுவதற்காக அரசு மேற்கொண்ட ஆய்வு தற்போது எந்த நிலையிலிருக்கிறது?

(ஆ) அணை கட்டுவதற்கான வேலைகள் எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறை யாற்றில் அணைகட்டும் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை. எனினும், மாம்பழத்துறையாற்றின் உபரிநீரை திருப்பிவிட்டு, பத்மநாபபுரம் புத்தனார் வாய்க்காலின் கீழுள்ள ஆயக்கட்டுகளின் தேவையை நிறைவு செய்யும் சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டன. திருப்பிவிடுவதற்கான உபரிநீரின் அளவு மிகவும் குறைவு என்றும், எதிர்பார்க்கப்படும் பயன்களும் அதிகமில்லை என்றும், எனவே இத்திட்டத்தை கைவிடலாமென சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்த கருத்தை ஏற்று அரசு இத்திட்டத்தை கைவிட்டது.

திரு. குமரி அனந்தன் : ஏற்கெனவே இந்தத் திட்டத்தைப் பற்றி ஆய்வு செய்து அந்த நீரைத் திருப்பிவிட்டு அமைச்சர் சொன்ன பகுதிகள் பயன்பெறும் என்று சொல்லி முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை பல ஆண்டுக்காலத்திற்கு முன்னாலேயே அமைச்சர் அறிக்கை மூலமாக நாங்கள் அறிந்து இருக்கிறோம். அமைச்சர் பெருமகனார் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து மீண்டும் அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்கிற முயற்சிகளிலே ஈடுபடுவார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறையாற்றின் உபரி நீரை திருப்பிவிட்டு, பத்மநாபபுரம் புத்தனார் வாய்க்காலின் கீழுள்ள ஆயக்கட்டுகளின் தேவையை நிறைவு செய்யும் சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டன. மீண்டும் இந்தத் திட்டத்தின்தன்மை, நீரியல் தன்மை ஆகியவற்றை அறிய வேண்டுமென்று இரண்டாவது முறையாகப் பார்த்தார்கள். உபரி நீர் மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால் எந்தவிதமான பயனும் இல்லை என்ற காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க திரும்பவும் மறுமுறை அதை ஆய்வு செய்வதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

பாலாற்றுக்கு ஹோகெனெக்கல் நீர்வீழ்ச்சியிலிருந்து தண்ணீர்.

* வினா எண் 372—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஹோகெனெக்கல் நீர் வீழ்ச்சியிலிருந்து பாலாற்றுக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், விரைவில் தொடங்கப்பட்டு விவசாயத்துக்கு பயனுள்ளதாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னாலும்கூட, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் பல்லாயிரம் விவசாயிகளும், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் பயன் பெறும் வகையில் இருப்பதால், இதற்காக ஆகும் திட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ஆகும் என்பதையும், இதனால் எத்தனை மாவட்டங்களுக்குப் பயன் கிடைக்கின்ற தகுதி உள்ளன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஹோகெனெக்கல் நீர்வீழ்ச்சி காவிரி ஆற்றிலே உள்ளது. அந்த நீர்வீழ்ச்சியிலிருந்து பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் இப்பொழுது அரசினுடைய ஆய்விலே இல்லை.



சண்முகா நதியின் குறுக்கே அணை.

*வினா எண். 373—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதியில் சண்முகாநதியின் குறுக்கே அணைகட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கம்பம் தொகுதியில் உள்ள நகையகவுண்டன்பட்டி, ஆனைமலையின்பட்டி, இராயப்பன்பட்டி, கோகிலாபுரம் ஆகிய கிராமங்களிலுள்ள சுமார் 1000 ஏக்கர் நிலத்திற்கு பாசனம் அளிக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :—

(அ) இத்திட்டம் தலைமைப் பொறியாளரின் முதல் நிலை ஆய்வில் உள்ளது.

(ஆ) திட்டத்தின் நீரியல் அறிக்கையைப் பொறுத்து இந்த இடங்களுக்கு பாசனமளிக்க இயலுமா என்பது பற்றி தலைமைப் பொறியாளரால் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் ஒன்றிரண்டு ஏக்கர் நிலம் வைத்துள்ள ஏழை எளியவர்கள் மிக அதிகமாக இருப்பதால் அந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்தி, அந்தத் திட்டம் வெகு விரைவிலே செயல்படச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக இப்பொழுது பின் தங்கிய பகுதி என்று கணக்கில் எடுப்பதைப்போல, சிறு விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளுக்கு நாம் ஒரு முக்கியத்துவம் கொடுத்து அணைக்கட்டுக்களைக் கட்ட வேண்டுமென்ற கருத்தை வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவர்களால் தெரிவிக்கப்படும் இந்தக் கருத்தை அரசு மனத்திற் கொள்ளும். இப்பொழுது இந்தத் திட்டம் நீரியல் அறிக்கை முடியும் தறுவாயில் இருக்கிறது; மிக விரைவில் அறிக்கை கிடைத்து விடும். அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தைச் சேர்த்துக் கொள்வதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

[1981 மார்ச் 4

**விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவு கடன்களை ரத்து செய்தல்.**

* வினா எண் 363—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விவசாயிகள் பெற்றுள்ள அரசு கூட்டுறவுக் கடன் களை ரத்துச்செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) 5 ஏக்கர் அல்லது அதற்கு குறைவாக நஞ்சை அல்லது புஞ்சை நிலத்தினை சொந்தமாகவோ அல்லது குத்தகைக்கு எடுத்தோ விவசாயம் செய்யும் சிறுவிவசாயி களிடம் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்று நிலுவையிலிருந்த நடுத்தரகால மாற்றுக்கடன்களை வட்டி அபராத வட்டியுடன் அரசே கூட்டுறவுச் சங்கங்களுக்கு திருப்பித் தரமுடிவு செய்து 42 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப் பட்டது.

மேற்சொன்ன வகைக்கடன்களை சிறு விவசாயிகள் 1975 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாளுக்குப் பின் சங்கங்களுக்கு திருப்பிச் செலுத்தியிருந்தால் அத்தொகையை அவர்களிடம் இருந்து 1981-82-ல் வரவேண்டிய எந்தவித நிலுவைக்கடனுக்கு எதிராக வரவு வைக்கப்படும் எனவும் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, இந்த வினாவை நான் எழுப்பிப் பல மாதங்கள் ஆகின்றன. வரிசை எண்ணைப் பார்த்தாலே தெரியும், வினா எண் 150.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே மற்றக் குறைபாடுகளைச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது; கேள்வி நேரத்தில் உறுப்பினரவர்கள் கேள்வியைக் கேட்க வேண் டும். இல்லையென்றால் மற்ற உறுப்பினர்களைக் கேள்வி கேட்க அழைக்க வேண்டியிருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, தேர்தல் காலத்திலே ஆட்சிக் கட்சியினரால் கொடுக்கப்பட்ட வாக்குறுதி யின் அடிப்படையிலே இனி எஞ்சியிருக்கின்ற கடன்களை அரசு ரத்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுகுறித்து ஏற்கனவே அவையிலே கூறப் பட்டிருக்கிறது. விவசாயிகள் கடன்களைப் பொறுத்தவரையிலே உண்மையிலேயே பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படுகின்றபொழுது அவர் களுக்குப் பரிகாரம் தர அரசு எப்பொழுதும் முனையும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 மார்ச் 4]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, சிறு விவசாயிகளுக்குக் கடன்களை தள்ளுபடி செய்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களில், நிறுவனங்களில் சிறுவிவசாயிகள் பலர் கடன் பெற்றி ருக்கிறார்கள். அதைத் தள்ளுபடி செய்ய அரசாங்கம் நட வடிக்கை எடுக்குமா? சிறு விவசாயிகள் அல்லது மற்ற விவசாயி களின் வட்டியைத் தள்ளுபடி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளைப் பொறுத்த வரைக்கும் அங்கே கடன் வாங்கியுள்ள விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்ய அரசிடம் எந்தச் செயற்குறிப்பும் தற்பொழுது இல்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்கள் வாங்கும்போது 10 (1) அடங்கல் கொடுப்பதைப் பார்த்து கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்துள்ளார்கள். உண்மையிலேயே 5 ஏக்கருக்கு உட்பட்டவர்களுக்குக் கடன் தள்ளுபடியாகவில்லை. இது அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு தெரிந்தால் உடனே அவர் களுக்கும் கடன் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் என்பதைப் பொறுத்த வரைக்கும் 5 ஏக்கருக்கும் குறைவாக நஞ்சை நிலமோ அல்லது புஞ்சை நிலமோ இருக்கிற விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்து, அந்த அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த விதிமுறைக்குட்பட்டுள்ள விவசாயிகள் யாருக்கேனும் கடன்கள் தள்ளுபடி செய்யப்படாமல் இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரும்போது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உரம் வாங்க அல்லது வீடு கட்டுதல் என்ற முறையில், சிறு விவசாயிகள் பெற்றிருக்கிற கடனை இப்பொழுது தள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வருங்காலத்திலாவது, யோசித்து, சிறு விவசாயி கள் உரம் வாங்கியது, வீடுகள் கட்டியது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றே உரத்தைப் பற்றி நிறைய பேசியாகிவிட்டது.

[1981 மார்ச் 4

திரு. எல். இளையபெருமாள் : அவற்றிற்காக வாங்கிய கடனை எதிர்காலத்திலாவது தள்ளுபடி செய்ய யோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கற்பனையில் கேள்வி எழும் ? எதிர்காலம் என்பது எப்பொழுது என்றே தெரியாது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் இழப்பாக வேண்டி கிட்டத்தட்ட ரூ. 43 கோடி கொடுக்கப்பட்டது என்று மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே ஏற்க வேண்டிய அம்சம். விவசாயிகள் அத்தனை பேரும் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இழப்புத் தொகையை மத்திய அரசாங்கம் கொடுத்து உதவுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? கேட்கப்பட்டதா ? என்ன ஆலோசனை சொல்லப்பட்டது என்ற விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள், குறிப்பாக, ஏழை, சிறு விவசாயிகளுடைய பிரச்னையைப் பொறுத்தவரைக்கும் உற்பத்திச் செலவுக்கேற்ற ஊதியம் அவர்களுக்கு இல்லையென்ற நிலையில் எழுகின்ற பிரச்னையாக இருக்கின்ற காரணத்தால் இது ஒரு மாநிலத்தை மட்டும் சாராமல், பாரதத்தையே முழுமையாகச் சாரக் கூடிய ஒரு பொருளாதாரப் பிரச்னையாக இருக்கிற காரணத்தால் மைய அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் இந்த அரசு அக்கறையோடு பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறது. இது குறித்தும் வலியுறுத்தியது. ஆனால், மைய அரசு, மாநில அரசு ஏழை விவசாயிகள் நலங் கருதி வேண்டுகோள் விடுக்க அந்தக் கோரிக்கையை ஏற்காத காரணத்தால்தான் மாநில அரசு அந்த ஏழைச் சிறு விவசாயிகளின் நலன் குறித்து இந்த நடவடிக்கை எடுத்தது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் போராட்டத்திலே ஈடுபடுகின்ற சமயத்தில், அந்தச் சமயத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுடைய பிரதிநிதிகளை அழைத்துக் கோட்டையிலே பேசியிருக்கின்றார்கள்......................

மண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது இருக்கிற பிரச்னை கூட்டுறவுக் கடனை ரத்து செய்வதைப் பற்றி........

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஏற்கனவே நடைபெற்ற அந்த விவசாயிகளுடைய கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அங்கே கூடியிருந்த விவசாயிகளுடைய பிரதிநிதிகளுடைய கருத்துக்களை எல்லாம், கூட்டுறவுக் கடன்களை எப்படி, எந்த, எந்த வழிகளிலே, ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகளை எல்லாம் கட்சி வாரியாக அவர்கள் பெற்றார்கள். சில பேர்கள் வட்டியைத் தள்ள வேண்டுமென்று சொன்னார்கள்.



1981 மார்ச் 4]

சில பேர்கள் அசலைத் தள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் கடைசியிலே சொல்கின்ற சயமத்தில் அது குறித்து 15 தினத்தில்.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கூட்டத்தினுடைய டீடெய்ல்சுக்குள் போகக் கூடாது. கேள்வி வேண்டுமானால் கேட்கலாம். கூட்டத்தைப்பற்றி வேறு நேரத்தில் பேசலாம்.

திரு. வி கிருஷ்ணமூர்த்தி : வட்டியைத் தள்ள வேண்டும். அல்லது அசலைத் தள்ள வேண்டுமென்ற பல்வேறு வகையான கோரிக்கைகள் எழுப்பிய நேரத்தில், இன்னும் 15 தினங்களிலே நாங்கள் இது சம்பந்தமாக முடிவு எடுத்து அறிவிக்கின்றோம் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பல மாதங்களுக்கு முன்னதாகக் கூறினார்கள். இதுவரையிலே அறிவிக்கவில்லை. அரசாங்கத்தினுடைய முடிவுதான் என்ன ? அது விஷயத்திலே, கூட்டுறவுக் கடன்களை, இனிமேல், ரத்து செய்வதிலே, அல்லது வட்டியைத் தள்ளுவதிலே, அசலைத் தள்ளுவதிலே அரசு என்ன முடிவுகளை மேற்கொண்ட என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களோ அல்லது முதலமைச்சர் அவர்களோ விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிவு செய்யப்பட்டிருந்தால் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கும். ஆகவே இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்பதுதான் பொருள்.

வரதட்சிணைக் கொடுமை.

*வினா எண் 364—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வரதட்சணைக் கொடுமையால் இவ்வாண்டில் நிகழ்ந்துள்ள தற்கொலைகள் எவ்வளவு ;

(ஆ) எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஒன்றுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவை நாயகர் அவர்களே, வரதட்சணைக் கொடுமையால் இவ்வாண்டில் நிகழ்ந்துள்ள தற்கொலைகள் எவ்வளவு என்கின்ற கேள்விக்கு, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். நாள்தோறும் நாளேட்டில் வந்து கொண்டிருக்கிற செய்திகள் மட்டுமல்லாமல், ஆங்காங்கு வந்து கொண்டிருக்கின்ற தகவல்கள் வரதட்சணைக் கொடுமையால் ஏராளமான தற்கொலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதைத்

தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், கொலை கூட செய்யப்பட்டு பிறகு அது தற்கொலையாக மாறுகிறது என்றும் தெரிவிக்கின்றன. அரசாங்க இலாகாவிலே அதைப் பற்றி மேலும் தீவிர புனரா லோசனை செய்து ஒற்றர்கள் மூலமாக அந்தச் செய்திகளை அறிந்து ஆராயவில்லை என்ற காரணத்தால் சொல்லுகிறேன். அந்தச் செய்திகளை அறிந்து இந்த மிகப் பெரிய வேதனைக்குரிய செயலைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணைக் கொடுமையைப் பொறுத்த வரைக்கும் அதன் காரணமாக தற்கொலை செய்து கொண்ட வர்களைப் பற்றிய தகவல் அரசுக்கு வரவில்லை. காவல் துறை யினரிடம் கேட்டு இருக்கிறோம். தற்கொலை செய்து கொண்ட தகவல் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் இருந்தும் வராத காரணத்தால், இத்தகைய தகவல்களைத் தந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல எங்கேனும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்திருக்குமானால் ரகசிய போலீஸ் மூலம் ஆராய்ந்து அந்தத் தகவலை அவைக்குத் தருகிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, இனிமேல் ஆராய்கிறேன் என்று சொன்னதற்கு நன்றி சொல்லி, இந்தப் பெண்கள் 30 வயது, 35 வயதுக்கு மேலும் வரதட்சணைக் கொடுமைக் காரணத்தால், காலமகள் கற்புச் சிலம்பை கையிலே கொடுத்து, இளமைச் சிலம்பை திருடிப் போய்விடுகிற காரணத் தினால், (குறுக்கீடு) காலமகள் கற்புச் சிலம்பைக் கையிலே கொடுத்து, இளமைச் சிலம்பைத் திருடிப் போய்விடுகிற காரணத் தால், அம்மி மிதித்து, அருந்ததி காட்டி, தாலிக் கயிற்றில் தளைப்படுத்திக் கொள்ள வணிக மகன் வரவில்லையே என்று ஏங்கிக் கிடக்கின்ற அந்தப் பெண்களின் ஏக்கம் போக்கிட சுயம் வரத் திட்டத்தை இந்த அரசு மேற்கொள்ளுமா, அதற்கான ஊக்கத்தை அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மக்கள் அரசனாக மாறினால், சுயம்வரத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, வரதட்சணைக் கொடுமையால் தற்கொலை செய்து கொள்கின்ற ரிப்போர்ட் ஒன்றும் வரவில்லை என்று கேட்கிறபோது உண்மையிலேயே ஷாக்காக இருந்தது. போன மாதம் 8-ஆம் தேதி திருச்சி நகரத் திலே புத்தூர் அக்ரகாரத்திலே ஒரு வீட்டில் விமலா என்கின்ற பெண்ணை பக்கத்து கோடவுனிலே மாமியாரும், கணவனும் சேர்ந்து மண்ணெண்ணெய் ஊற்றி அவளை எரித்து விட்டார்கள். (குறுக்கீடு) இதிலே இரண்டு வெர்ஷனும் வருகின்றன. அவர்கள் எரித்ததாகவும், மாமியார் கொடுமை தாங்காமல் வரதட்சணை சம்பந்தமாக தற்கொலை செய்து கொண்டதாகவும் வந்திருக் கின்றது. அது நகரம் பூராவும் பரப்பரப்பாக போய், பீதி உண்டாக்கி இருக்கின்றது.



அதே நேரத்தில் அந்த மாமியாரும் அந்தக் கணவனும், They are freely going about. அந்த நிலைமை இருக்கிறது. என்னுடைய கேள்வி என்னவென்றால், அப்படிப்பட்ட சம்பவங் கள் போலீஸ் கவனத்திற்கு வந்தவுடனே, at the first instance itself அந்த மாமியாரையும், கணவனையும் கைது செய்து பிறகு இன்வெஸ்டிகேஷன் நடத்துகின்ற முறையை ஏன் கையாளக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்டத்தில் குறை இருந்தால் திருத்தம் கொண்டு வரச் சொன்னதற்கு நன்றி. ஆனால் குற்றவாளிகள் தப்பிவிடு வதற்கு இந்த அரசு உடந்தையாக இருக்காது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, வரதட்சிணைக் கொடுமையைப் போக்குவதற்கு ஒரு யோசனையை அமைச்சருக்குச் சொல்லிக் கொள்கிறேன். நாட்டிலே பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரத்தில் யோசனை சொல்லக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் விரும்பி னால், தனியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சென்று சொல்லிக் கொள்ளலாம்.

(முற்பகல் 10–00)

பேரவையின் அனுமதியோடு, வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரதட்சிணைப் பிரச்சினையால் பல பெண்கள் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த வரதட் சிணைப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள், கலப்புத் திருமணம் செய்து கொள்ள முன்வருபவர்களுக்கு இந்த அர சாங்கம் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணத்தைப் பொறுத்தவரையில், ஜாதியை விட்டு திருமணம் செய்து கொள்கிறவர்களுக்கு முன்னுரிமை தரும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்றவர்களுக்கு அது இல்லை.

சென்னை உயர்நீதி மன்றத்தின் பெயரை மாற்றியமைத்தல்

*வினா எண் 365— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

"சென்னை உயர்நீதி மன்றம்" (Madras High Court) என்ற பெயரை "தமிழ்நாடு உயர்நீதி மன்றம்" (Tamil Nadu High Court) என்று மாற்ற அரசு ஏதேனும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை உயர்நீதி மன்றம் என்ற பெயரை தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று மாற்ற நடவடிக் கைகள் ஏதும் அரசால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிநீர் வடிகால் வாரியம் நீண்டகாலமாகச் செயல்பட்டு வருகிறது. இருந்தும் இந்த வேலையில் தாமதம் ஏற்பட்டிருக் கிறது. அங்கிருக்கிற மக்கள் தண்ணீருக்காக மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வர் அவர்களே, ஜூன் 1981-ல் வேலை முடியும் என்று சொல்லியிருக்கிறேன். மார்ச் மாதம் வந்துவிட்டது. இன்னும் மூன்று மாதங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் காலனிகளில் கட்டப்பட்டுள்ள வீடுகள்.**

*வினா எண். 369—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மானியத்துடன் கட்டப்பட்ட மதுரை மாவட் டத்திலுள்ள பசுமலை, பரவை, கப்பலூர் ஆகிய மில் தொழி லாளர்களின் காலனியிலுள்ள வீடுகளை குடியிருக்கும் தொழி லாளர்களுக்கு கட்டப்பட்ட விலையில் 80 சதவிலைக்கு கொடுத்து விடலாமென மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு ஆலோசனை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) மற்றும் (ஆ) ஆம். தொழிலாளர் மானிய வீட்டு வசதி திட்டத்தின்கீழ் தனியார் துறையில் கட்டப்பட்டுள்ள வீடு களை அவற்றில் குடியிருப்பவருக்கு விற்பது விரும்பத்தக்க செயல் இல்லை என்று கருதி இவ்வரசு அவ்வாறு விற்கலாம் என்று மத்திய அரசின் பரிந்துரையை ஏற்கத் தேவையில்லை என்று முடிவு எடுத்தது. இந்த முடிவை மத்திய அரசுக்கும் தெரிவித்துள் ளது.





திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த மூன்று ஆலைகளும் மதுரை மாவட்டத்திலே இருக் கின்றன. கப்பலூர், திருமங்கலம் தொகுதியிலே இருக்கிற ஆலை ஏன் பல ஆண்டுகாலமாக அந்த ஆலைகளில் வேலைகளில் இருப்ப வர்களுக்கு, அதே வீடுகளில் குடி இருப்பவர்களுக்கு அந்த வீடுகளை கொடுப்பதற்கு அரசாங்கம் விரும்பவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது வாடகைக்கு குடியிருப்பதற்காக கட்டப்பட்டது. இருக்கக்கூடியவர்களுக்கு அந்த வீடு சொந்தமென்று ஆகிவிட் டால், தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொண்டு லிஸ்டில் இருப்பவர்களுக்கு எந்த காலத்தில் வீடு கிடைக்கும்? எனவே, அவர்களுக்கு வாடகைக்கு என்று கொடுத்துவிட்டால், அவர்கள் ரிடையர் ஆகும்போது, அல்லது வேறு வேறு காரணத்திற்காகவோ அவைகள் காலி ஆகும்போது லிஸ்டில் இருக்கிற தொழிலாளர் களுக்கு கிடைக்க ஏதுவாக இருக்கும். ஆகவே ஒரு முறை நுழைந்து விட்டால், அவர்களுக்கு சொந்தமாகி விட்டால், புதி தாக தொழிலாளர்களுக்கு வீடு கொடுக்க முடியாது.

திரு. எம். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு குடியிருப்பதற்கு வீடு களை கொடுக்கிற போது அவர்களிடத்திலிருந்து உரிய பணத்தைப் பெற்றுக் கொண்டு தான் கொடுக்கிறார்கள். வீடு நெருக்கடி இருக்கும்படியான இந்த நேரத்தில், நம்முடைய நாட்டில் தொழிலாளர்களுக்கு உரிமைகள் இல்லாத ஒரு சூழ்நிலையில் இந்த சிறிய வீட்டை அவர்களுடைய பணத்தைப் பெற்றுக் கொண்டு கொடுப்பதிலே என்ன சங்கடம் இருக்கிறது? இந்த பண வரு வாயை வைத்துக் கொண்டு புதிய காலனிகளை நிர்மாணிப்ப தற்கு இதிலே வசதி இருக்கிறதே ; இதனால் நம் மாநில அரசு மத்திய அரசின் இந்த நிலைக்கு ஏன் தடையாக இருக்க வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வர் அவர்களே, நாங்கள் தடையாக இல்லை. மத்திய அரசு எழுதி இருக்கிறார்கள். It is only a suggestion என்று. 500 வீடுகள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். அவற்றிலே, 500 தொழிலாளர்கள் குடியிருக்கிறார்கள். அந்த 500 தொழிலாளர்களே காலாகாலத்திற்கும் அங்கே குடி யிருப்பார்கள் என்றால் ஏற்கெனவே அந்த வீடுகளுக்காக பதிவு செய்திருக்கிற தொழிலாளர்கள், வெயிட்டிங் லிஸ்டிலே இருக் கின்றவர்கள், அந்த வீடுகளுக்குக் குடி போகமுடியாது. ஏற் கெனவே இருக்கின்றவர்கள் ரிடையர் ஆனால் அல்லது இறந்து

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் எல்லாம் உயர்நீதி மன்றத்தின் பெயர் அந்தந்த மாநிலங்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன. கேரளா உயர்நீதி மன்றம், கருநாடக உயர்நீதி மன்றம், ஆந்திரப் பிரதேச உயர்நீதி மன்றம் என்று இருக்கிறது. ஆகவே, சென்னை மாநிலம் என்று இருந்ததை தமிழ்நாடு என்று மாற்றப்பட்ட பிறகு, உயர்நீதி மன்றத்தின் பெயரையும், '' தமிழ்நாடு உயர் நீதி மன்றம் '' என்று அழைப்பதுதான் சரியாக இருக்கும். இனி மேலாவது. அப்படி பெயரை மாற்றுவதற்கு விரைவான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றம் 1862-ஆம் ஆண்டில் இந்தியன் ஹைக்கோர்ட் ஆக்ட் 1861—என்கிற சார்ட்டர்ட் ஆக்ட்—சட்டத்தின் அடிப்படையில் சென்னை, பம்பாய், கல்கத்தா, ஆகிய மூன்று மாநிலங்களில் உயர்நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டபோது நிறுவப்பட்டது. இதிலே இன்னொரு முக்கிய பிரச்சினை, சென்னை உயர்நீதி மன்றத்திற்கு யூனியன் டெர்ரிடரி ஆப் பாண்டிச்சேரி உயர்நீதி மன்றத்தின் அப்பல்லட் ஜுரிஷ்டிக்ஷன் இருப்பதால், அதன் பெயரை ஒரு மாநிலத்தின் பெயரைக் கொண்டு மட்டும் கூற முடியாது என்கிற காரணத்தால், இந்த மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, மதுரையிலே நம்முடைய உயர்நீதி மன்றத்தின் கிளை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டியதல்ல என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. பெ. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே சென்னையில் சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் நிறுவுவதற்கு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவும் மூலக் கேள்வியை ஒட்டியதாக இல்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வினா எண்கள் 374 மற்றும் 375 ஒத்தி வைக்கப்பெறுகின்றன. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு)—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.



## 2. அறிவிப்பு.

### மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள், திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981) ;

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) ;

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981) ;

மேலும் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளதாகவும் மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

4. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம் ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981) ;

5. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1981).

## 3. ஒழுங்குப் பிரச்சினை.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

** ** ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் அனுமதிக்கவில்லை. I am not allowing.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

THIRU. V. KRISHNAMOORTHY : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : I am not going to allow. பாயின்ட் ஆப் ஆர்டரில் இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தெரிந்து கொள்ள முடியாது. சட்டப்படி என்னென்ன வழிகளில் எதை தெரிந்து கொள்ள வேண்டுமோ அப்படித்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மாண்புமிகு உறுப்பினர் கூறியதை நான் அனுமதிக்கவில்லை. அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ** ** **

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி வெளிநடப்பு செய்தார்.)

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இன்று காலையில் வேலூர் மத்தியச் சிறையில் உள்ள அரசியல் கைதிகள் குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள்....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்கிற முறையில் இதைக் கேட்க இன்றைக்கு உங்களுக்கு அனுமதி கொடுத்தால் எல்லோரும் இது போலவே பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவார்கள். நடைமுறை விதிகள் மாறுபடுகிறபோது தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியும். இதுபோன்ற விஷயங்களை, வந்தவுடன் அமைச்சரிடம் நேரில் சொல்லிவிடலாம். அவர்களே நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். அவையில் எழுப்ப வேண்டுமென்றால் 'பிரைவேட் நோட்டீஸ் குவஸ்டின்' என்ற அளவில் உங்கள் கட்சித் தலைவர்மூலம் தனியே எழுதிக் கொடுங்கள்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வந்தவுடனேயே எதிர் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அதைப்பற்றி என்னிடம் குறிப்பிட்டு விட்டார்கள். உடனடியாக விசாரிக்க ஏற்பாடு

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



செய்திருக்கிறேன். ஆகவே இந்தப் பிரச்னையை இனி நீட்டிக் கொண்டு போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

* * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ** நடந்தது எதையும் அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம்.

[முற்பகல் 10—20]

## 4. உரிமைப் பிரச்சினைகள்.

### (அ) திரு. அ. ரகுமான்கான் மீது— தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கோ. சமரசம் அவர்கள் 4—2—1981 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு அ. ரகுமான்கான் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்பினார். திரு. ரகுமான்கான் அவர்கள் வேண்டுமென்றே தவறு என்று தெரிந்திருந்தும், பேரவையைத் திசை திருப்பும் எண்ணத்துடன் சில தவறான தகவல்களைப் பேரவைக்கு அளித்தார் என்பது தான் டாக்டர் சமரசம் அவர்களின் குற்றச்சாட்டு. இதற்குத் திரு ரகுமான்கான் அவர்கள் விளக்கம் அளித்தார். எனது தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும் என்று கூறியிருந்தேன். எனது தீர்ப்பு.

1981-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ஆம் நாள் அன்று திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையைக் கொண்டு வந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில தவறான தகவல்களை அவைக்குக் கூறியதாகக் குற்றம் சாட்டினார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் அளித்தார். இதற்குப் பிறகும், திரு ரகுமான்கான் தன் குற்றச்சாட்டை வலியுறுத்திப் பேசியுள்ளார் என்பது டாக்டர் சமரசம் அவர்கள் கருத்து.

திரு ரகுமான்கான் முதலில் குற்றச்சாட்டுக்களைக் கூறிய போதும் சரி, பின்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குற்றம் சாட்டிப் பேசியபோதும் சரி தகுந்த முழு ஆதாரங்களைத் தன்னிடம் வைத்திருக்கவில்லை. அவர் தன்னிடம் இருந்த ஆதாரங்களைக் கொண்டு குற்றச்சாட்டுகளைக் கூறினார்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உறுப்பினர்கள் தங்களிடமுள்ள ஆதாரங்களைப் பேரவைத்
தலைவருக்கு முன்னதாகக் காட்டி, குற்றம் சாட்டப்படும் உறுப்
பினர் அல்லது அமைச்சருக்கு முன் தகவல் அளித்தபிறதான்
குற்றச்சாட்டுக்களைப் பேரவையில் எழுப்பலாம் என்று
இதற்குமுன் ஒரு தீர்ப்பில் நான் கூறியுள்ளேன். எனவே, தகுந்த
ஆதாரம் இன்றிக் குற்றச்சாட்டுகளைக் கூறினார் என்று கொள்ள
லாமேயொழிய வேறுவிதமான ஆதாரங்கள் இருந்தும், வேண்டு
மென்றே அவற்றை மறைத்து, மாண்புமிகு அமைச்சர் மீது
குற்றச்சாட்டுகளைக் கூறினார் என்று கொள்வதற்கில்லை. நான்
மேலே குறிப்பிட்டுள்ளதுபோல ஆதாரங்களை முன்னதாகக்
காட்டிவிட்டு முன் தகவல் அளித்து விட்டுக் குற்றச்சாட்டுக்களை
எழுப்பும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை
மீண்டும் வலியுறுத்தி, இதை எல்லா உறுப்பினர்களும் பின்பற்ற
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எழுப்பப்பட்ட பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப்
பார்க்குமிடத்து அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்
பதைத் தெரிவித்து தீர்ப்பளிக்கிறேன்.

## (ஆ) உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1981 ஆம் ஆண்டு பிப்ர
வரி மாதம் 7 ஆம் நாள் அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை
அமைச்சர் அவர்கள் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்
தலைவர் அவர்கள் ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையைப்
பேரவையில் எழுப்பினார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் விளக்கம் அளித்தபின், எனது தீர்ப்பு பின்னர் அளிக்கப்
படும் என்று குறிப்பிட்டிருந்தேன். எனது தீர்ப்பு:

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவைக்கு வெளியே
ஒரு கூட்டத்தில் பேசிய ஒரு பேச்சு எதிர்க்கட்சித் துணைத்
தலைவர் பொறுப்பை வேண்டுமென்றே குறைத்து மதிப்பிடுவ
தாக உள்ளது என்றும், மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தனது பதவியைப் பயன்படுத்தித் தனது நேர்முக உதவியாளர்
மூலம் அப்பேச்சின் சுருக்கமாக வெளியிட்டுள்ள அறிக்கை சட்ட
மன்றத்தைத் தாழ்வுபடுத்துவதாக உள்ளது என்றும், மாண்புமிகு
எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமது பேச்சின் சுருக்கத்தை வெளியிட்ட தமது நேர்முக
உதவியாளர் அரசு சம்பளம் பெறும் அரசு அலுவலர் அல்ல
என்றும், மேலும் அரசு முத்திரையுடனோ, அரசு வெளியீ
டாகவோ அது வெளியிடப்படவில்லை என்றும், தனிப்பட்ட
முறையில் ஒரு அரசியல் கூட்டத்தில் தாம் பேசிய பேச்சு அது
என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து, இதில்
அரசு முத்திரையுடன் வெளியிடப்படவில்லை என்பதாலும்,



தன் பதவியை எந்த விதத்திலும் முறை தவறிப் பயன்படுத்த
வில்லை என்றும் எனவே, இதில் அவை உரிமை மீறல் எதுவும்
எழுவதற்கில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்
பிட்டார்கள்.

இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக உரிமை மீறல்
ஏதேனும் உள்ளதா அல்லது அவையை அவமதித்ததாகக் கருது
வதற்கு இடம் உள்ளதா என்பதைத்தான் நாம் பார்க்கவேண்டும்.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அரசின் செய்தி வெளியீடு
( Press release ) என்பதாக எங்கும் குறிப்பிடப்பட
வில்லை; மேலும் அரசு சின்னமோ அல்லது அரசு முத்திரையோ
ஏதும் இல்லை. ஆனால் உள்ளாட்சித் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர் என்னும் ரப்பர் ஸ்டாம்ப் போடப்பட்
டுள்ளது, அமைச்சர் அவர்கள் அரசாங்க உதவியாளர் அல்ல
என்று தெளிவுபடுத்தியுள்ளார். கூறப்பட்டுள்ள பொருள் ஒரு
அரசியல் மேடையில் பேசப்பட்ட பேச்சாகும். அப்பேச்சினால்
அவையில் உள்ளவர்கள் இயங்குவதற்கு எந்த வகையிலும் அச்
சுறுத்தப்படுவதாகவோ அல்லது தடை செய்வதாகவோ எடுத்துக்
கொள்ள இயலாது. கண்ணியக் குறைவாக அமைந்து உள்ளது
என்று எடுத்துக் கொண்டாலும் கூட அதைப்பற்றி அவையில்
எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க இயலாது. இம்மாதிரியான
செயல்கள் நமது அரசியல் பொது வாழ்வில் எந்த அளவுக்குச்
செல்கிறது என்று வருத்தப்படுவதைத் தவிர இந்த அவை
வேறு ஒன்றும் செய்ய இயலாது.

இதே மாதிரியான ஒரு பிரச்சினை குறித்து 1955 ஆம் ஆண்டில்,
அப்போதிருந்த பேரவைத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ்
அவர்கள் கூறிய அறிவுரை ஒன்றை இப்போது நான் எடுத்துக்
காட்டுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணு
கிறேன். அவர் கூறியதாவது:—

" in the interest of decorum and good manners, it will be
desirable for those persons who either make speeches or publish
them to observe a very high level of moral standard. I am not
here to dictate as to what should be the moral standard but I am
appealing to everybody concerned on moral plane that they should
keep the debate at a very high level".

மேலும் இத்தருணத்தில் தினமும் இப்பேரவையில் நாம்
பார்த்துக் கொண்டிருக்கும் குறள்—

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

என்பதன்படி எல்லோரும் பொது வாழ்விலும் சரி அரசியலிலும்

உறுப்பினர்கள் தங்களிடமுள்ள ஆதாரங்களைப் பேரவைத்
தலைவருக்கு முன்னதாகக் காட்டி, குற்றம் சாட்டப்படும் உறுப்
பினர் அல்லது அமைச்சருக்கு முன் தகவல் அளித்தபின்தான்
குற்றச்சாட்டுக்களைப் பேரவையில் எழுப்பலாம் என்று
இதற்குமுன் ஒரு தீர்ப்பில் நான் கூறியுள்ளேன். எனவே, தகுந்த
ஆதாரம் இன்றிக் குற்றச்சாட்டுகளைக் கூறினார் என்று கொள்ள
லாமேயொழிய வேறுவிதமான ஆதாரங்கள் இருந்தும், வேண்டு
மென்றே அவற்றை மறைத்து, மாண்புமிகு அமைச்சர் மீது
குற்றச்சாட்டுகளைக் கூறினார் என்று கொள்வதற்கில்லை. நான்
மேலே குறிப்பிட்டுள்ளதுபோல ஆதாரங்களை முன்னதாகக்
காட்டிவிட்டு முன் தகவல் அளித்து விட்டுக் குற்றச்சாட்டுக்களை
எழுப்பும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை
மீண்டும் வலியுறுத்தி, இதை எல்லா உறுப்பினர்களும் பின்பற்ற
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எழுப்பப்பட்ட பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப்
பார்க்குமிடத்து அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்
பதைத் தெரிவித்து தீர்ப்பளிக்கிறேன்.

### (ஆ) உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1981 ஆம் ஆண்டு பிப்ர
வரி மாதம் 7 ஆம் நாள் அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை
அமைச்சர் அவர்கள் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்
தலைவர் அவர்கள் ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையைப்
பேரவையில் எழுப்பினார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் விளக்கம் அளித்தபின், எனது தீர்ப்பு பின்னர் அளிக்கப்
படும் என்று குறிப்பிட்டிருந்தேன். எனது தீர்ப்பு:

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவைக்கு வெளியே
ஒரு கூட்டத்தில் பேசிய ஒரு பேச்சு எதிர்க்கட்சித் துணைத்
தலைவர் பொறுப்பை வேண்டுமென்றே குறைத்து மதிப்பிடுவ
தாக உள்ளது என்றும், மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தனது பதவியைப் பயன்படுத்தித் தனது நேர்முக உதவியாளர்
மூலம் அப்பேச்சின் சுருக்கமாக வெளியிட்டுள்ள அறிக்கை சட்ட
மன்றத்தைத் தாழ்வுபடுத்துவதாக உள்ளது என்றும், மாண்புமிகு
எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமது பேச்சின் சுருக்கத்தை வெளியிட்ட தமது நேர்முக
உதவியாளர் அரசு சம்பளம் பெறும் அரசு அலுவலர் அல்ல
என்றும், மேலும் அரசு முத்திரையுடனோ, அரசு வெளியீ
டாகவோ அது வெளியிடப்படவில்லை என்றும், தனிப்பட்ட
முறையில் ஒரு அரசியல் கூட்டத்தில் தாம் பேசிய பேச்சு அது
என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து, இதில்
அரசு முத்திரையுடன் வெளியிடப்படவில்லை என்பதாலும்,



தன் பதவியை எந்த விதத்திலும் முறை தவறிப் பயன்படுத்த
வில்லை என்றும் எனவே, இதில் அவை உரிமை மீறல் எதுவும்
எழுவதற்கில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்
பிட்டார்கள்.

இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக உரிமை மீறல்
ஏதேனும் உள்ளதா அல்லது அவையை அவமதித்ததாகக் கருது
வதற்கு இடம் உள்ளதா என்பதைத்தான் நாம் பார்க்கவேண்டும்.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அரசின் செய்தி வெளியீடு
( Press release ) என்பதாக எங்கும் குறிப்பிடப்பட
வில்லை; மேலும் அரசு சின்னமோ அல்லது அரசு முத்திரையோ
ஏதும் இல்லை. ஆனால் உள்ளாட்சித் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர் என்னும் ரப்பர் ஸ்டாம்ப் போடப்பட்
டுள்ளது. அமைச்சர் அவர்கள் அரசாங்க உதவியாளர் அல்ல
என்று தெளிவுபடுத்தியுள்ளார். கூறப்பட்டுள்ள பொருள் ஒரு
அரசியல் மேடையில் பேசப்பட்ட பேச்சாகும். அப்பேச்சினால்
அவையில் உள்ளவர்கள் இயங்குவதற்கு எந்த வகையிலும் அச்
சுறுத்தப்படுவதாகவோ அல்லது தடை செய்வதாகவோ எடுத்துக்
கொள்ள இயலாது. கண்ணியக் குறைவாக அமைந்து உள்ளது
என்று எடுத்துக் கொண்டாலும் கூட அதைப்பற்றி அவையில்
எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க இயலாது. இம்மாதிரியான
செயல்கள் நமது அரசியல் பொது வாழ்வில் எந்த அளவுக்குச்
செல்கிறது என்று வருத்தப்படுவதைத் தவிர இந்த அவை
வேறு ஒன்றும் செய்ய இயலாது.

இதே மாதிரியான ஒரு பிரச்சினை குறித்து 1955 ஆம் ஆண்டில்
அப்போதிருந்த பேரவைத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ்
அவர்கள் கூறிய அறிவுரை ஒன்றை இப்போது நான் எடுத்துக்
காட்டுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணு
கிறேன். அவர் கூறியதாவது :—

" in the interest of decorum and good manners, it will be
desirable for those persons who either make speeches or publish
them to observe a very high level of moral standard. I am not
here to dictate as to what should be the moral standard but I am
appealing to everybody concerned on moral plane that they should
keep the debate at a very high level".

மேலும் இத்தருணத்தில் தினமும் இப்பேரவையில் நாம்
பார்த்துக் கொண்டிருக்கும் குறள்—

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

என்பதன்படி எல்லோரும் பொது வாழ்விலும் சரி அரசியலிலும்

[பேரவைத் தலைவர்] [1981 மார்ச் 4

சரி நடந்தால் இவ்விதமான சிக்கல்கள் வராது என்ற எனது அறிவுரையை மட்டும் எல்லாத் தரப்பினர்க்கும் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

எழுப்பப்பட்ட பிரச்சினையில் உரிமை மீறல் எதுவும் இல்லை என்ற எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

## (இ) மாண்புமிகு முதலமைச்சர் மீது

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை உரிமை மீறல், 246 விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு நா. சுந்தரராஜ் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுதி அனுப்பியுள்ளார்கள். அதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் என். என். வி. சித்தன், ரகுமான் கான் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் சட்டப் பேரவையின் 246-வது விதியின் கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் மீது நான் ஒரு உரிமை மீறல் பிரச்னை கொடுத்திருக்கிறேன். 1—3—1981 நாளன்று காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவ மனையின் திறப்பு விழாவில் தமிழ் நாடு முதலமைச் சர் திரு. எம் ஜி. ஆர். பேசும்போது, எரி சாராய ஊழலில் இ. காங்கிரசைச் சேர்ந்த ஒருவருக்கும் பங்குண்டு என்று குறிப் பிட்டு பேசியுள்ளார். மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் ; சட்ட மன்றத்திலே ஒரு உறுப்பினர் எரி சாராய ஊழல் குறித்து விசாரணைக் கமிஷன் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. கைலாசம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளதாக இங்கே அறிவித்திருந்தார்கள்.

[முற்பகல் 10–30]

இதிலே முக்கியமான பிரச்னை சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று பொதுப்படையாக சொல்லியிருப்பதன் காரணமாக இங்கு இருக்கிற (இ) காங்கிரஸ் உறுப்பினர்கள் மீது மக்கள் மத்தியிலே சந்தேகம் ஏற்படுகின்ற வகையிலும் களங்கம் ஏற்படுகின்ற வகை யிலும், அவர்களுடைய உரிமைகளைத் தடுக்கின்ற வகையிலும் இந்தப் பேச்சு அமைந்திருக்கிறது. மேலும் தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்டிருக்கிற கைலாசம் கமிஷனுக்கு மறைமுக மாக (இ) காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்று நிர்ப்பந்தம் செய்கின்ற வகையில், இக் கமிஷனை மிரட்டி தன்னுடைய கருத்தை ஏற்கச் செய்கின்ற வகையிலும் இந்த பிரச்சினையைப் பேசியிருக்கிறார்கள். அங்கே

1981 மார்ச் 24] [திரு நா. சுந்தரராஜ்]

இருக்கிற முக்கியமான பிரச்சினை நான் சொல்ல விரும்புவது, 1—3—1981 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது ஒரு பொது கூட்டம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை உரிமை மீறல் எப்படி என்று மாத்திரம் சொல்லவும். இதில் டிஸ்கஷனுக்கு போகாதீர்கள்.

**திரு. நா. சுந்தரராஜ் :** நடைபெற்றது காஞ்சீபுரத்தில் அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவ மனை திறப்பு விழா. அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுகாதார அமைச்சர் மாண்புமிகு திரு. ஹண்டே அவர்களும், தமிழ்நாடு விசேஷ பிரதிநிதி திரு. முத்துசாமி அவர்களும், தமிழ்நாடு மருத்துவத் துறை அதிகாரி திரு. ஞானதேசிகன் அவர்களும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் ரீஜினல் டைரக்டர் திரு. தங்கவேல் அவர்களும், ஏராளமான அதிகாரிகளும், மருத்துவர்களும், பொது மக்களும் கலந்து கொண்ட ஒரு அரசு விழா. (குறுக்கீடு)

மன்னிக்கவேண்டும் அந்த தொகுதியைச் சார்ந்த நாடாளு மன்ற உறுப்பினர் திரு. அன்பரசன் அவர்களும் கலந்து கொண் டிருக்கிறார்கள், .மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஆளுநர் உரையிலே பேசுகிறபோது இந்தப் பிரச்சினை குறித்து கேரளா மாநில அரசும், தமிழ்நாடு அரசும் இதில் சம் பந்தப்பட்டிருப்பதாக பல்வேறு பகுதியிலேயிருந்து குற்றச்சாட்டு கள் வருகிற அடிப்படையிலே, நான் இதற்கு நீதி விசாரணை நடத்துகிறேன். இந்த நீதி விசாரணைக்கு கைலாசம் அவர்கள் பொறுப்பு ஏற்பார்கள் என்று சொல்லிவிட்டு, நேற்று முன்தினம் கூட இங்கு பேசும்போது, என் மீது கூட குற்றம் சாட்டிச் சொன் னார்கள். ஆகவே நானே என்னை விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக நான் இந்த விசாரணைக்கு உத்தரவிடுகிறேன் என்று சொன்னார்கள். இந்த கமிஷனை அறிவித்து விட்டு, விசாரணை கமிஷன் தன்னுடைய பணிகளைத் துவங்குவதற்கு முன்னால், காஞ்சிபுரத்தில் இதுபோன்று பேசி யிருப்பது எவ்வளவு பொருத்தமாக இருக்குமென்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த அவையில் நாங்கள் 30 காங்கிரஸ் சட்டமன்ற உறுப் பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம். அதிலே ஒருவர் மறைந்துவிட்டார், இருக்கின்ற 29 உறுப்பினர்களில். முத லமைச்சர் அவர்கள் இவ்வாறு பேசியிருப்பதன் மூலமாக, இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ப தன் மூலமாக, மக்கள் மத்தியிலே யார் இதிலே சம்பந்தப்பட்டிருக் கிறார் என்ற சந்தேகத்திற்கு இடமளிக்கிற வகையிலே, அவர் களை மக்கள் சந்தேகக் கண்ணோடு பார்க்கின்ற வகையிலே இந்தப்பேச்சு அமைந்திருக்கிறது.

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 மார்ச் 4

உறுப்பினர் என்று சொன்னால் அவர்களுக்குச் சில உரிமைகள் உண்டு. அதைப் பற்றி விளக்கத் தேவையில்லை, அந்த அவர்களுடைய உரிமைகளைப் பறிக்கின்ற வகையிலே முதலமைச்சர் அவர்கள் அங்கே பேசியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது தொடர்பாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இதில் இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஒருவருக்குப் பங்கு உண்டு என்று சொல்லிவிட்டு, அதோடு முதலமைச்சர் அவர்கள் முடித்திருப்பாரேயானால் இது முதலமைச்சர் அவர்களுடைய கருத்தாக இருக்குமென்று நாங்கள் நம்பியிருக்க முடியும். ஆனால் அதற்கு மாறாக கேரளா முதலமைச்சர் திரு. நாயனார் அவர்களும் சொன்னார்கள் என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம், தமிழ் நாட்டு முதல் அமைச்சர் தமிழ் நாட்டிலே இருக்கிற மக்களைப் பற்றி, தமிழ் நாட்டின் மக்களின் நல்வாழ்வுக்காக, தமிழ் நாட்டில் ஏற்படுகின்ற பிரச்சினை பற்றி பேசுவதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால், கேரளாவில் இருக்கிற முதலமைச்சர் சொல்கிறார் என்று தமிழ்நாடு முதலமைச்சர் சொன்னால், நான் கேட்க விரும்புவது, தமிழ் நாட்டை ஆளுவது மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களா, அல்லது கேரளாவின் முதலமைச்சர் திரு. நாயனார் அவர்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். காரணம் அவரை இவர் துணைக்கு அழைத்திருக்க வேண்டிய தேவை இல்லை. அவர்தான் சொல்கிறார் என்று இவர் சொல்வதின் மூலம், கேரளா முதலமைச்சர் திரு. நாயனார் அவர்கள் சொற்படித்தான் இந்த அரசாங்கமோ, நானோ நடந்து கொண்டிருக்கிறோம் என்ற பொருள்பட அமைந்திருக்கிறது என்று சொல்வது என்னுடைய கடமையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு விசாரணை கமிஷனை முதலமைச்சர் அவர்கள் வேகமாக அறிவித்தார்கள். இந்த கமிஷனை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்ற வகையிலே பிரதான எதிர்க்கட்சித் தலைவர் திரு. கலைஞர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் ; அவருடைய கட்சியைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான பேர்கள் சிறைச்சாலைக்கு சென்றிருக்கிறார்கள். போராட்டம் நடத்துகிறார்கள். ஆனாலும் முதலமைச்சர் அவர்கள் நான் உறுதியாக இருக்கிறேன், கைலாசம் கமிஷன் எனக்கு வேண்டும், நானே தான் நியமனம் செய்தேன், நானே என்னை உட்படுத்திக்கொள்வேன் என்று சொன்ன முதலமைச்சர் இன்றைக்கு இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ. இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று சொல்வதன் மூலமாக அந்தக் கமிஷனுக்கு தன்னுடைய கருத்தை மறைமுகமாகச் சொல்ல வேண்டுமென்பதற்காக நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கமிஷனுக்கு தன்னுடைய அறிவுரையை வழங்கவேண்டுமென்பதற்காக கமிஷனுக்கு அதைச் சொல்ல



1981 மார்ச் 4] [திரு. நா. சுந்தரராஜ்]

வேண்டுமென்பதற்காக தன்னுடைய அதிகார பலத்தால், தன் பொறுப்பான பதவியினுடைய அடிப்படையிலே அவர்களை மிரட்டி அதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதற்காக சொல்லப்பட்டதோ என்று நினைக்கிறேன். காரணம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : அவை உரிமை மீறல் என்ன என்று சொல்லுங்கள். அதைப்பற்றிய டிடெய்ல்ஸை சொன்னால் கைலாசம் கமிஷனுக்குத்தான் போக வேண்டியிருக்கும்.

திரு. நா. சுந்தரராஜ் : சாதாரணமாக நீதிமன்றத்திலே, சப்கோர்ட்டிலோ அல்லது உயர்நீதி மன்றத்திலோ அதைப்பற்றிப் பேசும்பொழுது சப்ஜூடிஸ் என்று சொல்லி அது கோர்ட்டை அவமதிப்பதாக கருதப்படும் என்று சொல்லி அதைப் பேசுவதில்லை சாதாரண மனிதர்கூட அதைப் பேசுவதில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களே .இந்த அவையிலே கமிஷன் நியமனம் செய்திருக்கிறார்கள், அதே முதலமைச்சர், இன்னொரு இடத்திலே அந்தக் கமிஷனுக்கு உறுதுணையாக அல்ல, கமிஷன் தன்னுடைய பாதையிலே செல்ல வேண்டுமென்பதற்காக குற்றச்சாட்டு சொல்லி காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏக்களை பழிவாங்க வேண்டுமென்றோ அவமானப்படுத்த வேண்டுமென்றோ அல்லது அவர்களுடைய உரிமையைப் பறிக்க வேண்டுமென்றோ அந்த அடிப்படையிலே பேசியிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். எந்த எந்த இடத்திலே எந்த எந்த மாவட்டத்திலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை முதலமைச்சராக இருக்கிற காரணத்தால் தெரிந்து கொள்ளும் நிலையில் நான் இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். நான் கேட்க விரும்புகிறேன், மாண்புமிகு முதலமைச்சராக எம். ஜி. ராமச்சந்திரன் பொறுப்பு ஏற்றுக்கொண்டது 1977 ஆம் ஆண்டிலே தான் இன்றைக்கு எரி சாராய ஊழல் 1979-லிருந்துதான் ஆரம்பமாகியிருப்பதாகச் சொல்கிறார்கள். 1977 ஆம் ஆண்டிலிருந்து முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த அவ்வளவு காலும் எந்த எந்த மாவட்டத்திலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியாமல் இருந்தார்களா அல்லது தெரிந்தும் சும்மா இருந்தார்களா என்பதுதான் எங்களுக்கு முக்கியம், ஆனால் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், தனி மனிதராக இருந்தாலும் சரி, அல்லது எவ்வளவு பெரிய பொறுப்பிலே இருந்தாலும் சரி, அவர்கள் எந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளானாலும் அவர்கள் மீது அரசாங்கமோ நீதி மன்றமோ நடவடிக்கை எடுப்பதற்கு குறுக்கே நிற்காது என்பதைத் தைரியமாக சொல்ல விரும்புகிறேன். ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். பிரிக்கப்படாத பஞ்சாப் மாநிலம் பஞ்ச பூமியாக இருந்த அந்த பஞ்சாப் மாநிலத்தை சொர்க்க பூமியாக மாற்றியவர் முதல்வராக இருந்த பிரதாப் சிங் கெய்ரோன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரதாப் சிங் கெய்ரோனுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? அது முடிந்துபோன கதை. திரு. சுந்தரராஜைச் சுருக்கமாக சொல்ல வேண்டுமென்று சொன்னேன். தாங்கள் பஞ்சாப் போய் அங்கேயிருந்து தமிழ்நாட்டிற்கு வந்தால் எவ்வளவு நேரம் ஆகும்.

திரு. ந. சுந்தரராஜ் : நீங்களே நேற்றைக்கும் இன்றைக்கும் ஒன்றைச் சொன்னீர்கள். காங்கிரஸ் கட்சி இந்தியா பூராவும் ஆளுகிற கட்சி, பெரிய கட்சி என்று சொல்லியிருக்கிறீர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தியா பூராவையும் ஆளுவதைப் போல் நடக்கவேண்டுமென்று சொன்னேன். பாராளு மன்றத்திலே நடப்பதைப்போல் நடக்கவேண்டுமென்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உரிமை மீறல் எது என்பதைப் பற்றி பேசினால் உதவிகரமாக இருக்கும், வேறு பிரச்சினைப் பற்றி பேசினால் நாங்களும் பதில் சொல்லவேண்டியிருக்கும்.....

திரு. நா. சுந்தரராஜ் : சட்டமன்றத்திலே ஒருமுறை கேரள முதலமைச்சர் பேசியதை நினைவுபடுத்தியபோது கேரள முதலமைச்சர் மீது தங்களிடம் ஒரு உரிமை மீறல் பிரச்சினையை எங்களுடைய கட்சி தலைவர் திரு. ஹாஜாசெரிப் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதைக்கூட கேரள அசெம்பிளிக்கு நீங்கள் அனுப்பியிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்கு அனுப்புகிற நிலை வைத்து நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அவர் பேசலாம் அல்லவா? சபைக்கு தவறான தகவலை நீங்கள் கொடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. உங்களுக்கு சம்பந்தப்பட்ட வரைக்கும் சொல்லுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : 29 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள். அத்தனை பேர்களுடைய உரிமை பறிக்கப்பட்டிருக்கின்றது. எங்கள் அத்தனை பேர்களுடைய உரிமையும் பறிக்கப்பட்டிருக்கிறது. நான் கடைசியாகக் கேட்டுக் கொள்வது, முதலமைச்சர் தான் நியமித்த கைலாசம் கமிஷன் முன்பாகவே இ. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எம்.எல்.ஏ. சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று சாட்சியம் கூறுவதற்குத் தயாராக இருக்கிறாரா? முதலமைச்சர் சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுடைய உரிமையைப் பறித்து இருக்கிறார் ஆகவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.





[முற்பகல் 10-40]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 250-ன் படி பார்த்தால் உரிமைப் பிரச்னை எழுப்பப்படுகின்றபொழுது, யார் உரிமை பிரச்னை எழுப்புகின்றார்களோ அவர்கள் மாமன்றத் தலைவருக்கு எழுதிக்கொடுத்த செய்திகள் அத்தனையையும் அவைத் தலைவரவர்கள் அதாவது சபாநாயகரவர்கள் வாசிக்க வேண்டும் என்ற பிரிவு இருக்கிறது. அதைப்பற்றி நான் குற்றம் சொல்லவில்லை. அதை உங்களிடத்திலே எழுதிக் கொடுத்திருக்கிறேன். அதை அப்படியே வாசித்துவிட்டால் நான் சொல்லுகின்ற உரிமை மீறல் பிரச்னை அதிலே வந்து விடுகிறது.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், '' கேரளாவில் உள்ள மன்னம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 9.96 இலட்சம் லிட்டர் எரிசாராயம் தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்ய தமிழக அரசு அனுமதி வழங்கியதிலும் வெளி மாநிலங்களுக்கு எரிசாராயம் எடுத்துச் செல்ல தமிழக அரசு அனுமதி வழங்கியதிலும் ஊழல் நடைபெற்று இருக்கிறது என்றும் எரிசாராயத்தை அனுப்பும்பொழுது ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் அனுப்பத் தேவையில்லை என்று அரசு உத்தரவு போட்டதையும், ஜூலை மாதம் வெளிமாநிலங்களும் எரிசாராயம் அனுப்ப அரசு தடை விதித்து விட்டு ஆகஸ்டு மாதம் அந்தத் தடையை நீக்குகிறது என்பதனையும், தமிழக தொழிற்சாலைகளுக்கே அத்தியாவசியமான மருந்துகள் தயாரிக்கப் போதுமான ஆல்கஹால் இல்லாத பொழுது அரசு வெளி மாநிலங்களுக்கு எரிசாராயத்தை ஏற்றுமதி செய்ய அனுமதி தருகிறது என்றும், வெளிமாநிலமான ஆந்திரத்தில் குப்பத்தில் இருந்து தனியார் ஒருவர் இராணுவத்திற்கு ரம் தயாரிக்க எரிசாராயம் இங்கே இருந்து எடுத்துச் செல்ல அனுமதி கேட்டபொழுது அது மறுக்கப்பட்டு, அரசு தனக்கு வேண்டியவர்களுக்கு மட்டுமே எரிசாராயம் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கி இருக்கிறது என்றும், எடுத்துச் சொல்லி எரிசாராயத்தை வெளியே அனுப்பியதில் பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்று இருக்கிறது. இந்த ஊழலில் நான் இந்த அரசையே குற்றம் சுமத்துகிறேன். முதலமைச்சரையே குற்றம் சுமத்துகிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் இருக்கிறதா என்பதைப்பற்றி மட்டும் உறுப்பினரவர்கள் சொல்ல வேண்டும். படிக்கிறேன் என்று சொல்லி சொற்பொழிவை ஆரம்பித்து விட்டீர்கள்.

[1981 மார்ச் 4

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலை
வரவர்களே, விதி 250-இன்படி சபாநாயகர்தான் படிக்க வேண்
டும் என்று இருக்கிறது. உறுப்பினரவர்கள் படிக்கவே கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர
வர்கள் ஏற்கனவே எழுதி அனுப்பிவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேர
வைத் தலைவரவர்களே, எழுதிக் கொடுப்பது என்ன வேண்டு
மானாலும் எழுதிக் கொடுக்கலாம் ; அதையெல்லாவற்றையும்
படிக்க முடியாது. அதில் தலைவரவர்கள் எதை அனுமதிக்கி
றார்களோ அதைத்தான் படிக்க வேண்டும் உறுப்பினரவர்
கள் எழுதிக்கொடுத்ததைப் பேரவைத் தலைவர் அவர்கள்
தான் படிக்கலாமே தவிர உறுப்பினர் படிக்க வேண்டிய தேவை
யில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எழுதிக் கொடுத்ததைப்
பேசப் போகிறார்கள். படிப்பது அதைவிடச் சுலபம். இரண்டி
லேயும் அதே கருத்தைத்தான் சொல்லப் போகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, சாதாரணமாக எழுதிப் படிப்பது என்பதை
ஒரு சட்டப் பேரவை உறுப்பினர் முதன்முதலாகப் பேசும்
பொழுது, மெய்டன் ஸ்பீச் என்று வருகிறபொழுது நாம் அனு
மதித்திருக்கிறோம் ; மற்ற நேரங்களில் எழுதிப் படிப்பதை நாம்,
சாதாரணமாக அனுமதிப்பதில்லை. ஏனென்றால் அது அவ
ருடைய சொந்தக் கருத்தா இல்லையா என்ற பிரச்னை வருகி
றது. ஆகவே கூடுமான வரையில் பேச வேண்டுமென்ற நியதி
இருக்கிறது. ஆனால், பேச முடியாதவர்கள் இருக்கலாம், அவர்
கள் பேச வேண்டுமென்று விரும்புகின்றபொழுது எழுதி வருகி
றார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், அப்பொழுது தாங்கள்
பார்த்து அனுமதி கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது.
இல்லையென்றால், யாராவது எழுதிக் கொடுத்ததை இங்கே
கொண்டு வந்து அவர்கள் எழுதியதைப் படிக்கின்றபொழுது
அதைத் தாங்கள் பார்த்து அனுமதி வழங்க வேண்டிய நிலைமை
ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப்படி படிப்பதை
வழக்கமாக அனுமதிப்பதில்லை. அவர் இரண்டு பக்கங்கள்
எழுதி அனுப்பி இருக்கிறார். எழுதி அனுப்பியதை படிக்கி
றேன் என்று அனுமதி கேட்டார்கள். அனுமதி கேட்ட பிறகு,
படித்து விடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். படிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** எழுதியிருப்பதைத்
தான் படிக்கிறார்கள் என்பதற்கு என்ன காரண்டி ? நீங்கள்
கையிலே காப்பி வைத்திருக்கிறீர்களா ?



1981 மார்ச் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எழுதியிருப்பதைப் படிக்
கிற வரைக்கும் சரியாக இருந்தது. அவர் பேச ஆரம்பித்த
உடனே நிறுத்தி விட்டேன். எழுதியிருப்பதைப் படித்தார்.
நடுவிலே, குற்றச்சாட்டு, அது, இது, என்று வக்கீல் மாதிரி பேச
ஆரம்பித்தார். அதை வேண்டாம் என்று சொல்லிவிட்டு,
எழுதியிருப்பதை மட்டும் படியுங்கள் என்று சொன்னேன். எழுதி
யிருப்பதை மட்டும் படிக்கிறேன் என்று சொன்ன மாண்புமிகு
உறுப்பினர் பொறுப்பேற்றுக் கொண்டுதான் படிக்கிறார் என்று
நினைக்கிறேன். ஆகவே, நம்பித்தான் நான் விட வேண்டியதாக
இருக்கிறது. அவர் என்ன படிக்கிறார் என்று பிறகுதான் பார்க்க
வேண்டும்.

**திரு. ஆர். மண்மாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே,
உரிமை மீறல் பிரச்னையைக் கொடுத்ததற்குப் பிறகு, எழுதி
யதை அப்படியே படிக்கின்ற ஒரு அனுமதியை நீங்கள் வழங்கி
இருக்கிறீர்கள். ஆனால், அதே முறையை உரிமை மீறல் பிரச்
னையை ஆளுங்கட்சியினுடைய சார்பிலே தருகின்றபொழுது
எழுதிக் கொடுப்பதைப் படிப்பதற்கு அவைத் தலைவர் அவர்கள்
அனுமதிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிலே என்னுடைய
கருத்தைச் சொல்லிவிடுகிறேன். படிப்பதை அனுமதித்திருக்கி
றேன். அனுமதிப்பதா, இல்லையா என்பது என்னுடைய
பொறுப்பிலே இருக்கிற அதிகாரம். ஆனால், இனிமேல் படிக்க
வேண்டாம் என்று அவை ஒருமித்த முடிவு எடுத்தால் நான்,
இனிமேல் மேற்கொண்டு படிப்பதை அனுமதிப்பதைப் பற்றி
முடிவு எடுக்க வேண்டும். முடிவு எடுக்கலாம், அதிலே ஒன்றும்
ஆட்சேபணை இல்லை. ஆனால், இன்றைக்குப் பொறுத்தவரைக்
கும் அவரைப் படிக்க அனுமதித்திருக்கிறேன். அவர் படிக்கிற
காப்பி என்னிடம் இருக்கிறது. அவர் படிக்கட்டும். (குறுக்கீடு)
படித்தாலும் பேசினாலும் ஒன்றையேதான் பேசப் போகிறார்,
சொல்லப்போகிறார்.

**திரு. அ. ரகுமான்கான் :** விஷயம் என்னவென்று கேட்
டால், எழுதிக் கொடுத்து, அவருடைய அனுமதியைப் பெற்றுத்
தான் படிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னையோ
அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமோ வருகிறபொழுது மாண்புமிகு
உறுப்பினர்கள் காரண, காரிய விளக்கங்களைச் சொல்லி, ஆகவே,
இதை உரிமைக் குழுவுக்கு விட வேண்டுமென்றோ, ஆகவே, இதை
ஒத்தி வைக்க வேண்டுமென்றோ கூறுகிறார்கள். அதை அனுமதிப்
பதும் அனுமதிக்காததும் மாண்புமிகு பேரவைத் தலைவரைச்
சார்ந்தது. மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் இரண்டு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 மார்ச் 4

பக்கங்களுக்கு உரிமை மீறல் என்று கொடுத்திருக்கிறார்கள். அவர்
கள் குறிப்பிட்ட மாதிரி, மாண்புமிகு பேரவைத் தலைவரே
முதலில் படிக்க வேண்டுமென்று இருக்கிறது. பிறகுகூட உறுப்பி
னர்கள் பேசுகின்றபொழுது, தங்களுடைய வாதத்திற்கு ஆதர
வாக, தீர்மானத்திலேயிருக்கிற பகுதிகளைத் திரும்பப் படிப்
பதிலே தவறு எதுவும் கிடையாது. ஆகவே, மாண்புமிகு பேர
வைத் தலைவர்தான் இரண்டு பக்கமும், முழுவதும் படித்திருக்க
வேண்டும், முறைப்படி, அவர் இவரைப் படிக்கச் சொன்னார்
கள். இவர் அதைப் படிக்க வேண்டும். இடையிலே படிக்கா
மல் வேறு பல குற்றச்சாட்டுகள் வரும்போதுதான் அதிலே இல்லா
தது வருகிறது. அதை விட்டுவிட்டுப் படிக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** எதிர்க்கட்சித் தலைவரின் இந்
தக் குற்றச்சாட்டுகளுக்கு இந்த அவையில் ஆளுநர் உரைக்கு
நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய நம்முடைய தமிழக
முதல்வர் கேரளாவில் தொழில் நசிந்து விட்ட காரணத்தினாலே,
எரிசாராயம் கேரளத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.
இந்தக் கடத்தலில், யார், யார் ஈடுபட்டு இருக்கிறார்கள என்
பதனை இன்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். இந்
தப் பிரச்னை விசாரணையில் இருப்பதால் என்னைக் கட்டுப்
படுத்திக் கொள்கிறேன். இன்னும் இரண்டு அல்லது நான்கு
வாரங்களுக்குள் தொடர்பு உள்ளவர்கள் யார், யார் என்பதனை
வெளியிடுவேன் என்றும் குறிப்பிட்டார். ஒரு உயர்நிலை
போலீஸ் அதிகாரி இது சம்பந்தமாக விசாரித்து வருவதாகவும்
முதலமைச்சர் குறிப்பிட்டார். அத்துடன மட்டும் இல்லாது
திடீரென்று சட்டப் பேரவையில் இந்த எரிசாராயம் கேரளா
விற்கு அனுப்பப்பட்டதில் தவறுகள் நடந்துள்ளதா என்ப
தனைக் கண்டறிய நீதிபதி கைலாசம் அவர்களை நீதிபதியாகக்
கொண்ட கைலாச விசாரணை கமிஷன் தமிழக அரசால் நிய
மிக்கப்படுகிறது என்றும் அறிவித்தார். நிலைமை இப்படி
இருக்க 1–1–1981 அன்று காஞ்சிபுரத்தில் அண்ணா நினைவு
புற்றுநோய், மருத்துவமனையைத் திறந்து வைத்துப் பேசும
பொழுது, ''எரிசாராயப் பிரச்னை இருப்பதால், எந்தெந்த
இடத்தில், ஜில்லாவில், யார், யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்
கள் என்பதனை நான் முதலமைச்சராக இருப்பதால் தெரிந்து
கொள்ளும் நிலையில் இருக்கிறேன. இதில் இந்திரா காங்கி
ரஸ் எம்.எல்.ஏ. ஒருவரும் இருக்கிறார் இது வேதனை தரக்
கூடியதாக இருக்கிறது. சாராயத்தைக் கடத்தியதாக கைது
செய்யப்பட்டிருக்கும் சம்பத் என்பவர் தி.மு.க.வைச் சார்ந்த
வர் என்று சொல்லப்படுகிறது.'' என்று குறிப்பிட்டுள்ளார்.
மேலே கண்ட வாசகம் சென்னை 1–3–1981-ல் பிரசுரமான
அண்ணா பத்திரிகையில் வெளிவந்து இருக்கிறது.

எரிசாராயம் வெளமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டதில் நடை
பெற்ற ஊழலில் யார், யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள்
என்பதனைச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். இந்
தப் பிரச்னை விசாரணையில் இருப்பதால் என்னைக் கட்டுப்



1981 மார்ச் 4] [திரு. அ. ரகுமான்கான்]

படுத்திக் கொள்கிறேன். இன்னும் இரண்டு அல்லது நான்கு
வாரங்களுக்குள் தொடர்புடையவர்கள் யார் என்பதனை
வெளியிடுகிறேன் என்று அவையில் பேசிவிட்டு, அவை நடந்து
கொண்டு இருக்கும்பொழுது விசாரணையின் முடிவை இந்த எரி
சாராய ஊழலில் சம்பந்தப்பட்டு இருப்பவர்கள் யார், யார்
என்பதனை இந்த அவையில்தான் முதலமைச்சர் சொல்லவேண்
டும்.

[முற்பகல் 10–50]

ஆனால் முதலமைச்சர் அவர்கள் இதை, அவை நடந்து
கொண்டிருக்கும்போது சபைக்கு, மேலே கண்ட பிரச்சினை
சம்பந்தமாக தகவல் தெரிவிக்காமல், அவைக்கு வெளியே நடை
பெற்ற பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, இந்திரா காங்கி
ரஸ் எம்.எல்.ஏ. ஒருவரும் அதில் ஈடுபட்டிருக்கிறார். எரி
சாராய ஊழலில் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்
படுகின்ற சம்பத் என்பவரும கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று
சொல்லி இருப்பது இந்த அவையின் உரிமையை மீறிய செய
லாகும். நீதிபதி கைலாச விசாரணைக் கமிஷன நியமிக்கப்
பட்டதற்குப் பிறகு, முதலமைச்சர் வெளியே நடைபெற்ற நிகழ்ச்
சியில் இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ.-ம் தி.மு.க. என்று சொல்லப்
படுபவரும் எரிசாராய ஊழலில் சமபநதப்பட்டிருக்கிறார்கள்
என்று சொல்லி இருப்பது விசாரணைக் கமிஷனை ய அவமதிப்ப
தாகும். Contempt of Cou t என்ற குறறததைச் செய்ததாக கூட
வரும். ஆகவே முதலமைச்சர் அவர்கள் திராவிட முனனேற்றக் கழ
கம், இந்திரா காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளைப் பறறி மக்
கள் மத்தியிலே ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்துகிற விதத்
திலே உண்மைக் குற்றவாளிகள் அவர்களாகத்தான் இருக்குமோ
என்ற எண்ணத்தை ஏறபடுத்துகின்ற விதத்திலே உள்நோக்கத்
தோடு அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விசாரணை முடிய
வில்லை. விசாரணை பெண்டிங்கிலே இருக்கிறது. நீதிபதி
கைலாசம் அவர்கள் விசாரணைக் கமிஷனாக நியமிக்கப்பட்
டிருக்கிறார். சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
விசாரணை முடிவு சபைக்கும் தெரியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப் படித்துவிட்டால்
போதும் என்று சொன்ன பிறகு, ஆர்குமென்டுக்குள் போகக்
கூடாது. வரைமுறையைக் கடைபிடிக்க வேண்டும். ஏதா
வது ஒரு வரைமுறைக்குள்ளே வாருங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஆகவே நான் சொல்ல விரும்பு
வது இன்றைக்கு ஏற்கனவே இரண்டு மாநில அரசுகள் சம்பந்
தப்பட்ட பிரச்சினையாக இருக்கின்றது. இரண்டு மாநிலங்
களிலும் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று
சொல்லுகிறபோது அநதப் புலனாய்வு, போலீஸ் விசாரணை
முடிந்து விட்டதா ? முழுமையாக முடிந்து விட்டதா? அப்படியே

முடிந்து விட்டாலும் அதிலே யார் குற்றவாளி என்று தெரிய வந்தது. அப்படியேயானாலும் அதை இந்த சபையிலேதான் சொல்லவேண்டுமே தவிர, வெளியே சொல்லக் கூடாது. இன் னும் சொல்லப்போனால் இந்த சபையிலே பேசிய முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரரோ அல்லது இந்திரா காங்கிரஸ் எம.எல்.ஏ.வோ சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று சபையிலே சொல்லவில்லை. சொல்லி இருந்தாலும், எழுந்து விளக்கம் கொடுப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கும். அதே பிரச்சினையை ஒட்டி தனலட்சுமி தொழிற்சாலையைப் பற்றிய விவகாரம் வேறு. கேரளாவுக்கு எரிசாரயம் கடத்தப் பட்ட விவகாரம் வேறு. ஆனால் வெளியே முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற பேச்சிலே கேரளாவுக்கு எரிசாராயம் கடத் தப்பட்ட அந்த ஊழலிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகி றது. அவர் இது சம்பந்தமாக கைது செய்யப்பட்டிருக்கிறார் என்ற கருத்தை சொல்லி இருக்கிறார், அப்படிச் சொல்லி விட்டு இப்போது இந்த தனலட்சுமி தொழிற்சாலை சம்பந்த மும், எரிசாராயமும் ஒன்று என்கின்ற விதத்திலே பேசி இருக்கி றார், ஆகவே இது உரிமை மீறல் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, நிச்சயமாக இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இங்கே பேசிய மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்சினை பற்றி பேசும்போது என்னுடைய கருத் துக்களை இணைத்துப் பேசினார்கள். அதற்கு நான் முதலிலே பதில் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏதோ இந்த விசா ரணைக் கமிஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற நீதிபதியை அச் சுறுத்தும் வகையில் என்னுடைய பேச்சுக்கள் இருக்கின்றன என் பதைச் சொன்னார்கள். அதை நான் மறுக்கிறேன். உண்மை யிலேயே அவரை அச்சுறுத்திக் கொண்டிருப்பது, போராட்டம் நடத்துகின்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களே தவிர, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களை பேரவைத் தலை வர் அவர்கள் ஒரு வேண்டுகோளின் மீது கட்டுப்படுத்த வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்ல வந்தது வேறு. மேஜையைத் தட்டக் கூடாது என்ற ஒரு நியதி சட்டமன்றத்திலே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. தட்டுகின்ற முறையிலே தவறு இருந்தால் அதை கண்டிப்பதற்கு, கட்டுப் படுத்துவதற்கு பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கி றது. நேரடியாக உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்களைப் பார்த்து கொஞ்சம் ஆத்திரத்தை உண்டு பண்ணும்படியான



வார்த்தைகளைப் பயன்படுத்துவது, சுமுகமான சூழ்நிலையில் இந்தச் சபையை நடத்துவதற்கு உதவி செய்வதாக இராது என் பதை நான் கொஞ்சம் வேதனையோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்னொன்று இங்கே மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்த துணைத் தலைவர் திரு. சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏதோ வேண்டுமென்றே ஒரு பழியை நான் சுமத்த விரும்புவதுபோல் என் பேச்சு இருந்தது என்று குறிப் பிட்டார்கள். நான் குறிப்பிட வேண்டாம் என்று இருந்த அந்த நாடாளுமன்ற உறுப்பினர் பெயரைக் கூட அவர்கள் குறிப் பிட்டார்கள். ஒன்றை இங்கே நான் தெளிவாக்கச் சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கிறோம் என்ற ஒரே காரணத் திற்காக மற்றவர்கள் பேசுவதை எல்லாம் நாங்கள் கேட்டுக் கொண்டு பதில் பேசாமல் இருக்க வேண்டும் என்று கூறினால் அது நீதியாகாது என்பதையும் அந்த நிலைமைக்கு எங்களை ஆளாக்குவது கொஞ்சம் கஷ்டமானது என்பதையும் நான் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். எதைவேண்டுமானாலும் ஆளும் கட்சிக்காரர்கள் மீது குற்றச்சாட்டாகவும், கேலியாகவும், பழியாகவும் பேசலாம். அதற்குரிய மறு பதிலை நாங்கள் சொல்லக் கூடாது என்று சொன்னால், அது ஒரு தலைபட்ச மான நீதியாக இருக்கிறதே தவிர எங்களுடைய உரிமையை நாங்கள் பாதுகாக்க அனுமதித்ததாக இருக்காது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் ஆட்சியில் இருக்கலாம். அதற்காக எங்கள் மீது பழி சுமத்துவதற்காக வேண்டி பேசலாம், சொல்லலாம். ஆனால் அப்படிப்பட்ட குற்றச்சாட்டை இல்லை, அதற்கு ஆதாரம் இல்லை என்று எங்கள் பகுதியில் உள்ள கருத்தை நாங்கள்வெளி யிடக்கூடாது, என்று சொன்னால் அது நியாயமாகாது என்பதை நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அன்றைய தினம் நடந்த நிகழ்ச்சி என்னவென்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரில், அவருடைய நினைவு [illegible] வகையில், புற்றுநோய் மருத்துவ மனை திறப்புவிழாவாகும். அதைத் தொடங்கியது யார் என்பதற்காக அங்கே அதற்கான தாமதத்தைப் பற்றி பேசியிருந்தாலும் கூட, அதைப் பொருட் படுத்தக் கூடாது என்று சொல்லி—அங்கே இல்லாத இங்கே இருக் கின்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கருணாநிதி அவர் களைப் பற்றிச் சொல்லி, நான் அங்கே பாராட்டிப் பேசியுள் ளேன். நாங்கள் வேண்டுமென்றே பழி சுமத்துவது என்றால், எதைவேண்டுமானாலும் மற்றவர்கள் சொன்னார்கள் என்று

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மார்ச் 4

நான் சொல்ல முடியும். அப்படி பயன்படுத்த நான் விரும்ப வில்லை. அதிலிருந்து நான் நியாயமான உணர்வோடு என் னுடைய கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன் என்பதற்கு இது ஒரு அடையாளம் என்பதை இங்கே குறிப்பிடுவதால் நற் சாட்சிப் பத்திரம் தேட விரும்பவில்லை. உண்மை நிலையை எடுத்துக்காட்டுவதற்காக இதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அங்கே பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் இந்திரா காங்கி ரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதையெல்லாம் சுட்டிக்காட்டி விட்டு, அங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள்.

1–3–1981 ஆம் தேதியன்று காஞ்சிபுரம் நிகழ்ச்சியில் நான் பேசுவதற்கு முன்னால் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நான் இப்போது சொல்லப்போவதைச் சொன்னார்கள். அவர் பேசும்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்கள் செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சிக்கு அக்கறை காட்டவில்லை என்றும், இடையூறாக இருக்கிறார்கள் என்றும், அவர்களிலே பலர்—இதைத்தான் கவனிக்க வேண்டும்—மது அருந்துகிறார்கள். அதை அருந்தி விட்டு இங்கே வருகிறார்கள் என்று பேசினார்கள். அந்தப் பேச்சு பதிவு செய்யப்பட்டும இருக்கிறது. சம்பந்தமே இல்லாத ஒரு பிரச்னையை என்னை வைத்துக் கொண்டு பேசினார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் நாங்கள் ஏதோ யாரோ செய்யச் சொல்லி பத்திரிகையில் ஆதாரமாக வந்ததை வைத்துக் கொண்டு சொல்வதற்குத் தயாராக இல்லை. அதை அவர்கள் குறிப்பிட்டுப் பேசி அவமானப்படுத்தியதன் விளைவாகத்தான் அந்தக் குற்றச்சாட்டு சொன்ன பிறகு நான் மூன்று செய்திகளைச் சொன்னேன்.

ஒன்று, அனைத்துக் கட்சிகளிலும் இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன். எங்கள் கட்சிக்காரர் களை குடித்து விட்டு வந்தார்கள் என்று கைது செய்கிறார்கள். அதற்கு ஜாமீனுக்கு வந்தவர்களைக் கூட கைது செய்தால் என்ன என்று எண்ணுகிற நிலைமையையும் சொன்னேன் என்றும் குறிப்பிட்டேன். எங்கள் கட்சிக்காரர்களைப் பாராட்டியும், மற்ற கட்சிக்காரர்களை நேரடியாக இழிவுபடுத்தும் வகையிலும் பேச நாங்கள் தயாராக இல்லை. குற்றங்கள் எங்கும் இருக் கின்றன. அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக யார் யார் இருக் கிறார்களோ அல்லது ஆதரவாக இருக்கிறார்களோ அவர்கள் தப்பித்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு அவர்கள் திறமை உள்ள வர்களாக இருக்கிறார்கள்; வழக்குப் போடுவதற்கும் கண்டு பிடித்து தண்டனை அடையச் செய்வதற்கும் கூட வசதி இல்லாத நிலையில் [illegible] காரியம் [illegible] என்று நான் குறிப்பிட்டேன்.



1981 மார்ச் 4] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அப்போது நான் சொன்னது 'எரி சாராயம் பிரச்னை இருப்பதால் டிஸ்டிலரியில யார் யாருக்கு பங்கு இருக்கிறது என்று பார்த்தால் இந்திரா காங்கிரஸை சேர்ந்த எம்.எல்.ஏ-க்குக் கூட ? பங்கு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.'' இன்னொன்று. பேசிய தால் சொல்ல வேண்டியிருக்கிறது; சொல்லாமல் இருக்க முடியவில்லை' என்று நான் குறிப்பிட்டேன். மூன்று இதையெல்லாம் பேச வேண்டியதில்லை என்றாலும்,

(முற்பகல் 11.00)

மற்றவர் எங்கள் எம்.எல்.ஏ-க்களைப் பற்றி குறிப்பிடலாம்; களைப் பற்றித் தெரிந்ததை, சொல்லப்படுவதை, நான் சொல்லக் கூடாது என்றால் அது என் உரிமையை பாதிக்கிறது என்பதை நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள்? புரிந்து கொள்ளவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. பொறுப்பில் இருப்பதால் பொறுப்பற்ற பேச்சுக்களை எல்லாம் கேட்டுக் கொண்டு இருக்கவேண்டுமென்ற கட்டுப்பாடு எங்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். பொறுப்பில் இருப்பதால் அந்தப்பொறுப்பை நிறை வேற்றுவதற்காக நாங்கள் எங்கள் கடமையைச் செய்ய எங்கள் உண்மை நிலையை விளக்க நாங்கள் முற்படுவது எங்களுடைய உரிமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, வழக்கு விசாரணையில் இருக்கிறபோது அதைப் பற்றிப் பேசலாமா ? அது சப்ஜுடிஸ் ஆகாதா ?

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : சார், பொறுப்பில் இருப்பவர்கள் தான் ரொம்ப பொறுமையாக இருக்க வேண்டும். I do not think it is correct or fair for the Chief Minister to refer to this. The matter is sub–judice.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, பொறுப்பில் இருக்கிற காரணத்தால்தான் நான் பொறுமையாக இருப்பதற்கு அடையாளமாக 'சொல்லப் படுகிறது' என்று சொன்னேன். சொல்கிறேன் என்று சொல்ல வில்லை; ஆதாரம் இருக்கிறது என்று சொல்லவில்லை; சொல்லப் படுகிறது என்று சொன்னேன். ஆகவே நான் என்னை கட்டு படுத்திக் கொண்டு, நான் எவ்வளவு கண்ணியாக நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேனோ அப்படித்தான் சொல்கிறேன். அதைப்போல. . . .

டாக்டர் மு. கருணாநிதி : இந்திரா காங்கிரஸ் நாடாளு மன்ற உறுப்பினர் பேசினார் என்பதற்காக அவர்களுடைய கட்சியைக் குறிப்பிட்டுச் சொன்னீர்கள். அதிலே கூட இந்த விசாரணை நடக்கும் போது பேசக் கூடாது என்பது என்னுடைய வாதம். அங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச்

[டாக்டர் மு. கருணாநிதி] [1981 மார்ச் 4

சேர்ந்த [illegible] வேலையில்லை. அப்படி பேசாமல் இருக்கும் போது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி ஏன பேசினீர்கள்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எங்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் மற்றவர்கள் எல்லாம் பேசுகின்றார்களோ அவர்களுக்குப் பதில் சொல்வதற்கு அந்த இடந்தான் எனக்குக் கிடைத்தது. அவர்கள் பேசாத நேரம் இல்லை ; எழுதாத ஏடுகள் இல்லை என்ற அளவுக்கு அது நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, பதில் சொன்னேன். அவர்கள் பேசுவதைவிட நான் அதிகமாகப் பேசவில்லை. ஓரளவுக்கு குறைவாகவே பேசியிருக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் பேசவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் நீங்கள் பேசுவதற்கு தேர்ந்தெடுத்துக் கொண்ட இடம் அரசாங்க விழாவாக இருந்ததே என்பதுதான் என்னுடைய கவலை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அரசாங்க விழாவாக இருந்தாலும் முதலமைச்சர் என்ற காரணத்தால் பல வேறு இடங்களில் பேசுவதற்கு பதில் சொல்ல எனக்குக் கடமை இருக்கிறது என்பதால் நான் அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த நிலையில் இது அவை உரிமையை மீறிய பிரச்சனை இல்லை என்பதை இங்கே சொல்லி இதிலே தங்களுடைய தீர்ப்பு எதுவோ அதற்கு உட்பட நான் தயங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, எங்கள் தரப்பில் இந்த அவையிலே ஏதாவது தவறாகப் பேசியிருந்தால் அதற்கு நான் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி என்னுடைய தீர்ப்பு, பின்னர் அறிவிக்கப்படும்.

ஈ. அவை நடவடிக்கையைக் கண்காணிக்க போலீஸ் ஸ்பெஷல் பிராஞ்ச் அனுப்பிய சுற்றறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 27-2-1981 அன்று திரு. உமாநாத், திரு. எ. எஸ். வி. சித்தன் ஆகியோர் அவையில் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினைக்கு அரசுத் தரப்பிலே என்ன பதில் கூற விரும்புகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



1981 மார்ச் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கிற உரிமைப் பிரச்சினை மீது அரசுத் தரப்பில் விளக்கத்தை நான் தர விரும்புகிறேன். சி. ஐ. டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் அவர்கள் கீழ்க்கண்ட விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள்:—

31-1-1981-ம் தேதியன்று சி.ஐ.டி. துறை அனுப்பிய இரகசிய குறிப்பாணையில் இரு அவைகளிலும் விவாதிக்கப்படுகின்ற பிரச்சினைகளை உடனுக்குடன் தெரிந்து கொண்டு தேவையான முழுமையான தகவல்களை மாநிலத்தின் எந்த இடத்தோடும் தொடர்பு கொண்டு பெற்று அரசுக்கும் அவைகளுக்கும் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் பிறப்பிக்கப்பட்டது. எந்த ஒரு கட்சியையோ அல்லது எந்த ஒரு மாண்புமிகு உறுப்பினரையோ தனிப்பட்ட முறையில் கண்காணிப்பதற்கு உத்தரவிடப்படவில்லை.

அவையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்குக் காரணமாக இருக்கும் கருத்துக்களை உடனுக்குடன் தெரிவிக்குமாறு உரியவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. பல சமயங்களிலே சேகரித்துத் தருவதற்கு போதிய அவகாசம் கிடைக்காதது ஒரு பெரிய குறையாக இருந்து வருகிறது. குறிப்பாக சட்டம், ஒழுங்கு போன்றவைகளில் உடனுக்குடன் சரியான விவரங்களை வேகமாக சேகரிப்பது அவசியமாகின்றது. இந்த நடவடிக்கை அவையின் உரிமையை பாதிக்கும் என்று சி.ஐ.டி. துறை கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை. அப்படி பாதிப்பதாகக் கருதப்படும் என்று ஒரு ஐயம் எழுந்ததாலே அந்த குறிப்பாணை திரும்பப் பெறப்பட்டது. இனி, இம்மாதிரி எதுவும் நிகழாது என்று துறை உறுதி கூறுகிறது. எதிர்பாராதவிதமாக தவறான ஐயத்தை இந்தச் செயல் ஏற்படுத்தியதற்கு, இத்தகைய ஒரு கருத்து எழுந்ததற்கு சி.ஐ.டி. துறை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது என்று சி.ஐ.டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர்—ஜெனரல் கூறியிருக்கிறார். உண்மையில் யாரும் அவையின் அனுமதிச் சீட்டு பெறவில்லை. யாரும் அந்த ஆணைப்படி வந்திருந்து கவனிக்கவும் இல்லை. இனி, இம்மாதிரியாக நடைபெறக் கூடாது என்றும் நடைபெற்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்று சி.ஐ.டி. துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டு இந்தப் பிரச்சனையை இத்தோடு முடிக்க மாண்புமிகு உறுப்பினர்களும், பேரவைத் தலைவராகிய தாங்களும் உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை குறித்த * தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும்.

---

* 25-3-1981 அன்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

## 5. கவன ஈர்ப்பு.

### தென்னை மரங்களுக்கு 'தஞ்சை வாடல் நோய்'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழகத்தில் தென்னை
மரங்களுக்கு ஏற்பட்டுள்ள தஞ்சை வாடல் நோய் பற்றி திரு
வாளர்கள் ப. பொன்னுரங்கம், என். எஸ். வி. சித்தன், பொ.
விஜயராகவன், இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத்
தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை
வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு
வருவார்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, தமிழகத்தில்
தென்னை மரங்களுக்கு ஏற்பட்டுள்ள தஞ்சை வாடல் நோய்
பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, பேரவை
முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

### அறிக்கை.

தமிழ்நாட்டில் சுமார் ஒரு இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில்
தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் முக்கிய
மாக கடலோரப் பகுதிகளில் உள்ள தஞ்சை, முகவை, நெல்லை
மற்றும் குமரி மாவட்டங்களில் அதிக பரப்பளவில் தென்னை
பயிரிடப்படுகிறது. நெல்லை, குமரி மாவட்டங்களுககு பக்
கத்து மாநிலத்திலே இருந்து இந்த வாடல் நோய் பரவா வண்
ணம் இருக்க ஐந்து சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்
ளன. இதற்கென தனியாக எண்ணெய் வித்துத் துறையின்
கீழ் ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் ஒரு வேளாண்மை
உதவியாளர் பணிபுரிந்து வருகிறார். இந்நோய் பரவா வண்
ணம் இருக்கவேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை அவர் எடுத்து
வருகிறார். இதுபோல் தஞ்சாவூர் மாவட்டத்திலும் இப்போது
காணப்படுகின்ற தஞ்சை வாடல் நோய் மேலும் பரவாமல் இருக்க
மேற்படி மாவட்டத்திலுள்ள எண்ணெய் வித்துத் துறையின்
கீழ் உள்ள எல்லா பணியாளர்களும், வேண்டிய தடுப்பு முறை
களுக்கான நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.
இந் நோய் தற்சமயம் ஆரம்ப கட்டத்தில் இருப்பதால் இதை
உடனே கட்டுப்படுத்தி விடலாம். அதற்கு ஒரு சதவிகிதம்
' போர்டோ ' மிக்சரை 40 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒவ்
வொரு மரத்தைச் சுற்றியும் 60 சென்டி மீட்டர் ஆரத்தில்





ஊற்றினால் இந்த வியாதியைக் கட்டுப்படுத்தி விடலாம். அல்லது
2 கிராம் ' பெவிசிடினை ' 100 மில்லி தண்ணீரில் கரைத்து
மரத்து தண்டில் செலுத்துவதன் மூலமும் இதைக் கட்டுப்படுத்த
லாம். எனவே, தற்பொழுது தஞ்சையில் காணப்பட்ட நோய்
சுமார் ஒன்று முதல் மூன்று சதவிகிதமே ஆகும். இதனால்,
இதைச் சார்ந்த தொழில்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாது.

திரு. ப. பொன்னுரங்கம் ; பேரவைத் தலைவரவர்களே,
இந்த தென்னை மரத்தின் மூலம இந்திய துணைக்கண்டமே,
உலகத்திலே 3-வது இடத்தை வகிக்கின்றது என்று பத்திரிகை
களிலே எல்லாம் பார்த்திருக்கிறோம். இந்த மரம் அழிந்து
விடக்கூடாது. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு இலக்கியத்
திலே நல்ல ஈடுபாடு உண்டு. ஔவையார் '' நன்றி ஒருவருக்கு
செய்தக்கால் அந்நன்றி என்று தரும்கொல் என வேண்டாம்
என்று தளரா வளர் தெங்கு தானுண்ட நீரை தலையாலே தான
தருதலால் '' என்று சொல்கிறார். எனவே, அப்படிப்பட்ட
தென்னை மரம் வருங்காலத்திலே இப்படி ஒரு மரம் இருந்தது
என்று கேட்கின்ற அளவுக்கு இல்லாமல் போய்விடும் என்று பத்
திரிகைகளிலே எல்லாம் எழுதப்படுவதை நாம் பார்க்கிறோம,
இந்த மரம் அழிந்தால் பல தொழிலாளர்களும் பாதிக்கப்படு
வார்கள். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்னாற்காடு
போன்ற மாவட்டங்களிலே தேங்காய் மட்டையிலே இருந்து
கயிறு திரிக்கின்ற தொழிலிலே பல இலட்சக்கணக்கான மக்கள்
ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொழில் எல்லாம்
பாதிக்கப்பட்டுவிடும்.

அடுத்து நாட்டுப் படகைப் பொறுத்தவரையில் அதிலே சில
கார்க்கிங் செய்வதற்கு தேங்காய் மட்டையைப் பயன்படுத்து
கின்றார்கள். அதுவும் பாதிக்கப்பட்டுவிடும்.

[முற்பகல் 11–10]

ஆக இத்தகைய தென்னை மரங்கள் அழியும் நிலைக்கு போகு
மானால் நிறைய பாதிப்புகள் ஏற்படும். உலகத்திலேயே 3-வது
இடத்தைப் பெற்றிருக்கிற அந்த நிலையும் பாதிக்கப்பட்டுவிடும்.
அது மட்டும் அல்லாமல் இலக்கியத்திலே ஒரு உவமானம் காட்
டும் அளவுக்கு கையாளப்பட்ட அந்த நிலைக்கும் குந்தகம் ஏற்
படும். தென்னையைச் சார்ந்துள்ள பல சிறு தொழில்களும்
பாதிக்கப்பட்டு, அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் பாதிக்
கப்படுவார்கள். 5 இடங்களிலே அதற்கான நோய் தடுப்பு
அமைப்பு ஏற்படுத்தப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்
படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்பொழுது
அந்த அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன ? துரிதமாக செயல்
படுகிறதா, இல்லையா ? அல்லது மற்ற விஷயங்களைப் போலவே
இதுவும் ஆமை வேகத்தில் நடைபெறுகிறதா, அப்படியென்றால்,
அதைத் தடுக்க அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே
தென்னை மரத்தினுடைய ப ன்களைப் பற்றி இலக்கிய நயத்
தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்
னார்கள். அதனுடைய பயனை வேளாண்மைத் துறையும் மிக
நன்றாக உணர்ந்து உலக வங்கியினுடைய உதவியுடன், மிகப்
பெரிய தென்னைப் பண்ணை ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்துக்
கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
தென்னைக்கு ஏற்பட்டுள்ள இந்த நோய் 3 சதவீதம் வரைதான்
காணப்படுகிறது, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் ஏற்
கெனவே எடுக்கப்பட்டு விட்டது. ஆகவே நிச்சயமாக அந்த
நோய் தடுக்கப்பட்டு, சிறப்பாக அவைகள் வளரும் அளவிற்கு
நிலைமை உருவாகும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தென்னையை தாக்கியுள்ள இந்த நோயைப்
பற்றி மிக விவரமாக அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்
கள். சென்னையிலே கூட அந்த நோயால் தாக்கப்பட்டு தென்
னைகள் பழுது பட்டிருப்பதாக இந்து பத்திரிகையிலே கூட
செய்தி வந்திருக்கிறது. இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கான
முயற்சிகளை மேற்கொள்ளும் நிலையில், வானொலி மூலமாக,
மற்ற எல்லாப் பத்திரிகைகளின் மூலமாக விளம்பரப்படுத்தினால்
அனைவரும் அறிந்துக் கொண்டு தடுப்பு நடவடிக்கை எடுக்க
உதவியாயிருக்கும். ஏனென்றால் அதிக வருமானத்தைத் தரக்
கூடிய இந்தத் தென்னை மரங்கள் அழிந்து விடக் கூடாது என்று
அதை அனைவரும் வரவேற்பார்கள். ஆகவே இப்படி விளம்
பரங்கள் மூலமாக அந்தச் செய்தியைப் பரப்புவதற்கு அரசு
முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் தெரிவித்ததைப் போல நோய் தடுப்பு முறைகளைப்
பற்றி வானொலி மற்றும் செய்தித்தாள்கள் மூலமாக விளம்பரம்
செய்ய முயற்சி எடுக்கலாம்.

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், உரிமைப் பிரச்சனை மீது
தீர்ப்புச் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்திலே ** அதனால்
அதை நீக்குவதற்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கி
றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** [illegible] அவைக்குறிப்
பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவு [illegible]றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் [illegible]
[illegible]



## 6. தகவல் கோரல்

### சட்டமன்றத்திற்கு வானொலி தனது சொந்த நிருபரை அனுப்புதல்.

*டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே:
தங்களுடைய மேலான கவனத்திற்கும், அவை முன்னவர் அவர்
களுடைய மேலான கவனத்திற்கும் ஒன்றை நான் கொண்டு வர
விரும்புகிறேன். ஒன்றும் பிரச்னையாக இல்லை. இதை
நீங்கள் இருவரும் முயற்சி செய்தால் தீர்த்து வைக்க முடியும்.
ஒவ்வொரு நாளும் வானொலியிலே 7 மணி அளவில் 'சட்ட
மன்றத்தில் இன்று' என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுகிறது.
அதற்கு ஒவ்வொரு பத்திரிகை நிருபர்களும் ஒவ்வொரு நாள்
நியமிக்கப்பட்டு அவர் தரும் செய்தி வானொலியிலே படிக்கப்
படுகிறது. ஒவ்வொரு பத்திரிகையின் நிருபர்களும் அனுமதிக்
கப்படுகிறார்கள் என்ற காரணத்தால், அவர்கள் எல்லாம் அந்தப்
பத்திரிகையின் அடிப்படையில் ஒவ்வொரு கட்சியைச் சார்ந்த
வர்களாக இருப்பார்கள் என்ற காரணத்தால் அந்தச் சூழலிலே
உணர்விலே தான் செய்திகள் வந்து கொண்டிருக்கிறது. நேற்
றுக் கூட கேட்டேன். அதில் ஒரு வகை உணர்வு இருந்தது.

ஆகவே, இது சம்பந்தமாக தாங்களோ, முன்னவர் அவர்
களோ, நேரிடையாக வானொலி நிலையத்துடன் தொடர்பு
கொண்டு, வானொலி நிருபர் ஒருவரே இந்த அவைக்கு வந்து,
ஒவ்வொரு நாளும் சட்டமன்றத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை
தொகுத்து அனுப்பினால், நடைபெறுகிற நிகழ்ச்சிகள் நேர்மையாக
எந்தக் கட்சியும் தொடர்பற்ற முறையிலே வானொலியில்
வெளியாகும். நிருபர்கள் யாரும் இதற்காக வருத்தப்படக் கூடாது
என்று கேட்டுக் கொள்கிறேன். எந்தக் கட்சியின் உணர்வும் அந்த
நிகழ்ச்சியில் பிரதிபலிக்கக் கூடாது என்றுதான் இந்த ஏற்பாட்டை
செய்யவேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சி சார்பற்ற முறை
யில் வானொலியில் செய்தி வரவேண்டும் என்ற உணர்வு சரி
தான். இதுபற்றி ஏற்கனவே அவையின் சார்பாக வானொலி
நிலையத்தாருக்கு எழுதப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

* திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அது மட்டும்
அல்ல, இந்த 1 ஆம் தேதியன்று வானொலியில் என்ன சொன்
னார்கள் என்றால், வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரிலே
இடைத்தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். இது எப்படி
சரியாகும் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைக் கேட்டால் நான்
என்ன சொல்வது நான் ஒன்றும் வானொலித் துறை அமைச்சர்
அல்ல.

[1981 மார்ச் 4

திரு. துரைமுருகன் : 1 ஆம் தேதி அன்று வானொலியில் அறிவிக்கிறபோது வட ஆற்காடு திருப்பத்தூரில் இடைத் தேர் தல் நடக்கும் என்று சொன்னார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், இது பத்திரிகைகளிலே வந்து வானொலி திருத்திக் கொள்ள வழி இருக்கும் என்பதால் சொல்கிறேன். இது ஒரு பெரிய தவறான செய்தி அல்லவா.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதிர்க்கட்சித தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தினை தாங்கள் ஆராயலாம். வானொலி ஒரு நிருபரை அனுப்பி வைக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் குறிப் பிட்டது போல் இதுமாதிரி தவறு செய்வார்களானால் சுட்டிக் காட்டி திருத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கும். வாய்ப்பு இருக்கும். மற்றவர்கள் திருத்தினால் அந்தளவிற்கு கட்டுப்படுத்த முடியாது, வானொலி நிலையத்தாருக்கு. ஒரு சங் கடம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும். ஆகவே இந்தக் கருத்து பற்றி பேரவைத் தலைவர் வானொலி நிலையத்தாரோடு பேசி ஒரு முடிவிறகு வரலாம்.

## 7. அரசினர் தீர்மானம்.

### தமிழ்நாட்டில் வறட்சி நிலை, விவாதம்—தொடர்ச்சி.

* திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை அறிக்கைமீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் சேலம் மாவட்ட மக்கள் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன்.

தக்க நேரத்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர் கள் இந்த அறிக்கையை இந்த மாமன்றத்தில் வைத்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். பருவமழை பொய்த்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டும் ஏற்பட இருக்கிற அபாயத்தை எதிர் நோக்கியும் ஒரு தடுப்பு நடவடிக்கையாகவும், முன்னெச்சரிக்கைச் செயலாகவும் சில நடவடிக்கைகள் எடுத்து அந்தப் பணிகள் பற்றி இந்த அறிக்கை யில் சொல்லப்பட்டிருக்கின்றன. 'ப்ரவன்ஷன் இஸ் பெட்டர் தன் க்யூர்' என்று சொல்வார்கள். அதுபோல் வந்தபின் துன் பப்படுவதை விட வருமுன் காப்பது மேல் என்ற அடிப்படையில் இந்த வறட்சி காரணமாக சில நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியதாகும். அதிலும் இந்த அறிக்கையில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க முன் உரிமை கொடுத்திருப்பதும் அதன்மூலம் வேலை வாய்ப்பை ஏற் படுத்திக்கொடுததிருப்பதும் துயர்துடைப்புப் பணிகளாகக் கருதப் படுகின்றன. அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்தாலும்



1981 மார்ச் 4 [திரு. செ. செம்மலை]

அரசாங்கத்தின் திட்டங்களைச் செயலாற்றுகிற பொறுப்பு அதிகாரிகளிடத்தில் இருக்கிறது. அரசாங்க இயந்திரத்தை இயக்குவது, அமைச்சரவையாக இருந்தாலும் இயங்க வேண்டி யவர்கள் அதிகாரிகள் ஆவர். எனவே அப்படிச் செயல்படுகிற நேரத்தில் அதிகாரிகளிடம் பழுது ஏற்பட்டால் நிச்சயமாக திட் டத்தின் முழுப் பலனும் மக்களுக்குப் போய் சேராது. எனவே மக்களின் இதயத்துடிப்பை அறிந்த நம் புரட்சித் தலைவர் அவர் கள் போடுகிற திட்டங்களை நல்ல முறையில் அமல்படுத்துகிற வகையில் திட்டங்களின் பலன் மக்களுக்கு காலம்கடந்து கிடைக் காமல் தக்க நேரத்தில் கிடைக்கிற நிலையில் அதிகாரிகள் தீவிர மாகச் செயல்பட வேண்டும் என்ற என் வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கி றேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வி. வி. சாமிநாதன் தலைமை)

திட்டங்களை நிறைவேற்றுகிற நேரத்தில் சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. எங்கள் சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 540 குழாய்க் கிணறுகளுக்கு உத்தரவு போட்டிருப்பதாக அறிகிறேன். அந்தக் குழாய்க் கிணறுகள் போதுமானதாக இல்லை என்றாலும் அப்படிப் போடக்கூடிய குழாய்க் கிணறுகளைக் கூட போடுவதற்கு சரியாக ரிக்ஸ் இல்லாமல் அதாவது குழாய் கிணறுகள் தோண்டக் கூடிய இயந்திரங்கள் இல்லாமல் 'ரிக்ஸ்'-ன் பற்றாக்குறை இப் போது இருக்கிறது இங்கிருக்கிற அந்த இயந்திரங்களை அதிக வாடகைக்காக வெளி மாநிலங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. மேலும் அதற்குண்டான பைப்புகள், கைப்பம்பு களுக்கான கருவிகள் இவை தட்டுப்பாடாகயிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே வறட்சிப் பணியை துரிதமாக செய்து கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் துளைபோடும் இயந்திரங்கள், அதற்குண்டான பைப்பு கள் அதற்கு வேண்டிய கைபம்ப்களுக்கான இயந்திரங்கள் இவை கிடைக்கக்கூடிய வகையில் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து முழுமுயற்சி எடுத்து, எந்தவிதத் தட்டுப்பாடும் இல்லாத வகை யில் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், குடிநீர் வடி கால் வாரியம் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தன்னிறைவு திட்டத்தின் கீழ் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் அது செயல்பட்டு வருகிறது.

[முற்பகல் 11-20]

வர இருக்கின்ற ஆண்டில் 9 ஒன்றியங்கள் எடுத்துக் கொள்ளப் பட இருக்கின்றன. என்றாலும், இந்த ஒன்றியங்களில் இப்போது குடிநீர் வடிகால் வாரியத்தின் இரண்டு டிவிஷன்கள்தான் செயல் பட்டு வருகின்றன. இந்த வறட்சிப் பணியைச் செய்து

[திரு. செ. செம்மலை] [1981 மார்ச் 4

வருகின்ற இந்த நேரத்தில், இந்த இரண்டு டிவிஷன்கள் போது
மானதாக இல்லை. சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில்
இன்னொரு டிவிஷனை அதிகரித்து, இந்த வறட்சிப் பணிகளுக்
கென்று தனியாக ஒரு டிவிஷனை குடிநீர் வடிகால் வாரியம்
ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்
கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், இந்த வறட்சிப் பணி நடைபெறுகின்ற இந்த
நேரத்தில் கிணறுகளுக்கு அடி ஆழம் வெட்டுகின்ற நிலை வரு
கின்றபோது, ஜியாலஜிஸ்ட்டிடமிருந்து சர்டிபிகேட் வாங்கி
வந்தால் தான் வெட்ட முடியும் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.
சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை இன்றைக்கு ஒரு
ஜியாலஜிஸ்ட்தான் அங்கே இருக்கிறார். இன்னொரு ஜியாலஜிஸ்ட்
விடுமுறையில் சென்றிருப்பதாகத் தெரிகிறது. எனவே இருக்
கின்ற ஒரு ஜியாலஜிஸ்ட்டை வைத்துக் கொண்டு, அவரிடம்
சர்ட்டிபிகேட் பெற்று கிணறுகளுக்கு அடி ஆழம் வெட்டுவது
இயலாத காரியமாக இருக்கிறது. எனவே, ஒன்று அதிகப்படி
யான ஜியாலஜிஸ்ட்டுகளை இந்த நேரத்தில் நியமிக்க வேண்டும்
அல்லது ஒன்றியங்களில் இருக்கக்கூடிய பொறியாளரிடமிருந்து
சர்ட்டிபிகேட் வாங்கினால் போதும் என்றிருக்க வேண்டும்.
காரணம், அவர்களும் டெக்னிக்கல் ஸ்டாப்தான். ஆகவே,
இவர்களுடைய சர்ட்டிபிகேட்டைக் கொண்டு கிணறுகளுக்கு
அடி ஆழம் வெட்டுவதற்கான உத்தரவைப் போட வேண்டுமென்று
இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், தன்னிறைவுத் திட்டப் பணிகளை நிறைவேற்றிக்
கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் ஒன்றியங்களில் இருக்கின்ற
ஒரு ஆணையாளருக்கு வேலைப் பளு அதிகமாகியிருக்கிறது.
ஆகவே இது போன்ற வறட்சிப் பணிகளையும், தன்னிறைவுத்
திட்டத்தையும் ஒன்றாகச் சேர்த்து செயல் படுத்துகின்ற இந்த
நேரத்தில் ஒரு ஒன்றியத்திற்கு மேலும் ஒரு ஆணையாளரை
அவசியம் நியமிக்க வேண்டும். இது சரி, நியாயம் என்று நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அரசுக்குச் சொந்தமான கிணறுகளுக்கு அடி ஆழம்
வெட்ட இவ்வளவு தொகை செலவழித்துக் கொண்டிருக்கின்ற
இந்த நேரத்தில் கிணற்றுப் பாசனத்தையே நம்பியிருக்கும்
விவசாயிகள் தங்கள் விவசாயத்திற்கான கிணறுகளுக்கு அடி
ஆழம் வெட்ட முடியாத ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்
கிறார்கள். எனவே, நம்முடைய அரசு எப்படி கூட்டுறவு சங்கங்
களுக்கு உதவித் தொகை அளித்து, விவசாயிகளுக்கு விவசாயக்
கடன் உதவி செய்ததோ, அதே போல், இன்றைக்கு கிணறு
களுக்கு அடி ஆழம் வெட்ட நில வள வங்கியின் மூலம் இந்த ஏழை
எளிய மக்களுக்கு உதவ முன்வர வேண்டு மென்று நான் இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1981 மார்ச் 4] [திரு. செ. செம்மலை]

மேலும், பருவ மழை தவறியதன் காரணத்தினால், பயிர்
களின் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில்
கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் இல்லாத ஒரு சூழ்நிலை
இருக்கிறது. மேட்டூர், ஓமலூர் போன்ற பகுதிகளில் அங்குள்ள
விவசாயிகள் இன்றைக்கு குறைந்த விலைக்கு தங்கள் கால்நடை
களை விற்கும் அவல நிலை இருந்து வருகிறது. எனவே இந்த
நிலைமையைத் தவிர்க்க நம் மாநில அரசு குறிப்பாக தஞ்சாவூர்,
தென் ஆற்காடு, திருச்சி போன்ற மாவட்டங்களிலே உள்ள
உபரியான வைக்கோல், மாட்டுத் தீவனம் போன்றவைகளை
இங்கே கொண்டு வந்து, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயி
களுக்கு நியாயமான விலையில் அதை விநியோகிக்க வேண்டு
மென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறிக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வறட்சிப் பணியை இவ்வளவு வெகு வேகமாக, தீவிரமாக
நம்முடைய அரசு செயல் பட்டு வருகிற நேரத்தில் இங்கே
முக்கியமான ஒரு குறிப்பினை நான் சொல்லக் கடமைப்பட்
டிருக்கிறேன். இந்த வறட்சிப் பணியை மேற் கொள்ளுகின்ற
நேரத்தில், இங்கே இருக்கின்ற வேலையற்ற மக்களுக்கு, இந்த
பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண வேலையை
இப்போதே துவங்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான்
இந்த நேரத்தில் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். இது போன்ற
நிவாரண வேலைகளுக்கு மைய அரசிடமிருந்து நம் மாநில அரசு
உதவித் தொகை பெற வேண்டும். மைய அரசு தமிழக அரசுக்கு
தாமாகவே முன்வந்து உதவி கொடுக்க வேண்டும். அப்படி
அளிக்கின்ற இந்த உதவித் தொகையை திட்ட முதலீட்டிலிருந்து
நிச்சயமாக மைய அரசு கழிக்காமல் உதவித் தொகையாகவே
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இது போன்ற வறட்சிப் பணி நடைபெறுகின்ற இந்த நேரத்தில்
இன்றைக்குப் பொறுப்பேற்று இருக்கின்ற தமிழக முதல்வர்
புரட்சித் தலைவர் அவர்கள் வள்ளுவர் கூறியிருப்பது போல்
முறை செய்து காப்பாற்றுகின்ற மன்னனாக செயல் பட்டு
வருகின்றார்கள். ஐந்து கோடி மக்களுக்கு தளநாயகராக
இருந்து அன்புள்ளம் கொண்டு அவர்களைக் காப்பாற்ற கைக்
கொடுக்கும் போது இன்றைக்கு பிரதான எதிர்க் கட்சியான திராவி
ட முன்னேற்றக் கழகத்தினர் வறட்சிப் பணிக்கு கைக்கொடுக்
காமல் நிவாரண வேலைக்கு உதவ மைய அரசுக்கு குரல் கொடுக்
காமல் தீவட்டியை ஏந்துவது எந்த வகையிலே நியாயம் என்ற
அந்தக் கேள்வியை அவர்களுடைய மனசாட்சிக்கு வைத்து விடை
பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. ஏ. த. சிதம்பரம் : பேரவைத் தலைவர் அவர்களே,
தமிழ்நாட்டில் பருவ மழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள
வறட்சி குறித்து கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையின் மீது
ஒரு சில கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு சி. த. சிதம்பரம்] [1981 மார்ச் 4

இராமநாதபுரம் மாவட்டம் வறட்சி மிகுந்த மாவட்டம்
ஆகும். அங்கே புதிய ஆழ் கிணறுகள் தோண்டவும், ஏற்கனவே
உள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும், 50 இலட்சம் ரூபாய்
இப்போது ஒதுக்கி திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆனால்
மூன்று மாதங்களுக்கு முன்பு நாங்கள் மாவட்ட வளர்ச்சி
கூட்டங்களில் மாவட்டம் வறட்சியாக இருக்கிறது என்று
கூறினோம். எங்களுடைய மாவட்டத்தின் மக்கள் நிறைய பேர்
வெளி மாவட்டங்களுக்கு வேலைக்காக செல்ல வேண்டியிருக்கிறது
என்று சொன்னோம். அப்போது கேட்காமல் இப்போதாவது
அரசாங்கம் கேட்டிருப்பதற்காக எங்களுடைய நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் எப்போதுமே வறட்சியுள்ள
மாவட்டம், புயல், வெள்ளம் வந்தால்தான் அங்கு ஆறு, ஏரி
குளங்களில் தண்ணீர் இருக்கும். மற்ற மாவட்டங்களில் தண்ணீர்
வந்தால் அதை அடைக்க வேண்டுமென்று சொல்வார்கள்.
ஆனால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில்
புயல், வெள்ளம் வந்தால் தான் தண்ணீர் கிடைத்து பயிர் செய்
கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே இராமநாதபுரம்
மாவட்டத்தை இந்த அரசாங்கம் வறட்சிப் பகுதியாக அறிவிக்க
வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.
அதேபோல் வறட்சி மாவட்டமாக தொடர்ந்து இருந்து வருவ
தாலே ஒரு நிரந்தரமான திட்டத்தை இந்த மாவட்டத்திற்கு
உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிதண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு கிணறுகளை ஆழப்
படுத்துவதற்கும், நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இந்த
மாவட்டத்திற்கு அதற்காக 50 இலட்சம் ரூபாய் தான் ஒதுக்கி
இருக்கிறார்கள். அருகிலே இருக்கின்ற புதுக்கோட்டை மாவட்டம்
சிறிய மாவட்டம். அதற்கு 63.52 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கி
றார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தைப் போல இரண்டு
மடங்கு பெரியது எங்கள் மாவட்டம். இராமநாதபுரம் மாவட்டம்
நிர்வாகத்திலே இரண்டாகப் பிரிக்கப்பட்டு செயல்பட்டுவருகிறது.
அப்படிப்பட்ட மாவட்டத்திற்கு வெகு குறைவாக ஒதுக்கியிருக்கி
றார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பணத்தை
அதிகமாக ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் வாரியத்தின் மூலமாக இப்படிப்பட்ட திட்டங்கள்
வறட்சி நிலை காரணமாக செயல் படுத்த வேண்டுமென்று
குரல் கொடுத்து வருகிறோம். எங்களுடைய குரல் ஏற்கப்பட்டு
குடிநீர்த் திட்டங்களை உடனடியாக அரசு எடுத்துக் கொள்ள
வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களில்
நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. உப்பு நீராக இருக்கிறது.
நல்ல தண்ணீர் கிடைக்க அரசு ஏற்பாடுகள் செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.
அங்குள்ள மக்களுக்காக



1981 மார்ச் 4] [திரு. சி. த. சிதம்பரம்]

வேலை வாய்ப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட வில்லை. வேலை
வேலை வாய்ப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட வில்லை. வேலை
வாய்ப்பு என்பதற்காக சில திட்டங்களுக்கு இரண்டாயிரம் டன்
அரிசி ஒதுக்கியிருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.
ஆனால் மாவட்ட வளர்ச்சிக் கூட்டங்களில் எங்களுக்கு இது
சொல்லப்படவில்லை. வேலைக்கு உணவு திட்டத்திலே வழங்கப்
பட்டிருக்கிற அரிசி எங்களுடைய மாவட்டத்திலே நிறைய
வழங்கப்பட வேண்டியிருக்கிறது. இரண்டாயிரம் டன் அரிசி
போதுமானதாக இருக்காது. ஆகவே அதிகமாக அரிசியை
ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதிய சாலை
களையும், இணைப்பு சாலைகளையும் போடுகின்ற திட்டங்களை
வேலைவாய்ப்புத் திட்டங்களாகக் கருதி எடுத்துக் கொள்ள
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலமாகத்தான்
மண் தோண்டுதல், பரப்புதல் போன்ற பணிகளையும் எடுத்துக்
கொள்ள முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன். வேலை
வாய்ப்புக் கிடைக்கக்கூடிய அளவிற்கு பெரிய ஏரிகளையும்
கண்மாய்களையும் தூர் எடுத்து அந்த பணிகளை செம்மையாக
நடத்த வேண்டிக் கொள்கிறேன்.

அதே போல் மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி வழங்கப்
படுவதில்லை. பல்வேறு இடங்களில் கிராமப்புறங்களில் அரிசிக்
காக மக்கள் கியூவிலே நிற்க வேண்டிய அவல நிலை இன்றைய
தினம் ஏற்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11–30]

இந்த நிலையைப் போக்குவதற்காக அரிசி போதுமான
அளவுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
காரைக்குடி நகராட்சியைப் பொறுத்த வரையிலே 1971–76 இல்
போட்ட நிரந்தரத் திட்டத்தின் காரணமாக இப்போது குடி
தண்ணீர் பஞ்சம் இல்லை. ஆனால் மின் தட்டுப்பாடு இருக்கிறது.
அதன் காரணத்தினால் குடிதண்ணீர் வழங்குவதில் காலதாமதம்
ஏற்படுகிறது. வறட்சி நிலையைக் கருதி குடிதண்ணீர் வழங்கு
வதற்கு தேவையான ஜெனரேட்டர்களை வாங்குவதற்கு நிதி
வசதி அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்திலே சாக்கோட்டை, கல்லல் ஆகிய
ஒன்றியங்களிலே குடிதண்ணீர் இல்லாத நிலைமை இருக்கிறது.
அங்கே ஆழ் குழாய்க் கிணறுகளையும், கை பம்புகளையும்
போட்டுக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இராம
நாதபுரம் மாவட்டத்திலே காரைக்குடி, பரமக்குடி போன்ற பகுதி
கள் எல்லாம் நெசவாளர்கள் நிறைந்துள்ள பகுதி, அந்தப் பகுதி
யிலே வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் நிறையப்
பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நூல் கிடைக்கவில்லை.
அதனால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டு
இருக்கிறார்கள். அவர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்கச்

[திரு. சி. த. சிதம்பரம்] [1981 மார்ச் 4

செய்வதற்கு வறட்சி நிலைமை இருக்கின்ற இந்த நேரத்திலே
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அதற்கு ஏற்பாடு செய்வதோடு அந்தப் பகுதியிலே உள்ள மக்களை
வாழவைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். வறட்சிப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு வரி
விலக்கு, கடன் ஒத்திவைப்பு போன்ற நடவடிக்கைகளை எடுக்க
வேண்டு மென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சென்ற ஆண்டு (1980) மே, ஜூன் மாதங்களில்
பெய்ய வேண்டிய பருவ மழை பொழியவில்லை. இதனால்
சொர்ணவாரி நெல் பயிரிட முடியாமல் போய்விட்டது. அடுத்து
நவம்பர், டிசம்பர் மாதங்களில் பொழிய வேண்டிய பருவ மழை
பொய்த்ததால் தமிழ்நாட்டிலே தஞ்சைக்கு அடுத்தபடியாக
நெல் விளையும் வடாற்காடு மாவட்டத்தில் சம்பா போகமும்,
மானாவாரி பயிர்களாகிய கடலை, சோளம், கம்பு, கேழ்வரகு,
துவரை, உளுந்து போன்ற நவதானிய பயிர்களும் கிராம ஏழை
விவசாயிகளுக்கு கைக்குக் கிட்டாமல் போய்விட்டது.
அதனால கிராமத்தில் உள்ள சிறு விவசாயிகளும் விவசாய கூலி
ஆட்களும் வேலையின்றி அன்றாட பிரச்சினையில் மூழ்
கடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓராண்டுக் காலமாக மழை
யின்மையால் குளங்களும், ஏரிகளும் நீரின்றி காய்ந்து வெடித்து
கிடக்கின்றன. விவசாய கூலி வேலை செய்கிறவர்களுக்கு வேலை
இன்றி அன்றாட உணவுக்கே வழியின்றி தத்தளிக்கின்றனர். கால்
நடைகளுக்கு வேண்டிய புல், வைக்கோல் கிடைக்காமல், பற்றாக்
குறையும் ஏற்பட்டு பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதன்
விளைவாக காய்கறி வகைகள், பால், தயிர் போன்ற அன்றாட
அத்தியாவசிய உணவுப் பொருட்களும் குறைந்து தட்டுப்பாடு
ஏற்படும் வண்ணம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வரு
கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆற்காடு தாலுக்
காவில், திமிரி, கலவை, விஷாரம் போன்ற மூன்று பேரூராட்சி
யைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் கடும் வறட்சி நிலவிக்
கொண்டே வருகிறது. இப்போது கொஞ்சம் தண்ணீர் வள
முள்ள கிணறுகளையுடைய நிலங்களில் பயிர் செய்யப்பட்டுள்ள
கரும்பு, மணிலா, வாழை போன்ற பயிர்கள் இப்போதுள்ள வறட்சி
யினால் முழுபலன் கிடைக்காத நிலைமை ஏற்பட்டுள்ளது.
கிராமங்களில் உள்ள ஓரளவு தண்ணீர் தரக்கூடிய கிணறுகளை
மேலும் ஆழப்படுத்துவதற்கு விவசாயக் கடன் உதவி உடனடி
யாகச் செய்யப்பட்டால் ஒழிய மேற்படி பயிர்கள் விவசாயிகளுக்
குக் கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட வாய்ப்பு உண்டு.
இதனால் நகர்ப்புற கிராமப்புறங்களில் குடிநீர் இல்லாமல்
குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கும் பகுதிகளிலும்
கிணறுகளில் தண்ணீர் வற்றி விட்டதால் குடிதண்ணீர் பிரச்சினை
முன்பு இருந்ததை காட்டிலும் மிக அதிகமாக ஏற்பட்டுள்ளதை
கண்கூடாகக் காணமுடிகிறது. கிராமங்களிலுள்ள காலனி
களுக்கும் குடிதண்ணீர்உ டனடியாக கிடைக்க நடவடிக்கை எடுக்க



1981 மார்ச் 4] [திரு. ஏ. எம். சேதுராமன்]

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, பொது
மக்களுக்கும், ஏழை எளியோர் பாட்டாளி மக்களுக்கும்
குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கவும் அன்றாட உண
பிரச்சினையை தீர்க்கவும் வேலை வாய்ப்பு அளிக்க விரைவாக
பணிகளை தொடங்க தாங்கள் மேற்படி மாவட்ட ஆட்சித் தலை
வருக்கு ஆணையிட்டு இம் மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக
அறிவித்து அதற்குண்டான நிதி ஒதுக்கீடுகள் தாலுக்கா அளவில்
தந்து உதவுமாறு வேண்டுகிறேன். 26–12–1980-இல் பிறப்
பிக்கப்பட்ட ஆணையை மீறி அதிகாரிகள் வறட்சியால் பாதிக்
கப்பட்டு உள்ள மாவட்டங்களில் உள்ள சிறு விவசாயிகள், எளிய
விவசாயிகளிடமிருந்து கடன்களை வசூலிக்க கட்டாயப்படுத்தி
வருகிறார்கள். அந்தக் கடன்களை ஒரு வருடம் தாமதித்து
வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உள்ளாட்சித் துறையிலுள்ள கிணறுகளை ஆழப்படுத்தக்
கொடுக்கப்படும் விகிதாச்சார நிர்ணயக் கூலி 1964 ஆம்
ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்போதைக்கு அது மிகவும்
குறைவாக உள்ளது. அதை ஆழப்படுத்துவதற்கு ஒரு சதுர
மீட்டருக்குக் கூலி 1 ரூபாய் 68 காசாக இருக்கிறது. இந்த
நிலைமை மாற்றப்பட்டு, அதை இரட்டிப்பாக்கிக் கொடுக்க
வேண்டும். இல்லையென்றால், கிராமங்களிலேயும், ஒன்றியங்
களிலேயும் வேலை பார்க்கும் கான்ட்ராக்டர்கள் அந்த
வேலைகளைச் செய்து முடிக்க முடியாத சூழ்நிலை இருப்பதால்
நிச்சயமாக இரட்டிப்பாக்கிக் கொடுக்க வேண்டும். அதாவது
4 ரூபாய் ஒரு சதுர அடிக்கு என்றாவது நிர்ணயித்தால் நஷ்டம்
இல்லாமல் அந்த வேலைகளை எடுத்துச் செய்ய முடியுமென்ற
நிலவரம் இருக்கிறது. எனவே இதற்கு உள்ளாட்சித் துறை
அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

மத்திய சர்க்காரிடமிருந்து தேசீய கிராமப்புற வேலை
வாய்ப்புத் திட்டத்தை நிறைவேற்ற, மாவட்ட ஆட்சித்
தலைவர் திரு. கங்கப்பா அவர்கள் 10,000 டன் அரிசி பெற்
றிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இங்கே வறட்சி நிவாரண
அறிக்கையிலே 7,000 டன் அரிசிதான் அளிக்க உள்ளதாக இருக்
கிறது. எனவே, இதில் 3,000 டன் அரிசி குறைந்திருக்கிறது.
அதை 10,000 டன்களாக அதிகரிக்க ஆவன செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒகனேகல் நீர்வீழ்ச்சியின்
மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட
வேண்டுமென்று மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மேல
வையில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கூறி
யுள்ளார்கள். மின்சாரம் தயார் செய்யப் பயன்படுத்தப்பட்ட
தண்ணீரை வீணாக்காமல், தருமபுரி மாவட்டத்திலிருந்து வரும்
ஒகனேகல் தண்ணீரைப் பெரிய கால்வாய் வெட்டி, அதன் மூலம்

[திரு. ஏ. எம். சேதுராமன்] [1981 மார்ச் 4

அருகாமையில் வற்றியிருக்கும் பாலாற்றில் கலக்கச் செய்வதன் மூலம் வடார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள இலட்சக்கணக்கான ஏக்கர் விளை நிலங்களை வறட்சியால் பாதிக்காமல் காப்பாற்றி சுமார் 480-இலிருந்து 500 கிலோ மீட்டர் வரை நீர்ப்பாசன வசதி செய்து பல இலட்சம் விவ சாயக் குடும்பங்களைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை யோடு, மனநிறைவோடு இந்தப் பாலாற்றுத் திட்டத்தினை மேலான தங்கள் கவனத்திற்கும், தமிழக அரசுக்கும் தாழ்மை யோடு தெரிவித்துக் கொள்கிறேன். இது சம்பந்தமாக மத்திய சர்க்காரிடம் நிதி உதவிக்காகத் தாங்களும் சிபாரிசு செய்யும்படி மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆற்காடு தாலுக்காவில் திமிரி பிர்க்காவில் 4,62,000 ரூபாயும், ஆற்காடு பிர்க்காவில் 85,650 ரூபாயும், மாம்பாக்கம் பிர்க்காவில் 8,27,000 ரூபாயும், கலவை பிர்க்காவில் 12,01,000 ரூபாயும், புதுப்பாடி பிர்க்காவில் 4,10,000 ஆக மொத்தம் 29,85,650 ரூபாய் இந்த வறட்சி நிவாரணப் பணிக்குத் தேவையாக இருக் கிறது என்று வட்டாட்சி அலுவலர் அவர்கள் தெரிவித்திருக் கிறார்கள். ஆகவே, புரட்சித் தலைவரவர்கள் இதைக் கண்கூர்ந்து, இப்பொழுது 115 இலட்சம் ரூபாய் என்ற அள விற்கு ஒதுக்கியிருந்தாலும் அது போதவில்லை என்பதைக் கவனத்திற்கொண்டு அதிகமான நிதி ஒதுக்கி வடார்க்காடு மாவட் டத்திற்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடார்க்காடு மாவட்டத்தை வறட்சிப் பகுதி என்று அதிகாரபூர்வமாக அறிவித்தால் ஒழிய மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் இதன் மீது நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்பதால் தயவு செய்து வடார்க்காடு மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, வறட்சியைப் பற்றிப் பேசும்பொழுது பல மாவட்டங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது பஞ்சத் திற்கு ஆளாகியிருக்கிறது என்று சொன்னால், அவர்கள் பஞ்சத்திற்கு வந்த ஆண்டி என்று சொன்னால், இராமநாத புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பரம்பரை ஆண்டி என்ற முறையிலே ஆண்டுதோறும் பஞ்சத்திற்கு ஆளான பகுதி யாக இருக்கிறது. ஆகவே எங்கள் குறைகளைப் பூரணமாக முழுமையாக, விளக்கமாக உணர்ந்த இந்த அரசு ஆவன செய்யும் படி, பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அங்கு பஞ்சம் வறட்சி என்பது ஒரு தொடர் கதையாக இருந்து வருகிறது இதற்கு அறிகுறியாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் சாதாரணமாக விளைந்து கடைசி நேரத்தில்தான் தண்ணீர் இல்லா மல் இருக்கும்: ஆனால் இந்த ஆண்டு ஆரம்பக் காலத்திலேயே



1981 மார்ச் 4] [திரு. உ. சுப்பிரமணியன்]

விவசாயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே ஏற்பட்ட தண்ணீர்ப் பஞ்சத்தின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட டிருக்கிறது. ஆகவே, இந்தப் பஞ்ச நிலையை வறட்சி நிலையை மிகவும் முக்கியமான அவசரமான கண்ணோட்டத்தோடு கொண்டு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

22–11–80-இல் நடந்த மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே இதைப் பற்றி விவாதிக்கப்பட்டு அரசுக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்க வேண்டும், கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லியும்கூட இன்னும் நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அங்கே வழக்கம்போல் மக்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைத் தஞ்சம் புகுந்து பிழைக்கப் போவது மட்டும் அல்லாமல்,இந்த ஆண்டில்மதுரை மேற்குப்பகுதிக்கும்கூடப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆடு, மாடுகளை ஓட்டிக் கொண்டு அவர்கள் சாரிசாரியாகச் செல்வதைப் பார்க்கிறேன். ஆகவேதான் இதைப்பற்றி அவசிய அவசர உணர்வோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கமிஷனர் பார் ரெவின்யூ அட்மினிஸ்ட்ரேஷன் மாவட்டம் முழுவதும் சுற்றிப் பார்த்து விரிவாக ரிப்போர்ட் கொடுத்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

[முற்பகல் 11–40]

அந்த அடிப்படையில் உடனடியாக வேலைகள் துவங்க வேண்டும். காலங்கடந்து செய்வதால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணம் உரிய காலத்தில் கிடைக்காது, முழுப் பயனையும் பெற வாய்ப்பில்லை. இன்று மார்ச் 4 தேதியாகி விட்டது, இன்னும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிய வில்லை. இப்படி இருக்குமானால், காலங்கடத்தி வேலைகளை ஆரம்பிப்பதன் காரணமாக, அதனுடைய தரமும் குறைந்து மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பலனும் குறைந்து விடுகிறது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எங்கள் மாவட்டத்திலே விசேஷமான அம்சம் என்ன வென்றால், தமிழகத்திலேயே அதிகமான கண்மாய்கள் நிறைந்த மாவட்டம் எங்கள் இராமநாதபுரம் மாவட்டமாகும். ஆகவே, கண்மாய்களைப் பாதுகாக்க வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அந்தக் கண்மாய்களைப் பொறுத்த வரை யிலே, இதுவரையிலும் Strengthening of bunds என்று கரைகளைப் பலப்படுத்துவதிலேதான் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதே தவிர, ஆழப்படுத்துவதில் இதுவரையில் கவனம் செலுத்த வில்லை. ஆகவே, ஆள்பலம் மூலமோ, அல்லது earth removers மூலமோ, பெரிய இயந்திரங்களைக் கொண்டு உடனடியாக அதிக

மான எண்ணிக்கையுள்ள கண்மாய்களைச் சீர்திருத்தம் செய்தால் ஆண்டுதோறும் கிடைக்கக்கூடிய குறைந்த மழைத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு வாய்ப்பிருக்கும்.

அடுத்து, கண்மாய்களிலே சமுதாயக் கிணறுகள் போடப்பட வேண்டும். ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட வேண்டும். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், ஆழ்குழாய்க் கிணறுகள் வைத்தார்கள். அநேக இடங்களில் நல்ல தண்ணீரும், நிறைய தண்ணீரும் கிடைக்கின்றது என்ற உண்மையை அறிந்திருந்த காரணத்தாலே அதைத் தைரியமாக, விரிவான அளவிலே பயன்படக்கூடிய அளவிலே மக்களுக்கு அந்த இரண்டு திட்டங்களையும் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலே குடி தண்ணீருக்காக, கிணறுகளை விட, ஊருணிகளைப் பயன்படுத்துவது அதிகம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, ஊருணிகளைச் சீர்படுத்தி, ஆழப்படுத்திட அரசாங்கம் விசேஷமான கவனம் செலுத்த வேண்டும். ஊருணியிலிருந்து நீர் கொடுக்கக் கூடாது. அது பாதுகாக்கப்பட்ட குடிநீரல்ல என்ற காரணத்தினால் ஒதுக்கி விடக் கூடாது என்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வள்ளுவர் காலத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது ஊர் உண் நீர் என்று ஊர் மக்கள் குடிக்கின்ற நீர் என்று அவரே குறிப்பிடுகிறார். ஆகவே, அந்த ஊருணி இருக்கிற காரணத்தினால் தான் குறைந்த மழையினால் கிடைக்கின்ற தண்ணீரைத் தேக்கி இப்படி வைக்க முடிகிறது.

இன்னும் சொல்லப் போனால், ஆடுமாடுகள் குடிப்பதற்கு எந்த பைப்போ, எந்த ஆழ்குழாய்க் கிணறோ உதவி செய்யப் போவதில்லை. ஆகவே, அதைக் கருத்தில் கொண்டாவது, ஆடுமாடுகள் கேரளாவிற்கு அடிமாடுகளாக விற்கப்படுவதைத் தடுக்கவும், எலும்புக் கூடுகளாக இருக்கிற ஆடுமாடுகள் சாவதைத் தடுக்கவும் ஊருணியை ஆழப்படுத்தி, அதன்மூலம் குடிதண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டம் எப்பொழுதும் ஏதாவது, இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டால்தான் அரசினுடைய கவனம்—மத்திய சர்க்காராக இருந்தாலும் சரி, மாநில சர்க்காராக இருந்தாலும் சரி, அப்பொழுதுதான் திரும்புகிறது. நாங்கள் உண்மையிலேயே விரும்பாவிட்டாலும், மழை, வெள்ளம், புயல் போன்றவைகளால் பாதிக்கப்பட்ட காலத்திலேதான் ஏதாவது வறட்சி நிதி, நிவாரண நிதி என்று அளிக்கப்படுகிறது. இப்பொழுது பரிபூரணமாக வறட்சியாக இருக்கிறது என்ற காரணத்தினால் இந்தத் தடவை எங்களுக்குக் கண்டிப்பாக அதிக அளவில் பணம் ஒதுக்க வேண்டும். வேறு மாவட்டங்களுக்கு நீங்கள் அதிகமாக





அளிப்பதிலே எங்களுக்குக் குறையில்லை. இருந்தாலும், மாமூலாக இராமநாதபுரமும், தர்மபுரியும் நீண்டகாலமாக வறட்சிப் பிரதேசம் என்று இரண்டு அரசுகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட காரணத்தால், அந்த மாவட்டங்களுக்கு அதிகமான அளவில் நிதி ஒதுக்கீடு அறிவித்து உடனடியாக நிவாரண வேலைகளைத் துவங்க வேண்டு மென்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நிரந்தரமாக, விசேஷமான பாசன வசதியைச் செய்து கொடுத்தால் தான் அந்தப் பஞ்சம்—ஆண்டுதோறும் இங்கே எழுப்பக்கூடிய கூக்குரல்—நிச்சயமாக நீங்கும். ஏனென்றால், மேற்கே பாயும் தண்ணீரை கேரள அரசாங்கத்திடம், அந்தக் கேரள முதலமைச்சருடன் பேசி ஒரு முடிவு கண்டு பல மலைகளைக் குடைந்தாவது கொண்டுவர வாய்ப்பிருக்கிறது. அப்படிக் கொண்டுவந்தால், நிச்சயமாக அதிகப்படியான அளவில் தண்ணீரைப் பாயச் செய்வதற்கான வாய்ப்பிருக்கிறது. அதில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்க் கிணறுகளெல்லாம் பல பஞ்சாயத்துக்களில் தோண்டப்பட்டிருக்கின்றன. ட்வாட் மூலம் போடப்பட்டிருக்கின்றன. ஆழ் குழாய்கள் இருக்கின்றனவே தவிர, அந்த நீரை எடுப்பதற்கு வசதியான பம்புகள் பொருத்தப்படவில்லை. இந்த அவல நிலையை மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே சொல்லியுங் கூட இன்னும் திருத்தப்படவில்லை. அதை அந்த ட்வாட் அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தவறான தகவலைக் கொடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே நான் லிஸ்டையே கொடுத்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் கொடுத்திருந்தும் கூட, அந்தப் பம்புகளைப் பொறுத்தி, தண்ணீர் இறைக்கக்கூடிய வசதி வாய்ப்புக்கள் கொடுக்கப்பட வில்லை என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குடிநீரைப் பொருத்தவரையில் சொல்லும்போது, சென்ற பொதுத் தேர்தலிலே ஒரு சின்ன ஊருக்கு நாங்கள் சென்றோம். அந்த ஊரில் ஒரு இளம் பெண் தண்ணீர்க் குடத்தை தலையில் தூக்கி வந்தார். நாங்கள் எல்லாம் அவரிடம் ஓட்டுக் கேட்டபோது அவர் தலையில் இருந்த அந்தக் குடத்தை 'டங்' என்று இறக்கி வைத்து, என் தலையைப் பாருங்கள், தண்ணீர் சுமந்து, சுமந்து என் தலையே பொட்டையாகப் போய்விட்டது. தொலைதூரத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வரும் நிலைமை இருக்கிறது என்று சொல்லி எல்லாக் கட்சிக் காரர்களையும் இதே போல் கேட்டதாக அந்தப் பெண்மணி சொன்னார். கொஞ்சம் நகரத்தில் இருந்து வந்த பெண்ணாகையால் அவ்வளவு அழகாகச் சொன்னார். இது வேடிக்கைக்காக நான் சொல்லவில்லை. இந்தப்

[திரு. உ. சுப்பிரமணியன்] [1981 மார்ச் 4

பிரச்சினையை மிகவும் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் நாம் வகிக்கின்ற பதவிக்கு அது பொருத்தமாக இருக்கும்.

அடுத்து வறட்சிப் பகுதியில் செய்வதற்காக நிவாரணங்கள் பல உண்டு. நில வரியை ரத்து செய்ய வேண்டும். கடன்களை தள்ளிவைக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆரம்பத்திலே கையிலே இருந்த பணத்தைக் கொண்டு, விவசாயிகள் வேலை ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் இப்போது அவர்களால் கடன்களைக் கட்டமுடியாது. எனவே இராமநாதபுரத்தின் விஷேசத்தன்மையைக் கருத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், போன்ற நகரங்களில் கேரளாவில் இருந்து பெய்கின்ற மழையினால் கொஞ்சம் தண்ணீர் வருகிறது. அதைக் கருத்தில் கொண்டு இராமநாதபுரத்தில் பஞ்சம் இல்லை என்று கருதக்கூடாது என்று சொல்லி, தக்க நிவாரணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் உணவுப் பண்டங்களை வினியோகிக்கும் கூட்டுறது சொசைட்டிகள் அந்த உணவுப் பண்டங்களை சரியாக வழங்குவதில்லை. ஆனால் அவர்களைக் கேட்டால் ஸ்டாக் இல்லை என்று சொல்லுகிறார்கள். கடையில் வாங்கலாமே என்று சொன்னால் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஏன் பணம் இல்லை என்று கேட்டால் வருகின்ற பணம் எங்கள் சம்பளத்திற்கே சரியாக இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். மத்திய வங்கியிடம் கடன் வாங்கலாமே என்று கேட்டால் அது ஓவர்டியூ சொசைட்டி எனவே அங்கே வாங்க முடியாது என்று சொல்லுகிறார்கள். இதுபற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே சொன்னார்கள் இந்த மாதிரி நிலையில் சட்டத்தையும், வேறு காரணங்களையும் சொல்லி தட்டிக் கழிக்கின்ற முறை இருக்கக்கூடாது.

கூட்டுறவுத் துறை அதிகாரிகள் பொறுப்போடு நடந்து கொள்வது இல்லை. இதில் அரசு தனிக் கவனம் செலுத்தி, மக்கள் அன்றாடம் சாப்பிடுவதற்கு உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மேலும் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் பாக்கிகளை வசூல் செய்வதைத் தள்ளி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உண்மையிலேயே மின்சாரத்தை உபயோகிக்காமல் இருக்கும் நிலைக்குப் போய்விட்டது. இந்த நிலையில் 1 பிளஸ் 1 பணம் கட்ட வேண்டும் என்று கேட்பார்களானால் அது அவர்களுக்குச் சாத்தியம் இல்லை என்பதை மனத்தில் கொண்டு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கவனிப்பார்கள் என்று முழு நம்பிக்கையோடு இருக்கிறேன்.



1981 மார்ச் 4] [திரு. உ. சுப்பிரமணியன்]

அடுத்து பஞ்ச நிவாரண வேலைக்கு திட்டம் கேட்டபோது பல இடங்களுக்கு சரியான நிலை கொடுக்கப்படவில்லை என்பது எனக்குத் தெரியும். கான்ட்ராக்டர்களும், அரசியல் செல்வாக்குப் படைத்தவர்களும் உள்ள இடங்களுக்கு அதிகமான வேலைகள் கொடுக்கப்பட்டதும், மற்றப் பகுதிகளுக்கு குறைவான வேலைகள் கொடுக்கப்பட்டதை நானும் புரிந்து கொண்டேன். எனவே தயவு செய்து இந்த நிவாரண வேலைகளை, பஞ்சத்தாலே பாதிக்கப்பட்டிருக்கின்ற பகுதியிலே உள்ளவர்களுக்கு கொடுக்க வேண்டும். அதன் மூலமாக அவர்கள் உணவு பெற்று சாப்பிட வேண்டும் என்று இருக்கிறவர்களுக்கு மனிதாபிமான உணர்வோடு ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ளவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) இங்கே நேரத்திற்கு வறட்சி வந்துவிட்ட காரணத்தினால், இந்த அளவுக்குப் பேச அனுமதித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

(முற்பகல் 11–50)

**திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டைமான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வறட்சிப் பிரச்சினைப் பற்றி இந்தச் சட்டசபையிலே பேசுவதற்கு ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தாங்கள் அனுமதி கொடுத்ததற்காக என்னுடைய நன்றியை முதலில் சொல்லிக் கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திலே கடும் வறட்சி இந்தக் காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும் அங்கே மழை பெய்தாலும் சரி, நல்ல விளைச்சல் இருந்தாலும் சரி, பஞ்சம் இருந்துகொண்டே இருக்கிறது. காரணம் தண்ணீர் வசதி அந்த மாவட்டத்தில் போதுமான அளவிற்கு இல்லாததுதான் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் இப்போது மழை இல்லாமல் தமிழ்நாட்டிலே வறட்சியாக இருக்கும் போது, புதுக்கோட்டையில் அதிக வறட்சியாக இன்று காணப்படுகிறது. இந்த நிலைமையில் மக்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரியும். இந்த நேரத்தில் அந்த மாவட்டத்தில் நிவாரணப் பணிக்காக ரூபாய் 60 லட்சம் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும், அதே நேரத்தில், அந்த 60 லட்ச ரூபாய் வறட்சிப் பணிகள் முழுமையாகச் செய்வதற்குப் போதுமா என்றால் போதாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்த வறட்சிப் பணி செய்யக்கூடிய நேரத்தில் பர்மனெட் மெஷராக பல காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் வறட்சி வந்தாலும், புயல் வந்தாலும், மற்ற நிலைமைகள் வந்தாலும் அதைத் தாங்கக் கூடிய அளவிற்கு நிலைமைகளை உருவாக்க முடியும் என்பது என்னுடைய கோரிக்கையாகும். ஆகவே இந்த 60 லட்ச ரூபாய் போதாது. என்னுடைய மாவட்டத்தில் 12 யூனியன்கள் இரு

[திரு. விஜயரெகுநாத தொண்டமான்] [1981 மார்ச் 4

கின்றன. 2 முனிசிபாலிட்டிகள் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் பணம் ஒதுக்கி, வறட்சிப் பணிகள் செய்ய வேண்டும் என்று சொன்னால் கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒதுக்கினால்தான் அந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வறட்சி நிலையைப் போக்க முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

காவேரி ஆற்றைக் கொண்டுவரவேண்டும் என்று சொன்னார்கள். காவேரி எப்போது வரப்போகிறது என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால் இந்த நேரத்திலே ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். இந்த வறட்சிப் பணிகளை மேற்கொள்ளுகிறபோது, புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கக்கூடிய சிறு சிறு ஆறுகளுக்கு அணைக்கட்டி, தண்ணீர்த் தேக்கம் உருவாக்கினால் அது பர்மனெட் ரிலீப்ஆக இருக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அதைப் போலவே அங்கேயுள்ள வெள்ளாறு, அக்கினியாறு ஆகிய இரண்டு ஆற்றிலும் அணைக்கட்டுகளைக் கட்டினால் 15 மைல் தூரத்திற்கு உள்ள கிணறுகளில் நீர் ஊறும் நிலை ஏற்படும். அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிறிய சிறிய ஆறுகளில் செக் டேம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படியெல்லாம் வறட்சிப் பணி வேலைகள் செய்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட பணிகளுக்கு கிட்டத்தட்ட 1 கோடி அல்லது 1½ கோடி செலவாகும். அப்படிச் செய்தால் அது பர்மனெட் ரிலீப்பாக இருக்கும். ஏற்கெனவே புதுக்கோட்டை மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஆகவே, அந்த மாவட்டத்தில் இப்படிப்பட்ட நிரந்தரமான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் மற்றொரு கருத்தையும் கூற விரும்புகிறேன். பஞ்சாப் மாநிலத்தில் 10—15 ஏக்கர் நிலங்களை ஒன்றாக இணைத்து, கிணறு வெட்டி, பம்ப் செட் போட்டு, மின்சாரக் கனெக்ஷன் கொடுக்கிறார்கள். அதைப்போன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் செய்யவேண்டியது முக்கியமான பணியாகும் என்று சொல்லிக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் ஆற்றுப் தண்ணீர் கிடையாது. அதனால் இப்படி 10—15 ஏக்கர் நிலங்களுக்கு ஒரு பம்ப்செட் கிணறு என்று வைத்தால் அது பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அது ஒரு பர்மனெட் ரிலீப்பாகவும் இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதைப்போலவே, 10—15 ஏக்கர் நிலத்தை ஒன்று சேர்த்து இப்படி செய்து விட்டோம் என்று இருந்து விடாமல், 3—4 ஏக்கர் வைத்து இருக்கக்கூடியவர்களுக்கும் சேர்த்து ஒரு 'கம்யூனிட்டி வெல்' ஏற்படுத்திக் கொடுத்தால் நல்லது. அதனை இந்த நிவாரணப் பணி வேலையில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் உங்கள் மூலமாக அரசிடம் கேட்டுக் கொள்கிறேன்.



1981 மார்ச் 4]

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

இன்றைக்கு குடிதண்ணீர் பிரச்சினை கிராமத்தில் மட்டுமல்ல, டவுன்களிலும் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆண்களும் பெண்களும் 3 மைல், 5 மைல் நடந்துபோய் தண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கிறது. ஆடுமாடுகளுக்கும் தண்ணீர் கிடைக்கக் கூடிய நிலைமை இன்றைக்கு இல்லை. இதைத் தீர்த்து வைக்கக் கூடிய ஒரே ஒரு வழியை இன்றைக்கு அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கட்டளைக்கால்வாய் புதுக்கோட்டை ஜில்லா, எல்லையோரம் ஓடுகிறது. அதிலிருந்து கிரவுண்ட் வாட்டரை எடுத்து புதுக்கோட்டை டவுனுக்கு கொண்டுவந்தால் அங்கே எந்தக் காலத்திலும் தண்ணீர் பஞ்சம் வராது. இன்னும் இரண்டு மாதத்திற்கு மழை இருக்காது. இப்போது புதுக்கோட்டையில் கடும் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தண்ணீர் பஞ்சத்தைத் தீர்க்க நீங்கள் கொடுத்திருப்பது 60 இலட்சம் ரூபாய். இது போதாது. 5 கோடி ரூபாய் கொடுத்தால்தான் இந்தத் திட்டங்களை நிறைவேற்றி, தண்ணீர் பஞ்சத்தை நிவர்த்தி செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 'டுவாடு' என்று ஒன்று இருக்கிறது. நான் எந்த டிபார்ட்மென்டையும் அதிகமாக கோளாறு சொல்லமாட்டேன். அவர்களுடைய வேலை எப்படி இருக்கிறது என்றால், not up to the expectation என்றுதான் சொல்ல வேண்டும் 3, 4 குழாய்களைப் போடுகிறார்கள் ; ஆனால் கனக்ஷன் கொடுப்பதில்லை. 20, 30 குழாய்கள் போட்ட பிறகுதான் கனக்ஷன் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அவர்கள் எப்போது 20, 30 போடுவது, எப்போது கனக்ஷன் கொடுப்பது என்று பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான் ; வேலை நடக்காது. பல் வேறு இடங்களில் 'ஹாண்ட் பம்பு' போடுகிறார்கள். ஆனால் கனக்ஷன் கொடுப்பதில்லை. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து, உடனுக்குடன் கனக்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நிவாரணப் பணிகளை நாம் செய்துகொண்டிருக்கிறோம். இது 'லாங் பிராசசாக' இருக்கக்கூடாது. It must be effective and immediate ரெட் டேப்பிசம் இருக்கக்கூடாது. எவ்வளவு சீக்கிரமாக நிவாரணப் பணிகளைச் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு நன்மை கிடைக்கும். இல்லாவிட்டால் இன்னும் மூன்று மாதத்தில் மழை வந்துவிடும்; அதற்குப் பின்னால், பிரயோஜனம் இல்லை. இதை அரசாங்கம் மனதிலே கொண்டு, இந்த ரெட் டேப்பிசத்தை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1981 மார்ச் 4

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

அடுத்தபடியாக, இங்கே, லோன், வரிகளைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய எங்கள் கட்சிக்காரர்கள் சொன்னார்கள். அதை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். தள்ளுபடி செய்ய வேண்டியதுதான். கூட்டுறவு லோனை அரசாங்கம் தள்ளுபடி செய்ய முடிந்தால் தள்ளுபடி செய்ய வேண்டும் ; இல்லாவிட்டால் 10 வருஷத்திற்கு தள்ளி வைத்து, லாங் டேர்ம் லோனாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வேலையில்லாமல் விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதேநேரத்தில், புதுக்கோட்டையில் 3 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்த தொழிற்சாலைகளுக்கும் மின்சார வெட்டு இருக்கிறது. ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் தான் மின்சாரம் கொடுக்கிறார்கள். அதனால் வாரத்தில் இரண்டு நாள்தான் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது. ஆகவே, ஆலைத் தொழிலாளர்களும் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த கஷ்டத்தில் அவர்களுக்கு முழு நேரமும் வேலை கிடைக்காமல், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வேலை இல்லாமல் எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள். இதை எல்லாம் கருத்தில் கொண்டு, பின்தங்கிய மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கிற இந்த மூன்று தொழிற்சாலைகளுக்கும் மின்சார வெட்டிலிருந்து விதிவிலக்கு அளித்து, முழு நேர வேலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

*திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்வர்களே, வறட்சி நிலை குறித்த இந்த விவாதத்திலே அரசு கொடுத்திருக்கிற குறிப்பிலே சில பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. குறிப்பாக கோவை மாவட்டத்தில் தாராபுரம், ஊத்துக்குழி பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. அதைப்போல தஞ்சை மாவட்டத்தில் தஞ்சையைச் சுற்றியிருக்கிற செங்கிபட்டி, புதுப்பட்டி, ஒரத்தநாடு போன்ற பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. அதைப்போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்கள் மற்றும் பல்வேறு பகுதிகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அந்தப் பகுதிகளையும் இந்த வறட்சி நிவாரணப் பணியின்கீழ் எடுத்துக்கொண்டு, வறட்சியைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12—00]

வடஆற்காடு மாவட்டத்தைப் பற்றி ஏற்கனவே பல உறுப்பினர்கள் சொல்லி இருக்கிறார்கள். இந்த வறட்சி நிலையினால் பாதிக்கப்பட்டிருப்பதைப் பொறுத்தவரையில் வட ஆற்காடு



1981 மார்ச் 4] [திரு. கே. ஆர். சுந்தரம்]

என்றால் அது மிகையாகாது.
மாவட்டம் முதன்மையானது
கடந்த இரண்டு ஆண்டுகளாகவே பருவமழை இல்லாத காரணத்
தால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
அரசு கொடுத்திருக்கின்ற குறிப்பிலே கூட 2,700-க்கு மேற்
பட்ட நீர் நிலைகள் வறண்டு விட்டிருக்கின்றன என்று குறிப்
பிட்டிருக்கிறார்கள். நீர் நிலைகள் மட்டுமல்ல குடிநீர் கிணறுகள்
கூட இன்றைக்கு மாவட்டம் முழுவதும் வறண்டு இருக்கின்றன.
ஏப்ரல், மே மாதம் கடந்துவிட்டால் அந்த மக்கள் என்ன செய்
யப் போகிறார்களோ என்ற அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கின்
றது. ஜூன் மாதத்திலே வேண்டுமானால் ஒரு வேளை மழை பெய்
யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் அதற்கு
முன்பு இந்த மூன்று மாதமும் மிகக் கடுமையான நிலைமை
இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வரு
கிறேன். குறிப்பாக மார்ச் 1 ஆம் தேதி தினமணிப் பத்திரிகை
யில் குறிப்பிட்டிருப்பதைச் சொல்கிறேன். இந்திய அரசின்
உணவுத் துறை செயலாளர் திரு. ராகவன் அவர்களும், தமி
ழகத்தின் உணவுத் துறைச் செயலாளர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி
அவர்களும் அங்கு சென்று பார்த்திருக்கிறார்கள். பல்வேறு
விஷயங்களைப் பார்வையிட்டுவிட்ட பின் கடைசியிலே கீழ்க்
கண்டவாறு சொல்கிறார்கள். "இதுபோன்ற நிலைமைகளை
இந்த மக்கள் எவ்வாறு தாக்குப் பிடிக்கிறார்கள் என்பது வியப்
புக்குரியதாகவும், இரக்கத்திற்குரியதாகவும் இருக்கின்றது.
சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் தண்ணீர் கேட்கின்ற
ஒருபரிதாபமான நிலைமை இருக்கின்றது" என்று குறிப்பிட்டிருக்
கிறார்கள். உணவுப் பொருட்களின் விலை உயர்ந்து இருக்
கின்ற நிலைமையிலே மக்கள் எப்படி வாழ்வார்கள் என்பதை
எடுத்துக் காட்டுவதற்காகத்தான் தினமணிப் பத்திரிகைச் செய்தி
யை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். காவேரிப் பாக்கத்
திலே மட்டும் இந்த நிலைமை என்பதல்ல. வட ஆற்காடு
மாவட்டம் முழுவதுமே உள்ள நிலைமை இப்படித்தான் இருக்
கின்றது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த நிலைமை
தீர்க்கப்பட வேண்டும். குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே
குடியாத்தம் தாலுக்கா, அரக்கோணம் தாலுக்கா, செய்யாறு
தாலுக்கா, திருவண்ணாமலை தாலுக்கா போன்ற பகுதிகளில்
மக்கள் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.
ஆகவே உடனடியாக இந்தப் பகுதிமக்களுக்கு வறட்சியைப்போக்கு
கின்ற வகையில் ஆவன செய்தாகவேண்டும். குறிப்பாக குடி
யாத்தம் நகரத்திலே இன்றைக்கு குடிநீர் பிரச்சினை அதிகமாக
இருக்கின்றது. அங்கே ஓரளவுக்கு தண்ணீர் இருந்தாலும் கூட
மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால் குடிநீர்
கிடைப்பது கடினமாக இருக்கின்றது. அதன் காரணமாக குடி
நீர் வடிகால் வாரியத் தலைவரையும், அங்குள்ள அதிகாரிகளை
யும் பார்த்துப் பேசி அந்தப் பகுதிக்கு ஜெனரேட்டர் வாங்கிக்
கொடுக்கவேண்டும் என்று கூறினேன். அவர்களும் ஜெனரேட்
டர் வாங்கிக் கொடுப்பதாக ஒப்புதல் அளித்து அரசின் உத்தர

வுக்காக அனுப்பி இருக்கிறார்கள். அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள். உடனடியாக ஜெனரேட்டரை வாங்குவதற்கு அரசு உத்தரவிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கின்ற அத்தனை கிணறுகளும் இன்றைக்கு வறண்டு போய் இருக்கின்றன. வட ஆற்காடு மாவட்டம் எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லாத ஒரு மாவட்டமாகும். குறிப்பாக குடியாத்தம் தாலுக்காவிலே மோர்தணா அணையைக் கட்டவேண்டும் என்று நீண்ட நாட்களாக கேட்டிருக்கிறோம். அந்த அணை கட்டுவதன் மூலமாக வேலூர், குடியாத்தம். திருப்பத்தூர் போன்ற தாலுக்காக்களிலே நிலத்தடி நீர் கிடைக்க வசதி ஏற்படும். ஆகவே உடனடியாக அதைச் செய்வதற்கு அரசு ஆவன செய்யவேண்டும்.

அடுத்து குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல்வேறு கிராமங்களில் கை பம்பை பொருத்தியிருக்கிறார்கள். குடியாத்தம் தொகுதியில் 20 கைப் பம்புகளை பொருத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே 45 ஊராட்சிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஊராட்சிக்கும் நான்கைந்து உட்கிராமங்கள் என்று வைத்துக்கொண்டால் 200 கிராமங்களுக்கு 20 கைப் பம்புகள் எந்த அளவுக்கு போதும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். மேலும் அவ்வாறு பொருத்தப்படுகின்ற கைப் பம்புகள் கிராமங்களின் மத்தியிலே பொருத்தப்படுகின்ற காரணத்தால் பல்வேறு விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆதி திராவிட மக்களும், மற்ற மக்களும் தண்ணீர் எடுப்பதற்காகச் செல்லுகின்ற நேரத்திலே பல விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆகவே வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு போலீஸ் நிலையத்திற்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே ஆதி திராவிடர் வாழுகின்ற பகுதிகளுக்கு விசேஷமாக கைப் பம்புகள் அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே வறட்சி குறித்து குறிப்பிட்டு 50 கைப் பம்புகளை பொருத்தவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். இது குறித்து எங்களது மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரவர்களையும் ஒரு முறை அழைத்துச் சென்று எல்லா கிராமங்களையும் சுற்றிக் காட்டி புதிதாக ஏற்பட்டிருக்கின்ற அரிசனப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி இல்லை, அதையும் செய்து கொடுக்க வேண்டும் என்றெல்லாம் கூறி இருக்கிறேன். அதன்படி காரியங்கள் ஆற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடையாது. விவசாயிகள் வேலைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக அரசின் குறிப்பிலே கூட சொல்லப்பட்டிருக்கின்றது. எங்களது மாவட்டத்திற்காக இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை 1 கோடி ரூபாய் போதுமானதல்ல. 20 கோடி ரூபாய் ஒதுக்க





னால் தான் அணைகள் கட்டுவது போன்ற பல காரியங்களைச் செய்ய முடியும். இது பஞ்சத்தைப் போக்குவதற்காக மட்டு மல்லாமல் அந்த மக்களுக்கு நிரந்தரமான வகையிலேயும் ஏற் பாடு செய்ய இயலும். அப்போதுதான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். 2,700-க்கு மேற்பட்ட நீர் நிலைகள் வற்றி இருக்கின்றன என்ற நிலையில் மழைக் காலங்களிலே நீரை நிரப்புவதற்கும் வழியில்லாமல் நீர் நிலைகள் தூர்ந்து போய் இருக்கின்றன. கிணறுகளும் தூர்ந்துவிட்டிருக்கின்றன. இதற் குரிய வேலைகளை எல்லாம் போர்க்கால அடிப்படையிலே செய்ய வேண்டும்.

இன்றைக்கு கிராமப் புறங்களிலே இருக்கிற விவசாய வேலைகள் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதனை பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு எந்த தொகையும் ஒதுக்கப்பெற்றிருப்பதாக அரசினுடைய குறிப்பிலே இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் தாழ்த்தப் பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் விவசாய வேலை இல்லாத காரணத்தால், மோர்தணா பகுதியிலிருந்து சேம்பள்ளியிலே இருந்து, பரதராமியிலேயிருந்து 10 கிலோ மீட்டர், 15 கிலோமீட்டர் தூரம் சென்று காடுகளிலிருந்து மரங்களை வெட்டிக் கொண்டு வந்து, அதை சுமையாக தூக்கிக் கொண்டு வந்து 2 ரூபாய் ஒரு ரூபாய்க்கு விற்கிற அவல நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய சுமைகளை குறைக்க, பல்வேறு வேலை வாய்ப் புகள் அளிக்கின்ற வகையிலே, கிணறுகளை ஆழப்படுத்த, பாதை களை செப்பனிட குழாய்களை போட, குளங்களை தூர் எடுக்க போன்ற வேலைகளை செய்வதற்கும் அதன்மூலம் வறட்சி நிவா ரணம் ஏற்படுத்துவதற்கும் அரசு புதிய மானியத்தை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லூர் பேட்டை, காமாட்சி அம்மன் பேட்டை, கஸ்பா செதுக்கரை போன்ற பல்வேறு பகுதிகளில் குடி தண்ணீர் வசதியே இல்லை. அந்தப் பகுதி மக்கள் குடிக்க நீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். இன்றைக்கு குடிநீர் வாய்க்கால் வாரியம் கூட வேலை களைச் சரிவர செய்வதில்லை—அங்கே வேலைகள் நடைபெற வில்லை என்பதை எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள்.

என்னுடைய தொகுதியிலே 1973-ஆம் ஆண்டிலே போஜனா புரம் ஊராட்சி ஒன்றியத்திலே சரகுப்பம் என்ற கிராமத்தி லே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, குடி நீர் வசதிக் கென்று ஒரு திட்டம் இடப்பட்டு, வேலைகள் முதலில் ஆரம்

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1981 மார்ச் 4

பிக்கப்பட்டு, தற்போது அப்படியே அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சிமெண்ட் மூட்டைகள் வந்ததாக கணக்கு இருக்கிறது. இரும்புகள் தந்ததாக கணக்கு இருக்கிறது. மணல் மூட்டைகள் வந்ததாக கணக்கிருக்கிறது. ஆனால் இப்போது அங்கே எதுவுமே இல்லை. 4 தூண்கள் தான் இருக்கின்றன.

போஜதினாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலே கரககும்பம் என்ற இடத்திலே உள்ள இந்த அரைகுறை திட்டத்தைப் பற்றி, எடுத்துச் சொல்லி, குடிநீர் வடிகால் வாரிய ஏ.யி. அவர்களை 3 மாதங்களுக்கு முன்பாக கூட்டிக் கொண்டு போய் காண்பித்தேன். அந்த வேலைகள் நடைபெறவில்லை என்பதையும் சொன்னேன். சரியான பராமரிப்பு இல்லை................ (மணியடிக்கப் பெற்றது) ஏன் என்று கேட்டால், போதிய ஆட்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அடுத்து, ஒவ்வொரு ஊராட்சிக்கும் தனியாக, 2, 3 அல்லது 4 பிட்டர்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். பிட்டர்கள் இல்லாததால், அந்த ஊராட்சியில் ஏற்படும் குழாய் ரிப்பேர் பழுதுகளை பழுது பார்க்க ஆளில்லாமல் அப்படியே இருக்கிறது. அதோடு இந்தப் பிட்டர்களுக்கு உதவியாக ஹெல்பர்களையும் போடவேண்டும். அப்படியே போட்டாலும், அந்த ஹெல்பர்கள் ஊருக்குள் வந்துபோக வாகன வசதி கிடையாது. போக்குவரத்து வசதி கிடையாது. இவைகளையெல்லாம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிவாரண நிதி போதுமானதாக இல்லை. இன்னும் அதிகமாக கொடுக்கவேண்டும். குடிநீர் வழங்க ஒரே வட்டமாகத்தான் போட்டிருக்கிறார்கள். இதை 4 வட்டங்களாக பிரித்து, திருவண்ணாமலையில் 2 வட்டங்களையும் வேலூரில் இரண்டு வட்டங்களையும் ஏற்படுத்தி அந்தப் பணிகளைச் செய்ய தேவையான அதிகாரிகளையும் போட்டால், இந்த பிரச்சினைகளை ஓரளவிற்கு தீர்க்க முடியும் என்று கூறிக் கொள்கிறேன்.

கடைசியாக அரசின் விவசாய கடன்களையும், கோவாபிரேடிவ் கடன்களையும் விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்ய வேண்டும். வறட்சி பகுதியிலிருக்கும் விவசாயிகளுக்காவது இதனை செய்ய வேண்டும். அதேபோல ஆழ்கிணறுகளை குடி தண்ணீர் வசதிக்காக ஏற்படுத்திக் கொடுக்கும்போது, அவைகளை சமுதாயக் கிணறுகளாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தவிரவும் இது போன்ற பிரச்சினைகளுக்கு போர்கால நடவடிக்கையைப் போன்ற துரித நடவடிக்கைகளை எடுத்து மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்று கேட்டு அமைகிறேன். நன்றி.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வானம் பொய்த்த காரணத்தால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளும் வரண்டு போய் விட்ட ஒரு அவல



1981 மார்ச் 4] [திரு. இரா. முத்தையா]

நிலையினைப் பற்றி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் உணவு
அவர்கள் இங்கே வைத்திருக்கிற அறிக்கையிலிருந்து பாதிக்
முடிகிறது. இந்த அளவுக்கு வறட்சி ஏற்பட்டு அதனால் போர்
கப்பட்டிருக்கிற அந்த மக்களுடைய வாழ்க்கைக்கென்று நடவடிக்கைகளை
கால நடவடிக்கைகளைப் போல பல்வேறு தொடங்க
நிவாரணப் பணிகளை, இந்த அரசாங்கத்தின் சார்பில் நம்முடைய
இருக்கிற சூழ்நிலையை அறிந்து, உண்மையிலேயே தமிழ
மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவர்களுக்
கத்தின் ஒப்புயர்வற்ற தலைவர், புரட்சித் தலைவர் என்
கும் அவ்வறட்சி மாவட்ட மக்கள் நன்றி செலுத்துவார்கள்
பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12–10].

காலமெல்லாம் மழை இல்லை, காலம் முழுவதும் வறட்சி
தான் என்றளவில் இருக்கிற திருமங்கலம், சேடப்பட்டி, உசிலம்
பட்டி, பகுதிகள் சார்பில் சில பல நடவடிக்கைகள் எடுக்கவேண்
டும் என்ற என் வேண்டுகோளை இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி
அரசினிடம் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இன்று வறட்சி நிலைக்கு அளவுகோலாக எடுத்துக்காட்டுவது,
இந்த இந்தப் பகுதிகளில் குடிநீர்த்தட்டுப்பாடு இருக்கிறது, இந்த
இந்தப் பகுதிகளில் குடிநீர் கிணறுகள் வறண்டு இருக்கின்றன,
வற்றியிருக்கின்றன என்பதை மட்டும் எடுத்துக்காட்டி இந்த இந்
தப் பகுதிகள் வறட்சிப் பகுதிகள் என்றளவிற்கு ஒரு அளவுகோல்
வைத்திருப்பதுபோல் வைக்கப்பட்டிருக்கிறது இந்த அறிக்கையில்
இருந்து காணப்படுகிறது. ஆனால் உண்மையில் எங்கள் திரு
மங்கலம், உசிலம்பட்டி தாலுகாக்கள் இவற்றில் குறிப்பிட்ட ஒரு
ஆண்டில் பலமாக மழை பெய்திருக்கிறது என்று சொன்னால்கூட
அந்த ஆண்டில் கூட அந்தத் தாலுகாக்களில் உள்ள பல்வேறு
கண்மாய்கள் பெருகாது பயிர்கள் சாவியாகப் போகக்கூடிய அள
விற்கு வறண்டு கிடக்கிற அந்தப் பகுதிகளில் இந்த ஆண்டு புன்
செய் தானியங்களும் பாதிக்கப்பட்டு நன்செய் முழுமையும்
பாதிக்கப்பட்டு இன்று பல்வேறு கிராமங்களிலிருந்து, 50, 60
கிராமங்களிலிருந்து மக்கள் வேலை தேடி வேறு மாவட்டங்
களுக்கு செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. எங்கள் பகுதி
மக்கள் வேறு மாவட்டங்களுக்குச் சென்று ஆக்கிரமித்துக்கொண்
டிருக்கக்கூடிய ஒரு அவலநிலை இன்றைய தினம் ஏற்பட்டிருக்
கிறது.

பொதுவாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். புதுக்
கோட்டை மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் மிகுந்த
அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள்.
இந்த இரண்டு மாவட்டங்களையும் ஒட்டுமொத்தமாக எடுத்துப்
பார்த்து திருமங்கலம், உசிலம்பட்டி இந்த இரண்டு தாலுக்காக்
களையும் எடுத்துப்பார்த்தால் அங்கிருக்கிற மக்கள் வாழ்வு

[திரு. இரா. முத்தையா]  [1981 மார்ச் 4

யில்லாத நிலையில் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில் வைகை பாய்கிறது அதனால் அந்தளவிற்கு வறட்சி இல்லை என்று சொல்லி ஒதுக்கித் தள்ளிவிடாமல் இந்த இரண்டு தாலுகாக்களுக்கும், திருமங்கலம், உசிலம்பட்டி தாலுகாக்களுக்கு, முழுமையான நிவாரண வேலைகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு ஆங்காங்கு குழாய்கிணறுகள் தோண்டப்படுகின்றன, கைப்பம்புகள் போடப்படுகின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இன்று பல்வேறு கிராமங்களில் போடப்பட்டிருக்கிற கைபம்புகள் வேலை செய்யாமல் இருக்கின்றன. பல்வேறு இடங்களில் இரண்டு மூன்று மாதங்கள் கைப்பம்புகள் வேலை செய்யவில்லை. பல்வேறுயிடங்களில் போடப்பட்டிருக்கிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் தண்ணீர் இறைக்கக்கூடிய இயந்திரங்கள் செப்பனிடப்படாமல் அவையெல்லாம் இன்று பயனற்றுக் கிடக்கின்றன. அவைகள் உடனடியாக செப்பனிடப்பட வேண்டும். பல்வேறு கிராமங்களில் கைப்பம்புகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தக் கைப்பம்புகள் வழி வெளியே வருகிற தண்ணீர் காரணமாக தெரு சேரும் சகதியுமாக ஆகிறது என்று அந்தப் பம்புகளைச் சுற்றியிருக்கிற வீட்டுக்காரர்கள் அந்தப் பம்புகளை எடுத்துவிடுவது அல்லது அவற்றை செயலற்றதாக ஆக்கிவிடுவது என்றளவில் பல்வேறு பம்புகள் வேலை செய்யாமலிருக்கின்றன. ஆகவே அது போன்ற நிலைகள் இருக்கக்கூடிய ஊர்களில் வடிகால்வசதி ஏற்படுத்தி அந்தத் தண்ணீரை வெளியேற்றிவிட இந்தத் துறை வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்ட பல்வேறுயிடங்களில் இன்னும் மின் இணைப்புகள் பெறாமல் அவை பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன.

அவையெல்லாம் உடனடியாக பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துயர் துடைப்புப் பணி என்ற வகையில் இன்றைக்கு அரசாங்கத்தின் சார்பில் குடிதண்ணீருக்காக மட்டும் இந்த அளவுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லியிருப்பதற்கு உண்மையிலேயே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற வறட்சி நிலைமையால் விவசாயிகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், விவசாயிகளுக்கு எந்தெந்த வகைகளில் எல்லாம் அரசாங்கத்தின் உதவி சென்று சேரவேண்டுமோ, அந்தவகையில் உதவிகள் சென்று சேருகின்ற வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 மார்ச் 4] [திரு. இரா. முத்தைய ]

பொதுவாக, விவசாயக் கிணறுகளில் இன்றைக்கு தண்ணீர் வற்றி பெரிய பெரிய கிணறுகளிலே எல்லாம் 3, 4 அடி தண்ணீர் தான் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆங்கேயெல்லாம் ஆழ் குழாய் போடுகின்ற, துளை போடுகின்ற கருவிகள் மூலம் ஏழை விவசாயிகளுக்கு இனாமாக உதவியளிக்கலாம்; ஓரளவு பெரும் விவசாயிகளுக்கு பாதி மானியத்திலேயும், பாதி கட னாகவும் அளித்து அந்தக் கிணறுகள் எல்லாம் பயன்படத்தக்க வகையில் உதவ முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைப் போல் இன்றைக்கு விவசாயிகளுக்கு புதிய கிணறுகள் அல்லது பழைய கிணறுகளை ஆழப்படுத்த நிதி உதவி செய்ய வேண்டும். பல்வேறு நிலவள வங்கிகள் இன்றைக்கு செயல் இழந்த நிலைமையில் இருந்தாலும்கூட, அவற்றை யெல்லாம் பரிசீலித்து — எந்த விவசாய சங்கம் கடனைக் கொடுக்க மாட் டோம், என்று சொல்லாமல் வம்பு தும்புக்கு போகாத விவசாயி களைப் பொறுத்த வரையில், கூட்டுறவு சங்கங்களிலே வாங்கிய கடன்களை ஒழுங்காகத் திருப்பி கொடுத்த விவசாயிகளுக்கு, அவர் களுடைய கணக்குகளைப் பார்த்து, மீண்டும் அவர்களுக்கு நில வள வங்கிகள் மூலம் கடன் வழங்க அரசாங்கம் முன்வர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல, பெரிய ஏரிகள் எல்லாம் இன்றைக்கு தூர்ந்து போயிருக்கின்றன. பல்வேறு ஏரிகளுடைய நீர்ப்பிடிப்பு பகுதிகள் ஆழமாக இல்லாமல் தூர்ந்திருக்கின்றன. இந்த வறட்சி நிவாரண பணி வேலைகளைத் தொடங்குகின்றபோது, அவற்றை யெல்லாம் கவனித்து, இந்தவகைய பெரிய ஏரிகளில் தூர் எடுக் கும் பணியை அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வறட்சி நிவாரண வேலை என்று வருகின்றபோது நான் திரும்பவும் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்திலே இருக்கின்ற நிலக் கோட்டை, உசிலம்பட்டி, வேடசந்தூர், பழனி ஆகிய வட்டங்கள் உண்மையாக இன்றைக்கு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின் றன. அதைப்போல, பெரியாறு பாய்கின்ற பகுதிகளிலே உள் ளத்தாக்குப் பகுதிகள் தவிர, மேற்கிலே இருக்கின்ற பகுதிகள் மிகவும் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் மலைப் பகுதிகளில், வருஷநாடு, வடமலைக்குன்று போன்ற பகுதி களில் இன்றைக்கு மக்கள் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு பல் வேறு இந்த குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் எந்தவித மான வசதியும், வாய்ப்பும் இதுவரை கிடைக்கவில்லை. அதேபோன்று மலைப்பாங்கான பகுதிகளிலே வாழக்கூடிய மக்களுக்கு குடிநீர் கிடைக்கின்ற ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

துயர் துடைப்பு பணிகளைச் செய்கிறபோது, வேலை இல்லா மல் இருக்கக்கூடிய விவசாயக் கூலிகளுக்கு, உடனடியாக வேலை தரத்தக்க வகையில் அரசாங்கத்தின் சார்பில் [illegible] டத்தை செய்கிறோம், உழைப்புக்கு உணவு திட்டத்தை [illegible]

[illegible]றோம் என்று அந்த அளவிலே மட்டுமில்லாமல், வறட்சி நிவாரணம் என்ற வகையிலும் அறிவித்து பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றை மேற்கொள்கிறபோது, அரசாங்கம் ஏற்கனவே 1974—75 ஆம் ஆண்டில் செய்தது போலல்லாமல், [illegible] போடுகிறோம் என்று சொல்லி, மேடிட்டுப் போனார்கள். அதைப்போல அல்லாமல், அரசாங்கம் மக்களுக்கு துயர் துடைப்பு வேலைகளை துரிதமாகச் செய்யவேண்டுமென்று வேண்டி விரும்பு கேட்டுக் கொள்வதுடன், என்னுடைய இந்த வேண்டுகோள்களை மறக்காமல் பெருமளவில் உதவ செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

[பிற்பகல் 12—20.]

திரு. கு. ப. பழனியப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வறட்சி நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தென்னாற்காடு மாவட்டத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், உளுந்தூர் பேட்டை, விழுப்புர வட்டங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இன்னும் திண்டிவனம், செஞ்சி ஆகிய பகுதிகள் இதிலே சேர்க்கப்படவில்லை. அவைகளையும் இதன் கீழ் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வறட்சி என்று சொல்வதற்கு அரசு வெட்கப்படவேண்டியதில்லை. ஏனென்றால் இருக்கக்கூடிய நிலைமைகளை அதற்கேற்றாற்போல் பரிகாரம் காணும் வகையிலே, துயர் துடைப்பு பணிகளை மேற்கொள்ளவேண்டுமென்று அரசு அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். தவிர வறட்சி இல்லையென்றும், போதுமான அளவு மழை இருந்ததென்றும் ஆளுநர் உரையில் குறிப்பிட்டதைப் போல கூறுகிற நிலை இருக்கவேண்டியதில்லை.

அறிக்கையில் தென்னாற்காடு மாவட்டத்திற்கு முப்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அது ஒருகாலும் போதாத தொகை. இங்கே உறுப்பினர்கள் இது வரையில் ஒரே குரலாக ஒரு கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த துயர் துடைப்பு பணிகளை எல்லாம் போர் கால நடவடிக்கைகளை போல, ஒரு அவசர கால நடவடிக்கைகளைப் போல உடனடியாக செய்யப்படவேண்டுமென்ற நிலை இருக்க வேண்டுமே தவிர, அரசு ஆற, அமர செய்யலாம் என்ற ஒரு எண்ணம் இருக்கக் கூடாது, என்பதைத் தெளிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே விழுப்புரம் வட்டத்தைப் பொறுத்த வரையில் [illegible] ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் மிக மோசமாக வறட்சி [illegible] கொண்டிருக்கிறது. குடிநீர் இல்லாமல் பயிர் செய்வதற்கு தண்ணீர் இல்லாமலும் விவசாயிகள்



பயிர் செய்ய முடியாமல் கால்நடைகளை காப்பாற்ற முடியாமல் குடும்பம் குடும்பமாக விவசாயிகள் வேறு இடங்களுக்கு குடி பெயர்ந்து செல்கின்ற நிலை இருக்கிறது. கல்பட்டு என்ற கிராமத்தில் குடிநீர் இருக்கிற ஒரே குளமும் தூர்ந்து போய்விட்ட காரணத்தால் குடிநீர் இல்லாத காரணத்தால், எப்படியோ கஷ்டப்பட்டு அங்கே இருக்கிற அழுக்குத் தண்ணீரை குடித்ததால் ஆறு பேர் காலரா வந்து இறந்து போய்விட்டதை மாவட்ட குடிநீர் வடிகால் கருத்தரங்கில் கூட சொல்லியிருக்கிறேன். இன்றைய தினம் வரையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் திரு இராகவானந்தம் அவர்களிடம் கூட நேரிலே ஒரு மனுவை 22—7—80 அன்று கொடுத்து, அவர்கள் விழுப்புரம் பக்கத்திலே இருந்து பழக்கப்பட்டவர்கள் என்ற காரணத்தலே அவரிடத்திலே நேரிடையாக சொன்னேன். இதை அவருக்கு நினைவூட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அந்த பகுதியிலே கால்நடைகளுக்கு தண்ணீர் இல்லை, நாற்று மட்டும் நட்டு, ஒரு முறையல்ல, கையிலிருக்கிற விதை நெல்லை ஒரு முறைக்கு இரு முறையாக போட்டு, நாற்றங்கால் கூட திருப்பி ஒட்ட முடியாத காரணத்தால் அவைகளை கால்நடைகளை விட்டு மேய்த்து விட்ட நிலைமைகள் இன்றைக்கு விழுப்புரம் வட்டத்திலே பருமளவிற்கு இருக்கிறது. இதனை நான் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். ஆடுகளையும் மாடுகளையும் தீவனம் இல்லாத காரணத்தாலே வந்த விலைக்கு கேரளா வியாபாரிகளுக்கு விற்று கொண்டிருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்திலேயிருந்து கால்நடைகள் கேரளாவிற்கு விற்கப்பட்டு விட்டன. இன்னும் விற்கப்பட்டு வருகின்றன. மாடுகள் மாத்திரமல்ல; மனிதர்களும் குடி தண்ணீர் இல்லாத காரணத்தால் பல பேர் இடம் பெயர்ந்துவிட்டனர். வேலையில்லாத காரணத்தால் அதற்காக பெங்களூர் நோக்கி, கர்நாடக மாநிலம் ஏதாவது வேலை கொடுத்து, வாழவைக்காதா என்ற நம்பிக்கையில் மக்கள் சென்று கொண்டிருக்கிற சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது.

இதிலே இருக்கிற அறிக்கையிலே திட்டங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். தன்னிறைவு திட்டத்தின் கீழே திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். வரவேற்கப்பட வேண்டிய ஒன்று தான். இதிலே வேடிக்கை என்னவென்றுச் சொன்னால், கிராமங்களிலே சொல்கிற பழமொழி "பிச்சை எடுத்தான் பெருமாள், அதைப் தட்டிப் பறித்தவன் அனுமான்" என்பதைப் போல தன்னிறைவுத் திட்டம் என்று ஒன்று இங்கு வகுக்கப்பட்டு, அதற்காக பணம் ஒதுக்கப்படுவது உண்மை. செலவழிக்கும் இந்த முறைதான் வேடிக்கை.

தன்னிறைவு திட்டத்திலே எப்படியெல்லாம் திட்டங்கள் சேர்க்கப்படவேண்டும் என்பதை நேற்றைய தினம் கூட அமைச்சர் அவர்களை கேள்வியாக கேட்ட நேரத்தில் ஒன்றை குறிப்பிட்டார்கள். எந்தெந்த பகுதிகளிலே குடிநீர் தட்டுப்பாடு என்பது இருக்கிறதோ அவைகளுக்கு எல்லாம்

முன்னுரிமை கொடுத்து வேலைகள் செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட திட்டங்கள் தன்னிறைவு திட்டத்திலே சேர்க்கப்படுகின்றன என்பது அருமையான விளக்கம்.

ஆனால் கடந்த பத்தாண்டு காலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதி மாத்திரம் வளம் மிகுந்த பகுதியாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏறக்குறைய அறுபது இலட்ச ரூபாய்கள், ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் கூட குடிநீர் பிரச்சினைக்காக குடிநீர் மேல்நிலைத் தொட்டி இல்லாத கிராமமே கிடையாது என்கிற வகையிலே ஒரு பகுதி இருக்கிறது. இன்றைக்கு சமீபத்தில் வெள்ளம் ஏற்பட்ட போது, அங்கே வெள்ளமே வராத பகுதியாக இருந்தாலும் கூட விழுப்புரம் பகுதியிலே பெண்ணாற்றங்கரை ஓரத்திலே வெள்ளம் வந்து பாதிக்கப்பட்ட போதிலும், அந்த பண்ருட்டி பகுதியிலே மாத்திரம் இங்கே கரை புரண்டு ஓடிய வெள்ளம் இருக்க—அங்கே நிவாரணப் பணிகளுக்காக பணம் வெள்ளமாக ஓடியது. இதனை சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த தன்னிறைவு திட்டத்தில் எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு திட்டவட்டமான முறை இல்லை. வேடிக்கை என்னவென்று சொன்னால் சில ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு அரசு ஆணை மூலம் சேர்க்கப்பட்டு, பிறகு என்ன காரணத்தினாலோ அவைகள் தவிர்க்கப்பட்டு, மீண்டும் வேறு சில ஊராட்சிகளை சேர்த்து இருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். இந்த அளவிற்கு நான் சொல்வதற்கு காரணம், இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொடர்புடைய அமைச்சர்கள் கண்டிப்பாக கண்காணித்து, இதற்கு யார் காரணம் என்று கண்டுபிடித்து மீண்டும் எந்த எந்த பகுதிகள் முன்னுரிமை தரப்பட வேண்டிய அவசியம் நான் அவசியம் என்று கூறுவது எந்த பகுதியிலே பஞ்ச நிலைமை இருக்கிறதோ, வறட்சி நிலைமை இருக்கிறதோ, அவற்றிற்கு முன்னுரிமை தரப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யாருடைய தனிப்பட்ட ஆவலுக்காகவும் நான் இதைக்கேட்கவில்லை. அங்கே உள்ள நிலமைகள் அப்படி.

காணை, முகையூர், உலக்கூர், ரிஷிவந்தியம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் வறட்சியால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. காணையிலே தி.மு.க. உறுப்பினரும், முகையூரில் காங்கிரஸ் உறுப்பினரும், அதைப்போலவே ஒலக்கூரிலே தி.மு.க உறுப்பினரும், ரிஷிவந்தியத்திலே காங்கிரஸ் உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அது தான் காரணம் என்று நான் சொல்லவில்லை. ஏற்கெனவே சேர்க்கப்பட்ட பகுதிகள் நீக்கப்பட்டு புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே போட்ட ஜி. ஓ. 1108 ஆர்.டி.எல்.ஏ. 16—7—80 இல் அந்த 4 ஒன்றியங்களும் சேர்க்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அடுக்கப் போடப்பட்ட 1473 ஆர்.டி.எல்.ஏ. 25—9—80 என்ற





ஜி.ஓவில் அந்த நான்கு ஒன்றியங்களும் நீக்கப்பட்டு புதிதாக 7 ஒன்றியங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நான் யாரையும் குறை சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை, ஏற்கெனவே சேர்க்கப்பட்ட 4 ஒன்றியங்கள், இதிலே அக்கறை எடுத்துக் கொண்டு ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட வறட்சி அதிகமாக உள்ள நான்கு பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன, என்ன காரணம் என்பதை அறிந்து அவைகளை சேர்க்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று முதலமைச்சர் அவர்களையும் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். எதனால் அவைகள் நீக்கப்பட்டன என்பதையும் அறிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென் ஆற்காடு மாவட்டத்திலே வடசலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் குழு கூட்டம் 3 வருட காலமாகக் கூட்டப்படாமல் இருக்கிறது, அதை உடனடியாகக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். காணை, முகையூர், உலக்கூர், ரிஷிவந்தியம் ஆகிய பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக சேர்க்கவேண்டும். விழுப்புரத்திலே ஜெனரேட்டர் வசதி இல்லாத காரணத்தினால், தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது, உடனடியாக அதை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மின்சாரக் கட்டணம், வரி, கடன் பாக்கிகளை ஒத்திவைக்க வேண்டும். மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்க வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வறட்சி நிலை சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன். அமைச்சர் இங்கே வைத்திருக்கிற அறிக்கையிலே கோயம்புத்தூர், நீலகிரி, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து அவை பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்ற அறிக்கைகள் வரவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கோவை மாவட்டத்திலே உள்ள பல்லடம், அவினாசி போன்ற பகுதிகள் வறட்சியால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன, அதன் காரணத்தினால் அங்கே உள்ள விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது, பயிர்கள் வாடிக்கொண்டிருக்கின்ற அவல நிலைமை இருக்கிறது. என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு அந்தப் பகுதிகளிலே எந்தவிதமான பாசன வசதியும் இல்லாத காரணத்தினால் வறட்சி ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்திலே இதை நான் அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த இடங்கள் எல்லாம் இன்று மட்டுமல்ல, கடந்த பல வருடங்களாகவே பாசன வசதிகள் இல்லாத இடங்களாக இருக்கின்றன. பல நேரங்களிலே நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும் வறட்சி நிலைமையை போக்க முடியவில்லை. இந்த வறட்சி காலத்திலே அங்கே பயிர்கள் வாடுகின்றன, கால்நடைகளுக்கு தீவனங்கள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது, கால்நடைகள் அதனால் செத்துக்கொண்டிருக்

[திரு. எம். ஆறுமுகம்] [1981 மார்ச் 4

இன்ற நிலைமை இருக்கிற அவல நிலை இருக்கிறது. அவினாசி தொகுதியிலே 363 கிராமங்கள் இருக்கின்றன. அத்தனை கிராமங்களிலேயும் பாசன வசதிகள் இல்லை, நிலத்தடி நீர் நாளுக்குநாள் குறைந்துகொண்டே போகிறது, குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் மக்கள் வெளி மாவட்டங்களுக்கு செல்லக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. பல சந்தர்ப்பங்களிலே நான் இந்த மாமன்றத்திலே அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை அமல்படுத்தி கோவை, சேலம், பெரியார் மாவட்டங்களுக்குப் பாசன வசதி கிடைக்கச் செய்தால் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறேன். மீண்டும் அதை இந்த நேரத்திலே வற்புறுத்துவதோடு கோவை மாவட்டத்திலே உள்ள பல்லடம் அவினாசி இதிலே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போர்க்கால நடவடிக்கைகளைப் போன்ற நடவடிக்கைகளை அந்தப் பகுதிகளிலே எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கெ ள்கிறேன். வறட்சி நிலையிலே உள்ள அந்த கிராமங்களிலே ஏழை மக்கள், அரிசன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களும் இருக்கிற க..ரணத்தின..ல் அங்குள்ள

[பிற்பகல் 12–30]

விவசாயக் கூலிகளுக்கு வேலையில்லாத காரணத்தினால் அரசாங்கத்திடம் அவர்கள் வீடு கட்டுவதற்காக வாங்கியிருக்கக்கூடிய கடன்களைத் திருப்பிக் கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அரிசனங்கள் வீடு கட்டுவதற்காக அரசாங்கத்திடமிருந்து வாங்கியிருக்கக்கூடிய கடன்களை இந்த வறட்சியின் காரணமாகத் தளளி வைக்க அரசு உத்தரவிட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், என்னுடைய அவினாசி தொகுதியில் இருக்கும் 149 ஹேண்ட் பம்புகளில் 34 ஹேண்ட் பம்புகளை டெலிட் செய்துவிட்டார்கள். பாக்கியிருப்பவைகளில் 50 ஹேண்ட் பம்புகள் வேலையே செய்வதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் குடிதண்ணீருக்காக மக்கள் மிகவும் அவதிப் பட்டுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. பக்கத்தில் இருக்கின்ற புளியம்பட்டி பம்பிங் ஸ்டேஷன் 4 மணி நேரந்தான் வேலை செய்கிறது. அது 24 மணி நேரமும் வேலை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தால் புஞ்சைப் புளியம் பட்டிக்குப் போக அன்னூர், அவினாசி, திருப்பூர் ஆகிய பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொண்டு வர முடியும்.

இப்படிப்பட்ட வறட்சியிருக்கின்ற நேரத்தில் விவசாயிகள் வாங்கியிருக்கும் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலை என்னுடைய தொகுதியில் இருக்கிறது. ஆகவே, அவர்கள் வாங்கியிருக்கும் அந்தக் கடன்களைத் தள்ளி வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; விரைவில் வறட்சிப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 4] [திரு. எம். ஆறுமுகம்]

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களும், விவசாயிகளும், அந்தப் பணிகளை முறையாகச் செம்மையாகச் செய்ய வேண்டும் என்று கோரி அரசு அலுவலகங்கள் முன்னால் மறியல் செய்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் கிட்டதட்ட 500 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகம் முழுவதும் இருக்கும் பொழுது முறையாக வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்யக் கூடிய வகையில், அந்த அதிகாரிகள் சுறுசுறுப்பாக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான காரியங்களை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள விவசாயிகள் எந்தக் கடனாக இருந்தாலும், கடந்த காலத்திலே அரசு போட்ட உத்தரவின் பேரில் கட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு மிகவும் வறட்சி ஏற்பட்டு இருக்கின்ற காரணத்தால் என்னுடைய தொகுதியில் உள்ள அந்த விவசாயிகள் பணம் கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதிகாரிகள் அவர்களை வற்புறுத்தியும் அவர்கள் கட்ட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்தக் கடன்களையும் அரசு தள்ளிப் போட வேண்டும்; அத்துடன் மின் சாரப் பாக்கியை 1 பிளஸ் 1 என்று முறையில் கட்ட வேண்டுமென்பதை மாற்றி 1 என்ற மட்டும் வசூலிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் இப்படிப்பட்ட பகுதியில் வறட்சி மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், மத்திய அரசாங்கம் அதிகத் தொகையை இதற்காக ஒதுக்க வேண்டும். அப்படி ஒதுக்கக்கூடிய முறையில் தமிழகத்திலே இருக்கும் அனைத்துக் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களையும் கொண்ட குழு ஒன்றை அமைத்து உடனடியாக மத்திய அரசுக்குச் சென்று பாரதப் பிரதமர் அவர்களை நேரிலே சந்தித்து தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற வறட்சியின் கடுமையைப் பற்றி எடுத்துச் சொல்லி தமிழகத்திற்கு அதிக நிதியைப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

விடுபட்டிருக்கும் கோவை, பல்லடம், அவினாசி தொகுதிகளிலேயும் வறட்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், கோவை மாவட்டத்திலிருக்கும் வால்பாறையில் தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்கள், பணிபுரிந்து வருகிறார்கள். அந்தத் தோட்டக் காடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் வறட்சியின் காரணமாக விவசாய உற்

பத்தி செய்ய முடியாமல் இருக்கிறார்கள். எனவே வால்பாறை போன்ற இடங்களுக்குக் கீழேயிருந்துதான் அரிசி போன்ற உணவு பொருட்கள் எடுத்துச் செல்லப்பட வேண்டியுள்ளன. அந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு வியாபாரிகளும் மற்றவர்களும் அதிக விலைக்கு அரிசியை விற்கிறார்கள். எனவே, இவ்வாறு வால்பாறையில் உள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற நிலையில் வியாபாரிகளும், மற்றவர்களும் வறட்சி நிலையைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத அளவிற்கு நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசியை விநியோகம் செய்து, அந்த தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை தொகுதி, அவினாசி தொகுதி, பல்லடம் தொகுதி ஆகியவற்றை வறட்சிப் பணியில் இணைத்துக் கொண்டு செயல்படுத்த வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணத்தைக் குறித்து என்னுடைய குடியரசுக் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைக்கு ஏறத்தாழ 10, 20 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்து இன்றைய வரையிலே, யாரும் காணாத அளவிற்கு மிகப் பெரிய வறட்சி வட ஆற்காடு மாவட்டத்தைப் பின்னிக் கொண்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், 15, 20 ஆண்டுகாலமாக அப்படிப்பட்ட வறட்சியை நாம் பார்த்தது கிடையாது. அரிசிக்குப் பஞ்சம் வந்திருக்கிறது. கோதுமைக்குப் பஞ்சம் வந்திருக்கிறது. குடி தண்ணிருக்குப் பஞ்சம் வந்திருக்கிற கொடுமை, இன்றைய கால கட்டத்திலே வந்திருக்கிறது. ஆகவே, அதை அரசாங்கம் மிக முக்கியமாகக் கவனித்து, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று முதலிலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12—40].

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரை நடைபெற்ற அத்தனையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குப்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அங்கே கேட்டுக்கொண்டுதான் இருந்தேன் — இன்னொரு கட்சியைப் பற்றிக் குறிப்பிடாமல், நாங்கள் அப்படியில்லை என்று தன்னைப் பற்றி மட்டும் குறிப்பிடுவதற்குக் கூட இங்கே உரிமை இல்லை என்பதை எப்படி நியாயமாகும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. ஜி. மூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் நிலை பற்றி இந்தப் பிரச்னையில் சொன்னேனே தவிர, மற்றக்கட்சிக்காரர்கள் இந்தப்பிரச்னையை எப்படி அணுகுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. எங்கள் கட்சியைப் பொறுத்த* வரையில் * * * தயாராக இல்லை என்று சொன்னேன். மற்ற கட்சிக்காரர்கள் பற்றி நான் சொல்லவில்லை. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வறட்சியைப்பற்றி மட்டும் பேசுங்கள் என்று சொன்னேன். ஏற்கெனவே அவைக்குறிப்பில் இருந்து நீக்கவேண்டும் என்று நான் குறிப்பிட்ட அந்த வார்த்தையை மீண்டும் உபயோகிப்பது சரியல்ல.

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அவர் பேசியதைப் பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. அதைப் பற்றி தாங்களே முடிவு எடுத்து விட்டீர்கள். முதலமைச்சர் அவர்கள் தன்னைப் பற்றிப் பேசுகிறபோது, இன்னொரு கட்சியைப் பற்றி குறிப்பிடாதபோது, அது எப்படி மாறுபட்ட பிரச்னையாக அவையிலே எழுப்பப்படலாம் என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'இன்சினியேஷன்' என்ற முறையில் எதுவும் வராமல் சட்டமன்றத்தில் பேசுவது என்பது நாம் மேற்கொள்கிற முறை. அந்த முறையை மேற்கொண்டால் போதுமானது.

**திரு. ஜி. மூர்த்தி :** வடாற்காடு மாவட்டத்தில் 10—15 ஆண்டு காலமாகக் காணாத வறட்சி இருந்து கொண்டு இருக்கிறது. அந்த வறட்சி நிலையைப் போக்க தமிழக அரசையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். வடாற்காடு மாவட்டத்திற்கு அதிகமான நிதியை ஒதுக்கி நிவாரண வேலைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நியாயவிலைக் கடைகள் மூலம் அதிக அரிசியைக் கொடுத்து, ஏழை எளிய மக்கள் வாழ்கிற பகுதியில் விநியோகிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று தாழ்த்தப்பட்ட மக்கள், நெசவாளப் பெருங்குடி மக்கள் வாழ்கிற பகுதிகளுக்கு கோதுமை தாராளமாகக் கொடுக்கும் வகையில் அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கையால் தமிழகம் பூராவும் பாதிக்கப்பட்டு இருந்த போதிலும், செயற்கையாலும் பேரணாம்பட்டு மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கும் டானரியில் இருந்து வரும் கழிவு நீர் அருகில் உள்ள ஆறுகளில் ஊறி அந்த நீரின் தன்மையை மாற்றியிருக்கிறது. அந்த மக்கள் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் அல்லல்பட்டுக் கொண்டு இருக்கிறார்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கள். ஆகவே குடிநீர் பொறுத்தவரையில் பேரணாம்பட்டு தொகுதியில் மிகத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காகப் பல்வேறு குழாய்க் கிணறுகள் அமைத்தும், பாழடைந்து போன கிணறுகளைப் புதுப்பித்தும், பக்கத்தில் இருக்கும் ஆறுகளில் — இரண்டு மூன்று ஆறுகள் இருக்கின்றன — இருந்து தண்ணீர் எடுத்து, எல்லாக் கிராமங்களுக்கும் குடிப்பதற்கு தண்ணீர் தருவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிவாரணப் பணி நடவடிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டு, கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிப்பதில் முன்னுரிமை தரவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக பேரணாம்பட்டு தொகுதிக்கு 4—5 கோடி ரூபாய் ஒதுக்கி, அங்கேயுள்ள குடிநீர் பிரச்சினையையும், மற்ற பிரச்னையையும் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், அந்தப் பகுதியில் இருக்கும் டானரி தொழிலாளர்கள் முன்னேற்றத்தைப் பார்க்காதவர்கள், கூலி தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கும் வகையில் அதிக வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் உள்ள நிலைமைகள் பற்றி எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் தெரிவித்தது போல், குறைந்தபட்சம் ரூ. 10—15 கோடியாவது ஒதுக்கி, அந்த மாவட்டத்தை வறட்சி நிலையில் இருந்து காப்பாற்றவேண்டும் என்று என்னுடைய கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்து, அமைகிறேன். வணக்கம்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சி நிலை பற்றி எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்த ஆண்டு பருவ மழை பெய்ததன் காரணமாக எந்தக் காலத்திலும் காணாத வறட்சி நிலை நிலவுவதால் அதைப் போக்க நல்லதொரு முடிவை எடுத்து, அதைச் செயலாற்றி வருகின்ற தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்கு தண்ணிறைவுத் திட்டத்தைத் தமிழகத்தில் கொண்டு வந்து நல்ல முறையில் அதைச் செயலாற்றி வருகிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும், அவர்கள் எந்தத் திட்டத்தையும் நல் முறையில் செயல்படுத்தி வருகிறார்கள் என்று தமிழக மக்கள் அவர்களைப் பாராட்டுகிறார்கள் என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததன் காரணமாக தமிழகத்தின் பல





மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டுள்ளதால் குடிநீருக்கு மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக அரிசன மக்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு இந்த நிவாரணப் பணிகளில் பெரும்பாலான நடவடிக்கைகளை எடுத்து உடனடியாக அவர்களின் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பல மாவட்டங்களுக்குச் சென்று வறட்சி நிலை பற்றி அறிந்து வந்தார்கள். அதிகாரிகள் சரிவர அந்தப் பிரச்னைகளைத் குறித்து தெரிவிக்காமல் இருக்கக் கூடும். ஆகவே, எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த முறையில் பிரச்னைகள் இருக்கின்றன என்பதை இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், பல பகுதிகளில் வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய தொகுதியான அரவக்குறிச்சியில் வரகூர், கிருஷ்ணாபுரம் போன்று பல கிராமங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றிற்கு உடனடியாக நிவாரண நடவடிக்கை எடுக்க வேண்டும். திருச்சியிலிருந்து கரூர் செல்லும் பாதை நல்ல வளம் உள்ளதாக இருக்கும் பகுதியாகத் தெரியும்.

[பிற்பகல் 12-50].

இதை எல்லாம் கருத்திற் கொண்டு, அந்தப் பகுதியிலுள்ள வறட்சியைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியிலே வறட்சி மிகவும் மோசமாக இருக்கிறது. அங்கே அமராவதி, நொய்யல் ஆறுகள் ஓடுகின்றன. அந்த ஆறுகளை இது வரையில் எந்த அரசும் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளவில்லை. நொய்யல் ஆற்றிலும், அமராவதி ஆற்றிலும் அணை கட்டினால் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும். தண்ணீர்ப் பஞ்சம் போகும். இப்படிப்பட்ட வறட்சி ஏற்படாது.

சமீபத்திலே நொய்யல் ஆற்றை நம்பி செய்யப்பட்ட பயிர்கள் ரொம்பவும் மோசமாகியுள்ளன. நொய்யல் ஆற்றை நம்பி, பம்பு செட்டு போட்டு பயிர் செய்தவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். 4 நாட்கள் அந்த நொய்யல் ஆற்றில் தண்ணீர் விட்டால் அந்த பயிர்கள் பிழைத்துக் கொள்ளும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[திரு. கி. சட்டநாத கரையாளர்] [1981 மார்ச் 4

இதிலே டிரவுட்ப்ரோன் ஏரியாவாக இருக்ககூடிய பகுதிகளுக்கு ஏற்கனவே இருக்கின்ற திட்டத்தின் அடிப்படையிலே உதவி செய்வதாக இருந்தாலும் இன்றைக்கு ஒட்டு மொத்தமாக தமிழகம் முழுவதும் 11, 12 மாவட்டங்களிலே உடனடியாக நிவாரண வேலைகளில் ஈடுபட வேண்டிய கால கட்டத்தில் இருக்கிறோம்.

தஞ்சைக்கு அடுத்தபடியாக நெல் விளையக் கூடிய பகுதி வட ஆற்காடு. வட ஆற்காடு மாவட்டத்தின் பெரும் பகுதி பாதிக்கப்பட்டுள்ளது என்று எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார்கள். நெல் உற்பத்தி மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையிலே ப்ரெக்யூர்மென்ட் என்ற அடிப்படையிலே மக்களிடமிருந்து நெல் வாங்குவது முடியாத காரியம். ஆகவே நமக்குத் தேவையான அரிசியை அவர்களிடம் இருந்து வாங்குவதற்குப் பதிலாக மத்திய அரசிடமிருந்து 4 இலட்சம் டன் அரிசியை இந்த அரசு பெற வேண்டும். அப்படிப் பெற்றால் தான் இன்றுள்ள நிலைமையை சமாளிக்க முடியும்.

அடுத்து இன்று இருக்ககூடிய வெளி சிஷ்டத்தில் படி 60, 40 என்ற முறையினை கொண்டு வந்தது விலைவாசி உயர்வுக்குத் தான் பயன்பட்டது. அரிசி விலை கணிசமாக உயர்ந்துவிட்டது. 40 சதவீதம் அரிசியை அரசு வியாபாரிகளிடத்திருந்து வாங்குவதன் காரணத்தால் அவர்கள் மீதியுள்ள 60 சதவீதம் அரிசியில் அந்த விலையை சேர்த்து உயர்த்தி விடுகிறார்கள் அவர்கள் நஷ்டப்படாத அளவுக்கு பார்த்துக் கொள்கிறார்கள்.

நான் இந்த அவையின் தலைவர் மூலமாக ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். நிலவரி, சர்சார்ஜ், போன்ற எல்லா வரிகளையும் ரத்து செய்ய வேண்டும் விவசாயப் பெருமக்கள் பெருமளவில் பாதிக்கப்ப்ட்டிருப்பதால் ஆங்காங்கே அவர்கள் கிணறு வெட்டு வதற்கு கடனாகவும், மானியமாகவும் பணம் கொடுக்க வேண்டும். இந்தப் பணிகள் மூலமாக கிராமங்களில் வேலைவாய்ப்பும் கொடுக்க முடியும். தோண்டுகின்ற கிணறுகளை ஆழ் கிணறு களாகத் தோண்டினால், குடிதண்ணீர் பிரச்சினையும் ஓரளவிற்கு சமாளிக்க முடியும்.

[பிற்பகல் 1—00]

அடுத்து கால்நடைகள் இன்றையதினம் நமது மாநிலத்தி லிருந்து பெருமளவிற்கு வேறு மாநிலங்களுக்கு வெளியேறிச் சென்று கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு போதுமான தீவனங்கள் கிடைப்பதில்லை. கோதுமை போன்ற பொருள்கள் அதிகமாக விளையும் பஞ்சாப் போன்ற மாநிலங்களிலிருந்து கேட்டில் பீட் என்று சொல்லப்படும் மாட்டுத் தீவனங்களைத்



1981 மார்ச் 4] [திரு. கி. சட்டநாத கரையாளர் [

தருவித்து கால்நடைகளை காப்பாற்ற இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, வைக்கோல் தட்டை போன்ற மாட்டுத் தீவனங் கள் நம்முடைய மாநிலத்திலிருந்து கேரளாவிற்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு நிலைமை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அங்கே இருக்கும் பேப்பர் பேக்டரிக்கு இவைகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. நமது கால்நடைகளுக்கு உணவு இல்லாத நிலையில் இவை மேலும் செல்வதை தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

இவைகளை உடனடியாக அவசியப் பிரச்சினைகளாகக் கருதி அதற்குப் பரிகாரம் காண முயல வேண்டும். காணுகின்ற பரிகா ரத்தை போர் காலங்களிலே நெருக்கடி காலங்களிலே செய்வதைப் போன்று ஊக்கத்தோடுவிரைந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வான் பொய்த்ததன் காரணமாக வாடுகின்ற மக்களுக்கு துயர் துடைப்பு நிவாரணப் பணிகளைக் குறித்து, காந்தி காமராஜ் தேசீயக் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்றைய தினம் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளிலே எங்களுடைய திருநெல்வேலி மாவட்டம் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் திருநெல்வேலி மாவட்டத்தைப் பொருத்தவரையில், ஒரு சில தாலுக்காக்களைத் தவிர மற்ற தாலுக்காகள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்ககூடிய நிலை மையில்தான் இருக்கின்றன. எனவே, உண்மையாகவே இப்படி வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்ககூடிய தாலுக்காக்களை வறட்சிப் பகுதிகளாக ஏற்றுக் கொண்டு, அந்தப் பகுதிகளுக்கு செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாது அந்தப் பகுதியிலே உள்ள நிலத் தீர்வை. கூட்டுறவுக் கடன்கள் போன்றவற்றை ரத்து செய்ய அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சமீபத்தில் எங்களுடைய கட்சியினுடைய பணி குறித்து வட ஆற்காடு, தென்னாற்காடு, புதுக்கோட்டை போன்ற பல மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செய்கின்ற நேரத்திலே பெறப்பட்ட மனுக்கள் எல்லாம் குடிதண்ணீர் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டுதான் இருந்தன என்பதை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த இடத்தை எடுத்தாலும் குடிதண்ணீர்தான் மிக முக்கியமாக, அவசியமான

அத்தியாவசியத் தேவையாக இருப்பதாக மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள். ஆகவே, இந்தக் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே நாட்ராம்பள்ளி போன்ற பகுதிகளிலே அவைகள் வறட்சிப் பகுதிகள் என்று அறிவிக்கப் பெற்ற பின்னரும் கூட, அதிகாரிகள் அங்கே விவசாயிகள் செலுத்த வேண்டிய எல். டி. பேங்க் கூட்டுறவு பேங்க் போன்ற பேங்குகளில் பெற்ற கடனுக்கு ஈடாக மாடுகளை ஜப்தி செய்வதாக பயமுறுத்துவதாகச் சொன்னார்கள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பெற்ற அந்தப் பகுதிகளிலாவது இவ்வாறு மாடுகளை ஜப்தி செய்வதை நிறுத்த வேண்டும் என்று உடனடியாக அரசு இதில் தலையிட்டு ஒரு ஆணையை இடவேண்டும். அந்த வகையில் புரட்சித் தலைவரின் பொறுப்பிலே இருக்கிற இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் பிரச்சினை என்பது மிக முக்கியமான பிரச்சினை. ''உண்ணும் நீரினும், உயிரினும் உன்னை உவப்பேன்'' என்று கம்பன் சொன்னதைப்போல்—குடிதண்ணீர் என்பது உயிருக்கும் முன்னதாக கருதப்பட்டு, உயிர் வாழ தேவையான பொருள்களில் ஒன்றாக உள்ளது. அத்தகைய பெரும் பிரச்னையான குடிதண்ணீர் வசதியை செய்து கொடுக்க மத்திய அரசு 110 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறது என்பது வருத்தத்தை தருகிறது. மாநில அரசின் அமைச்சர்களோ அல்லது முதலமைச்சரோ உடனடியாக டெல்லி சென்று குடிநீருக்கு இன்னும் அதிகப்படியான தொகை ஒதுக்கப்பெற வேண்டும் என்று மத்திய அரசை கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மனக் கட்டுப்பாடு இல்லாத காரணத்தினாலே குடும்பக் கட்டுப்பாடு செய்கிற திட்டத்திற்குக் கூட 155 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிற மத்திய அரசு, மக்களின் மிக அவசியத் தேவையான குடி தண்ணீருக்கு 110 கோடி ரூபாயை ஒதுக்கி இருப்பது வருந்தத்தக்கது. மத்திய அரசு, குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க மேலும் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று மாநில அரசு அதனை வற்புறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல நாட்ராம்பள்ளி வடாற்காடு மாவட்டத்திலே உள்ள சில வறட்சிப் பிரதேசங்களில், மின் இணைப்பு வழங்க வேண்மென்றால், நிலத்தடி நீர் சான்றுகள் பெற வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி நிலத்தடி நீர் சான்றுகள் இல்லாமலேயே மின் இணைப்பு வழங்க அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள அந்த விவசாயிகள் பயிர் செய்து, மழை பொய்த்ததன் காரணமாக அவர்கள்





உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பயிர்கள் விளையாமல் இருப்பதை பார்த்து சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் மழை பெய்த பிறகு அல்லது பாசன வசதி கிடைத்த பிறகு, அவர்கள் நல்ல முறையில் பயிர் செய்ய கடனாக அரசு பண உதவி செய்யும் வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்கிற நேரத்திலே, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற நேரத்திலே, அவைகளைக் கண்காணிக்க ஊராட்சி ஒன்றியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், ஒதுக்கப் பெற்ற பணிகள் சரிவர செய்யப்பெறுகிறதா என்பதைக் கண்காணிக்க அனைத்துக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களாகப் போட்டு, அந்தந்தப் பகுதிகளில் சென்று, சரியாக செய்கிறார்களா? தவறு நடைபெற்றிருக்கிறதா என்பதைக் கண்டறிந்து இந்த அவைக்கு அறிக்கையாக வைத்தால், அந்தப் பணிகளைச் செய்கிற அதிகாரிகள் மிகவும் கவனத்தோடு செய்வார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு சட்டநாத கரையாளர் அவர்கள் சொன்னதுபோல் இன்றையதினம் அரிசி விலை ஒரு கிலோவிற்கு ஒன்றரை ரூபாய் வரை ஏறியிருக்கிறது. இதற்குக் காரணம் 40 சதவிகிதம் லெவிதான். இந்த லெவி போட்டதால்தான் அரிசி விலை உயர்ந்திருக்கிறது என்பதை அரசு மனதில் கொண்டு இந்த லெவியை ரத்து செய்து விலைவாசியைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. த. இராமசாமி: மாண்புமிகு தாற்காலிகத் தலைவர் அவர்களே, வறட்சி நிலை குறித்து பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வானம் பொய்த்ததன் காரணமாக, பருவ மழை தவறியதன் காரணமாக இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற வறட்சி குறித்து வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலிருந்து வந்திருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு இங்கே அது குறித்து பேச வாய்ப்பினைத் தந்து தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக முக்கியத்துவம் அளித்துள்ள தலைவர் அவர்களுக்கு நான் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கையின் சீற்றம் காரணமாக, அது புயலாக இருந்தாலும் சரி அல்லது வெள்ளமாக இருந்தாலும் சரி அல்லது வானம் பொய்க்கிற காலத்தில் வறட்சி ஏற்பட்டாலும் சரி, இந்த நேரங்களில் எல்லாம் இராமநாதபுரம் மாவட்டம் தப்பியதே இடையாது. அந்த அளவிற்கு 1978–79 புயலால் பாதிக்கப்பட்டு கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மீனவப் பெருமக்கள் அதிகமாக சிரமம் அடைந்தார்கள். அந்த மீனவர்கள் தங்கள் படகுகளை எல்லாம் இழந்தார்கள், குடிசைகளை இழந்தார்கள், தங்கள் சொத்துக்களையெல்லாம் இழந்தார்கள். ஆனால்அன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக மீனவக் குடும்பங்கள் கண்ணீர் துடைக்கப்பட்டு நிவாரணம் அளிக்கப்பட்டது. அதேபோல் வெள்ளம் பெருக்கெடுத்து வந்த நேரத்தில் ஏழை எளிய மக்கள் உழவர் பெருங்குடி மக்கள் தங்கள் விளைச்சலையெல்லாம் இழந்து பரிதவித்தார்கள். அவர்கள் குடிசைகள் எல்லாம் இழந்து பரிதவித்தார்கள் அப்படி அவர்கள் பரிதவித்த நேரத்தில் அன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக அதிகாரிகள் சுறுசுறுப்பாகப் பணியாற்றியதன் காரணமாக அன்றையதினம் உழவர் பெருமக்கள் கண்ணீர் துடைக்கப்பட்டது. எத்தகைய உயிர்ச் சேதமும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமைகள் சமாளிக்கப்பட்டன. ஆனால் இன்றைய தினம் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. மேற்கு இராமநாதபுரம் பகுதி ஒரு வகையில் தொழில் மையமாக இருக்கக்கூடிய பகுதி. ஆனால் கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் எந்தத் தொழிலும் இல்லாத அளவிற்கு அவர்கள் விவசாயத்தையும் கடலையும் நம்பியே வாழவேண்டியிருக்கிறது. இந்த நிலையில் அங்கு கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் பகுதியில் வைகைப் பாசனத்திற்குட்பட்டு 4000 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அந்த நாலாயிரம் ஏக்கர் நிலங்களைப் பொறுத்தவரையில் வைகைத் தண்ணீர் அந்தக் கண்மாய்களுக்கு வரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் உழவர் பெருமக்கள் வேளாண்மை நடத்த முற்பட்டார்கள். அதில் விவசாயம் செய்ய ஆரம்பித்தார்கள். ஆனால் வைகைத் தண்ணீர் அந்தக் கண்மாய்களுக்கு வந்து சேராததன் காரணமாக இன்றையதினம் நாலாயிரம் ஏக்கர் நிலங்களில் விளைச்சல் பாழடைந்து விட்டது சாவியை அறுத்துக் கொண்டிருக்கிறார்கள். உழவர் பெருங்குடி மக்கள் ஏக்கர் ஒன்றுக்கு நாலாயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். என்று சொன்னால் நாலாயிரம் ஏக்கர்களுக்கு நான்கு இலட்சம் ரூபாய் அளவிற்கு உழவர் பெருமக்கள் செலவு செய்திருக்கிறார்கள் இந்தச் சூழ்நிலையில் இன்றையதினம் இதைப் பயன்படுத்திக் கொண்டு வர்த்தகர்கள் அரிசி விலையை ஏற்றக்கூடிய நிலையில் அவர்கள் நடந்து கொண்டு வருகிறார்கள். ஆகவே அரசாங்கம் இதில் தக்க கவனம் செலுத்தி குடும்பக் கார்டுகள் மூலம் அரிசி போன்ற உணவுப் பண்டங்களை வழங்க சரியான ஏற்பாட்டினை செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அதேபோன்று கிராமங்களில் யார் மூலம் உணவுப் பொருட்கள் வழங்குகிறார்கள் என்றால், எந்த அங்காடிகள் மூலம் உணவுப் பொருட்கள் வழங்குகிறார்களோ அவற்றை யார் இயக்குகிறார்கள் என்றால் விவசாய நாணயச் சங்கத் தலைவர்கள்தான் இயக்குகிறார்கள். தவறுகள் செய்யக்கூடியவர்கள் அந்தச் சங்கங்களின் தலைவர்களாக இருப்பதால் கிராமமக்களுக்கு உணவுப் பொருட்களை முறையாக அவர்கள் கார்டுகளுக்கு வழங்குவது இடையாது. அந்த நிலையில் இன்று வறட்சி ஏற்பட்டிருக்கிற நிலையில் உணவுப் பொருட்களை அவர்கள் கையில் விநியோகம் செய்யக் கொடுத்தால் கள்ளச் சந்தையில் விற்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். ஆகவே, உணவுப் பொருட்களை கூட்டுறவு பண்டகசாலைகள்மூலம் வழங்குவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இராமநாதபுரம் தொகுதியில் உள்ள ராமேஸ்வரம், மண்டபம், பாம்பன், தங்கச்சிமடம் போன்றவைகள் கடலால் சூழப்பட்ட தீவுகள் இராமநாதபுரத்திலிருந்து ரெயில் மூலம்தான் அங்குள்ளவர்களுக்கு உணவுப் பண்டங்கள் எடுத்துச் செல்லப்படுகிறது. இன்று வறட்சி நிலை காரணமாக வறட்சி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு வர்த்தகர்கள் உணவுப் பொருள்களை அதிகமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கு அன்றாடம் உழைக்கக்கூடிய மக்களுக்கு, அவை விவசாயம் இல்லாத பகுதிகளாக இருப்பதால் அந்தப் பகுதிகளில் ஏராளமான உணவுப் பொருட்கள் கையிருப்பு வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், குடிநீர் பிரச்சினையைப்பற்றி இங்கே பல்வேறு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இன்றைய தினம் இதிலே 6 பிரிவுகளாகப் போட்டு, அதிலே முதல் 1, 2, 3 பிரிவுகளின் வேலைகளை முதற்கட்டமாக அமுல் படுத்துகின்ற நிலைமை இருக்கின்றது. அப்படியில்லாமல், குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் வறட்சியால் வாடுவதால், இப்படிப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் இந்தப் பிரிவுகள் என்ற பாகுபாடு இல்லாமல், குடிதண்ணீர் வசதியை செய்து கொடுக்க வேண்டும், குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1–10]

குடிநீரைப் பொறுத்தவரையில் கைப்பம்புகள் போடுவதைப் பற்றிச் சொன்னார்கள். அப்படி கைப்பம்புகள் போடுவதாலே எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. அவைகள் செயல்படவில்லை. கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் இப்படி கைப்பம்புகளை

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே, 600 பம்புகள் போட்டார்கள். இன்றைய தினம் அவைகள் செயல்படவில்லை. எந்தவிதமான பிரயோஜனமும் அவைகளால் ஏற்படவில்லை. ஆகவே, பொதுமக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கின்ற வகையிலே நல்ல திட்டங்களை வகுத்து இந்த வறட்சி நிவாரணப் பணியைப் பயன்படுத்தி, அங்கே எல்லாம் குடிதண்ணீர் வசதியை குறிப்பாக இந்த கிழக்கு இராமநாதபுரம் பகுதி பொதுமக்களுக்கு செய்து தர வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பளித்த தற்காலிகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவை மாற்றுக் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்ற வறட்சி நிலை குறித்து என்னுடைய கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருச்சி மாவட்டத்திற்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திருச்சி மாவட்டத்தில் வறட்சி மிகவும் கடுமையான நிலைமையில் ஏற்பட்டிருக்கின்றது. 4–11–80-ல் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அரியலூர் கோட்டத்தைச் சேர்ந்த அரியலூர் வட்டம், உடையார்பாளையம் வட்டம், பெரம்பலூர் வட்டம் ஆகிய மூன்று வட்டங்களில் இருக்கக்கூடிய 10 ஒன்றியங்களைப்பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. அங்கே உள்ள ஏழை விவசாய மக்கள் வானத்தை நம்பி இருக்கக்கூடியவர்கள். விவசாயப் பொருள்கள் அங்கே நல்ல முறையில் விளையவில்லை. ஜெயங்கொண்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கே கடலை நல்ல முறையில் விளையும். 'ஆடி பட்டத்தில் தேடி விதை' என்று சொல்வார்கள். ஆனால் இந்த ஆடி மாதத்தில் மழை இல்லாத காரணத்தால், கடலைப் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், ஆண்டிமடத்தில் இந்த ஆண்டு கடலை நல்ல முறையில் விளையவில்லை. அதேபோல் அரியலூர் தொகுதியில் மிளகாய் வரத்தும், மல்லி வரத்தும் அதிகமாக இருக்க வேண்டிய நேரத்தில் இந்த ஆண்டு மழை இல்லாத காரணத்தினால், அங்கும் சரியாக விளையவில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே இவைகளை எல்லாம் எடுத்துச் சொன்னோம். நான் மட்டுமல்ல. என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினரும், அதேபோல் வரகூர் சட்டமன்ற உறுப்பினரும் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மழை பெய்யும் என்று சொன்னார்கள். ஆனால், அதற்குப் பிறகு மழை பெய்யவில்லை. அங்கே 2,000 கிணறுகளில் தண்ணீர் இல்லை. அப்படி தண்ணீர் இல்லாத காரணத்தினால், அங்குள்ள மக்கள் குடிப்பதற்கு கூட தண்ணீர் இல்லாத அவல நிலை ஏற்பட்டிருக்கிறது.





இந்த 10 ஒன்றியங்களிலும் பல மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் பாதுகாப்பு குடி தண்ணீர் கிடைப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அதற்குத் தண்ணீர் வருவதில்லை. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 1977-ல் சட்டமன்றத்தில் பேசுகின்றபோது, எனக்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்கு உடனடியாக எல்லா மேல் நிலைத் தொட்டிகளையும் பழுதுபார்த்து, தண்ணீர் அனுமதிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் 1977-லேயிருந்து 1981 வரையில் இன்றைக்கும் பல மேல்நிலைத்தொட்டிகள் இயங்காத நிலையிலே இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், அ. தி. மு. க. ஆட்சி ஏற்பட்டு, பல இடங்களில் மேல்நிலைத் தண்ணீர்த்தொட்டிகள் கட்டுவதற்கும், அதேபோல் ஆழ் குழாய்க் கிணறுகளுக்கு அனுமதி அளித்தும், அவைகள் இன்னும் செயல்படாமல் இருக்கின்றன. நான் அரசைக் குற்றம்சாட்டவில்லை. அரசு அதிகாரிகள் தேனீக்களைப்போல் பணியாற்ற வேண்டும். ஆனால், அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள் அந்த வேலைகளை அப்படிச் செய்யவில்லை. அதேபோல், குருவாடி, வைப்பூர், தூத்தூர் போன்ற பகுதிகளிலும் அதேபோல் ஓரத்தாகுடி போன்ற பகுதிகளிலும், இன்னும் பல பகுதிகளிலும் மேல் நிலை தண்ணீர் தொட்டிகள் இயங்காமல் இருக்கின்றன.

இன்றைக்கு தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் அரசு ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தத் திட்டம் வரகூர் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படுகிறதா என்றால், இல்லை. மேல் மட்ட நீர்த்தேக்கத் தொட்டி இல்லாத இடங்களில், இதற்காக ஒவ்வொரு ஒன்றியங்களிலும் ஒரு இலட்சம், 75 ஆயிரம் என்ற அளவில் குறையாமல் பைப்புகளைப் புதைத்திருக்கிறார்கள். அந்த மேல் மட்ட நீர்த் தேக்கத் தொட்டி இல்லாத இடங்களுக்கு பைப்புகள் அவசியமா? உதாரணமாக ஒன்று சொல்ல வேண்டுமென்றால் ஆலத்தூர் ஒன்றியத்தில் புஜாங்கராயநல்லூர் என்ற இடத்தில் பைப்புகள் புதைக்கப்பட்டு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அங்கு இல்லை. அதே போல் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இன்றைக்கு நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் நல்லமுறையில் அவைகள் செயல்பட முடியவில்லை. அதனால் பல வேலைகள் தடைபட்டிருக்கின்றன. வறட்சி காரணத்தால் பெரம்பலூர், அரியலூர், உடையார்பாளையம் முதலிய வட்டங்களில் இருக்கும் மக்கள் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திற்கும், பெங்களூருக்கும், திருமகளூருக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

1974–75 ஆம் ஆண்டில் வறட்சி ஏற்பட்ட நேரத்தில் என்னுடைய கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய அரசை அணுகி 14 கோடி ரூபாய் அனுமதி பெற்று வந்தார். அதேபோல் இன்றைக்கு சர்வ கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து அதிகமாக தொகையைப் பெற்று நிவாரணப் பணிகளை நல்ல முறையில் உதவ வேண்டும். அதோடு அந்தத் தன்னிறைவுத்

திட்டத்தில் நடைமுறைப்படுத்துவதில் ஊழல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதை உடனடியாகக் கண்டுபிடித்து யார், யார் எந்த அதிகாரிகள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் நிலவரியை எல்லாம் ரத்து செய்தும், கூட்டுறவுத்துறைக் கடன்களை ஓராண்டிற்கோ அல்லது இரண்டு ஆண்டுகளுக்கோ ஒத்தி வைத்து அரசு உத்தர விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய அரியலூர் தொகுதியில் மக்களுக்கு நல்ல முறையில் நிவாரணம் செய்ய வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு ஆர். தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சி நிலை குறித்து பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னிறைவு திட்டத்தில் சாலைகள் இல்லாத இடங்களில் சாலைகள போட்டு, குடிதண்ணீர் இல்லாத கிராமங்களில் குடிதண்ணீர் வழங்கியிருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். 1974-ம் ஆண்டு தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட போது, புரட்சித் தலைவர் அவர்கள் கிராமங்கள் முழுவதிலும் கஞ்சித் தொட்டி வைத்து மக்கள் பசியைத் தீர்த்த மன்னர், இந்நாள் முதலமைச்சராக இருக்கிற நேரத்தில் வறட்சியைக் கண்டு அச்சப்படத் வேண்டியதில்லை என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். தமிழகத்தில் வறட்சி நிலவுகிற 11 மாவட்டங்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும், புரட்சித் தலைவர் அவர்களுக்கும் பாராட்டி நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா மழை பெய்யாத காரணத்தாலும் வைகை சப்ளை சானலில் தண்ணீர் கிடைக்காத காரணத்தாலும் பரமகுடி தாலுகா முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் அவதிப்படுகிறார்கள் 9–12–80 ல் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் 1–1–81-ல் விவசாயத் துறை அமைச்சர் அவர்களிடமும் 4–1–81 ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், 8–1–81-ல் வருவாய்துறை அமைச்சர் அவர்களிடமும் பல்வேறு நிவாரணங்களை வழங்க வேண்டுமென்று கேட்டு மனுக்களைக் கொடுத்து, கோரிக்கையை எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அதன் பேரில் 16–1–81ல் மாநில ஆணையாளர் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பார்வையிட வந்த போது, நிலத்தைக் காட்டி, எங்களுக்கு வறட்சி நிவாரணம் அளித்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று மனுக்களைக் கொடுத்து, அரசுக்குக் கொடுக்கும் கோரிக்கையை எடுத்துக்





சொல்லும்போது, அரசுக்கு சிபார்சு செய்கிறேன் என்று சொல்லி விட்டு வந்தார்கள். ஆனால் அவர்கள் மெத்தனமாகக் கணக்கிட்டு கொடுத்ததன் காரணமாக, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 50 இலட்சம் என்று அரசு பணம் ஒதுக்கீடு அறிவித்து இருக்கிறது.

[பிற்பகல் 1 20]

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி தொகுதியில் இரண்டு பஞ்சாயத்து யூனியன்கள் குறிப்பாக இருக்கின்றன. அவற்றிலே ஒன்று இந்திய நாட்டிலேயே உள்ள மிகப் பெரிய பஞ்சாயத்து யூனியன் என்று சொல்லப்படுவதாகும். 64 பஞ்சாயத்துக்களைக் கொண்டிருக்கிற போகலூர் பஞ்சாயத்து யூனியன் தான் அது. இன்றைக்கு இந்த 50 லட்ச ரூபாய் அந்த ஒரு யூனியனுக்கே போதாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பரமக்குடியில் உள்ள விவசாயிகள், முதுகுளத்தூரில் உள்ள விவசாயிகள் ஆடு மாடுகள், கோழிகள், குஞ்சுகள், முட்டைகள் இவைகளையெல்லாம் விற்று இன்றைக்கு குடும்பம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மதுரை, விருதுநகர் போன்ற நகரங்களில் உள்ள வியாபாரிகள் அந்த ஆடுகளை பாதி விலைக்கு —மாடு 2,000 ரூபாய் பெறுகிறது என்றால் ஆயிரம் ரூபாய்க்கு, ஆடு 200 ரூபாய் பெறுகிறது என்றால் 100 ரூபாய்க்கு— வாங்கி கேரளா போன்ற இடங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை நீடித்தால் எல்லாப் பொருட்களையும் விற்று முதல் செய்து சாப்பிட்டுவிட்டு தஞ்சை மாவட்டத்திற்கு வேலை தேடிப் போய்விடுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு போயும் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு கைக்குழந்தைகளை இழந்துதான் வருவார்கள் என்பதை நான் அரசுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் போதிய நிதியுதவி அளித்து இராமநாதபுர மாவட்டத்து மக்களைக் காப்பாற்ற அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசையும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த வறட்சிப் பணிகள் அறிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 11 மாவட்டங்கள் முழுமையாவும் பாதியாகவும் இதிலே எடுத்துக்கொள்ளப்படும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 11 மாவட்டங்கள் மட்டுமல்ல, தமிழகம் முழுமையும் இன்றைக்குப் பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆடிக்கு முன்னாலேயிருந்து மழை பொய்த்துவிட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதைத்தவிர, அது பாரஸ்ட் ஏரியாவாக

இருந்தாலும் சரி, ரெவின்யூ புறம்போக்காக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்கள் ஒரு லோட், இரண்டு லோடுகள் என்று மட்டும் பெர்மிஷன் வாங்கிக் கொண்டு மரங்களை வெட்டிக் கொண்டு போய் விறகுகளாகவும் வீடுகளுக்கு தேவைப்படும் மரக்கட்டை களாகவும் பயன்படுத்துகிற காரணத்தினாலே மரங்கள் நிறைய அழிந்துவிட்டன. அது மட்டுமல்ல, ரோடுகளிலே உள்ள மரங் களை வெட்டிவிடுகிறார்கள். பெரிய பெரிய புளிய மரங்களைக் கூட பட்டப்பகலில் யார் என்று தெரியவில்லை வெட்டிவிடு கிறார்கள். இப்படி பாரஸ்ட்டில் உள்ள மரங்கள் வெட்டப்படு கின்றன, புறம்போக்கில் உள்ள மரங்கள் வெட்டப்படுகின்றன, ரோடுகளில் உள்ள மரங்கள் வெட்டப்படுகின்றன. ஒரு புறத் திலே மரத்தை வைத்து வளர்க்கவேண்டுமென்று விழாக்கள் நடத்து கிறோம், இன்னொரு புறத்திலே மரத்தை வெட்டிக்கொண்டிருக் கிறார்கள் என்றால் இந்த நிலைமை தொடர்ந்தால் வறட்சி நிலைமை எங்கேகொண்டு போய் விடும் என்று மக்கள் அஞ்சிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே மரங்கள் வெட்டப்படுவதை இந்த அரசு உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

11 மாவட்டங்களிலே மதுரை மாவட்டத்திலே 4 தாலுக் காக்களை மட்டும் அறிவித்திருக்கிறீர்கள். பெரியாறு பாசனம் பெறும் ஒரு பகுதியைத் தவிர மற்ற எல்லாப் பகுதிகளையும் இதிலே சேர்க்கவேண்டும். அங்கே மற்றப் பகுதிகளில் எல்லாம் காட்டு வெள்ளாமை என்று சொல்லப்படுகிற சோளம், கம்பு ராகி கூட இல்லாமல் போய்விட்டது. ஆகவே அந்த ஒரு பெரி யார் பாலம் பகுதியை விட்டுவிட்டு மற்றப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. எல்லா ரோட் களுக்கும் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினை எங்கெங்கே அது இருந்தாலும் அது 31 மார்ச்சுக் குள்ளாக தீர்க்கப்பட வேண்டுமென்று முடிவு எடுத்துக்கொண்டு அதற்குள்ளாக கட்டாயமாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்தாக வேண்டும், ஆழ்கிணறு தோண்டியோ, நிலத்தடி நீரைக் கொண்டு வந்தோ இந்தப் பிரச்சினையைத் தீர்க்கிற நிலைமையை இந்த அரசு உருவாக்கினால்தான் எல்லோருக்கும் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கும். இங்கே தண்ணீர் விநியோகம் செய்யக்கூடிய மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். தண்ணீர் இருக்கிறதோ. இல்லையோ ஒரு போர்வெல் ரிப்பேராகி விட்டால் அதைக் கழற்றிப் போட்டுவிட்டால் அதை ரிப்பேர் செய்வதற்கு ஆறு மாதமோ, ஒரு வருஷமோ, ஒன்றரை வரு ஷமோ ஆகியும் ரிப்பேர் செய்யாத நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, ரிப்பேர் செய்யும் வேலையை யூனியன் கமிஷனர்களின் பொறுப்பிலே அல்லது water Board என்ஜினியர் களின் பொறுப்பிலோ இருவரும் சேர்ந்து செய்யச் சொன்னால் நன்றாக இருக்கும். ஏனென்றால் யூனியனைச் சேர்ந்தவர்கள் மக்களை அடிக்கடி அணுகி உடனடியாக செய்யக் கூடியவர்கள்





ஆகையால் அவர்களும், இவர்களும் ஒன்றாக இணைந்து எப் படியோ 31-க்குள் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டு மென்று சொல்லி முயற்சியெடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது வரிவஜா செய்கிறோம். இன்றைக்கிருக்கின்ற நிலைமையில் கிராப் லோன், மூன்று வருஷ லோன், ஒரு வருஷ லோன் என்று விவசாயிகள் வாங்கியிருக்கிறார்கள். கிராப் லோன் வாங்கியவர்களுக்கு மூன்றாண்டுகளாகவும், ஒரு வருஷ லோன் வாங்கியவர்களுக்கு மூன்றாண்டுகளாகவும், மூன்று வருஷ லோன் வாங்கியவர்களுக்கு ஐந்தாண்டுகளாகவும், ஐந்து வருஷ லோன் வாங்கியவர்களுக்கு ஏழு ஆண்டுகளாகவும் திருப்பிக் கொடுக்கிற காலத்தை நீட்டித்துக் கொடுத்து, பிறகு வசூல் செய்தால் சற்றுச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரிய பெரிய அணைகளை நாம் கட்டியிருக்கிறோம். இப் பொழுது மழையில்லாமல் தண்ணீர் இல்லாத சூழ்நிலை இருக் கிறது. கிராமங்களில் 1 ஏக்கர், 2 ஏக்கர், அரை ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களால் கிணறு வெட்ட முடியவில்லை. மானம் பார்த்த பூமியில் வாழ்கின்றவர்களுக்கும் உதவி செய்யும் வகை யில், 30 ஏக்கர் அல்லது 50 ஏக்கர்களுக்குப் பலனளிக்கக்கூடிய வகையில் ஆழ் கிணறுகளை வைத்து, அவைகளின் பம்பு செட்டு களை வைத்துக் கொடுக்க வேண்டும். இதற்காக யாரிடத்தி லேயும் கேட்கவும் வேண்டாம். இந்த நிலம் யாருடையது என்ற கேள்விகளையெல்லாம் கேட்காமல்,— எப்படி மின்சாரக் கம்பங் கள் நடும்பொழுது யாரையும் கேட்காமல், யாருடைய பர்மி ஷனையும் பெறாமல் டிரான்ஸ்பார்மர்கள் போடுகிறார்களோ அதைப்போல— தண்ணீர் எங்கே கிடைக்கும் என்பதை வாட்டர் டிவைனர் மூலமாகவோ அல்லது என்ஜினியர்கள் மூலமாகவோ பரிசீலித்து எங்கெங்கு தண்ணீர் கிடைக்குமோ அங்கெல்லாம் ஆழ் கிணறுகளைப் போட்டு பம்பு செட்டுகள் மூலமாகத் தண்ணீர் கொடுத்து அந்த விவசாயிகளுக்கு உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரியார், வைகை என்று அணை கட்டுகிறோம். அவர்களிடமிருந்து வாட்டர் செஸ் என்று வசூல் செய்வதைப் போல, அந்த அடிப்படையில் இதைச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

ஒவ்வொரு ஊர்களிலும் பெரிய கண்மாய்கள் இருக்கின்றன. அவைகள் இப்பொழுது வறண்டு போயிருக்கின்றன. மழையில்லாத காரணத்தால், அங்கே சமுத்திரத்தைப்போன்று பெரிய காமன் வெல் வெட்டி, அதில் 20 ஹார்ஸ் பவர் அல்லது 10 ஹார்ஸ் பவர் பம்பு செட்டுகளை வைத்துச் சுற்றியுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுத்தால் ஓரளவு வறட் சியைப் போக்க முடியும்; விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு சிறு விஷயத்தையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. மரங்கள் வெட்டப்படுகின்றன. மரங்களை வெட்டுபவர்களுக்கு தண்டனை, வெட்டுவதைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் தண்டனை என்ற நிலையை உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் ரெவின்யூ இடத்திலும், பாரஸ்ட் இடத்திலும் இருக்கும் மரங்களை பாதுகாக்க முடியும். அவ்வாறு மரம் வெட்டப்படாமல் இருந்தால்தான் மழையும் பெருகி இந்த ஆட்சியும் மிகவும் சிறந்ததாக இருக்கும். இந்த நாட்டு மக்களும் பாதுகாக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது வேலைக்கு உணவுத் திட்டம் என்ற திட்டத்தை நம்முடைய அமைச்சரவை கொண்டு வந்திருக்கிறது. இதனால் உணவு கிடைக்காமல் வாடி வதங்கிக்கொண்டிருந்த மக்கள் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் வேலைசெய்து அரிசினை பெற்றுக்கொண்டு வேலை செய்கிறார்கள். இதன் காரணமாக அந்த மக்களுக்கு ஓரளவுக்குப் பிழைப்பிற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இரண்டொரு நாட்களுக்கு முன்பு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது கூறினார்கள், தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிக் கூறுகையில் 31-ஆம் தேதியோடு முடியும் என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும் ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகளைச் செய்ய முடியாமல், மண் வெட்ட முடியவில்லை, ரோடு போட முடியவில்லை எனவே, நான் மூன்று மாதங்கள் ஐந்து மாதங்கள் என்று சொல்லவில்லை, இரண்டு மாதங்களுக்கு மட்டும், இப்பொழுது மார்ச் மாதம் நடக்கிறது, ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கி, ஏற்கனவே விட்டுவிட்ட வேலைகளைச் செய்வதற்கு வாய்ப்பு கொடுத்தால் நல்ல முறையில் இருக்கும். என்னுடைய தொகுதியில், நிலக்கோட்டை தொகுதியில் தன்னிறைவுத் திட்டம் நல்ல முறையில் நடக்கிறது, அதை நான் பாராட்டுகிறேன்.

[பிற்பகல் 1.30]

ஆனால், இந்தச் சிறிய விவசாயிகளுக்கு லோன்களை எப்படி தள்ளுபடி செய்கிறோமோ, அதைப் போல் நடுத்தர விவசாயிகள், அதற்கு மேற்பட்ட விவசாயிகளின் கஷ்டத்தையும் உணர்ந்து அவர்கள் வாங்கியுள்ள கடன்களுக்கு வட்டியை மட்டும் தள்ளுபடி செய்து அசலை வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்வதோடு வாங்கிய கடன்களுக்கு காலகெடுவும் நீட்டிக் கொடுக்க வேண்டுமாய் கேட்டு முடித்துக் கொள்கின்றேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



பிற்பகல் 4—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 7. அரசினர் தீர்மானம். (தொடர்ச்சி]

### தமிழ்நாட்டில் வறட்சி நிலை-விவாதம்—தொடர்ச்சி.

திரு. எஸ். சிவராமன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டில் நிலவுகின்ற கடும் வறட்சியைக் குறித்து, காங்கிரஸ் கட்சியின் சார்பில் தென்னார்க்காடு மாவட்டத்தைப் பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். இன்று பருவ மழை குறிப்பாக எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டிலே பொய்த்திருக்கிறது. அந்த அளவுக்கு மழை இல்லாத காரணத்தால் கிராமப்புறத்துலே மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மழை இல்லாத காரணத்தால் விவசாயம் பாதிக்கப்பட்டு, ஆடுமாடுகளுக்குக்கூட தீவனம் கிடைக்காத நிலை இருக்கிறது. குறிப்பாக குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் கிராமத்தில் இருக்கின்ற விவசாய மக்கள் வேலை தேடி வெளி மாநிலங்களுக்குச் செல்லுகின்ற நிலை இருக்கிறது. அதே நேரத்தில் யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டதைப்போன்று தென்னார்க்காடு மாவட்டத்துக்கு 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. தென்னார்க்காடு மாவட்டம் மிகவும் பெரிய மாவட்டமாகும். அங்கே இருக்கக் கூடிய மக்களுக்கு சின்னசேலம் பகுதியில் மிகவும் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அதனை அடுத்து விருத்தாசலத்திலேயும், மங்களூர், நல்லூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலேயும், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் ரிஷிவந்தியம் பகுதிகளிலேயும் மிகக் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. காரணம் இந்த ஆண்டு முழுவதும் மழையே பெய்யவில்லை. ஏர் பூட்டி உழுவதற்குக்கூட மழை இல்லாத அளவுக்கு வரண்டு விட்டது. கோமுகி அணை, மணிமுத்தாறு அணை போன்றவைகள் இருந்தும், அங்கே இருந்த பொறியாளர்கள் வெள்ளம் வந்த நேரத்தில் அந்தத் தண்ணீரை தேக்கி வைக்காமல், மழை வரும், அணை உடைந்து விடும என்று காரணம் காட்டி, அந்தத் தண்ணீரை ஆற்றிலே விட்டு விட்டார்கள். அதனாலே அங்கே தண்ணீர் இல்லாத காரணத்தால் புஞ்சைப் பயிர் செய்யக்கூடிய நிலைதான் ஏற்பட்டுள்ளது.

ஆடுமாடுகளுக்கு, கால்நடைகள் மேய்வதற்கு புல் இல்லை. புல் வைக்கோல்கள் இல்லை. நெல் உற்பத்தி செய்ய முடியாத நிலை இருக்கின்றது. மேலும் கேரள மாநிலத் தி

இருந்து பெரும் வியாபாரிகள் ஆடு மாடுகளை மிகவும் குறைந்த விலையில் வாங்கிச் செல்லுகிறார்கள். 2,000 ரூபாய் பெறுமானம் உள்ள மாடுகளை ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக வாங்கிச் செல்லுகிறார்கள்.

குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணம் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செலவிடப்பட்டு, அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செயல் படுகின்ற முறைகளைப் பார்க்கிறபோது மிகவும் வேதனையாக இருக்கிறது. குடிநீர் வாரியத்தின் சார்பில், கடலூரில் ஒரு கருத்தரங்கு நடத்தினார்கள். அதில் நானும், விருத்தாசலம சட்டமன்ற உறுப்பினர் திரு. தியாகராசன அவர்களும், புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் வி. வி. சுவாமிநாதன் அவர்களும் கலந்து கொண்டோம். அந்த நேரத்தில் என்னுடைய சின்னசேலம் பகுதியில் 75 கை பம்புகள் இருப்பதாகவும அதில் 25 பம்புகள் வேலை செய்யவில்லை என்றும சொல்லி, ரிப்போர்ட்டு கொடுத்திருந்தேன். ஆனால் ஏட்டுச் சுரைக்காய் கறி சமைக்க உதவாது என்பதைப்போல, இதுவரையிலும் அந்தக் குழாய்கள் ரிப்பேர் செய்யப்பட்டதாக தகவல் இலலை. இது சம்பந்தமாக நான் குடிநீர் வடிகால் வாரிய மேனேஜிங் டைரக்டரைச் சென்று பார்த்து முறையிட்டும் எந்தவகையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனக்கும் பதில் இல்லை. எனவே இது குடிநீர் வடிகால் வாரியம் என்பதைவிட குடிகெடுத்த வடிகால் வாரியம் என்றுதான் நான் சொல்ல வேண்டும்.

அந்த அளவிற்குத் தமிழக அரசு பணம் ஒதுக்கிக் கொடுத்தாலும், அங்கேயிருக்கும் அதிகாரிகள் சரியாகச் செயல்படாததால், கிராமப்புறங்களில் குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்ட ஆழ் குடிநீர் குழாய்கள் சரியாக அமைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கருத்தை இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் திரு. முத்தையா அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் எங்களைப் போன்றவர்கள் பேசியிருந்தால் அது வேறு விதமாக ஆகிவிடும். ஆனால் இந்தக் கருத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற, ராயப்பனூர், செல்விப்பாளையம், போன்ற இடங்களில் 100-க்கு 60 சதவிகித மக்கள் வறட்சிக்கு பயந்து அண்டை மாநிலங்களான மைசூர், ஆந்திரா போன்ற இடங்களுக்கு வேலை தேடி கால்நடையாகச் சென்று கொண்டு இருக்கிறார்கள். கடந்த 23-2-1981 அன்று என்னுடைய தொகுதியில் நான் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மக்களின் குறைகளை அறிந்தேன். அப்போது அவர்கள் சொன்ன நிலைமைகளைக் கேட்டு மனம் வேதனை அடைந்தேன். மக்கள்





கண்ணீர் வடித்து என்னிடத்தில் சொன்னார்கள், குடிப்பதற்கு கூட அங்கே தண்ணீர் இல்லை. ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னார்கள். இதையெல்லாம் கேட்பதற்கு மனம் வேதனையாக இருந்தது. ஆகவே, அந்தக் கிராம மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தேவையான பொருள் கிடைக்கவில்லை. பொருள் வினியோகிக்க அங்கேயுள்ள அதிகாரிகளுக்கு ஆணையிட்டு, அந்த கிராமங்களிலே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 'அமுதம்' அங்காடியைத் திறந்து வைத்து, ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டும என்று கேட்டு, முடிக்கிறேன்.

**திரு. வ. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பல மாவட்டங்களில் மழையின்மையால் வறட்சி ஏற்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் என்றாலே வறட்சி மாவட்டம் என்று எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இந்த ஆண்டு வறட்சியாலே ஒரு பெரிய புரட்சியே ஏற்பட்டு இருக்கிறது. 'தினைத் துணை நன்றி செயினும் பனைத் துணையாகக் கொள்வர் பயன் தெரிவார்' என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க எங்கள் மாவட்டத்திற்கு ரூ. 50 இலட்சம வறட்சிப் பணிக்காக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது உள்ளபடியே அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த வறட்சி நேரத்தில் கவனிக்கப்பட வேண்டிய முதல் பிரச்னை குடிநீர் பிரச்னையாகும். அது ஒரு தலையாயப் பிரச்னையாக இருக்கிறது என்று சொன்னால அது மிகையாகாது. அது உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்னையாகும். 'நீரின்றி அமையாது உலகு' என்பதற்கொப்ப முதற்கண் அந்தப் பிரச்னையைத் தீர்க்க வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்காங்கு நியாய விலைக்கடைகள் திறந்து, அரிசி, மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களையும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கால்நடைகளுக்கும் தீவனம் போன்ற பொருள்கள் மலிவு விலையில் கிடைக்க தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் கால்நடைகள் செத்து மடிந்து விடும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவில் கால்நடைச் செல்வங்கள் எப்படி உள்ளன என்பதை நான் சொல்லி இங்கே தெரிந்து கொள்ளவேண்டிய நிலைமையில் யாரும் இல்லை என்று கருதுகிறேன். ஏராளமான கால்நடைகள் இங்கேயுள்ள உஷ்ணம் தாங்காமல், பல விதமான நோய்களுக்கு குறிப்பாக கோமாறி நோய்க்கு உட்பட்டு மடிந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே, இந்தக் கால்நடைகளைக் காப்பாற்ற அரசு விரைவில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வ. பாலகிருஷ்ணன்] [1981 மார்ச் 4

சிவகாசி கோட்டத்தில் இராஜபாளையம், வத்திராயிருப்பு
ஒன்றியங்கள் நீங்கலாக, மற்ற ஒன்றியங்களில் வறட்சி நிலவத்
தான் செய்கிறது. மதிப்பிற்குரிய சிவகாசி கோட்ட வளர்ச்சி
அதிகாரி அவர்களையும், முகவை மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்களையும் நானே நேரடியாகச் சென்று சந்தித்து விவரங்
களைக் கூறிவிட்டு வந்திருக்கிறேன். பெரும்பாலான கிராமங்
களில் வானம்பார்த்த கரிசல் மண் பூமியில தான் விவசாயம்
செய்கிறார்கள். அங்கே விவ்சாயம் பொய்த்து விட்டது. ஏதோ
ஓரிரு கிராமங்களில் குளங்களில் நீர் உள்ளது. அதன் காரண
மாக அவர்கள் அறுவடை செய்திருக்கிறார்கள். அதை வைத்துக்
கொண்டு சிவகாசி கோட்டத்தை வறட்சித் திட்டத்தில் சேர்க்
காமல் இருப்பது நியாயமாகாது. ஆகவே, சிவகாசி கோட்
டத்தை வறட்சித் திட்டத்தில் சேர்த்து, அங்கேயும் நிவாரணப்
பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

தர்மத்தின் தளநாயகன், நாலரைக்கோடி தமிழர்களின் நம்
பிக்கை நட்சத்திரம், அண்ணாவின் இதயக்கனி, நம் அனைவரின்
இதய தெய்வம் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வறட்
சிக்கு இலக்கு ஆகாமல் இருக்க முகவை மாவட்டத்தின் மீது
தனி பாசம் கொண்டு இடுக்கியாறு திட்டத்தை முடுக்கி விட,
அண்மையில் கேரள மாநில முதல்வருடன் பேச்சு வார்த்தை
நடத்தியுள்ளார்கள். இது வெற்றி பெற்றால் நாங்கள் என்றும்
அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்போம். அதன்
மூலம் வறட்சி நீங்கி வாடாமலராகக் காட்சியளிப்போம் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 4-10.]

மக்களுக்கு இந்த காலத்தில்தான் சின்னம்மை, சிற்சிறுப்பை
(மணல்வாரி நோய்) போன்றவை அதிகமாகத்தோன்றக் கூடும்.
ஆகவே, ஆங்காங்கே மருத்துவ மனைகளிலும் ஆரம்பச் சுகாதார
நிலையங்களிலும் போதிய அளவுக்கு மருந்துகளை வழங்கி, தகுந்த
தற்காப்பு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கு முகவை மாவட்டத்தில் ஒரு அணை கட்ட உத்தே
சித்து, பணி தொடங்கப்பட்டுள்ளது. விரைவில் அந்தப் பணி
செய்து முடிக்கப்பட்டால் இந்த கஷ்டமான நேரத்தில் பல மக்
களுக்கு வேலைவாய்ப்பு கிட்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

பல இடங்களில் ஏரி, குளங்களை ஆழப்படுத்தியும், சாலை
களை விரிவுபடுத்தியும், பாலங்கள் கட்டியும் வேலைவாய்ப்புகளை
உருவாக்கினால் இந்த வறட்சியிலிருந்து மக்களுக்கு ஓரளவு பாது
காப்பு கிடைப்பதுடன் நிரந்தரமான ஒரு பொருளாதார நிவாரண
மும் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

(அடுத்த உறுப்பினர் அழைக்கபபட்டார்.)



1981 மார்ச் 4]

திரு. கே. தனுக்கோடித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி நடக்கின்ற நேரத்தில் இயற்கையின் கொடுமையால் இங்கே வறட்சி ஏற்பட்டுள்ளது. இந்த இயற்கையின் கொடுமையால் ஏற்பட்டுள்ள வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பகுதி மக்களின் பிரதிநிதியாக அகில இந்திய பார்வெர்டு பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இங்கே அமைச்சரவர்கள் வைத்திருக்கிற அறிக்கையிலே குடிநீருக்காக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக இயற்கையினுடைய அமைப்பிலே இருந்த முகவை மாவட்டம் இயற்கை பொய்த்து போனால் அங்கே எவ்வளவு பெரிய கஷ்டம் இருக்கும் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். இந்த நிலையில் அந்த மாவட்டத்திற்கு கொடுத்திருப்பது 50 இலட்சம் ரூபாய். அங்கே தோண்டுகின்ற இடம் எல்லாம் உப்புத் தண்ணீர்தான் வரும். அப்படிப்பட்ட ஒரு மாவட்டத்திற்கு இந்த 50 இலட்சம் ரூபாயில் நிவாரணம் அளிப்பது சாத்தியமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 50 இலட்சம் ரூபாயில் அங்கே லாரிகளில் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்க முடியுமா என்றால் நிச்சயமாக போதாது கிணறுகளை ஆழப்படுத்தி அல்லது புது கிணறுகளை அமைத்து தண்ணீர் கொடுக்கவும் சாத்தியம் இல்லை. ஆகவே, இந்த 50 இலட்சம் ரூபாய் எந்தவகையிலும் போதாது.

பெரிய மாவட்டமான முகவை மாவட்டத்தில் 34 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. குறிப்பாக இராஜபாளையம் ஒன்றைத் தவிர மற்ற எல்லா பகுதிகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அந்த மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறை கடுமையாக இருப்பதனால் அங்கே அரசு தனிக் கவனம் செலுத்தி, குடிதண்ணீர் வழங்கக் கூடிய வகையில் அங்கே ஒரு போர்க்கால நடவடிக்கைபோல் காரியங்கள் செய்ய வேண்டும். அங்கே குடி தண்ணீர் பற்றாக்குறையை இந்த வறட்சியில் மட்டும் போக்கினால் போதாது. நிரந்தரமாக அங்கே தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆண்டுதோறும் அங்கே வறட்சி வருகிறது. வறட்சி வருகின்றபோது பல கோடி ரூபாய் செலவழித்தாலும் அதற்கு ஒரு நிரந்தரமான ஏற்பாடு செய்ய வேண்டும். கொஞ்சம் கூடுதல் பணச் செலவு ஏற்பட்டாலும், ஆண்டுதோறும் செலவு செய்வதை உத்தேசித்து, வைகை ஆற்றிலிருந்து அங்கே தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்தால் குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதுடன் நீர்ப்பாசன வசதிக்கும் வழிவகை ஏற்படும் என்று கருதுகிறேன். ஆகவே, அரசாங்கம் அதற்கு ஏதாவது ஒரு முடிவு

எடுத்து, வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கோ அல்லது வேறு ஏதாவது மாற்றுத் திட்டம் மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கோ ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மலட்டாற்றுத் திட்டம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அங்கே மலைப்பாங்கான பகுதிகள் இருப்பதால் மழைக் காலங்களில் தண்ணீர் வீணாக ஓடி சமுத்திரத்திலே கலந்து விடுகின்றது. ஆகவே அந்த நீரைத் தேக்குகின்ற வகையிலே மலட்டாற்றுத் திட்டத்தை நிறைவேற்றி விட்டால் அந்தப் பகுதிகளிலே குடிநீர் பிரச்சினை இருக்காது என்பதை சொல்லிக்கொள்கிறேன். ஆகவே உடனடியாக மலட்டாற்றுத் திட்டத்தை நிறைவேற்றித் தருகின்ற வகையில் இந்த ஆண்டாவது அதற்கான நிதியினை ஒதுக்கி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்

திரு. தனுக்கோடித் தேவர் : வறட்சியால் அதிகம் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை காரணமாகவும் வேலை வாயப்பு இல்லாததாலும் அங்கே கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் தஞ்சை, மதுரை நெல்லை போன்ற மாவட்டங்களுக்குச்சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில்உடனடியாக வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும். அப்படி வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்கின்றபோது நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நேரடியாக வந்து அங்குள்ள நிலைமைகளை நேரில் காண வேண்டும். நாங்கள் சொல்வது உண்மையா பொய்யா என்பதை நேரில் காணவேண்டும். அப்படிப்பார்த்தால் நான் தெரியும்.

(மணியடிக்கப்பட்டது.)

அடுத்து நான் சென்னைக்கு வருகின்ற நேரத்தில் 500 பேர்கள் அங்கே இருந்து தஞ்சைக்குச் சென்று விட்டார்கள். அவர்களிலே ஒருவர் என்னுடைய வீட்டிற்கு வந்து 'என்னுடைய குடும்பத்தை கூட்டிக்கொண்டு சென்று விட்டேன், ஆகவே எங்களுடைய வீடுகளை பாதுகாத்துக் கொடுக்க வேண்டும்' என்று சொன்னார்கள். (மணியடிக்கப்பட்டது).

*திரு. கே நாரயணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாட்டிலே பருவமழை பெய்யத் தவறியதன் காரணத்தால் ஏற்பட்டிருக்கின்ற வறட்சி பற்றி பேசுவதற்கு வாய்ப்பளித்த வருவாய்த்துறை அமைச்சரவர்களுக்கும் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற நிலைமை பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.





இப்போது மழை பெய்யவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். 6 மாதங்களுக்கு முன்பு அதாவது ஆடி மாதம் விட்ட நாற்று இன்னும் நடப்படாமல் இருக்கின்றன. நெற்பயிர்கள் எல்லாம் காய்ந்துவிட்டன. அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. கூலி ஆட்களுக்கு வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் ஆகாரத்திற்கு வழியில்லாத நிலையில் இருக்கிறார்கள். சர்க்காரின் கணக்குப் பிரகாரம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் 51 சதவீதம் என்று சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்டவர்களுக்கு தினமும் ஒரு கிலோ அரிசி பிரி டிஸ்டிரிபுஷனாக கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து அரசு எதற்கெடுத்தாலும் நிதியுதவி இல்லை என்று சொல்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே இதற்காக ஒரு சப் கமிட்டி ஒன்றை நியமித்து மத்திய அரசிடமிருந்து போதிய நிதியினைப் பெறுவதற்காக நாம் போராடுவதற்கு முன்வர வேண்டும். மழையின் அளவு மிகவும் குறைந்துகொண்டே வருவதால் மக்கள் கர்நாடக மாநிலத்திற்கு சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இங்கேயே வாழ்வதற்கு வழி செய்ய வேண்டும். எங்களுடைய தொகுதியில் குடிநீர் பற்றாக்குறை மிகவும் அதிகமாக இருக்கின்றது. எங்களுடைய ஊரில் இருக்கின்ற மக்கள் எல்லாம் குடிநீர் கிடைக்காத நிலையில் பயிர் நிலங்களுக்கு அருகே இருக்கின்ற கிணறுகளுக்குச் சென்று தண்ணீர் இறைத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க வேண்டும் என்றால் வாட்டர் போர்டு செய்ய வேண்டிய குழாய்களை ஏற்படுத்தும் வேலையை பஞ்சாயத்துகளுக்கு கொடுத்தால் உடனடியாகத் தண்ணீர் பஞ்சம் தீரும்.

[மாலை 4-20]

20 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மாதிரி கடுமையான பஞ்சம் வந்தபோது அப்போது இருந்த அரசாங்கம், கோதுமையையும், அரிசியும் கொடுத்து, கஞ்சிகாய்ச்சி ஊற்றுவதற்கு கஞ்சித்தொட்டி ஏற்பாடு செய்தார்கள். அதேபோன்று இந்த அரசு செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே திருவண்ணாமலை முக்கியமான நகரம். அந்த நகரத்திலே குடிதண்ணீர் பிரச்னை பிரதானமாக இருக்கிறது. சாத்தனூர் டேம் இருக்கிறது, அதிலே தண்ணீரும் இருக்கிறது. ஆனால் மின்சாரம் இல்லாத காரணத்தால் அதிலிருந்து தண்ணீரை எடுக்க முடியவில்லை. அத

னால் உடனடியாக அரசு இதில் தீவிரமாக தலையிட்டு, மின்சாரம் கொடுத்து-மின்சாரம் கிடைக்கவில்லை என்றால், ஜெனரேட்டர்களையாவது பொருத்தி, நகரம் முழுவதும் தண்ணீர் சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அது மட்டும் அல்லாது, திருவண்ணாமலையில் சில இடங்களில் ஆழ்கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன. அவைகளை இன்னும் ஆழமாகத் தோண்டுவதன் மூலம் தண்ணீர் சப்ளையை அதிகமாகச் செய்ய முடியும் என்று கேட்டுக் கொண்டு, அதற்கு அரசு ஆவன செய்ய முன் வர வேண்டும் என்று கோருகிறேன்.

எங்கள் தொகுதியிலே, விவசாயம் செய்கிற மாடுகளுக்குக் கூட தீவனம் கிடைக்கவில்லை. அதனால் ஆடுமாடுகளை சந்தையிலே கொண்டுபோய் விற்கும்போது பாதி விலைக்குத்தான் விற்க முடிகிறது. அதனாலே வெளியிடங்களில் எங்கே மாட்டுத் தீவனங்கள் கிடைக்கிறதோ அவைகளை வாங்கி இதுபோன்ற பகுதிகளில் அரசே சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரக் கட்டணங்களை எல்லாம் விவசாயிகள் ஒழுங்காகத்தான் கட்டிக் கொண்டு வந்தார்கள். சென்ற இரண்டு ஆண்டுகளாக அரசாங்கம் கடுமையாக அவைகளை வசூல் செய்யாததினால், பஞ்சமும் ஏற்பட்டு விட்டதினால் அந்த விவசாயிகளினால் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் போய் விட்டது. அப்படி இரண்டு ஆண்டுகளாக சேர்ந்து விட்ட மின்சாரக் கட்டணத்தை, இப்போது பஞ்சம் ஏற்பட்டிருக்கும் நிலையில் பஞ்சப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிற இடங்களில் மொத்தமாக வசூல் செய்வது வருந்தத்தக்கது. அது விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. ஏனென்றால் அதுவரையில் விவசாயிகள் ஒழுங்காகத்தான் கட்டிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அதனால் அந்த நடவடிக்கைகளை நீக்க வேண்டும்.

அடுத்து என்னவென்றால், சிறு விவசாயிகளுக்கு கடன் கூட பெற முடியவில்லை தற்போது. கடன் கொடுக்கக்கூடிய சொசைட்டிகளை எல்லாம் மூடிவிட்டார்கள். அவர்கள் வெளியே கடன் பெறவேண்டும் என்றால், நகை வைத்திருக்கும் விவசாயிகள் தான் பெற முடியும். ஆகவே அந்த சொசைட்டிகளை உடனடியாகத் திறந்து திரும்பவும் கடன் வழங்க முன் வர வேண்டும் என்று கோருகிறேன்.

அடுத்து வேட்டவலம் என்ற இடத்தில் தண்ணீரே இல்லை. வாட்டர் போர்டு அதிகாரிகள் ஒரு டேங்க் ஒன்று கட்டியிருக்கிறார்கள். அந்த டேங்க் நிரம்பிவிட்டதாக சொல்கிறார்கள். ஆனால் இன்னும் திறக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையிட்டு இதனை திறந்துவைத்து குடி





தண்ணீர் சப்ளை அந்தப் பகுதி மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு
செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தண்ணீர்
கிடைக்காத இடங்களில் லாரிகளை வைத்து தண்ணீர் பிடித்துக்
கொண்டு போய் பொது மக்களுக்கு சப்ளை செய்யும் வகையில்
ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஒரு மருத்துவ மனை இருக்கிறது.
அங்கே குடிக்கத் தண்ணீரே கிடையாது. அங்கே ஊழியம்
செய்யும் டாக்டர்களும், அதிகாரிகளும் மற்றவர்களும் மிகவும்
கஷ்டப்படுகிறார்கள். அங்கே மின்சார விளக்குகள் சரியாக
எரிவதில்லை. அதனால் அவசியமான காலங்களில் மின்சாரம்
இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே உடனடியாக அரசு
இதில் கவனம் செலுத்தி அங்கிருக்கும் குழாய்களை ரிப்பேர்
செய்தும், ஜெனரேட்டர்களைப் பொருத்தி அவர்களுக்கு
வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு
சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.
வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வி. சுவாமிநாதன் தலைமை)

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, வறட்சி நிலை பற்றி பேச வாய்ப்பு அளித்த
மைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் வறண்டு, பல்வேறு வகை
களிலும் வறட்சியால் பாதிக்கப்பட்டு, வளம் இன்றி உள்ளது.
புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அதனை நீக்க தக்க நட
வடிக்கை எடுத்த போதிலும் என்னுடைய ஆலங்குடி தொகுதி
யிலே வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் வேலை வாய்ப்புத்
தேடி தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.
விவசாயத்தையே பெரிதும் நம்பியிருக்கும் அந்தப் பகுதி
மக்களுடைய குறையைத் தீர்க்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஆழ் கிணறுகளை தோண்டி நிலத்
தடி நீரை மேலே கொண்டு வந்து குடிதண்ணீர் பிரச்சினையை
போக்க அரசு உடனடியாக முயற்சி எடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். இந்த நீர் வறட்சியைப் போக்க உடனடி
யாக புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் ஆர்டிஷியன்
குழாய்களைப் போட்டு, தண்ணீரை சப்ளை செய்ய ஏற்பாடு
செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்க
ளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் குளமராமத்து,
ரோடு மராமத்து போன்றவற்றிற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டு
எல்லா பொது மக்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பெ. திருமாறன்] [1981 மார்ச் 4

அடுத்தபடியாக, கீரமங்கலம், குளமங்கலம், வடகாடு போன்ற பகுதிகளில் கிணறுகளை ஆழப்படுத்த ஐயாயிரம் பேர்கள் பூமிக்கு அடியிலேயே பகல் பூராவும் இருக்கிறார்கள். காரணம் கேணிகளை ஆழப்படுத்தினால் தான் அந்தப் பகுதி மக்களுக்கு குடிக்க நீர் கிடைக்கும். அந்தப் பகுதி மக்களுக்கு கூட்டுறவு சங்கங்களில் கடன் பாக்கியிருப்பதால் லோன்கள் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அங்குள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் கிணறு ஆழப்படுத்துவதற்காக ரூ. 500 மானியமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கிணறுகள் ஆழப்படுத்த வட்டியில்லாக் கடனும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் தொழிற்சாலைகள் கிடையாது. அதன் காரணமாக அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வழியில்லாமலிருக்கிறது. அங்கு ஒரு வனஸ்பதி தொழிற்சாலை அமைத்துத் தரவேண்டும் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேயே கேட்டிருந்தேன். ஆகவே எங்கள் பகுதியில் தொழிற்சாலைகள் அமைத்து அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகள் செய்துதரவேண்டும்.

எங்களது மாவட்டத்தில் கால்நடைகள் வறட்சி காரணமாக மாமிசத்திற்காக விற்கப்படுகிறது. எனது பகுதி பின்தங்கிய பகுதியாகும். எனது ஆலங்குடி தொகுதி வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டு அங்கே தண்ணீர் இல்லாமல் கால்நடைகளுக்கு மேய்ச்சலுக்கு வழி இல்லாமல் அங்குள்ள மாடுகளை சந்தைக்கு ஓட்டும்போது ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய மாடுகளை ரூ. 500, ரூ. 200 என்ற விலைக்கு போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் உள்ள மாடுகளுக்கு தீவனம் வழங்குவதற்கு இந்த அரசு தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசை அணுகி இங்கு ஏற்பட்டுள்ள வறட்சியைப் போக்க நிவாரணம் கேட்டு தமிழ்நாட்டிலுள்ள வறட்சி நிலையைப் போக்கவேண்டும்.

எனது மாவட்டத்தில் அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீருக்காக ஒதுக்கப்படுகிற பணம் அத்தனையும் செலவழிக்கப்படுவதில்லை. காரணம் போதுமான அளவிற்கு ட்ரில்லர்ஸ் கிடைப்பதில்லை. ஆகவே போதுமான அளவிற்கு ட்ரில்லர்ஸ்களை கோவை போன்ற இடங்களிலுள்ள கம்பெனிகளிலிருந்து வாங்கி அதை பயன்படுத்தி குடிநீர் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வறட்சி காரணமாக வாடுகிற கால்நடைகளுக்கு போதுமான அளவுக்கு தீவனங்கள் கிடைக்க வகை செய்ய வேண்டும். கிணறுகளை ஆழப்படுத்த மானியம் கொடுக்க வேண்டும்.



1981 மார்ச் 4] [திரு. பெ. திருமாறன்]

அடுத்து, எங்கள் பகுதியில் உள்ள பள்ளிகளில் படிக்கக் கூடிய குழந்தைகள் வறட்சி காரணமாக போதிய உணவு கிடைக்காததால் பள்ளிகளுக்குச் செல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே பள்ளிக் குழந்தைகளுக்கு போதுமான அளவிற்கு மதிய உணவு வழங்கப்படவேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

எல்லா அமைச்சர்களும் அந்தந்த மாவட்டங்களுக்குச் சென்று அதிகாரிகளை முடுக்கிவிட்டு போர்க்கால நடவடிக்கை போன்று நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அதிகாரிகளும் புயல் நிவாரண வேலை போன்று வறட்சிப் பணிகளில் முழு மூச்சாக ஈடுபடவில்லை. ரெவின்யூ அமைச்சர் அவர்களும், செய்தி— அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் சென்றிருக்கிறார்கள். சென்று அதிகாரிகளை முடுக்கிவிட்டு வந்திருக்கிறார்கள்.

என் பகுதியில் புளிய மரங்களும் பனை மரங்களும் பட்டுப் போயிருக்கின்றன. வறட்சி காரணமாக எங்கள் பகுதி மக்கள் தஞ்சை மாவட்டத்திற்கு செல்லவேண்டிய நிலை ஏற்படலாம். அப்படி வறட்சி காரணமாக தஞ்சைக்கு செல்லும் போது தஞ்சை மாவட்டம் பாண்டிச்சேரிக்குப் போவதா அல்லது எந்தப் பகுதிகளுக்குப் போவது என்று தெரியவில்லை. ஆகவே அரசு தக்க நடவடிக்கைகள் உடனடியாக எடுத்து வறட்சியைப் போக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4.30]

* திரு இரா. கருப்பையா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சி சம்பந்தமாக அரசின் தரப்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே 11 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பிடாத மற்ற மாவட்டங்களிலும் வறட்சி நிலைமை பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழகத்தில் சமீப காலத்தில் ஏற்பட்டிராத அளவிலே மிகவும் கோரமான முறையில் இந்த வறட்சி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த வறட்சி நிவாரணப் பணிகளை முழுமையாக, நல்ல முறையில் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பாக திருச்சி மாவட்டத்தில், என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட மணப்பாறை தாலுகா முழுவதும் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி குளித்தலை வட்டத்தில், காவிரி பாயக்கூடிய பகுதிகள் தவிர, மிச்சமுள்ள அனைத்துப் பகுதிகளிலும் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டு வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரியலூர், பெரம்பலூர், உடையார்பாளையம் ஆகிய தாலுக்காக்களிலும், கரூர் தாலுகா முழுமையும்

[திரு. இரா. கருப்பையா] [1981 மார்ச் 4

வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் துறையூர் தாலுகாவும், முசிறி தாலுகாவில் மேட்டுப்பாளையம் போன்ற பகுதிகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டிக்கின்றன. ஆகவே, இந்த மாவட்டத்தில் பெருவாரியான பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. குளங்களில் தண்ணீர் இல்லாத அபாய நிலை அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இது சம்பந்தமான நில வரி, தண்ணீர் வரி ஆகியவைகளை முழுமையாக தள்ளுபடி செய்வதற்கு உத்திரவு இன்னும் பிறப்பிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. அரசு அவைகள் அனைத்தையும் தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். 37 பைசாவுக்கு குறைந்த வருமானம் வரக்கூடிய நிலங்களுக்கு தள்ளுபடி செய்வதென்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், நடைமுறையிலே அதிகாரிகள் அதிக வருமானம் வருகின்றது என்று குறிப்பிட்டு, இந்த தள்ளுபடி இல்லாத நிலைமையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது இயற்கையாகவே நடந்து வரக்கூடிய நிகழ்ச்சி. ஆகவே, இந்த வறட்சி நிலைமைகள் சரியான முறையிலே கணக்கிடப்பட்டு, நிவாரணம் கிடைக்க அனைத்து வரிகளும் தள்ளுபடி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அரசு கடனை ஒத்திவைப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அது மட்டும் போதாது. கூட்டுறவுக் கடன்களையும் ஒத்திவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். இன்றைய தினம் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பல்வேறு மாவட்டங்களுக்கு அரிசி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரிசி ஒதுக்கீடு சம்பந்தமாக திருச்சி மாவட்டத்திற்கு எதுவும் குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கதாகும். வட ஆற்காடு மாவட்டத்திற்கு 7,000 டன் அரிசியும், தென் ஆற்காடு மாவட்டத்திற்கு 500 டன் அரிசியும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 2,000 டன் அரிசியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்திற்கும் தேசியக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான அரிசி ஒதுக்கப்பட்டு, வறட்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யுத்த கால அடிப்படையில் இந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. ஆடு மாடுகளுக்கு தீவனம் இல்லை. விவசாயிகளுக்கு அவர்களுடைய பயிர்கள் பொய்த்து விட்டன, தீய்ந்து விட்டன. ஆகவே, அவர்கள் வாழ்வதற்கு வழியில்லை. எனவே, வறட்சி நிவாரணப் பணிகளை உடனடியாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இன்றைய தினம் அந்தப் பணிகளை நல்ல முறையிலே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவற்றைக் கண்காணிக்க அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் குழுக்களை



1981 மார்ச் 4] [திரு. இரா. கருப்பையா]

அமைக்க வேண்டும். மத்திய அரசுக்கு இதிலே மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது ; கடமை இருக்கிறது. எனவே, இந்த மன்றத்திலே இருக்கும் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஒரே குரலில் இந்த வறட்சி சம்பந்தமாகப் பேசியிருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க அம்சம். இந்த மன்றத்தின் சார்பாக தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சிக்கான நிவாரணம் சம்பந்தமாக மன்றம் ஏகோபித்த தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.

தமிழகத்திலே பரவலாக, பெருவாரியான இடங்களிலே ஏற்பட்டுள்ள வறட்சிக்கு மத்திய அரசை நிதி ஒதுக்க வேண்டுமென்று கோரி, அதற்காக உடனடியாக 100 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்க வேண்டுமென்ற தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டு, இந்தக் கருத்தை ஒரே குரலிலே ஒரு தீர்மானமாக போட்டு, இந்த மன்றத்திலே கொண்டுவந்து 100 கோடி ரூபாய் நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசிடம் கேட்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. எம். பிச்சை ; பேரவைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டுகளில் பருவமழை தவறியதன் காரணமாக, தமிழகத்தில் நிலவுகிற வறட்சி பல மாவட்டங்களில் மக்களை பாதித்திருக்கிறது என்பதால் தமிழக அரசு 439.87 இலட்சங்கள் ஒதுக்கியிருப்பதை பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அருப்புக்கோட்டைத் தொகுதியை உள்ளடக்கிய இராமநாதபுரம் மாவட்டம் தமிழகத்தில் பின்தங்கிய மாவட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிந்திருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை பெய்யத் தவறிவிட்ட காரணத்தால் அங்குள்ள குளங்களில் தண்ணீர் இல்லாமல் விவசாயம பாதிக்கப்பட்டு, நெற்பயிர் சாவியாகப் போய் விவசாயிகள் மிகவும் துன்பநிலையில் இருக்கிறார்கள், விவசாயிகள் படும் துயரத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாது. விவசாயக் குடும்பத்தில் பிறந்த காரணத்தால் சொல்கிறேன், விவசாயிகள் படுகின்ற துன்பத்தை இந்த பஞ்சத்தை நினைத்தாலே நெஞ்சம் வெடித்துவிடும் போல் இருக்கிறது. அவர்கள் மிகவும் பரிதாபகரமான சூழ்நிலையில் இருக்கிறார்கள், பூமி வறண்டு விட்ட காரணத்தால் நிலத்தடி நீர் கிடைக்கவில்லை. ஆடுமாடுகள், தண்ணீர் இல்லாமல் செத்துக் கொண்டு இருக்கின்றன. எனவே துரித நடவடிக்கை எடுக்க தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். 1974–75 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்திலே, இந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்டதால், இதை பஞ்சப் பிரதேசமாக பிரகடனம் செய்ய வேண்டுமென்று நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்

[திரு. எம். பிச்சை] [1981 மார்ச் 4

தின் சார்பாக வறட்சி நிவாரணம் கேட்டபோது அவர்களாகவே
முன்வரவில்லை. ஆனால் அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட
வர்கள், இப்போது மாண்புமிகு அமைச்சர்களாக இருக்கிற காரணத்
தால் இதற்கு பல இலட்சக்கணக்கான பணத்தைக் கொடுத்து
இருப்பதை காணும் போது நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.
என்னுடைய பகுதியிலே மாண்புமிகு முதல்வர் அப்போது
முகவை மாவட்டத்தில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம்
இருந்து மக்கள படும் துன்பத்தைப் பார்த்து, கிராமங்களில்
கஞ்சித் தொட்டிகள திறந்து வைப்பதற்காக, முகவை மாவட்டத்
தின் அமைப்பாளராக இருந்த, இப்போதைய மாண்புமிகு விவ
சாயத் துறை அமைச்சர் அவர்களிடம் ஏறத்தாழ
1¼ இலட்சம் ரூபாயைக் கொடுத்து, அங்கே கஞ்சித்
தொட்டிகளைத் திறந்தார்கள். அவர்களே இப்போது முதல்வர்
அவர்களாக இருக்கிற காரணத்தால் அங்கு முகவை
மாவட்டத்தில் மக்கள் படுகின்ற துன்பத்தை அறிந்து
அவர்களை வறட்சியிலிருந்து பாதுகாப்பதற்காக முன்
வருவார்கள் என்பதைக் கூறி, முகவை மாவட்ட மக்கள் நன்றி
உடையவர்கள், எப்போதும் நன்றி மறந்தவர்கள் அல்லவென்றும்
சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். என்னு
டைய முகவை மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அருப்புக்கோட்டை தொகுதிக்கு
கிருதமால் நதி திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தார்
கள். ஆனால் பணத்தைச் செலவு செய்யாமலிருக்கிற நிலையை
அறிகிறேன். அந்தப் பணத்தை இந்தப் பகுதியில் செலவு செய்
தால் இருக்கக்கூடிய வறட்சி நிலையைப் போக்குவதற்கு ஒரு
சந்தர்ப்பம், சூழ்நிலை ஏற்படும். முகவை மாவட்டத்திலிருக்கக்
கூடிய கண்மாய்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்
பாசனம் தரும் அளவிற்கு பெரிய கண்மாய்களாக இருக்கின்றன.
இரண்டாண்டுக் காலமாக அங்கே பொதுப்பணித்துறைக்கு பணம்
திட்டங்களுக்காக ஒதுக்கித் தரவில்லை, இப்போது வறட்சி ஏற்
பட்டிருப்பதாலே பொதுப் பணித் துறைக்கு அதிகமான பணம்
ஒதுக்கீடு செய்தால் அங்குள்ள வறட்சி நிலை போக்கப்படும்.
நான் கிருதமால் நதி என்று சொல்கிற போது அங்கே இருக்கக்
கூடிய சிமைக் கால்வாய் திட்டம் விட்டு விட்டிருக்கிறது.
அந்த திட்டத்தை தற்பொழுது நிறைவேற்றுவார்களேயானால்
வறட்சி போக்கப்படும், பல சாலைகள் அல்லது விடு
பட்டிருக்கிற பணிகளையும் செய்து, கால்வாய்களை ஆழப்
படுத்துகின்ற வேலைகளையும் அதிகாரிகள் துரிதப்படுத்துவார்
களேயானால் நிச்சயமாக அந்தப் பகுதி மக்கள் பயனைப் பெறு
வார்கள்.

என்னுடைய பகுதியிலே குண்டாறு என்று ஒரு திட்டம்
உள்ளது. அந்தத் திட்டத்தின் மூலமாக திருமங்கலம் அருகாமை
யில் உள்ள சென்னப்பட்டி என்ற இடத்தில் அணைக்கட்டு கட்டி
என் தொகுதியில் உள்ள மக்களுக்கு, அந்த கால்வாயை அகலப்
படுத்தி கொடுக்க வேண்டுகிறேன், அடுத்து தம்பிக்குடி என்று



1981 மார்ச் 4] [திரு. எம். பிச்சை]

அணைக்கட்டு இருக்கிறது. அதற்கு மாண்புமிகு நீர்ப்பாசனத்
துறை அமைச்சர் அவர்கள் உலக வங்கியிலிருந்து உதவி பெற்று
மேம்படுத்தும் திட்டத்தை நிறைவேற்ற இருப்பதாக வாக்குறுதி
கொடுத்திருக்கிறார்கள். அதுவும் தற்பொழுது நிறைவேற்றப்
படுமேயானால் இவற்றால் அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரணம்
கிடைக்கும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட
துளை கிணறுகள் எல்லாம் இப்போது துரு பிடித்து, தண்ணீர்
வர முடியாத சூழ்நிலையில் இருந்து வருகிறது. அந்த தண்ணீர்
குடிப்பதினால் அந்த பகுதி மக்கள் நோயால் பாதிக்கப்பட்டு
இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அடிக்கடி பழுது ஏற்
பட்டு அடி பைப் இயங்காமல் போய்விடுகின்ற காரணத்தால்
பொது மக்கள் துன்பப்படுவதாக எங்களிடம் மனு மூலம் தெரியப்
படுத்துகின்றார்கள். பழுது பார்க்க ஒன்றியங்களில் மெக்கானிக்கு
கள் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் நிரந்தர
மாக குடி தண்ணீர் பற்றாக்குறை தீர்க்கப்பட வேண்டும் என்றால்
குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுகின்ற கூட்டுக்குடி
நீர் திட்டத்தின் மூலம் கொண்டு வந்து மேல்நிலைத் தொட்டிகள்
மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தரவேண்டும்.

[மாலை 4-40].

இப்போது எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களை
முகவை மாவட்டத்திலே செலவு செய்தாலும் நிரந்தரமாக
பஞ்சத்தைப் போக்க முடியாத நிலைமை இருக்கிறது, நிரந்தர
மாக வறட்சியைப் போக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர்
அவர்கள் கேரளத்துத் தண்ணீரைக் கொண்டுவர முயற்சிகளை
எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அங்கே இடுக்கியாறு இருக்கி
றது. பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் அப்போது முயற்சிகளை
எடுத்துக் கொண்டார்கள். தமிழக முதல்வர் அவர்கள் இப்போது
மீண்டும் அந்த முயற்சியை எடுப்பதற்கு ஏற்றவகையிலே தி.மு.க.
உறுப்பினர்களும், இந்தியத் துணைக் கண்டத்தை ஆண்டு
கொண்டு இருக்கின்ற காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும்
ஒத்துழைப்புத் தருவார்களேயானால் முதல்வர் அவர்கள் நிச்சய
மாக அந்தத் தண்ணீரைக் கொண்டுவருவதில் வெற்றி பெறுவார்
கள். கொண்டு வந்து வறட்சியைப் போக்குவார்கள், அப்படி
நிரந்தரமாக வறட்சி போக்கப்படுகிறபோது முகவை மாவட்ட
மக்கள் இந்த அரசுக்குப் பெரிதும் கடமைப்பட்டவர்களாக இருப்
பார்கள் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்
கிறேன்.

* திரு. ப. சுந்தரம்: சட்டப்பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்த இரண்டு நாட்களாக, தமிழகத்திலே ஏற்பட்டு
இருக்கின்ற வறட்சியைக் குறித்து, அநேக சட்டமன்ற உறுப்பினர்
கள், பல கட்சிகளை சேர்ந்தவர்கள் ஒரே கருத்தாகச் சொல்லி
இருக்கிறார்கள். அந்தக் கருத்தை அரசு மனத்திலே கொண்டு

[திரு. ந. சிவஞானம்] [1981 மார்ச் 4

செய்யப்படும் பணி வெறும் கைப் பம்பு மூலம் செய்ய வேண்டும்
என்று இருக்கிறது. ஆனால் அது போதாது. விசைப் பம்பு
களின் மூலம் 300 அடிக்குக் கீழே உள்ள தண்ணீரை மேலே
கொண்டு வந்து கிரவுண்ட் லெவல் ரிசர்வாயர் அல்லது மேல்
நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொண்டு வருவதற்கு
அரசு விதிகளைத் தளர்த்தி உத்தரவிட வேண்டுமென்று வேண்டி
விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

திருவோணம் சட்டமன்றத் தொகுதிக்கு கட்டளைக் கால்
வாயில் தஞ்சை ஒன்றியப் பகுதியில் பல்வேறு ஏரிகளை ஒன்றாக
ஏற்படுத்தி வாய்க்கால்களோடு இணைக்க வேலை வாய்ப்புத்
திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ள வேண்டும். செங்கிப்
பட்டியிலிருந்து ஆச்சான் அணைக்கட்டு வரையில் பத்து கிலோ
மீட்டர் தூரத்திற்கு வாய்க்காலை வெட்டி வேலை வாய்ப்புத்
திட்டத்தின் கீழ் நிரந்தரப் பணியாகச் செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை ஒன்றியப் பகுதியில் ஏறத்தாழ 9 ஆழ்குழாய் சமுதாயக்
கிணறுகள் இருக்கின்றன. அது முடிக்கப்பட்டும் இரண்டாண்டுக்
காலமாகச் செயல்படாத நிலைமை இருக்கிறது. கேட்டால் விசைப்
பம்புகள் இல்லை; மின்சார இணைப்புக் கிடைக்கவில்லை என்று
அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாக அரசு
தஞ்சை ஒன்றியத்திலுள்ள அந்த 9 சமுதாயக் கிணறுகளும் செயல்
பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை வறட்சிப் பகுதியில் தொழிற்சாலை அமைத்திட வேண்
டும். திருவோணம் பகுதியில் குறிப்பாக தஞ்சைப் பகுதியிலே
பொள்ளங்கரை, சூரியப்பட்டி ஆகிய இடங்களில் காகித ஆலை
ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செங்கிப்
பட்டியிலும் அத்தகைய தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இன்றைக்கு வறட்சி ஏற்பட்டுள்ள நிலையில் மக்
கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் ஒதுக்
கப்பட்டிருக்கின்ற வறட்சி நிவாரண நிதி போதாது என்பதைச்
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[மாலை 4-50.]

தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ ரூ. 12 கோடி பெறுமான
முள்ள நிலக்கடலைப் பயிர் இப்பொழுது காய்ந்து கொண்டி
ருக்கிற நேரத்தில் மேட்டூர் அணையிலிருந்து விவசாயிகளுக்கு
இரண்டாவது முறையாகத் தண்ணீர் திறந்து விடப்பட்டு, அந்
தக் காய்ந்த பயிரைப் பாதுகாத்ததற்காக அரசுக்கு நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 மார்ச் 4] [திரு. ந. சிவஞானம்]

குறிப்பாக, இன்றையதினம் தஞ்சாவூரிலே வறட்சி நிலவு
கின்ற காரணத்தால், நிலவரி, கூட்டுறவுச் சங்கக் கடன்களை
யெல்லாம் ரத்து செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்
டுக்கொண்டு, அரசாங்க ஆணையில் இருக்கிற விதிகளைத்
தளர்த்தி மக்களுக்கேற்ற விதிகளாக மாற்றிக் கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்
குக் கீழே உள்ள மக்களுக்கு உதவுகின்ற வகையில் குடிநீர்த்
திட்டங்கள் இல்லை. ஆதி திராவிட மக்கள் இருக்கிற குக்கி
ராமங்களில், அதிலும் குறிப்பாக, பிற்பட்ட சமுதாயத்து மக்
கள் இருக்கிற கிராமங்களில், திருவோணம் பகுதியில், முத்திரையர்
சமுதாயத்தினர் அதிகமாக வாழ்கின்ற குக்கிராமங்களில் குடி
நீர் வசதி செய்து தரப்படவில்லை. ஆகவே, குக்கிராமங்களில்
எல்லாம் அத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டு
மென்று இந்த அரசை நான் விரும்பி, வேண்டி கேட்டுக் கொள்கி
றேன்.

சமுதாயக் கிணறுகளை, ஏறத்தாழ இன்னும் 10 கிணறுகளை,
தாழ்த்தப்பட்ட, வறட்சிப் பகுதியிலே தோண்ட அரசு
அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, இந்த வறட்சிக்கு நிரந்தரமான
பரிகாரம் காண வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, இந்த
வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றியையும் வணக்கத்தையும்
தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்பு
மிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பருவ மழை
தவறியதன் காரணமாக, தமிழகம் எதிர் நோக்கியிருக்கிற
வறட்சியில், நிவாரணப் பணிகளுக்காக அரசு மேற்கொண்டிருக்கிற
நடவடிக்கைகளைப் பாராட்டுகின்ற அதே சமயத்தில், அந்த
வறட்சி நிவாரணப் பணிகளை ஒட்டியே சில அத்தியாவசியமான
பணிகளைப் போர்க்கால நடவடிக்கைகள் போல செயல்படுத்த
வேண்டுமென்கிற கருத்தினை முன்வைக்க விரும்புகிறேன். உதா
ரணமாக, மதுரை மாவட்டத்திலே, வேடசந்தூர் தொகுதி மிக
வும் கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. குடிநீர்ப்
பிரச்னையைத் தீர்ப்பதற்காகக் குழாய்க் கிணறுகள் தோண்டு
வதற்காகத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூட, அங்கே தற்
பொழுது இருந்து வருகின்ற குழாய்க் கிணறுகளில் கிட்டத்தட்ட
40 சதவீதத்திற்கு மேற்பட்ட குழாய்க் கிணறுகள் பாழடைந்து
நிலையிலே இருக்கின்றன. ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு
மெக்கானிக் என்று போட்டிருக்கிறார்கள். அந்த ஒரு மெக்
கானிக்கால், 100 குழாய்களைப் பழுதுபார்க்க முடியுமா என்
றால், அது மிகவும் கடினமான காரியம். ஆகவே, இந்த
வறட்சி நிவாரணப் பணியை ஒட்டிய பணியாக, உடனே, 100-க்கு
மேற்பட்ட குழாய்க் கிணறுகள் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்
களில் இரண்டு அல்லது மூன்று மெக்கானிக்குகளை நியமித்து

இந்தக் குழாய்களைச் சரி பார்த்தால்கூட, அது ஓரளவுக்குச் சரிக் கட்டப்படுகின்ற வகையிலே இருக்கும் என்பதை அரசு கவனத்திலே கொண்டு, உடனடியாக இந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் காலையிலே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விரைவிலே ஒன்றை அறிவிக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். ஏற்பட்டிருக்கிற வறட்சியில், விவசாயி இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் கூட தண்ணீர் எடுப்பதற்கு வழியில்லாத நிலைமையிலே, அந்தக் குறிப்பிட்ட நேரத்திலே, அந்த விவசாயிக்கு மின்சாரம் கிடைக்கும் என்கின்ற வகையிலான திட்டத்தை உடனே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகள் தாங்களே கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக் கடன் வசதியில்லாத நிலையில், ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கடன்களைச் செலுத்தவில்லையென்கின்ற தவறான கொள்கை இருப்பதால், கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகக் கடன் வழங்குவதை நிலவள வங்கிகள் ஒத்திவைத்திருக்கின்றன. குறைந்த பட்சம், அப்படி கடன் கொடுத்ததற்கு முரண்பாடாக விவசாயிகள் இருந்தாலுங்கூட, உண்மையிலே பாதிக்கப்பட்ட, சிரமப்பட்டிருக்கிற விவசாயிகளுக்காவது, அந்தக் கடனை வழங்குவதற்கு வகை செய்கின்ற வகையிலே நிலவள வங்கிகள் மூலம் கடனைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வறட்சியைப் பொறுத்தமட்டில், அது ஒரு தொடர் கதையாக இருக்கிற காரணத்தால், நிலையான நிரந்தரமான ஒரு தீர்வு காண்கின்ற வகையிலே, அரசு செயல்பட வேண்டுமென்கிற கருத்தினை நான் முன்வைக்கின்றேன். ஏனென்றால், கடந்த காலங்களில் இருந்ததைப் போல், இன்னும் பின்னால் வருகின்ற காலங்களில் வறட்சி என்பது தவிர்க்கப்பட முடியாதது என்று விஞ்ஞான ஆய்வுகள் மூலம் விஞ்ஞானிகள் சொல்கின்ற காரணத்தினால், தண்ணீரைப் பாதுகாக்கின்ற முறை தண்ணீரைப் பாதுகாத்து, அதை விநியோகப்படுத்துகின்ற அந்த முறைக்காக, இந்த மாநிலத்திலே ஒரு அமைப்பினை உருவாக்க வேண்டுமென்பதைப் பற்றிய உரத்த சிந்தனைக்கு அரசு இடம் கொடுத்து, அப்படிப்பட்ட ஒரு அமைப்பை Water Management Corporation என்ற ஒரு அமைப்பினை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மிக்க நீர்வளமிக்க கேரளம் போன்ற மாநிலத்தில் கூட, தண்ணீரை எப்படிப் பாதுகாப்பது, அந்தத் தண்ணீர் வீணாகாமல் எப்படிப் பாதுகாப்பது, எப்படி விநியோகிப்பது என்பதற்காக ஒரு அமைப்பினை, நடைமுறைப்படுத்தவென்றே அந்த மாநிலத்திலே Water Management Corporation





என்கின்ற அமைப்பை ஏற்படுத்தியிருப்பதைப் போல், இந்த மாநிலத்திலும் அமைக்கப்பட வேண்டும். ஏனென்றால் வறட்சி என்பது தவிர்க்கப்பட முடியாதது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை எப்படியாவது, வறட்சி வந்து கொண்டிருக்கிற சூழ்நிலையில் கிடைக்கின்ற தண்ணீரை எப்படிப் பாதுகாக்க வேண்டும், அதை எப்படி விநியோகிக்க வேண்டுமென்ற அளவு முடிவு எடுத்து, நரைச் சிக்கனப்படுத்துவதற்கும் மழைக் காலங்களில் கிடைக்கின்ற நீரைத் தேக்கி, அதை உரிய காலங்களிலே பயன்படுத்துவதற்கான வழி வகைகளை ஆய்கின்ற வகையிலே Water Management Corporation என்கின்ற ஒரு அமைப்பினை இந்த மாநிலத்திலே உருவாக்க உடனே இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல வறட்சிக்கு நிரந்தரமான ஒரு பரிகாரமாக நிலத்தடி நீரை சப்சாயில் வாட்டரை இன்பிரீஸ் செய்வதற்கு என்னென்ன பணிகளைச் செய்ய முடியுமோ அந்தப் பணிகளைச் நதி நீர் குட்டைகளை ஏற்படுத்துவது, போன்ற பணிகளைச் செய்யலாம் இன்னும் சொல்லப் போனால், ஏதேதோ காரணத்திற்காக சமுதாய நலனுக்காக பல்வேறு நிறுவனங்களை தேசியமயமாக்குகின்ற மத்திய அரசு நதி நீரை, டாங்க் நீரை, தண்ணீரையே தேசியமயமாக்கி அதைவிநியோகிக்கின்ற பொறுப்பினை அரசே ஏற்றுக் கொள்ளும் வகையிலே நிலத்தடி நீரை அதிகரிக்கின்ற வகையிலே சில மேம்பாட்டுத் திட்டங்களைச் செய்து வறட்சிக்கு நிரந்தரமான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை முன் வைத்து அமர்கிறேன்.

**திரு. தா. ராமிக்கண்ணு:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்து எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். என்னுடைய செங்கம் தொகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டு அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எல்லா குடிநீர் கிணறுகளும் தண்ணீர் இல்லாமல் வறண்டு இருக்கின்றன. விவசாயமும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே புதிய கிணறுகளை துரிதமாக வெட்டி, குடிநீர் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பகுதியில் எப்போதும் குடிநீர் பிரச்சினை இருப்பதால் குப்பநத்தம் அணையைக் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அதனால் இந்தப் பகுதியிலே உள்ள மக்கள் வேலை பெறுவதற்கும் புதிய வேலை பெறுவதற்கும் வசதியாக இருக்கும். என்னுடைய தொகுதியில், புலியாமுட்டி, இளங்குன்னி, நீப்பத்துறை, ராநதவாடி ஆண்டிப்பட்டி, வணக்கம்பாடி போன்ற பகுதிகள் வறட்சிக் காரணமாக குடிநீர் இல்லாமல் ஏழை எளிய மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எனவே குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU T. VENKAT REDDY : Hon. Acting Speaker Sir, a good Goverment is judged by the work done by it at the proper time. Though all the Members are discussing the drought situation with much hue and cry the Government have not come forward to declare most of the area as drought-affected areas. For the last six months, the people have been agitating for the relief work, but the Government have not care to look into their grievances.

So far as the Dharmapuri District is concerned, it is noted for its drought-prone nature. That is known for both the State and Central Governments and they declared this area as backward area long back. This year also due to failure of monsoon, the entire crops in most of the areas have died up and most of the crops withered away. Even in the of September itself, I had given a Memorandum to the Hon. Chief Minister and the Collector to declare our area as a drought affected area. Both the revenue officials and also the Government sent a communication to me stating that they would look into this matter. So far they have not declared Dharmapuri nor our Hosur constituency as drought affected area. I learn from reliable sources that the crop yield in Dharmapuri will be less than 20 per cent. Hon. Members have been telling that the yield from the fields would be less than 20 per cent. Especially in the drought-affected areas, the crop yield will be less than 20 per cent. In our Hosur, it will be even less than 15 per cent. So far, the Government have not come forward to declare this area as drought affected area. In this connection, I would like to say that the work in the Kaverappalli Dam was going on for the past 4 years. For the past one year and four months, the work has been stopped.

The Government has already spent 3 crores in that work and the work has been stopped due to intervention by one individual who got the stay from the High Court. So far the Government have not taken steps to vacate the stay. I know that the matter is *subjudice* and that I should not speak about it. It only shows the Government's inaction and inefficiency in tackling the needs of the people in time. The Dam is there and the Government have already spent 3 crores of rupeen. The stay has not been vacated and no other alternative arrangemes has been made by the Government. I am afraid that the Dam Project may go like the Veeranam Project. A huge amount has been wasted already and a huge amount has been spent. Outr area is a backward area and if the dam is constructed it will benefit many people in that area. I am at a loss to know why the Government have not taken steps to see that the Dam is pushed through. Even from September last onwards, in Hosur Taluk, cattle have been sold at a distress rate and



most of the cattle have been sent to Bangalore for slaughter houses because of want of fodder and water. The entire cattle-wealth of that area has been depleted. The Government have not taken adequate steps to stop such distress sale of cattle. I request the Government to come forward to declare that area as a drought-affected area urgently so that the miseries of the people especially those of middle class and poor sections of the people can be stopped.

[மாலை 5-00]

So far as water facilities are concerned, our area is a dry area. The problem of water is acute there. There is no drinking water even for the cattle and humanb ings. The officials are not paying the attention that is needed to this drought-affected area. Most of the officials' time is taken away by Conferences and they are going out of the head-quarters to attend conferences. They are spending more time on Conferences rather than on attending to the important work. They are not concentrating their attention on the work as such. I request the Hon. Minister and the Government to see that such Conferences are stopped atleast in drought-affected areas. I know most of the Block Development Officers spend most of their time—three-fourths of their time—in such Conferences. They must be stopped from going on such excursions. Then only they can help the suffering people to a greater extent.

So far as other aspects of the matter are concerned, the Government have so far spent 4 crores of rupees for the drought-affected people of the State. I am only stressing this point. When the Government have spent 12 crores of rupees for 'Ulaga Thamizh Maanadu', they could have spent more money for the elevation of the sufferrings of the people. The suffering of the people is most importment than the World Tamil Conference. I am also reminded of one of the proverb : 'When Rome was on fire, Nero was fiddling'. When these people are suffering for want of food, for want of water, our benign Government thought it fit to spend a lot of money on the World Tamil Conference. I do not say that it would not be spent. The money spent must be useful for the State. When the State is affected by famine, the Government could have postponed such a Conference and such issues and diverted more funds for the drought-affected areas.

In this connection, I must also submit that as most of the State has been subjected to drought, it is the duty of the Government to create an atmosphere to urge the Centre to allot more funds. So far as we are able to see, the Government have not insisted on the Centre in solving the problems of the people and in allowing more funds to this State. They must collect necessarily more statistics and data to ask the Centre

[திரு. டி. வெங்கட் ரெட்டி] [1981 மார்ச் 4

to allot more funds. In the neighbouring States like Karnataka and Andhra, where drought situations are there, they have declared their area as drought-prone areas long time ago - six months back - and they have obtained financial reliefs. Therefore, I request the Government to declare almost 11 districts as drought-affected areas. So far as the Nilgiris district is concerned we all know that it is a most backward area. For the last so many months, the Nilgiris District has been suffering for want of rain and water. Necessary steps have to be taken by the Government to alleviate the sufferings of the tribal people.

(The Temporary Chairman sounded the gong)

I thank the Hon. Temporary Chairman for givning me this opportunity to offer my remarks.

*திரு. துரை முருகன் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாடு முழுவதும் வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டிருப்பதைக் குறித்து இந்த மாமன்றத்திலே இரண்டு தினங்களாக விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நானும் நான் சார்ந்திருக்கிற முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வறட்சி குறித்து ஏற்கனவே பேச வேண்டுமென்று சொல்லப்பட்டது. பல நாட்களுக்கு முன்னாலே சபாநாயகர் அவர்கள் இது பற்றி அறிவித்திருந்த போதிலும் கூட இந்த மாமன்றத்திலே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதோ ஒரு அறிக்கை வைத்திருக்கிறார்கள். அதைப் படித்துப் பார்த்த பிறகு இந்த நாட்டிலே எந்த எந்த வகையிலே, எந்த எந்த இடத்திலே வறட்சி ஏற்பட்டிருக்கிறது ? அதற்கான புள்ளி விவரங்கள் என்ன ? ஆதாரங்கள் என்ன ? இந்த விவரங்களை எல்லாம் அந்த அறிக்கையிலே தெரிவித்திருப்பார்கள், நாமும் தெரிந்து கொள்ளலாம் என்று படித்துப் பார்த்தேன். அதைப் படித்துப் பார்த்த பிறகுதான் தெரிகிறது, ஏதோ சினிமா புத்தகத்திலே கதைச் சுருக்கம் கொடுப்பதைப் போல இருக்கிறது என்று. மாநிலத்திலே மழை இல்லை. வடாற்காடு மாவட்டத்திலே மழை இல்லை ; ஏரி, குளங்கள் வறண்டு விட்டன ; குடி தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இது எங்களுக்கும் தெரியும். வரப்பு வெடித்து விட்டது ; வயல் பிளந்து விட்டது ; ஆற்றிலே தண்ணீர் இல்லை ; புல் பூண்டுகள் காய்ந்து விட்டன ; மரங்கள் பட்டு விட்டன ; மாடுகளுக்கு தீவனம் கிடைக்கவில்லை ; கால் நடைகளுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரியும். தினசரி பத்திரிக்கை படிப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த அறிக்கையைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டு மென்றில்லை.



1981 மார்ச் 4] [திரு. துரை முருகன்

எந்தெந்த மாவட்டத்திலே வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்று இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தைப் பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர் எப்போது அரசுக்கு வறட்சி அறிக்கை அனுப்பினார் ? இதிலே விளக்கம் இல்லை. எவ்வளவு கேட்டு, அறிக்கை அனுப்பினார் ? அதற்கும் இதிலே விளக்கம் இல்லை, ஆனால் 115 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக மட்டும் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பணம் எப்போது ஒதுக்கப்பட்டது ? எப்பொழுது போய்ச் சேரும் ? அங்கே போய் சேர்ந்து விட்டதா ? இன்னும் போக வில்லையா ? வேலை ஆரம்பிக்கப்பட்டதா ? எதற்கும் விவரம் இல்லை. மொட்டைத் தாதன் குட்டையிலே விழுந்த மாதிரி மொட்டையாக வடாற்காடு மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக 115 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

வடாற்காடு மாவட்டத்திற்கு 38 கோடி ரூபாய் வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டிருக்கிறார் என்று வெளியே செய்தி வருகிறது. 38 கோடி ரூபாய் தேவைப்படுகிற ஒரு மாவட்டத்திற்கு 115 இலட்சம் ரூபாய் கொடுத்திருப்பது எவ்வளவு சிறிய தொகை என்பது நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டுமானால் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்ட தொகையையும் சொல்லிவிட்டு, கொடுத்த தொகையையும் சொல்லியிருக்க வேண்டும் ஆனால் அப்படிச் செய்யாமல் கொடுத்த தொகையை மட்டும் சொல்லி, இந்த அவையை திசை திருப்பி இருக்கிறார் அமைச்சர் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

இன்னும் சொல்லப் போனால் இந்த வறட்சி திடீரென்று ஏற்பட்டதல்ல. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில். ஆனந்த விகடன் பொன் விழா நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால் முதலமைச்சர் அதிலே கலந்து கொள்ளவில்லை. எங்கே போயிருக்கிறார் என்று கேட்டபோது வடாற்காடு மாவட்டத்தில் வறட்சி மிகுதியாக இருக்கிறது; அதைப் பார்ப்பதற்காகப் போயிருக்கிறார் என்று சொன்னார்கள் மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் காவேரிப் பாக்கத்தில் காத்துக் கிடந்தார்கள் ; முதலமைச்சர் வரவில்லை. ஆகவே, கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்னாலிருந்தே இந்த வறட்சி ஆரம்பித்து, இன்றைக்கு தலை தூக்கி ஆடும் அளவுக்கு வடாற்காடு மாவட்டத்தில் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு 115 இலட்சம் ரூபாய் தருகிறோம் என்று சொன்னால் இது எங்கே காணும் ?

அந்த மாவட்டத்தில் கிட்டத்தட்ட 36 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அதற்கு மேலே 16, 17 முனிசிபாலிட்டிகள் இருக்கின்றன, பஞ்சாயத்துக்களைப் பார்த்தால் 2,300-க்குமேல் இருக்கின்றன. ஆனால் கொடுத்திருக்கிற தொகை 115 இலட்சம்

இதிலே 10 இலட்சம் பாலாற்றிலே இருந்து தண்ணீர் எடுக்க என்று தெரிவித்திருக்கிறார்கள். மீதி இருப்பது 105 இலட்சம். இதை எப்படி .கொண்டு சேர்க்கப்போகிறார்கள் யாருக்கு கொண்டு போய் சேர்க்கப் போகிறார்கள் ?

எனது தொகுதியிலே 68 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அங்கே 10 இடங்களில் 'ஹாண்டு பம்பு' போடுகிறோம் என்று சொன்னார்கள். பாதி வந்ததும் அப்படியே போட்டுவிட்டு போய் விட்டார்கள், எந்த இடத்திலேயும் தண்ணீர் தரப்பட வில்லை, இப்படிப்பட்ட அரை குறை வேலை செய்யும் போதே வறட்சி வராமல் தடுத்து நிறுத்தி, அதற்குத் தேவையான முறையிலே துரிதமான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

(மாலை 5-10).

அதைப் பற்றிக் கொஞ்சம் கூட கவலைப்படாமல் அரசு விட்டு விட்டதன் விளைவுதான் வட ஆற்காடு மாவட்டம், தர்மபுரி மாவட்டம் என்று கொஞ்சம் கொஞ்சமாகப் பற்றிக் கொண்டு போய் உங்களுடைய அறிக்கையிலே தெரிவித்திருப்பதைப் போல நெற்களஞ்சியம் என்று சொல்கின்ற தஞ்சை மாவட்டத்தி லேயும் அந்தத் தீ பற்றிக் கொண்டு எரிகின்ற துர்ப்பாக்கியமான நிலை உருவாகி இருக்கின்றது. அதற்கு இந்த அரசினுடைய மெத்தனப் போக்குதான் காரணம் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு நாட்டிலே என்ன நிலைமை இருக்கின்றது ? கிராமப் பகுதிகளுக்குப் போகவே முடியவில்லை. பன்னீராண்டு வற்கடம் பூண்டது பாண்டியநாடு, புலவர்கள் எல்லாம் போமின் என்று இறையனார் அகப் பொருள் உரையிலே சொல்வதைப் போல இந்த நாட்டிலே பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றது, பெரிய வர்கள் தாது வருஷப் பஞ்சம் என்று சொல்வார்கள், 60 ஆண்டு காலத்திற்கு முன்னாலே ஏற்பட்ட அந்த தாது வருஷப் பஞ்சத்தை மிஞ்சக் கூடிய பஞ்சம் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. நல்ல தங்காள் கதையிலே வருகின்ற பஞ்சத்தை விட மிக மோசமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. முன்பெல்லாம் கீரையோ கீரை என்று தான் வீதியிலே விற்றுக் கொண்டிருப்பார்கள். ஆனால் இப்போது ராணிப் பேட்டையிலே தண்ணீரோ தண்ணீர் என்று விற்கின்ற கோரமான காட்சி ஏற்பட்டிருக்கின்றது. முன்பெல்லாம் சொல்வார்கள், அவனுக்கு என்னப்பா, பணம் தண்ணீர் பட்டப்பாடு என்று சொல்வார்கள், ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை என்றால் பணத்தை எண்ணுவது போன்று ஒவ்வொரு டம்ளர் தான் ஒருவர் குடிக்க வேண்டும் என்று கூறுகின்ற துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.





நேற்றைய தினம் வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள மத்திய சிறைக்குப் போய் இருந்தேன். அங்கே குடிக்கக் கூட தண்ணீர் இல்லாமல் கைதிகள் அவதிப்படுகிறார்கள். நாமாவது நான்கு இடங்களுக்கு போகிறவர்கள், ஆனால் வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள பெண்கள் ராஜஸ்தான் பெண்களைப் போன்று 5, 6 குடங்களை வைத்துக் கொண்டு எங்கேயாவது கிணறுகள் இருக்கின்றனவா என்று கிணறுகளை நோக்கி ஓடுகின்ற கோரக் காட்சி வட ஆற்காடு மாவட்டத்திலே நிலவிக் கொண்டிருக்கிற சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. அதிலும் குறிப்பாக எங்களுடைய ராணிப்பேட்டை தொகுதி வறட்சி யாலே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக வள்ளிமலையிலே மிகவும் வறட்சி இருக்கின்றது. வள்ளிமலை தான் முருகன் வள்ளியை சிறை எடுத்த இடம் என்று கந்த புராணத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த இடத்திலே புராண காலத்திலே இருந்து அங்கே தினைமாவு கூட விளையாது. ஆனால் இங்போது அங்கே உள்ள நிலங்கள் எல்லாம் வெய்யிலிலே காய்ந்து குடிக்கக் கூட நீரற்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆத்தாலூடு வள்ளிமலை திரும்பிப் பார்த்தால் ஒன்றும் இல்லை என்று சொல்வார்கள். அவ்வளவு தூரத்திற்கு இப்போது இருக்கின்றது. வள்ளிமலையை அடுத்து வேறு எந்த ஊரா னாலும், விண்ணம்பள்ளியானாலும் சரி, கொக்கேரியானாலும் சரி, பூட்டுத்தாக்கானாலும் சரி எல்லாப் பகுதிகளிலும் வறட்சி நிலவிக் கொண்டிருக்கின்றது. வாலாஜா ஒன்றியம், அறப்பாக்கம் வள்ளவபாக்கம், தொன்னை போன்ற எல்லாப் பகுதிகளிலும் வறட்சி களி நர்த்தனம் புரிகின்றது. அப்படிப்பட்ட ஒரு துர்பாக்கியமான ஒரு நிலைமை எங்களுடைய தொகுதியிலே ஏற்பட்டிருக்கின்றது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கிணறுகளை ஆழப்படுத்தவேண்டும் என்று சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. ஆனால் எங்களுடைய மாவட்டததிற்கு ஒரு கலெக்டர் கிடைத்திருக்கிறார். பாவம், எங்கே கோயில் குளம் இருந்தாலும் அவர்தான் முதலிலே போய் நிற்பார். அந்த வட ஆற்காடு மாவட்டத்தினுடைய கலெக்டர் பஞ்சாயத்து ஆணையாளர்களுக்கெல்லாம் ஒரு அறிக்கை அனுப்பி இருக் கிறார். அது என்ன அறிக்கை தெரியுமா ? கிணறுகளை ஆழப் படுத்தாதே என்று. கிணற்றிலே தண்ணீர் இல்லாவிட்டால் கிணறுகளை ஆழப்படுத்தாமல் என்ன செய்வது ? எங்களுடைய மாவட்டத்தின் செயலாளர் அருமை நண்பர் பாபு ஜனார்த்தனன் அவர்கள் போய்க் கேட்டால் என்ன சொல்கிறார் ? ஏற்கனவே கிரவுண்ட் வாட்டர் லெவல் கீழே போய் விட்டது. ஆகவே கிணறு வெட்டினால் மறுபடியும் எப்படி தண்ணீர்க் கிடைக்கும் என்று கேட்டாராம். ஆனால் அறிக்கையிலே கிணற்றை ஆழப் படுத்த வேண்டும் என்று சொல்லப்படுகிறது. பொது மக்கள் வந்து கேட்டால் இலகுவாகப் பேசி அவர்களை அனுப்பி விட வேண்டும் என்பது தான் மாவட்ட ஆட்சித் தலைவர் பஞ்சாயத்து

யூனியன் கமிஷனர்களுக்குக் கொடுக்கின்ற அறிவுரையா என்று கேட்கிறேன். அவர் என்ன அந்த மாவட்டத்திற்கே ஆட்சித் தலைவரா ? அல்லது ரொட்டி கிடைக்கவில்லை என்று சொன்னால் பிஸ்கட் சாப்பிடு என்று சொன்னானே லூயி மன்னன், அவனுடைய வாரிசா என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே வட ஆற்காடு மாவட்டம் வறட்சியாலே முதிர்ந்து போனதற்குக் காரணம் கலெக்டர் தான் என்று எனது முதல் குற்றச்சாட்டைச் சொல்கிறேன். அதற்கடுத்த குற்றச்சாட்டை இந்த அரசின் மீது சுமத்துகிறேன். ஆகவே வட ஆற்காடு மாவட்டத்தை இன்றைக்கு வறட்சிப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்துங்கள். சலுகைகள் வரட்டும். மத்திய அரசிடம் கேட்கலாம். அவர்களிடமிருந்து உதவிகளைப் பெறலாம். அதனால் பல சலுகைகள் அந்த இடத்திலே இருப்பவர்களுக்கு வந்து சேரும். அந்த வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். தைலம் போடுங்கள் தலை வலிக்கு என்று சொல்வது போல செய்யாமல் உண்மையான அந்த நோய் நாடி நோய் முதல் நாடி நீங்கள் செய்ய வேண்டும். ஆகவே ராணிப்பேட்டையில் மிகவும் வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டிருப்பதால் அந்தப் பகுதிக்கு தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நான் விடைபெறுகிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணம் பற்றிய அறிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகிற வாய்ப்பினை அளித்தமைக்கு முதலிலே என் நன்றியைத் கூறிக் கொள்கிறேன். நான் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால், காவிரி பாய்கின்ற தஞ்சை மாவட்டத்திலே என்ன வறட்சி என்று நீங்கள் எண்ணலாம். ஆனால் காவிரி பாயாத பகுதிகளும் தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்றன என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது. அத்தகைய பகுதிகள் இராமநாதபுரம் மாவட்டத்தைவிட மோசமான நிலையிலே வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் அந்தப் பகுதிகள் எல்லாம் பெரும்பாலும் கடலோரப் பகுதிகளாக இருப்பதினால், அந்த மாவட்டத்திலேயே காவிரி நீர் பாய்ந்தும் மணல் பாங்கான அந்தப் பகுதிகள் அந்த நீரை பெற முடியாத காரணத்தால் வறண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, பல ஆண்டுகளாக அங்கே குடிதண்ணீர் பஞ்சமும் இருக்கிறது. ஏனென்றால் நிலத்தை தோண்டினால் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது.

கடலோரப் பகுதியான மணற் பாங்கான அந்தப் பகுதிகளில் கீழே நிலத்தை தோண்டினால் உப்புத் தண்ணீரும், மேலேயிருந்து மழை பெய்யாததினால் வறட்சியும் ஏற்பட்டு மிகவும் கடுமையான நிலையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. பருவ மழை பொய்த்ததன் காரணமாக சாகுபடி செய்த விவசாய நிலங்கள்



காய்ந்து கொண்டிருக்கின்றன. அந்த விவசாயிகள் வேறு வேலை தேடி போய்க் கொண்டிருக்கிறார்கள். காட்டிலே இருக்கக் கூடிய வன மரங்கள் கூட பட்டுப் போகிற நிலையில் இருக்கின்றன. ஆகவே என்னுடைய தொகுதியிலே இருக்கிற வறண்ட பிரதேசங்களையும், வனப் பகுதியாக இருக்கிற மானாவரி பிரதேசங்களையும் வறட்சிப் பிரதேசங்களாக அறிவித்து அவற்றிற்கு செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலோரப் பகுதிகளாகவும் மணற்பாங்கான பகுதிகளாகவும் இருக்கிற, காவிரி நீர் பாயாத பிரதேசங்களில் குடி தண்ணீர் பிரச்னை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. காவிரி நீர் ஒரு புறத்தில் பாய்கிறது, மறு புறத்தில் குடி நீர் பஞ்சத்தினால் பாலைவனப் பிரதேசமாக காட்சியளிக்கக் கூடிய அவல நிலைமை இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட குடிநீர் பஞ்சமுள்ள பகுதிகளுக்கு, தண்ணீர் கிடைக்கும் வேறு பகுதிகளிலிருந்து, லாரிகளில் நீரை நிரப்பிக் கொண்டு போய் மக்களுக்கு சப்ளை செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது நீண்ட பைப்புகளை வைத்து தண்ணீர் சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது போலவே வறட்சியினால் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற வரிகளை தள்ளுபடி செய்ய வேண்டும், அதோடு அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு தரும் வகையில் நிவாரணப் பணிகளையும் மேற் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற நாகப்பட்டிணம் என்ற இடத்திலே, அது என்னுடைய தொகுதியும் கூட. அங்கே மழையும் பெய்யவில்லை, மணல் பகுதியாகவும் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியினை வறட்சிப் பகுதியாக அறிவித்து, அதற்கான நிவாரணப் பணிகளை மேற்சொள்வதோடு, அங்குள்ள விவசாயிகளுக்கு வரிகளையும் தள்ளுபடி செய்து, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு சி. பழனிமுத்து : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டு மழை பெய்யாத காரணத்தால் தமிழகம் முழுவதும் வறட்சி நிலை பரவியுள்ளது. ஆகவே வறட்சி நிலை எல்லா இடங்களிலும் இருக்கிற காரணத்தால், சேலம் மாவட்டம் முழுவதையும் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சி. பழனிமுத்து] [1981 மார்ச் 4

ஆத்தூர் என்னுடைய தொகுதி. இந்த ஆத்தூர் நகரத்திலே குடி தண்ணீர் என்பது மிகவும் பற்றாக் குறையாகவே என்றும் இருக்கிறது. வாரத்திற்கு இரு முறை தான் தண்ணீர் விடுகிற நிலைமை இருக்கிறது. அதனால் குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கடந்த மாதம் 8 ஆம் தேதியன்று குடி நீர் வடிகால் வாரியத் தலைவரும், குடி நீர் வடிகால் வ ரிய தலைமை என்ஜினியரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் வந்து பார்வையிட்டார்கள். ஆனால், இது நாள் வரை எந்தவிதமான நிவாரணப் பணியும் எடுக்கப்படவில்லை. ஆகவே ஆத்தூர் நகராட்சிக்கு வாரம் முழுவதும் குடி தண்ணீர் விநியோகம் செய்கின்ற முறையில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், ஆத்தூர் நகராட்சிக்கு 50,000 மக்கள் தொகை உள்ள ஒரு பெரிய இடம். அத்தகைய இடத்திலே மக்களுக்கு அன்றாடம் தண்ணீர் கொடுக்க அந்த நகராட்சி 2,000 ரூபாய்க்கு மேல் செலவழித்துக் கொண்டிருக்கிறது. அப்படி செலவு செய்தும், மக்களுக்கு வாரம் இரு முறைதான் தண்ணீர் விநியோகம் செய்ய முடிகிறது. கிணற்றிலிருந்து தண்ணீர் கொடுக்க முயற்சி செய்யலாம் என்று கருதினாலும், நிலத்தடி முழுவதும் பாறையாக இருக்கிற காரணத்தால் தண்ணீர் கிணறுகளிலும் இருப்பதில்லை. ஆகவே, மேட்டூரிலே இருந்து தான் இங்கே தண்ணீர் கொண்டு வர வேண்டும் என்று 1978 ஆம் ஆண்டிலே தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதையாவது அவசியம் உடனடியாக முயற்சி செய்து என்னுடைய தொகுதிக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல் மின்சாரம் என்பதும் கடந்த மாதம், வாரத்திற்கு 2, 3 நாட்களுக்கு மட்டுமே விநியோகம் செய்யப்பட்டது. மற்ற நாட்களில் மின்சாரமே இல்லை. இருக்கிற தண்ணீரை விவசாயிகளுக்காவது கொடுக்க வேண்டும் என்று கருதினாலும், இரண்டு நாட்களுக்கு ஒரு முறை கூட மின்சாரம் விநியோகம் செய்யப் பெறாத காரணத்தினால் அவர்களுடைய பயிர்கள் பாழ்பட்டுக் கொண்டிருக்கிறது.

[மாலை 5.20]

ஆகவே சேலம் மாவட்டம் முழுவதையும் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும். எங்கள் ஆத்தூர் தாலுகாவில் எல்லாப் பகுதிகளிலும் கடந்த பத்தாண்டுகளாக சரியான மழையில்லை. புயல் அடித்தால்தான் அங்கே மழை பெய்யும் என்ற நியதி ஏற்பட்டிருக்கிறது. ஆக, அந்தப் பகுதியில் மழை இல்லாத காரணத்தினால் கடந்த பத்தாண்டுகளாக எந்த ஏரியும் குளமும் நிரம்பவில்லை. அதன் காரணமாக அந்தப் பகுதியில் [illegible]

ஏழை எளிய மக்கள், விவசாயக் கூலிகள் எல்லோரும் கோவை, திருச்சி, ஈரோடு போன்ற இடங்களுக்கு நெல் அறுவடை செய்யச் சென்று விட்டார்கள். ஆகவே அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் மிகவும் அவசியம். ஆகவே, தண்ணீர் கிடைப்பதற்கான முழு முயற்சியையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது திட்டங்கள் பல இருப்பினும் அத்திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்த—ஆத்தூர் நகராட்சிக்கு ஐந்து லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஐந்து லட்சம் ரூபாயைக் கொண்டு ஆழ் குழாய்க் கிணறுகள் 40 போடலாம் என்பது திட்டம். அப்படி ஆழ் குழாய்க் கிணறுகள் போட்டு குடிநீர் வசதி கொடுக்கலாம். ஆனால் எண்ணியபடி போட முடியவில்லை. தேவையான ரிக்ஸ் வடிகால் வாரியத்திலிருந்து பெற முடியாத நிலையில் இப்போது ஒரு ஆழ்துளை கிணறுதான் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, வேறு இடங்களிலிருந்தாவது இந்த ரிக்ஸ் என்று சொல்லக்கூடிய இயந்திரங்களைப் பெற்று அந்த ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வறட்சி நிலை மிக அதிகமாக ஆகியிருப்பதால் விவசாயம் செய்யமுடியவில்லை. என் பகுதியில் உள்ள தென்னை மரங்கள், பனை மரங்கள் எல்லாம் காய்ந்துகொண்டு இருக்கின்றன,

அடுத்து, குடிநீருக்காக ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஃபிட்டர் போட்டுள்ளார்கள். அந்த ஒரு ஃபிட்டரை வைத்துக் கொண்டு எந்தவிதமான வேலையும் செய்யமுடியவில்லை. கொத்தாம்பட்டியில் ஆழ்குழாய்க் கிணறுகள் ரிப்பேர் ஏற்பட்டிருக்கிறது. அது குறித்து பலமுறை சொல்லியும்கூட அந்த ஆழ்குழாய்க் கிணறு ரிப்பேர் செய்யப்படவில்லை. அதே போல் மல்லிக்கரை, தளவாய்ப்பட்டியில் ஆழ்குழாய்க் கிணறுகள் வைத்து அதில் மின்சார மோட்டார் பொருத்தி தண்ணீர் கொடுத்தார்கள். ஆனால் கடந்த ஆறு மாத காலமாக அந்த மோட்டார்கள் பழுதுபட்டும் வேறு மோட்டார்கள் பொருத்தப்படவில்லை. ஆகவே, அங்கு குடிநீர் பிரச்னை மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே அங்குள்ள குடிநீர்ப் பிரச்னையை உடனடியாக தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சாலைகள் போடுவது, பள்ளிக் கட்டடங்கள் கட்டுவது போன்ற வேலைகளுக்கு அதிகப்படியான தொகை ஒதுக்கினால் ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வசதியாக இருக்கும். ஆக, நாலைந்து மாதங்களாக வறட்சி மிகவும் அதிகமாக இருப்பதால் எல்லாவிதமான வேலைகளையும் நல்ல முறையில் செய்ய

துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆத்தூர் நகராட்சி குடிநீர் பிரச்னையில் இந்த அரசு உடனடியாக கவனம் செலுத்தி குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிலவரி கடன்களை ரத்து செய்து வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டுகிறேன்.

[மாலை 5-20]

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நிலவுகிற வறட்சி நிலை பற்றி நமக்குத் தரப்பட்டிருக்கிற இந்த அறிக்கையில் உள்ளபடியே நாட்டில் நிலவுகிற வறட்சியின் உண்மைநிலை முழுமையாக தெரிவிக்கப்படவில்லை என்ற கருத்தினை நான் துவக்கத்திலேயே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் முதன் முதலில் 10—2—81 அன்று நமது அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதிலே குடிநீர் பற்றி எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். குடிநீரைப் பொறுத்தவரையிலும் தற்போது இது ஒரு பெரும் பிரச்னையாக இல்லை என்றாலும் கிணறுகளில் நீர் மட்டத்தின் நிலை குறைந்துகொண்டே போவதால் இந்த மாதக் கடைசிக்குப் பின் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது என்று 10—2—81 அன்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 2—3—81-ல் மீண்டும் ஒரு அறிக்கையில்—அதிகத் தண்ணீர் வரும் என்று எதிர்பார்த்த அறிக்கையில்—அதே கலெக்டர், அதே மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்கள். குடிநீரைப் பொறுத்தவரையிலும் தற்போது இது ஒரு பெரும் பிரச்னை இல்லை. இருந்தாலும் கிணறுகளில் நீர்மட்டநிலை குறைந்து கொண்டே போவதால் இந்த மாதக் கடைசிக்குப் பின் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது என்று 10—2—81 அன்று கொடுத்த அதே அறிக்கையை 20 நாட்களுக்குப் பிறகு வறட்சிப் பணிகள் துவங்கும் நேரத்தில்—அதே அறிக்கையை வைத்திருக்கிறார்கள். இதற்காக நான் அரசாங்கத்தை குறை கூறவில்லை. எங்கள் மாவட்ட ஆட்சி நிர்வாகம் அந்த லட்சணத்தில் நடைபெறுகிறது என்ற விவரத்தை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஒரு அதிகாரியைப் பற்றி நான் அதிகமாகப் பேசவிரும்பவில்லை. நான் தனியாக அதைப்பற்றிய விவரங்கள் தர இருக்கிறேன். நேரம் குறைவாக இருப்பதால் நான் எழுதி வைத்திருப்பதை சுருக்கி வாசிக்க அனுமதிக்க வேண்டுகிறேன்.

நான் மூன்று முறை ஒத்திவைப்புத் தீர்மானம் தந்தும், இன்றுதான் என்னைப் பேச அனுமதித்திருக்கிறீர்கள். தமிழகத்தில் 1979—80-ல் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டதால, வரலாறு காணாத வகையில மாநிலம் முழுவதும வறட்சியும, பஞ்சமும் வளர்ந்து வருகிறது.



குறிப்பாக, கிராமப்புறங்களில் உள்ள மக்கள் வாழ முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. தமிழகத்திலே உள்ள அனைத்து விவசாய சங்கங்களும் அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அனைத்து விவசாயச் சங்கங்களும் கொடுத்துள்ள அறிக்கைதான் உண்மையான நிலையை படம்பிடித்துக் காட்டுகிறது. அத்தகைய வறட்சியால், வரலாறு காணாத வகையில் பாதிக்கப்பட்டுள்ள பெரம்பலூர் வட்டத்திலிருந்து வந்திருக்கின்ற நான், அரசு அக்கறை கொண்டு ஆற்றவேண்டிய காரியங்களை நான் சுருக்கமாகவே கூற விழைகிறேன்.

வறண்டு கிடக்கிற 40,000 பாசனக் கிணறுகள், வெறிச்சோடிக் கிடக்கிற 242 பாசனத்திற்குப் பயன்படும் ஏரிகள், தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கிற பல நூறு குளங்கள், குட்டைகள், இதனால் குடி நீருக்கும் வழியின்றி விழிநீர் பெருக்கி, தேவையால் வாடும் 4 இலட்சத்து 600 மக்கள், விவசாயக் கூலிகளாகவே வாழ்க்கைத் தேரை பரம்பரையாக ஓட்டிக்கொண்டிருக்கிற. ஆனால் மழையின்மையால் விவசாயம் நடைபெறாமல் போனதால், வேலை கிடைக்காமல் வெம்பி வெதும்பி வறுமையால் வாடிடும் 33,30,049 விவசாயக் கூலிகள், நீரின்மையால் தங்கள் நிலத்தை உழுது பயிரிட முடியாமல் தரிசாகக் கிடக்கிற தங்களது நிலத்தைப் பார்த்துத் தேம்பி அழும் விவசாயப் பெருங்குடி மக்கள், கிணற்றில் ஊருகின்ற தண்ணீரை நம்பி மழை வரும் என்று எதிர்பார்த்து, பயிர் செய்து, கிணறும் வறண்டு, மழையும் பெய்யாத நிலையில் நட்ட பயிரும் காய்ந்து கருகிப் போவதைக் கண்டு, விவசாயிகளே அன்றாடம் அரிசியை விலைக்கு வாங்கி சாப்பிடக்கூடிய நிலை, பொன்னி, சம்பா கிலோ ரூ. 4 என்றும், மட்டரக அரிசி ரூ. 3, ரூ. 3.20 என்று விற்கின்ற கொடுமையும், மாடு கன்றுகள் தீவனமின்றி பசி பொறுக்க மாட்டாமல் இடுகின்ற ஓலம், குடி நீருக்காக தாய்மார்கள் ஒவ்வொரு கேணியைச் சுற்றிலும் கும்பல் கும்பலாகக் கூடி தண்ணீர் பிடிக்கப் போட்டி போடுவதால், ஒரு போர்க்களமாக காட்சி தரும் நிலை ஆகிய பல்வேறு காட்சிகள் அன்றாடம் நிகழும் பெரம்பலூர் வட்டத்தின் பிரதிநிதி என்ற முறையில் வறட்சி நிவாரணம் வேண்டி குறிப்பாக சில சலுகைகளை உடனடியாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது முது மொழி. ஆனால், புது மொழி 'குடிநீர் இல்லாத ஊரே இனி இருக்கவேண்டாம்' என்பது. அகில இந்திய சுற்றுலாப் பொருட் காட்சியில் குடி நீர் வடிகால் வாரிய அரங்கின் முகப்பில் எழுதப்பட்ட இலட்சிய கீதம் போடப்பட்டிருக்கிறது. ஓரளவுக்கு அது உண்மை. குடி நீர் இல்லாத ஊரிலே இனி இருக்க வேண்டாம் என்று சொல்லி, இப்படி ஆட்சியாளர் சொல்லிவிட்ட காரணத்தினால், குடி நீர் எங்கள் ஊரிலே இல்லை, நாங்கள்

எல்லாம் வேறு நாட்டிற்குப் போகிறோம் என்று சொல்லி சிக்மங்ளூர், மைசூர் போன்ற பகுதிகளுக்குப் புறப்பட்டு போகிறார்கள். ஆகவே, எப்படியோ மக்கள் இன்றைக்கு ஊரை விட்டுப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆக, குடிநீரைப் பொறுத்தவரையில் எல்லாக் கிராமங்களிலும் குடிநீர் இல்லை. விவசாயப் பாசனத்திற்கு தண்ணீர் இல்லை; ஆடு மாடுகள் குடிக்க நீர் இல்லை; புஞ்சை நிலங்களிலும், நஞ்சை நிலங்களிலும் சாகுபடி இல்லை. அதனால், உணவுப் பஞ்சம். மக்கள் விதைப் பண்டத்தையும் அதனால் விற்று விட்டார்கள். மாட்டுத் தீவனம், வைக்கோல், சோளத்தட்டை இல்லை. அதன் விலையும் பயங்கரம். எனவே, மாடு கன்றுகளை உழவர்கள் விற்கும் நிலை. பொதுவாக, விவசாயக் கூலிக்கு வேலை இல்லை. எனவே, வெளியிடம் செல்கின்றனர்.

செய்யவேண்டிய வறட்சிப் பணிகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மேலப்புலியூர், ரெங்கநாதபுரம், புதுநடுவலூர், வெண்பாலூர், சிறுவாச்சூர், கலிங்க ஓடைத் திட்டம் போன்ற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முன்னுரிமை தந்து, எகானாமிக் அல்லது அன்-எகானாமிக் என்ற பாகுபாடின்றி பொதுப் பணித் துறைக்கு அரசு ஆணையிட்டு ஏரி கட்டுமான பணிகள் தொடங்கப்பட வேண்டும். புதிய சாலைகள் அமைக்கப்பட வேண்டும். இருக்கின்ற சாலைகள் சீர்கெட்டுள்ளன. அவைகளை மேம்படுத்த வேண்டும். பாசனத்திற்குப் பயன்படும் வாய்க்கால்கள், வரத்து வாய்க்கால்கள் தூர்ந்து கிடக்கும் ஏரிகளை தூர் வாரவேண்டும். மங்கம்மாள் காலத்துக் குளங்கள்—மடுகள் நீர்பருக பழங்காலத்தில் வெட்டப்பட்ட சிறு குளங்கள், குட்டைகள் இவற்றை ஆழப்படுத்தி, கரைகளை செம்மைப்படுத்த வேண்டும். தன்னிறைவுத் திட்டத்தில் பெரம்பலூர், வேப்பந்தட்டை ஒன்றியங்களை சேர்க்க வேண்டும். குடிநீர்க் கிணறுகளை எல்லாக் கிராமங்களிலும் குறைந்தது 5 கஜம் மேலும் ஆழப்படுத்த வேண்டும். மொத்தத்திற்கு பெரம்பலூர், வரகூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து அனைத்துக் கடன்களையும் ரத்து செய்யவேண்டும். அடிக்கிணறு தோண்ட ஒவ்வொரு கிணற்றுக்கும் குறைந்தது 5,000 ரூபாய் கடன் வழங்க வேண்டும். நியாய விலைக் கடைகளில், காவலர்களுக்குத் தருவதுபோல் சலுகை விலையில் அரிசி உட்பட அனைத்துப் பொருட்களையும் வழங்க வேண்டும்.

இந்த வறட்சி நிவாரணப் பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படக் காரணம் என்ன? இந்த ஒரு கருத்தை மட்டும் விளக்கி விடை பெறுகிறேன். நீங்கள் பணிகளைச் செய்வதற்கு பணம் ஒதுக்கியிருக்கிறீர்கள். அப்படிப் பணம் ஒதுக்கப்பட்டும், வேலை நடைபெறாமல் இருப்பதற்கு என்ன காரணம்? ஆந்திர அரசு வறட்சியைச் சந்தித்து, மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து, 23 கோடி ரூபாய் பெற்று, இரண்டாவது முறை மறுபடியும் ஆராய வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறது,



[மாலை 5—30]

ரிக் வேண்டும் தோண்டுவதற்கு. ஆனால் ரிக் கருவிகளை அண்டை மாநிலங்களிலிருந்து தருவிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆந்திராவிலிருந்து நம்மை கேட்டிருக்கிறார்கள். கர்நாடகாவிலிருந்துதான் வர வேண்டும். தமிழ்நாட்டில் போதுமான ரிக் இல்லை. ஆகவே இதை எந்த மாநிலத்திலிருந்து வாங்கப் போகிறீர்கள்? ஆகவே இதில் சீக்கிரமாக காரியங்களைச் செய்ய வேண்டும்.

அடுத்து பெரம்பலூரில் 100 குழாய் கிணறுகள் போடவிருப்பதாக சொன்னார்கள். கடந்த ஒரு மாதத்தில் ஒரு குழாய் கிணறு கூட துவங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து கிணறு தோண்டுவதற்கு தோட்டாக்கள் பயன்படுத்தப்படுகிறது. சாதாரணமாக தோட்டாக்கள் ரூபாய் இரண்டு அல்லது மூன்றுக்குக் கிடைக்கும். இப்போது பிளாக்கில் ரூ. 7 அல்லது 8 ரூபாய் கொடுத்து வாங்குகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தோட்டாக்கள் விவசாயிகளுக்கு சலுகை விலையில் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும். கிணறு தோண்டுகிற தொழிலாளர்களுக்கு நாம் நிர்ணயித்த கூலி நிர்ணயம் ஒன்று, ஆனால் நடைமுறையில் இருப்பது வேறு ஒன்று. ஐந்து ரூபாய் தருவது என்றால் அவர்கள் பத்து ரூபாய் கேட்கிறார்கள். ஆகவே இதைக் கூட்டித் தரவேண்டும். பெரம்பலூர் பகுதியை வறட்சிப் பகுதியாக அரசு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்தில் பருவ மழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலையைப் பற்றி என் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் கிட்டத்தட்ட 11 மாவட்டங்களில் வறட்சி நிலவிக்கொண்டிருந்தும் கூட இங்கே நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டம், இன்னும் திருநெல்வேலி மாவட்டம் முதலியவற்றில் வறட்சியின் அறிகுறி தெரியவில்லை. திருநெல்வேலி பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாவிட்டாலும், கோவையை, நீலகிரியை இது பாதித்திருக்கிறது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. நீலகிரி ஒரு மலைப் பிரதேசமாகும். அந்தப் பகுதியிலே எப்போதும் வறட்சி நிலவிக் கொண்டுதான் இருக்கும். காரணம் அங்கு மழை மிக அதிகமாகப் பெய்யக்கூடாது. குறைவாகவும் பெய்யக்கூடாது. ஒரே அளவாக இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த மண் தண்ணீரை இழுக்கும் சக்தியைப் பெற்றிருக்கும். 1978—79-ம் ஆண்டுகளில் பெய்த மழையாலும், அடித்த புயலாலும் அங்கே பலவிதமான சேதங்கள் ஏற்பட்டு, அந்த சேதங்களினால்தான் அங்கு வறட்சியை சந்திக்க முடியவில்லையே தவிர ஒவ்வொரு வருடமும் நீலகிரி வறட்சியை சந்தித்துக் கொண்டுதான்

[திரு கே. உச்சி] [1981 மார்ச் 4

இருக்கிறது. அந்த வறட்சியை ஒவ்வொரு வருடமும் அங்கே பல்வேறு திட்டங்களைத் தீட்டி குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு சந்திப்பதற்கு காரணம் அது ஒரு மானம் பார்த்த பூமி. பாசன வசதி இல்லை. கிணறுகள் இல்லை. கிணறுகள் வெட்டினாலும் தண்ணீர் இல்லை. இப்படி தண்ணீர் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி தண்ணீர் கிடைத்தாலும், மலைப்பகுதியாக இருப்பதால் அதை தேக்கி உபயோகப்படுத்த முடியாத ஒரு நிலை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உருளைக் கிழங்கைப் பொறுத்த வரையில் எவ்வளவோ திட்டங்கள் இருந்தாலும்கூட அந்த பயிர் 'டெமோடட்' என்ற மஞ்சள் வியாதியால் தாக்கப்படுவதாலும், அந்த பூமி, அங்கு தன்னுடைய சக்தியை இழந்து விட்டிருப்பதாலும், புதிய பொலிவுடன் அந்த பயிர் வளர முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அந்தப் பகுதி மக்கள் பெரிய இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

அடுத்து தேயிலையை அங்கு சிறு விவசாயிகள் பயிரிடுகிறார்கள். அந்த தேயிலையும் இப்போது அங்கு நசித்துக் கொண்டிருக்கிறது. தேயிலைக்குப் போதுமான விலை கொடுக்கப்படுவதில்லை. வறட்சி மாத்திரம் அல்ல, நீலகிரியில் கடுமையான உறை பனியும் ஏற்படுவதால் அங்கு பெருமளவில் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறு சூழ்நிலைகள் இருப்பதால் அங்கு மக்களுக்கு வறட்சியைப் போக்குவதில் அரசு திட்டங்கள், நிவாரண உதவிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எத்தனையோ பயிர்கள் பனியால் கரைந்திருப்பதும், வறட்சியால் கருகியிருப்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டும். தேயிலைக்கு நல்ல விலை கொடுக்கவும் வேண்டும். பச்சைத் தேயிலைக்கு கிலோவுக்கு இரண்டு ரூபாய் அளவாவது கொடுக்க வேண்டுமென்று மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு அதை கவனித்து ஆவன செய்ய வேண்டும். நீலகிரியில் விவசாயத்தை மாத்திரம் நம்பாமல் தொழில் துறையிலே முன்னேற்றமடையச் செய்ய வேண்டும், அதை தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டும். விவசாயத்தில் காட்டப்படுகிற அக்கறையோடு சிறு தொழில்களையும் அங்கே ஏற்படுத்தினால்தான் மக்கள் வாழமுடியும். ஆகவே அங்கே தொழில் மையங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா சிற்றூர்களிலேயும் செக் டாம்கள் அதிகமான அளவுக்குக் கட்டி தண்ணீரை விவசாயத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்த வேண்டும். நான் சார்ந்திருக்கிற பகுதியிலே குடிநீருக்காக மக்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஓவா என்ற பகுதியிலே ஒரு அணையைக்கட்டி அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



1981 மார்ச் 4]

திரு. பாபு ஜனா்த்தனன் : சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வறட்சி நிலைமை இந்த மாநிலத்திலே ஏற்பட்டிருப்பது, பருவமழை தவறியது சென்ற ஆண்டு ஆகஸ்டு, செப்டம்பரில் அதற்காக எந்தவிதமான ஆயத்தங்களையும் இந்த அரசு செய்யவில்லை, என்பது மாத்திரமல்ல, அது குறித்து அக்கறையும் இல்லாமல் மெத்தனமாக இருந்தது என்பது குறித்து இந்த நேரத்திலே நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த வறட்சி எதுவரையில் இருக்கும் என்று யோசிப்போமானால் அடுத்த பருவமழை காலமான ஆகஸ்டு, செப்டம்பர் வரையிலே இருக்கும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாறன் பேசுகின்றபோது செய்தி அறநிலையத் துறை அமைச்சரும், வருவாய்த் துறை அமைச்சரும் தான் வறட்சிப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்கள் மற்ற அமைச்சர்கள் பார்க்கவில்லை என்று சொன்னார்கள். மற்ற அமைச்சர்கள் அதிலே அக்கறை காட்டவில்லை என்பதைப் போலவே அந்தக் கருத்து இருக்கிற காரணத்தினாலே, எல்லா மாவட்டங்களையும் எல்லா அமைச்சர்களும் பருவமழை தவறியவுடன் சென்று பார்த்திருந்தால் இந்தக் குறைபாடுகளைத் தவிர்த்து இருக்க முடியும்.

வடாற்காடு மாவட்டத்திற்கு 115 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கோபால் அவர்கள் பேசுகின்றபோது பால் சாப்பிட்டது போல் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பால் பசிக்கேற்ற அளவிலே தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது போதுமான அளவுக்கு இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 115 லட்ச ரூபாய், குடிதண்ணீர் கொடுக்க போரிங் செய்து ஹேண்ட் பம்புகள் போடுவதற்காகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் வாரியத்தைப் பற்றி இந்த நேரத்திலே குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். குடிநீர் வாரியம் அதனுடைய கொள்கை, அதனுடைய அட்மினிஸ்ட்ரேஷன், ஓர்ஸ்ட் பாலிசி, ஓர்ஸ்ட் அட்மினிஸ்ட்ரேஷன் என்று சொன்னால்கூடத் தகும். அந்த அளவுக்கு கிராமங்களிலே இன்றைக்கு நிலைமை இருக்கிறது. ஒரு பம்புசெட் கெட்டுவிட்டது என்றால் 10 கிராமங்களுக்கு ஒரு கிராம சேவக் இருக்கிறார். அவர் பார்த்து அதை ஒன்றியத்திலே சொல்லி, அந்த ஒன்றியத்தின் ஆணையர் அதை டிவிஷனிலே சொல்லி, அந்த டிவிஷனிலே இருக்கிறவர்கள் மாவட்ட அளவிலே சொல்லி அதற்குப் பிறகு அந்தக் கிராமத்துக்கு வந்து சீர் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது என்றால் இதைவிட மோசமான நிலைமை கிடையாது. அந்த மக்கள் அதுவரையில் எதை அருந்துவார்கள் என்று தெரியவில்லை. ஆகவே குடிநீர் வாரியத்தைப் பொறுத்தவரையில் கொள்கை அளவிலே நிர்வாக அளவிலே ஒரு முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வடாற்காடு மாவட்டத்திற்கு இன்றையதினம் 10 ரிக்குகள் இருக்கின்றன என்று சொன்னால் அந்தப் பணிகளைச் செய்வதற்கு 6, 7 மாதங்கள்

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1981 மார்ச் 4

ஆகும். இந்தப் பணிகளைப் பருவமழை தவறியவுடனே, அதாவது ஆகஸ்டு, செப்டம்பரிலே துவக்கியிருந்தால் ஓரளவுக்கு குடிநீர் பஞ்சம் அங்கே ஏற்பட்டிருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 5-40.]

அந்த நடவடிக்கைகளைப் பருவமழை தவறியவுடன் இந்த அரசு எடுக்கத் தவறிவிட்டது. அதற்காகக் குடிநீர் வாரியத்தினுடைய பொறுப்பிலே இருக்கின்ற அமைச்சருக்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்கள் இதுபற்றி அக்கறையே செலுத்தாமல் இருந்தார்கள் என்று சொல்லிக் கொள்வதும் என்னுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை குடிநீர் வாரியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றதே தவிர வருவாய்த் துறை இலாக்காவிற்கு ஒதுக்கப் பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இலலை. 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிக்கையிலே குடிநீர் வாரியப் பணிக்குத்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

என்னுடைய தொகுதியிலே நடந்த ஒரு வேதனையான நிகழ்சியைச் சொல்ல விரும்புகிறேன். நான் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில் நமண்டி என்ற கிராமத்தில் குடி தண்ணீர் இல்லாமல் சேற்று நீரைக் காய்ச்சி அந்தத் தண்ணீரைக் குடிக்கின்ற நிலை இன்றைய தினம் கிராமத்திலே இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் கிராமங்களுக்குப் போக முடியாத நிலை இருக்கிறது. அவ்வாறு போகின்றபொழுது அவர்கள் வேதனையோடு கேலி செய்கின்ற நிலையைப் பார்க்கிறபொழுது வேதனையோடு அவர்கள் கூறுகின்றவற்றைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தி இருந்தாலும் அதற்காக நாம் வெட்கப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. குடிநீர் வாரியத்தை இந்த ஓராண்டுக் காலமாக குடிநீர் வாரிய அமைச்சர் அவர்கள் ஏன் முடுக்கி விடவில்லை? ஆங்காங்கு ரிக் வேலை செய்து குடிநீர் வாரியம் தண்ணீர் கிடைக்கச் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பஞ்சப் பிரதேசமாக பிரகடனப் படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பஞ்சப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டால்தான் அதற்கேற்ற சலுகைகள் எல்லாம் கிடைக்கும். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பல வேலைகளை வறட்சிப் பணியில் செய்தால் வேலையில்லாத மக்கள் கர்நாடகம் போன்ற வேறு மாநிலங்களுக்குச் செல்லுகின்ற நிலையைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



[திரு. பாபு ஜனார்த்தனன்] [1981 மார்ச் 4

மாமண்டூர் ஏரியைத் தூர் வார வேண்டும். மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரவர்களுக்கு ஒரு முக்கியமான வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன், நான் சொல்வதை அறநிலையத் துறை அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏரியைத் தூர் வாரும் பணியில் ஈடுபடும்பொழுது, ஏரிகளில் யூகலிப்டஸ் மரங்களை ஏரியில் மையத்தில் வைக்கிறார்கள். அவ்வாறு இல்லாமல் ஏரியின் எத்து வாயில் பகுதியில் அந்த மரங்களை வைக்க வேண்டுமென்று காட்டிலாக்காவிற்கு அறிவித்து, இனிமேல் இப்படிப்பட்ட பணிகளைச் செய்யாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி நிலைமையிலே போதுமான அளவிற்கு Cheap Variety food crops ஸ்டாக் செய்யவில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்டச் சொல்லி ஆட்சித் தலைவருக்கு அறிக்கை மூலம் தெரிவித்தும், கேட்டுக் கொண்டும் கூட்டவில்லை. மாவட்ட உணவு அதிகாரி Cheap Var ety food crops ஸ்டாக் செய்யவில்லை. மாநிலத்தில் ஸ்டாக் செய்யவில்லை என்று சொன்னால் என்ன செய்வது? போதுமான பணம் இல்லை என்று சொல்கிறார்கள். இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்ற 115 இலட்சம் ரூபாய் சென்ற மாதம் 15 ஆம் தேதிக்குப் பிறகு தான் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கிடைத்தது என்று நாங்கள் அறிகிறோம். எனவே, இதிலே மெத்தனம் காட்டப் பட்டிருக்கிறது எண்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது கேழ்வரகு கிலோ ரூ. 2.20, புழுங்கல் அரிசி கிலோ ரூ. 3, கம்பு கிலோ ரூ. 1.80, துவரம்பருப்பு கிலோ ரூ. 5.60, கடலைப்பருப்பு கிலோ ரூ. 5.00, புளி 8 ரூபாய்: மிளகாய் 8 ரூபாய், கடலை எண்ணெய் 16 ரூபாய், தேங்காய் எண்ணெய் 24 ரூபாய், சீயக்காய் 5 ரூபாய், வெல்லம் ரூ. 4.20, வெல்லத்தின் விலை ஏற்றத்தின் காரணமாக சாராயத்தின் விலையும் கூட ஒரு ரூபாயாக இருந்தது இப்பொழுது இரண்டு ரூபாயாக ஆகி விட்டது என்று அதை அருந்துகின்றவர்கள் சொல்கிறார்கள். எனவே, வறட்சியின் காரணமாக ஏழைகள் வாங்குகின்ற பொருட்கள் அத்தனையும் விலை ஏறிவிட்டன என்று கூறி அமர்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மயில்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சிப் பாதிப்பிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் தப்பவில்லை என்பதை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் கரையாளர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பரவலாக எல்லா இடங்களிலும் வறட்சி நிலைமை இருக்கிறது. குறிப்பாக, குடிநீர்ப் பஞ்சம் எல்லாப் பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அதிலும், குறிப்பாக அருங்கல் பகுதியிலே குடிநீர் குடம் ஒன்றுக்கு ரூ. 1 என்ற அள

1981 மார்ச் 4] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

வுக்கு விற்பனையாகிக் கொண்டிருப்பதாகச் செய்தி. அந்தப் பகுதியில் குடி நீர் விநியோகம் செய்வதற்காக சிறிய திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால், நீர்த் தேக்கத்தில் தண்ணீர் இல்லாத காரணத்தினால், பைப்புகளில் தண்ணீர் விநியோகம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குடம் ஒன்றுக்கு ரூ. 1 கொடுத்துத்தான் மக்கள் குடிநீர் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

கருங்கல் பகுதி, மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள சில பஞ்சாயத்துப் பகுதிகளையும் சேர்த்து பெரிய அளவிலுள்ள ஒரு குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக அமல் நடத்துவதன் மூலம் அந்தப் பகுதியிலிருக்கிற அந்தக் குறையைப போக்க முடியும் என்பதை நான் சொல்லிக் கொண்டு, இடைப் பட்ட வேளையில் லாரி வாயிலாகவாவது தண்ணீர் கொண்டு வந்து அந்த மக்களுக்குத் தந்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பத்மநாபபுரம் முனிசிப்பாலிட்டியைப் பொறுத்த அளவில், என்னுடைய அளவில், தமிழகத்தில் இருக்கிற நகராட்சிப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் நடைபெறாமல் இருக்கிற ஒரே பகுதி பத்மநாபபுரம் முனிசிப்பாலிட்டி என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அந்தப் பகுதியில் குடிநீர் வழங்க சில திட்டங்கள் நிறைவேற்றப்பட, ஆய்வு செய்யப்பட்டதாகக் கேள்வி. ஆனால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு போதிய பண வசதி நகராட்சிக்கு இல்லை என்ற காரணத்தினால், ஒரு வேளை, அரசு கடன் தருவதாக இருந்தால், திருப்பித் தருவதற்குரிய வசதி அந்த நகராட்சிக்கு இல்லாமல் இருக்கும் என்ற காரணத்திற்காகக் கடன் தருவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, அந்த பகுதிகளைப் பொறுத்த வரையில், விதிகளைச் சிறிது தளர்த்திவிட்டு கடன் உதவி அளிப்பது அல்லது மானியமாக தொகைகள் வழங்கி, குடிநீர்த் திட்டம் அமல் நடத்துவதற்கான வேலைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் அந்த நகராட்சிப் பகுதியிலிருக்கிற மக்கள் கிணறுகளை மட்டும் நம்பி வாழ்கின்றார்கள். கிணறுகள் அத்தனையும் இப்பொழுது வறண்டு போயிருக்கின்றன. எனவே, அவசர கால நிலையாக, தண்ணீர் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளை அந்தப் பகுதியிலே செய்ய வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



1981 மார்ச் 4] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

அது மட்டுமல்லாமல், பாசன வசதியைப் பொறுத்த அளவில், கன்னியாகுமரி மாவட்டத்தில், மிக முக்கியமாக இருப்பது பேச்சிப்பாறை அணைக்கட்டு. அதோடு இணைந்து, சிற்றாறு பட்டினங்கால் திட்டமும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பேச்சிப்பாறையிலும், சிற்றாறு அணையிலும் இப்பொழுது நீர் மட்டம் மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிற காரணத்தினால், தவணைவைத்து தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அங்கே, தண்ணீரை தவணை முறையில் தருவதால், நிச்சயமாகப் பயிர்களைப் பாதுகாக்க முடியாத அளவு அவசர நிலை ஏற்பட்டிருக்கிறது. பயிரிடப்பட்டிருக்கிற பகுதியில், ஏறத்தாழ 65 சதவீதம் கருகிவிடும் என்ற அபாயகரகான நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, கிடைக்கின்ற தண்ணீரைப் பம்புகள் வாயிலாக அடித்து, விநியோகம் செய்கின்ற நிலையை அரசாங்கம் ஆராய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெய்யாறு சானலிலிருந்து கன்னியாகுமரியில் சில பகுதிகளுக்குப் பாசன வசதி தரப்பட்டிருக்கிறது. நெய்யாறு சானலைப் பொறுத்த அளவில், கேரள அரசாங்கத்தோடு நாம் செய்து கொண்டிருந்த ஒப்பந்த அளவிற்குத் தண்ணீர் கிடைக்கவில்லையென்ற குறைபாடு இருக்கிறது. ஒப்பந்தத்தில் அவர்கள் தரவேண்டிய தண்ணீரில் பகுதி அளவு மட்டும் இன்றையதினம் தரப்படுகிறது. எனவே, கேரள அரசாங்கத்தோடு, புதிய ஒப்பந்தத்துக்கு முயற்சி மேற்கொண்டிருக்கிற இந்த வேளையில் ஏற்கனவே, ஏற்பட்ட ஒப்பந்தங்களை அமல் நடத்துகின்ற அளவில் கேரள அரசாங்கத்தை இந்த அரசாங்கம் அணுகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோரப் பகுதியில் வாழ்கின்ற மீனவப் பெருங்குடி மக்கள் சென்ற 3 மாத காலமாக, மீன் கிடைக்காத காரணத்தால் பஞ்ச நிலையை எட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆண்டுதோறும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு உதவிகள் தருவது உண்டு. இந்த ஆண்டும் அதே போன்று நிவாரணப் பணிகள் மேற்கொண்டு அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் குறிப்பாக, பனை ஏறுகின்ற தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள், பதநீர் அதிகமாகக் கிடைக்காத காரணத்தால், அவர்களும் பஞ்ச நிலையை எட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த அரசாங்க உதவி தேவை.

அதோடு அங்கே, ஏறத்தாழ 150-க்கும் மேற்பட்ட முந்திரித் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. கச்சா முந்திரி கிடைப்பது குறைந்ததனால், மாதம் ஒன்றுக்கு 4 தினங்கள்

[திரு. பி. முகமது இஸ்மாயில்] [1981 மார்ச் 4

அல்லது 5 தினங்கள் மட்டும் வேலை கிடைக்கின்ற நிலையில் 1 இலட்சத்துக்கும் அதிகமாக வேலை செய்கின்ற தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், அதிகமான கச்சா முந்திரியை இறக்குமதி செய்து, அந்த ஆலைகளுக்குத் தரவேண்டிய நடவடிக்கையை நம் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால், கன்னியாகுமரி மாவட்டத்தை பஞ்ச நிலையிலிருந்து விடுபட்ட மாவட்டமாகக் கருதி விடாமல், அங்கும் பஞ்சம் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது என்பதை உணர்ந்து, அதைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, ஆக்கபூர்வமான நிவாரண வேலைகளை அரசு மேற்கொள்வதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கெள்கிறேன்.

தமிழகம் தழுவிய அளவில் உருவாகியிருக்கிற நிலையைப் பார்க்கும்போது, அச்சம் கொள்ளுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, இந்த மாநிலத்து மக்கள் அத்தனைபேரும் அவதிப்படுகின்ற அபாயகரமான நிலையை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை அபாயக் குறியாகச் சொல்லி, எதிர் காலத்தில் வர இருக்கிற அபாயத்தை மனதில் கொண்டு, ஆக்கப்பூர்வமான வேலைகள் இப்பொழுதே, அடித்தளம் அமைத்துச் செய்ய வேண்டுமென அரசைக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

(மாலை 5-50)

திரு. பெ. கலியமூர்த்தி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் கூடிய நாள் முதலாக எனக்குப் பேச வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும், இந்த வறட்சியை முன்னிட்டு பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1980–81 ஆம் ஆண்டில் தென் கிழக்கு, வடகிழக்கு பருவ மழை தவறியதன் காரணமாக தமிழகத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் பஞ்சம், விவசாயம் செய்ய முடியாத நிலை, மின் தட்டுப்பாடு, உணவுப் பஞ்சம், இதன் காரணமாக ஏற்பட்டுள்ள விலைவாசி ஏற்றம் ஆகியவைகளினால் மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். சோதனையுள்ள இந்த நேரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் வானம் பொய்ப்பினும் தன்னுடைய அரசு பொய்க்காது என்று, வருமுன் காத்தல் என்ற நிலையில் பல லட்சம் ரூபாய்களை தமிழகம் முழுவதும் பொழிந்துள்ளார் அதற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், பாராட்டுகிறேன்.



1981 மார்ச் 4] [திரு. பெ. கலியமூர்த்தி]

எனது தொகுதியான மங்களூர் தொகுதி தென்னார்க்காடு மாவட்டத்தின் கடைசி பகுதியாக அமைந்திருக்கிறது. அதிலே 220 கிராமங்கள் அடங்கி இருக்கின்றன. அதிலே சுமார் 170 கிராமங்களிலே குடிநீர் தொட்டிகள், விவசாயக் கிணறுகள் ஏரிகள், குளங்கள் அத்தனையும் வறட்சியால் பாதிக்கப்பட்டு உள்ளன. குறிப்பாக திட்டக்குடி, தொழுதூர், சிறுபாக்கம், நல்லூர் போன்ற கிராமங்களில் 90 சத வீதம் குடி நீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. எனவே என் தொகுதி மக்களுக்கு வறட்சி நிவாரண பணிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே எனது தொகுதியில் தன்னிறைவுத் திட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மேலும் 1981–82 ஆம் ஆண்டுக்கும் நீட்டித்து, ஆண்டு முழுவதும் விரிவுபடுத்தி ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள வேலைகளை விரைவுபடுத்தவும், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள வேலைகளை விரைவு படுத்தவும் கேட்டுக் கொள்கிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிலவரி முழுமையாக தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசுக் கடன்கள் நிலுவையில் இருந்தால், நிலுவை பணத்தை ஓராண்டு காலம் நீட்டி தவணை முறையில் வசூல் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகமான மின்பாக்கியுள்ள விவசாயிகளிடமிருந்து மின்பாக்கித் தொகையை தவணை முறையில் வசூல் செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் முக்கியமான பெரிய ஏரியான வெலிங்டன் நீர்தேக்கம் 1980–81 ஆம் ஆண்டு முழுவதும் வறட்சி நிலை ஏற்பட்டுவிட்டதால் நெல், கரும்பு, போன்ற பயிர்கள் 90 சத வீதம் செய்ய இயலாத நிலையில் உள்ளன. அரிசி, சோளம், வரகு போன்ற அத்தியாவசியமான உணவு தானியங்கள் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது தாராளமாகக் கிடைப்பதில் சிரமம் உள்ளது. எனவே அரசு அங்காடிகளில் அரிசி, கம்பு, கேழ்வரகு, சோளம், மண்ணெண்ணெய், கடலை எண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசியமான பொருள்கள் தாராளமாக, நியாயமாகக் கிடைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி நிலை பாதிக்கப்பட்ட பகுதிகளில் தண்ணீர் கிடைக்காத கிணறுகளை ஆழப்படுத்தியும், தண்ணீர் கிடைக்கும் இடங்களில் குழாய் நீர் பங்கீடு முறையை மேற்கொள்ளவும், இரண்டும் செய்ய இயலாத இடங்களில் கைபம்புகளை இணைக்கவும் நிரந்தர வேலையாக மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பெ. கலியமூர்த்தி] [1981 மார்ச் 4

வெலிங்டன் நீர்த்தேக்கத்தை ஆழப்படுத்தவும், வெள்ளக் காலங்களில் ஏரியின் கீழ்புறம் மண்ணரிப்பு ஏற்படுவதால் அவற்றை நல்ல நிலையில் செப்பனிட கேட்டுக்கொள்கிறேன். குளங்கள் முழுவதும் ஆழப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் 75 சத விகிதம் மக்கள் கிணற்று நீர் விவசாயம் செய்கிறார்கள். நீர் தட்டுப்பாடுள்ள விவசாயிகளுக்கு, தடங்கலில்லாமல் கடன் கொடுத்து கிணறுகளை ஆழப்படுத்தி உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் 80 சதவிகிதம் மக்கள் ஏழைகள். படிப்பறிவற்றவர்கள், ஆதித்திராவிடர், பிற்பட்டோர் வாழுவோர் அதிகம். எனவே, ஆதித்திராவிட நல இலாக்கா, பிற்பட்டோர் நல இலாக்கா வழங்கும் சலுகைகளை அதிகமாக்கி செலவினத் தொகையினைக் கூடுதலாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட திட்டத்தின்கீழ், வெள்ளக்காலங்களில் வெள்ளாற்றின் அபாயத்தைப் போக்க பெரங்கியம் கிராமத்திலிருந்து திட்டக்குடி வரை நிரந்தர தடுப்புச் சுவர் கட்டவும், திட்டக்குடியிலிருந்து அரியலூர், செல்லும் வெள்ளாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கவும், பாக்கம்பாடி அணைத் திட்டத்தினை மேற்கொள்ளவும் கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் சுமார் 3,000 படித்த இளைஞர்கள் எவ்வித வேலை வாய்ப்பின்றி கஷ்டப்படுகிறார்கள். சொந்தமாக விவசாயம் செய்ய நிலமில்லை. தொழில் செய்ய பணமில்லை. எனது தொகுதி, சென்னை, நாகர்கோயில் நெடுஞ்சாலையில் போக்குவரத்துக்கு வசதியாக உள்ளது. எனது தொகுதிகளின் நான்கு பக்கங்களிலும் அருணா சர்க்கரை ஆலை, பெண்ணாடம், பெரம்பலூர் சக்கரை ஆலை, கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை, செவலை சர்க்கரை ஆலை, மற்றும் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் ஆகியவைகள் அமைந்துள்ளது. மேற்கண்ட வேலையாட்கள், போக்குவரத்து வழி, இடவசதி, மூலப்பொருட்கள், மின்வசதி ஆகியவைகளைப் பயன்படுத்தி, காகித உற்பத்தி தொழிற்சாலை ஒன்றும், சாராய உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றும் ஏற்படுத்தி தொழிற்சாலையே இல்லாத தொகுதி என்ற பெயரை மாற்றித் தொழிற்சாலை ஒன்றை அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன மற்றும் பிற்பட்டோர் மாணவர்களுக்கு சாதி சான்றிதழ் வழங்குவதிலும், ஆண்டுதோறும் ஏற்படும் கஷ்டத்தை நீக்கி நிரந்தரமான சாதி சான்றிதழ், எளிதாக கல்வி இலாக்கா மூலம் அளித்துதவ கேட்டுக்கொள்கிறேன். மாணவர்களுக்குக் கிடைக்கும், உதவிப்பணம், புத்தகங்கள், சீருடைகள், ஆண்டுதோறும் ஜூன் மாதத்தில் கொடுத்து பயன் பெற கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 4] [திரு. பெ. கலியமூர்த்தி]

அரசு, அதிகாரிகள், பொதுமக்கள் ஆகிய நிலைமைகளை உணர்ந்து அரசுக்கு நற்பெயரைத் தேடித்தர உற்சாகம், சகிப்புத்தன்மை, சுறுசுறுப்புடன் உழைக்கின்ற உண்மையான அரசு அலுவலர்களின் தொண்டினை இவ்வரசு பயன்படுத்தி, நம் அரசின், புரட்சித் தலைவரின் கரத்தை வலுப்படுத்தக்கேட்டு இவ்வாய்ப்பினை அளித்த பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

*திருமதி த. இராசம்மாள் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக இந்தச் சட்டமன்றத்தில் தமிழ்நாட்டில் உள்ள வறட்சி நிலை பற்றி பேசும்போது, ஒன்றுபட்டு, ஒருமித்த கருத்துடன் மாநிலத்தின் எல்லா மூலை முடுக்குகளிலும் உள்ள வறட்சி பாதிப்பு நிலையைப் பற்றிய உண்மையை ஒப்புக் கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய அமைச்சர்கள் அரசு விழாக்களிலோ, அல்லது திருமண விழாக்களிலோ கலந்துக் கொள்ளும் நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து—அதற்காக கலந்துக் கொள்ளவே வேண்டாம் என்று சொல்லவில்லை—அல்லது அப்படி ஒத்தி வைக்க இயலாது என்று சொன்னால், எந்தெந்த இடங்களுக்கு அவர்கள் நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ளச் செல்கிறார்களோ, அந்தந்த இடத்தில் நடக்கும் தன்னிறைவுத் திட்டம் பற்றியும், வறட்சி நிவாரணப் பணிகள் பற்றியும், ஆங்காங்கு வருகின்ற அலுவலர்களுடன் கலந்து பேசி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்து பேசி, ஆங்காங்கு நடைபெறும் பணிகளில் சிலவற்றை திடீரென்று நேரில் சென்று பார்த்து, எங்கெங்கே எந்தெந்தப் பணிகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன அல்லது நிறைவேற்றுவதில் காலதாமதம் ஆகின்றன என்பதைப் பார்த்து, அவற்றை நல்ல முறையில் இயங்கச் செய்கிற வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்பது என்னுடைய ஆவல்.

(மாலை 6—00)

ஏனென்று சொன்னால் எங்களுடைய ஊராட்சி ஒன்றியமான தலைவாசல்தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப் பட்டது. ஏறத்தாழ 10-வது மாதத்தில்தான் அதற்கு நிதி ஒதுக்கப் பட்டது; அலுவலர்களும் 10-வது மாதத்தில்தான் வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் மார்ச் மாதத்திற்குள் வேலைகளை முடிக்க வேண்டுமென்று சொன்னால் அதிகாரிகள் என்ன செய்வார்கள்? யாரையும் நான் தவறாக குறிப்பிடவில்லை. பல இடங்களில் இப்படி நடக்கிறது என்ற உண்மையை எல்லோரும் ஒப்புக் கொண்டிருப்பதால் என்னால் இதைக் கூறாமல் இருக்க முடியவில்லை. இப்படி அவசரம் அவசரமாக வேலைகளைச் செய்யும் போது ஒப்பந்தக்காரர்கள் தன்னை நிறைவு படுத்திக் கொள்வதுடன், அலுவலர்களையும் நிறைவு படுத்திக் கொள்கிறார்கள். அதுதான் அதிகமாக இருக்கிறது. ஒதுக்குகின்ற தொகையில்

ஏறக்குறைய 75 சதவீதம் வரையில் அந்த மக்களுக்கு போய் சேருவதில்லை. ஒருசில வேலைகளை நாம் நேரில் பார்க்கும் போது தட்டினால் மண் அனைத்தும் கொட்டுவது போல ஏறத்தாழ 12-க்கு ஒன்று என்ற வகையில் நடக்கிறது என்றால் நாம் இலட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் ரூபாய்களை கொட்டி அழுவதில் என்ன பயன் இருக்கிறது? ஒதுக்கப்பட்ட பணம் மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று நாம் கண்காணிப்பதில் தான் அவர்களுக்கு அதிக பலன் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

மேலும் மக்களுக்கு முக்கியமான பிரச்சினையாக இருப்பது குடிதண்ணீர் பிரச்சினை. முக்கியமாக அதற்கு ஒதுக்கியிருக்கிற தொகை ஒவ்வொரு இடத்திலேயும் சரியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்று கண்காணிக்க வேண்டும். உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து, நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்ய வேண்டும். அதோடு அனைத்து உறுப்பினர்களுமே மாட்டுத் தீவனம் கிடைக்கச் செய்வது பற்றி இங்கே சொன்னார்கள். மனிதனுக்கு உணவு கிடைக்கவில்லை என்றால் எங்காவது சென்று பிழைத்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மாடுகள் அப்படி போக முடியாது. வேறு வழி இல்லாமல் அவைகளை அனுப்பிவிட்டாலோ அல்லது விற்று விட்டாலோ தேவைப்படுகிறபோது அவைகளைத் தேடிப் பிடிக்க முடியாது. சிறு விவசாயிகள் அதனால் பெரும் கஷ்டத்திற்குள்ளாவார்கள். இதை உணர்ந்து, மாட்டுத் தீவனங்களை வேறு மாநிலங்களிலிருந்து கொண்டு வந்து, இங்கே விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் நல்லமுறையில் சத்துணவு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். சிறுவர்களுக்கு புத்தகங்களும், உடைகளும் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியில் மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கிற பச்சைமலை இருக்கிறது. அங்கே தற்போது குடிதண்ணீர் கிடைக்காமல், அவர்கள் கீழே இறங்கி தெருத் தெருவாக அலைகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னால் கூடிய விரைவிலே ஏற்பாடு செய்கிறேன் என்று அவர் சொன்னாலும் அவர் என்ன செய்ய முடியும் என்று தெரியவில்லை. அந்தப் பகுதி மக்களுக்கு சாலைகள் அமைத்து, பாலங்கள் கட்டி, கிணறுகள் தோண்ட ஏற்பாடு செய்தால் அவர்களுக்கு வேலை கொடுப்பதாகவும் இருக்கும்; உணவும், தண்ணீரும் கிடைப்பதற்கும் வழிவகை ஏற்படும். இப்படிப்பட்ட பல்வேறு வசதிகளை, கஷ்டப்படும் இந்த நேரத்தில் இந்த அரசு செய்து கொடுத்தால் அவர்கள் மத்தியிலே இந்த அரசுக்கு நல்ல பெயரை ஈட்டித் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அதோடு எல்லாக் கிராமங்களுக்கும் ஜி.எல்.ஆர். அமைக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் வசிட்ட நதி, சுவேத நதி என்று இரண்டு நதிகள் ஓடுகின்றன. இதுவரையில் எந்த ஆண்டிலும் அவைகளில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டதில்லை. ஆனால் இந்த ஆண்டு தண்ணீர் இல்லாத நிலை வந்து விட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜி.எல்.ஆர். என்று சொன்னார்கள். அதை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. இராசாம்பாள் :** தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டி என்பது அதனுடைய பொருள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டிக்குப் பதிலாக ஒவ்வொரு வீட்டுக்கும் குழாய்த் தண்ணீர் போக வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. ஆனால் உறுப்பினர் அவர்கள் தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டி வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள் என்று கருதுகிறேன்.

**திருமதி த. இராசாம்பாள் :** ஒவ்வொரு வீட்டுக்கும் குழாய் மூலம் தண்ணீர் கொடுக்கச் செலவு அதிகமாகும். அதைவிட சுலபமான முறையிலும், பொருளாதார நெருக்கடி இல்லாமலும் செய்யக் கூடியது இந்த தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி அமைப்பது. எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்று நினைத்து சுருக்கமாக ஜி.எல்.ஆர். என்று சொன்னேன். மன்னிக்கவும்.

மேலும் இந்த அரசு பல திட்டங்களைத் தீட்டியிருந்த போதிலும்,

> " காலத்தால் செய்த உதவி சிறிதெனினும்
> ஞாலத்தில் மாணப் பெரிது "

என்பதைப் போல செய்கின்ற உதவிக்கு பாராட்டு தெரிவிப்பதாக இருந்தாலும் 10-வது மாதத்தில் தன்னிறைவுத் திட்டத்தைக் கொடுத்துவிட்டு, அவர்களை ஏன் என்று கேட்க முடியவில்லை. குறுகிய காலம்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொல்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் புரிந்துக் கொள்ளவே மூன்று மாதம் ஆகிறது என்றும் சொல்கிறார்கள். ஆகவே, முதல் கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த தன்னிறைவுத் திட்டத்திற்கு மேலும் மூன்று மாதங்கள் அதிகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் மக்களுக்கு பிழைக்க வழியின்றி வேறு இடங்களுக்கு அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள்எல்லோரும் அவ்வாறு செல்கின்ற இடங்களில் ஓட்டல்களில் சாப்பிட முடியாத நிலை ஏற்படுகின்ற

காரணத்தால்—இந்த நிலைமை என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல மாநிலத்தின் பல இடங்களில் இன்றைக்கு மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். ரெயில்வே ஸ்டேஷனிலும் பஸ் ஸ்டாண்டுகளிலும் மக்கள் நின்றுக் கொண்டிருப்பதைக் கண்ணுறுகிறோம் — அவர்கள் சாப்பிடுவதற்குரிய வகையிலே சாப்பாட்டுப் பொட்டலங்களாக குறைந்த விலையிலே கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

என்னுடைய தொகுதியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டார்கள். அவ்வாறு மூன்று நான்கு மாதத்திற்கு முன்பு வந்து பார்வையிட்டபோது அங்கு இருக்கின்ற ஏதோ ஓரளவு தண்ணீரை வைத்துக் கொண்டு அங்குள்ள விவசாயிகள் பயிர் செய்துக் கொண்டிருந்தார்கள். பார்வையிட வந்தவர்கள் ரோட்டிலேயே நின்று கொண்டு பார்த்துவிட்டு அந்தப் பயிர்கள் பச்சையாக இருக்கின்றது என்று கூறிவிட்டு இந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை என்று கூறினார்கள். மேலேதான் பச்சையாகத் தெரிகின்றதே தவிர உள்ளே காலை வைத்துப் பார்த்தால் அங்கே சேறு இல்லாத நிலையில் தரையில் நடப்பது போன்று இருப்பது தெரியும்.

நஞ்சைப் பயிருக்கு 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் வந்து பார்வையிட்டு சென்றதற்குப் பிறகு அதுவும் கூட வருவதில்லை. ஆகவே, பயிரைப் பார்த்து நிலைமையை நிர்ணயம் செய்வதற்குப் பதிலாக அதனுடைய விளைச்சல் எவ்வளவு, அதனுடைய மதிப்பு எவ்வளவு என்பதை எல்லாம் பார்த்து நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

தண்ணீர் இல்லாத காரணத்தால் மக்கள் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்கள் அனைவருக்கும் ஏதேனும் வேலை வாய்ப்புக் கொடுத்து அவர்கள் வாழ வழிவகை செய்ய வேண்டும். அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாவிட்டாலும் அவர்களுடைய பணத்தையாவது பயன்படுத்தி இந்த அரசு நல்லமுறையில் திட்டங்களைச் செயல்படுத்தி வறட்சி நிவாரணப் பணியைச் செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

திரு. செ. குப்புசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, வறட்சிக் கொடுமை பற்றி பேசுவதற்கு அனுமதித்ததற்காக முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டம் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் கூறிவிட்டார்கள். அதிலும் குறிப்பாக ஒருசில





பகுதிகளில் குடிநீர் கூட கிடைக்காத நிலையில் மக்கள் வெளியூர்களுக்குச் செல்கின்ற நிலை இருக்கின்றது. அந்த அளவுக்கு வறட்சி பாதித்திருக்கிறது என்பதை இந்த சட்ட மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அரிசி கிடைக்காத நிலையில் மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற குடும்பக் கார்டுகளை அவர்கள் சர்க்கரை வாங்காத காரணத்தால் அதை சர்க்கரை வாங்கிச் சாப்பிடுவதற்கு வசதியுள்ளவர்களிடத்திலே கொடுத்து விட்ட காரணத்தால் தற்போது கார்டுகள் மூலம் அரிசி வாங்க இயலாமல் கார்டுகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். தினமும் காலையிலும், மற்ற நேரங்களிலும் காபி போன்றவற்றிலே கலந்து சாப்பிடுவதற்கு சர்க்கரை அதிகமாக உபயோகிக்கின்றவர்களுக்கு சர்க்கரையே வாங்கிச் சாப்பிடாத மக்கள் தங்களது கார்டுகளைக் கொடுத்துவிட்ட காரணத்தால் இப்போது அரிசி வாங்குவதற்கு கார்டு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அந்த நிலையில் பெருவாரியான மக்கள் அந்த வட்டார ஆட்சித் தலைவர்களிடம் முறையிட்ட பிறகும் கூட அவர்களுக்கு கார்டுகள் கொடுக்கப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். கார்டு வேண்டும் என்று கேட்கின்றபோது 'நாங்கள் கொடுத்த கார்டுகளை சர்க்காரிடத்திலே தரவேண்டும்' என்று அதிகாரிகள் கேட்கின்ற நிலைமை இருக்கின்றது.

என்னுடைய தொகுதியிலே சேரிப் பகுதியிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் கிடைக்காத நிலையில் வயல் வெளிகளிலே இருக்கின்ற கிணறுகளிலே வந்து தண்ணீர் எடுக்கின்ற நிலை இருக்கின்றது. ஆனால், விவசாயிகள் என்று சொல்லிக்கொள்பவர்கள் விவசாய சங்கம் என்றும் வைத்துக்கொண்டு விவசாயிகளின் போர்வையிலே இருந்துகொண்டு இரவோடு இரவாக கிணற்றிலே உள்ள தண்ணீரை எல்லாம் இறைத்து விடுகிறார்கள். மறுநாள் காலையில் தாழ்த்தப்பட்ட மக்கள் வந்து தண்ணீர் எடுத்துச் சென்றுவிடக் கூடாது என்பதற்காக இவ்வாறு செய்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட கொடுமை அங்கே இருக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இதுமட்டுமல்ல. ஏழை மக்களுக்கு அப்படி தண்ணீர் கிடைக்காத நிலையில் அவர்கள் செய்கின்ற வேலைக்கு ஏற்ற கூலியும் கிடைப்பதில்லை. அரசு நிர்ணயிக்கின்ற கூலியை அவர்கள் கொடுப்பதில்லை. மேலும் அந்தக் கிணறுகளிலே தண்ணீர் எடுத்துச் செல்கின்ற காரணத்தைக் காட்டி கூலி ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் என்று கொடுப்பதைக் கூட குறைத்து அரை ரூபாய், முக்கால் ரூபாய் என்று கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட பரிதாபமான நிலைமை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. செ. குப்புசாமி] [1981 மார்ச் 4

(மாலை 6-10)

அத்தோடு குழாய்க் கிணறுகள், குழாய்கள் அமைப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதில் முக்கியமான பிரச்னை என்னவென்றால், குழாய்களை ரிப்பேர் செய்ய வேண்டும் என்றால், அங்கே வருகிற கிராம சேவிக்குகள் அந்தப் பிரச்னையை எடுத்துக் கொண்டு போய் ஊராட்சி ஆணையரிடம் முதலிலே கூறி, அவர்கள் அதற்குப் பிறகு படிப்படியாக மற்றவர்களுக்குத் தெரிவித்து, அது கடைசி நிலையை எட்டுவதற்குள், அந்தக் குழாய், கிணறுகளையே நம்பி இருக்கிற சேரி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்ற உண்மை நிலையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பால்மாடுகள், ஆடுகள் போன்றவை சங்கங்கள் மூலம் வளர்ப்பதற்காக வழங்கப்படுகின்றன. அவைகள் பாங்குகள் மூலமாக வழங்கப்படுகின்றன. அத்தகைய மாடுகள் வறட்சியினால் பாதிக்கப்பட்டு அந்தப் பால்பண்ணைகள் அனைத்தும் இன்று மூடிவிடக்கூடிய நிலையில் உள்ளன. அந்த மாடுகளுக்கு தீவனம் கிடைக்கவில்லை. அந்த மாடுகள் பட்டினியால் வாடுகின்றன, நோயுறுகின்றன. சினையுள்ள மாடுகள் கூட நோயுற்றால், மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று, ஒரு ஊசி போட்டாலே நோய் தீர்ந்துவிடுகிற மாடுகள் எல்லாம் எத்தனை முறை ஊசிகள் போட்டாலும் நிலை மாறாது அப்படியே நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிற அவல நிலையும் பஞ்சத்தின் காரணமாக அங்கே எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நிவாரணப் பணியை துரிதமாகச் செய்து கொடுப்பதோடு அவர்களுக்கு மாடுகளுக்காக வழங்கப்பெற்ற கடன் தொகைகளுக்கு, தவணையை இன்னும் கொஞ்சம் நீட்டித்து தந்தால் நலமாக இருக்கும் என்ற கோரிக்கையை அரசின் முன் வைக்கிறேன்.

அடுத்து, குறிப்பாக வந்தவாசி வட ஆற்காடு மாவட்டத்திலேயே மிகவும் பின் தங்கிய பகுதி. அது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. பிற்படுத்தப்பட்ட மக்களாகிய அந்தப் பகுதி மக்கள் மிகவும் நல்லவர்கள். அவர்கள் எவ்வளவு நல்லவர்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லி நான் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வெள்ளைக்காரன் காலத்திலே, சுதந்திரத்திற்காகப் போராடிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல தொண்டர்கள் அந்தப் பகுதியிலே இருந்துதான் நிறைய வந்தார்கள். சுதந்திரத்திற்காகப் போராடினார்கள். சுதந்திரம் பெற்று நாம் குடியாட்சி அமைத்த பிறகு, முதல் ஆட்சி முறை அமைக்க தேர்தல் வந்தபோது, இரண்டு மூன்று முறை காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரையே அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். அதற்குக் காரணம் சுதந்திரம் வாங்கப் போராடியவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதுதான்.



1981 மார்ச் 4] [திரு. செ. குப்புசாமி]

அதற்குப் பிறகு, காங்கிரஸ் சர்க்காரை விட திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், இன்னும் நல்ல முறையில் மக்களுக்கு பல நன்மைகள் செய்வார்கள் என்று நான் அப்போது பிரச்சாரம் செய்த காரணத்தினாலே, அதை உணர்ந்து இரண்டு முறையாக தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை விட—அது சரியில்லை, அவ்வளவாக அது மக்களுக்கு நன்மையைச் செய்யவில்லை—தவறுகள் செய்துவிட்டது என்று புரட்சித் தலைவர் அவர்கள் கேட்டபோது, அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை தொடர்ச்சியாக இரண்டு முறை தேர்ந்து எடுத்து இந்த மன்றத்திற்கு அவர்களின் சார்பாக அனுப்பி வைத்திருக்கிறார்கள். அப்படி ஏறத்தாழ 5 அல்லது 6 முறை அவர்களுடைய சார்பாக, அவர்கள் நல்லது என்று தேர்ந்தெடுத்த அத்தனை எம்.எல்.ஏ.-க்களும் அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு தொழிற்சாலையை அமைத்துக் கொடுப்பதாக சொல்லிக்கொண்டே வருகிறார்கள். ஆனால் இன்னும் ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லை. எந்த நேரத்தில் எது நல்லது என்று தேர்ந்தெடுக்கும் அந்த நல்ல மக்களுக்கு, நான் கூட அப்படி ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தித் தருவதாக உறுதி கூறியிருக்கிறேன்........ (மணியடிக்கப் பெற்றது) இந்த அவையிலும் அதைப்பற்றி பன்முறை சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு ஒரு தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க இந்த அரசு முன்வரவேண்டும் என்று மறுபடியும் கேட்டுக் கொண்டு, என் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து, வறட்சிப் பணிகளுக்கு செய்ய வேண்டிய அத்தனை நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அவர்களுக்கு துரிதமாக நிவாரணங்கள் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இரண்டு நாட்களாக இங்கே ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் எதிர்க்கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் ஒட்டு மொத்தமாக அவையில் உள்ள எல்லாத் தரப்பினரும் நம்முடைய தமிழகத்தில் வரலாற்றில் காணாத அளவிற்கு ஒரு கடுமையான வறட்சி அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் ஏற்பட்டிருப்பது பற்றி அவரவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே இரண்டு ஆண்டு காலமாக பருவ மழை சரியாக இல்லை. இந்த ஆண்டு மிகவும் மோசமானதொரு நிலை உருவாகி அதன் விளைவாக ஒவ்வொரு தொகுதியிலும் எப்படி மக்கள் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி ஆழ்ந்த கவலை கொண்டு இங்கே எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள், ஆனால் அதே நேரத்தில் மாவட்டங்களில் இருக்கக்கூடிய அதிகாரிகள் இந்த வறட்சியின் கடுமையை முழுமையாக உணர்ந்திருக்கிறார்களா என்பதைப் பற்றி எனக்கு சந்தேகமாக இருக்கிறது.

[திரு. ப. நெடுமாறன்] [1981 மார்ச் 4

இந்த அவை முன்னால் வைக்கப்பட்ட வறட்சி நிலை பற்றிய இரண்டு அறிக்கைகளில் முதல் அறிக்கையில் சில மாவட்டங்கள் பற்றிச் சொல்லப்பட்டது. இரண்டாவது அறிக்கை வைக்கப் பட்டபோது இன்னும் சில மாவட்டங்கள் பற்றி எடுத்துச் சொல் லப்பட்டது, ஆக, முழுமையாக அந்தந்த மாவட்டதிலுள்ள அதிகாரிகள் வறட்சிப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து என்னென்ன கஷ்டங்கள் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன, எந்த அளவிற்கு அவர்கள் துயர் அதிகமாக இருக்கிறது என்பதை அவர்கள் முழு மையாக உணரவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். அவையில் பேசியபோது அனைத்துத் தரப்பு உறுப் பினர்களும் அதைத்தான் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர வர்கள் பகுதிகளில் எந்த அளவிற்கு வறட்சியின் கடுமை இருக் கிறது என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் காலக் கட்டத்திலாவது இதனுடைய அபாயத்தை முழுமையாக உணர்ந்து, தமிழகத்தில் இந்த மாதமே இப்படியிருந்தால் இன் னும் ஒரு மாத காலத்தில் மிக மோசமான நிலை ஏற்படும் என்ப தில் சந்தேகம் இல்லை. ஆகவே அதனை உணர்ந்து விரைவான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை ஒரு அபாய அறிவிப்பாகக் கருதி நாம் செயல்பட வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது.

ஏற்கெனவே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1974-75-ல் டி. பி. ஏ. பி. திட்டம் என்று (ட்ரௌட் ப்ரான் ஏரியா ப்ரோக்ராம்) மத்திய அரசு ஒரு திட்டத்தை வகுத்தது. இந்தியா பூராவும் ஒவ்வொரு மாநிலத்திலும் எந்தெந்த மாவட் டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கணக்கிட்டு 13 மாநிலங்களில் 74 மாவட்டங்களை முற்றிலும் வறண்ட மாவட்டங்கள் என்று முடிவு செய்தது. அதன்படி இதற்கான செல வீடுகளை மத்திய அரசும் மாநில அரசும் 50சதவீதம், 50 சதவீதம் என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டன. அதற்காக பல நூறு கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்டது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இரண்டே இரண்டு மாவட்டங்கள்தான் இராம நாதபுரம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் இரண்டும்தான் இந்த டி. பி. ஏ. பி. திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டன. ஆந்திராவில் 11 மாவட்டங்கள், குஜராத்தில் 10 மாவட்டங்கள், கர் நாடகாவில் 10 மாவட்டங்கள் என்ற அளவில் சேர்க்கப்பட்டன. ஆனால் நம் அரசு சமர்ப்பித்திருக்கக்கூடிய அறிக்கையில் ஏறத்தாழ 11 மாவட்டங்கள் மிகவும் வறண்டு இருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத் தின்கீழ் எஞ்சியுள்ள மாவட்டங்களையும் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கவேண்டும் என்று வலியுத்த விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்கள் மட்டுமல்லாது குறிப்பாக வட ஆற்காடு மாவட்டம் எப்போதுமே வறண்டு கிடக்கக் கூடிய ஒரு மாவட்டம். அதே போல் மதுரை மாவட்டத்தை



1981 மார்ச் 4] [திரு. ப. நெடுமாறன்]

எடுத்துக் கொண்டால் ஒரு பகுதி பூராவும், திண்டுக்கல், வேடசெந்தூர், பழனி, நிலக்கோட்டை போன்ற பகுதிகள் அநேகமாக வறண்ட பகுதிகள்தான். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அத் திட்டத்தின் கீழ் சேர்த்து மத்திய அரசின் உதவியைப் பெற்று அந்தப் பகுதிகளிலும் வறட்சி நிலையை முழுவதுமாக போக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இந்த டி. பி. ஏ. பி. திட்டம் வறட்சி வருகிறபோது அந்த நேரத்தில் வேண்டிய வேலைகளைச் செய்து அந்தப் பகுதி மக்களின் துயர் துடைப்பது என்று இல்லாமல் நிரந்தரமாக அப்பகுதி மக்களின் துயரைப் போக்குவதற்காக வகுக்கப்பட்ட ஒரு திட்டமாகும். அந்தத் திட்டத்தின்படி வறட்சியின் கொடுமை யை ஒழிப்பதோடு குடிநீர் வழங்கவும், கால்நடைகளை அபிவிருத்தி செய்து அவற்றை செம்மைப்படுத்தவும், கிராமங் களில் உள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த் தவும் என்ற உயர்ந்த நோக்கங்களைக் கொண்டு வகுக்கப்பட்ட அந்தத் திட்டத்தின்கீழ் எஞ்சியுள்ள மாவட்டங்களையும் சேர்ப்பதற்கான நவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

(மாலை 6–20)

அதே நேரத்தில், தமிழகத்திலே இன்றைக்கு வட ஆற்காடு, புதுக்கோட்டை, தர்மபுரி, தென் ஆற்காடு, இராமநாதபுரம், திருச்சி, சேலம், தஞ்சை, மதுரை, இறுதியாக குமரி மாவட்டத்தில் ஒரு பகுதிகூட இன்றைக்கு வறட்சியால் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கின்றது என்பதை மனதிலே கொண்டு, இந்த அரசு செயல்பட வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன். இன்னொரு முக்கியமான விஷயம், தமிழகத்திலே எந்த அளவுக்கு வறட்சிக் கொடுமை இருக்கின்றது என்பதை மத்திய அரசுக்கு மாநில அரசு தெரியப்படுத்தியதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்படி தெரிவித்திருப் பார்களானால், மத்திய அரசிலேயிருந்து அதிகாரிகள் கொண்ட ஆய்வுக்குழு இங்கே வந்து, வறண்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தபிறகு, தேவையான நிதிகளை கொடுப்பதற்கு ஆராய்ந்திருக்கும். ஆனால், அப்படி ஒரு குழு தமிழகத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. அதே நேரத்திலே நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கருப்பையா அவர்கள் மத்திய அரசிலே இருந்த 100 கோடி ரூபாயை நம்முடைய தமிழக அரசு பெற்று, வறட்சிப் பணிகளுக்குச் செலவிட வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் வர வேற்கிறேன். மத்திய அரசை வற்புறுத்தி அவர்களிடமிருந்து அதற்கான பணத்தைப் பெற்று, இந்த தமிழகத்திலே வறட்சிப் பகுதிகளிலே நிரந்தரமான பணிகளைச் செய்வது

கான முயற்சிகளை எடுக்கவேண்டும். மாநில அரசுக்கு மத்திய அரசு உதவுவதற்கு இந்த அவையிலே எல்லாக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் ஒரு தீர்மானம் போடுவதிலே எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இல்லை. இரண்டு நாட்களாக நடைபெறுகின்ற விவாதங்களிலே எல்லோரும் ஒரு மனதோடு தமிழகத்திலே இருக்கின்ற வறட்சி நிலைமைகளை எல்லோரும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். எனவே, இந்த சட்டமன்ற அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அங்கே, டெல்லிக்கு அனுப்பி, தமிழகத்திலே இருக்கக்கூடிய வறட்சி அபாயத்தை அவர்களுக்கு உணர்த்தி, அதற்கான நிதியைப் பெறுவதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்யவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சகோதரி இராஜாம்பாள் அவர்கள் கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை இன்றைக்கு தமிழத்திலே பல மாவட்டங்களிலே ஏற்பட்டிப்பதாகச் சொன்னார்கள். இந்த வறட்சியின் விளைவாக ஆடு மாடுகளுக்குத் தேவையான தீவனம் இல்லை. அதனால் ஆடு மாடுகள் சாகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய அபாயம். இந்த அபாயத்திலிருந்து காப்பாற்ற, வெளி மாநிலங்களிலே இருந்து தீவனங்களை இறுக்குமதி செய்து இலவசமாக விநியோகிப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும், இல்லாவிட்டால், ஆயிரக்கணக்கான ஆடு மாடுகளை இழக்கவேண்டிய நிலைமை ஏற்படும். அதனால், அடுத்த சாகுபடி காலத்தில் இது நம்மை வெகுவாக பாதிக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதைப்போலவே வறட்சிப் பகுதிகளிலே இருக்கக்கூடிய ஏழைக் குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர்கள் ஆகியோருக்கு கட்டாயமாக இலவசமாக உணவு வழங்கும் ஒரு ஏற்பாட்டை இந்த அரசு செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி, இந்த வாய்ப்பினை நல்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இயற்கை செய்யத் தவறிய பணியை, அரசு இந்த வகையில் பணியாற்றி நாட்டில் நிலவிவரும் வறட்சியைப் போக்க இருக்கிறது என்பதற்கு இங்கே ஒரு அறிக்கை சமர்ப்பித்திருப்பதை வரவேற்று என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விழைகிறேன். இந்த அறிக்கை மூலம் நிலத்தடி நீர் ஆய்வுத்துறை அமைத்துள்ள ஆழ்துளை கிணறுகளில் கிடைக்கக்கூடிய நீரினால் இந்த வறட்சி நேரத்தில் ஏற்பட்டுள்ள குடி நீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தகுந்தது.



இப்படி நிலத்தடி நீரைப் பரவலாக எடுத்து குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் கொண்டுவந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

அது மட்டுமல்ல, முகவை மாவட்டத்திலே அங்கே நிலவிவரக்கூடிய வறட்சியை மனதிலே கொண்டு, நிலவரியை தள்ளுபடி செய்திருப்பதொடு, அரசுக்கு வரவேண்டிய கடன் பாக்கிகளை இந்த ஆண்டு நிறுத்தி வைக்கும் வகையில் ஏற்கனவே ஆணை பிறப்பித்திருப்பதாக இந்த அறிக்கையிலே கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். இந்த அறிக்கையில் முகவை மாவட்டத்தில் சென்ற ஆண்டை விட 30 சதவீதம் மழை குறைந்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின் மூலம் ஒரு தவறான கருத்து அரசுக்கு வந்துவிடக்கூடாது என்பதை நான் நினைவூட்ட கடமைப் பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு விவசாயிகளுக்கு வந்த வருவாயில் 30 சதவீதம் தான் குறைவாக வந்திருக்கிறேதோ என்ற எண்ணம் வந்து விடக்கூடாது. ஏனென்றால் சென்ற ஆண்டு விவசாயத்திற்கு தண்ணீர் தட்டுப்பாட்டுடன் தான் விளைச்சல் ஏற்படும் அளவு குறைவாக மழை பெய்தது. அதிலிருந்து 30 சதவீதம் குறைவாக இந்த ஆண்டு மழை பெய்தது என்று எடுத்துக் கொள்ளும் போது அது விவசாயம் செய்வதற்கு போதாமல், கதிர்பாயும் தருவாயில் தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கு நிலத்தின் மூலம் இந்த ஆண்டு ஒரு பைசா கூட வருவாய் இல்லை என்ற நிலைமை. அரசு இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று பணிவோடு தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி வறட்சியைப் போக்க அரசு நல்ல பல நடவடிக்கை எடுத்து வரும்போது கூட எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சிறைக்குச் செல்வோம் என்ற போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதே போல தான் 1977-ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததுடன் தமிழகத்தில் புயலால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டு, அப்போது மக்களின் துயர் தணிப்பு பணிகளில் ஈடுபட்ட போது, இப்போதைய எதிர்கட்சித் தலைவரவர்கள் சிறையில் இருந்து கொண்டு நான் வெளியே வரமாட்டேன் அதற்கு போராடுங்கள் என்று அவர்களுடைய தொண்டர்களை தூண்டி விட்டு அரசின் சக்தியை வேறு பக்கம் திசை திருப்ப முயற்சித்தார்கள். இதுபோன்ற ஒரு முயற்சி இப்போதும் நடக்கிறது.

ஆகவே நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எரிகின்ற நெருப்பிலே எண்ணெயை வார்க்கும் இந்த செயல்களை செய்யாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் என்னுடைய தொகுதியாகிய கடலாடி தொகுதி முதுகுளத்தூர் வட்டத்தில் ஒரு ஒன்றியத்தையும் இராமநாதபுரம் வட்டத்தில் ஒரு ஒன்றியத்தையும் கொண்டதாக உள்ளது. அங்கே குடிதண்ணீர் தட்டுப்பாடு மிகவும் அதிகமாக ஏற்பட்டுள்ளது. அந்த பகுதியில் கிணறுகள் கிடையாது. ஆகவே லாரிகள் மூலம் உடனடியாக தண்ணீர் கொடுக்கவேண்டும். நெற்பயிர் கதிர் பரியும் தருவாய் வரையில் சிறு விவசாயிகள் அதிகமான அளவில் இந்த ஆண்டு விவசாயத்திற்காக செலவு செய்து நஷ்டப்பட்டிருக்கிறார்கள். மராமத்து நிவாரணப் பணிகள் மூலம் சிறிய விவசாயிகளுக்கு எந்த பலனும் கிடைக்காது என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. சிறு விவசாயிகள் தங்களுடைய நிலத்தையே நம்பி தங்கள் குடும்பங்களை நடத்தி வருபவர்கள் கூலி மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு எந்த காலத்திலும் கூலி வேலைக்கு செல்ல மாட்டார்கள். இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு இந்த வறட்சியின் மூலம் ஏற்பட்ட துன்பத்திற்கு நிவாரணம் என்ற வகையில் நீண்ட காலத் தவணை முறையில் கடன் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு துரை முருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சிறையில் இருந்து கொண்டு தூண்டிவிட்டார்கள் என்று அவர் சொன்னார். அப்போது எங்கள் மீதும், கலைஞர் அவர்கள் மீதும் கொலை போன்ற குற்றங்களைக் கூறி சிறையில் வைத்திருந்தார்கள். சிறையில் இருந்தாலும் இந்த நாட்டை வாட்டுகின்றது பஞ்சம் என்ற காரணத்திற்காக, திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் நிதி திரட்டி கவர்னரிடம் அளிக்க வேண்டுமென்ற தலைவர் அவர்கள் கூறியதை ஏற்று பணத்தை கவர்னரிடத்திலே கொடுத்திருக்கிறோம். ஆகவே நாட்டை கெடுக்க வேண்டுமென்ற குறுகிய நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கிடையாது. தூண்டி விட்டார் என்று அவர் சொல்லியது தவறு. ஆனால் நாங்கள் வெளியே இருந்து பணியாற்றா வண்ணம் குறுகிய நோக்கத்தோடு எங்களை சிறையிலே வைத்தது ஆளும் கட்சி என்பதை நான் அவர்களுக்கு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

* **திரு சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், வறட்சி சம்பந்தமாக இங்கே வைத்திருக்கிற அறிக்கை மீது உறுப்பினர்கள் ஆங்காங்கே உள்ள நிலைமைகளை, இந்த வறட்சியைப் பற்றி பல விவரங்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். பல இடங்களில் பெரியவர்களை கேட்டால் ஏறக்குறைய ஒரு எண்பது ஆண்டுகளுக்குள் இப்படிப்பட்ட ஒரு



நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டதில்லை என்று சொல்கிறார்கள். காரணம, என்னுடைய அனுபவத்திலேயே கூட 20, 30 ஆண்டுகளில் ஒரு மாவட்டத்தில் வறட்சி என்றால், இன்னொரு மாவட்டத்தில் சரியாக விளைந்திருக்கும். தமிழகம் பூராவிலும் ஒரு சில இடங்களைத் தவிர, தாமிரபரணி, காவேரி, பெரியார் இந்த மாதிரி ஆறுகள் பாயக்கூடிய ஒரு சில இடங்களைத் தவிர தமிழகம் பூராவிலும் மிகப் பெரிய மோசமான நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அபாயத்தை இனியும் ஒன்றிரண்டு மாதங்களுக்கு கவனிக்காமல் விட்டால் எவ்வளவு பெரிய ஆபத்து, நெருக்கடி தமிழகத்திலே ஏற்படும் என்பதை உணர்ந்து அதற்கு வேண்டிய அவசரமான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்

[மாலை 6–30]

இன்றைக்கு நம் தமிழகத்திலே இருக்கின்ற ஏறக்குறைய 36 ஆயிரம் பாசனக் குளங்களிலே 30 ஆயிரம் குளங்களிலே வறண்டு போய் கொஞ்சம் கூட தண்ணீர் வரவில்லை என்று உங்களுடைய அறிக்கையே கூறுகிறது, அது மட்டுமல்லாமல், இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியில் விலைகள் எல்லாம் அரிசியினுடைய மற்ற உணவு தானியங்களுடைய விலைகள் உயர்ந்துவிட்டன. ஒரு வாரத்திற்கு முன்னாலே நான் கேள்விப் பட்டேன் மதுரை மாவட்டத்திலே விளைந்த நேரத்திலே ராகி, சோளம் போன்ற புஞ்சை தானியங்களையெல்லாம் மகாராட்டிரத்திலிருந்து வியாபாரிகள் வந்து கொள்முதல் செய்து கொண்டுபோய் விட்டார்கள். தமிழகத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்கி சீராக சேமித்து வைக்கின்ற நடவடிக்கையை காலாகாலத்திலே செய்திருக்க வேண்டும். ஏற்பட்டிருக்கின்ற கடுமையான பஞ்சத்தைப் பற்றி நான் பேசுவதற்கு முன்னாலேயே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் மிகக் கடுமையாகப் பேசி இருக்கிறார்கள்.

பல இடங்களிலே மக்களுக்கு எந்தவிதமான வேலையும் கிடைக்காமல் ஊர்களைவிட்டே வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள், வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ளவர்கள் வேறு மாநிலத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல கிராமங்களிலே கால்நடைகள் தான் விவசாயிகளுடைய முக்கியமான செல்வம் என்று சொல்லவேண்டும். அவைகளை இன்றைக்குப் பாதி விலைக்குக் கூட அவர்கள் விற்கமுடியாமல் கொடுக்கிற விலைக்கு விற்கிறார்கள். மற்றப் பொருட்களின் விலைகள் உயர்ந்து கொண்டிருக்கின்ற வேகத்திலே மட்டன், ஆட்டுக் கறி விலை மட்டும் கிலோ 20 ரூபாய் விற்றது 12 ரூபாய்க்கு குறைந்திருப்பதைப் பார்க்கிறோம். காரணம் என்னவென்றால் அவர்கள் இருப்பவற்றை விலைக்கு விற்றுவிட்டு எப்படியாவது வாழ்க்கை நடத்தவேண்டுமென்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். காரணம் அவைகளுக்கு

வைக்கோலோ மற்ற தீவனங்களோ கிடைக்கவில்லை. எப்படி கால்நடைகளைப் பாதுகாக்க முடியும்? இந்த நெருக்கடியான காலத்திலே அரசு தேவையான நடவடிக்கைகளை காலாகாலத்திலே எடுக்காவிட்டால் வருகின்ற ஏப்ரல், மே மாதங்களிலே மிகப் பெரிய நெருக்கடி மட்டுமல்ல, பஞ்சப் பகுதி என்று அறிவிக்க வேண்டிய நிலைமை இப்போதே இருக்கிறது. பஞ்சப் பிரதேசம் என்று இப்போதே அரசு அறிவிக்க வேண்டும், அப்படி அறிவித்தால் தான் மத்திய அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய .உதவிகள் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு நாம் பல காரியங்களைச் செய்ய முடியும்.

இங்கே பலர் பேசினார்கள், திரு நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள்,. வேலை கிடைக்காமல், உணவுப் பொருட்கள் கிடைக்காமல் இருக்கிற மக்களுக்கு உதவிகளைச் செய்யவேண்டும்: அந்த முறையிலே இராமநாதபுரம், புதுக்கோட்டை, வட ஆற்காடு ஆகிய மூன்று பிரதேசங்களையாவது பஞ்சப் பிரதேசங்கள் என்று அறிவிக்க வேண்டும், மற்ற உறுப்பினர்கள் பேசுகிற போது சொன்ன மாதிரி 100 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து வந்தால்தான் இந்தக் கடுமையான நெருக்கடியைப் போக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே உள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும்.

பல கிராமங்களிலே குடிநீர் இல்லாத காரணத்தினாலே 1, 2 மைல் போய் பாசனத்திற்காக இருக்கின்ற தண்ணீரை கிணற்றிலிருந்து எடுத்து வரவேண்டிய நிலைமை இருக்கிறது. கால் ஏக்கர், அரை ஏக்கர் நிலத்திற்காக கொஞ்சம் தண்ணீரை மட்டும் கிணற்றிலே வைத்திருக்கின்றவர்கள், குடிநீருக்காகக் கூட தண்ணீர் எடுக்கக் கூடாது என்று சொல்லும்நிலமையும் இருக்கிறது கடந்த காலத்திலே பல வேலைகளை சீராகச் செய்திருந்தால் இன்றைக்கு இவ்வளவு நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. கடந்த காலத்திலே குடிநீர் வடிகால் வாரியத்தினாலே குழாய்கள் போடப்பட்டவை, 6 மாதம், 1 வருடத்திற்கு மேலாக ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். உடனடி ரிப்பேருக்கு ஏற்பாடுவேண்டும். முன் காலத்திலே ஒரு ஊரிலே.ஒரு ஊரணி இருக்கின்றது என்றால் அங்கே உள்ளவர்கள் தண்ணீர் பருகுவதற்கும் ஆடுமாடுகள் தண்ணீர் பருகுவதற்கும் ஏற்படுத்தப்பட்ட குளங்கள் அவைகள். ஒரு மழை பெய்தாலே கிட்டத்தட்ட 6 மாதம் வரையிலும் தண்ணீர் தேங்கியிருக்கும். அப்படிப்பட்ட குளங்கள் இப்போது போய்விட்டன. தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம் என்கிறோம், அதற்கு முன்னாலே வேலைக்கு உணவுத் திட்டம் என்கிறோம், என்ன என்னமோ திட்டங்கள் இருந்தாலும் குடிநீருக்காக குளத்தை ஆழப்படுத்தவேண்டுமென்பதற்கு சட்டத்திலே இடம் இல்லை. குடிநீருக்காகக் குளத்து நீரைச் சாப்பிடக்



கூடாது, ஆகவே கிணறு வெட்ட வேண்டும் என்று சொன்னால் கிணறு தோண்டுவதற்கான பணத்தை .சேங்க்ஷன் செய்ய வேண்டும். குழாய் மூலம் பம்பு செட் போடுவதற்குப் பணத்தை சேங்க்ஷன் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஊருணிகளைச் செப்பனிடுவதற்காகவும், ஊருணிக்கு வருகின்ற தண்ணீர்வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடுவதற்காகவும் பணம் செலவழிக்க வேண்டுமென்று சொன்னால் ஊராட்சி ஒன்றியத்திலே அனுமதி கிடையாது; மாவட்ட அளவிலேயும் அனுமதி கிடையாது; சர்க்காரிலேயும் அனுமதி கிடையாது.

எங்கள் வட்டாரத்தில் பல இடங்களில் உள்ள கிராமங்களில் கீழே தோண்டினால் உப்பு நீராக இருக்கும். மழைக் காலத்தில் வருகின்ற தண்ணீரைத் தேக்கி வைத்து இருந்தால் கிட்டத்தட்ட ஒரு வருஷத்திற்கு வரும். சென்னை நகரத்திற்குப் புழலேரியிலிருந்து தண்ணீர் வருகிறது. மழைக்காலத்தில் கிடைக்கின்ற தண்ணீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்துகிறோம். எல்லாக் கிராமங்களிலேயும் ஊருணிகள் உண்டு. அவைகள் செப்பனிடப்படாமல், சீர் செய்யப்படாமல் போய்விட்டன. அதன் காரணமாக ஒரு வருடத்தில் லேசாகப் பருவ மழை தவறினாலும் கூட, கஷ்டம் ஏற்படுகிறது. இப்பொழுது வட கிழக்குப் பருவ மழையும், தென் மேற்குப் பருவமழையும் ஆக இரண்டு பருவ மழையும் தவறிவிட்டன. அதனால் குடிநீர்ப் பஞ்சம் என்ற அபாயகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் ஓர் எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு நிவாரணப் பணியில் ஈடுபட வேண்டும். அந்தந்த ஊர்களிலே இருக்கின்ற ஊருணிகளைச் செப்பனிடுவதற்கு தற்போது இருக்கின்ற தடங்கல்களை நீக்கிவிட்டு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, நிதி ஒதுக்கீடு செய்யலாம் என்ற அனுமதியை வழங்க வேண்டும்.

ஆடு, மாடுகளைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். வேறு மாநிலங்களிலேயிருந்தாவது வைக்கோலை வரவழைத்து, மலிவான விலையில் அவற்றை வழங்கி கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டும்.

உணவுப் பொருட்களைப் பொறுத்த வரையில், மத்திய அரசாங்கத்திடம் சொல்லியாவது கோதுமை, இன்னும் மற்றப் பொருட்களை வாங்கி அந்தந்தக் கிராமங்களிலே உள்ள நியாய விலைக் கடைகளின் மூலமாக நியாயமான விலைக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது இருக்கின்ற கார்டுகளையெல்லாம் நீக்கிவிட்டுபுதிய கார்டுகளை வழங்கி ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான பொருட்களை நியாய விலையில் கொடுக்கத் தக்க வகையில் கார்டுகளை வழங்கி அவர்களுக்குச் சீராக அத்தியாவசியப் பொருள்களை விநியோகம் செய்யவில்லையென்றால் பெரிய நெருக்கடி வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1981 மார்ச் 4

அதற்கடுத்தபடியாக, தேசீய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைகள் செய்யும்பொழுது அது உருப்படியான வேலைகளாக இருக்க வேண்டும். விரைவில் அழிந்து போகக் கூடிய வேலைகளாக இருத்தல் கூடாது. தற்காலிகமாக வேலை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் செய்யக்கூடிய வேலையாக இல்லாமல் ஊரிலே உள்ள ஊருணியை ஆழப்படுத்துதல் போன்ற வேலைகளைச் செய்தால் பிரயோஜனமாக இருக்கும். சாலைகள் இல்லாத கிராமங்கள் எத்தனையோ இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே சாலைகள் போட வேண்டுமென்றால் அந்த நிலச் சொந்தக்காரர்கள் இனாமாக அந்த நிலத்தை எழுதிக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் சாலை போட முடியாது. ஒரு இடத்திலே ரோடு போட வேண்டுமென்றால் நிலத்தை வாங்க வேண்டும். நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைக் கொடுக்க மாட்டேன் என்றால் அங்கே ரோடு வரமுடியாது. இதுபோன்ற பல ஹரிஜனக் குடியிருப்புகளுக்கு ரோடு போடுவதற்கு நிலம் இல்லை. அதனால் ரோடு போட முடியவில்லை. எனவே, இந்தச் சட்ட விதிகளைத் தளர்த்தி, ரோடு போடுவதற்கான நிலத்தை அக்குயர் செய்ய வேண்டும். இப்பொழுது சட்டத்தில் அதற்கு இடமில்லை. பணம் கொடுக்க விதியில்லை. ரோடு போடுவதற்காக 10 இலட்சம் ரூபாய் செலவு செய்கிறார்கள் ஆனால் பாதையை அமைக்க நிலம் வாங்குவதற்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு விதிகளில் இடமில்லை. இதனால் பல கிராமங்களுக்குச் சாலை அமைக்க வழி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வடார்க்காடு மாவட்டத்தில், 2,970 குளங்கள் நிரம்பவில்லை என்று சொல்லப்படுகிறது; தென்னார்க்காடு மாவட்டத்தில் 2,093 மானாவரி குளங்கள் வறண்டு விட்டன என்றும், சுமார் 91,704 பாசனக் கிணறுகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்யப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. பாசனக் கிணறுகள் இருக்கின்ற இடங்களில் கிணறுகளை ஆழப்படுத்தினால் ஓரளவுக்கு விவசாயம் செய்ய முடியும். ஆனால், ஆடு, மாடுகள் வாங்க வேண்டுமென்றால் கடன் வாங்க வேண்டுமென்றால் கூட்டுறவுக் கடன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களிலே அவர்களுக்குப் பழைய பாக்கி இருக்கிறது; அதனால் கூட்டுறவுக் கடன் கொடுக்க மாட்டார்கள். சர்க்காரிலே ஏற்கனவே தக்காவிக் கடன்களைத் தள்ளுபடி செய்து விட்டதால் புதிதாகத் தக்காவிக் கடன்கள் கொடுக்க மாட்டார்கள். இப்படிக் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் கிடைக்காமலும், தக்காவிக் கடன் கொடுக்க அரசாங்கம் தயாராக இல்லாத நிலையிலேயும் அவர்கள் என்ன செய்ய முடியும்? ஆகவே, கிணற்றை ஆழப்படுத்துவதற்கு ஒவ்வொரு கிணற்றுக்கும் 1,000 ரூபாய் கொடுத்து, அதில் 500 ரூபாய் மானியமாகவும், 500 ரூபாயை வட்டியில்லாக் கடனாகவும் கொடுத்து, கிராமங்களிலே உள்ள ஒரு சிலருக்கு வேலை கொடுப்பது மட்டுமல்லாமல் அந்தக்



1981 மார்ச் 4] [திரு. சோ. அழகர்சாமி]

கிணற்றை ஆழப்படுத்துகின்ற வேலையையும் செய்தால் சோளம், கேழ்வரகு போன்ற பயிர்களை விவசாயம் செய்து மகசூல் பெற வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய முடியும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் பம்புசெட்டுகளுக்கு பகல் நேரத்தில் மின்சாரம் சரியாகக் கிடைப்பதில்லை; அதற்கான ஏற்பாடு இல்லை. அதில் ஏகப்பட்ட கோளாறுகள் இருக்கின்றன. குளங்களிலே தண்ணீர் இல்லை என்று கிணற்றிலே எடுத்து விவசாயம் செய்யலாம் என்று கருதினால் 10 நிமிஷம் மின்சாரம் வரும், பிறகு மீண்டும் ஒரு மணி நேரத்திற்கு மின்சாரம் இருக்காது. பிறகு 10 நிமிடம் மின்சாரம் இருக்கும்; பிறகு நின்று விடும். எனவே இந்த நிலைமைகளைத் தவிர்க்க சீரான மின்சார விநியோகத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இது பிரதானமான விஷயம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடன் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் பஞ்சம், வறட்சி பெரிய அளவில் ஏற்பட்டிருக்கிறது; எல்லாப் பகுதிகளிலேயும் ஏற்பட்டிருக்கிறது. எனவே, தனியார்க் கடன்கள் உள்பட எல்லாக் கடன்களையும் வசூல் செய்வதை நிறுத்தி வைக்க வேண்டும். இதில் வருவாய்த்துறை அமைச்சர் சட்டம் கூட்டுறவுத் துறை அமைச்சர் எல்லாம் சேர்ந்து செய்ய வேண்டும். என்றும் ஏற்படாத அளவிற்கு ஆட்களே ஊரைவிட்டுப் வெளியே போகக் கூடிய அளவிற்குத் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது.

[மாலை 6–40.]

ஒரு குடும்பத்தில் இருக்கிற பெண்டு பிள்ளைகளையெல்லாம் கூப்பிட்டுக் கொண்டு, இந்த மாநிலத்திலே இருந்து வேறு மாநிலத்திற்குப் போகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. நாம் ஊரிலேயிருந்து மாநிலத்திற்கு வருகிறார்கள் என்றால், திரும்பிப் போகலாம். ஆனால், பிழைக்க வழியில்லாமல், இந்த தமிழ் நாட்டை விட்டே வெளி மாநிலத்திற்கு போக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால், அதை ரொம்பக் கவலையோடு கவனிக்க வேண்டும்.

அது மட்டுமல்லாமல், குடிக்கத் தண்ணீர் இல்லையென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை உடனடியாகக் கவனித்து, ஒரு யுத்தகால நடவடிக்கையைப்போல பாவித்து வேலை செய்ய வேண்டும். மாநில அரசே செய்ய வேண்டுமென்றால், நிதி ஆதாரங்கள் போதாது என்பது தெரிந்ததுதான். ஆகவே, மத்திய சர்க்காரை எவ்வளவு வற்புறுத்த முடியுமோ, அவ்வளவு வற்புறுத்தி, நிதி பெறுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதிலே எந்தக் கட்சிக்கும் இதிலே ஆட்சேபணை கிடையாது. மத்திய சர்க்காரிலே ஆளுகின்ற கட்சியாக இருந்தா

தலைமை பொறுப்பேற்றதால்தான் வறட்சிய வந்தது என்பதைப்போல சொல்லிச் சென்றார். அவருக்கு ஒன்றை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். மரியாதைக்குரிய எதிர் கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் 1974 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன், வரலாறு காணாத வறட்சி கண்டபோது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களை அழைத்து காட்டி நிவாரணப் பணிகளைச் செய்தார் என்பதை நினைவூட்ட கடமைப் பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் தலைமையிலே உள்ள இந்த அரசு வான் பொய்யினும் தான் பொய்யாத காவேரி ஓடுகின்ற தஞ்சை மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து இன்று தஞ்சை மாவட்டப் பகுதியான ஒரத்தநாடு, தஞ்சை வட்டங்களை மற்ற மாவட்டத்தோடு சேர்த்து நிவாரணப் பணிகளை மேற் கொண்டிருப்பதை நான் பெருமையோடு மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அந்த வட்டங்களிலே, பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று சொல்லுகிற நேரத்தில் ஒரு சில ஊராட்சிகளை மட்டும் குறிப்பிட்டு, அந்த ஊராட்சிகளுக்கு மட்டும் (மணி அடிக்கப்பட்டது) அங்கே வறட்சி நிவாரண வேலைகள் மேற் கொள்ளுகிற வகையில் இன்று காரியங்களை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரத்த நாடு, பட்டுக்கோட்டை, மன்னார்குடி, பேராவூரணி போன்ற பகுதிகளில் வறட்சியால் பாதித்து, அவைகள் திருச்சிக்கு அருகாமையிலே இருக்கிற காரணத்தால் தான் அந்தப் பகுதியினுடைய நிலத்தின் தன்மையை இன்று புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருச்சி போன்ற பகுதிகளின் தன்மையைக் கொண்டிருக்கிறது.

அங்கே கிணறுகளைத் தோண்டுவோமேயானால் 60 அடி, 65 அடி, 70 அடி தோண்டினால் கூட தண்ணீர் கிடைப்பதற்கு இயலாத நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல, அப்படிப்பட்ட இந்த 4 வட்டங்களில் ஆழ் குழாய் கிணறுகள் இறக்கினால் தான் தண்ணீர் பெற முடியுமென வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே இந்த அரசு அந்த 4 வட்டங்களிலும் குடி நீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக அவைகளை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசும் போது மற்ற மாவட்டங்களில் இருந்து வறட்சிப் பகுதிகளை விட்டு தஞ்சையை நோக்கி வருகிறார்கள் என்பதனை குறிப்பிட்டார்கள். நான் ஒருமுன் காப்பதற்காக ஒன்றைக் கூற விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம் இப்படிப்பட்ட அவல சூழ்நிலையில் உள்ள பிற மாவட்டங்களுடைய மக்களைக் காப்பாற்றும் பொறுப்பில் இருக்கிற காரணத்தால், இன்று தஞ்சையில் உள்ள ஏரி குளங்களில் ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி அந்த ஏரி, குளங்களை ஆழப்படுத்தி, தண்ணீரைத் தேக்கி வைக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





தமிழகம் மேட்டூரை நம்பி இருக்கிறது. கர்நாடகத்தில் அப்படி வறட்சி ஏற்பட்டால் தஞ்சை மாவட்டம் பாதிக்கப் படுகிறது. பின்னர் தஞ்சை மக்கள் பிற மாநிலத்திற்குப் போகக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு காவிரி நீர் பிரச்சினையில் தீர்வு காண புரட்சித் தலைவர் எடுத்துள்ள முயற்சிகளுக்கு, மத்தியில் ஆளுங் கட்சியாக உள்ள, இங்கே உள்ள காங்கிரஸ் (ஐ) உறுப்பினர்கள் மத்திய அரசை வற்புறுத்தி தமிழகத்திற்கு நியாயமாக கிடைக்க வேண்டிய காவிரி ஆறு நீர்ப் பிரச்சினைக்கு முடிவு காண நான் வேண்டுகோள் விடுக்கிறேன். (மணி அடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப் பட்டார்).

(மாலை 6.50).

திரு. சி. சபாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிலை பற்றி இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் அரூர் தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி. மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் அது நன்றாகத் தெரியும். அங்கே குடிநீர் பஞ்சத்தால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நான் கடந்த 20 ஆம் தேதி அன்று ஒவ்வொரு ஊருக்கும் சென்று சுற்றிப் பார்த்து விட்டு வந்தேன். ஒத்தப் பட்டி, பாவக்கல், கொட்டையூர் ஆகிய இடங்களில் 1974 ஆம் ஆண்டில் மேல் நிலைத் தண்ணீர் தொட்டிகள் கட்டி இருக்கிறார்கள். அதில் தண்ணீர் நிரப்ப ஆரம்பித்தால், அது கீழே வந்து விடுகிறது. தண்ணீர் தேங்குவது இல்லை. திராவிட முன்னேற்றக் கழக காலத்தில் இருந்த பிரசிடென்ட்டுகள் இந்தத் தண்ணீர் தொட்டிகளைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கான்ட்ராக்டர்கள் இதைச் சரியாகச் செய்யவில்லை. அந்தத் தண்ணீர் தொட்டிகளின் மேல் இன்னார் காலத்தில் இது கட்டப்பட்டது. இன்னார் திறந்து வைத்தார்கள் என்று எல்லாம் கல்வெட்டு இருக்கிறது. அந்தத் தண்ணீர்த் தொட்டிகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலாவது பழுது பார்த்து, அந்தத் தொட்டிகளில் தண்ணீர் தேங்குகிற வகையில் செப்பனிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோட்டப்பட்டி, சின்னத்தாழம்பட்டி, தும்பலூர் வழியாக பஸ் விடும்படி போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல மாவட்டங்களில் எப்படி வறட்சி வாட்டுகிறதோ அதே போன்று நீலகிரி மாவட்டத்திலும் வறட்சியால் பாதிக்கப்பட்டு மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1978–79 ஆம் ஆண்டில் வெள்ளத்தால் மிகவும் சேதம் ஏற்பட்டது. அந்த வெள்ள நிவாரணப் பணிகளே இன்னும் சரியாகச் செய்யப்படாமல் இருக்கிறது.

அங்கேயுள்ள பயிர்கள் எல்லாம் பனியால் பாதிக்கப்பட்டு வாடி வதங்கிக் கொண்டு இருக்கின்றன. நீலகிரியின் நிரந்தரப் பயிரான தேயிலைச் செடிகள் இந்த மார்ச்சு மாதத்தில் வாடி, காய்ந்து, தீய்ந்து போய்க் கொண்டு இருக்கின்றன. உருளைக் கிழங்கு போன்ற காய் கறிகள் அதிகம் சேதம் அடைந்துள்ளன. அங்கே ஆற்றுப் பாசனமோ அல்லது குளத்துப் பாசனமோ கொண்டு எந்தப் பயிரையும் வளர்க்க முடியாது. அப்படிப்பட்ட எந்தவிதமான வசதியும் அங்கே கிடையாது. மழையை நம்பியே பயிர் செய்ய வேண்டும். கடந்த ஓராண்டு காலமாக மழை பெய்யாததால் எல்லாச் செடிகளும் நாசமாகிக் கொண்டு போகின்றன. இதனால் ஒரு பஞ்சமான நிலைமை அங்கே ஏற்பட்டு இருக்கிறது.

அங்கே தேயிலைப் பயிர் பிரதானப் பயிராக இருந்தாலும், ஒரு கிலோ ரூ. 1.50க்குத்தான் கிடைக்கிறது. விவசாயிகளுடைய கருவிகள் எல்லாம் விலை அதிகம். அங்கேயுள்ள விவசாயிகளின் கருவிகள் வேறு, கீழ்ப்புறத்தில் வேலை செய்கிற விவசாயக் கருவிகள் வேறு. அதே போன்று துணி விஷயத்திலும் அதிக விலையுயர்ந்த கம்பளித் துணிகளைத்தான் குளிர் தாங்குவதற்காகப் போட வேண்டியிருக்கிறது. காய் கறிப் பொருள்கள் கூட விலை அதிகம். எல்லாப் பொருள்களுமே கீழேயுள்ள ப்ளெயினிலிருந்து வரவேண்டியிருப்பதால், அதிக விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டியருக்கிறது. அந்த அளவுக்கு எல்லா மக்களும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, நீலகிரி மாவட்டத்தை வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க, அதற்குரிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன், (மணியடிக்கப்பட்டது).

* திரு. என். பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கே வறட்சி நிலை பற்றி நடக்கிற இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி என்னுடைய கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன். வரகூர் மிகவும் பின்தங்கிய பகுதி. திருச்சி மாவட்டத்தில் மிகவும் பிற்பட்ட ஒதுக்கப்பட்ட பகுதியாக அது இருப்பதால் அந்தப் பகுதியில் நம்முடைய தமிழக அரசு, புரட்சித் தலைவர் தலைமையில் இயங்கும் அரசு அங்கே தன்னிறைவுத் திட்டத்தை இரண்டு யூனியன்களில் செயல்படுத்தி வருவதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆடிப்பட்டம் தேடி விதை என்று சொல்வார்கள். அந்த ஆடித் மாதத்தில் மழை பெய்யாமல், புரட்டாசி மாதத்தில் மழை பெய்ததால் விவசாயிகள் பயிர் செய்த பயிர்கள் எல்லாம் விளையாமல், நாசமாய் போய் விட்டது என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.





என்னுடைய தொகுதி திருச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதால், வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதால், அங்கேயுள்ள ஏழை எளிய மக்களுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு பஸ் வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பருவ மழை தவறியதன் காரணமாக வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை வைத்து இருக்கிறார்கள். அந்த அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இயற்கை சீற்றத்தால், புயலாலும், வெள்ளத்தாலும் தமிழகம் தாக்கப்பட்ட நேரத்தில் எல்லாம் ஓடோடிச்சென்று நிவாரணப் பணிகளைச் செய்த தமிழக அரசு இன்று வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகத்தில் நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு நல்லமுறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. தமிழகத்தில் வடாற்காடு மாவட்டம் அதிகமான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பகுதியில், இன்று பஞ்சப் பகுதியாக அறிவிக்கிற நேரத்தில், வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர், வாணியம்பாடி தாலுக்காக்களை அந்த வறட்சிப் பணி நடவடிக்கைகளில் சேர்க்காமல் இருப்பதால், தமிழக அரசு மீண்டும் பரிசீலனை செய்து, உரிய அதிகாரிகளுக்கு இது குறித்து நடவடிக்கை எடுக்கச்சொல்லி, அந்த திருப்பத்தூர், வாணியம்பாடி தாலுக்காக்களை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல என்னுடைய நாட்ராம்பள்ளி தொகுதியில் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கியிருக்கின்றன. கந்தரி ஒன்றியமும், நாட்ராம்பள்ளி ஒன்றியமும் திருப்பத்தூர் ஒன்றியத்தில் ஒரு பகுதியும் சேர்ந்திருக்கிறது. அங்கே குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. இந்த மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும் ஏறத்தாழ 85 சதவீதம் குடிநீர் கிணறுகள் தண்ணீர் இல்லாமல் குடிப்பதற்கும் தண்ணீர் பெற தகுதியற்றிருக்கிற காரணத்தால் இந்தப் பகுதியை ஒரு வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, இங்குள்ள விவசாயிகள் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகள் கிணறு வெட்ட கடன் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, குழாய்க் கிணறுகள் அமைப்பதன் மூலம் குடிநீர் பெற துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

[1981 மார்ச் 4

* திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, இன்றைய தினம் பருவமழை தவறியதால் ஏற்பட்
டுள்ள வறட்சியைப் பற்றி இங்கே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கை
மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்காக முதலில் நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் ஆதிவாசிகள் அதிகமாக வாழ்கிறார்
கள். கிட்டத்தட்ட 60,000 பேர்கள் என் உப்பிளியபுரம்
தொகுதியில் ஆதிவாசிகளாக இருக்கிறார்கள். இந்த நாடு
சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகள் ஆகியும் இன்னும் குடிக்கக்
கூட குடிநீர் கிடைக்காமல் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.
திருச்சி மாவட்டத்தில் உப்பிலியபுரம் பெரம்பலூர், ஜெயங்
கொண்டம், ஆண்டிமடம் போன்ற பகுதிகள் இன்றைய தினம்
வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைய
தினம் இராமநாதபுரம், புதுக்கோட்டை, வடாற்காடு ஆகிய
மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவிக்கப்
பட்டிருக்கின்றன. அங்கே வறட்சி நிலை என்று கருதி, எப்போ
தும்போல் இப்போதும் அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்தி
ருக்கிறார்கள். ஆனால் திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர்
பாராளுமன்றத் தொகுதியில் இருக்கிற 6 தொகுதிகளில் இருக்கிற
மக்களும் இன்றைக்கு குடிதண்ணீர் கூட கிடைக்காத கஷ்டத்தில்
இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே இராமநாதபுரம், புதுக்
கோட்டை, வடாற்காடு மாவட்டம் என்று மட்டும் எண்ணாமல்
இந்த 6 தொகுதிகளில் இருக்கிற எல்லா வட்டங்களையும்
நிரந்தரமான வறட்சிப் பகுதிகளாக அறிவித்து, அதற்கு வேண்
டிய உதவிகளை உடனடியாக செய்ய நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் காணப்பாடி ஏரி திட்டம்
சர்வே ஆகி 3 ஆண்டு காலமாகியும் இன்னும் பணி ஆரம்பிக்கப்
படாமல் உள்ளது. எனவே இந்த வறட்சி திட்டத்திலாவது அதை
நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

* திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, தமிழ்நாடு முழுவதும் பருவமழை தவறியதன் காரண
மாக ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலையைப்பற்றி விவாதிக்கின்ற
இந்தத் தருணத்தில் என்னைப் பேசுவதற்கு அழைத்ததற்காக
நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியார் மாவட்டமும், கோவை மாவட்டமும் வறட்சி பகுதி
யாக அறிவிக்கப்பெறாததற்கு என்ன காரணம் என்று தெரிய
வில்லை. பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அதிக
அளவில் பாசனப் பகுதி என்று கருதி, அந்த மாவட்டம் இந்த
வறட்சி அறிக்கையில் சேர்க்கப்படவில்லை என்று கருதுகிறேன்.



1981 மார்ச் 4] [திரு. சா. கிருட்டிணமூர்த்தி]

பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வெள்ளக் கோயில், காங்கேயம், தாராபுரம், அந்தியூர், சத்தியமங்கலம், ஊத்துக்குழி போன்ற பகுதிகள் வறட்சியால் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கின்றன.

என்னுடைய தொகுதியான சத்தியமங்கலம் தொகுதியில் சத்தியமங்கலம் தாலூகாவில் தாளவாடி, கடம்பூர், குத்தியாலத்தூர் போன்ற இடங்களில் பெரும்பாலும் மானாவாரி நிலங்களே உள்ளன. பருவமழை தவறியதன் காரணமாக அந்தப் பகுதிகள் எப்போதும் இல்லாத கொடுமைக்கு உள்பட்டுவிட்டன. அங்கே உள்ள மக்கள் அன்றாட உணவுக்குக்கூட வழி இல்லாமல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல தாளவாடி மலைப்பகுதியிலும், சத்திய மங்கலம் தாலுகாவிலும் அதிக அளவில் மானாவாரி பயிர் செய்கிற காரணத்தால் இதைப் போன்ற வறட்சி நேரங்களில் அங்கே சிறு சிறு அணைகள், குட்டைகள் கட்டி அந்தப் பகுதியிலே நீரைத் தேக்கினால் அந்த மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[இரவு 7.00]

இன்றைய தினம் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர்களுக்கு மேல் அந்தப் பகுதியிலே வேலையில்லாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே வறட்சிப் பணிகளைச் செய்கின்ற வகையிலே அந்தப் பகுதிகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று விரும்பிக் கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எஸ். அரங்கநாதன் : வணக்கத்திற்குரிய மாமன்றத்தின் சபாநாயகர் அவர்களே, வறட்சிப் பணியின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரையில் ஓரிரு முறை மழை பெய்தாலும் கூட தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அறவே மழை பெய்யவில்லை. அதை வறட்சிப் மாவட்டம் என்று அறிவித்து அங்கு குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் கரண்ட் ஃபெய்லியர் ஆகிற காரணத்தால் தண்ணீர் சரியாகக் கிடைப்பதில்லை. இதனால் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே அங்கே கரண்டை உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக ஜெனரேட்டர் வைத்து விட்டால் நிரந்தரமாக அங்கே குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வசதியாக இருக்கும் ஆகவே தர்மபுரி மாவட்டத்திலே தண்ணீர்வுத் திட்டத்திலே வேலை செய்வதைக் காட்டிலும் குடிப்பதற்கு தண்ணீர் கிடைப்பதற்கு உடனடியாக அரசு ஆவன

செய்யவேண்டும். கரண்ட் ஃபெயிலியர் காரணத்தால் கடந்த 4, 5 வருடங்களாக தண்ணீர் ஒழுங்காக வருவதில்லை. அங்கே கரண்டுக்காக ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவு செய்து நகரத்திற்கு தண்ணீர் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே இதிலே ஜெனரேட்டர் வைப்பதற்கான முறையைப் பின் பற்றினால் நல்லது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டு ஜெனரேட்டர் வைக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. ச. கிருட்டிணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வறட்சியினால் ஏற்பட்டுள்ள நிலைமையைப் போக்கவும், நீக்கவும் புரட்சித் தலைவர் அரசு எடுத்து வரும் துரித நடவடிக்கைக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடுத்து கொடுத்து சிவந்த கரத்தை உடைய புரட்சித் தலைவர் கும்பிட்டுக் கேட்கும் மக்களுக்கு வறட்சி நிவாரணமாக போர்க்கால அடிப்படைத் தேவை போன்று குடிநீர் வசதிக்கு ரூபாய் 4 கோடியே 40 இலட்சம் தந்ததும், நில வரி தள்ளுபடிக் கடன் வசூல் தள்ளிவைப்பு, பாதிக்கப்பட்டோருக்கு வேலை போன்ற எண்ணற்ற இனிய திட்டங்களை அளித்தமைக்கு புரட்சித் தலைவருக்கு வணக்கத்துக்குரிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக திருச்சி மாவட்டத்துக்கு ரூ. 50 இலட்சம் ஒதுக்கியதை மாவட்டத்தின் சார்பாக வரவேற்கிறேன்.

வறட்சியின் கோரப்பிடியில் சிக்குண்ட ஆண்டிமடம் தொகுதியை வறட்சிப் பகுதியாக அரசு அறிவிக்க வேண்டும். குடிநீருக்காக குழாய் கிணறுகளை அமைக்க வேண்டும். பழைய கிணறுகளை ஆழப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கிராமங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளில் மலிவு விலையில் உணவு தானியங்களையும் மற்றும் அத்தியாவசியப் பண்டங்களையும் வினியோகிக்கவேண்டும்.

விவசாயப் பாசன கிணறுகளை அரசு செலவில் ஆழப்படுத்தித் தரவேண்டும். விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலவரி உட்பட விவசாயிகள் சம்பந்தப்பட்ட அனைத்து வரிகளையும் ரத்து செய்ய வேண்டும். தனியார் கடன், அரசின் கடன், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் கடன் முதலிய எல்லா கடன் வசூலையும் நிறுத்தி வைக்க வேண்டும். வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்காக தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் துரிதப்படுத்தவும், புதிய பணிகளை மேற்கொள்ளவும் அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.



அனைத்து வளர்ச்சிகளிலும் குன்றி இருக்கும் ஆண்டிமடம் தொகுதியில் உள்ள செந்துரை, ஆண்டிமடம், ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களையும் தன்னிறைவு திட்டத்தில் சேர்க்க புரட்சித் தலைவரை பணிவன்புடன் வேண்டுகிறேன். அவ்வாறு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்து வறட்சி நிவாரணப் பணிகளையும் மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டிலே நிலவி வருகின்ற வறட்சி நிலைமை குறித்து எனக்கும் பங்கெடுத்துப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நெல்லை மாவட்டத்திலே சங்கரன்கோவில் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதி. ஆகவே, நெல்லை மாவட்டம் பற்றி, வறட்சி பற்றிய அறிக்கையிலே எதுவும் சொல்லப்படவில்லை என்பதை அறிந்து வேதனைப்படுகிறேன். அந்தப் பகுதியிலே 300 கிராமங்கள் வானம் பார்த்த பூமியாக இருக்கின்றன. அங்கே மழை பெய்யாத காரணத்தால் பாசன வசதியே கிடையாது. தண்ணீர் இல்லாத காரணத்தால் விவசாயிகளின் பயிர் தீய்ந்து போய் இருக்கின்றது என்ற நிலைமையைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த வறட்சிப் பணி நிவாரணங்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கிற தொகையைப் பார்க்கிறபோது அதற்காக நான் அவர்களைப் பாராட்ட போற்றக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, என்னுடைய சங்கரன் கோயில் வட்டாரப் பகுதி முழுவதையும் வறட்சிப் பகுதியாக அறிவித்து, வறட்சிப் பகுதிகளுக்கு செய்யப்பெற இருக்கிற அத்தனை நிவாரணப் பணிகளையும் அந்தத் தொகுதிக்கு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே முக்கியமாக சொல்ல வேண்டிய நிவாரணப் பணி என்னவென்றால் குடிநீர்ப் பிரச்சினைதான். என்னுடைய தொகுதியில் இந்தக் குடிநீர் பிரச்சினை என்று சொல்லுகிறபோது, நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு, கீழே போடப்பட்டிருக்கும் அடிபம்புகளில் ஏற்பட்டிருக்கும் பழுதுகளை நீக்கி, அவைகள் செம்மையாக இயங்குவதற்கான வழி வகைகளை முதலில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு வரிகளைத் தள்ளுபடி செய்து கொடுத்தும் இன்னும் அவர்களுக்கு வேண்டிய பாசன வசதிகள் ஆழ் கிணறுகளைத் தோண்டுதல், பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்தல் போன்ற பணிகளை விரைவில் நல்ல முறையில் செய்து கொடுத்து அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்காக தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

[1981 மார்ச் 4

## (8) அறிக்கை அளித்தல்

### விவசாய திட்ட வளர்ச்சி குழு அமைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையைத் தர இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களை அறிக்கையை அளிக்க அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 106-ன்படி கீழ்க்கண்ட அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

" நலிவுற்ற விவசாயப் பொருளாதாரத்தை சீர் செய்து முன்னேற்றத்திற்குக் கொண்டுவர, மாநில அளவில் தனி விவசாயத் திட்ட வளர்ச்சிக் குழு நிறுவபப்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்திருந்தது. விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காண பல்வேறு விவசாயச் சங்க உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து அரசுடன் பல்வேறு கட்டங்களில் பேச்சு வார்த்தைகள் நடத்திய விவசாயச் சங்கப் பிரதிநிதிகளாலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்கும் வகையிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட உயர் மட்ட விவசாயக் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இக்குழுவிற்கு முன்னாள் சட்டப் பேரவைத் தலைவரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக விவசாயச் சங்கச் செயலாளருமான திரு முனு ஆதி, தலைவராக நியமிக்கப் படுகிறார். காபினெட் அந்தஸ்து தவிர மற்ற அனைத்து உரிமைகளையும் கொண்ட அமைச்சர் நிலை தலைவருக்கு வழங்கப்படும்.

கீழே குறிப்பிட்டுள்ள விவசாயச் சங்கப் பிரதிநிதிகளும், விவசாயத் தொழிலில் ஈடுபட்டவர்களின் சங்கங்கள் வேறு இருப்பின் அந்த அமைப்புகளின் பிரதிநிதிகளும், அந்தந்த அமைப்புகளின் பரிந்துரைகளின் படி இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள்.

1. தமிழக விவசாயிகள் சங்கம்.

2. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (இந்திய கம்யூனிஸ்டு கட்சி.)

3. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், (இந்திய கம்யூனிஸ்டு கட்சி—மார்க்சிஸ்டு).





4. தமிழ்நாடு மாநில விவசாயிகள் சங்கம்.

5. கரும்பு விவசாயிகள் சங்கம்.

6. தமிழக விவசாயிகள் சங்கம். (திரு. பாலசுப்பிரமணியம் தலைமை).

7. தேசிய உழவர் சங்கம்.

8. விவசாயத் தொழிலாளர் சங்கம்.

இந்தக் குழுவில் தலைவர் நீங்கலாக, மொத்தம் பதினான்கு உறுப்பினர்களுக்கு மேற்படாமல் இருப்பர். குழுவின் உறுப்பினர்கள் விவசாயிகளின் பிரச்சினைகளை நேரில் கண்டறிய மாநிலம் முழுவதும் பயணம் செய்ய உரிமை உண்டு. பயணப்படி, தினப்படி பெறும் பொருட்டு இக்குழு முதல்தர குழுவாகக் கருதப் படும்.

விவசாயிகளின், குறிப்பாகச் சிறு விவசாயிகளின் கீழ்க்கண்ட பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கவும் அரசுக்குப் பரிந்துரைகள் செய்யவும் இந்தக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது—

1. கடன்கள்.

2. வட்டி விகிதம்.

3. உதவி.

4. விவசாயத் தொழில் முன்னேற்றம்.

5. விவசாயிகளின் கால்நடைப் பாதுகாப்பு.

6. தொழில் செய்யும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு நிவாரணம்.

7. பயிர் பாதுகாப்பு.

8. இடுபொருள்கள், விளைபொருள்கள் ஆகியவற்றின் விலைகள்.

9. மின்சாரம்.

10. வரிவசூல்.

1981 மார்ச் 4]

உடனடியாக எழும் உள்ளூர்ப் பிரச்சினைகளுக்கு அரசு அதிகாரி
களுடன் கலந்து பேசித்தீர்வு காண வழிவகை செய்யும் பொருட்டு
விவசாய சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட மாவட்டக் குழுக்கள்
அமைக்க இந்த உயர் மட்டக் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்படு
கிறது.

தமிழக அரசின் விவசாயத் துறை செயலர் இக்குழுவின்
உறுப்பினர்—செயலராகப் பணியாற்றுவார்.

தமிழக அரசின் இந்த முடிவை விவசாயப் பெருமக்களும்,
சட்டப்பேரவை உறுப்பினர்களும் வரவேற்றுப் பாராட்டுவார்கள்
என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 7. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

### தமிழ்நாட்டில் வறட்சி நிலை விவாதம்– தொடர்ச்சி.

*திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவிரி'
என்று சொல்வது உண்டு. இன்று தொடர்ச்சியாக வான் பொய்த்
ததன் காரணமாக காவிரியும் பொய்த்து தமிழகம் எங்கும் வறட்சி
சூழ்நிலையை ஏற்படுத்தி இருப்பதைக் கண்டு கொண்டிருக்கி
றோம். இதனால் குடிதண்ணீர்ப் பிரச்னை மிகப் பெரிய பிரச்
னையாகி விட்டது. நீர் நிலைகளில், ஏரி குளங்களில் தண்ணீர்
இல்லை. அதனால் இன்றைக்குத் தமிழக அரசு குடிநீர் வடிகால்
வாரியத்தின் மூலமாகத் தமிழகத்தில் ஏற்கனவே இருக்கிற அத்
தனை கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிதாகத் கிணறுகளைத்
தோண்டவும், குழாய்கள் அமைக்கவும் பல புதிய திட்டங்களைத்
தீட்டி மக்களுக்குக் குடிநீர் கிடைக்கச் செய்ய பாடுபடுவதை
நான் உளமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[இரவு 7–10.]

எனது மாவட்டமான பெரியார் மாவட்டத்தில் பல பகுதிகள்
வறட்சியால் வாட்டமுற்ற நிலையில் இருக்கின்றன. தாராபுரம்,
வெள்ளக்கோவில், பெருந்துறை போன்ற பகுதிகளில் வறட்சி
நிலை நிலவி வருகிறது. குறிப்பாக பெருந்துறை தொகுதியை
எடுத்துக்கொண்டால் அது ஏற்கனவே வரண்ட பிரதேசமாக
இருந்து கொண்டு வருகிறது. அந்தப் பகுதியில் பாசன வசதி
யைப் பெருக்கி அந்தப் பகுதி மக்களின் குறைகளைப் போக்க
இந்த அரசு திட்டமிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கி
றேன். எனது தொகுதியான மொடக்குறிச்சியில் காளிங்கராயன்,
கீழ்பவ னி போன்ற பாசன வசதிகள் இருப்பினும் அந்தப்பகுதி
யில் குடிநீர்ப் பிரச்னை மிகப் பெரும் பிரச்னையாக இருந்து
கொண்டிருக்கிறது. இன்று அங்கு குடிநீர்ப் பிரச்னை மிகப்



1981 மார்ச் 4] [திரு. ச பாலகிருஷ்ணன்]

பெரிய அளவில் ஒரு தொல்லையாக ஆரம்பித்திருக்கிறது. அந்
தப் பகுதி மக்கள் குடிநீருக்காக பல பகுதிகளுக்குப் சென்று குடி
நீர் கொண்டுவரக் கூடிய ஒரு சூழ்நிலையில் இருந்து கொண்டி
ருக்கிறார்கள். எனவே தமிழக அரசு அந்தப் பகுதி மக்களுக்கு
குடிநீர்வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வசதி செய்து கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீர் வடிகால் வாரி
யம் அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஒன்றிய ஆணையாளர்களை
யும் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து
கொண்டு குடிநீர்ப் பிரச்னை பற்றிப் பேசி அதற்கு நல்லதொரு
தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீர்
வடிகால் வாரியம் குடிநீர் வசதி உள்ள இடங்களிலேயே மீண்டும்
அதிகமாகக் கொடுக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். அந்
தந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொள்ளாத காரணத்
தால் குடிநீர் இல்லாது கஷ்டப்படும் பகுதி மக்களுச்குக் குடிநீர்
கிடைக்காத நிலை இருந்து வருகிறது. ஆகவே இது குறித்து
குடிநீர்வடிகால் வாரியத் தலைவர் அவர்களுக்கும் சம்பந்தப்
பட்ட அதிகாரிகளுக்கும் அரசு ஆலோசனை வழங்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, இரண்டு நாட்
களாக நடைபெற்றுவரக்கூடிய வறட்சி பற்றிய அரசாங்க
அறிக்கைமீது அநேகமாக இருக்கக்கூடிய நிலைமைகள் பற்றி ஒரே
மனதான கருத்துக்கள் நிலவுகின்றன என்பதை அரசாங்கம் ஏற்
றுக்கொள்ளும் என்று நான் கருதுகிறேன். இந்தக் குறிப்பைப்
பார்க்கும்போது, தமிழகத்தில் சமீப காலத்தில் காணாத அள
விற்கு ஒரு மிகக் கடுமையான வறட்சி நிலை பெரும்பாலான
மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கின்றன என்பது நாம் இன்
றைக்கு நம் கண் முன்னால் பார்க்கக்கூடிய மாபெரும் உண்மை
யாகும். அரசாங்க அறிக்கைகளில் குறிப்பிட்டிருக்கக்கூடிய
மாவட்டங்கள், பகுதிகள் நீங்கலாக மற்ற சில மாவட்டங்களின்
சில பகுதிகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே
பரிய பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.
உதாரணத்திற்காக, திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து அறிக்கை
வரவில்லை என்றாலும் அந்த மாவட்டத்திலும் பாதிக்கப்பட்ட
பகுதிகள் உள்ளன. அதேபோல் நீலகிரி மாவட்டத்தைப்
பொறுத்தவரையிலும் கூட சில பகுதிகள் பாதிக்கப்பட்டிருப்பதாக
சம்பந்தப்பட்ட உறுப்பினர் கூறியிருக்கிறார்கள். எனவே
மேலும் எந்தெந்த பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை
மாவட்ட ரீதியாகவும், தாலுகா ரீதியாகவும் பரிசீலனை செய்து
பார்த்துத்தான் நாம் தீர்மானிக்க முடியும் என்பதை அரசின்
கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதிர்ஷ்டவசமாக, இன்று ஏற்பட்டிருக்கக்கூடிய கடுமையான
வறட்சிபற்றிய செய்தி அகில இந்திய ரீதியி பிரசுரிக்கப்பட
வில்லை என்று நான் கருதுகிறேன். இன்றுமத்திய அரசின்

கவனத்தை உடனடியாக ஈர்க்க வேண்டிய ஒரு அவசரமான பிரச்னையாகும் இது. எனவே இன்று பிரிக்கப்பட முடியா திருக்கக்கூடிய தமிழகத்தின் நாலரைக்கோடி மக்கள் கடுமையான ஒரு சோதனையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். 23,000 கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு செலவு செய்யக்கூடிய மத்திய அரசு நிச்சயமாகத் தமிழக மக்களுக்கும் தமிழக அரசுக்கும் உதவி செய்யவேண்டிய பொறுப்பு அரசியல் ரீதியிலும், அரசியல் சட்டப்படியும், பொருளாதார ரீதியிலும், தார்மீக ரீதியிலும் உண்டு என்பதை இந்த மன்றத்தின் மூலம் நாம் மத்திய அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மூன்று இதன் செலவுகளைப் பொறுத்தவரையில் இங்கு சொல்லப் பட்டிருக்கிறபடி நாம் போய்க்கொண்டிருக்கிற நிலையில் இதே முறை நீடித்தால், வறட்சி என்ற நிலமையிலிருந்து பஞ்சம் என்ற நிலைக்குப் பல மாவட்டங்கள் போய்க்கொண்டிருக்கின்றன என்பது மறுக்கப்பட முடியாததொரு உண்மையாகும். ஆகவே இதன் செலவு நூறு கோடி ரூபாய்க்கு அதிகமாகச் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

காரணம், இங்கே விவசாய உற்பத்தி கோரிக்கைகள் வந்திருப்பது எல்லோருக்கும் தெரியும். முதல் கட்டமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித் துறை, அதேபோல் கிராம என்ஜினியரிங் துறை ஆகிய இந்த மூன்று துறைகளும் இதிலே செயல்படுவதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இதிலே நாம் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தேவைப்படுகின்ற அந்த எந்திரங்கள் வேலை செய்வதை, பழுது பார்ப்பதை அதிகாரிகளுடைய தனிப் பொறுப்பில், பர்சனல் ரெஸ்பான்சிபிலிடியில் ஒவ்வொரு தாலுகாவிலும், பிர்காவிலும் போடப் பட்டிருக்கின்ற பம்புகள், குழாய்கள் ஆழ் கிணறுகள், இந்த துளைபோடும் கருவிகள் சரியாக வேலை செய்கின்றனவா என்பதை முதலிலே பார்க்க வேண்டும். இல்லாமல் போனால்:, பல இலட்சக்கணக்கான ரூபாய்களை இதிலே முதலீடு, செய்தும்: பலன் கிடைக்காமல் போகும். தமிழ்நாட்டில் இன்றைக்கு ஏராளமான வாலிபர்கள் தொழிற் கல்வி கற்று, வேலை வாய்ப்பில்லாமல் பிட்டர்களாகவும், மற்றும் பல வேலைகளிலும் இருக்கிறார்கள். இந்தப் பல்லாயிரக்கணக்கான வாலிபர்களை இந்த வேலைகளில் ஈடுபடுத்தினால்:, அரசாங்கம் போட்டிருக்கக்கூடிய:, போட இருக்கின்ற இந்த பம்புகள் முறையாக, செயல்படுவதற்கு நாம் உத்திரவாதம் அளிக்க முடியும், இது என்னுடைய முதல் கோரிக்கை.

அதே நேரத்தில் இன்றைக்குத் தண்ணீரைக் கொண்டுவரக் கூடிய லாரிகளில் பல இடங்களில் அரசாங்கம் தண்ணீரை சேமித்து வைக்க வேண்டுமென்று கருதுகிறேன். வறட்சி நிலையால் பாதிப்பு ஏற்பட்டால், தூரத்தில் இருக்கக்கூடிய நீர் நிலைகளிலிருந்து பாதிப்பு ஏற்படுகின்ற பகுதிகளுக்கு லாரிகள் மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்து வழங்க முடியும். பல இடங்களில் இந்த நிலைமை இருந்து வருகின்றது என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



மற்றொன்று மின் சக்தி, மின் சக்தி பாதிப்பால் இன்றைக்கு மதுரை நகரசபையிலே இருந்துகூட கோரிக்கை வந்திருக்கிறது. இந்த நகராட்சியிலே இருக்கக்கூடிய நீர் நிலை ஏற்றத்திற்கான மின்சக்தி கிடைக்காமல் போனால், பல இலட்சக் கணக்கான மக்கள் வாழ்கின்ற பெரு நகரமாகிய மதுரையிலே கூட பாதிப்பு ஏற்படும். எனவே, மின்துறை அமைச்சர் அவர்கள் தன் இலாகா மூலம் குடிநீர் சம்பந்தப்பட்டவற்றிற்கு எந்த விதமான நிபந்தனையும் இன்றி முதலிடம் அளித்து, குடிநீரை ஏற்றுவதற்கு எந்த நிலையிலும் மின்சாரம் அளிப்பதற்கு, அது இரவானாலும் சரி, பகலானாலும் சரி இதற்கு மின்சாரம் கொடுப்பதற்கு முதலிடம் அளிக்க வேண்டும். அதேபோல், இன்றைக்கு ஜெனரேட்டர்கள் தேவைப்படுகின்றன. இன்றைக்கு மின் சக்தி இல்லாமல்போனால், இப்படிப்பட்ட நீர் ஏற்றும் நிலையங்கள் பாதிக்கப்படும் என்பதை அரசு உணர்ந்து இன்றைய நிலையில் ஜெனரேட்டர்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, இன்றைக்கு வந்திருக்கக்கூடிய பிரச்னை உணவு. மாநில அரசின் கையில் வேண்டிய அளவுக்கு உணவு ஸ்டாக் இல்லை, மிகவும் பலஹீனமாக இருக்கின்றது என்பது என்னுடைய கணிப்பு. ஆனால், கிராமப்புறத்திலே உள்ள மக்களுக்குத் தேவையான தானியங்களை, பண்டங்களை வழங்காவிட்டால், பெரும்அளவில் பட்டினிச் சாவுகள் ஏற்படும். ஆகவே, அரசாங்கம் அவசர உணர்வோடு இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையை உணர்ந்து, புஞ்சை தானியங்களைக் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்து, கிராமப்புறங்களிலே சாதாரண கடைகளின் மூலம் ஒவ்வொரு மனிதனும் அன்றாடம் ஒரு ரூபாய் கையில் இருந்தால் அவர்கள் சில்லரையாக வாங்கக்கூடிய கடைகளை ஏற்படுத்தினால், கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய மக்களுக்கு அவற்றை வாங்க முடியும். இதற்கு இன்றைக்கு இந்த அரசாங்கத்திற்கு ஒரு பெரிய நிதி இருக்க வேண்டும். இதைச் செய்வதற்கு மத்திய அரசு கணிசமாக உதவி செய்ய முன்வர வேண்டும். மத்திய அரசு மாநில அரசுக்கு 2 இலட்சம் டன் கொடுப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. வாக்குறுதி அளித்திருக்கிறது என்று அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்த இரண்டு இலட்சம் டன் அரிசி, மற்றும் கோதுமை:, இதர தானியங்களை மாநில அரசாங்கம் பெறுவதற்குக் கவனம் செலுத்த வேண்டும். தேவையானால், இந்தச் சட்டப் பேரவையிலும், மேலவையிலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். இந்த வறட்சியின் பாதிப்பால் தமிழக மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், மத்திய அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற இன்றைக்கு அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1981 மார்ச் 4

அதேபோல, கால்நடைகளுக்குத் தீவனம். கடந்த காலத்
தில் இதற்காகப் பிற மாநிலங்களிலே இருந்து கொண்டு வரப்பட்டி
ருக்கிறது. இந்த மாநிலத்திலே அவைகள் கிடைக்காமல்
போனால், அவைகள் போக்குவரத்து மூலம் பிற மாநிலங்களிலே
இருந்து கொண்டு வரப்பட்டு, இந்தக் கால்நடைகள் கடந்த
காலததிலே பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. இந்த உணர்வோடு
இந்த நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்
டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட காரியங்களை நாம் செய்ய
வேண்டுமென்றால், இன்றைக்கு ஏராளமான பணம் தேவைப்
படும். ஒரு மாநில சர்க்கார் தன்னுடைய சாதாரண நிதியி
லிருந்து இதைச் செய்ய முடியாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பாகத் தெளிவாக வலியுறுத்த விரும்புகிறேன்.
ஆகவே, மத்திய சர்க்கார் அவசியம், கட்டாயமாக இந்த மாநில
அரசிற்கு மானியமாக உதவித் தொகை கொடுக்க முன்வரவேண்
டும். 6-வது ஐந்தாண்டுத் திட்டம் போடக்கூடிய நேரத்திலே
இப்படிப்பட்ட வறட்சி நேரத்திலே உதவி செய்யாவிட்டால், அது
பஞ்சமாக ஏற்பட்டு, பின்னால் விவசாய உற்பத்தி பாதிக்கப்
படும். அதன்மூலமாக தொழில் பாதிப்பு ஏற்பட்டு, இந்தத்
திட்டமே நிராகரிக்கப்படுகின்ற அபாய நிலைமை ஏற்படும்.

(இரவு 7-20.)

ஆகவே மத்திய சர்க்கார் பெருமளவில் மானியமாகக் கொடுத்து
உதவி செய்ய வேண்டியது அவசியம் என்று பல ஆதாரங்களை
மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்த வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் இன்றைக்கு நாம் செய்யக்கூடிய வேலைகள்
நிரந்தரமாகப் பயன் அளிக்க வேண்டும். கடந்த காலத்தில்
கான்ட்ராக்டர் மூலமாக வேலைக்கு உணவுத் திட்டங்
களையோ அல்லது தேசிய கிராமப்புற திட்டங்களையோ நாம்
செயல்படுத்தியதை போல், செயல்படுத்தினால் பயனற்றுப்
போகிறது. அரசாங்கத்தினுடைய இலாக்காக்கள் மூலமாக
முன்பு ஒவ்வொரு கிராமங்களிலும் அறிவிக்கப்பட்டதைப் போல
தண்டோரா போட்டு, இந்தக் குளம், இந்தக் கண்மாய் தூர்
எடுக்கப்படும், இவ்வளவு அடி ஆழத்திற்குத் தூர் எடுக்கப்படும்,
இதை மக்கள் எல்லோரும் சரி பார்த்துக் கொள்ளலாம் என்று
மக்களுடைய கண்காணிப்பைப் பல்வேறு அரசியல் ஸ்தாபனங்கள்,
விவசாய சங்கங்களுடைய பிரதிநிதிகள் ஈடுபாட்டைக் கொண்டு
வந்தால்தான் நிச்சயமாக இந்த காரியங்களை நிறைவேற்ற
முடியும். அப்படி செய்யக் கூடிய காலத்தில் அரசாங்கத்தி
னுடைய இலாக்காக்கள் செய்தால், கிணறுகள், ஊருணிகள்,
கண்மாய்கள் ஆழப்படுத்துவதன் மூலம் மழை பெய்யக் கூடிய
காலத்தில் தண்ணீரைத் தேக்கி வைக்கக் கூடிய நிலைமை தமிழகத்
திலுள்ள பல்லாயிரக் கணக்கான கண்மாய்களில் ஏற்படும்.



1981 மார்ச் 4] [திரு. என். சங்கரய்யா]

மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்
டார்கள். ரோடுகளைப் போடுவதற்கு, இன்றைக்கு இருக்கக் கூடிய
சட்டத்திலே அரசாங்கம் நஷ்ட ஈடு வாங்குகிற நிலைமை இருக்
கிறது, லிங்க் ரோடுகளைப் பொறுத்த வரையில் என்று கூறினார்
கள். அது ஒரு பழங்காலச் சட்டம் என்பதாகக் கருதுகிறேன்.
நிலங்களை வாங்குவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதைப் போல அவர்
களிடத்தில் ஏதோ ஒரு தொகையைத் கொடுத்து, அந்த தொகை
ஒரு முழு நஷ்ட ஈடாக இருக்க வேண்டிய அவசியமில்லை.
இன்றைக்கு இருக்கக் கூடிய அரசியல் சட்ட பாதுகாப்பிலே
ஏதாவது ஒரு நிர்ணயிக்கப்பட்ட தொகையைக் கொடுத்து அந்த
நிலங்களை வாங்கி ஏராளமான இணைப்புச் சாலைகளைப்
போடுவது மிக அவசியமாக இருக்கிறது.

அதே போல பல இடங்களில் தண்ணீருக்குக் கிணறுகள் வெட்ட
துளைக் கருவிகள் போன்றவற்றிற்கு டி.வி.எஸ். போன்ற பல
தனியார் கம்பெனிகளை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.
700 கோடி, ஆயிரம் கோடி என்று செலவு செய்யக் கூடிய இந்த
மாநில சர்க்கார், தேவைப்படுகிற ரிக்குகளை, துளைபோடுகிற
கருவிகளைத் தன்னுடைய பொறுப்பிலே வாங்கி வைத்தால் அது
எல்லாக் காலத்திற்கும் பயன் அளிக்கும். ஆகவே இன்றைக்கு
மதுரை போன்ற நகரங்களில் துளை போடுவதற்கு டி.வி.எஸ்.
போன்ற தனியார் கம்பெனிகளைத்தான் ரிக் கருவிகளை கேட்டுக்
கொண்டிருக்கிறார்கள், அது தேவையில்லை. மாநில சர்க்காரே
அவசர ஏற்பாட்டின் அடிப்படையிலே வாங்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்த அரசாங்கம் மக்களைப்
பாதுகாக்கின்ற எல்லா நடவடிக்கைகளுக்கும் ஆக்கபூர்வமான
ஒத்துழைப்பு கொடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன். இந்த
அரசாங்கம் கடந்த காலத்திலே சற்று மெத்தனமாக இருந்து
விட்டது. இவ்வளவு அபாயகரமான நிலைமை இருப்பதை அவர்
கள் முன்னாலேயே வெளிப்படுத்தி இருக்க வேண்டும் என்று நான்
கருதுகிறேன்.

இப்போதாவது இன்றைக்கு இந்தச் சட்ட மன்றக் கூட்டம்
முடிவடைகிற நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழக
அரசின் சார்பிலே, இந்த வறட்சியைச் சமாளிப்பதற்காக எடுக்க
விருக்கிற நடவடிக்கைகளை, திட்டங்களை அவர்கள் அரசாங்
கத்தின் சார்பிலே இந்த அவையில் வைக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிப்பட்ட முயற்சிகளுக்கு எவ்வளவு அரசியல்
பிரச்சினைகளில் மாறுபாடு இருந்தாலும், மக்கள் அனைவரையும்
பாதிக்கக் கூடிய பிரச்சினையாக இருப்பதால், எவ்வாறு காவிரி நீர்
பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மாநில அரசு மாநில மட்டத்திலே

பல மாநாடுகளைக் கூட்டுகிறதோ, அதே போல இந்த பிரச்சினையில் மாநில ரீதியில், மாவட்ட ரீதியில், தாலுகா ரீதியில் பல்வேறு அரசியல் கட்சிகள், தொழிற்சங்க, விவசாய சங்கப் பிரதிநிதிகள் கூட்டங்களைக் கூட்டி அதில் இருக்கக் கூடிய பிரச்சினைகளை அவர்களுக்கு முன் வைத்து, மக்களுடைய கூட்டுறவோடு செய்தால், கண்காணிப்பு உத்தரவாதத்துடன் அரசாங்கப் பணம் சரிவர செலவழிக்கப்படும் என்ற ஒரு நிலை ஏற்படும்.

இந்த வறட்சியை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு, தமிழக அரசும் எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து, நாம் ஒன்றாக மத்திய சர்க்கார் மானியமாக உதவிகள் கொடுக்க வேண்டு மென்று வற்புறுத்தியாக வேண்டுமென்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சி பற்றி வைக்கப் பெற்றிருக்கிற அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்கிறேன். 1978 ஆம் ஆண்டிலே அடித்த வெள்ளத்தால், அன்றைய தினம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பட்டிருக்கிற நஷ்டத்திற்கு தமிழகம் பூராவும் 200 கோடி ஒதுக்க வேண்டுமென்று இந்த அவையிலே ஒரு பிரச்சினையை முன் வைத்தது. இன்றைய தினம் தமிழகம் பூராவும் ஒட்டு மொத்தமாக நாலு கோடியே 80 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது. ஏறக்குறைய 100 முதல் 150 கோடி வரையில் இருந்தால் தான் இந்தப் பெரிய வறட்சியைப் போக்க முடியு மென்று கூறிக்கொள்கிறேன்.

கோவை, பெரியார் மாவட்டங்களில், ஏற்கனவே 120 அடி 130 அடி ஆழமாக உள்ள கிணறுகளை தற்போது மழை இல்லா காரணத்தால் மேலும் ஆழப்படுத்த முடியாத நிலைமை இருக்கிறது. பெருந்துறை, பெருமாண்டி பாளையம், சென்னிமலை, சித்தோடு போன்ற பகுதிகளில் காவிரித் திட்டத்தின் மூலமாகக் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் விநியோகம் முறையாக இல்லாத காரணத்தினால் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் தண்ணீர் விடக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே அதை ஒரே இணைப்பாகச் சேர்த்து தொடர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல ஒன்றியங்களிலே போர்வெல்கள் போடப்பட்டும் இரண்டு ஒன்றியங்களுக்கு ஒரு நபர் தான் பழுது பார்ப்பதற்காகப் போடப்பட்டு இருப்பதால் முழுமையாகப் பழுது பார்க்க முடியாத நிலைமையில் தண்ணீருக்காக மக்கள் அவதிப்படக் கூடிய நிலைமைதான் இருக்கிறது. கோபி தொகுதி, பவானிசாகர் தொகுதி, பெருந்துறை தொகுதி இந்த மூன்றையும் இணைக்கக் கூடிய ஒரு திட்டம் 6½ கோடி ரூபாய் செலவில் இருப்பதாக





அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தை இந்தச் சமயத்திலே உடனடியாகச் செய்தால் கிணறு அடிவெட்டு வெட்டுகிற செலவும் குறையும், தண்ணீரும் கிடைக்கும். ஆகவே, அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஊத்துக்குளியைப் பொறுத்த வரையில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. உடனடியாக அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்கள், அரிசனங்கள், தாழ்த்தப்பட்டவர்கள் வாழக்கூடிய பகுதிகளிலே முழுமையாக உணவுக்கு அரிசி கொடுக்கப்படவில்லை என்றாலும் கோதுமை போன்ற தானியங்களைக் கொடுத்தாவது அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவர்களுக்கு உணவு கிடைக்கிற முறையிலே பாலங்களைப் புதுப்பிக்கின்ற வேலைகள், குளங் குட்டைகளைச் செப்பனிடுகின்ற வேலைகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ·. இந்துராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிலை அறிக்கையின் மீது பேச வாய்ப் பளித்தமைக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாண்டு இயற்கையின் சதியாலே வறட்சி நாடு முழுவதும் தலைவிரித்தாடுகிறது. இதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும் இன்று நிலவுகின்ற வறட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாத நிலையில் உள்ளது. எனவே, மத்திய சர்க்காருடன் தொடர்பு கொண்டு, மத்திய நிதியுதவி பெற்று ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றுள்ள வறட்சிக்கு நாட்டில் போர்க்கால உணர்வோடு செயல்பட்டால் ஒழிய வறட்சியைப் போக்க முடியாது என்பனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி என்று சொன்னாலே அனைவருக்கும் ஞாபகத்திற்கு வருவது தர்மபுரி மாவட்டம். அது அரசால் பின்தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருப்பதற்குக் காரணமே அங்குள்ள வறட்சிதான். சாதாரண நேரத்திலேயே இந்த நிலையில் உள்ள மாவட்டம் தற்போது எப்படி இருக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை என நினைக்கிறேன். இப்படி வறட்சியால் வாடியுள்ள மாவட்டத்திற்குச் சிறப்பாக நிதியுதவி அளித்திருக்க வேண்டும். ஆனால், ஒதுக்கியிருப்பது மற்ற மாவட்டங்களைவிட மிகக் குறைவாக உள்ளதைக் கண்டு மிகவும் வேதனைப் படுகிறேன்.

மேலும் அரசு கொண்டுவந்துள்ள தன்னிறைவுத் திட்டம் வரவேற்கத்தக்கது. ஆனால், அதிகாரிகள் சிலர் சரியாகச் செயல் படாத காரணத்தால் தன்னிறைவுத் திட்டம் தனி நபர் நிறைவுத்

திட்டமாகத்தான் செயல்படுகின்றது. ஒதுக்கப்படுகின்ற தொகையில் 50 சதவீதம் கூட குறித்த பணிக்குச் சேருவதில்லை. இதனால் பொறியாளர்களும் கான்ட்ராக்டர்களும் தான் பயன் பெறுகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் வறட்சியால் வாழ வழியின்றி அண்டை மாநிலமாகிய கர்நாடக மாநிலத்தில் உள்ள பெங்களூருக்கு 30 சதவீதம் மக்கள் சென்று விட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்தங்கிய மாவட்டத்திற்கு வறட்சியைக் காண வந்த அதிகாரிகள் கூட அங்கு இருக்கின்ற சிறு செழிப்பான பகுதியை மட்டும் பார்த்து விட்டு வந்து விடுவார்கள் போல் தெரிகிறது. எங்கள் மாவட்டத்தைக் காண வந்த வருவாய்த்துறை அதிகாரி சில பகுதிகளை மட்டும் பார்த்து விட்டு பிர்க்கா வாரியாக வறட்சியை அறிவிப்பதாகச் சொன்னார்களாம். ஆனால் மாவட்டம் முழுவதுமே வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. எனவே மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்தேனும் மாவட்டத்தை முழுவதும் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பென்னகரம் தொகுதியைப் பொறுத்த வரையில், நகர் திட்டங்கள் என்ற முறையிலே இரண்டு குடிநீர்த் திட்டங்கள் பென்னகரம், பாப்பாரப்பட்டி ஆகிய இடங்களிலே போடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்கிறார்கள் . ஆகவே உடனடியாக அவைகளை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

(இரவு 7-30.)

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவரவர்களே, வறட்சி சம்பந்தமாக இரண்டு நாட்களாக நடைபெற்ற விவாதத்தின் கடைசிக் கட்டத்தில் நானும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக இந்த அவையிலே கட்சி மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்டு வறட்சியினுடைய கொடூரமான தன்மையைப் பற்றி எல்லாக் கட்சி உறுப்பினர்களும் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். ஒரு கட்டத்திலே ஆளுங் கட்சியைச் சேர்ந்த திரு. விசுவநாதன் அவர்கள் கூட, இங்கே ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை யானைப் பசிக்குச் சோளப் பொறி என்று எதிர்க்கட்சி வரிசையில் இருந்திருந்தால் சொல்லியிருப்பேன் என்று அவர்கள் தமது எண்ணத்தை வெளிப் படுத்தினார்கள். ஆகவே, இன்றைக்கு உள்ள வறட்சியின் கொடுமையான தன்மையைப் பார்க்கின்ற பொழுது அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் மிகக் குறைவாக, மலைக்கும் மடுவிற்கும் இடையே உள்ள வேறுபாடாக இருக்கிறது என்பதை நானும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். .





பொதுவாக வறட்சி என்றாலே முதலிலே குடிநீர்ப் பிரச்னை யைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் குடிநீர் வடிகால் வாரியம் என்ற வாரியம் இருக்கிறது. அந்த ஒரு வாரியம் என்பதைவிட போட்டி அரசு என்று சொன்னால் கூட மிகையாகாது. இப்படி பேரலல் கவர்ன்மெண்டைப் போல யாருக்கும் கட்டுப்படாத அளவிற்கு, எந்த அமைச்சரவை சொன்னாலும் கூட கேட் காத அளவிற்கு அந்த நிர்வாக சுயேச்சையாக இயங்கக் கூடிய நிர்வாகமாக, யாருக்கும் கட்டுப்படாத நிர்வாக மாக இருக்கிறது. ஆளுங் கட்சியைச் சார்ந்த அல்லது எதிர்க் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னாலும் அதையெல்லாம் போகிற போக்கிலே காற்றிலே விட்டுவிட்டுப் போகின்ற போக்குதான் பல்லாண்டுகளாக இருந்து வருகிறது,

குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் பல ஆண்டுக் காலமாகப் புதிதாக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இன்றைய தேதி வரையில் இயங்காமல் இருக்கிறது, பலமுறை வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே சொன்னாலும் கூட சீர் செய்கிறோம் சீர் செய் கிறோம் என்று சொல்லிவிட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஏதாவது அறிக்கையைக் கொடுத்துவிட்டுச் சீர் செய்யாமலேயே இன்றும் காலங்கடத்தும் நிலையில் அந்த இலாக்கா இருக்கிறது. போர் வெல் போடுகிறோம் என்றால் 500 அடி போடுகிறோம் என்றால், 300 அடி போட்ட பிறகு காண்ட்ராக்டர் போய்விடு கிறார் ; அவருக்கு 500 அடி போட்டதற்கான பில் வழங்கப்படு கிறது.

திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள், ரிக் அரசாங்கத் தால் வாங்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அமைச்சர வர்கள் புதுக்கோட்டையில் திலகர் திடலில் பார்த்தால் தெரியும்:, 5 ரிக் இருக்கும். அது அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருக்கும். அதில் என்ன கோளாறு ஏற்பட்டிருக்கும் என்றால்:, ஒன்று டயர் பஞ்சராக ஆகியிருக்கும் அல்லது இருபது ரூபாய் பெறுமானமுள்ள ஒரு பொருள் தேய்ந்து போயிருக்கும் அல்லது உடைந்து போயிருக்கும் அல்லது காணாமற் போயிருக்கும். அதற்காகத்தான் இருக்கும். ஆனால் தனிப்பட்ட நபரிடம் கொடுத்தால் 24 மணி நேரத்திற்குள்ளே ஒரு போர் போட முடியும் ; போட்டு விடுவார்கள். ஏதாவது ஒரு பொருள் காணாமல் போய்விட்டால், உடைந்து போய்விட்டால் அவர்கள் உடனே விமானத்தில் ஏறிச் சென்னைக்குச் வந்து திரும்பவும் விமானத்திலே சென்று போட்டு உடனடியாக ஓட்டி விடுவார்கள். ஆனால் நம்முடைய 'ட்வாட்' போர்டிலே என்ன நிலைமை ஏற்படும் என்றால், அங்கே இருக்கின்ற ஆப்பரேட்டர் ஜூனியர் எஞ்ஜினியருக்குச் சொல்வார் அந்தப் பொருள் உடைந்து விட்டது என்று. அவர் என்ன செய்வார் என்றால் உடனடியாகப் பார்க்க மாட்டார், அதைக் கட்டி வைத்து விட்டு, பிறகு மூன்று நாட்கள் நான்கு நாட்கள் கழித்து ஏ.டி.ஈ.க்கு அதாவது அடிஷனல்

டிவிஷனல் எஞ்சினியருக்கு அனுப்பி விடுவார். அவரிடமிருந்து
மூன்று நான்கு நாட்கள் கழித்து எக்சிகியூட்டிவ் எஞ்ஜினியருக்குப்
போகும். இதற்கு எத்தனை நாட்கள் ஆகும் என்றால் பதி
னைந்து நாட்கள் ஆகும். அதற்குப் பிறகு உத்தரவு போட்டு
வாங்கி 50 ரூபாய் பெறுமானம் உள்ள பொருளைத் திரும்பச்
சேர்த்து அதற்குப் பிறகு ஓட்ட முன் வருகின்ற பொழுது வறட்சி
என்பது கோர தாண்டவம் ஆடி ஓய்ந்து விட்டிருக்கும். ஆகவே,
நான் சொல்ல விரும்புவது, அரசாங்கத்தில் வாங்க வேண்டும்
என்றால் தனியாக அதற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். அது
மட்டுமல்ல, எல்லாவற்றையும் அரசாங்கத்திலே வாங்கி நிர்வாகம்
செய்வது என்பது முடியாத காரியம். தேவைப் பட்டால் 1974
ஆம் ஆண்டிலே ஏற்பட்ட வறட்சியின் பொழுது, அன்றைக்கு
சொன்னார்கள், அரியானா .மாநிலத்திலிருந்து ரிக் வரவழைத்து,
அரசுக்குச் சொந்தமானவற்றையும், தனியாருக்குச் சொந்தமான
வற்றையும் அந்த மாநிலத்திலேயிருந்து கொண்டு வரப்பட்டு போர்
போடப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டது என்று சொன்னார்கள்.

அந்த வகையிலே நீங்கள் இன்றைக்கு எதிர் பார்ப்பதைப்
போல இது சாதாரண வறட்சியாக இருக்க முடியாது ; யாரும்
நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு '' அன்பிரிசிடென்ட்
டட்ரைட் '' ஆக, வறட்சி இருக்கிறது. அரசாங்கத்தைப் .
பொறுத்த வரையில் மெத்தனமாக இருந்து இவ்வளவு காலங்
கடத்தியிருக்கிறது. பத்து மாத காலத்திலே மழை பொய்த்து
விட்டது ; பயிர்கள் விளையவில்லை ; குடிநீர்ப் பற்றாக்குறை
என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரிகள்
மாநிலத் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பியும் கூட இத்தனை
நாள் வரையில் நடவடிக்கை எடுக்காமல், ஒதுக்கீடு செய்திருக்கி
றோம், ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்று குறிப்பிலே காட்டி
விட்டு செயல் ஒன்றும் நடைபெறாத நிலையிலேதான் இந்த
விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

ஒன்றைச் சொன்னார்கள், மத்திய அரசாங்கம் முழுப் பொறுப்பு
ஏற்றுச் செய்ய வேண்டுமென்று திரு. சங்கரய்யா அவர்களும்
மற்றவர்களும் சொன்னார்கள். உண்மை, ஒத்துக் கொள்கிறேன்.
மத்தியிலே ஆளுகின்ற கட்சி காங்கிரஸ் கட்சி, ஆனால், உங்
களுக்கு என்ன நஷ்டம், என்ன சிரமம், என்ன தேவை என்பதை
மத்திய அரசாங்கத்திற்கு நீங்கள் தெரிவித்தீர்களா ? இல்லை.
ஏன் தெரிவிக்கவில்லை ? என்ன காரணத்தினால் நீங்கள் தெரி
விக்காமல் இருந்தீர்கள் ? அரசியல் காரணங்களா ? அல்லது
நீங்கள் ஆட்சிக்கு வந்தால் மாதம் மும்மாரி மழை பெய்யும்
என்று தேர்தல் காலத்திலே வாக்குறுதி கொடுத்தோமே, ஆனால்:,
இன்றைக்கு நாம் மத்திய அரசாங்கத்திடம் கேட்டோம்,
என்றாலோ அல்லது: வறட்சிப் பகுதி என்று அறிவித்து
விட்டாலோ மக்கள் மத்தியிலே நமக்கு மரியாதை
போய்விடும், அல்லது, நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு,
மழை பெய்யாமல் போய்விட்டது, ஆகவே, இவர்களும்



என்று நம்மையும் மக்கள்
மற்றவர்களைப் போலத்தான் என்ற அச்சத்தின்
தப்பாகக் கணக்குப் போட்டு விடுவார்களே என்ற அச்சத்தின்
தப்பாகக் கணக்குப் போட்டு விடுவார்களே தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.
காரணமாகவா என்பதைத் கேட்டுக்கொள்ள விரும்புவது, இதிலே நீங்கள்
ஆகவே, நான் ப்ரெஸ்டிஜ்—பார்க்காமல், தயவு
சுய கௌரவம்— பால்ஸ் அரசாங்கத்திற்கு உண்மையான
செய்து உடனடியாக மத்திய அறிக்கையைத் தாக்கல்
யதார்த்த நிலையை, அது பற்றிய சேர்ந்த அதிகாரிகள்
செய்யுங்கள், மத்திய அரசாங்கத்தைச் பார்த்து விட்டு, வறட்சி
இங்கே வந்து வறட்சிப் பகுதியைப் பார்த்து விட்டு, மத்திய அரசாங்கத்திற்கு,
எவ்வளவு என்பதைப் பார்த்து விட்டு, தங்களுடைய அறிக்கையைக்
அது தொடர்பான இலாகாவிற்குத் தங்களுடைய அரசாங்கம் நிதி ஒதுக்கீடு
கொடுத்து அதற்குப் பினனால், மத்திய ஒரு மாத காலம்
செய்ய வேண்டும் என்றால், குறைந்தபட்சம் மாதங்களுக்கு முன்
ஆகும். ஆனால், இதை நீங்கள் இரண்டு அரசாங்கத்தின் நிதி
பாக்வே செய்திருந்தால் இன்றைக்கு மத்திய அரசாங்கத்தின் நிதி
உதவி உங்களுக்கு வந்திருக்கும். இன்றைக்கு மக்கள் மத்தியிலே
அந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன் மூலமாக, மக்கள்
இந்த அளவிற்கு அவதியான, இவ்வளவு சிரமமான காரியங்களில்
தங்களை ஈடுபடுத்தாமல், ஓரளவுக்குத் தங்களைப் பாதுகாத்துக்
கொள்ளக் கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருக்க முடியும் என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்
கொள்ள விரும்புவது, சமீபத்திலே, 1977 ஆம் ஆண்டில் ஏற்
பட்ட மிகப் பெரிய, தமிழகத்தைத் தாக்கிய அந்தப் புயல்
நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரெவினியூ போர்டைச்
சேர்ந்த ஒரு அதிகாரி அனுப்பப்பட்டு, அவரே முழு நடவடிக்கை
யையும், அந்த ரெக்ளமேஷன் நடவடிக்கைகளையும், அந்த
சீர் செய்கின்ற பணிகளையும், முழுமையாகச் செய்தார். ஆனால்
இன்றைக்கு இருக்கிற நிலையைப் பொறுத்தவரையில் அது
போன்று நிலைமைகள் இல்லை. ஒரு ரெவினியூ போர்ட் அதி
காரி, அங்கே போய் பார்வையிட்டு, அரசாங்கத்திற்கு அறிக்கை
கொடுத்திருக்கின்றார். அரசாங்கத்தினுடைய அறிக்கை, இவ்
வளவு ஒதுக்கீடு செய்திருக்கின்றோம் என்ற அறிக்கைதானே தவிர
மேற்கொண்டு என்ன நடவடிக்கை வேகமாகச் செய்யப்பட்
டிருக்கிறது என்பதற்கான பாலோ அப் ஆக்ஷன் செய்யப்பட
வில்லை. ஆகவே, நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, ஒவ்
வொரு இலாக்காவைச் சேர்ந்த ரெவினியூ போர்ட் அதிகாரியை,
இன்றைக்கு ரெவினியூ போர்ட் ஒழிக்கப்பட்டாலும், அந்தத்
துறையிலே இருக்கிற பல்வேறு உயர்மட்ட அதிகாரிகளை, ஒவ்
வொரு மாவட்டத்திற்கும் அனுப்பி, அவர்களை கோ ஆர்டி
னேட்டட் ஆபீசர்ஸ் என்ற வகையிலே, ஸ்பெஷல் ஆபீசர்
டெசிக்னேஷன் கொடுத்து, அவர்கள் முழு சீரமைப்புப் பணி
களையும், முழு வறட்சி நிவாரணப் பணிகளையும் செய்வதற்கு
நீங்கள் உத்திரவிட வேண்டும். அதன் மூலமாகத்தான் பல்
வேறு இலாக்காக்களிலே இருக்கிற பல்வேறு கோளாறுகளை,

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 மார்ச் 4

குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அவர்கள் ஒரே திட்டத்தின் அமைப்பிலே வேகமாகச் செயல்படுத்தி, மக்களைக் காப்பாற்றக் கூடிய வகையிலே, இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த முடியும்.

குறிப்பாக, இன்றைக்கு, லேபர் ஓரியன்டட் ப்ரொகிராம்ஸ் சரியாக இருக்க வேண்டும். கிராமப்புறத்திலே வாழ்கின்ற மக் களுக்கு உணவும் கிடைக்கவில்லை. கிடைக்கின்ற உணவை வாங்குவதற்கு அவர்களிடம் காசும் இல்லை. ஆகவே, அவர் களுக்குக் காசு கிடைக்க வழி செய்ய வேண்டும்.

நீங்கள் சொல்கின்ற மத்திய அரசாங்கத்தின் மூலமாக ஒப் படைக்கப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்கள், புட் பார் ஒர்க் புரொகிராம் அல்லது என். ஆர். வி. பி. போன்ற புரோ கிராம்ஸ்களிலே எல்லாம், இன்றைக்கு வேலைகள் கொடுக்கப் பட்டு, புதிதாக வேலைகள், வேலைத் திட்டங்கள் சேர்க்கப்பட்டு, அங்கேயிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சாங்க்ஷன் வாங்கி அதற்குப் பின்னால் அதை ஆரம்பிக்கிற நிலைமை ஏற் பட இன்னும் ஒரு மாதம் ஆகும். ஆனால், இன்றைக்கு உட னடியாக நீங்கள் செய்ய வேண்டிய வேலைகள், இந்த வேலைகள் தான். லேபர் ஓரியன்டட் ப்ரொகிராம் என்று சொல்லி, கடந்த காலத்திலே நடந்ததைப் போல, இன்றைக்கும் நடந்து கொண்டிருப்பது, கண்மாய்களை வெட்டுகிறோம், குளங்களை வெட்டுகிறோம் என்று சொல்லிவிட்டு அவர்கள் குளங்களையும் வெட்டுவதில்லை ; பணத்தை ஏழை மக்களுக்குக் கொடுக்க வேண்டும், அதுதான் முக்கியம். ஏழை மக்களுக்கு வாங்கும் சக்தியை உண்டாக்கித் கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். வெறும் பணம், காசு கொடுப் பதற்குப் பதிலாக, இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த வேண் டும். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது, அதிகாரி களை மட்டும் நம்பி, நீங்கள் செயல்பட்டால், அதிலே ஊழல் ஏற்படும். அதிலே, நிச்சயமாக தவறுகள் ஏற்படும். எப்படி வேலைக்கு உணவுத் திட்டத்திலே தவறுகள் நடக்கின்றனவோ, எப்படி தன்னிறைவுத் திட்டங்களிலே தவறுகள் நடந்து கொண் டிருக்கின்றனவோ அதைப் போல், இந்தத் திட்டங்களிலும் யாருக் காக உதவி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களோ, அந்த உதவி, அந்த மனிதனுக்குக் கிடைக்காமலே போய்விடும். ஆகவே தான் ஒவ்வொரு பஞ்சாயத்து அளவிலும், ஊராட்சிமன்ற அள விலும், நீங்கள் கலைக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் களைச் சேர்க்கவில்லையென்றாலும் பரவாயில்லை, உங்கள் கட்சிக்காரர்களைப் போட்டாலும் பரவாயில்லை, ஆனால், பெரும்பான்மையான மக்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அதைக் கண்காணிக்கின்ற குழுவாக, உணவு வழங்குகின்ற முறை யிலே, அல்லது கிராமங்களிலே நடக்கின்ற வேலைகளை ஒருங் கிணைத்துப் பார்க்கக் கூடிய வகையிலே, அந்தக் கிராமங்களிலே வாழ்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையிலே, அவர்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே நீங்கள் செயல்பட வேண்டும்.



1981 மார்ச் 4] [திரு. ந. சுந்தரராஜ்]

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு முக்கியமான பிரச்னை, நாடாளுமன்றத்திலே, தமிழகத்தைச் சேர்ந்த, ஆளுங்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், அங்கே பேசும்பொழுது மத்திய அரசாங்கம், உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டு மென்று, இங்கே வறட்சி அதிகமாக இருக்கிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

[இரவு 7–40]

ஆனால், நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, நாடாளு மன்றத்தில் பேசி இருக்கிற அந்த உறுப்பினர் பாராட்டுக்கு உரியவர்தான்—ஆனால் உங்களிடத்தில் இருந்து எந்தவிதமான அறிக்கையும் மத்திய அரசாங்கத்திற்குப் போய்ச் சேரவில்லையே, தமிழ்நாட்டில் இவ்வளவு வறட்சி இருக்கிறது, அதைப்போக்க இவ்வளவு நிதி தேவை, இங்கே கடுமையான வறட்சி இருக்கிறது, நாங்கள் இதைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்கப் போகிறோம் என்று எந்த அறிக்கையும் போகவில்லையே. எப்படி மத்திய அரசாங்கம் செயல்பட முடியும்? ஆகவே, ஒரு அரசாங்கம் என்று சொன்னால், மாநிலத்திற்குத் தேவையான உதவியைக் கோருவதுதான் நியாயம். அதை நீங்கள் செய்யவில்லை. செய் யத் தவறிவிட்டீர்கள். ஆனால், மத்தியிலே ஆளுகின்ற காங் கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களும் ஒன்றுதான். இந்தியாவில் உள்ள எந்த ஒரு குடிமகனும் பஞ்சத்தால், பட்டினியால் சாகக் கூடாது என்பதுதான் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய கொள்கை. அவர்கள் நிச்சயமாகச் செயல்படுத்துவார்கள். நீங் கள் கேட்டாலும் கேட்காவிட்டாலும் கூட, தமிழ்நாட்டில் எந்தக் குடிமகனும் சாவதற்கு அல்லது வறுமையால் வாடுவதற்கு மாண்பு மிகு இந்திராகாந்தி அவர்கள் விடப்போவதில்லை. அவர்கள் செய்வார்கள், நிச்சயமாகச் செய்வார்கள் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. க. அன்பழகன் : மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்டுள்ள மிக மிக வருந்தத்தக்க, துயரத்தைக் கொடுக்கக் கூடிய வறட்சி நிலை பற்றி இந்தச் சட்டமன்றத்தில் விவாதித்து அரசாங்கத்தின் கடமையை விரைவு படுத்துவதற்கும் ஒரு வலியுறுத்துவதற்கும், இந்த விவாதத்திலே பங்கு கொள்வது, வாய்ப்பு என்ற முறையில் நான் கழகத்தைச் சார்ந்தவன் என்ற முறையில், ஒரு கடமை யாகக் கருதுகிறேன்.

இது வரையில் இந்த மன்றத்தில் நடைபெற்ற 2 நாள் விவாதத் தில் எத்தனை உறுப்பினர்கள் பங்கெடுத்துக் கொண்டிருக் கிறார்கள் என்று எண்ணிப்பார்க்கிறபோது, தமிழ்நாடு முழு வதும் பரவலாக இந்த வறட்சி நிலையிலே பொது மக்கள் கண்ணீர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

விடுகிற நிலையிலே பல கிராமங்களிலே வாழ்கின்றார்கள். வாழ்கின்றார்கள் என்று மரியாதையாகச் சொன்னாலும் அவர்கள் வாழ முடியாமல் திகைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்ற நிலையில்தான் இருக்கின்றனர். பல உறுப்பினர்கள் பேசுவதற்குப் போதுமான நேரம் இல்லாவிட்டாலும் கூட, தங்கள் தங்கள் தொகுதியைப் பற்றி ஒரு கணமாவது எடுத்துச் சொல்லவேண்டும் என்ற ஆர்வத்திலே பங்கு பெற்றிருக்கிறார்கள். இந்த 2 நாட்களிலும் இங்கே பேசப்பட்ட கருத்துக்களை எல்லாம் ஓரளவு நான் கவனித்தேன் என்ற முறையில் எண்ணிப் பார்க்கிறபோது, அரசாங்கம் உணர்ந்திருப்பதை விட மிகக் கடுமையான ஒரு வறட்சி நிலைமை தமிழகத்திலே இன்றைய தினம் இருக்கிறது என்பதை முதலிலேயே அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது அமைச்சருடைய தகுதியை, ஆற்றலைப் பொறுத்து உணர்வது குறைவு என்று நான் சொல்வதாகக் கருதக் கூடாது. அரசாங்கத்தினுடைய இயந்திரத்தினால் எந்த அளவுக்கு அரசுக்குச் செய்திகள் சொல்ல வேண்டுமோ, எந்த அளவுக்கு விளக்கம் கொடுத்திருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை என்பதைத்தான் இது காட்டுவதாகும். அரசின் சார்பிலே 2 நாட்களுக்கு முன்பு வைக்கப்பட்ட அறிக்கைகூட ஒரு வறட்சியின் சின்னமாகத்தான் இருக்கிறதே தவிர, விளக்கத்தின் சின்னமாக இல்லை என்பதையும், மாவட்டங்கள்தோறும் உள்ள நிலைமையைச் சட்டமன்றத்திற்குத் தெரிவிக்கிறபோது, ஒவ்வொரு மாவட்டமாக விரிவாகத் தெரிவிக்கவேண்டிய முறையில் தராமல், இந்த அரசு ஏதோ ஒரு கடமையைச் செய்கிறது என்று காட்டுவதற்கான புள்ளிவிவரத்தைத் தந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏதோ தங்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள பிரச்சினையை அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள், நாங்களும் அதுபற்றி ஆலோசிக்கிறோம் என்ற அளவிலே இருக்கிறதே தவிர, கடந்த 3 மாதகாலமாக, 4 மாதகாலமாக இந்த வறட்சி நிலை பல்வேறு மாவட்டங்களிலும் தொடர்ந்து ஏறத்தாழ இன்றைய தினம் மெல்ல மெல்ல வேரோடி, வறட்சி நிலை உச்சகட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்கின்ற அளவுக்கு ஒரு நிலைமை இருக்கிற போது, தரப்பட்டிருக்கின்ற அறிக்கையில், தரப்பட்டிருக்கவேண்டிய விளக்கம் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தைப் பற்றி அதிகாரிகள் கருதுகிற எண்ண ஓட்டத்தின் விளைவாகக்கூட இது இருக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன். நாம் என்ன அறிக்கை கொடுத்தாலும், மேலே உள்ளவர்களுக்குத் தெரிவித்தாலும், அவர்கள் ஒன்றும் அதைப்பற்றிக் கவலைப்படப் போவதில்லை என்று பொதுவாக மாவட்ட அதிகாரிகளிடத்தில் இருப்பதாக, நான் அறியக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. கடந்த நவம்பர் திங்களில் நான் திருவண்ணாமலை பகுதிக்குச் சென்ற போது நவம்பர் திங்கள்—4 மாதங்களுக்கு முன்னால்—அங்கே



உள்ள மக்கள் மழை பெய்யவில்லை என்பதாலே ஏற்பட்ட பாதகம் பயிர் விளைச்சல் கெட்டுப் போனதாலே ஏற்பட்ட பாதகம் மட்டுமின்றி, குடிதண்ணீர் பற்றாக்குறைக்கும் ஆளாகி இருப்பதையும் எடுத்துச் சொன்னதுடன் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதை பஞ்சாயத்து ஒன்றியங்கள் வாரியாக மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர் நாங்கள் மேலே உள்ளவர்களுக்கு—அரசாங்கத்திற்குத் தெரிவித்து இருக்கிறோம். ஆனால் அவர்கள் ஆணை இடவில்லை என்ற காரணத்தினால் தான் செயலாற்ற முடியவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருத்தத்தோடு சொல்லும் நிலைமை இருந்தது என்றும் தெரிவித்தனர் என்பதை அரசாங்கத்திற்கு இப்போது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர் பலர் இந்த வறட்சியைப் பற்றிப் பொது நோக்கத்தோடு முதலமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வில்லை. அது குறித்து நான் இங்கே சற்றுத் தெளிவாகச் சொல்லவேண்டியுள்ளது. இந்த அறிக்கையிலே கூடத் திருநெல்வேலி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் பாதகமான நிலை நிலவுவதாக அறிக்கைகள் வரவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, நாடு முழுவதும் பொதுவான வறட்சி ஏற்பட்டு இருக்கக்கூடிய சூழ்நிலையை உணரக்கூடிய நிலையில் உள்ள அரசாங்கத்திலே உள்ளவர்கள் இந்த 3 மாவட்டங்களிலே இருந்து அறிக்கைகள் அனுப்புமாறு கேட்டு, அந்த மாவட்டங்களில் எந்தெந்தப் பகுதிகள் எப்படியெப்படி பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை பெற்றுத் தர வேண்டிய கடமையில் இருந்து தவறியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நம் மாவட்ட அதிகாரிகள் எவ்வளவு பொறுப்புள்ளவர்களாக இருந்தாலும் கூட, அந்த அதிகாரத்துக்குரிய கடமையை செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்வார்களே தவிர மக்களின் பிரச்சினைகளிலே சட்டமன்ற உறுப்பினர்களோ, அல்லது அமைச்சர்களோ மக்கள் பிரச்னையை உணரும் அளவுக்கு அந்த உணர்வுகளோடு பணியாற்றக்கூடிய மனப்பான்மை பலருக்கு இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையில் அந்த மாவட்டங்களில் இருந்து அறிக்கை எதுவும் வரவில்லை என்று சொல்லப்பட்டிருந்தாலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள், நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஜனதா கட்சியினுடைய தலைவர் ஆகியோர் எடுத்துக்காட்டிய நிலைமைகளைப் பார்க்கிற போது, தமிழ் நாட்டிலே எந்த மாவட்டமும் வறட்சியால் பாதிக்கப்படாமல் மிச்சம் இல்லை என்னுமாறு எல்லா மாவட

டங்களும் பாதிக்கப் பட்டு இருக்கின்றன. பாதிக்கப்பட்ட அளவிலே வேண்டுமானால் வேற்றுமை இருக்கலாம். சில இடங்களில் 100-க்கு 25 கிராமங்கள் பாதிக்கப்பட்டு இருக்கலாம். சில மாவட்டங்களில்—திருச்சி என்று வைத்துக்கொண்டால் 100-க்கு 50 அல்லது 60 கிராமங்கள் பாதிக்கப்பட்டு இருக்கலாம். வடாற்காடு மாவட்டத்தில் 100-க்கு 90 என்ற விகிதத்தில் பாதிக்கப்பட்டு இருக்கலாம். தருமபுரி போன்ற மாவட்டங் களில் 100-க்கு 85 பரப்பளவு பாதிக்கப்பட்டு இருக்கலாம். ஆனால், இரண்டு நாட்களுக்கு முன்னாலே இந்த அவையில் அரசால் வைக்கப்பட்ட அறிக்கை, முழு அளவிற்கு தமிழகத்தில் உள்ள வறட்சி நிலை பற்றி எடுத்துக்காட்ட வில்லை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, வறட்சியின் அளவே தெரியாத நிலையில் நீங்கள் எப்படி வறட்சி நிவாரணப் டணி யைச் சிறப்பாகச் செய்து விடமுடியும் என்று எனக்குத் தெரிய வில்லை. உங்களுக்கு நல்லெண்ணம் இருக்கிறது என்பதிலே கூட எனக்குச் சந்தேகம் இல்லை. ஏனென்றால் கெட்ட எண்ணம் என்பது மனிதனுக்குச் சில நேரங்களில் தான் வரும். ஆனால் நல்லெண்ணம் இருந்தாலும் கூட அதற்கு எப்படி தகுந்த செயல் வடிவம் கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்கிற கடமை எனக்கு இருக்கிறது.

இந்த அறிக்கையில் 2—2—1981 அன்று தலைமைச் செய லாளர்,சம்மந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அதையொட்டி அரசு ஆணைகளைப் பிறப்பித் துள்ளது. வறட்சி நிவாரணப் டணிகளின் முன்னேற்றத்தை அறிய 23—2—1981-ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்மந்தப்பட்ட அமைச்சர்களுடனும், அதிகாரி களுடனும் கலந்து ஆய்வு செய்தார் என்றும் இருக்கிறது. இந்த மூன்று வார காலத்தில் தமிழ் நாட்டில் எந்தெந்த மாவட் டத்தில் எவ்வளவு பணிகள் நடைபெற்றன. அந்த வறட்சி நிவாரணப் பணிகள் எந்த அளவு நடைபெற்று இருக்கின்றன என்பதையும் விவரமாக அறிந்து அரசு தெரிவித்து இருக்க வேண்டும்.

கடும் வறட்சி என்பது நான் புரிந்து கொள்வதற்காகச் சொல்கிறேன். அது கடைசி எல்லை. குடிநீர் கிடைக்க வில்லை என்பது வேறு, வறட்சி இல்லாத நேரங்களில் கூடச் சில கிராமங்களில் குடிநீர் கிடைக்கவில்லை என்பது வேறு. குடிநீர் கிடைக்கக்கூடிய கிராமங்களில் தண்ணீர் இல்லாமல் ஏற் பட்டு விடுகிற கொடுமையான விளைவு இது. இந்த விளைவு களை ஒட்டித் தொடர்ந்து துன்பங்கள் ஒவ்வொன்றாக வந்து கொண்டே இருக்கும். மழை இல்லை. வறட்சி. ஆகவே, பயிர் வளரவில்லை. பயிர் வளராத காரணத்தால் அந்த விவ சாயிகளுக்கு வருமானம் இல்லை. விவசாயத் தொழிலாளர் களுக்கும் வேலையில்லை. ஆடுமாடுகளுக்குத் தீவனம் இல்லை. அதன் தொடர்பாக அந்தக் கிராமங்களில் வாழ்கிற மக்கள்





நிம்மதியாக வாழ்கிற நிலைமை இல்லை. அவர்களுக்கு உணவு ஒரு வேளைக்குக் கூட கிடைக்கவில்லை. அரிசி சாப்பிடுகிற வர்களுக்கு கம்பும் கிடைக்கவில்லை. கேழ்வரகும் கிடைக்க வில்லை· அந்தக் கேழ்வரகு விலையும் ஏறிப்போகிறது. அந்த நேரத்தில் குடிக்கத் தண்ணீர் இல்லை. அந்த நிலையில் கிராம மக்களுக்குமென்னியை அடைக்கும் அந்தச் சூழ்நிலை வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை வருகிறபோது அந்த மக்களைக் காப் பாற்ற 3 வாரத்திற்குள் இன்னின்ன காரியங்களை இந்த அரசு செய்து இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தால் தான் ஆட்சி நடத்துகிற அரசு செயலாற்றும் திறமையுள்ள அரசு என்று நான் ஒப்புக் கொள்வேன்.

எந்தக் கட்சி என்பது எனக்கு முக்கியமல்ல. அரசு எடுத்த நடவடிக்கையால் அந்த 3 வார காலங்களில், பல மாவட்டத்தில் என்னென்ன நடைபெற்றது என்று அறிந்து கொள்ள எனக்குப் பல வாய்ப்புகள் உண்டு. பல்வேறு மாவட்டப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு உண்டு. எந்த இடத்திலும் சொல்லப்பட்டதற்கேற்ப காரியங்கள் நடக்கவில்லை.

தென்னாற்காடு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சிக்கு ஏறத்தாழ 200 ஆழ் துளைக் கிணறுகள் வேண்டும் என்று இந்த அறிக்கையிலே காணப்பட்டாலும் அங்கே இருப்பது ஓரே ஒரு ரிக் தான். அந்த ஒரு ரிக் ஏறத்தாழ 3 அல்லது 4 நாட்கள் ஒரு ஆழ் துளைக் கிணறு போடுவதற்கு எடுத்துக் கொள்ளும். இந்தக் கணக்குப்படி பார்த்தால் ஒரு மாதத்திற்கு 10 கிணறுகள் போடலாம். இப்படிப் போட்டால் கூட ஒரு ரிக் வைத்துக் கொண்டு எவ்வளவு காலத்திற்குள் 200 ஆழ் குழாய் கிணறுகள் போடமுடியும் என்று கணக்குப் பார்த்தால், மாண்புமிகு உறுப் பினர் பாபு ஜனார்த்தனம் அவர்களும், பிற சட்டமன்ற உறுப் பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல 6 மாதம், அல்லது 7 மாதம் அல்லது 8 மாதம் ஆகும். இந்த வறட்சி வளர்ந்து கொண்டு இருக்கிற தன்மையுடையது. இப்போது பருவம் கூட வறட்சியை வளர்க்கக்கூடிய சூழ் நிலையின் தன்மை பெற்று இருக்கிறது என்று நான் கேள்விப்பட்டேன். இந்த வறட்சி வளர்கின்ற சூழ்நிலையில், சென்னை நகரிலே, மதுரையிலே, கோயம்புத்தூர் நகரத்திலே நல்ல குடி நீர் திட்டம் இருக்கிற காரணத்தாலே ஓரளவு மக்கள் தப்பித்துக் கொள்ள முடியும் என்றாலும், அந்தத் திட்டங்கள் இல்லாத பகுதி முழுவதும்— கிட்டத்தட்ட $4\frac{1}{2}$ கோடி மக்களில் 3 கோடி மக்கள் வாழும் பகுதிகளில் இன்றையதினம் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அதிகமான ரிக் வாங்கி, அந்த இயந் திரத்தை பயன்படுத்திட வேகமாகப் வேலைகள் நடப்பதற்கு பரவலாகப் பணிகள் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுத்தால் கூட 100க்கு 20 பங்கு வறட்சியைத்தான் நாம் சமாளிக்க முடியும்.

[திரு. க. அன்பழகன்] [1981 மார்ச் 4

[இரவு 7—50]

தலைஞர் கருணாநிதி அவர்கள்—இந்த அவையிலே மற்றவர்கள் என்ன கருதினாலும் சரி—ஒரு திறமையான முதலமைச்சர். அவர் காலத்திலே வறட்சி நிவாரணப் பணிகளைத் தொடங்கிய போது, இரவு பகலாக வேலை நடைபெற்றபோதுகூட 30 சதவீதம், 40 சதவீதம்தான் அந்த மக்களுடைய வறட்சி நிலையைப் போக்க, துயரத்தைப் போக்க உடனடியாகப் பயன்பட்டது. அதற்குமேல், நூற்றுக்கு நூறு பங்கு அவர்களுக்குப் பயன்படக்கூடிய வாய்ப்பு ஏற்படவில்லை.

(மாண்பமிகு மாற்றுத் தலைவர் திரு. என். எஸ். வி. சித்தன் தலைமை)

இன்றைய நிலையில் இனி வருகிற மாதங்கள், பங்குனி, சித்திரை, மாதங்களில் இந்த வறட்சி இன்னும் எவ்வளவு கடுமையாக ஆகும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். வறட்சி கடுமையாகும் போது மக்களுக்கு குடி தண்ணீர் கூட இல்லை என்ற நிலை மேலும் வளரும். திரு. அழகர்சாமி அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல குடிக்கத் தண்ணீர் கூட கிடைக்கவில்லை என்றால் அந்தப் பகுதியிலே மக்கள் எப்படி வாழ முடியும் ? வாழ வழியில்லை ; உண்ண உணவு இல்லை. பட்டினி கிடந்து பழக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் கூடக் குடிக்க தண்ணீரும் இல்லை என்றால் வேறு எதை நம்பி அந்த ஊரிலே இருப்பார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்த அறிக்கையிலே 4,39 இலட்சம் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இந்த 4,39 இலட்சத்தையும் செலவிடுவதற்குக் கூட இன்னும் 2 அல்லது 3 மாதங்கள் ஆகும். ஒதுக்கியிருக்கிற பணத்தில் ஏறத்தாழ குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 3½ கோடி ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. இதற்காக அவர்களுடைய பணியைத் துரிதப்படுத்த வேறு மாநிலங்களிலிருந்து ' ரிக்ஸ் ' வந்தால் தவிர , மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அவர்களுடைய உதவியைப் பெற்றால் தவிர இந்தக் குடிநீர் வறட்சியைப் போக்குகின்ற பணி முடிவடைய வழிவகை இல்லை. கிணறுகளை ஆழப்படுத்துவது அல்லது புதிதாக கிணறுகளை வெட்டுவது என்பதிலே வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அக்கரை காட்டாமல் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். அக்கரை காட்டாமல் இருப்பதற்கும் அடிப்படை காரணம் இருக்கலாம் என்று கருதுகிறேன். ஆழப்படுத்தும் போது 6 அடி, 10 அடி வெட்டினாலும் அடியிலே கருங்கல் இருந்து, அந்த கருங்கல்லிலே வெட்டினால் மறுபடியும் தண்ணீர் கிடைக்கவில்லை என்றால் பிரச்சினை தீராது. ஏதோ ஏழை எளிய மக்களுக்கு கூலி கிடைக்கும் வேலை பயன் பெறாவிட்டாலும் என்பதை வரவேற்கிறேன். ஆனால் அதிலே நிறைவு பெற முடியாது.



1981 மார்ச் 4] [திரு. க. அன்பழகன்]

குடி தண்ணீர் கிடைக்க ஆழப்படுத்துவதினால் மட்டும் பயன் ஏற்படாது. எந்தப் பகுதியிலே ஆழப்படுத்தினால் தண்ணீர் கிடைக்கும், எந்தப் பகுதியிலே பாறை இல்லை, எந்தப் பகுதியிலே அதிகமாகத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிந்து சொல்லக்கூடிய அதிகாரிகள் இருக்க முடியாது. அரசாங்கம் சொல்வதை செய்யக் கூடியவர்களாகத்தான் அவர்கள் இருப்பார்கள். என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றி அவர்கள் அதிகமாக அறியமாட்டார்கள் ஆங்காங்கே இருக்கிற நிலைமை என்ன ? அதைப் போக்க என்ன செய்ய வேண்டும் என்பதிலே அக்கரை கொண்ட, அதனாலே என்ன விளைவு ஏற்படும் என்பதை இந்த அரசுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய நிலையிலே இருந்த ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் செயல்படாமல் செய்து, ஒரு காலத்திலே கலைக்கப்பதற்கும் வழி செய்துவிட்டார்கள். மறுபடியும் தேர்தல் நடத்தவில்லை. எந்தக் காலத்திலும் ஊர் மக்களுக்கு குடி தண்ணீர் இல்லை என்று சொல்லும்போது, இங்கே நமக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் இந்தப் பிரச்சினையிலே இங்குள்ள அனைவரும் ஒரே கருத்தை எடுத்துச் சொல்வதைப் போல, இந்தக் குடி நீர் பிரச்சினைக்கு அவர்கள் ஒருமித்த குரல் எழுப்புவார்கள். அவர்களுடைய கடமையைச் செய்வார்கள். அரசாங்கமும் அதிலே ஓரளவுக்கு கவனம் செலுத்தியிருக்கும். இன்றைய தினம் இந்த அரசாங்கம் தன்னுடைய கையை தானே முறித்துக் கொண்டதைப்போல அனைத்து ஒன்றியங்களையும் கலைத்துவிட்டது. இன்றைக்கு 375 ஊராட்சி ஒன்றியங்களிலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், அதிகாரிகளை நம்பிக் காரியங்கள் செய்ய வேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மனிதன் எந்தக் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும், மக்களுடைய பிரச்சினை இது என்பதை புரிந்து கொள்ளக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சிகளிலே இருந்திருந்தால் இந்த நிலை இன்றைக்கு வந்திருக்காது. அங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லாதது ஒரு பக்கம். மறுபக்கம், அன்றாடக் கடமைகளில் இந்த அரசாங்கம் முழுக் கவனம் செலுத்தவில்லை. மத்திய அரசிடம் இந்தப் பிரச்சினையைக் காலத்தில் எடுத்து வைப்பதிலும் இந்த அரசு தவறிவிட்டது. திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள். நவம்பரிலே வேலையை ஆரம்பித்து, டிசம்பரிலே அதற்கு ஒரு வடிவம் கொடுத்து, ஜனவரி மாதத்தில் இருக்கிற நிலைமையை எடுத்துச் சொல்லி, வறட்சி எப்படி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, இன்னும் இரண்டு மாதங்களில் எப்படி இருக்கும் என்பதற்கு ஒரு முழுமையான வடிவம் கொடுத்து ஜனவரியிலே 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, பிப்ரவரியிலே அதற்கு 20 அல்லது 25 கோடி ரூபாய் ஒதுக்கி அப்படி 20 கோடி, 25 கோடி ஒதுக்கியும் போதவில்லை எங்களால் முடியவில்லை; ஆகவே, 50 கோடி ரூபாய் தேவை என்று ஒரு சரியான முறையிலே சென்று மத்திய அரசை கேட்கவேண்டிய அந்தக் கடமையி

லிருந்து இந்த அரசு தவறிவிட்டது கடமையைச் செய்யவில்லை. இதைக் குறிப்பிடும் நேரத்தில், இதிலே ஒத்துழைக்க நீங்கள் தயாரா என்று கேட்டால் அதற்கு நான் தயார். மத்திய அரசு மாநில அரசுக்கு இது போன்ற பிரச்சனைகளில் உதவி செய்ய வேண்டும், அது அவர்கள் கடமை என்பதை ஒத்துக் கொள்ள நானும் நான் சார்ந்துள்ள கட்சியும் தயார்.

இப்படிப்பட்ட டாக்குமெண்ட்ஸ்களை எடுத்து வைத்து என்னென்ன பணிகளை ஆற்றினோம், அதனால் என்னென்ன நிலைமைகள் ஏற்பட்டன என்று இந்த அரசு ஒரு அறிக்கை கொடுக்கக் கூடிய நிலைமை இல்லை. இன்னும் கூட அப்படிப்பட்ட முழுமையான விவரம் அடங்கிய அறிக்கை அரசினிடத்திலே இல்லை என்று கருதுகிறேன். ஒரு வேளை பட்ஜெட் வருகின்ற போதாவது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக ஒன்றிய வாரியாக புள்ளி விவரங்களை இந்த அரசு அவையினருக்கு அளிக்க வேண்டும். இதனை நான் எடுத்து வைப்பதற்குக் காரணம் உறுப்பினர்களுக்கு, இந்த அரசு எப்படிப்பட்ட கடமையிலே ஈடுபட்டிருக்கின்றது, என்ன செய்யப் போகின்றது என்பது தெரிய வேண்டும். அப்படித் தொகுதி வாரியாகத் தெரியக் கூடிய ஒரு நிலைமை இருக்க வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. இப்படிப்பட்ட பணிகள் அமைச்சர்களிடத்திலே வந்து அவர்கள் ஆணையிட வேண்டும் அல்லது தலைமைச் செயலாளர் ஆணையிட வேண்டும் அல்லது செக்ரட்டேரியட்டுக்கு வந்து இங்கிருந்து ஆணைகள் பிறப்பிக்கப்படவேண்டும் என்ற முறையினால் சொல்வதிலே காலதாமதம் ஏற்படும். மத்திய அரசுக்கு எப்படி நம்முடைய கஷ்ட நஷ்டங்கள் முழுமையாகத் தெரிய முடியாதோ அதே போல் மாவட்டங்களிலே உள்ள நிலைமை முழுமையாக மாநில அரசுக்கும் தெரிய முடியாது. எனவே மாவட்ட அளவிலே அதற்கென குழுக்கள் அமைக்கப்பட்டால் தான் நல்லது. மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட வளர்ச்சி மன்றம் எடுத்துச் சொல்கின்ற கருத்துக்குச் செவி சாய்த்து ஓரளவு கடமையைச் செய்யலாம் என்று சொன்னாலும் கூட, மாவட்ட வளர்ச்சி மன்றத்தைக் கூட்டுவதிலே அவர் காலதாமதம் செய்தால், அல்லது கூட்டாமல் இருந்தால் அல்லது கூட்டினாலும் இந்தப் பிரச்சினைகளிலே அக்கறை செலுத்தாவிட்டால் நிச்சயமாகக் குறை ஏற்படும். எனவே அந்தக் குறைகளைப் போக்க வேண்டும் என்றால் ஏறத்தாழ வட்ட வாரியாகவாவது அல்லது ஒன்றிய வாரியாகவாவது அதிகாரிகளோடு கலந்து செயலாற்றக் கூடிய பொதுமக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு குழுக்களை அமைப்பதன் மூலமாகத்தான் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். பொது மக்களுடைய பிரதிநிதிகள் இதிலே கலந்து கொள்ளக்கூடிய நிலைமை இல்லை என்று சொன்னால், அப்படி குழுக்கள் அமையவில்லை என்று சொன்னால் அதிகாரிகள் மட்டும் எந்தக் காரியத்தையும் மக்களுடைய குறைகளைப் போக்குகின்ற அளவுக்கு நிறைவேற்றிவிட முடியாது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். டிசென்ட்ரலைஸ்



என்று சொல்லக் கூடிய முறையில், மாநிலத்தினுடைய கடமைகளை மாவட்ட அளவிலே இருந்து நிறைவேற்றக் கூடிய அளவுக்கு ஒரு வழி தேடிக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படிக் கேட்டுக் கொள்வதற்குக் காரணம் நாம் போதிய நிதி ஒதுக்கினாலும் கூட அந்த நிதியை செலவிடுவதற்கான வழி வகைகளும், அதற்கான கருவிகளும், வாய்ப்புகளும் குறைவாக இருந்தால் ஒதுக்கப்பட்ட நிதி மக்களுக்குப் பயன்படாமல் போகக் கூடிய ஒரு ஆபத்து இருக்கின்றது. ஒரு 4 கோடி ரூபாய் செலவிடப்படுவது போதாது என்ற வகையில், வறட்சி நிவாரணப் பணியிலே இன்னும் அதிகமான நிதி தேவைப்படும் என்று கருதி அதிகமாகக் கொடுத்தாலும் கூட அதைச் செலவழிப்பதற்கு 4 மாதம் ஆகுமானால்—அதற்கிடையிலே நிதியை செலவிட்டுவிட வேண்டும் என்பது கூட என்னுடைய நோக்கமல்ல—அந்த நிவாரணத்தின் மூலம் கிடைக்க வேண்டிய பலன் மக்களுக்கு கிடைக்காமல் போய்விடும், அப்படிப் போய் விட்டால் பொது மக்கள் குடிதண்ணீரும் கிடைக்காமல் பெருமளவுக்கு பாதிக்கப்படுவார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலை ஏற்பட்டதற்கு ஒரு அடிப்படையான காரணம் இருக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மழை பெய்கின்ற அளவைப் பற்றி மட்டும் அரசாங்கத்திற்குப் புள்ளி விவரம் தருகிற ஒரு முறை இருக்கின்றது. அதாவது இத்தனை அங்குலம் மழை பெய்தது, சென்டி மீட்டர் பெய்தது என்றுதான் ஒரு கணக்கு கொடுக்கிறார்களே தவிர, 20 ஆண்டுகளுக்கு முன்னாலே பெய்த மழை எவ்வளவு, 10 ஆண்டுகளுக்கு முன்னாலே பெய்த மழை எவ்வளவு இன்றைக்குப் பெய்கிற மழை எவ்வளவு என்றுதான் சொல்கிறார்களே தவிர, நிலத்தினுடைய உறிஞ்சுகிற ஆற்றல் 20 ஆண்டுகளுக்கு முன்னாலே எவ்வளவு குறைவாக இருந்தது, இன்றைக்கு உறிஞ்சுகிற ஆற்றல் எவ்வளவு அதிகமாகி இருக்கின்றது என்ற அந்தக் கணக்கை யாரும் சொல்வதில்லை. வறட்சிப் பகுதிகளிலே புதிதாக விவசாயம் செய்யும் நிலை வளர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தால் நீர் உறிஞ்சப்படுகின்றது. துளை கிணறுகள் அல்லது ஆழ் கிணறுகள் ஆகியவற்றிலிருந்து மின்சாரத்தின் மூலமாக தண்ணீர் இறைப்பதன் காரணத்தால் நிலத்தடி நீரும் உறிஞ்சப்படுகின்றது. வெளியேறி விடுகிறது. பசுமையான மரங்கள் குறைந்துபோனதன் காரணமாக நீர் விரைவில் காய்ந்து விடுகின்றது. அந்த யூக்லிப்டஸ் போன்ற மரங்களை ஏதோ மரங்களை வளர்ப்பதாக நினைத்துக் கொண்டு வளர்க்கின்ற காரணத்தாலும் அதுவும் மிகுதியான அளவில் நீரை உறிஞ்சுகிறது. நகரப் பகுதிகளுக்கு கிராமப் பகுதிகளிலே இருந்து தண்ணீரைத் திருப்பி விடவேண்டிய நிலைமை ஏற்பட்ட காரணத்தாலேயும் நீர் வறண்டு போகிறது. இயற்கை கோளாறு காரணமாக பெய்கிற மழையிலே ஏறத்தாழ 15 சதவீதம் ஏற்கனவே குறைந்து அதுவும் வறட்சிக்கு துணை

...கிறது. இப்போது மேகங்கள் கூட வறட்சிக்கு ஆளாகி இருக்கின்றது. மேகங்களே வறட்சிக்கு ஆளாகின்ற அளவுக்கு சூழ்நிலை கெட்டுப் போயிருக்கின்ற போது இந்த அரசாங்கம் மழை பெய்கின்ற அளவை மட்டும் கருதிப் பார்க்காமல், பெய்கின்ற மழையிலே எவ்வளவு தண்ணீர் மிச்சப்படும், எவ்வளவு தண்ணீர் நிலத்திலே ஊறிப் போய்விடும், அல்லது காய்ந்து போய்விடும் என்று கணக்கு எடுக்கக் கூடிய ஒரு அளவு முறையை மேற்கொள்ள வேண்டும். அதற்கான முறையை வகுக்க வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நீண்டநெடுங்காலமாக முழு அளவுக்கு மழை பெய்கின்ற ஒரு மாநிலமாக இல்லை. இப்போதுள்ள சூழ்நிலையிலே 4 ஆண்டுக்கு ஒரு முறை தண்ணீர் பற்றாக் குறைக்கு நாம் ஆளாகிறோம். 5 ஆண்டு, 10 ஆண்டுக்கு ஒரு முறை வெள்ளத்திற்கு ஆளாகிறோம். நான்காண்டுக்கு ஒருமுறை வருகின்ற பற்றாக்குறை இனி 2 ஆண்டுக்கு ஒரு முறை வரும். நான் சொல்வது ஏதோ முனிவர் ஒருவர் ஜெபிப்பதைப் போன்றது அல்ல. இந்த நாட்டிலே குடி இருக்க வேண்டிய குடிமகனுக்கு ஏற்படுகின்ற ஒரு கவலையின் விளைவாகத்தான் சொல்கிறேன். இந்தத் தண்ணீர் பற்றாக்குறை வளர்ந்து கொண்டே போகும்.

[இரவு 8-00.]

எனவே மழை வருவதற்கு அடிப்படையாகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யலாம். மரங்களை வளர்ப்பது போன்றவைகளைச் செய்யலாம். ஆனால் அவை எல்லாம் நீண்டகாலத் திட்டம். அவற்றிற்குள்ளே நான் போகவிரும்பவில்லை. எனவே இப்படி பற்றாக்குறை வரும் என்றால் அரசாங்கம் தானே கண்காணிப்பாக இருந்தாக வேண்டும்? அரசாங்கம் எப்படி நிதி நிலை அறிக்கையைக் கூடக் காலதாமதமாகக் கொண்டு வர இருக்கிறதோ நிச்சயமாக வந்து விடும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு—ஆனால் அது எப்படி இவ்வளவு காலதாமதமாக வர நேரிடுகிறதோ, அதே போல இதையும் கால தாமதம் செய்தால் எப்படிப் பயன் கிடைக்கும்?

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பேசும்போது கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியினுடைய வறட்சியின் காரணமாக, கடுமையாக பின் தங்கிய நிலையில் இருந்ததன் காரணமாக 2 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். ஆனால் இன்று வரையில் அந்தத் தொகை அந்த மாவட்டத்திற்கு செலவிடப்படவில்லை என்று கூறினார்கள். அது உண்மையாக இருக்குமேயானால், "இந்த நடவடிக்கைகளால் என்ன பயன்? இரண்டு ஆண்டு காலம்" முன்பு இரண்டு கோடி ரூபாயை ஒதுக்கி, அது இதுவரை செலவிடப்படவில்லை என்று சொன்னால் என்ன பொருள்"? போடப்பட்ட பட்ஜெட்டுக்கு 100-க்கு 60 பங்கு, 50 பங்கு மட்டுமே செலவிடப்படுகிறது.





என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அது போல குடிதண்ணீர் வாரியம் ஆண்டு தோறும் போடுகிற ஒவ்வொரு திட்டத்திலும் நாங்கள் இவ்வளவு ரூபாய் செலவு செய்தோம், இத்தனை குழாய்கள் போட்டோம் என்று சொல்கிறார்களே தவிர பழுதாகிற குழாய்களை அவர்கள் பழுது பார்ப்பதும் இல்லை, பழுது பார்ப்பதற்குத் தேவையான அமைப்புகளும் வைத்திருக்கவில்லை என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே போடப்பட்ட மேல் நிலை தொட்டிகள் பழுதாகி கெட்டுப் போய்விட்டது, ஒழுகிக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். அதை நான் ஒப்புக் கொள்கிறேன். அப்பொழுது போட்ட தொட்டிகள் எல்லாம் ஒழுகிக் கொண்டுதான் இருக்கும். ஒழுகாமல் இருக்காது. என் வீட்டிலும் கூட போடப்பட்டிருக்கிற தொட்டி ஒழுகிக் கொண்டுதான் இருக்கிறது. எனவே போடப்பட்டிருக்கிற தொட்டி ஒழுகுமேயானால், அதை பழுது பார்க்கிற உடனடி வாய்ப்பு இல்லை என்றால், மாவட்ட அளவிலே தான் குடி நீர் வாரியம் தலைமையகம் இயங்கும், எனவே அவர்களைக் கேட்டுத்தான் செய்ய வேண்டும் என்கிற நிலைமைகள் நீடிக்கக் கூடாது.

மிகச் சாதாரணமாகப் பழுது பார்க்கிற வேலைகள் கூட, 50 ரூபாய், 100 ரூபாய் செலவிலே பழுது பார்க்கக் கூடிய வேலைகள் கூட, 400 ரூபாய் செலவு செய்கிற நிலைமைக்கு உண்டாக்கி விட்டு, பயன்படும் முறையில் இயங்குகிற ஆற்றலை நீங்களே குறைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று குடிதண்ணீர் வாரியத்தைப் பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, நடைமுறையில் இருக்கிற குறைகளையெல்லாம் தீர்ப்பதற்கு, இந்த குடிநீர் வாரியம், அவர்களுடைய கடைமைகளை மாவட்டந்தோறும் பிரித்துக் கொண்டு, எல்லா பஞ்சாயத்து ஒன்றிய அளவிலும் செய்யக் கூடிய நிலைமை இருந்தால்தான், அந்தந்த வேலைகளை, குழாய்களைப் பழுது பார்க்கிற வேலைகளை, குழாய்களில் தண்ணீர் வராவிட்டல் அதை சரி செய்கிற பணிகளை, மின்சாரம் கிடைக்காத காரணத்தால் ஏற்படுகிற கஷ்டங்களை மாற்றுகிற பணிகளை—அந்தப் பணிகளை எல்லாம் பரவலாக ஆங்காங்கே பொறுப்பேற்றுச் செய்யும் முறையில் விரைவு படுத்த முடியுமோ அந்த அளவுக்கு விரைவு படுத்தினால், இந்தக் குறைகளை ஓரளவு போக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்னும் நான் சொல்வதற்கு நிறைய விஷயங்கள் இருந்தாலும் கூட நான் சுருக்கமாகவே சொல்ல விரும்புகிறேன்.

தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறபோது, சில இடங்களில் தொழிற்சாலைகளில் பயன்படுத்துகிற தண்ணீர் கெட்டுப்போய், அந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய குடிதண்ணீரைக் கெடுக்கக் கூடிய முறையில் சில தொழிற்சாலைகள்

[திரு. க. அன்பழகன்] [1981 மார்ச் 4

நடைபெறுவதாக இருந்தால், தண்ணீர் பற்றாக்குறையும்
பஞ்சமும் அந்த வட்டாரத்திலே இருக்குமேயானால்—அது
டேனரி தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, அல்லது
எரி சாராய தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, ஒரு வேளை
சாகோ தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, அந்தக் குறிப்
பிட்ட வட்டாரத்தில் மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை
என்றால், அவர்களுடைய தொழிலை கெடுப்பதற்காகவோ
நிறுத்துவதற்காகவோ அல்ல, இடைக்காலத்தில் அந்த வட்டார
மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்து பாதுகாப்பு
தர என்ன செய்யலாம் என்பதை அரசு அவசரமாக ஆலோ
சிக்க வேண்டும். அந்த வட்டாரத்திலேயே குடிநீர் இல்லை
என்று சொன்னால், ஒரு சேகோ தொழிற்சாலையை நிறுத்து
வது மூலம் அந்தக் குடிதண்ணீர் பாதுகாக்கப்படுமேயானால்—
ஒன்றும் முடியாது என்றால்— தொழிலும்—கெட்டுப்போகிறது
என்றால் நான் இதிலே குறுக்கிட விரும்பவில்லை. அப்படி
யாவது பாதுகாப்புத் தர முடியுமானால் அந்தந்த வட்டா
ரத்திலே தனித்தனியாக நல்வாழ்வுத்துறையைச் சேர்ந்த
அதிகாரிகளை வைத்து கவனித்து, குடிதண்ணீர் பாதுகாப்புக்
கான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

அதேபோல ஆடுமாடுகளுக்கு வேண்டிய தீவனங்கள்
கிடைக்காது அவைகள் வேறு மாநிலங்களுக்கு—அல்லது
சில தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுவதானால், அப்படி
தொழிற்சாலைகளுக்கு செல்கிற தீவனங்களை தடுத்து நிறுத்தி
உடனடியாக அந்த வட்டாரத்திலேயே உள்ள ஆடு மாடு
களுக்கு அவைகள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். இன்
னொன்று நான் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தொழிற்
சாலையில் வேலையில் உள்ள மக்களுக்கு வேலை பாது
காப்புத் தருவதற்கும் தகுந்த வழி வகைகளை காண முயல
வேண்டும். அதேபோல புதிதாக தண்ணீர் கிடைக்கக் கூடிய
இடத்திலே, கிணறுகள் தோண்டி தண்ணீர் எடுக்கிற போது
அந்த வட்டாரத்திலே வசிக்கிற மக்கள் இடையே, ஜாதி
அடிப்படை உணர்வு இருக்கக் கூடிய வட்டாரமாக இருக்குமே
யானால், முன்கூட்டியே, கிணறு வெட்டியதற்குப் பிறகோ
அல்லது வெட்டுவதற்கு முன்னாலேயோ, அந்த ஊர் பஞ்சா
யத்துக்குரியவர்களைக் கூட்டி, அந்த ஊரிலே இருக்கக் கூடிய
வகுப்பினர்களின் தலைவர்களை அழைத்து அவர்களின் ஒப்பு
தலோடு அவர்கள் ஒரு பிரிவினர் 4 மணி நேரம், இன்னொரு
பிரிவினர் மற்ற 4 மணி நேரம் தண்ணீர் எடுத்துக் கொள்ள
வேண்டும் என்பது போன்ற முறை வைத்து இருசாராருக்கும்
தகராறின்றிப் பயன்படச் செய்ய வேண்டும். இல்லை
யென்றால் ஒரு சாராருக்குத் தண்ணீரே கிடைக்கவில்லை
என்று வருகிற நேரத்திலே, ஜாதி கலவரமும், வகுப்புக்
கலவரமும் வந்து அங்கு இருப்பவர்களில் மிக மிக பாதிக்கப்படக்
கூடிய ஏழை எளிய மக்களுக்கு இன்னும் மோசமான பாதிப்பு
ஏற்பட்டு விடக்கூடும். அதற்கு இடந்தராமல் பாதுகாப்பு செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 4] [திரு. க. அன்பழகன்]

இப்போது நிலவக் கூடிய சூழ்நிலை மிகவும் வருந்தத்
தக்கதாக இருக்கிறது என்பதை எடுத்துக் கூறுவதுடன்
ஏறத்தாழ திருநெல்வேலியிலே ஒரு பகுதியிலே தொடங்கி
மேற்கு இராமநாதபுரத்திலே ஒரு பகுதியும், கிழக்கு இராம
நாதபுரம் முழுவதும், புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும்,
தஞ்சை மாவட்டத்தினுடைய மேற்கு பகுதியும், திருச்சி
மாவட்டத்தில் ஒரு பகுதியும், தென்னாற்காடு மாவட்டத்தில்
75 சதவீதமும், வட ஆற்காடு மாவட்டத்தில் 90 சதவீதமும்,
தர்மபுரி மாவட்டத்தில் 80 அல்லது 90 சதவீதமும், சேலம்
மாவட்டத்தில் 60 சதவீதமும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரி
கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். ராசி
புரத்திலே குடம் தண்ணீர் 20 காசு, 30 காசு கொடுத்து வாங்குவ
தாக தெரிவித்திருக்கிறார்கள். ராணிப்பேட்டையிலே 1 ரூபாய்க்கு
கூட தண்ணீர் வாங்க வேண்டிய நிலைமை இருக்
கிறது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட துயரமான
வருந்தத்தக்க ஒரு சூழ்நிலை மாவட்டங்களில் ஏற்பட்டுள்ளதை
மாற்றி நிவாரணம் காண மாநில அமைச்சர்கள் என்ற
முறையல் உணரும் பொறுப்பை விட, பொதுமக்களின்
பிரதிநிதிகள் என்ற நிலைமையில் உணர்ந்து தீவிரமாகச்
செயல்பட்டு தகுந்த வழி காண்பார்கள் என்று எதிர்பார்த்து,
என் உரையை முடித்துக் கொளகிறேன். வணக்கம்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சே. மகுந்தரம் : பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழநாட்டில் நிலவுகிற வறட்சி நிலை
பற்றி இநதப் பேரவையிலே கொண்டுவந்து பேரவை உறுப்
பினர்களுடைய கருத்துக்களைக் கேட்கவேண்டும் என்று அர
சாங்கம் கருதி அதை அறிக்கை மூலமாக வைத்து இரண்டு
தினங்களாக அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள்
கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு
தினங்கள் போதாது, மாலையும் வேண்டுமென்று உறுப்பினர்கள்
விரும்பியதற்கிணங்க மாலையும் வைத்து அதுவும் போதாது
இரவிலும் வேண்டும் என்று சொல்லி இரவிலும் இன்று
அதைப்பற்றி நாம் நம் கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள
வேண்டும் என்பதில் நான் மகிழ்ச்சி அடையவில்லை என்றால்,
அப்படி மகிழ்ச்சி அடையவில்லை என்பதற்குக் காரணம் வறட்சி
நிலை பற்றிப் பேசுகிற நிலைமைக்கு நாமெல்லாம் தள்ளப்
பட்டிருக்கிறோமே என்பதற்காகத்தான் மகிழ்ச்சி அடைய
வில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் இன்றும் சேர்ந்து 75 உறுப்பினர்கள் தங்கள்
கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அப்படி
75 உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னாலும்
75 உறுப்பினர்களும் 75 கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள்
என்று சொல்லி ஒவ்வொரு உறுப்பினருக்கும் பதில் சொல்லத்
தேவை இல்லை என்பதற்காக நான் உங்களுக்கு நன்றி தெரி
விக்க விரும்புகிறேன். ஏனென்றால், 75 உறுப்பினர்களும்

75 விதமான கருத்துக்களைச் சொல்லாமல் பெரும்பாலான உறுப்பினர்கள் இன்னும் சொல்லப்போனால் எல்லா உறுப்பினர்களுமே ஒட்டுமொத்தமாக தமிழ் நாட்டில் இன்றிருக்கிற நிலைமைகள் பற்றி விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசின் சார்பில் அவர்களுக்கெல்லாம் நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அரசின் சார்பில் சொல்கிற நன்றியை விட தமிழக மக்கள் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய நிலைமைபற்றி உறுப்பினர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இன்றைக்கு இதைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறபோது வாதிடுகிறபோது தமிழ்நாட்டினுடைய மொத்த நிலைமையைப் பற்றி கட்சிக்கு அப்பாற்பட்டு அரசாங்கத்திற்கு அப்பாற்பட்டு, சமுதாயத்தின் நலன் கருதி அதைப்பற்றி மட்டும் பேசிய உறுப்பினர்களும உண்டு. ஆனால் வாய்ப்பு அளிக்கிறபோது இந்த நேரத்திலும் கொஞ்சம் சொல்வோம் என்று ஆளும் கட்சி பற்றி இந்த நேரத்திலும் குறை சொல்லி தாக்கிப் பேசியவர்களும் உண்டு. ஆனால் இதைப்பற்றியெல்லாம் நாம் எண்ணிப்பார்க்காமல் இன்றைக்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதுபற்றித்தான் நாம் இன்றைக்கு பேசிக்கொண்டிருக்கிறோம், முடிவுகள எடுக்க இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதையெல்லாம் நான் பொதுவாகச் சொல்ல உங்களிடத்தில் இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது, என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றி உங்களிடம் நான் சுருக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நிதி ரூ. 4,37,77,000 போதாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்று கொடுக்கப்பட்டிருக்கிற நிதி, நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், நீங்கள் எல்லாம் கேட்பதற்கு முன்னால் கொடுக்கப்பட்டது. தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்வதுபோல தட்டுவதற்கு முன்னாலே, கேட்பதற்கு முன்னாலே கொடுக்கப்பட்ட நிதி இது. ஆனால் இன்று கொடுக்கப்பட்டிருக்கிற நிதி இதுநான் முதல்தரமாகக் கொடுக்கப்பட்டது. இதுதான் கடைசித்தரமாகக் கொடுக்கப்படுகிறது என்று தயவு செய்து யாரும் கருதிவிடக்கூடாது. இன்று கொடுக்கப்பட்டிருக்கும் நிதி கேட்கப்படாமல் கொடுக்கப்பட்டிருக்கிற நிதி. தமிழ்நாட்டின் நிலையை எண்ணிப்பார்த்து மேலும் தேவையான அளவிற்கு, எந்தளவிற்கு தேவைப்படுமோ அந்தளவிற்கு இந்த அரசு நிச்சயமாகக் கொடுக்கும் என்பதை உங்களிடத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் குடிநீர் பஞ்சத்தைப் போக்கடிப்பதற்காக இந்த அரசு, எவ்வளவு செலவழிக்க வேண்டுமானாலும் அவ்வளவையும் செலவழிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு எப்படி வேலைகள் நடக்கின்றன என்று சொல்கிறபோது, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொல்கிறபோது சில இடங்களில் வேலைகள் சரியாக நடக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி வேலைகள் சரியாக நடக்கவில்லையென்று சொல்கிறபோது அதிகாரிகள் எல்லாம் மோசம் என்று சொன்னவர்களும், சில அதிகாரிகள்தான் மோசமானவர்கள் என்று சொன்னவர்களும் உண்டு.

(இரவு 8—10)

அதிகாரிகள் அத்தனைபேர்களும் நூற்றுக்கு நூறு மோசமானவர்கள் திறமை அற்றவர்கள் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நீங்களும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள். ஆனால், சில இடங்களிலே தவறான அல்லது திறமை குறைவான அதிகாரிகள் இருக்கக்கூடும். அதை நான் ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்சமயம் மாவட்டங்களிலே எப்படி வேலை நடக்கின்றதென்றால் குடி நீர் வடிகால் வாரியத்தின் மூலமாக இன்றைக்கு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அடிமட்டத்திலே இருந்து நீரை மேலே கொண்டு வரும் வேலை நடைபெறுகிறது. அதேபோல் அக்ரிகல்சர் என்ஜினியரிங் டிபார்ட்மென்ட் மூலமாகவும் இன்றைக்கு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதேபோல் விவசாயத் தொழில் அபிவிருத்திக் கழகத்தின் மூலமாகவும் இன்றைக்கு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் மூலமாக இன்றைக்கு 47 ரிக்குகள் வேலையிலே ஈடுபட்டிருக்கின்றன. அதேபோல் அக்ரிகல்சர் என்ஜினியரிங் டிபார்ட்மென்ட் மூலமாக 22 ரிக்குகள் இருக்கின்றன. அதேபோல் போரிங் செட் 67-ம், ராக் பிளாஸ்டிங் யூனிட் 20-ம் இன்றைக்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வேலை செய்து கொண்டிருக்கின்றன என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகள் எல்லாம் போதாது என்று பலர் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், நான் உங்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மற்ற மாநிலங்களிலே இருந்து இவைகளை வாங்கிக் கொள்ளலாம் என்றும், தனிப்பட்டவர்களிடம் இருந்தாலும் அவைகளை வாங்கிக் கொள்ளலாம் என்றும் இன்றைக்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப

பினர் சங்கரய்யா அவர்கள் பேசுகின்றபோது அரசிடத்திலே தேவையான அரிசி கையிருப்பு இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அரசிடத்திலே இருக்கிறது, ஆனால், அது ஒழுங்காக இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அரசிடம் அரிசி இருக்கிறது என்பதிலே உண்மை இருக்கிறது.

தமிழ்நாடு குடிநீர் வாரியத்திடத்திலே 62 ரிக்குகள் இருக்கின்றன. விவசாயப் பொறியியல் துறையில் 70 இருக்கின்றன. நிலத்தடிநீர் வாரியத்திடம் இன்றைக்கு 10 இருக்கின்றன. ஆக மொத்தம் 142 இன்றைக்கு அரசிடத்திலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் அது போதுமா என்றால் நிச்சயமாகப் போதாது என்பதை நான் மனதார ஏற்றுக் கொள்கிறேன். அதன் காரணமாகத் தான் நான் அவைக்கு வருவதற்கு முன்னால் —அவைக்கு வருவதற்கு முன்னால் என்றால் சட்டமன்றம் கூடுவதற்கு முன்னால் பல தினங்களுக்கு முன்னால் கூட அதிகாரிகளிடத்திலே மற்ற மாநிலங்களில் தனியார்களிடத்தில் எடுத்துக் கொள்வதற்கு அனுமதி தந்திருக்கிறேன். அவர்களுக்கெல்லாம் அதற்கு வேண்டிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. பலர் பேசுகின்றபோது இருக்கிற ஓவர் ஹெட் டாங்கு, கைப் பம்பு இவைகள் எல்லாம் சரியாக வேலை செய்வதில்லை என்று சொன்னார்கள். அவைகள் எல்லாம் சரி செய்ய வேண்டுமென்பதற்காகத் தான் இன்றைக்கு நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் பேசுகின்றபோது நீங்கள் பணம் கொடுத்தால் போதுமா, காரியம் நடக்க வேண்டாமா என்று சொன்னார்கள். பணம்கொடுத்தால் நிச்சயமாகப் போதாது. ஆனால், பணம் இல்லையென்றால் காரியம் நடக்காது. வறட்சி நிலை அறிவிக்கப்பட்டு, மேல்மட்டத்திலே அதிகாரிகள் அதைப்பற்றி கவனித்துக் கொண்டு வருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், அது போதுமா என்றால் அது போதாது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

நான் 5 மாவட்டங்களை சுற்றிப் பார்த்திருக்கிறேன். அதேபோல் அதிகாரிகளைக் கூப்பிட்டு அவர்களையும் கேட்டிருக்கிறேன். அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று அரசின் சார்பிலே உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மற்றும், அமைச்சர்கள் செல்லுகின்றபோது அந்தந்த மாவட்டங்களிலே அவர்கள் இவற்றையெல்லாம் செய்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே உறுப்பினர்கள் பேசுகின்றபோது, வரி தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். முதல் தவணையாக இன்றைக்கு வடாற்காடு மாவட்டம், புதுக்





கோட்டை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், தென்னாற்காடு மாவட்டங்களில் அங்கே இருக்கிற நிலைமைகளுக்கு ஏற்றவாறு தண்ணீர் தீர்வை வரி தள்ளப்பட்டிருக்கிறது ; அதற்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதேபோல கடன் பற்றி சொன்னார்கள், அரசு கடனைப்பற்றி உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன என்பது உங்களுக்கெல்லாம் தெரியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பல உறுப்பினர்கள் பேசுகிறபோது— எல்லா உறுப்பினர்களும் ஒரே கருத்தை சொன்னதாலே அவர்கள் பெயர்களை எல்லாம் சொல்லவில்லை— பழைய ஏரிகளையும், குளங்களையும் ஆழப்படுத்த வேண்டும், தூர் எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அதை செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதேபோல பெரும்பாலான உறுப்பினர்கள் பேசுகிறபோது ஒன்றை சொன்னார்கள் ; வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். வறட்சிப் பகுதியாக அறிவித்து விட்டால் மட்டுமே அங்கே உடனே தண்ணீர் வந்துவிடாது. அறிவித்தாலும், அறிவிக்காவிட்டாலும், எந்தெந்த நடவடிக்கைகள் எந்த அளவிற்கு எடுக்க வேண்டுமோ, அவைகளை எல்லாம் முறையாக அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்து கொள்கிறேன்.

இங்கே பல உறுப்பினர்கள்—75 உறுப்பினர்களுக்கு அதிகமாக இருப்பதால் பெயர்களை சொல்ல முடியாது என்பதால் பெயர்களை விட்டு விட்டு பதில் சொல்லிக் கொண்டு வருகிறேன். உணவுப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள் ; அதனால் மலிவு விலையில் உணவுப் பொருட்கள் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள் ; அரசு விநியோகத்தில் அரசு கூட்டுறவு அங்காடிகள், அமுதம் அங்காடிகள் எல்லாவற்றிலும் கட்டுப்பாடு இல்லாமல் வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். இந்த யோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும். இதற்கு முன் இவையெல்லாம் எப்படி நடைபெற்று வருகின்றன என்பதை அரசு கண்காணித்து வருகிறது. தட்டுப்பாடில்லாமல் வழங்குவதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தேசிய கிராமப்புற வேலை திட்டத்தின் கீழ், மத்திய அரசிடமிருந்து பெறப்பெற்ற 32,750 டன் அரிசி பல மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது

வடாற்காடு மாவட்டம்—9,500 டன்னும்,

இராமநாதபுரம் மாவட்டம்—4,500 டன்னும்

சேலம் மாவட்டம்—4,000 டன்னும்

தர்மபுரி மாவட்டம்—3,950 டன்னும்

தென்னாற்காடு மாவட்டம்—2,000 டன்னும்

திருச்சி மாவட்டம்—15,000 டன்னும்
தஞ்சாவூர் மாவட்டம்—130 டன்னும்
மதுரை மாவட்டம்—1,000 டன்னும்
புதுக்கோட்டை மாவட்டம்— 1,000 டன்னும்
செங்கல்பட்டு மாவட்டம்— 1,000 டன்னும்
கன்னியாக்குமரி மாவட்டம்—500 டன்னும்
திருநெல்வேலி மாவட்டம்—500 டன்னும்
கோவை மாவட்டம்—500 டன்னும்
நீலகிரி மாவட்டம்—500 டன்னும்
பெரியார் மாவட்டம்— 500 டன்னும்

இந்த அளவிலே எல்லா மாவட்டங்களுக்கும் அரிசி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல இன்றைக்கு எப்படி வேலைகள் துரிதமாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு ' டர்ன் வால்ஸ் ' என்ற டிபார்ட்மென்ட் மூலமாக குழாய் கிணறுகள் எண்ணிக்கை 720 இருந்தது. அவைகளில் பயன்படுத்துகின்ற கிணறுகள் இன்று 267. மீதி பயன்படுத்துவதற்கு தகுதியுள்ள கிணறுகள் 453. இந்த 453-ம் அதற்கு எப்படி என்னென்ன வேலைகள் செய்ய வேண்டுமோ, பங்கு போடவேண்டுமோ, இவைகள் எல்லாம் இந்த மாத இறுதிக்குள் அதாவது 31—3—1981க்குள் சரி செய்து வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், அவர்களும் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 8-20)

தமிழ்நாடு பூராவும் மேல் நிலைத் தொட்டிகள் 9,588 இருக்கின்றன. அவற்றிலே பழுதாகி இருப்பவை 483. பல உறுப்பினர்கள் இங்கே பேசும்போது பழுதாகிவிட்டது, பழுதாகிவிட்டது என்று சொன்னார்களே அதற்காக நான் சொல்ல வேண்டும். நான் எவ்வளவு என்று அதைச் சொல்லாவிட்டால் மறைப்பதாக ஆகும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மேல் நிலைத் தொட்டிகள் எங்கள் பகுதியிலே ஏற்கெனவே ஒன்றியத்தின் நிர்வாகத்திலே இருந்த போது சரியான முறையிலே இயங்கி வந்தன. இப்போது குடிநீர் வாரியத்திடம் அவைகள் விடப்பட்ட பிறகு 100-க்கு 90 சரியாக வேலை செய்யவில்லை. இது தான் உண்மையான நிலைமை. அமைச்சர் அவர்கள் இங்கே புள்ளிவிவரங்களைத் தருகிறார்கள். வேண்டுமானால் நாளைய தினம் அவர்களை நான் அழைத்துச்





சென்று காட்டத் தயாராக இருக்கிறேன். தாங்கள் சொல்கிற புள்ளி விவரம் உண்மை என்றால் எந்தத் தண்டனை கொடுத்தாலும்நான் அதை ஏற்றுக் கொள்கிறேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பர்சன்டேஜ் என்பது வேறு, எண்ணிக்கை என்பது வேறு. ஏனென்றால் எண்ணிக்கை என்கிறபோது 10-ஐச் சொல்லி அது 90 பர்சன்ட் என்றால் 9 ஆகும். எண்ணிக்கையிலே வருகிறது. நான் உங்களுக்கு எண்ணிக்கையைச் சொல்கிறபோது, பர்சன்டேஜ் வந்து மாவட்டத்திற்கு மாவட்டம் சில இடங்களிலே ஆங்காங்கே உள்ள நிலைமைகளுக்கு ஏற்றவாறு 100-க்கு 100 கூட வேலை செய்யக்கூடும். சில இடங்களிலே 100-க்கு 90 வேலை செய்யக்கூடும். சில இடங்களிலே 100-க்கு 90 வேலை செய்யாமல இருக்கக்கூடும். பழுதுபட்டவை 483 என்றால் இன்றைக்கு அல்ல, பல தினங்களாக அதிகாரிகளிடத்திலே கேட்டுக் கேட்டுப் பெற்ற புள்ளி விவரம். இன்றைக்குப் பராமரிப்பில் உள்ளவை என்று சொல்கிறபோது 9,588, பழுதில் உள்ளவை 483. அது மட்டுமல்ல அவற்றை எடுத்துச் சீர்செய்து.— செய்யாதது வேறு இருக்கிறது —842 ஆக இந்த மூன்றையும் சேர்த்து அப்படி பழுதில் உள்ளவை, இன்னும் சில குறைபாடுகள் உள்ளவையாக இருப்பவை எல்லாவற்றையும் சேர்த்து அவ்வளவையும் இந்த மாத இறுதிக்குள் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ந் தேதிக்குள் முடித்துத் தர வேண்டுமென்று அரசு கட்டளை இட்டிருக்கிறது. கட்டளையிடுவது என்றால் கட்டளை மட்டுமல்ல, அவர்களையெல்லாம் கூட்டிப்பேசி எப்போது கொடுக்க முடியும் என்று கேட்டு —எங்களிடத்திலே தேதி தந்துவிட்டு பின்வாங்கக் கூடாது என்று சொல்லி— அவர்களுக்கு இருக்கிற மேன் பவர், வேலைத் திறமை இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டுதான் அந்தத் தேதியை குறிப்பிட்டு இருக்கிறேன். அதற்குள் அவை நடக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோது அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள், நானும் தேதியைச் சொல்லிவிட்டேன். அந்தத் தேதிக்குப் பிறகு அவைகள் எல்லாம் இருக்கின்றன என்று அழைத்துச் சென்று காண்பித்தால் நான் முடிந்தால் வருகிறேன், இல்லாவிட்டால் நம்பிக்கையான ஆளை அனுப்புகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹேண்ட் பம்புசெட்டு என்று சொன்னால் 50 அடிக்கு மேலே ஆழப்புடுத்தப்பட்ட — மோர்தேன் 50 பீட்—பராமரிப்பில் உள்ளவை மட்டும் 22,056, அவைகளிலே பழுதாகிவிட்டவை 942 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதையும் பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே அவர்களை அழைத்துப் பேசி விரைவிலே முடித்துத் தரவேண்டுமென்று சொல்லி அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதற்கும் கடைசி நாள் : 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ந் தேதி என்று தெரிவித்துக் கொள்கிறேன். நான் இந்தத் தேதியை எல்லாம் சொல்வதற்குக்

காரணம் அவதச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான். உங்களிடத்திலே தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் விரைவில் விரைவில் என்ற வார்த்தைகளைச் சொல்லிவிட்டுப் போகலாம், யாரையும் ஏமாற்ற முடியாது. காரியம் நடக்க வேண்டும், 31 ஆம் தேதி என்று சொல்லிவிட்டால் — சமுதாயத்திலே அக்கறை உள்ளவர்கள் நீங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றவர்கள் எல்லாம் 31-ஆம் தேதிக்குள்ளாக நடந்ததா இல்லையா என்று அங்கேயெல்லாம் கண்காணிக்க வேண்டுமென்பதற்காகத்தான் தேதியைக் குறிப்பிட்டேன்.

அதேபோல் மின்வாரியம், மின் இணைப்புக் கொடுக்கப்பட்டவை 5,883, ஆனால் அவைகளிலே சில மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருப்பவை அவற்றில் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ந் தேதிக்குள் மின் இணைப்புக் கொடுக்கிறேன் என்று அவர்கள் என்னிடத்திலே கொடுத்து இருப்பவை 996. இன்னமும் அவற்றிற்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ந் தேதிக்குள் இணைப்புக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு 1,300 என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இவைகளையெல்லாம் நீங்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்களே இவைகளையெல்லாம் செய்வதற்குப் பழைய சட்டங்கள் இடையூறு செய்யுமே என்றால் இன்றைக்குப் போர்க்கால நடவடிக்கைகளைப்போல பல சட்டங்களைத் தளர்த்தியிருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வளர்ச்சிப் பகுதிகளில் மின்னிணைப்பு கொடுப்பதற்கு மின் வாரியத்தில் உள்ள எல்லாக் களப்பணியாளர்கள் Field Staff பயன்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்தப் பணிகளைச் செய்வதற்குத் தேவையான பொருள்கள் Supply of meterials சிறப்பான முறையில், தேவையான அளவிற்கு அளிப்பதற்கு முன்னுரிமை priority கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். வாரியத் தலைவரும், மற்றவர்களும் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்

தேவையான பொருள்களைப் பெறுவதற்காக இந்த இடத்தில்தான் பெற வேண்டும் என்று, Meterials division என்று வைத்திருப்பார்கள். அதையும் மாறி, தேவையான பொருள்களை எங்கு வேண்டுமானாலும் பெற வேண்டுமென்று அந்தக் கண்டிப்பையும் இன்றைக்குத் தளர்த்தியிருக்கிறோம் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





அதுமட்டுமல்ல, இவைகளையெல்லாம் உடனே செய்ய வேண்டும் என்றால், அதற்கு மின் வாரியத்திலே சில வரைமுறைகள் வைத்திருக்கிறார்கள், அந்த வரைமுறைகளை இங்கே நாங்கள் தளர்த்தியிருக்கிறோம் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலிலே அந்தப் பணியைப் பற்றி வருகிறபொழுது, எல்லாம் சரியான பிறகுதான் over head lines போடுவார்கள். அந்த over head lines போடுவதை முன்கூட்டியே போட வேண்டும்; மனுக்கள் கொடுத்தவுடனேயே போட வேண்டும்; அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றுசொல்லப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, அங்கே செட் போட்ட பிறகுதான் இடம் கட்டிய பிறகுதான் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதையும் நீங்கள் பார்க்கக் கூடாது, இணைப்புகளை உடனே கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல; மின்னிணைப்பு என்றால் உங்களுக்குத் தெரியும், Service charges அதைக் கட்டிய பிறகுதான் கொடுப்பார்கள். தாமதமாகக் கட்டினாலும், அது கட்டவில்லையே என்று பார்க்கக்கூடாது, உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்றுகேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல டெபாசிட்— Security deposit கட்டிய பிறகுதான் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதையும் தளர்த்தியிருக்கிறோம்.

ஒப்பந்தம்— agreement போட வேண்டும். அந்த agreement வராவிட்டாலும் அவைகளையெல்லாம் கொடுக்க வேண்டுமென்று இன்றைக்குக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர் வாரியம் இந்தக் காரியத்தையெல்லாம் திறமையாகச் செய்யுமா, செய்து விடுமா என்பதைப்பற்றியெல்லாம் இங்கே நீங்கள் சொன்னர்கள். இன்றைக்கு அவர்கள் திறமையாகச் செய்வதற்கு என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிநீர் வாரியம் தற்சமயம் நூறு கைப் பம்புகளுக்கு ஒரு Fitter வீதம் 234 Fitterகளைத்தான் நியமித்து உள்ளது. வறட்சி நிலைமைகளின் காரணமாக ஊராட்சி ஒன்றியங்களில் மேலும் 132 Fitter இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மார்ச் 4

அதைப் போல இன்றைக்கு ஆயிரம் கைப் பம்புகளுக்கு ஒரு நடமாடும் பராமரிப்புக் குழு mobile unit வீதம் 17 mobile units தான் இயங்கி வருகின்றன. அது போதாது என்று ஆயிரம் கைப் பம்புகளுக்கு ஒரு mobile unit என்பதற்குப் பதிலாக 500 கைப் பம்புகளுக்கு ஒரு mobile unit வீதமாக இன்றைக்கு 20 பராமரிப்புக் குழு mobile unit நடமாடும் பராமரிப்புக் குழு நியமிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.; விரைவிலே அது செயல்படும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்நிலை நீர் தொட்டிகள் over head tanks பொறுத்த வரையில் நூறு மேல்நிலை தொட்டிகளுக்கு ஒரு மின்னிணைப்பாளர் Electrician வீதமாக இன்றைக்கு 108 மின்னிணைப்பாளர்கள்தான் இருக்கிறார்கள். அதேபோல் ஆயிரம் over head tank-க்கு ஒரு mobile unit என்று 15 தான் இருக்கின்றன. அவைகளையும் இன்றைக்கு அதிகப்படுத்தியிருக்கிறோம். 4 அந்த இடத்திலே அதிகப்படுத்தியிருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லக்கூடிய காலத்திலே இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் அது ரிப்பேராகி இருக்கிறது, அந்த ரிப்பேரை எப்படிச் செய்வோம் என்பதைத்தான் புள்ளிவிவரங்கள் சொல்கிறார்கள். நமக்கு நாடு முழுவதும் பஞ்சம் இருக்கிறது ; குடிநீர்ப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் ; தேவை எவ்வளவு என்பதைப் பற்றிச் சொல்லவே இல்லை ; தேவை எவ்வளவு, அந்தத் தேவையை எப்படிப் பூர்த்தி செய்யப் போகிறோம் என்பதைச் சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக எத்தனை rigs இன்றைக்கு வேலை செய்கிறது என்று நான் உங்களிடத்திலே தெரிவித்தேன். அது போதாது என்று வாடகைக்கு எடுக்கப்படுகிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்தேன். ஆகவே, வாடகைக்காக எடுக்கப்படுகிறபொழுதெல்லாம் அதற்கு அதிகமாக, வேகமாகச் செய்ய வேண்டுமென்பதற்காகச் சில, என்னென்ன சட்ட திட்டங்கள் இருக்கின்றனவோ அவைகளெல்லாம் தளர்த்தப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்தேன். மின்னிணைப்பு கொடுப்பதற்கு வேண்டிய சட்ட திட்டங்களையெல்லாம் தளர்த்தியிருக்கிறோம் என்று தெரிவித்தேன். அது மட்டுமல்ல, இன்றைக்கு அதிகமான அதிகாரிகளை நியமித்திருக்கிறோம் என்று சொன்னேன். என்னுடைய பேச்சு இன்னும் முடியவில்லை : கேட்டுக் கொண்டே வந்தால் தெரியும். எவ்வளவு அதிகாரிகள் என்று நான் இன்னும் சொல்லவில்லை. கடைசியிலே, நீங்கள் yard-stick இவ்வளவு வேலைக்கு இவ்வளவுதான் என்று கணக்குச் சொன்னால்கூட நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.



1981 மார்ச் 4] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

[இரவு 8-30]

யார்ட்ஸ்டிக்கை உங்களால் இப்பொழுது சொல்ல முடியாவிட்டாலும், வெளியே போய், யோசித்து, மற்றவர்களிடத்திலே கேட்டுக் கூட நீங்கள் சொல்லலாம் என்னிடத்திலே.

அதே போல், பவர், பம்ப், மின்சார பம்ப், பழுதடைந்தால் சீர் செய்வதற்குக் காலதாமதம் ஆகும் என்பது ஒன்று. இன்றைக்கு எங்கேயாவது பழுதடைந்து விட்டால், பழுது பார்ப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதை எடுத்துக் கொண்டு போய் சீர் செய்ய வேண்டும். அப்படி சீர்செய்வதைத் திருப்பிப் போட ஒரு நாள் அல்லது இரண்டு நாள் ஆகும். அப்படி இல்லாம லிருப்பதற்காக, அதைக் கழற்றி உடனேயே வேறு புதிதாகப் போட வேண்டுமென்பதற்காக, மாநிலத்தின் எல்லா பகுதிகளி லும் 10 சதவீதம் அதிகமாக பவர் பம்புகள் வாங்கி வைக்கப் பட்டிருக்கின்றன. இந்த அரசு முன்னேற்பாடாக என்ன செய் தது என்று கேட்பவர்களுக்கு இதைத்தான் சொல்லிக் கொள்வேன். இன்றைக்கு முன்னேற்பாடாக எல்லா இடங்களிலும் 10 சதவீதம் அதிகமாக வாங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி வாங்கி வைக்கப்பட்டிருப்பதால் எங்கேயாவது பழுதடைந்தால், உடனடியாக ரிப்பேர் செய்யப்படும். அது கழற்றப்படும், புதிய பம்ப் பொருத்தப்படும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல கை பம்ப், அது பழுதடைந்து விட்டால், கையிலே இருக்க வேண்டிய உப பாகங்கள், வேண்டிய கருவிகள், மற்றவைகள் எல்லாம், வேண்டிய அளவிற்கு வாங்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

அது மட்டுமல்ல, அதிகமான வேலைகளை இன்றைக்குக் குடிநீர் வடிகால் வாரியம் செய்வதால், இன்றைக்கு டிவிஷன்ஸ், மற்றும் சப் டிவிஷன்ஸ் அதிகமாக நியமிக்கப்படிருக்கின்றன. நியமிக்கப்பட்டிருக்கின்றன என்றால், அவர்கள் வேலைக்குச் சென்று விட்டார்கள். இன்றைக்கு சொல்ல வேண்டுமென்றால், சப் டிவிஷன்ஸ் 15, டிவிஷன் 1, ஆக 16 புதிதாக துவக்கப்பட்டு, அவர்கள் எல்லாம் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

அது மட்டுமல்ல, ஸ்பேர் பம்ப்ஸ் எல்லாம் பி.டி.ஓ.வே வாங்கிக் கொள்ளலாம் என்று இப்போழுது எனக்குச் சொன்னார்கள். 50 அடிக்கு மேலே உள்ளவைப்பற்றித்தான் நான் சொன்னேன். லெஸ் தான் 50 பீட்ஸ் உள்ளவைகளெல்லாம் பி.டி.ஓ. கன்ட்ரோலில் இருக்கிறது. ஊராட்சி மன்றங்களின் கன்ட்ரோலில் இருக்கின்றது. லெஸ் தான் 50 பீட்ஸ் உள்ள பம்புகளுக்கு எவ்வளவு ஸ்பேர் பார்ட்ஸ் வேண்டுமானாலும், பி.டி.ஓ.க்களே வாங்கிக் கொள்ளலாம் என்கிற உத்தரவு இன்றைக்கு இருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், இங்கே சொல்கிறபோது, தென்னாற்காடு மாவட்டத்தில், ரிக்ஸ் ஒன்றோ, இரண்டோ வேலை செய்வதாக இன்றைக்குச் சொன்னார்கள். அங்கே 7 ரிக்ஸ் வேலை செய்து கொண்டிருக்கின்றன என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். குழாய்கள் பழுதுபார்க்க அமைப்பே இல்லையென்று இங்கே பேசப்பட்டது. நான் சொல்லியவைகளிலிருந்து அந்தக் குழாய்களையெல்லாம் ரிப்பேர் செய்வதற்கு அமைப்புகள் எல்லாம் இருக்கின்றன என்பதை பேராசிரியர் அவர்கள் ஒத்துக் கொள்ளவார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த அமைப்புகள் எல்லாம், அந்த வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன்.

அதே போல், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் ஒன்றைச் சொல்லி விட்டுப் போய்விட்டார்கள். ஏனோ தெரியவில்லை எனக்கு. பேசுகிறபொழுது, அவருடைய மாவட்டத்திலே எல்லாமே தவறாக நடக்கப்பட்டதாகச் சொன்னார்கள், நான் அதை முற்றிலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அது மட்டுமல்ல, அவர் சொல்கிற பொழுது, 500 அடி போடுவதற்குப் பதிலாக, 400 அடி போட்டுவிட்டு, முழு தொகையை வாங்குவதாகச் சொன்னார்கள். குளத்தை வெட்டாமல் பணத்தை வாங்குவதாகச் சொன்னார்கள். அப்படியென்றால், அதுவும் ஒரு சட்டமன்ற உறுப்பினர், இவ்வளவு அநியாயம் நடக்கும்போது, அதைச் சட்டமன்றத்தில் சொல்லி, அதைப் பெரிதாகக் கண்டிப்பதிலே தவறில்லை. நான் அவருக்கு மட்டுமல்ல, அவருக்குப் பதில் சொல்வதன் வாயிலாக, மற்றவர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்வேன், எங்கேயாவது அநியாயம் நடந்தால், அந்த அநியாயத்தைப் பார்த்து, உங்களுக்கு நெஞ்சு துடிக்க வேண்டும். இவ்வளவு அநியாயம் நடக்கிறதே என்று நீங்கள் பார்த்து பொறுத்துக் கொள்ளக் கூடாது. அதுவும் உங்களுக்காக, நீங்கள் 500 அடி கிணறு வெட்டச் சொல்லி, 400 அடி வெட்டிவிட்டு, பணம் கேட்டால், நீங்கள் கொடுக்கமாட்டீர்கள். நீங்கள் அப்படி என்றால், நானும் கொடுக்க மாட்டேன். நம்முடைய சொத்தை விட பொதுச் சொத்துக்கு அதிகமான மதிப்பை நாம் தர வேண்டும். அப்படி எங்கேயாவது நடந்தால், அதைப் பார்த்து நாம் கொதிக்க வேண்டும், வேதனைப் பட வேண்டும், ஆத்திரப்பட வேண்டும். அப்படிப்பட்ட உணர்வுகள் பொது வாழ்வில் உள்ள அத்தனை பேருக்கும் வந்தால் நிச்சயமாக அந்தத் தவறுகள் முற்றிலும் நீங்காது, என்றாலும், படிப்படியாக குறையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன். படிப்படியாகக் குறையும் என்றால், இப்படிப்பட்ட அநியாயம் ஒரே நாளிலே நடந்தது அல்ல— இப்படிப்பட்ட அநியாயங்கள் செய்கின்றவர்கள் ஒரே நாளிலே வந்தவர்கள் அல்ல, ஏதோ மேல் நாட்டிலே இருந்து இங்கே வந்து குதித்து, இன்றைக்கு இந்த அரசு வந்ததற்குப் பிறகு அந்த அநியாயத்தை செய்கிறார்கள் என்று யாரும் சொல்ல

முடியாது. இப்படிப்பட்ட அநியாயங்களைச் செய்கிறவர்கள் பல நாட்களாகத் திறமையோடு இந்த அநியாயத்தைச் செய்து பழக்கப்பட்டவர்கள். இன்னும் மேலும் மேலும் இந்த அநியாயத்தைச் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று தான் அர்த்தம். எனவே நீங்கள் இந்த அரசுக்கு நிச்சயமாக உதவி செய்ய வேண்டும்.

இங்கே பணத்தைக் கொடுத்ததைப் பற்றி சொல்கிற போதும், மற்ற காரியங்களைப் பற்றிச் சொல்லுகிறபோதும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதற்கெல்லாம் நான் முழுமையாகப் பதில் சொல்லாவிட்டாலும், பொதுவாக உங்களுடைய வேண்டுகோள், அல்லது நம்முடைய வேண்டுகோள் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க வேண்டும் என்பதுதான். இவைகளை இந்த அரசு எப்படிச் செய்கிறது என்பதையும், உங்களுடைய உறுதுணையோடு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முதலிலே குறிப்பிட்டபடி குடி தண்ணீரைப் பொறுத்தவரையில் எப்படி எல்லாம் இதைச் செய்கிறோம் என்றால், குடிநீர் வாரியத்தின் மூலம் செய்கிறோம் என்று குறிப்பிட்டேன். விவசாயப் பொறியியல் துறை மூலமாகச் செய்கிறோம் என்று குறிப்பிட்டேன். பொதுப்பணித் துறை நிலத்தடி நீர் ஸ்கீம் மூலம் செய்வதாகவும் சொன்னேன். ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக செய்வதாகவும் சொல்லிவிட்டேன். அதோடு மட்டுமல்ல. இன்னும் பல வழிகளிலே இதைச் செய்வதற்கு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன். இந்த மாதம் முடிவதற்குள் எவை எவைகளைச் செய்ய வேண்டும் என்கின்ற கணக்கை உங்களிடத்திலே சொன்னேன். அதும்மட்டும் போதாது என்று தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு செய்வதற்கு 32,000 டன் ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும், 1981–82 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தில் அமலாக்கப்பட்டுள்ள வட்டாரங்களில் குடிநீர் பற்றாக் குறையை நீக்க வகை செய்யும் நடவடிக்கைகள் இப்போதே எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது பல உறுப்பினர்கள் சொன்னார்கள். சில இடங்களிலே கேணி தோண்டினால் தண்ணீர் வராது. ஆழமாகத் தோண்டினாலும் தண்ணீர் வராது. தண்ணீர் வராத பகுதியிலே என்ன செய்வது என்பதைச் சொன்னார்கள். அதை நான் உன்னிப்பாக கவனித்து தமிழகத்தின் முதலமைச்சரிடம் சொல்லுகிறபோது, அதைப்பற்றி அவரிடத்திலே பேசுகிறபோது அவர் சிலவற்றை என்னிடத்திலே சொல்லி, இதை அவையிலே சொல்லுங்கள் என்று சொன்னார். ஒரு கிராமத்திலே தண்ணீர் கிடைக்கவில்லை, மற்ற கிராமத்திலே தண்ணீர் கிடைக்கிறது. எவ்வளவு ஆழமாகத் தோண்டினாலும் வராது. அப்படியே வந்தாலும் உப்புத் தண்ணீராகத்தான் வரும். அதற்கு என்ன செய்வது என்றால் ஒரு கிராமத்தில் இருந்து தண்ணீரை மற்ற,

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மார்ச் 4

கிராமத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்ற அந்த முறையை
பின்பற்ற வேண்டும் என்று இந்த அரசு எண்ணிக் கொண்டிருக்
கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல
ஒரு தெருவிலே இருந்து வேறு தெருவுக்குத் தண்ணீரை எடுத்துச்
செல்லலாம். இதை எல்லாம் செய்வதற்கு வாகனங்களைப்
பயன்படுத்தலாம், வண்டிகளை, லாரிகளைப் பயன்படுத்தலாம்.
உழைக்கும் மக்கள், அன்றைக்கு வேலை செய்துதான் பிழைக்க
வேண்டும் என்று இருப்பவர்களை இந்த தண்ணீரை எடுத்து
வருவதற்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். பேராசிரியர்
அவர்கள் கேட்டார்கள், இவைகளைச் செய்கிறபோது, எல்லா
வற்றையும் நீங்கள் கோட்டையிலே வைத்து விட்டால் எப்படி
அங்கே வேலை நடக்கும் என்று சொன்னார்கள். இவைகளை
எல்லாம் செய்வதற்கு, வாகனங்களை வாங்குவதற்கு எல்லாம்
மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் கொடுக்கலாம்
என்ற செய்தியை இந்த அவையிலே சொல்லுங்கள் என்று
புரட்சித் தலைவர் சொன்னார் என்பதையும் இங்கே உங்களுக்கு
நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல பாதிக்கப்பட்ட
இடங்களுக்கு முதலிடம் கொடுத்து, தேசிய வேலை வாய்ப்புத்
திட்டம், தன்னிறைவுத் திட்டம் ஆகியவைகள் மூலமாக
வாய்ப்புகள் கொடுத்து வேலைகளைத் தீவிரப் படுத்த.வேண்டும்
என்பதற்கு இன்றைக்குக் கணிசமான அரிசி ஒதுக்க வேண்டும்
என்று, அரசு திட்டமிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். மைய அரசு 1981 ஆம் ஆண்டு, 1982 ஆம் ஆண்
டுக்குத் தேவையான அரிசி ஒதுக்கீடு வருகிற வரையிலும், அந்த
அரிசி வரும் என்று எண்ணி, வராவிட்டாலும் மேற்கொண்டு
அதற்குப் பணத்தை ஒதுக்கி, அரசு இந்தத் திட்டத்தை நிறை
வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை உங்களுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

[இரவு 8–40]

அதைப்போலவே, வறட்சிப் பகுதி அதிகமாக .இருக்கிறது.
அதன் காரணமாக அண்டை மாவட்டங்களில் இருந்து தஞ்சை
மாவட்டத்திற்கு அதிகமான மக்கள் வந்து விட்டதாகச் சொன்
னார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு வந்து விட்டால் அதுவும்
பஞ்சமாகப் போய்விடுமோ என்ற அச்சத்திலே தஞ்சை மாவட்டத்
திலும் வறட்சி இருக்கிறது என்று இங்கே சொன்னார்கள்.
அங்கேயும், சில ஒன்றியங்கள் தஞ்சாவூர் ஒன்றியம், பூதலூர்
ஒன்றியம், திருவோணம் ஒன்றியம் வறட்சியாக இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், மக்கள் கிராமம் விட்டு கிராமம் செல்கிறார்கள்.
தெருவிட்டு தெரு செல்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.
ஏழைகளாக இருப்பவர்கள், அடித்தளத்து மக்கள் அப்படிச்
செல்லக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு அரிசி கொடுத்து,
பணம் கொடுத்து, வேலை கொடுத்து. அவர்களையெல்லாம்



1981 மார்ச் 4] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அந்தந்த மாவட்டத்திலேயே பணிகளைச் செய்வதற்கு வேண்டிய
நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான்
உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வேலையையும் மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சி
ஒன்றியங்கள் மூலமாகச் செய்வார் என்று தெரிவித்துக் கொள்
கிறேன். இங்கே பேசுகிறபோது கான்ட்ராக்ட் முறை கூடாது
என்று சொன்னார்கள். நீங்களே—அரசே செய்ய வேண்டும்
என்று சொன்னார்கள். ஆகவே, ஆங்காங்கே செய்யப்பட
வேண்டிய வேலைகளை—மக்களுக்கு வேலை கொடுப்பது, அரிசி
கொடுப்பது போன்றவற்றை—மாவட்ட ஆட்சித் தலைவர் மூல
மாகவும், அங்கேயிருக்கும் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவும்
செய்யப்படும் என்கிற விவரத்தை நான் உங்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

பேராசிரியர் அவர்கள் இங்கே "டீ சென்டி
ரலைசேஷன் ஆப் பவர்ஸ்" வேண்டும் என்று சொன்னார்கள்.
பவரை மட்டும் "டீ சென்டிரலைஸ்" செய்தால் போதாது என்றும்
சொன்னார்கள். அதை ஏற்றுக் கொண்டு சொல்லிக் கொள்
கிறேன். அதைப் பரவலாக்குகின்ற முறையில், இன்றைக்கு
மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் கொடுத்து இருக்கி
றோம். எந்தெந்த மாவட்டங்களில் வறட்சி இருக்கிறது, எத்
தனை கிராமங்களில் அந்த நிலை இருக்கிறது, எந்தெந்த அதிகாரி
கள் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும், மேற்பார்வையிட
வேண்டும் என்கிற நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்கள் மேற்கொள்ளலாம். அப்படி அதிகாரிகளை நியமிக்கிற
போது அந்தப் பணிகளையும் பிரித்துக் கொடுக்கலாம். மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்கள் அதிகாரிகளை நியமிக்கிறபோது—
ஆர்.டி.ஓ. (கோட்டாட்சித் தலைவர்) அல்லது கோட்ட வளர்ச்சி
அதிகாரி, அல்லது மாவட்ட வளர்ச்சி அதிகாரி என்பவர்களை
நியமித்து, அவர்களுக்குச் சில கிராமங்கள், அல்லது சில பகுதிகள்
என்று பிரித்துக் கொடுத்து, அவர்கள் அந்தப் பணிகளை மேற்
பார்வை செய்ய வேண்டும். அப்படி அவர்கள் மேற்பார்வை
செய்கிறபோது அந்தப் பகுதியில் எந்த வேலைகள் நடந்தாலும்,
எந்தத் துறை வேலை நடந்தாலும் அவர்கள் அதை சூப்பர்வைஸ்
செய்யலாம், மேற்பார்வை செய்யலாம் என்பதை உங்களுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகளையெல்லாம் சொல்லிக் கொண்டு வந்து விட்டீர்
களே, காரியங்கள் ஒழுங்காக நடக்குமா என்று எண்ணுவீர்கள்.
இன்றைக்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.
அவர்கள் செய்ய வேண்டிய அல்லது கவனிக்க வேண்டிய இடங்
கள் பரவலாக இல்லாமல், பகுதிகள் குறைவாகக் கொடுக்கப்
பட்டு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அந்தப்
பகுதியை மட்டும் அவர்கள் கவனித்தால் போதும். இது
போதாது என்று நீங்கள் நிச்சயமாகச் சொல்வீர்கள். அந்த

வேலை சரியாக நடக்கிறதா என்று பார்ப்பதற்கும் நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைக்கிறபோது ஆர்.டி.ஓ., பி.டி.ஓ., அல்லது டி.ஆர்.ஓ. அவர்கள் எந்தப் பகுதியில் பணிகளை கவனித்து வருகிறார்களோ அந்தப் பகுதிகளில் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கவும், எந்தெந்த வேலைகள் அந்தப் பகுதிகளுக்குத் தேவையான வேலைகள், அந்த வேலைகளை எப்படிச் செய்ய வேண்டும், அதைக் காண்ட்ராக்ட் முறையில் செய்யக் கூடாது, வேலைக்கு உணவுத் திட்டத்தின் மூலம் அவைகளைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம், ஆலோசனை சொல்லவும், நீங்கள் எல்லாம் சேர்ந்து அதைச் செய்ய வேண்டும் என்பதற்காக மக்கள் குழு அமைக்கப்படும் என்கிற செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மக்கள் குழுவை அமைப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் வறட்சிப் பணிகளை செய்கிறபோது மக்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும், வறட்சியால் ஏற்படும் பிரச்சினைகளையும் கருத்தில் எடுத்துக் கொண்டு, அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கு வேண்டிய பரிகாரத்தைத் தேட வேண்டும், அத்தகையப் பணிகளில் அவர்கள் ஈடுபடுவார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

அது மட்டும் போதாது. ஆர்.டி.ஓ., டி.ஆர்.ஓ., டி.டி.ஓ. மேற்பார்வையிலே ஒரு குழு இருந்தாலும் அது தவிர, மாவட்ட அளவிலேயும் ஒன்று அமைக்கப்படும். அந்தக் குழுவும் இந்தப் பணியிலே ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலிலேயே தெரிவித்ததைப்போல எதைச் செய்தாலும், செய்கிறபோது ஒப்பந்தக்காரர்கள் இல்லாமல் அங்கே இருக்கிற மக்களைக் கொண்டு அவை செய்யப்படும். மக்களைக் கொண்டு செய்ய முடியாத பெரிய வேலைகளாக இருந்தால் அரசு ''தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்'' என்ற ஒரு அமைப்பை அமைத்திருக்கிறது ; அதன் மூலம் அவைகளைச் செய்வோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசும்போது, இங்கே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கை குறைபட்ட அறிக்கை என்று சொன்னார்கள். இந்த அரசு 4½ கோடி, 5 கோடி கொடுக்கிறது என்று சொன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர் பணம் வேண்டுமென்று கேட்டவுடனே கொடுப்பதில்லை, பாங்கிலே சென்று செக்கைக் கொடுத்து பணம் வாங்குவதைப்போன்றது அல்ல இது. அறிக்கையை மாவட்டத்தில் இருந்து அனுப்பும்போது பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக் கொண்டு, அதிலே எத்தனை கிராமம் இருக்கிறது, எவ்வளவு தண்ணீர் இருக்கிறது, எவ்வளவு தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறார்கள் என்பதை எல்லாம் அறிந்துதான் அறிக்கை தந்து, இன்றைக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.



நான் சுருக்கமாக அறிக்கை வைத்திருப்பதற்குக் காரணம்' எல்லோரும் அதைப் படித்துவிட்டு, பேச வேண்டும் என்பதற்காகத்தான். நம்முடைய பேராசிரியர் 100 பக்கம் அல்ல 200 பக்கம் இருந்தாலும் உடனே படித்துவிடுவார். ஆனால், எல்லோராலும் அப்படிப் படித்து அறிந்துகொள்ள முடியாது. படிக்காமலே வந்து பேசிவிடுவார்களோ என்ற பயத்தில்தான் சுருக்கமாக அறிக்கை வைத்திருக்கிறேன். இங்கே ஒரு சிறு தகவலைச் சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று முதலிலே கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டமன்றத்திலே வருவாய்த்துறையின் சார்பாக 5, 6 சட்ட முன்வடிவுகளை அறிமுகப்படுத்தி, அவை மீது உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லும்போது முதல் மசோதாவுக்கு சொல்ல வேண்டிய கருத்துக்களுக்குப் பதிலாக 4-ஆவது அல்லது 5 ஆவது மசோதாவிலே சொல்லவேண்டிய கருத்துக்களைச் சொல்லுகின்ற சந்தர்ப்பங்கள் எல்லாம் வந்தன. 4 அல்லது 5 மசோதாக்களை ஒன்றாக வைத்து விவாதிக்கும்போதே இந்த குழப்ப நிலை ஏற்படும்போது 100 அல்லது 200 பக்கங்களில் அறிக்கை வைத்தால் எவ்வளவு சிரமப்படுவார்கள் என்பது நமக்குத் தெரியும். 200 பக்கங்களுக்கு மேல் அச்சடிப்பதற்குள்ள விவரங்கள் இருக்கின்றன. அதிகாரிகள் அச்சடித்துக் கொடுப்பதிலும் சங்கடம் ஏதும் இல்லை. சொன்னால் அச்சடித்துக் கொடுத்துவிடுவார்கள்.

மாவட்ட வாரியாக என்னிடத்திலே விவரங்கள், கணக்குகள் இருக்கின்றன ஓவர்ஹெட் டாங்க் எத்தனை இருக்கிறது எங்கெங்கே எவ்வளவு நீளத்திற்கு பைப்பு போடப்பட்டிருக்கிறது, ஹாண்ட் பம்பு எவ்வளவு இருக்கிறது, அரிசன மக்கள் வாழும் பகுதி எத்தனை இருக்கிறது, ஜாதி இந்துக்கள் வாழும் பகுதி எத்தனை இருக்கிறது என்ற கணக்கு எல்லாம் இருக்கிறது. இந்த கணக்கை எல்லாம் சொல்லி, 200 பக்கத்திற்கு அறிக்கை வைத்திருந்தால் இந்த விவாதத்திலே இத்தனை பேர் கலந்துகொண்டிருக்க முடியாது என்று கருதுகிறேன். இன்றைக்கு அதை எல்லாம் கருதிப்பார்த்துத்தான் சுருக்கமாக அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதனால், அதை எல்லோரும் படித்துவிட்டு, இந்த விவாதத்திலே 75 மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துரைகளைச் சொல்லி இருக்கிறார்கள். அதிகமாக பக்கங்கள் இருந்தால் இத்தனை பேர்கள் பேசியிருக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இங்கே சொன்னார்கள். மத்திய அரசிடம் எதையும் கேட்கவில்லை என்று சொன்னார்கள். அது தவறு. மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். சில தினங்களுக்கு முன்னால் இங்கே இருக்கிற ''ரிக்ஸ்'' போதாது, 50 கூடுதலாக அனுப்பித் தாருங்கள் என்று கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அதன் பிறகு இன்னும் 100 வேண்டுமென்று கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு இன்னும் பதில் வரவில்லை.

கடிதங்கள் எழுதினால் மட்டும் போதுமா என்றால் போதாது. அதிகாரிகளை அனுப்பி, அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்க இருக்கிறோம்.

இங்கே சொல்லுகிறபோது, மாநில அரசு மத்திய அரசிடம் எதையும் கேட்கவில்லை என்று சொன்னவர்களுக்கு சொல்கிறேன். இங்கே வறட்சிக்கு நிவாரணமாக மத்திய அரசிடம் எவ்வளவு அதிகமாக கேட்க வேண்டுமோ அந்த அளவுக்கு கேட்க வேண்டுமென்று கேட்க இருக்கிறோம். அதற்கு வேண்டிய கணக்குகளை எல்லாம் எடுத்து, வேண்டிய விவரங்களையெல்லாம் சேகரித்து கொடுக்க இருக்கிறோம் என்ற செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், மத்திய அரசிடம் பணம் கேட்டு, அவர்கள் கொடுத்த பிறகுதான் வேலையை ஆரம்பிப்பது என்றிருந்தால் பாதிப்பு அதிகமாகிவிடும். 1981–82 ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு எவ்வளவு அரிசி கொடுக்கிறது என்று பார்க்காமல் அரிசியைக் கொடுப்பதற்கு, பணத்தைக் கொடுப்பதற்கு இந்த அரசு திட்டமிட்டு நடவடிக்கை எடுத்ததைப்போல, மத்திய அரசு வந்து பார்த்து இவ்வளவு பணம்தான் கொடுப்போம் என்று சொல்வதற்கு முன்னால் நம்முடைய அரசு இந்தப் பணத்தைக் கொடுத்திருக்கிறது.

[இரவு 8–50]

நான் முதலிலே சொன்னபடி இது முதல் முறைதானே தவிர இதுவே கடைசி முறையல்ல. மேலும் தொடர்ந்து கொடுப்பதற்கு முயற்சிகள் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் சொல்லுகின்ற நேரத்தில் நான் உங்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் எல்லாம் என்னென்ன கேட்டீர்களோ அவை அத்தனையையும் கவனித்து ஆவன செய்கிறேன். குழுக்கள் வேண்டுமென்று கேட்டீர்கள் குழுக்கள் போடப்பட இருக்கின்றது. அந்தக் குழுக்களில் அதிகாரிகள் மட்டும் இருக்கக்கூடாது, எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. அதன்படியும் போடப்பட இருக்கின்றது. ஆங்காங்கே இருக்கின்ற அதிகாரிகள் ஆங்காங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் குழுவிலே சேர்த்துக்கொள்வார்கள். இவை எல்லாம் ஏற்படுத்தப்பட்டதற்குப் பிறகு மக்களுடைய தேவையை அறிந்து நீங்கள் எல்லோரும் திறமையாக எனக்கு ஒத்துழைத்து இம்முயற்சி வெற்றிகரமாக நடப்பதற்கு உதவ வேண்டும். ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன் வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று,, நாளை (5–3–1981) காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8–51 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது



## (9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

214. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

215. தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் 1978 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

216. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

217. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

218. அண்ணா பொறியியல் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

58. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1981).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

**வியாழக்கிழமை, 1981 மார்ச் 5.**

**மாசி 22, ரௌத்ரி 2012 திருவள்ளுவர்**

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்து ளெல்லாம் உளன்.''*

*ஒருவன் தன் உள்ளம் அறிய பொய் இல்லாமல் நடப்பானே யானால், அவன் உலகத்து உள்ளவர்களின் உள்ளங்களிலெல்லாம் இருப்பவன் ஆவான்.*

### 1. வினாக்கள் விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *வினாக்கள் 376, 377 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.*

### ஆலயங்களில் திருக்கல்யாணம், திருத்தேர் நடத்தும் திட்டம்.

**வினா எண் 378*—**திரு. இரா. தாமரைக்கனி :** *மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :*

*தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்களில் பக்தர்கள் கட்டணம் கட்டினால் திருக்கல்யாணத்திலிருந்து திருத்தேர் வரையில் நடத்தலாம் என்ற திட்டத்தை உருவாக்கி ஆலயங்களில் வருமானத்தைப் பெருக்கும் திட்டம் ஏதும் உண்டா?*

[1981 மார்ச் 5

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பக்தர்கள் கட்டணம் கட்டினால் திருக்கல்யாணத்திலிருந்து திருத்தேர் வரை நடத்த லாம் என்கிற திட்டம் சில பெரிய திருக்கோயில்களில் நடை முறையில் உள்ளது. மற்ற ஆலயங்களில் இவ்வாறு செய் வதற்குத் திட்டம் ஒன்றும் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, திருக்கல்யாணத்திலிருந்து திருத்தேர் வரையில் பணத்தைக் கட்டணமாகச் செலுத்தி சாமி கும்பிடுவதற்கு சில பணக்காரர்கள்தான் அனுமதிக்கப் பெறுகின்றனர். ஏழை எளியவர்கள் அப்படி தங்கத்தைப் பூட்டி அலங்காரம் செய்து பார்க்க வழி இல்லாவிட்டாலும், தங்கத் திருத்தேரில் ஆண்டவன் பவனிவரும் காட்சியை, ஒதுங்கியிருந்து அந்தப் பணக்காரர் களுக்கு இடைஞ்சல் இல்லாமல் ஒரு ஓரத்தில் நின்று பார்ப்பதற் காவது அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு . ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, ஒதுங்கி ஓரமாக நின்று பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. நின்று நேராகப் பார்ப்பதற்கு எல்லோரும் அனுமதிக்கப்படுகிறார்கள்,

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்கள் என்ற பெயரால் குறைந்த கட்டணம் செலுத்தி கோயில்களில் * * * * * கள்ளக் கல்யாணம் செய்து கொள்கிற நிலையை மாற்றுவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * * * * என்று சொன்ன வார்த்தைகளை நீக்கிவிடும்படி உத்தரவு இடு கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தெய்வங்களுடைய திருக்கல்யா ணத்தைப்பற்றித்தான் முதலிலே இங்கே மூலக் கேள்வியாக கேட் டிருக்கிறார்கள. இருந்தாலும், தவறான முறையிலே திருமணங்கள் செய்பவர்களைப் பற்றி குறிப்பிட கள்ளத் திருமணங்கள் என்று சொல்லியிருக்கிறார் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட திரு மணங்கள் நடைபெறாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை ஆலயங்களில் மேற்கொள்ள அரசு ஏற்கெனவே ஏற்பாடு செய்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 மார்ச் 5]

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க எந்தெந்தப் பெரிய கோயில்களில் தெய்வத்திற்கு திருக்கல்யாணங்கள் நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** திருக்கல்யாணங்கள் நடத்துவதற்காக அனுமதிக்கப்பெறுகிற கோயில்கள்: (1) கருமாரி அம்மன் கோவில், திருவேற்காடு. செங்கை மாவட்டம் ; (2) சுப்பிரமணிய சுவாமி ஆலயம், திருத்தணி ; (3) மீனாட்சி சுந்த ரேஸ்வரர் ஆலயம், மதுரை.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர் களே, திருக்கல்யாணங்கள் நடத்துவதற்காக எந்தெந்த ஆலயங் களில் எவ்வளவு கட்டணங்கள் வசூலிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு. திரு ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, திருவேற்காடு கருமாரியம்மன் ஆலயத்திற்கு 551 ரூபாய்: திருத்தணி சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் கல்யாண உற்சவம் நடத்துவதற்கு 251 ரூபாய், அதை மயில் வாகனத்தில் நடத்துவதற்கு 251 ரூபாய்; மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு 501 ரூபாய் என்று கட்ட ணம் விதித்திருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களிலே திருக்கல்யாணம் நடத்து வதற்காக, தங்கத் தேர் ஓட்டுவதற்கு அரசு விதித்திருக்கும் கட்டணத்தை இன்னும் கொஞ்சம் குறைப்பார்களேயானால், அதன் மூலம் நிறைய பக்தர்கள் அந்தக் கல்யாணத்தை நடத்திப் பார்த்து புண்ணியத்தைத் தேடிக் கொள்வார்கள். அரசுக் கும் வருவாய் அதிகமாக பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்கிற முறையில் அதை அரசு பரிசீலனை செய்ய முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டணம் விதிக்கப்படுவதிலேயிருந்து பல் வேறு பகுதியினருக்குத் தொகைகள் பிரித்துக் கொடுக்க வேண்டி யிருக்கிறது. மேலும் கட்டணத்தைக் குறைத்து அதிக அளவில் நடத்துவதற்கு நேரமும் அங்கே இல்லை. அது மற்ற பணி களுக்கு இடையூறாக இருக்கும் என்ற காரணத்தால்தான் குறிப் பிட்ட அளவு தொகை நடுத்தர மக்களும் கட்டி தரிசிக்கக் கூடிய வகையில் கட்டணமாக விதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : கோவில்களிலிருந்து வருகிற வருமா ணத்தைக்கொண்டு தங்கத் தேர் செய்வதற்கும், மயில்வாகனம் செய்வது போன்ற வேலைகளை இனிமேல் செய்யாமல் தொழிற் சாலைகள் திறக்கவும், கல்லூரிகள் அமைக்கவும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ? கோவில்களில் இருக்கிற தங்கத்தை எடுத்து பெரிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மக்கள் தங்கத் தேருக்கு என்றே நிதி தருகிறார்கள். அதிலிருந்து தங்கத் தேர் செய்யப் படுகிறது. வேறுபணத்திலிருந்து தங்கத் தேர் செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. மேலும், தங்கமாகவும் தருகிறார்கள். அந்தத் தங்கத்தை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கு விதிகள் இடம் தரவில்லை. ஆகவே, அதன் மூலம் தங்கமாக இருப்பதைவிட தேராக இருந்தால் பலன் அளிக்கும் என்று தங்கத் தேர் செய்யப்படுகிறது. ஆலயப் பணத்தை எடுத்து வேறு பணிகளுக்கு அல்லது வேறு துறைகளுக்கு செலவழிப்பதில் சில தடைகள் இருக்கின்றன. காரணம் அப்படிச் செலவழித்து விட்டால் இன்னும் சில ஆண்டுகளில் ஆலயங்களும் வறண்டு போகிற சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

திரு. த. இராமசாமி : சிலர் ஆலயங்களில் தங்கள் திரு மணத்தை நடத்திக் கொள்கிறார்கள். அப்படித் திருமணம் நடக் கும் போது அந்தத் திருமணம் கோவிலில் நடந்தது என்பதற்கான அத்தாட்சி என்ற முறையில் ரசீது வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, அப்படி வழங்கப்படாமலிருப்பது தீவிர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆலயங்களில் நடை பெறும் திருமணங்களுக்கு முறையாக அங்கு கட்டணம் செலுத்தி அத்தாட்சி சான்றிதழ்கள் பெறவேண்டும் என்ற நிபந்தனை கடுமையாக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : இந்தத் தங்கம் மற்றும் நிதியை எடுத்துச் செலவு செய்வதற்குப் பதிலாக அதை முதலீடு செய்வது பலன் உள்ள காரியமாக இருக்கும் என்ற அடிப்படையில் அரசு அதைப்பற்றி ஆராயுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆலய நிதியை எடுத்து ஆலய தொடர்பற்ற முதலீடுகளில் போடுவது என்றால் அங்கே அடிப்படையில் சட்டப் பிரச்னை வந்துவிடுகிறது. மேலும், முதலீடு என்ற வார்த்தை இருந்தாலும் இடப்படுகிற முதலீடு திரும்ப வருமா வராதா என்பதற்கு நாம் எப்போ உறுதி கூற





முடியாதோ அந்தச் சூழ்நிலையில் ஆலய முதலீடுகளுக்குப் போய் வேறு நாம் அளிக்க முடியாத உறுதி முதலீட்டில் செலுத்துவது என்பது இயலாத காரியம்.

திரு. என். வரதராஜன் : கோவில்களின் வருமானத்தை மக்களுடைய சேவைக்காக உபயோகப்படுத்துவது என்பதில் குறிப்பாக சென்னை நகரை எடுத்துக் கொண்டால் ஒரு திருமண மண்டபம் வாடகைக்கு எடுக்க வேண்டுமென்றால் ரூ. 3,000, ரூ. 5,000 என்று இன்றைக்கு வாடகை கொடுக்க வேண்டியிருக் கிறது. ஆகவே, கோவில்களின் வருவாயைப் பெருக்கக்கூடிய முறையிலாவது இப்படிப்பட்ட திருமண மண்டபங்களை தமிழகம் முழுவதும் கோவில்கள் வாயிலாகக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இன்றைக்குத் திருமண மண்டபங்களின் தேவை பெரிய நகரங்களிலிருந்து சாதாரண கிராமங்கள் வரை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அது மக்களுடைய ஒரு பொதுத் தேவையாக வளர்ந்திருக்கிறது. ஆகவே திருமண மண்டபங்களை உருவாக்குவதற்கு அறநிலையத் துறை மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. அறநிலையத்துறை யினுடைய பொது நிதியிலிருந்து அப்படிப்பட்ட திருமண மண்ட பங்கள் கட்டுகிற முயற்சிகள் பரவலாக மேற்கொள்ளப்பட் டிருக்கின்றன.

திரு. தி. கா. நல்லப்பன் : கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக அமைச்சர் அவர்கள் மருதமலை கோவிலிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு நிதி வழங்குவதற்காக குறிப்பிட்டார்கள். அதேபோல் அறநிலையக் கட்டளைகளின் கீழ் தொழிற்சாலைகள் நடத்த அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கல்வி என்பது அறப்பணிகளில் ஒன்று. தொழிற்சாலைகள் நடத்துவது என் பது அறப்பணிகளுக்குள்ளே வராது.

திரு. சி. சிவப்பிரகாசம் : அதிகப்படியான வருமானம் வரக் கூடிய கோவில்களில் நலிந்திருக்கக்கூடிய கிராமங்களை தத்து எடுத்து அந்தக் கிராமங்களுக்கு உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சாதாரணமாக நலிவுற்ற கிராமங்களில் உள்ள மக்கள் இப்போது கோவில்கள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கே அற நிலையத் துறையில் நிதிவசதி இல்லை. ஆகவே தத்து எடுக்கிற பிரச்னையே எழாது.

[1981 மார்ச் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 379 மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

**பஞ்சாயத்து யூனியன்களில் ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்டம்**

* வினா எண். 380—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐ.சி.டி.எஸ். திட்டம் நமது மாநிலத்தில் எத்தனை யூனியன்களில் அமுல் நடத்தப்படுகின்றது?

(ஆ) இதற்கு மத்திய அரசின் உதவி எவ்வளவு கிடைக்கின்றது?

(இ) இந்தத் திட்டத்தை மாநிலத்திலுள்ள எல்லா யூனியன்களிலும் அமுல் நடத்த அரசிற்கு உத்தேசம் உண்டா?

(ஈ) ஆம் என்றால், எப்போது?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்டம் (ஐ.சி.டி.எஸ்.) நமது மாநிலத்தில மொத்தம் 126 பஞ்சாயத்து யூனியன்களில் அமுல் நடத்தப்பட்டுள்ளது.

(ஆ) மத்திய அரசு உதவி ஏதுமில்லை.

(இ) அவற்றிற்கான உத்தேசம் ஏதுமில்லை.

(ஈ) இக் கேள்விக்கு இடமில்லை.

**குடுமியான் மலையில் விவசாயக் கல்லூரி.**

*வினா எண். 381—**திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைப்பது சம்பந்தமாக விழா நடத்தி பணமுடிப்பு வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) தற்போது விவசாயக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் உண்டா?



1981 மார்ச் 5]

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) இல்லை.

[முற்பகல் 9-10]

**திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மக்களுடைய நீண்டகால விருப்பமான விவசாயக் கல்லூரியை அங்கே அமைக்க மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, புதிதாக விவசாயக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை. ஆனால், குடுமியான்மலையில் 96 லட்சம் ரூபாய் செலவில் பல பயிற்சிகள் அளிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

**திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயருக்கு மேலும் சிறப்பும், புகழும் சேர்க்கும் வகையில் அங்கே விவசாயக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அதைக் கருத்திலே கொண்டுதான் அங்கே பல பயிற்சிகளை அளிக்கும் திட்டம் ஆய்வில் இருக்கிறது.

**திருப்பத்தூர் நகரை அழகுபடுத்துதல்.**

* வினா எண். 382—**திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரத்திலுள்ள சாலைகளை அகலப்படுத்தி திருப்பத்தூர் நகரை அழகு படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டம் பற்றி திருப்பத்தூர் நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1981 மார்ச் 5

**திரு. ப. சுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்த திருப்பத்தூர்
சாலை சரியாக இல்லாத காரணத்தினால், அங்கே பல விபத்துக்
கள் நடைபெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அங்கு வந்திருந்த போது, மேடையிலே இதைப்பற்றிச் சொன்
னோம். ஆனால், இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து, இந்தத் திருப்பத்தூர்
நகரை அழகுப்படுத்தும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே,
நான் திருப்பத்தூருக்கு சுற்றுப்பயணம் சென்றபோது, மாண்புமிகு
உறுப்பினர் என்னுடன் வந்திருந்தார்கள். அந்த நேரத்திலே
உடனடியாக அங்கிருந்த ஆணையாளரை வைத்து, சில திட்டங்
களை நிறைவேற்றித் தரும்படி அங்கேயே உத்தரவிட்டேன்.
அதன்படி ஏறத்தாழ 7 இலட்சம் ரூபாய் செலவிலே பல்வேறு
திட்டங்கள் எடுக்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. எனவே,
திருப்பத்தூர் நகரை எவ்வளவு அழகுத் திருநகராக ஆக்க
முடியுமோ, அதற்கான திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டு
வருகின்றன.

**திரு. ப. சுந்தரம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் சொல்வது உண்மைதான். அப்படி உத்தரவிட்டும்,
அந்த வேலைகள் இன்னும் நடைபெறவில்லை என்பது அமைச்சர்
அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே,
பல்வேறு10 திட்டங்கள் என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
அந்தத் திட்டங்கள் இப்போது செயல்முறையில் இருந்து
கொண்டிருக்கிறது. முழுவதும் முடிவடைந்தபின்னர்தான்,
அதன் அளவு, அழகு தெரியும். ஆகவே, அதுவரை
மாண்புமிகு உறுப்பினர் பொறுத்திருந்து கேட்டுமாறு கேட்டுக்
கொள்கிறேன்.

### பரமக்குடி நகரசபை.

*வினா எண். 383—**திரு. செ. சிவசாமி :** மாண்புமிகு உள்
ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகரசபையை
முதல் தர நிலைக்கு உயர்த்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு
உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?



1981 மார்ச் 5]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே; பரமக்குடி மிகப் பெரிய நகரசபை. கிட்டத்தட்ட 66,000 ஜனத்தொகையைக் கொண்ட நகரசபை, அந்த நகரசபையை இது வரைக்கும் முதல் நிலை நகரசபையாக ஆக்காமல் இருப்பது அநியாயமானது. என்ன காரணத்தினாலோ.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆக்காமல் இருப்பது அநியாயமானது என்றெல்லாம் சொல்லக்கூடாது. ஆக்க முடியுமா என்று கேட்கலாம்.

**திரு. செ. சிவசாமி :** அங்கே 3, 4 மாடிக் கட்டிடங்கள் எல்லாம வளர்ந்திருக்கின்றன. அப்படியிருந்தும்கூட, மக்களுக்கு நன்மை செய்வதற்காக அந்த நகரசபையை முதல் நிலை நகரசபையாக இன்னும் ஆக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்த நகராட்சி தற்போது இரண்டாம தரமாக இருந்து வருகிறது. முதல் நிலைக்கு உயர்த்த வேண்டுமென்றால், சென்ற 3 ஆண்டுகளுக்கு அந்த நகரசபையின் வருமானம் பொதுக் கணக்கில் 10 இலட்சம் ரூபாயும், எல்லாக் கணக்குகளும் சேர்த்து 15 இலட்சம் ரூபாயாகவும் இருத்தல் வேண்டும். அது குறைவாக இருக்கின்ற காரணத்தினால், முதல் நிலையாக ஆக்க முடியாத நிலையிலே இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், நகராட்சியினுடைய நிதி நிலைமையை ஆராய்ச்சிக் குழு அரசுக்கு ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அதன் அடிப்படையிலே வருமானத்தைப் பெருக்குவதற்கு உண்டான நிலையை ஆராய்ந்து வருகிறோம். நிதி நிலை அதிகமானவுடன் அதைச் செய்யலாம்.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நான ஏற்கனவே சொன்னேன், பத்தாண்டுகளுக்கு முன்னாலே நிர்ணயிக்கப்பட்ட அந்த வருமானத்தின் அடிப்படையிலே இன்றைக்கு மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் கணக்குச் சொல்கிறார்கள். அப்படி இருந்தும் கூட 10, 15, 25 இலட்சம் வருமானம் வரவேண்டுமென்று சொல்கிறார்கள். கடந்த டி. டி. சி மீட்டிங்கில் 24 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட ஓராயிரம் அல்லது இரண்டாயிரம் தான் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே அதைப் புதிதாக நிர்ணயம் செய்தால் இது அதிகமாகக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது.

உடனடியாகக் கவனித்து முதல் நிலை நகரசபை என்று அறிவிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளை முதல் நிலை, இரண்டாம் நிலை என்றாக்குவது என்று சொன்னாலும், புதிய நகராட்சி என்று அறிவிக்க வேண்டுமென்று சொன்னாலும், மைய அரசின் மூலமாக ஒரு தடை உத்தரவு இருக்கிறது. இதற்குக் காரணம் மக்கள் தொகை கணக் கெடுப்பு நடந்துகொண்டிருக்கிற காரணத்தால் இவைகள் எல்லாம் 1981-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதி வரையிலும் செய்யக் கூடாது என்று உத்தரவு இருக்கிற காரணத்தால் இவை நிறுத்திவைக்கப்பட் டிருக்கின்றன.

**திரு. த. இராமசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பிரசித்தி பெற்ற நகரியமாக இராமேஸ்வரம் இயங்கி வருகிறது. இந்த இராமேஸ்வரம் நகரியத்தை நகரசபையாக மாற்றுவதற்கு அரசிடம் திட்டம் ஏதும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, மூலக்கேள்வி பரமக்குடி பற்றியது.

**தாராபுரம் பாசன வாய்க்காலில் கலக்கும் கழிவுப்பொருள்கள்.**

*வினா எண் 384— **திரு. கு. ரமணி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாராபுரம் நகரத்தின் மத்தியில் சென்று கொண் டிருக்கும் பாசன வாய்க்காலில் நகரத்தின் வீதிகளிலிருந்து கழிவுநீர், கழிவுப்பொருள்கள் தாராளமாகப் போய் கலந்து தண்ணீரை கெடுத்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) நகர மக்கள் அந்த வாய்க்கால் தண்ணீரை குடிக்கவும், குளிக்கவும் பயன்படுத்துவதால் தொத்து நோய்கள் பரவும் அபாயமுள்ளதை அரசு கவனித்துள்ளதா?

(இ) இவைகளைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (ஆ) தாரா புரம் நகரின மத்தியில் செலலும் வாய்க்கால் தண்ணீரை அருகிலுள்ள குடிசைவாழ் மக்கள் குடிக்கவும், குளிக்கவும் பயன் படுத்துவதில்லை. துணிகளை துவைப்பதற்கு மட்டுமே பயன் படுத்துகிறார்கள்.



(இ) நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தும்போது இக்கழிவுநீர் வாய்க்காலில் கலப்பது தவிர்க்கப்படும்.

**திரு. கு. ரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த் தப்பட்ட மக்கள் அந்த வாய்க்காலின் கரையிலே குடியிருப் பது மட்டுமல்ல. நகரத்தினுடைய நடுமையத்திலே அந்த வாய்க்கால், சென்று கொண்டிருக்கிறது. இதிலே பல வீடு களிலிருந்தும் கழிவுப்பொருள்களும், கழிவுநீரும் அத்தனையும் இந்த வாய்க்காலில் கலக்கிறது. இந்த இடத்தில் குளிப்பது கூட உண்டு; அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்த்தாலே தெரியும், குளிக்கிறார்கள் அங்கே, இப்படிப்பட்ட நிலைமையில் கழிவுப்பொருள்கள் அங்கே போய் சேராமல் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, தாராபுரம் எனக்கு புதிய இடமில்லை; என்னுடைய தொகுதிக்கு பக்கத்திலேதான் இருக்கிறது. அடிக்கடி சென்று வரக்கூடிய ஒரு இடம்: எனக்கு நன்றாகத் தெரிந்த இடமும்கூட ; ஆகவே, இந்த பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றினால் இந்த நிலைமைகள் எல்லாம் சீர்படுத்தப் படும்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாராபுரம் வாக்ய்காலில் சாக்கடை கலப்பதைத் தடுக்க சீர் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதுவரையிலும் குறைந்தபட்சம் குளிக்கவோ, தண்ணீர் எடுக்கவோ அங்கு தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போன்ற உத்தேசம் இல்லை. சுத்தமாக இருப்பது சுகம் என்பது முதியோர்கள் கூறிய பழமொழி.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடை வந்த பிறகு தாராபுரம் வாய்க்காலில் சாக்கடைகள் கலப்பது தடுத்து நிறுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கம் வேகமாக நடவடிக்கைகள் எடுத்து, சாக்கடை கலப்பதைத் தடுப்பதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி மக்களுக்கு அறிவுறுத்துவதன் மூலமாக சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்கிற அறிவுறுத்தல்கள்

[1981 மார்ச் 5

மட்டுமே இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. அதை எவ்வளவு சீக்கிரமாக சீரடையச் செய்ய வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் செய்யப்படும்.

[முற்பகல் 9-20]

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படுகிற போது இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூடிய சீக்கிரத்தில்.

செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம்.

* வினா எண். 385— திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யார் தொகுதியில் உள்ள கொருக்காத்தூர் என்ற ஊருக்கும் ஆற்காடு தொகுதியில் உள்ள வாழைப் பந்தல் என்ற ஊருக்கும் இடையே ஓடும் செய்யாற்றில் மேம்பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது துவங்கப் பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு;

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, கொருக்காத்தூர், வாழைப்பந்தலுக்கு இடையிலே உள்ள பாலத்திற்கு மதிப்பீட்டுத் தொகை சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னாலே மதிப்பிடப்பட்டு ஏதோ ஒரு காரணத்தாலே நிறுத்தப் பட்டதாக அறிகிறேன். அந்தத் தகவல் அரசாங்கத்திற்கு அல்லது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டத்திற்கு 10 லட்சம் ரூபாய் மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணி அரசின் அங்கீகாரம் பெற்ற எந்தத் திட்டதிலேயும் இடம் பெறவில்லை. வரும் ஆண்டுகளிலே மாநில அரசின சாலைகள் திட்டத்தின் கீழ் நிதிநிலைமையைப் பொறுத்து எடுத்துக் கொள்ளப்படும்.



திரு. ஏ. எம். சேதுராமன் : இந்தத் திட்டத்தின் மூலமாக எத்தனை கிராமங்களுக்கு எத்தனை பொதுமக்களுக்கு போக்கு வரத்து வசதி கிடைக்கும் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபோன்ற குறிப்புகள் என்னிடத்திலே இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, கொருக்காத்தூர் பகுதியிலே ஒன்றியங்களைச் சேர்ந்த பல கிராமங்கள் இருப்பதாலும் தலைமையிடமாக உள்ள வாழைப்பந்தலுக்கு பல அலுவல்கள் காரணமாக போகிறவர்களுக்கு பஸ் விட தடையாக இருப்பதாலும் அதற்கு தரைப்பாலமாவது கட்டுகிற நிலையை அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தரைப்பாலம் கட்டுவதைவிட மேல்மட்டப் பாலமாகக் கட்டுவதுதான் சிறந்தது. ஏனென்றால் வெள்ளக் காலங்களில் மக்கள் போகமுடியாத நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே தரைமட்டப் பாலங்களை விட மேல்மட்டப் பாலங்களைக் கட்டுவதற்கான திட்டங்களைத்தான் நாம் தீட்டுகிறோம். செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டுகிற வேலை எவ்வளவு சீக்கிரத்திலே முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

நார்த்தாம்பூண்டி ஆரம்பச் சுகாதார நிலையம்.

*வினா எண். 386— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) வட ஆற்காடு மாவட்டம் கலசபாக்கம் தொகுதியில் உள்ள நார்த்தாம்பூண்டி அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் டாக்டர் நியமனம் செய்யப் படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன?

(இ) அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(ஆ) பெண் டாக்டர் நியமனம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அவர் பணியில் சேரவில்லை.

(இ) இது கூடிய விரைவில் நிரப்பப்படும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நார்த்தாம்பூண்டி கிராமம் தாலூகா மருத்துவமனைக்கு மிகத் தொலைவிலே இருக்கிற கிராமம், போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லாத கிராமம். அந்தப் பகுதியிலே உள்ள மக்கள், குறிப்பாக தாய்மார்களுக்கு பல்வேறு நேரங்களிலே பெண் மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். இரண்டு ஆண்டு காலமாக அந்த இடத்திலே பெண் டாக்டர் போடாமல் அரசாங்கம் கவனிக்காமல் இருந்து வருகிறது. அமைச்சர் அவர்கள் உடனடியாக அதிலே கவனம் செலுத்தி விரைவாக அந்த இடத்தினை நிரப்ப நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்த ஆரம்பச் சுகாதார மருத்துவ மனையைப் பொறுத்தமட்டில் டாக்டர் டி. ஆர். கோவிந்தராஜுலு, டாக்டர் தேவிதாஸ் குலசேகர் நியமிக்கப்பட்டார்கள், The post of Medical Officer has been vacant from 14th June 1979.

அதற்குப் பிறகு 2 பேர்களை நாம் போட்டிருக்கிறோம். இரண்டு பேர்களும் போகவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ரிசர்வ் லிஸ்டிலே பற்றாக்குறை இருக்கிறது. வேறொரு கேள்வி கூட வருகிறது. நாம் தேர்வாணைக் குழு மூலமாக டாக்டர்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம், ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் வரக் கூடாது என்பதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தேர்வாணைக் குழு மூலமாக தேர்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்படும் என்று சொல்வதை விட எத்தனையோ பேர்கள் எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் டாக்டர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை கிராமங்களிலே போட்டு விட்டு, பின்னால் தேர்வாணைக் குழு மூலமாகப் போடக் கூடிய நிலைமை ஏற்கனவே இருந்தது. டாக்டர்கள் இல்லாத பல இடங்கள் இருக்கின்றன. ஆகவே அந்த முறையைக் கையாண்டு அவர்களை நியமிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படி தற்காலிகமாக மருத்துவர்களை நாம் எடுத்துக் கொண்டிருந்தோம். அப்படி எடுப்பதன் மூலமாக தேர்வாணைக் குழுவால் அது உறுதி செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்யப்படாமல் போகின்ற நேரத்தில் தற்காலிகமாக ஏற்றுக்கொண்டு அமர்த்தப்பட்டிருக்கின்ற மருத்துவர்கள் சோர்வடையக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்காலிகமாகப் போட்டு விட்டு பிறகு தேர்வாணைக் குழு அவர்களை ஊர்ஜிதப்படுத்த கட்டாயப்படுத்த வேண்டிய நிலையை எடுப்பதற்குப் பதிலாக எவ்வளவு தேவையோ அதற்கு மேல் 300 அல்லது ஏதோ ஒரு அளவிற்கு ஜாஸ்தியாக எடுத்து, இன்னும் ஒரு மாதத்திற்குள்ளே போட்டு விடுவோம். நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரவர்களால் சொல்லப்பட்ட இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் விரைவில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு அவர்கள் திருப்தி அடையும் அளவிற்கு நிலைமை வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. த. ஆறுமுகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பொறுத்த வரையில் பெரும்பாலான இடங்களில் பெண் மருத்துவ அதிகாரிகள் இல்லை ; மூன்று நான்கு ஆண்டுகளாக பெண் மருத்துவ அதிகாரி இல்லாத காரணத்தால் எப்பொழுது அந்த இடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அடுத்து ஒரு கேள்வி இருக்கிறது: அதிலே விரிவாகப் பதில் தர இருக்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு தலைவரவர்களே, கலசபாக்கம் தொகுதியில் உள்ள இந்த மருத்துவமனையில் பெண் மருத்துவர்கள் இல்லை என்பதை அமைச்சரவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இதுபோல தமிழகத்தில் பல்வேறு மருத்துவமனைகளில் ஆண் டாக்டர் இருந்தால் பெண் டாக்டர் இல்லை, பெண் டாக்டர் இருந்தால் ஆண் டாக்டர் இல்லை ; இதுபோன்ற நிலைமை பல வருடங்களாக நீடித்துக் கொண்டு வருகிறது. இது போன்ற நிலையில் ஆயிரக்கணக்கான டாக்டர்கள் படித்து விட்டு ஆறு ஏழு ஆண்டுகளாக வேலை இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலையில் அவர்களுக்கு வேலை கொடுக்கலாமே, சர்வீஸ் கமிஷன் என்பது எதற்கு ? அது இல்லாமல் கோர்ஸ் முடித்தவுடன் அப்பாயின்ட்மென்ட் போட்டு மக்களுக்கு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 மார்ச் 5

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில் முதன் முதலாக இப்பொழுதுதான் அதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சர்வீஸ் கமிஷனே தேவையில்லை, நாமாகவே நேரடியாக எடுத்து இந்தக் காலியிடங்களை நிரப்பலாம் என்று கருதுகிறார்கள். அந்தக் கருத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திற்குச் சாதகமாக இருக்கக்கூடிய கருத்தாக இருக்கும். ஆனால் கான்ஸ்டிட்யூஷனிலே சர்வீஸ் கமிஷன் என்று போடப் பட்டு, அத்தியாயம் இருந்து, பத்து பன்னிரண்டு ஷரத்துக்கள் சர்வீஸ் கமிஷனைப் பற்றிப் போட்டிருக்கிறார்கள். Cre: ture of the Constitution நாம் அதற்கு உட்பட்டுத்தான் நம்முடைய வேலைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கி றேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்பு மிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்கின்றபொழுது நியமிக்கப்பட்ட மருத்துவர் அந்தப் பணியிலே சேரவில்லை என்று சொன்னார்கள். இவ்வாறு நிய மனம் செய்து பணியில் சேராதவர்களுக்கு அரசுப் பணி கொடுப்ப தில்லை என்ற முடிவை அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படி நாங்கள் சேரவேண்டு மென்று சொல்லி சேராமல் வேறு ஏதாவது சாக்கு சொல்லிக் கொண்டிருந்தால் அப்படிப்பட்ட மருத்துவர்கள் மீது கடுமை யான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். இதை ப்ளாக் மார்க்காகக் கருதி—தேர்வாணைக்குழுவின் மூலமாகத் தேர்ந் தெடுக்கப்படுபவர்கள் இப்படிச் செய்கிறார்கள்—மீண்டும் அவர் களைப் பணியிலே அமர்த்தக்கூடிய பிரச்னை எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தேர்வாணைக் குழு பற்றி வினா எண். 388ல் வருகிறது ; அப்பொழுது அதுபற்றிய கேள்விகளைக் கேட்கலாம்.

**அரசு மருத்துவமனைகளுக்கு மக்கள் ஆலோசனைக் குழுக்கள்**

***வினா எண் 387— திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு மருத்துவமனைகளின் நிர்வாகத்தை கண்காணிக்க மக்கள் ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அக்குழுக்கள் முறையாக செயல்பட்டு வருகிறதா ?

(இ) அவற்றின் அதிகாரம் என்ன ?



1981 மார்ச் 5[

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :**

(அ), (ஆ), (இ) : ஆலோசனைக் குழுக்களுக்கான செயற் குறிப்பு மருத்துவ கல்வி இயக்குநர், மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, பல்வேறு மருத்துவமனைகளில் மருந்து களவு போகிறது ; மருத்துவர்கள் இல்லை ; இலஞ்சம் ஏராளமாக இருக்கிறது. ஆகவே, இப்படிப் பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு, விசாரிப்பதற்கு இந்த மக்கள் கண்காணிப்புக் குழுவை எல்லாத் தரப்பினரையும் கொண்டதாக அமைக்க ஏற்பாடு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முயலுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிச்சயமாக இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை எடுத்துக் கொள்ள இருக்கிறோம்.

[முற்பகல் 9-30]

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த மக்கள் கண்காணிப்புக் குழுவுக்கு என்ன, என்ன அதிகாரங்களை வழங்க அரசு முயலும் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"All these Committees are non-statutory status Committees" அதாவது, அரசாங்கத்ினுடைய அதிகாரப் பற்றற்றக் குழுக் களாக அந்தக் குழுக்கள் இயங்கும். அந்தக் குழுக்களுடைய பணிகள் என்னவென்றால்,

" (a) Surprise visits to medical institutions ,'

திடீர் சோதனை செய்து அங்கே என்ன குறைகள் இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். அடுத்தது,

" (b) bring grievances, corruption, ill-treatment of patients, non-avilability of medicines and equipments and other facilities in the hospitals to the notice of the authorities "

இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம், என்ன என்ன மருந்துகள் கிடைக்கவில்லை என்பதை எல்லாம் சொல்ல வேண்டும். பிறகு பொதுமக்களுடைய குறைகள் என்ன என்பதை இந்த மருத்துவ மனைகளில் இருக்கிற அந்த அதிகாரிகளுக்கு, யார் கண்காணிக்கிறார்களோ, சூப்பிரன்டென்டன்டுக்கோ, டீனுக்கோ, டி.எம்.ஓ.வுக்கோ அவர்கள் சொல்ல வேண்டும். பிறகு(c) to bring awareness in the public —அதே நேரத்திலே, பொதுமக்கள் மத்தியிலே, அந்த மருத்துவமனை எப்படியெல்லாம் நற்பணி

களை ஆற்றிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும். பொது மக்களுக்கும் மருத்துவமனையிலே இயங்கக்கூடிய அதிகாரிகளுக்கும் பாலமாக இருக்க வேண்டும்.

**திரு. ஆர். டி. கோபாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனைக் குழுக்கள் அமைக்க இருப்பதாகச் சொன்னார்கள். அது எத்தனை நாட்களிலே அமைக்கப்படும்? வெகு விரைவிலே அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை இப்பொழுது சொல்ல இயலாது. ஆனால், விரைவிலே அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுது, இந்த ஆலோசனைக் குழுக்களிலிருக்க வேண்டியவர்கள்—டி.எம்.இ. அவர்களிடம் இருந்தும், டி.எம்.எஸ். அவர்களிடத்திலேயிருந்தும் விரைவிலே வந்து, அதை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அங்கங்கே, லோக்கலிலே இருக்கக்கூடிய, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், எம்.பி.க்கள், அங்கே ஒன்றியத்திலே இருக்கக்கூடியவர்கள் ஆகியோர்களை எல்லாம் கலந்து ஆலோசித்து அந்தக் கமிட்டி அமைக்கப்படுமா ? அல்லது அவர்களாகவே யாராவது பெயர்களைக் கொடுத்து அந்தப் பெயர்களை எழுதி அனுப்பி விடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையார் அவர்கள் சொன்னமாதிரியாக, அந்தக் கருத்தினுடைய அடிப்படையிலேதான் இந்தக் குழுக்கள் அமைக்கப்படும்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு இதுபோல் அரசாங்க மருத்துவமனைகளிலே அட்வைசரி கமிட்டி என்ற கமிட்டி இருந்தது. அந்தக் கமிட்டி இடையிலே ரத்து செய்யப்பட்டு விட்டது. அது மீண்டும் புதிதாக அமைக்கப்படுமா ? உதாரணமாக, மன்னார்குடி மருத்துவமனையிலே தண்ணீர் இல்லை, எலெக்டிரிக் லைட் இல்லை, படுக்க பெட் இல்லை. அந்த அட்வைசரிக் கமிட்டி இருந்தால், தான் சொல்ல முடியும். அதைச் சீக்கிரம் அமைத்தால்தானே அது செயல்பட முடியும். எனவே, அதைத் துரிதமாக அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையிலே ஒரு சில மாதங்கள் ஆளுநர் ஆட்சி ஏற்பட்டது. நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்ட



உடனே இந்தக் குழுக்கள் எல்லாம் கலைக்கப்பட்டன. மன்னார்குடியைப் பொறுத்த அளவிலே, நானே நேரடியாகப் பார்த்து இருக்கிறேன். குழுக்களுடைய வேலையில் பாதியை நான் செய்து இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளின் நிர்வாகத்தை மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளே கவனித்து வருவதால் அவர்களது கவனம் முழுவதும் மருத்துவச் சிகிச்சையிலே இருப்பதால், நிர்வாகத்தைக் கவனிப்பதற்கென்றே ஒவ்வொரு அரசு மருத்துவமனையிலும் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசர் நியமிக்க அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. ஆனால், எல்லா மருத்துவமனைகளிலும் தேவையிருக்காது. ஜெனரல் ஹாஸ்பிட்டல், ஸ்டான்லி மருத்துவமனை, இப்படி பெரிய மருத்துவமனைகளில் நிச்சயமாக அங்கேயிருக்கின்ற டீனாலே எல்லாவற்றையும் செய்ய முடியாது. ஆகவே, அங்கே அட்மினிஸ்ரேட்டிவ் ஆபீசர் போடலாமா என்று அரசு யோசனை செய்து கொண்டிருக்கிறது. அதன்மீது விரைவில் ஒரு முடிவு எடுக்க இருக்கிறோம்.

**திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைக்கப்படுகின்ற குழுக்கள் ஆண்டுக்கு எத்தனை முறை கூடும் ? அப்படி கூடும் குழுக்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களை அரசுக்கு டி.எம்.இ. மூலமாகவோ அல்லது லோக்கல் டாக்டர் மூலமாகவோ அறிவிக்கக்கூடிய அந்த அதிகாரங்கள் அந்தக் குழுக்களுக்கு உண்டா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுக்கள் மாதம் ஒரு முறை கூடலாம். அவைகள் பரிந்துரையாகத்தானிருக்கும். ரெக்கமண்டேட்டரியாகத்தானிருக்குமே தவிர, மான்டேட்டரியாக, அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துகிற மாதிரி இருக்காது. ஆனால் பரிந்துரையாக வந்து பல இடங்களில் நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்திருக்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளைக் கண்காணிக்க குழுக்களை அமைப்பதைப் போல, தனியார் மருத்துவமனைகளிலும் நிறைய மிஸ்யூஸ் நடப்பதாலே, மருந்துகளுக்கு அதிகமான விலை வாங்குவதாலே, அதைக் கட்டுப்படுத்த ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு அரிய யோசனை. அது கொள்கை அளவில் நாம் முடிவெடுக்க வேண்டிய யோசனை. தனியார் மருத்துவ மனைகளை நாம் எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தலாம் என்பது. கேள்வி நேரத்திலே நாம் கொள்கையைப் பற்றி விவாதிக்கக் கூடாது என்பது நம்முடைய விதி முறைகளிலே இருக்கிற காரணத்தாலே, அதற்குப் பதில் தர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**1975 முதல் எம்.பி.பி.எஸ். படித்து முடித்த டாக்டர்கள் எண்ணிக்கை**

*வினா எண். 388—திரு. சு. பாலன், திரு. து. புருஷோத்தமன், திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) 1975 ஆம் ஆண்டு முதல் 29—10—1980 வரையில் எம்.பி.பி.எஸ்., படித்து முடித்துள்ள டாக்டர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு பெற்று வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) 5.942,

(ஆ) ஒருவரும் இல்லை.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கேள்வியின் போது, பல உறுப்பினர்கள் பல்வேறு மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் தேர்ச்சி பெற்றவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறபோது, மருத்துவமனைகளில் டாக்டர்கள் இல்லை என்று சொல்வதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்கள் யாரையும் நாம் பணியில் அமர்த்தாமல் இல்லை. அவர்களுக்கெல்லாம் பணி கொடுத்திருக்கிறோம் என்பதைத்தான் மூலக் கேள்வியிலேயே பதில் அளித்திருக்கிறேன். ஆனால் தற்காலிகமாக மருத்துவமனையிலே டாக்டர்களை அமர்த்த வேண்டும் என்றால் டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ்—அவர்களிடத்திலே தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள், எந்த வருடம் பாஸ் செய்தார்கள்



என்ற விவரத்துடன் பெயரைக் கொடுக்க வேண்டும். அவர்கள் கொடுக்கும் தேதியில் இருந்து பிரையாரிட்டி வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் 2,881 ஆண்களும், 650 பெண்களும் சேர்ந்து மொத்தம் 3,531 பேர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 5,940 (டாக்டர்களில்) பேர்களில் மலைவாழ் மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் ? தேர்வு பெற்றவர்களுக்குக் கூட இன்னும் வேலை கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, சரியாகப் புள்ளிவிவரம் இல்லை என்றாலும் கூட, இது குறித்து ஏற்கனவே நான் மாண்புமிகு உறுப்பினருடன் பேசி இருக்கிறேன். விவாதித்து இருக்கிறேன். அப்போ் ப்பட்ட பிரச்சினை எழுகின்ற நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய மக்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிச்சயமாக இந்த முறை எல்லோருக்கும் இடம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை மாநிலத்தில் இருந்து எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற டாக்டர்கள் வெளி நாடுகளுக்கு, குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் செல்லும் போது, இங்கே அவர்கள் பெற்ற அந்தப் பட்டத்தை அங்கீகரித்து வேலை கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி என்றால் அதை மற்றவர்கள் அங்கீகாரம் செய்கின்ற அளவுக்கு படிப்பில் திருத்தத்தையோ அல்லது வேறு வகையிலே ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, இங்கே படித்துப் பட்டம் பெற்றவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அதைப் பற்றி நாம் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் அப்படிப் போகிறவர்கள் நமக்கு அன்னிய செலாவணி எல்லாம் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். அந்த விவாதத்தில் நாம் நுழையாமல் அப்படி வெளி நாடுகளுக்கு போய் பணியாற்றுகிறவர்களின் மேல் நமக்கு எந்த விதமான கன்ட்ரோலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. இராசாம்பாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்வு பெற்றுள்ள டாக்டர்கள் அங்களுக்குப் போடப்பட்ட மருத்துவமனைகளில் நியமனம் செய்யப்பட்டும் அதில் சேராமல் இருக்கிறார்கள். அதனால் நிறைய இடங்களில் மருத்துவர்கள் இல்லாமல் இருக்கிறார்கள்.

[1981 மார்ச் 5

எனவே புதிதாகப் படித்து வெளி வருகின்றவர்களை யார் யார் எந்தெந்த ஊர்களுக்குப் போய் பணிபுரியத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு எம்.பி.பி.எஸ். முடித்தவர்களைக் கூட நாம் நியமனம் செய்யலாம். இது குறித்து அரசு ஆலோசனை செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நான் கூடக் கொஞ்சம் கண்டிப்பாகத்தான் இருக்கிறேன். நண்பர்கள் கூட சங்கடப்படுகிறார்கள். நாம் ஒருவரை ஒரு இடத்திலே போடுவோமேயானால், அவர்கள் பல்வேறு வகையிலே சிபாரிசு செய்து மீண்டும் மாறுதலுக்கு வருகிறார்கள். அப்படி வருகிற நேரத்தில் நான் கொஞ்சம் கண்டிப்பாக இருக்கிறேன். தொலை நோக்கில் பார்க்கும் போது (far-sightedness) அந்த நேரத்தில் அவர்கள் விருப்பத்திற்கு நாம் பணிய முடியவில்லை என்றாலும் கூட, இன்றைக்கு நாம் கண்டிப்பாக இருந்து கொண்டு அவரவர்கள் இடத்திலே அவரவர்கள் இருக்க வேண்டும் என்ற ஆணையை அரசாங்கத்தின் மூலம் அனுப்பி இருக்கிறோம். இதனால் அரசாங்கத்திற்கும் நல்ல பெயர், மக்கள் மத்தியிலும் சுமுகமான நிலை ஏற்படும். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 9-40]

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வாணைக் கழகத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற மருத்துவர்கள் இத்தனை காலம் கிராமங்களில் கட்டாயமாக இருந்து பணியாற்ற வேண்டும் என்கிற வரைமுறையை அரசு கொண்டு வருமா ? பல மருத்துவர்கள் கிராமப்புறங்களுக்குச் செல்கிற போது அங்கேயே பணி புரிய விருப்பப்படாமல் நகரத்தை நோக்கியே வரவேண்டும் என்ற அவாவில் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்த முறையை மாற்றுவதற்கு இத்தனை ஆண்டு காலம் கட்டாயமாக கிராமப்புறத்தில் பணியாற்ற வேண்டும் என்ற உத்தரவை அரசு அறிவிக்க முனையுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டபூர்வமாக இத்தனை ஆண்டுகள் அவர்கள் அங்கே பணியாற்ற வேண்டும் என்று சொல்வதற்கு இப்போதுள்ள நம்முடைய அதிகார வரம்பிற்குள் செய்ய முடியாது. இருந்தாலும் அட்மினிஸ்ட்ரேடிவ் நடவடிக்கை மூலமாக அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். முயற்சி எடுத்து இருக்கிறோம். அது ஓரளவிற்கு வெற்றி பெற்று இருக்கிறது.



1981 மார்ச் 5]

**திரு. க. பாரமலை :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுகளில் அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு இருந்த இடங்களுக்கும் குறைவான அளவிற்கு அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆஜராகி இருந்தும், அவர்கள் முழுவதும் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டு இருந்தும், அவர்களில் பலரை தகுதி இல்லை என்று சொல்லி தேர்வு ஆணைக் குழு தேர்ந்தெடுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த இடங்களுக்கு முழுமையாக அவர்களைத் தேர்ந்தெடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழு தேர்ந்தெடுக்கும் அந்த முறையிலோ அல்லது அவர்களுடைய செயலிலோ நாம் எந்த வகையிலும் குறுக்கிட முடியாது. அந்த அதிகாரம் நமக்கு இல்லை. ஆனால், இந்த ஆண்டு அவர்களுக்கு நாம் சில கைய்ட் லைன்ஸ் கொடுத்து இருக்கிறோம். அதனால் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு பதில் அளிக்கும்போது அவ்வளவு உறுதியாகச் சொன்னேன். அவர்கள் கூடிய வரையில் அந்த கிராமப்புறங்களில் இருந்து வரும் டாக்டர்களை, குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தால், அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் எடுப்பார்கள் என்று நம்புகிறோம். அப்படி எடுக்கவில்லை என்றால், ஏன் அப்படிச் செய்யவில்லை என்று கேட்கிற அதிகாரம் நமக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்பநல அறுவைச் சிகிச்சையினால் இறந்தவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகை.

*வினா எண். 389—**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடும்பநல அறுவைச் சிகிச்சையின் விளைவாக இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பங்களுக்கு அரசு இழப்பு ஈடு கொடுக்கிறதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(ஆ) குடும்பநல அறுவை சிகிச்சையினால் உயிர் இழக்கும் நபரின் குடும்பத்திற்கு ரூ. 5,000-க்கு மேற்படாமல் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டு காலமாக அந்தக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதன் விளைவாக எத்தனை பேர் இறந்து இருக்கிறார்கள், அவர்களில் ஆண்கள் எவ்வளவு பேர், பெண்கள் எவ்வளவு பேர் என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி இறந்து போனதற்கு டாக்டரின் கவனக் குறைவா அல்லது நவீன சிகிச்சைக் கருவிகள் இல்லாத காரணமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டில் மட்டும் 112 பேருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் இந்த அறுவை சிகிச்சைச் செய்து கொண்டு உள்ளனர். இந்த 112 நபர்களுக்கு இந்தக் காரணத்தால்தான் மரணம் ஏற்பட்டது என்று சொல்வதற்கு இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களும் மற்றவர்களும் இதிலே பெரிய கவலை தெரிவிக்க வேண்டாம். அப்படிச் செய்தால் மேலும் நம்முடைய பணிகள் பாதிக்கப்பட நேரிடும். 112 பேர் என்பது சிறிய எண்ணிக்கை. அவர்களிலே ஏறத்தாழ பாதிக்கு மேல் வேறு நோய் பாதிப்பாலும் இறந்து இருக்கக் கூடும். அறுவை சிகிச்சை முடிந்த 15 நாட்களுக்குள் இறந்து போனால் தான் அந்தப் பணம் கொடுக்கப்படுகிறது. வேறு வியாதியாக இருந்தாலும் 15 நாளைக்குள் இறந்து விட்டால் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இந்த 112 பேரில் பாதிக்குமேல் வேறு காரணங்களாலும் இறந்து போய் இருக்கக் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 112 என்பது குறைவான எண்ணிக்கை என்று சொல்ல முடியாது. 112 பேர் இறந்து இருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும். குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை செய்து கொள்ள அந்தந்த பகுதி மக்களுக்கு விளக்குவதற்காக பயிற்சி அளிக்கும் திட்டம் ஆங்காங்கு நடத்தப்படுகிறது. நான் கூட சைதாப்பேட்டையில் ஒரு பயிற்சித் திட்டத்தைத் துவக்கி வைத்தேன். அங்கே பயிற்சி பெற வருகிறவர்கள் 6 குழந்தைகள், 7 குழந்தைகள் பெற்றவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பயிற்சிக்கு வருகிறவர்களுக்கு 2 குழந்தைகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்றும், கூடுமான வரையில் அந்தக் குடும்ப நலத் திட்டத்தை அமல்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும் என்றும் அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். நான் குறைவாக இருக்கிறது என்றுகூடச் சொல்லவில்லை. ஒரு நபர் இறந்துவிட்டாலும் அது வருந்தத்தக்கது; அதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஒரு நபர் என்றாலும் இழப்பு இழப்புதான்; சந்தேகம் இல்லை. ஒரு





இலட்சம் பேர் அறுவை சிகிச்சை செய்துகொண்டதில் இத்தனை பேர் பல காரணங்களினால் இறந்துவிட்டார்கள் என்ற புள்ளி விவரத்தைச் சொன்னேன். We cannot afford to lose a single person இது அரசாங்கத்தின் திட்டமிட்ட கொள்கை. நான் ஏற்கெனவே 15 நாட்களுக்குள் இறந்துவிட்டால் பணம் வழங்கப்படுவதாகச் சொன்னேன். அப்படியல்ல. ஒரு மாதத்திற்குள் இறந்துவிட்டால் அந்தப் பணம் கொடுக்கப்படுகிறது. இந்த ஒரு மாதத்திற்குள் அறுவை சிகிச்சை பெற்றவர் எந்தக் காரணத்தினால் இறந்தார் என்று ஆராய்வது கஷ்டம். ஆனால் ஒருவர் கூட இறந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்; அதுதான் அரசாங்கத்தின் குறிக்கோள். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். பயிற்சி கொடுக்கக்கூடியவர்கள் அதற்குத் தகுதி பெற்றவர்களாக, விவரம் தெரிந்தவர்களாக, பொருத்தமுடையவர்களாகப் பார்த்து இனிமேல் போடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதே அப்படித்தான் சொல்லியிருக்கிறோம். சிலருக்கு கஷ்டமாகக் கூட இருக்கிறது. 6 குழந்தைகளை வைத்துக்கொண்டு அவர்கள் பயிற்சி அளிக்கும் போது கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும் சிலர் தன்னுடைய கஷ்டத்தை எடுத்துச் சொல்லி, மற்றவர்களைப் புரிந்து கொள்ளச் செய்யலாம் என்று சொல்வார்கள். எல்லாவற்றையும் இனிமேல் பார்த்து செய்கிறோம்.

**திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, குடும்பநலத்திட்டத்தில் ஓராண்டில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர்களுக்கு அறுவை சிகிச்சை நடைபெற்று அதன்பிறகு 112 பேர் அறுவை சிகிச்சை செய்து ஒரு மாதத்திற்குள் இறந்திருக்கிறார்கள் என்ற செய்தி, என்னதான் விளக்கம் தருவதாக இருந்தாலும் குடும்ப நலத் திட்டத்தைத் பாதிக்கும் ஒரு செய்திதான் என்று நான் கருதுகிறேன். அப்படி இறந்து போவதற்கு அறுவை சிகிச்சை மட்டும் காரணம் அல்ல என்று சொல்வதாக இருந்தாலும் அந்த 112 பேர் இறந்தது சம்பந்தமான அறிக்கையை அந்தத் துறையிடம் பெற்று, அந்த அறிக்கை மூலம் இந்த மாமன்றமும் தமிழக மக்களும் தகுந்த விளக்கம் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, அறிக்கை தருவதைப் பொறுத்தவரையில் பிரச்சினை இல்லை. 5, 6 ஆண்டுகள் இந்த துறைக்கு அமைச்சராக இருந்த மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு இந்தப் பிரச்சினையைப்பற்றி நன்றாகத் தெரியும். கடந்த 10 ஆண்டு கால கணக்கைப் பார்த்தால், இந்த இழப்பை படிப்படியாக குறைத்துக் கொண்டு வருகிறோம் என்பது தெரியும். ஒவ்வொரு ஆண்டும் எப்படிக்

குறைத்துக் கொண்டு வருகிறோம் என்ற புள்ளிவிவரங்களைத் தர நான் தயாராக இருக்கிறேன். நான் தோராயமாக ஓராண்டில் நடைபெற்றதைச் சொன்னேன். அதைப்போல 1972, 1973, 1974 என்று ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு என்ற விவரங்கள் எல்லாவற்றையும் மானியக் கோரிக்கை வரும் போது, மாண்புமிகு முன்னாள் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கத் தருகிறேன்.

**திரு. ந. குலசேகர பாண்டியன் :** தலைவரவர்களே, குடும்ப நல அறுவை சிகிச்சையில் இறந்து போனவர்களுக்கு நஷ்டஈடு தருவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள. அதைப்போல குடும்ப நல அறுவை சிகிச்சையில் 'பெயில்யூர்' ஆகிவிட்டவர்களுக்கும், அறுவை சிகிச்சைக்குப் பின் குழந்தை பெற்றவர்களுக்கும் அரசு நஷ்டஈடு கொடுக்க முன்வருமா? ஏனென்றால் எனது தொகுதியில் அப்படி ஒரு பெண்மணி அரசிடம் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, அதுபற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, அதுபற்றி முழுமையாக விவரம் தந்தால் அதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வியை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** தலைவரவர்களே, இந்த குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொண்டவுடன் அதற்குரிய தொகையைக் கொடுத்து அனுப்புகிறார்கள். ஆகையால் அதை உடனே செலவழித்துவிடுகிறார்கள். அதை மாற்றி, அந்த உதவித் தொகையை 300 ரூபாயாக உயர்த்தி, அதை 3 மாதங்களுக்கு வாரம் 25 ரூபாயாகக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு கொடுக்கின்ற தொகை நம்முடைய மாநில அரசு கொடுப்பதல்ல. மத்திய அரசுதான் கொடுத்துக்கொண்டிருக்கின்றது. அவர்கள் எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான சில விதிகளைத்தான் வகுத்திருக்கிறார்கள். அந்த விதிகளுக்கு உட்பட்டுத்தான் நாம செய்ய வேண்டுமே தவிர வேறு வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஜே. எஸ். இராசு :** தலைவரவர்களே, குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொண்டதன் காரணமாகத்தான் இறந்துவிட்டனர் என்று கிளியர் கட் ஆகத் தெரிந்த குடும்பத்தினருக்கு கூட மூன்றாண்டுகளாகத் தரப்படாமல் இருக்கின்ற நிலைமையை அறிந்து ஒரு ஸ்டிப்புலேடட் டைம் ஃபிக்ஸ் பண்ணி அந்த வகையிலே விரைவாகக் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, அதுபற்றித்தான் நான் ஏற்கெனவே சொன்னேனே. அறுவை சிகிச்சை காரணமாக இல்லாமல் வேறு காரணமாக இறந்திருந்தாலும் கூட அந்த அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒரு மாத காலத்திற்குள்ளாகவே இறந்து விடுகின்ற அத்தனை பேர்களுக்கும் உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்று ஆணையிட்டு அதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதிலே எந்தவிதமான டிஃபிகல்டீஸும் கிடையாது. உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

### அரசு பஸ்களில் தானாக இயங்கும் கதவுகள்.

*வினா எண். 390—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரசு பஸ்களில் தானாக இயங்கும் கதவுகள் பொருத்தும் உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 5 பேருந்துகளில் மட்டும் தானாக இயங்கும் கதவுகள் பொருத்தப்பட்டு உள்ளன. மற்ற போக்குவரத்துக் கழகங்களில் அதை உடனே பொருத்தும் நிலை தற்போது இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, 1981–82 ஆம் ஆண்டுகளில் ஜப்பானில் டிரைவர் இல்லாமலே பஸ் விடப்படுகின்றது. அதே மாதிரி நமது தமிழ்நாடு அரசாங்கமும் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா ? அடுத்து விபத்துக்கள் ஏற்பட்டுவிட்டால் அது பற்றித் தகவல் கொடுப்பதற்குக் கால தாமதம் ஏற்படுகின்றது. ஆகவே உடனடியாகத் தகவல் கொடுக்கின்ற வகையில் பேருந்துகளில் வயர்லெஸ் கருவி பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

[1981 மார்ச் 5

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்புடையதல்ல என்றாலும் மிக வும் பயனுள்ள கேள்வியாக கேட்டிருப்பதால் பதில் சொல்கிறேன். விபத்துக்கள் ஏற்படுகின்ற போது உடனடியாகத் தகவல் கொடுக்க முடியவில்லை என்பதை உணர்ந்து நமது முதல்வர் அவர்களும், இந்த அரசும் அது போன்ற வயர்லெஸ் கருவிகளைப் பொருத்து வது குறித்து ஆலோசனை செய்து அவ்வாறு பேருந்துகளில் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறோம். அடுத்து டிரைவர் இல்லாத பேருந்துகள் விடப்படுமா என்று கேட்டார்கள். அதைப் பற்றி யும் கூட நாம் ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கிறோம்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவரவர்களே, பேருந்துகளில் விபத்துக்கள் நடக்கின்றபோது அவை கதவுகள் இருக்கின்ற பக்கம் சாய்ந்து விடுகின்ற காரணத்தால் அதன் வழியாக மக்கள் வெளியே வந்து விபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடிவது இல்லை. எனவே பின்புறத்தில் எமர்ஜென்சி காலத்தில் பயணி கள் வெளியேறக் கூடிய வகையில் கதவுகளை அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, இது வரை அப்படிப்பட்ட ஒரு ஆராய்ச்சியை அரசு எடுக்கவில்லை. ஏனென்றால் அப்படிப்பட்ட கதவுகள் சாதாரணமான இடத்தில் ஓடிக் கொண்டிருக்கின்ற பேருந்துகளுக்குத் தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. மலைப் பாங்கான இடங்களில் ஓடுகின்ற பேருந்துகளுக்கு மட்டும் அத்தகைய கதவுகள் தேவை என்று கருதப்படுகின்றது. மற்ற இடங்களில் ஓடுகின்ற பேருந்து களுக்கும் அப்படிப்பட்ட கதவுகள் தேவை என்று கருதினால் அதை நடைமுறைப்படுத்த அரசு முன்வரும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, சென்னை பொருட்காட்சியில் 100, 150 பேர் உட்காருகிற வகையில் ஒரு பேருந்தை போக்குவரத்துக் கழகம் அமைத்திருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். அந்தப் பேருந்தில் கண்டக்டர் இல்லாமல் இயந்திரமே காசு வாங்குகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்யப் படுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, முத லிலே அந்த பேருந்துகளை நாம் நடைமுறைக்குக் கொண்டுவந்து விட்ட பிறகு அதைக் கண்டக்டர் இல்லாமல் ஓட்டுவதா, டிரைவர் இல்லாமல் ஓட்டுவதா என்பதைப் பற்றி முடிவு எடுக்கலாம்.



1981 மார்ச் 5]

### ஆத்தூர் நகரில் மண்டல போக்குவரத்து அலுவலகம்.

* வினா எண். 391 — **திரு. சி. பழனிமுத்து :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரில் மண்டலப் போக்கு வரத்து அலுவலகம் அமைக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. சி. பழனிமுத்து :** தலைவரவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரில் மண்டல போக்குவரத்து அலுவலகம் அமைக்க வில்லை என்றாலும், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலையம் ஒன்றையாவது ஏற்படுத்த வேண்டும். மோட்டார் வாகன ஆய் வாளர் நிலையம் ஆத்தூரிலிருந்து 50 மைல் தொலைவில் உள்ள ராசிபுரத்தில் இருக்கின்றது. ஆகவே அவ்வளவு தூரம் செல் வதைத் தவிர்க்கின்ற வகையில் ஆத்தூரிலேயே ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வாகனங்களின் எண்ணிக்கை இருந்தால் தான் அதாவது 500 வாகனங்களாவது இருந்தால் தான் அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட அலுவலகம் ஏற்படுத்தப்படும். ஆனால் அந்தப் பகுதியிலே ஓடிக் கொண்டிருக் கின்றன 321 வாகனங்கள் தான். அங்கே போதிய எண்ணிக்கையை எட்டிப்பிடிக்கின்ற போது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. பழனிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இல்லையென்றால், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை வாரத்திற்கு இருமுறை ஆத்தூர் நகரத் திற்கு வரச் செய்து, அவைகளை பரிசீலனை செய்து, அந்த வாகனங்களுக்கு அனுமதி அளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலர்களோ, அலுவலகங்களோ அங்கே வருவ தற்கு பதில், வாகனங்கள் இங்கே போவது மிகவும் சௌகரியமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

[1981 மார்ச் 5

## கைத்தறி நெசவாளர்களுக்கு பாலியஸ்டர் நூல்.

* வினா எண் 392—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கைத்தறி-கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு பாலியஸ்டர் நூல் கொடுத்து வந்தது நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலியஸ்டர் ரக நூல்கள் நெய்வதற்கு எத்தனை தறிகள அரசின் சார்பில் உள்ளது ? அதை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ? ஆம் எனில் என்னுடைய தொகுதியான சேந்தமங்கலத்தில் புதிய பாலியஸ்டர் ரக துணிகளை நெய்வதற் கான புதிய தறிகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978–79 ஆம் ஆண்டில் ஆயிரம் தறிகள் பாலியஸ்டர் ரகத் துணிகளை உற்பத்தி செய்ய ஆரம்பிக் கப்பட்டது. அவைகள் பிரதானமான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஆங்காங்கே விநியோகிக்கப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில் 2,000 தறிகள் நிறுவப் பெற்று, அவைகளின் உற்பத்தியும் அதிகமாகி இதனால், பாலியஸ்டர் ரகத் துணிகளில் தேக்கமும் ஏற்பட்டதன் காரணமாக, அவைகளை 800 தறிகளாகக் குறைத்து, எஞ்சியுள்ள தறிகள் மற்ற ரக நூல்கள் நெய்வதற்காக வகைவாரியாகப் பிரித்து, நூல்கள், பட்டு நூல்கள் போன்றவை நெய்ய வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி பாலியஸ்டர் ரக துணிகளுக்கு இங்கே விற்பனைக் கூடம் உளளது போல, வெளிநாட்டு மக்கள் அதிக மாக விரும்பக் கூடிய இந்தப் பாலியஸ்டர் ரக துணிகளையும், மற்ற துணிகளையும் விற்பனை செய்ய வெளிநாடுகளில் ஏதாவது விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



1981 மார்ச் 5]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாலியஸ்டர் ரக துணிகளுக்கு தீபாவளி யிலிருந்து 20 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி செய்யப் பெற்றது. கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவிற்கு, 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7 ஆம் நாளிலிருந்து 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ஆம் நாள்வரை விற்பனையாகி இருக்கிறது, நம் கைத்தறி ரகங்களுக்கு தமிழ்நாட்டில் மட்டுமல்லாது வட மாநிலங்களிலும் கூட வரவேற்பு அதிகமாக இருக்கிறது. அது மட்டும் அல்லாது வெளிநாட்டினர் இந்த ரகங்களை அதிகமாக விரும்புகின்ற காரணத்தினால் இன்னும் 10,11 நாட்களில் சிங்கப் பூரிலே ஒரு விற்பனைக் கூடம் திறக்க இருக்கிறோம். அதோடு மட்டுமல்ல, திறந்த பின்னாலே கீழ் தேச நாடுகளில் எல்லாம் கைத்தறித் துணிகளுககு அதிகமாக வரவேற்பு—ஏற்படக்கூடிய சூழநிலையை உருவாக்குவதற்கு ஒரு குழு ஒன்றை அமைத்து அது சுற்றுப்பயணம் செல்லவிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு கொடுத்து வந்த பாலி யஸ்டர் நூல் நிறுத்தப்பட்டுள்ளதா என்று கேட்டதற்கு அமைச் சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலேயே அந்த ரக நூல் கொடுப்பது நிறுத்தப்பட்டு, நெசவாளிகள் வேலையில்லாமலிருக்கிற சூழ் நிலையைப் பற்றி நான் கூட அமைச்சர் அவர்களிடம் புகார் கொடுத்திருக்கிறேன். ஆகவே அப்படியிருப்பின் மீண்டும் அவர் களுக்கு பாலியஸ்டர் ரக நூல் தொடர்ச்சியாக கிடைப்பதற்கு வழி வகை செய்து, அத்தோடு அந்த நெசவாளர்கள் அநத தறிகளின் மீது தெங்கியிருக்கக்கூடிய கடன்களுக்கு தள்ளுபடி செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பாலியஸ்டர் ரக துணிகள் முதலில் அதிகமாக தேக்கம அடைந்துவிட்ட கார ணத்தால், அவைகளை உறபத்தி செய்யும் தறிகளின் எண்ணிக்கை யைத்தான் குறைத்திருக்கிறோமே தவிர, நூல்களைக் குறைக்க வில்லை என்று கூறிக் கொள்கிறேன். இன்னும் தேவைகள் ஏற் படுகிற நேரத்தில் தறிகளையும் கூட்டிப் போட ஏற்பாடு செய்யப் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே சின்னாளம்பட்டியிலே பட்டுரக நூல்களை தறியில் உற்பத்தி செய்து வருகிறார்கள், ஆனால் தற்போது அவர்களுக்கு அந்தப் பட்டு ரகங்களும் விற் பனையாகாமல் இருக்கின்றன. பாலியஸ்டர் ரகமும் ஒதுக்கப் பெறவில்லை. எந்த வகையிலும் அவர்களுக்கு வழி கிடைக்காது வேறு இடங்களுக்கு வேலை தேடிப்போக வேண்டிய சூழ்நிலை

ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அது குறித்து விற்பனையை அதிகரிக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாளம்பட்டியில் தயாராகின்ற ரக துணிகளுக்கும், இன்னும் சில இடங்களிலிருந்து உற்பத்தியாகி வருகிற துணிகளுக்கும் தேக்கங்கள் இல்லாவிட்டாலும், அவைகளைப் பற்றி புகார்கள் வருகின்றன. இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கைத்தறி எக்ஸ்போ ஒன்று 4 ஆம் தேதி ஆரம்பிக்க இருக்கிறோம். அதில் அதிக தள்ளுபடி செய்கிற சூழ்நிலை உருவாகவிருப்பதால், நிச்சயமாக, விற்பனை அதிகமாகி, அவர்களுக்கு குறைகளே இல்லாதபடி வகை கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

[முற்பகல் 10—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. கு. ரமணி: இந்த பாலியஸ்டர் நூல் கொடுத்து அதில் தயாரிக்கப்படுகிற துணிகளை ஜனங்கள் மிக விரும்பி வாங்கிக் கொண்டிருந்ததாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்தத் துணிக்கு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கக் கூடிய மிக மிக முக்கிய மூலப் பொருளான நூலின் விலை எக்கச்சக்கமாக ஏற்றப்பட்டதால்தான் அந்தத் துணியின் விலை ஏறி வாங்க முடியாமல் போகிறது. ஆகவே அந்த விலையைக் குறைப்பதற்கும், நூலுக்கு அதிக விலை வைத்து கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா? அதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு அதிகப்படியான பாலியஸ்டர் நூல் கொடுத்து அவர்கள் அதை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: நூலின் விலையைக் கட்டுப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதோடு பாலியஸ்டர் ரக துணி பதனிட கலால் வரியை மத்திய அரசு வசூலித்து வருகிறார்கள். அதையும் ரத்து செய்வதற்கான ஏற்பாட்டை செய்ய இந்த அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன்: பாலியஸ்டர் நூல் உற்பத்தி செய்கிற நூற்பாலைகள் தமிழ்நாட்டில் எவ்வளவு இருக்கின்றன? குறிப்பாக சைதாப்பேட்டையில் பல நெசவாளர் சங்கங்கள் பாலியஸ்டர் நூல் வேண்டுமென்று கேட்டும் கூட கொடுக்கப்படாமல் இருப்பதை அரசு ஆராயுமா?



மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: அந்தக் குறிப்பு என்னிடம் இல்லை. ஆகவே தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பாலியஸ்டர் நூல் கொடுக்கப்படவில்லையென்பதோடு, தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களுக்கு நீண்ட நாட்களாக சேரவேண்டிய ரிபேட்டை இந்த பஞ்ச நேரத்திலாவது திருப்பிக் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுமா? பரமக்குடி போன்ற இடங்களில் நாற்பது லட்சம் ரூபாய்க்கு மேல் துணித் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தள்ளுபடி செய்யப்பட்ட தொகையைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கி வருகிறது இந்த அரசு. அதோடு தேக்கத்தை நீக்குவதற்காகத் தான் இந்தியாவில் உள்ள பல மாநிலங்கள் ஈடுபடுவதுபோல் பல மாநிலங்கள் ஒன்று சேர்ந்து கைத்தறி எக்ஸ்போ ஒன்று ஏப்ரல் மாத முதல் வாரத்தில் நடத்த இருக்கிறது. அதில் விசேஷ தள்ளுபடியும் இருக்கிற காரணத்தால் தேக்கத்தை ஓரளவு குறைக்கலாம் என்று இந்த அரசு எண்ணியிருக்கிறது.

## கதர் மற்றும் கைத்தறி துணிகளுக்கான தள்ளுபடி

*வினா எண் 393— திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு கைத்தறி-கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கதர் மற்றும் கைத்தறித் துணிகளுக்கு ஆண்டு முழுவதும் கணிசமான தள்ளுபடி அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: விழாக் காலங்களில் மட்டும் கதர் மற்றும் கைத்தறித் துணிகளுக்கு கணிசமான அளவு தள்ளுபடி இப்பொழுது அரசு அளித்து வருகிறது.

திரு. த. ஆறுமுகம்: விழாக் காலங்களில் மட்டும் கதர்-கைத்தறிக்கு தள்ளுபடி கொடுக்கப்படுகிறது. ஆனால், துணித் தேக்கம் அதிகமாக இருப்பதால் ஆண்டு முழுவதும் தள்ளுபடி கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: இந்த தள்ளுபடி செய்வதன் நோக்கமே நெசவாளர்களுக்கு உதவுவதற்காகத்தான், ஆனால், இவர்கள் திறமை வெளிப்பட ஆரம்பித்தவுடன் இதற்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கிறது

ள்ளுபடி செய்வது நேரடியாக நெசவாளர்களுக்குப் போய்ச் சேராத காரணத்தால் இதை படிப்படியாகக் குறைக்க வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கம். ஆகவே, தேக்கம் ஏற்படுகிறது என்றால் மட்டும் விசேஷ தள்ளுபடிகள், அல்லது விசேஷ காலங்களில் தள்ளுபடிகள் இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. இராமலிங்கம் :** கைத்தறி நெசவாளர்களுக்கு, ஸி. டி. எஃப். அமல்படுத்தப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் இப்போது கிடையாது. ஆனால், அந்தத் திட்டத்தின்கீழ் பிடிக்கப்பட்ட தொகைகள் அந்தந்த நெசவாளர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் இலட்சக்கணக்கான ரூபாய் நெசவாளர்களுக்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே, நெசவாளர்களின் தற்போதைய நிலைமையைக் கருதி உடனடியாக இந்த ஸி.டி.எ. .ப். தொகை கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியை இப்போது குடும்ப நிதியோடு இணைத்து, ஒரு குடும்பத்தின் தலைவன் இறந்துவிட்டால் 500 ரூபாய் கொடுப்பது என்று இருந்ததை மாற்றி, இப்போது 3,000 ரூபாய் கொடுப்பதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்து கொடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியைப் பொறுத்த வரையில் எந்த அரசும் செய்யாத அளவுக்கு இந்த அரசு தள்ளுபடி வழங்கி இருக்கிறது, தீபாவளி, பொங்கல் திருவிழாக்களின்போது 30 சதவீதம் தள்ளுபடி செய்து விற்பனை செய்யப்படுகிறது. அப்போது பெரும்பாலான தனியார்கள் அதை வாங்கி வைத்துக்கொண்டு, பின்னால் அதிக விலைக்கு விற்று இலாபம் அடைந்து வருகிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அதனால் பொதுமக்கள் நேரடியாக பயனடைவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை மனதிலே கொண்டுதான், தள்ளுபடிக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்பதை இந்த அரசு மனதிலே கொண்டிருக்கிறது. காரணம், நெசவாளர்களுக்கு இதனால் பலனில்லை. முதலாளிகளும், இடைத்தரகர்களும் இதிலே பலனடைகின்ற காரணத்தினால், படிப்படியாக குறைப்பதை இந்த அரசு நோக்கமாகக் கொண்டிருக்கிறது.



**திரு. இரா கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீபாவளிக்குப் பிறகு கைத்தறி உற்பத்தித் நிலையங்களிலே தேக்கம் இருந்து வருகிறது. எனவே, கைத்தறித் துணிகளை தற்சமயம் விற்பனை செய்வதற்கு இந்த அரசு விசேஷ தள்ளுபடியை அமுல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதை மனதிலே கொண்டுதான், கைத்தறி எக்ஸ்போ பொருட்காட்சிக்கு பல மாநிலங்களிலே இருந்து இங்கே வருகைதந்தால், அதற்கு 20 சதவீதம் தள்ளுபடி கொடுக்கும் சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியது. ஆகவே, கைத்தறி தேக்க சூழ்நிலை இருக்காது.

## பிச்சையெடுப்பதை தடுக்கும் சட்டம்.

*வினா எண். 394—**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை நகரில் பிச்சையெடுப்பதைத் தடுக்கும் சட்டம் நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) பிச்சையெடுப்பதைத் தடுக்கும் சட்டம் சென்னை நகரில் நடை முறையில் உள்ளது.

(ஆ) பிச்சைக்காரர்கள் காவல்துறையினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டு, பிச்சைக்காரர் விடுதிக்கு அனுப்பப்படுகின்றனர்.

**திரு. து. புருஷோத்தமன் :** அவை நாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இப்படி மரியாதையோடு கூறுவார்கள்; எனவே அப்படிச் சொல்கிறேன். தற்போது கடந்த ஓராண்டு காலமாக சென்னை நகரிலே பிச்சைக்காரர்கள் நடமாட்டம் அதிகமாகி இருக்கிறது. குறிப்பாக தொழுநோயால் அதிகமாக பாதிக்கப்பட்டு, அந்தப் பிச்சைக்காரர்கள் நடமாட்டம் சென்னை நகரிலே அதிகமாகி இருக்கிறது. ஆகவே, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டதே, அதை மூடிவிடாமல் நடத்துகிறார்களா? மேலும், பல பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் திறக்க

முன்வருவார்களா ? அதைப்போல், தொழுநோய்காரர்களுக்கு
மறு வாழ்வு அளிக்க, அவர்களுக்கு மறுவாழ்வு இல்லங்கள் திறக்
கும் திட்டம் அரசிடம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேர
மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சென்ற ஆண்டில் எத்தனை பிச்சைக்காரர்கள் பிடிக்கப்பட்டார்
கள் என்று கேட்டார்கள். மொத்தம் 395 நபர்கள். இதிலே
ஆண்கள் 333; பெண்கள் 65. தவிர, சென்னை நகரிலே அரசு
சார்பில் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு நடத்
தப்படுகின்றதா என்று கேட்டார்கள். சென்னை நகரிலே அரசு
சார்பில் பிச்சைக்காரர்கள் விடுதி நடத்தப்பட வில்லை. தயா
சதன் என்ற தனியார் நிறுவனத்தால் நடத்தப்படுகிறது.
செங்கை மாவட்டத்தில் பிச்சைக்காரர்கள் நல விடுதி அரசின்கீழ்
நடத்தப்பட்டு வருகின்றது.

**திரு. க. இரா. சின்னராசு ;** பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, சென்ற
ஆண்டு பிச்சைக்காரர்களைப் பிடித்து, அவர்களுக்கு மறுவாழ்வு
கொடுத்ததைப்பற்றிய கணக்கைக் கொடுத்தார்கள், தமிழகத்
திலே மொத்தம் எத்தனை பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்
கள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்
களா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாடு அரசு 10 இடங்
களில் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லங்
களை அமைத்துள்ளன. அதைக்கூட இங்கே கூற விரும்புகிறேன்.

| மாவட்டம். (1) | ஊர். (2) |
|---|---|
| செங்கற்பட்டு | பரனூர். |
| தென் ஆற்காடு | உளுந்தூர்ப்பேட்டை. |
| தருமபுரி | பர்கூர். |
| புதுக்கோட்டை | புதுக்கோட்டை. |
| பெரியார் | விண்ணப்பள்ளி. |
| தஞ்சாவூர் | மனையேறிப்பட்டி. |
| மதுரை | புதுப்பட்டி. |
| வட ஆற்காடு | மல்லவாடி. |
| தருமபுரி | செல்லியம்பட்டி. |
| சேலம் | தேவியாக்குறிச்சி. |

மொத்தம் 10 இடங்களில் தமிழக அரசு தொழுநோய் பிச்சைக்
காரர்களுக்கான இல்லங்களை நடத்தி வருகிறது.



[முற்பகல் 10—10]

**டாக்டர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, பத்து இடங்களில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் இல்லங்கள் நடைபெற்று வருகின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டபோது அதிலே சேர்க்கப்பட்டிருந்த தொழுநோய் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை எவ்வளவு ? இப்போதுள்ள எண்ணிக்கை எவ்வளவு ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, அந்த பத்து இடங்களிலுள்ள எண்ணிக்கை என்னிடம் இல்லை. சென்னை நகரில் கடந்த பத்து ஆண்டுகளில் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டு இல்லங்களில் அனுப்பப்பட்ட பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை என்னிடத்தில் இருக்கிறது.

| ஆண்டு. (1) | ஆண்கள். (2) | பெண்கள். (3) |
|---|---|---|
| 1970 | 152 | 52 |
| 1971 | 381 | 43 |
| 1972 | 302 | 91 |
| 1980—81 | 333 | 62 |

1980—81 ஆம் ஆண்டு மொத்தம் 395 நபர்கள்.

## நடமாடும் செயற்கைமுறை உள்ளீட்டுப் பணி

*வினா எண். 395— **திரு. கா. கோபாலகிருஷ்ணன்:** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொடைக்கானல் தாலுக்காவில் நடமாடும் Artificial input Service நடந்து வந்தது ஏன் நிறுத்தப்பட்டது ?

(ஆ) மீண்டும் தொடரப்படுமா ?

(இ) எப்பொழுது தொடரப்படும் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) கொடைக்கானல் தாலுகாவில் நடமாடும் Artificial input Service நிறுத்தப்படவில்லை. இந்த நடமாடும் ஊர்தி சம்பந்தப்பட்ட விரிவாக்க கால்நடை உதவி மருத்துவர் பதவி காலியாக இருப்பதால், கொடைக்கானல் கேந்திர கிராம நிலைய கால்நடை உதவி

மருத்துவர் இப்பணியினை செயல்படுத்தி வந்தார். இந்த நட மாடும் ஊர்திக்கு தனி விரிவாக்க கால்நடை உதவி மருத்துவர் நியமனம் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. டாக்டர் இளங்கோவன் என்பவர் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாள் அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஆ) மேற்கண்ட சூழ்நிலையில் நடமாடும் ஊர்தி செயல் பட்டு வருவதால் இப்பணி மீண்டும் தொடரப்படுமா என்ற நிலை எழவில்லை.

(இ) கேந்திர கிராம கால்நடை உதவி மருத்துவர் கூடுதல் பணி புரிந்தாலும் இப்பணி சிறப்பாக நடைபெற தக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கென தனியே தற்போது டாக்டர் நியமனம் செய்யப்பட்டுள்ளதால் இப்பணி இன்னும் சிறப்பாக நடைபெறும்.

வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம்.

*குறுகியகால வினா எண். 8—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசு வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் உடனடியாக அமுல் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்றால் வருகின்ற நகராட்சி, பஞ்சாயத்து தேர்தல்களில் அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை அரசு அமுல் நடத்துமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : இத்திட்டத்தை உள்ளாட்சித் தேர்தல்களில் உடனடியாக பின்பற்றும் உத்தேசம் இல்லை.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களுக்கு, வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்க இந்திய தேர்தல் குழு தமிழக தேர்தல் அதிகாரியை கேட்டுள்ளதா ? கேட்டிருந்தால் இந்தப் பணி எந்த ஆண்டுக்குள் முடிவடைய வேண்டுமென்று கேட்கப் பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல்களுக்கு எல்லா வாக்காளர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்க வேண்டுமென்று இந்திய தேர்தல்குழு, தமிழக தேர்தல் அதிகாரியை கேட்டுள்ளது.

இது இந்த ஆண்டிலே துவங்கி, வருகின்ற 1984 ஆம் ஆண்டிலே முடிவடையும்.



திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அடையாள அட்டைகள் வழங்குவதற்காக மத்திய அரசு விஜிலன்ஸ் கமிஷன் ஒன்று நியமித்து இருந்ததே, அதனுடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்த அடையாள அட்டைகள் எவ்வாறு தயாரித்து வழங்குவது என்பது குறித்து ஒரு கண்காணிப்புக் குழு விஜிலன்ஸ் கமிஷன் நியமிக்கப்பட்டது, அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளது. அது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல் நடைபெறும் என்று சொல்லி பல்வேறு கட்டங்களிலே அவைகள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இந்திய அரசாங்கம் ஜனத் தொகை கணக்கு எடுக்கிற காரணத்தினாலே தேர்தல் நடை பெறுவதற்குத் தடை விதித்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜனத் தொகை கணக்கெடுப்பு இந்த மாதத்திலே நிறைவேற்றப்பட்டு விடும். ஆகவே இனியாவது நகராட்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தலை இந்த அரசு எப்போது நடத்துவார்கள் என்பதை திட்டவட்டமாக இப்பேரவையின் மூலமாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி அடையாள அட்டையைப் பொறுத்தது; ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்தலைப் பற்றிக் கேட்கிற காரணத்தினாலே உங்களுடைய அனுமதியோடு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே தமிழகத்திலே உள்ளாட்சி, நகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று தான் இந்த அரசு 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலே எடுத்துச் சொன்னது. ஆனால் பிப்ரவரி மாதத்திலே யாரும் எதிர்பாராத வண்ணம் இந்த அரசை கலைத்து விட்டார்கள். அதற்குப் பின்பு தேர்தலை நடத்த வேண்டுமென்று இந்த அரசு விரும்பினாலும் கூட மத்திய அரசிடமிருந்து 1981 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் வரையில் தேர்தல்கள் நடத்தக் கூடாது என்ற கருத்துக்கள் அடங்கிய கடிதங்கள் பல வந்துக் கொண்டிருக்கின்றன. 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 31 ஆம் நாள் வரையில் புதிய நகராட்சிகள், உள்ளாட்சி மன்றங்கள் சேர்க்கக் கூடாது என்றும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஜனத் தொகை கணக்கெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது, இந்தக் காரணங்களால்தான் தள்ளிப் போடப்பட்டு வருகின்றன. இந்த அரசுக்கு வேண்டுமென்றே நகராட்சி உள்ளாட்சி மன்றங்கள் தேர்தலைத் தள்ளிப் போட வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 மார்ச் 5

திரு. கோவைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, வரும் உள்ளாட்சித் தேர்தலில் அடையாள அட்டைகள் பயன்படுத்தப் போவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதிதாக வாக்களிக்கும் முறையைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார். அது பொருட்காட்சியிலே கூட வைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையைத் தமிழ் நாட்டிலே பயன்படுத்துவதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இயந்திரத்தின் மூலமாக வாக்களிக்கின்ற முறையை திரு. ஹனீபா என்பவர் கண்டு பிடித்திருக்கிறார், அதைப் பொருட்காட்சியிலே ஸ்டாலிலே வைத்திருக்கிறார். இவைகளை எல்லாம் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

### (2) உரிமைப் பிரச்சினைகள்

#### (அ) பேரவை உறுப்பினரைக் காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லப் பெறுவது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் 1981-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ஆம் நாள் பேரவையில் எழுப்பிய உரிமைப் பிரச்சினை மீது எனது தீர்ப்பை வழங்குகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் ஜனவரி திங்கள் 24-ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 246-ன் கீழ், கீழ்கண்ட உரிமைப் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்தார்கள். அறிவிப்பில் தெரிவித்துள்ள தகவல்களுக்கு உறுப்பினர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறார்களா என்று அறியும் பொருட்டு, எனது ஆணைக்கு ஏற்ப பேரவைத் துறையிலிருந்து உறுப்பினருக்கு 1981-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27-ஆம் நாளன்று கடிதம் ஒன்று அனுப்பப் பெற்றது, ஆனால் அவ்வாறு உறுப்பினரைக் கேட்பது சரியல்ல. உறுப்பினர்கள் கொடுக்கும் அறிவிப்புகள் எல்லாம் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு



1981 மார்ச் 5] [பேரவைத் தலைவர்]

தான் கொடுக்கிறார்கள் என்று பேரவையில் கருத்து தெரிவித்ததன் பேரில் அப்பிரச்சினையை 1981-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29-ஆம் நாளன்று பேரவையில் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் பேரவையில் இதுகுறித்துப் பேசுகையில் :—

'' திரு. வி. இராஜசேகரன் அவர்கள் அக்டோபர் திங்கள் 14-ஆம் நாள் தன்னுடைய தொகுதியாகிய ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் கடலரிப்பு ஏற்பட்டு, அதனால் குடிசைகள் அழிந்ததன் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் சந்தித்து நிவாரணம் காண வேண்டுமென்று அவர்கள் நடந்து செல்கையில் காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளால் தாக்கப்பட்டு அதனால் அவர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.'' 'என்றும் சட்டப் பேரவையில் திரு. இராஜசேகரன் அவர்கள் ஆற்றிய உரையின் காரணமாக அவரைப் பழி வாங்க வேண்டுமென்ற தவறான கெட்ட எண்ணத்தோடு அந்தப் பகுதி காவல் துறையினர் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் கூறியுள்ளார். ஆனால் இதுபற்றி எந்த விதமான ஆதாரமும் தரப்படவில்லை.

சென்னை நகரக் காவல் சட்டத்தின் 41-வது பிரிவின் கீழ் அமலில் இருந்த தடை உத்திரவை மீறியதற்காகவும், சாலையின் குறுக்கே படுத்துப் போக்குவரத்துக்குத் தடை செய்ததற்காகவும், தடையை நீக்க வந்த காவல் துறையினரைத் தடுத்துக் கலவரம் ஏற்படக் காரணமாயிருந்ததாலும் திரு. இராஜசேகரன் கைது செய்யப்பட்டுப் பின்னர் ஜாமீனில் விடப்பட்டார் என்றும் அரசுத் தரப்பில் விவரங்களுடன் விளக்கப்பட்டது. மேலும் இது குறித்து வழக்கு விசாரணை முடிந்து விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

[முற்பகல் 10-20]

பேரவையின் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கைது செய்யப் பட்டால் அது குறித்து பேரவைத் தலைவருக்கு உடனே தகவல் தெரிவிக்க வேண்டும் என்பது நமது பேரவையின் 314-ஆவது விதி. அப்படியே முறையாகத் தகவல் தெரிவிக்கப் பெற்றுள்ளது. எனவே, இதில் விதிமுறைகள் மீறப்படவில்லை.

உறுப்பினர் திரு. நா. சுந்தரராஜ் அவர்களின் அறிவிப்பில் கொடுக்கப் பெற்றுள்ள தகவல்களும், அமைச்சரால் பேரவைக்குக் கொடுக்கப் பெற்றுள்ள தகவல்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறாக உள்ளன. உறுப்பினர் தனது அறிவிப்பில் கூறியதற்கு சரியான ஆதாரங்கள் எதுவும் கொடுக்கவில்லை.

தனது தொகுதி சம்பந்தமாக உறுப்பினர்கள் பிரச்சினைகளை, சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது உறுப்பினர்கள் தொகுதிக்கு ஆற்ற வேண்டிய கடமையாகும். எனினும் அவ்வாறு செயல்படும்போது உறுப்பினர்கள் அமலில் உள்ள 'சிவில்' மற்றும் 'கிரிமினல்' சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் பணியாற்ற வேண்டும். அவ்வாறின்றி உறுப்பினர்கள் குற்ற இயல் சட்டங்களுக்குப் புறம்பாக ஏதேனும் செயல்புரிந்து அதற்காக அவர்கள் தடுக்கப்பட்டாலோ, நடவடிக்கை தொடரப்பட்டாலோ, அல்லது தண்டிக்கப்பட்டாலோ அது பேரவையின் உரிமையை மீறியதாகவோ அல்லது பேரவையை அவமதித்ததாகவோ அமையாது.

மேலும் திரு. இராஜசேகரன் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதால் அவ்வழக்கு நீதி மன்றத்தில் விசாரிக்கப் பெறும்போது தான் எது சரியான தகவல் என்பது தெரியவரும்.

எனவே, எழுப்பப்பெற்றுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில்கூட அவை உரிமை மீறல் எழவில்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) ஊரகத் தொழில் அமைச்சர் மீது—தீர்ப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் 1981-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ஆம் நாளன்று உறுப்பினர் திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினைக்கு அளித்த தகவல்கள் குறித்து உறுப்பினர் திரு. இராஜசேகரன் அவர்கள் ஒரு. உரிமை மீறல் பிரச்சினைக்குப் பேரவையின் 246-ஆவது விதியின் கீழ் அறிவிப்புக் கொடுத்திருந்தார். இது பேரவையில 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10-ஆம் நாளன்று எடுத்துக் கொள்ளப் பெற்றது. திரு. இராஜசேகரன் அவர்கள் இப்பிரச்சினை குறித்து விவரங்களை அளித்துள்ளார். மாண்புமிகு பேர வ முன்னவர் அவர்களும் இது குறித்து விவரங்களைத் தந்துள்ளார்.

தாம் கைது செய்யப்பட்டது குறித்தும், மருத்துவமனையில் தமக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த தகவல்கள் தவறானவை என்று குறிப்பிட்டு, எனவே அவை உரிமை மீறல் ஏற்பட்டுள்ளது என்று திரு. இராஜசேகரன் அவர்கள் கூறினார்கள்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அளித்த தகவலில், இந்நிகழ்ச்சி, பேரவைக்கு வெளியிலே நடைபெற்றுள்ளது என்றும், அது தொடர்பானவற்றை காவல் துறையினரைக் கேட்டபோது அவர்கள் அளித்த தகவலைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள் என்றும் திரு. இராஜசேகரன்



அவர்களைப் பற்றித் தவறான தகவலைத் தர வேண்டும் என்பது நோக்கமல்ல என்றும், குறிபபிட்டார்கள். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வெளியிலே நடந்தது முழுவதும் தெரிந்திருக்கும் எனினும் இந்த அவையைத் திசை திருப்ப வேண்டுமென்ற நோக்கத்தோடு கூறினார் என்று சொல்ல முடியாது. உறுப்பினருக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில சொல்லப்படவில்லை என்றும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் அவர் கூறுகையில். வழக்கு ஒன்று விசாரணையில் இருப்பதன் காரணமாக இதிலே உண்மை நிலை கட்டாயமாகத் தெரியவரும் என்றும், அப்போது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமேயானால் அந்த வகையில் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் குறிப்பிட்டார்.

எனவே, மாண்புமிகு அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் உள்நோக்கோடும், உறுப்பினருக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணத்தோடும் எந்தத் தகவலையும் பேரவைக்கு அளிக்கவில்லை என்பதாலும், என்ன நடந்தது, எப்படி நடந்தது என்பது வழக்கு விசாரணை முடிந்தபின்தான் தெரியவரும் என்பதாலும், இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

3. தகவல் கோரல்.

(அ) பதிவு செய்யப்பெற்ற டேப்.

***டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நேற்றைய தினம் விவாதிக்கப்பட்ட உரிமைப் பிரச்சினையைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. இங்கே உரிமைப் பிரச்சினை பற்றிப் பேசிய முதலமைச்சரவர்கள், திரு. அன்பரசு, எம். பி. அவர்கள் காஞ்சிபுரம் நகர விழாவிலே பேசியது குறித்துக் குறிப்பிட்டார்கள். இன்று காலையில் திரு. அன்பரசு, எம். பி. அவர்கள் என்னுடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு தான் அவ்வாறு பேசவில்லை என்று கூறி, அது சம்பந்தமாக அறிக்கை விடுவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் நேற்று மாண்புமிகு முதலமைச்சர் இங்கே டேப்பை எடுத்துக் காட்டி, பேசியிருப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் எங்களுடைய சந்தேகத்திற்கு விளக்கம் பெறுவதற்காகத் தாங்கள் தங்கள் அறையில் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து, அவை முன்னவரவர்களையும் வைத்துக்கொண்டு அந்த டேப்பைப் போட்டுக் காட்டுவீர்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுவரையில் டேப் போடுவது சபையின் மரபாக இருந்ததாகத் தெரியவில்லை.

[1981 மார்ச் 5

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, புதிய மரபை உருவாக்கலாமே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றைய தினம் முதலமைச்சர் சொன்னதைப் பற்றிக் கேட்கிறார். நேற்று, அவர் எதிரிலேயே உட்கார்ந்திருந்தார், அப்பொழுதே எதிர்க் கட்சித் தலைவர் கேட்டிருக்கலாம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** அது அவைக் குறிப்பிலேயே இடம் பெறாது என்று கருதினோம். ஆனால், எல்லாப் பத்திரிகை களிலும் முதலமைச்சர் டேப் எடுத்துக் காட்டினார் என்ற செய்தி வந்துள்ளது. டேப் எடுத்துக் காட்டி விளாசினார் என்று ஆளுங் கட்சிப் பத்திரிகையிலே போடப்பட்டிருக்கிறது. அந்த விளாசல் என்ன என்பதை நாங்கள் பார்த்து விட வேண்டும். அதைப் யோட்டுக் காட்டுங்கள். (குறுக்கீடுகள்—கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது, அங்கே பேசிய பேச்சுக்களுடைய, சொற்பொழிவுகளுடைய டேப்புகள் இருக்கின்றன என்று குறிப் பிட்டார்கள். அந்த டேப்பிலே என்ன இருக்கிறது என்பதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்பினால், தாங்கள் முதலமைச்சரோடு கலந்து பேசி என்ன செய்வது என்பது பற்றி முடிவு செய்யலாமே தவிர, இப்படித்தான் இருக்க வேண்டுமென்று ஒரு முறையை வகுக்க வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்—கூச்சல், குழப்பம்).

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்

**திரு. ஆர். மணிமாறன்** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதனுடைய தொடர்பாக அல்ல, இங்கே, நம்முடைய ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களும், திரு. நாஞ்சில் வின்சென்ட் அவர்களும், திரு. வெள்ளைச்சாமி அவர் களும், திரு உகம்சந்த் அவர்களும் ஒரு உரிமைப் பிரச்னையைத் தந்திருக்கிறார்கள். அது இதுவரையிலே எடுத்துக்கொள்ளப் படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று திரு. கிருஷ்ண மூர்த்திக்குக் கூறிய அதே விளக்கம்தான் உங்களுக்கும் தருகி றேன். உரிமைப் பிரச்னையை எடுத்துக்கொள்வதும், எடுத்துக் கொள்ளாததும் என்னுடைய உரிமை, ஏற்கனவே, இந்தச் சபையிலே பலமுறை அதைப் பற்றி தீர்ப்புகளை அளித்திருக் கிறேன். 'து சம்பந்தமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை



நான் பரிசீலித்துக்கொண்டிருக்கிறேன். அதை எடுத்துக்கொள் கிறேனா, இல்லையா என்பதைப் பற்றி என்னுடைய அறையிலே தான் கேட்க வேண்டுமே தவிர, இங்கே கேட்கக் கூடாது. (குறுக்கீடு) நேற்றைய தினம் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதற்காகத்தான் வெளி நடப்பு எல்லாம் செய்தார். தன்னுடைய ஒத்தி வைப்புத் தீர்மானத்தை உடனே எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். உடனே எடுத்துக்கொள்ள முடியாது. எடுத்துக் கொள்வதும், எடுத்துக் கொள்ளாததும் அவைத் தலைவருடைய உரிமைதான். அதை நான் விட்டுக் கொடுப்பதாக இல்லை. எனக்குச் சில உரிமைகள்தான் இருக்கின்றன. (குறுக்கீடு) நான் அதையும் விட்டுவிட்டு, இங்கே பேரவையை நடத்திச்செல்ல முடியாது.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

போலியோ நோயினால் சென்னையில் குழந்தைகள் பாதிக்கப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சென்னை நகரிலே கடந்த இரண்டு நாட்களிலே போலியோ நோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனைகளில் அனுமதிக்கப் பட்ட 17 குழந்தைகளில் 6 பேர்கள் இறந்து விட்டதாலும், மேலும் சிலர் அபாயகரமான நிலைமையிலே உள்ளதாலும் மக்கள் மத்தியிலே உள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. என். எஸ். வி. சித்தன், டாக்டர் கே. சௌரிராஜன், திரு. செ. இராமலிங்கம், திரு. சோ. அழகர்சாமி, திரு. இரா. கருப்பையா, திரு. மு. அப்பாதுரை, திரு. தி. கா. நல்லப்பன், திரு. செ. சிவசாமி, திரு. ப. பொன்னுரங்கம் ஆகியோர் தீர்மா னங்கள் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவசர முக்கிய மானது என்பதைச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே போலியோ நோய் தாக்கப்பட்டதால் கடந்த இரண்டு மாதங்களில் மட்டுமே அரசு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்ட 330-க்கு மேற்பட்ட மழலைச் செல்வங்களிலே 40-க்கும் மேற்பட்ட கண்மணிகள் காலனின் கோரப் பசிக்கு ஆளாகி உள்ளன என்று "இந்து" போன்ற நாளேடுகளில் வந்துள்ள சோகச் செய்திகள் நெஞ்சை உலுக்குவதாக உள்ளன. இன்னும் வேதனை தரத்தக்க செய்தி என்னவென்றால், உயிர் பிரிந்த குழந்தைகளிலே, 10 செல்வங்கள் பிறந்து 1 வாரமே ஆகின்றன என்பதாகும்.

குழலையும் யாழையும் விட இனிய குரலைக் கேட்டு மகிழ்ந்த அந்தப் பிஞ்சுகளை இழந்து தவிக்கின்ற பெற்றோர் உற்றாரி னுடைய சோகத்தை வார்த்தைகளாலே வடிக்கமுடியாது.

என்பதை இந்தப் பேரவை நன்கு உணரும் எனக் கருதுகிறேன். சென்னை நகரிலே மட்டும் சென்ற ஆண்டு அதே காலத்திலே இந்தப் போலியோ நோயால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவ மனைகளிலே அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையை விட தற்பொழுது பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காகும் என்றால், தனியார் மருத்துவ மனைகளிலே அல்லது, தமிழகம் முழுவதும் அனுமதிக்கப்பட்டிருக்கிற குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று நம்மாலே கணக்கிட்டுப் பார்க்க முடியவில்லை.

[முற்பகல் 10–30]

இந்த நோய்க்கு இரையானவை 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள்தான். இந்த நோய் 3 வகைகளிலே பரவுகிறது என்று சொல்கிறார்கள். முதலிலே வாதம் ஏற்பட்டு மூச்சுத் திணறி உயிர் பிரிகிறதாம். (குறுக்கீடு) அந்த அளவு பரவுவதற்கும், குழந்தைகளின் உயிரைக் காவு கொள்வதற்கும் தரமான மருந்துகள் இல்லாததுதான் காரணம் என்று கூறுகின்றனர். மைனஸ் 2 டிகிரி சீதோஷ்ண நிலையிலே மருந்தைக் குளிர்சாதனப் பெட்டியிலே வைத்து பேணாமை இன்னொரு காரணம் என்றும் கூறப்படுகிறது. சேலம் போன்ற நகரங்களில் இந்தப் போலியோ மருந்துகள் பதுக்கி வைக்கப்பட்டு, சமூக விரோதிகளால் கொள்ளை இலாபம் அடிக்கப்படுகிறது என்று நாளேடுகளிலே செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டிருக்கின்ற அந்த டிரக் இன்ஸ்பெக்டர்கள் தங்களுடைய பணியினை முறையாக, முனைப்பாகச் செய்திருக்கிறார்களா? அந்த ஆய்வாளர்கள் தங்களுடைய பணிகளை ஒழுங்காகச் செய்தார்களா? மேற்பார்வை செய்யப்பட்டிருக்கிறதா? மருந்து தரமான மருந்துதான் என்று சோதனை இடப்பட்டதா? என இதுபோன்ற பல்வேறு வினாக்களுக்கு இந்தப் பேரவை விடை காண வேண்டும் என்ற காரணத்தினாலும், இந்த நிலை தமிழகம் முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு வரக்கூடாது, இந்த மழலைச் செல்வங்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்கான விரிவான விளக்கங்களைப் இந்தப் பேரவை பெறவேண்டும் எனற காரணத்தினாலும், பேரவை தன்னுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களில் போலியோ, அதாவது இளம்பிள்ளை வாதம் என்று தமிழிலே சொல்கின்ற அந்த நோயினால் 40 குழந்தைகள் இறந்துவிட்டன என்று செய்தித்தாளின் மூலம் கேள்விப்பட்டு வேதனைப்படுகிறோம். ஆசியாவிலேயே, அதுவும் கிழக்காசியாவிலேயே மிகச் சிறந்த மருத்துவமனை என்று எல்லோராலும் பாராட்டப்படுவது நம்முடைய எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை (Institute of Child Health) என்பது பலரும் அறிந்த விஷயம். அது தமிழ்நாட்டுக்கே பெருமை,





அங்கே உள்ள டாக்டர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள், படித்தவர்கள். அகில உலகத்திலேயும் புகழ் பெற்ற மருத்துவர்கள், மேதைகள் நம்மிடையே இன்று இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியின் விளைவாகக் கடந்த 27 ஆண்டுகளாக இந்தத் துறையிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிற எனக்கு, என்னுடைய சிந்தனையிலே உருவாகின்ற கேள்விக்கு—புரட்சித் தலைவர் ஆட்சியிலே அதிர்ஷ்டவசமாக இந்தத் துறையிலே பணி புரிந்தவர், அனுபவம்பெற்றவர் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருக்கிறார்—அவர் விடையளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய சிந்தனையிலே பிறந்த கேள்விகளுக்குத் தயவுசெய்து செவிமடுத்து விளக்கங்கள் தருவார் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதலிலே 40 குழந்தைகள் இறந்துவிட்டன என்கிறார்கள். அப்படி இறந்த குழந்தைகள் இந்த இளம்பிள்ளை வாதத்தினால் தான் இறந்தனவா என்பது என் முதல் கேள்வி. காரணம் என்னவென்றால் அண்மையிலே நீங்கள் பார்த்திருப்பீர்கள். நெல்லை மாவட்டத்திலேயும், மற்றும் உள்ள மாவட்டங்களிலேயும் மூளைக் காய்ச்சல் என்று ஒரு காய்ச்சல் வேகமாகப் பரவி, அதன் மூலமாகப் பல குழந்தைகள் இறந்துவிட்டார்கள் என்று செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அதே காய்ச்சல் இன்று சென்னையிலேயும் வந்து (Virus encephalitis) அதன் மூலமாக, இந்தக் குழந்தைகள் இறந்து விட்டனவா அல்லது இளம்பிள்ளை வாதம் வந்து அதன் மூலமாக இறந்துவிட்டனவா என்பதை முதல் கேள்வியாக எழுப்பி இருக்கிறேன்.

இந்த வியாதி ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில்—சென்னை மாகாணமாக இருந்தபோது—கொள்ளை நோயாக நெல்லூர், சித்தூர் போன்ற இடங்களில் எபிடெமிக் என்ற முறையில் அறிவிக்கப்பட்டது. சென்னையைப் பொறுத்த வரையில் எண்டமிக் ஏரியா என்ற அளவில்தான் இருந்தது. எப்போதும் தொத்து வியாதியாக அது பரவியதாகச் செய்தி இல்லை. ஆனால், இப்போது 40 குழந்தைகள் இறந்தன என்ற செய்தி வந்திருக்கிறது. அந்தக் குழந்தைகள் இளம்பிள்ளை வாதத்தினால்தான், தொத்து நோயாக வந்து விட்ட காரணத்தினால்தான் இறந்தனவா என்பது என்னுடைய கேள்வி.

அடுத்த கேள்வி, சாதாரணமாக இந்த வியாதி கண்ணுக்குத் தெரியாத ஒரு பூச்சியால், கிருமிகளால் உருவாக்கப்படுகிறது. அந்தப் பூச்சிகளை சாதாரண மைக்கிராஸ்கோப் மூலமாகப் பார்த்தால் தெரியாது, அதற்கு ஒரு ஸ்பெஷல் எலெக்ட்ரான் மைக்கிராஸ்கோப் தேவை. அதனுடைய அளவு 28mm. அதன் மூலமாகப் பரவும் அந்த வியாதிக்கு பல காலமாக வைத்திய வசதி இல்லாமல், கடந்த 15–20 ஆண்டுகாலமாகத்தான் தடுப்பு மருந்துகளை வைத்தியர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஒன்றை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன்,

அவர்கள் இராஜாஜி அவர்களிடத்திலே பயிற்சி பெற்றவர்கள். இராஜாஜி அவர்கள் கூட பி.சி.ஜி. வாக்சின் போடுவதற்கு எதிர்ப்பு காம்பெயின் செய்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி தற்போது பேசுவதற்கு நேரம் இல்லை. அவை முன்னுள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்மீது மட்டும் உறுப்பினர் பேச வேண்டும்.

**டாக்டர் கே. சௌரிராஜன்:** தலைவர் அவர்களே, சம் பந்தம் இல்லாத பிரச்னை குறித்து நான் இங்கே பேசவில்லை. பி.சி.ஜி.வாக்ஸின் போன்ற ஒரு தடுப்பு ஊசியை இந்த போலியோ வியாதிகளுக்கும் போடுவது உண்டு. அமெரிக்காவில் எல்லாம் Inactivated I.O.P. Salk Vaccine ஊசியால் இந்த போலியோ நோய் தடுப்பு உள்ளது. ஆனால், வைத்திய முறைப்படி அதற்குப் பெயர் Salk Vaccine என்று சொல்வார்கள். ரஷ்யாவில் Sabyn Vaccine என்று சொல்வார்கள்.

முதலாவதாகக் கண்டுபிடித்தது, ''ஓரல் போலியோ வாக்சின்'' அதாவது குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து கொடுத்து, அதன் மூலமாகத் தடுக்க முடியும் என்று சொன்னார்கள். சொட்டு மருந் திலே It is only accentuated living virus. உயிருள்ள வீரியம் குறைந்த கிருமிகளை வாய் மூலமாகக் குழந்தைகளுக்குக் கொடுக் கிறார்கள். பி.சி.ஜி. போன்றவை கொடுக்கப்படுவதால், ஏதா வது சீதோஷ்ண நிலைமை சரியாக இல்லாத காரணத்தால், அல்லது பலமுறை கொடுக்கப்பட்ட மருந்தையே மீண்டும் மீண் டும் கொடுப்பதால் '' கன்டாமினேட்'' ஆகியிருக்குமானால், அந்த போலியோ கிருமிகள் '' விருலென்ட்டாகி '' விடும். அதனுடைய வீரியம் திடீரென்று அதிகரித்து விடும். ஒருவேளை அதுமாதிரி ஆகிவிட்டதோ என்கிற அச்சத்தில் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்.

நானும், முன்னாள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சௌந்திரராஜன் அவர்களும் ஸ்பென்சர் கட்டிடத் தில் ஒரு விழாவிற்குச் சென்றிருந்தோம். பெல்ஜியம் நாட்டினர் நடத்திய விழா என்று நினைக்கிறேன். சரியாக ஞாபகம் இல்லை. அந்த இடத்தில் ஓரல் போலியோ வாக்சின் மருந்துகளை கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்குத் தேக்கி வைத்து இருந்தார்கள். நான்கூட நான்கு நாட்களுக்கு முன்பு ஒரு கேள்வி கேட்க எழுந்தபோது தாங்கள் உட்கார வைத்து விட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது மட்டும் பேச வேண்டும் என்று ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். இந்தத் தீர்மானத்தின் மீது பேச ஆரம்பிக்கும் முன்னரே இந்த போலியோ நோய் பற்றிய சந்தேகம் உங்களுக்கு வந்திருக்கிறது. ஆகவேதான் அதை விட்டு





விட்டு, ஸ்பென்சர் கட்டிடத்தில் உள்ள போலியோ மருந்துகள் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டீர்கள். விரைவாக முடிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** அந்த ஸ்பென்சர் கட்டிடத் தில் தீ விபத்து ஏற்பட்டபோது அந்த மருந்துகளும் தீக்கிரையாகி விட்டனவா அல்லது அந்தத் தரக்குறைவான மருந்துகள் மக்க ளுக்குக் கொடுக்கப்பட்டு விட்டனவா என்று அன்றே கேட்க நினைத்தேன். நீங்கள் விடவில்லை. அடுத்தபடியாக இன் னொரு கேள்வியைக்.கேட்க விரும்புகிறேன். நாம் மூன்று வியாதி களுக்குத் தடுப்பு ஊசி போடுகிறோம். அதாவது Tatanus, Diphtheria, pertussis

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மருத்துவ முறைகளைப் பற்றி பேசுவதற்கு இது நேரம் இல்லை. அவை முன்னுள்ள பிரச்னை குறித்து மட்டும் பேசி, எந்த வகையில் இதுகுறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களைஒத்தி வைக்க வேண்டும் என்பதை மட்டும் கூறும்படி மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** இப்போது அந்தத் தடுப்பு ஊசி மருந்து கொடுப்பதால் அது கொள்ளை நோயாக வந்து விட்டதோ என்கிற அச்சம் தான் என்னுடைய இரண்டாவது கேள்வியாகும். நாம் தடுப்பு முறைகளை உருவாக்கும் வகை யிலே ஓரல் போலியோ வாக்சின்களைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** உறுப்பினர் அவர்கள் இப்படி பேசிக்கொண்டு இருப்பது முறைதானா என் பதை நான் கேட்க விரும்புகிறேன். இந்தப் பொருள் குறித்து விவாதிக்க இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவா திக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை விளக்கிப் பேச வேண்டுமே தவிர, மற்ற விளக்கங்களைப் பேச ஆரம்பித்தால் அது பொருத்தமாக இருக்குமா என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

[முற்பகல் 10-40]

**டாக்டர் கே. சௌரிராஜன் :** என்னுடைய கேள்விக்கு சரி யான விடை கிடைப்பதற்காக, அரசினுடைய கடமையை உணர்த்துவதற்காக சற்று விரிவாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசினுடைய கடமையை உணர்த்துவது என்பது வேறு பிரச்சினை. இப்போது இருக்கிற பிரச்சினை, இந்த போலியோ விபத்து பற்றி விவாதிக்க வேண்டு மென்று திரு. சித்தன் சொல்கிறார். நீங்கள் போலியோவே

இல்லை என்று ஆரம்பத்திலே சொல்லியிருக்கிறீர்கள் உங்களுக்கு பல சந்தேகங்கள் வரலாம். அதற்கெல்லாம் இங்கே விடை காண வாய்ப்பு இல்லை ; அது முறையும் அல்ல.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** சில முக்கியமான விவரங்களை இதில் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த வியாதி என்னவென்று தெரியாமல் எப்படி தடுக்கப்போகிறோம்? சென்னை மாநகரில் இப்போது சுகாதார கேடு வேறு இருக்கிறது. ஆகவே, நிச்சயமாக இந்த வியாதியை பரவாமல் ............

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மீண்டும் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டு போவதும், தாங்கள் அனுமதித்துக் கொண்டிருப்பதும் சரியல்ல. ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் ஏன் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தோம் என்பதைச் சொல்லிவிட்டு, அதற்கு தாங்கள் அனுமதி அளித்தால் விவாதிக்கலாம். (குறுக்கீடு) அது இல்லாமல், திரு. சித்தன் அவர்கள் சொல்வதுபோல, ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் விவாதம் ஆரம்பித்துவிட்டதுபோல் இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** எனக்கு இன்னும் கொஞ்சம் பேச வாய்ப்பு கொடுத்திருந்தால் நானும் தெளிவாகப் பேசியிருக்கலாம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, திரு. சித்தன் அவர்களும் டாக்டர் சௌரிராஜன் அவர்களும் ஒரே ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இருவருடைய கருத்துக்களும் 'கான்ட்ரோவர்சியலாக' இருப்பதால் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் சௌரிராஜன், நீங்கள் ஏன் ஒத்திவைக்க வேண்டுமென்று சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** இந்த நோய் பரவாமல் தடுக்க வேண்டிய அவசரமும் அவசியமும் இருப்பதால் இங்கே எழுப்பப் படுகின்ற வினாக்களுக்கு விடை கண்டுபிடித்து, நாட்டிலே இந்த கொள்ளை நோய் பரவாமல் இருக்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த இளம்பிள்ளை நோய் கடுமையான ஜுரத்தால் தான் உண்டாகிறது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இதனால்



கடந்த இரண்டு தினங்களாக 40-க்கு மேற்பட்ட இளம் சிறார்கள், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இறந்திருக்கிறார்கள் என்று இந்து பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதைப் போன்று மற்ற பத்திரிகைகளிலும் செய்தி வெளியாகி இருக்கிறது. இது சம்பந்தமாக பரிசோதனை செய்வதற்கு மேலதிகாரிகள் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த போலியோ வாக்சின் எப்படி வைக்கப்படுகிறது, எப்படி பாதுக்காக்கப் படுகிறது என்று பரிசோதனை செய்வதற்கு 'ட்ரக் இன்ஸ்பெக்டர்களுக்கு' ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் இந்த மருந்தை 'ஃபிரிஜில் வைத்து பாதுகாக்க வேண்டுமென்று கருதுகிறேன். ஆனால் தனியார் மருந்துதகங்கள் அதை பிரிஜிலே வைத்து, தருகிறார்களா, என்று பார்க்க வேண்டும். அப்படி பாதுகாக்கவில்லை என்றால் பால் திரிவது போல் திரிவு ஏற்பட்டுவிடும். அப்படி திரிந்து விட்டால் அது சரியாக வேலை செய்யாது. சுகாதார கேடும் ஏற்படும் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் அதிகாரிகளுக்கு எல்லாம் இன்ஸ்ட்ரக்ஷன் வந்தபிறகு பத்திரிகைகளிலே செய்தி வருகிறது. கடுமையான ஜுரம் கண்டவர்கள் 'நியரஸ்ட் சைல்டு வெல்பேர் சென்டருக்கு' சென்று பரிசோதித்துக் கொள்ளவேண்டுமென்று பொதுமக்களைக் கேட்டிருப்பதாக பத்திரிகையைப் பார்த்து தெரிந்துகொண்டேன்.

நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலேயே சைல்ட் வெல்பேர் சென்டர் இவர்களுடைய ஆட்சியிலேயே மூடப்பட்டிருக்கின்றது. பக்கத்திலே ராதாகிருஷ்ண நகரிலே இருக்கின்ற ஐ. டி. ஆஸ்பத்திரிக்கு அருகிலே இருக்கின்ற மெட்டர்னிட்டி அன்ட் சைல்ட் வெல்பேர் சென்டரும் மூடப்பட்டிருக்கின்றது. இப்படி சைல்ட் வெல்பேர் சென்டரை மூடிவிட்டால் அங்கே இருக்கின்ற மக்கள் எப்படி தங்களுடைய குழந்தைகளை மருத்துவ சிகிச்சைக்காக கொண்டு செல்ல முடியும்? ஏன் மூடப்பட்டது என்பதைச் சொன்னால் அது குற்றச்சாட்டாக அமைந்து விடும். ஆகவே இந்த நோய் குறித்து 2 திங்கள்களுக்கு முன்பே நடவடிக்கை எடுத்திருந்தால் 40 பிள்ளைகளும் இறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. அந்தப் பிள்ளைகள் எக்மோர் இன்ஸ்டிட்யூட்டிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே போதுமான வசதிகள் இல்லை. அங்கே சுகாதார வசதி இல்லை. அந்த இன்ஸ்டிட்யூட்டிலே போய் படுத்தாலே நோய் வந்துவிடும். நான் தற்சமயம் என்னுடைய நண்பர் ஒருவரின் குழந்தையை எடுத்துக் கொண்டு சென்றிருந்தேன். அங்கு மோசமான நிலை இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கமாகச் சொல்லுங்கள்

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவரவர்களே, சாதாரண ஜுரமாக அங்கே போனால் கூட அது போலியோவாக மாறிவிடுகின்றது. அங்கே போதுமான ட்ரீட்மென்ட் இல்லை. இந்த நோயைத் தடுத்து நிறுத்துவதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பே அரசு ஆவன செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாததால் தான் இந்த நிலைமை. எனவே இவற்றை எல்லாம் விரிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுகிறேன்.

**திரு. செ. சிவசாமி :** தலைவரவர்களே, தமிழகத்திலே இன்றைக்குப் பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. போலியோ நோய் தடுத்து நிறுத்தப்பட கூடிய ஒரு நோய்தான் அந்த நோயை வெற்றிக் கண்டு அதற்குரிய மருந்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் ரஷ்யாவில். அதைத்தான் அவர்கள் நமக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்த மருந்து கொடுத்தும் கூட இன்றைக்கு தமிழகத்திலே இப்படிப்பட்ட கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். அந்த மருந்திலே எந்தவிதமான குறையும் இருக்க முடியாது. இங்கேதான் ஏதோ தவறுகள் நடந்திருக்க வேண்டும். அந்தத் தவறின் காரணமாகத்தான் தலைநகரத்திலே 40 பிள்ளைகள் இறந்திருக்கிறார்கள். இதை ஆரம்பத்திலே தடுத்து நிறுத்தி இருக்காலம். இப்படிபட்ட பயங்கரமான நிலைமை குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவரவர்களே, இளம்பிள்ளை வாதம் என்பது நுண் கிருமியினால் ஏற்படும் ஒருவித நோய் . இது குறிப்பாக இளம் வயதினருக்கு ஏற்படுகின்றது. சென்னைமாநகரத்தில் ஒரு வருடத்தில் சராசரியாக 600 பேர் இந்த நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். இந்த ஆண்டு ஜனவரியில் 158 பேரும், பிப்ரவரியில் 192 பேரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். இதில் 40 குழந்தைகள் இறந்துவிட்டனர். இந்த இரண்டு மாதத்திலே கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் நால்வரும் ஸ்டான்லி மருத்துவமனையில் 30 பேரும் இந்த வியாதிக்காக சிகிச்சைபெற்றனர். சென்னை மாநகரில், பெரம்பூர், ராயப்பேட்டை, ஐனாவரம், வியாசர்பாடி, திருவல்லிக்கேணி. மாம்பலம், வேப்பேரி ஆகிய பகுதிகளில் இந்த நோய் ஏற்பட்டுள்ளது. இவ்வியாதி வராமல் தடுக்க குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து கொடுக்க எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையிலும், மாநகராட்சி தாய் சேய் நல மருத்துவமனைகளிலும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு மார்ச் முதல் டிசம்பர் வரை சென்னை நகரில் 24844 குழந்தைகளுக்கு 75,000 டோஸஸ் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மருந்து கொடுத்து 6 வாரத்திற்குப் பிறகு



தான்குழந்தைகளுக்கு இவ் வியாதியை எதிர்க்கும் சக்தி கிடைக்கும் அவர்களுக்கு இம்மியுனிட்டி உருவாகும். மேலும் இம்மருந்தை எப்போதும் குளிர்ந்த நிலையிலேயே வைக்க வேண்டும். இல்லாவிட்டால் அது தனது வலிமையை இழந்துவிடும். தற்போது பாதிககப்பட்டுள்ள பகுதிகளுக்கு 12,000 டோஸஸ் மருந்து 3-3-1981 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

[முற்பகல் 10-50]

சென்னை குழந்தைகள் மருத்துவ மனையிலும் மாநகராட்சி தாய் சேய் நல விடுதிகளிலும் இவ்வியாதிக்கு தக்க சிகிச்சை அளிக்கிற வகையில் தயார் நிலையில் மருந்துகள் உள்ளன மேலும் இந்தப் பணிகளை தீவிரமாக்கவும் சுற்றுப் புற சுகாதாரத்தை பேணிக்காக்கவும் மாநகராட்சி சுகாதார அதிகாரிகளுக்கும் பொது சுகாதார துறை இயக்குநர் அவர்களுக்கும் அறிவுரை வழங்கப்பெற்றுள்ளது. தவிர தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 62-ஆம் பிரிவின்படி இந்நோய் அறிவிக்கப் பெற்ற நோயாக கருதி (தனியார் மருத்துவ மனைகளாக இருந்தாலும் கூட) ஏற்கெனவே ஆணை இடப்பட்டுள்ளது.

Every private practitioner should immediately intimate to the Health Department இதன்படி யார் யார் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கிற நேரத்தில் அதைப்பற்றி சுகாதார துறைக்கு தெரிவிக்க வேண்டும். இதனால் தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கு வசதியாக இருக்கும். மேலும் 1981 ஆம் ஆண்டு ஊனம் உற்றோர் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 1.70 லட்சம் (ஒரு லட்சத்து எழுபதாயிரம்) குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

மேலும் இத் திட்டத்தை தீவிரமாக செயல்படுத்த தடுப்பு பணிகளை மேலும் தீவிரப்படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆகவே மக்கள் எந்த விதப் பதட்டமும் அடைய தேவையில்லை. அப்படி நிலைமை முழு கட்டுப்பாட்டில் உள்ளது. அது மட்டும் அல்லாமல் இதற்கென ஒரு கமிட்டியை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம். அதிலே Director of Public Health, Deputy Director of Medical Education, Director, Institute of Child Health, Health Officer, Corporation of Madras Additional Health Officer of Corporation of Madras ஆகியவர்களைப் போட்டிருக்கிறோம்.

To co-ordinate all the work in Madurai Dean, Rajah Hospital, Dt. Medical Officer, District Health Officer, Health Officer, Corpn. of Madurai.

ஆகியவர்கள் போடப்பட்டியிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களிலேயெல்லாம் டி. எம். ஓ., டி.எச். ஓ. போன்றவர்கள் ஒருங்கிணைந்து இதில் செயாற்றவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு என். எஸ் வி. சித்தன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். டிரக் இன்ஸ்பெக்டர்கள் சரியான வழியிலே செயலாற்றிக்கொண்டிருக்கிறார்களா என்று கேட்டார். டிரக் இன்ஸ்பெக்டர்களிடத்திலே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். நமது மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொன்னது போல ஏராளமான போலியோ மருந்துகள் டிஸ்பென்சரிலே வைக்கப்பட்டிருந்தன. அது சேதம் அடைந்ததினால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆகவே தனியார் துறையிலே இருக்கிற மருத்துவமனைகளிலே கூட இந்த மருந்துகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சரியான வழியிலே ரெப்ரஜிரேட்டரிலே வைத்திருக்கிறார்களா என்று உடனடியாக கண்காணிக்க வேண்டும் என்று டிரக் இன்ஸ்பெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அதேமாதிரி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் ஒரு பிரச்னையை கேட்டார்கள். இப்போது சால்க் வாக்சீனா, சாபின் வாக்சீனா எதை கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். சாபின் வாக்சின் தான் கொடுக்கிறோம், அது ஓரல் ரஷ்யன் வாக்சின்

டபிள்யூ எச். ஓ. நிறுவனமே அதை சரியானது என்று ஒத்துக்கொண்டிருக்கிறது. இது சரியான வாக்சின் தான். தைரியமாக பயன்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறது. மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் சொன்னது மாதிரி டபிள்யூ எச். ஓ. வே அதனை ஏற்றுக்கொண்டு உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அதை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் இல்லாத நாடுகளிலே கூட அதைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே அதைப் பொறுத்த வரையில் எந்தவிதமான பிரச்னையும் இல்லை.

மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள். இன்ஸ்டிடியூட் ஆப் சைல்ட் ஹெல்தைப் பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் அதைப் பேசும்போது எனக்குக்கூட கொஞ்சம் வேடிக்கையாக இருந்தது. ஏனென்றால் அந்த மருத்துவ மனையிலே நான் போய் படுத்துக்கொள்வது என்கிற பிரச்னை இன்றைய தினம் எழும்பவேண்டிய தேவையே இல்லை. அதில் அவரும் போய் படுத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் அது குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இந்த இன்ஸ்டி



டியூட்டைப் பொறுத்த வரையில் மிக நல்ல முறையிலே செயலாற்றிக்கொண்டு வருகிற ஒரு மருத்துவ மனை அது. நீங்கள் போய் பார்த்தீர்களேயானால் உங்களுக்கே தெரியும். இங்கே இருப்பவர்கள் மட்டுமல்ல. வெளிநாட்டிலிருந்து வரக்கூடியவர்கள் கூட அந்த மருத்துவ மனையைப் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே அநியாயமாக ஒரு மருத்துவ மனையைப் பற்றி குறை கூற வேண்டிய தேவை இல்லை.

இப்படி ஒரு நெருக்கடி திடீரென்று ஏற்பட்டிருக்கக்கூடிய சங்கடத்தை உடனடியாக தவிர்ப்பதற்காக எல்லா வகையான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த நடவடிக்கைகளின் மூலமாக ஏற்பட்டிருக்கிற நல்ல விளைவுகளையும் காண்கிறோம். ஆகவே இந்த அளவுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தினாலே நம்முடைய சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இனியும் விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்பதை நான் தாழ்மையுடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை யென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 5. அறிக்கை அளித்தல்

### 109–வது பிரிவின் கீழ் திரு. உமாநாத் அளித்த அறிக்கை.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் 16—7—1980-ம் தேதி நடந்த கூட்டத்தில் ஆங்கில ஏடான "இந்து" பத்திரிகை மீது மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் கொண்டுவந்த உரிமைப் பிரச்னை மீது சுருக்கமான விளக்கம் கேட்டபோது அதைப்பற்றி அவை முன்னவர் மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்கள் அவைக்குத் தந்த விளக்கத்தில் சில தவறான தகவல்களை அவைக்குத் தந்துள்ளதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1980ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1ஆம் தேதிய இந்து பத்திரிகையில் திரு. ஆர். கே. பாலசுப்ரமண்யம் என்பவர் பத்திரிகை ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் 1926 ஆம் ஆண்டில் மேலவைத் தலைவராக இருந்த திரு. இரத்தினசாமி அவர்கள் கூறியதாக எழுதியதைக் குறிப்பிட்டு அவை முன்னவர் அவர்கள் கூறியதைக் கூறுகிறேன்.

[திரு ரா. உமாநாத்] [1981 மார்ச் 5

இரண்டாவதாக, 1926 ஆம் ஆண்டில் மேலவைத் தலைவர் திரு இரத்தினசாமி கூறியதாக கூறப்படும் வாக்கியத்திற்கு ஆதாரம் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அதிலேயும் செயலாளர் ஆளுநரால் தான் நியமிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. மற்றுமுள்ள அலுவலர்கள் தலைவரால் நியமிக்கப்பட்டனர் என்றும் கூறுகிறார்கள். ஆனால் இதற்கும் ஒருவிதமான ஆதாரமும் இல்லை என்று அவைக்கு அவை முன்னவர் அவர்கள் கூறியுள்ளார்கள். அவை முன்னவர் அப்படிக் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் தவறானது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலவைத் தலைவர் திரு. இரத்தினசாமி அவர்கள் அப்படிக் கூறியிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதற்கு ஆதாரம் பேரவைத் தலைவர் திரு வி. ஜே. பட்டேல் அவர்கள் தலைமையின்கீழ் 6–1–1926–ம் தேதி மதியம் 11-மணி முதல் மாலை 5 மணி வரை நடந்த மேலவைத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மாநாட்டின் அதிகாரப் பூர்வமான குறிப்பேடேயாகும்

Minutes of Conference of Presidents and Deputy Presidents of Provincial Legislative Councils.

இங்கே ப்ரிசிடென்ட் என்பது அவைத் தலைவரைத்தான் குறிப்பிடுகிறது. அந்தக் குறிப்பேட்டில் மாநாட்டில் மேலவைத் தலைவர் திரு. இரத்தினசாமி அவர்கள் கலந்துகொண்டதாக குறிப்பிட்டிருப்பதுடன் கீழ்க்காணும் தகவலும் கொடுக்கப்பட்டுள்ளது.

'The President, Madras Council stated that he had a separate staff with a Council Secretary, but that the Secretary was appointed by the Governor, and the subordinate members of the staff by the President with the approval of the Governor.

இந்தக் குறிப்பேடு தெளிவான ஆதாரமாக இருக்கிறபோது ஆதாரமே இல்லை என்று அவை முன்னவர் அவர்கள் அவைக்குக் கொடுத்த தகவல் தவறானது.

மேலும் அவை முன்னவர் அவர்கள் கூறுகிறபோது 1924 ஆம் ஆண்டு முதல் திரு. ஆர். வி. கிருஷ்ண ஐயர் காரியதரிசியாக இருக்கவில்லை என்றும் அவர்கள் 1937 ம் ஆண்டிலிருந்து 1941-ம் ஆண்டு வரை பிறகு 1952-ஆம் ஆண்டிலிருந்து 1955 ஆம் ஆண்டு வரை இருந்திருக்கிறார் என்றும் கூறியுள்ளார். அவை முன்னவர் திரு ஆர். வி. கிருஷ்ண ஐயர் அவர்கள் 1924-ம் ஆண்டு முதல் இல்லை என்றும் 1937-ஆம் ஆண்டு முதல்தான் இருந்தார்கள் என்றும் கூறியுள்ள தகவல் தவறான தகவல் என்பதற்கு சென்னை சட்டப் பேரவையின் 22–3–1955 ஆம் தேதிய தீர்மானமே ஆதாரமாகும். அந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பதானது—அது ஆங்கிலத்தில் இருக்கிறது. அந்தத் தீர்மானத்தை கோட் செய்கிறேன்.



1981 மார்ச் 5] [திரு. ரா. உமாநாத்]

That the Honble Speaker be requested to convey to Shri. R.V. Krishna Ayyar, B.A., M.L., on his laying down of the office of the Secretary to the state Legislature, Madras, the assurance of this Houses sincere appreciation of the distinguished and outstanding services which, by his ever ready advise and his great knowledge of the law and customs of the Legislature, he has rendered to it and to all its members, in the conduct of their business during the years 1924 to 1941 and 1952 to 1955, all of which have been spent at this table.

[முற்பகல் 11–00]

டேபிள் என்று சொன்னால் அவை. 1924 ஆம் ஆண்டு முதல் திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் பணியாற்றினார் என்று அவைத் தீர்மானம் ஆதாரமாக இருக்கும்போது, அது உண்மையல்ல. 1937 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டார் என்ற தவறான தகவலை அவை.முன்னவர் அவர்கள் எப்படிக் கொடுத்தார் என்பது வியக்கத் தக்கதாக இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் என்னுடைய பேச்சில் நான் தவறாகக் கூறியதாக இங்கு இப்போது குறிப்பிட்டுள்ளவை இரண்டு பொருள்கள் பற்றி.

முதலாவது. "1926 ஆம் ஆண்டு மேலவைத் தலைவர் திரு. இரத்தினசாமி அவர்கள் கூறியதாகக் கூறப்படும் வாக்கியத்திற்கு ஆதாரம் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை" என்று நான் குறிப்பிட்டது. திரு. உமாநாத் அவர்கள் 1926 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6 ஆம் நாளன்று நடந்த பேரவைத் தலைவர்கள் மாநாட்டின் குறிப்பேட்டை ஆதாரமாகக் காட்டிக் குறிப்பிட்டது—

"The Persident, Madras Council stated, that he had a separate staff with a Council Secretary, but that the secretary was appointed by the Governor, and the subordinate members of the staff by the President with the approval of the Governor.

திரு. பாலசுப்பிரமணியம் கடிதத்தில் "with the approval of the Governor என்ற பகுதி விடுபட்டு, பேரவைத் தலைவர் தாமே மற்ற அலுவலர்களை நியமனம் செய்தார் என்ற பொருள்படும்படி எழுதப்பட்டு இருந்தது. இதற்குத்தான் நான் ஆதாரம் இல்லை என்று கூறினேன். பேரவைத் தலைவர் தாமே நியமனம் செய்தார் என்பதற்கும் "with the approval of the Governor" செய்தார் என்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. எனவே, ஆதாரம் இல்லை என்று நான் கூறியதில் தவறில்லை.

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1981 மார்ச் 5

இரண்டாவது, '' 1924 ஆம் ஆண்டு முதல் 1955 ஆம் ஆண்டு வரை திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் இருந்தபோது செயலகம் சுதந்திரமாக, அரசு மேற்பார்வையின்றி அரசின் கட்டுப்பா டின்றி இயங்கியதாகக் கூறுகிறார்கள். திரு. ஆர். வி. கிருஷ் ணய்யர் அவர்களுடைய மகன்தான் இந்த ஆர். கே. பாலசுப்பிர மணியம் என்று கருதுகிறேன்.

திரு. பாலசுப்பிரமணியம் என்பவர்தான் அந்தக் கடிதத்தை எழுதி இருக்கிறார். ஆனால், திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் 1937-ஆம் ஆண்டிலே இருந்து, 1941 ஆம் ஆண்டு வரை பிறகு 1952 ஆம் ஆண்டிலேயிருந்து 1955 ஆம் ஆண்டு வரை இருந்திருக்கிறார். 1924 ஆம் ஆண்டிலேயிருந்து 1955 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அவரேதான் செயலாளராக இருந்தார் என்பது உண்மைக்கு மாறான ஒன்று.

1924 ஆம் ஆண்டிலிருந்து 1955 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து அவரேதான் செயலாளராக இருந்தார் என்பதும்—உண்மைக்கு மாறான ஒன்று என்றுதான் கூறி இருக்கிறேன். திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிடும் பாராட்டுத் தீர்மானத்தைப் பார்த்தாலும் அதிலும் '' "during years 1924 to 1941 and 1952 to 1955 என்றுதான் இருக்கிறது. 1924-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அவர் செயலாளராக இருந்ததாகக் கூறப்படவில்லை. உண்மை யும் அதுதான் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டது போல '' 1924 ஆம் ஆண்டு முதல் திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் காரிய தரிசியாக இருக்கவில்லை '' என்று நான் கூறவில்லை. '' 1924 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இருக்கவில்லை '' என்றுதான் குறிப்பிட்டேன்.

மேலும் 1946ஆம் ஆண்டு முதல் 1951 ஆம் ஆண்டு வரை திரு. ராகவ வர்மா அவர்கள் செயலாளராக இருந்திருக்கிறார்கள் எனவே, திரு. ஆர்.வி. கிருஷ்ணய்யர் அவர்கள் 1924 ஆம் ஆண்டு முதல் 1955-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து இருக்கவில்லை.

தவிர, தமிழ்நாட்டில் சட்டப் பேரவை, மேலவை என்று இரு அவைகள் ஏற்பட்டு இயங்க ஆரம்பித்தது 1937-ஆம் ஆண்டு முதல்தான். அதுவரை Legislative Council என்றுதான் அழைக்கப்பட்டு வந்தது. எனவேதான் Secretary, Legislative Assembly என்பதை 1937-ஆம் ஆண்டில்தான் ஏற்பட்டது என்ற காரணத்தினாலும் அவ்வாறு கூறப்பட்டது.

பேரவைத் தலைவரின் அலுவலக அமைப்பு, அவைக்கும், அவையின் உறுப்பினர்களுக்கும் உதவி புரிவதற்காகவே இருக் கின்றது. ஆங்கில பாராளுமன்றத்தில் '' கிளார்க் ஆப் தி அவுஸ் ' (Clerk of the House) என்பவர் ஒரு 'Institution, ஆகவே கருதப்படுகிறார்.



1981 மார்ச் 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

The resignation of a Clerk of the House inevitably marks the end of a Parliamentary Charter என்று கூறப் பெற்றுள்ளது. எனவே, என்னுடைய உரையில் தவறு ஏதும் ஏற்படவில்லை என்பதை அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 6. கவன ஈர்ப்பு.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கும் வாராந்திர அரிசி அளவு குறைப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், வின்செண்ட், பொ. விஜயராகவன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்பு மிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, '' கன்னி யாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம் தாலுக்கா, மற்றுமுள்ள இடங்களில் உள்ள கூட்டுறவு மற்றும் மாதிரிக் கடை களில் வாரத்திற்கு 7½ கிலோ அரிசி விநியோகத்தை 6 கிலோவாகக் குறைத்தது பற்றிய '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் .** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

பொதுமக்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் சென்னை நகரிலும், அதன் சுற்றுப்புற பகுதிகளை தவிர மற்ற இடங் களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு திங்கள் ஒன்றுக்கு 24 கிலோ அரிசி என்று 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று நிர்ணயிக்கப்பட்டது. அரிசியின் கையிருப்பு நிலை திருப்திகரமாக இருந்ததால் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7 ஆம் நாள் முதல் ஒரு குடும்ப அட்டைக்கு மாதத்திற்கு 24 கிலோ இருந்ததை 30 கிலோ என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் தற்காலிக மாக அதிகரித்தார். இப்போதிருக்கும் அரிசி கையிருப்பு குறை வாக இருப்பதால் மேலும் 30 கிலோ அரிசி என்ற அளவில்

விநியோகம் செய்யும் நிலைமை இல்லாததால் மற்ற மாவட்டங்களில் கொடுப்பதைப் போல ஒரு குடும்ப அட்டைக்கு, மாதம் ஒன்றுக்கு 24 கிலோ அரிசி வழங்க 1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்துள்ளார். நிலைமைகளை கவனித்து இருப்பில் பற்றாக்குறை ஏற்படும்போது அளவைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இவற்றை ஒட்டி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

மேற்கொண்டு இப்போது அரிசியின் விலை ஓரளவிற்கு ஏறி வருகிற நிலைமை இருப்பதால் அரசாங்கத்தின் சார்பாக குடும்ப அட்டைக்கு கொடுக்க வேண்டிய பங்கு அதிகமாக இருப்பதின் காரணமாக இந்த பற்றாக்குறை இன்னும் கொஞ்சம் அதிகமானால் 24 கிலோவையே கூட இன்னும் 20 கிலோவாக குறைக்க வேண்டிய நிலை ஏற்படும், மீதியை அவரவர்கள்.பொது இடங்களில் தான் வாங்கிக் கொள்ள .வேண்டும். ஆனால் இருக்கிற நிலைமை அவ்வப்போது ஆராய்ந்து இதில் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள நிலைமைகளைப் பற்றி சொல்கிறபோது, குறிப்பாக அந்த மாவட்டம் ஏற்கெனவே ஒரு பற்றாக்குறை மாவட்டம், குறிப்பாக விளவங்கோடு தாலுக்கா மிக பற்றக்குறை பிரதேசம். அது மட்டுமல்ல அந்த மாவட்டத்தினுடைய எல்லைப்பகுதியை அடுத்த மாநிலம் அதைவிட பற்றாக் குறை மாநிலமாகும். வெளி மார்க்கெட்டில் அரிசி வருகின்ற போது அந்த அரிசி முழுவதும் வெளி மாநிலங்களுக்குச் சென்றுவிடுகின்றது. அந்த காரணத்தால் 1972ல் சிறுவர்களுக்கு ஒரு கிலோவும் வயது வந்த ஒரு தனி நபருக்கு வாரத்திற்கு இரண்டு கிலோவும் சில ஆண்டு காலம் கொடுக்கப்பட்டது. ஆனால், தாராளமாக கடந்த சிலஆண்டுகளாக அரிசி கிடைத்த காரணத்தாலும், வெளிமார்க்கெட்டில் ஏராளமாக அரிசி கிடைத்ததாலும், விலை குறைந்திருந்த காரணத்தாலும் குடும்ப அட்டைகளுக்கு வாரம் 7½ கிலோ என்ற ஒரு நிலை உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால், திடீரென்று ஏற்பட்ட அரிசி பற்றாக்குறை காரணத்தாலும் வறட்சி ஏற்பட்டிருப்பதாலும், விவசாயிகள் போட்ட நெல் பயிர்கள் தீய்ந்து விட்ட காரணத்தாலும், ஒரு நிலைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு இதற்கு முன்னால் இருந்த அரிசியின் அளவைப் போல, வயது வந்த தனி நபருக்கு 2 கிலோ என்று வழங்கவேண்டும். வயது வராத சிறுவர்களுக் 2 கிலோ அரிசி வழங்க வேண்டும் என்று கூறி இதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல நிலைமைகள் சரியாக இருந்து கையிருப்பு அதிகரிக்கின்ற நிலைமைகள் ஏற்படும் போது நாம் அதிகரிக்கிறோம். 1977-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 ஆம் நாளிலே 24 கிலோ என்ற எல்லா மாவட்டங்களிலும், எல்லா குடும்ப அட்டைகளுக்கும் தரப்பட்டது. ஆனால், 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7 ஆம் நாள் முதல் அரிசி அதிகமாக கொடுக்க முடியும் என்று நிலைமையில் 24 கிலோ என்பதை 30 கிலோவாக உயர்த்தினோம். இப்போது பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே வகையாக குடும்ப அட்டைக்கு தரவேண்டுமென்ற காரணத்தால் 24 கிலோ என்று கொடுக்கிறோம். நான் இப்போது சொல்வது இன்னும் பற்றாக்குறை ஏற்பட்டு நமக்கிருக்கிற இருப்பு இன்னும் பரவலாக தரவேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது இதை கூட குறைக்க வேண்டிய சூழ்நிலை வரலாம். ஆனால் இப்போது இல்லை. இப்போது 24 என்று வழங்குகின்ற அளவை கூடுதலாக்குவதற்கான வசதி இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, விளவன்கோடு, கல்குளம் தாலுக்காகளில் கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய, கேரளாவினுடைய எல்லைப்பகுதிகளிலே இருக்கின்றன. பெல்ட் ஏரியா என்று அது சொல்லப்பட்டு 1972-லே அங்கு அனைத்து கட்சிகளும் நடத்திய கூட்டு போராட்டத்தினுடைய விளைவாக அங்கு ஒரு நபருக்கு 2 கிலோ வீதம் அரிசி விநியோகம் செய்யப்பட்டு வந்தது. அந்த இரண்டு தாலுக்காவிலுள்ள கணிசமான பகுதி கடலோரமும், மற்ற பகுதி மலை ஓரப்பகுதியாக இருக்கிறது என்பதால் அங்கு அரிசி கிடைப்பதற்கு வேறு வழி இல்லை. அந்த பிரத்தியேக நிலைமையைப் போல் கருதி, பெல்ட் ஏரியா என்ற காரணத்தால், ஏற்கெனவே, வழங்கப்பட்டிருந்த 2 கிலோ வீதம் உடனடியாக கொடுக்க முடியாவிட்டாலும் 7½ கிலோ என்ற முறையை உடனடியாக கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[முற்பகல் 11–10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் அதைத்தான் முதலிலேயே குறிப்பிட்டேன். இப்போதுள்ள நிலைமையை யொட்டித்தான் செய்யவேண்டியிருக்கிறது. நிலைமைகள் திருப்திகரமானால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

[1981 மார்ச் 5

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் லெவிக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டம் குமரி மாவட்டம். அண்டை மாநிலமான கேரளா அரிசிப் பற்றாக்குறை உள்ள மாநிலம். எவ்வளவு தான் லெவி என்று வைத்தாலும் அரிசியை தலைசுமையிலே ஆற்று வயல் ஓரங்கள் மூலமாகக் கொண்டு சென்று விடுகிறார்கள். அதுமட்டுமல்ல, பருவ மழை தவறியதின் காரணமாக குமரி மாவட்டத்திலே கடைவரம்பு நிலங்கள் பயிராகவில்லை. அதன் காரணத்தினால் பொது மக்களுக்குத் தேவையான அரிசி ஓப்பன் மார்க்கெட்டிலே கிடைக்கவில்லை. இந்த நேரத்திலே கூட்டுறவு மற்றும் மாதிரிக் கடைகளில் வாரத்திலே 7½ கிலோவாக கொடுக்கப்பட்ட அரிசியை 6 கிலோவாகக் குறைத்திருப்பதால் பொதுமக்கள் சற்று அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். எனவே, குமரி மாவட்டத்திற்கு தனிக் கவனம் எடுத்து 7½ கிலோ அரிசிவீதம் விநியோகம் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதைத்தான் நான் முன்பே குறிப்பிட்டேன். 1977 லிருந்து 1979-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7-ஆம் நாள் வரையிலும் 6 கிலோவாக கொடுக்கப்பட்ட நிலைமை இருந்தது, அதற்குப் பிறகு நிலைமை திருப்திகரமாக இருந்தால் 7½ என்று அதை தூக்கினோம் இப்போது நிலைமை கொஞ்சம் நெருக்கடியாக இருக்கிறது, ஆகவே, குறைக்கிறோம். திருப்தியான சூழ்நிலை ஏற்பட்டால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. பொ. விஜயராகவன் :** கன்னியாகுமரி மாவட்டம் ஏற்கெனவே பற்றாக்குறை மாவட்டமாக இருப்பதால் அண்டை மாநிலமாக கேரள மாநிலம் இருப்பதால் இன்னும் பற்றாகுறை அதிகமாகியிருக்கிறது, ஓப்பன் மார்க்கெட்டிலே அரிசி, கிடைக்கவில்லை, அங்கே சென்றுவிடுகிறது. இந்த அரசாங்கம் குடும்பக் கார்டுகள் மூலமாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் அரிசி குறைவாக இருக்கிறது. லெவி முறை வந்ததால் தான் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். அமைச்சர் சொல்கிறபோது அரசிடம் கையிருப்பு இல்லை. கையிருப்பு உயர்ந்தால் அதை உயர்த்துவதற்கு யோசிக்கலாம் என்று சொன்னார்கள். அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்திலிருந்தும், உபரியாக அரிசி உள்ள பஞ்சாப் மாநிலத்திலிருந்தும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் மற்ற மாவட்டங்களுக்கும் உள்ள பிரச்னையைப் போக்குவதற்காக அதிகப்படி கையிருப்பு வைத்துக் கொள்கிற வகையிலே அங்கிருந்து கொள்முதல் செய்து இருப்பைப் பலப்படுத்தி 6 கிலோ அளவை அதிகமாக்கி 7½



1981 மார்ச் 5] [திரு. பொ. விஜயராகவன்]

16 கிலோவாக கொடுப்பதற்கும் - வயது வந்தவர்களுக்கு 2 கிலோ வீதமும் வயது குறைந்தவர்களுக்கு 1 கிலோ வீதமும் கொடுக்க கூடிய முறையிலே சட்டப்படியான ரேஷன் முறை இருக்கிற பகுதிகளில் கொடுப்பதற்கு தட்டுப்பாடு இருக்கிற இந்த நேரத்திலே அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலிலே நான் நிலைமைகளைச் சொன்னேன். குடும்பக் கார்டுதாரர்களுக்கு அரிசி தருகிற பொறுப்பு நமக்கு இருக்கிறது. வெளி மார்க்கெட்டிலே தாராளமாகக் கிடைத்தபோது விலை குறைவாக இருந்தபோது எல்லோரும் வெளியில் தாராளமாக வாங்கினார்கள். அப்போது கையிருப்பும் அதற்குப் போதுமானதாக இருந்தது. இப்போது மாநிலத்தில் 2, 3, 4 மாதங்களுக்கு முன்னாலே 13 ஆயிரம், 14 ஆயிரம் டன் விநியோகிக்கப்பட்டது என்றால் இப்போது 39 ஆயிரம் டன் விநியோகிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது என்றால் கார்டுகள் மூலம் வாங்காதவர்கள் எல்லாம், வெளியே வாங்கிக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் இப்போது கார்டுகள் மூலமாக வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். காரணம் குடும்பக் கார்டு மூலமாக நாம் 65, 70 காசு குறைத்துக் கொடுக்கிறோம். வெளி மார்க்கெட்டிலே விலை ஏறிவிட்டதால் எல்லா கார்டு தாரர்களும் இங்கேயே வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் அதிகமாக வைத்திருக்க வேண்டிய சூழ்நிலை வருகிறது. மத்திய அரசு குவிண்டால் ஒன்றுக்கு 105 ரூபாய் நிர்ணயித்திருந்தாலும் நாம் ஒரு பத்து ரூபாய் கூடுதலாகப் போட்டு 115 ரூபாய் என்ற அளவுக்கு வாங்கினாலும்கூட தனி வியாபாரிகள் தான் வாங்கிக் கொண்டார்களே தவிர, நமக்குக் கிடைக்கவில்லை. கார்டுதாரர்களுக்கு கொடுப்பதற்காக அதிக கையிருப்பு வேண்டுமென்ற முறையிலே தான் லெவி 40 சதவீதம் போட்டு நம்முடைய கிடங்குகளிலே வைத்தால் அவர்களுக்கு நாம் விநியோகம் செய்ய முடியும். இப்போது கொஞ்சம் கடினம் என்று சொல்லாம். மே, ஜூன் திங்கள் வரும்போது இன்னும் கடுமையான நிலைமை வந்தால், விலை ஏறும்போது விலை அதிகப்படியாக ஏறாமல் பார்த்துக்கொள்ள முன்கூட்டி நடவடிக்கை எடுப்பதற்காக இப்போது நமக்கு இருக்கிற கஷ்டங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். நிலைமைகள் திருப்திகரமாகிறபோது நாம் அதைப்பற்றி கவனிக்கலாம். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வெளி மார்க்கெட்டிலே கிடைக்கவில்லையென்றும், கேரளாவுக்குக் கடத்திச் செல்லப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலைமைகள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து இந்தத் துறையினர் எந்த அளவுக்குச் சரிப்படுத்த இயலும் என்று பார்த்து ஆராய்ந்து செய்யலாம். நிலைமை திருப்திகரமாக வந்தால் அப்படிப்பட்ட நிலைமைகளைப் பற்றி நாம் கவனிக்கலாம்.

### 7. தனியார் அலுவல்கள்.

### தனித் தீர்மானம்.

#### மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் (தொடர்ச்சி.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் பற்றி திரு. ஆர். உமாநாத் அவர்கள் 31–7–1980 ஆம் தேதியன்று மொழிந்த தனித் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெறும். திரு. ப. நெடுமாறன்

***திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இந்திய அரசியல் சட்டத்தில் இப்பொழுது உள்ளபடி மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் போதுமானது அல்ல, இன்றைய சூழ்நிலையில் அதை மறுபரிசீலனை செய்ய எல்லா மாநில முதல்வர்களையும் இந்தியப் பிரதமர் கூட்டி ஆலோசனை செய்ய வேண்டுமென்று அவர்கள் அளித்திருக்கின்ற தீர்மானத்தை நான் முழுமையாக ஆதரிக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

இன்றைய சூழ்நிலையில் இந்த மறுபரிசீலனையும், மறு சிந்தனையும் தமிழகத்திற்கு மட்டுமல்லாமல் இந்தியா பூராவும் எந்த மாநிலமானாலும் அங்கேயெல்லாம் இந்த சிந்தனை வளர்ந்து கொண்டிருப்பதை இந்த அவையிலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தியா சுதந்திரம் பெறுகின்ற காலத்தில், 1947 ஆம் ஆண்டில் இருந்த சூழ்நி ல வேறு 1981 ஆம் ஆண்டில் இன்றைக்கு 34 ஆண்டுகளுக்குப் பின்னாலே எவ்வளவோ மாறுதல்கள், இந்தச் தேசத்தின் அரசியலிலேயும், பொருளாதாரத் துறையி யும், இன்னும் மற்றத் துறைகளிலே எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியா தந்திரம்பெற்ற காலத்திலே இருந்த சூழ்நிலைக் கேற்ப அரசியல் சட்டத்தை வகுத்த பெரிய தலைவர்களும், அறிஞர்களும் அன்றைய சிந்தனையிலே இந்திய அரசியல் சட்டத்திலே சிலவற்றைச் சேர்த்தார்கள்.

இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்தில், இந்தியா, பாகிஸ்தான் என்று இரண்டாகப் பிரித்து அகதிகள் பிரச்னை பூதாகாரமாக உருவெடுத்திருந்தது ; சுதேச சமஸ்தானங்கள் ஒவ்வொன்றும் சுதந்திர நாடாக அறிவிக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டு இருந்த நிலைமை, பல்வேறு மாநிலங்களிலேயும் மொழி வழி மாநிலங் களாக ஆக வேண்டுமென்ற போராட்டங்கள் வருவதற்கான அறி குறிகள் உருவாகிக் கொண்டிருந்தன. பல்வேறு மாநிலங்கள் எல்லைப் பிரச்னைகளில் சச்சரவிட்டுக் கொள்ளும் நிலைமைகளும்





வளர்ந்தன. அன்றைக்கு அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள் அவற்றையெல்லாம் மனதிலே கொண்டு (A Strong Centre) பலமான மத்திய அரசு இருந்தால்தான் இவற்றையெல்லாம் சரி செய்ய முடியுமென்று நினைத்து, அன்றைக்கு அந்தச் சிந்தனை ஓட்டத்திலே அரசியல் சட்டத்தை வகுத்தார்கள்.

ஆனால் அந்தச் சிந்தனை ஓட்டத்தின் நடுவே கூட அன்றைக்கு இந்தியாவிலே Unitary form of Government இருக்க வேண்டுமா Federal form of Government இருக்க வேண்டுமா என்பது பற்றிய சர்ச்சை எழாமல் இல்லை. இந்திய அரசியல் நிர்ணய சபையில் இதைப் பற்றி விரிவாக விவாதம் நடைபெற்றிருக்கிறது. பல்வேறு தரப்பட்டவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அரசியல் சட்ட நிர்ணய சபையின் விவாதங்களை எடுத்துப் பார்த்தால் அவைகள் தெளிவாகத் தெரியும். அந்த நிலைமைகள், அந்தச் சூழ்நிலைகள் இன்றைக்கு இல்லை என்பதை நாம் உணர்வோம்.

1981 ஆம் ஆண்டிலே இருக்கக் கூடிய சூழ்நிலை என்ன ? 1946–47 ஆம் ஆண்டிலே இருந்த சூழ்நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இந்த முப்பதாண்டுகளுக்கு மேற்பட்ட இடைக் காலத்திலே இந்திய அரசியல் சட்டத்தை அமல் நடத்துகின்ற முறையிலே அனுபவ ரீதியாகப் பல குறைபாடுகளை எல்லா மாநில அரசுகளும், மைய அரசும் உணர்ந்திருக்கின்றன ; இதில் அரசியல் கட்சி வேறு பாடு இல்லை ; எல்லாக் கட்சியைச் சேர்ந்த பலரும் தங்கள் கருத்துக்களை, நம்முடைய திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய தீர்மானத்திற்கு எது அடிப்படையான சிந்தனை ஓட்டமோ அந்த சிந்தனை ஓட்டத்தை பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், அமைச்சர் களாக இருந்தவர்களும், ஆளுகின்ற பொறுப்பிலே இருந்தவர் களும் பல்வேறு கால கட்டத்திலே வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1947 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையிலேயும் இந்தியா பூராவும் அநேகமாக எல்லா மாநிலங்களிலும், மையத் திலும் ஒரே கட்சி ஆட்சி நடந்தது காங்கிரஸ் கட்சி ஆட்சி, இருபதாண்டுக் காலம் எல்லா மாநிலங்களிலும் அநேகமாக அந்த நிலைமை இருந்தது. அந்த நேரத்திலே மாநில முதல்வர் களெல்லாம் காங்கிரஸ் கட்சியின் மத்திய செயற் குழுவிலோ, கட்சி அமைப்புகளிலோ பெரிய பதவியிலே இருந்தார்கள். அன்றைக்குப் பிரதமராக இருந்த மதிப்பிற்குரிய ஜவஹர்லால் நேரு அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகப் பல முறை அந்த நேரத்தில் இருந்தார்கள். ஆகவே, கட்சி, ஆட்சி என்பதற்கிடையிலே அதிக வித்தியாசம் இல்லாமல் இருந்தது. அதனால் பல்வேறு மாநிலங்களில் மாநில மைய உறவு பற்றிய

சிக்கல் தோன்றிய நேரத்திலே அதை அவர்கள் கட்சிக்குள்ளேயே விவாதித்து கட்சிக்குள்ளேயே, முடிவு செய்து கொண்டார்கள். அதில் சில நேரங்களில் சுமுகமான முடிவுகள் ஏற்பட்டிருக்கின்றன; பல கட்டங்களிலே பிரச்னைகள் சுமுகமாக முடியவில்லை. இருந்தாலும் கூட உள்கட்சிப் பிரச்னை என்ற நிலையில் விட்டுக் கொடுத்துப் போகும் அளவிற்கு இருபதாண்டுக் காலமாக நிலைமை இருந்தது.

[முற்பகல் 11-20]

ஆனால், 1967-க்குப் பின்னாலே, இந்தியாவில், அரசியல் சூழ்நிலையாலே பெரிய மாறுதல் வந்தது. பல்வேறு மாநிலங்களிலே எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கக் கூடிய ஒரு நிலைமை வந்தது. மையத்திலே ஒரு ஆட்சியும் பல்வேறு மாநிலங்களிலே வெவ்வேறு கட்சிகளின் ஆட்சியும் வரக் கூடிய சூழ்நிலையிலே நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இன்னும் அதிகமாயிற்று. இன்றைக்கும் அந்த நிலைமைதானிருக்கிறது. ஒரே கட்சி இந்தியா பூராவுக்கும் இருந்த நிலைமை மாறி, பல்வேறு கட்சிகள், பல்வேறு மாநிலங்களிலே ஆளும் பொறுப்பை ஏற்கும் நிலைமை உருவாகி, அதன் விளைவாக, மைய மாநில அரசுகளுக்கிடையேயுள்ள உறவுகள், உரிமைகள், பற்றிய சிறு சிறு பிரச்னைகள் தோன்றி, அவைகள் பெரிதாக வளர்ந்து, மைய, மாநில அரசுகளுக்கிடையே இன்றைக்குப் பெரிய மோதல்கள் ஏற்படக் கூடிய நிலைமை உருவாகி இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தச் சூழ்நிலையில் நம்முடைய அரசியல் சட்டம் என்ன சொல்கிறது என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசியல் சட்டம், மைய அரசுக்கு, என்னென்ன அதிகாரங்கள், என்னென்ன, உரிமைகள், மாநில அரசுக்கு என்னென்ன அதிகாரங்கள், என்னென்ன உரிமைகள் என்பதைத் தெளிவாக, திட்டவட்டமாக வரையறுத்திருக்கிறது. அதைப் போல, நம்முடைய தமிழகச் சட்டமன்றமானாலும், பல்வேறு மாநிலங்களிலே அமைந்திருக்கின்ற சட்டமன்றங்களானாலும், அந்தச் சட்டமன்றங்கள் பெற்றிருக்கிற அதிகாரம் என்பது, அரசியல் சட்டம் நமக்குக் கொடுத்திருக்கிற அதிகாரமாகும். மாநிலச் சட்டமன்றங்களுக்கான அதிகாரத்தை, மத்திய நாடாளுமன்றம் கொடுக்கவில்லையென்பதை நாம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். மத்திய நாடாளுமன்றம் கொடுத்த, அந்த அதிகாரத்தை மாநிலச் சட்டமன்றம் ஏற்றிருக்கிறது என்று சொன்னால், மத்திய நாடாளுமன்றத்திற்கு மாநிலச் சட்டமன்றங்களின் அதிகாரங்களிலே, உரிமைகளிலே தலையிடுவதற்கு உரிமையுள்ளது. ஆனால், நமது அரசியல் சட்டம் மாநிலச் சட்ட மன்றங்களுக்குத் தெளிவான, திட்டவட்டமான அதிகாரங்களை வழங்கியிருக்கிறது. அதைப் போல, மத்திய நாடாளுமன்றத்திலே, சில நேரங்களிலே, மாநிலங்





களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறைகளைப் பற்றிய சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரத்தையும் அரசியல் சட்டம் வழங்கியிருப்பதை நாம் மறுக்கவில்லை, இருக்கிறது. ஆனால், எந்தச் சமயத்தில் ? லிமிட்டட் பவர்ஸ்-அது குறைந்த பட்சத்தில், சில விசேஷமான நேரங்களில், மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளைப் பற்றி, ஸ்டேட் சப்ஜக்ட்ஸ், அவற்றைப் பற்றி மத்திய நாடாளுமன்றம், சட்டங்கள் இயற்றுவதற்கான அதிகாரம் சில நேரங்களிலே, சில குறிப்பிட்ட சூழ்நிலையிலே தான் திட்டவட்டமாக வழங்கப்பட்டிருக்கிறது. அதுவும் தற்காலிகமாகத்தான். பின்னாலே, அந்த மாநிலச் சட்ட மன்றங்கள் உருவான பிறகு அந்தச் சட்டங்களை மாநிலச் சட்ட மன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று அரசியல் சட்டம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அதைப் போல மத்திய அமைச்சரவை இருக்கிறது என்று சொன்னால், அது நாடாளு மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டங்களை மாநிலங்கள் அமுல் நடத்த வேண்டுமென்று, மாநில அரசுகளுக்கு, மைய அரசு can give directions only வழி காட்டுதலை மைய அரசு செய்யலாம். ஆக இதையெல்லாம் நாம், பார்க்கும்போது, தெளிவாக நம்முடைய அரசியல் சட்டத்திலே சமஷ்டி அரசியல் அமைப்புக்கு இடம் கொடுத்து, மாநிலங்களின், உரிமைகளை மதித்து, மாநிலங்களின் அதிகாரத்தை மதித்து மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை ஒரு எல்லைக்கு உட்படுத்தித்தான் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், இன்றைக்கு என்ன நடக்கிறது ? இந்தியாவின் அரசியல் அமைப்பு இன்றைக்குச் செயல்படுகின்ற விதத்தைப் பற்றி ஒரு அறிஞர் சொன்னார்.

Indian political system is democratic in its form of government, federal in character and relationship among its geo-political and geo-physical components but unitary in spirit and action. என்று. இந்தியாவின் அரசியல் அமைப்பு முறை என்பது ஜனநாயக அடிப்படையிலே அமைந்த அரசாங்கமாக இருந்தாலும் கூட, Unity or in spirit and action என்று தெளிவாகச் சொன்னார். இது ஒரு சமஷ்டி அரசியலமைப்பைத் தன்னுடைய குணாம்சமாகக் கொண்டது என்பதைத் திட்டவட்டமாக, தெளிவாக, நமது அரசியல் சட்டம் சொல்லியிருக்கிறது. ஆனால், இன்றைக்கு இருக்கின்ற நிலைமையிலே, 33 ஆண்டுக் காலமாக, அரசியல் சட்டம் அமுல் நடத்தப்பட்ட முறையிலே, இந்த சமஷ்டி அமைப்புத் தத்துவம் என்பது கொஞ்சங் கொஞ்சமாக சிதைக்கப்பட்டு விட்டது. இன்னும் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த முயற்சி தொடர்ந்து மத்திய அரசாலே செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாம் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மத்திய அரசு பலமாக இருக்க வேண்டும் என்பதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், அதற்காக மாநில அரசுகள் பலவீனமாக இருக்க வேண்டுமா என்பதுதான் நம்முடைய கேள்வி

[திரு. ப. நெடுமாறன்] [1981 மார்ச் 5

இதிலே மறைந்த தலைவர் நேருஜி அவர்கள் ஒரு கருத்தை சொன்கனார்கள். மத்திய அரசு பலமாக இருக்க வேண்டும் என்பதற்காக மாநில அரசுகள் பலவீனமாக இருக்க வேண்டும் என்று சொல்லக் கூடாது. அப்படி சொல்வதை அரசியல் சட்ட ரீதியாக நான் ஏற்கவில்லை என்று அவர்கள் சொன்னார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுப்படுத்த விரும்புகின்றேன். இந்த 30 ஆண்டு காலத்திற்கு மேலாக நம்முடைய அரசியல் சட்டம் சமஷ்டி அடிப்படையில் அமைந்தது என்பதை மறந்து விட்டு, மத்திய அரசும் மற்றவர்களும் செயல்பட்ட காரணத்தினாலேதான் மாநில அரசுகள் கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய அதிகாரங்களை இழந்து கொண்டே வருகின்றன.

மாநிலங்களின் மீது குறிப்பாக மாநிலங்களின் நிதியின் மீது மத்திய அரசுக்கு இருக்கக் கூடிய ஆதிக்கம் என்பது அளவு கடந்தது. மாநில அரசுகள் கேவலம் ஊராட்சிகளுக்குச் சமமாக ஆக்கப்பட்டு, அந்த நிலைக்கு தாழ்த்தப்பட்டு, நிதி விஷயங்களில் மத்திய அரசை எதிர்பார்க்கின்ற ஒரு பரிதாபகரமான நிலை உருவாகி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அதைப்போல பல்வேறு மாநிலங்களில் அரசியல் நோக்கத்துடன் மாநில அரசுகளை டிஸ்மிஸ் செய்யும் முறை அந்தப் போக்கு இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த மாநில அரசுகளை டிஸ்மிஸ் செய்து அதற்குப் பதிலாக குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்துகின்ற ஒரு நிலைமை அடிக்கடி ஏற்படுகின்றது. இவ்விதம் பல்வேறு காரியங்களிலே மாநில அரசுகள் எல்லாம் தங்களுடைய உரிமைகளை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய—மாநில உறவுகளிலே, அதிலும் குறிப்பாக நிதி உறவுகளைப் பற்றி சில விவரங்களை இந்த அவையின் முன்னாலே வைக்க விரும்புகின்றேன். மத்திய அரசுக்கு இருக்கக் கூடிய நிதி அதிகாரங்கள் எல்லை கடந்தது. அளவே இல்லாதது. மத்திய அரசு எதன் மூலமாகவெல்லாம் நிதி பெறுகிறது? கொழுத்த வரி இன்கம்டாக்ஸ், எக்சைஸ் போன்ற வரிகள் எல்லாம் மத்திய அரசுக்கு வருகின்றன. இன்டர்னல் லோன்ஸ், உள்நாட்டிலே கடன் எழுப்புவதன் மூலமாக மத்திய அரசு நிதி பெறுகின்றது. அதைப்போல மத்திய அரசு நடத்துகின்ற பொதுத் தொழில்கள் மூலமாகவும், வங்கிகள் மூலமும் மத்திய அரசு நிதி தேடிக்கொள்ளும் வழி இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக வெளிநாடுகளில் இருந்து உதவிகள் பெறுவதன் மூலமும், கடன் பெருவதன் மூலமும் மத்திய அரசுக்கு வேண்டிய நிதி கிடைக்கின்றது. இதிலே எதுவும் மாநில அரசுகளுக்கு இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். மேலே கண்ட எல்லாவற்றின் மூலமாகவும் மத்திய அரசு தன்னுடைய நிதியைப் பெருக்கிக் கொள்கின்றது.



1981 மார்ச் 5] [திரு. ப. நெடுமாறன்]

இன்னொன்று, முக்கியமானது. நம் நாட்டின் கனி வளங்கள் இருக்கின்றதே அதை வெட்டி எடுத்து அதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய ஆதாயம் என்பது மாநில அரசுக்கு இல்லை. அதன் மூலம் கிடைக்கக்கூடிய ஆதாயம் என்பது முழுமையாக மத்திய அரசுக்கு சேருகின்றது. வெளிநாட்டின் உதவியை மத்திய அரசின் மூலமாகத்தான் பெறவேண்டும். நம்முடைய தமிழக அரசு நினைத்தால் கூட ரஷ்யாவில் இருந்தோ அமெரிக்காவில் இருந்தோ எந்தவிதமான உதவியையும் நேரடியாகப் பெற்றுவிட முடியாது. அதை மத்திய அரசின் மூலமாகத்தான் பெறவேண்டும். மத்திய அரசு வாங்குகிற உதவிகளும், மானியமும் கடன்களும் எங்கிருந்து வாங்கினாலும், எந்த வெளிநாட்டிலிருந்து வாங்கினாலும், உலக வங்கியில் இருந்து வாங்கினாலும் நாடு முழுவதற்குமாகத்தான் மத்திய அரசுக்கு இந்தத் தொகையைப் பெறுகிறது. நாடு பூராவிலும் இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களின் சார்பாக மத்திய அரசு கையெழுத்திட்டு இந்த உதவியைப் பெறுகின்றது. இது நியாயமான முறையிலே மாநிலங்களுக்குள்ளாக பகிர்ந்து அளிக்கப்படவேண்டும். ஆனால் என்ன நடக்கிறது? வெளி நாட்டில் வாங்கக் கூடிய உதவிகள், நிதிகள் எதுவாக இருந்தாலும் மத்திய அரசு தன்னை ஒரு வள்ளலாக பாவித்துக் கொண்டு மாநில அரசுகளுக்குப் பிச்சை போடுகின்ற மாதிரி நடந்து கொள்கின்றது. மாநில அரசுகளுக்கு அதைக் கொடுப்பதிலே கூட பட்சபாதம் காட்டிக் கொண்டு இருக்கிறது. அந்த முறையிலே மாநிலங்கள் தங்கள் உரிமைகளை இழந்து, நிதி பெறவேண்டுமானால் மத்திய அரசைத் தழுவிப் போனால்தான் நிதி பெற முடியும் என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டு, அதன் காரணமாகத்தான் மத்திய அரசை நோக்கி கையேந்தி செல்லக்கூடிய பரிதாபகரமான நிலையில் மாநில அரசுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. வெளிநாடுகளில் இருந்து மைய அரசு பெறக்கூடிய உதவி, அது எந்த உதவியாக இருந்தாலும், மானியமாக இருந்தாலும், கடனாக இருந்தாலும், மத்திய அரசு அதை விநியோகிக்கின்ற இப்போதைய முறைக்கு முற்றுப் புள்ளிவைத்து, அதற்குப் பதிலாக எல்லா மாநில அரசுகளின் சம்மதத்தோடு கூடிய ஒரு இன்டிபென்டன்ட் தனி சுதந்திர அமைப்பை நிறுவி, அந்த சுதந்திர அமைப்பின் மூலமாகத்தான் மாநிலங்களுக்கு இந்த உதவிகள் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைமையை உருவாக்குவோமானால், மத்திய அரசினுடைய ஆதிக்கம் இதிலே நீடிக்க முடியாது. அப்படி ஒரு நிலைமை உருவாவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று உங்கள் மத்தியிலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

[முற்பகல் 11-30]

இந்திய அரசு இன்றைக்கு மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கும் நிதி எந்தச் சட்டத்தின் அடிப்படையில் செய்யப்படுகிறது என்று ஆராய்வோமானால், வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் 1935-ஆம் ஆண்டில் வகுத்த சட்டப்படி, அன்றைக்கு அந்நிய ஆட்சி வகுத்த அந்தச் சட்டத்தின் அடிப்படையில், அந்த நிதி

[திரு. ப. நெடுமாறன்] [1981 மார்ச் 5

கொடுக்கப்படுகிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் தான் இன்னின்ன மாநிலங்களுக்கு நிதி உதவி செய்ய முடியும் என்று இன்னும், சுதந்திரம் வந்த பிறகும் அந்தச்சட்டத்தை வைத்துக் கொண்டு இருப்பது வருந்தத்தக்கது என்பதைத் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1935 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட சட்டம் எந்தச் சூழ்நிலையில் வகுக்கப்பட்டது? அன்றைக்கு இருந்த மாநிலங்களின் நிதி நிலைமை என்ன? அன்றைக்கு இருந்த மத்திய அரசின் நிதி நிலைமை என்ன? எந்த அடிப்படையில் அந்தச் சூழ்நிலையை வைத்து மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கும் நிதி பிரித்துக் கொடுக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தப் பத்தாம்பசலி சட்டத்தின்படி 1981 ஆம் ஆண்டிலும், கிட்டத்தட்ட அந்தச் சட்டம் வந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகும் அரை நூற்றாண்டுகளுக்குப் பின்னாலும், நிதி ஒதுக்கும் நிலையை மத்திய அரசு பின்பற்றுவார்களேயானால் மாநிலங்களின் இன்றைய நிதித் தேவையை உணர்ந்து செயல்படுவது ஆகாது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு இன்றைக்கு மத்திய அரசு தயாரா என்றால் இல்லை. அதைப்பற்றி நாடாளுமன்றத்தில் பலர், பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் பல்வேறு காலகட்டத்தில் எழுப்பியிருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு மாநிலங்களின் மீது அவர்களுக்குள்ள நிதி ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்கு இந்தச் சட்டம் உதவிகரமாக இருக்கிறது என்ற காரணத்தால் அந்தச் சட்டத்தை கைவிடுவதற்கோ அல்லது முற்றிலுமாக திருத்தி அமைப்பதற்கோ மத்திய அரசு இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் தயாராக இல்லை. தன்னுடைய நிதிஆதிக்கம் அல்லது பிடிப்பு மாநிலங்களின்மீது இருக்க வேண்டும் என்று மத்திய அரசு விரும்புவதால் அந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு மத்திய அரசு விரும்பவில்லை.

அரசியல் சட்டத்தின் 280வது விதியிலே பைனான்ஸ் கமிஷன் அமைக்க வேண்டும் என்று அரசியல் சட்டம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது அதன்படி பைனான்ஸ கமிஷன் அமைக்கப்பட்டு இருக்கிறது. பைனான்ஸ் கமிஷன்—அல்லது நிதிக் குழு அமைக்கப்பட்ட மறு வினாடியே அது சுதந்திரம் உள்ள ஒரு அமைப்பாக மாறிவிடுகிறது. மத்திய அரசாங்கத்தின் வருவாயிலிருந்து அல்லது வரிகளில் இருந்து மாநிலங்களுக்கு எவ்வளவு பங்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதை அது முடிவு செய்கிறது. பல்வேறு கட்டங்களில், பல்வேறு சூழ்நிலைகளை மனதில் வைத்துக்கொண்டு அது அளிக்கிற தீர்ப்புதான் இறுதியானது. அந்தத் தீர்ப்பை மாற்றுவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது ஆனால், இந்த பைனான்ஸ் கமிஷன் எந்த



1981 மார்ச் 5] [திரு. ப. நெடுமாறன்]

நிலைமைக்கு இன்றைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அரசியல் சட்டத்தின் அங்கீகாரம் இல்லாத 'திட்டக்குழு'—'பிளானிங் கமிஷன்' முழுமையான அதிகாரம் பெற்ற சுய ஆதிக்க அமைப்பாக மாறி, அது ஒரு சூப்பர் கேபினெட் என்று சொன்னால் கூட ஆச்சர்யப்படுவதற்கு இல்லை. இந்திய மந்திரி சபையை விட அதிக அதிகாரம் கொண்ட சூப்பர் கேபினெட்டாக, மாநில அரசுகளை ஆட்டிவைக்கும் நிலைமைக்கு அது இன்றைக்கு மாறியிருக்கிறது. அதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசியல் சட்ட அங்கீகாரம் பெற்றது பைனான்ஸ் கமிஷன் ஒன்றுதான். அது பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. மாறாக பிளானிங் கமிஷனுக்கு அரசியல் சட்டப்பூர்வமான அங்கீகாரம் கிடையாது. அரசியல் சட்டத்தின் எந்த இடத்திலும் பிளானிங் கமிஷன் பற்றி குறிப்பு இல்லை. பிளானிங் கமிஷன் பற்றிய எந்தப் பிரிவும் அரசியல் சட்டத்திலே இல்லை. ஆனால், அந்தப் பிளானிங் கமிஷன் எப்படி தோன்றியது என்பதைப் பார்க்க வேண்டும். மத்திய மந்திரி சபையின் ஒரு தீர்மானத்தின் மூலமாக அந்தப் பிளானிங் கமிஷன் உருவாக்கப்பட்டது. அது உருவாக்கப்படுகிற நேரத்தில் அது எப்படி செயல்பட வேண்டும் என்று விரும்பினார்கள் என்றால், It is expected to be an advisory body of technical experts. அது நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவாக, திட்டக் குழுவாக விளங்க வேண்டும், இயங்க வேண்டும் என்று எதிர்பார்த்து, அன்று இருந்த மத்திய மந்திரி சபை தன்னுடைய எக்சிகியூட்டிவ் ஆர்டர் மூலமாகத்தான் அந்தப் பிளானிங் கமிஷனை அமைத்தார்கள். ஆகவே, அரசியல் சட்டப்பூர்வமான அங்கீகாரமோ அந்தஸ்தோ அந்தத் திட்டக் குழுவிற்கு இல்லை.

இந்தியா பூராவும் ஒரு "செண்ட்ரலைஸ்ட் பிளானிங்" இருக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. பல்வேறு மாநிலங்கள் இருக்கிற ஒரு பெரிய நாட்டில் ஒன்றுபட்ட சிந்தனையுடன் திட்டங்கள் அமைக்கப்படுவதிலே எனக்கு நிச்சயமாக அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால், ஒன்றுபட்ட திட்டம் வேண்டுமென்பதற்காக பல்வேறு மாநிலங்கள் வகுத்திருக்கிற திட்டங்களை சிதைத்து எறிந்து, அந்த மாநிலங்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட புறக்கணித்து விடுகிற ஒரு அதிகாரம் மத்திய திட்டக் குழுவுக்கு இருக்க வேண்டுமா? ஆலோசனை சொல்லுகிற ஒரு அமைப்பாக மத்திய திட்டக்குழு இருக்கலாமே தவிர, இந்த மாநில திட்டங்களுக்கு அனுமதி கொடுக்கிற; நிதி அளிக்கிற அதிகாரம் அதற்கு இருக்கக்கூடாது; அந்த அதிகாரம் அதற்குக் கிடையாது. அதனால் பெருத்த பாதகம் மாநிலங்களுக்கு ஏற்படுகிறது. இது அரசியல் சட்டப்படி செல்லாது. அதற்கு எந்த அதிகாரமும்

இடையாது. ஆனால், அதுதான், இன்றைக்கு எல்லா அதிகாரங்களையும் வைத்திருக்கிறது, மாநிலங்களை ஆட்டிப் படைக்கிறது என்று சொன்னால் கூட மிகையாகாது.

மத்திய அரசு இன்றைக்கு மாநிலங்களுக்குத் தருகிற பல்வேறு மானியங்கள் திட்டக் குழு சிபாரிசு செய்தால்தான் அளிக்கப்படுகின்றன. திட்டக்குழு சிபாரிசு செய்யாவிட்டால் பல்வேறு மாநில அரசுகள் என்ன கேட்டாலும், எந்த மானியமும், எந்த உதவியும் கிடைக்காது என்ற நிலை உருவாக்கப்படுவதால் மாநில அரசுகள் திட்டக் குழுவின் வாசற்படியிலே போய் நின்று, அவர்களை கெஞ்சிக் கூத்தாடி, அவர்களை எப்படியாவது சம்மதிக்க வைத்து, உதவி பெற வேண்டிய ஒரு நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, திட்டங்களை உருவாக்குவது, மாநில அரசுகளுக்கு வழங்குகிற மானியம் எவ்வளவு, கடன் உதவி எவ்வளவு என்பதை நிர்ணயிப்பது, மாநில அரசுத் திட்டங்களை அங்கீகரித்து செயல்படுத்துவது அல்லது மறுப்பது ஆகிய இவ்வளவு அதிகாரங்களும் திட்டக் குழுவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, மாநில அரசுத் திட்டங்கள் ஒவ்வொரு கட்டத்திலும், அது உதவி பெறுவதிலிருந்து முற்றுப் பெறுகிற வரையில் தலையிட்டு ஆட்டிப்படைக்கிற அதிகாரத்தை மத்திய திட்டக் குழுவுக்கு யார் கொடுத்தது? எப்படி அந்த அதிகாரம் வந்தது? யாருக்கும் தெரியாது. ஆனால், அதுதான் இன்றைக்கு ஆட்டிப் படைக்கிறது. இதன் விளைவு என்ன? மாநில அரசுகளுக்கே உரிமையான கல்வி, பாசனம், சாலை அமைப்பு, விலங்குகள் பராமரிப்பு, கூட்டுறவு, தொழிலாளர், வேலைவாய்ப்பு போன்றவைகளில்—இவை மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற துறைகள்—இந்தத் துறைகளில் கூட திட்டக் குழுவின் தலையீடு இருக்கிறது. நம்முடைய திட்டத்தில் பெரும் பகுதி இந்தத் துறைகள் சம்பந்தப்பட்டது. மாநிலங்களுக்கு ஒதுக்கியிருக்கிற துறைகளில் மத்திய அரசின் தலையீடு இருக்கக் கூடாது என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது. அதன்படி மத்திய அரசு தலையீடவில்லை; ஆனால், பிளானிங் கமிஷன் இதிலே தலையிடுகிறது. இந்தத் துறைகளுக்கு திட்டங்கள் தயாரிக்கப்படும்போது பிளானிங் கமிஷன் தலையிட்டு, இவ்வளவுதான் இருக்கலாம்: இப்படித்தான் இருக்க வேண்டும்; இதற்கு மேல் தர முடியாது; இந்த இந்தத் திட்டங்கள் தேவையில்லை என்று சொல்கிறது. (மணியடிக்கப்பட்டது.)

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, சிபாரிசு செய்வதற்காகச் சொல்லவில்லை. இன்றைக்கு பிரைவேட் மெம்பர்ஸ் பிஸ்னஸ். இது எங்கள் தினம். விவாதம் இன்றைக்கு முடியாவிட்டால் அடுத்த நாளில் தொடரலாம். ஆகவே, பில்ஸ் மாதிரி நேரத்தைக் கட்டுப்படுத்தாமல் கொஞ்சம் லிபரலாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.





திரு. ப. நெடுமாறன்: ஆக, மத்திய அரசு தலையீடு இருக்கக் கூடாதுஎன்கின்ற துறைகளிலே திட்டக்குழு அதிகாரம் செலுத்தும் நிலைமை வந்திருக்கிறது என்பது மிகவும் வருந்தத்தக்கது.

அடிப்படையிலேயே, இந்தத் திட்டக்குழு செயல்படுகிற ஒரு முறைக்கு அரசியல் சட்டத்தில் அங்கீகாரம் இல்லை என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். இன்னொரு சங்கடம் என்னவென்றால், மத்தியிலே அமைக்கப்பட்டிருக்கிற திட்டக் குழு என்பது மத்தியிலே எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறதோ அந்தக் கட்சியின் பொருளாதாரக் கொள்கையை மையமாக வைத்து திட்டக்குழு திட்டங்களைத் தயாரிக்கும். அதை ஜனநாயக அமைப்பிலே யாரும் மறுக்க முடியாது. இதற்கு முன்னால் மத்தியிலே ஜனதா அரசு இருந்தது. அவர்களுடைய பாலிசி "ரோலிங் பிளான்" என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே திட்டங்களை உருவாக்கினார்கள். மத்தியிலே இன்று காங்கிரஸ் கட்சி ஆட்சி நடக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடக்கிறது.

[முற்பகல் 11-40]

மேற்கு வங்காளத்தில் இடதுசாரிக் கூட்டணியின் ஆட்சியும், கேரளாவிலே இடதுசாரிக் கூட்டணியின் ஆட்சியும், திரிபுராவிலே இடதுசாரிக் கட்சிகளின் ஆட்சியும் காஷ்மீரத்திலே திரு. சேக் அப்துல்லா அவர்களின் கட்சியும் ஆட்சி நடத்தி வருகின்றன. மாநில திட்டக் குழுவைப் பொறுத்தவரையில் அந்தந்த மாநிலங்களிலே ஆட்சி நடத்துகின்ற கட்சிகளின் பொருளாதாரக் கொள்கைகளுக்கேற்ப அவற்றை மையமாக வைத்து திட்டங்களை உருவாக்க வேண்டும். மத்திய அரசை ஆளுகின்ற காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் அதனுடைய பொருளாதாரக் கொள்கை வேறு, மாநில அரசின் பொருளாதாரக் கொள்கை வேறு. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் சொல்கிறேன். உங்களுக்கு என்று தனியான ஒரு கொள்கை இருக்கின்றது. ஆகவே, இந்த மாநிலத்தை ஆளுகின்றவர்களின் பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்பதான திட்டக் குழு திட்டங்களை உருவாக்கி அதற்கேற்ப நிதியுதவிகளைச் செய்ய வேண்டுமே தவிர மைய அரசின் கொள்கைகளுக்கேற்ப தான் இங்கேயும் திட்டங்களை உருவாக்க வேண்டும், அப்போதுதான் திட்டக்குழு அதை ஏற்கும் என்றால் ஜனநாயக ரீதியிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி, ஆட்சியை நடத்தலாம் என்று அரசியல் சட்டத்திலே வழங்கப்பட்டிருக்கின்ற உரிமைக்கே முரணாக அது அமைந்துவிடும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] [1981 மார்ச் 5

திட்டக் குழுவினைப் பொறுத்த வரையில் அது வெறும் ஆலோசனைகளை மட்டுமே கூறுகின்ற ஒரு அமைப்பாக இருக்க வேண்டும். இந்த மாநிலத்திலே நடைபெறுகின்ற ஆட்சியின் பொருளாதார கொள்கைகளுக்கேற்ப தயாரிக்கப்படுகின்ற திட்டங்களுக்கு டெக்னிக்கல்லாக அவர்கள் ஆலோசனை சொல்லலாமே தவிர, மாநில அரசின் திட்டத்தையே மாற்றியமைக்கவேண்டும் என்றும், மைய அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்பதான திட்டங்கள் இருக்க வேண்டும் என்றும் சொன்னால் மைய-மாநில மோதல் என்பதை நிச்சயமாகத் தவிர்க்க முடியாது. அது வந்தே தான் தீரும். இன்றைக்கு வந்துகொண்டும் இருக்கின்றது. அதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டியவர்களா இருக்கின்றோம்.

இரண்டாவதாக, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், மானியமாகவும், கடனாகவும் மைய அரசு மாநில அரசுகளுக்கு திட்டக் குழுவின் மூலம் தரவேண்டிய நிலைமை இருக்கின்ற காரணத்தால், எதிர்க்கட்சி ஆட்சி நடத்துகின்ற மாநிலத்தில் மைய அரசின் திட்டக் குழுவை எதிர்ப்பதற்கும் கூட யோசிக்கின்ற நிலைமை உருவாகிக்கொண்டிருக்கின்றது. அப்படி அரசியல் ரீதியாக எதிர்த்தால் பொருளாதார ரீதியாக மாநிலங்களுக்கு மைய அரசிடமிருந்து வரவேண்டிய நிதி வராமல் போகுமோ என்று எண்ணி எதிர்க்கட்சிகள் ஆட்சி நடத்துகின்ற மாநிலங்களும் மைய அரசின் கொள்கைக்கேற்ப இயங்க வேண்டிய ஒரு பரிதாபகரமான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திட்டக் குழுவின் உபயோகமே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. திட்டக் குழுவின் உபயோகம் வேண்டும். ஆனால், அது ஒரு டெக்னிக்கல் எக்ஸ்பர்ட் என்ற வகையிலே ஆலோசனைக் குழுவாக மட்டுமே செயல்படவேண்டும் அப்போதுதான் உண்மையான சமஷ்டி அரசியல் தத்துவம் இந்தியாவிலே செயல்பட முடியும். அப்போதுதான் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் சுமுகமான உறவு நிலவ வழி ஏற்படும். இல்லாவிட்டால் மைய அரசு-மாநில அரசு மோதலிலே போய்தான் முடியும். ஆகவே, தனியாக திட்டக் குழுவினை அமைத்து, அது மாநில அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கேற்ப திட்டங்களை உருவாக்கி செயல்படுவதற்கு, உரிமைகள் மாநிலங்களுக்கு வழங்கப்படவேண்டும்.

அடுத்து, ப்ளானிங் கமிஷன் எப்படி உருவாக்கப்படுகிறது? யார் யார் அதனுடைய உறுப்பினர்கள்? மைய அரசை எந்தக் கட்சி நடத்துகின்றதோ அந்தக் கட்சியின் கருத்துப்படிதான் ப்ளானிங் கமிஷன் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.



1981 மார்ச் 5] [திரு. ப. நெடுமாறன்]

மைய அரசின் அரசியல், பொருளாதாரக் கொள்கைகளை ஏற்பவர்கள் யாரோ அவர்களைத்தான் அந்தக் குழுவிலே நியமிக்கிறார்கள். இது தவறான முறையாகும். அதனாலேதான் இந்தச் சிக்கல்கள் எல்லாம் வருகின்றன. ஆகவே எல்லா மாநில முதலமைச்சர்களையும் கூட்டி, அதாவது நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் என்று இருப்பதைக் கூட்டி, அதன் மூலம் திட்டக் குழுவினை உருவாக்குகின்ற ஒரு செயல் திட்டம் இருந்தால் இந்தச் சிக்கல்கள் எழாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லா மாநில முதலமைச்சர்களும் உட்கார்ந்து ப்ளானிங் கமிஷன் எப்படி அமைய வேண்டும் என்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டும். அப்போதுதான் உண்மையான சமஷ்டி தத்துவம் வெற்றி பெற முடியும்.

அடுத்து இந்திய அரசியல் சட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இண்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்கப்பட வேண்டும் என்று. இந்தியா சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகள் ஆனாலும் கூட இதுவரை மைய அரசிலே இருந்த எந்தக் கட்சியினரும் அதைச் செய்யவில்லை. இண்டர் ஸ்டேட் கவுன்சில் என்பது குடியரசுத் தலைவரால் அமைக்கப்பட வேண்டும் என்று அரசியல் சட்டம் தெளிவாகச் சொல்லுகிறது.

குடியரசுத் தலைவர் மத்திய அரசின் பிரதிநிதி அல்ல. அவர் இந்திய தேசத்தின் பிரதிநிதி. அரசியல் சட்டம் 263-வது விதியின்படி அவர் இந்திய சமஷ்டி அரசின் நடுவராகச் சித்தரிக்கப்படுகிறார். ஒரு அம்பயர் மாதிரி—மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் இடையே ஒரு பாலமாக இருக்கிறார். இண்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்கும் உரிமையை, இந்திய அரசியல் சட்டம் அவருக்கு வழங்கியிருக்கிறது. மாநிலங்களுக்கிடையே உள்ள தகராறுகள் பற்றி விசாரித்து ஆலோசனை வழங்குதல், மாநிலங்களுக்கிடையேயும், மத்திய-மாநிலங்களுக்கிடையேயும் எழும் பொதுவான பிரச்சினைகளை குறித்து விவாதிக்கவும், எந்தக் கொள்கைப் பிரச்னையைக் குறித்தும் அதை செயல்படுத்தும் வேலைகளில் பரிந்துரை செய்தல் ஆகியவை அந்த இண்டர் ஸ்டேட் கவுன்சிலின் பணிகள் ஆகும்.

இக்குழு வழங்கும் பரிந்துரைகளின்படி குடியரசுத் தலைவர் செயல்படவேண்டும். அரசியல் சட்டப்படி இது அவருடைய கடமையாகும். அதற்காக அவர் மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அவராகவே தன்னுடைய உத்தரவின் மூலம் அவைகளை அமுல் படுத்திவிடலாம். ஆகவே இதற்குத்தான் மத்திய அரசு அஞ்சுகிறது. ஏனென்றால் இண்டர் ஸ்டேட் கவுன்சில் ஒரு தீர்ப்பினை வழங்கி, அது மத்திய அரசை பாதிக்கப்படுவதாக இருக்குமேயானால், அவர்களுடைய ஆதிக்கம் குறைந்து விடும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான்

[திரு. ப. நெடுமாறன்] [1981 மார்ச்

அது அந்தக் கவுன்சிலை அமைக்க தட்டிக் கழித்துக் கொண்டே வருகிறது. அரசியல் சட்டம் சொல்லி இருந்தாலும் கூட அது அமைக்கப்படாமல் உள்ளது குறித்து நாம் இங்கே ஒரு தீர்மானம் நிறைவேற்றியாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கூட டெல்லிக்குச் சென்றிருந்தபோது இந்தப் பிரச்னையை எழுப்பியிருப்பதை அறிந்து நான் மனதார பாராட்டுகிறேன். அதை இந்தச் சட்ட மன்றம் ஏற்றுக்கொண்டு இண்டர் ஸ்டேட் கவுன்சில் அமைத்தாக வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

அடுத்து இத்தோடு மட்டுமல்லாது, இண்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்காமல் இருந்த செயலை மறைக்க ஒரு சாமர்த்தியமான வேலையையும் மத்திய அரசு செய்திருக்கிறது. இண்டர் ஸ்டேட் கவுன்சிலை அமைத்திருந்தால் சிக்கல் தீர்ந்திருக்கும், அதை ஏன் அமைக்கவில்லை என்று கேட்பவர்களுக்கு, ஏதையாவது சொல்லியாக வேண்டும் என்பதற்காக நேஷனல் டெவலெப்மெண்ட் கவுன்சில் என்று ஒன்றை அமைத்திருக்கிறார்கள். மாநில முதல் அமைச்சர்களையும், மற்றவர்களையும் கொண்டது அந்தக் குழு. ஆனால் இதற்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. பிரதமர் கூப்பிட்டால் வருவார்கள். அவர்களின் ஆலோசனையை சொல்வார்கள். அதிலே அவர்கள் ஏதாவது முடிவு செய்தால் கூட அதை அமுல் படுத்த வேண்டிய அவசியம் மத்திய அரசுக்கு கிடையாது. வெறும் ஆலோசனைக் குழுவாக மட்டுமே அது நியமிக்கப்பட்டுள்ளது. ஆகவே இப்படி ஒரு கவுன்சிலை அமைத்துக் கொண்டு, அதன் பின்னணியில் இண்டர் ஸ்டேட் கவுன்சில் அமைக்காத வேலை சாமர்த்தியமாக மறைக்கப்பட்டுள்ளது. அந்த வேலை இன்னும் தொடர்ந்துக் கொண்டு தான் இருக்கிறது. ஆகவே, சமஷ்டி தத்துவ முறையின் அடிப்படையிலே ஆட்சி அமைய வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றுக் கொண்டு வரும் இந்த சூழ்நிலையிலே மத்திய அரசின் இந்தப் போக்கு அதற்கு ஒவ்வாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு ஆட்சேபகரமான ஒரு பிரிவு நம்முடைய அரசியல் சட்டத்திலே இருக்கிறது. அது என்னவென்றால் நம்முடைய அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவின் படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட மாநில அரசுகளை, ஆளுநர் கலைக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தால் அதை ஏற்று குடியரசுத் தலைவர் மாநில ஆட்சிகளை டிஸ்மிஸ் செய்யலாம் என்கிற பிரிவு நமது அரசியல் சட்டத்திலே இருந்துக் கொண்டு, மாநில அரசுகளின் தலைக்கு மேல் வாள் போல் தொங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பகுதியை அரசியல் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என்று இந்தச் சட்ட மன்றம் வலியுறுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1981 மார்ச் 5] [திரு. ப. நெடுமாறன்[

[முற்பகல் 11-50]

எதற்காக இந்தப் பிரிவை நீக்கவேண்டுமென்று கோருகிறோம்? மாநில அரசு மத்திய அரசினால் அல்லது நாடாளுமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற அரசல்ல. மாநில மக்கள் வோட்டு போட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அமர்ந்திருக்கின்ற ஒரு மன்றம் இது. இந்த மன்றத்தில் யாருக்கு மெஜாரிட்டி, பெரும்பான்மை இருக்கிறதோ அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறார்கள், அமைச்சரவை அமைக்கிறார்கள். அந்தக் கட்சியின் தலைவர் முதல் அமைச்சராக ஆகிறார். மக்கள் நம்பிக்கை பெற்று, மக்கள் வாக்குகளைப் பெற்று ஆட்சிப்பொறுப்புக்கு வந்தவர்கள் ஆட்சியில் இருக்கும்போது இவர்களை அங்கே டெல்லியில் உள்ள மைய ஆட்சி அல்லது மைய அரசு டிஸ்மிஸ் செய்யலாம் என்று அதிகாரம் இருப்பது என்பது எவ்வளவு தவறானது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மத்தியில் நாடாளுமன்றம் இருக்கிறது. அந்த நாடாளுமன்றத்தை டிஸ்மிஸ் செய்கிற அதிகாரம் குடியரசுத் தலைவர் அவர்களுக்குக் கிடையாது. இது அரசியல் சட்டத்தில் வழங்கப்படவில்லை. மத்திய நாடாளுமன்றத்தில் பிரதமராக இருப்பவர் அந்த சபையின் மெஜாரிட்டியை அல்லது பெரும்பான்மையை இழப்பார்களேயானால் அப்போது குடியரசுத் தலைவர் அவர்கள் அவரை பதவியிலிருந்து விலகச் சொல்லி யாருக்கு பெரும்பான்மை இருக்கிறதோ அந்தக் கட்சித் தலைவர் பிரதமர் பதவி வகிக்க வேண்டும். அவர்கள் அமைச்சரவை அமைக்கவேண்டும் என்று சொல்லலாமே தவிர, பெரும்பான்மை உறுப்பினர்கள் கொண்ட ஒரு நிலையான ஆட்சி அமைக்கமுடியாத பட்சத்தில் மீண்டும் தேர்தல் நடத்தி யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களை ஆட்சி அமைக்கச் சொல்லும் அளவில்தான் அரசியலமைப்புச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குத்தான் இடம் இருக்கிறது. ஆனால் அந்த உரிமைகள் சட்டமன்றங்களுக்கு வழங்கப்படவில்லை. குடியரசுத் தலைவர் நினைத்தால் மத்திய ஆட்சியை டிஸ்மிஸ் செய்துவிடமுடியாது. பிரதம மந்திரியையோ மற்ற மந்திரிகளையோ அல்லது நாடாளுமன்றத்தையோ டிஸ்மிஸ் செய்கிற அதிகாரம் அவருக்குக் கிடையாது.

அதேபோல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்ட மன்றங்களை, சட்டமன்ற உறுப்பினர்களை, அவர்களால் அமைக்கப்பட்ட ஆட்சியை டிஸ்மிஸ் செய்கிற அதிகாரம் மட்டும் எதற்காக இன்றைக்கு இருக்க வேண்டும்? ஆகவே அந்தப் பிரிவை நாம் நீக்கினால்தான் எதிர்காலத்தில் சட்டமன்றங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

[திரு. ப. நெடுமாறன்] [1981 மார்ச் 5

ஒரு ஆட்சி அமைந்திருக்கிறது என்றால் அந்த ஆட்சியை அரசியல் காரணங்களுக்காக டிஸ்மிஸ் செய்கிற ஒரு போக்கு இன்றைக்கு வளர்ந்து கொண்டு வருகிறது. எதிர்கட்சிகளின் ஆட்சியினை சகித்துக்கொள்ள முடியாமல் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி டிஸ்மிஸ் செய்கிற முறை இருக்கிறது. மக்கள் இந்த ஆட்சி வேண்டாமென்று தீர்ப்பளித்தால் இந்த ஆட்சி விலகலாமே தவிர நாடாளுமன்றத்தில் ஒரு கட்சி மெஜாரிட்டி பெற்றுவிட்ட காரணத்தால் இங்கே சட்டமன்றத்தில் மெஜாரிட்டி பெற்றிருக்கிற ஒரு ஆட்சியை டிஸ்மிஸ் செய்கிற அதிகாரம் மத்திய அரசுக்கு இருப்பது என்பது சரியல்ல, அது தவறானதாகும். ஆகவே 356 வது பிரிவை அரசியல் சட்டத்தில் இருந்து நீக்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளவேண்டும்.

இன்னொரு பிரிவு இருக்கிறது. 249 வது பிரிவு, இந்தப் பிரிவும் அபாயகரமான பிரிவாகும். அந்தப் பிரிவு என்ன சொல்கிறது? மாநிலங்களுக்குள்ள அதிகாரங்கள் என்ன என்பதை அரசியலமைப்புச் சட்டம் தெளிவாகச் சொல்கிறது. மத்திய அரசுக்கு உள்ள அதிகாரங்கள் பற்றியும் தெளிவாகச் சொல்கிறது. இரண்டுபேர்களுக்கும் பொதுவான அதிகாரங்கள் பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றது. மாநிலத்தின் அதிகாரத்திற்குட்பட்ட துறைகளில் தலையிட்டு சட்டம் இயற்ற வேண்டுமென்று நாடாளுமன்றம் விரும்பினால், மைய அரசு விரும்பினால் அதைச் செய்யலாம். எப்படி செய்யலாம்? தேசிய நலனை மனதில் கொண்டு அதைச் செய்வதற்கான அதிகாரம் மைய அரசுக்கு உண்டு என்று இந்தச் சட்டப் பிரிவு சொல்கிறது. அது ரொம்பவும் தவறான ஒரு போக்காகும். தேசிய நலன் என்று எதைவேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாம். அப்படிச் சொல்லிக்கொண்டு மாநில அரசின் அதிகாரங்களில் குறுக்கிட்டு சட்டம் செய்யலாம் என்றிருக்கக்கூடிய 249 வது பிரிவு ரொம்பவும் அபாயகரமானதொரு பிரிவாகும். ஆகவே அந்தப் பிரிவை நீக்க வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் பாரஸ்ட், சினிமா, விற்பனைவரி, கல்வி, மின்சாரம் இவை மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட துறைகள். மத்திய அரசு மாநில அரசின் அதிகாரங்களுக்கு உட்பட்ட இத்துறைகளை எடுத்துக்கொள்ள கொஞ்சங்கொஞ்சமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அதேபோல் மாநில அரசின் அதிகாரத்திற்குட்பட்ட துறை போலிஸ் துறை, சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரம் மாநில அரசை சார்ந்தது. மத்திய அரசுக்கு அந்தப் பொறுப்பு இல்லை. ஆனால் இன்று என்ன நடக்கிறது? சென்ட்ரல் ரிசர்வ் போர்ஸ், பார்டர் செக்யூரிட்டி போர்ஸ் போன்றவைகளை மத்திய அரசு உருவாக்கி வைத்து அண்மையில் சில மாதங்களுக்கு முன்னால் ஒரு சட்டத்தை மைய அரசு பிறப்பித்திருக்கிறது. ஒரு மாநிலத்தில் ஏதாவது ஒரு குழப்பம் அல்லது கலவரம் ஏற்பட்டால் மாநில அரசு மூலம் தான் அதை அடக்க வேண்டும்.



1981 மார்ச் 5] [திரு. ப. நெடுமாறன்]

மாநில அரசு தங்களிடம் இருகக் கூடிய போலீஸ் படைபோதாது இராணுவத்தை அனுப்புங்கள் அல்லது மத்திய போலீஸை அனுப்புங்கள் என்று கேட்டுக் கொண்டால்தான் அதனை அனுப்பி மாநில அரசுக்கு துணை செய்து அந்தக் கலவரங்களை ஒடுக்க வேண்டும், இதுதான் அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று மத்திய அரசு பிறப்பித்திருக்கிற புதுச் சட்டப்படி ஏதாவது ஒரு மாநிலத்தில் ஏதாவது இரண்டு மூன்று மாவட்டங்களில், சில பகுதிகளில் கலவரம் என்று சொன்னால் மாநில அரசு விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உடனடியாக மத்திய போலீஸ் அல்லது இராணுவத்தை அந்தக் கலவரப்பகுதிகளுக்கு அனுப்பி அந்தக் கலவரங்களை அடக்குவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் கொடுக்கிற ஒரு சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்திருக்கிறது என்று சொன்னால், இது எதிர்காலத்தில் எங்கே கொண்டு போய் விடும் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

வேண்டாத கட்சி ஆட்சி நடத்தக் கூடிய மாநிலத்திலே, அந்த ஆட்சிக்கு விரோதமாக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு வழிவகை இருக்கிறது. ஆகவே, 249வது பிரிவை உடனடியாக நீக்கவேண்டும், அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும்என்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்த விரும்புகிறேன்.

இத்தகைய வேண்டாத போக்கை எப்படி மூதறிஞர் இராஜாஜி அவர்கள் விளக்குகின்றார் என்பதற்கு ஒன்றைச் சொல்கிறேன்.

The Independence of the State is being forgotten and unitary State is being established in India thoughtlessly.

என்று சொன்னார். சிந்தனையற்ற வகையில் இந்தியாவிலுள்ள மாநிலங்களின் சுதந்திரத்தை, அவர்களின் சுய ஆதிக்கத்தைப் பற்றி,

"Unitary State is being established in India thoughtlessly.

என்று மதிப்பிற்குரிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொன்னார். அவர் ரொம்ப மிதமாகப் பேசக்கூடியவர்; தரக்குறைவாகப் பேசக்கூடியவர் அல்ல, அவரே, இப்படி கடுமேயான வார்த்தைகளை உபயோகித்தார். கவர்னர் ஜெனரலாக இருந்த அவரே இப்படிச் சொல்லியிருக்கிறார். இந்த நிலைமை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பதை அவர் பலமாகக் கண்டித்தார் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

நாம் மாநிலங்களுக்கு இப்படியெல்லாம் அதிகாரம் வேண்டுமென்று வற்புறுத்துவதால், இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு, ஒற்றுமைக்கு விரோதமானவர்கள் என்று யாரும் கருதக் கூடாது.

[திரு. ப. நெடுமாறன்] [1981 மார்ச் 5

தேசிய ஒருமைப் பாட்டிற்கு, தேச ஐக்கியத்திற்கு விரோதமானவர்கள் என்று அர்த்தமாகாது. இந்த தேசம் ஒருமைப்பாட்டோடு, ஐக்கிய நிலையோடு திகழ வேண்டுமென்ற காரணத்தினால்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுங்கள், அதிகாரங்களைப் பரவலாக ஆக்குங்கள் என்ற கோரிக்கையை இன்றைக்கு உண்மையான தேச பக்தர்கள் எழுப்பிக் கொண்டிருக்கிறார்களே தவிர, தேச ஐக்கியத்தில நம்பிக்கையற்றவர்கள் எழுப்பவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

இதைப்பற்றி இன்னும் சில உதாரனங்களை நான் இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். பெரிய தேசியத் தலைவர்கள் இதை ஆதரித்துக் கூறியவற்றை இங்கே எடுத்துவைக்க விரும்புகிறேன். கல்வித் துறை என்பது முழுக்க முழுக்க மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தால் நல்லது ஒரே சீரான கல்விக் கொள்கையை உருவாக்க முடியும் என்று அன்றைக்குக் கல்வி அமைச்சராக இருந்த அபுல் கலாம் ஆசாத் அவர்கள் விரும்பினார்கள். அதைப் பற்றிய பலமான சர்ச்சை அந்த நாளிலே நடந்தது. கல்வித் துறையை அரசாங்கமே எடுத்துக் கொண்டு, எலிமென்டரி எஜுகேஷனிலிருந்து, காலேஜ் எஜுகேஷன்வரை ஒரேமாதிரியாக செயல்படுவதற்கு ஒரு நிலை உருவாகும் என்றும், எனவே இதை மத்திய அரசாங்கமே எடுத்துக் கொள்ளும், மாநிலங்களுக்கு இந்த அதிகாரம் வேண்டாம் என்ற நிலை உருவானபோது, இதை மதிப்பிற்குரிய தேசியத் தலைவர் அபுல் கலாம் ஆசாத் அவர்கள் செய்தபோது, அன்றைக்கு இரண்டு மாநிலங்களின் முதல்வர்கள் கடுமையாக எதிர்த்துப் போராடினார்கள். அவர்கள் யார் என்று சொன்னால், நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். பிற்காலத்தில் இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்தவரும், அன்றைக்கு உத்திரப்பிரதேசத்தின் முதல்வராக இருந்தவருமான கோவிந்த வல்லப பந்த் அவர்களும், ஒன்றுபட்ட பம்பாய் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த பீ.ஜி. கேர் அவர்களும் எதிர்த்தார்கள். இருவரும் காங்கிரஸ்காரர்கள் ; நேருஜிக்கு நண்பர்கள். ஆனால் அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். அப்படி எதிர்த்ததன் காரணமாக, அன்றைக்குப் பிரதமராக இருந்த நேருஜி அவர்கள் தலையிட்டு, அந்தத் திட்டத்தை நிறுத்தினார். அதேபோல் இன்றைக்கும் பல்வேறு தேசியவாதிகள் இந்தப் பிரச்னையை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மேற்கு வங்காளத்திலே முதலமைச்சராக இருந்த டாக்டர் பி.சி. ராய் அவர்கள் பிராந்திய கட்சியைச் சேர்ந்தவர் அல்ல. நேருஜியின் தந்தை மோதிலால் நேரு அவர்களின் நண்பர் ; மகாத்மா காந்திக்கே மருத்துவர். மேற்கு வங்கத்தின் உரிமைக்குப் பங்கம் வந்த காலத்திலே டாக்டர் பி. சி. ராய் அவர்கள் மத்திய அரசை எதிர்த்துப் போராட, போர்க் குரல் கொடுக்க



1981 மார்ச் 5] [திரு. ப. நெடுமாறன்]

கொஞ்சமும் தயங்கவில்லை. அதே போல் தாமோதர் வேலி கார்ப்பரேஷன் என்ற மத்திய அரசாங்கத்தின் திட்டத்திலே, அந்த மாநிலத்திற்கு உரிய பங்கு இருக்க வேண்டும், மத்திய அரசாங்கமே இந்தத் திட்டத்தில் முழுமையாக ஆதிக்கம் செலுத்த விரும்பினால அதை நான் அனுமதிக்க முடியாது என்று சொல்லக்கூடிய துணிவு டாக்டர் பி. சி. ராய் அவர்களுக்கு இருந்தது. அதனால், அவர் தேசிய விரோதி என்று யாரும் சொல்லிவிடமுடியாது. அவர் ஒரு நல்ல தேசியத் தலைவர். காங்கிரஸ் தலைவர். நேருஜிக்கு உற்ற நண்பர்.

[நண்பகல் 12—00]

அதைப் போலவே இன்று தமிழகத்தின் அண்டை மாநிலங்களான கேரளத்தையும், கர்நாடகத்தையும் ஒன்று சேர்த்து. தட்சிணப் பிரதேசமாக அமைக்க வேண்டுமென்று கோரிக்கை எழுந்தபோது அப்போது பிரதம மந்திரியாக இருந்த மறைந்த திரு. நேருஜி அவர்கள் பெங்களூரில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். மூன்று மாநிலங்களின் முதலமைச்சர்களையும் கூட்டி தேச நன்மைக்காக நான் சொல்கிறேன், தட்சிண பிரதேசம் அமைப்பதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னபோது, மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். தமிழகத்தின் நலன்களுக்கு ஏற்றதல்ல என்று கூறினார். மற்ற மாநிலங்களின் நலன்களுக்கும் ஏற்றதாக இருக்காது என்றார். காங்கிரஸ் அந்த மொழிவழி மாநிலக் கொள்கையை அடிப்படையிலே ஏற்றுக் கொண்டது, அதற்கு விரோதமானது இது, அதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தட்சிண பிரதேசத் திட்டத்தை அன்றைக்கு எதிர்த்த காமராஜ் அவர்கள், பிராந்திய கட்சியைச் சார்ந்தவர் அல்ல. அகில இநதிய காங்கிரஸ் தலைவராக இருந்தவர், மத்திய அரசை எதிர்க்க வேண்டிய நேரத்திலே தைரியமாக அச்சமின்றி, யாராக இருந்தாலும், தன்னுடைய கருத்தைச் சொல்லி தமிழ் நாட்டு மக்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அவர் கொஞ்சம் கூடத் தயங்கவில்லை. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. கோவைத்தம்பி :** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் தட்சிண பிரதேசமாக உருவாக்கப்படுவதற்கு அமரர் காமராஜர் அவர்கள், பெரு முயற்சி எடுத்து வந்த பண்டித நேருஜி அவர்களை எதிர்த்தார்கள் என்று சொன்னார்கள் தட்சிணப் பிரதேசத்தை எதிர்த்து தென்னாட்டில் குரல் கொடுத்தவர் அமரர் அண்ணா அவர்கள் ஒருவர்தான். அவர்கள் 1956 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19 ஆம் நாள் காஞ்சி இதழில் காங்கிரஸ் ஆட்சிக்காரர்கள் மௌனமாக இருப்பதாக

வும் நாம் எல்லாம் கூறாது விட்டிருந்தால் நாடு தட்சிணப் பிரதேசத்தைக் கண்டித்து இருக்கிறது என்பது. நேருஜி அவர்களுக்களுக்கோ, காமராஜர் அவர்களுக்கோ எப்படித் தெரிந்திருக்க முடியும். இதனால் தான் தக்க சமயத்தில் தீமை விளைவிக்கும் திட்டங்கள் கிளம்பும்போது கண்டனம் தெரிவிக்க வேண்டிய நிலைமைக்கு ஜனநாயகம் கடமைப்பட்டிருக்கிறது என்ற கருத்தை 1956 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19 ஆம் நாளில் காஞ்சி இதழில் தம்பிக்கு கடிதம் என்ற பெயரில் அமரர் அண்ணா அவர்கள் கொடுத்திருக்கிறார். இதிலேயிருந்து தட்சிணப் பிரதேசத்தைக் கடுமையாக எதிர்த்தவர், பண்டித ஜவஹர்லால் நேருஜி அவர்களுக்குக் குரல் கொடுத்தவர் அமரர் அண்ணா என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ப. நெடுமாறன்** : நண்பர் கோவை தம்பி அவர்களின் கருத்துக்கு நான் எதிராக இல்லை. அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்த்ததை பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால் இந்த மாநிலத்தின் முதலமைச்சர் என்ற முறையிலே சொந்தக் கட்சியின் தலைவர், இந்தியாவின் பிரதம மந்திரி நேருஜி அவர்கள் ஒரு கருத்தை சொல்லி விட்டாரே, இதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமே என்று எண்ணாமல், அதை எதிர்த்தவர் அமரர் தலைவர் காமராஜ் என்று குறிப்பிட்டேனே தவிர, அறிஞர் அவர்களைப் பற்றியோ, அவர் சொன்னதைக் குறைவாக சொல்கிற வகையிலோ நான் சொல்லவில்லை என்று சொல்லிக் கொள்றேன்.

இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய சஞ்சீவி ரெட்டி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வல்லப பந்த் மெமோரியல் லெக்சர் ஒன்றில் அவர் பேசுகிற போது சொன்னார்.

"Considerable devolution of authority from the Centre to the States within the constitutional framework without endangering the fundmental unity of the country would be necessary, if the common man has to play an effective role in the National development.

இதைவிடத் தெளிவாக, திட்டவட்டமாக மாநில அரசினுடைய அதிகாரத்தை வற்புறுத்துகிற கருத்தை வேறு யாரும் சொல்லி விட முடியாது. இந்தியாவின் அரசியல் சட்ட வரம்பிற்கு உட்பட்ட வகையிலும், நாட்டின் பாதுகாப்பிற்கு அடிப்படையான ஒற்றுமைக்கு ஆபத்தில்லாத முறையிலும் நாட்டில் இருக்கக்கூடிய கோடானு கோடி 'ஏழை எளிய மக்கள் இருக்கிறார்கள்,' அவர்களின் தேசிய வளர்ச்சியெல்லாம் உண்மையான பங்கு ஏற்க வேண்டுமானாலும், மேலும் குவிந்து கிடக்கக் கூடிய அதிகாரங்களைப் பரவலாக ஆக்க வேண்டும், மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தினை மதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் சஞ்சீவிரெட்டி அவர்கள், சாதாரணமாக இருந்தபோது இல்லை,





அவர் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றப் பின்னாலே அவர் சொன்னது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் நான் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தத் திருத்தத்தை, இந்த அவையிலே எல்லாத் தரப்பினரும் ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும்.

இது ஒன்றும் தேச ஒற்றுமைக்கு உலை வைக்கக் கூடிய தீர்மானம் இல்லை. தேச ஒற்றுமையை வலியுறுத்துகிற ஒரு தீர்மானம். மாநிலங்களுக்கு அதிகாரம் கொடுப்பதின் மூலம் தான் அந்த ஒற்றுமையை நிறுவுவதற்கு மேலும் வழிவகை செய்யும் என்ற காரணத்தாலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். இதைப் போல ஏற்கனவே மேற்கு வங்காள சட்ட மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மேற்கு வங்க அமைச்சரவை தன்னுடைய கேபினெட் கூட்டத்திலே இதைப் போன்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது.

அதைப் போலவே அண்டை மாநிலமான கேரள சட்ட மன்றத்திலே இதைப் போன்ற ஒரு தீர்மானம் கொண்டு வந்து ஏகமனதாக சர்வ கட்சியினரால் ஆதரிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டு இருப்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்** : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மரியாதைக்குரிய மன்ற உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் மற்ற மாநிலங்களிலே அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டிரு கிறது என்று சொன்னார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் போது ராஜமன்னார் கமிட்டி அமைக்கப்பட்டு அதுபற்றி இங்கே விவாதிக்கப்பட்டு இங்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை அவர் மறைக்கிறாரா அல்லது மறந்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ப. நெடுமாறன்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ராஜமன்னார் கமிட்டி அமைக்கப்பட்டது பற்றிச் சொன்னார்கள். ராஜமன்னார் கமிட்டியின் பரிந்துரைகள் இந்த மன்றத்திலே விவாதிப்பதற்காக வைக்கப்பட்டதே தவிர மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும், பிரதமர் மாநில முதல்வர்களைக் கூட்டிப் பேசி ஆலோசித்து இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற வகையிலே இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 மார்ச் 5

**திரு. அ. ரகுமான்கான் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சி பற்றி ராஜமன்னார் கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டியின் அறிக்கையின் மீது விவாதம் நடைபெற்று மாநில சுயாட்சி பற்றியும் ராஜமன்னார் குழு அறிக்கை பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துக்கள் என்ற முறையிலே அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களும் இது முக்கியமான பிரச்சினை என்று சொல்ல, அனைத்து மாநிலங்களின் முதல்வர்களைக் கலந்து ஆலோசனை செய்கிறேன் என்று சொன்னார்களே அது எப்படி அவருக்குத் தெரியாமல் போய்விட்டது என்பதைத் தெரிந்து கொள்ளக் விரும்புகிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய ஆட்சியில் இருப்பவர்களுடன் இப்போது அவர்களுக்கு நெருக்கமான உறவு இருக்கிறது அந்தக் கருத்துக்களை அங்கே வலியுறுத்தக்கூடிய செல்வாக்கு அவருக்கும் அவர்களுடைய கட்சிக்கும் இருக்கிறது என்று நம்புகிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற போராட்ட உணர்வை நீங்கள் தொடர்ந்து வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றுதான் நான் இந்த நேரத்திலே வேண்டுகோள் விடுகிறேன். இந்தத் தீர்மானத்தை இந்தச் சட்டமன்றத்திலே எங்கள் இயக்கத்தின் சார்பிலே முழுமனதுடன் ஆதரித்து அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டு ஏகமனதாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜகத்ரட்சகன் :** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுவுடைமைக் கட்சியின் சார்பாகக் கொண்டு வந்திருக்கிற மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற தீர்மானத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்காக நான் முதற்கண் நன்றியைக் கூறி மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கோஷமும், கோரிக்கையும் மொழிவழி என்று பிரிந்ததோ மொழிவழி மாநிலங்கள் என்று, என்று சொல்லப்பட்டதோ அன்றே எழுப்பப்பட்டன. அது தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. அந்த உணர்வுகளுக்கு தளநாயகராக இருந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மொழிவழி மாநிலங்கள் பிரிந்த பொழுது பிறந்த சவலைக் குழந்தைகள் இந்த மாநிலங்கள். சவலைக் குழந்தைகளான மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்கிறது பொதுவுடைமைக் கட்சியின் தீர்மானம் ஒரே இடத்திலே தண்ணீர் தேங்கியிருக்குமானால் கிருமிகள் அதிகமாகத்தான் இருக்கும். தண்ணீர் பரவலாக இருந்துவிட்டால் கிருமிகளும் வராது. அதோடு அது அனைவருக்கும் பயன்படுகின்ற நிலைமையும் ஏற்படும். அதைப்போல அதிக அதிகாரங்கள் ஒரே



1981 மார்ச் 5] [திரு. எஸ். ஜகத்ரட்சகன்]

இடத்திலே குவிந்து இருப்பது நல்லதல்ல, எல்லோரும் பகிர்ந்து அளிக்க வேண்டுமென்ற முறையிலே இந்திய அரசியல் சட்டம் மாற்றியமைக்கப்படவேண்டும். இந்திய அரசியல் சட்டத்திலே 3 வகையிலே அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசுக்கு உட்பட்ட பகுதி, மாநில அரசுக்கு உட்பட்ட பகுதி, இரண்டும் சேர்த்து எடுக்கின்ற முடிவு என்று மூன்று வகைகளாக பிரிக்கிறார்கள். அப்படிப் பிரிக்கின்ற நேரத்தில், மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து எடுக்கின்ற முடிவில் மத்திய அரசுக்குப் புறம்பாக இருந்தால் மத்திய அரசு எதை விரும்புகிறதோ அதைத்தான் செய்ய வேண்டுமென்ற அளவிற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அதே போன்று மாநில அரசு தனித்துத் தானே ஒரு சட்டத்தை இயற்றும்பொழுது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு இயங்குகின்ற இந்த மாமன்றத்திலே கொண்டு வரப்படுகின்ற எந்தத் தீர்மானத்திற்கும் மத்திய அரசு—ஜனாதிபதியின் ஒப்புதல் பெற்ற பிறகுதான் அந்தச் சட்டத்தை அமல் நடத்த முடியும் என்ற அவல நிலைமை இன்றைக்கு இருக்கிறது.

[பிற்பக 12.10]

அவல நிலை என்று நான் சொல்லும்பொழுது, எந்தத் திட்டமாக இருந்தாலும் மத்திய அரசினுடைய பார்வைக்குச் சென்ற பிறகுதான் அவைகள் சட்டமாக, சட்ட வடிவங்களாக மாறுகின்றன என்பது ஒருபுறம் இருந்தாலும், 356-வது விதிகூட மத்திய அரசு நினைத்தால் எதையும் செய்யலாம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அதைப் பார்க்காமல் நாங்கள் நினைப்பது இது என்று சொல்வார்கள். எனவே, 356-வது விதியைத் திருத்தாத சூழ்நிலையில்தான் இப்படிப்பட்ட திட்டங்களை நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

மதிப்பிற்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் பேசுகின்றபோது திட்டக் குழுவைப்பற்றிச் சொன்னார்கள். மத்தியிலே ஒரு திட்டக் குழு வைக்கப்பட்டிருக்கிறது; அதே நேரத்திலே மாநிலத்திலேயும் ஒரு திட்டக் குழுவை வைத்திருக்கிறோம். மத்தியிலே வைக்கப்பட்டிருக்கின்ற திட்டக் குழு அங்கீகரிக்கப்படாத முறையிலே திட்டக் குழுவாக வைத்திருக்கிறார்கள். மாநிலத்திற்கு என்ன நிலைமை ஏற்படுகிறது என்றால், மாநிலத்திலுள்ள மக்களுக்கு என்னவெல்லாம் நன்மைகளைச் செய்ய வேண்டும் என்ற நிலை வருகிறபொழுது, மாநில மக்களின் வளர்ச்சிக்கு என்னென்ன திட்டங்களை உருவாக்க வேண்டுமென்பது மாநிலத் திட்டக் குழுவிற்குத்தான் தெரியும். ஆனால் மாநிலத்தில் இருக்கின்ற திட்டக் குழு சொல்லுகின்ற

[திரு. எஸ். ஜகத்ரட்சகன்] [1981 மார்ச் 5

திட்டங்களை மத்திய திட்டக் குழு கேட்பது இல்லை. மத்தியத் திட்டக் குழு என்று சொல்லுகிறபொழுது எல்லா மாநிலங்களி லேயும் இருக்கின்ற பிரதிநிதிகளைக் கொண்டதாக இந்தத் திட்டக் குழு நடைபெறுகிறதா என்றால் கிடையாது. மத்தியில் இரு கின்ற பெரும்பான்மை அமைச்சர்களைக் கொண்ட தாகவும், மத்தியிலே இருக்கின்ற பிரதமரைத் தலைவராகக் கொண்டு அவற்றில் செயலாற்றுகிறார்கள்.

அந்தத் திட்டக் குழு எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலேயெல்லாம் திட்டங்களைத் தீட்டுகிறார்கள் என்று பார்க்கின்றபொழுது, இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னைக்கு ஒரு திட்டத்தை நாம் எடுத்து வைத்தோம், திட்டக் குழுவிற்கு அனுப் பப்பட்டிருந்தது சென்னையில் இருக்கின்ற போக்குவரத்து நெருக்கடியைப் போக்க வேண்டுமென்ற முறையில் Mass Rapid Transit System) வைக்க வேண்டுமென்று அந்தத் திட்டத்தின் வாயிலாக சென்னை கடற்கரை புகைவண்டி நிலை யத்திலிருந்து மைலாப்பூர் வரை செல்லும் பாதை அமைக்க வேண்டுமென்ற அந்தத் திட்டத்தை வைத்திருந்தோம். ஆனால் அந்தத் திட்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அது எடுத்துக் கொள்ளப்படாததற்கான காரணம் புரியவில்லை. நம்முடைய மாநிலத்திற்கு, நமக்குத் தேவையானவற்றை என்னென்ன என்று பார்த்து எதையெல்லாம் எப்படிச் செய்யலாம், எப்படிச் செயல்பட முடியும் என்று எடுத்துச் சொல்கிறோம் ஆனால் இது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றால் 1985 ஆம் ஆண்டு வரையில் நாம் அந்தத் திட்டத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம்.

அதே போன்று கரூர்-திண்டுக்கல் பாதையைப் பற்றி ஏற் கனவே சொல்லியிருக்கிறோம். அதைத் திட்டமாக எடுத்து வைத்திருக்கிறோமே தவிர மத்திய அரசு அதைப் புறக்கணித் திருக்கிறது.

இரயில் பாதைகளை அகலப் பாதைகளாக மாற்றுவதைப் பற்றிக் கூடச் சொல்லியிருக்கிறார்கள் காஷ்மீரிலிருந்து கன்னி யாகுமரி வரையில் மீட்டர் கேஜ் இரயில் பாதை வைத்திருக்கி றோம் ; அதை ப்ராட்கேஜ் பாதையாக மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறோம் மீட்டர் கேஜிலேயே வேண்டுமென்றாலும் சென்று விடலாம். வேண்டுமானால் பயணிகள் நடந்து சென்று விடலாம். ஆனால் சரக்குகள் வட மாநிலங்களிலிருந்து வருகின்றபொழுது, தென் மாநிலங்களுக்கு அந்தச் சரக்குகள் செல்லும்பொழுது ஏற்றுமதிச் செலவில எவ்வளவுக்கெவ்வளவு பணம் விரயம் ஆகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இவை



1981 மார்ச் 5] [திரு. எஸ். ஜகத்ரட்சகன்]

களையெல்லாம் கணக்கிற்கொண்டு திட்டங்கள் வாயிலாகச் சொல்லுகின்றபொழுது அதைப் பற்றிச் சிந்திக்கக்கூட நேரம் இல்லை. எனவே நமக்குத் தேவைப்பட்டவைகளை நாமே நிறைவேற்றுவதற்காகத்தான் இப்படிப்பட்ட திட்டங்களை நாம் தீட்டி வைத்திருக்கிறோம் அவைகளை அவர்கள் ஏற்றுக்கொள் வதற்குத் தயாராக இல்லை.

ஆனால் இப்படிப்பட்ட திட்டங்கள் வருகின்றபொழுது நம் முடைய பிரதான எதிர்க்கட்சி, மாநிலத்திலே சுயாட்சி மத்தி யிலே கூட்டாட்சி என்று சொல்கிற கட்சியைச் சார்ந்தவர்கள் தான் அங்கே துணை சபாநாயகராக இருப்பதாகக் கேள்விப்படு கிறோம். அப்படித் துணை சபாநாயகராக இருப்பவர்கள் இதைப்பற்றி வாய் திறந்து பேசியிருக்கலாம். ஆனால் அவர் களுக்கு வடக்கே இருந்தால் வாழ்வு இருக்கிறது என்ற சூழ்நிலை தவிர வடக்கே சென்று தன்னுடைய மாநிலத்திற்கு எதையும் சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை அவர்களுக்கு. ஆனால் அவர்கள் வடக்கே செல்கிறபொழுது பதவிகளுக்காகவும் மற்ற வைகளுக்காகவும் செல்கிறார்களே தவிர தென்னவர்களைப் பற்றி அங்கே பேசுவோம் என்ற நிலையில்லாமல் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்காக வடக்கே செல்கின்ற சூழ்நிலையை நாம் இங்கே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதைப் போலவே தொழில் தொடங்க வேண்டுமென்றால் ஒரு தொழிலுக்குச் செல்கின்றபொழுது அதற்கு முன்பு ஒரு கோடி ரூபாய் என்று வைத்திருந்தார்கள். இப்பொழுது இரண்டு கோடி ரூபாயாக மாற்றியிருக்கிறார்கள். அப்படி இரண்டு கோடி ரூபாய் என்று மாநிலத்திலே ஒரு தொழிலைத் தொடங்க வேண்டுமென்றாலும்கூட அந்தத் தொழில் தொடங்குவதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொள்ள வேண்டும். லைசென்ஸ் மத்திய அரசாங்கம் தான் தர வேண்டும். அப்படி லைசென்ஸ் பெறத்தான் மத்திய அரசை அணுகுகிறோம் என்று சொன்னால். வேண்டிய எந்திரங்களைப் பெற வேண்டுமானாலும் அந்த எந்திரங்களைப் பெறுவதற்கும் மத்திய அரசாங்கத்தின் அனுமதி யைப் பெற வேண்டியிருக்கிறது. அப்படி இயந்திரங்களைப் பெறுவதற்கு பண வசதிகள் தேவைப்படுகின்றன. அந்தப் பண வசதிகளை எப்படிப் பெறுவது என்று சொல்கிறபொழுது மத்திய அரசிலே இருக்கிற மத்திய வங்கிகள் எல். ஐ. சி. போன்றவைகளோடு தொடர்பு கொள்ள மத்திய அரசை அணுக வேண்டியிருக்கிறது.

அது மட்டுமல்ல, இப்படியெல்லாம் ஒரு தொழிற்சாலை தோற்றுவிக்கப்பட்டு அதிலே உற்பத்தியாகிற பொருளை மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறபொழுது இந்தப் பொருள்களை ஏற்றுமதி செய்ய லைசன்ஸ் வழங்கும் உரிமையை மத்திய அரசு வைத்திருக்கிறது. அது தன் கையில் வைத்திருக்கிறது.

[திரு. எஸ். ஜகத்ரட்சகன்] [1981 மார்ச் 5

ஒரு மாநிலத்திலே தொழில் தொடங்கப்படுகிறது. அந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு வேண்டிய அனைத்து அதிகாரங்களையும் மத்திய அரசு வைத்திருக்கிறபொழுது, அந்தத் தொழிலைத் தொடங்க அனுமதி வழங்க வேண்டிய மாநில அரசு, இங்கே உள்ள மாநில அரசைக் கலந்து பேசுவதில்லை. மாநில அரசை அவர்கள் மதிப்பதில்லை. அப்படி மதிக்கவில்லையென்றாலும் பரவாயில்லை. அந்த மாநிலத்திலே ஏற்படுகிற தொழில் தகராறுகளை அந்த மாநிலத்திலே தொழிற்சாலைகளிலே ஏற்படுகிற போராட்டங்களை அடக்குவதற்கும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவும் மாநில அரசைக் குற்றம் சாட்டுகிறார்கள்; மைய அரசிடம் எப்படிப்பட்ட அதிகாரங்கள் எல்லாம் குவிந்து கிடக்கின்றன என்பதையெல்லாம் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வரிக் கொள்கையைப் பற்றிக் கூட இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். மைய அரசு எப்பொழுதும் மாநில அரசைப் பார்த்துச் சொல்கிற ஒரே பாராயணம், எப்பொழுதும் மாநில அரசுகள் பற்றாக்குறை பட்ஜெட் போடுகிறார்கள் என்பதுதான். அது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. எல்லா மாநிலங்களிலும் போடப்பட்டிருக்கிற பற்றாக்குறை பட்ஜெட்டைப் பார்க்கும்போது அவைகள் அனைத்தையும் கூட்டிப் பார்த்தால், மத்திய அரசு போடுகிற பற்றாக்குறை பட்ஜெட் பல மடங்கு அதிகமாகத்தான் இருக்கிறது. அப்படி அவர்கள் பற்றாக்குறை பட்ஜெட் போட்டாலும் அவர்கள் நோட்டு அடிப்பதன் மூலமாக அந்தப் பற்றாக்குறை பட்ஜெட்டை நிவர்த்தி செய்துவிடுகிறார்கள். அவர்கள் நம்மை அச்சுறுத்துவது 'நீங்கள் எங்களிடத்திலே கடன் கேட்க வேண்டாம்' என்பதற்காகத்தான் பற்றாக்குறை பட்ஜெட் கூடாது என்றெல்லாம் சொல்லி, நம்முடைய மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிய அதிகாரங்களைக் கூடப் பெறமுடியாத ஒரு சூழ்நிலையெல்லாம் நாம் பார்த்து வருகிறோம்.

மத்திய அரசுக்கு அதிக அளவில் லம்ப் சம்-மாகக் கிடைக்கக் கூடிய வரிகள் எல்லாம், குறிப்பாகச் சொல்வதானால், ஏற்றுமதி வரி, இறக்குமதி வரி, வருமான வரி, சொத்து வரி, ஆகியவை ஆகும். இவை அனைத்தும் மத்திய அரசின் கையிலே இருக்கிறது. மாநில அரசுகளுக்கு ஒரு சிறிது பாகத்தைத் தருகிறார்கள்.. அப்படித் தருகிறபொழுது கூட, பாரபட்சமாகச் சில நேரங்களிலே நடப்பதைப் பல சம்பவங்களிலே நாம் பார்க்கலாம்.

வருமான வரியைப் பொறுத்தவரையிலே நான் என்னுடைய கருத்தாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ ரூ. 30,000 கோடி கருப்புப் பணம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிக் கருப்புப் பணம் ரூ. 30,000 கோடி இருப்பதாகச்



1981 மார்ச் 5] [திரு. எஸ். ஜகத்ரட்சகன்]

சொல்கின்றவர்கள், அந்தப் பணத்தை வசூலிப்பதற்கு மாநில அரசிற்குச் சற்று அதிகாரம் தருவார்களானால், அந்த மாநில அரசு தலையிட்டு, அந்த ரூ. 30,000 கோடி கருப்புப் பணத்தை வசூலித்து அந்த மாநில அரசுகளே எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்கிற அறிவிப்பைக் கொடுத்தால், மாநில அரசு அதற்காக முனைப்பாக இருந்து, அப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு மாநிலம் முழுமையாக, ஒற்றுமையாக, ஜாதி பேதம் இன்றி, ஜனநாயக சோஷலிசத்தை அமைக்க வேண்டும் என்று சொன்னால், இந்தியாவைப் பொறுத்தவரையில் மொழிக் கொள்கையைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். மொழிக் கொள்கை என்று சொல்லும்போது பல மொழிகளுக்கும் உரிய மரியாதை தரப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய வாதம் எல்லாம்.

மொழிக் கொள்கை என்று சொல்லும்போது, எல்லா மாநிலங்களிலேயும், அந்தந்த மாநிலங்களிலே இருக்கிற மொழிகள் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். இப்பொழுதெல்லாம், நாகலாந்தில்கூட பல கலவரங்கள் நடப்பதாகச் சொல்கிறார்கள். நாகலாந்தைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு வாய்மொழிதான் இருக்கிறதே தவிர எழுத்து மொழி கிடையாது. வாய்மொழிதான் எங்கள் பேச்சு மொழி. அதைத்தான் நாங்கள் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ள விரும்புகின்றோம் என்று சொல்லி எங்களுடைய தொடர்புமொழியாக ஆங்கிலம்தான் இருக்க வேண்டுமென்று அவர்கள் அங்கே போராட்டம் நடத்துகிறார்கள்.

அதே போல் அசாம், மணிப்பூர், மிசோரம் போன்ற பகுதிகளிலெல்லாம், இப்படி மொழிப் போராட்டங்கள் எல்லாம் கலவரமாகத் தூண்டிவிடப்படுகிறபொழுது, தூண்டிவிடப்படுகின்றது என்று சொல்கிறபொழுது, அந்த மாநில மக்கள் தங்களுடைய உணர்ச்சிகளை மைய அரசுக்கு எடுத்துச் சொல்கிறபொழுது, மைய அரசிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ''டிஸ்டர்ப்ட் ஏரியா ஆக்ட்''—குழப்பம் அடைந்த பகுதிகள் என்று மைய அரசு கருதினால், அவைகளை எடுத்துக் கொள்ள மைய அரசுக்கு அதிகாரம் வழங்குகிற சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அந்த மாநில மக்களுடைய உணர்வுகளை, எண்ணத்தை, எடுத்துச் சொல்வதற்காக, இப்படிப்பட்ட போராட்டங்கள் வாயிலாக எடுத்துச் சொல்லும்போது, அதனை மதிக்காமல் அந்த மாநிலங்களைக் கலைப்பதற்கும் குழப்பம் அடைந்த பகுதி என்று மைய அரசு அறிவிப்பதற்கும் இப்படிப்பட்ட

[திரு. எஸ். ஜகத்ரட்சகன்] [1981 மார்ச் 5

சட்டங்களையெல்லாம் அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதற்காக நாங்கள் நெருங்கினால், பதவிப் பாதுகாப்பு என்று சொல்கிறார்கள். எதிர்க்கட்சி நெருங்கிற பொழுது, சர்க்காரியா கமிஷனுடைய சவப் பரிசோதனை குற்றத் தடயங்கள் இன்னும் சவமாகவில்லையென்ற அச்சத்தில் அடிப்படையில், எதிர்க் கட்சிக்காரர்கள் ஆதரிக்கிறார்களா என்று புரியவில்லை. நாங்கள் நெருங்கினால் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக என்று சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் நெருங்குகிறபொழுது, அவர்கள் எந்தக் காரணத்திற்காக நெருங்குகிறார்கள் என்று தெரியவில்லை. அந்த வகையிலே, மத்திய காவல் துறை யினரைப் பற்றிக் கூடச் சொல்ல வேண்டும். மத்திய காவல் துறையினர் ஒரு மாநிலத்தைக் கலந்து கொள்ளாமல் கூட, மத்திய காவல் படை ஒரு மாநிலம் செல்வதற்கு, மாநிலங் களுக்குச் சென்று கலந்துகொள்வதற்கு வேண்டிய வகைகளிலே சட்டங்களெல்லாம் திருத்தப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20.]

இங்கே நீதிபதி நியமனத்தைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். நீதிபதியை மாற்றுவதற்கு மாநிலத்தில் சுயாட்சி. மத்தியிலே கூட்டாட்சி என்று சொல்லி, சுயாட்சி எங்களுடைய உயிர் மூச்சு என்று சொன்னவர்கள் எல்லாம் வாய் திறக்கவில்லை. ஆனால் எங்களுடைய தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அழகாகச் சொன்னார்கள். அந்தந்த மாநிலத்துக்கு அந்தந்த மாநில மொழி தெரிந்தவர்கள்தான் நீதிபதியாக வரவேண்டும் என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். யாருக்கும் பயப்பட வில்லை. யாருக்குப் பயந்தும் எதற்குப் பயந்தும், எந்த அரசியல் நடத்தியதாக சரித்திரம் கிடையாது. ஆனால் மற்றவர்கள் இந்த நீதிபதி மாற்றியதற்கு ஒரே ஒரு வார்த்தை சொல்லி இருப்பார்களா என்றால் அது கிடையாது.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்க்கட்சியைச் சாடுவதற்கு இதை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதிச் சாடுகிறார். அப்படிச் சாடுவதிலே கூட எனக்கு ஒன்றும் மாறுபாடு இல்லை. ஆனால் உண்மைக்கு மாறான தகவலை இந்த அவைக்குத் தருகிறார். அப்படிப்பட்ட உண்மைக்கு மாறான தகவல் என்னவென்றால், ஏதோ ஆளும் கட்சி சார்பில் முதல் அமைச்சர் தலைமை நீதிபதியை மாற்றி யதைக் கண்டித்து மாற்றியதைக் ஏற்றுக் கொள்ளவில்லை என்று மத்திய சர்க்காருக்கு எழுதியதைப்போல அவர் சொல்லி எதிர்க்கட்சி ஏதோ குரல் கொடுக்கவில்லை என்கிறார். தமிழக முதலமைச்சர் அப்படி எழுதவில்லை என்பது மத்திய அரசாங் கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழக முதல்



1981 மார்ச் 5] [திரு. க. அன்பழகன்]

அமைச்சர் அப்படி எழுதாதபோது எதிர்க்கட்சி குரல் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தலைமை நீதிபதி மாற்றிய அந்தப் பிரச்சினையில் தமிழகத்தின் தலைமை நீதிபதியாக வருகின்றவர்கள் தமிழ் தெரிந்தவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று தங்களுடைய கருத்தைத் தெளிவாக, திட்டவட்டமாக தெரிவித்திருக்கின்றபோது, மாநில சுயாட்சி பற்றி நீண்ட நாட் களாகப் பேசிக்கொண்டிருக்கின்ற ஒரு கட்சி, திராவிட முன் னேற்றக் கழகம், அதுபற்றி வாய் திறக்காமல் இருக்கிறது என்பதை விந்தைக்குரிய ஒன்று என்றுதான் மாண்புமிகு உறுப் பினர் சுட்டிக்காட்டிக் கொண்டு இருக்கிறார். அதற்குத் தேவை யான பதிலைத் தரவேண்டும்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நீதிபதியை மாற்றுவது யாருடைய அதிகாரம் என்று பிரச்சினை எழுகிற போது நீதிபதியை மாற்றக் கூடாது என்று சொல்வதற்கு, மாநில அரசாங்கத்தின் முதலமைச்சர் முன்வராமல், அதைச் சுற்றி வளைத்து ஏதோ தமிழ் தெரியாதவர்கள் வரக்கூடாது என்று சொல்வதன் மூலமாக இந்தப் பிரச்சினையிலே இருந்து தாம் தப்பித்துக் கொள்கிற நிலையில் முட்டுக் கொடுக்க எதிர்க் கட்சி முன்வராது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாற்றுத்தலைவர் அவர் களே, தமிழ் நாட்டினுடைய தலைமை நீதிபதியை மாற்றக்கூடிய அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. அந்த அடிப் படையில் அவர்கள் செயல்படுகிறார்கள். இப்போது நாங்கள் விரும்புவது—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புவது தமிழ்நாட்டினுடைய தலைமை நீதிபதியாக தமிழ் தெரிந்தவர்கள்தான் வரவேண்டும் என்று சொல்வது தமிழ்நாட்டு மக்களுடைய எண்ணங்களை நாங்கள் மதிக்கின்ற வகையிலே, உணர்வுகளை மதிக்கின்ற வகையிலே நல்லபடியாக நீதி தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்கவேண்டிய அடிப்படையில் அந்தக் கருத்தை நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதற்கு ஆதரவாகப் பேசவேண்டிய நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகம். பேசவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்வது தங்களுடைய பொறுப்பைத் தட்டிக்கழிப்பதாகும்.

**திரு. க. அன்பழகன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, பிரச் னையை நேராக அணுகாமல் நீதிபதியை மாற்றும் மத்திய சர்க் கார் முயற்சி மாநில சர்க்காரின் உரிமைகளில் தலையிடுவதாகும் என்று சொல்வதற்குத் தெளிவில்லாமல், துணிவு இல்லாமல், முன்

வராமல், தமிழ் தெரிந்த ஒருவர் வேறு மாநிலத்தில் இருந்தால் இங்கே கொண்டு வந்து நியமிக்கலாம் என்று ஏற்றுக் கொள்கிற வகையிலே பேசுகின்ற பேச்சு மாநில சுயாட்சி உரிமை என்ற எண்ணத்தில் எழுவது அல்ல. மொழி அடிப்படையிலே தமிழ் தெரிந்தவர்களுக்காக வாதாடுவது ஒரு வகையில் அது தேவை தான் என்ற காரணத்தினால் கூட எந்த நேரத்தில் எந்த வாதத்தை யார் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கருதிப் பார்க்கிறபோது, திராவிட முன்னேற்றக் கழகம் அதற்குத் துணை போகாது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நாங்கள் நேராகப் பேசவில்லை என்றால் அதை எடுத்துத் தாராளமாகச் சொல்லி, எங்களைத் திருத்தி இருக்கலாம். அத்தகைய உரிமை எதிர்க்கட்சிக்கு இருக்கிறது. அப்படி இல்லாமல் இப்படிப் பேசுகிறபோது அவர்கள் நேராக இல்லை என்பதை நாட்டு மக்களுக்குத் தெளிவாக அடையாளம் காட்டுகின்றது.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அமைச்சரே பதில் சொல்லுகிறபோது விளக்கம் சொல்லவேண்டிய கடமை ஏற்பட்டிருக்கிறது. இதே மன்றத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது மாநில சுயாட்சி அடிப்படையிலே தீர்மானம் கொண்டு வந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வருகிற காரணத்தால், அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அன்றைக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் தான் இன்றையதினம் ஆளும் கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சியினுடைய தலைவர்களும் அதனுடைய முன்னணியினரும் என்பதை நான் இங்கே நினைவூட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை என்கிற காரணத்தால் நான் அடிக்கடி தலையிடுவதற்குத் தங்களிடம் அனுமதியைக் கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் என்பது எங்களுக்குத் தெரியாத, அல்லது அறியாத ஒரு கட்சி அல்ல. அதிலே இருந்தவர்கள் தான். 1971-ல் இதே இந்திரா காங்கிரஸ் கட்சியோடு தொடர்பு வைத்துக் கொண்டு இருந்த போது மாநில சுயாட்சி என்ற வார்த்தையைப் பயன்படுத்த வில்லை. அதைப் போலவேதான் இன்றும் நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அந்த நிலையில் இருந்துகொண்டு நாங்கள் அவர்களைவிட கலைக்கப்பட்ட காலத்திலும்கூட இன்றைக்கும் கலைக்கமுடியும் என்ற நேரத்திலும்கூட அத்தகைய அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறபோதுகூட அந்த அளவிற்குப் பேசியது இந்தத் தமிழ் மக்களின் மற்றும் தமிழ் நாட்டின் மானத்தையும்,





மரியாதையையும் காப்பாற்றுவதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தலைமை தாங்குகிறது என்பதைத்தான் எடுத்துக்காட்டிக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** அன்றைய தினம் நடைபெற்ற விவாதத்தில் இதே சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக்கழகம் சார்பாக அதனுடைய தலைவர் கேட்டார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெறுகிற காரணத்தால் மாநில சுயாட்சிக் கொள்கையை நீங்கள் ஏற்றுக் கொள்ளா விட்டாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்தக் கூடிய காலம் வந்து நீங்கள் அப்படிப்பட்ட தீர்மானம் கொண்டு வந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஆதரிக்கும் என்று ஏறத்தாழ முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற காலத்திலேயே அறிவித்து இருக்கிறார். எனவே இந்த அவையில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், அதனுடைய தலைவருக்கும் நான் தெரிவிக்க விரும்புகிறேன், மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆளும் கட்சி கொண்டு வருமானால், திராவிட முன்னேற்றக்கழகம் அந்தத் தீர்மானத்தை முழு அளவில் ஆதரிக்கும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சி அதிகாரம் என்பதற்கும் அதிக அதிகாரம் வேண்டும் என்பதற்கும் இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை முதலில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மத்திய அரசு தலையிடாத அளவிற்கு அதிகாரங்கள் ஒரு மாநிலத்திற்குத் தரப்படவேண்டும். இன்றைய நிலையில் கூட நம்முடைய மாநிலத்திற்கு (குறுக்கீடு) சுயாட்சியான அதிகாரங்கள் எதுவும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. சில அதிகாரங்கள் இருக்கின்றன. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கூட இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கொண்டுவந்து இருக்கிற அதிகமான அதிகாரங்கள் தேவை என்கிற தீர்மானத்தைப் பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் கொண்டு வந்து இருக்கிறார்கள். நான் இன்றைக்கு சொல்ல விரும்புவது அன்றைக்கு பேசிய அதே அடிப்படையில் தான் நாங்கள் இருந்து கொண்டு இருக்கிறோம். ஆனால் அன்றைக்கு மாநில சுயாட்சி பேசியவர்கள் இந்தச் சட்டசபை இரண்டு முறை கூடி, இவ்வளவு விவாதங்கள் நடைபெற்று இருக்கும் சந்தர்ப்பங்களில், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கூட மாநில சுயாட்சி பற்றி பேசக்கூடிய வாய்ப்பு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கோ, தலைவருக்கோ கிடைக்கவில்லை என்று கருத முடியாது. பல்வேறு வாய்ப்புகள் இருந்து இருக்கின்றன. அப்போது அவர்கள் தங்களுடைய உணர்வுகளை, அவர்களின் அடிப்படை கொள்கைகளைப் பற்றித் தாராளமாகப் பேசி, தாங்கள் யார், இன்னும் யார் என்பதை

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 மார்ச 5

மத்திய அரசுக்கும் காட்டியிருக்கலாம், இந்த மாநில மக்களுக்கும் காட்டியிருக்கலாம். இன்னும் சொல்லவேண்டுமானால் நாங்கள் அன்றைக்கு ஆளும்கட்சியாக இருந்தபோது சொன்னதைத் தான் இன்றும் சொல்கிறோம். நீங்கள் ஏன் இப்படி இருக்கிறீர்கள் என்று தங்களைத் தட்டிக் கேட்கக்கூடிய நிலையில் உள்ள நீங்கள் அதுவும் கூடப் பேசவில்லை என்பதுதான் வருத்தமாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, எங்களுடைய நிலையில் எந்தவிதமான மாறுதலும் இல்லை. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதை இன்றைக்கு நல்லபடியாக நாட்டு மக்கள் உணர்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நாங்கள் எப்படி இருக்கிறோம் என்பதை நாட்டு மக்கள் உணர்வதை விட ஆளும் கட்சி முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மாநில சுயாட்சி என்ற அடிப்படையில் நீதிபதியை மாற்றுவதைப் பற்றி எதையும் கூறாமல் ஏதோ தமிழ் தெரிந்தவர் தான் வரவேண்டும் என்று சொன்ன காரணத்தாலே மாநில சுயாட்சிக் கொள்கையைக் காப்பாற்றி விட்டது போல் சொல்லி அதற்கு எதிர்கட்சி ஒத்துழைக்கவில்லை என்று சொன்ன காரணத்தால், இந்தப் பிரச்சினை எழுந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி என்ற அடிப்படையிலே சொல்ல வேண்டிய கொள்கைகளைச் சொல்ல வேண்டிய நேரத்தில், இந்த அவையில் அந்தப் பிரச்சினை எழுகிறபோது நிச்சயமாகச் சொல்லும், சொல்ல வேண்டிய நேரம் இன்னும் இருக்கிறது. இந்தத் தீர்மானம் இன்னும் முடிந்துவிடவில்லை. ஆகவே கொள்கை என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியநேரத்தில் எடுத்துச் சொல்வது என்பது வேறு. ஆனால், ஒரு கொள்கை இருப்பதைப் போல் மக்களிடத்திலே காட்டிக் கொள்ளும் ஆளும் கட்சி அதிலே தங்களுக்கு உண்மையான அக்கறை இல்லாமலே இருப்பது போல் சொல்லிக்கொள்வதும் ஒரு பிரச்சினையை அதற்குப் பயன்படுத்துவதும் வேறு நோக்கத்தோடு என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தலைமை நீதிபதி மாற்றத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தெளிவாக அறிவார்கள். அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட அந்த அதிகாரம் மாநில அரசுக்குத் தரப்படவில்லை என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அறிவார்கள். ஆகவே தான் தெளிவாக வலியுறுத்தியிருக்கிறோம். தமிழக தலைமை நீதிபதியோ மற்ற நீதிபதிகளோ யாராக இருந்தாலும் தமிழ் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். அரசியல் சட்ட வரம்பிற்



1981 மார்ச 5] [திரு. சி. பொன்னையன்]

குட்பட்டு இந்த அளவிற்குத்தான் மாநில அரசுகள் மைய அரசுக்கு வலியுறுத்த முடியும் என்ற அடிப்படையில் நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்பதில் எந்தவிதத்திலும் தற்போதுள்ள ஆளும் கட்சியைப் பொறுத்தவரையில் யாருக்கும் சளைத்தது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் தந்த விளக்கம், ஏறத்தாழ தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கிற முயற்சியில் ஈடுபட்ட ஒரு காரியம். நல்ல வேளை, இப்போது வால் பிடிக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பதற்கு 4 பேரைத் துணைக்கு அழைப்பது என்பது அவ்வளவு பெருமைக்கு உரியது அல்ல.

[பிற்பகல் 12·30]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே. நாங்கள் வாலைப் பிடித்தாலும் தும்பை நீங்கள் பிடிக்கவில்லை. தும்பைப் பிடிக்க, கொஞ்சம் உதவிக்கு வந்தால் நல்லது (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, நாங்கள் ஆளும் கட்சியாக இருந்தால் தும்பு எங்கள் கையிலேதான் இருந்திருக்குமே தவிர, தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கமாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. எஸ். ஜகத்ரட்சகன் :** தலைவரவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் சில விவரங்களைச் சொன்னார்கள். என்னுடைய சில வேண்டுகோள்களை மட்டும் இங்கே வைத்து, விடைபெறலாம் என்று கருதுகிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் தேர்தல் உடன்பாடு ஏற்படுகிறபோது அவர்களுக்கு எத்தனை சீட்டு, இவர்களுக்கு எத்தனை சீட்டு என்று பங்கு போடுவதிலே இருந்தார்களே தவிர, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம் ; அந்தக் கொள்கையில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்று தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பிரதமர் இந்திரா காந்தியைப் பார்த்துச் சொல்லியிருக்கலாம் ; அப்படிச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லி, அதற்கு நீங்கள் தயாரா என்று கேட்டிருக்கலாம் ; ஆனால் கேட்கவில்லை. அந்த நேரத்திலே சீட்டு பங்கு போடுவதிலே நீ 109, நான் 109 என்பதிலேதான் குறியாக இருந்தார்கள். ஆகவே அந்தக் கொள்கை தங்களுக்கு இருப்பதாக..... ,

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்க்கட்சிகளின் தேர்தல் நடவடிக்கையை வைத்துப் பேசுகின்ற காரணத்தால் நான் குறுக்கிட வேண்டியிருக்கிறது. எதிர்க்கட்சிகள் ஓட்டுக்களைப் பங்கு போடுவதில் 109, 109 என்ற அளவில் இருந்தார்கள் என்று உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். நோக்கம் எதுவும் அதற்கு நான் கற்பிக்க விரும்பவில்லை. ஆனால் எதிர்க்கட்சிகள், 136—75 என்ற விகிதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை அவர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு எஸ். ஜகத்ரட்சகன் :** மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்று சொல்லுகிறபோது, இப்போது தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வறட்சி பயங்கரமாக இருந்து கொண்டிருக்கிறது. இருக்கின்ற நதிகளை எல்லாம் ஒருங்கிணைத்து, இந்தியா முழுவதிலும் உள்ள நதிகளை தேசியமயமாக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் எங்கள் வேண்டுகோளாக வைத்து, மாநில சட்டமன்றம் பெரும்பான்மையோடு ஒரு சட்டத்தை நிறைவேற்றினால் அதற்கு ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அங்கீகாரம் அளிக்க வேண்டும் ; அதைப்போன்று தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திற்குள் எந்த ஒரு சட்டமன்றமும் சட்டமன்றத்தில் பெரும்பான்மையை இழந்தால் தவிர, எந்தக் காரணத்தாலும் கலைக்கப்படக் கூடாது என்று அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் ; மாநில அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து நிறைவேற்றுகின்ற எந்த ஒரு தீர்மானத்திற்கும் அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதிலும் வெள்ளம், புயல் போன்றவைகளால் பாதிக்கப்படுகிறபோது தமிழ்நாட்டில் கடந்த கால நிகழ்ச்சிகள் நம் கண் முன்னால் திரைப்படமாக ஓடுகின்றன. வெள்ளம், புயல் வருகிற போது, வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்படுகிறபோது இத்தனை பேர் இறந்திருக்கிறார்கள் : இவ்வளவு ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று 5 கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினால் அந்தத் தீர்மானத்தை மத்திய அரசு ஏற்காமல் மத்திய அரசிலே இருக்கிற 4, 5 அதிகாரிகள் வந்து பார்த்த பிறகுதான் வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பது என்று சொன்னால் இங்கே நிறைவேற்றப்படும் தீர்மானத்திற்கு என்ன பயன்? கடந்த காலத்திலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடகனாறு அணை இதுவரை கட்டப்படாமல் இருப்பதற்குக் காரணம் மத்திய அரசிலே இருந்து வந்த அதிகாரிகள் இன்னும் சரியான கணக்குகளைத் தரவில்லை என்ற சூழ்நிலைதான். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை மாற்றியமைக்க, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் என்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத்





அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அது ஒரு தனித் தீர்மானமாக இல்லாமல் அந்தக் கொள்கையை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது ; ஆகவே, இதற்குத் தனியாக ஒரு தீர்மானம் தேவையில்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ந. சுந்தரராஜ் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தியாவில் இருக்கிற மற்ற மாநிலங்களில் இருக்கிற, தமிழ்நாட்டில் இருக்கிற நதிகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நதிகளை எல்லாம் தேசிய மயமாக்குவதற்கும் மாநில அரசுக்கு அதிக அதிகாரம் கொடுப்பதற்கும் பொருந்துமா? அதன்மூலம் அதிக அதிகாரத்தைச் செயல்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் கே. சமரசம் :** சார், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நதிகளைத், தேசியமயமாக்குவது சரியாக இருக்குமா என்று கேட்கிறார்கள். நதிகளைத் தேசியமயமாக்குவதால், மாநில சுயாட்சி என்ற பேரால் தனித் தமிழ்நாடு என்று கேட்கவில்லை. மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவை என்று சொல்லும்போது, இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளையாமல் பார்த்துக் கொள்வோம் என்பதுதான் எங்களுடைய கொள்கை. '' கட்டுண்டு வாழோம் ; பிரிவினை நாடோம் ; சமநிலையில் இணைவோம் '' என்பதுதான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை....

கங்கை காவிரி இணைப்பு ஏற்பட்டால்தான் நல்லது. (குறுக்கீடு) ஆகவே அதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை....

**திரு. ர. பெரியசாமி :** மாநில சுய ஆட்சி வேண்டும் என்று தைரியமாகக் கேளுங்களேன். அப்படிக் கேட்டால் அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதைவிட்டு விட்டு நதிகளைத் தேசியமயமாக்குங்கள் என்று சொன்னால்........

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வி. விசுவநாதன்) :** திரு. பெரியசாமி அவர்கள் உட்கார வேண்டும். அடுத்து திரு. ரகுமான்கான் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு இந்த மாமன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த அருமைச் சகோதரர் திரு. உமாநாத் அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்றும், அந்த விதத்திலே இந்தியாவினுடைய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் ஒரு தனி நபர்

தீர்மானத்தை இந்த மன்றத்திலே கொண்டு வந்து பிரேரேபித்திருக்கிறார்கள். மத்திய அரசு மாநில மக்களுடைய நன்மைகளுக்காக அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் மனப்பூர்வமாக வரவேற்கிறது.

அதற்கடுத்து, நான் சொல்ல விரும்புவது, இந்த அடிப்படையிலே இந்தியாவினுடைய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது. அதற்குக் காரணம் மத வாதிகள் சொல்வது போல் அரசியல் சட்டம் என்பது வேதப் புத்தகம் அல்ல. ஏறத்தாழ 46 முறை இந்தியாவினுடைய அரசியல் சட்டம் திருத்தப்பட்டிருக்கின்றது. அரசியல் சட்டம் கைபடாத ரோஜாவல்ல. மக்களுடைய தேவைகளுக்காகவும், மக்களுடைய நன்மைகளுக்காகவும் அவசியம் கருதி அந்த அரசியல் சட்டத்தைத் திருத்துவது என்பதுதான் மக்களாலே ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

பள்ளிக்குச் செல்கின்ற சிறுவர்கள் அணிந்துகொள்கின்ற ஆடைக்கும், வளர்ந்து பெரிய மனிதனாக மாறியதற்குப் பிறகு அணிகின்ற ஆடைக்கும் வேறுபாடு இருக்கின்றது வளர்ச்சி காரணமாக. அதே போல்தான் இந்தியாவினுடைய அரசியல் நிர்ணய மன்றத்திலே கூடிய அரசியல் மேதைகள் எல்லாம் அன்றைக்கு இருந்த சூழ்நிலையின் அடிப்படையிலே அரசியல் சட்டத்தின் சரத்துக்களை உருவாக்கினார்கள். ஆனால் 30, 40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாட்டிலே எப்படிப்பட்ட நிலைமை இருக்கப்போகிறது என்பதை எண்ணிப் பார்க்கின்ற ஸ்தூலப் பார்வை அவர்களுக்கு இருக்க முடியாது. ஆனால் இன்றைக்கு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கிடைக்கின்றவிதத்தில் இந்தியாவினுடைய அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்பதை வரவேற்கிறோம். இன்றைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சகோதரர் திரு. உமாநாத் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுப்பதற்கு முன்பே 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்தபோது தேர்தல் அறிக்கையிலே மிகத் தெளிவாக அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநிலத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் ரெசிடியுயரி பவர்ஸ் என்று சொல்கின்ற மிச்ச அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கு 1967 இல் சட்டமன்றத் தேர்தலின்போது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய திரு. உமாநாத் போன்றவர்கள் இன்றைக்குக் கேட்பதற்கு முன்பாகவே இதே கருத்தை ஆதரித்து அன்றைக்கு—எதிர்த்து அல்ல—கொடுத்திருக்கிறார்கள்.





அதுமட்டுமல்ல, ராஜ்யசபாவிலே 1963 ஆம் ஆண்டு பிரிவினை தடைச்சட்ட மசோதா கொண்டுவரப்பட்ட நேரத்தில் மாநில, மத்திய உறவு முறைகளைப் பற்றிச் சொல்கின்றபோது அண்ணா அவர்கள், இந்தியாவினுடைய அரசியல் சட்ட நிர்ணய மன்றத்திலே ''The States are like glorified Municipalities'' அதாவது, மாநிலங்கள் நகராட்சிகள் போல் இருக்கின்றன ' என்று மகபூப் அலி கான் அவர்கள் சொன்ன வாசகத்தை நினைவூட்டுகின்ற வகையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1963 ஆம் ஆண்டு ராஜ்ய சபையிலே பேசுகின்றபோது சொன்னார். மாநிலங்கள் சுங்கத் தொகையை வசூலிக்கும் நகராட்சிகள் போல் ஆக்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்.

1969 ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் ஹோம் ரூலிலே ' விடியற்காலையே வருக, விடியலே வருக ' என்ற ஒரு கட்டுரையிலே மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டினார்கள்.

[பிற்பகல் 12-40]

'' நான் பதவியைத் தேடி ஓடுபவன் அல்ல. காகிதத்திலே கூட்டாட்சி, மத்தியிலே அதிகார குவிப்பு உள்ளடக்கி இருக்கிற இந்த அரசியல் சட்டத்தின் கீழே நான் முதலமைச்சராக இருப்பதிலே மகிழ்ச்சியடையவில்லை. ஆனால் அதற்காக மத்திய அரசிடம் நான் சண்டை இடுவதையோ அல்லது மத்திய அரசு அதற்காக எரிச்சல் அடைகிற விதத்திலே நடந்து கொள்வதோ முறையானது ஆகாது. மக்களுக்கு மாநில சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் இடையே உள்ள அதிகார வரையறுப்புகள் என்ன, உண்மையான கூட்டாட்சி என்றால் என்ன, ஏன் மாநிலங்களுக்கு சுய ஆட்சி கேட்கிறோம், அதிக அதிகாரம் கேட்கிறோம் என்று மக்களைத் திரட்டி, மக்களுக்கு அந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும் '' என்று சொன்னார். அதை விட்டுவிட்டு ராணுவத்தைச் சந்திப்பேன் என்று மத்திய சர்க்காரிடம் சொல்லிவிட்டு—அதைப்பற்றிக் கேட்டால், நான் சந்திக்கவில்லை, நான் அமெரிக்காவிலே சந்திப்பேன், ரஷ்யாவிலே சந்திப்பேன் என்றெல்லாம் பேசுகிற பேச்சாக அமைந்து விடக் கூடாது என்கிற ஜாக்கிரதை உணர்வோடுதான் அண்ணா அவர்கள் நான் மத்திய சர்க்காரோடு போராட விரும்பவில்லை. அவர்கள் எரிச்சல் அடையும் விதத்திலே சங்கடப்பட விரும்பவில்லை என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். காஞ்சி பொங்கல் மலரிலே கூட எழுதியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அண்ணா அவர்கள் துரதிருஷ்டவசமாக மறைந்த பிறகு, தமிழகத்திலே 1971 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடக்கிற நேரத்திலே, கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வெளியிட்ட தேர்தல்

அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் எந்த கோரிக்கைக்காக, கொள்கைக்காக உயிர் வாழ்ந்தாரோ, அவர் மறைவதற்கு முன்னாலே கூட—மாநில சுய ஆட்சியைத் தம்பி மறந்துவிடக்கூடாது என்று எதை தம் மரண சாசனமாக விட்டுச் சென்றாரோ அந்தக் கொள்கையை கலைஞர் அவர்கள் 1971-லே '' அண்ணா வழி நின்று' என்ற தலைப்பில் தேர்தல் அறிக்கையிலே வைத்தார்கள். '' இந்திய அரசியல் முறை கூட்டாட்சி முறை என்று சொன்னாலும், அதன் தராசு மத்திய அரசு பக்கமே அதிகமாக சாய்கிறது. மத்திய அரசு தேவையான முக்கியமான பணிகளை, தேசிய ஒருமைப்பாடு, இறையாண்மை, சாவர்னிடி போன்றவைகளை பாதுகாக்கக்கூடிய அந்த அதிகாரங்களை வைத்திருக்கலாம். மக்களை மேம்படுத்தக்கூடிய, நல்ல பல திட்டங்களை கொண்டு வரக்கூடிய அந்த அதிகாரங்கள் எல்லாம் அந்தந்த மாநில சர்க்கார்களின் கையிலே தான் இருக்க வேண்டும் '' என்று 1971 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே, கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தெளிவாக சொல்லியிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த போது, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்தபோது ராஜமன்னார் கமிட்டி என்ற ஒன்று உருவாக்கப்பட்டு, அதனுடைய அறிக்கையெல்லாம் இந்த மன்றத்திலே விவாதத்திற்கு வைக்கப்பட்டது. நம்முடைய முன்னாள்—மன்னிக்கவும்—இன்றைய அமைச்சர் அரங்கநாயகம் போன்றவர்கள் எல்லாம் அந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசினார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக முந்தைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கலந்துகொண்டு பேசினார்கள். அவர்கள் பேசும்போது, அண்ணா அவர்கள் மாநில சுய ஆட்சியைப் பற்றிச் சொன்னதே கிடையாது. அண்ணா மாநில சுய ஆட்சி பற்றிச் சொல்லியிருந்தால், பொதுக்குழுவிலே தீர்மானம் போட்டிருப்பார். மிலாது விழாவிலே அண்ணா அவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்பதினாலெல்லாம் அண்ணா ஒரு முஸ்லீமாக இருந்துவிட முடியாது. ஆகையினால் அண்ணா ஒரு பொதுவான கருத்தைத்தான் சொன்னாரே தவிர, மாநிலத்திற்கு அதிகமான அதிகாரம் அல்லது சுய ஆட்சி வேண்டும் என்று சொல்லவில்லை என்று விவாதித்தார்கள். இன்றைய அமைச்சர், அன்றைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த நம்முடைய ஹண்டே அவர்கள்........

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற அடிப்படையிலே அன்றைய தினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் பேசவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்





ரகுமான்கான் அவர்கள் சொல்கிறார்கள். அது உண்மையிலேயே சரியான கருத்து அல்ல. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்குகிற வகையிலே அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று அன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருந்த திரு. சீனிவாசன் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து முன் மொழிந்திருக்கிறார்கள். ஆகவே அவர் தவறாக தகவல்களை சொல்கிறார் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

' தேசிய ஒருமைப்பாட்டுக்கு மாறாக மாநிலங்கள் தனித்து பிரிந்து போகாமலும், மத்திய அரசையே மாநிலங்கள் சார்ந்து இருக்காமலும், மாநில அரசும் மத்திய அரசும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படும் வகையில் மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க வேண்டும் என்ற வகையில், இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது ' என்கிற திருத்தத்தைக் கொடுத்து, அந்த திருத்தத்தின் மீது பலரும் பேசியிருக்கிறார்கள். அந்த திருத்தத்தை கலைஞர் அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். ' இதற்கு திருத்தம் கொடுத்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற நிலைமையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒப்புக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்து கலைஞர் கருணாநிதி அவர்களே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறார்கள்'—என்கிற கருத்தினை நான் அவை முன் வைக்க விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : மாற்றுத் தலைவர் அவர்களே, பேசப்படும் பிரச்னையில் உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னதும், மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் சொன்னதும்—இரண்டும் உண்மையே. மாநில சுய ஆட்சி என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சொல்லப்பட்ட கருத்தை, அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சொன்ன போது, அறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுய ஆட்சியை பற்றிச் சொல்லவில்லை என்ற நோக்கத்தோடு அப்படி எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அறிஞர் அண்ணா சொன்ன கருத்தை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது என்பதை எடுத்துக் காட்டியதுடன், அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கொண்டு வந்த தீர்மானத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துக் கொள்ளவில்லை என்பதைத்தான் திரு. இரகுமான்கான் எடுத்துக் காட்டினார்.

(குறுக்கீடுகள்)

டாக்டர் கே. சமரசம் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாநில சுயாட்சி பற்றி அண்ணா அவர்கள் சொன்னது சொல்லாதது வேறு, அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்து வைத்த

காரண—காரியங்கள் சரியல்ல என்பதால்தான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அப்போது சொன்னது, 'இருந்தால் முதல்வர்; இறங்கினால் பிரதமர்', 'தமிழ் நாட்டினுடைய ஷேக் முஜீபீர் ரகுமான்', 'தமிழ் நாட்டில் இரண்டு கேரளாக்கள் இருக்கமுடியாது' என்று இதுபோன்ற பல பிரச்னைகள் வந்த காரணத்தால்தான் அந்த நிலைக்கு, ஷேக் முஜீபீர் ரகுமான் நிலைக்கு ஆளாகக் கூடாது என்பதால்தான் எதிர்த்தோம்.

**திரு. அ. ரகுமான்கான்:** டாக்டர் சமரசம் அவர்கள், சொன்ன கருத்துக்களில் முதல் பகுதியை ஏற்றுக் கொள்கிறேன். பிற்பட்ட பகுதியை ஒப்புக்கொள்ள முடியாது.

அன்றைய தினம் மாநிலச் சுயாட்சிக் கொள்கையில் திராவிட
முன்னேற்றக் கழகம் சொன்னது வேறு, நாங்கள் அதிக
அதிகாரங்கள் கோருவது வேறு, மாநிலச் சுயாட்சி என்று அண்ணா
அவர்கள் சொல்லவில்லை என்று சொல்லி அன்றைக்கு அமைச்ச
ராக இருந்த, அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக
மாகவும் இன்றையதினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழ
கத்தில் அமைச்சராக இருக்கக்கூடிய நம் அமைச்சர் திரு. இராமச்
சந்திரன் அவர்கள் அன்று பதில் சொன்னார்கள். இல்லஸ்ட்
ரேட்டட் வீக்லி என்ற பத்திரிக்கையில் திரு. இராமன் அவர்களுக்கு
பேட்டி கொடுக்கிறபோது திரு. இராமச்சந்திரன் அவர்கள் என்
னென்ன சொல்லியிருக்கிறார்கள் என்று பாருங்கள். 'ஸ்டேட்
ஆட்டானமி', 'மோர் பவர்ஸ்' என்று சொல்லியிருக்கிறார்கள்.
இதில் ஒரு அடிப்படையை இங்கு விளக்கிவிட்டால் சரியாக இருக்
கும் என்று நான் கருதுகிறேன். ஸ்டேட் ஆட்டானமி என்பது
வேறு, 'மோர் பவர்ஸ்' என்பது வேறு. மாநிலங்களுக்கு அதிக
அதிகாரங்கள் என்றால் எங்களைப் பொறுத்தமட்டில் அதிலிருந்து
நாங்கள் ஒரு மேல் கட்டத்தில் நிற்கிறோம். ஸ்டேட் அட்டானமி
என்று சொல்கிறபோது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில்
மாநில அரசாங்கங்களுக்கு இந்த அதிகாரங்கள், மத்திய அரசுக்கு
இன்னின்ன அதிகாரங்கள், கன்கரன்ட் லிஸ்ட் என்று மாநில
அரசுக்கும் மத்திய அரசுக்கும் இரண்டுக்கும் பொதுவான
இன்னின்ன அதிகாரங்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றன.
ஆக, அப்படி வரையறுக்கப்பட்டு அரசியல் சட்டத்தில் அது
ஏற்கனவே இருக்கிறது. இப்போது மாநிலங்களுக்கு இன்னின்ன
துறைகளில் எல்லாம் அதிக அதிகாரங்கள் வேண்டும் என்றால்
அது வெறும் எக்ஸிக்யுட்டிவ் உத்தரவாக இருக்கக்கூடாது.
பிரிட்டிஷார் இந்த நாட்டை ஆண்டுவந்தபோது கவர்னர்-
ஜெனரல் ஒருவர் இருந்தார். கவர்னர்களும் இருந்தார்கள்.
அன்று கவர்னர்கள் எங்களுக்கு இருக்கிற அதிகாரங்கள் போதாது,
இன்னும் கொஞ்சம் கூடுதல் அதிகாரங்கள் வேண்டும் என்று
கவர்னர்-ஜெனரலைக் கேட்டார்கள். அது 'more powers'
என்பதாகும். கவர்னர்-ஜெனரலிடம் கவர்னர்கள் நிர்வாக





வசதிக்காக எங்களுக்கு சில அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்று கேட்கிற தோரணையில்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கோருவது. அப்போது கவர்னர்-ஜெனரல் விரும்பினால் கூடுதல் அதிகாரங்களை கொடுக்கவும் செய்யலாம், அப்படி கொடுக்கப்பட்ட அதிகாரங்களை திரும்பப் பெற்றுக் கொள்ளவும் கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம் இருந்தது.

ஆனால் மாநில சுயாட்சி என்று சொல்லும்போது நமக்குக் கொடுக்கிற அதிகாரங்கள் எல்லாம் வரையறுத்து—தெளிவாக மாநில அரசுகளுக்கு இன்னின்ன அதிகாரங்கள், மத்திய அரசுக்கு இன்னின்ன அதிகாரங்கள் என்று சொல்லிவிட்டால் அப்படி வரையறுக்கப்பட்டதை—ஆளும் கட்சியில் இன்று ஒருவர் இருக்கலாம், நாளை இன்னொருவர் இருக்கலாம்—திரும்பப் பெற முடியாது ஆகவே அண்ணா அவர்கள் சொல்லியதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டுதான் அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி சொல்லி வருகிறோம்.

இன்று இந்திரா காங்கிரஸ் கட்சியோடு நாங்கள் தொடர்பு கொண்டிருக்கிறோம். தேர்தல் கூட்டு வைத்திருக்கிறோம். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூட அதை உறுதிப்படுத்திப் போயிருக்கிறார்கள். அதனால் நாங்கள் எங்கள் கொள்கையை விட்டுவிடவில்லை. நம் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மறைந்த தலைவர் திரு. ஏ. கே. கோபாலன் அவர்கள் துணைவியார் சுசீலா கோபாலன் அவர்கள் இதே தீர்மானத்தை பார்லிமெண்டில் கொண்டு வந்தார்கள். அப்போது எங்கள் கட்சியைச் சேர்ந்த மோகன் அவர்களும் மற்றவர்களும் அந்தத் தீர்மானத்தை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லிக் கொண்டுவந்த தீர்மானத்தை, மனப்பூர்வமாக ஆதரித்திருக்கிறோம். ராஜீய சபாவிலும் ஆதரித்திருக்கிறோம். இப்போது கூட நாங்கள் இந்திரா காங்கிரஸோடு கூட கூட்டாகத்தான் இருக்கிறோம். இப்போது கூட திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். 1971-ல் கூட இந்திரா காங்கிரஸோடு நாங்கள் கூட்டாகத்தான் இருந்தோம். அன்றும் சொன்னோம். கூட்டாட்சி என்ற பெயரில் வர்ணிக்கப்பட்டாலும் அதிகாரங்கள் தராசில் மத்தியஅரசின்பக்கம்தான் அதிகமாகச் சாய்கிறது. 1971-ல் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு கூட்டு வைத்திருந்தபோதிலும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். எலக்டரல் அட்ஜெஸ்ட்மென்ட் என்பது வேறு, எலக்ட்ரல் அலையன்ஸ் என்பது வேறு. தேர்தல் உடன்பாட்டிற்காக கொள்கையோடு கொள்கை ஒன்றாகிவிட்டது என்று சொன்னால் பின் கட்சியின் தேவையே இல்லை. இது உங்களுக்கும் பொருந்தும், எங்களுக்கும் பொருந்தும். எனவே எங்கள் அடிப்படைக் கொள்கைகள் மாறவில்லை. இராமன் இல்லை என்றால் இராமாயணம் இல்லை.

There is no "Hamlet', without the Prince of Denmark. There is no "Ramayana" without Rama.

[திரு. அ. ரகுமான்கான்) [1981 மார்ச் 5

[பிற்பகல் 12—50]

அதுமாதிரி இராமன் இல்லாமல் இராமாயணம் இல்லை என்பது உண்மை.

There is no Ramayana without Rama.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அண்ணா அவர்கள் வலியுறுத்திய 'ஸ்டேட் அடானமி' அதாவது மாநில சுயாட்சியை நாங்கள் வலியுறுத்துகிறோம் என்று சொல்லி, அதற்கு விளக்கம் சொன்னார்கள். சமீபத்திலே மாநிலங்கள் அவையில் பேசிய திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர், 'நாங்கள் மாநில சுயாட்சியை விரும்பவில்லை : ஆனால் மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் தேவை' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் நாடாளுமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே உறுப்பினர் "மாநில சுயாட்சியை நாங்கள் கேட்கவில்லை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று தான் கேட்கிறோம்" என்று பேசியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களை இந்த மன்றத்திலே கேட்கிறேன், நாடாளு மன்றத்திலே அவர் பேசிய அந்த பேச்சுக்கள் பற்றிய அதிகார பூர்வமான அந்தச் சபைக் குறிப்பைக் காட்டுவார்களானால், அது பற்றி பின்னால் விளக்கம் தரக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம், தவறான தகவலை, அவருடைய வாதத்திற்கு சாதகமாக அப்படி பேசியிருக்கிறார் என்று சொல்கிறார், நாடாளு மன்றத்திலே உறுப்பினர் அப்படி பேசினார் என்று அவர் சொல்கிறபோது, அது உண்மையா என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். Question of fact தெரிந்து கொண்ட பிறகுதான் பொறுப்புள்ள ஒரு கொள்கையைப் பற்றி கட்சியின் சார்பிலே விமர்சிக்க முடியும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நாடாளு மன்றத்திலே உறுப்பினர் பேசினார் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் பேசிய அந்தக் குறிப்பை நான் பார்த்திருக்கிறேன். மாநில சுயாட்சி தேவையில்லை என்று கூறவில்லை. அப்படி இருக்குமேயானால், அதற்கு முன்னும் பின்னும் உள்ள தொடர் என்ன? எப்படிப் பட்ட நிலையில் அவர் அதைச் சொல்லியிருக்க முடியும் என்னும் அதன் தொடர்பைப் பார்க்க வேண்டுமே தவிர, மாநில சுயாட்சி தேவையில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சொல்லியிருக்க மாட்டார்கள். ஆனால், ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் பேசாத ஒரு கருத்து பேசப் பட்டதாகப் பத்திரிகையிலே வரக்கூடிய அளவிற்கு மாநிலங்க



1981 மார்ச் 5] [திரு. க. அன்பழகன்]

ளவை உறுப்பினர் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களைப் பற்றி பேசினார் என்ற தவறான கருத்து நாடெல்லாம் பரப்பப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் தவறாக வெளியிடப் பட்ட கருத்தா இருக்குமானால், அந்தக் கருத்துக்கு அந்த உறுப்பினர் உறுதியாக மறுப்பு தெரிவிப்பார் எனத் தெரிவித்திட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வி. வி. சுவாமிநாதன்) தி. மு. க. , அ.தி.மு.க. ஆகிய இரண்டு பகுதிகளிலே இருந்தும் தொடர்ந்து பேசலாம்; இன்றைக்கோ. இன்னொரு நாளைக்கோ பேசலாம். அந்தந்த உறுப்பினர்கள் நாடாளு மன்றத்தின் பேச்சை பேசாமல், மாநிலத்திற்கு அதிக அதிகாரம் மாநில சுயாட்சிபற்றி பேசுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படி ஸ்டேட் அடானமி, மாநில சுயாட்சி வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறுவதாலே, தி. மு. க. பிரிவினையை வலியுறுத்துவதாக யாரும் கருத வேண்டிய அவசியம் இல்லை,. காரணம் அன்றைய தினம் நம்முடைய மறைந்து போன இந்த தேசத்தின் பிதா மகாத்மா காந்தி அவர்கள் Decentalisation of power is Swaraj. அதிகாரக் குவியல் கூடாது : பரவலாக்கப்பட வேண்டும். அப்போது தான் முழு சுயராஜ்யம் என்று குறிப்பிட்டார்கள். அவரை யாரும் பிரிவினைவாதி என்று சொல்ல மாட்டார்கள்.

1938-லே மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று சொல்லி திரிபுரா காங்கிரசில் ஒரு தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கோருகின்ற காரணத்தினால், அதைப் பிரிவினை என்று யாரும் சொல்ல மாட்டார்கள். 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்தை 1942-ல் பம்பாய் காங்கிரசில், இந்திய தேசிய காங்கிரஸ் நிறைவேற்றியது. அப்போதும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கருத்து வலியுறுத்தப்பட்டது. 1945-ல் காங்கிரஸ் இயக்கம் தேர்தலை சந்தித்தபோது, அதனுடைய தேர்தல் பிரகடனத்திலே மிகத் தெளிவாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு எல்லாம் மேலாக, மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்திய அரசியல் நிர்ணய மன்றத்திலே 'ஆப்ஜெக்டிவ் ரெசலுஷன்' அதாவது குறிக்கோள் தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய பேச்சுக்கள் மறக்க முடியாத ஒன்றாகும். நான் அவைகளின் தமிழ் மொழி பெயர்ப்பைச் சொல்கிறேன். வேண்டுமானால், அதன் ஆங்கிலமும் என்னிடத்திலே இருக்கிறது. அதிலே அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். 'இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு இங்கே இருக்கக்கூடிய ஒவ்வொரு

மாகாணமும் எப்படி இருக்குமென்றால், சுயாட்சி பெற்ற அடானமஸ் யூனிட்டுகளாக இருக்கும் ' என்று அந்த வார்த்தைகளை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள். மாநிலங்களில் சமஸ்தானங்கள் அன்றைக்கு இருந்தன. அவற்றின் பிரதிநிதியாக இருந்தாலும், பிரிட்டிஷ் ஆண்டபோது, பிரிட்டிஷ் பகுதியாக இருந்தாலும், எல்லா மாநில அமைப்புகளும் எப்படியிருக்கும் என்று கேட்டால், யூனிட்டுகளாக இருக்கும் என்று அன்றைக்கு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு அடுத்தாற்போல ' டிஸ்கவரி ஆப் இந்தியா ' என்பதிலே பண்டித நேருஜி அவர்கள் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்த பிறகு, பத்தாண்டுகளுக்குப் பிறகு பிரிந்து போகக்கூடிய உரிமையுடன் கூடிய அதிகாரம் மாநிலங்களுக்கு இருக்க வேண்டுமென்று கூறினார்கள். எங்களுக்கு இதில் உடன்பாடு இல்லை. அன்றைய சூழ் நிலையில் நேருஜி அவர்கள் அப்படி சொல்லியிருக்கலாம். 1946-ம் ஆண்டிலே கேபினெட் மிஷன் இந்தியாவிற்கு வருகிறது. அதிலே இருக்கக்கூடிய கிரீப்ஸ், அவர்களும், அலெக்சாண்டர் அவர்களும், லாரன்ஸ் அவர்களும் வருகிறார்கள். அன்றைய இந்திய தேசிய காங்கிரஸ் தலைவராக அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் இருக்கிறார்கள். அவர் அன்றைக்கு ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதை இன்றைக்கு இந்த மன்றம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய சர்க்காருக்கு பாதுகாப்பு என்று சொல்லக்கூடிய செக்யூரிட்டி, இராணுவம், வெளி நாட்டுத் தொடர்பு, செய்தி தொடர்பு ஆகிய இவைகள் மட்டும் இருக்கட்டும், மீதி இருக்கக்கூடிய அதிகாரங்கள் எல்லாம் மாநிலங்களுக்குத் தான் இருக்க வேண்டும் என்று சொன்னார். அன்றைக்கு இந்திய முஸலீம் லீக் கட்சி பாகிஸ்தான் பிரிவினை கேட்டபோது, காங்கிரஸ் இயக்கத்திற்கும் முஸ்லீம் லீக் இயக்கத்திற்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று பிரிவினையை கைவிட்ச் சொல்லி ஏற்பட்டது மத்திய சர்க்காருக்கு பாதுகாப்பு, வெளிநாட்டுத் கொள்கை, செய்தி தொடர்பு ஆகிய மூன்று துறைகளும் மட்டும் வைத்துக் கொண்டு, மீதி அதிகாரங்களை மாநிலங்களுக்கு தருவதானால் நாங்கள் பிரிவினையை வலியுறுத்த மாட்டோம் என்று சொல்லி காயிதே ஆசாம், ஜின்னா சாகிப், முஸ்லீம் கட்சிக்கும் மகாத்மா காந்தி அவர்களுடைய காங்கிரஸ் கட்சிக்கும் சிம்லா அக்ரிமெண்ட் என்ற ஒப்பந்தத்தைப் போட்டார்கள். துரதிர்ஷ்டவசமாக அந்த ஒப்பந்தம் மீறப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கூறியதைப் போல ஹைதராபாத்திலே கலவரங்கள், அன்றைய தின மொழி வழி மாநில கலவரங்கள், வகுப்பு வாதம் போன்ற பல்வேறு தகராறுகள் காரணமாக ஒரு பலமான மத்திய சர்க்கார் உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் அன்றைக்கு தேசத் தலைவர்களுக்கு ஏற்பட்டது. அதனுடைய விளைவாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கோரிக்கை அவர்களாலே வலியுறுத்தப் பட்டாலும்





அன்றையச் சூழ் நிலையை கணக்கிலே எடுத்துக் கொண்டு ஒரு பலமான மத்திய சர்க்கார் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டு அந்த நோக்கிலே அவர்களுடைய சிந்தனை சென்றது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். நாங்கள் சொன்னால் அது பிரிவினை வாதம், மற்றவர்கள் சொன்னால் பிரிவினை வாதம் அல்ல என்று சொன்னால் சரியாகாது.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பதாலே மத்திய சர்க்கார் அதிகாரம் இல்லாமல் போய்விடும் என்று சொல்வது தவறான வாதமாகும். திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவாக தன்னுடைய கொள்கையை, கருத்தை சொல்லியிருக்கிறது. வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, மாநிலங்களுக்குள்ள போக்குவரத்து, கரன்சி இந்த அதிகாரங்கள் மத்திய சர்க்காருக்கு இருக்க வேண்டும். மற்ற அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இருக்க வேண்டும். இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். இந்த அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு எழுதப்பட வேண்டும்.

இன்னொன்றையும் நான் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய சர்க்கார் பல மாநிலங்களுக்கு அதிகாரங்கள் கொடுத்தால் பலமற்று போய்விடும் என்பதை அரசியல் நிர்ணய சபையில் பல தேசத் தலைவர்கள் எதிர்த்து கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன் அருள் சந்திர குஹன் மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர். அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருந்தவர். அவர் பேசியி க்கிறார்

I admit we require a strong centre. But it does not mean tnat its limbs snould be cut. We cannot have a strong Centre withous strong limbs

உடம்பிலே இருக்கிற மற்ற பகுதிகளும் பலமாக இருந்தால் தான் பலமாக இருக்கலாம் என்ற வகையில் அரசியல் நிர்ணய சபையில் தன் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுப்பதின் மூலம்மத்திய சர்க்காரும் பல முள்ளதாகத் தான் இருக்க முடியும். அதுமட்டுமல்ல இன்றைக்கு இந்தியாவிலே பல்வேறு மொழி பேசுகிறவர்கள், கலாச்சாரத்தைக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். பல்வேறு மலர்கள் பூத்துக் குலுங்கும் பூந்தோட்டமாக இந்த பாரத பூமி இருக்கிறாள். இன்றைக்கு ஒரே ஒரு சர்க்கார் என்று சொல்லக் கூடியது, ஒற்றை ஆட்சி முறையில், சிலோனைப் போலவோ, பர்மாவை போலவோ இருந்தால் சரியாக வராது.

[பிற்பகல் 1-00]

பெடரல் பார்ம் ஆப் கவர்ன்மென்ட் என்று சொல்லக்கூடிய மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் அமைப்புடன் கூடிய ஒரு கூட்டாட்சி அரசு இருந்தால் தான் காம்போஸிட் கல்சர் பல்வேறு

மக்கள் உள்ள நாட்டிலே சிறப்பாக ஆட்சி செய்ய முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆட்சி ஆள்வதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம் 1935 ஆம் ஆண்டுச் சட்டம். அந்தச் சட்டத்தை அப்படியே காப்பி அடித்துதான், அங்கம் அங்கமாக காப்பியடித்து தான் அரசியல் சட்டமாக இன்றைக்கு இருக்கிறது. கல்வியை மாநிலப் பட்டியலிலே அன்றைக்கே வெள்ளைக்காரன் வைத்திருந்தான். 1935 ஆம் ஆண்டு சட்டமே அப்படி இருக்கிறது என்றால் இன்றைக்கு இந்திய அரசியல் சட்டம் பல்வேறு பிரிவுகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது.

இந்திய அரசியல் சட்டத்தைப் பற்றி பல்வேறு அரசியல் சட்ட நிபுணர்கள் கருத்துக்களைத் தெரிவித்துக் இருக்கிறார்கள்.

SIR IVOR JENNINGS "India is a Federal set up with a strong centralised tendency."

இந்தியாவின் மத்திய அரசைப் பலபடுத்துகின்ற விதத்திலே தான் அதிகமான அதிகாரங்களைக் கொடுத்திருக்கிற அரசியல் சட்டமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். நம்முடைய டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஒரு இடத்திலே சொல்லியிருக்கிறார்கள்

"Our State would be more unitary as well as according to the requirement of time and circumstances.

என்று சொல்லியிருக்கிறார்கள். காலத்தையொட்டி சூழ்நிலையை ஒட்டி இந்தியாவினுடைய அரசியல் சட்டம் கூட்டாட்சியாக இருக்க வேண்டுமா அல்லது யூனிட்டரி ஒற்றை ஆட்சியாக இருக்க வேண்டுமா என்று காலமும் சூழ்நிலையும் தான் நிர்ணயிக்க வேண்டுமென்று கற்றறிந்த சட்ட மேதை அன்றைக்கே சொல்லியிருக்கிறார். இந்தியாவிலே அரசியல் சட்டம் மத்திய அரசுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுக்கிற துரதிருஷ்டமான நிலைமை இருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்து மக்களை முன்னேற்றுவதற்கு ஏற்றவகையில் அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். சுருக்கமாகச் சொல்லி தான் முடிக்க விரும்புகிறேன். இந்தியா போன்றுதான் அமெரிக்கா ஒரு கூட்டாட்சி நாடு; இந்தியா போன்றுதான் ஆஸ்திரேலியா ஒரு கூட்டாட்சி நாடு; இந்தியா போன்று தான் கனடா ஒரு கூட்டாட்சி நாடு; இந்தியா போன்று தான் சுவிட்சர்லாந்து ஒரு கூட்டாட்சி நாடு. அங்கே எல்லாம், நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை, உண்மை நிலையைச் சொல்கிறேன், மாநிலங்களுக்கு ஏராளமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆஸ்திரேலியாவில் மாநிலங்கள் இராணுவத்தை வைத்துக் கொள்ளலாம். எங்களுக்கு அது உடன்பாடு என்று சொல்லவில்லை. அந்த அளவுக்கு மாநிலங்கள் உரிமையுள்ளவைகளாக மதிக்கப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





இந்தியாவிலே ரயில்வேக்கள் மத்திய அரசின் நிர்வாகத்திலே இருக்கின்றன, ஆனால் ஆஸ்திரேலியாவிலே இரயில்வேக்கள் மாநிலங்கள் வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இங்கே சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை பார்க்கிற உரிமை மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆனால்

On application by the State Government only, the Centre can interfere in the question of law and order

என்று செக்ஷன் தெளிவாக இருக்கிறது. கனடா அரசியல் சட்டத்திலே வேடிக்கையாக அல்ல, உண்மையான விவரம் என்னவென்றால், இன்கம் டாக்ஸ் வசூலிக்கக்கூடிய அதிகாரம் இந்தியாவிலே மாநிலங்களுக்கு கிடையாது, மத்திய சர்க்கார்தான் வசூலிக்க முடியும், ஆனால் கனடாவிலே மத்திய சர்க்கார் அல்ல, மாநில சர்க்கார் இன்கம்டாக்ஸ் வசூலிக்கலாம். அதைப் போலவே Inheritence Rights Act வாரிசுச் சட்டத்தின் அடிப்படையிலே வரி விதிக்கக் கூடிய அதிகாரமும் மாநில சர்க்காருக்குத்தான் இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு சுவையான செய்தியாக இருக்கும். கனடாவிலே என்ன நிலைமை என்றால் நம்முடைய பதவிக் காலம் எலெக்ஷன் கமிஷனால் நிர்ணயிக்கப்படுவதில்லை. இங்கே எலெக்ஷன் கமிஷன் பதவிக் காலம் என்ன என்று நிர்ணயிக்கிறது, ஆனால் அங்கே மாநில சட்டசபையே நிர்ணயிக்கிறது. அப்படியிருந்தால் நமக்கு 5 வருடங்கள் என்பதை 10 வருடங்களாக ஆக்கிக் கொள்ளலாம், 15 வருடங்களாகக் கூட ஆக்கிக் கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. சித்தன் அவர்கள் சொல்வதைப் போல் ஆயுள் காலத்திற்கும் கூட நீட்டிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கலாம். கனடாவிலே சட்டமன்ற உறுப்பினர்கள் பதவிக் காலத்தை நிர்ணயிக்கிற உரிமை எலக்ஷன் கமிஷனுக்கு இல்லை. மாநில சட்டசபைக்கே கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்தியாவைப் பொறுத்த வரையில் இந்தியா முழுமைக்கும் ஒரே சிவில் புரசீஜர் கோட் தான் உண்டு. அதைப் போலவே இந்தியா முழுமைக்கும் ஒரே கிரிமினல் புரசீஷர் கோட் இருக்கிறது. ஆனால் கனடாவிலே கியூபெக்கிலே அந்த மாநிலத்திற்கென்று ஒரு சிவில் புரசீஜர் கோட் வைத்திருக்கிறார்கள். லோக்கல் நேச்சர் ஆப் சப்ஜெக்ட் அதாவது மாநிலம் சம்பந்தப்பட்ட உள்ளூர்ப் பிரச்சினைகளைப் பற்றி மாநில சர்க்கார் உத்திரவு போடலாமே தவிர மத்திய சர்க்கார் உத்திரவு போடமுடியாது. சுவிட்சர்லாந்து நாட்டிலே—ஆளுங்கட்சிக்காரர்களுக்கு அந்த கொள்கை பிடிக்கிறதோ இல்லையோ நான் அதற்குள்ளே போகவில்லை. மாநிலங்களுக்கு அதிகாரங்களை எப்படிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எம்.பி.யாக வரலாம்; ஆனால் அந்த

மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினராக வரமுடியும் ; அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் முனிசி பாலிட்டி போன்ற அமைப்பில் உறுப்பினராக வர முடியும். அந்த அளவிற்கு மாநில சுயாட்சியை அங்கே வழங்கியிருக்கிறார் கள். மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்கியிருக் கிறார்கள்.

அதைப் போலவே, சுவிட்ஜர்லாந்து நாட்டிலே மாநில அரசு இராணுவத்தை வைத்துக் கொள்ளலாம். மாநில அரசு வெளி நாடுகளோடு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று கூட இருக் கிறது.

இன்றைக்கு மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே ஆங்கிலத்திலே நாம் பேச முடியும்; தமிழிலே பேச முடியாது. இல்லை யென்று சொன்னால் இந்தியிலே பேசலாம். இதுதான் இப் பொழுது இருக்கக் கூடிய அரசியல் சட்டம். நம்முடைய முதல் அமைச்சராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, எது எதற்கெல்லாமோ நாங்கள் குரல் கொடுக்கிறோம் என்று சொல் கிறார்கள். நான் கேட்கிறேன், இன்றைக்கு மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே எங்களுக்கு இங்கிலீஷ் வேண்டாம், தமிழ்தான் வேண்டும் என்றஒருதீர்மானத்தைக் கொண்டுவாருங்கள் வேண்டா மென்று சொல்லவில்லை. அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் அது முடியாது. ஆனால் சுவிட்ஜர்லாந்திலே பிரெஞ்சு மொழி யிலே பேசலாம், ஜெர்மன் மொழியிலே பேசலாம், இத்தாலி மொழியிலே கோர்ட் நடவடிக்கை அங்கே இருகிறது. அந்த உரிமை நம்முடைய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறதா ?

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் ஐம்பது மாநிலங்களை யும் மதிக்கின்ற விதத்திலே தேசியக் கொடியிலே 50 ஸ்டார்களைப் போட்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அமெரிக்காவிலே அந்த மாநிலங்களே அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்ள லாம்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நாம் பார்க்கிறோம். கச்சத் தீவு தமிழகத்திற்குச் சொந்தமானது என்பது நம்முடைய ஏகோ பித்த அபிப்பிராயம். ஆனால் அது குறித்து நான் இப்பொழுது கருத்து சொல்ல விரும்பவில்லை. அது முடிந்த பிரச்னையாகி விட்டது. ஆனால் இன்றைக்கு அமெரிக்கா போன்ற நாடுகளில் ஒரு மாநிலத்தின் பிரச்னையாகவே அது கருதப்பட்டு, மாநிலத் தின் சம்மதத்தோடுதான் அது பிற மாநிலங்களுக்கோ அல்லது பிற பகுதிகளுக்கோ தாரை வார்த்துக் கொடுக்கப்பட முடியும்.

ஆனால் இங்கே அப்படி இல்லை. நம்முடைய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இருந்த நேரத்திலேயும் கூட பி. சி. ராய் மேற்கு வங்கத்தின் முதலமைச்சராக இருந்தபொழுது

கூட அன்றைக்கு பெர்பாரி பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்பட்டது. அப்பொழுது பி. சி. ராய் அவர்கள் வருத்தப்பட்டுப்பேசினார்கள். மாநில வரம்பில் உள்ள எங்கள் அதிகாரத்தை அவர்கள் கையில் பறித்துக் கொண்டார்கள் என்று கூட மாநில சர்க்காரின் சார்பாகச் சொல்லி, அதே நேரத்திலே '' ஹானஸ்ட் பார்டிட்டிஸியன் '' என்ற முறையிலே தன்னுடைய கருத்தை அன்றைக்கு எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

சோவியத் ரஷ்யாவைப் பற்றி எடுத்துக் கொண்டால் மாண்பு மிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். திரு. உமாநாத் அவர்கள் மிகத் தெளிவாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். கம்யூனிஸ்ட் நண்பர்கள், மார்க்சிஸ்ட் நண்பர்கள் இங்கே இருக்கிறார்கள். அங்கே பதினாறுக்கும் மேற்பட்ட மாநிலங்கள் இருக்கின்றன. ஐ. நா. மன்றத்திலே பைலோ ரஷ்யா, யூக்ரே என்ற இரண்டு மாகாணங்கள். அவை மாகாணமாக இருந்தாலும் ஐ. நா. மன்றத்திலே அவைகள் இன்றைக்குத் தனி நாட்டைப் போலவே உட்கார்ந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு வர்த்தக உடன்பாடு, வெளி நாடுகளோடு மாநிலங்கள் வைத்துக் கொள்ளலாம் ; இராணுவம் வைத்துக் கொள்ளலாம். இப்படிப் பல்வேறு பட்ட அதிகாரங் களை அங்கே கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் இப்பொழுதுதான் நான் அமெரிக்காவைச் சுற்றி, ரஷ்யாவைச் சுற்றி, சுவிட்ஜர்லாந்தைச் சுற்றி உண்மையிலேயே உலகம் சுற்றும் வாலிபனாக இவைகளை எல்லாம் பார்த்துவிட்டு இப்பொழுது உங்களை இந்தியாவிற்கு அழைக்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற அரசியல் சட்டத்திலே என்ன நிலைமை என்று பார்த்தால், தொல்பொருள் ஆராய்ச்சி இலாக்கா இங்கே இருக்கிறது. மதுரையிலே கோவலன் பொட்டலிலே சிலப்பதிகாரச் சம்பவம் நடைபெற்றதா என்ற ஆராய்ச்சியைக் கூடச் செய்ய தமிழக அரசுக்கு உரிமை கிடையாது. தொல்பொருள் ஆராய்ச்சி இலாக்கா மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. மியூசியம் மத்திய அரசாங்கத்தின் கையிலே இருக்கிறது. மகாபலிபுரத்திலே ஒலி-ஒளிக் காட்சியை அமைக்க வேண்டுமென்றாலும்கூட அந்த அதிகாரம் மத்திய அரசாங் கத்தின் கைகளிலேதான் இருக்கிறது.

வேலூருக்கு அருகிலே பொன்னையாறு என்ற ஆறு இருக்கிறது. பொன்னி, பொன்னி நதி என்பதுதான் அதன் உண்மையான பெயர் என்று அந்தப் பகுதி மக்கள் சொன்னார்கள். பொன்னையாறு என்பதை பொன்னி நதி அல்லது

[1981 மார்ச் 6

## சென்னை சட்டக் கல்லூரிக்குத் தன்னாட்சி முறை.

*வினா எண். 401—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தன்னாட்சி முறை (Autonomous Status) வேண்டுமென சென்னை சட்டக் கல்லூரி இயக்குநரிடமிருந்து கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு என்ன முடிவு எடுத் துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம். சட்டக் கல்லூரிக்குத் தன்னாட்சி முறை (Autonomous Status) வேண்டு மென சென்னை சட்டக் கல்லூரி இயக்குநரிடமிருந்து கோரிக்கை அரசுக்கு வந்தது.

(ஆ) மேற்படி கோரிக்கையை அரசு பரிசீலித்து சென்னை சட்டக் கல்லூரிக்கு தன்னாட்சி முறை (Autonomous Status) வழங்க வேண்டாம் என முடிவு எடுத்துள்ளது.

[முற்பகல் 9-30]

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு கலைக் கல்லூரிகளுக்குத் தன்னாட்சி முறைத் திட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது ; ஆனால் தமிழகத் இருக்கின்ற சட்டக் கல்லூரிகள் எதற்கும் அத்தகையதில் அனுமதி இதுவரை வரையில் வழங்கப்படவில்லை. ஆகவே மாதிரிக்காக வாவது சென்னை சட்டக் கல்லூரிக்காவது இதை அனுமதிக்க அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது சென்னை சட்டக் கல்லூரி கடந்த இரண்டாண்டுக் காலமாக மாணவர்களை அனுமதித்துக் கல்லூரியை நடத்திக் கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டு ஒரு முறையாகச் செயல்படுவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதைச் சரி செய்வதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறோம். அதோடு, சட்டக் கல்லூரிப் படிப்பைப்பற்றியும் பல்கலைக் கழகம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் தற்போது தன்னாட்சி முறை வழங்குகின்ற முறையைச் செயல் படுத்த விரும்பவில்லை என்றாலும், எதிர்காலத்தில் அதற்கு வாய்ப்பு இருக்கிறது ; அப்பொழுது நாம் பார்த்துக் கொள்ள லாம்.



1981 மார்ச் 6]

## நடுநிலைப்பள்ளிகளில் தமிழ்ப்புலவர்கள் நியமனம்.

*வினா எண். 402—திரு. கே. எம். தங்கமணி, திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நடுநிலைப் பள்ளிகளில் தமிழ்ப் புலவர்களை நியமனம் செய் யும் திட்டம் அரசுக்குண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிதிநிலை இடம் தருவதற்கேற்ப இனி வரும் ஆண்டுகளில் நடுநிலைப் பள்ளிகளில் கூடுதலாகத் தமிழாசிரியர்கள் பதவிகளை ஏற்படுத்துவது குறித்து அரசு ஆலோசிக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களே, பத்து, பதினைந்து ஆண்டுகளை முடித்தவர்களே, புலவர் பட்டம், எம். ஏ, தமிழ் பட்டம் பெற்றவர்கள் நிரம்ப இருக்கிறார்கள். நிதி நிலையை அனுசரித்துக் கூடுதலாக தமிழாசிரியர்கள் பதவிகளை ஏற்படுத்து வது குறித்து ஆலோசிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே ஊராட்சி ஒன்றியங் களில் தற்போது ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரிந்து வருகின்ற புலவர் பட்டம் பெற்ற, எம். ஏ. தமிழ் பட்டம் பெற்ற வர்களை நடுநிலைப் பள்ளிகளில் நியமிப்பதற்கு அரசு முயற் சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அனைவரையும் நாம் இப்பொழுது பதவி உயர்த்துவது என்பது நிதிநிலைமைக்கு ஒத்து வராத நிலையில் இருக்கிறது. ஆகவே, நிதி ஆதாரங்களைப் பொறுத்துப் பதவிகளை ஏற்படுத்து கிறோம். அப்படி ஏற்படுத்தும்பொழுது இப்படிப்பட்டவர் களுக்குச் சில வாய்ப்புகள் கிடைக்கும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, தமிழ்நாட்டில் தமிழ்ப் புலவர் பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அவர்களுக்கு வேலைவாய்ப்பு நல்க தமிழக அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவ ரவர்களே, 31–10–1980 அன்றைய நிலவரப்படி வேலைவாய்ப்ப கங்களில் பதிவு செய்திருந்த வேலைவாய்ப்பற்ற தமிழாசிரியர் களின் எண்ணிக்கை, ஆசிரியர் பயிற்சி பெற்ற தமிழாசிரியர்கள் 3,439 ; ஆசிரியர் பயிற்சி பெறாத தமிழாசிரியர்கள் 600;

திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளிலே தமிழ்ப் புலவர்களை நியமிக்க அரசு உத்தேசித்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மிக்க நன்றி. அப்படி உத்தேசிக்கின்ற பொழுது, நடுநிலைப் பள்ளிகளிலே தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்ய, புலவர்களை அனுமதிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

### படைவீடு பகுதியில் தொல் பொருள் ஆராய்ச்சி

*வினா எண். 403—திரு. இல. பலராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் வட்டம் படைவீடு என்னும் பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினரால் ஆராய்ச்சி ஏதும் செய்யப்பட்டதா ?

(ஆ) இப்பகுதியில் புராதன பொருள்கள் பொற்காசு மற்றவைகளும் கிடைப்பது அரசு கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் படைவீடு என்னும் பகுதி, புராதனமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் என்று கருதி, இனி மேலாவது அங்கு ஆய்வு செய்ய, புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் அனுப்பப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் தரப்படுமானால், தொல்பொருள் ஆய்வுத் துறையினருக்கு அனுப்பப்பட்டு அதுபற்றி பரிசீலிக்கப்படும்.



### *Report of Hon. Murugesan Commission.*

*Q. No. 404—THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(a) whether the report of the Hon'ble Murugesan Commission into the circumstances leading to the death of two life prisoners in Thiruchi Central Prison has been received by the Government; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்த இரண்டு மரணங்கள் குறித்து, திருச்சி சிறையிலே மட்டும் அல்ல:, மாநிலத்திலே இருக்கக்கூடிய பல்வேறு சிறைகளிலே இன்னும் அந்தப் பதட்டம், தங்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற நிலை இருப்பதால், நான் கேட்க விரும்புவது, நடந்தது, Public Enquiry. It is Public Enquiry Commission Report. ஆகவே, அந்த ரிப்போர்ட்டிலே அந்த இரண்டு மரணங்களைப் பற்றி, conclusions and recommendations என்ன என்பதை இந்த அவைக்குச் சொல்ல வேண்டும். It is not secret document.

[முற்பகல் 9—40]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விசாரணைக் கமிஷன் ஆய்வுக்குப் பின்னால் அந்த அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்து, அது முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, தற்போது சுற்றாணை குறிப்பாக அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் 4, 5 தினங்களில் அரசு அதைப் பற்றி முடிவெடுத்து இந்த அவையில் கண்டிப்பாக அறிவிக்கப்படும்,

(திரு. ரா. உமாநாத் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பதில் தெளி
வாக இருக்கின்றது. இரண்டாவது கேள்வியை உங்களுக்கு அனு
மதிப்பது சரி. அதற்காக ஒன்றுமே இல்லாமல் கேட்பது சரி
யல்ல.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அந்த ரிப்
போர்ட்டை அரசுக்குக் கொடுத்து நீண்ட நாட்கள் ஆகின்றன.
அதைப் பரிசீலனை செய்து அதன் பேரில் நடவடிக்கை எடுப்
பதற்கு ஏன் இவ்வளவு டிலே ஆகிறது. அதற்குக் காரணம்
என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
முன்னாலே எழுப்பிய வினாவிலே சொன்னார்கள். இந்த விசா
ரணை மற்ற சிறைகளிலே உள்ள நிலைமைகளை எல்லாம் சரிப்
படுத்தக்கூடிய அளவுக்கு உறுதுணையாக அமையும் என்ற பொரு
ளிலே, அங்கும் பதட்ட நிலை இருக்கின்றது என்றும் சொன்னார்
கள். எனவேதான் இந்த நிகழ்ச்சி பற்றிய விசாரணை என்று
குறுகிய அளவுக்கு மட்டும் இல்லாமல் ஆழ்ந்து ஆராய்ந்து அந்த
அடிப்படையில் இதுபோன்ற சம்பவம் மீண்டும், " பிரிவென்டிவ்
மெஷர்ஸ் " தடுப்பு நடவடிக்கைகள் என்னென்ன செய்யலாம்
என்பது பற்றியும் அரசு ஆய்வு செய்ய வேண்டுமென்ற காரணத்
தால்தான், அதை ஆய்வு செய்வதற்கு சற்றுக் காலதாமதம்
ஏற்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் 4, 5 தினங்களுக்கு சுற்
றாணை முடிந்த பிறகு அடுத்த தொடர் கூட்டத்திலே இந்த
அவைக்கு அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயக் கடன் ரத்து சலுகை.

*வினா எண் 405 : திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு
கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) கடன் ரத்து சலுகை 5 ஏக்கருக்குக் குறைவானவர்
களுக்கு என்று அரசு அறிவித்துள்ளது கடன் பெற்ற விவசாயி
யின் தற்பொழுது உள்ள நிலவுடமை கணக்குப்படியா?

(ஆ) ஆம் என்றால் கர்ணம் சான்றிதழ் கோரப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) கடன் வழங்கிய
தேதியில் உள்ள நிலஉடமைக் கணக்குப்படி கடன் ரத்து சலுகை
அளிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள கடன் நிவாரணச் சட்டத்தில் 5 ஏக்கர் நஞ்சை அல்லது 10 ஏக்கர் புஞ்சை அல்லது 25,000 சொத்து மதிப்புள்ளவர்களுக்குக் கடன் நிவாரணச் சட்டத்தில் சலுகை தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 25,000 ரூபாய் என்று எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்பது தெரியாமல் ஒவ்வொரு கோர்ட்டிலும் தங்களுக்குத் தகுந்த மாதிரி தீர்ப்பாகி இருக்கிறது. எனவே எந்த முறையில் அது நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்பதைப் பற்றி அரசு கைட்'லைன் கொடுத்துள்ளது என்பதை அறிவிக்கவேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பி இருக்கிற மூல வினா வேறு, தற்போது எழுப்பி இருக்கிற வினா வேறாகவும் இருக்கின்றது. கடன் நிவாரணச் சட்டம் என்பது வேறு; விவசாயிகளுக்காக கடனை ரத்து செய்து அரசு எடுத்த நடவடிக்கை என்பது வேறு. கடன் நிவாரணச் சட்டத்திலே நில உடமை என்பது வேறு ஒரு அளவாகவும் விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்வதில் நில அளவு வேறு ஒரு அளவாகவும் அரசு மேற்கொண்டு இருக்கிறது. காரணம் நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். இதிலே சில மாறுதல்கள் இருக்கின்ற காரணத்தால் நில அளவு சிறு விவசாயிகளைப் பொறுத்த வரைக்கும் எந்த அளவாக இருக்கவேண்டும் என்பதை ஒரு ஆய்வு செய்து ஒரே சீராக இருக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

செல்வி வி. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் நிலம் உள்ள சிறு விவசாயிகள், கர்ணம் களால் 5 ஏக்கர்களுக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களாகக் காட்டப்பட்டதால், பல சிறு விவசாயிகள் கடன் தள்ளுபடி ஆகாமலேயே இருக்கின்றது. அது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில், அவர்களுடைய கடன்களை தள்ளுபடி செய்ய ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கருக்குக்கீழ் நிலம் உள்ளவர்கள் சிறு விவசாயிகள் என்று அரசு தெரிவித்திருக்கிறது. 5 ஏக்கர் நிலம் வைத்திருந்தபோதிலும் அவர்கள் பெருவிவசாயிகள் என்று கணக்குப்பிள்ளைகளால் தவறாக சேர்க்கப்பட்டிருந்தால். மாண்புமிகு உறுப்பினர் அதை அரசுக்குத் தெரிவிப்பாரானால் அரசு கண்டிப்பாக தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன் ரத்து செய்யப்படுகிறபோது, 5 ஏக்கர் என்கிற அளவிலே கடன் ஆஸ்திப் பொறுப்பிலே கொடுக்கப்பட்டு இருக்கிற நிலம் என்கிற அளவிலே தான் பெரும்பாலான இடங்களில் தள்ளுபடி செய்யப்பட்டு

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: என்ன காரணத்தினால் அந்த நான்கு யூனியன்களை மாற்றிவிட்டு வேறு நான்கு யூனியன்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை கேள்விநேரத்தில் கூறியிருக்கிறார்கள். நீங்கள் அதற்கு அனுமதி கொடுத்தால் நான் அதற்குப் பதில் சொல்கிறேன். இல்லை என்றால் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல வேண்டாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நான் குற்றச்சாட்டு கூறவில்லை. ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு இடங்களை ரத்து செய்துவிட்டு புதிதாக நான்கு ப்ளாக்குகளை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பதற்கான காரணங்களை அறிய விரும்புகிறேன். இது குற்றச்சாட்டல்ல.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இதில் எந்தவிதமான பாகுபாடும் யாருக்கும் காட்டுவதில்லை. குறிப்பாக, ஆளுங்கட்சி என்றோ, எதிர்க் கட்சி என்றோ பாகுபாடு காட்டி, தன்னிறைவுத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்கிற எண்ணம் இந்த அரசுக்கு கிஞ்சித்தும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றும்கூட எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய அருமை அண்ணன் திருவேங்கடம் அவர்களுடைய தொகுதியிலே 2 ஒன்றியங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி பாகுபாடு இருந்தால், கண்டிப்பாக அவருடைய தொகுதியிலே ஒரு ஒன்றியம்கூட எடுக்காமல் இருந்திருக்க வேண்டும். ஆனால், எல்லா ஒன்றியங்களையும் எடுத்துக் கொண்டு, தன்னிறைவுத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. ஆகவே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அரசாணை எண் 1108 என்பதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இவைகள் தேவையின் அடிப்படையில்தான் எடுக்கப்படுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகின்ற அனுபவத்தையும், இங்கே இருக்கின்ற குறிப்புகளையும் பார்த்து எதை முன்னால் எடுத்துக்கொள்வது, எதைப் பின்னால எடுத்துக்கொள்வது என்ற தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.



திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலான பொறியாளர்களைப் போடுகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா? அப்படிப் பல திட்டங்கள் செயல்படுவதற்கு, உடனடியாக மார்ச்சு மாத இறுதிக்குள் அப்படிப்பட்ட அதிகாரிகளை அந்தந்த ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏற்கனவே பொறியாளர்கள் அந்தந்த ஒன்றியங்களிலே போடப்பட்டு, செயல்பட்டு வருகிறார்கள். எங்கெயெல்லாம் போதுமான அளவுக்கு இல்லை என்பதைப் பரிசீலித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், முதல் கட்ட தன்னிறைவுத் திட்டப் பணிகள் 31—3—81ல் முடிவடையும். அதற்குப் பின்னர் அடுத்த கட்டத்தை எடுத்துக்கொள்ளும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம், அதுபோல் பொதுமக்களுக்கு நலம் விளைவிக்கின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும் பல்வேறு ஒன்றியங்கள் இருக்கிறபோது, ஒரு வரைமுறை வைத்து, அந்த முறைப்படி இவைகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது அரசாங்கம் கையாள வேண்டிய ஒரு நெறி என்பதை அமைச்சர் ஒப்புக்கொள்வார்கள். ஆனால், அப்படி ஒரு முறை வைத்து எடுக்கப்பட்டு, ஒரு ஆணையைப் பிறப்பித்து, அரசாங்கத்திலே இருந்து அது வெளியிடப்பட்டு, அந்த ஆணை பிறப்பித்த இரண்டு திங்களுக்குப் பின்னர் அந்த ஆணைக்கு மாறாக, இன்னொரு ஆணை பிறப்பிக்கப்படுமானால், மாவட்ட ஆட்சித் தலைவர் ஒன்றைச் சொன்னார், மாநில அரசு செயலாளர் வேறு ஒன்றைச் சொன்னார் என்று இப்படிச் சொல்வதற்கு இதிலே இடமில்லை. என்றாலும், அப்பேர்ப்பட்ட மாற்றங்கள் நடைபெற்றிருக்குமானால், அதற்குக் கையாளப்பட்டு வருகின்ற வரைமுறை என்ன? எதிர்க்கட்சிகளுக்கு உரிய அல்லது அவர்கள் தொகுதியில் இருக்கும் ஒன்றியங்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற கருத்து இல்லை என்றாலும்கூட, இப்படி நினைத்தபோதெல்லாம் நினைத்தபடி மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு இருக்கின்ற நடைமுறைகள் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் நல்ல ஒரு திட்டம் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 4 திட்டங்களை

முதலில் எடுத்துக்கொண்டு, அதை ரத்து செய்துவிட்டு, வேறு 4 திட்டங்களை எடுத்துக் கொண்டிருப்பதைப் பற்றிக் கூறினார்கள். அந்த 4 திட்டங்களும் வேறு மாவட்டத்திற்குச் செல்லவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், இப்படிப்பட்ட திட்டங்களை செயல்படுத்துகின்ற நேரத்தில் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்கங்கே இருக்கின்ற நிலைமைக்கேற்ப எடுத்துச் சொல்கிறார். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்து அரசுக்குக் கொடுக்கின்ற நேரத்தில், அவைகள் பரிசீலிக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் ஒன்றியங்கள் எடுக்கப்படுகின்றன. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற மாண்புமிகு அருமை அண்ணன் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தன்னுடைய தொகுதியில் ஒன்றியத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முதல்வர் அவர்கள் மூலமாகக் கோரிக்கை வைத்தார். அவர்கள் ஒன்றியம்கூட......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பதில் சொல்லுங்கள். விளக்கம் வேண்டாம்.

திரு. எஸ். இளையபெருமாள் : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** தற்போது எனக்கும் மாண்புமிகு உறுப்பினருக்கும் இடையில் நடந்த விவாதங்கள் அவைக் குறிப்பில் இடம்பெறாது.

பேரவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

[முற்பகல் 10–00]

கோபி நகராட்சியில் வீடுகள் கட்ட வரைபட அங்கீகாரம்.

*வினா எண். 425—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கோபிச்செட்டிப்பாளையம் நகராட்சியில் ஒன்றரை சென்டிற்குக் கீழே கட்டப்பட்டுள்ள வீடுகளின் வரைபடம் அங்கீகரிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



(ஆ) ஆம் எனில், இதுவரையிலும் கட்டிமுடிக்கப்பட்டுள்ள வீடுகளின் வரைபடங்கள் அங்கீகரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தற்போதுள்ள விதியின்படி, 95 சதுர மீட்டர் பரப்பளவுக்குக் குறையாமலும் ஆறு மீட்டர் அகலத்திற்குக் குறையாமலும் உள்ள மனைகளில் மட்டுமே வீடுகள் கட்ட அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே ஒன்றரை சென்ட் அளவுள்ள நிலங்களில் கட்டப்படும் வீடுகளுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. எனினும் கட்டிட அனுமதியை அனுமதி மறுத்து நகராட்சி ஆணையாளர் அறிவிப்பு கொடுத்த 60 நாட்களுக்குள் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநருக்கு உரிய மேல்முறையீடுகளை சம்பந்தப்பட்டவர்கள் அனுப்பினால் விதிகளைத் தளர்த்தி அனுமதி வழங்குவது தனித்தனியே பரிசீலிக்கப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோபி நகராட்சியில் ஒன்றரை சென்டிற்கு அளவுள்ள நிலங்களில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன? வரைபடம் அங்கீகரிக்கப்படாமல் உள்ள வீடுகள் எத்தனை ? விதிகளைத் தளர்த்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை வீடுகள் மறுக்கப்பட்டுள்ளன, கட்டப்பட்டுள்ளன என்பதற்கான விவர அறிக்கை என்னிடத்தில் இல்லை. தற்போதுள்ள விதியின் கீழ், 95 சதுர மீட்டர் பரப்பளவுக்குக் குறையாமலும், ஆறு மீட்டர் அகலத்திற்குக் குறையாமலும் உள்ள மனைகளில் மட்டுமே வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டு வருகின்றன. 1½ செண்டுக்குக் குறைவாக இருந்தால் அனுமதி கொடுப்பதற்கு அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1½ செண்டிற்கு உட்பட்ட இடங்களில் வீடுகள் கட்ட அனுமதி வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த கால நிலை நாட்களா, மாதங்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வெகு சீக்கிரத்தில் முடியும்.

## உளுந்தூர்பேட்டை மருத்துவமனை.

*வினா எண். 426.—திரு. க. ரங்கசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

உளுந்தூர்ப்பேட்டை மருத்துவ மனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் பல நவீன வசதிகளுடன் விரிவு படுத்தவும் அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தற்சமயம் உளுந்தூர்ப் பேட்டை மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஏற்கனவே இருக்கும் வசதிகளுடன் ஒரு இரத்தசேமிப்பு வங்கி ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. பி எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்ப்பேட்டை, விருத்தாசலம் போன்ற ஆஸ்பத்திரிகளில் எக்ஸ்ரே போன்ற கருவிகள் நல்ல நிலையில் இல்லாததால் சென்ற மாதம் 15 ஆம் தேதி வாக்கில் குளித்தலையிலிருந்து வந்த வக்கீல் குடும்பம் ஆபத்துக்குள்ளாகி அந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அங்கே எக்ஸ்ரே கருவிகள் இல்லாததால் எக்ஸ்ரே எடுக்கமுடியாமல் மயக்கம் கொடுத்து தையல் போடாமல் தையல் போட்டதால் கஷ்டப்பட்டதாக என்னிடம் கூறியிருக்கிறார்கள். இதுபோன்று ஏற்படாதவாறு இருக்கின்ற வகையில் உளுந்தூர்ப்பேட்டை, விருத்தாசலம் போன்ற ஆஸ்பத்திரிகளிலே எக்ஸ்ரே போன்ற கருவிகளை வைக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அந்த மருத்துவ மனை லோக்கல்பண்ட் டிஸ்பென்சரியாக இயங்கி வந்தது. 1-4-61 இல் அது அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அப்போது 16 படுக்கைகள்தான் இருந்தன. பிறகு 24 படுக்கைகள் கொண்ட அதோடு அடிஷனல் வார்டு கொண்டதாக இருந்தது. இப்போது அதில் building accommodation for 40 beds, out-patient block, casualty room, labour room, postmortem shed, kitchen, pucca operation theatre, patients' waiting hall, preparation room for patients, separate room for washing என்றெல்லாம் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 4 அசிஸ்டென்ட் சர்ஜன்ஸ், அசிஸ்டென்ட் மெடிக்கல் ஆபீசர் (சித்தா) எல்லாம் நியமிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனிசிபல் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் கூட அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. எனவே இதையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு அவர்களுடைய சம்பள ஸ்கேலை நான்காவது நிலை பணியாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஸ்கேலைப் போன்று கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும். Based on the recommendation of the Third Pay Commission, Government have issued orders granting the time scale of Pay of Rs. 295—5—315—10—475 to all vaccinators with effect from 1—4—1978 and there is no fixed pay for the vaccinators from that date. ஆகவே நிலைமைகள் இப்போது அவ்வளவு மோசமாக இல்லை. கேள்வி கேட்டதற்குப் பிறகு கடைசியாகச் சொல்லலாம் என்று வைத்திருந்தேன்.

திரு. தி. கா. நல்லய்யன்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொழிற்சாலைகளில் 240 நாட்கள் வேலை செய்தால் அவர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக்க வேண்டுமென்பது விதி. அப்படி இருக்கிறபோது இந்த அம்மை குத்தக்கூடிய தொழிலாளர்களுக்கும் அவ்வாறு செய்து முறையாக அவர்களுக்கு சம்பளம் கொடுக்காததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10).

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் அதற்கான விடையை ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் எழுப்பிய கேள்விக்குக் கொடுத்திருக்கிறேன். By stages, we are making them permanent.

திருமதி தா. இராசாம்பாள்: பேரவைத் தலைவரவர்களே, இங்கு கேட்கப்பட்ட கேள்வி அவர்களின் பணியை ரெகுலரைஸ் செய்வது சம்பந்தமானதாகும். அவர்களின் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்துவது என்பது வேறு; பணியை ரெகுலரைஸ் செய்வது என்பது வேறு. அவர்கள் பணியில் சேர்ந்து ஓராண்டுக் காலத்திற்குள் பணியை ரெகுலரைஸ் செய்திருக்க வேண்டும். எட்டாண்டுக் காலமாக ரெகுலரைஸ் செய்யாததன் காரணமாக இனியாவது உடனடியாக அவர்களை ரெகுலரைஸ் செய்வதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே பதில் கொடுத்திருக்கிறேன். 1972 ஆம் ஆண்டிலிருந்து இருக்கின்ற பிரச்னையாக இருக்கிறது. From 1-4-72 onwards அப்பொழுதிருந்து



இருக்கின்ற பிரச்னை. படிப்படியாக இப்பொழுது இட்டத் தட்ட மூன்றில் இரண்டு பங்கு 2/3rds have been regularised. ரெகுலரைஸ் செய்து விட்டோம். எல்லோரையும் ரெகுலரைஸ் செய்யக்கூடிய அந்தக் குறிப்புகளை நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

### சித்த மருத்துவர்களைப் பதிவு செய்தல்.

*வினா எண். 428.—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு இந்திய மருத்துவ கழகத்தின் ஆர்.ஐ.எம்.பி. (R.I.M.P.) பதவிக்காக 1978 ஆம் ஆண்டில் தேர்வு எழுதிய சித்த மருத்துவர்கள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இக்குறையை நீக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ப. நெடுமாறன்: மதிப்பிற்குரிய அவைத் தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டில் தேர்வு எழுதி இரண்டாண்டுக் காலமாகியும் கூட இவர்கள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பதற்கு ஏதாவது சட்டச் சிக்கல் உள்ளதா? அப்படிச் சட்டச் சிக்கல் இருந்தால் அது மத்திய அரசு மட்டத்தில் இருக்கிறதா அல்லது இந்த அரசு மட்டத்தில் இருக்கிறதா? தாமதத்திற்கான காரணம் இருக்கிறதா என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலிலே சில பேர் எழுதினார்கள். அடிப்படையான மார்க்குகள் கிடைக்கவில்லை என்று மீண்டும் ஒரு முறை 18-6-1978இல் இரண்டாவது வாய்ப்பு அளிக்கப்பட்டது. Section 17 of the India Medicines Council Central Act of 1970 imposes certain restrictions for registering practitioners of India Medicine. This was brought into force in 1976 through Central Act. Only according to the Indian Medicines Council Central Act, those possessing prescribed qualifications can be registered in the Central register or State register. Those who do not possess the prescribed qualification cannot be registered after 1—10—1976.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். ஒரு வாரம் ஆகிவிட்டது. இன்னும் அது குறித்து எடுத்துக் கொள்ளப்பட வில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வது என்கின்ற முறையை நாம் கடைப்பிடித்து வருகிறோம். அந்த அடிப்படையில் இன்றைக்கு திரு. கி. பழனிமுத்து அவர்கள் கொடுத்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ள இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் இந்தச் சபையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த முறையை நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைக் கூட்டத் தின் கடைசி நாள் அன்று உறுப்பினர்கள் அதுவரை கொடுத் துள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங் கள் ஆகியவற்றைக் குறித்து, சபையில் படிப்பதற்கு அனுமதி கொடுக்கப்படும். உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அது உதவியாக இருக்கும். இன்றைக்குப் பேரவைக் கூட்டத்தின் கடைசிநாள் என்பதால், அந்த முறை அனுஷ்டிக்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவை நிகழ்ச்சிகள் இன்றோடு ஒத்திவைக்கப் பெற்றாலும் மீண்டும் நிதி நிலை அறிக்கை விவாதத்திற்காக கூட இருப்பதால், அதிகமான பிரச்சினைகளைக் கொண்டு வந்து விவாதிப்பதற்கு நிறைய வாய்ப்புக்கள் உறுப்பினர்களுக்கு இருக்கின்றன.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, 54வது விதியின் கீழ் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை கொடுத்து நான் அறிவிப்பு கொடுத்து இருந்தேன். திருப்பூர் நகரத்தில் உள்ள 25,000 பனியன் தொழிலாளர்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு உறுப்பின ரும் தாங்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து இப்போது கேட்பது சரியல்ல. கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்புகள் அனைத் தும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப் பெற்றுள்ளன. அதற்கான தகவல்கள் வந்தவுடன் அவையில் வைக்கப்பெறும். நானே அதற்கான பதில்களைத் தருகிற அளவில் நிலைமைகள் இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் இரண்டு உரிமை மீறல் குறித்த பிரச்சினைகளைக் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முருகன் அவர்கள் உரிமை மீறல் பிரச்சினைகள் கொடுத்து இருக்கிறார் என்று ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறேன். இரண்டா, மூன்றா என்று நான் குறிப்பிடவில்லை. கொடுக்கப்பட்டுள்ள அறி விப்புகள் என் ஆய்வில் உள்ளன.





திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இங்கே அங் கத்தினர் அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பியபோது 'அது என் ஆய்வில் உள்ளது' என்று சொல்லிவிட்டீர்கள். அது என்ன அறிவிப்பு என்று புரியவில்லை. திரு. மணிமாறன் அவர்கள் சில பிரச்னைகள் குறித்து திரு. துரைமுருகன் மீது எழுப்பி யுள்ளார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர் கள் குழப்பம் அடையக் கூடாது. திரு. மணிமாறன் கொடுத் துள்ள பிரச்னை வேறு. திரு. துரை முருகன் கொடுத்துள்ள பிரச்னைகள் வேறு. இரண்டையும் சேர்த்து, அவர் இவர் மேல் கொடுத்துள்ளார், இவர் அவர் மேல் கொடுத்துளளார் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். (குறுக்கீடு) நான் அறி விப்பை மீண்டும் படிக்கிறேன். "மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு அறி விப்புக் கொடுத்துள்ளார். மாண்புமிகு திரு. துரை முருகன் அவர் கள் அவை உரிமை மீறல் குறித்த பிரச்னைகள் குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளார். இவை என் ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்த பிறகு இவற்றைப் பேரவையால் எடுத்துக்கொள்வதா இல் லையா என்பதற்கான எனது இசைவு குறித்து முடிவு செய்யப் படும்."

இன்றைய தினம் மாண்புமிகு எல். இளையபெருமாள் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அதுவும் என் ஆய்வில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

ஆத்தூர் காவல் துறையினர் ஓர் இளைஞரைத் தாக்கியதாகச் சொல்லப்பெறுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.

"15-2-1981 அன்று ஆத்தூர் காவல் துறையினர் 20 வயது ராஜு என்பவரைத் தாக்கியதன் விளைவாக அவரது இரு கண்களும் பாதிக்கப்பட்டு அவர் பார்வை இழந்த காரணத் நால் அப்பகுதி பொது மக்களிடத்திலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து" விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு, திருவாளர்கள் சி. பழனி முத்து, திருமதி இராசாம்பாள், நா. சுந்தரராஜ் ஆகியோரிட மிருந்து தீர்மானங்கள் வந்துள்ளன. இது எப்படி அவசர முக்கிய மானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கேறேன்.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் போலீசாரின் அத்துமீறிய நடவடிக்கைகளின் காரணமாக திரு. எஸ். செங்கோல் அவர்களின் மகன் ராஜு என்பவருக்கு கண் பார்வை போய் விட்டது. இந்த நிகழ்ச்சி 15–2–1981 அன்று நடைபெற்று இருக்கிறது. ஆத்தூர் நகர பயிற்சி துணை ஆய்வாளர் குணசீலன் மற்றும் அவரைச் சேர்ந்த காவலர்கள் அந்த இளைஞனைக் கைது செய்து, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று கொடூரமான முறையில் தாக்கியதன் காரணமாக, மேற்படி இராஜு என்கிற இளைஞரின் இரண்டு கண்களும் பாதிக்கப்பட்டு, ஆத்தூரில் சிகிச்சை பெற்றும் அது சரியாகாத காரணத்தால், சேலம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். அவருடைய எதிர்காலத்தையும், அவருடைய குடும்பத்தின் எதிர்காலத்தையும் பாதிக்கக்கூடிய அளவில் அவருடைய இரண்டு கண்களும் பார்வை இழந்து போய் இருக்கிறது.

[முற்பகல் 10–30.]

அந்த போலீசார் எந்தவிதமான முன் அறிவிப்பும் இன்றி, அந்த செங்கோல் மகன் ராஜு என்பவரை அழைத்துச் சென்று, அடித்து, துன்புறுத்தி, உதைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக அந்த நபருக்கு கண் பார்வை இழக்க நேரிட்டுள்ளது. ஆகவே, குற்றம் செய்தவர்களை உடனடியாக அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். பாதிக்கப்பட்ட ராஜு என்பவருக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். அது மட்டுமல்ல. போலீசார் அத்துமீறிய செயல் ஆத்தூர் நகரில் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சனை குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசுக்குக் கிடைத்துள்ள தகவல்படி 15–2–1981 அன்று காலை 8 மணி அளவில் ஆத்தூர் காவல் நிலையம் முன்பு பொது இடத்தில் செங்கோல் மகன் ராஜு தொல்லை கொடுத்ததாகவும், அவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, சிறு வழக்கு எண். 91/81-ல் தமிழ்நாடு நகரக் காவல்துறைச் சட்டம் பிரிவு 75-ன் கீழ் (செக்ஷன் 75 MCP) வழக்கு பதிவு செய்யப் பட்டது. பிறகு, ஆத்தூர் வட்டாட்சி அலுவலகத்தில் கடைநிலை ஊழியராகப் பணிபுரியும் ராஜுவின் தந்தை செங்கோல் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ராஜு ஜாமீனில் விடுவிக்கப்பட்டு, 16–2–81 அன்று ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். 18–2–81 அன்று, சேலம் மாவட்ட கடைநிலை ஊழியர்கள் சங்கம், ராஜுவை போலீசார் அடித்ததாகவும், அவன் கண்பார்வை இழந்துவிட்டதாகவும் புகார் செய்தனர். உடனே இதை மேட்டூர் கோட்டாட்சியாளர் முன்





விசாரணை செய்யும்படி பணிக்கப்பட்டார். இவ்விசாரணையில், போலீசார் மீது வந்துள்ள புகாரை ஒட்டி, பி.எஸ்.ஓ. 145 பிரிவின்படி, விரிவான விசாரணை செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆணையிடப்பட்டுள்ளது.

கண்பார்வை மங்கலாக இருக்கிறது என்று புகார் செய்த ராஜு, சேலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, தற்போது கண் மருத்துவர் இவரின் பார்வை 75 சதவீதம் திரும்பி விட்டது என்று கருத்துத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பெற்றால், இயல்பான கண்பார்வையை மீண்டும் பெறுவார் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். ராஜுவின் கண் பார்வை தற்காலிகமாக இழந்ததற்கான காரணம், மருத்துவ ரீதியில் ஆராயப்பட்டு, 4 அல்லது 6 வாரங்களில் அறியப்படும் என்று கண் மருத்துவர் கூறுகிறார். ஆகவே, விசாரணை அறிக்கை கிடைத்தபின் இச்சம்பவத்தைப் பற்றி முழுத் தகவலும் கிடைக்கப்பெறும்.

இது குறித்து, மக்களிடையேயும், அரசு ஊழியர்களிடையேயும் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது என்பது சரியல்ல. மேற்கூறிய காரணங்களால் இச்சம்பவம் குறித்து விவாதிக்க சட்டமன்றப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

### உதகமண்டலம் மருத்துவமனையில் ஒரு சிறுவனுக்கு ஏற்பட்ட மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின் கீழ் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைப்பற்றி திருவாளர்கள் இரா. கருப்பையா, மு. அப்பாதுரை, தி. கா. நல்லப்பன், ப. பொன்னுரங்கம், எம். ஆறுமுகம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, "18–2–1981 அன்று உதகமண்டலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாராயண்லால் என்ற சிறுவன் மர்மமான முறையில் மரணம்

தாகவும் பத்திரிகையிலே பார்த்ததாக ஒரு ஞாபகம் இருக்கின்றது. அதனுடைய விவரம் அமைச்சரவர்களிடம் இருக்கிறதா? அது குறித்து ஆய்வு செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே முதலிலே நான் சொல்லிக்கொள்ளவது என்னவென்றால் இது பாதாள இரயில் பாதை அல்ல. இரண்டாவதாக இன்னும் கருவே தரிக்கவில்லை என்ற நிலையில் அவர்கள் உருபற்றி கேள்வி கேட்கிறார்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சென்னை மாநக ரத்தில் ரேப்பிட் ட்ரான்சிட் சிஸ்டம் ஏற்படுத்த வேண்டும் என்பது இன்றியமையாத ஒரு தேவையாகும். 1971 ஆம் ஆண் டிலே இருந்து புள்ளிவிவரத்தோடு இது குறித்து வலியுறுத்தப்பட்டு அதற்காக இரல்வே இலாகா அடிப்படை ஆராய்ச்சி ஒன்றை நடத்தியது. அப்படி 1975ஆம் ஆண்டிலே ஒரு முறை யும், 1977 ஆம் ஆண்டிலே ஒரு முறையும் இப்போது ஒரு முறை யும் ஆக மூன்று முறை அந்தத் திட்டம் பற்றி கேட்கப்படும் அது முடக்கப்பட்டுவிட்டது. இப்படி முடக்கப்பட்டது எந்த அள வுக்குச் சென்னை மாநகர மக்களின் தேவையைப் பாதிக்கும் என் என்பதை மத்திய அரசுக்கு விளக்கி எடுத்துச்சொல்லி இப்போது கேட்டிருந்தது முன்பு கேட்டிருந்த திட்டத்திலே ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கு நீளம்தான். அந்த அளவுக்குத்தான் இப் போது வலியுறுத்தப்பட்டது. இந்த நான்கிலே ஒரு பங்கு இன்றி யமையாத தேவை என்பதற்காக மத்திய அரசை வலியுறுத்திக் கேட்பதற்கு மாநில அரசு இனிமேல் என்ன முயற்சியை மேற் கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, பேராசிரியர் அவர்கள் சொன்னது அத்தனையும் முழுமையான உண்மைதான். அந்தத் திட்டம் நமக்குத் தேவையும் கூட. ஆனால் எவ்வளவோ வலியுறுத்தியும் அது 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்படவில்லை. எனவே மிட் டெர்ம் ரீஅஸஸ்மென்ட் ரீஅப்ரைஸல் என்ற வகையில் ஓராண்டு இரண் டாண்டு கழித்து மறுபரிசிலனை செய்யும்போது மீண்டும் வலி யுறுத்தினால் அது பலன் அளிக்கும் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 10-00]

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் குறித்து ஜனதா சர்க்கார் மத்தியிலே ஆட்சியில் இருந்தபோது, மாநில அரசுக்கு ஒரு கடிதம் எழுதியது என்றும், அந்தக் கடிதத்திற்கு குறிப்பிட்ட காலத்திற்குள் மாநில அரசு, மத்திய அரசுக்குப் பதில் எழுதாத காரணத்தினால்தான், அந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டதாகவும், இதற்கு முந்தயே



நான் இந்த அவையிலே குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அது அவைக்குறிப்பிலும் ஏறியிருக்கிறது. ஆகையினால், மாநில அரசினுடைய மெத்தனமான போக்கினால்தான் தமிழக மக்க ளுக்குக் கிடைக்க வேண்டிய இத்திட்டம் வராமல் போய்விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்?

பதில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியோடு வினா விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மதுரை நகரில் குடி தண்ணீர்த் தட்டுப்பாடு.

*வினா எண். 410—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரின் குடி தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மதுரை மாநகரின் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க ரூ. 302'26 இலட்சம் மதிப் பீட்டில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி வழங்கி இத் திட்டம் செயலாக்கத்திலுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 302 லட்சம் ரூபாய் செலவிலே மதுரையிலே குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளிலே மதுரை புறநகர்ப்பகுதிகளிலும், சுற்றி இருக்கக் கூடிய பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு தண்ணீர் வழங்கு வதற்கான ஏற்பாடும் அதிலே இருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மதுரை மாநகருக்கு மட்டும் பொருந்தும், இத்திட்டத்திற்கு திருப்புவனம், மணலூர், மேலக் கால் ஆகிய மூன்று இடங்களிலும், வைகை ஆற்றிலிருந்து நீர் சேகரிக்கப்பட கிணறுகள் நிறுவப்பெற்று, அவற்றின் மூலம் தின சரி 30 லட்சம் காலன் சேகரிக்கப்பட்டு, ஜான்சி ராணி பூங்கா மகால், பூங்கா, மற்றும் மாநகராட்சி டி.பி. காம்பவுண்ட் ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு நீர் ஏற்றப்பட்டு, படிமான குழாய்கள் மூல மாக நகருக்குக் குடி தண்ணீர் வினியோகம் செய்யப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைப் பகுதியிலே ஒரு ஆண்டுக்கு முன்பு கடுமையான குடி தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு அரசு தடுப்பு நடவடிக்கை எடுத்தது. இந்த ஆண்டாவது மதுரை மாநகருக்கு போதுமான தண்ணீர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் அதிகமான அளவுக்கு, அவர்களுக்கு தண்ணீர் கொடுக்க வேறு ஏதா வது திட்டம் இருக்கிறதா ?

அடைந்தது குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, பேரவை முன் விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

நீலகிரி மாவட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்து வரப்பெற்ற அறிக்கையின்படி உதகமண்டலத்திலுள்ள அரசினர் தலைமை மருத்துவமனையில், கடந்த 18—2—81 அன்று மாலை 3—50 மணிக்கு நாராயணன் என்ற பெயர் கொண்ட (வினாவில் நாராயணலால் எனக் குறிப்பிட்டிருப்பது) 14 வயது சிறுவன் மிகவும் மோசமான நிலையில் அந்த மருத்துவமனையைச் சேர்ந்த தற்போது மருத்துவ விடுப்பில் இருக்கும் டாக்டர் பெல்லி என்பவர் மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அப்போது பணியிலிருக்க வேண்டிய டாக்டர் பி. கே. இராமன் உதவி மாவட்ட மருத்துவ அதிகாரியின் அனுமதியில்லாமல் இளநிலை மருத்துவ அதிகாரி டாக்டர் விஜயராஜை கவனித்துக் கொள்ளுமாறு கூறி விட்டு வெளியே சென்றிருந்தார். டாக்டர் விஜயராஜ் உடனே நோயாளிக்கு தகுந்த சிகிச்சை அளிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளத் தொடங்கினார். நோயாளியுடன் வந்த டாக்டர் பெல்லி, நோயாளி கீழே விழுந்ததனால் பலத்த காயங்கள் பட்டதாக கூறிய காரணத்தால் இந்த சம்பவத்தை விபத்து பதிவு செய்யும் பதிவேட்டில் டாக்டர் விஜயராஜ் எழுதவில்லை. பிறகு பணிக்கு திரும்பிவந்த டாக்டர் இராமன் நோயாளியின் நிலைமை படுமோசமானதாக இருந்ததால் அடிக்கடி நோயாளியை கவனித்து வந்தார். ஆனால் நோயாளி 19—2—81 அன்று காலை 12—05 மணிக்கு இறந்துவிட்டார்.

2. இந்த பிரேதத்தை பெற்றுக்கொள்ள யாரும் முன்வராத காரணத்தால் பிரேதத்தை 19—2—81 முழுவதும் சவக்கிடங்கில் வைக்கப்பட்டது. மறுநாள் (20—2—81) காலை சுமார் 9—00 மணி அளவில் இறந்த நோயாளியின் சகோதரன் திரு. பூநராம் என்பவர் தன் சகோதரன் நாராயணன் கொலை செய்யப்பட்டதாகவும், அதனால் பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என்று கோரிய மனுவை பெறப்பட்டது. உடனே பிரேதத்தை காவல் துறையிலிருந்து அறிவுரை வராதவரை, எவரிடமும் ஒப்படைக்க வேண்டாமென்று முடிவு செய்யப்பட்டது. பிறகு காவல்துறையிடமிருந்து 20—2—81 மாலை 5—00 மணிக்கு விண்ணப்பம் வந்ததின் பேரில், பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இந்த பரிசோதனையில் பிரேதத்தின் மீது பழைய மற்றும் புதிய பல காயங்கள் உள்ளதாகவும், நோயாளி செப்டிக்கமியா மற்றுப்



பல்மோனரி ஓடிமா (Septicaemia and Pulmonary Oedema) காரணத்தால் இறந்து விட்டதாக அறிக்கையிலிருந்து தெரிகிறது. மேலும் பிரேதத்திலிருந்து விசிராவை (viscera) வேறுபடுத்தி இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. அதன்மீது விவரமான அறிக்கை கிடைத்த பிறகுதான் நோயாளியின் மரணத்திற்கு காரணம் என்னவென்று தெரியவரும்.

3. மாவட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்து வரப்பெற்ற அறிக்கையிலிருந்து கீழ்க்கண்ட குறைபாடுகள் தெரியவருகின்றன.

(1) இந்த சம்பவத்தை விபத்து பதிவேட்டில் டாக்டர் விஜயராஜ் பதியவில்லை ;

(2) உரிய நேரத்தில் காவல் துறைக்கு தகவல் அனுப்பவில்லை ;

(3) பணிநேரத்தில் இருக்க வேண்டிய டாக்டர் பி. கே. இராமன் அனுமதியில்லாமல் வெளியில் சென்றுவிட்டார்.

4. இதுபற்றி தெளிவாக 24—2—1981-ல் நீலகிரி மாவட்ட மருத்துவ அதிகாரி விசாரணை நடத்தியதாகவும், விபரமான அறிக்கை அனுப்புவதாகவும் கூறியிருக்கிறார். அறிக்கை கிடைத்தவுடன் தவறு செய்தவர்களுக்கு காரணமாக இருந்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும், என்று மருத்துவப் பணி குடும்பநல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, மரணம் அடைந்த நாராயணலால் என்ற 14 வயது பாலகன் ஊட்டியில் ஆர். டி. பாம்பே டையிங் என்ற நிறுவனத்தில் வேலை செய்து வந்தான். வேலை செய்கிற இடத்தில் அந்த நிறுவனத்தின், சொந்தக்காரரால் கடுமையாக காயங்கள் ஏற்படுத்தப்பட்டு தாக்கப்பட்டு, அதன் காரணமாக அங்கிருந்து ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் சேர்த்திருக்கிறார்கள். 18—ம் தேதி அன்று அவன் சேர்க்கப்பட்டிருக்கிறான். அங்கே அந்த மாணவன் மரணம் அடைந்திருக்கிறான்.

இது சம்பந்தமாகத் தரப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில் தற்போது மருத்துவ விடுப்பில் இருக்கும் டாக்டர் பெல்லி என்பவர் மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று இருக்கின்றது. அதுமட்டுமல்ல. அப்போது பணியில் இருக்கவேண்டிய டாக்டர் பி. கே. இராமன் உதவி மாவட்ட மருத்துவ அதிகாரியின் அனுமதி இல்லாமல் இளநிலை மருத்துவ அதிகாரி டாக்டர் விஜயராஜை கவனித்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு வெளியே சென்றிருந்தார், என்றும் விவர

அறிக்கையிலே இருக்கின்றது. மேலும் டாக்டர் பெல்லி அவர்கள் நோயாளி கீழே விழுந்ததால் பலத்த காயங்கள் ஏற்பட்ட தாகவும் அதனால் கொண்டுவந்து சேர்க்கப்பட்டான் என்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, போலீ சுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தாலே அந்த வகையில் பதிவேடுகளில் பதிவு செய்யப் படாத காரணத்தாலே போலீசுக்குத் தகவல் அளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

ஆனால், அவனைக் கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத் தோடு இம்மாதிரி நடந்துள்ளதாக அந்தப் பகுதியிலே உள்ள அனைவரும் இது சம்பந்தமாக கிளர்ச்சிகளை மேற்கொண்டதால் அது சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகக் கூறப் படுகிறது. ஆகவே, அளிக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிக்கையிலே இருந்தே இதிலே தவறுகள் நடந்திருக்கின்றன என்பது தெரி கின்றது. ஆகவே டாக்டர்களே இம்மாதிரிக் கொலைகளை மறைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இம்மாதிரியான காரியங்களை மேற்கொண்டுள்ளார்கள் என்பதும் தெரிகின்றது. ஆகவே இறந்ததற்குக் காரணம்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

**திரு. இரா. கருப்பையா:** தலைவரவர்களே; பிணத்தைப் பெறுவதற்கு யாரும் முன்வரவில்லை என்றும் டாக்டர் பெல்லி என்பவர் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார் என்றும் கூறப்பட் டிருக்கின்றது. ஆனால் மக்களிடையே இருக்கின்ற கருத்து சந்தேகமான முறையிலே அவன் அடித்துக் கொல்லப்பட்டிருக்க லாம் என்பதும் அதை மறைப்பதற்கான முறையிலேதான் இவ்வாறு டாக்டர்கள் செய்திருக்கிறார்கள் என்பதும்தான். இந்த அறிக்கையும் அந்த சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்வதாக இருக்கின்றது. ஆகவே இது சம்பந்தமாக ஒரு முழுமையான நீதி விசாரணை நடத்துவதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர் இறந்து போனவுடன் மார்ச்சுவரியிலே சேர்க்கப்பட்டது. 19–2–81 அன்று. அன்றையா தினம் பிரேதத்தை க்ளெய்ம் செய்வதற்கு க்ளெய்மெண்ட்ஸ் வரவேண்டும். ஆனால், யாரும் வரவில்லை. அடுத்த நாள் 9 மணிக்கு கலெக்டர் மூலமாக ஒரு கடிதம் வரப்பெற்றது. அதிலேதான் அவருடைய பிரதர் அதாவது அவரது உடன் பிறந்த சகோதரர் என்று சொல்லக்கூடியவர்கள் என்னுடைய சகோ தரர் இவர் என்றும் இது குறித்து நீங்கள் விசாரிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அதனுடைய முழு விவரத்தையும் இந்த அறிக்கையிலே நான் வைத்திருக்கிறேன். அதன்படி 24–2–1981





அன்று நீலகிரி மாவட்ட மருத்துவ அதிகாரி விசாரணை நடத்திய தாகவும் அது குறித்து விவரமான அறிக்கை அனுப்ப இருப்பதாக வும் கூறியிருக்கிறார்கள். அந்த அறிக்கை கிடைத்தவுடன் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. இரா. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் அடிக்கப்பட்டு அந்த அடிபட்ட காயங்களின் காரணமாகத்தான் இறந்திருக்கிறார். அவர் இறந்தவுடனே காயங்களோடு எடுக்கப்பட்ட போட்டோக்கள் இருக்கின்றன. சபாநாயகரின் அனுமதியோடு இதை நான் மாண்புமிகு அமைச்ச ரவர்களுக்கு..............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அனுமதியைப் பெற்றுவிட்டதாக நீங்களே சொல்லி விட்டால் எப்படி? அதை நான் பார்த்த பிறகுதான் சமர்ப்பிக்க வேண்டும். ஆகவே அவையிலே போட்டோ பிரதி போன்றவற்றைத் திடீரென்று கொண்டுவந்து காட்டக் கூடாது. என்னுடைய முன் அனுமதி யைப் பெற வேண்டும்.

**திரு. இரா. கருப்பையா:** தலைவரவர்களே, தங்கள் அனுமதியோடு இந்த போட்டோ பிரதிகளை அமைச்சரவர்களிடம் கொடுக்கிறேன். அதோடு ஒரு முழுமையான விசாரணை........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய முன் அனு மதியைப் பெறாமல் போட்டோ பிரதிகளை அமைச்சரவர்களிடம் அவையிலே கொடுக்கக் கூடாது. நீங்கள் தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் அமைச்சரவர்களிடம் கொடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. இரா. கருப்பையா:** தலைவரவர்களே, இது குறித்து முழுமையான ஆய்வு நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்கக்கூடிய வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா?

[முற்பகல் 10–40]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதிலே அரசாங்கத்திற்கு எந்த விதமான தனியான வெஷ்டட் இன்ட்ரஸ்டும் கிடையாது. நியாயம் கிடைக்க வேண்டும், உண்மை தெரிய வேண்டும், என்பதற்காக, இதைப் பற்றிய தகவல் கிடைத்தவுடனே பத்திரிகையில் செய்தியைப் பார்த்தவுடனே, நானே டி. எம். எஸ். அவர்கள் இடத்திலே சொல்லி இதைப்பற்றிய எல்லாத் தகவல் களையும் சேகரித்துத் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது தகவல் வைத்திருந்
நால் எங்களுக்குக் கொடுப்பார்களேயானால் உண்மையை அறிய
உதவியாக இருக்கும். எல்லாத் தக்வல்களிலிருந்தும் ஆக்ஸி
டெண்டல் டெத்தா, தற்கொலையா அல்லது கொலை செய்து
விட்டார்களா போன்ற விவரங்களை அறிந்து கொள்ள முடியும்.
தவறு செய்தவர்களை தண்டிக்க அது உதவும். ஆகையினால்
உறுப்பினர் அவர்கஞுக்கு எந்தவிதமான கவலையும் இதில் தேவை
இல்லை. என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, உதகைமண்டலத்திலே ஆர். டி. பாம்பே டையிங்
என்ற நிறுவனத்தில் நாராயணலால் என்னும் 14 வயது சிறுவன்
வேலை செய்து கொண்டிருந்தான் அவனை 18—2—81 அன்று
மாலை 3—50 மணிக்கு மருத்துவ விடுப்பில் இருக்கும் டாக்டர்
ஒருவர் மருத்துவ மனையில் சேர்த்ததாக இந்த அறிக்கையில்
கொடுக்கப்பட்டிருக்கிறது. சேர்க்கப்பட்ட அந்தச் சிறுவன்
19—2—81 அன்று காலை 12—05 மணிக்கு இறந்து இருக்கிறான்
சேர்க்கப்பட்ட அந்தப் பையன் அடிபட்ட காயங்களை சிகிச்சை
செய்ய சேர்க்கப்பட்டானா அல்லது வேறு காரணங்களுக்காக
சேர்க்கப்பட்டதா என்ற விவரம் இதில் இல்லை. சேர்க்கப்பட்ட
அந்தச் சம்பவத்தை டாக்டர் விஜயராஜ் என்பவர் விபத்து
பதிவேட்டில் பதிவு செய்து வைக்கவில்லை என்று இருக்கிறது.
உரிய நேரத்தில் காவல் துறைக்கு தகவல் அனுப்பவில்லை
என்றும் இருக்கிறது. பணி நேரத்தில் இருக்க வேண்டிய டாக்டர்
பி. கே. இராமன் அனுமதியில்லாமல் வெளியில் சென்றுவிட்டார்
என்றும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அந்தப் பையன்
செப்டிக்யமியா மற்றும் பல்மோனரி ஓடிமா போன்ற நோயின்
காரணமாக இறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு இடத்
தில் விபத்து என்றும் மற்றொரு இடத்தில் நோயினால் பீடிக்கப்
பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறதே, இந்த அறிக்கை
யிலே முன்னுக்குப் பின் முரணாக விவரங்கள் கொடுக்கப்பெற்
றிருக்கிறதே, ஆகவே இதை முழுமையாக விசாரணை செய்ய
அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன் வருவாரா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன
மாதிரி முழுமையான விசாரணை வேண்டும் என்றுதான் இந்த
அரசாங்கமும் நினைக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.
அதுமட்டுமல்லாமல், பிரேதப் பரிசோதனை செய்ததில், அந்தப்
பையனின் உடலில் 1 மாதத்திற்கு முன்பு ஏற்பட்ட காயத்திற்
கான அடையாளங்களும், புதிய காயங்களும் உள்ளதாகத் தெரிய
வந்தது. அவன் செப்டிக்யமியா மற்றும் பல்மோனரி ஓடிமா
போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிய
வந்தது. அதுமட்டுமல்லாமல் உடலிலிருந்து 'விசிரா' என்று





சொல்லக்கூடிய உள்ளே இருக்கக்கூடிய அவயவங்களை எடுத்து
கிங் இன்ஷ்டிடியூட்டுக்கு இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்
பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இதில் எந்த
அளவுக்கு அக்கறை இருக்கிறதோ, அந்த அளவுக்கு அரசாங்
கத்திற்கும் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற
அக்கறை இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளை எடுத்துக்
கொண்டு வருகிறோம். வேறு தகவல்கள் ஏதாவது உறுப்பினர்
களிடத்திலே இருந்து, அவற்றையும் கொடுப்பார்களேயானால்
உண்மையைக்கண்டுபிடிக்க அது உதவியாக இருக்கும். கொலையா,
தற்கொலையா, விபத்தா என்று கண்டுபிடிக்க உதவியாயிருக்கும்
குற்றவாளிகள் வெளியே இருந்து கொண்டு, அவர்கள் தண்டனை
யிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைப்பார்களே
யானால் நிச்சயமாக அரசாங்கம் அவர்களுக்குத் துணை நிற்
காது. குற்றவாளிகள் யாராக இருந்தாலும், குற்றம் நடைபெற்
றிருப்பதாகத் தெரிந்தால், கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படு
வார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத்தலைவர்
அவர்களே, உதகைமண்டலத்திலே உள்ள மருத்துவ மனையில்
நாராயணலால் என்ற பையன் மர்மமாக இறந்தது குறித்து
எனக்கு முன்பு பேசிய பல உறுப்பினர்களும் எடுத்துச்சொன்ன
தைப்போல இந்த அறிக்கையே ஒரு குழப்பமான—கன்ப்யூஸ்டு
அறிக்கையாக இருக்கிறது. ஒரு சாதாரண தீ விப்த்து ஏற்பட்டாலே
அதைக் கேள்விப்பட்ட உடனேயே அங்கே போலீஸ் போக
வேண்டும் என்று விதிகள் இருக்கிறது. இந்தப் பிரச்சினையில்
எவ்வளவோ நடந்திருக்கிறது. 9 கட்சிகள் ஊர்வலம் நடத்தி
யிருக்கிறார்கள். கடைகள் எல்லாம் மூடப்பட்டு, அர்த்தால்
நடத்தியிருக்கிறார்கள். அந்த இடத்திலே ஒரு இடத்தில் கூட
போலீஸ் போய் விசாரணை செய்தது என்கிற பேச்சே இதில்
இல்லையை.

அங்கே போலீஸ் என்ன செய்தது?. போலீஸே இல்லையா?
உதகையில். சாதாரணமாக ஒரு ரூமர் சொல்லிவிட்டாலே
போதும், ஸுசைட் அல்லது மர்டர் என்று சொல்லிவிட்டால்
உடனே அங்கே போலீஸ் சென்றுவிடும். ஆனால் இந்த இடத்தில்
போலீஸ் போகவில்லை. அதற்கு என்ன காரணம்? யார் காரணம்?
அடுத்து ஒரு மருத்துவ மனையில் வேலை செய்கிற டாக்டர்,
அவர் எந்த டாக்டராக இருந்தாலும் அடித்து கொன்று கொண்டு
போய் போட்டால்கூட நாட் மர்டர் என்று சொல்லக்கூடிய
அளவிற்கு நிலைமை உருவாகிறது. No, no it is not murder. It is
suicide என்று ரிக்கார்ட் செய்யலாம். அப்படிப்பட்ட நிலைமை
உருவாகிறது இந்த விவகாரத்தில். ஆகவே இதுபோன்ற ஒரு
குழப்பமான நிலை இந்தச் சிறுவனுடைய இறப்பில் இருக்கிறது.
மேலும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பழைய காயங்கள்
இருக்கின்றன என்று. எனக்குக் கிடைத்த தகவல் இரண்டுவார
காலமாக அடித்திருக்கிறார்கள். அதுதான் நீங்கள் சொல்லுகிற
பழைய காயங்கள். பத்திரிகை செய்தியை வைத்து நான்

சொல்லவில்லை. குடும்பத்தில் நடைபெற்ற தவறுகளை இந்தச் சிறுவன் பார்த்துவிட்டான். இரண்டு வாரகாலமாகத் தாக்கி இருக்கிறார்கள். இது மர்டரா, ஸூஸைடா? ஆகவே பல ஐயப் பாடுகள் இதில் இருப்பதன் காரணமாக இதற்கு ஒரு நீதி விசாரணை வைக்கவேண்டும். அனைத்துக் கட்சிகளும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட சேர்ந்து கொண்டு ஹர்த்தால் செய்திருக்கிறார்கள். ஆகவே இந்த விவகாரம் குறித்து அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்தி ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப் பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் இதில் பல விஷயங்களைப் புகுத்தியிருக்கிறார்கள். ஏதோ சிலவற்றில் அரசாங்கம் பெரிய தவறு செய்திருப்பதாகச் சொன்னார்கள். போலீசார் இதில் போதுமான வேலை செய்யவில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு கிடைத்த தகவலை வைத்து அவர்கள் பேசியிருக் கிறார்கள். அவர்கள் கேள்விக்கு பதிலாக ஒரு சொற்பொழிவே ஆற்றியிருக்கிறார். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. கேட்ட கேள்விக்கு பதில் சொல்கிறேன். போலீசார் தெளிவாகவே இருக்கிறார்கள்.

'On requisition by Police, District Medical Officer has stated that post-mortem is conducted. என்று கிளியராகப் போட்டிருக்கிறார்கள். இதில் தெளிவின்மை இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தைப் பொறுத்த வரை யில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நிச்சயமாக யார் குற்ற வாளி என்று தெரிந்து கொளள அரசு விரும்புகிறது. என்ன நடந்தது என்றால், 18-ம் தேதி அனுமதிக்கப்பட்டு இறந்தது. 19-ம் தேதி. பிணத்தைப் பெறுவதற்கு யாரும் வரவில்லை அது. தான் அங்கே இருக்கக்கூடிய சிக்கல். அதற்குப் பிறகு ஒரு நாள் தாமதமாக அந்தக் கடிதம் வந்தது. அதன் கோளாரினால்தான் அங்கே ஒரு சிரமம் ஏற்பட்டது. தாமதமாக தகவல் கிடைத் திருக்கிறது. சரியான வகையில் உடனடியாக செய்ய வேண்டி யதை யெல்லாம் செய்திருக்கிறோம். டிஸ்ட்டிரிக் மெடிக்கல் ஆபீசரிடம் ஸெலுலோஸை இங்கே அனுப்புங்கள் என்று சொல்லி இருக்கிறோம். அரசாங்கத்திலிருந்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதி விசாரணை வேண்டும் என்று சொல்வதற்கு இதில் எந்தவித மான அரசியலும் கிடையாது ஒரு விபத்து ஏற்பட்டு கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். இந்த அறிக்கையை நன்றாகப் படித்திருப்பார்களானால் தெரியும், எல்லா உண்மைகளையும் போட்டு தைரியமாக அறிக்கை யைத் தந்திருக்கிறோம். நான் எதிர்பார்த்த தெல்லாம் திரு பொன்னுரங்கம் அவர்கள் அரசாங்கத்தைப் பாராட்டுவார் என்றுதான் இதில் தவறிவிட்டோம். என்ற பிரச்சனையே எழவில்லையென்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன்.





திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்தக் கொலை சம்பந்தமாக நானே ஊட்டிக்கு நேராகச் சென்றிருந்தேன். தலைவர் அவர்கள் அனுமதிக்காவிட்டாலும் கூட, அந்தப் புகைப் படங்களில் 33 குத்துக்கள் இருக்கின்றன. அந்தக் கடையில் வேலை செய்யக்கூடிய சிறுவனை அந்தக் கடையில் இருக்கக்கூடிய முதலாளி துணி அளக்கும் தடியால் அடித்து 33 காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை போட்டோவில் இருக்கின்றன. நான் சொல்ல விரும்புவது, இந்தச் சூழ்நிலையில் இந்தச் சம்பவத்தை பதிவேட்டில் டாக்டர் விஜயராகவன் பதிவு செய்யவில்லை. உரிய நேரத்தில் காவல் துறைக்கு தகவல் அனுப்பப்படவில்லை. பணி நேரத்தில் இருக்க வேண்டிய டாக்டர் ராமன், அனுமதி இல் லாமல் வெளியே சென்று விட்டார்கள். இந்த அளவிற்கு ஒரு ஆஸ்பத்திரியில் நோயாளிகளைப் பார்க்கக்கூடிய கவனிக்க வேண்டிய டாக்டர்கள் இருந்திருக்கிறார்கள் என்றால் இவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை. எடுத்து தற்காலிக வேலை நீக்கம் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

[முற்பகல் 10–50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கொடுத்த பதிலில் எந்த ஒரு மருத்துவரும் இருக்க வேண்டிய நேரத்தில் இல்லை என்றால், தவறான வகையில் ஆட்செண்ட் ஆகியிருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னேன். இந்த டாக்டர் பி. கே. ராமன் என்பவர் டாக்டர் விஜயராகவனிடத்திலே 2 மணிக்கு மேல் நான் இருப்பதற்கு இல்லை, நீங்கள் இருக்க வேண்டுமென்று அனுமதி கேட்டு, பிற்பகல் 2 முதல் 4 மணி வரை விஜயராகவன் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்ற தகவல் கொடுத்திருக்கிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. தயவு தாட்சண்யம் இன்றி, டாக்டராக இருந்தாலும், போலீஸ் அதிகாரியாக இருந்தாலும், தவறு செய்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணை போட்டிருக்கிறோம். அதற்காக டைரக்டர் ஆப் மெடிக்கல் ஸர்வீஸ் இடத்திலே உடனடியாக, to make a detailed enquiry as to who has committed the mistake and if the doctor has commit- ted the mistake, he should be taken to task. என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்ல அந்த உத்தரவை டீ. எம். எஸ். மூலம் எடுத்துச் சொல்லியிருக்கி றோம். இங்கே போஸ்ட் மார்ட்டம் சர்ட்டிபிகேட் என்னிடத் திலே இருக்கிறது. அதிலே தெளிவாக என்ன காயங்கள் என்று lungs, spleen, intestines, skull எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறார்கள். They have been recorded. ஆகவே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்கிறேன் இந்தப் பூராவும் படிப்பதற்கு நேரமில்லை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அனுமதிக்க மாட்டார்கள்.

இருந்தாலும், முழுமையாக 12 விபரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்ற மன நிறைவு ஏற்படும் என்று கருதுகிறேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது!

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நில வரி வசூல் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 5/1981);

(2) 1981 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 10/1981);

(3) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 14/1981).

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (1) கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன் வடிவு 1981.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 2/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது என்று கருதுகிறேன். ஏற்கனவே இந்த மன்றத்தில் நானும், மற்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியது போல இந்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக

*1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





இருந்தால், இந்த சட்ட ஷரத்துக்களைப்பற்றி அமைச்சர் அவர்கள் பேச வேண்டும். இந்த சட்ட ஷரத்துக்கள் தெளிவாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பார்களானால் இந்த விவாதத்திலே நாங்கள் பங்கேற்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதையேதான் அன்றைக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் தெளிவற்றதாக இருப்பதால் திருத்தப்படுகிறது. செக்ஷன்கள் திருத்தப்படவில்லை. இதை அன்றைக்கு மாண்புமிகு ரகுமான்கான் கேட்கிறபோது. கேளிக்கை வரி சட்டத்தில் செக்ஷன் 16 (ஏ) க்கு திருத்தம் கொண்டுவரப்படுமா, என்று அன்றைக்குத் தெரிவித்தார்கள். அந்த தாய் சட்டத்தில், பிரின்சிபல் ஆக்ட் 16 (ஏ) பிரிவில் என்ன சொல்லப்படுகிறது என்பது அச்சிட்டு வழங்கப்படவில்லை என்றும், அதனால் 16 (ஏ) பிரிவுக்கு திருத்தம் கொடுக்கும்படி அன்றைக்குச் சொன்னார்கள். நான் ஒன்றை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். செக்ஷன் 'ஏ' என்பது 'எனேபிளிங் பிரொவிஷன்' அதாவது அதிகாரம் அளிப்பது. power to amend the act. இன்றைக்குத்தான் இது முதன் முதலாகக் கொண்டு வரப்பட வில்லை. இதற்கு முன்னால் எத்தனையோ மசோதாக்கள் திருத்தப்பட்டுள்ளன. அவைகளின் 'எனேபிளிங் புரொவிஷன்' அச்சிட்டுக் கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதைப்பற்றி விளக்கம் தேவைப்படும்போது நூலகத்திற்குச் சென்றுதான் படித்து வருவார்கள். இதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. 14—8—1963 அன்று கூட சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட தமிழ்நாடு பொது விற்பனை வரி இணைப்புத் திருத்த சட்ட முன் வடிவு செக்ஷன் 15, 'எனேபிளிங் புரோவிஷனுக்காக' அப்போது கூட இங்கே விளக்கம் கொடுக்கப் படவில்லை. அதேபோல 3—8—65-ல் அன்று கூட சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட 'தமிழ்நாடு பொது விற்பனை வரி இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு' வைக்கப்பெற்ற போது 'எனேபிளிங் புரோவிஷனுக்கு' இங்கே விளக்கம் கொடுக்கப்பட வில்லை.

அது மட்டுமல்ல 21—10—1975 அன்று சட்டப் பேரவையில் தமிழ்நாடு பொது விற்பனை வரி இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு இங்கே விளக்கம் அச்சிட்டுத் தரப்படவில்லை. 23—8—77 அன்று சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட தமிழ்நாடு பொது விற்பனை வரி திருத்த சட்ட முன் வடிவு வைக்கிறபோது கூட 'எனேபிளிங் புரோவிஷன்' குறித்து அச்சிட்டுத் தரப்பட வில்லை. அதுமட்டுமல்ல 2—9—78 அன்று சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட தமிழ்நாடு பொது விற்பனை வரி இரண்டாம் திருத்தச் சட்டம் வைக்கிறபோது 'எனேபிளிங் புரோவிஷன்'

[திரு எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மார்ச் 7

அச்சிட்டுத் தரப்பட்டதில்லை. இப்படி நான் சொல்லிக் கொண்டே போக முடியும். 27-1-31 அன்று கூட இங்கே இந்த 'எனேபிளிங் புரோவிஷனுக்காக' அச்சிட்டுக் கொடுக்கவில்லை. நான் இதைத் தெரிவிப்பதற்குக் காரணம் இதற்கு முன்னாலே இவைகள் வைக்கப்படவில்லை. அதற்கு நான் ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புவது, சட்ட முன்வடிவை வைத்த பிறகு அதிலே தேவையான விளக்கங்கள் வைக்கப்படவில்லை என்றால் அரசு சார்பிலே வைக்கப்படவில்லை என்று கேட்டிருந்தால் நான் சொல்லியிருக்க முடியும். ஆனால் இங்கே இருக்கிற 234 உறுப்பினர் களில் யாராவது ஒருவர் விளக்கம் வைக்கப்படவில்லை என்று சொன்னால் உடனே ஒத்தி வைப்பது ஒரு முன்மாதிரியாகக் கூடாது. இதை அன்றைக்கு ஏன் சொல்லவில்லை என்று கேட் கிறார்கள். அன்றைக்கு சொல்ல விடவில்லை. உடனே ஒத்திப் போட்டுவிட்டார்கள். இதைப்பற்றி விளக்கம் தேவையில்லை என்பதாலே கொடுக்கவில்லை. பல தினங்களுக்கு முன்னாலே இது அறிமுகப்படுத்தப்பட்டது இங்கே; மாண்புமிகு உறுப்பினர் கள் அதைப் படித்துக் கொண்டு வந்திருப்பார்கள் என்று நினைத் துக்கொண்டிருக்கிறேன். தவிர, வேறு ஒன்றும் இல்லை. மாண்பு மிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் 'எனேபிளிங் புரோவிஷனுக்கு' சட்ட திருத்தம் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார் அதை தெரியாதிருக்கவில்லை. ஆகவே....

திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 16-ஏ-க்கு திருத்தம் இல்லை யென்று; ஒத்துக் கொள்கிறேன். மசோதாவின் உட்கருத்து எனக்கு புரிகிறது. ஆனால் ஒருமுறை இந்த காரண விளக்க நோக்கங்கள் என்று தமிழிலேயும், மறுபக்கத்திலே ஆங்கிலத்தி கொடுக்கப்பட்டிருப்பவைகளை 'ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்டிவ் அண்டு ரீசன்ஸ்' என்பதையும் படித்துப் பார்த்தால் தெரியும், தமிழிலே கொடுக்கிறபோது 1939 ஆம் ஆண்டு தமிழ் நாடு கேளிக்கை வரி சட்டத்தில் 16-ஏ பிரிவின் ஒன்றாவது உட் பிரிவின்கீழ், சில ஊர்களில் ஊராட்சி நிலையில் மாற்றம் ஏற்படுத்தியதன் விளைவாக அதாவது சில ஊராட்சிகளில் நிலை யில் மாற்றம் எதன் கீழ் வருகிறது என்றால் 16-ஏ 1 ஆவது பிரிவின்கீழ் வருகிறதென்று சொல்கிறார்கள். இதை ஆங்கிலத் திலே படிக்கிறபோது வேறு அர்த்தத்தைக் கொடுக்கிறது.

(பேரவை துணைத் தலைவர் தலைமை)

[முற்பகல் 11-00]

Under sub-section (1) of Section 86(a) of the Tamil Nadu Entertainments Tax Act 193), the Government have decided.... என்ற முறையிலே 16-ஏ பிரிவின்கீழ் சில மாற்றங்கள் வருகின்றன. என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 16-ஏ (1) பிரிவின்கீழ் அரசாங்கம் என்ன சொல்கிறது என்றால் சிலஊர்களின் உள்ளாட்சி



1981 மார்ச் 7] [திரு. துரைமுருகன்]

நிலையில் மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக அதன் அட்டவணை களைத் திருத்தும் பொருட்டு சில அறிவிக்கைகளை அரசு வெளி யிடுவதற்கு என்று கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே தமிழிலே இவ்வாறு சொல்லியிருக்கிறார்கள். சில ஊராட்சிகள், நகராட்சி கள் இவைகளின் நிலைகளில் மாற்றம் வருகிறபோது டிஸ்ட்டிரிக்ட் முனிசிபாலிட்டீஸ் ஆக்ட் மாற்றப்படுகிறது. ஒரு சர்க்கார் என்ன செய்ய வேண்டும், அந்தத் தேதியிலிருந்து வருகிறது என்பதற்கு நோட்டிபிகேஷன் இஸ்யூ செய்யலாம். டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட் டீஸ் ஆக்ட் மூலமாக வருவதை இப்போது இந்தச் சட்டத்தைத் தொடுகிற பழக்கத்தை இந்த மசோதாவிலே கொண்டுவந் திருக்கிறார்கள். வேறு அர்த்தமல்ல. 16-ஏ (1) பிரிவிலே தமிழ் மொழிபெயர்ப்பிலே சில ஊர்கள், ஊராட்சிகள், நகராட்சிகள் இவற்றின் நிலையில் மாற்றம் ஏற்பட்டதால் அட்டவணையைத் திருத்துதல் என்று வருகிறது. ஆனால் 16-ஏ பிரிவிலே சர்க்கார் நோட்டிபிகேஷன் இஸ்யூ பண்ணுவது வருகிறது. ஆங்கிலத்திலே போட்டதற்கும் தமிழ் மொழிபெயர்ப்புக்கும் மொழிபெயர்ப்பிலே சில தவறுகள் இருக்கலாம், நான் அதைச் சொல்லவில்லை. டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டீஸ் ஆக்டில் ஊராட்சிகள், நகராட்சி கள் நிலையில் மாற்றம் ஏற்படுகிறபோது வருகிறது. ஆனால் இன் றையதினம் பணத்தை சர்க்கார் வசூலித்துக் கொண்டிருக்கிற ஷெட்யூல்டை சேர்க்கிற பிரிவாக இது இருக்கிறது. என்பதைத் தெரிவித்து ஆகவே இரண்டிற்கும் இருக்கிற குழப்பமே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்து இதை நம்புவதா அதை நம்புவதா என்ற கேள்வியும் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கள் செகண்ட்கிரேட் முனிசிபாலிட்டிகள், தேட் கிரேட் முனிசிபாலிட்டிகளிலே இருக்கக்கூடிய சினிமாக் கொட் டகைகளில் உள்ள உரிமையாளர்கள் சர்க்காருக்கு வரிசெலுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். வேறுபட்ட வரி விகிதங்களிலே ஒவ்வொரு காட்சிக்கும் வருகின்ற வசூல் தொகையை கிராஸ் கலெக்ஷன் அடிப்படையிலே செலுத்த வேண்டும். இவ்வாறு பஞ்சாயத்துக்கள் கிரேட் இரண்டு, கிரேட் மூன்று இவைகளில் உள்ள சினிமா திரையரங்குகளின் உரிமையாளர்கள் சர்க்காருக்கு கேளிக்கை வரி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த வரியை எப்படியெல்லாம் பெற முடியும், அந்த வரி விகிதங்களை உயர்த்துவதற்கு அல்லது குறைப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஒழுங்குபடுத்துவதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கி றது. திரையரங்குகளிலே வரி வசூலிப்பது சம்பந்தமாகவும் திரையரங்குகள் வரி செலுத்துவது சம்பந்தமாகவும் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை அமுல் நடத்துதவற்கு இந்தச் சர்க்கார் நோட்டிபிகேஷன் கொண்டு வரலாம். உத்தரவு பிறப்பிக்கலாம். சட்டம் கொண்டு வரலாம். என்ற அதிகாரங் களையெல்லாம் இந்த 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு என்டர் டெய்ன்மெண்ட் ஆக்ட் தெளிவாக்குகிறது. அதிலே செக்ஷன் 16 தியேட்டர்கள் ஒழுங்காக வரியைக் கட்டுவதற்கு முறையாக

அதை வசூலிப்பதற்கு தேவைப்படுகின்ற அதிகாரங்களை சர்க்காருக்குத் தருகிறது. அதை அமைச்சர் அவர்கள் மறுக்கமாட்டார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஏனென்றால் அது இந்தச் சட்டத்திலேயே இருக்கிறது. செக்ஷன் 16 தெளிவாகச் சொல்கிறது. The State Government may by notification in the official gazette make rules for securing the payments of entertainment tax and generally for carying out the purposes of this Act. என்று இருக்கிறது. அடுத்து 16-ஏ பிரிவு என்ன என்பதை போன முறையே நான் இந்த மாமன்றத்திலே கேட்டேன். அமைச்சர் அவர்கள் அது தேவையில்லாதது என்று இப்போது சொல்கிறார்கள். உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று சொல்கிறார்கள். கடந்த காலத்திலே விளக்கவில்லை. அப்போது விளக்காததால் இப்போதும் விளக்கவில்லை. என்று சொல்கிறார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாதையிலே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு இருப்பதைப் போல இப்போது விளக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு நீங்கள் கொண்டு வரும் இந்த மசோதா எதற்காகக் கொண்டு வரப்படுகிறது, எந்தச் சட்டப் பிரிவின்கீழ் கொண்டு வரப்படுகிறது என்று கேட்டால் 16-ஏ என்ற பிரிவின்கீழ் கொண்டுவரப்படுகிறது. அதைத்தான் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிகாரத்தைத் தரக்கூடிய 16 வது பிரிவின் உட்பிரிவு என்று அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். 16-ஏ என்பது என்னவென்று கேட்டால் அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற விளக்கத்திலிருந்து நான் புரிந்து கொள்வது என்னவென்றால், சர்க்கார் இப்படித் தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் உள்ள சினிமாத் தியேட்டர்களில் வரியைப் பெறுகின்ற முறையை ஒழுங்குபடுத்த, வரி விதிக்கும்பொழுது சர்க்கார் நோட்டிபிகேஷன்—அறிவிப்பு செய்யலாம்; வெறும் அறிவிப்பு மட்டுமல்லாமல், சட்டசபை கூடும் பொழுது நோட்டிபிகேஷனை வெறும் நோட்டிபிகேஷனாக வைக்காமல், மசோதாவாகக் கொண்டுவந்து சட்டமாக ஆக்குகின்ற அதிகாரத்தை அது பெறுகிறது.

நோட்டிபிகேஷன் பிறப்பிக்கும் 16-ஏ (1) பிரிவில் வருகிற அதிகாரத்தின் படி பிறப்பிக்கின்ற நோட்டிபிகேஷனை 16-ஏ (2) பிரிவில், சட்டமாக்குகின்ற அதிகாரம் வருகிறது. அதைத்தான் அன்றைக்கும் கேட்டோம், அமைச்சர் அவர்கள் இதுதான் என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

இதில் உள்ள முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இங்கே கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டத்தின் நோக்கத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கும் உள்ளாட்சி முறைகளிலே பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே அதற்குத் தகுந்தபடி அட்டவணைகள்





மாற்றப்படவேண்டியிருக்கிறது. அட்டவணையிலுள்ள பகுதிகளை மாற்றப்படவேண்டியிருக்கிறது என்ற கருத்து மாற்றுவதற்காக இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஆட்சேபிக்க ஒன்றுமில்லை. ஆனால் இங்கே மாண்புமிகு இந்த மாமன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கொண்டுவருகிறேன்.

இன்றையதினம் என்னுடைய கையிலே இருப்பது, Report of the Comptroller and Auditor-General of India. இந்தத் துறையில் என்டர்ட்டெய்ன்மெண்ட் ஆக்ட் சம்பந்தமாக இந்தச் சர்க்கார் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை, அதாவது ஏறக்குறைய 91,529 ரூபாய் இங்கே சென்னையை ஒட்டியுள்ள பகுதியில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை. சர்க்கார் நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தக் குறையைப் போக்கியிருக்கலாம். இது ஒரு உதாரணம், ஆனால் இதுபோல் பல இருக்கலாம். ஆனால் ஆதாரத்தோடு சொல்லியிருக்கின்ற குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது அதிலிருந்து வாசித்துக் காட்டுகிறேன். அதிலே சொல்கிறார்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், Under the Madras City Municipal Corporation Act 1930, the Government of Tamil Nadu notified the inclusion of Velachari and Saligramam panchayats under Coporation limits with effect from Ist June 1978. It was noticed in Audit in 1979, that in two theatres situated in Velachari and Saligramam, the tax was levied at compounded rates instead of on the basis of shows conducted and the tax thus levied resulted in loss of revenue of Rs. 91,529 for the period 1st June 1978 to 31st March 1979. Had the department taken action to delete the two panchayats from the Schedule of the Act simultaneously when the notification was issued in May 1978, the loss of revenue would have been avoided. The matter was reported to the department in June 1979 and the Government in August 1979 and the reply is awaited, என்று சொல்லுகிறது. இப்படி 91,529 ரூபாய் நஷ்டம் உருவாகக் காரணம், வேளச்சேரியிலேயும், சாலிக்கிராமத்திலேயும் இருக்கின்ற தியேட்டர்களில் இந்தச் சர்க்கார் முறையாக இந்தக் கேளிக்கை வரியை விதிக்கும் விதத்தில் செயல் படாத காரணத்தால் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. அது குறித்து நாங்கள் கேட்டிருக்கிறோம், இன்னும் சர்க்காரிடத்திலிருந்து பதில் வரவில்லை. என்று ஆடிட்டர் சொல்கிறார்.

இது ஒரு உதாரணம். இப்படிப்பட்ட உதாரணம் ஒரு இடத்தில் என்றால் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகள் இருக்கின்றன. இதை நிர்வகிக்கும் துறை இந்தத் தவற்றைச் செய்வதற்கு என்ன காரணம்? ஏன் தவறு ஏற்பட்டது? இந்தக் காரியம்

செய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

காரணம், இன்றைக்குத் தமிழ்நாட்டுச் சர்க்காருக்கு என்டர்டெய்ன்மெண்ட் டாக்ஸ் மூலம் கணிசமான தொகை வர வேண்டும் இதுபோன்று நம்முடைய விருப்பு, வெறுப்புகளின் காரணமாக அல்லது சில தவறுகளின் காரணமாக, அல்லது சலுகை காட்டுவதால் அல்லது சரியான முறையில் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், இருந்தால் தமிழக மக்களுக்கு, தமிழக சர்க்காருக்கு ஏற்படுகின்ற நஷ்டம் என்று சுட்டிக் காட்டி இந்த நேரத்திலும் கூட, என்டர்டெய்ன்மெண்ட் டாக்ஸை மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்கின்ற சூழ்நிலை கூட இருக்கிறது.

(முற்பகல் 11-10)

அதுவும் போய்விட்டால் இந்தச் சர்க்காருக்கு இருக்கக் கூடிய ஒரு வாய்ப்பு சேல்ஸ் டாக்ஸ்தான். ஆகவே, இருக்கக்கூடிய அதிகாரத்தை நான் சரியாகப் பயன்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, நான் அமைச்சர் அவர்களைப் பார்த்து பணிவோடு கேட்டுக்கொள்ளுவது, இன்றைக்கு டூரிங் டாக்கீஸ் சில இடங்களிலே இருக்கக் கூடாது என்றெல்லாம் அரசுத் தரப்பிலே கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பல்வேறு இடங்களிலே அவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்கின்ற தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன், அது போன்ற பகல் காட்சிகள் காட்டக் கூடாது என்ற அரசு உத்தரவுக்கு மாறாக, ஏதாவது நடைபெறுகிறதா? அது சம்பந்தமான வரிகள் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதைப் போலவே, தூத்துக்குடியிலே டூரிங் டாக்சில் அன்றைக்குத் தீ விபத்து ஏற்பட்டபொழுது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று சொல்லி, பணமெல்லாம் வெளியிலே வசூலிக்கப்பட்டதாக எனக்குத் தகவல் சொன்னார்கள். முதலமைச்சர் நிதியிலிருந்தும் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பணம் தரப்படுவதாகச் சொன்னார்கள். எவ்வளவு பணம் வசூலானது? பொதுமக்களிடமிருந்து வசூலானதா? அல்லது, சர்க்காரே ஏற்றுக்கொண்டதா? அதற்கான கணக்குகள் எல்லாம் முறையாக இருக்கிறதா? என்ற விவரங்களையெல்லாம் நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம் என்று சொல்லி, என் உரையை முடிக்கிறேன்.





திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேளிக்கை வரி மசோதாவின் பேரில் சில கருத்துக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கனவே இருக்கக் கூடிய வரி, ஊராட்சிகள் மாற்றம் என்கின்ற நிலையில், இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிறது. பல ஊராட்சிகளைப் பெறுத்தவரை, அந்த ஊராட்சிகளிலுள்ள வேலைகளைச் செய்ய முடியாமல், ஏதோ சில டென்ட் கொட்டகைப் போட்டால், அந்தக் கொட்டகையிலிருந்து வரக்கூடிய வரிகளை வைத்து, அந்த ஊராட்சிகளைப் பராமரிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அதே போல் சில ஊராட்சிகள் பேரூராட்சிகள் ஆக்கப்பட்டும் பேரூராட்சிகளுக்கு வருமானம் இல்லாத காரணத்தினாலே, ஊராட்சிகளை விட மோசமாகச் செயல் படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது.

அதே போன்று 3-வது நகரசபை என்று சொல்லக்கூடிய அந்த நகரசபையிலும் சரியான பொருளாதார நிலைமையில்லாத காரணத்தால், தற்காலிக சினிமாக் கொட்டகைகளுக்கு விதிக்கப்படுகிற அந்தக் கேளிக்கை வரிகள் பூராவும் அந்தந்தப் பகுதியிலே கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிக்கூடம், மருத்துவ மனை போன்றவற்றில் பொது நிகழ்ச்சிகளாக நடத்தப்படுகின்ற அந்த நிகழ்ச்சிகளுக்கு அந்தக் கேளிக்கை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. டி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1981-ஆம் ஆண்டு கேளிக்கை வரி திருத்தம் சம்பந்தமாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, அந்த ஊராட்சிகளுக்கும் அதைப்போல், நகராட்சிகளுக்கும் பெருவாரியான வருமானத்தைத் தேடித் தரக்கூடிய ஒரு நிலைதான் இதிலே இருக்கிறது. ஆகவே, ஊராட்சிக்கும் நகராட்சிக்கும் அதிகமான வருமானத்தைத் தேடித் தரக்கூடிய அந்த சினிமா கொட்டகையிலே சில பிரச்சினைகள் இருக்கிற காரணத்தால், முழுமையாக, அந்த வரி பூராவும், ஊராட்சிக்கோ, அல்லது நகராட்சிக்கோ, அல்லது அரசுக்கோ கிடைக்கிறதா என்றால், அதிலே ஒரு பகுதி திருடப்படுகிற நிலை இருந்து வருகிறது. குறிப்பாக, மொத்தமாக இன்று சினிமா கொட்டகைகளில் 3 ஷோக்கள் என்று சொன்னால், அவர்களுக்கு எத்தனை இருக்கைகள் என்று குறிக்கப்பட்டு, அந்த இருக்கைகளுடைய அடிப்படையில்தான் வரி விதிக்கப்படுகிறது. ஆனால், சினிமா ஆரம்பிக்கப்பட்டு சிறிது நேரம் கழிந்ததும் மீதியிருக்கிற இடங்களிலே, புது சீட்டுக்களை—இருக்கைகளைப் போட்டு, அதிகப்படியான வரியை திருடுகிற நிலையிருக்கிறது.

ஆகவே அவைகளை முறையாகக் கண்காணிப்பதற்கு அந்த வரி பூராவிலும் அரசுக்கும், ஊராட்சிக்கும், நகராட்சிக்கும், சேருவதற்கு வழி செய்வதோடு, அதே நேரத்தில் கிராமப் புறங்களிலே அது ஊராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும் அங்கே இருக்கின்ற சினிமா கொட்டகைகளில் போதுமான வசதிகள் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கின்றன. சுகாதார வசதிகள் அறவே இல்லாத நிலை இருக்கின்றது. வரி விதிப்பதுதான் முக்கியமான நோக்கமாக இருந்தால் மட்டும் போதாது. அந்தக் கொட்டகைகளுக்கான லைசென்ஸ்களை வழங்கும்போது, அந்த நகராட்சிகளிலே, ஊராட்சிகளில் உள்ள சினிமா கொட்டகைகளில் உள்ள சுகாதார முறைகேடுகளை அகற்றி, நல்லவிதமான சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கான ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே முக்கியமானப் பிரச்சினை என்னவென்றால், முன்பு தூத்துக்குடியிலே மின்சாரக் கோளாறுகள் காரணமாக சினிமா கொட்டகை தீப்பிடித்து அதன் காரணமாக பல பேர்கள் உயிர் இழந்தார்கள். அவர்களுக்கு மானியம் கூட கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், இன்று என்ன நிலைமை, கிராமப்புறங்களில் பார்த்தால் இன்னும் பல இடங்களில் அந்த நிலைமை இருக்கின்றன. அதனாலே பல ஆபத்துக்கள் வரும் நிலை இருக்கின்றது. எனவே, அவைகளை அகற்றி, லைசென்ஸ்கள் வழங்கும்போது இருக்கை வசதிகள், சுகாதார வசதிகள் சிறப்பாக இருக்கின்றனவா என்று பார்த்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கிற கேளிக்கை வரி (திருத்தச்) சட்டத்தை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களை அவை முன் வைக்க விழைகிறேன். இந்தக் கேளிக்கை வரி திருத்தச் சட்டத்தின் மூலம், முன்பெல்லாம் பணக்காரர்கள்தான் சினிமாக் கொட்டகைகளை நடத்த முடியும், நடத்தலாம், என்றிருந்த நிலை மாறி, இன்று கம்பவுண்டிங் டாக்ஸ் வந்திருக்கிற நிலையில், யார் வேண்டுமானாலும், சினிமா கொட்டகைகளை வைத்து நடத்த வாய்ப்பு வசதிகளைப் பெறக்கூடிய தன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, கிராமப்புறங்களிலே மைனர் பஞ்சாயத்து, மேஜர் பஞ்சாயத்துக்கள் என்றும், தாலுக்காக்கள் என்றும், நகராட்சிகள் என்றும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து இருக்கிற நிலையில், முன்பெல்லாம் நகரங்களுக்குச் சென்றுதான் சினிமா பார்க்க வேண்டும் என்ற நிலை இருந்தது.





இப்போது கிராமப்புறங்களிலே கூட சினிமா கொட்டகைகளைப் போட்டு சாதாரணமாகத் தொழில் நடத்தக்கூடிய நிலை இருக்கிறது என்பதையும் அரசுக்கு இதனால் நல்ல வருமானம் வந்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி வருமானம் வரக்கூடிய தொழிலலும் சில சங்கடங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த தொழில்ல் என்.ஓ.சி. ''சி'' பாரம் என்று சொல்லுகிறார்கள். அந்த என்.ஓ.சி ''சி'' பாரம் போன்றவைகளை சாதாரணமானவர்கள் அரசு கொண்டு வந்திருக்கிற இந்த கேளிக்கை வரி திருத்தச் சட்டத்தின் மூலமாக சினிமா நடத்தலாம், அதனால் நாம் பொருள் ஈட்டி லாபம் சம்பாதிக்கலாம் என்ற நோக்கத்தோடு வருகின்றவர்களுக்கு இதில் சில விதிமுறைகள் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதைப் பரிசீலித்து ஆவன செய்யும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். சினிமாத் துறையில் கொட்டகைகளை நடத்துகின்றவர்கள் முயற்சியில் அரசு ஒத்துழைக்குமானால் அரசு எதிர்பார்த்துக் கொண்டு வந்திருக்கின்ற இந்த திருத்த மசோதாவில் எதிர்பார்க்கின்ற சீர்திருத்தங்களை விட அதிகமாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது, அந்த நம்பிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த கேளிக்கை வரி திருத்த மசோதா, எதிர்காலத்திலே கிராமப்புறங்களிலே கிராமப் பஞ்சாயத்தானாலும் சரி, நகராட்சி ஆனாலும், நல்ல முறையில் நடப்பதற்கு நல்லதொரு, வருமானம் இந்த கேளிக்கை வரியின் மூலம் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். கேளிக்கை வரிகளைப் பெறுவதற்கு தியேட்டர்களை உருவாக்குவதற்கும் பல சினிமா கொட்டகைகளை உருவாக்குவதற்கும் வழி வகுக்கக்கூடிய கூடிய நிலை இருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலம் யாரும் கேளிக்கை வரியை ஏமாற்ற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11—20)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேளிக்கை வரிச் சட்டத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன். இந்தக் கேளிக்கை வரியின் வருமானத்தை நம்பியே— குறிப்பாக மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்துக்கள் —இன்று தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இந்தக் திட்டத்தின் கீழ் மைனர், பஞ்சாயத்துக்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்க இந்தச் சினிமா கொட்டகைகளுக்கு லைசென்சு வழங்கும் முறையை கொஞ்சம் லிபரலைஸ் செய்கிற நடவடிக்கையை அரசு செய்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தற்போது வழங்கப்பட்டு வருகின்ற ''காம்பவுண்ட் டாக்ஸ்'' கிராமப்புறப் பகுதியில் உள்ளதுபோல ''டவுன் ஷிப்'' நகரத்திற்கும் போடுவதற்கு வகை செய்தால், அவைகளும் நல்ல வருமானம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும், அந்த வரியை ஏய்ப்பதற்கான சூழ்நிலையையும் தவிர்க்க தேவையான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சினிமாத்துறையில் சம்பந்தப்பட்டவர்கள் மூலம் தமிழக அரசுக்கு வருமானம் வரும் வாய்ப்பு இருப்பதால் எந்த அளவிற்கு அந்தத் துறையை சேர்ந்தவர்களுக்கு உதவி செய்யமுடியுமோ அந்த அளவிற்கு உதவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டு, இந்தச் சட்டமுன் வடிவை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன் வடிவின் மீது பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையிலும் அதிகமாக எதுவும் நான் சொல்ல வேண்டியது இல்லை. கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள சில ஏரியாக்கள்— குறிப்பாக மூன்றாம் நிலை நகராட்சிகள், இரண்டாம் நிலை நகராட்சிகளாகவும், இரண்டாம் நிலை நகராட்சிகள் முதல் நிலை நகராட்சிகளாகவும் மாறியிருக்கின்றன. ''அப்படி'' ''சேஞ்ச் ஆப் ஸ்டேடஸ்'' ஏற்படுகிறபோது, அதன் விளைவாக இந்த வரி வசூல் சட்டத்தின் முறைகளும் மாறுகின்றன. ஆகவே, அதன் காரணமாக இந்தச் சட்டத்தின் அடிப்படையில் சட்ட மன்றம் கூடுவதற்குமுன் வெளியிடப்பட்ட நோட்டிபிகேஷன்களுக்கு சட்டத்தின் மூலம் அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்கிற முறையில் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதாவது, அந்த நகராட்சிகள் சேஞ்ச் ஆப் ஸ்டேட்ஸ் பெற்ற உடனேயே அரசு அதிகாரத்தின் அடிப்படையில் அந்த வரி வசூல் முறையை மாற்று உத்தரவு போட்டு இருந்தாலும், அதற்குப் பிறகு கூடுகிற சட்டமன்றத்தில் அதை நிறைவேற்ற வேண்டும் என்கிற வகையில் இந்த சட்ட திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது

திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது தூத்துக்குடி தீ விபத்தைப்பற்றிச் சொன்னார்கள். தூத்துக்குடி தீ விபத்து ஏற்பட்டவுடன் அரசு என்ன முடிவு எடுத்து இருக்கிறது என்றால் எனக்குக் கிடைத்த தகவல்படி கீத்துக்கொட்டகைகள் போடக்கூடாது. வேண்டுமானால், ஏ.சி. ஷீட் போட்டுக் கொள்ளலாம் , இல்லாவிட்டால் லேசிலே தீப்பிடிக்காத கொட்டகை போட வேண்டும் என்று அரசு முடிவு எடுத்து இருப்பதாக அறிகிறேன். அதைப்போலவே, தீ விபத்திலே





இறந்தால் இறந்தவர்களுக்கு சாதாரணமாகத் தீ விபத்தில் இறந்தால் சொன்னால், அந்தத் தூத்துக்குடி தீ 1,000 உதவித்தொகை என்று சொன்னால், அந்தத் தூத்துக்குடி தீ விபத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மனிதாபிமானத்தோடு அதை உயர்த்தி, அந்த விபத்தில் இறந்தவர்களுக்கு எல்லாம் 1,000 ரூபாய் கொடுப்பதை மாற்றி, 5,000, 10,000 என்ற வகையில் பல முறைகளில் உதவி கொடுக்கப்பட்டு இருக்கிறது. மேலும், அதரவு அற்றவர்களாக அவர்கள் இருந்து விட்டால், அந்தக் குழந்தைகளுக்கு படிப்பு உதவிக் கூட அரசு செய்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விளக்கங்கள் காரண நோக்கத்தில் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். காரண நோக்கத்தில் விளக்கம் சரியாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காக விளக்கங்கள் சரியாக இல்லை என்று சொன்னார்களா என்று எனக்குப் புரிய வில்லை. முனிசிபாலிட்டியின் ஸ்டேட்டஸ் மாறியவுடன் வரிவசூல் செய்யும் முறையையும், அரசுக்கு உள்ள அதிகாரத்தை வைத்து மாற்றி விடுகிறோம். அதற்குச் சட்டவடிவம் கொடுத்து இப்போது சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். காரண நோக்க விளக்கக்குறிப்பிலேயே செக்ஷன் 16-ஏ உட்பிரிவு 2-ன்படி இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்று விளக்கமாகக் குறிப்பிடப் பட்டு இருக்கிறது என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி : '' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 2/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 2/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மார்ச்

(ஆ) பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்,
திருத்தச் சட்ட முன் வடிவு, 1981.

(இ) புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த
பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச்
சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள்
குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு
*(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1981)
ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் ''.

'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால்
பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள்
குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்
வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1981)
ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள்
குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்), 1981 ஆம் ஆண்டு புயல்
மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த
பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்)
ஆகியவை சம்பந்தமான மசோதாக்களை மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். இந்த மசோதாக்
களிலே சொல்லியிருப்பது 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்
31-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்ட காலக்கெடு 1981 ஆம் ஆண்டு
ஏப்ரல் 15-ந் தேதிவரை மேலும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்
பது. இப்படி ஒவ்வொரு தடவையும் நாம் இந்த குத்தகைப்
பாக்கி சம்பந்தமாக காலக் கெடுவை நீட்டிப்பதால் விவசாயி
களுக்குத் தேவையான அல்லது பயிரிடும் சாகுபடியாளர்களுக்குத்
தேவையான உண்மையான நிவாரணத்தை நம்மால் அளிக்க
முடியாது. எனவே இதற்கு ஒரு நிரந்தரமான வழிவகையைக்
காண அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும்.

இன்றைய தினம் இருக்கிற 9 ஆண்டு குத்தகை பாக்கிகளை
மனதிலே கொண்டு, 1972 முதல் இந்த பசலிவரை உள்ள
குத்தகைப் பாக்கிகளை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதாவது
1382 ஆம் பசலி முதல் 1390 ஆம் பசலி வரை 9 பசலி ஆண்டு
வரையில் உள்ள குத்தகை பாக்கி இருக்கிறது ; அதை தள்ளுபடி
செய்கின்ற ஒரு சட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்து
நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் தேதியிட்ட
தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1981 மார்ச் 7] [திரு. செ. இராமலிங்கம்]

தஞ்சை மாவட்டத்தில்தான் அதிகமாக குத்தகை நிலம்
இருக்கிறது. மற்ற மாவட்டங்களைவிட தஞ்சை மாவட்டத்தில்
இருக்கிற குத்தகை சாகுபடியாளர்கள், பல்வேறு சட்டங்களைக்
கொண்டு வந்தாலும் அவைகளை எல்லாம் நிலச்
சுவான்தார்கள் ரெவின்யூ கோர்ட்டுகள் மூலம் அல்லது மற்ற
வழக்கு மன்றங்கள் மூலம் செயல்படுத்த முடியாமல் செய்து
விடுகிற நிலைமைகளை நாம் காண்கிறோம் ; அதனால் அவர்கள்
எல்லாம் நிவாரணம் பெற முடியவில்லை. தஞ்சை மாவட்டத்
தில் இருக்கிற ரெவின்யூ அதிகாரிகள் எல்லாம் நிலச்சுவான்தார்
களுக்கு சாதகமாக இருக்கிறார்களே தவிர சாகுபடியாளர்
களுக்கு சாதகமாக இல்லை. இன்னும் சொல்லப் போனால்
நாம் உருவாக்கியிருக்கிற சட்டங்களுக்கு முரணாக தஞ்சை
மாவட்டத்தில் ரெவின்யூ அதிகாரிகள் செயல்படுகிறார்கள். நாம்
இந்த மாமன்றத்திலே 75—25 என்ற குத்தகை சட்டத்தை
நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால் இன்றைய தினம் தஞ்சை
மாவட்டத்தில் இருக்கிற ரெவின்யூ அதிகாரிகள் அந்தச் சட்டத்தை
மதிப்பது கிடையாது. அந்தச் சட்டம் வெறும் ஏட்டுச் சுரைக்
காயாகத்தான் இருக்கிறதே தவிர சாகுபடியாளர்களுக்கு அல்
லது குத்தகைதாரர்களுக்கு பயன் அளிப்பதாக இல்லை. இது
சம்பந்தமாக ரெவின்யூ கோர்ட்டுக்குச் சென்றால் அவர்கள்
அங்கிருந்து ரென்ட் கோர்ட்டுக்குப் போகச் சொல்கிறார்கள்.
இப்படி ஒவ்வொரு கோர்ட்டுக்கும் ஏறி இறங்க வேண்டிய அவல
நிலை தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு இருக்கிறது.
ரென்ட் கோர்ட்டுக்குப் போனால் உடனடியாக தீர்வு காண்ப
தில்லை, பல்வேறு தவணைகள் போட்டு விவசாயிகளை அலை
கழிக்கிறார்கள். அதனால் சாகுபடியாளர்களுக்கு ஏராளமான
செலவும், காலமும் விரையமாகிறது.

[முற்பகல் 11-30]

75—25 என்கிற அந்தச் சட்டத்தை உடனடியாக அமுல்
படுத்த வேண்டும் என்றால், தயவு செய்து நீங்கள்
ரெவின்யூ கோர்ட்டுகளுக்காவது அது பற்றி உத்தரவு பிறப்
பிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் மடாலயங்களுக்கும்,
கோவில்களுக்கும்தான் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள்
சொந்தமாக இருக்கின்றன. அத்தனை நிலங்களும் மறை
முகமாக அரசின் சார்பிலே நிர்வகிக்கப்பட்டதாக ஏற்றுக் கொள்
ளப்பட்டாலும், அவர்களும், அந்தக் கோவில்களும், மடாலயங்
களும் கூட இந்தச் சட்டத்தை உபயோகப்படுத்துவது கிடையாது.
அப்படிப்பட்ட நிலைமை இன்றைய தினம் தஞ்சை மாவட்டத்
திலே இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால்,
தஞ்சை மாவட்டத்தில், திருவிடைமருதூர் தொகுதியில் பசுபதி
நாதர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் ஆயிரக் கணக்கில்
இருக்கின்றன. அந்த நிலங்களிலே சாகுபடி செய்து கொண்டு

[திரு. செ. இராமலிங்கம்] [1981 மார்ச் 7

இருந்த குத்தகைதாரர்கள் எல்லாம் இன்றைய தினம் அந்த
நிலங்களை விட்டு அப்புறப்படுத்தக் கூடிய ஒரு உத்தரவை
ரெவின்யூ கோர்ட் வழங்கியிருக்கிறது.

கோவில் ராமபுரம், ஆண்டி ராமபுரம், இருமுளை, சோழக்
குடி, நெய்க்குப்பை, அரசடி, பங்கநல் ூர், கருப்பூர் போன்ற
கிராமங்களிலெல்லாம், சாகுபடி செய்கிற குத்தகைதாரர்களை,
அந்த நிலங்களை விட்டு வெளியேற்றுகிற உத்தரவை, ரெவின்யூ
கோர்ட் பிறப்பித்திருக்கிறது. அதே போல பல்வேறு இடங்
களில் இப்படி நடந்திருக்கிறது. தனிப்பட்ட நிலச்சுவான்தார்
கள்கூட, 75—25 என்ற அந்தச் சட்டத்தைப் புறக்கணித்து
60—40 என்கிற அந்தப் பழைய நிலையில் குத்தகையை செலுத்த
வேண்டும் என்று இன்றைய தினம் அவர்களை வலியுறுத்திக்
கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் திருவிடைமருதூர்
தாலுக்காவில், சாத்தனூர், படைத் தலைவன்குடி, திருக்கழித்
தட்டை, விழுதிக்குடி, பருத்திக்குடி, இருக்கங்குடி போன்ற
கிராமங்களிலேயெல்லாம் இன்றைய தினம் தனிப்பட்ட மிராசு
தாரர்களும் கூட குத்தகைதாரர்களை நிலத்தை விட்டு வெளி
யேற்ற வேண்டும் என்பதற்காக ரெவின்யூ போர்டைப் பயன்
படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆக, நாம் உருவாக்கிய இந்தச் சட்டத்தை, இன்றைய தினம்
அரசு அதிகாரிகளே புறக்கணிக்கிறார்கள் என்பதை நான்
அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டு
இருக்கிறேன். எனவே, இப்படி ஒவ்வொரு தடவையும் நாம்
காலக் கட்டத்தை நீட்டித்துக் கொடுப்பதால், குத்தகைதாரர்
களுக்கு நாம் பரிகாரம் கண்டுவிட்டதாக நினைத்துக்கொள்ள
முடியாது. எனவே நிரந்தரமாக நாம் பரிகாரம் காண்கிற வகை
யில், உழுகின்ற நிலத்தை அந்தந்த விவசாயிகளுக்கே சொந்தம்
என்ற சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று அமைச்சர்
அவர்களைக் கேட்டுக் கொண்டு என் கருத்தை முடித்துக்
கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் துணைத் தலை
வர் அவர்களே, இந்தக் குத்தகைதாரர்கள் நிவாரணச் சட்டத்
திலே 4 ஆம் பிரிவில், அவர்களுக்கு உதவி செய்வதற்காக என்று
அரசு நினைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதற்
காக, இன்றைக்கு இப்படி ஒத்தி ஒத்தி வைத்துக் கொண்டே
போனால், அமைச்சர் அவர்கள் நிச்சயமாக விவசாயிகளுடைய
நிலைமையை தெரிந்தவர். இதற்கு ஒரு முடிவு ஏற்படாது.
இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும். உதாரணமாக கோயில்
நிலங்களாக இருந்தாலும் கூட அவர்களுக்கு கோர்ட்டுக்கு போக
வழி இருக்கிறது. அப்படிச் செல்லும்போது நம்முடைய சட்டத்
தினால் குத்தகைதாரர்களுக்கு நன்மை செய்வதை விட சில
சமயங்களில் அவர்களுக்கு அபாயகரமானதாக ஆகிவிடும். மேலும்
ரெவின்யூ கோர்ட்டானது காலதாமதம் செய்கிறது. நீண்ட



1981 மார்ச் 7] [திரு. எல். இளையபெருமாள்]

நாட்களுக்கு வாயிதா போடுகிறார்கள். சீக்கிரத்தில் முடிவு
செய்யமாட்டேன் என்கிறார்கள். இதனால் நிலச் சுவான்தார்
களும் களைத்துப் போகிறார்கள், குத்தகைதாரர்களும் களைத்
துப் போகிறார்கள். கால தாமதம் மட்டும் அல்ல, அவர்
களுடைய பொருளும் விரயம் ஆகிறது. இந்தக் கோர்ட்டுக்கு
அலைவதைவிட, ஏதாவது விட்டுக் கொடுத்துவிட்டு சரி கட்டி
விடலாம் என்ற அடிப்படையில் கூட நிலைமைகள் ஏற்படுகின்றன.

ஆகவே, கால நீட்டிப்புக் கொடுத்து கொடுத்து அவர்களுக்கு
கடன் சுமையையும் ஏற்றி திக்கற்ற நிலைமைக்கு இந்த நிலை
கொண்டு போய் தள்ளிவிடுகிறது. இந்த அவல நிலைமைக்கு
நாம் ஒரு முடிவு கட்டியாக வேண்டும். நம்முடைய அமைச்சர்
அவர்கள் நல்ல அனுபவம் உள்ளவர்கள். ஆகவே, அடுத்தக்
கூட்டத் தொடரிலாவது இதற்கு ஒரு வடிவம் கண்டு முடிவு
செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும்,
இந்த நிலச் சுவான்தார்கள் பற்றியும் நான் ஒன்று சொல்ல
விரும்புகிறேன். 5 ஏக்கருக்கு குறைந்திருந்தாலும் அல்லது
கைம்பெண்களாக இருந்தாலும் அல்லது மைனர் குழந்தைகளாக,
படிக்கிற குழந்தைகளாக இருந்தாலும் நிச்சயமாக அவர்களுக்கு
நாம் ஏற்கெனவே குத்தகையை தள்ளுபடி செய்து விட்டோமே,
ஆகவே, தள்ளுகிறோம் என்ற நிலைமையை நாம் உருவாக்கக்
கூடாது.

ஆகவே கைம்பெண்களாக இருந்தாலும் சரி அல்லது குழந்தை
கள் கல்விக்காக இருந்தாலும் சரி யாராக இருந்தாலும் ஐந்து
ஏக்கருக்கு உட்பட்டு நிலமிருந்தால் இந்த குத்தகை பாக்கியை
நிச்சயமாக 80 சதவீதம் ஆவது திருப்பிக் கொடுத்து, 20 சத
வீதம் திக்கற்ற விவசாயியாக, குத்தகைதாரராக இருந்தால் 20
சதவீதம் அவர்களுக்கும் தள்ளுபடி செய்யலாம். இது கிட்டத்
தட்ட ஆறு ஏழு ஆண்டுகளாக ஒத்தி போடப்பட்டு வருகிறது.
நம்முடைய இந்த அரசானாலும் சரி, இதற்கு முந்திய அர
சானாலும் சரி இந்த அவல நிலைதான் இருக்கிறது. வாங்கப்பட்ட
கடன்கள், குத்தகை பாக்கிகள் ஆண்டுக்காண்டு கூடிக் கொண்
டிருக்கிறது. இதை குறைந்தபட்சம் பாதி பாதி என்று சொன்னா
லாவது குத்தகைதாரர்களின் கஷ்டமும் குறையும் நில உடைமை
யாளர்களுக்கும் பாதி கிடைக்கும். ஐயோ எங்களுக்கு ஒன்றும்
கிடைக்கவில்லையே என்று நிலவுடைமையாளர்களும் நினைக்க
மாட்டார்கள். ஆகவே ஒன்று அந்த முறையைக் கையாள வேண்
டும் அல்லது ஐந்து ஏக்கருக்கு குறைவாக உள்ள நிலச் சொந்தக்
காரர்களுக்கு ஒரு வாய்ப்பு, அதற்கு அதிகப்படி வசதி உள்ளவர்
களுக்கு பல ஆண்டுகளாக 90 சதவீதம் வாங்கி விட்டு குத்தகை
தாரர்கள் இவர்களை விட்டு விட்டார்கள் என்றால் அவர்களுக்கும்
செய்யலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கட்ட வேண்டிய
குத்தகை பாக்கி பூராவையும் இப்போது தள்ளிப்போடவில்லை
என்பது சட்ட முன்வடிவிலேயே விளக்கமாகக் கொடுக்கப்பட்

டிருக்கிறது. நான் கடைசியில் பதில் சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால் விளக்கம் கொடுத்துவிட்டால் உறுப்பினர் அவர்கள் தமது பேச்சை அதற்கேற்றவாறு மாற்றியமைத்துக் கொள்ளலாம். கட்ட வேண்டியதை தள்ளுபடி செய்ய வேண்டியதை எல்லாம் தள்ளி விட்ட பிறகு எவ்வளவு கட்ட வேண்டுமோ அதில் ஒரு பசலி மட்டும், அந்தப் பசலிகூட பல தவணைகளில் கட்ட வாய்ப்பு கொடுக்கப்பட்டது. கொடுத்த வாய்ப்பு போதாது என்று மத்திய பேரரசுக்குச் சென்று கையெழுத்து வாங்கிவர காலதாமதமாகி விட்டதால் அதே வாய்ப்பு இப்போது கொடுக்கப்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இதிலும் காலதாமதமாகி குத்தகைதாரர்கள் பேரில் அல்லது கோர்ட் பேரில் மீண்டும் இந்தத் தொல்லைகள் வராமல் அந்தக் காலத்திற்குள்ளேயே முடிக்கப்படவேண்டும் என்று அரசாணை ரெவின்யூ கோர்ட் அதிகாரிகளுக்கு திட்டவட்டமாகச் சொல்லப்படவேண்டும். ரெவின்யூ கோர்ட் அதிகாரிகள் கடவுள்கள் அல்ல. அவர்கள் யார் யாரோ. பெருதனக்காரர்கள் அல்லது அரசியல்வாதிகள் அவர்கள் பக்கம் ஈர்க்கப்படுகிறபோது அனாவசியமாக காலதாமதம் ஏற்படுத்தினால் குத்தகைதாரர்களுக்கும் நஷ்டம், நிலச் சொந்தக்காரர்களுக்கும் கஷ்டம், அரசாங்கத்திற்கும் அவப்பெயரை உண்டாக்கும். ஆகவே அப்படிப் பட்டதொரு நிலை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, கோவில் நிலங்கள் பற்றிச் சொல்லப்பட்டது. அரசு ஒரு முடிவிற்கு வரவேண்டும். எனக்கு முன்னால் பேசிய சகோதரர் தஞ்சை மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆலயங்கள் பற்றிச் சொன்னார்கள். அரசாங்கம் ஒரு தீர்க்கமான முடிவிற்கு வரவேண்டும். எதற்கெடுத்தாலும் வோட்டு வாங்கி நம் கட்சி ஜெயிக்க வேண்டும் என்ற அவல நிலைக்கு இடம் கொடுக்காமல் ஒரு தீர்க்கமான முடிவிற்கு வரவேண்டும். மடம் அல்லது கோவில் நிலங்கள் அல்லது அறக்கட்டளை நிலங்களை எடுத்துக் கொண்டால், உழுபவனுக்கே நிலம் என்று காந்தியடிகள் சொன்னார்கள். உண்மையில் உழுபவர்கள் உழவுத் தொழிலை செய்து கொண்டிருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள் சிலர் சென்னையில் இருந்து கொண்டு தஞ்சையில் நிலங்களை வைத்துக் கொண்டு காலத்தை கடத்துபவராக இருந்தாலும் எப்படியிருந்தாலும் உழுபவனுக்கே நிலம் என்பதில் கருத்து மாறுபாடு இருக்காது இன்றைய அரசுக்கு என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் ஏழை எளியவர்கள் மீது இரக்கம் கொண்டவர்கள். ஆகவே ஒரு தீர்க்கமான முடிவிற்கு நாம் வரவேண்டும். நிலங்கள் அத்தனையையும் அரசே எடுத்துக் கொண்டு அதற்கு வேண்டிய காம்பன்சேஷன் என்ற முறையில் ஒரு அமைப்பு ஏற்படுத்தி அந்தத் தொகையை பிக்ஸ்ட் டெப்பாஸிட்டில் போடலாம் அல்லது அறநிலையத் துறை





அதிகாரிகளிடம் கொடுத்து—ஆலயங்களில் பணியாற்றும் பணியாளர்கள் பூசை செய்கிறவர் ஒருவர்தான் இருப்பார், மற்றவர்கள் சாமி தூக்குகிறவர்கள், மேளம் வாசிப்பவர்கள், தண்ணீர் எடுக்கிறவர்கள், என்று இப்படி பலபேர்கள் ஆலயங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுக்கு சரியான முறையில் சம்பளம் கொடுக்க முடியாத ஒரு அவலநிலை இன்றைய தினம் ஆலயங்களில் இருக்கிறது.

இன்றைக்கு நாம் ஒரு தீர்க்கமான முடிவிற்கு வரவேண்டும். இன்றைக்கு ஆலையங்கள் இல்லை, ஆண்டவன் இல்லை, மக்களுக்காக இருக்கிறோம், ஆண்டவன் பேரால் மக்களுக்குக் கொடுக்கிறோம் என்ற தைரியமான முடிவிற்கு வர வேண்டும் : அல்லது அறநிலைய பாதுகாப்பு அதிகாரிகள் மூலமாக அவர்களுடைய கணக்கை எடுக்கச் செய்து ஒரு ஆண்டு வரவு செலவு என்ன ஆகிறது என்று பார்த்து, அதை அரசாங்கமே முதலீடாக கொடுப்பதாக இருந்தாலும் அப்படி ஒரு தைரியமான முடிவிற்கு வரவேண்டும். சந்நியாசிகளானாலும், மடாதிபதிகளானாலும் கோயில் நிர்வாகிகளானாலும் அவர்களை பயமுறுத்துகின்ற அவலநிலை இருப்பதும், அவர்கள் போலீசுக்குச் செல்வதும் போலீசார் பணத்திற்காக என்று சொல்லவில்லை, ஆளுங்கட்சிக்காகவோ, அரசுக்காகவோ. அல்லது சக்தி படைத்தவர்களுக்கோ, பணக்காரர்களுக்கோ அல்லது ரௌடிகளுக்கோ செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலைமை இருக்கின்றது. பலமுறையிலே அவர்கள் படித்திருந்தும், அவர்கள் கையில் சட்டங்கள் இருந்தும், அதை அமுல்படுத்த முடியாமல் அதிகாரிகள் வளைந்து போகிறார்கள் இந்த அவலநிலை இருக்கிறது. இவைகளையெல்லாம் மனதிலே கொண்டு, நாம் அவர்களுக்கு சேர வேண்டிய பாக்கிகளைக் கொடுப்பதற்கான ஒரு முடிவிற்கு வரவேண்டும். அல்லது அந்த நிலங்களை எடுத்துக் கொண்டு, நஷ்டஈடு கொடுத்து, இந்த ஆலயங்களும், ஆலயங்களிலே பணிபுரிகின்றவர்கள், தொழிலாள மக்களுக்கு தகுந்த முறையிலே அவர்கள் பணிக்கு வேண்டிய சம்பளம் கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டும். அதிலே அரசு தீர்க்கமாக இல்லையென்று நான் குற்றச் சாட்டாகச் சொல்லவில்லை, ஒரு கோரிக்கையாகச் சொல்கிறேன். இந்த அலட்சியப் போக்கினால், நாளுக்கு நாள் கிராமங்களில் அமளி, அமைதி குறைவு, கோயில்களிலே சீர்கேடுகள், கோயில் நிர்வாக அதிகாரிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையேவுள்ள தொல்லைகள் கூலி கொடுப்பதற்கு முடியாத நிலைமை. இன்னும் இப்படிப்பட்ட மோசமான அவல நிலைமைகள் உண்டாகும். இந்த அரசு அந்த கெட்ட பெயரை வாங்கக்கூடாது என்ற நிலைமையில், நம்முடைய அனுபவமுள்ள, இரக்கமுள்ள, இரக்கமான எண்ணமுள்ள நம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன்.

[திரு. எல். இளையபெருமாள்] [1981 மார்ச் 7

[முற்பகல் 11–40]

இந்தச் சமயத்திலே நாம் தீர்க்கமாக சிந்திக்கத் தவறினால், வருங்காலத்திலே கோயில்கள் அழிக்கப்படும். கோயில்கள் அப்படி அழிக்கப்படுவது மட்டுமல்ல : அந்தக் கோயில்களிலே பணிபுரி கின்றவர்கள்தான் ஆதாரமாக, காரணமாக இருக்கின்றார்கள் என்ற ஒரு கேவலமான நிலைமைக்கு அவர்களைத் தயார் செய் கின்ற அவல நிலைக்கு இந்த அரசு விட்டுவிடக் கூடாது. அந்தக் கெட்டப் பெயர் எடுக்கக் கூடாது என்ற முறையில், இந்த மடங் களுக்கும், ஆலயங்களுக்கும் உள்ள பிரச்சினைகளில் நாம் ஒரு தீர்க்கமான முடிவை விரைவில் எடுக்க வேண்டும்.

இந்த குத்தகை சட்டத்திலே இதுதான் நமது இலட்சியம் என்று நம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு ஒப்புதலில் காலதாமதம் ஆகிறதென்று சொன்னார்கள். விவ சாயம் என்பது மாநில அரசினுடைய பொறுப்பு : மத்திய அரசின் பொறுப்பல்ல. மத்திய அரசு இதற்கு ஒப்புதல் அளிக்கும். விவ சாய சம்பந்தமாக, நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக, நாம்செய்ய வேண்டிய பணிகளுக்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. அதிலே அவர்கள் கையொப்பம் இடவேண்டுமே தவிர, இதற்காக நாம் மத்திய அரசை எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லி எனக்கு இந்த மசோதாவின் மீது பேவதற்கு சந்தர்ப்பம் தந்தமைக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச்சட்டம் கொண்டு வந்திருப்பதை மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். வர வேற்பதோடு மட்டுமல்லாமல், இன்றய தினம் இந்த அரசு கொடுத்திருக்கக்கூடிய அந்தச் சட்டத்திலே கொடுத்துள்ள சலு கைகளை கோர்டுகளிலே யார் நிரூபிப்பது என்பதிலே ஏராள மான சிக்கல்கள் இருக்கின்றன. குறிப்பாக, 9 ஆண்டு காலத்திலே, இந்த குத்தகைதாரர்களுக்கு விசேஷமாக . கொடுக்கப்பட்டு வந்த சலுகைகளை இந்த குத்தகை விவசாயிகளிடம் ரசீது இல்லை அல்லது அதற்கான ரசீதுகள் காணமால் போய்விட்டது என் றாலும், அதை ரெவினியூ கோர்டிலே போய் இப்போதுள்ள குத்தகை பற்றி நிரூபிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. மிராசுதாரர்கள் அல்லது பொறுப்புக் கழகங்கள் அப்படி இந்த குத்தகை பாக்கிகள் எவ்வளவு என்பதை கோர்டிலே நிரூபிக்க வில்லையென்றாலும், அந்த பூரா குத்தகை பாக்கியும் தள்ளுபடி ஆக வேண்டும் என்ற ஒரு சட்டத் திருத்தத்தையும் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பணம் கட்டுவதிலே நிவாரணம் 1381வது பசலி யிலே துவக்கப்படுகிறது. அப்படி துவக்கப்படுகின்ற நேரத்திலே ஏற்பட்டிருக்கக் கூடிய பாக்கிக்காக இன்றைக்கு



1981 மார்ச் 7] [திரு. எம். செல்லமுத்து]

என்ன விலையோ அதற்கான பணம் கொடுக்க வேண்டு மென்று சொல்கிறார்கள். குறிப்பாக 1380வது பசலியில் ருபாய் 150க்கு 30 கலத்துக்கு பணம் கொடுக்க வேண்டுமென் றால், இன்றைக்கு ரூ. 330 என்ற அளவிற்கு வந்து சேருகிறது. எனவே, அந்தச் சட்டத்திலே சொல்கிற போது, நிவாரணம் கொடுக்கக்கூடிய அந்தக் காலத்திலே, அந்தப் பசலிக்கு என்ன பாக்கி இருக்கிறதோ, அந்தக் காலத்திலே என்ன விலையோ, அதற்கான பணத்தைக்கொடுப்பதற்கு உத்திரவிட வேண்டும். அந்த முறையிலே அதிகாரிகளுக்கும், கோர்டுகளுக் கும் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு இந்த ஒன்பது ஆண்டு கால குத்தகையை அவர்கள் கொடுப்பதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. குத்தகை எல்லாம் ஒரு குறிப்பிட்ட ஆண்டை நிர்ணயித்து இந்த பசலியில் வரக்கூடிய குத்தகையில் மூன்றில் ஒரு பங்கு தவணையை, தவணை முறையில் கொடுப்பதற் கான வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் 75 வாரம் சட்டம் வந்திருக்கிறது. அந்த சட்டத்தை கோயில் நிர்வாகமும், அறங்காவலர்களும், மிராசுதாரர்களும் நிலச்சொந்தக்காரர் களும் அமுல் நடத்த மறுக்கிறார்கள். வந்திருக்கக் கூடிய சட்டம் பல கோயில்களுக்கும் பொறுப்பு கழகங்களுக்கும் இன்னும் அனுப்பப்படவில்லை. குறிப்பாக திருவாரூர் தியாக ராஜ சுவாமி கோயில் இந்த வருடம் அறுவடையான நெல்லை 75 வார சட்டப்படி கொடுங்கள் என்று சொன்னால் எங் களுக்கு சட்டம் இன்னும் வரவில்லை என்று சொல்கிறார்கள். அதேபோல மாயூரம் தாலுகாவில் மருதபள்ளம் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு விவசாயம் செய்யும் சுமார் 150 விவசாயிகள் 75 வாரம் கேட்டு அவர்களது கோரிக்கையை வைத்தார்கள். 75 வாரப்படி கொடுக்க மறுத்து போலீசிலே புகார் செய்து போலீசிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு கோர்ட்டிலே வழக்கு நடந்து சிறைக்கு செல்லக்கூடிய நிலை இருக்கிறது. 75 வாரம் கேட்ட காரணத்திற்காக இந்த நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. 75 வாரத்தை அமுல் நடத்து வதற்கான உத்தரவுகளை உடனடியாக அரசு அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நான் பத்திரிகையிலே பார்த்தேன் திருநெல்வேலி மாவட்டத்தில் பேச்சு வாரங்கள் இருக்கின்றன. இந்த பேச்சு வாரத்திற்கு சட்டம் கொண்டு வருவதாக மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த சட்டத்தை உடனடியாக கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து] [1981 மார்ச் 7

அதேபோல தமிழ் நாடு முழுவதும் பணக் குத்தகை இருக்கிறது. பணக் குத்தகை வருகிறபோது அதிலே 75 வாரம் நிச்சயித்து 100 ரூபாய் குத்தகை செலுத்துவதாக ஒரு சூழ்நிலை இருந்தால் 25ரூபாய் வாங்கக்கூடிய அளவிற்கு அந்த பணக் குத்தகையில் நிவாரணத்தை அளிக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இந்த குத்தகைச் சட்டம் வந்து இன்றைக்கு குத்தகை பதிவு நடந்து கொண்டிருக்கின்றன. இதற்காக தாசில்தார் அலுவலகத்தில் நடவடிக்கைகள் எடுப்பதில் சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக திருவாரூர் தாசில்தார் அலுவலகத்தில் ஆயிரக்கணக்கான மனுக்கள் குத்தகை பதிவு செய்வதற்காகக் கொடுக்கப்பட்டு அவர்கள் இந்த விசாரணை செய்வதில் தங்களுக்கு ஏராளமான சங்கடங்கள் இருப்பதாக சொல்கிறார்கள். இந்த குத்தகை பதிவுகளை உடனடியாக ஸ்தலத்திலேயே ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரை வைத்து நேரடியாக குத்தகை செய்யக்கூடிய விவசாயிகளை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இப்படி இருக்கிற மனுக்களை எல்லாம் பரிசீலிப்பதற்கு தனியாக ஒரு தாசில்தாரை நியமிக்க வேண்டும். குத்தகை பாக்கிகள் என்று சொல்கிற போது 1388 முதல் 90 வரை இன்றையதினம் குத்தகை பாக்கிகளுக்காக கோர்ட்டுகளுக்கு செல்கிறார்கள். மாவட்ட முழுவதும் நன்றாக விளைந்திருந்தாலும் இயற்கை பாதிப்பின் காரணமாகவும் பூச்சிகள் காரணமாக பயிர் பாதிக்கப்பட்டு பல சாகுபடியாளர்கள் குத்தகை நெல்லை அளக்க முடியவில்லை. அவர்கள் மீது பல வழக்குகள் போடப்பட்டு வருகின்றன. திருவாரூர் கோர்ட்டிலே மட்டும் ஆயிரத்திற்கும் அதிகமான வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. கோர்ட்டில் இருக்கக்கூடிய அதிகாரிகள் குத்தகையை கொடுக்கிறீர்களா அல்லது உங்களை நிலத்தை விட்டு வெளியேற்றலாமா என்று கேட்டு விவசாயிகள் வெளியேற்றப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த குத்தகை விவசாயிகள் நிலத்தை நம்பியே வாழக்கூடியவர்கள். நிலத்தை விட்டு வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு தகுந்த உத்தரவுகளை போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

அதேபோல் இன்றைக்கு தமிழகம் பூராவும் கோயில்கள் அறக்கட்டளைகள் பொதுக்கழகங்களுக்கு இருக்கக்கூடிய குத்தகை விவசாயிகளுடைய நிலங்களை அவர்களே வாங்கிக் கொள்ளக்கூடிய சட்டத்தைக் கொண்டுவந்து குத்தகை விவசாயிகளை நில உரிமையாளர்களாக ஆக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு குத்தகை விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



1981 மார்ச் 7]

திரு. கோவைத்தம்பி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் நிவாரணத் திருத்தச் சட்டத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். 1980 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகள், பூச்சிகளால் தொல்லைக்கு ஆளாகி பயிரிடும் வளம் குறைந்துவிட்ட பகுதிகள், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் இந்தப் பகுதிகளிலே உள்ள குத்தகை விவசாயிகள் குத்தகை செலுத்தாமல் இருந்தால் நிலத்தை விட்டு அவர்கள் வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15 ஆம் நாளன்று இந்த ஆட்சி ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தது. 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 ஆம் நாளில் குத்தகை பாக்கியை குறைத்து, வசூலிக்கவேண்டுமென்று சொன்னதற்கு இணங்க முன்பு கொண்டுவரப்பட்ட சட்டம் செத்து விடாமல் இருப்பதற்காக இப்படிப்பட்ட பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் குத்தகை பாக்கி என்று கணக்கிட்டுப் பார்க்கிறபோது பெரிய விவசாயிகள் சிறிய விவசாயிகள் என்று பட்டணத்திலே வாழ்கிறார்கள். விவசாயமே செய்யாமல் வயலுக்குள்ளேயே போகாமல் வரப்பு ஏறாமல் விவசாயிகள் என்ற பெயரால் அவர்கள் நகரத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர், அவர்களுக்கு உண்மையான விவசாயிகள், நிலத்திலே பாடுபட்டு உழைக்கின்ற விவசாயிகளிடமிருந்து குத்தகை என்ற பெயரால் கட்டாய வசூல் செய்வதை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தடுத்து நிறுத்துகிற வகையில் அவர்களுக்கு தற்காப்புக் கொடுக்கிற வகையில் அந்தச் சட்டத்தை அரசு கொண்டு வந்தது.

அந்தச் சட்டத்தைப் பார்க்கிறபோது ஏறக்குறைய 9 லட்சம் ஏக்கர்கள் கோயில் பூமிகள் சொத்துக்களாகவும் ஏறத்தாழ 3 லட்சம் ஏக்கர்கள் தனியார்களுடைய சொத்துக்களாகவும் இருக்கின்றன. இந்த 9 லட்சம் ஏக்கரில், குத்தகை நிலங்களில், பயிரிட்டு பாடுபடுகின்ற விவசாயிகள் பாட்டாளிகள் , உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு பெருக்கிக் கொண்டு இருக்கின்ற நேரத்திலே வறட்சி என்றும் வெள்ளம் என்றும் புயல் என்றும் பூச்சி தொல்லை என்றும் பல இன்னல்களைத் தாங்கிக் கொண்டு பாடுபடுகின்ற விவசாயிகள் குத்தகை செலுத்த முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து இந்த அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக ஆதரித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னால் சில கருத்துக்களை வைக்கலாம் என்று நினைக்கிறேன். சமய நிறுவனங்கள் என்ற பெயரால் 6 ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதைப்போலவே தனியார்கள் 3 லட்சம்

ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஏறத்தாழ 10 லட்சம் ஏக்கர் பூமியில் உழைக்கின்ற விவசாயிகள் உழுகின்ற விவசாயிகள் இருக்கிறார்கள், அவர்கள் கோயில்களுக்கு தனியார்களுக்கு செலுத்தவேண்டிய குத்தகை பாக்கி ஏறக்குறைய 30 கோடி ரூபாய் இருக்கும் என்று தெரிகிறது. சிறு விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு 72 கோடி ரூபாய் வரி வஜா செய்த தமிழக அரசு இந்தக் குத்தகை பாக்கியையும் வரிவஜா செய்வதுபற்றி ஆராய்ந்து பார்த்து அதற்கான உத்திரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தஞ்சாவூரிலே 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர் சென்னையிலே 2 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார். கணவனுக்கு 2 ஆயிரம், மனைவிக்கு 2 ஆயிரம் சம்பளம் ஆக மொத்தம் 4 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கின்றவர் எங்களுக்கு இருப்பதோ 2 ஏக்கர் தான் நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொன்னால் அரசாங்கம் நல்ல முறையிலே அதை ஆராய்ந்து பார்த்து மொத்தம் 4 ஆயிரம் ரூபாய் வரையிலே சம்பளம் பெறுகிற அந்தக் குடும்பத்திற்கு அந்த நிலம் தேவையில்லை, அவர்கள் உண்மையில் அந்த நிலத்தில் விவசாயம் செய்யக்கூடிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை, அவர்கள் பட்டணத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற முறையிலே கருதி தமிழ்நாட்டிலே 2½ இலட்சம் ஏக்கர்களை பெரிய பதவியிலே இருக்கின்றவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், பினாமி பெயரால் வைத்திருக்கின்றார்கள் என்பதையெல்லாம் எண்ணிப்பார்த்து இதையெல்லாம் அரசு பரிசீலித்து இந்தக் குத்தகைப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதைவிட இப்படிச் சம்பளத்தை அதிகம் பெறுபவர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு வழிகளில் முதலீட்டைச் செய்திருப்பவர்களாக இருந்தாலும் சரி அல்லது வியாபாரம் செய்பவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் என்று வைத்திருந்தாலும் அல்லது ஒரு ஏக்கர் வைத்திருந்தாலும் அதை உழுபவனுக்குக் கொடுக்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வாழ்கின்ற விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற வாட்டங்களைப் போக்குகின்ற வகையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க புரட்சித் திட்டங்களைத் தயாரித்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுடைய அரசு இதைச் செய்வதற்கான வழிவகைகளை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் எடுத்துக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இது போதாது என்று ஆறு இலட்சம் ஏக்கர்கள் சமய நிறுவனங்களுக்கு இருக்கிறது. கோயிலானாலும், தனியார் அறக்கட்டளையானாலும் அதற்குச் சொத்திருக்கிறது என்றால், அது பணமாக இருந்தாலும், நிலமாக இருந்தாலும், கட்டிடமாக





இருந்தாலும் சரி, பஸ்களைத் தேசியவுடைமை ஆக்குகின்ற இந்த அரசு அல்லது பல்வேறு இடங்களில் தேசீய உடைமையாக்க வேண்டுமென்று நினைக்கின்ற இந்த அரசு, மாண்புமிகு இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அருமைப் பெரியவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இந்த நிலத்தைத் தேசீய உடைமையாக்கி சிறு விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதில் தவறில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

சமய நிறுவனங்களில் எது பணக்கார சாமி, எது ஏழை சாமி என்று பிரித்து, பணக்கார சாமிக்கு இலட்சம் ஏக்ரா இருக்கிறது என்றால், அதில் குத்தகை வரவில்லை என்றால், பாவம் அந்த ஏழைக்கு விட்டுவிடும் நிலையைத் தமிழக அரசு, புரட்சித் தலைவர் அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது அறநிலையத் துறையாக இருந்தாலும், தனிப்பட்ட அறக்கட்டளையாக இருந்தாலும் முடக்கப்பட்டிருக்கின்ற பணம் அல்லது நிலம் அல்லது முதலீடு அல்லது சொத்து எதுவாக இருந்தாலும் அதை எடுத்து, நியாயமான வழியில் எந்தத் தத்துவத்திற்காக எந்தச் சாமிக்குச் சம்பாதித்து வைத்தார்களோ அதற்கு அந்தச் சொத்தைப் பயன்படுத்துவதற்குத் தமிழக அரசு தயாராக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அது கடவுள்மீது நம்பிக்கை உள்ளவர்கள் தேடி வைத்த சொத்தாக இருந்தாலும், கோயில் சொத்தாக இருந்தாலும் அல்லது தந்தை பெரியார் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து நான் கடவுளைப் பார்க்கவில்லை, கடவுளுக்கு அரையணாவிற்குக் கற்பூரம் வாங்கிக் காட்டுவதைவிட, இளம் குழந்தைகள் ஆரஞ்சுப் பழம் இல்லாமல் தவிக்கிறார்களே அந்தக் குழந்தைகளுக்கு அரை அணாவிற்கு ஆரஞ்சுப் பழம் வாங்கிக் கொடுப்பதில் பார்க்கிறேன் என்று கூறிய தந்தை பெரியார் அவர்களை பகுத்தறிவு படைத்தவர்கள், நம்முடைய கோயிலாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; எனவே, அந்த கோவில் சொத்தாக இருந்தாலும் சரி, திட்டமிட்டு கோடிக்கணக்கில் பொது மக்கள் மூலம் திரட்டப்பட்ட அந்தக் கோயில் சொத்தாக இருந்தாலும் சரி, அறநிலையச் சொத்தாக இருந்தாலும், பாட்டன் முப்பாட்டன் என்று பத்துப் பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன் எழுதி வைத்த சொத்துக்கள் அந்தக் கோயில் சொத்தாக இருக்கிறது, அந்தக் கோயில் சொத்துக்களை ஏழைகளுக்கு பயன்படுத்தும் வழிவகையிலே பல்வேறு நோக்கங்களிலே ஒன்றாக இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் சொத்தாக இருந்தாலும் சரி, தந்தை பெரியார் சொத்தாக இருந்தாலும், இந்தச் சொத்துக்கூட பகுத்தறிவின்மீது நம்பிக்கை உள்ளவர்கள்—ஆத்திகத்தின் மீது எவ்வளவு நம்பிக்கை இருக்கிறதோ அதைப்போல நம்பிக்கையை அறிவின்மீது வைத்துள்ள கோடிக்கணக்கானவர்களால் கொடுக்கப்பட்டு சேர்ந்துள்ள

[திரு. கோவைத்தம்பி] [1981 மார்ச் 7

அந்தச் சொத்து, மறைந்த தந்தை பெரியார் அவர்களின் மேல் உள்ள அன்பால் தமிழக மக்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள், அந்தச் சொத்தை முடக்கி வைத்திருப்பவர்களிடமிருந்து வெளிக் கொண்டு வந்து, ஏழை எளியவர்களுக்கு, ஏழைக் கூலி விவசாய மக்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு, அந்தப் பூமியில் உழுபவர்களுக்கு அந்தப் பூமியின் உரிமையாளர்களிடத்தில் இருந்து பெற்றுத் தர தந்தை பெரியார் அவர்கள் பிறந்த பெரியார் மாவட்டத்திலேயாவது அல்லது தந்தை பெரியார் அவர்களின் பாசறையாக விளங்கிய தஞ்சை மாவட்டத்திலானாலும் குத்தகைக்கு இருக்கின்ற பூமியில் குத்தகை பாக்கி இருந்தால் அந்தப் பாக்கிக்கான பணத்தை இதிலிருந்து கொடுத்துப் பயன் அளிக்கின்ற வகையில் இந்த அரசு செய்யலாம். இதே நிலையைக் கோயிலிலும் எடுக்க அரசு ஆலோசித்துச் செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு என்னுடைய கருத்தைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்காலத்தில் இந்த அரசு தொடர்ந்து இம்மாதிரி சட்டங்களை ஊக்குவித்து, அப்படிப்பட்ட சட்டங்களைப் போட்டு, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில், கிராமப்புறங்களில் உள்ள ஏழை விவசாய மக்களுக்கு புனர் வாழ்வு அளிக்கின்ற வகையில் இந்த முறையை வளர்த்து வாருங்கள்.

வசதியுள்ளவர்கள் நிறுவனமாக மாறி, நகர்ப்புறங்களில் வாழும்பொழுது, கிராமப்புறங்களில் வசதியில்லாமல் உண்மையாகவே உழைக்கின்ற பாட்டாளி மக்கள் அந்த நிலங்களிலிருந்து குத்தகை தர முடியாத நிலை இருந்தால், தனியாராக இருப்பவர்கள் அந்தக் குத்தகை வந்துதான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற நிலையில்லாவிட்டால், அந்தக் குத்தகை முழுவதையும் வஜா செய்யும் தன்மையினையும், அதேபோல் கோயில் நிலமானாலும், அந்தக் கோயிலின் வேலைகளை இந்தக் குத்தகை மூலமாகத்தான் நடத்த வேண்டுமென்ற நிலை இல்லாமல் இருந்தாலும் அந்தப் பாக்கிகளை வஜா செய்யக் கூடிய நிலைமையைத் தமிழக அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பல்வேறு காலக்கட்டங்களில், பஞ்சம் வரும்பொழுதும், கடுமையான வறட்சி வரும் பொழுதும், வெள்ளம் வரும்பொழுதும், அல்லது பூச்சி அரிப்புகளின் காரணமாகப் பயிர்கள் நாசமாகும்பொழுதும் தமிழக அரசின் சார்பாகக் கொண்டு வரப்படும் சட்டங்களை விவசாயிகளின் சார்பாகப் பாராட்டி, அதற்கு முன்னுதாரணமாக உள்ள இந்தத் திருத்த மசோதாவை ஏற்று விடைபெறுகிறேன்.

[நண்பகல் 12—00]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பயிரிடும் குத்தகைதாரர்களுடைய குத்தகை பாக்கியை



1981 மார்ச் 7] [திரு. உத்திராபதி]

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதி வரையிலும் நீடித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். வரவேற்பதோடு ஒருசில கருத்துக்களையும் சொல்ல முன்வருகிறேன். இந்தச் சட்டம் டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி முடியப் போகிறது, விவசாயிகளுக்கு ஆபத்து வரப் போகிறது என்று நானும், தஞ்சை மாவட்ட விவசாயச் சங்கச் செயலாளர் திரு. எஸ்.எஸ். திருஞானசம்பந்தமும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை அணுகி, விவசாயிகளுக்கு இப்படி ஒரு ஆபத்து இருக்கிறது என்று எடுத்துக் கூறியபொழுது, அவசர உணர்வோடு உடனடியாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து, விவசாயிகளைப் பாதுகாக்கின்ற ஒரு சட்டம் கொண்டு வந்ததைப் பார்க்கிறபொழுது, உண்மையிலே சொல்லக்கூடிய காரியத்தை உண்மையென்று தெரிந்தவுடன், இப்படி அவசர உணர்வோடு சட்டம் கொண்டு வந்திருக்கிற அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், இந்த விவசாயிகளுடைய பாக்கியைப் பொறுத்தவரை, 1972 ஆம் ஆண்டு அன்றைக்கிருந்த அரசு, ஓராண்டு குத்தகை கட்டினால், அதற்கு முந்தைய பாக்கி வேண்டாம் என்று அறிவித்தார்கள். விவசாயிகள் முழுமையாக அதனுடைய பலனை அனுபவிக்கக்கூடிய ஒரு காலக் கட்டத்தில், அப்படி ஒரு அறிவிப்பு வராத காரணத்தால், பெரும்பாலான விவசாயிகள் பாக்கி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அடுத்து, 1973 ஆம் ஆண்டு அன்றைக்கு ஏற்பட்ட நிலைமையில், விவசாயிகளுக்குக் குத்தகை பாக்கி ஏற்பட்டது. 1974 முதல் 1978 ஆம் ஆண்டு ஜூன் முடிய வறட்சி, வெள்ளம், புயல், இவைகளையெல்லாம் பார்த்து, தமிழக அரசின் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 5 ஆண்டு குத்தகையில் ஒரு பகுதியைக் கட்டினால் மீதி அனைத்தும் தள்ளுபடியாகும் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அதன் மூலமாகப் பெரும்பாலான விவசாயிகள் பலன் அடைந்திருக்கிறார்கள். இன்னும் சிறிதளவு குத்தகை பாக்கியிருக்கிறது. அடுத்து, 1978-ஆம் ஆண்டு, 1979 ஆம் ஆண்டு வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அடுத்து, 1980 ஆம் ஆண்டு, தமிழகம் பூராவும் பெரும் பகுதியில் வறட்சி ஏற்பட்டு, அது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ரூபாய் 4 கோடிக்கு நிவாரண வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் கூட வறட்சி. அதே தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதியில், மழை பெய்தால்தான் விவசாயம் செய்ய முடியும். அந்தப் பகுதியிலும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அரசு அறிவிக்கிறபொழுது, என்ன காரணத்தினாலோ, வேதாரண்யம் பகுதியை விட்டிருக்கிறது.

அதற்கும் மேலாக, இந்த ஆண்டு பருவ மழை தவறியதன் காரணமாக ஒரு போக சாகுபடியான நிலங்களில், ஒரு ஏக்கருக்கு 30 மூட்டை விளையக்கூடிய நிலங்களில், இந்த ஆண்டு 10

[திரு. பொ. உத்திராபதி] [1981 மார்ச் 7

முதல் 11 மூட்டை வரைதான் கண்டு முதல் ஆகியிருக்கிறது. ஆகவே, விவசாயம் பெரும் அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆக. அந்த நிலையில் 1971 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 முடிய விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் வறட்சி, வெள்ளம், பருவ மழை பொய்த்திருக்கிறது போன்றவற்றால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டிருப்பதால், அமைச்சர் அவர்கள் அதைத் துரிதமாகப் பரிசீலனை செய்து, மொத்தமாகக் கணக்கெடுத்து, ஓராண்டில் இவ்வளவு குத்தகை கட்டினால், மீதி அனைத்தும் தள்ளுபடி என்று சட்டம் கொண்டு வந்தால்தான் விவசாயிகளைப் பாதுகாக்க முடியும். இப்படித் தொடர்ச்சியாக பாதிப்பு ஏற்படுகிற நேரத்தில், கோயில், மடம், மிராசுதார்கள் கோர்ட்டுக்ளுக்குச் சென்று நடவடிக்கை எடுத்து, விவசாயிகளை வெளியேற்றும் அபாயம் இருக்கிறது. அதையும், எதிர்காலத்தில், அரசாங்கம் பரிசீலனை செய்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எழுபத்தைந்து, 25 வாரம். இதை எங்கள் கட்சியும் மார்க்சிஸ்ட் கட்சியும் சட்டமன்றத்தில் மனப்பூர்வமாக வரவேற்றோம். ஆனால், கோயில், மடத்தில், உள்ளவர்களும் பெரிய மிராசுதாரர்களும் சட்டம் இன்னும் அமுலுக்கு வரவில்லை. எங்களுக்கு இன்னும் உத்தரவு வரவில்லை, ஆகவே, கேட்க மாட்டோம் என்று மறுத்து வருகிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஜி.ஓ. வரவில்லை, அது வந்தால்தான் அமல்படுத்த முடியும் என்று சொல்கிறார்கள். எனவே, விவசாயிகள் இந்தச் சட்டத்தின் பலனை அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். எனவே, இதை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

கடந்த காலத்திலே ஒரு 'மா'வுக்கு 8 கலம், 7 கலம், 6 கலம் என்று 60-க்கு 40 என்று இருந்தபோது வாரச்சீட்டு எழுதி இருந்தார்கள். இப்போது 75-க்கு 25 என்று சொன்ன பிறகு அதற்கான ஜி.ஓ. வரவில்லை என்று சொல்லுகிறார்கள். எனவே, அரசாங்கம் அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். களத்துமேட்டிலே அதற்காகத் தனியாக ஒரு அதிகாரியை விசேஷமாக நியமித்து அந்த வாரத்தை, நெல்லைப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன் 5 ஏக்கருக்கு உட்பட்டிருந்தால், 1976–77 ஆம் ஆண்டு கூட்டுறவு நிர்ணயச் சங்கத்தில் அந்தக் கடனைத் தள்ளுபடி செய்தார்கள். அதை நாங்கள் வரவேற்கின்றோம். தஞ்சை மாவட்டத்திலே பெரும்பாலான விவசாயிகள் இதனால் பலனடைந்து இருக்கிறார்கள். அந்த 1976 ஆம் ஆண்டு, அதற்கு முன்னால் கடன் ஓ.டி.யில் இருந்தவர்களுக்குக் கடன் சலுகைக் கொடுக்கவில்லை. அதையும் அரசாங்கம் பரிசீலனையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 மார்ச் 7] [திரு. பொ. உத்திராபதி]

அதேபோல நில வெளியேற்றம், ரெவின்யூ கோர்ட்டு அதற்கு மேல் குத்தகை பாக்கி இருந்தால் அதை மொத்தமாகக் கூட்டி முன்சீப்பு கோர்ட்டில் வழக்குப் போட்டு; இப்படி இரண்டு கோர்ட்டுகளிலும் வழக்குப் போட்டு விவசாயிகளை வெளியேற்றம் செய்கின்ற நிலை இருக்கிறது. அந்த வெளியேற்றப்பட்ட விவசாயிகள் ஆதாரபூர்வமாக நிரூபித்தால்கூட, விவசாயிகளுக்கு நிலத்தைத் திருப்பிக் கொடுக்கும் சட்டம் இருந்தால் கூட, அதிகாரிகள் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தாமல், அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கிறார்கள். எனவே, அரசு கோர்ட்டிலே இருந்து விவசாயிகள் பாதுகாப்பு பெற்று வந்தால் அவர்களைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல குத்தகைப் பதிவு. இந்தக் குத்தகைப் பதிவுகளை விவசாயிகள் நிரூபிக்க வேண்டும். நான் சொல்ல விரும்புவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அந்தச் சம்பந்தப்பட்ட ஸ்தலங்களுக்குச் சென்று உண்மையாக அது பதிவு செய்யப்பட்டிருக்கிறதா அல்லது தவறாக பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அதை விட்டு விவசாயிகள் கோர்ட்டுக்கு வந்து நிரூபிக்க வேண்டும் என்று சொன்னால் அது முடியாத காரியமாக இருக்கும்.

இப்படி விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் நல்ல சட்டம் கொண்டு வருகிறபோது அந்தச் சட்டத்திற்கு மிராஸ்தார்கள் 'ஸ்டே' வாங்கி வந்து விடுகிறார்கள். அப்படி ஸ்டே வாங்குவது மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காவல் துறை அதிகாரிகளிடம் சென்று சொன்னால் 'அவர்கள் ஸ்டே உத்தரவுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்களே தவிர சட்டத்தை அமல்படுத்துவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்று கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொன்னார்கள். விவசாயிகளுக்கு அல்லது விவசாயத் தொழிலாளர்களுக்கு நல்ல சட்டத்தை மாநில அரசு நிறைவேற்றுகிறபோது, இந்தியக் குடியரசுச் சட்டம் அதை தடுக்கும் அளவுக்கு இருக்குமானால் அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்கள்கூட கூலி பெறக் கூடிய காலத்தில் இந்த ஸ்டேயைப் பயன்படுத்தி ஏனாதி என்ற கிராமத்தில் கூட இன்றைக்கு ஒரு மாத காலமாக விவசாயிகளுக்குப் பல அல்லல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதை எல்லாம் மனதிலே கொண்டு இறுதியாக அந்தக் குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று சொன்னால், குத்தகை விவசாயிகளைப் பற்றி மாண்புமிகு கோவைத் தம்பி அவர்கள் சொன்னார்கள். கோவில், மடம் போன்றவைகளைப் பற்றி தந்தை பெரியார்

அவர்கள் சொல்லி இருக்கிறார். கோவில், மடம் இவைகளிலே இருக்கின்ற சொத்துக்கள் எல்லாம் சாமி சாப்பிடுவதில்லை, ஆசாமிதான் சாப்பிடுகிறார் என்று பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். அதை எல்லாம் மனதிலே வைத்து தந்தை பெரியாருடைய வழி வந்த இந்தத் தமிழக அரசு கோவில்மடம் பெரிய நிலச்சுவான்தார்கள் நிலத்தை எல்லாம் இந்த வாரம் என்பதற்குப் பதிலாக குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்கின்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் கோவைத் தம்பி அவர்கள் சொன்ன கருத்தை முழுமையாக நான் ஆதரித்து, தமிழக அரசு விவசாயிகளைப் பாதிக்கின்ற முறையில் அவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக ஆக்குவதற்கு எதிர்காலத்தில் பரிசீலிக்க வேண்டும். சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டு வாய்ப்புத் தந்த தலைவருக்கு நன்றி கூறி மசோதாவை ஆதரித்து முடிக்கிறேன்.

(பிற்பகல் 12–10)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் புயல் மற்றும் வெள்ளத்தால். பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கியைச் செலுத்துவதற்கான அந்தக்காலகெடுவை நீடிக்கக்கூடிய மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். 1977ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு நேரங்களில் இந்தச் சட்டமன்றத்தில் இப்படிப்பட்ட கால கெடுக்களை நீடிக்கும் மசோதாக்கள் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கடைசியாக இந்தச் சட்டமன்றத்தில் சென்ற முறை கொண்டு வந்த சட்ட முன்வடிவில் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்கள் தங்கள் பாக்கிகளை 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளுக்குக் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு, அது சட்டமாக நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பின்னாலே இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் சட்டத் திருத்தத்தில் இந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது இந்தச் சட்டத் திருத்தத்தை முன்மொழிந்த பின்னாலே, அதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளுக்குள் செலுத்த வேண்டுமென்று அந்தக் காலக் கெடுவை நீட்டித்து இருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது, 1972 ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து இங்கே நிறைவேற்றினார்கள். அதிலே, 1381 ஆம் பசலி என்று ஒரு பசலி எண்ணைக் கொடுத்து, அந்தப் பசலிக்கு குத்தகை செலுத்தி விட்டால், அதற்கு முன்னாலே இருக்கும் குத்தகை பாக்கிகள் ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்று சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அன்றையதினம்





அதன் காரணமாக பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் தமிழ் நாட்டில் பயன் அடைந்தார்கள். அதற்குப் பிறகு விவசாயிகள் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். அதற்குப் பின்னாலே ஏற்பட்ட நிலைமைகளை நான் விளக்க விரும்புகிறேன். 1975 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் கடுமையான வறட்சி. 1976 ஆம் ஆண்டில் விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். 1977 ஆம் ஆண்டில் தமிழகத்தில் வரலாறு காணாத அளவிற்கு வெள்ளம், புயல் இவைகள் ஏற்பட்டன. ஆனால், 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாதிப்பு தமிழக விவசாயிகளுக்குக் கொஞ்ச நஞ்சமல்ல. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இன்னலில் இருந்தே இன்னமும் அவர்கள் மீண்டு வரவில்லை. தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டில் வெள்ளம், புயலால் மாநிலம் பூராவிலும் கிட்டத்தட்ட 570 பேர் உயிரிழந்து இருக்கிறார்கள். 196 பேர் காணாமல் போய் இருக்கிறார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. எங்கே போனார்கள், இறந்து விட்டார்களா என்று தெரியவில்லை. தமிழ் நாட்டில் கண்டு பிடிக்க முடியாமல் போய்விட்ட விவசாயச் சொத்துக்கள் மட்டும் ரூபாய் 41.81 கோடியாகும். இதைத் தவிர, கால்நடைகள், கோழியினங்கள் எல்லாம் சேர்த்து, தனியார் சொத்துக்கள் உட்பட கிட்டத்தட்ட 154.81 கோடி ரூபாய். அதாவது 155 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் தனியாரிடமிருந்து பெற்ற கடனையும், கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்ற கடனையும் திருப்பிக் கட்ட முடியாமல் கஷ்டத்தில் இருக்கிறார்கள் ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உதவிகளைச் செய்ய வேண்டும், அவர்கள் பெற்றுள்ள கடன்களை எல்லாம் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1387 பசலியைப் பற்றிக் கவலையில்லை. 1388, 1389, 1390 ஆகிய மூன்று பசலிகளைப் பொறுத்து பிரச்சினை இருந்து கொண்டு இருக்கிறது.

இந்த 3 பசலிகளுக்கும், இப்போது நடக்கக்கூடிய 1390-வது பசலிக்குக்கூட விவசாயிகள் குத்தகை நெல்லை கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

இப்போது தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் வறட்சி என்று நாம் அறிவித்திருக்கிறோம். இருந்தாலும் தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஓரளவுக்குப் பாதிக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறோம். ஆனால், காலத்தின் சூழ்நிலை காரணமாக

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு மாவுக்கு 20 கலம், 25 கலம் என்று கண்டுமுதல் செய்தார்கள். ஆனால், இன்றைக்குப் பருவமழை இல்லாத காரணத்தால் ஒரு மாவுக்கு 4 கலம், 5 கலம் , 3 கலம்தான் கண்டுமுதல் செய்திருக்கிறார்கள். அவர்களால் அறுவடைக்குக்கூட கூலி கொடுக்க முடியாத விவசாயிகள் இன்றைய தினம் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு நியாயமான முறையில் நிவாரணம் அளிக்க வேண்டியது நம்முடைய கடமை. இந்த ஆண்டு கூட பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளால் 1387, 1388, 1389 ஆண்டு பாக்கிகளை எப்படி கொடுக்க முடியும்? இதை நாம் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். இதை எல்லாம் கருத்தில் கொண்டு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் இப்போது நினைத்தால்கூட இந்தப் பாக்கிகளை, அதாவது 1390-வது பசலி ஆண்டு வரையில் உள்ள பாக்கிகளைச் செலத்துவதற்கான காலத்தை நீட்டிப்பு செய்ய இந்த மசோதாவிலேயே ஒரு திருத்தத்தைக் கொண்டுவரலாம். அவர்கள் கொண்டுவருவார்கள் என்று நம்புகிறேன். காரணம் அவர்களும் தஞ்சைமாவட்டத்திலே பிறந்தவர்கள்; விவசாயிகள் நிலைமைகளைப்பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள். எனவே, விவசாயிகள் துன்பப்படுவதை அனுமதிக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் ரெவின்யூ கோர்ட்டிலே நிற்கிறார்கள். அங்கே இருக்கிற வழக்கறிஞர்கள் சொல்கிறார்கள், இந்த ஆண்டில் 5,000 அல்லது 6,000 குத்தகை சாகுபடி செய்கிற விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று. வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, எல்லா விவசாயிகளுக்கும் ஒட்டு மொத்தமாக பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டத்தை மேலும் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு விவசாயிகளின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த ஆண்டு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகிறபோது உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். அது மிகவும் முக்கியம். ஏனென்றால் ஆண்டாண்டு காலமாக இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்து ஒத்தி வைத்துக்கொண்டு போவதினால் எந்தவிதமான பலனும் இல்லை. இது ஓராண்டிலே முடிந்துவிடுகிற பிரச்சனையா? அல்ல. ஆண்டாண்டு காலம் நீடிக்கிறது. ஆகவே, உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கினால்தான் இந்தப் பிரச்சனை அடியோடு தீரும். பேரறிஞர் அண்ணா அவர்கள் உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று அப்போதே சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் திராவிட





முன்னேற்றக் கழகம் பதவியில் இருந்தபோது உழுபவனுக்கு நிலத்
தைச் சொந்தமாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்து இந்த மா
மன்றத்திலே நிறைவேற்றியிருக்கிறது. அந்தச் சட்டத்தை நீங்
கள் மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் நிலச் சொந்தக்காரர்களுச்கும் ஒரு நியாய
மான, உரிய நஷ்டயீடு அரசின் சார்பில் கொடுக்கப்பட வேண்டும்.
அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
இப்படி குத்தகைப் பாக்கிகளை ஒத்திவைத்துக்கொண்டு போகிற
போது, எந்தவிதமான வருமானமும் இல்லாமல் அவர்களும்
கஷ்டப்படுகிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: உழுபவனுக்கே
நிலம் சொந்தம் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டதாக மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு ஆதாரம்
இல்லையே.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை
அமைச்சர் அவர்கள் ஆதாரம் இல்லை என்று சொல்கிறார்கள்.
ஆதாரம் இருக்கிறது. இதே சட்டமன்றத்தில் அந்தச் சட்டம்
12 பசலிக்கான நெல்லை விவசாயிகள் கொடுத்துவிட்டால் அந்த
நிலம் உழக்கூடியவனுக்கே சொந்தம் என்ற சட்டத்தை
இந்தச் சட்டமன்றத்தில், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக
இருந்தபோது நிறைவேற்றியிருக்கிறார்கள். அது மத்திய சர்க்
காரிலே ஏதோ அனுமதிக்காக சென்றது என்று சொல்கிறார்கள்.

திரு. ஏ. சி. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே,
ஒரு விளக்கம். கலைஞர் தேர்தல் அறிக்கையிலேதான் சொன்
னார். அதைச் சட்டமாக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்
பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு
உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் தன்னுடைய கருத்தைச்
சொல்லிவிட்டார்கள். பின்னால் நான் பதில் சொல்கிறபோது
அதுபற்றித் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். எனவே, ஆளுங்
கட்சியினர் அதை மறுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

[பிற்பகல் 12-20]

திரு. கு. ரமணி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். துணைத்
தலைவர் அவர்களே, அவர்கள் பதில் அளிக்கும்போது உறுப்பினர்
வெளியிட்டுள்ள கருத்தில் எது சரி, எது முறை என்று சொல்ல
உரிமை உண்டு. ஆனால், இங்கே அவர் சொல்லியிருப்பது ஒரு
குறிப்பான விஷயம். இந்தச் சட்டமன்றத்தில் உழுபவனுக்கே நிலம்
சொந்தம் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று
சொல்லியிருக்கிறார். அது உண்டா, இல்லையா என்று சொல்
வதற்குரிய பொறுப்பு அமைச்சருக்கு உண்டு. அதை விளக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, முடிவில் நான் பேசுகிறபோது இதற்குப்பதில் சொல்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சர் பதிலளிக்கும் போது சொல்வதாகச் சொன்னார். அப்போது சொல்லட்டும். ஆனால், இது ஒரு முக்கியமான விஷயம். இந்தச சட்டமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டதாகச் சொல்கிறார். அது உண்டா? இல்லையா? அதை மட்டும் இப்போது சொல்லலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார்; இன்னும் பல உறுப்பினர்கள் பேச வேண்டும். இடையிலே நானும் பேசினால் காலதாமதம் ஆகும் என்பதால்தான் விவாதத்திற்குப் பதில் சொல்லுகிறபோது தெளிவாகச் சொல்லிவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : துணைத் தலைவரவர்களே, நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப்போல குத்தகைப் பாக்கிகளைக் கொடுக்கக்கூடிய காலக்கெடுவை அவ்வப்போது நீட்டித்துக்கொண்டிருக்கிறோம். அதனால், நிலச்சொந்தக்காரர்களுக்கு, குறிப்பாக சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு நிலத்திலிருந்து எந்தவிதமான வருமானமும் வரவில்லை. அப்படி வருமானமே இல்லாமல் இருக்கக்கூடிய நிலச் சொந்தக்காரர்களிடம் நிலவரியைக் கண்டிப்பாக வசூல் செய்துகொண்டிருக்கிறோம். வருமானம் இல்லாமல் இருக்கிற விவசாயிகளிடமிருந்து நிலவரி வசூல் செய்வது எந்த வகையிலும் நியாயமில்லை. ஆகவே, நிலவரியைக் கண்டிப்பாக தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. சாகுபடியாளர்கள் கொடுக்க வேண்டிய, அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். அதே நேரத்தில் உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்படும்போது நிலச் சொந்தக்காரர்களுக்கு உரிய நஷ்டயீட்டுத் தொகை நியாயமான முறையில் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த 75—25 வாரத்தைப் பற்றி எல்லோரும் பேசியிருக்கிறார்கள். நான் அமைச்சரிடம் கூட அதுபற்றி சொல்லியிருக்கிறேன், ஏற்கெனவே 60—40 என்று இருந்த வாரத்தைத் தான் மாற்றி, இப்போது 75—25 என்று சட்டம் இயற்றியிருக்கிறோம். அது கூட சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் பெற்றுவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், அதை அமுலாக்க வேண்டுமென்று கேட்கிறபோது நிலச் சொந்தக்காரர்கள் ஒத்துக்கொள்வதாக இல்லை ; வழக்கு மன்றத்திற்குச் சென்று முடிவு செய்வதாகச் சொல்கிறார்கள். வழக்கு



செல்ல விவசாயிகளால் முடியாது. வழக்கு
மன்றத்திற்குச் செல்ல விவசாயிகளால் வழங்கு வார்கள்,
மன்றத்தில் எந்த அடிப்படையில் நியாயம் தெரியவில்லை. ஆகையால்
தீர்ப்புவழங்குவார்கள் என்று அமைச்சரவர்கள் பழைய
மாண்புமிகு வருவாய்த்துறை வைத்து — 60—40 என்ற
குத்தகைச் சீட்டுகளை அடிப்படையாக எழுதி, பதிவு செய்திருப்பார்கள்,
வார அடிப்படை யில் ஒழுங்கரக வைத்து—இந்த 75-25 வாரத்தை உட
அதை அடிப்படையாக புதுப்பிக்க வேண்டுமென்று ஒரு அரசாணை வெளி
வடியாக எழுதி விவாசாயிகளுக்கும் பாதிப்பில்லாமல் நிலச்
யிட்டால் சுமூகமாக, பாதிப்பு இல்லாமல் முடிந்து
சொந்தக்காரர்களுக்கும் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட
விடும். ஆகவே, நான் சொல்லிய அந்த குத்தகைச் சீட்டு
தேதியை அடிப்படையாக வைத்து, அரசாணை வெளியிட ஏற்பாடு
களைப் புதுப்பிப்பதற்கு ஒரு இதுவரை பேசுவதற்கு வாய்ப்பு
செய்யவேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். நன்றி
தந்ததற்காக நன்றி தெரிவித்து
வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
தலைவர் அவர்களே, பயிரிடும் குத்தகைதாரர்கள் புயலால்,
வெள்ளத்தால் அல்லது வறட்சியால் வெளியேற்றப்படுவதி
லிருந்து தடுப்பதற்காகச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்
பட்டது. அதிலே கொடுக்கப்பட்ட காலக் கெடுவினை கூட்டித்
தர வேண்டும் என்று மூலச் சட்டத்திலே கொண்டு வந்த திருத்
தமே தவிர இப்போது இருக்கக்கூடிய சட்டத்திலே கொண்டு
வரப்படவில்லை என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். முதலிலே
கொடுக்கப்பட்ட காலக் கெடுவைப் பொறுத்தவரையில் குடி
யரசுத் தலைவரிடமிருந்து கையெழுத்து வாங்குவதில் தாமதம்
ஆனதால் குத்தகை செய்கிற விவசாயிகள் குத்தகையைக் கட்ட
முடியாமல் தவிக்கிறார்கள் என்பதால் அவர்களுக்கு நன்மை செய்
இற வகையில் மூலச் சட்டத்தில் உள்ள வருஷங்களை மாற்ற
வேண்டும் என்று கொண்டு வரப்பட்டிருக்கின்ற திருத்தம் என்பது
உங்கள் எல்லோருக்கும் தெரியும். இங்கே பேசிய உறுப்பினர்கள்
எல்லோரும் பொதுவாக இதை வரவேற்றுப் பேசி இருக்கிறார்கள்
என்பதும் உங்களுக்குத் நன்றாகத் தெரியும். பொதுவாக வர
வேற்றுப் பேசியிருக்கின்ற அதே நேரத்தில் இதைவிட இன்னும்
நன்றாகச் செய்ய வேண்டும் என்று சில கருத்துக்களைச் சொன்
னார்கள். இதைவிட மிக நன்றாகச் செய்யவேண்டும் என்று
சொல்கிறபோது காலக் கெடுவைத் தள்ளிப் போடுவதைப்.
பொறுத்தவரையில் பொதுவாக வரவேற்றுப் பேசியிருக்கிறார்
கள். ஆனால் நடைமுறையில் சில சிக்கல்கள் வருகின்றன என்று
சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இதற்குத் தொடர்பு இல்லாத
மற்றவற்றை இங்கே பேசியிருக்கிறார்கள் அல்லது குத்தகைக்குக்
கொஞ்சம் தொடர்பு இருக்கின்றது என்ற முறையிலே பேசி
யிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளலாம். குறிப்பாக,
குத்தகைக் காலக் கெடுவைப்பற்றிப் பேசி இருக்கிறார்கள்.
75—25 பற்றிப் பேசியிருக்கிறார்கள். ஆனால் இவைகளுக்கெல்
லாம் நீண்ட நேரம் நான் பதில் சொல்வதற்கு மாண்புமிகு

[திரு. எஸ். டி. சோமசுநதரம் [1981 மார்ச் 7

பேரவைத் துணைத் தலைவரவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். இருந்தாலும் சுருக்கமாகச் சொல்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் பெரும் பகுதியைத் தள்ளாமல் ஒரு சிறு பகுதியை மட்டும் தள்ள வேண்டும் என்று இந்த அரசு திருத்தம் கொண்டு வந்திருப்பதை மனப்பூர்வமாக எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இளைய பெருமாள் அவர்கள் பேசிய பேச்சு எடுத்துக் காட்டாகும். அவர்கள் பேசுகின்றபோது இப்படிப்பட்ட நிலங்களைச் சொந்தமாக வைத்திருக்கின்ற கைம்பெண்கள் சங்கடப்படுகிறார்கள் என்றும் அவர்களுக்கும் பாதுகாப்புத் தர வேண்டும் என்றும் சொன்னார்கள். ஆகவே ஒருவருக்கு நன்மை செய்கின்றபோது அது இன்னொருவருக்கு தீமையாக—தீமையாக என்பது கூட அல்ல—இன்னொருவருக்கு நஷ்டமாக ஆகிவிடுகிறது என்பதைப் பார்க்கின்றபோது நஷ்டத்தைத் தாங்குகின்ற சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்களா என்பதை மனதில் வைத்துத்தான் இந்த அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவது பற்றி சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில்தான் மூலச் சட்டத்தின்படி உங்களுக்கு அதிகாரம் இருக்கின்றது என்றும் ஆனால் அதற்குப் பின்னாலே உள்ளவர்களை வெளியேற்றி இருக்கிறீர்கள் என்றும் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு திரு. உத்திராபதி அவர்கள் அதற்கு விள்க்கமாகப் பதிலளித்துப் பேசி இருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள்வரை என்று மூலச் சட்டத்திலே அவர்களுக்கு வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு இருந்து அதற்குப் பின்னாலே வெளியேற்றி இருந்தாலும் அவர்களை வெளியேற்றியது செல்லாது என்றும் வெளியேற்றப்பட்டவர்களுக்கு அந்த நிலம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் இந்தச் சட்ட முன்வடிவிலே இருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

அதைப்போல மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது பொதுவாக இதைப் வரவேற்றுப் பேசி இதிலே சில சங்கடங்கள் இருந்தாலும் அதை போக்க வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் பேசுகிறபோது, அதிலே நம்முடைய அருமை நண்பர் ராஜமாணிக்கம் அவர்கள் பேசுகிறபோது திராவிட முன்னேற்றக் கழகம் 1972 ல் கொண்டுவந்த சட்டத்தைச் குறிப்பிட்டார்கள். 1381 ஆம் பசலிக்கு குத்தகை கட்டிவிட்டால் அதற்கு முன்னால் உள்ள பாக்கிகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்படும் என்று அவர்கள் சொன்



[திரு. எஸ். டி. சோமசுந்தரம்]
1981 மார்ச் 7] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்] கொண்டு வந்த
னார்கள். உண்மையிலேயே அந்தச் சட்டத்தைக் அனுபவிக்கிறபோது
பிறகு அதிலே இருக்கிற நன்மைகளை எங்களுக்கும்
அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த பெருமை
உண்டு என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அது 8, 9 ஆண்டு
9
களுக்கு முன்னால் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டம். சீர்திருத்தச்
ஆண்டுகளுக்கு முன்னர் அது ஒரு முற்போக்கான, முன்னுரையில் கூட
சட்டமாகக் கருதப்பட்டது. என்னுடைய இன்றைக்கு அப்படி ஒரு
அதைச் சொல்லியிருக்கிறேன். ஆனால் கருத்தாக ஏற்றுக்
சட்டத்தைக் கொண்டுவருவது முற்போக்கான ஆண்டு 1381 ஆவது
கொள்ளப்பட மாட்டாது. 1972 ஆம் எவ்வளவு பாக்கியிருந்
பசலியைக் கட்டி விட்டால், செய்யப்படும் என்றுதான்
தாலும் கூட அத்தனையும் தள்ளுபடி ஆண்டு பசலி
அப்போது சொல்லப்பட்டது. அது 1881 ஆவது பசலி, அல்லது
என்று வைத்துக் கொள்ளுங்கள். 1380 ஆவது பசலிக்கு பணம் கட்டி
1379 ஆவது பசலி அல்லது 1378 ஆவது வராமல் போய்விடும்.
யிருந்தால், அவைகள் எல்லாம் கணக்கில் ஆகவே அது கணக்
அவைகளைத் தவணை முடிவு என்பார்கள்.
இற்கு வராமல் போய்விடும்.

சில பேருக்கு நன்மை இருக்கும் சில பேருக்கு
ஆகவே இதிலே சில பேருக்கு நன்மை இருக்கும் இருந்து அந்தக்
நன்மை இருக்காது. வல்லமை உடையவர்களாக அவர்களது
குத்தகையை வசூல் செய்திருப்பார்களேயானால், நன்மை என்று
குத்தகைதாரர்களுக்கு நன்மை வராது. ஆகவே, வல்லமை
பார்க்கிறபோது, சீராக வல்லமை உடையவர்களுக்கும், கொடுக்க
இல்லாதவர்களுக்கும், ஒரே மாதிரியாக நன்மையைக் சட்டத்தைக்
வேண்டும் என்பதற்காகத்தான் அப்படி ஒரு என்னவென்றால்,
கொண்டு வரவில்லை. இந்தச் சட்டத்திலே எந்த ஒரு ஆண்டில்
தள்ளிக் கொடுக்கிற அந்த 5 ஆண்டுகளில், பசலிக்குக் கட்டியிருந்
கட்டியிருந்தாலும், 5 பசலிகளில் எந்தப் கட்டியிருந்தாலும், குறைவாகக்
தாலும், அதில் அதிகமாகக் ரூபாய் 10 ரூபாய் என்று
கட்டியிருந்தாலும், 100 ரூபாய்க்கு 7 சதவீதம் அல்லது
கட்டியிருந்தாலும், ஒவ்வொரு பசலிக்கும் 8 அவைகள் எல்லாம்.
10 சதவீதம் என்று கட்டியிருந்தாலும், கொள்ளப்படும். அவை
கட்டியவைகளாக கணக்கிலே எடுத்துக் கொண்டு ஒன்றாகக் கூட்டி,
களை எல்லாம் கணக்கிலே எடுத்துக் வேண்டியது கட்டியிருந்தா
கூட்டியபிறகு ஒரு ஆண்டு பசலிக்கு வேண்டியது இல்லை.
லும் கூட அவர்கள் பாக்கியை கட்ட பகுதியாக கட்டியதை
அவர்கள் இந்த 5 ஆண்டுகளில் பகுதி கட்டியிருந்தால் கூட,
எல்லாம் ஒன்றாகக் கூட்டி ஒரு பசலிக்குக் இல்லை என்பதுதான்
அவர்கள் பாக்கியினைக் கட்ட வேண்டியது விட கொஞ்சம்
இந்தச் சட்டம். அந்தப் பழைய சட்டத்தை சீர்திருத்தம் என்றும்
முன்னேற்றம். எனவே இது முற்போக்கான நம்புகிறேன்.
எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்றும்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மார்ச் 7

அது மட்டுமல்ல, நான் சென்ற முறை 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 11 ஆம் நாளன்று இந்தச் சட்டமன்றத்திலே, இந்த குத்தகைதாரர்கள் நிவாரணச் சட்டத்தை கொண்டு வந்து பேசிக் கொண்டிருக்கும் நேரத்திலே, நமது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள்—நமது நண்பர்கள் எழுந்து நீங்கள் 1381 வது பசலிக்கு கூட அல்லது 1382 வது பசலிக்கு கூட இதிலே விதி விலக்குத் தர வேண்டும் என்று கேட்டபோது, நான் விதிவிலக்கு உண்டு என்றும் சொல்ல முடியவில்லை, முடியாது என்றும் சொல்லாமல் இருந்தேன். காரணம் இங்கே அவையில் முதல்வர் அவர்கள் இல்லை. ஆகவே அந்தக் கேள்விக்கு பதில் கொடுக்காமலேயே நான் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய அறையிலே இருந்து ஒலி பெருக்கியில் இதைக் கேட்டுக் கொண்டு, எனக்கு ஒரு குறிப்பினை எழுதி அனுப்பினார்.

'' 1973 ஆம் ஆண்டுக்கு முன்னாலே உள்ள பசலி பாக்கியிருந்தாலும் அதையும் இந்த அரசு கவனிக்கும் என்று சொல்லுங்கள் '' என்று அவசர அவசரமாக ஒரு பேப்பரில் எழுதி அனுப்பியிருக்கிறார்.

அதை வைத்துக்கொண்டு என் பேச்சிலே சொன்னது அன்று திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சி கொண்டு வந்த சட்டத்தை சில பேர்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் இருந்தால் அவர்களுக்கு நன்மை இல்லை அதை யார் யார் பயன் படுத்தினார்களோ அவர்களுக்குத்தான் நன்மை. 1381 பசலியில் யாராவது பணம் கட்டாமல் இருந்தால் அந்தக் குறிப்பிட்ட நாளில்—ஒரு நாள் குறிப்பிடப்பட்டு, இந்த நாளுக்குள் கட்டவேண்டும் என்று சொல்லப்பட்டது—கட்டாவிட்டால் அந்தச் சட்டத்தினால் ஏற்படுகிற பலன்களை அனுபவிக்க முடியாமல்போய் விடுகிற நிலைமை அந்தச் சட்டத்தில் வந்துவிட்டது. அதற்குத் திருத்தமாகத்தான் அன்று கட்டாமல் இருந்திருந்தாலும், ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் கட்டாமல் இருந்திருந்தாலும், ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் கொண்டு வரப்பட்ட சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் போனால், ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு கொண்டுவந்த சட்டம் இன்று செல்லாது என்றாலும் அந்தச் சட்டத்திற்கு உயிர்கொடுக்கிற வகையில்—நான் ஒன்று உங்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் — அன்றைக்கு கட்டவேண்டியதை ஒரு ஆண்டு பசலி பூராவும் கட்டினால்தான் அதற்கு முன்னால் இருக்கிற பூரா தள்ளுபடியும் என்று அன்று சட்டம் போடப் பட்டது. அதற்கு திருத்தமாக 1381 பசலி பூராவும் கட்ட வேண்டியதில்லை அதையும் மூன்று தவணைகளில் கட்டலாம் என்று சட்டம் அதை விட தெளிவாகக் கொண்டுவரப்பட்டது. அன்று புரட்சித் தலைவர் அவர்கள் சீட்டு எழுதியனுப்பியபோது நான் கவனிக்கிறேன் என்று சொன்னதின்பேரில் 1382 பசலி



1981 மார்ச் 7] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

இந்தப் பசலியில் கூட பூராவும் கட்டவேண்டும் என்று சொல்லாமல் அதற்கும் மூன்று தவணைகள். ஒவ்வொன்றுக்கும் மூன்று தவணை என்று வந்துவிட்டால்—ஒன்று கவனிக்க வேண்டும்.

1381 பசலியில் அன்றைக்கு பாக்கியிருந்தது மூன்று கோடி ரூபாய். ஆனால் மூன்று கோடி ரூபாய் அத்தனையும் பாக்கி இல்லை. அன்றிருந்த அரசு அறிவித்த பிறகு, அறிவிப்பைப் பயன்படுத்தியவர்கள் லட்சக்கணக்கில் பயன்படுத்திக் கொண்டார்கள். சிலபேர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவர்களுக்கு மட்டுந்தான் இந்த நன்மை. அதே போல் 1381 பசலியில் கூட அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டாமல் இருந்தவர்கள் மிகக் குறைவு என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இன்றைக்கு கொண்டுவரப்படுகிற சட்டத்தில் கட்டவேண்டிய பாக்கி முப்பது கோடி ரூபாய். அன்றைக்கு இருந்தது எவ்வளவு என்றால் மூன்று கோடி ரூபாய். இன்றைக்கு இருக்கிற சட்டங்கள் இவைகள் எல்லாம் கொடுக்கிற காலக்கெடுவை மாற்றியமைத்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். 75—25 என்று. சட்டம் நடைமுறைக்கு வரும்போது இதை யாரும் பயன்படுத்தாமல் இருக்கமுடியாது. அரசு ஒரு சட்டம் போடுகிறது என்றால் யார் யார் பாதிக்கப்படுகிறார்கள், யார் யார் நன்மை அடைகிறார்கள் என்பதற்காக சட்ட முன்வடிவுகளை எல்லோருக்கும் அனுப்புவதில்லை. அவர்கள் மிராசுதார்களாக இருந்தாலும் சரி மடாதிபதிகளாக இருந்தாலும் சரி சட்டத்தை எல்லோரும் பின்பற்றவேண்டும் கண்டிப்பாக 75—25 கொடுப்பவர்கள் யார்? இதைத்தான் தருவேன் என்று சொல்லிவிட்டால் ஒன்றும் செய்யமுடியாது. அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்றால் கோர்ட்டுக்குத்தான் போகிறார்கள். அதேபோல் அவர்கள் கொடுக்கவில்லை என்றால் கோர்ட்டுக்குதான் போக முடியும். கோர்ட்டுக்குப் போனால் எப்படி என்பது கோர்ட்டில் உள்ளவர்களுக்குத் தெரியும். ஆகவே 75—25 பற்றி கவலைப்படவேண்டியதில்லை. அது நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சட்ட முன்வடிவில் தெளிவாக சொல்லியிருக்கிறேன். முதலிலே கொடுக்கப்பட்டது அது பற்றவில்லை என்பதற்காகத்தான் தேதி தவணைகளை அதிகப்படுத்தி இருக்கிறோம். அது சட்டமுன்வடிவின் விளக்கத்தில் இருக்கிறது. சட்டமுன்வடிவை எந்தெந்த தேதி எப்படி எப்படி மாற்றப்பட்டிருக்கிறது என்பதை ஒவ்வொன்றாகச் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

[பிற்பகல் 12-40]

ஆகவே, 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் என்றிருக்கிறது. அது முடிந்துவிட்ட மாதம். ஆகவேதான், அது 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் என்று விவசாயிகளுக்கு நன்மை செய்ய மாற்றப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மார்ச் 7

வேண்டும் என்பதற்காகத்தான் இந்த தேதி இப்படி மாற்றப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்; அதே போல் இதிலே இருக்கின்ற ஒவ்வொரு தன்மையும். முதல் தவணை, இரண்டாவது தவணை மாற்றப்பட்டிருக்கிறது; மூன்றாவது தவணை மட்டும் அப்படியே இருக்கிறது. மற்றபடி இந்த இரண்டு தவணை தேதிகள் வவசாயிகளின் நன்மைக்காக மாற்றப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்பது நிறைவேற்றப்படுமா என்று சொன்னார்கள். நிறைவேற்றப்பட்டது என்று சொல்லவில்லை. ஆனால் இங்கே நிறைவேற்றினோம் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல . . . . . . . . . . . . . . .

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே அவையில் உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்படும் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை மட்டும் சொன்னார்கள். பல சீர்திருத்த நன்மைகளை விவசாயிகளுக்கு செய்யவேண்டுமென்பதற்காக, பல நல்ல சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இப்போது இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பதைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, இது நிறைவேற்றப்பட்டது. நிறைவேற்றப்பட்டு, மத்தியப் பேரரசுக்கு அனுப்பப்பட்டது. மத்திய பேரரசின் கையெழுத்திற்காக ஏற்கனவே அனுப்பப்பட்டது. ஆனால், இடையிலே என்ன காரணத்தினாலோ, அதை திருப்பிக் பெற்றுக்கொண்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டதாகச் சொன்னார்கள். என்ன காரணத்தினாலோ திரும்பப் பெற்றதாகச் சொன்னார்கள். யாரால் திரும்பப் பெறப் பெற்றது? என்ன காரணத்திற்காகத் திரும்பப் பெறப் பெற்றது என்பதைத் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே நிறைவே[illegible]து உங்களுக்கு நன்[illegible] தெரியும். ஆனால், நிறைவேற்றப்பட்டு ஏன் நடைமுறைக்[illegible] வரவில்லை யென்றால், மத்தியப் பேரரசுக்கு அனுப்பி, சம்ப[illegible]தப்பட்ட அமைச்சர் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கு[illegible] போது. அதைப் பின்னால் கடிதம் மூலம் எழுதி வா[illegible] கொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



981 மார்ச் 7] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

இந்தத் தேதி ஒத்தி வைப்பதைப் பற்றி எல்லோரும்
ஏகமனதாக வரவேற்றிருக்கிறார்கள். அதிலே பேசுகிறபோது
75—25-ப்பற்றி நான் உங்களுக்கு விளக்கமாகச் சொல்லியிருக்
கிறேன். அதை நிச்சயமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.
நடைமுறைப்படுத்தவில்லை யென்றால், யாராவது தலை
யிட்டுக் கேட்டால், கொடுக்காமல் இருக்க வேண்டியதுதானே.
வெளியேறுவது எப்படி? அனுபவத்திலே, வெளியேற்றுவதற்கு
கோர்ட்டுக்குச் செல்லுகிறார்கள். அதற்கு இந்தச் சட்டம்
வருவதற்கு முன்னால் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்
31 ஆம் நாள் என்பதற்கு முன்னால், வெளியேற்றினாலும் அது
செல்லாது. அந்த நிலத்தை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க
வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் இன்னொன்றையும் பற்றி இங்கே எடுத்துச்
சொன்னார்கள். குத்தகை பதிவு செய்வதிலே சங்கடம் இருப்ப
தாகச் சொன்னார்கள். ஆனால், அதற்கும் இதற்கும் கொஞ்சம்
தொடர்பு என்றாலும், குத்தகை பதிவு செய்வதிலே சங்கடம்
இருக்கின்றது என்பதைச் சொல்லும்போது, நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புவது, குத்தகை செய்யாத ஒரு ஏழை வவசாயி
குத்தகை செய்ததாக, இன்னார் நிலத்திலே பயிரிட்டேன்
என்று நிச்சயமாகச் சொல்ல மாட்டார். இதை நான் இங்கே
யும் சொல்லியிருக்கிறேன்; வெளியேயும் சொல்லியிருக்கிறேன்.
குத்தகை செய்யாத ஒரு விவசாயி, நான் இன்னார் நிலத்திலே
50 ஏக்கர் நிலத்தை, 15 ஏக்கர் நிலத்தை, 5 ஏக்கர் நிலத்தை
குத்தகைக்கு பயிரிட்டேன் என்று நிச்சயமாகச் சொல்ல
முடியாது. ஆனால், அப்படி சொல்வதாக இருந்தால், ஆயிரத்தில்
இரண்டாயிரத்தில் ஒருவர் சொல்ல முடியும். அதற்காகத்
தான் இதைப்பற்றி யெல்லாம் வருவாய்த் துறை அதிகாரி
களிடத்திலே தெரிவித்திருக்கிறோம். யாரும் குத்தகை
வெள்ளாமை செய்வதற்கு உரிமை இருக்கிறது. அவர்கள் அதிலே
அதிகமாக கவனம் செலுத்துவார்கள். அப்படியே அதிலே
சில சங்கடங்கள் இருக்கிறதென்றால், அதிலே என்ன இருக்கும்?
எனக்கு குத்தகை அதிகமாகத் தரவேண்டும் என்று கேட்கலாம்.
இப்படிக் கேட்பவர்கள் தான் அதிகமாக இருப்பார்கள். 99 சத
விகிதம் இருப்பார்கள். இன்றைக்கு இருக்கிற சங்கடங்களை
போக்குவதற்காகத்தான் தமிழக அமைச்சரவை என்ன
செய்யலாம் என்பதை ஆராய்ந்து குத்தகை பதிவு செய்வதில்
இருக்கிற சிக்கல்களைப் போக்குவதற்குத் தீவிரமாக நடவடிக்கை
எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
'டெனன்ட்ஸ் ஆக்டை' பொறுத்தவரையில் 'பர்டன் ஆப் புரூப்
லைஸ் ஆன் தி லெண்ட் லார்டு' என்று கொண்டு வருவதற்கு
ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 மார்ச் 7

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது தெளிவாகச் சொன்னேன். பாக்கியை கட்டவேண்டியதிலே குறிப்பிட்ட தேதியை, தவணையை பொறுத்தவரையில் அது போதாது என்று சொன்ன தன் காரணமாக, நான் சட்டமுன்வடிவை கொண்டு வந்திருக்கிறேன். குத்தகை இடுகிறவர்கள் 99 சதவீதம், இன்னும் சொல்வதானால் ஆயிரத்தில் ஒருவர் கூட பொய் சொல்ல மாட்டார், இதில் இருக்கிற சங்கடங்களைப் போக்குவதற்கு தான் இன்றைய அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை பேரில், தீவிரமாக ஆலோசித்து நல்ல முடிவை உங்கள் முன்னால் கொண்டுவர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் உங்களுக்கிருக்கிற சங்கடங்களை என்னிடத்தில் எழுதிக் கொடுத்தால், சட்ட முன்வடிவு கொண்டு வரும்போது இதில் என்ன செய்யவேண்டுமென்று பேசிச் செய்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, அன்றைய அரசால் திரும்பப் பெறப்பட்டது என்று சொன்னார். எந்த ஆண்டில் திரும்பப் பெறப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டில் திரும்பப் பெறப்பட்டது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. குத்தகை பாக்கிகளைச் செலுத்துவதற்கு வேண்டிய தவணையை நீட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கிணங்க, நீட்டிக் கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு மார்ச் 7-ம் தேதி ஆகிறது. ஏப்ரல் 15 என்றால் இன்னும் ஒரு மாதம் தான் இருக்கிறது. அதற்குள்ளே பழைய பாக்கி பூராவையும் செலுத்த முடியுமா? செலுத்த முடியவில்லை என்றால் நிலத்தை விட்டு வெளியேற்றப்படக்கூடிய சூழ்நிலை வருமே, அதற்குள் வேறு ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத்தலைவர் அவர்களே, அதற்காகத் தான் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கட்ட வேண்டிய தேதி 30—6—1981 ; 31—12—1980 வரை கட்ட வேண்டியதை 30—6—1981-க்குள் கட்டினால் போதும். ஆறு மாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 6/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".



1981 மார்ச் 7] [பேரவைத் துணைத் தலைவர்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 3 சட்ட முன்வடிவில் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.—

In clause 3, for sub-clauses (1) and (2) substitute the following sub-clauses, namely:—

"(1) In sub-section (2),—

(a) in clause (i), for the the expression "31st December 1980", the expression "30th June 1981" shall be substituted;

(b) in clause (ii), for the expression "30th June 1981", the expression "31st March 1982" shall be substituted;

(2) in sub-section (4),—

(a) in clause (a),—

(i) in sub-clause (i), for the expression "31st December 1980", the expression "30th June 1981" shall be substituted;

(ii) in sub-clause (ii)' for the expression "30th June 1981", the expression "31st March 1982" shall be substituted;

(b) in clause (b),—

(i) in sub-clause (i), for the expression "31st December 1980", the expression "30th June 1981" shall be substituted;

(ii) in sub-clause (ii), for the expression "30th June 1981", the expression '31st March 1982" shall be substituted:

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

[பிற்பகல் 12–50]

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 4,—

(1) in sub-clause (1), for the expression "15th April 1981" substitute the expression "30th June 1981";

(2) for sub-clause (2), substitute the following sub-clause, namely :—

"(2) in sub-section (2),—

(a) in clause (a), for the expression "31st December 1980", the expression "30th June 1981" shall be substituted;

(b) in clause (b), for the expression "30th June 1981", the expression "31st March 1982" shall be substituted;

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்ற படி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 6/1981), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 7/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 3 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 3, for sub-clauses (1) and (2) substitute the following sub-clauses, namely:—

(1) in sub-section (2),—

(a) in clause (i), for the expression "31st, December 1980", the expression "30th June 1981" shall be substituted;

(b) in clause (ii), for the expression "30th June 1981", the expression "31st March 1982" shall be substituted;

(2) in sub-section (4),—

(a) in clause (a),—

(i) in sub-clause (i), for the expression "31st December 1980", the expression "30th June 1981" shall be substituted;

(ii) in sub-clause (ii), for the expression "30th June 1981", the expression 31st March 1982" shall be substituted;

(b) in clause (b),—

(i) in sub-clause (i), for the expression "31st December 1980", the expression "30th June 1981" shall be substituted;

(ii) in sub-clause (ii), for the expression "30th June 1981", the expression 31st March 1982" shall be substituted.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி—"பிரிவு 4 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்"

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 4

(1) in sub-clause (1), for the expression "15th April 1981" *substitute* the expression "30th June 1981";

(2) *for* sub-clause (2), substitute the following sub-clause, namely:—

(2) in sub-section (2),—

(a) in clause (a), for the expression "31st December 1980", the expression "30th June 1981" shall be substituted;

(b) in clause (b), for the expression "30th June 1981", the expression "31st March 1982" shall be substituted;"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள் ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச்சேர்ந்த பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, சட்டமன்றப் பேரவை (சட்டமுன்வடிவு எண் 7/1981) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.



ஈ. வாழ்க்கைப்படி வழங்கல் சட்டமுன் வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 13/1981) ஆய்வுக்கு* எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரால் இந்த மாமன்றத் திலே வைக்கப்பட்டு இருக்கிற இந்தச் சட்டமுன்வடிவின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மேலெழுந்தவாரி யாக அல்ல, உள்ளபடியே இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் உள்நோக்கத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். காரணம் இதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சுமார் 1,875 நிறுவனங்களில் 1,631 நிறுவனங்கள், ஸ்டாண்டிங் ஆர்டரை ஏற்றுக்கொண்டு தற்காலிகமாக பணியிலிருந்து நீக்கம் செய்யப்படுகிறபோது வாழ்க்கைப்படி வழங்குகிற கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

சட்டப்படி 244 நிறுவனங்கள் அந்தப் பணியைச் செய்துக் கொண்டிருக்கின்றன. இங்கே, தற்காலிகமாக அந்தப் பணி யிலேயிருந்து சஸ்பென்ட் ஆன காலத்திலே அவர்களுக்கெல்லாம் வாழ்க்கைப்படி தர வேண்டுமென்று ஒட்டுமொத்தமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதை ஆப்ளிகேட்டரியாக மேனேஜ்மெண்டு பக்கத்திலே நுழைத்து அவர்களைப் பணிய வைக்க வேண்டுமென்று கொண்டு வரப்படும் இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன், அதை நான் மறுக்கவில்லை.

ஆனால், இந்தச் சட்டத்தை நான் வரவேற்றுப் பாரட்டக் கூடிய அதே நேரத்திலே எனக்கு ஒரு சந்தேகம் எழுகின்றது. எனக்கிருக்கின்ற எண்ணமெல்லாம் எத்தனையோ தொழிலாளர் களுடைய துயரத்திலே இன்பத்தைச் சுவைத்துக் கொண்டிருக் கின்ற இந்த அரசு, பாலைவனத்திலே பசுஞ்சோலை இருப்பதைப் போல ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே என்பதற்காகப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஒரு விசித்திரமான சம்பவத்தை இந்த மன்றம் இன்றைக்குச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. ஒருபுறத்திலே சஸ்பென்ஷனில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு வாழ்க்கைப்படி தரப்பட

*1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. துரைமுருகன்] [1981 மார்ச் 7

வேண்டுமென்ற சட்டம் ; ஆனால் அதே ஏட்டிலே இன்னொரு பக்கத்திலே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அவர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்குகின்ற சட்ட மசோதாவும் வருகின்றது. இதுவும் வருகிறது ; அதுவும் வருகிறது. இப்படி இரண்டு சட்டங்களும் ஒரே ஏட்டிலே வருகின்றன. இது விசித்திரமாகத் தெரியவில்லையா துணைத் தலைவரவர்களே !

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதெல்லாம் எனக்குத் தெரியாது ! பில்லிலே உள்ள சாராம்சத்தைப் பற்றி உறுப்பினரவர்கள் பேச வேண்டும். (சிரிப்பு).

திரு. துரைமுருகன் : நான் தெரிவிப்பது என்னவென்றால், ஒருபக்கத்திலே, வாழ்க்கைப்படி தர வேண்டுமென்கிற சட்டம் ; மறுபுறத்திலே தொழிலாளி உரிமைக்குரல் எடுத்துக் கேட்டால் சிறைத்தண்டனை என்று மிரட்டுகின்ற இன்னொரு சட்டம். வீரபாண்டிய கட்டபொம்மன் படத்திலே சிவாஜி கர்ஜிப்பாரே, வீரபாண்டிய கட்டபொம்மனும் எட்டப்பனும் ஒரே மண்ணில் என்று, அதைப்போலத் தொழிலாளர்களுக்காக வாதாடுகின்ற சட்டம் ஒரு புறத்தில், தொழிலாளர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்குகின்ற சட்டம் இன்னொரு புறத்தில். இப்படி அமுதமும், ஆலகால விஷமும் ஒரே குடத்திலே இருக்கிறது. எனக்குள்ள எண்ணமெல்லாம், புள்ளிமான் குட்டிக்குப் பால் கொடுக்க இந்தப் புலி ஒத்துக்கொண்டதே என்பதுதான். ஆனால் எப்படியோ வந்திருக்கிறது, அந்த எண்ணம் இருக்கிறதே அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல ; இன்னொரு சட்டம் வரப்போகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். வேலை நிறுத்தத்திலே ஈடுபடவேண்டுமென்றால் ஓட்டெடுப்பு நடத்த வேண்டுமென்று. எதிலேயும் ஓட்டெடுக்க வேண்டுமென்று முயற்சிக்காத இந்தச் சர்க்கார் தொழிலாளர்கள் உரிமைக்குரல் எழுப்புவதற்கு மட்டும் ஓட்டெடுக்க வேண்டுமென்று சொல்கிறது.

விவசாயிகள் வரி கட்ட மாட்டேன் என்று சொன்னால் சிறைக்கு அனுப்புகின்ற சட்டம். ஆக இப்படிப்பட்ட சட்டங்களையே போட்டு மரத்துப் போயிருக்கின்ற இந்தச் சர்க்கார், திடீரென்று, சகாரா பாலைவனத்திலே பசுஞ்சோலை இருப்பதைப்போல, சஸ்பென்ஷனிலே உள்ள பணியாளர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்க வேண்டுமென்று இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே என்பதை எண்ணும்போழுது கல்லிலேயும் ஈரம் இருக்கிறது ; கல்லுக்குள் ஈரம் என்று நினைத்து அமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



1981 மார்ச் 7] [திரு. துரைமுருகன் ]

இந்தச் சட்டத்திலே இன்னொன்றையும் நான் பார்க்கிறேன். பட்டமரத்திலே பால் வடிவதைப் போல இருக்கின்ற இந்தச் சட்டத்திலே உள்ள சில இடங்களையும் சுட்டிக்காட்ட வேண்டியவனாக நான் இருக்கின்றேன். இந்தச் சட்டத்திற்கு அருமை நண்பர்கள் பலரும் திருத்தங்களைக் கொடுத்துள்ளார்கள்.

" கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டு திங்கள் ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு மேல் ஊதியம் பெற்றாலும் அல்லது அவரது அலுவலகத்தோடு இணைந்துள்ள பணியின் தன்மையால் அல்லது அவரிடம் நிலைபெற்றுள்ள அதிகாரங்களால் முக்கியமாக மேலாண்மைப் பாங்கில் பணி புரிபவர் ;" என்ற ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். 500 ரூபாய் என்பது இந்தக் காலத்திலே மிகச் சாதாரண பணம். இதைத்தான் நம்முடைய திரு. ரமணி அவர்களும் மற்றும் அந்தக் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர்களும் கருதி திருத்தங்களைக் கொடுத்து, 1,600 ரூபாயாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளில் இந்தத் திருத்தங்களெல்லாம் வந்தாக வேண்டுமென்று இந்த நேரத்தில், சட்டத்தைப் பற்றிப் பேசும்பொழுது குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆனால் இவ்வளவு சலுகைகளைத் தொழிலாளர்களுக்குக் காட்டிவிட்டு, பார்த்தீர்களா, இதைப்போன்ற ஒரு சட்டத்தை எப்பொழுதாவது கொண்டு வந்திருக்கிறார்களா, கொண்டு வந்தது நாங்கள் அல்லவா, உழைக்கின்ற கரங்களுக்குப் பக்கபலமாக உள்ள சர்க்கார் அல்லவா இது என்று மைதானத்திலே பேசுவதற்குப் பயன்படும். இவ்வளவையும் செய்துவிட்டு, இதில் வேடிக்கை என்னவென்றால், உதட்டிலே தேனையும், உள்ளத்திலே நஞ்சையும் பாய்ச்சுவது மாதிரி இதில் ஒரு ஷரத்தையும் சேர்த்திருக்கிறார்கள்.

அந்த ஷரத்து என்னவென்று கேட்டால் எல்லாற்றையும் தூக்கியடிக்கக்கூடிய விதத்திலே அந்த ஷரத்து இருக்கிறது. அதுதான் விதி விலக்கு அளிக்கின்ற அதிகாரம். எல்லாம் இருக்குமாம், ஆனால் கடைசியிலே இவர்கள் நினைத்தால் அந்த நிறுவனத்திற்கு விதி விலக்கு அளிக்கலாமாம். என்ன காரணத்தின் அடிப்படையிலே விதி விலக்கு அளிக்கலாம் என்று இருக்கிறது இந்த மசோதாவிலே, அதையும் சொல்கிறேன்.

" அரசு பொது நலனுக்காக, அவ்வாறு செய்வது தகுதியான்து என்று கருதினால்," என்று இருக்கிறது. எது பொது நலன் ? அதை அமைச்சர் நிர்ணயிப்பார்.

[பிற்பகல் 1-00]

அவருக்குப் பட்டால் பொதுநலம். படாவிட்டால் பிறர் நலம்; தன் நலம் என்று வேண்டுமானால் கூட சேர்த்துக் கொள்ளலாம். ஆகவே, ஒரு டெஃபனிஷன் இருக்க வேண்டும். எது பொது நலத்திலே வருவது ? உங்களுக்கு வேண்டிய முதலாளி,

[திரு. துரைமுருகன்] [1981 மார்ச் 7

உங்களிடத்திலே சலாம் போடுகிற முதலாளி இருந்தால், அவர்
நடத்துகிற நிர்வாகம், நிறுவனம், பொது நலனுக்கு உட்பட்டது.
உங்களை மதிக்கவில்லை, நீங்கள் கூப்பிட்டால் ஓடி வரவில்லை,
உங்களை ஏறெடுத்துப் பார்க்கவில்லையென்று சொன்னால்,
அந்த நிர்வாகம் பொது நலனுக்கு அப்பாற்பட்டது, அமுலாக்கு
அந்தச் சட்டத்தை என்று சொல்வீர்கள். ஆனால், உங்களுக்குப்
பின்னாலே வந்து, வெளிநாடு போனால் பக்கத்திலே வந்து,
உள் நாடு வந்தால் வெண்சாமரம் வீசினால் அவர் பொது நிறு
வனத்தினுடைய நிர்வாகஸ்தர். அவருக்கு இந்தச் சட்டம்
பொருந்தாது என்று சொல்வீர்கள். ஆகவே, இந்த அதிகாரத்
தைக் கொண்டே சரியான லகானை கையிலே வைத்திருக்கிறீர்
கள். ஆக, எந்தக் குதிரை எந்தப் பக்கத்திலே ஓட வேண்டு
மென்கிற ராஜதந்திரத்தை நீங்கள் கையாளப் பார்க்கிறீர்கள்.
எனவேதான் சொல்கிறேன், இதிலே, திட்டவட்டமாக எது,
எது பொது நலம், எதுஎது, பொது நலம் அல்ல என்று குறிப்பிட்டுக்
காட்டி இருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறி இருக்கிறது
இந்த அரசு என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டு
வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அப்படி
ஏதாவது இருப்பின், அவைகளுக்கெல்லாம் எல்லாவிதத்திலும்
சேர்த்து, நம்முடைய எல்லா விதித்துறைகளின் செல்திறனி
லிருந்து அல்லது குறிப்பிட்ட யாதேனும் ஒரு—அது கொஞ்சம்
மிரட்டுவது—யாதேனும் ஒரு விதித்துறையின் செல் திறனிலிருந்து
(விதி) விலக்களிக்கலாம் என்று போடப்பட்டிருப்பதை, உள்ள
படியே தொழிலாளர் வர்க்கத்திற்கு நன்மை செய்வதாக இந்த
அரசு கருதினால், அந்த விதிவிலக்கை நம்முடைய மாண்புமிகு
அமைச்சர் 'மெக்னானிமிட்டி' யாக எழுந்து நின்று;
வாபஸ் பெற்றுக் கொள்கிறேன், அதை வித்தடிரா பண்ணிக்
கொள்கிறேன் என்று திருத்தம் முன்மொழிய வேண்டும். இல்லா
விட்டால், மேலுக்குப் பேசுவது, நாங்கள் தொழிலாளர்களுக்கு
வாழ்க்கைப்படி கொடுத்திருக்கிறோம், யார் கொடுத்திருக்
கிறார்கள் என்று பேசிவிட்டு, கடைசியிலே உங்களுக்கு வேண்டா
தவனைப் பார்த்துபழி தீர்ப்பதற்குத்தான் இதைப்
பயன்படுத்த முடியும்.

இன்னும் சொல்லப் போனால், முதலாளிகளிலே பலபேர்
இன்றைக்குத் தொழிலாளர்களுடைய ரத்தத்தை உறிஞ்சுகிற
அட்டைகளாக, முதலைகளாக இருக்கக்கூடியவர்கள்தான்.
அதிலே பலபேர் அந்தக் குளத்திலே நீந்தி விளையாடுகிற
ராஜதந்திரத்தைக் கற்றவர்கள்தான். எனவேதான் முதலாளி
களை மிரட்டுவதற்காக, உங்களுடைய நிறுவனம் பொது நலத்
திற்கு அப்பாற்பட்டது; கொண்டு வா என்று கேட்பதற்காக,
அல்லது, தேர்தல் நிதி குவிப்பதற்காக, அல்லது கட்சி நிதி
திரட்ட விழா நடத்தினால், அந்த டிக்கட்டுகளை விற்பதற்காக,
உங்களுக்கு ஏஜண்டுகளாகப் பயன்படுத்தி, கட்சிக்குப் பணம்
சேர்ப்பதற்காக ஒரு மோட்டிவோடு செய்யப்பட்ட திட்டம் இந்த
ஷரத்திலே அடங்கியிருக்கிறது என்று நான் குற்றம் சாட்டு
கிறேன்.



1981 மார்ச் 7]

திரு. ஏ. கி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் தங்களுடைய அனுபவத்தை
வைத்துக்கொண்டு பேசுகிறாரா, அல்லது வாதத்திற்காகப் பேசு
கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். கட்சி டிக்கெட்
போன்ற விவகாரங்களில் அவர்களுக்கு அனுபவம் அதிகமிருக்
கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த பில்லை
பாஸ் பண்ணுவதற்காக விவாதம் நடந்துகொண்டிருக்கிறது.
அதைப் பற்றி பேசாமல், மோட்டிவேஷன், அது, இது என்றெல்
லாம் பேசக்கூடாது. அவையிலே, மற்றவற்றிற்கு எப்படி விதி
களை அமுல் நடத்துகிறோமோ, அதைப் போல் சட்ட முன்
வடிவுகள்மீது பேசும்போதும், அதைப்பற்றி மட்டும்தான் பேச
வேண்டும்.

திரு. துரைமுருகன்: அந்த ஷரத்து ஒரு மோட்டிவோடு
சேர்க்கப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய வாதம்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: துணைத்தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் பேசுகிறபோழுது, இந்தச்
சட்டத்தின் மூலமாக தேர்தல் நிதியைத் திரட்டுகிற வகையிலே
இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.
அவர்கள் பேசிய அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலேயிருந்து
நீக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஷரத்தை, அந்த
கிளாஸ் எப்படி என்பது பற்றி, சட்டப்பிரிவுகளைப் பற்றி
மட்டும் பேசவேண்டும்.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் ஒரு சிறந்த வழக்
கறிஞர். நான் அவரிடத்திலே சொல்வது, டெர்ம்ஸ் கிளியராக
இருக்க வேண்டும், "வேக்"காக இருக்கக்கூடாது. அப்படி
"வேக்"காக இருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்
சாட்டு. காரணம், "அரசு பொது நலனுக்காக அவ்வாறு செய்
வது தகுதியானது என்று கருதினால்" என்று சொல்கிறார்கள்.
எப்பொழுது அரசு கருதும்? அவர்கள் நினைத்தால் அது பொது
நலன் என்று அவர்கள் சொல்வார்கள். எது தன் நலமோ
அதையும் அவர்கள் சொல்வார்கள். எனவே, அதிலே ஒரு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உங்கள்
கருத்தைச் சொல்லலாம். ஆனால், உள்நோக்கம் கற்பிக்காமல்
சொல்லலாம். நீங்கள் மோட்டீவ் இருக்கிறது என்று சொல்
கிறீர்களே, அது தவறு. அந்த மாதிரி சொல்லக் கூடாது.
அதற்காகச் சட்டம் வருகிறது என்று இருக்கக்கூடாது........

**திரு. துரைமுருகன் :** அருள்கூர்ந்து நான் சொல்வதைக் கேளுங்கள். இந்தச் சட்டத்திலே வேகாக இருக்கிற காரணத்தாலே, முதலாளிகளை சில நேரத்திலே, சர்க்கார் தன் வயப்படுத்த அந்த லகானைப் பயன்படுத்துகிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மசோதாவிலே குற்றச்சாட்டு வேண்டாம். அதிலே, குற்றச்சாட்டு சொல்வது அவ்வளவு நன்றாக இருக்காது.

**திரு. துரைமுருகன் :** இல்லையென்றால், ஏன் இவ்வளவு வேகாக அந்த ஷரத்தை போட்டார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எது வேண்டுமானலும் பேசட்டும். நான் இறுதியிலே பதில் சொல்லுகிறேன்.

**திரு. துரைமுருகன் :** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அது தான் முறை. ஒரு உறுப்பினர் பேசுவார், அதற்கு அமைச்சர் பதில் சொல்வார். நான் சொல்வது என்னவென்று கேட்டால் ஒரு சட்டத்திலே இப்படிப்பட்ட " வேகாக " ஒரு நிலை உருவாகிற காரணத்தால் இந்தச் சட்டத்தைத் வைத்துக்கொண்டு, தொழிலாளிகளுக்கு நன்மை செய்வதைப்போல, முதலாளிகளை தன்வயப்படுத்துவதற்கு செய்யப்படுகிற மாந்திரீகமோ என ஐயுறுகிறேன். எனவே, அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, நாங்கள் உங்களைப் புகழவேண்டுமானால் அந்த ஷரத்தை வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன்.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற " தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கல் " சட்ட முன்வடிவை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே 'இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய ஒரு சில விஷயங்களைப் பற்றி எங்கள் கட்சியின் சார்பாக நாங்கள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். ஏற்கெனவே பல தொழிற்சாலைகளில், இப்படிப்பட்ட வாழ்க்கைப்படி வழங்கும் சட்டத்தைகொண்டு வந்தாலுங்கூட, பல்தொழிற்சாலைகளுக்கு இதுபோன்ற சப்சிஸ்டென்ஸ்' அலவன்ஸ் கொடுக்கவேண்டும் என்று ஆங்காங்கு பல இடங்களுக்கு பரிந்துரைகள் மூலமாக செய்யப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் கூட பல தொழிற்சாலைகளில்—அரசாங்கம் அறிவித்திருந்தாலும் கூட—அதை அமல் நடத்தமுடியாது என்று சொல்லுகின்ற நிலை இருந்து கொண்டு இருக்கக் கூடிய நிலையில், அமைச்சர் அவர்களே முன் வந்து இப்படிப்பட்ட சட்டம் முன்வடிவைக் கொண்டு வந்ததைப் பாராட்டுவது மட்டுமல்ல, இதிலே இருக்கக்கூடிய திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



முதலாவதாக இந்த சட்டத்திலே இருக்கக்கூடிய முதல் பாரா வில் "குறுந்தலைப்பும், பரப்பும், தொடக்கமும்" என்பதில் 3-வது பாராவில், " அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ள குறிப்பிடக்கூடிய நாள் அன்று இது செயலுக்கு வரும் " என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் இதைச் சொல்வதற்குக் காரணம், அரசாங்கம் இந்த அவையிலே இந்த சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து, அதற்குப் பின்னாலே எப்போது இது அமலுக்கு வரும் என்று இருப்பதை விட, அது உடனடியாக அமலுக்கு வந்து செயல்படவேண்டும் என்று மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பிரிவு 2—2(எ) பிரிவில் " ஆனால் இதில் பின்வருவோர் அடங்கமாட்டார் " என்ற வரியையும், (i), (ii), பிரிவுகளையும் நீக்க வேண்டும். காரணம் பின்வருகின்றவர்கள் அடங்கமாட்டார்கள் என்று சொன்னால், அதைச் செயல்படுத்து கிற தொழில் அதிபர்கள் அந்தச் சட்டத்தை வேறுவிதமாகப் பயன்படுத்த முனைவார்கள். எனவே 2(ஏ) பாராவில் (i), (ii) என்ற பிரிவுகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் பாரா 2—2(பி) பிரிவில் " கண்காணிக்கவும் " என்ற வார்த்தையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக " மேனேஜ்மெண்டு" "செய்யவும்" என்ற வார்த்தையை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களை சொல்லுகின்ற அதே நேரத்தில் இந்தச் சட்டம் அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய நல்ல சட்டமாக இருந்தாலும் கூட, அதே நேரத்தில் 6-ஆவது பாராவில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய அந்த விளக்கமானது இந்தச் சட்டத்தை சீர்குலைக்கக்கூடிய முறையில் இருக்கின்றது. முதலாளிகளுக்கு ஹோல்டு கொடுக்கக் கூடிய அளவுக்கு அந்தச் ஷரத்து இருக்கின்றது. ஆகவே, அந்த விதியை எடுத்தால்தான், எந்த நோக்கத்துக்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றதோ அந்த நோக்கம் முழுமையாக தொழிலாளர்களுக்குச் செயல்பட முடியும், அனுபவிக்க முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். எனவே, விலக்கு அளிக்கப்படுகிற அதிகாரம் என்று சொல்லக் கூடிய அந்த ஷரத்து முழுவதுமே எடுக்கப்பட வேண்டும்.

(பிற்பகல் 1—10)

அப்படி எடுக்கப்பட்டால்தான் தொழிலாளி என்று இருக்கக் கூடிய அவர்களை எந்த முதலாளியாக இருந்தாலும் நீக்கம் செய்யப்படக்கூடிய நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ' சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் ' 90 நாட்கள் என்று இருந்தால் பாதி சம்பளமும், அதற்கு மேலே 180 நாட்கள் என்று இருந்தால் முக்கால் சம்பளமும், அதற்கு மேலே விசாரணை நீண்டு கொண்டே இருந்தால் முழுச் சம்பளம் கொடுக்க வேண்டும்

ஆகவே, 4,039 பேர் இருப்பதாகப் புள்ளிவிவரம் தரப்பட்டிருக் கிறது. நம்முடைய நிதிநிலைமைக்கேற்ப அவ்வப்போது ஒவ் வொரு ஆண்டும் நாம் இந்தப் புலவர்களுக்கான தமிழாசிரியர் கள் பதவிகளை ஏற்படுத்துகிறோம். அதில் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அதோடு ஓய்வு பெறுகின்ற தமிழா சிரியர்கள் என்பதாகச் சிலபேருக்கு வேலைவாய்ப்பு கிடைக் கிறது.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, நடுநிலைப் பள்ளி களிலே பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் தமிழ்ப் புலவர் படிப்பு படித்திருப்பதை அரசு அறியும். ஆகவே, நடுநிலைப் பள்ளி களிலே புலவர்களாக அவர்களை நியமிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய கவனத்திற்கு வந்திருக்கின்ற பிரச்சினையே இப்படிப் புலவர்களிலே இடைநிலை ஆசிரியர் களாகச்சேர்ந்து, தனிப்பட்ட முறையிலே புலவர் பட்டம் பெற்ற தமிழாசிரியர்களே அந்தப் பதவிகளிலே அமர்த்தப்படுகிறார்கள், தாங்கள் நேரடியாக நான்காண்டுகள் படித்துப் பட்டம் பெற்று தமிழாசிரியர் பயிற்சி பெற்றிருக்கிறோம், எங்களுக்கு இத்தகைய வாய்ப்பு கிடைக்கவில்லை என்கின்ற குறையைத்தான் இப்படிப் பட்ட தமிழாசிரியர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பள்ளிகளிலே வேலை செய்கின்றவர்களுக்குத் தமிழாசிரியர் பதவி களிலே வாய்ப்பு கொடுக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது பள்ளிகளிலே வேலை செய்யாமல் இருக்கின்ற தமிழாசிரியர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இவர்களையும் கவனத்திற்கொண்டு இரு சாராருக்கும் வேலை வாய்ப்பளிக் கின்ற தன்மையில் பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகம் பூராவும் 4,000 பேருக்குமேல் புலவர் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக் கிறார்கள். தமிழ்நாட்டிலே 375 ஊராட்சி ஒன்றியங்கள் இருக் கின்றன ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே இரண்டு மூன்று நடு நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அரசாங்கத்தினுடைய நிதி நிலை சரியில்லையென்று சொன்னாலும், ஓரளவு பொது நிதி யிலே அதிகமாக வைத்திருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து, புலவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்ற வகை யிலும், மாணவர்கள் தமிழ் கற்கும் வகையிலும் தமிழ் ஆசிரியர் களை ஒன்றியங்களில் நியமனம் செய்ய அரசாங்கம் உத்தர விடுமா என்று அறிய விரும்புகிறேன்,



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழாசிரியர்களைப் பற்றி நாம் கேள்வி கேட்டு பதில் பெறுகிற நேரத்தில், அவர்களைப்பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருப்பதில் தவறு ஒன்றும் இல்லையென்று நான் கருதி னாலும் அப்படிப் பேசுவதைக் கொஞ்சம் மற்ற ஆசிரியர்களும் இருக்கிறார்கள், இடைநிலை ஆசிரியர்களும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் தான், தமிழர்கள்தான். ஆகவே, எல்லோரையும் வைத்துத்தான் நாம் பார்க்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்தப் பிரச்னையை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு காரணம், புலவர் அளவுக்குத் தமிழ் படித்தவர்கள், இந்த தொடக்கப்பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்குத் தமிழ் சொல்லித் தரும்போது, அது எந்த அளவிற்கு வெற்றி பெறும் என்பதை நாம் ஆராயவேண்டும். இடைநிலை ஆசிரியர்கள், தமிழ் சொல்லிக் கொடுப்பது சிறந்ததா? புலவர்கள் அந்தக் குழந்தைகளுக்குத் தமிழ் சொல்லிக் கொடுப்பது சிறந்ததா என் பதை ஒரு பிரச்னையாக இப்பொழுது நாம் கருதிக் கொண்டிருக் கிறோம். அதையே நாம் ஆராய்ந்து பார்க்கின்றோம்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள், ஒரு கொள்கைப் பிரச்னையைச் சொன்னார்கள். ஆரம்பப்பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளி லும் இடைநிலை ஆசிரியர்கள் தமிழ் சொல்லித் தருகிற நிலை இருக்கிறது. அதை மாற்றி, தமிழ் படித்த தமிழ்ப் புலவர்கள் தான் தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் உருவாக்கிப் பின்பற்றுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் நான் இப்பொழுது சொன்னேன், தமிழ் படித்த தமிழ்ப் புலவர்கள் இந்தக் குழந்தைகளுக்குத் தமிழ் சொல்லித் தருவதிலே எந்த அளவு வெற்றி பெறுகிறார்கள் என்பதை நாமே ஆராய்ந்து பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்கு இடைநிலை ஆசிரியர்கள் என்று வரும்போது, மொழி சொல்லித் தருவதில், மொழி ஆற்றலை வளர்ப்பதில் பெறுகின்ற அளவுக்கு வெற்றியை நாம் தமிழ் ஆசிரியர்களை வைத்துக் கொண்டு பெற முடியாது. மேல் வகுப்புகளிலே அவர்கள் தமிழ் சொல்லித் தரலாம். காரணம், அங்கே இலக்கிய ஆற்றலை, வளர்ப்பதற்காகச் சொல்லித் தரப்படுகிறது. ஆகவே, புலவர்பெரு மக்களை இலக்கிய ஆற்றலை வளர்ப்பதற்காகவும், இடைநிலை ஆசிரியர்களை சிறு குழந்தைகளுக்கு மொழி ஆற்றலை வளர்க்க வும் பயன்படுத்தினால் ஓரளவுக்கு அதிகமான அளவுக்கு சமுதாயத் திற்கு நன்மை கிடைக்கும் என்ற அடிப்படையில், தமிழ்ப் புலவர் களைத் தமிழ் சொல்லித் தருவதற்கு எல்லா நிலையிலும் பயன் படுத்துவது நல்ல பயனைத் தராது என்பதுதான் நம்முடைய கருத்து.

என்பது தொழிலாளர்களுக்கு அனுகூலமாக இருந்தாலும் கூட இந்தக் கிளாஸ் 6-ல் போட்டு இருப்பதை அவர்கள் எடுக்க வேண்டும். அப்படி எடுக்காவிட்டால் இந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் அடிபட்டுப் போய்விடும். அந்த ஷரத்தை நீங்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பிரிவு 11 (1)-ஆவது பிரிவில் மூன்றாவது வரியில் வருகின்ற 'ஓர் அதிகாரியால்' என்ற வார்த்தைக்குப் பிறகு 'அல்லது பாதிக்கப்பட்ட பணியாளர்' என்பதைச் சேர்க்கவும்.

அதேபோல், பிரிவு 3 (1) பிரிவின்கீழ் உள்ள 3-ஆவது பாராவில் முதல் வரியில் வரும் 'குற்றவியல் நடவடிக்கை' என்பது முழுவதுமாக நீக்கப்பட வேண்டும்.

எனவே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்த பில் நல்லதாக இருந்தாலும் கூட, வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் கூட இந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய நோக்கங்கள் தொழிலாளிக்கு அப்படியே போய்ச் சேர வேண்டுமானால், அது முழுவதுமாக அமல்படுத்தப்படவேண்டுமானால், 6 ஆவது கிளாஸ் எடுக்கப்படவேண்டும் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தைப் பொதுவாக நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் இந்தச் சட்டத்தில் சில முக்கியமான திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். இந்தச் சட்டத்தின் காரண நோக்கத்திலே குறிப்பிடப்பட்டுள்ள விஷயம் நம் எல்லோருடைய கண்ணையும் திறக்கக்கூடிய ஒரு விஷயமாகும். 1,675 நிறுவனங்கள் ஸ்டான்டிங் ஆர்டர் சட்டப்படி சர்ட்டிபைட் செய்து இருந்தபோதிலும், 1,631 நிறுவனங்கள் தங்களுடைய தொழிலாளர்களை தற்காலிகமாக வேலையில் இருந்து நீக்கும் காலத்தில் அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்கிற விதியை அமல்படுத்தவில்லை என்று இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பல்வேறு கட்டங்களில் போராட்டங்கள் பல நடத்தி, தொழிலாளர் வர்க்கம் பல்வேறு சலுகைகளைப் பெற்றுள்ள இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு நிலை இருப்பது நியாயமற்றதாகும். முதலாளிகள் தொழிலாளர்களை தங்கள் இஷ்டப்படி தற்காலிகமாக வேலை நீக்கம் செய்து விட்டு, அலவன்சும் கொடுக்காமல் இருப்பதால், தொழிலாளர்கள் பட்டினி கிடக்கும் நிலை இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்திலே நாம் கொண்டு வருகிற திருத்தங்கள் அந்த வகையில் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல், தற்போது 44 நிறுவனங்களில் தான் இன்றைக்குச் சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் உள்ள பெரிய ஆலோசனைக் குழுவில் பேசுகின்ற நேரத்தில் கூட முதலாளிகள் பிரதிநிதிகள் தொழிலாளர்பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுகிற நேரத்தில் இதனைக் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டு போய் இருக்கிறார்கள். அதை அவர்கள் நடைமுறைப்படுத்தாத நிலையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. ஆகவே, இதை ஆதரிக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். அந்த வகையில் பாராட்டுகிறோம்.

இதிலே சில திருத்தங்கள் வேண்டும் என்று முக்கியமாகச் சொல்கிறோம். முதலாவதாக இரண்டாவது செக்ஷனில் இருக்கும் இரண்டாவது பிரிவில் ஒரு திருத்தம் செய்ய வேண்டும். மற்ற மாண்புமிகு அங்கத்தினர்கள் கூட இதை எடுத்துக் காட்டினார்கள். சூப்பர்வைசரி ஸ்டாப் சம்பந்தப்பட்டதாக அது இருந்த போதிலும் 500-க்கு மேல் ஊதியம் பெற்றால் அவர்களுக்கு இந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்பதாகும்.

ஆனால் அப்படிப்பட்ட சூப்பர்வைசரி ஸ்டாப் என்பவர்களைப் பொறுத்த வரையில் 500 ரூபாய்க்குக் கீழே சம்பளம் வாங்குகின்றவர்களை இன்றைக்குப் பார்க்க முடியாது. ஆகவே அந்த வகையில் பார்க்கின்றபோது அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டால் அவர்களுக்கு எந்தவிதமான அலவன்சும் கிடைக்காத ஒரு நிலை இருக்கின்றது. அது சரியல்ல. ஆகவே அதை மாற்ற வேண்டும். அதை 1,600 ரூபாய் என்று வைத்துக் கொள்ளலாம் அதற்கு சற்று அதிகமாக வைத்தால் கூட ஓரளவுக்கு சரியாகத் தான் இருக்கும். இருந்தாலும் 1,600 ரூபாய் என்றாவது அந்த சம்பள நிலையை வைத்துக் கொள்ளலாம். ஆகவே அவ்வாறு திருத்த வேண்டும்.

அடுத்து இரண்டாவது செக்ஷனில் முதலாவது உப பிரிவில் நிறுவனம் என்பதற்கு மத்திய அரசு அல்லது மாநில அரசு அலுவலகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு மத்திய அரசு அலுவலகம் அல்லது மாநில அரசு அலுவலகம் அல்லது துறை என்று இருப்பதை எடுத்து விட வேண்டும். அப்படி என்றால் இதிலே மத்திய அரசு என்று வருவதையும் சேர்த்து எடுக்க வேண்டி வருமே என்று கேட்பதற்கு அவசியம் இல்லை. ஏனென்றால் ஓர் இரயில்வே நிர்வாகம்; அல்லது யாதொரு சுரங்கம் அல்லது எண்ணெய் வயல்; அல்லது யாதொரு பெருந் துறைமுகம், அல்லது யாதொரு மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனத் தொழில் என்று கடைசியிலே வருகின்றது. அவ்வாறு வருவதால் இந்த இடத்திலே அதை நீக்கி எடுத்து விடலாம். ஆகவே மத்திய அரசின் அல்லது மாநில அரசின் ஓர் அலுவலகம் அல்லது துறை என்ற அந்த வரி அங்கே புகுத்தப்பட வேண்டியதில்லை. அதை எடுத்துவிட வேண்டும்.

[திரு. கு. ரமணி] [1981 மார்ச் 7

அடுத்து மூன்றாவது செக்ஷனிலே 2-ஆவது உப பிரிவிலே இருக்கக்கூடிய முழுவதையும் நீக்கிவிட வேண்டும். இதுதான் எங்களுடைய திருத்தம். அந்த மூன்றாவது பிரிவில் பணியாளர் ஒருவர் தற்காலிகமாக பணியிலிருந்து நீக்கப்படுவதற்கு அடுத்து முன்னர் எந்த நிறுவனத்தில் பணி புரிந்தாரோ அந்த நிறுவனத்தைத் தவிர வேறு யாதொரு நிறுவனத்திலும் பணி புரியக் கூடாது என்று இருக்கின்றது. அப்படிப் பணி செய்தால் அவருக்கு எந்த விதமான அலவன்சும் கொடுக்கப்படமாட்டாது என்று இருக்கின்றது. ஆனால் ஒரு பணியாளர் என்பவர் சஸ்பென்ட் செய்யப்பட்டு 90 நாட்கள் இருக்கின்றார் என்று வைத்துக் கொள்கின்ற நிலையில் அவருக்கு 50 சதவீதம் தான் ஊதியம் கொடுக்கப்படுகின்றது. அந்த 50 சதவீத வருமானத்தை வைத்துக் கொண்டு அவர் அந்த நாட்களிலே வாழவேண்டி இருக்கின்றது. ஆனால் பின்னர் விவகாரம் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு அவரைப் பணியில் சேர்த்துக் கொண்டால் அவருக்கு அந்தச் சம்பள பாக்கி கொடுக்கப்பட்டுவிடும் என்று சொன்னால்கூட அந்தக் காலத்திலே அவர் அந்த பாதி சம்பளத்தை வைத்துக் கொண்டு கஷ்டப்பட வேண்டி இருக்கின்றது அல்லவா? மேலும் அந்தக் காலத்திற்குள்ளே வேறு ஒரு நிறுவனத்திற்கோ அல்லது அலுவலகத்திதிற்கோ யாரும் பணிபுரிய நிரந்தரமான அளவில் செல்வதில்லை. அந்த இடைக் காலத்தில் ஏதாவது ஒரு சிறு வேலையைச் செய்து சம்பாதித்து தன் வாழ்க்கையை நடத்தினால் என்ன? ஆகவே அந்த முறையில் அந்த சரத்து தேவையில்லை என்று நாங்கள் கருதுகிறோம். அந்த சரத்தை நீக்க வேண்டும்.

அடுத்து மூன்றாவது பிரிவில் முதல் உப பிரிவின் கடைசி பாராவில் 'பணியாளர் நேரடியாகப் பொறுப்பாகும் காரணங்களால்' என்று சொல்லி இருப்பதையும் நீக்க வேண்டும். அதற்குக் காரணம் என்னவென்றால் 90 நாட்களுக்கு மேல் பணி நீக்கக் காலம் நீண்டு போனால் அதனால் பாதிக்கப்படக் கூடியவர் பணியாளர்தான். அவன் வேண்டும் என்றே அந்தக் கால அளவை நீட்டிக் கொண்டு போக மாட்டான். இந்த அற்ப அலவன்ஸை மட்டும் பெற்றுக் கொண்டு வாழ்ந்து விடலாம் என்று அவன் நினைப்பது இல்லை. கால நீட்டிப்பு என்ற பிரச்சினை முதலாளிகள் பக்கம் இருந்துதான் வருகின்றது. ஆகவே இந்த சரத்து அவசியம் இல்லை. இதை நீக்கிவிட வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. இந்தத்திருத்தத்தை அமைச்சரவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அடுத்து 6-ஆவது செக்ஷனிலே இருப்பதை முழுமையாக நீக்க வேண்டும். அதிலே ஒரு விலக்கு பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது. இது குறித்து அனேகமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் குறிப்பிட்டார்கள். விலக்கு அளிக்கின்ற அதிகாரம் உண்டு என்று சொன்னால் சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கப்பட



1981 மார்ச் 7] [திரு. கு. ரமணி]

தொழிலாளி பட்டினி கிடக்க வில்லை என்று சொன்னால் சரியல்ல. வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே அந்த சரத்து அதை நீக்க வேண்டும்.

அடுத்து 9-ஆவது பிரிவிலே உள்ள பாராவில் உள்ள அல்லது என்ற வார்த்தையை நீக்க வேண்டும். அதாவது மூன்று மாதம் என்ற தண்டனை சம்பந்தப்பட்ட விஷயத்தில் முதலாளிகளுக்கு மூன்று மாதம் வரையில் சிறைத் தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய்க்குக் குறையாத அபராதம் அல்லது இந்த இரு தண்டனைகளும் கொடுக்கலாம் என்று இருக்கின்றது.

[பிற்பகல் 1–20.]

நம்முடைய சரித்திரத்திலேயே, தொழில் சட்டங்களிலேயோ, தொழில் தகராறு சட்டங்களிலேயோ, முதலாளிகள் இச்சட்டங்களை மீறினால், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற சட்டப்பிரிவு இன்றைக்கு கிடையாது. தொழிற்சாலை சட்டங்களை மீறுவதற்கு அவர்களுக்கு தண்டனை கிடையாது, அபராதம் தான் உண்டு. அபராதத்தை அவர்கள் தாராளமாக செலுத்திவிட்டுப் போய்விடுவார்கள். அவர்கள் என்ன கையிலிருந்தா கொடுக்கப் போகிறார்கள்? தொழிலாளியிடமிருந்து ஏமாற்றும் லாபத்தில் ஒரு பகுதியை, செலவுக் கணக்கில் காட்டி அபராதத்தைச் செலுத்தி விடுவார்கள். ஆகவே தான் அந்த முதலாளிகள் தண்டனை பெற வேண்டும் என்ற வகையில் 'அல்லது' என்ற வார்த்தையை எடுத்துவிட்டால், 3மாத சிறை தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படத் தக்கதாக இருக்கும் என்று இருக்கும் 'அல்லது' என்ற வார்த்தை இருந்தால், அபராதம் மட்டும் தான் இருக்கும். தண்டனை அவர்களுக்கு கொடுக்கப் பெற மாட்டாது. ஆகவே அந்த திருத்தத்தை நிச்சயமாக அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும், ஏற்றுக் கொள்வார் என்றும் நம்புகிறேன்.

அடுத்து செக்ஷன் 4-லிலே ஒரு சின்ன திருத்தம். "பணியாளர்களுக்கு வரவேண்டிய தொகையை வசூலிக்க வரையறுக்கப்பட்டுள்ள முறையில் அரசுக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். அரசு இது குறித்து வரையறுக்கப்படும் முறையில் விசாரணை செய்ய, தொழிலதிபருக்கு வாய்ப்பு அளித்த பிறகு, அப்பணியாளருக்கு அத்தொகை வரவேண்டியுள்ளது என்று ஐயமறத் தெளிந்தால், அரசு அத்தொகைக்காக சான்றிதழ் ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர், அத்தொகையை, நிலவரி நிலுவையை வசூல் செய்வதைப் போல் வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கொடுக்கப்பட்டிருப்பதிலே நிலவரி போன்று வசூல் செய்வது எல்லாம் நல்லதுதான். ஆனால் கால அளவு கொடுக்கப்படவில்லை. அது கொடுக்கப் பெற வேண்டும். ஒரு

3 மாத காலத்திற்குள், தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய அந்தப் பணம் வசூலிக்கப்பட்டு அவர்களுக்கு கொடுக்கப் பெற வேண்டும் என்ற வகையில் கால அளவை நிர்ணயித்து திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். இவைகள் தான் நாங்கள் கொடுத்த திருத்தங்கள். இவைகள் எல்லாம் மிக முக்கியமானவை. சிறிய திருத்தங்கள். பெரிய திருத்தங்கள் அல்ல. 6-வது பிரிவில் தண்டனையும், அபராதமும் என்று இரண்டும் சேர்த்து தொழில் அதிபர்களுக்கு வழங்கப் பெறவேண்டும் என்று இருந்தால் சரியாக இருக்கும். அந்த வகையில் திருத்தங்களைக் கொண்டு வர அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டும் என்று கேட்டு, இது ஒரு நல்லச் சட்டம். வெகு நாட்களாக எதிர் பார்த்த சட்டம். இந்த திருத்தங்களுடன் அவைகளை நிறைவேற்றினால் மிக மிக நல்லதாக இருக்கும். அந்த நல்ல திருத்தங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவினை வரவேற்று விடைபெறுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்திலே கலந்துக் கொண்டு பேசுவதற்கு நான் மகிழ்ச்சியடைந்தாலும், அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களின் நலனுக்காக கொண்டு வந்த இந்தச் சட்டத்திலே குறிப்பாக 2 விஷயங்களைச் சொல்லவிரும்புகிறேன்.

இந்தப் பொருள் விளக்கம் என்ற பகுதியில் இரண்டாம் பாராவில் 500 ரூபாய்க்கு மேல் ஊதியம் பெற்றால் அவர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் பயன்பெற இடம் பெற மாட்டார்கள் என்று குறிப்பிட்டிருப்பது சரியல்ல. 500 ரூபாய் என்பதை 1,500 என்று திருத்திக் கொள்வது நல்லது. ஏனென்றால் ஏராளமான பேர்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள். சாதாரணமாக சூப்பர் வைசராக இருப்பவர்களுக்குக் கூட இப்போது 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வருகிறது என்றாலும் கூட, தற்போது இருக்கும் சூழ்நிலையில் அவர்கள் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு பயம் இருக்க வேண்டும் என்று எண்ணினால் அதற்கென்று வேறு பல சட்டங்கள் இருக்கின்றன. அதன்கீழ் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் இந்த வாழ்க்கைப்படி வழங்குதலினின்று அவர்கள் மட்டும் விட்டுவிடப்படக் கூடாது. அவர்கள் நிறைய சிரமப்படுகிறார்கள். ஆகவே இது அவர்களுக்கும் கிடைக்குமாறு செய்யும் வகையில் அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன் வர வேண்டும் எறு கேட்டுக் கொள்கின்றேன்.





இரண்டாவது அவர்கள் பணியிலிருந்து நீக்கிவைக்கப்பட்டிருக்கும் கால அளவு 90 நாட்களுக்கு. மேல் போனால் 75 சதவீத ஊதியம் கொடுக்கப் பெறவேண்டும் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. 90 நாட்களுக்கு பிறகும் கூட அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்க வேண்டுமா என்ன? அப்படி 90 நாட்களுக்குள் அவர்கள் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் அவர்களுக்கு, முதலாளிகளுக்கு தண்டனை கொடுக்கப் பெறும் என்ற வகையில் இந்தச் சட்டத்தில் ஏதும் இல்லை. அதனால், அதிகமாக காலம் ஆக ஆக, அந்தத் தொழிலாளி சலித்துப் போய், என்னால் வாழ்க்கையின் துயரங்களை சிரமங்களை தாங்க முடியவில்லை—நானே ஏற்றுக் கொள்கிறேன். என்ற முறையில் அன்-கண்டிஷனல் சரண்டர் ஆகிவிடுவான். இது தவிர்க்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் அவன் தற்காலிக பதவி நீக்கத்தைப் பற்றிய விசாரணை முடிந்து, முடிவு எடுக்கப்பெற வேண்டும் என்று இருக்க வேண்டும். அதே போல், அப்படி அந்தக் கால அளவு 90 நாட்களுக்குள் இருந்தால் பாதி சம்பளம் என்று கொடுக்கப்பெற்றிருக்கிறது. ஏன் பாதி சம்பளம், முழு சம்பளமும் கொடுக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகு அவர் குற்றம் செய்ததாக நிரூபிக்கப்பட்டால், வேலை நீக்கம் செய்தால் கூட பரவாயில்லை. ஆனால் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிற காலத்தில், அவர் முன்னர் பெற்று வந்த முழு சம்பளமும் அவருக்கு கொடுக்கப் பெற வேண்டும்.

ஆகவே அரைப்பட்டினி கிடப்பதைவிட அவர்களுக்கு சலுகைகள் செய்து உண்மையில் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டால் பதவி நீக்கம் செய்தால்கூட பரவாயில்லை. அரைப்பட்டினியாகப் போடுவது நல்லதல்ல. தண்டனை கொடுக்கும் விஷயத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் திருத்தம் கொண்டு வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதை கட்சி நோக்கம் இல்லாது தொழிலாளர் வர்க்கம் என்ற முறையில் அதை அனுசரித்துச் செய்ய அரசாங்கம் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் எவ்வளவு நன்மை பயக்கக்கூடியது என்பதை பேசிய அத்துணை மாண்புமிகு உறுப்பினர்களும் பாராட்டியதிலிருந்து நாடே அறிந்து கொள்ளும். சுதந்திரம் பெற்று 32 ஆண்டுகள் ஆகியும் ஸஸ்பென்ஷனில் இருக்கக்கூடிய அதாவது தாற்காலிக வேலை நீக்கத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு கட்டாயம் ஏதாவது ஒரு தொகை தரவேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வரவில்லை. மாடல் ஸ்டாண்டிங் ஆர்டர், மாதிரி நிலையாணையில் அரசு பிறப்பித்திருக்கிற உத்தரவு முதல் 90 நாட்களுக்கு 50 சதவீதம் என்றும் அதற்கு மேல் போனால் 75 சத

வீதம் என்றும் தரவேண்டும் என்று மாடல் ஸ்டாண்டிங் ஆர்டரில் இருக்கிறது. மாடல் ஸ்டாண்டிங் ஆர்டரில் இருக்கிற காரணத்தால் அந்தந்த நிறுவனங்களில் உள்ள ஸ்டர்ண்டிங் ஆர்டர்ஸில் இணைத்து விட வேண்டும் என்பதல்ல. ஆனால் முதலாளிகளோ, தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களோ டெப்டி லேபர் கமிஷனரிடம் 14 நாட்கள் நோட்டீஸ் கொடுத்து மாடல் ஸ்டாண்டிங் ஆர்டரில் உள்ளது போல் 90 நாட்கள் வரை பாதிச் சம்பளமும் 90 நாட்களுக்கு மேல் போனால் 75 சதவீதம் சம்பளமும் தரவேண்டும் என்று நிலையாணையைத் திருத்த வேண்டுமென்று விண்ணப்பித்திருப்பார்களேயானால் டெப்டி லேபர் கமிஷனர் மாடல் ஸ்டான்டிங் ஆர்டர்படி கொடுக்க வேண்டும் என்ற காரணத்தால் அப்படி தீர்ப்பு தந்து விடுவார்கள், தொழிலாளர்கள் பலன் பெற்றிருப்பார்கள். இந்த அரசின் வருத்தமெல்லாம், பெரிய தொழிற் சங்கங்கள் உள்பட பன்னெடுங் காலமாக தொழிற்சங்க இயக்கத்தில் அவர்கள் வாழ்நாட்களைக் கழித்து பல தியாகங்கள் செய்து அவர்கள் செய்த தியாகங்களைப் படித்துப் பார்த்தாலே பயந்து விடக்கூடிய அளவிற்கு, அச்சமுறக்கூடிய அளவிற்கு தியாகங்கள் செய்தவர்கள் எல்லாம் கூட அவர்களாக முன்வந்து இந்தத் திருத்தத்தைச் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. அதன் பலனாகத்தான் பெரும்பாலான தொழிற்சாலைகளில் ஸப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ், ஸஸ்பென்ஷன் செய்தால் பணம் முதலாளிகள் கொடுப்பதில்லை. முதல் 90 நாட்களுக்கு 50 சதவீதம், 90 நாட்களுக்குமேல் ஆகிவிட்டால் 75 சதவீதம் கொடுக்க வேண்டும். அதைக்கூட பெறுவதற்கு முதலாளிகளும் அதைச் செய்ய முன்வரவில்லை. பெரும்பாலான தொழிற் சங்கங்களும் முன்னுக்கு வரவில்லை. இதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோதுதான் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு நாள் சொன்னார்கள். ஏன் மாடல் ஸ்டாண்டிங் ஆர்டரை சேர்த்துவிடக் கூடாது என்று டிஸ்கஸ் செய்தோம். அப்போது அவர்கள் சொன்னார்கள், மாடல் ஸ்டாண்டிங் ஆர்டரில் சேர்த்து விட்டால் பிறகு அந்தந்த நிறுவனங்களின் சொந்த ஸ்டாண்டிங் ஆர்டரில் இணைப்பதும் இணைக்காமல் இருப்பதும் முதலாளிகள் அல்லது தொழிற்சங்கத் தலைவர்கள் செய்ய வேண்டிய வேலை. ஆகவே இதற்கு என்று ஒரு தனிச்சட்டம் கொண்டு வரவேண்டும் என்று அவர்கள் சொன்னதற்கேற்பத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் மிகப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் கேரளாவிலும் மகாராஷ்ட்ராவிலும்தான், இந்த இரு மாநிலங்களில்தான் இப்பேர்ப்பட்ட சட்டம் இருப்பதாகச் தெரிகிறது. **என் ஞாபகம் சரியானால் — If my memory does not betray me**, மூன்றாவதாக தமிழ்நாட்டில்தான் கொண்டுவருகிறோம். மூன்றாவதாக தமிழ்நாட்டில் கொண்டுவந்தாலும் தமிழகத்தில் முதன்





முதலாக இப்பேர்ப்பட்ட பாதுகாப்பு தரப்படுகிறது புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சியில்தான் என்பதைக் கூறுவதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. கு. ரமணி:** ஒரு 'பாக்ச்சுவல் ஏரரை' எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 1978-ல் வெஸ்ட் பங்கால் ஸப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் ஆக்ட் என்ற சட்டம் இருக்கிறது. என்பதை அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, அதற்காகத் தான் நான் ஏற்கனவே சொன்னேன். என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால் என்று சொன்னேன். அவர் சொல்வது சரியாக இருந்தால், அதை நாங்கள் பாராட்டத் தயாராக இருக்கிறோம். ஆனால், தமிழகத்தைப் பொறுத்வரையில் இதுவரை எத்தனையோ ஆட்சிகள் நடந்திருக்கின்றன. மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் பேசினார்கள். அவர்கள் மிக்க செல்வாக்குள்ள காங்கிரஸ்காரர். அவர்களுடைய ஆட்சி கூட நடந்திருக்கிறது. அவர்களுக்கு திருத்த வேண்டுமென்று எண்ணம் ஏற்படவில்லை. தொழிலாளர்களுக்கு இப்படி சலுகைகள் தரவேண்டுமென்று நினைக்கவில்லை. அதேபோல், பேசும் சப்ஜக்டோடு சுவை கலந்த பேச்சோடு, தியேட்ரிகள் ஆக்ஷனோடு பேசக் கூடியவர் அருமைச் சகோதரர் துரை முருகன் அவர்கள். அவர்கள் கட்சிகூட இந்த நாட்டை ஆண்டிருக்கிறது. அவர்களுக்குகூட இப்படி சஸ்பென்ஷனிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு சாப்பிடுவதற்கான சப்சிஸ்டென்ஸ் அலவன்சு கொடுக்கவேண்டும், உடலிலே உயிர் ஒட்டிக் கொண்டிருப்பதற்காக அவர்களுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணம் ஏற்படவில்லை. ஆனால், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்தபிறகுதான், 'பார் தி பர்ஸ்ட் டைம். அதாவது தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. (கைதட்டல்).

இதிலே இப்படி பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. முதல் 90 நாட்கள் சஸ்பென்ஷனிலே இருந்தால், அவர் முதலிலே வாங்கிய ஊதியத்தில் 50 சதவீதம் கொடுக்கவேண்டும்; அதற்குப் பிறகு, 180 நாட்கள் வரை 75 சதவீதம் கொடுக்கவேண்டும். இந்த 180 நாட்களைத்தாண்டி, ஒருவர் சஸ்பென்ஷனிலே இருந்தால், அவருக்கு 'புல் வேஜ்' அதாவது பூரா சம்பளமும், வேலை ஒன்றும் செய்யாமலேயே முழுச் சம்பளம் அவர் வாங்கலாம்,

**அம்மை குத்தும் சுகாதாரப் பணியாளர்களின் பணி ஒழுங்கீடு.**

*வினா எண்.427.—**திரு. கு. ரமணி:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்மை குத்தும் சுகாதாரப் பணியாளர்களை எட்டு ஆண்டுகள் பணியாற்றிய பிறகுதான் பணி ஒழுங்கு செய்யப்படுகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அம்முறையை மாற்றி பணியில் சேர்ந்ததிலிருந்தே மற்ற அரசு ஊழியர்களைப்போல் அவர்களையும் பாவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) ஆம்.

(ஆ) தற்போது இம்முறையை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, இப்போது பணியில் உள்ள அம்மை குத்தும் ஊழியர்கள் 8 ஆண்டுக் காலம் வரைக்கும் பணியாற்றியும் பணியாளர்களாக ஒழுங்கு படுத்தப்படவில்லை என்றும், அரசு பணியாளர்களுக்கு உள்ள உரிமைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லையென்றும் வேதனையோடு அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வசதிகளை எப்போதிருந்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** படிப்படியாக வசதிகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது அரசு. 12–5–75 இல் ஜி. ஒ. எம். எஸ். 1181 இல் To regularise fo the present the services of only 214 vacci ators of the National Small-Pox Eradication Prog amme, that is, only those who have put in more than 8 years of service, and to g ant the time-scale of pay of Rs. 170—5 -255 to the 214 vaccinators who have put in more than 8 years of service என்று எல்லாம் அவர்களுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் படிப்படியாக பல ஆணைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். படிப்படியாக அவர்களுடைய குறைகள் நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள விவரங்களே அந்த ஊழியர்கள் எவ்வளவு பரிதாபகரமான நிலைமையில் உள்ளார்கள் என்பதைக் காட்டுகிறது. வேக்சினேட்டர்ஸ், அம்மை குத்தும் பணியாளர்கள் நகரங்களிலும், கிராமங்களிலும் தெருத்தெருவாகச் சென்று நோயைத் தடுக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டு சமுதாயத்திற்குச் சிறந்த முறையிலே சேவை செய்யக் கூடியவர்கள், அவர்களுக்கு ஆரம்பச் சம்பளம் 165 என்றால்

இது எதற்காக? முதலாளிகள் 180 நாட்களுக்கு மேலாக ஒரு
வரை சஸ்பென்ஷனிலே வைக்காத ஒரு நிலையை உருவாக்க
வேண்டும், விரைவிலே அந்த விசாரணையை நடத்தி முடிப்ப
தற்கு ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தித்தினால்தான்
முழுச் சம்பளமும் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்
கிறோம். இந்தச் சலுகை எப்படி கொடுக்கப்பட்டிருக்கின்றது
என்பதைப் பார்க்கவேண்டும். ஒரு தொழிலாளி 6 மாதங்
களுக்கு மேல் சஸ்பென்ஷனில் வைக்கப்பட்டால், 'ஹிவில்
கெட் புல் வேஜ்' அதாவது முழு ஊதியமும் கொடுக்க
வேண்டும். அந்தச் சட்டத்தைத் தான் அரசு செய்திருக்கிறது.
புரட்சித் தலைவர் ஆட்சி என்ன செய்தது என்று சரித்திரத்தில்
எழுதப்படும்போது, இது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்
படும்; எழுதப்படும். இதுவும் அதிலே நிச்சயமாக இடம்பெறும்
என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த அளவுக்கு புரட்சியான
சட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். (கைதட்டல்).

நம்முடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர்
துரை முருகன் அவர்கள் விதிவிலக்கு கொடுப்பதைப் பற்றிச்
சொன்னார்கள். அவர்கள், அவர்களுடைய அனுபவத்தை, அவர்
கள் கட்சி ஆளும்போது நடந்த அனுபவத்தை வைத்துக் சொல்
கிறார். 'முதலாளிகள் பக்கம் விழுந்து விடுவார்கள்', 'முத
லாளிகள் பக்கம் சேர்ந்து விடுவார்கள்' என்றெல்லாம் சொன்
னார்கள். அது அவர்களுடைய பர்சனல் எக்ஸ்பீரியன்ஸ்.
அதிலே நான் தலையிட விரும்பவில்லை. எங்களைப் பொறுத்த
வரை, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். எந்த முதலாளி
கள் தயவிலேயும் இந்த ஆட்சி நடத்தத் தேவையில்லை. இந்த
ஆட்சியை நடத்தக்கூடியவர், வாரி வாரி வழங்கிய வள்ளல்,
சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர். கொடுத்து கொடுத்து
சிவந்த கரங்கள் என்ற காரணத்தினாலே என்று நான் பேசினேன்.
(குறுக்கீடு) நீங்கள் பேசும்போது நான் குறுக்கிடவில்லை.
நீங்கள் எவ்வளவோ அட்டாக் பண்ணினீர்கள். நான் பொறுமை
யாக தாங்கிக் கொண்டிருந்தேன். எனவே, குறுக்கிட வேண்
டாம். இந்த எக்ஸ்செம்ஷன் புரொவிஷனை நாங்கள் புதி
தாகக் கொண்டு வரவில்லை. ஏற்கனவே எல்லா சட்டங்களிலும்
இருக்கிறது. ஸ்டாண்டிங் ஆர்டர் ஆக்டிலே இருக்கிறது. அதை
நான் படிக்கிறேன்.

Section 14—Power to exempt.—The appropriate Government may by notification in the official Gazette exempt conditionally or unconditionally any industrial establishment or class of industrial establishment from all or any of the provisions of this Act.

இதே பிரிவு இருக்கக்கூடாது என்று பேசிய திரு. ரமணி
அவர்கள் பக்குவமாக, அரசியல் ரீதியாக இதை விமர்சனம் செய்
தார்கள். இந்த செக்ஷனையே அவருக்கு நான் காணிக்கையாக



வைக்கிறேன். திரு. துரை முருகன் அவர்கள் பாணி வேறு என்பதை நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். அந்த வகையில் இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டில் பல செக்ஷன்களை யொட்டி, இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதிலே செக்ஷன் 9 (பீ)யிலே,

9-B. Power of Government to exempt — Where the appropriate Government is of opinion that the application of the provisions of Section 9-A to any class of industrial establishments or to any class of workmen employed in any industrial establishment affect the employers in relation thereto so prejudicially that such application may cause serious repercussion on the industry concerned and that public interest so requires, the appropriate Government may, by notification in the official gazette, direct that the provisions of he said section shall not apply or shall apply, subject to such conditions as may be specified in the notification, to that class of industrial establishments or to that class of workmen employed in any industrial establishment.

அது மட்டுமல்ல. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், போனஸ் ஆக்டின் செக்ஷன் 36-ல் சட்டத்தில் இருக்கக் கூடிய குறைந்தபட்ச போனஸ்கூட கொடுக்கத் தேவையில்லை என்ற செக்ஷன் இருக்கிறது. ஆனால், புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டு, இதுவரையில் பல நிறுவனங்கள் எங்களுக்கு விதிவிலக்குத் தரவேண்டும், போனஸ் தர வேண்டியதில்லை என்று கேட்டிருந்தும், புரட்சித் தலைவர் அவர்கள் இதுவரையில் எந்த விதிவிலக்கும் தரவில்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே மிகப் பெருமையோடு, நெஞ்சை நிமிர்த்தி சொல்லிக் கொள்கிறேன். (கைதட்டல்). மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக சொல்கிறேன். எங்களுக்கிருக்கின்ற உணர்வெல்லாம் எந்தெந்த வகையிலே எவ்வளவு வேகமாக தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டுமோ அந்த அளவிற்கு செய்ய வேண்டும் என்பது தான்; அதற்காகத் தான் இப்படிப்பட்ட 'பெனபிசியல் லெஜிஸ்லேஷன்'' கொண்டு வந்திருக்கிறோம். எனவே இந்தச் சட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் ரமணி அவர்கள் சொன்னதின் பேரிலும், ஆறுமுகம் அவர்கள் சொன்னதின் பேரிலும், விதி விலக்கு என்பது இருக்கக் கூடிய ஒன்று, ஆகவே இந்த அரசை பொறுத்த வரையில் எந்தவிதமான பயமும் இருக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 500 ரூபாயைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பொறுத்த வரையில் தொழிலாளர் நல அமைச்சர்கள் கூட்டம் டெல்லியில் நடந்த போது அதை அதிகமாக உயர்த்த வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே மாண்புமிகு இளையபெருமாள்

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 மாாச் 7

அவர்கள் டெல்லிக்குப் போனால் அங்குள்ள தலைவரைப் பார்த்து அந்தச் சட்டத்தை அவசரமாக கொண்டுவரச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இதில் பொறுப்பு இருக்கிறது. டெல்லியிலே இருக்கிற ஆளும் கட்சி அந்தச் சட்டத்தை திருத்த இருக்கிறது. அந்தத் திருத்தம் வந்த பிறகு இங்கும் அந்த திருத்தம் 'ஆட்டோமேடிக்காக' திருத்தப்படும்.

பீனல் புரொவிஷனைப் பொறுத்த வரையில், இதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் முதலாளிகளாகத்தான் இருப்பார்கள். ஏன் என்றுச் சொன்னால் 50 சதவீதம், 90 சதவீதம் தரவேண்டும் முழு சம்பளமும் தரவேண்டும் என்று சொல்கிறோம். அதை தரவில்லை என்றால் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தினால், அதை வசூல் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும், இந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு யாரும் ஓடிவிட முடியாது என்று சொல்லி கொள்கிறேன்.

எந்த சட்டமாக இருந்தாலும் பீனல் கிளாஸ் இருக்கும் தண்டனை என்பது யாராவது இந்த சட்டத்தை மீறினால், அதாவது 50 சதவீதம் கொடுக்கவில்லை என்றால், 75 சதவீதம் கொடுக்கவில்லை என்று சொன்னால், அந்த 'கண்டின்ஜென்சியில்' தான் அந்த சூழ்நிலை ஏற்படும். அப்படி ஏற்படும் போது தண்டிக்காமல் இருக்க முடியுமா ? சொல்லியிருக்கக் கூடிய இந்த தண்டனை இருக்கட்டும். இந்த சட்டம் செயல்முறைக்கு வரட்டும். செயல்படுத்தி இன்னும் ஏதாவது திருத்தங்கள் தேவை என்று சொன்னால் நாம் அதை செய்து கொள்ளலாம் என்று சொல்லி, நேரம் அதிகம் ஆகிவிட்டது. விரைவிலே 'பாஸ்' செய்தால் தொழிலாளர்கள் பலன் பெறுவார்கள் என்ற காரணத்தால் இதை நிறைவேற்றித் தர கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''தமிழ் நாடு 1981-ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தங்களை தாங்கள் மொத்தமாக வாக்கெடுப்புக்கு விட்டுவிடலாம்.



1981 மார்ச் 7] [திரு. என். சங்கரய்யா]

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்
குறிப்பிட்டார்கள், இந்த விதிவிலக்கைப் பொறுத்தவரையில்,
அவரே படித்தவரையில் தொழில் பாதுகாக்கப்படும் என்பது
அதிலேயே இருக்கிறது. ஆனால் இப்போது அரசாங்கம் கொண்டு
வந்துள்ள மசோதாவில் பொது நலனை உத்தேசித்து தான்
இருக்கிறது. இரண்டாவது நாங்கள் கொடுக்கக்கூடிய திருத்தங்
களை அவரே சொன்னார்கள், எப்படி இந்த சட்டம் வேலை
செய்கிறது என்று பார்ப்போம் என்று; அரசாங்கம் இந்த
சட்டத்தை பரிசீலனை செய்யும்போது நாங்கள் கொண்டு
வந்த திருத்தங்கள் பொருத்தமானதா என்பதை அனுபவம்
அவர்களுக்கு எடுத்து காட்ட வேண்டுமென்பதற்காகவும், நாங்கள்
எங்கள் திருத்தங்களை வற்புறுத்தப் போகிறோம். திருத்தங்
களை தாங்கள் மொத்தமாக வாக்கெடுப்புக்கு விடலாம்.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.

'' பிரிவு 2 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

பிரிவு 2 (ஏ) (ii) ல் 500 ரூபாய் என்பதற்குப் பதிலாக ரூபாய் 1600 என்று சேர்க்கவும்.

பிரிவு 2 (சி) (i) ல் உள்ள ''மத்திய அரசின் அல்லது மாநில அரசின் ஓர் அலுவலகம் அல்லது துறை'' என்பதை நீக்கவும்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

பிரிவு 2: 2 (ஏ) பிரிவில் ''ஆனால் இதில் பின்வருவோர் அடங்க மாட்டார். என்ற வரியையும் (i) (i) என்ற பிரிவுகளையும் நீக்கவும்;

2 (பி) பிரிவில் ''கண்காணிக்கவும்'' என்ற வார்த்தையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக நிர்வாகம் (Management) செய்யவும்'' என்பதைச் சேர்த்துக் கொள்ளவும்.

திருத்தங்கள் முறைப்படி வழிமொழியப்பெற்றன.

திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

[1981 மார்ச் 7

(பிற்பகல் 1-40)

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

''மூன்றாவது பிரிவில் 2-வது உப பிரிவை முழுவதும் நீக்கி விடவும்.

3 (1)-ன் கீழ் உள்ள கடைசி பாராவில் 'பணியாளர் நேரடியாகப் பொறுப்பாகும் காரணங்களால் 'என்று ஆரம்பிக்கும் அப்பிரிவு முழுவதையும் நீக்கவும்.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்.

''3 (1) பிரிவின்கீழ் உள்ள 3-வது பாராவில் முதல் வரியில் வரும் குற்றவியல் நடவடிக்கை'' என்பதை நீக்கவும்.

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—''பிரிவு 4 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

4-வது பாராவில் முதல் பாராவிற்கு கடைசியில் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்ற வார்த்தைகளுக்குப் பிறகு கீழ்க்கண்டவற்றை சேர்க்கவும்.

'ஒரு பணியாளர் மனு கொடுத்து மூன்று மாதத்திற்குள் இந்நடவடிக்கைகளை எடுத்து பூர்த்தி செய்ய வேண்டும்.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.



1981 மார்ச் 7]

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்கண்ட வாசகங்களைச் சேர்க்கவும். ''பணியாளர் ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டும் விட்டாலும், தொழிலதிபரிடமிருந்து வாழ்க்கைப்படி தொகையை வசூலிக்கும் உரிமை எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 6.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 100, உள் விதி (2) இன் கீழ் திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. ஆர். கருப்பையா ஆகியோரின் திருத்தங்கள் ஏற்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் பிரிவை எதிர்த்து வாக்களிக்கலாம்.

பிரிவு 6 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 7, 8 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 9.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''பிரிவு 9 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

''9 ம் பிரிவில் முதலாவதாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் 'அல்லது' என்ற வார்த்தையை நீக்கவும்.

இரண்டாவது முறையாக 'அல்லது இவ்விரு தண்டனையும்' என்ற வார்த்தைகளை நீக்கவும்.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வி யுற்றது.

பிரிவு 9 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 10 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 11.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —

பிரிவு 11 சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

''பிரிவு 11 (1) வது பிரிவில் மூன்றாவது வரியில் வருகின்ற ஓர் அதிகாரியால் என்ற வார்த்தைக்குப் பிறகு 'அல்லது பாதிக்கப் பட்ட பணியாளர், என்பதைச் சேர்க்கவும்.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வி யுற்றது.

பிரிவு 11 பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 12.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி — ''பிரிவு 12 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்,''

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.



''பிரிவு 12 (1) வது பிரிவில் ஒன்றை என்ற வார்த்தைக்குப் பின்னால் 'ஒரு மாதத்திற்குள்' என்ற வார்த்தையைச் சேர்க்கவும்''

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வி யுற்றது.

பிரிவு 12 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 13 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற் றப் பெற்றது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 1 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

''பிரிவு 1 (3) அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ள குறிப்பிடக் கூடிய நாள் அன்று இது செயலுக்கு வரும் என்பதை நீக்கவும். 'இது உடனடியாக செயலுக்கு வரும்' என்பதைச் சேர்க்கவும்''

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வி யுற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர் களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை அனுமதிக்கிறேன் ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1981 ) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1981 மார்ச் 7

6. அறிக்கை அளித்தல்.

மின்சார விநியோகத்தில் கட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டப் பேரவை விதி 106 இன் கீழ் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச, இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை விதி 106-ன் கீழ் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன்.

கடந்த சில நாட்களாக மின் விநியோகத்தில் பல்வேறு இடங்களில் தடை ஏற்பட்டுள்ளது எனவும், ஒரே சீரான முறையில் மின்விநியோகம் இல்லாததினால் விவசாய மின் இணைப்புகளில் உள்ள பம்பு செட்டுகள் பாதிக்கப்பட்டன எனவும், பல்வேறு பகுதி விவசாய சங்கப் பிரதிநிதிகளிட மிருந்தும் சட்டப் பேரவை மேலவை உறுப்பினர்களிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளன.

மின் சக்தி ஒரு நாளைக்கு சுமார் 31 மில்லியன் யூனிட்டுகள் தேவைப்படுகின்றன. அனல் மின் நிலையங்களிலிருந்தும், நீர் மின் நிலையங்களிலிருந்தும், கேரள அரசிடமிருந்தும் நமக்கு மொத்த மாக 26.65 மில்லியன் யூனிட்டுகள் தான் கிடைக்கின்றன. எனவே பற்றாக்குறை நாளொன்றுக்கு சுமார் 4 35 மில்லியன் யூனிட்டுகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே சீரான மின் விநியோகம் கிராமப்புறங்களுக்கும் விவசாய மின் இணைப்புகளுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற் காக உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கான மின் விநியோகத்தில் கீழ்க்காணும் கட்டுப்பாடுகளை விதிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

1. சிமென்ட் உற்பத்தி ஆலைகளுக்கு உச்சத் தேவையிலும், மின் சக்தியிலும் 15 சதவிகித மின்வெட்டு அமுலாக்கப்படும்.

2. அத்தியாவசியமான பணிகளுக்கும் உச்சத் தேவையிலும் மின்சக்தியிலும் 15 சதவிகித வெட்டு அமுல்படுத்தப்படும் மாவு மில்களுக்கு விலக்களிக்கப்படுகின்றன.

3. பொதுப்பணிகளுக்கான உயர் அழுத்த மின் இணைப்பு களுக்கும் உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 30 சதவிகித மின் வெட்டு அமுல்படுத்தப்படும்.



1981 மார்ச் 7]

4. மூன்று ஷிப்டுகள் வேலை செய்யும் உயர் அழுத்தத் தொடரா முறைத் தொழிற்சாலைகளுக்கு உச்சத் தேவையில் 50 சத விகிதம் மின் வெட்டு அமுல் படுத்தப்படும். பயன்படுத்தும் மின்சக்தியில் தற்போது நடைமுறையிலுள்ள 30 சதவிகித வெட் டில் எவ்வித மாற்றமும் இல்லை.

5. அரசு ஆணைகளின் மூலம் அவ்வப்போது விலக்களிக்கப் பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கும் உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 15 சதவிகித மின் வெட்டு அமுல்படுத்தப்படும். அரிசி ஆலைகள் உபரி உற்பத்தியை அரசுக்குத் தருமானால் இதிலிருந்து விலக்களிக்க அரசு முன்வரும்.

6. புதிய உயர் அழுத்த மின் இணைப்புகளோ ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகளுக்கு கூடுதல் சுமையோ நிலைமைகள் சீர்படும் வரை வழங்கப்பட மாட்டாது.

7. அலங்கார விளக்குகளோ, ஆடம்பர விளக்குகளோ, பெயர்ப்பலகைகளில் விளக்குகளோ பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படும்.

மேற் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளினால் மின் சக்தியின் உபயோகம் ஓரளவிற்குக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற் குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளை அமுல் படுத்துவதன் மூலம் குறையக்கூடிய மின் சக்தியைக் கொண்டும், மற்ற நட வடிக்கைகளின் மூலம் கிராமப்புறங்களில் கீழ்க்காணும் வகையில் சீரான மின் விநியோகத்திற்கான ஏற்பாடுகள் அமுலாக்கப்படும்.

முதல் பிரிவு: காலை 6–00 மணி முதல் நண்பகல் 12–00 மணி வரை (6 மணி நேரம்),

இரண்டாவது பிரிவு: நண்பகல் 12 மணி முதல் மாலை 6 மணிவரை (6 மணி நேரம்)

மூன்றாவது பிரிவு: இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை (8 மணி நேரம்)

பிற்பகல் 1–50

இம்மூன்று பிரிவுகளுக்கும் 10 நாட்களுக்கு ஒரு முறை சுழல் முறையில் மாற்றி மாற்றி மின்சக்தி வழங்கப்படும்.

இந்தக் கட்டுப்பாடுகள் 9–3–81-ம் நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

## 7. அரசினர் தீர்மானம்.

**பேரவை நாள் குறிப்பிடப் பெறமல் ஒத்திவைக்கப்பெறுதல்.**

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

"பேரவை விதி 25 (1) ன் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைக்கப்பெறுகிறது."

பின்னர் பேரவை பிற்பகல் 1–51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

66. உடுக்குறியிடாத வினாக்களும்-விடைகளும் (எண்கள் 351 முதல் 500 வரை,

### (8) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### உடுக்குறியிடாத வினாக்கள்.

351—

### கோவில்களால் நடத்தப்பெறும் அன்பு இல்லங்கள்.

**வினா 351.—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டின் அனாதைச் சிறுவர்களுக்கென கோவில்களால் நடத்தப்படும் அன்பு இல்லங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் 1—3—1980 நாளன்றைய நிலவரப்படி உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?



**விடை—**

(அ) 43. (அரசின் கால் பங்கு நிதி உதவியுடன் 36. மற்றும் ஆலயங்களின் முழு ஆதரவில் 7.)

(ஆ) இந்த அன்பு இல்லங்களில் 1—3—1980 அன்று இருந்த சிறுவர் சிறுமியர்களின் எண்ணிக்கை 1,801.

### காயா நதியின் குறுக்கே பாலம்.

**வினா 352.—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டம், மல்லி பிர்க்கா, பிள்ளையார்குளம் கிராமம் உள்கடை வன்னியம்பட்டிக்கு அருகிலுள்ள காயா நதியின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**விடை—**

(அ) & (இ) திருவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் வன்னியம்பட்டி, படிக்காசுவைத்தான்பட்டி கிராமங்களுக்கு இடையில் காயல்குடி ஆற்றின் குறுக்கே கொத்தங்குளம் சாலையில் கி.மீ. 1/8-ல் பாலம் கட்டும் பணி ரூபாய் 1.50 இலட்சம் மதிப்பீட்டில் 1979—80 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பாகத் திட்டத்தில் (Part II Scheme) ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

### கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

**வினா 353.—திரு. கு. ரமணி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளுக்கான உடைகள் சலவை செய்ய 1979 ஆம் ஆண்டுக்கு எவ்வளவு பணம் செலவு செய்யப்பட்டன ?

(ஆ) இந்த வேலை காண்டிராக்ட் விடப்பட்டுள்ளதா ?

(இ) ஸ்டீம் லாண்டிரி ஏற்படுத்தி மருத்துவமனையிலேயே சலவை செய்ய நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளி களுக்கான உடைகள் சலவை செய்ய 1979 ஆம் ஆண்டு ரூபாய் 34,103 செலவு செய்யப்பட்டது.

(ஆ) ஆம்.

(இ) செயற்குறிப்பு ஏதும் இல்லை.

தஞ்சை மாவட்ட அரிசனங்களுக்கு தஞ்சையில் வீட்டுமனை வழங்கல்.

வினா 354.—திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1978-79, 1979-80 ஆம் ஆண்டுகளில் அரிசனங்களுக்கு நஞ்சையில் வீட்டுமனை எத்தனை நபர்களுக்கு வழங்கப் பட்டது ?

(ஆ) அவைகளில் எத்தனை மனைகளில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன ?

(இ) இதுவரை வீடுகள் கட்டப்படாத காலிமனைகள் எத்தனை ?

விடை—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1978—79-ல் 1,421 அரிசனங்களுக்கும் மற்றும் 1979—80-ல் 278 அரிசனங்களுக்கும், ஆக மொத்தம் 1,699 அரிசனங் களுக்கு நஞ்சையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) அவைகளில் 1978-79-ல் 37 மனைகளிலும், 1979-80-ல் 15 மனை களிலும் ஆக மொத்தம் 388 மனைகளில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(இ) 1978-79-ல் 1,048 காலி மனைகளிலும், 1979-80-ல் 263 காலி மனை களிலும் ஆக மொத்தம் 1,311 காலி மனைகளில் வீடுகள் கட்டப்படாமல் உள்ளன.

பெண் தொழிலாளர்களுக்குப் பிரசவகால விடுப்பு.

வினா 355.—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பிரசவ காலத்தில் சம்பளத்துடன் கூடிய பிரசவ கால விடுமுறை எத்தனை மாதங்கள் கொடுக்கப்படுகின்றன ?

(ஆ) பொதுத்துறையில் வேலை செய்பவர்களுக்கும் தனியார் துறை யில் வேலை செய்பவர்களுக்கும் கொடுப்பதில் வித்தியாசம் உண்டா ?

(இ) எவ்வளவு ? விவரம்.



விடை—

(அ) பெண் தொழிலாளர்களுக்குப் பிரசவ கால விடுப்பு பிரசவத்திற்கு முன் 6 வாரங்களும் பிரசவத்திற்குப் பின் 6 வாரங்களும் ஆக 12 வாரங்கள் சம்பளத்துடன் அளிக்கப்படுகிறது.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திண்டிவனம்-ஆவணிப்பூர் நகரப் பேருந்துப் பணி.

வினா 356.—திரு. என். முத்துவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம்-ஆவணிப்பூர் பஸ் பெரியார் போக்குவரத்துக் கழகத்தால் டவுன் பஸ் விடுவதற்கு (வழி) நொளம்பூர், கீழ்ச்சேவூர், ஆட்சி பாக்கம, ஆவணிப்பூர், பாங்குளத்தூர், கோனேரிக்குப்பம், சாரம், திண்டிவனம் ஆய்வு செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும் ?

விடை—

(அ) திண்டிவனம்-ஆவணிப்பூர்—

வழி : கொளம்பூர், ஆட்சிப்பாக்கம், கிழ்ச்சேவூர், திண்டிவனம்-ஆவணிப்பூர்.

வழி : சாரம், கோனேரிக்குப்பம், பாங்குளத்தூர்.

மேற்கண்ட இருவகை வழித்தடங்களிலும் நகரப் பேருந்து விடுவது குறித்து தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) புதிய பேருந்து பெறுவதைப் பொறுத்து மேற்கண்ட தடங்களில் பேருந்து வசதி செய்து தரப்படும்.

ஆற்காடு நகரப் பேருந்துகள் விடும் திட்டம்.

வினா 357.—திரு. அ. மு. சேதுராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் (1) வளவனூர்—ஆற்காடு, (2) கலவை—ஆற்காடு, (3) விஷாரம்-அத்தித்தாங்கல், (4) விஷாரம் (வழி) ஆற்காடு—தாமரைப்பாக்கம், (அ) விறையாத்தூர் ஆகிய நான்கு தடங்களிலும் அரசு, நகரப் பேருந்துகள் விடும் திட்டம் உள்ளதா ?

[1981 மார்ச் 7

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை விரைவுபடுத்தி, கிராம மக்களுக்கான போக்குவரத்துத் தொல்லை நீக்கப்படுமா?

விடை—

(அ) டெப்போ இல்லாத காரணத்தால் தற்போது முடியாது. அங்கு டெப்போ கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்பு ஆவன செய்யப்படும்.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

பழனி வட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கல்.

வினா 358.—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டத்தில், கஞ்சநாயக்கன்பட்டி, ஏரம நாயக்கன்பட்டி, லக்கக்கவுண்டன்வலசு, டி. கே. புதூர், ருக்காரப்பட்டி ஆகிய கிராமங்களில் வசிக்கும் அரிசனங்களுக்கு 30 ஆண்டுகளாய் வீட்டுமனைப் பட்டா கொடுக்காமலிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ)

* விவரங்கள் அடங்கிய பட்டியல் பேரவை முன் வைக்கப்படுகிறது.

## STEPS TO PREVENT EVASION OF TAX AT THE CHECK POSTS.

Q. 358—Thiru R. THAMARAIKANI: Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken by the Government to prevent the evasion of sales tax at the check posts.

Answer.—@ A statement is placed on the Table of the House.

* பக்கம் 700-ல் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@ பக்கம் 701-ல் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 மார்ச் 7]

வினா 360.—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பொது விற்பனைவரி, தமிழ்நாடு கேளிக்கை வரி, குதிரைப் பந்தய வரி ஏய்ப்புகளைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

† விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

பாலிடெக்னிக்கில் சேர பெற்ற மனுக்கள்.

வினா 361.—திரு. இல. பலராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) பாலிடெக்னிக்கில் படிக்க மாநில அளவில் வந்த மனுக்கள் எவ்வளவு?

(ஆ) எவ்வளவு பிள்ளைகளை 1980-81 ஆம் ஆண்டில் அதிகம் சேர்க்க அரசு ஆணை பிறப்பித்தது?

விடை—

(அ) 1980-81 ஆம் ஆண்டு பெறப்பட்ட மொத்த விண்ணப்ப மனுக்கள் 45,117.

(ஆ) 1,608.

திருவில்லிப்புத்தூர் வட்ட அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள மரங்கள்.

வினா 362.—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் சர்க்கார் புறம்போக்கிலுள்ள மரங்களை ஏன் 2-சி கணக்கில் சேர்ப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது?

விடை—

திருவில்லிப்புத்தூர் வட்டத்திலுள்ள சில கிராமங்களில், ஆறுகளில் ஏற்படும் வெள்ளத்தால் கரைகள் சேதப்படுத்தப்பட்டு, அரசு புறம்போக்கு நிலங்களும், பட்டா நிலங்களும் பாகுபடுத்த முடியாமல் உள்ளன. மேலும் நிலங்களைப் பிரிக்கும் நில அளவைக் குறிகளும் வெள்ளத்தால் அடித்துச்

† பக்கம் 703-ல் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

செல்லப்பட்டிருப்பதால் நிலங்களிலுள்ள மரங்கள் பட்டாதாரருக்கு உரியனவா அல்லது அரசைச் சேர்ந்தனவா என்று கண்டறிவது கடினமாக உள்ளது. இதுவே காலதாமதம் ஏற்படக் காரணமாகும். இருப்பினும் தன்சாபுரம் கிராமத்தில் அரசு புறம்போக்கில் உள்ள 243 மரங்கள் கண்டு பிடிக்கப்பட்டு 2-சி கணக்கில் இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ளன. அனைத்து புறம்போக்கு மரங்களையும் 2-சி கணக்கிற்குக் கொண்டுவரத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### எம்.எஸ்., எம்.டி. மேல்பட்டப் படிப்பிற்கு தேர்வு செய்யப்பட்டோர்.

வினா 363.—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1977 முதல் 1979 வரை எம்.எஸ்., எம்.டி. போன்ற மேல்பட்ட படிப்பிற்கு எத்தனை பேர்கள் தேர்வு செய்யப்பட்டு படித்தார்கள்?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் எத்தனை பேர்கள் தேர்வு செய்யப்பட்டனர்? ஆண்டு வாரியாக?

விடை—

(அ) ஆண்டு (ஆ) 1977 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை அரசு மருத்துவக் கல்லூரிகளில் அனைத்து பட்ட மேற்படிப்பு, பட்டயப் படிப்பு மற்றும் சிறப்பு நிலைப் பட்டயப் படிப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும், அவற்றில் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் எண்ணக்கையும் வருமாறு—

| ஆண்டு | சேர்க்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணக்கை. | சேர்க்கப்பட்டவர்களில் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1977 | 645 | 70 |
| 1978 | 750 | 76 |
| 1979 | 1,176 | 124 |





### வடஆற்காடு மாவட்டத்தில் இணைப்பு சாலைகள் இல்லாத கிராமங்கள்.

வினா 364.—திரு. இல. பலராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் இணைப்பு சாலைகள் இல்லாத பஞ்சாயத்து கிராமங்கள் எத்தனை?

(ஆ) மதுரா கிராமங்கள் எத்தனை?

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் சாலைகள் இல்லாத பஞ்சாயத்து கிராமங்கள்—39.

(ஆ) மதுரா கிராமங்கள்—196.

### வீடில்லாத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கையகப்படுத்தப்பட்ட நில அளவு.

வினா 365.—திரு. இல. பலராமன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடில்லாத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 1978—1979, 1979—1980 ஆகிய ஆண்டுகளில் கையகப்படுத்தப்பட்ட நில அளவு எவ்வளவு? மாவட்ட வாரியாக?

(ஆ) இதற்கென நஷ்ட ஈடாக வழங்கிய தொகை எவ்வளவு?

விடை—

(அ) மற்றும் (ஆ) *அவையின் முன்பு ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### குடிசைகளுக்கு சலுகை மூலம் வழங்கப்பெற்ற மின் இணைப்புகள்.

வினா 366.—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

குடிசைகளுக்கு மின் இணைப்புகள் சலுகை மூலம் இதுவரை எவ்வளவு வழங்கப்பட்டது. மின் திட்டங்கள் வாரியாக?

* பக்கம் 706-ல் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

விடை—

31—10—1980 வரை, 2,25,065 குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மின் திட்டம் வாரியான விவரம் வருமாறு—

| மின் திட்டம். | குடிசைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1 செங்கல்பட்டு | 17,322 |
| 2 தர்மபுரி | 13,991 |
| 3 பெரியார் | 8,292 |
| 4 கன்னியாகுமரி | 857 |
| 5 சென்னை (வடக்கு) | 1,716 |
| 6 சென்னை (தெற்கு) | 1,066 |
| 7 மதுரை | 19,959 |
| 8 மேட்டூர் | 13,111 |
| 9 புதுக்கோட்டை | 7,812 |
| 10 பைக்காரா | 2,916 |
| 11 ராமநாதபுரம் | 13,961 |
| 12 தென் ஆற்காடு | 20,034 |
| 13 தஞ்சாவூர் | 21,075 |
| 14 திருவண்ணாமலை | 12,351 |
| 15 திருநெல்வேலி | 14,088 |
| 16 திருச்சிராப்பள்ளி | 25,156 |
| 17 வேலூர் | 25,396 |
| 18 உடுமலைப்பேட்டை | 5,962 |
| மொத்தம் | 2,25,065 |

பாலில் நீர் கலந்து விற்றவர்கள் மீதான வழக்குகள்.

வினா 367.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலில் நீர் கலந்து விற்பனை செய்வதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) 1979-80 ஆம் ஆண்டில் பாலில் நீர் கலந்து விற்றதாகப் பதிவு செய்யப்பட்டு நீதி மன்றத்தில் எத்தனை வழக்குகள் தொடுக்கப்பட்டன?

(இ) அவற்றுள் எத்தனை விற்பனையாளர்களுக்கு என்ன தண்டனை வழங்கப் பெற்றுள்ளது?



விடை—

(அ) பாலில் நீர் கலந்து விற்பனை செய்வதைத் தடுக்க உணவு ஆய்வாளர்கள் மூலம் பால் மாதிரிகள் எடுக்கப்பட்டு உணவு பகுப்பாய்வுக் கூடங்களுக்கு ஆய்வுக்காக அனுப்பப்படுகின்றன. அதில் கலப்படமான உணவு மாதிரிகளுக்கு உள்ள சான்றிதழ்கள் அனுப்பப்பட்டு விற்பனை செய்தவர்கள் மீது நீதி மன்றங்களில் மைய அரசின் உணவு கலப்பட சட்டத்தின்படி (P.F.A. Act of 1954) வழக்குகள் தொடரப்பட்டு, தண்டனை வழங்கப்படுகிறது.

(ஆ) 1,558 வழக்குகள் தொடுக்கப்பட்டன.

(இ) நீதி மன்றங்களில் தீர்ப்பளிக்கப்பட்ட 1,397 வழக்குகளில் 780 விற்பனையாளர்களுக்கு கீழ்க்கண்ட தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன :—

| தண்டனை விவரம். | |
|---|---|
| அபராதம் மட்டும் | 552 |
| சிறைத் தண்டனை மட்டும் | 51 |
| அபராதமும் சிறைத் தண்டனையும் | 136 |
| இதர தண்டனைகள் | 41 |
| | 780 |

மீதமுள்ள 617 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

தேவக்கோட்டையில் ஆற்று மணல் எடுப்பதற்கான வரி விதிப்பு.

வினா 368.—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் தேவக்கோட்டையில் ஆற்று மணல் எடுப்பதற்கு வரி விதித்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரா?

விடை—

(அ) தேவகோட்டையில் ஆற்று மணல் எடுப்பதற்கு வரி விதிக்கப் படவில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

## திருப்பத்தூர் வணிகவரி அலுவலகக் கட்டிடம்.

வினா 369.—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரிலுள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தமான புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதை உடன் செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருப்பத்தூர், துணை வணிக வரி அலுவலர், வணிக வரி அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கான நில ஒதுக்கீடு செய்யும்படி திருப்பத்தூர் வட்ட ஆட்சியரையும், உதவி ஆட்சித் தலைவரையும் கோரியுள்ளார். அவ்வாறு நில ஒதுக்கீடு பெற்றவுடன் இது பற்றிய செயற் குறிப்பு அரசுக்கு வந்த பின் இதன் மேல் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## *Lip-stick Manufacturing Unit*

Q. 370.—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether Lip-stick manufacturing units are functioning in this State in (1) Public and (2) Private sector ; and

(*b*) If so, the details thereof ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இரண்டு தனியார் நிறுவனங்கள் மட்டுமே மாநில மருத்துவக் கட்டுப்பாட்டலுவலரிடம் உதட்டுச் சாயம் தயாரிக்க பதிவு செய்துள்ளன. ஆனால் இன்னும் உதட்டுச் சாயம் உற்பத்தியை தொடங்கவில்லை.

அரசுத் துறையில் எந்த நிறுவனமும் இல்லை.





## தமிழக நெசவாளர் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட நூல்களின் விலை.

வினா 371.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கைத்தறி-கதர் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

" நெசவாளர்களுக்கும், அவர்களது சங்கங்களுக்கும் விநியோகிப்பதற்காக எக்ஸ் மில் விலையில் தமிழகத்திற்கு எவ்வளவு பேல் நூல்கள் என்ன விலையில் முறையே 1978, 1979, 1980 ஏப்ரல் மாதங்களில் ஒதுக்கப்பட்டது? "

விடை—

1978, 1979, 1980 ஆம் ஆண்டுகளில் நெசவாளர்கள் சங்கங்களுக்கு வழங்கப்பட பேல்கள் மற்றும் விலைகள் விபரங்கள் கீழ் வருமாறு :—

பேல்கள்

| மாதம். (1) | 1978 (2) | 1979 (3) | 1980 (4) |
|---|---|---|---|
| ஜனவரி .. .. | 1,972 | 5,045 | 1,340 |
| பிப்ரவரி .. .. | 1,806 | 4,593 | 4,460 |
| மார்ச் .. .. | 1,938 | 4,461 | 4,518 |
| ஏப்ரல் .. .. | 1,922 | 3,323 | 5,750 |
| மே .. .. | 1,775 | 4,631 | .. |
| ஜூன் .. .. | 2,419 | கூட்டுறவு நூற்பாலைகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. | |
| ஜூலை .. .. | 1,914 | 1,741 | .. |
| ஆகஸ்டு .. .. | 2,159 | 4,700 | .. |
| செப்டம்பர் .. .. | 2,408 | 6,152 | .. |
| அக்டோபர் .. .. | 2 508 | 5,725 | .. |
| நவம்பர் .. .. | 2,944 | 4,225 | .. |
| டிசம்பர் .. .. | 3,652 | 4,390 | .. |
| | 27,417 | 48,980 | 16,068 |

* 710-ம் பக்கம் உள்ள இணைப்பு V-ஐக் காண்க.

### சுவாளப்பட்டி கிராம ஏரிக்கான துரிஞ்சல் ஆற்றுவாரத்துக் கால்வாயினைப் பழுது பார்த்தல்.

**வினா 372.—திரு. ந. வேணுகோபால் :** மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை வட்டாட்சி ஒன்றியம் சுவாளப்பட்டி கிராமத்தின் ஏரிக்கு துரிஞ்சல் ஆற்றில் இருந்து வரும் வாரத்துக் கால்வாய் பழுது பார்த்துத் தரவேண்டும் என்று பொதுப் பணித் துறைக்கு விண்ணப்பம் வந்துள்ளதா ?

விடை—

சுவாளப்பட்டி கிராமத்தின் ஏரிக்கு துரிஞ்சல் ஆற்றில் இருந்து வரும் வாரத்துக் கால்வாய் நல்ல நிலையில் உள்ளதால் இக் கால்வாயைப் பழுது பார்க்கும் அவசியம் தற்சமயம் இல்லை எனக் கருதப்படுகிறது.

### நடுக்காட்டூர் கீழ் அருணாசலபுரம் கிராமச் சாலை.

**வினா 373.—திரு. ரா. கு. பெருமாள் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விளாத்திக்குளம் புதூர் ஒன்றியம் நடுக்காட்டூர் கீழ் அருணாசலபுரம் கிராமச் சாலை அமைத்துக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கீழ் அருணாசலபுரத்திலிருந்து நடுக்காட்டூர் வரை கி. மீ. 0/0 முதல் 1, 2 முடிய சாலை அமைக்க 1974—75 ஆம் வருடம் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நிலத் தகராறுகள் காரணமாக பாதியிலேயே முடிக்கப்பட்டு இறுதியாக்கப்பட்டு விட்டது. இச்சாலையைத் தற்பொழுது அமைத்துக் கொடுக்க எந்தவித உத்தேசமுமில்லை.

### விஸ்வநாதபுரத்தில் உள்ள பிரம்பு-மூங்கில் தொழிலாளர்கள் சங்கம்.

**வினா 374.—திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் செங்கோட்டை விஸ்வநாதபுரத்தில் உள்ள பிரம்பு-மூங்கில் தொழிலாளர் சங்கத்திற்கு தேவையான மூங்கில் அரசு வனத்திலிருந்து வெட்டிக் கொள்வதற்கு சலுகை அளிக்கப்படுகிறதா ?



(ஆ) தனியார் ஏலம் கேட்கும் போட்டியால் இச்சங்கம் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(இ) சேத்தூர் போன்ற பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் ஏலம் விடுவது உண்மையா ?

(ஈ) இதனால் மற்றக் காடுகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) நெல்லை மாவட்டக் காடுகளில் மூங்கில் விளைவது சொற்பமே யாகையால், செங்கோட்டை விஸ்வநாதபுரம் பிரம்பு-மூங்கில் தொழிலாளர் சங்கத்திற்கு மூங்கில் வெட்ட அனுமதி கொடுக்கப்படுவதில்லை. தமிழ்நாடு வனத்துறை தொகுப்பு விதி 130-ன் படி 40 கி.மீ. வட்டத்திற்கு உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கே உரிமை வழங்க வேண்டும். இந்த விதியையும் தளர்த்தியே விஸ்வநாதபுரம் தொழிலாளர் சங்கத்திற்கு பிரம்பு கூப்பு ஒதுக்கப் பட்டுள்ளது. இதுவே அச்சங்கத்திற்குக் காட்டிய சலுகையாகும். வேறு சலுகை ஏதும் தனியாக வழங்கப்படவில்லை.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் கேட்கும் பிரம்புக் கூப்புகளை பொது ஏலத்தில் விற்கக்கூடாது என்று 24—8—1979 நாளிட்ட காடு-மீன் வளத் துறை எண் 909-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படாத பிரம்புக் கூப்புக்களை மட்டுமே, பொது ஏலத்தில் விற்கப்பட வேண்டும். ஆகையால் தனியாருடன் கூட்டுறவுச் சங்கங்கள் போட்டியிட வேண்டியுள்ளது என்ற நிலை ஏற்பட வாய்ப்பு இல்லை.

(இ) சேத்தூர் பகுதியில் பிரம்பு குறைவாக இருப்பதால் அவற்றிற்கு தனியான கூப்புகள் இல்லை. ஆகவே, அந்தப் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் பிரம்புக்காக மட்டும் ஏலம் விடுவதில்லை.

(ஈ) பொதுவாக காடுபடு பொருட்கள் அந்த அந்த கோட்டத் திட்டத்தில் வரையறுக்கப்பட்ட மூங்கில், பிரம்பு, ஈட்டா முதலியன மூன்று அல்லது நான்கு ஆண்டிற்கு ஒருமுறை வெட்டப்படும். ஆனால், இப் பொருட்களை ஏலத்தில் விற்பதால் காடு பாதிக்கப்படுகிறது என்று கூறுவது சரியாகாது. குத்தகைக்காரர்கள் வெட்டு விதிகளையோ அல்லது வேறு விதி களையோ மீறுவதாகக் காணப்பட்டால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

[1981 மார்ச் 7

### மாவட்ட வாரியாக நூலக ஆணைக்குழு நியமனம்.

வினா 375.—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நூலக ஆணைக்குழு மாவட்ட வாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) முறையாக அக்குழுக்கள் செயலாற்றி வருகிறதா ?

(இ) நூலகங்களுக்குப் புதிய புத்தகங்கள் விலைக்கு வாங்குவது எந்த அடிப்படையில் ?

(ஈ) புத்தகங்கள் வாங்குவதற்கு மக்கள் பிரதிநிதிகள் இடம் பெறுகிறார்களா ?

விடை—

(அ) புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் தவிர மற்ற எல்லா வருவாய்த்துறை மாவட்டங்களிலும் நூலக ஆணைக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் நூலக ஆட்சிக் குழு ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

(ஆ) மேற்கண்ட குழுக்கள் முழுநேர மாவட்ட நூலக அலுவலர்களின் கீழ், முறையாகச் செயல்பட்டு வருகின்றன.

(இ) அரசாணை எண் 2038, கல்வி, நாள் 28—12—1972-ன் படி, நூலக ஆணைக் குழுக்களுக்கு நூலக இணை மானியத்தில் 25 விழுக்காடு நல்ல நூல்களாக பொது நூலக இயக்கத்தினால் வாங்கி வழங்கப்படுகின்றன.

(ஈ) மாவட்ட அளவில் நூலக ஆணைக் குழுக்களே நேரிடையாகப் புத்தகங்களை வாங்குகின்றன. நூல்களை வாங்க அமைக்கப்பட்டுள்ள குழுவில் மக்கள் பிரதிநிதியாக நூல்களை உபயோகிப்போர்களில் ஒருவர் இடம் பெறுகிறார்.

### செய்யாறு தொகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி

வினா 376.—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடப் போவதில்லையென செய்யாறு தொகுதி வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு ஆசிரியர் மன்றம், அனைத்து ஆசிரியர் சங்கம் அறிவித்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



1981 மார்ச் 7]

விடை—

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், செய்யாறு வட்டத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியின் முதற்கட்டமான வீட்டுப்பட்டியல் மற்றும் தொழிற்பணியகப்பட்டியல் தயாரிக்கும் பணி 16—6—1980 முதல் 20—8—1980 வரை நடைபெற இருந்தது. இந்தப் பணிக்குத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொள்வதுபற்றி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மன்றம், செய்யாறு மற்றும் வெம்பாக்கம் கிளையைச் சேர்ந்த நிர்வாகிகள் 26—6—1980 ஆம் தேதியன்று கூடி விவாதித்து, மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடுவதில்லையென்று ஏகமனதாகத் தீர்மானம் செய்தார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விஷயம் அறிந்து உரிய நடவடிக்கைகளை எடுத்ததன் பெயரில் மீண்டும் 11—7—1980 ஆம் தேதியன்று செய்யாறு கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்ட வளர்ச்சி அலுவலர் ( (Divisional Development Officer) கோட்ட ஆட்சியாளர் )Revenue Divisional Officer) , அவர்கள் முன்பு, தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணிக்கு தங்கள் ஒத்துழைப்பை நல்குவதாக ஒருமனதாக உறுதி அளித்து, பணியைச் செவ்வனே முடித்துக்கொடுத்தார்கள்.

### வேஸ்ட் காட்டன் தொழிலாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டம்.

வினா 377.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேஸ்ட் காட்டன் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கச் சட்டமியற்றுமாறு அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### குடந்தை மருத்துவமனை.

வினா 378.—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்மையில் குடந்தையில் நடைபெற்ற மகாமகத் திருவிழாவை முன்னிட்டு குடந்தை மருத்துவமனை மூலம் செய்த செலவு மருத்துவத்துக்காக எவ்வளவு?

விடை—

அண்மையில் குடந்தையில் நடைபெற்ற மகாமகத் திருவிழாவை முன்னிட்டு குடந்தை மருத்துவமனை மூலம் செய்த செலவுத் தொகை ரூபாய் 3,47,420 ஆகும்.

### கீரனூர் அருகே ரூபாய் நோட்டு இரட்டிப்பு மோசடி.

வினா 379.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அருகே ரூபாய் நோட்டு இரட்டிப்பு மோசடி கும்பல் போலீசாரால் பிடிபட்டு உள்ளனரா?

(ஆ) ஆம் எனில், மேற்படி மோசடிக்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வழக்கு விசாரணையில் உள்ளது.

### பெருவழித்துறை சாலைகளில் உள்ள மரங்கள் பராமரிப்பு.

வினா 380.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருவழித்துறை சாலைகளில் உள்ள மரங்கள் எவ்வாறு பாதுகாத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன?

(ஆ) 1979 ஆம் ஆண்டு மகசூல்கள் தரும் மரங்கள் எவ்வாறு ஏலம் விடப்பட்டது?

(இ) 1979 ஆம் ஆண்டு மேற்படி மகசூல் ஏலத்தினால் அரசுக்கு எவ்வளவு வருவாய் கிடைத்தது?



விடை—

(அ) பெருவழித்துறை சாலைகளில் உள்ள மரங்கள், அத்துறையைச் சார்ந்த சாலை பணியாளர்கள் மூலம் பாதுகாக்கப்பட்டு பராமரிப்பு செய்யப்படுகின்றன. நர்சரிகளில் உருவாக்கப்பட்ட மரக் கன்றுகள் சாலைகளில் நடப்பட்டு சாலைப் பணியாளர்களால் ஒழுங்காக தண்ணீர் விட்டு பராமரிக்கப்படுகின்றன. பிராணிகளிடமிருந்து மரக்கன்றுகளைப் பாதுகாக்கும் பொருட்டு தடுப்புகள் வைக்கப்படுகின்றன. மரங்கள் முழுமையாக வளர்ச்சியடைந்த பின்னர் திருட்டுத்தனமாக வெட்டாமல் இருக்கும் பொருட்டு கண்காணிக்கப்படுகின்றன.

(ஆ) மரங்களின் மூலம் கிடைக்கும் மகசூல் ஒவ்வொரு ஆண்டும் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு ஏலம் விடப்படுகிறது. முந்தைய நான்கு ஆண்டுகளில் மரங்களின் மகசூல்கள் மூலம் கிடைத்த சராசரி வருவாயின் அடிப்படையில் ஏலத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது.

(இ) மரங்களின் மூலம் கிடைத்த மகசூல் ஏலம் விடப்பட்டதில் 1979-80 ஆம் ஆண்டு மொத்த வருமானம் ரூ. 15,36,750.93.

### மாறா மலைப்பகுதி கிராம்பு தோட்ட ஊழியர்களுக்கான குடியிருப்புகள்.

வினா 381.—திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

(அ) குமரி மாவட்டத்தில் மாறாமலைக்குப் பக்கத்தில் இருக்கும் கிராம்பு தோட்டத்தில் பணி புரியும் ரேஞ்சர்களுக்கும், ஊழியர்களுக்கும் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் கட்டப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். கீரிப்பாறையிலும் அதன் அருகில் உள்ள வாளயூத்துவயல் என்ற இடத்திலும் கட்டப்பட்டுள்ளது.

### கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் வழங்கல்.

வினா 382.—திரு. கி. அன்பழகன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு வங்கிகள் பெற்ற கடன்களைத் திரும்ப செலுத்துகின்ற விவசாயிகளுக்கு மீண்டும் கடனை உடனே பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளதா?

விடை—

வகை செய்யப்பட்டுள்ளது.

### உளுந்தூர் பேட்டையில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா 383.—திரு. க. ரங்கசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டையில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

உளுந்தூர்பேட்டையில் 27—10—1980 அன்று ஒரு தீயணைப்பு நிலையம் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றது.

### தமிழ்நாட்டில் வருவாய்த்துறை ஆய்வாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம்.

வினா 384.—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1979-80-ல் தமிழ்நாட்டில் வருவாய்த்துறை ஆய்வாளர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தின் மூலம் எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) 1980-81 ஆம் ஆண்டு எத்தனை வீடுகள் கட்டப்படும்?

விடை—

(அ) 150 குடியிருப்புக்கள் கட்ட ஆணையிடப்பட்டு 15—12—1980 முடிய 77 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

(ஆ) 1980-81 ஆம் ஆண்டில் 208 வீடுகள் கட்டப்பட உள்ளன.

### நெல் கொள்முதலில் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு கிடைத்த லாபம்.

வினா 385.—திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டில் நெல் கொள்முதல் செய்ததில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கிடைத்த லாபம் எவ்வளவு?

விடை—

1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரிசியாக்கி அந்தந்த ஆண்டிலேயே விற்கப்படவில்லை. 1977-78-க்கு முன்பு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரிசியாக்கி அவ்வாண்டில் விற்கப்





பட்டு உள்ளது. 1977-78-லும் 1978-79-லும் கொள்முதல் செய்ததிலிருந்து தயாரிக்கப்பட்ட அரிசி அடுத்த ஆண்டுகளில் விற்கப்பட்டுள்ளது. மேலும் நிர்வாகச் செலவு, வட்டி, கிடங்கு வாடகை, போக்குவரத்து செலவு போன்றவை, நுகர் பொருள் வாணிபக் கழகம் விற்பனை செய்யும் பல்வேறு பொருள்களுக்குப் பொதுவாக உள்ளது. அவற்றைப் பிரித்து கணக்கெடுக்க முடியாது. எனவே, நெல்லுக்கு மட்டும் இலாப, நட்டத்தைக் கணக்கிட முடியாது.

### தஞ்சை மாவட்டத்தில் அனுமதி வழங்கப்பெற்ற புதிய பேருந்து வழித் தடங்கள்.

வினா 386.—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1978—79 மற்றும் 1979—80 வரை எத்தனை வழித்தடங்களில் புதிய பேருந்து விட அனுமதி வழங்கப்பட்டது?

(ஆ) அவற்றுள் போக்குவரத்துக் கழகத்திற்கும் தனியார்களுக்கும் முறையே எத்தனை?

விடை—

(அ) மற்றும் (ஆ).

| ஆண்டு | போக்குவரத்துக் கழகங்கள் | தனியார் | மொத்தம். |
|---|---|---|---|
| 1978-79 | 49 | 15 | 64 |
| 1979-80 | 115 | 16 | 131 |

### நிலவள வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் தள்ளுபடி சலுகை பெற்றவர்கள்.

வினா 387.—திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவள வங்கி மூலமும், கூட்டுறவு வங்கி மூலமும் கடன் தள்ளுபடி சலுகை பெற்றோரின் எண்ணிக்கை 31—3—1980-ல் எத்தனை பேர்?

(ஆ) இதனால் அந்த இரு நிறுவனங்களுக்கும் ஏற்பட்ட இழப்புத் தொகை இனவாரியாக எவ்வளவு?

விடை—

(அ) நிலவள வங்கி மூலமும், கூட்டுறவு வங்கி மூலமும் 31—3—1980 வரை யாருக்கும் கடனில் அசல் தள்ளுபடி சலுகை அளிக்கப்படவில்லை. ஆனால் 30—6—1978 அன்று தவணை தவறி நிலுவையிலிருந்த ரூபாய்

கால, மத்திய கால, நீண்டகால விவசாயக் கடன்களுக்கு 30—6—1979 வரை உரிய அபராத வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டது. 30—6—1977 முதல் 30—6—1979 வரை வசூல் செய்யப்பட்ட அபராத வட்டி உறுப்பினர்களுக்குத் திருப்பித் தரப்பட்டது. இவ்வாறு சலுகை பெற்றவர்களின் எண்ணிக்கை 3.10 இலட்சம்.

30—6—1978ல் நிலுவையிலிருந்து எல்லா நடுத்தர கால மாற்று வசதி மற்றும் நடுத்தர காலமாற்று வசதி திருத்தி அமைக்கப்பட்ட விவசாயக் கடன்கள் மீதான சாதாரண வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. இச்சலுகை பெற்றவர்களின் எண்ணிக்கை 2.89 இலட்சம்.

(ஆ) இச்சலுகையில் சம்பந்தப்பட்ட தொகையை அரசே இச்சங்கங்களுக்கு அளித்ததால் அவைகளுக்கு இழப்பு ஏதும் இல்லை.

### கோபி நகரமன்ற மேல் நிலைப் பள்ளிக்கான ஆய்வுக்கூடம்.

வினா 388.—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி நகர மன்ற மேல் நிலைப்பள்ளிக்கு ஆய்வுக்கூடம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது முடிவடையும் ?

விடை—

(அ) இப்பள்ளியில் ரூ. 1,82,000 செலவில் வகுப்பு அறைகளும், சோதனைக் கூடங்களும் கட்டுவதற்கான மதிப்பீட்டைத் தயாரித்து நகராட்சி ஆணையாளர் அரசுக்கு நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசு நிர்வாக ஒப்புதல் அளித்த பின் இவ்வேலை பொதுப் பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு செயல்படுத்தப்படவிருக்கிறது.

### கீழ்ப் பென்னாத்தூர் ஏரி மதகுகள்.

வினா 389.—திரு. கே. நாராயணசாமி செட்டியார் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை தாலுகா, கீழ்ப்பென்னாத்தூரில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரியின் மதகுகள் சரியானபடி பொருத்தப்படாததால் தண்ணீர் வீணாகப் போவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்றால் எப்பொழுது மதகுகள் பொருத்தப்படும் ?



விடை—

(அ) ஆம், தல அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வு செய்ததில் ஏரியிலுள்ள மதகு கம்பியும் மதகு கட்டையும் மதகுகளிலிருந்து காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

(ஆ) புது மதகு கட்டையும் மதகு கம்பியும் பொருத்த ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வேலை விரைவில் முடிக்கப்படும்.

### மதுராந்தகத்தில் தீயணைப்பு நிலையம்.

வினா 390.—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் நகரத்தில் தீயணைப்பு நிலையம் ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுராந்தகத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் துவங்க அரசு நிலை ஆணை எண் 2661, உள்துறை, 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10 ஆம் நாள் அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான நிலத்தினைத் தேர்வு செய்யவும், புதிய தீயணைப்பு ஊர்தி நின்று கட்டுமானம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### காஞ்சிபுரம் கோட்டாட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம்.

வினா 391.—திரு. பி. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் கோட்டாட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம் கட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[1981 மார்ச் 7

## தமிழ்நாட்டில் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை.

வினா 392.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1980 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழகத்தில் பல்வேறு மத்திய சிறைச் சாலைகளில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

கோரிய விபரங்கள் வருமாறு.

| வரிசை எண்ணும், மத்திய சிறையின் பெயரும். | ஜூலை 1980-ல் அடைக்கப் பட்ட கைதிகளின் சராசரி எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 வேலூர் | |
| 2 திருச்சிராப்பள்ளி | 1,199 |
| 3 சென்னை | 1,455 |
| 4 கோயம்புத்தூர் | 2,143 |
| 5 சேலம் | 2,184 |
| 6 மதுரை | 283 |
| 7 கடலூர் | 1,580 |
| 8 பாளையங்கோட்டை | 864 |
| 9 மாநில மகளிர் சிறை, வேலூர் | 1,002 |
| | 198 |
| | 10,[illegible] |





## விதவைகளுக்குத் தையல் இயந்திரம் கொடுக்கும் திட்டம்.

வினா 393. திரு. க. கோபாலகிருஷ்ணன்—மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) விதவைகளுக்கு தையல் மிஷின் கொடுக்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில் அமுலில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இதுவரை எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது ?

(இ) எந்தத் தகுதி அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 319 விதவைகள்.

(இ) 20 முதல் 40 வயதுள்ள, தையல் கலையில் பயிற்சி பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் இயந்திரம் கொடுக்கப்பட்டு வருகிறது.

## வேலூர் அறிஞர் அண்ணா கலையரங்கம்.

வினா 394.—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அறிஞர் அண்ணா கலையரங்கின் 1979–80 மார்ச் முடிய மொத்த வசூல் என்ன ?

(ஆ) நிகர வசூல் என்ன ?

(இ) செலவு போக இலாபம் என்ன ?

விடை—

(அ) ரூபாய் 3,74,656.75

(ஆ) ரூபாய் 3,74,656.75 (இவ்வரங்கு வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் மொத்த வசூலும் நிகர வசூலும் ஒன்றே.)

(இ) ரூபாய் 1,21,870.84 (இவ்வரங்கு லாப நோக்கத்தில் நடத்தப்படுவதல்ல.)

தென்னாற்காடு மாவட்ட அரிசனங்களுக்கு பட்டா வழங்குதல்.

வினா 395. திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், காட்டுமன்னார்குடி தாலுக்கா, ஈச்சம்பூண்டி ரெட்டியூர்-ராஜ சூடாமணிபிள்ளையார் தாங்கல், ம.குளக்குடி ஆகிய கிராமங்களில் அரிசனங்கள் குடியிருந்துவரும் இடங்களை பட்டா செய்து கொடுக்கும் திட்டம் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

*(அ) மற்றும் (ஆ) விபரங்கள் அடங்கிய பட்டியல் பேரவை முன் வைக்கப்படுகிறது.

கிராம மக்களுக்கு சர்க்கரை விநியோகம்.

வினா 396.—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம மக்களுக்கு 5 கிலோ சர்க்கரை விநியோகிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுதிலிருந்து அமுல் செய்யப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கிராமப்புறங்களில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரையின் அளவை உயர்த்துவது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

வினா 397—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் உள்ளவர்களுக்கு '' ரேசன் கார்டு '' மூலம் கொடுக்கப்படும் சீனியின் அளவு உயர்த்தப்படுமா ?

விடை—

கிராமப்புறங்களில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரையின் அளவை உயர்த்துவது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

*பக்கம் 715-ல் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



சோளிங்கர் அரசு மருத்துவ மனையை விரிவாக்கும் திட்டம்.

வினா 398.—திரு. சி. கோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கர் கிராமத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனையை மேலும் விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே கருவி பொருத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை—

(அ) இம்மருத்துவமனையில் கூடுதலாக 20 படுக்கைகள் கொண்ட சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்கம், பிரசவ அறை போன்றவைகள் கட்டுவதற்காக ரூபாய் 4.35 லட்சம் அங்கீகரித்து 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் நாள் அன்று உத்திரவிடப்பட்டுள்ளது.

(ஆ) தற்சமயம் இல்லை.

சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணா நகர் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பெற்ற வீடுகள்.

வினா 399—திரு. வெ. இராஜசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஜூலை 31ந் தேதி முடிய சென்னை டாக்டர் இராதாகிருஷ்ண நகர் தொகுதியில் குடிசைமாற்று வாரியத்தால் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன?

(ஆ) அவற்றில் முறையாக குடியமர்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) எந்த தகுதி அடிப்படையில் குடியேற்றப்படுகிறார்கள்?

(ஈ) கட்டிக் கொண்டிருக்கின்ற வீடுகளின் எண்ணிக்கை எத்தனை?

விடை—

(அ) 1980 ஜூலை 31ந் தேதி முடிய சென்னை டாக்டர் இராதாகிருஷ்ண நகர் தொகுதியில் 1,372 குடியிருப்புகள் கட்டப்பட்டன.

(ஆ) முறையாக குடியமர்த்தப்பட்டவர்கள் 1,285 பேர்கள்.

However, written test has already been held. அதையும் ஏற்கனவே 1978 ஆம் ஆண்டு நடத்தியிருப்பதால் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நாம் அவர்களைக் கேட்டு Change the date of enforcement. Section 17 retrospective effect இல்லாமல் மாற்றியமைக்க முடியுமா என்பது பற்றி மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். நல்ல பதிலை மத்திய அரசு உடனடியாகத் தரும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, சித்த மருத்துவ முறை என்பது நம்முடைய தமிழகத்திற்கே உரிய முறை. தமிழ் மாணவர்கள் தமிழ் மருத்துவ முறைக்குத் தேர்வு எழுதியிருக்கிறார்கள். இதற்கு அங்கீகாரம் மத்திய அரசிலிருந்து வர வேண்டுமென்ற முறையை மாற்றித் தமிழக அரசே இதற்கு அங்கீகாரம் கொடுத்துப் பதிவு செய்யும் அதிகாரத்தைப் பெறுவதற்கான முயற்சியை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்கே பிரச்னை வருகிறது என்றால்,

Indian Medicines Council Central Act 1970 என்று ஒரு சட்டம் இருக்கிறது. அதில் எல்லாவற்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'Whether it is possible to take it away from the Central Act and delink it form the Central Act, that is the point on which we have to make a detailed examination.

அரசு காச நோய் மருத்துவமனை, திருவண்ணாமலை.

*வினா எண். 429.—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலையில் உள்ள அரசு காசநோய் (மார்பு) மருத்துவமனையில் உள்ள படுக்கைகளை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அந்த திட்டம் செயல்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலையில் உள்ள காச நோய் மருத்துவமனையில் கட்டிட வசதிகள் இருக்கின்றன ; படுக்கை விஸ்தரிப்புதான் செய்ய வேண்டும். ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள காச நோய் வியாதியஸ்தர்களுக்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள, படுக்கை விஸ்தரிப்பை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே காச நோய் படுக்கைகளை மேற்கொண்டு அதிகப்படுத்துவதற்கானத் திட்டம் எதுவும் இல்லை. திருவண்ணாமலையிலுள்ள அரசு காச நோய் மருத்துவ மனை முழு வசதியுடன் இயங்குகிறது. காச நோய் நோயாளிகளுக்கு, இலவச வீட்டு சிகிச்சை வசதிகள் இம்மருத்துவ மனையில் கிடைக்கின்றது. மற்றவர்களுக்குப்புதிதாக Ampulatory treatment for Tuberculosis patients under WHO Scheme இல்ல நர்சிங்ஹோம் அல்லது சானட்டோரியத்திலே டிரீட்மெண்ட் இல்லாமல், ஒரல் மருந்து கொடுத்து ஒரு வாரத்தில் அனுப்பக் கூடிய திட்டம் தான் இப்பொழுது அமுலில் இருக்கிறது. உலகெங்கும் அது ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே நாம், அங்கே வரக் கூடிய ஏராளமான புற நோயாளிகளுக்கு அவுட் பேஷண்டுகளுக்கு- மருந்து கொடுத்து அனுப்பிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்தப் படுக்கைகளை ஜாஸ்தியாக்க வேண்டிய திட்டம் எதுவும் அரசினுடைய பரிசீலனையிலே இல்லையென்று சொன்னேன்.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் புற நோயாளிகளுக்கு மருந்து கொடுத்து அனுப்பப்படுகிறது என்று கூறினார்கள். புற நோயாளிகளுக்கு மருந்து கொடுத்து அனுப்புவதோடு, அங்கே இருக்கும் படுக்கையிலே இருக்கிற நோயாளிகளுக்குப் போதுமான மருத்துவ வசதிகள் இல்லை. அந்த வசதியைப் பெருக்க வேண்டுமென்பது தான் என்னுடைய கேள்வி. ஆகவே, அரசு அது குறித்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கிடையில் முழு வசதி கொண்ட 124 படுக்கைகள் கொண்ட அரசு காச நோய் சானட்டோரியம் பெண்ணாத்தூரிலே இயங்கி வருகிறது. அது பக்கத்திலேதான் இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மருத்துவ மனையிலிருக்கிற வசதிகளை இன்னும் கொஞ்சம் ஜாஸ்தியாக்க முடியுமா என்று கேட்கிறார்கள். நிதி நிலைமையை யெல்லாம் பார்த்து, நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு வற்புறுத்திக் கேட்பதன் காரணமாக, we will re-examine the whole thing.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே பெண்ணாத்தூரில் இருக்கிறது என்று சொன்னார்கள். பெண்ணாத்தூர் என்பது வேலூருக்கு அருகாமையிலே இருக்கிற மருத்துவ மனை. திரு வண்ணாமலைக்கும் அதற்கும் 50 மைல் தூரம் இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கே தெரியும், காச நோய்க்கு மருந்துமட்டும் கொடுத்து விட்டால் போதாது, சத்தான உணவும் தேவை. பெரும்பாலும் ஏழை மக்கள் தான் காச நோயினால் பாதிக்கப் படுகிறார்கள். அவர்கள் 50 மைல் தூரம் சென்றாலும் இடமே கிடைப்பதில்லை. அதையெல்லாம் மனதிலே கொண்டு வட ஆற்காடு மாவட்டத்தினுடைய தென் கோடியான திருவண்ணா மலையிலே உள்ள அந்த மருத்துவமனை பேரறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மருத்துவமனை என்பதையும் முக்கியமாகக் கருதி, அங்கே படுக்கை வசதிகளை ஏற்படுத்தி, நோயாளிகளையும் சேர்த்து, உணவு, மருந்து வகைகளைக் கொடுத்து, அவர்களைக் கவனிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் முன்பு கேட்ட கேள்விக்கு, நான் ஒரு "அஷூரன்ஸ்" மாதிரியாகக் கொடுத்திருக்கிறேன். We will re-examine என்று நான் கொடுத்திருக்கிறேன். அரசாங்கத்தினுடைய ஏஜென்சி மூலமாக நாம் செய்ய முடியவில்லையென்றாலும்கூட, Tuberculosis Association என்று இருக்கிறது. அதற்கு நல்வாழ்வுத் துறை அமைச்சர் தலைவராக இருக்கிறார்கள். Not exactly a statutory one but quasi-statutory one அது அந்தத் துறையிலே கொஞ்சம் பணம் இருக்கிறது. அதிலே, ஏதாவது கொஞ்சம் டைவர்ட் செய்து, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தை நேரடியாக எழுதிக் கொடுப்பார் களானால், அதிலே ஏதாவது செய்ய முடியுமா என்று நான் ஆராய்கிறேன்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே நாட்டில் காச நோய் அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, ஒவ்வொரு தாலுகா மையத்திலும் காச நோய்க்கென மருத்துவ மனைகளில் தனியாக வார்டுகள் ஏற்படுத்தி தீவிர சிகிச்சை செய்ய அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மருத்துவ மனையிலும் கூட, காச நோயாலே அவதிப்படுபவர்களுக்கு ஒரு எமர் ஜன்சி டிரீட்மெண்ட், உடனடியாக செய்வதற்கு வழியிருக் கிறது. Hemaptisis septrum வரக்கூடிய நேரத்திலே, அதற்கு



வைத்தியம் செய்துவிட்டு, பிறகு கொஞ்சம் சரியான நிலைமைகள் ஏற்பட்டதற்கு பிறகு, அந்த இடத்திலேயிருந்து காச நோய் மருத்துவ மனைக்கு டிரான்ஸ்ஃபர் செய்து, அந்த இடத்திலே அவர்களுக்கு வைத்தியம் செய்து கொண்டிருக் கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினை, அந்த அளவு நல்ல வகையிலே தான் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படுக்கைகளை இன்னும் அதிகப் படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அவைகளை யெல்லாம் அவசியமாகக் கவனிப்போம்.

(முற்பகல் 10—20)

## தேனித் தொகுதியில் நகரப் பேருந்து வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகள்.

*வினா எண். 430 : திரு. வே இரா. ஜெயராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தேனி—ஓடைப்பட்டி, தேனி—கோவிந்தநகரம், கம்பம்—எரசக்கநாயக்கனூர், கம்பம்—புலிகுத்தி ஆகிய வழித்தடங்களில் கூடுதல் நகரப் பேருந்து வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தேனி—கோவிந்தநகரம் வழித்தடத்தில் மட்டும் இரண்டு கூடுதல் பேருந்துகள் அனுமதிக் கப்பட்டுள்ளன. இதர மூன்று வழித்தடங்களிலும் தற்போது உள்ள போக்குவரத்து வசதியே போதுமானதாக உள்ளது.

## திருவாடானைத் தொகுதியில் மினி பேருந்துப்பணி:

* வினா எண். 431 : திரு ச. அங்குசாமி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா?

(அ) திருவாடானைத் தொகுதியில் மினி பேருந்து விடும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை. (ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) 1970-ஆம் ஆண்டு சென்னையிலுள்ள 1,202 குடிசை பகுதிகளும் கணக்கெடுக்கப்பட்டு, குடிசை வாசிகளுக்கு அடையாளக் கார்டும் மற்றும் புகைப்படமும் எடுத்து வழங்கப் பட்டுள்ளன. அந்தந்த திட்டப்பகுதியில் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கும்பொழுது அங்கு வசிக்கும் குடிசைவாசிகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(1) கட்டிடம் கட்ட ஆரம்பிக்கும் பொழுது தனது குடிசையை அகற்றிகொடுத்து அதனால் கருணைத்தொகை பெற்ற குடிசைவாசிக்கு முதலுரிமை கொடுக்கப்படுகிறது;

(2) 30—6—1977-ல், தான் குடிசைவாசி என்பதற்கு ஆதாரமாக ரேஷன் கார்டோ, வாக்குரிமைச் சீட்டோ அல்லது தேதியுடன் முத்திரை பதித்த தபால் கடிதம் வைத்திருப்போருக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(ஈ) 588 குடியிருப்புகள் தற்பொழுது கட்டப்பட்டுவருகின்றன.

## தர்மபுரி நகராட்சி எல்லைக்குள் ஏழைகளுக்கு நிலங்கள் பட்டா செய்து கொடுத்தல்.

வினா 400:—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தர்மபுரி நகராட்சியின் எல்லைக்குள் உள்ள புறம்போக்கு நிலங்களில் நீண்டகாலமாக குடியிருக்கும் ஏழைகளுக்கு பட்டா செய்து தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) & (ஆ) தர்மபுரி நகராட்சியின் எல்லைக்குள் உள்ள கீழ்க்கண்ட சர்வே எண் உள்ள உரிமை துறக்கப்பட்ட இரயில்வே நிலங்களை அதில் நீண்டகாலமாகக் குடியிருக்கும் ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது :

| கிராமம். | சர்வே எண். |
|---|---|
| வெள்ளேகவுண்டன்பாளையம். | 25, 390, 249பி, 253/3பி1, 265ஏ, 266ஏ, 290பி, 291/பி 292/3, 294பி, |
| பழைய தர்மபுரி .. .. | 545, 543, 544. |

மேலே கண்ட நிலங்களில் 366 நபர்களுக்கு வீட்டு மனை அடமானம் செய்ய தர்மபுரி வட்டாட்சியரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



## அரியலூர் சிமெண்ட் ஆலை.

வினா 401— திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் சிமெண்ட் ஆலையில் துணை தொழிலாக கல்நார் கூரை தகடுகள் (Asbestos sheet) வெள்ளை களி மண்ணிலிருந்து (White Day) பீங்கான் (Ceramic) பொருட்கள் உற்பத்தி செய்யும் திட்டத்தை அரசு மேற்கொள்ள உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## காரைக்குடி நகராட்சிக்கு சொந்தக் கட்டிடம்.

வினா. 402—திரு. சி. ந. சிதம்பரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடம் கட்டுவது குறித்து முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்த அளவில் இருக்கிறது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## மின்விபத்தினால் இறந்தவர்கள்.

வினா. 403—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியத்தில் மின் விபத்தினால் கடந்த ஐந்து ஆண்டுகளில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இறந்தவர்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில் எத்தனை பேருக்கு?

விடை—

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் அதாவது 1—4—1975 முதல் 31—3—1980 வரையில் மின் வாரியத்தில் மின் விபத்தினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 288 (இருநூற்று எண்பது எட்டு).

(ஆ)ஆம், வேலைக்கு வேண்டிய வயதும், தகுதியும் பெற்றிருந்தவர்களுக்கு விண்ணப்பித்திருந்தால் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) 31—12—1979 வரை, 72 பேர்களுக்கு மின் வாரியத்தில் வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

**சென்னை மாவட்டத்தில் ஓய்வூதியம் கேட்டு வரப்பெற்ற விண்ணப்பங்கள்.**

வினா 404—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) 1978–79, 1979–80 ஆண்டுகளில் சென்னை மாவட்டத்தில் முதியோர் ஓய்வூதியம், உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியம், விதவைகள் ஓய்வூதியம் கேட்டு வரப்பெற்ற விண்ணப்பங்கள் எவ்வளவு?

(ஆ) அவைகளில் எத்தனை அனுமதிக்கப்பட்டவர்கள்?

விடை—

முதியோர் உதவித் தொகை கேட்டு விண்ணப்பம் செய்துள்ளவர்களின் எண்ணிக்கை—

| | 1978–79 | 1979–80 |
|---|---|---|
| முதியோர் உதவித்தொகை .. | 2,244 | 2,917 |
| விதவைகள் உதவித்தொகை .. | 1,288 | 3,354 |
| உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை. | 287 | 447 |

உதவித்தொகை பெற்ற நபர்களின் எண்ணிக்கை—

| | | |
|---|---|---|
| முதியோர் உதவித்தொகை .. | 255 | 737 |
| விதவைகளின் உதவித்தொகை, | 370 | 362 |
| உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை. | 27 | 45 |



**கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கான வசதிகள்.**

வினா 405—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் (Divisional Development Officers) க்கு ஜீப் வசதி, போன் வசதி, வீட்டு வசதி செய்து கொடுக்கப்படுமா?

விடை:

கோட்டாட்சித் தலைவர்களின் அலுவலகக் கட்டிடங்களுக்குள் இயங்கிவரும் கோட்டவளர்ச்சி அலுவலர்கள் மேற்படி கோட்டாட்சித் தலைவர்களின் அலுவலகங்களில் உள்ள தொலைபேசிகளை தற்போது பயன்படுத்தி வருகின்றனர். வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் கோட்ட வளர்ச்சி அலுவலகங்களுக்குத் தனியாகத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. மற்றும் இவர்களுக்கு ஜீப் வசதி செய்து தருவதற்கான கருத்து அரசின் ஆய்விலுள்ளது வீட்டு வசதி செய்து தருவது பொறுத்தவரை கருத்து. எதுவும் இல்லை.

**தொளசம்பட்டி கிராம ஏரி மராமத்து.**

வினா 406—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஓமலூர் வட்டம் தொளசம்பட்டி கிராம ஏரி மராமத்து பணிக்கு தயாரிக்கப்பட்ட மொத்த மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) அந்த வேலை எந்த நிலையில் உள்ளது?

விடை—

(அ) தொளசம்பட்டி கிராமத்தில் தொளசம்பட்டி ஏரி என்று இல்லை. ஆனால் தொளசம்பட்டி கிராமத்திற்கு அருகில் மாரமங்கலம் ஏரி என்று ஒன்று உள்ளது. மாரமங்கலம் ஏரியை மராமத்து செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகை ரூ. 25,000 ஆகும்.

(ஆ) வேலை முடிந்து விட்டது.

**கள்ளக்குறிச்சி அரிசன மாணவியர் விடுதி.**

வினா 407—திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கள்ளக்குறிச்சி அரசினர் மாணவியர் விடுதியில் தற்போதுள்ள 50 மாணவியர் தவிர மேலும் அதிக மாணவியர் சேர்ந்து படிப்பதற்கு அதனை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது

**மதுரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நவீன ஓட்டல்.**

வினா 408—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நவீன வசதிகொண்ட ஓட்டல் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 58 இலட்ச ரூபாய் செலவில் கட்டிவரும் 108 படுக்கைகள் கொண்ட மூன்று நட்சத்திர ஓட்டல் 29—12—1980 தேதி திறக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**திருவில்லிபுத்தூர் ஏழைமக்களுக்கு வழங்கப்பெற்ற நிலத்தில் ஆக்கிரமிப்பு.**

வினா 409—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவில்லிபுத்தூர் வட்டம், நத்தம்பட்டி பிர்க்கா அயன்கரிசல் குளம், வலையங்குளத்தில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் புல எண். 520-ல் ஏழைப் பொதுமக்களுக்கு வீட்டு மனைக்காக வழங்கப்பட்டுள்ள நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் ஏன் இன்னும் காலி செய்யப்படாமல் உள்ளன?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது

விடை—

(அ) அயன்கரிசல் குளம் கிராமம், வலையங்குளத்தில் புல எண் 520-இல் எந்தவித ஆக்கிரமிப்புகளும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**தீப்பெட்டிக்கு விற்பனை வரி விலக்களித்தல்.**

வினா 410—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தீப்பெட்டிக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திருவில்லிபுத்தூர் நிலவளவங்கி.**

வினா 411—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவில்லிபுத்தூரில் உள்ள 847 நிலவளவங்கி செயல்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி வங்கி செயல்படுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) முகவை மாவட்டத்தில் உள்ள திருவில்லிப்புத்தூர் நிலவள வங்கி செயல்படாமல் உள்ளது என்பது உண்மை இல்லை. அது, 1979–80 ஆம் கூட்டுறவு ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ. 3·05 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது.

**வைகை அணையிலுள்ள காலனியில் பயிற்சிப் பள்ளிக் கட்டிடம்.**

வினா 412—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வைகை டேமிலுள்ள காலனியில் பயிற்சிப் பள்ளிக் கட்டிடம் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்போது நடைமுறைக்கு வரும் ?

விடை—

*விவரங்கள் அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன.

*பக்கம் 718-ல் இணைப்பு VII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**முந்திரித் தொழிலில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஊதிய விகிதம்.**

வினா 413—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

முந்திரி பருப்பு எடுக்கும் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ப ஊதிய விகிதம் உயர்த்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

முந்திரி பருப்பு எடுக்கும் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் ஊதியம் நிர்ணயம் செய்வதற்கு அரசுக்கு ஆலோசனை கூற ஒரு குழு அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றை அனுப்பும்படி தொழிலாளர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். செயற்குறிப்பு வந்தவுடன் அரசு அதனை ஆராய்ந்து 2 வாரத்தில் ஆணை பிறப்பிக்கும்.

**பட்டதாரிகளுக்கு பால் பண்ணைத் திட்டத்தின் கீழ் பயிற்சி.**

வினா 414—திரு. இல. பலராமன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பட்டதாரிகளுக்கு பால் பண்ணை திட்டத்தின் கீழ் 1977–78 ஆம் ஆண்டும், 1978–79-ஆம் ஆண்டும், 1979–80-ஆம் ஆண்டுகளில் எத்தனை நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது ?

(ஆ) இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் பெற்றுள்ளதா அல்லது தானே பண்ணை வைத்துள்ளனரா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**பிற்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகை.**

வினா 415—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை மாவட்டத்திற்காக 1978–79, 1979–80 ஆண்டுகளுக்காக பிற்பட்டோர் நலனுக்கென ஒதுக்கப்பெற்ற தொகை எவ்வளவு ?

(ஆ) என்னென்ன வகைகளில் அவை செலவழிக்கப்பட்டன?



விடை—

(அ) மற்றும் (ஆ)

சென்னை மாவட்டத்திற்காகப் பிற்பட்டோர் நலனுக்கென 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப் பெற்ற தொகை மற்றும் அவை என்னென்ன வழிகளில் செலவழிக்கப்பட்டன என்ற விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**சென்னை நகரில் பழுதடைந்த சாலைகளைச் சீரமைக்க மாநில அரசு சிறப்பு நிதியுதவி.**

வினா 416—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் பழுதடைந்த சாலைகளைச் சீரமைப்பதற்காக மாநகராட்சிக்கு மாநில அரசு சிறப்பு நிதியுதவி (Sp.c al Grant) வழங்கியுள்ளதா ?

விடை—

ஆம். சென்னை நகர் சாலைகளை மேம்படுத்துவதற்கு 1979–80-ம் ஆண்டில் 100 இலட்சம் ரூபாய் மான்யமாகவும் 100 இலட்சம் ரூபாய் கடனாகவும், மேலும் புயலால் பாதிக்கப்பட்ட சாலைகளை செப்பனிட 300 இலட்ச ரூபாய் மான்யமாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

**சென்னை நகர மேம்பாட்டு திட்டத்திற்கு அரசு சிறப்பு நிதியுதவி.**

வினா 417—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகருடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளின் மேம்பாட்டுக்கு என மாநகராட்சிக்கு அரசு ஏதேனும் சிறப்பு நிதியுதவி (Special Grant) வழங்கியுள்ளதா ?

விடை—

சென்னை நகருடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் குடிநீர் வசதியைப் பெருக்க சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்திற்கு 206 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 50 சதவீதம் மான்யமாகவும் 50 சதவீதம் கடனாகவும் வழங்க ஒரு திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

---

*பக்கம் 720-ல் இணைப்பு VIII அச்சிடப்பெற்றுள்ளது.

## வேதாரண்யேஸ்வரர் கோயில் திருத்தேர்.

413 — திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் வேதாரண்யேஸ்வரர் கோயில் திருத்தேரை ஓடச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் ஆலயத்தில் உள்ள நான்கு தேர்களும் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால், அவைகளை ஓடச் செய்ய இயலவில்லை. இருப்பினும், பொது மக்களிடமிருந்து நிதி திரட்டி புதிய தேர்கள் செய்வதற்கு பக்தர்கள் முன் வந்தால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

## திருப்பத்தூர்-ஜோலார்ப்பேட்டை நகரப் பேருந்துப் பணி.

வினா 419—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து ஜோலார்பேட்டைக்கு டவுன் பஸ் விடுவதற்கு ஆன செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இதுவரை இந்த திட்டம் பரிசீலனையில் இல்லை இனி அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## மதுரை மத்திய பேருந்து நிலையம்.

வினா 420—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகர மத்திய பஸ் நிலையத்தில் ஏற்பட்டுள்ள நெரிசலைத் தவிர்க்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை—

ஒரு விரிவான அறிக்கை*பேரவையில் வைக்கப்படுகிறது.

*பக்கம் 722-ல் இணைப்பு IX ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



## திருமங்கலம் உப மின் நிலையம்.

வினா 421—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம் உபமின் நிலையத்தை (sub-station) விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருமங்கலம் உப மின் நிலையம் 66 கே.வி.-யிலிருந்து 110 கே. வி-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதனுடன் 10 எம்.வி.ஏ., 110/11 கே.வி. மின் மாற்றி இணைக்கப்பட்டு 21—5—1980 அன்று இந்த உபமின் நிலையம் இயக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், மற்றும் ஒரு 10 எம்.வி.ஏ., 110/11 கே.வி. மின் மாற்றி அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. இந்த மின் மாற்றி மின் சுமையின் நிலைமைக்கேற்ப (Load condition) இயக்கி வைக்கப்படும்.

## சேரன் போக்குவரத்துக் கழக பொறியியல் பிரிவு, பொள்ளாச்சி.

வினா 4[illegible]—திரு. [illegible] : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சேரன் போக்குவரத்துக் கழகத்தின் பொள்ளாச்சி பொறியியல் பிரிவில் உள்ள மொத்தப் பணியாளர்கள் எவ்வளவு?

(ஆ) அதில் ஐ.டி.ஐ. படித்தவர்கள் எத்தனை பேர்?

(இ) மொத்தப் பணியாளர்களில் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? ஆக்கப்படாதவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) 533 பேர்கள்.

(ஆ) 151 பேர்கள்.

(இ) 449 பேர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்கள். எண்பத்தி நான்கு பேர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை.

## திருச்சி அரசினர் அச்சகத்திற்கு நிரந்தரக் கட்டிடம்.

**வினா 423**—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி அரசினர் அச்சகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட எப்போது பரிசீலிக்கப்பட்டது?

(ஆ) தற்பொழுது நிலை என்ன?

(இ) கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?

**விடை**—

(அ) இப்பொருள் 1972 ஆம் ஆண்டிலிருந்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) தற்போதைய பணியாளர்கள், மற்றும் இயந்திரங்களுக்கு மட்டும் தேவையான இடத்தைக் குறிக்கும், மேற்படி வட்டார அச்சகத்தின் திருத்தப்பட்ட வரைபடம் மற்றும் மதிப்பீடு முதலியன எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரிடமிருந்து கேட்கப்பட்டுள்ளது.

(இ) கால தாமதத்திற்கான காரணங்கள் :

நிர்வாக நடைமுறை காரணங்களாலும் அருகாமையில் உள்ள புதுக்கோட்டையில் ஏற்கனவே கிளை அச்சகம் இயங்கிக் கொண்டு இருப்பதாலும், ஏற்கனவே இத்துறையின் வசம் ஒப்படைக்கப்படும் மொத்த பணியின் அளவையும் அரசினர் கிளை அச்சகங்களின் ஒரு நாளைக்கு மூன்று மாற்று முறைப் பணிகள் (shift) வீதம் வார 6 நாட்களுக்கு பணி புரிய பயனுள்ளதாக இருக்குமா என்பதை போன்ற காரணங்களை ஆராய்ந்துகொண்டு இருப்பது காலதாமதம் ஆவதற்குகாரணம்.

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைத்த வருவாய்.

**வினா 424**—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977 சனவரி முதல் 1980 ஆம் வருடம் ஆகஸ்டு முடிய தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் அரசுக்கு எவ்வளவு வருவாய் கிடைத்தது?





**விடை :**

1977 சனவரி முதல் 1980 ஆகஸ்டு வரை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைத்த வருவாய் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம்/மாதம். | மொத்த வரவு. | செலவு. | நிகர வரவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய்களில்.) | | |
| 1. சனவரி 1977 முதல் மார்ச் 1977 வரை. | 1,38,13,814 | 79,32,279 | 58,81,535 |
| 2. ஏப்ரல் 1977 முதல் மார்ச் 1978 வரை. | 3,88,06,756 | 2,12,54,522 | 1,75,52,234 |
| 3. ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 4,98,47,216 | 3,04,28,967 | 1,94,18,249 |
| 4. ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 4,42,18,828 | 2,77,88,020 | 1,64,30,808 |
| 5. ஏப்ரல் 1980 முதல் ஆகஸ்ட் 1980 வரை. | 1,80,01,422 | 79,56,892 | 1,00,44,530 |
| மொத்தம். | 16,46,88,036 | 9,53,60,680 | 6,93,27,356 |

| Year and month | Gross income. | Expenditure. | Net income |
|---|---|---|---|
| | (In Rupees) | | |
| 1. January '77 to March '77 | 1,38,13,814 | 79'32,279 | 58,81,535 |
| 2. April '77 to March '78 | 3,88,06,756 | 2,12,54,522 | 1,75,52,234 |
| 3. April '78 to March '79 | 4,98,47,216 | 3,04,28,267 | 1,94,18,249 |
| 4. April '79 to March '80 | 4,42,18,828 | 2,77,88,020 | 1,64,30,808 |
| 5. April '80 to August '80 | 1,80,01,422 | 79,56,892 | 1,00,44,530 |
| Total | 16,46,88,036 | 9,53,60,680 | 6,93,27,356 |

### முகவை மாவட்டத்தில் வீடில்லாத ஏழைகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கல்.

வினா 425 : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா —

முகவை மாவட்டம், இராஜபாளையம் வட்டம், கொத்தங் குளம் கிராமம், சர்வே எண். 9/5-ல் உள்ள சர்க்கார் புறம் போக்கு நிலத்தை வள்ளியம்பட்டியில் வசிக்கும் வீடு இல்லாத ஏழைகளுக்கு வீட்டு மனைப் பட்டா செய்து கொடுக்கும் உத் தேசம் உள்ளதா?

விடை

இராமநாதபுரம் மாவட்டம், இராஜபாளையம் வட்டம் கொத்தங் குளம் கிராமம் சர்வே எண். 9/5-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை வள்ளியம்பட்டியில் வசிக்கும் வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு மனைப் பட்டா செய்து கொடுப்பது சம்பந்தமான செயற்குறிப்பு நடவடிக்கையில் உள்ளது. ஒப்படை கோரியுள்ள, நிலம் தீர்வை ஏற்பட்ட தரிசாக இருப்பதால் அதை நத்தமாக மாற்றி, பின்பு வீட்டு மனைப்பட்டா வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### திருவண்ணாமலை—திருக்கோயிலூர் பேருந்துப்பணி.

வினா— 426 : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவண்ணாமலையிலிருந்து வெறையூர் வழியாக திருக்கோயிலூருக்கு அரசு பஸ் விடும் செயற்குறிப்பு பரிசீலனை யில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

விடை—

(அ) திருவண்ணாமலையிலிருந்து வெறையூர் வழியாக திருக்கோயிலூருக்கு செல்லும் வழித்தடத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் 5 பேருந்துகளை தினசரி 8 தடவைகள் இயக்கி வருகிறது. அத்துடன் அண்ணா போக்குவரத்துக் கழகமும் 2 பேருந்துகளை தினசரி 2 தடவைகள் இயக்கி வருகின்றது. தற்பொழுது இவ்வழித்தடத்தில் மேலும் அதிக பேருந்துகளை இயக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



### நெல்லை மாவட்டத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கல்.

வினா 427 : திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) நெல்லை மாவட்டத்தில் எத்தனை மனுக்கள் வீட்டு மனை பட்டா வழங்க கோரி 1980 மார்ச் முடிய நிலுவையில் உள்ளன ?

(ஆ) அவற்றை துரிதப்படுத்த அரசின் நடவடிக்கை என்ன

விடை :—

(அ) நெல்லை மாவட்டத்தில் வீட்டுமனை பட்டா வழங்க கோரி 1980 மார்ச் முடிய 231 மனுக்கள் நிலுவையில் உள்ளன.

(ஆ) வீட்டு மனை பட்டாக்களுக்கான மனுக்கள் வந்த வுடன் அவைகளை ஆய்வாளருக்கு அனுப்பி ஒவ்வொரு கிராமத்திலும் குடியிருப்பு வீடுகள் எத்தனை, அவைகளில் உள்ள குடும்பங்கள் எத்தனை, எத்தனை குடும்பங்களுக்கு வீட்டு வசதி வேண்டும் என்பது கணக்கெடுக்கப்படுகிறது. அதன்படி 95 கிராமங்களுக்கு முடிந்துவிட்டது. அவைகளில் 62 கிராமங் களுக்கு பிரிவு 4 (2)-ன்படி சட்டம் 31/78-ன்படி விசாரணை நடந்து வருகிறது. 12 கிராமங்களுக்கு 4 (1) அறிக்கை பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. 13 கிராமங்களுக்கு 4 (1) அறிக்கை பிரசுரம் செய்ய அனுப்பப்பட்டிருக்கிறது. 8 கிராமங்களுக்கு அவார்டு விசாரணை நடந்து முடிந்து விட்டது. மேற்கண்ட 62 கிராமங்களுக்கும் நில எடுப்பு விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதி 136 கிராமங்களில் கணக்கெடுப்பு 34 கிராமங்களுக்கு முடிந்திருக்கிறது. அவைகளுக்கு 4 (2) விசாரணை நடத்தி மேல் நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும். மீதி உள்ள 102 கிராமங்களுக்குக் கணக்கெடுப்பு நடந்து வருகிறது.

### தஞ்சாவூர் சரஸ்வதி மஹால்.

வினா 428 : திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் சரஸ்வதி மகாலின் நிர்வாகச் செலவுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளால் ஆண்டுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகின்றது?

(ஆ) 1979 ஆம் ஆண்டு தணிக்கை ஆட்சேபனைகள் உள் ளனவா?

(இ) அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை : —

(அ) இந்நூலகத்திற்கு 1978–79-ல் ரூ. 3,54,000-ம், 1979–80-ல் ரூ. 2,00,000மும் மைய அரசு நிதி உதவி வழங்கி யுள்ளது. தமிழக அரசு ஆண்டுதோறும் நிர்வாகச் செலவிற்கு ரூ. 1,10,022-ம், நூல் வெளியீட்டுக்கு ரூ. 25,000-ம் வழங்கி வருகின்றது.

(ஆ) ஆம். 1979–80 ஆண்டு மற்றும் அதற்கு முந்திய ஆண்டு தணிக்கைகளிலும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்ததில் உள்ள குறைபாடுகள் பற்றி ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

(இ) மேற்படி ஆட்சேபனை சரியென்பதால், தற்போது நூலகத்தில் பணியாற்றும் இரண்டு, ஓய்வுபெற்ற அரசு ஊழி யர்களை உடனே பணியிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு பதி லாக, தகுதியுடையவர்களை விதிமுறைப்படி நியமனம் செய் யவும், அதிகமாக கொடுக்கப்பட்ட ஊதியத்தை பிடித்தம் செய் யவும் அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாணையின்படி, மேற் கண்ட இரு அலுவலர்களும் 30—11—1980 முதல் பணியி லிருந்து விடுவிக்கப்பட்டனர். அதிகமாக கொடுக்கப்பட்ட பணத் தை திரும்ப பெறுவதைக்குறித்து நடவடிக்கை அரசின் பரி சிலனையில் உள்ளது.

### தானிப்பாடி அரசு மருத்துவமனை.

வினா 429 : திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் தானிப்பாடி அரசு மருத்துவமனையில் மகப்பேறு சிகிச்சை அளிப்பதற்கு பெண் மருத்துவர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது நியமிக்கப்படும்?

விடை :

(அ) ஆம்.

(ஆ) இங்கு நியமிக்கப்பட்ட பெண் மருத்துவர்கள் பணி யில் சேராததினால் இவ்விடம் காலியாகவுள்ளது. ஆகையால் வேறு மருத்துவர் பணியில் சேரும்வரை அருகாமையில் உள்ள மருத்துவமனைகளில் உள்ள ஒதுக்குப் பணி மருத்துவர்கள் ஒரு வர்பின் ஒருவராக 15 நாட்களுக்கு ஒரு முறை தற்காலிகமாக அனுப்பப்படுகின்றனர்.

### தண்டராம்பட்டு தொகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பெற்ற நிலப் பட்டாக்கள்.

வினா 430: திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வரு வாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :—

தண்டராம்பட்டு தொகுதியில் 1978–79-ஆம் ஆண்டு அரசு புறம்போக்கு நிலங்களில் பாடுபட்டு வந்துள்ள விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்ட பட்டாக்கள் எத்தனை?





விடை :

தண்டராம்பட்டு சட்டமன்றத் தொகுதியில் 1978–79 ஆம் ஆண்டு அரசு புறம்போக்கு நிலங்களில் பாடுபட்டு வந்துள்ள விவ சாயிகளுக்கு வழங்கப்பட்ட நிலப்பட்டாக்களின் எண்ணிக்கை 8.

| | |
|---|---|
| அவைகளின் பரப்பளவு .. .. | 17·67 ஏக்கர் |
| வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டவைகளின் எண்ணிக்கை. | 6 |
| அவைகளின் பரப்பளவு .. .. | 0·16 ஏக்கர் |

மேற்படி பட்டாக்களினால் பயனடைந்த தாழ்த்தப்பட்ட வகுப் பினர் எண்ணிக்கை விவரம்.

| | எண்ணிக்கை. | பரப்பளவு. | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| | | ஏ. | செ. |
| நிலப்பட்டாக்கள் .. .. | 3 | 5 | 88 |
| வீட்டுமனைப் பட்டாக்கள் .. | 2 | 0 | 04 |

### சென்னை நகரிலுள்ள சைக்கிள் ரிக்ஷாக்கள்.

வினா 431 : திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

சென்னை நகரில் தற்போது எத்தனை சைக்கிள் ரிக்ஷாக் களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளன ?

விடை :

இவ்வாண்டு சென்னை நகரில் 5,864 சைக்கிள் ரிக்ஷாக் களுக்கும், 48 மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

### ஓமலூர் அரசு மருத்துவமனை.

வினா 432 : திரு செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா —

(அ) ஓமலூர் அரசு மருத்துவமனையைச் சார்ந்த '' பிணம் அறுக்கும் கிடங்கு (போஸ்ட் மார்ட்டம் ஷெட்) '' மிகவும் பழு தடைந்த நிலையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதனை புதுப்பிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) இதை உடனே பழுது பார்க்கும்படி தலைமை பொறி யாளர் (கட்டிடம்) அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**திருப்பத்தூரில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை ஆரம்பிக்க திட்டம்.**

வினா : 433 : திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் " சிட்கோ " மூலம் தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதை ஆரம்பிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை :—

(அ) மற்றும்

(ஆ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத் தூரில் தொழிற்பேட்டை ஆரம்பிக்க தற்போது அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை. தகுந்த செயற் குறிப்பு திட்டங்களுடன் மாவட்ட தொழில் மையத்திலிருந்தோ அல்லது தொழில் ஆரம்பிக்க முன் வருவோரிடமிருந்தோ திருப்பத்தூரில் சின்னஞ் சிறு தொழிற் கூடங்கள் கட்ட கோரிக்கை வருமாயின் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தொழிற்கூடங்களை கட்டுவது பற்றி பரிசீலனை செய்யும்.

**அம்பாசமுத்திரம் நகரில் தீயணைப்பு நிலையம்.**

வினா 434—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அம்பாசமுத்திரம் நகரில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு உத்திரவிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படத் துவங்கும் ?

(இ) இது பற்றிய விவரம் யாது ?

விடை :—

1—11—1980 அன்று அம்பாசமுத்திரத்தில் ஒரு சிறு தீயணைப்பு நிலையம் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றது.

**வடாற்காடு மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள்.**

வினா 435— திரு. இல. பலராமன் : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா : —

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்கள் எத்தனை உள்ளன ?





(ஆ) 1976, 1977, 1978, 1979, 1980 ஆண்டுகளின் விற்பனை யாது ?

விடை :—

(அ) 67 சங்கங்கள்.

(ஆ) 1976 முதல் 1980 ஆண்டு வரை உள்ள விற்பனை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண். | ஆண்டு. | மொத்த விற்பனை. ரூ. |
|---|---|---|
| 1 | 1976-ல் .. .. | 1,34,18,053 |
| 2 | 1977-ல் .. .. | 1,59,44,095 |
| 3 | 1978-ல் .. .. | 2,41,57,428 |
| 4 | 1979-ல் .. .. | 2,60,82,641 |
| 5 | 1980-ல் .. .. | 2,80,01,289 |

**சிதம்பரம்-காட்டுமன்னார்குடி சாலையை அகலப்படுத்துதல்.**

வினா 436—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம்-காட்டுமன்னார்குடி செல்லும் சாலையை அகலப்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

**வேதாரண்யத்தில் உற்பத்தியாகும் புகையிலை.**

வினா 437— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம் தொகுதியில் உற்பத்தி ஆகின்ற புகையிலை விற்பனை ஆகாமல் இருக்கிறது என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுடைய நிலை அறிந்து புகையிலையில் இருந்து பலவித தொழிற்சாலைகள் துவக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

விடை—

ஒரு விவர அறிக்கை * அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

---

* பக்கம் 723 -ல் இணைப்பு X ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

இருப்பது அரசுக்குத் தெரியுமா? அடுத்து, அதே போல் கூட்டுறவுக் கடன் பெற்றுள்ளவர்கள் அரசு ஊழியர்களாக இருந்து, இரண்டு பேரும் கணவன்-மனைவி சேர்ந்து ஆண்டுக்கு ரூ. 12,000-க்கு மேல் கிட்டத்தட்ட வருமானம் உள்ளவர்களும் 5 ஏக்கர் சலுகையை அனுபவிக்கிறார்களே, இவைகளை எல்லாம் விளக்கி அரசு ஆணைகள் வெளியிடப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய அரசு முடிவு எடுத்தபோது விவசாயிகளுடைய நில அளவை மட்டும்தான் கணக்கில் எடுத்ததே ஒழிய அவர்களுடைய இதர வருமானத்தைக் கணக்கில் எடுக்கவில்லை. இதர வருமானத்தைக் கணக்கில் எடுத்து அறிவிப்பு செய்வது என்றால் சில ஆண்டுகள் ஆகிவிடும் என்கிற காரணத்தால் குறுகிய காலத்தில் ஒரு ஆய்வினை செய்கிற அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுத்து நடைமுறையில் 5 ஏக்கருக்குக் கீழே உள்ள விவசாயிகள் சிறு விவசாயிகள் என்று கணக்கிட்டு, அந்த அறிவிப்பை அரசு செய்தது.

திரு. சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்குக் கடன் ரத்து செய்யப்பட்டு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தினார்கள். ஏற்கனவே 5 ஏக்கர் நிலம் உள்ளவர்கள், தங்கள் வயிற்றைப் பட்டினி போட்டுக் கொண்டு, அந்தக் கடன் தொகையில் ஒரு பங்கைக் கட்டியிருந்தால், இப்போது அப்படிப்பட்டவர்களுக்குக் கடன் ரத்து செய்யப்பட்டு இருப்பதால், அந்தப் பணத்தை திருப்பித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக 42 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயக் கடன்கள், சிறிய விவசாயிகளுக்கு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரத்து செய்யப்பட்ட பிறகு, மீண்டும் ஒரு அறிவிப்பை அரசு செய்தது. 1975 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாளுக்குப் பின்னால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்கள் வாங்கிய கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு திருப்பிச் செலுத்தி இருப்பார்களானால், பாதிக்கப்பட்டவர்கள் என்கிற பிரிவில் அப்படிப்பட்டவர்கள் வருவார்களானால், அவர்களுக்கு மீண்டும் கடன் கொடுக்கப்பட்டு அந்தப் பணம் அடுத்த ஆண்டு அதாவது 1981-82 ஆம் ஆண்டு அவர்கள் பெறுகிற கூட்டுறவுக் கடன்களுக்குச் சரி செய்யப்படும் என்று சொல்லி அந்த நடைமுறையைக் கொண்டு வந்து இருக்கிறோம்.



### கொடைக்கானலில் வழக்குகள் விசாரணை.

*வினா எண் 406: திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானலில் சிவில் கிரிமினல் வழக்குகள் தற்பொழுது யாரால் விசாரிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கொடைக்கானலில், சிவில் வழக்குகள் முகாம் கோர்ட்டு மூலமாக மாவட்ட முன்சீப், பெரியகுளம், அவர்களாலும், குற்றவியல் வழக்குகள் நிலக்கோட்டை இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிபதி அவர்களாலும் விசாரிக்கப்படுகின்றன.

### தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனை சங்கம்.

*வினா எண் 407: திரு. பாபு கோவிந்தராஜன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனை சங்கத்தில் பணியாற்றும் அரசு அதிகாரிகள் மீது அரசிடமும் மாநில கூட்டுறவுப் பதிவாளரிடமும் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாளில் கொடுத்த புகார் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

(ஆ) அதனால் அந்தத் தொழிலாளர்கள் மீது அதிகாரிகள் பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அரசுக்குத் தகவல் ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) புகார் மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை செய்யப்பட்டு அவை சரியானவை அல்ல என தெரிய வந்தது.

(ஆ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### சங்கரன்கோயிலில் நீதிமன்றம் அமைத்தல்.

**வினா 438.—திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்கரன் கோவிலில் மாவட்ட முன்சிப்-கம்-சப்டிவிஷனல் ஜுடிசியல் மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் நடவடிக்கையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

### வடாற்காடு மாவட்ட கிராமங்களிலுள்ள சலவைத் தொழிலாளர்களுக்குத் தொழில் கருவிகள் வழங்குதல்.

**வினா 439.—திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978—79 ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் சலவைத் தொழில் செய்பவர்களுக்குத் தொழில் கருவிகள் அரசாங்கம் வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை நபருக்கு வழங்கப்பட்டது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 243 சலவைத் தொழிலாளர்களுக்கு தொழில் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### திருப்பத்தூர் சர்க்கரை ஆலை.

**வினா 440.—திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கப்படும் கரும்புக்கு விலை நிர்ணயிக்கப்பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், டன் ஒன்றுக்கு கொடுக்கப்படும் விலை எவ்வளவு ?

விடை—

(அ) 1980-81-ம் பருவத்திற்கு எல்லா ஆலைகளுக்கும் விலை நிர்ணயம் செய்து அரசு ஆணை வழங்கியுள்ளது.

(ஆ) திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 205.60 ஆகும். இது 8.5 சதவீதம் சர்க்கரை கட்டுமானத்திற்குப் பொருந்தும்.



### கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளுக்கு கூண்டு கட்டும் பிரிவு.

**வினா 441.—திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் ஒரு மாதத்தில் எத்தனை பஸ்களுக்கு பாடி கட்டப்படுகிறது ?

(ஆ) திருநெல்வேலியில் பாடிகட்டும் பிரிவு ஏதேனும் ஏற்படுத்த அரசிடம் உத்தேசம் உண்டா ?

விடை—

(அ) சுமார் எட்டு பேருந்துகளுக்கு.

(ஆ) ஆம். திருநெல்வேலியில் கூண்டு கட்டும் பிரிவை அமைப்பதற்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### களத்தூர் கண்மாயில் குடியிருக்கும் தாழ்த்தப்பட்டோருக்குள்ள நில ஆர்ஜிதம்.

**வினா 442.—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியைச் சேர்ந்த அம்மாபட்டி தாழ்த்தப்பட்ட மக்கள் களத்தூர் கண்மாயில் குடியிருப்பதால் அவர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

திருவில்லிப்புத்தூர் வட்டம், அம்மாபட்டி கிராமத்தில் நில அளவை எண் 20/10-ல் 0.42 ஏக்கர் நிலம் 25—3—1980 நாளிட்ட திருவில்லிப்புத்தூர் அரிசன நல தனி வட்டாட்சியரின் இழப்பீட்டுத் தொகை தீர்ப்பு எண் 16/79-80-ல் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அவர் பயனடைவோருக்கு விரைவில் மனை பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

### பொருட்களைக் கட்டி அனுப்பப் பயன்படும் பொருட்களின் மீதான வரிவிலக்கு.

**வினா 443.—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Packing materials-மீது வரி விலக்கு அளிக்கலாமா வேண்டாமா உள்ளதா ?

விடை—

பொருட்களைக் கட்டி அனுப்பப் பயன்படுத்தப்படும் பொருட்களின் (Packing materials) -க்கு விற்பனை வரி விலக்கு அளிக்கும் உத்தேசம் என்ற கருத்தரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**இளையான்குடி யூனியனுக்கு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பெற்ற நிதி.**

**வினா 444.—திரு. செ. சிவசாமி :** மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், இளையான்குடி யூனியனை தன்னிறைவுத் திட்டத்தில் சேர்த்த பின்பு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஒதுக்கீடு செய்யப்படும் ?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) 1981—82-ம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**தமிழகத்திலுள்ள கிளை நூலகங்கள்.**

**வினா 445.—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள மொத்த கிளை நூலகங்கள் எத்தனை ?

(ஆ) அதை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**விடை—**

(அ) 1,448 கிளை நூலகங்கள் உள்ளன.

(ஆ) 5,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள இடங்களில் ஆண்டுக்கு 30 நூலகங்கள் வீதம் 275 இடங்களில் நூலகங்கள் திறக்க எண்ணி அரசு இதற்காக 1981-82-ம் ஆண்டிற்கான 2-ம் பகுதி திட்டத்தின்கீழ் (Part II Scheme) ரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது. அதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**கம்மசமுத்திரம் கிராம அரிசனங்களுக்கு வீடுகட்ட நில ஆர்ஜிதம்.**

**வினா 446.—திரு. இல. பலராமன் :** மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு வேலூர் தாலுக்கா கம்மசமுத்திரம் கிராமத்தில் அரிசன வீடுகட்டும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(ஆ) எத்தனை வீடுகளுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டது ?



**விடை—**

(அ) ஆம்.

(ஆ) 36 வீடுகளுக்கு 27—7—1979 தேதியன்று மனைப் பட்டா வழங்கப்பட்டது.

**இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய தீப்பெட்டி தொழிற் கூடங்கள்**

**வினா 447.—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய தீப்பெட்டித் தொழிற்கூடங்கள் ஏற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

**விடை—**

31—3—1980 முடிய இராமநாதபுரம் மாவட்டத்தில் 16 சிறிய தீப் பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கங்களும் 81 தீப் பெட்டி தொழிலாளர் தொழிற் கூட்டுறவு சங்கங்களும் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

இது தவிர நடப்பு ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் 24—9—1980-ம் தேதி பதிவு செய்யப்பட்டது.

(1) வத்திராயிருப்பு சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் ;

(2) சிவகெங்கை சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், சிவகங்கை.

அரிஜனங்களுக்காக மட்டுமே மூன்று கூட்டுறவு தீப்பெட்டி சேவை சங்கங்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்படுத்த ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் தொழில் கூட்டுறவுத் துறையில் தேவையான தீப்பெட்டி அலகுகளை அரசின் நிதி மற்றும் இதர உதவிகளின்றி நிறுவ தொழில் வணிக இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே இராமநாதபுரம் மாவட்ட மக்கள் தொழில் கூட்டுறவுத்துறையில் தீப்பெட்டி தொழில் துவங்க விரும்பினால், அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மாவட்ட தொழில் மையத்தை அணுகலாம். தொழில் மையத்தின் பரிந்துரையின் மீது தொழில் வணிகத் துறை தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மதுரை நகரை அழகுபடுத்தும் திட்டம்.**

**வினா 448.—திரு. எஸ். சிவசாமி :** மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரை அழகு படுத்தும் திட்டம் நிறைவேற்றும் நேரத்தில் மழை காலத்தில் நகரத்தில் பல பகுதிகளில் (ரோடில்) முழங்கால் அளவு தண்ணீர் தேங்கி நிற்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) முக்கிய வீதிகளில் தண்ணீர் மழை விட்டவுடன் வடிய ஏற்பாடு செய்யப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். மதுரை மாநகராட்சி இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

**கால்நடை மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள்.**

**வினா 449.—திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கால்நடை மருத்துவ மனைகளில் (டாக்டர்) மருத்துவர்களாக பணி செய்பவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(ஆ) அவர்களில் பின்தங்கியவர்கள், ஷெட்யூல்டு வகுப்பினர்கள், மலைவாழ் மக்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

(இ) விகிதாச்சார விதிப்படி இவ்வகுப்பினர்களுக்கு உத்தியோகம் கொடுக்கப்படாத காரணம் யாது?

விடை—

(அ) 1,074.

| | |
|---|---|
| (ஆ) பின்தங்கியவர்கள் | 709 |
| ஷெட்யூல்டு வகுப்பினர்கள் | 33 |
| மலைவாழ் மக்கள் | 1 |
| மொத்தம் | 743 |

(இ) விகிதாச்சார விதிப்படி உத்தியோகம் வழங்கப்பட்டுள்ளது.



**இராமநாதபுரம் மாவட்டத்தில் மினிப் பேருந்துப் பணி.**

**வினா 450.—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் மினி பஸ்கள் விடும் உத்தேசம் உள்ளதா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு மினி பஸ்கள் கீழ்க்கண்ட வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றன—

**மினி பஸ் (1) பலவழி சுற்றுத்தடம்.**

சிவகாசியிலிருந்து சாத்தூருக்கு விஸ்வநாதம் வெத்திலை ஊரணி, மேலூத்தம்பட்டி மற்றும் முதலைநாய்க்கன் பட்டி வழியாக.

சாத்தூரிலிருந்து சிவகாசிக்கு இனயராம்பண்ணை, முத்தாண்டிபுரம், ஜகவிரம்பட்டி, விஜயகரிசல்குளம், பூசாரிநாய்க்கன்பட்டி, சால்வார்ப்பட்டி, சுப்ரமணியபுரம், தாயில்பட்டி, வெத்திலையூரணி மற்றும் விஸ்வநாதம்.

மினி பஸ் (2).

தேவகோட்டையிலிருந்து காரைக்குடிக்கு அரவயல், ஊஞ்சனை மற்றும் மாத்தூர் வழியாக.

மேற்கொண்டு மினி பஸ்கள் விடும் திட்டம் எதும் ஆய்வில் இல்லை.

**திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்பு.**

**வினா 451.—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் கிணறுகளுக்கு மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்புக் கோரி இதுவரை வந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) 1979 ஆம் ஆண்டிலிருந்து எத்தனை கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது?

விடை—

(அ) வினாவில் காலவரையறை எதும் குறிப்பிடாததால், திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் எதிலிருந்து எதுவரை எத்தனை மனுக்கள், கிணறுகளுக்கு மின்சார மோட்டார் இணைப்புக் கோரி வந்துள்ளன என்பதை குறிப்

[1981 மார்ச் 6

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே திட்டத்தைச் செயல்படுத்துவதாகத்தான் இருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கட்டளைக் கால்வாய்த் திட்டத்தினால் தண்ணீர் திறந்தவெளி வாய்க்கால் மூலம் சென்னைக்கு கொண்டுவரப்படுவதால் வழியிலே விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது. அது தடுக்கப்படுமா ? குடிநீரைக் குழாய்கள் மூலம் கொண்டு வந்தால் பாதுகாப்பாக இருக்கும். திறந்தவெளி வாய்க்கால் மூலம் கொண்டு வருவதால் அதிலே அசுத்தங்கள் கலந்து, பொதுமக்களுக்கு வியாதி பரவும் சூழ்நிலை ஏற்படும். அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, திறந்தவெளி வாய்க்கால் மூலம் கொண்டுவரப்படும் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டுத்தான் விநியோகம் செய்யப்படும். திறந்த வெளி வாய்க்கால் மூலம் தண்ணீர் வந்தாலும் யாரும் தங்களுக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நம் மக்கள்மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறது இந்த அரசு.

திரு. கே. நாராயணசாமி : தலைவரவர்களே, இந்தக் கட்டளைக் கால்வாய்த் திட்டத்தை அரசுத் துறை எடுத்து செயல்படுத்தும் நடவடிக்கை இருக்கிறதா அல்லது கான்ட்ராக்ட் விட உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே அது செயல்படுத்தப்படும்போது முடிவு எடுக்கப்படும்.

## சென்னையில் பாதாள இரயில் பாதை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 409—திரு. து. புருஷோத்தமன், திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகர பாதாள இரயில் பாதை அமைப்புத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) சென்னையில் பாதாள இரயில் பாதை அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால், சென்னை கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து மயிலாப்பூர் லஸ் வரை இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற இவ்வரசு மத்திய அரசை வற்புறுத்தி-



1981 மார்ச் 6]

யுள்ளது. இந்த இரயில் பாதையின் மொத்த நீளம் 8.45 கிலோ மீட்டர். இது கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து சென்னை மத்திய சிறை வரை 2.93 கிலோ மீட்டருக்கு தரைமட்டத்திலும், மிகுதியுள்ள 5.52 கிலோ மீட்டருக்கு மேல் மட்டத்திலும் (சுமார் 18 அடி உயரத்தில்) இருக்கும். இத்திட்டத்திற்காக ரூபாய் 60 கோடியிலிருந்து ரூபாய் 70 கோடிவரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டு, இத்திட்ட வேலையை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதியை 1981–82-ஆம் நிதி ஆண்டில் ஒதுக்கீடு செய்யும்படி மத்திய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது. இத்திட்டம் மத்திய திட்டக் குழுவின் ஏற்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் மத்தியத் திட்டக்குழுவிடமிருந்து ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மத்திய இரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆனால், துரதிஷ்டவசமாக இதை மத்திய அரசு 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவில்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு நீண்ட விடையை மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்திருக்கிறார்கள். ஆனால் இறுதியிலே நமெல்லாம் ஏமாறக்கூடிய வகையிலே 6–வது ஐந்தாண்டுத் திட்டத்திலே அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அது குறித்து நமது அரசு மீண்டும் வற்புறுத்துமா? பாதாள இரயில் பாதை அமைக்கும் திட்டம் பற்றிய குறிப்பை எந்த ஆண்டில் தமிழக அரசு மத்திய அரசுக்குக்கொடுத்தது? மேலும் இந்தத்திட்டத்தைப் பொறுத்த வரையிலும் கடற்கரையிலிருந்து மைலாப்பூர் வரையில் தான் பாதாள இரயில்பாதை அமைக்கும் திட்டம்பற்றி உத்தேசிக்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது வளர்ந்து வருகின்ற மக்கள் தொகையை ஒட்டி, நெரிசலைத் தவிர்க்கின்ற வகையில்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆறாவது திட்டத்திலே சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்று சொல்லி நீண்ட விளக்கத்தையும் சொல்லிவிட்டார்கள் அமைச்சரவர்கள். ஆகவே திட்டம் எந்த அளவுக்கு என்பது பற்றி இப்போது கேட்டு என்ன பயன் ?

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது மக்கள் தொகை நாள்தோறும் வளர்ந்து வருவதால் பாதாள இரயில் பாதை அமைப்பது பற்றிய பூர்வாங்க ஆய்வு ஏதேனும் செய்யப்பட்டதா? பத்திரிகையிலே பார்த்ததாக எனக்கு ஒரு ஞாபகம், ஜப்பான் கம்பெனி ஒன்று இந்தத் திட்டத்தை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் நீண்ட கால அடிப்படையிலே அதனுடைய லாபத்திலே ஒரு பங்கு தரவேண்டும் என்கின்ற வகையிலேயும் சஜெஷன் வந்த

பிட்டுச் சொல்ல இயலவில்லை. எனினும் 20—11—1980 வரை மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்புக் கோரி வந்த மனுக்களில் 668 மனுக்கள் நிலுவையில் உள்ளன.

(ஆ) 1—1—1979 முதல் 31—10—1980 வரை திருவில்லிப்புத்தூர் தாலுகாவில் 370 கிணறுகளின் மோட்டார்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

### வடமதுரை நகரில் பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா 452—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

வேடசந்தூர் வட்டம், வடமதுரை நகரில் பேருந்து நிலையம் அமைக்க முயற்சி ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

விடை—

இதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவைகளுக்கு ஒப்புதல் பெற்ற பின் அரசிடம் கடன் உதவி பெற்று இந்த வேலையை செய்து முடிக்கலாம் என பேரூராட்சி தீர்மானித்துள்ளது.

### பாளையத்தில் பேருந்து நிலையம் அமைத்தல்

வினா 453—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வேடசந்தூர் தாலுகா, பாளயத்தில் பேருந்து நிலையம் எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

இப்பேருந்து நிலையம் அமைக்கும் பணி 1—3—1981க்குள் முடிந்து விடும் என மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

### திண்டுக்கல் அரசு மருந்துவமனை.

வினா 454—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மருத்துவ அதிகாரிகள் ஸ்தானங்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் நிரப்பப்படாமல் உள்ள இடங்கள் எத்தனை?

(இ) அந்த இடங்கள் எப்போது நிரப்பப்படும்?



விடை—

(அ) 38

(ஆ) ஒன்றுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### திருவில்லிப்புத்தூர் அருள்மிகு வைத்தியநாதீஸ்வரர் கோவில் கோபுரத் திருப்பணி.

வினா 455—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் அருள்மிகு வைத்தியநாதீஸ்வரர் கோயில் கோபுரத் திருப்பணிச் செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிப்புத்தூர் அருள்மிகு வைத்தியநாதீஸ்வரர் சுவாமி ஆலயத்தின் இராஜகோபுரத் திருப்பணி வேலைக்கு ரூ. 1,76,000 மதிப்பீடு 1974 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டு, திருப்பணி வேலைகள் 1978 ஆம் ஆண்டிலேயே செய்து முடிக்கப்பட்டு விட்டன.

### சிவகாசி விஸ்வநாத சுவாமி கோயில் திருப்பணி.

வினா 456—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகாசியிலுள்ள விஸ்வநாதசுவாமி கோயில் திருப்பணி செய்யும் உத்தேசம் உள்ளதா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசி நகரிலுள்ள அருள்மிகு விஸ்வநாதசுவாமி ஆலயத்தில் திருப்பணி செய்யும் உத்தேசம் ஏதும் இல்லை.

**திருத்தங்கல்அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் கோயில்.**

வினா 457—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சாத்தூர் வட்டத் திருத்தங்கல் கிராமத்திலுள்ள நின்ற நாராயணப்பெருமாள் கோயிலின் கீழ்ப்பக்கமுள்ள பிரகாரச் சுவர் (30 அடி உயரம்) இடிந்து விழுந்தும் கடந்த ஏழு ஆண்டுகளாக ஏன் செப்பனிடப்படாமல் உள்ளது?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம் திருத் தங்கல் அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் ஆலயத்தின் வடபுறவெளி மதிற்சுவர் 16—11—1979 அன்று பெய்த கடுமையான மழையின் காரணமாக இடிந்து விழுந்துள்ளது. இத்திருமதிலையும், இக்கோயிலின் நிதிநிலைமை சீராக இல்லாத தால் வினாவில் குறிப்பிட்ட நின்று போன மதிற்சுவர் வேலை உட்பட ஏனைய திருப்பணிகளையும் செய்து முடிக்க திருப் பணிக் குழுவொன்று அங்கீகரிக்கப்பட்டு ரூ. 3,81,000-க்கான மதிப்பீட்டிற்கு 31—12—1980-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் திருப்பணிக்கான வேலைகள் செய்து முடிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கிளியாப்பட்டு அரிசனக் காலனியில் துவக்கப்பள்ளி ஆரம்பித்தல்.**

வினா 458—திரு. பெ. சு. திருவேங்கடம் : அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம் கிளியாப்பட்டு அரிசனக் காலனியில் அரிசன இலாகாவால் துவக்கப்பள்ளித் திறக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கும் உத்தேசம்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



**BLOOD BANK AT VETERINARY COLLEGE, MADRAS.**

Q 459 Thiru N. Kittappa, Thiru S. Rajaram : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) Whether any Blood Bank is to be opened at the Veterinary College at Madras; and

(b) If so, the details thereof

**Ans.**

(a) Yes. A pilot project on blood bank has been started in the Department of Clinics in the Madras Veterinary College from September, 1980.

(b) Preliminary studies in respect of standardisations, connected with donor and receipient system, storage facilities, scope and extent of use of a blood bank for canines and bovines and such connected subjects are under progress. With a view to improve the efficiency of treatment in the Hospital and to have practical demonstration to the students, the blood bank is under organisation in the Department of Clinics of the Madras Veterinary College.

விடை—

(அ) இரத்த சேமிப்பு வங்கி முன்னோடி திட்டம், செப்டம்பர் 1980 முதல் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள கால்நடை சிகிச்சைத்துறையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

(ஆ) இரத்தம் கொடுக்கும் மற்றும் கொடுக்கப்படும் கால்நடைகளின் திறத்தன்மை, சேமிப்பு வசதி மற்றும் இரத்தசேமிப்பு வங்கியிலிருந்து இரத்த சோகை, மற்றும் உண்ணி களால் பாதிக்கப்படும் கால்நடைகளுக்கு இரத்தம் பயன்படுத்தப் படும் வாய்ப்பு,.. அது பயன்படக்கூடிய அளவு போன்ற வற்றைப் பற்றிய ஆய்வுகள் முன்னேற்றத்தில் உள்ளன. மருத்துவ மனையில் கொடுக்கப்படும் சிகிச்சையின் திறத்தை அதிகப்படுத்தவும் மற்றும் மாணவர்களுக்கு செயல் முறை விளக்கங்கள் செய்வதற்காகவும் இரத்த சேமிப்பு வங்கி சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள கால் நடை சிகிச்சைத் துறையில் இயங்கி வருகிறது.

## INDUSTRIAL UNDERTAKINGS FUNCTIONING OF AMBATTUR.

Q. 4[illegible]0 Thiru N. Kittappa : Will the Hon. the Minister for Rural Industries be pleased to State

(a) The total number of (1) Small (2) Medium and (3) Major Industrial undertakings now functioning at Ambattur Industrial Estate near Madras.

Ans—

(a) The total number of Small, Medium and Major Industrial Undertakings now functioning in the Industrial Estate Ambattur are as detailed below

| | | |
|---|---|---|
| (1) | Small Scale Industrial under takings. | 671 |
| (2) | Medium Scale Industrial under-takings. | 35 |
| (3) | Major Industrial Undertakings. | Nil |
| (4) | Government owned Industrial Units. | 7 |
| | Total | 713 |

(அ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தற்போது இயங்கி வரும் சிறு தொழில் நிறுவனங்கள், நடுத்தர தொழில் நிறுவனங்கள், மற்றும் பெருந் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | சிறு தொழில் நிறுவனங்கள் .. | 671 |
| 2. | நடுத்தர தொழில் நிறுவனங்கள் | 35 |
| 3. | பெருந் தொழில் நிறுவனங்கள் .. | இல்லை |
| 4 | அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் | 7 |
| | மொத்தம் .. | 713 |



### கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரி.

வினா 461—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியில் இக்கல்வியாண்டு முதல் இளங்கலை ஆங்கிலம் அல்லது முதுகலைத் தமிழ் வகுப்பு தொடங்க சென்னைப் பல்கலைப் பதிவாளரால் அனுமதி அளிக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதை நிறைவேற்ற அரசினரால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

விடை—

இல்லை. இவ்வாண்டு (1980–81-ல்) விருத்தாசலம் திரு. கொளஞ்சியப்பர் அரசினர் கலைக் கல்லூரியில் இயற்பியலில் இளம் அறிவியல் பட்டப் படிப்பு (B. Sc., Physics) துவங்குவதற்குத்தான் சென்னைப் பல்கலைக் கழகம் இணைப்பு அனுமதி அளித்துள்ளது. இயற்பியலில் இளமறிவியல் பட்டப் படிப்பு (B. Sc., Physics) துவங்கப்பட்டதை ஏற்பளித்துள்ளனர்.

### விருத்தாசலம் முன்சீப் கோர்ட் கட்டடம்.

வினா 462—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விருத்தாசலத்தில் முன்சீப் கோர்ட் இருந்த பழைய கட்டடம் இடிக்கப்பட்டு கடந்த பல ஆண்டுகளாக வாடகை கட்டடத்தில் நடைபெற்று வருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் விருத்தாசலத்தில் திறக்கப்படவிருக்கும் சப்-ஜட்ஜ் கோர்ட்டுக்கும், முன்சீப் கோர்ட்டுக்கும் சேர்த்து புதிய கட்டடம் கட்டுவதற்கு திட்டம் அரசிடம் பரிசீலனையில் இருக்கிறதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

விருத்தாசலம் ஒன்றியப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கு திட்டங்கள்.

வினா 463—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விருத்தாசலம் ஒன்றியம் இடைச் சித்தூருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது திட்டம் நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

வினா 464—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் ஒன்றியம் மு. பட்டிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது திட்டம் நிறை வேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

வினா 465—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் ஒன்றியம் மு. பட்டி குடிகாடு காலனிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது திட்டம் நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.



வினா 466—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் ஒன்றியம் மு. புதூருக்கு குடிநீர் தேக்கம் கட்டப்பட்டும் இயங்கவில்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இயங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) மு. புதூர் என்னும் சிற்றூரில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அடைப்பட்டுள்ளதால் மாற்று துளைக் கிணறு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாற்று துளைக் கிணறு அமைத்து, மின் இணைப்பு பெற்றவுடன் இத்திட்டம் இன்னும் மூன்று வாரத்தில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வினா 467—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் ஒன்றியம் வேட்டக்குடிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

கம்மாபுரம் ஒன்றியப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கு திட்டங்கள்.

வினா 468 : திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கம்மாபுரம் ஒன்றியம் பெருவாப்பூர் காலனிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

வினா 469 : திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கம்மாபுரம் ஒன்றியம் மாவிடந்தலில் குடிநீர் வசதிக்காக தேக்கத்தில் அமைக்கப்பட்ட மோட்டார் வேலை பூர்த்தியாகியும் இயங்கவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் மோட்டாரை இயக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

விடை :

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்திற்கான மின் இணைப்பு இன்னும் பெறவில்லையாதலால் மின் இயந்திரம் இயங்காமல் உள்ளது. மின்வாரியத்தை அணுகி, மின் இணைப்பு பெற தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உடன் மின் இணைப்பு பெற்று இத்திட்டம் பயனுக்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வினா 470 : திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கம்மாபுரம் ஒன்றியம் ஒட்டிமேடுக்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா

(ஆ) ஆம் எனில் எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை;

**காசிபாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்.**

வினா 471 : திரு வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

வேடசந்தூர் வட்டம் காசிபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 'கூடுதல் கட்டிடம்' கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை :

இது குறித்த திட்டம் எதுவும் நிலுவையில் இல்லை.



**சென்னை சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி மூலம் கிடைத்த வருமானம்.**

வினா 472 :— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

1979-ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் அரசுக்கு எவ்வளவு வருவாய் கிடைத்துள்ளது?

விடை :

1979 ஆண்டு சென்னையில் நடைபெற்ற சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிக்கு கிடைத்த மொத்த வருவாய் :—

| | ரூ. |
|---|---|
| மொத்த வருவாய் .. .. .. | 31,71,1[illegible]4·00 |
| மொத்தச் செலவு .. .. .. | 19,[illegible]6,812·00 |
| நிகர வருமானம் .. .. .. | 12,44,314·00 |

**விருத்தாசலம் பகுதி அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்.**

வினா 473:—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் ஒன்றியம் மணவாளநல்லூர் அரிசன மக்களுக்கு சுமார் 200 மனைப்பட்டா வழங்க சர்வே கல் அமைத்தல் முதலிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் 12 ஆண்டுகளாக மேற்படி அரிசன மக்களுக்கு மனை வழங்காமல் இருப்பதற்கு காரணம் என்ன?

(ஆ) உடனடியாக மனை வழங்க அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா?

விடை:

(அ) மற்றும் (ஆ) மணவாளநல்லூர் அரிசன மக்களுக்கு வீட்டுமனை வழங்க நில ஆர்சித நடவடிக்கை 1977-ல் மேற்கொள்ளப்பட்டு 1978 ஆம் ஆண்டு அரசு ஆணையும் வழங்கப்பட்டு 20—2—1978 அரசிதழில் பிரசுரமாகியது. இறுதி தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன் நிலச் சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுத்தாக்கல் செய்தனர். ரிட் மனுவை அனுமதித்து 5 (எ) விசாரணையை ரத்து செய்து உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. பின்னர் மறு விசாரணையை நடத்துமாறு நிலம் கையகப்படுத்தும் அலுவலர் உத்தரவிடப்பட்டார். 1979-ல்

சேலம் நகர அமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் நில ஆர்சிதத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலங்கள் குடி இருக்க தகுதி அற்றவை என தெரிவித்ததால் ஆர்சித நடவடிக்கை கைவிடப்பட்டது. எனவே 4 (1) முன் மொழிவானது அரசு நிலையில் தள்ளுபடி செய்யப்பட்டது. விருத்தாசலம் (அரிசன நலத்) தனி வட்டாட்சியருக்கு வேறு நிலங்களை ஆர்சிதம் செய்ய முன்மொழிவு அனுப்ப அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவரிடமிருந்து தேவையான 4 (1) முன்மொழிவு அறிக்கை பெற்றவுடன் தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியரே மனைப்பட்டா வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்வார்.

வினா 474—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விருத்தாசலம் நகராட்சி வயலூரிலுள்ள சுமார் 150 அரிசன குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது அரிசன குடும்பங்களுக்கு வீட்டு மனை வழங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் வயலூரிலுள்ள அரிசன குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்க விருத்தாசலம் (அரிசன நலத்) தனி வட்டாட்சியருக்கு நில ஆர்சிதம் செய்ய அதிகாரம் வழங்குவதற்காக அவரிடமிருந்து முன்னறிக்கை கோரப்பட்டுள்ளது. அவரிடம் இருந்து தேவையான 4 (1) முன்மொழிவு அறிக்கையானது பெற்றவுடன் தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியரே நில ஆர்சிதம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்குவார்.

### திருப்போரூர் அரசு மருத்துவமனை.

வினா 75—திரு. ஜி. சொக்கலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருப்போரூர் ஒன்றியத்தில் அடங்கிய திருப்போரூர் அரசு மருத்துவ மனையில் எத்தனை டாக்டர்கள் உள்ளனர்?

(ஆ) அவர்களுள் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற டாக்டர்களும் அமர்த்தப்பட்டு உள்ளனரா?

(இ) படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா?



விடை—

(அ) ஒரு டாக்டர்.

(ஆ) தற்சமயம் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற மருத்துவர் பணிபுரிந்து வருகிறார்.

(இ) இல்லை.

### வண்டலூரில் மிருகக்காட்சிச் சாலைக்கான நிலம்.

வினா 476—திரு. ஜி. சொக்கலிங்கம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் அடங்கிய வண்டலூரில் மிருகக்காட்சிச் சாலைக்காக எடுக்கப்பட்ட மொத்த நிலம் எவ்வளவு?

(ஆ) அதில் காட்டு இலாக்கா நிலம் எவ்வளவு? தனி[illegible] நிலம் எவ்வளவு?

விடை—

(அ) வண்டலூரில் மிருகக்காட்சி சாலையானது 814 74 ஏக்கர்கள் பரப்பளவில் அமைக்கப்படும்

| | ஏக்கர். |
|---|---|
| (ஆ) - | |
| காட்டு இலாக்கா நிலம் .. .. | 776·00 |
| தனியார் நிலம் .. .. .. | 38 74 |
| மொத்தம் .. | 814 74 |

### பரனூர் தொழு நோயாளிகள் குடியிருக்கும் கட்டிடத்தை விரிவு படுத்துதல்

வினா 477—திரு. ஜி. சொக்கலிங்கம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கல்பட்டு மாவட்டம் பரனூர் தொழுநோயாளிகள் குடி இருக்கும் கட்டிடத்தை விரிவு படுத்தும் உத்தேசம் உண்டா?

[முற்பகல் 10-20]

திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடானைத் தொகுதியைப் பொறுத்தவரையில் அது அதிகமாக கிராமங்கள் உள்ள இடமாகும். அங்கே சரியான போக்குவரத்து வசதியில்லாமல் மக்கள் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. மேலும் அந்த திருவாடானையில் ஒரே ஒரு மினி பஸ்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தத் தொகுதியிலே இன்னும் சில இடங்களில் அந்தப் பேருந்தை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் சட்டமன்ற உறுப்பினர் இருக்கின்ற நிலையை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். எனவே தேவை என்ற காரணத்தால் மீண்டும் தேவையானால் போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி : திருவாடானையில் இருந்து ஆர். எஸ். மங்கலம் அருகில்தான் உள்ளது. அது திருவாடானைப்பகுதியில் உள்ளது. அது என்னுடைய தொகுதி. திருவாடானையில் இருந்து ஆர். எஸ். மங்கலத்திற்கு மினி பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி அவருடைய தொகுதியிலே வந்திருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். நிச்சயமாக அதை ஆராய்ச்சி செய்து அவருடைய தொகுதி என்பதால் மட்டுமல்ல, தகுதியின் அடிப்படையிலேயும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மினி பேருந்து விடவேண்டும் என்று சில குறிப்புகளைக் கொடுத்திருக்கின்றேன். அப்படிக் கொடுக்கப்பட்ட இடங்களுக்கு மினி பேருந்துகள் விட அமைச்சர் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மினி பஸ்கள் விடுவதற்கான குறிப்புக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே மினி பேருந்துகள்தான் விடவேண்டுமா அல்லது பெரிய பேருந்து விடலாமா என்று ஆராய்ச்சி செய்துக் கொண்டிருக்கிறோம். பெரிய பேருந்து விடுவதற்கு வழி இருக்குமானால் நிச்சயமாக பெரிய பேருந்துகளே விடப்படும்.

திரு. உ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, திருவாடானை மட்டுமல்ல, முகவை மாவட்டம் அனைத்திலுமே ரஸ்தாக்கள் சரியாக இல்லாத காரணத்தினால், கிராம மக்களுக்குப் போக்குவரத்து வசதிகள் இல்லாத பகுதிகளுக்கு; ரஸ்தாக்கள்





வசதி அற்ற நிலையிலே, மினி பஸ்கள் விடும் திட்டம் அரசின்பால் உள்ளது. அந்த அடிப்படையில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் மினி பஸ்களை விட உடனடியாக ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நோக்கமே பேருந்து வசதிகள் இல்லாத கிராமங்களுக்குப்பேருந்து வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான். அதன் அடிப்படையிலேதான் ஒவ்வொரு கிராமத்திற்கும் சாலைகள் போட்ட பின்னர் பெரிய பேருந்துகள் விடுவதற்குக் காலதாமதம் ஏற்படும் என்ற அடிப்படையில் மினி பேருந்து விடப்படவேண்டும் என்று நடவடிக்கை எடுத்தோம். நான் ஏற்கெனவே பல முறை சொல்லி இருக்கிறேன். திருப்பித் திருப்பிச் சொல்லுவதற்கு எனக்குச் சங்கடமாக இருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமைகள் கொஞ்சம் மோசமாக இருக்கின்றன என்பதால் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்* முடிவுற்றன.

(குறிப்பு).—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. அறிவிப்புகள்.

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கூட அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

இவை என் ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்த பிறகு இவற்றைப் பேரவையில் எடுத்துக் கொள்வதா இல்லையா என்பதற்கான எனது இசைவு குறித்து முடிவு செய்யப்படும்.

*ஆ. உடுக்குறியிடாத வினாக்களும் விடைகளும்—626—670 இணைப்பில் பார்க்க.

(ஆ) இப்போது இருக்கும் அறைக்குள் சுமார் எத்தனை பேர். இருக்கிறார்கள்?

(இ) இப்போது மொத்தம் எத்தனை அறைகள் உள்ளன?

விடை—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் பரனூர் தொழு நோயாளிகள் குடியிருக்கும் கட்டிடத்தை விரிவு படுத்தும் உத்தேசம் இல்லை.

(ஆ) மேற்படி அரசு மறுவாழ்வு இல்லத்தில் இருக்கும் அறைக்குள் 533 பேர்கள் இருக்கிறார்கள்.

(இ) மொத்தம் 4 கட்டிடங்கள் உள்ளன. ஒவ்வொரு கட்டிடத்திலும் ஒரு பெரிய அறை வீதம் 4 நீண்ட அறைகள் உள்ளன. இந்த ஒவ்வொரு கட்டிடமும் பக்கத்திற்கு 16 சிறிய அறைகள் வீதம் 32 அறைகள் கொண்டது. ஆக மொத்தம் 4 கட்டிடத்திலும் 128 அறைகள் உள்ளன

### திருப்போரூர் தொகுதியில் வழங்கப்பெற்ற வீட்டுமனைப் பட்டாக்கள்.

வினா 478—திரு. ஜி. சொக்கலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதியில் 1977–1980 ஆண்டுகளில் எத்தனை கிராமங்களில் எத்தனை பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது?

விடை—

செங்கல்பட்டு வட்டம், திருப்போரூர் தொகுதியில் 1977–1980 ஆண்டுகளில், வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட விபரம் கிராம வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | கிராமத்தின் பெயர். | வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1977 .. | தண்டரை .. .. .. | 9 |
| | மேலூர் .. .. .. | 10 |
| | வண்டலூர் .. .. | 53 |
| | | 72 |
| 1978 .. | ஏதுமில்லை. | .. |
| 1979 .. | தையூர் .. .. .. | 30 |
| | கீழூர் .. .. .. | 24 |
| | | 54 |



| ஆண்டு. | கிராமத்தின் பெயர். | வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980 .. | அருங்குன்றம் .. .. | 6 |
| | அனுமந்தபுரம் .. .. | 5 |
| | கரும்பாக்கம் .. .. | 2 |
| | தண்டரை .. .. .. | 7 |
| | திருத்தேரி .. .. .. | 2 |
| | | 22 |

### ஆலங்குளம் தொகுதி ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பழுது பார்க்க கூடுதல் நிதி.

வினா 479—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதியில் ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பழுது பார்க்க மானூர், ஆலங்குளம், கீழப்பாவூர் ஒன்றியங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா ?

விடை—

திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பழுதுபார்க்க கீழ்க்கண்ட ஒன்றியங்களுக்கு கீழ்கண்ட நிதி ஒதுக்கீட்டினை தவிர நடப்பு நிதியாண்டில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை:

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | அரசு நிதி ஒதுக்கீடு. |
|---|---|
| | ரூ. |
| 1. மானூர் .. .. .. | 69,556 |
| 2. ஆலங்குளம் .. .. .. | 69,754 |
| 3. கீழப்பாவூர் .. .. .. | 1,06,052 |
| மொத்தம் .. | 2,45,362 |

### சத்திரமனை கிராம தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்கல்.

வினா 480—திரு ஜே. எஸ். இராசு : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியிலுள்ள சத்திரமனை கிராமத்திலிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து வீட்டுமனை வழங்குமாறு அரிசன நல இலாகாவுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியிலுள்ள சத்திரமனை கிராமத்திலிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் இருந்து வீட்டுமனை வழங்குமாறு அரிசன நல இலாகாவுக்கு முறையீடு வந்துள்ளது.

(ஆ) அரிசன காலனிக்கு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நில எடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கையில் உள்ளது.

### பொம்மனாப்பாடி கிராம தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்கல்.

வினா 481—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியில் இருக்கும் பொம்மனாப்பாடி கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து வீட்டுமனை வழங்குமாறு அரிசன நல இலாகாவுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியில் இருக்கும் பொம்மனாப்பாடி கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து வீட்டுமனை வழங்குமாறு அரிசன நல இலாகாவுக்கு விண்ணப்பம் வந்துள்ளது.

(ஆ) அரிசன காலனிக்கு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது. நில எடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கையில் உள்ளது.



### தமிழ்நாட்டில் பார்வையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு

வினா 482—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கான வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் 1979—1980-ல் எத்தனை பார்வையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது ?

விடை—

36 பேர்.

### தமிழ்நாட்டிலுள்ள மீனவர் பயிற்சி நிலையங்கள்.

வினா 483—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மீனவர் பயிற்சி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவைகளை தொடர்ந்து நடைமுறைப்படுத்தும் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை :

(அ) தமிழ்நாட்டிலுள்ள மீனவர் பயிற்சி நிலையங்கள் மொத்தம் ஆறு.

(ஆ) ஆம்.

### தானிப்பாடியிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

வினா 484—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்தில் அரசு அங்கீகரித்துள்ள மார்க்கெட்டிங் கமிட்டி எப்போது முதல் செயல்பட ஆரம்பிக்கும் ?

விடை—

தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டம் பிரிவு 5 (3)-ன் கீழ் தானிப்பாடியில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்குமாறு அரசு, ஆணை எண். 1610, வேளாண்மை, நாள் 14—8—1979-ல் வட ஆற்காடு விற்பனைக் குழுவைப் பணித்தது.

ஆனால் தானிப்பாடியிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தண்டராம்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு, அது ஆரம்பிக்கப்பட்ட நாளான 4—12—1976-லிருந்து மிகவும் குறைந்த அளவே வரத்துக்கள் இதுநாள் வரையில் இருப்பதால், தானிப்பாடியில் போதிய வரத்து எதிர்பார்க்க முடியவில்லை. இந்நிலையில் தானிப்பாடியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் திறந்தால் நிர்வாகச் செலவாக மாதம் ரூ. 2,000 செலவு செய்ய நேரிடும். எனவே தண்டராம்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வரத்து உறுதிப்படுத்திய பின்னர், தானிப்பாடியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### சேலம் அரசு அச்சகத்திற்கு சொந்தக் கட்டிடம்.

வினா 485—திரு. செ. செம்மலை : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்தில் வட்டார அரசு அச்சகத்திற்காக சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு நிலத்தினைக் கையகப்படுத்தும் செயற்குறிப்பின் தற்போதைய நிலை யாது ?

விடை :

சேலம் தொழிற்பேட்டையில், ரெட்டியூர் கிராமத்தில், சிறு தொழில் வளர்ச்சி கழகத்திற்குச் சொந்தமான மூன்று ஏக்கர் நிலத்தை வாங்கி, அரசு மண்டல அச்சகத்திற்கு நிரந்தரக கட்டிடம் கட்ட ஒரு கருத்துரு 29—4—1975-ல் எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால் அரசுக்கு அனுப்பப்பட்டது. மேற்படி 3 ஏக்கர் நிலத்தின் மதிப்பு ரூ. 3,61,329·02 அதிகமெனக் கருதி, சேலத்தில் சிறைத் துறைக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் நிலத்தை வாங்குவது தொடர்பாக நிலம் ஒதுக்கீடு சம்பந்தமாக சிறைத் துறைத் தலைவரிடம் தொடர்பு கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிலத்தை வாங்கும் அவசர அவசியத்தை எழுதுபொருள் அச்சுத்துறை பொது மேலாளரால் சிறை துறைத் தலைவரிடம் நேரடியாக விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. சிறைத் துறைத் தலைவர் 3 ஏக்கர் நிலம் ஒரு அரசுத் துறைக்கே தேவைப்படுவதால், சேலம் பிராந்திய மாநில வீட்டு வசதி வாரியத்திற்கென ஒதுக்கப்பட்ட 7·22 ஏக்கர்களில், அரசும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும் ஆட்சேபனை தெரிவிக்காமலிருந்தால் 3 ஏக்கர்கள் நிலம் அரசு வட்டார அச்சகத்திற்கு வழங்கலாமென அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார். இது சம்பந்தமாக, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் மற்றும் முதன்மைப் பொறியாளரை எழுதுபொருள் அச்சுத் துறை துணை இயக்குநரும், பொது மேலாளரும் 10—12—80-ல் சந்தித்தனர். வீட்டு வசதி வாரியத்திற்கென சிறைத்துறையினரால் ஒதுக்கப்பட்ட 7 ஏக்கர்கள் நிலத்தில் மூன்று ஏக்கர்கள்



நிலத்தினை எழுதுபொருள் அச்சுத்துறைக்கு வழங்குவதற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் சம்மதம் தெரிவித்துள்ளார். ஆனால், மேற்படி நிலத்தை நேரடியாக ஆய்வு செய்த பின்னரே அதில் எழுதுபொருள் அச்சுத் துறைக்கு வழங்கப்பட வேண்டிய சரியான இடத்தை ஒதுக்குவது சம்பந்தமாக முடிவெடுக்கப்படும் என்றும், 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களின் பிற்பகுதியில் தான் நிலத்தை ஆய்வு செய்ய இயலும் என்றும் தெரிவித்துள்ளார். அவரிடமிருந்து சம்மதம் பெற்ற பின்பு மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### சேலம் அரசினர் பிராந்திய அச்சகத் தொழிலாளர் சங்கம்

வினா 486—திரு. செ. செம்மலை: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேலம் அரசினர் பிராந்திய அச்சகத்தில் உள்ள தொழிலாளர் சங்கத்திற்கு அரசு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதா ?

விடை—

சேலம் அரசினர் பிராந்திய அச்சகத்திலுள்ள தொழிலாளர் சங்கத்திற்கு அரசின் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை.

### வாடகைக் கட்டிடங்களில் செயல்படும் அரசு அச்சகங்கள்

வினா 487—திரு. செ. செம்மலை : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாடகைக் கட்டிடங்களில் செயல்படும் அரசு அச்சகங்கள் யாவை ?

(ஆ) அத்தகைய அச்சகங்களுக்கு ஆண்டுதோறும் வாடகையாகச் செலுத்தப்பட்டு வரும் வாடகைக் கட்டணம் எவ்வளவு ?

(இ) இத்தகைய அச்சகங்களுக்கென கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

(அ) 1. அரசு கிளை அச்சகம், ஆனைக்காரன் எஸ்டேட், சூளை, சென்னை-7.

2. அரசு மண்டல அச்சகம், சேலம்.

3. அரசு மண்டல அச்சகம், திருச்சிராப்பள்ளி.

(ஆ) 1. ரூ. 2,26,176.00.

2 ரூ. 7,788.00

3 ரூ. 27,552.00.

(இ) சேலம், திருச்சிராப்பள்ளி அரசு மண்டல அச்சகங்களுக்கென கட்டிடங்கள் கட்டும் செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனைக்காரன் எஸ்டேட்டில் உள்ள அரசு கிளை அச்சகத்தினை மத்திய அச்சகத்திற்கு மாற்றுதல் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### விக்கிரமசிங்கபுரம் இ.எஸ்.ஐ. மருத்துவமனை

வினா 488—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரமசிங்கபுரம் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் எத்தனை டாக்டர்கள் பணியாற்ற வேண்டும்?

(ஆ) எத்தனை பேர்கள் பணியில் உள்ளனர்?

(இ) இது பற்றிய விவரம் என்ன?

விடை—

(அ) தற்போது விக்கிரமசிங்கபுரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் ஏழு மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும்.

(ஆ) ஆறு மருத்துவர்கள் பணியில் உள்ளனர்.

(இ) விக்கிரமசிங்கபுரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் 11,500 தொழிலாளர் குடும்பத்தினர் மருத்துவ வசதி பெறுகின்றனர். தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் (E.S.I. Corporation) வகுத்துள்ள விதிமுறைகளின்படி 1,000. குடும்பங்களுக்கு 1 மருத்துவர் என்ற விகிதத்தில் இம்மருந்தகத்திற்கு 11 மருத்துவர் நியமிக்கப்படலாம். ஆனால் தற்போது இம்மருந்தகத்திற்கு ஏழு மருத்துவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் தற்போது ஆறு மருத்துவர்கள் பணியில் உள்ளனர். மீதியுள்ள ஒரு பதவிக்கு தொடர்ந்து நியமனம் செய்யப்பட்ட இரு மருத்துவர்கள் மருத்துவ மேல் படிப்பு பயின்றுக் கொண்டிருப்பதாலும், வேறு மருத்துவமனைகளில் பணியாற்ற விரும்புவதாலும் பதவியில் சேரவில்லை. ஆகவே தற்போது, இப்பதவி காலியாகவே உள்ளது. இப்பதவிக்கு விரைவில் வேறு மருத்துவரை நியமனம் செய்ய மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குனர் ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

2. விக்கிரமசிங்கபுரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்கு மேலும் 4 மருத்துவர்களை கூடுதலாக நியமிக்கக் கோரி மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநர் அரசுக்கு ஒரு செயற் குறிப்பு அனுப்பியுள்ளார். இஃது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.



### கோட்டையூர் இராம அரிசன மக்களுக்கு குடிநீர் வசதி

வினா 489—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம், கோட்டையூர் கிராமத்தில் வாழும் அரிசன பொது மக்களுக்கு தனியாக மேல்நிலை நீர்நிலை தொட்டி கட்டி குடிநீர் வசதி செய்து கொடுக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கோட்டையூர் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள மேல் நிலை நீர்த் தொட்டியிலிருந்து குழாய் மூலம் விஸ்தரிக்கப்பட்டு கோட்டையூர் கிராம அரிசன குடியிருப்பு மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. மேற்சொன்ன அரிசன குடியிருப்பில் மேல்நிலைநீர் தொட்டி கட்டுவது குறித்து குறிப்பு ஏதும் இல்லை.

### காடனேரி கிராமத்தில் இணை கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா 490—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் ஆடுமாடுகள் அதிகமாக உள்ள காடனேரி கிராமத்தில் இணை கால்நடை மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

தற்சமயம் காடனேரி கிராமத்தில் கால்நடை இணை மருத்துவமனை அல்லது கிளை மருத்துவ நிலையம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

### செங்கல்பட்டு ஏரியில் உல்லாசப் படகு விடும் திட்டம்.

வினா 491—திரு. ஆர். தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு ஏரியில் உல்லாசப் படகு விடும் உத்தேசம் உள்ளதா?

விடை—

தற்சமயம் இல்லை

## Obscene Posters in Madras City

வினா 492—திரு. எஸ். இராசாராமன் : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :

(*a*) Whether the Madras City Police have launched on ''clean the obscene poster'' campaign in recent months; and

(*b*) If so, the details thereof ?

விடை—

(அ) சென்னை நகரில் ஆபாச சுவரொட்டிகளை அகற்றும் பணி அவ்வப்பொழுது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. ஆபாச சுவரொட்டிகள் எங்கெல்லாம் பார்வைக்கு வைக்கப்படுகின்றனவோ அவை உடனடியாக அகற்றப்படுகின்றன.

(ஆ) ஆனந்த் திரையரங்கு பஸ் ஸ்டாப் அருகே வைக்கப்பட்டிருந்த ' லகரி ' என்ற திரைப்படத்தின் மூன்று சுவரொட்டிகள் 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 2-ம் நாளன்று '' எப்-4 '' தேனாம்பேட்டை காவல் நிலைய காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டு, வடபழனியைச் சேர்ந்த தாமஸ் என்பவரின் மகனான எட்வின்ஸன் என்பவரின் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டு எழும்பூர் 14-வது மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் அவர்களால் 1980-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 20-ம் நாளன்று ரூ. 250 அபராதம் விதிக்கப்பட்டு, அபராதத் தொகையை கட்டத் தவறினால் 2 வாரம் கடும் தண்டனை மேற்கொள்ள வேண்டும் என தீர்ப்பு அளிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் ரூ. 250 அபராதத் தொகையை கட்டினார்.

## காசிபாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா 493—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேடசந்தூர் வட்டம் காசிபாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மருத்துவமனை அமைக்கும் பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.



## மதுராந்தகத்திலுள்ள தமிழ்நாடு பொறியியல் வேளாண்மை கழகம்.

வினா 494—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகரத்தில் தமிழ்நாடு பொறியியல் வேளாண்மை கழகத்தின் சார்பில் நடத்தப்படும் டிராக்டர் வாடகை நிலையத்தை மீண்டும் துவக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் துவக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

## வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் உணவுக்கு வேலை திட்டத்தின் கீழ் எடுக்கப்பெற்ற வேலைகள்.

வினா 495—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் (தென்னாற்காடு மாவட்டம்) உணவுக்கு வேலைத் திட்டத்தின்கீழ் (1979–80, 1980–81) ஆகிய ஆண்டுகளில் எத்தனை வேலைகள் எடுத்துச் செய்யப்பட்டன?

(ஆ) அதற்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(இ) அந்த வேலைகள் எந்த முறையில் விடப்படுகிறது?

விடை—

| | 1979–80. | 1980–81. |
|---|---|---|
| (அ) எடுக்கப்பட்ட வேலைகள் | 126 | 8 |
| முடிக்கப்பட்ட வேலைகள் | 126 | 1 |
| செயலாக்கப்படும் வேலைகள் | .. | 7 |
| (ஆ) துறையினாலேயே செய்யப்பட்டன. | 3,20,450 | 92,500 |
| (இ) கலைக்கப்படுவதற்கு முன்பிருந்த ஊராட்சி மன்ற தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. | .. | .. |

[1981 மார்ச் 7

**தமிழகத்தில் குறுவை இருபோக சாகுபடி செய்யப்பெற்ற நிலப்பரப்பு.**

வினா 496—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் 1979–80-ல் குறுவை இருபோகம் சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு எவ்வளவு ?

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி செய்யப்பட்ட ஏக்கர் எவ்வளவு?

விடை—

(அ) தமிழகத்தில் 1979–80ஆம் ஆண்டில் குறுவை இருபோக சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு 6.05 இலட்சம் ஏக்கர்களாகும்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவு பின்வருமாறு :—

1979–80—4.12 இலட்சம் ஏக்கர்.

1980–81—4.22 இலட்சம் ஏக்கர்.

**கிராமிய வீடுகட்டும் கூட்டுறவு சங்கம் மூலம் வழங்கப்பெற்ற கடன்.**

வினா 497—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கிராமிய வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தின் மூலம் 1979–80-ல் எவ்வளவு கடன் வழங்கப்பட்டது?

(ஆ) கடன் கேட்டு 1979–80-ல் மனு செய்தவர்கள் எத்தனை பேர்?

(இ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை பேருக்கு கடன் வழங்கப்பட்டது?

விடை—

(அ) கிராமிய வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் 1979–80 கூட்டுறவு ஆண்டில் ரூபாய் 14,64.95 இலட்சங்களுக்கு கடன் வழங்கப்பட்டது.

(ஆ) 1979–80 கூட்டுறவு ஆண்டில் 98,981 பேர்கள் கடன் கேட்டு மனுசெய்து இருந்தார்கள்.

(இ) தஞ்சை மாவட்டத்தில் 6,036 பேருக்கு கடன் வழங்கப்பட்டது.



1981 மார்ச் 7]

**தஞ்சை மாவட்டத்தில் இயங்கிவரும் கிராம அங்காடிகள்.**

வினா 498 :—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1980ஆம் ஆண்டு செப டம்பர் திங்கள் 30ஆம் தேதி வரையில் இயங்கி வரும் கிராம அங்காடிகள் எத்தனை?

(ஆ) அவைகளில் கூட்டுறவுத்துறை மூலம், நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் நடத்தப்படுபவை முறையே எத்தனை?

விடை—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1980ஆம் ஆண்டு செப்டம் பர் திங்கள் 30ஆம் தேதியன்று 1,631 கிராம அங்காடிகள் இயங்கி வந்தன.

(ஆ) கூட்டுறவு சங்கங்கள் 577 கிராம அங்காடிகளையும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் 1,054 கிராம அங்காடிகளையும் நடத்தி வந்தன.

**வத்திராயிருப்பு ஒன்றிய சலவைத் தொழிலாளருக்கு சமுதாயக் கிணறு.**

வினா 499—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருவில்லிபுத்தூர் வட்டம் வத்திராயிருப்பு ஒன்றியத்தில் வாழும் சலவை தொழிலாளர்களுக்கு துணிகளை சலவை செய்ய சமுதாயக் கிணறு வெட்டிக் கொடுக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தினை தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அறிவித்தல்.**

வினா 500—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் மிகவும் பின்தங்கிய மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தை தன்னிறைவு திட்டத்தின்கீழ் அறிவிக்கும் திட்டம் அரசு குறிப்பில் உள்ளதா ?

(ஆ) இல்லையெனில் விரைந்து நடவடிக்கை எடுத்து, தன்னிறைவு திட்டத்தில் சேர்க்கப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) தன்னிறைவுத் திட்டம் அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள்ளாக மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களுக்கும் விரிவாக்கப்படும்.

## இணைப்பு I.

(திரு. என். பழனிவேல், எம்.எல்.ஏ., அவர்களால் கேட்கப்பட்ட வினா எண் 358-க்கான விடையைக் காண்க.)

பழனி வட்டத்தில் கீழ்க்கண்ட கிராமங்களில் வாழும் அரிசனங்களுக்கு பட்டா வழங்கிய விபரங்கள் வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளது :—

கஞ்சநாயக்கன்பட்டிக் கிராமத்தில் பறையர்கள் மற்றும் மாதாரிகள் ஆகிய இரு இனத்தவர்கள் வாழும் குடியிருப்புக்கு மேற்கு பக்கம் உள்ள பட்டா நிலத்தை ஆர்சிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பட்டா நிலத்தை ஆர்சிதம் செய்தபின் மேற்படி கிராம அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

எரமநாயக்கன்பட்டி கிராமத்தில் 1974 ஆம் வருடம் 9·95 ஏக்கர் நிலம் ஆர்சிதம் செய்யப்பட்டு 19 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

1979–80-ல் மேற்படி கிராமத்தில் 56·2 ஏக்கர் நிலம் ஆர்சிதம் செய்யப்பட்டு 95 குடும்பங்களுக்கு பட்டா எழுதப்பட்டு வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளது. மேற்படி பட்டாக்களை வழங்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வத்தக்கவுண்டன்வலசு கிராம நத்தத்தில் 26 வீடுகளில் 40 குடும்பங்கள் வசிக்கின்றனர். 0 83 ஏக்கர் நிலம் அரிசன நத்தமாக மாற்றப்பட்டு அதிகப்படியாக உள்ள 14 குடும்பங்களுக்கும் தலா மூன்று செண்டு வீதம் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இருக்கின்ற 20 வீட்டுமனைகளில் இன்னும் காலியாக ஆறு மனைகள் உள்ளன. எனவே இக்கிராமத்தில் புதிதாக நில ஆர்சிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையில்லை.

ருக்குவார்பட்டி கிராமத்தில் உள்ள 50 குடும்பங்களுக்கு பழனி தாலூகா தாசில்தாரால் பட்டா வழங்கப்பட்டு உள்ளதால் மேற்படி கிராமத்தில் புதிதாக நில ஆர்சிதம் செய்யத் தேவையில்லை.

டி. கே. என். புதூர் கிராம நத்தத்தில் உள்ள 30 வீடுகளில் 50 குடும்பங்கள் உள்ளனர். அதிகப்படியாக உள்ள 20 குடும்பங்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க நில ஆர்சித நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## இணைப்பு II.

(திரு. இரா. தாமரைக்கனி, எம்.எல்.ஏ., அவர்களால் கேட்கப்பெற்ற வினா 359-க்கான விடையைக்காண்க.)

இம்மாநிலத்தில் 75 சோதனைச் சாவடிகள் உள்ளன. இவற்றில் 7 பெரிய சாவடிகள், 68 சிறிய சாவடிகள். 1979 ஆம் ஆண்டு மே திங்களுக்கு முன்பு, சோதனைச் சாவடிகள், அந்தந்த பகுதியைச் சார்ந்த துணை ஆணையாளர்களது பொறுப்பில் இருந்து வந்தன. அதற்குப் பின்னர், சோதனைச் சாவடிகளின் பொறுப்பும், நிர்வாகமும் இந்திய அரசுப்பணி அதிகாரிகளான இரண்டு துணை ஆணையாளர்களிடம் (செயல்படுத்தும் பிரிவு) ஒப்படைக்கப்பட்டது. அவ்வதிகாரிகளில் ஒருவர் சென்னையிலும் மற்றொருவர் மதுரையிலும் இருக்கிறார்கள். சென்னை (செயல்படுத்தும் பிரிவு), துணை ஆணையாளரின் கீழ், சென்னையிலுள்ள சோதனைச் சாவடிகளுக்கென்று ஒரு தனி உதவி ஆணையாளர் உள்ளார். வெளியூர்ப்புறங்களில் சோதனைச் சாவடிகள் அந்தந்த செயல்படுத்தும் பிரிவு உதவி ஆணையாளர்களது பொறுப்பின் கீழ் இருந்து வருகின்றன.

2. ஒவ்வொரு சோதனைச் சாவடியும் உதவி வணிகவரி அதிகாரி, உதவியாளர்கள், பதிவேடு எழுத்தர்கள், மற்றும் பளுதூக்குவோர்கள் முதலியவர்களுடன் 24 மணி நேரமும் இயங்கி வருகிறது. அந்தப் பணியாளர்கள், 8 மணி நேரத்திற்கு ஒரு பகுதி என தமக்குள் முறை ஏற்படுத்திக் கொண்டு பணி புரிகின்றனர். பெரிய சோதனைச்சாவடிகள் துணை வணிகவரி அதிகாரிகளின்கீழ் இயங்கி வருகின்றன.

3. சோதனைச் சாவடிகளின் நடைமுறை வருமாறு :—

வாகனங்களில் அனுப்பப்படும் சரக்குகளைக் காட்டும் ஆவணங்களான ஒப்படைப்புக் குறிப்பு, விற்பனைப் பட்டியல் முதலியன அவை உண்மையானவைதானா, அச்சரக்குகளுக்கு ஏற்கனவே விற்பனைவரி செலுத்தப்பட்டுள்ளதா, அச்சரக்குகளின் தன்மையும் அளவும் ஆவணங்களில் குறிக்கப்பட்டவாறு உள்ளதா என சோதனைச் சாவடிகளில் கூர்ந்து ஆய்வு செய்யப்படுகிறது. இவற்றில் ஏதாவது முரண்பாடு இருந்தால் சரக்குகளின் சொந்தக்காரர் மீது குற்றம் சுமத்தப்பட்டு இணக்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. குற்றம் சாட்டப்பட இயலாத ஆனால் சந்தேகத்திற்குட்பட்ட இனங்களில் முன் வரி (Advance Tax) வசூலிக்கப்பட்டு பின்னர் அவ்வரி சரிக்கட்டப்படுகிறது. வாகனங்களில் ஏற்றிச் செல்லும் சரக்குகளின் மீது பலத்த சந்தேகம் ஏற்பட்டால் அவற்றை எடுத்துச் சரிபார்த்து, குற்றங்கள் இருப்பின் அவை கண்டுபிடிக்கப்படுகின்றன. வரி செலுத்தியதற்கு ஆதாரம் காட்ட இயலாத, சரக்கினைக்கொண்டு செல்பவர் அதன் சொந்தக்காரர் இன்னாரென்று சுட்டிக்

காட்ட முடியாமலிருந்தால், அப்படிப்பட்ட இனங்களில் அச்சரக்குகளுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு செல்பவரிடம் முகாந்திரம் கேட்டு சரக்குகள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. சோதனைச் சாவடிகளில் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள், சம்பந்தப்பட்ட உதவி ஆணையர்களுக்கு வணிகர்களின் கணக்குகளின் மீது முடிவான வரி விதிப்பு செய்யும்போது சரி பார்ப்பதற்காக அனுப்பப்படுகிறது.

4. வணிகவரி செயல்படுத்தும் பிரிவு திருத்தியமைக்கப்பட்ட பின், நிர்வாகத்தினை நல்லமுறையில் முடிக்கிவிடும் வகையில் சோதனைச் சாவடிகள் உதவி ஆணையாளர்கள் மற்றும் துணை ஆணையாளர்களால் தொடர்ந்தும், திடீரென்றும் பார்வையிடப்படுகின்றன. இச்சோதனைகளின் விளைவாக, சோதனைச் சாவடியின் இயங்குதலில் தெளிவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் சோதனைச் சாவடிகளில் அதிகாரிகள் துன்புறுத்துவதாக வரும் புகார்களும் குறைந்துள்ளன.



## இணைப்பு III.

(திரு. இரா. தாமரைக்கனி, எம்.எல்.ஏ., அவர்களால் கேட்கப்பெற்ற வினா எண் 360க்கான விடையைக் காண்க.)

1956 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச்சட்டம் ஆகியவற்றின் கீழ் வரி ஏய்ப்பினைத் தடுக்கும் முயற்சியாக புலனாய்வு பிரிவை (Intelligence Wing) சட்டத்தைச் செயல்படுத்தும் பிரிவு (Enforcement Wing) என மாற்றியமைக்கப்பட்டு அது இரு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின்கீழ் செயல்பட்டு வருகிறது. ஒருவர் சென்னையிலும் மற்றொருவர் மதுரையிலும் உள்ளனர்.

2. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள செயல்படுத்தும் பிரிவானது சென்னை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய வணிகவரி கோட்டங்களையும், வேலூர் கோட்டத்தில் வடாற்காடு மாவட்டத்தையும் உள்ளடக்கியதாகும். மதுரையை தலைமையிடமாகக் கொண்டுள்ள செயல்படுத்தும் பிரிவானது, மதுரை, திருநெல்வேலி, திருச்சி வணிகவரி கோட்டங்களையும் வேலூர் கோட்டத்தைச் சேர்ந்த தென்னாற்காடு மாவட்டத்தையும் கொண்டதாகும்.

3. சட்டத்தை செயல்படுத்தும் பிரிவு, கடைகளைச் சோதனையிடுதல், சோதனைக் கொள்முதல், லாரிகளைச் சோதனையிடுதல் இதர பட்டியல்களில் உள்ள விபரங்களைச் சரி பார்த்தல், கள்ள ரசீது வியாபாரத்தை தடுத்தல் மற்றும் சினிமா கொட்டகைகளைச் சோதனையிடுதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

4. மொத்தமுள்ள 75 சோதனைச் சாவடிகளும் அந்தந்த பகுதித் துணை ஆணையாளர்களிடமிருந்து சட்டத்தைச் செயல்படுத்தும் பிரிவிற்கு தற்போது மாற்றப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதுமாக அதிகார வரம்பு கொண்டு, சென்னை, துணை ஆணையாளரின் (செயல்படுத்தும் பிரிவு) கீழ் நான்கு வணிகவரி அதிகாரிகள் அடங்கிய ஒரு மைய செயல்படுத்தும் பிரிவும் செயல்படுகிறது. மேலும் துணை ஆணையாளரின் (செயல்படுத்தும் பிரிவு) கீழ் ஒரு உதவி ஆணையாளரைக் கொண்டு மாநிலங்களுக்கிடையேயான வர்த்தக புலனாய்வு பிரிவும் செயல்படுகிறது. இப்பிரிவு இருப்பு மாற்றங்கள் என்ற பெயரில் நடைபெறும் மாநிலங்களுக்கிடையிலான விற்பனைகளை புலனாய்வு செய்கிறது.

5. தகவல் சொல்பவர்களிடமிருந்தும் தல அதிகாரிகளிடமிருந்தும் திரட்டிய தகவலின் பேரில் சோதனைகளும், முற்றுகைகளும் நடத்தப்படுகின்றன. தவிரவும், மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் அனுப்புகின்ற தகவல்களின் பேரிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள செயல்படுத்தும் பிரிவில், கால அறுவடைப் பயிர்கள் மூலமாக பெறும் வருவாயினை கைப்பற்ற முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

6. குறைவாக பட்டியலிடுதல் போன்ற தகவல் மறைப்புக்களை கண்டுபிடிக்க, துறைகளுக்கிடையே பரிமாறிக் கொள்ளும் தகவல்கள் உதவுகின்றன. விற்றுப்பணம் அனுப்பு வகை விற்பனை மற்றும் கிடங்கி மாற்றம், மாற்று உண்டியல் வகைகள் என்ற பெயரில் ஒரு முனை வரியினை தவிர்த்தல் மற்றும் 'சி' படிவத்தினை தவறாகப் பயன்படுத்தல் போன்றவைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

7. வரி ஏய்ப்பிற்காக திரைப்பட அரங்கு உரிமையாளர்கள் செய்யும் ஒழுங்கீனங்களைக் கண்டுபிடிக்க, தமிழ்நாடு கேளிக்கை வரிச்சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறையும், திடீரென்றும் சோதனைகள் நடத்தப்படுகின்றன. அனுமதிச் சீட்டுகள் மீது போலியான முத்திரைகளைப் பயன்படுத்திய குற்றத்திற்காக தண்டனை வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது. அரங்கில் அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக நபர்களை அனுமதித்த குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, தமிழ்நாடு சினிமா சட்டத்தின் கீழ் மேல் நடவடிக்கை எடுக்கும் பணி, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

8. தவிரவும், வரி ஏய்ப்பினைத் தடுக்கவும், சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்கவும் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் திருத்தப்பட்டு இருக்கிறது. விநியோகிக்கப்படும் இடம், கடை, கிடங்கு, சரக்குகள் வாங்குமிடம், ஊர்திகள் மற்றும் வியாபாரம் சம்பந்தப்பட்ட எந்த ஒரு இடம், கட்டிடம் அல்லது இடத்தில் நுழைவதற்கும் அங்குள்ள பொருட்களையும் அவை குறித்த எல்லா பதிவுகளையும் சோதனை செய்வதற்கும் துறை அதிகாரிகளுக்கு புதிய 41-ஏ பிரிவு சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது. குறைவான மதிப்பில் ரசீது போடுவதை தடுக்க 12-ஏ பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. ரசீதில் குறைவாக விலைபோடப்பட்டுள்ளவைகளை தற்போதைய பொதுச் சந்தை விலையின் அடிப்படையில் கூடியவரை உத்தேச மதிப்பீடு செய்வதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.



9. குதிரைப்பந்தயச் சட்டத்தைப் பொறுத்தவரையில் தொடர்ந்து குதிரைப்பந்தயம் நடைபெறும் நாட்களில் குதிரைப்பந்தய மைதானத்தில் சட்டத்திற்கு புறம்பான பந்தயங்கள் நடைபெறுவதைக் கவனிக்க அதிகாரிகள் குழு அனுப்பப்படுகிறது. தவறு செய்யும் 'புக் மேக்கர்கள்' மீது நடவடிக்கை மேற்கொள்ள துறைக்கு தற்போது அதிகாரம் இல்லாததால், முறைகேடான பந்தயங்களை ஒடுக்கவும், உத்தேச நியாய மதிப்பீடு செய்யவும் அதிகாரம் வழங்கும் வகையில் 1935 ஆம் ஆண்டு தமிழ்நாடு குதிரைப்பந்தய வரிச் சட்டம் மற்றும் அதன் விதிகளுக்கு பொது விற்பனை வரிச் சட்டத்திலுள்ளதைப் போல் தெளிவான திருத்தம் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இத்திருத்தங்கள் சிறப்புப் பணியிலிருந்த அதிகாரியின் பரிந்துரையை ஒட்டியதாகும்.

## இணைப்பு IV.

(திரு. இல. பலராமன், எம். எல். ஏ. அவர்களால் கேட்கப்பெற்ற வினா எண் 365-ஐக் காண்க.)

1978–79 ஆம் ஆண்டில் மாவட்டவாரியாக கையகப்படுத்தப்பட்ட தனியார் நிலங்களின் விவரம்.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | 1978–79 கையகப் படுத்தப் பட்ட நில அளவு. | கையகப் படுத்தப் பட்ட மனைகள். | வழங்கப் பட்ட வீட்டு மனைப் பட்டாக்கள் | செலவழிக்கப் பட்ட தொகை (இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | செங்கல்பட்டு .. .. | 124.22 | 1,916 | .. | 8.62 |
| 2 | வட ஆற்காடு .. .. | 157.02 | 2,665 | 637 | 9.77 |
| 3 | தென் ஆற்காடு .. .. | 232.06 | 3,828 | 449 | 14.39 |
| 4 | சேலம் .. .. .. | 213.79 | 3,667 | 710 | 21.64 |
| 5 | தர்மபுரி .. .. | 102.69 | 1,673 | 437 | 4.00 |
| 6 | திருச்சிராப்பள்ளி .. .. | 145.32 | 2,757 | 1,716 | 9.61 |
| 7 | புதுக்கோட்டை .. .. | 101.18 | 1,622 | .. | 0.57 |
| 8 | தஞ்சாவூர் .. .. .. | 380.34 | 6,404 | 361 | 11.84 |
| 9 | கோயம்பத்தூர் .. .. | 156.98 | 3,142 | .. | 8.73 |
| 10 | பெரியார் .. .. .. | .. | .. | .. | .. |
| 11 | ராமநாதபுரம் .. .. | 135.70 | 2,093 | 949 | 6.08 |
| 12 | மதுரை .. .. .. | 46.21 | 779 | .. | 10.90 |
| 13 | திருநெல்வேலி .. .. | 37.32 | 577 | 245 | 2.63 |
| 14 | கன்னியாகுமரி .. .. .. | 9.53 | 181 | .. | 2.51 |
| 15 | நீலகிரி .. .. .. | .. | .. | .. | .. |
| 16 | சென்னை .. .. .. | .. | .. | .. | .. |
| | மொத்தம் .. .. | 1,842.36 | 31,304 | 5,504 | 111.29 |

1979–80 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக கையகப்படுத்தப்பட்ட தனியார் நிலங்களின் விவரம்.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | 1979–80 கையகப் படுத்தப் பட்ட நில அளவு. | கையகப் படுத்தப் பட்ட மனைகள். | வழங்கப் பட்ட வீட்டு மனைப் பட்டாக்கள். | செலவழிக்கப் பட்ட தொகை. | குறிப்புரை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | செங்கல்பட்டு .. | 205.36 | 3,561 | 1,566 | 7.68 | .. |
| 2 | வட ஆற்காடு .. | 123.52 | 2,030 | 1,412 | 9.27 | .. |
| 3 | தென் ஆற்காடு .. | 157.00 | 1,962 | 6,105 | 6.10 | .. |
| 4 | சேலம் .. | 205.37 | 3,497 | 1,442 | 14.21 | .. |
| 5 | தர்மபுரி .. | 58.25 | 965 | .. | 3.56 | .. |
| 6 | திருச்சிராப்பள்ளி .. | 271.45 | 4,803 | 1.230 | 9.51 | .. |
| 7 | புதுக்கோட்டை .. | 20.01 | 348 | 85 | 0.38 | .. |
| 8 | தஞ்சாவூர் .. | 98.51 | 1,633 | 633 | 4.77 | .. |
| 9 | கோயம்பத்தூர் .. | 15.64 | 285 | 1,062 | 5.84 | .. |
| 10 | பெரியார் .. | 22.05 | 398 | .. | 0.28 | .. |
| 11 | ராமநாதபுரம் .. | 122.29 | 1,868 | 338 | 4.76 | .. |
| 12 | மதுரை .. | 281.98 | 5,080 | 3,050 | 16.71 | .. |
| 13 | திருநெல்வேலி .. | 38.10 | 572 | 264 | 0.86 | .. |
| 14 | கன்னியாகுமரி .. | 4.48 | 66 | 71 | 0.63 | .. |
| 15 | நீலகிரி .. | .. | .. | .. | .. | .. |
| 16 | சென்னை .. | .. | .. | .. | .. | .. |
| | மொத்தம் .. | 1,624.01 | 27,068 | 17,258 | 84.56 | .. |

# இணைப்பு V.

(உடுக்குறியிடாத வினா எண் 371-க்கான விடையைக் காண்க)

1978 விலைகள்.

கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழங்கப்பட்ட நூல் விலைகளின் விபரம்.

| நூல் எண்ணிக்கை. | ஜனவரி. | பிப்ரவரி. | மார்ச். | ஏப்ரல். | மே. | ஜூன். |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 10 .. .. | 65.00 | 65.00 | 63.00 | 58.00 | 57.00 | 56.00 |
| 20 .. .. | 79.50 | 79.50 | 79.00 | 77.00 | 76.00 | 76.00 |
| 26 .. .. | 81.00 | 81.00 | 82.00 | 82.00 | 79.00 | 80.00 |
| 40 .. .. | 101.00 | 98.00 | 100.00 | 98.00 | 98.00 | 97.00 |
| 60 .. .. | 128.00 | 127.00 | 125.50 | 126.00 | 126.00 | 126.00 |
| 60 .. .. | 135.00 | 135.00 | 137.00 | 139.00 | 139.00 | 139.00 |
| 80 .. .. | 160.00 | 160.00 | 160.00 | 158.00 | 158.00 | 160.00 |
| 80 .. .. | 172.00 | 172.00 | 172.00 | 174.00 | 174.00 | 174.00 |
| 100 .. .. | 204.00 | 204.00 | 204.00 | 204.00 | 204.00 | 204.00 |
| 100 .. .. | 219.00 | 219.00 | 219.00 | 230.00 | 230.00 | 230.00 |



| (1)—தொடர்ச்சி. | ஜூலை. | ஆகஸ்ட். | செப்டம்பர். | அக்டோபர். | நவம்பர். | டிசம்பர். |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 10 .. .. | 55.00 | 52.00 | 55.00 | 55.00 | 55.00 | 55.00 |
| 10 .. .. | 72.50 | 68.00 | 73.00 | 72.00 | 72.00 | 72.00 |
| 26 .. .. | 80.00 | 74.00 | 79.50 | 79.50 | 79.50 | 79.50 |
| 40 .. .. | 97.00 | 95.00 | 97.00 | 99.00 | 98.00 | 99.00 |
| 60 .. .. | 124.00 | 124.00 | 126.00 | 130.00 | 130.00 | 131.00 |
| 60 .. .. | 141.00 | 144.00 | 143.00 | 143.00 | 143.00 | 146.00 |
| 80 .. .. | 160.00 | 159.00 | 160.00 | 162.00 | 162,00 | 165.00 |
| 80 .. .. | 174.00 | 176.00 | 185.00 | 187.00 | 187.00 | 193.00 |
| 100 .. .. | 204.50 | 204.00 | 204.50 | 204.00 | 204.00 | 207.00 |
| 100 .. .. | 230.00 | 224.00 | 234.00 | 235.00 | 235.00 | 238.00 |

இணைப்பு V—தொடர்ச்சி.

1979 விலைகள்.

| நூல் எண்ணிக்கை. | | | ஜனவரி. | பிப்ரவரி, | மார்ச். | ஏப்ரல். | மே. | ஜூன். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 10 | .. | .. | 55.00 | 55.00 | 55.00 | 54.50 | 54.50 | 55.00 |
| 20 | .. | .. | 71.00 | 71.00 | 68.00 | 67.50 | 71.00 | 71.00 |
| 26 | .. | .. | 76.00 | 76.00 | 76.00 | 75.50 | 78.00 | 78.00 |
| 40 | .. | .. | 102.00 | 102.00 | 101.00 | 100.50 | 110.00 | 99.00 |
| 60 | .. | .. | 136.00 | 136.00 | 136.00 | 135.00 | 145.00 | 128.25 |
| 60 | .. | .. | 155.00 | 155.00 | 153.00 | 152.00 | 162.00 | 144.40 |
| 80 | .. | .. | 170.00 | 170.00 | 170.00 | 169.00 | 180.00 | 160.55 |
| 80 | .. | .. | 195.00 | 195.00 | 195.00 | 194.00 | 200.00 | 184.30 |
| 100 | .. | .. | 215.00 | 215.00 | 215.00 | 214.00 | 227.00 | 227.00 |
| 100 | .. | .. | 247.00 | 247.00 | 247.00 | 246.00 | 255.00 | 255.00 |



1979—விலைகள்—தொடர்ச்சி

| (1) | | | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| | | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 10 | .. | .. | 55.00 | 55.00 | 55.00 | 62.00 | 62.00 | 60.00 |
| 20 | .. | .. | 71.00 | 77.00 | 80.50 | 78.00 | 76.00 | 74.00 |
| 26 | .. | .. | 78.00 | 82.00 | 82.00 | 85.00 | 82.50 | 82.50 |
| 40 | .. | .. | 99.00 | 118.00 | 118.00 | 121.50 | 117.00 | 114.00 |
| 60 | .. | .. | 128.25 | 155.00 | 155.00 | 166.65 | 165.00 | 152.00 |
| 60 | .. | .. | 144.40 | 169.00 | 169.00 | 181.70 | 175.00 | 163.00 |
| 80 | .. | .. | 160.55 | 192.00 | 192.00 | 211.20 | 203.00 | 195.00 |
| 80 | .. | .. | 184.30 | 200.00 | 200.00 | 220.00 | 220.00 | 215.00 |
| 100 | .. | .. | 227.00 | 265.00 | 265.00 | 298.00 | 298.10 | 280.00 |
| 100 | .. | .. | 255.00 | 290.00 | 290,00 | 326.25 | 326.25 | 325.00 |

3. ராஜசூடாமணி

இந்த கிராமத்தில் கீழ்க்கண்ட காலனிகள் அமைந்துள்ளன.

| கிராமத்தின் பெயர். | நிலத்தின் ச.நெ. | விஸ்தீரணம் ஏக்கர். | வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (i) ராஜசூடாமணி .. | 1·7 | 0·94 | 60 |
| | 1·2 | 2·30 | 38 |

இதில் ரி. ச. 1/2ல் 2·30 ஏக்கர் 1962-ல் ஆர்சிதம் செயயப்பட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. வீட்டுமனை கேட்டு மனு வரப்பெறாததால் ஆர்சித நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

| கிராமத்தின் பெயர். | நிலத்தின் ச.நெ. | விஸ்தீரணம். ஏக்கர். | வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (ii) மேல்தாராசூர் காலனி. | 53/4 | 0·64 | 40 |
| | 53/2 | 1·14 | 20 |

இதில் ரி. ச. 53/2ல், 1·24 ஏக்கர் நிலம் 1962-ல் ஆர்சிதம் செய்யப்பட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனை பட்டா கோரி மனு ஏதும் வரப்பெறாததால் ஆர்சித நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

| கிராமத்தின் பெயர். | நிலத்தின் ச.நெ. | விஸ்தீரணம் ஏக்கர். | வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (iii) கீழ்ராதாசூர் காலனி. | 65/2 | 2·14 | .. |
| | 65/4 | 0·11 | .. |

இக்காலனி விஸ்தரிப்பிற்கு தற்போது ஏதும் அவசியமில்லை.

(iv) பிள்ளையார் தாங்கள

இந்த கிராமத்தில் வௌவால் தோப்பு காலனி மற்றும் பிள்ளையார்தாங்கள் ஆகிய இரண்டு காலனிகள் உள்ளன. இந்த இரண்டு காலனிகளிலும் 90 வீடுகள் உள்ளன. இந்த இரண்டு காலனிகளிலும் வீட்டுமனை கோரிமனை வரப் பெறாததால் ஆர்சித நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.



(v) மா. கொளக்குடி

இந்த கிராமத்தில் கீழ்க்கண்ட மூன்று அரிசன காலனிகள் அமைந்துள்ளன:—

| காலனியின் பெயர். | ரி.ச. எண். | விஸ்தீரணம் ஏக்கர். | மொத்த. வீடுகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. புதுத்தெரு காலனி .. | 35/1 | .. | 84 |
| 2. கீழ்த்தெரு காலனி | 34/3 | 2·80 | 90 |
| 3. இலுப்பைத்தோப்பு காலனி. | 28/4 | 3.49 தோப்பு புறம் போக்கு. | 74 |
| | 29/3 | 1·26 | .. |

இவைகளில் ரி. ச. 34/3ல் 2.80 ஏக்கர் நிலம் ஆர்சிதம் செய்யப்பட்டு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

## இணைப்பு VII.

(திரு. இரா. தாமரைக்கனி, எம்.எல்.ஏ. அவர்களால் கேட்கப்பெற்ற வினா எண். 42-க்கான விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் (1980–81) நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(இ) வைகை அணையில் அமைந்துள்ள தமிழ்நாடு வன வளர்ப்புப் பயிற்சி பள்ளி 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாடு வனத்துறையைச் சேர்ந்த வனப்பணியாளர், வனக் காப்பாளருக்குப் பயிற்சி அளிப்பதே பயிற்சிப் பள்ளியின் நோக்கமாகும். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் வைகை அணை கட்டப்பட்டபோது, பொதுப் பணிகள் துறையினரால் தாற்காலிகமாக கட்டப்பட்ட கட்டிடங்களில் இப்பள்ளி அமைந்துள்ளது. கட்டிடத்தின் நிலைமை திருப்திகரமாக இல்லை. விடுதியில் உள்ள பயிற்சியாளர்களுக்கு வசதிகளும் மிகக் குறைந்த அளவிலே உள்ளன. மேற் குறித்தவைகளை கருத்திற்கொண்டு, ரூ. 20 லட்சம் செலவில் புதிய விடுதி, உணவுக் கூடம் மற்றும் பிற வசதிகள் செய்யவும், நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு தமது 16–9–1980 தேதியிட்ட அரசு ஆணை (பலவகை) 1194 (வன & மீன்)-ல் உத்திரவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | பயிற்சியாளர்களுக்கு விடுதி .. .. | 14·00 |
| 2. | உணவு விடுதி, உணவுக்கூடம் முதலியன .. | 3·00 |
| 3. | பயிற்சியாளர் விடுதி மற்றும் உணவு விடுதிக்கு செல்லும் பாதைகள் அமைத்தல். | 0·80 |
| 4. | குழாய்க் கிணறு நிறுவி, தண்ணீர்த் தொட்டிகள் அமைக்க. | 1·00 |
| 5. | பயிற்சியாளர்களுக்கு கட்டில், நாற்காலி, மேஜை மற்றும் அலமாரிகள் வழங்க (100 பயிற்சியாளர்கள் தலா ரூ. 1,000). | 1·00 |
| 6. | உணவு விடுதிக்கு தேவையான தட்டுக்கள், டம்ளர்கள் சமையல் பாத்திரங்கள் மற்றும் தட்டுமுட்டு சாமான்கள். | 0·20 |
| | மொத்தம் .. | 20·00 |





கட்டிடம் கட்டும் பணியை பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரிடம் ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளருக்கு விடுதியும், உணவு விடுதியும் முதலியவைகளை கட்ட, கட்டிட வரைவு மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளருக்கு (கட்டிடங்கள்) பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. வரைவு மற்றும் மதிப்பீடுகளைப் பரிசீலனைக்கு வனத்துறை தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது. வரைவு மற்றும் மதிப்பீடுகளைப் பரிசீலனை செய்து அரசு அங்கீகாரம் அளித்ததும் கட்டிடப் பணி பொதுப்பணி துறையினரால் மேற்கொள்ளப்படும்.

## இணைப்பு VIII.

(திரு. து. புருஷோத்தமன் : எம். எல். ஏ. அவர்களால் கேட்கப்பட்ட
வினா எண். : 415-க்கான விடையைக் காண்க)

சென்னை மாவட்டத்திற்காக பிற்பட்டோர் நலனுக்கென 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பெற்ற தொகை மற்றும் அவை செலவழிக்கப்பட்ட வழிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை:—

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். | ஒதுக்கப்பட்டத் தொகை. | | செலவழிக்கப்பட்ட தொகை. | |
|---|---|---|---|---|
| | 1978–79 | 1979–80 | 1978–79 | 1979–80 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரங்களில்.) | | | |
| (அ) பிற்பட்டோர் நலன் : | | | | |
| 1. பிற்பட்டோர் நல விடுதி .. .. | 669 | 666 | 613 | 565 |
| 2. விடுதி மாணவர்களுக்கான சீருடைகள் .. | 8 | 12 | 13 | 1 |
| 3. பிற்பட்டோர் மாணவர்களுக்கான உணவு மானியம். | 55 | 57 | 57 | 57 |
| 4. சைதாப்பேட்டை நரிக்குறவர்கள் இல்லத்தில் உள்ள நரிக்குறவர்கள் மாணவர்களுக்கென உணவு மானியம். | .. | .. | .. | 33 |
| 5. பின்தங்கிய வகுப்பினர் பள்ளிப் படிப்புக்கான உதவித் தொகை. | 73 | 87 | 64 | 76 |
| 6. பின்தங்கிய வகுப்பினர் கல்லூரி படிப்புக்கான உதவித் தொகை. | 2,343 | [illegible]87 | 2,052 | 1,950 |
| 7. பின்தங்கிய வகுப்பினருக்கான கடன் உதவித் தொகை. | 13 | 15 | 13 | 15 |
| 8. முடி திருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர்களுக்கென தொழிற் கருவிகள். | 49 | 69 | 59 | .. |
| 9. இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்தியக் காவல்பணி படிப்புக்கென் தனிப் பயிற்சி நிலையம். | 241 | 278 | 245 | 254 |
| 10. இயங்கும் சலவையகம் துவங்குவதற்கான மானியம். | 1 | 3 | 1 | .. |
| மொத்தம் .. | 3,392 | 4,044 | 3,117 | 2,951 |
| (ஆ) குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலன்1— | | | | |
| 1. குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களின் பள்ளிப் படிப்புக்கென உதவித் தொகை— | 2 | .. | 37 | .. |
| 2. குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களின் கல்லூரிப் படிப்புக்கென உதவித் தொகை. | 115 | 100 | 48 | 38 |
| மொத்தம் .. | 117 | 100 | 85 | 38 |

## இணைப்பு IX.

**திரு. என். எஸ். வி. சித்தன், எம்.எல் ஏ. அவர்களால் கேட்கப் பட்ட வினா எண் 420-க்கான விடையை காண்க.**

மதுரை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு மதுரையின் வட பகுதியில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கும் பணி ரூபாய் பதிமூன்று இலட்சம் மதிப் பீட்டில் துவங்கி கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இந்தப் புதிய பேருந்து நிலையம் ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டுக்குள்ளாக அதாவது 1981 ஜனவரி திங்களுக்கு முன்னர் திறக்கப்பட்டு செயல்பட விருக்கிறது. இந்தக் கூடுதல் பேருந்து நிலையம் செயல்பாட் டுக்குவரின் மதுரை நகருக்கு வடக்கேயும், கிழக்கேயும் செல்ல பேருந்துகள் மதுரை வடபகுதி பேருந்து நிலையத்திலிருந்து இயங்குமாறு வசதி செய்யப்பட்டுள்ளமையால், மதுரை மத்திய பேருந்து நிலையத்தில் பெருமளவு இட நெரிசல் குறைய வாய்ப் புள்ளது.

மத்திய பேருந்து நிலையத்திற்குள், பிளாட்பாரத்தில் சிறுசிறு கடைகளைப் பரப்பி வைத்திருந்ததால், பிரயாணிகள் நிற்கவோ, அங்குமிங்கும் நகரவோ முடியாத வகையில் நெரிசல் இருந்தது. மேற்கண்ட சிறிய கடைகளை எல்லாம், தலைச்சுமையாக மாற்றிச் செயல்பட்டதால், நெரிசல், சிறிது குறைந்திருக்கிறது எனக் கொள்ள முடிகிறது.

மத்திய பேருந்து நிலையத்தை மாற்றிச் சீரமைத்து நவீனப் படுத்தும் ஒரு திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் முன் னிலையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்துடன் ஆலோசிக்கப்பட்டது. அதன்படி பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்தை ஒரு திட்டம் தீட்டி, செயல்படுத்தக் கோரப்பட்டது. அதற்கான செலவை மாநகராட்சி கொடுப்பது எனவும் பேசப்பட்டது. மேற்கண்ட திட்டம் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கிறது. ஒரு வேளை மேற்கண்ட திட்டம் செயல் படும்போது நிலையம் இன்னும் சீரடையும்.



## இணைப்பு X

**(வினா எண் 231-க்கான விடையைக் காண்க.)**

(அ) வேதாரண்யம் பகுதியில் சுமார் 2,000 ஏக்கர் நிலத்தில் புகையிலை பயிரிடப்படுகிறது. பெரும்பாலும் இப்பகுதியில் வி. ஆர். 2 என்ற வாய் புகையிலை (Chewing tobacco) ரகமே சாகுபடி செய்யப்படுகிறது. சராசரி மகசூல் ஏக்கருக்கு 900 முதல் 1,100 கிலோ ஆகும்.

தமிழ்நாட்டில் வாய் புகையிலை ரகம் தஞ்சாவூர், இராம நாதபுரம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் மட்டுமே பெருவாரி யாக உற்பத்தி ஆகிறது. இதனைப் பதப்படுத்தி சிறு சிறு பொட்டலங்களாக தயாரித்து விநியோகம் செய்யும் வணிகத்தில் ஒரு சில புகையிலை வியாபாரிகளே ஈடுபட்டுள்ளனர். ஆதலால், புகையிலை அதிக அளவு உற்பத்தி ஆகும் காலங்களில் குறிப்பாக அறுவடை முடிந்து ஒரு சேர விற்பனைக்கு வரும் சமயம் புகை யிலை விற்பனையில் ஒரு மந்த நிலைமை ஏற்படுகிறது. இதன் காரணமாகவே தற்பொழுதும் வேதாரண்யம் பகுதியில் புகை யிலை விற்பனை ஆகாமல் தேங்கி உள்ளது எனத் தெரிய வரு கிறது.

வேதாரண்யம் பகுதியில் புகையிலை சாகுபடியாளர்கள் விலை இறக்கங்கள் மற்றும் விற்க இயலாத நிலைமையும் அடிக்கடி எதிர்நோக்க நேரிடுகிறது. இதற்கு காரணம் குறிப்பிட்ட சில பெரிய வியாபாரிகள் ஒரு முகமாக விலையைக் குறைத்துக் கொண்டு உற்பத்தியாளர்களை நிர்பந்த விலைக்குத் தள்ளிவிடு கிறார்கள். இந்நிலையில் புகையிலை விவசாயிதன் சரக்கை வெளி இடங்களுக்கு எடுத்து சென்று விற்பதற்கும் வாய்ப்பில்லாமல் இருக்கிறது.

வேதாரண்யத்தில் இயங்கி வரும் கூட்டுறவு விற்பனை சங்கமும் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் தேங்கி யிருக்கும் புகையிலையினைப் பெருவாரியாகக் கொள்முதல் செய்ய இயலாத நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. அங்குள்ள விவசாயிகள் ஆர்வத்துடன் ஒழுங்கு முறை விற் பனைக் கூடத்தில் விற்பதற்கு முயன்றாலும், வியாபாரிகளின் சரியான ஒத்துழைப்பு இன்மையால் நல்ல முறையில் சரக்கை விற்க இயலாத நிலை ஏற்படுகிறது.

(ஆ) புகையிலையைக் கொண்டு எந்த தொழில் அமைக்கும் திட்டமும் அரசுக்கு இல்லை.

### வினா—விடைப் பட்டியலிலுள்ள அச்சுப் பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 6 | 37 | 373 |
| 3 | 37 | காரம் | சாரம் |
| 5 | 8 | Steps to | Steps taken to |
| 5 | 13 | taa | tax |
| 6 | 2 | சேர பெற்ற | சேரபெறப்பெற்ற |
| 11 | 23 | Untt | Units |
| 13 | 17 | நறுக்காட்டூர் | நடுக்காட்டூர். |
| | | தீழ் அருணசைபரம் | கீழ் அருணாசலபுரம் |
| 13 | 30 | தகவாறுகள் | தகராறுகள். |
| 14 | 6–7 | வில்தவநாதபுரத்தில் | வில்வநாதபுரத்தில் |
| 14 | 20 | செ டுக்கப்படுவதில்லை | கொடுக்கப்படுவதில்லை |
| 15 | 1 | பெருபிட்கள் | பொருட்கள் |
| 15 | 5 | ப திக்கப்படுகிறது | பாதிக்கப்படுகிறது |
| 17 | 7 | சட்டமியற்றுளாறு | சட்டமியற்றுமாறு |
| 17 | 27 | ரூப . ாய் | ரூபாய் |
| 31 | 25 | வசதிகள்ளி | வசதிகள் |
| 32 | 13 | தொளசம்பட்டி இரம ஏரி | தொளசம்பட்டி இராம ஏரி. |
| 50 | 15 | இது 8 5 சதவீதம் | இது 8.5 சதவீதம். |
| 51 | 20 | திரு ரா. தாமரைக்கனி : | திரு இரா. தாமரைக்கனி |
| 52 | 2 | இளையான்குடி வியூபனுக்கு | இளையான்குடி புளியபுனுக்கு |
| 61 | 30 | Functioning of | Functioning at |
| 61 | 33 | Ministre | Minister |
| 62 | 1 | (1) amall | (1) Small |
| 62 | 2 | (3) Major | (3) Majoi |
| 69 | 23 | சாலைக்கா | சாலைக்காக |
| 76 | 12 | 7 22 ஏக்கர்களில் | 7.22 ஏக்கர்களில். |
| 85 | 23 | 0 83 ஏக்கர் நிலம் | 0.83 ஏக்கர் நிலம். |
| 90 | 19 | பறம்போக்கு | புறம்போக்கு. |
| 90 | 15 | பிள்ளையார் தாங்கல் | பிள்ளையார் தாங்கல். |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 106 | 13 | லி குமளவு | பெருமளவு |
| 106 | 16 | 3 குருத்து | பேருத்து |
| 107 | 8 | Chewng tobcco | (Chewing tobacco) |

D
Y211,31 N81
N83.1452
18181

[திரு. அ. ரகுமான்கான்] [1981 மார்ச் 5

பொன்னியாறு என்று மாற்ற வேண்டுமென்று சொன்னாலும் கூட அந்தக் காரியம் மத்திய அரசாங்கத்தின் அனுமதியோடுதான் நடைபெற வேண்டியதாக இருக்கிறது.

கலைஞர் அவர்கள் இவைகளை எல்லாம் அன்றைக்கு மிகத் தெளிவாகச் சொல்லி, சாதாரண சின்னச் சின்ன நடைமுறை சிக்கல்களெல்லாம் எப்படி இருக்கின்றன என்பதைக் கோடிட்டுக் காட்டினார்கள்.

கோட்டையிலே பறக்கின்ற அந்தக் கொடி கிழிந்து விட்டால் அதைத் தைக்கின்ற அதிகாரம் சட்ட ரீதியாக மத்திய அரசுக்குத் தான் உண்டு. கோட்டையைச் சுற்றி இருக்கக்கூடிய புல்வெளி யைச் சுத்தப்படுத்த வேண்டுமென்று சொன்னாலும் சட்ட ரீதி யாக அந்த அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் உண்டு. தேசீய நெடுஞ்சாலையில் ஒரு பாதை போய்க் கொண்டு இருக்கிறது. அதில் ஒரு குழாய் போட வேண்டுமென்றாலும் சட்ட ரீதியாக மத்திய அரசுக்குத் தான் அந்த அதிகாரம் இருக்கிறது. இப் படிப்பட்ட சின்னச் சின்ன அதிகாரங்கள் மத்திய சர்க்காரின் கையிலே இருக்கக் கூடாது என்று சொல்வது பிரிவினை வாதம் அல்ல. அது நம்முடைய பிரதமருக்கு எதிராகப் பேசப்படுகின்ற வாதம் அல்ல. இன்னும் சொல்லப் போனால் உங்கள் கவனத திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், கொண்டு வந்து விரைவில் என்னுடைய உரையை முடிக்க விருப்புகிறேன்.

[பிற்பகல் 1-10]

இன்றைக்கு என்ன நிலமை இருக்கிறது என்று கேட்டால், திரைப்படத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இன்றைக்குத் திரைப் படம் எங்கே தயாரிக்கப்படுகிறது? சென்னையிலே, கோடம் பாக்கம் போன்ற பகுதிகளில் தயாரிக்கிறார்கள். ஆனால் இன்-றைக்கு அந்தத் திரைப்படத்தைத் தணிக்கை செய்யும் அதிகாரம் மததிய அரசாங்கத்திடம் இருக்கிறது. அதை ஏன் மாநில சர்க் காரே செய்யக்கூடாது. நம்முடைய சினிமாத் துறையைப் பற்றி தெரிந்த அமைச்சர் பெருமக்கள் இங்கே சிறப்பாக இருக்கிறார்கள் நல்ல முறையிலே தணிக்கை செய்யலாம். அதனால், அவர்கள் தப்பாக, தணிக்கை செய்கிறார்கள் என்று பொருள் அல்ல. அது மாநிலம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னை. இங்கே இருக்கக் கூடிய சில தன்மைகளை, அங்கே மத்திய சர்க்கார் பிரதிநிதிகள் பரிசீலிப்பதைக் காட்டிலும், மாநில சர்க்கார் பிரதிநிதிகள் சிறப் பாகப் பரிசீலிக்க முடியும்.



1981 மார்ச் 5] [திரு. அ. ரகுமான்கான்]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அது மட்டுமல்ல, இதிலே இன்னொரு பிரச்னை என்னவென் றால், இன்றைக்கு என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ் இருக்கிறது. அதைப்பற்றி உங்களுக்குத் தெரியும். தமாஷாவரி என்று வட மொழியிலும், கேளிக்கை வரி என்று நம்முடைய மொழியிலேயும் சொல்லப்படுகிறது. அந்த தமாஷா வரிக்கும் ஆபத்து வரக் கூடிய வகையிலே இன்றைக்கு இந்த சினிமாத்துறை வரி கன் கரன்ட் லிஸ்டிலே போய்விட்டது. பொதுப் பட்டியலுக்குப்போய் விட்டது. பொதுப் பட்டியல் என்று சொன்னால் என்ன அர்த் தம்? பொதுப் பட்டியல் என்று சொன்னால், மத்திய சர்க்கார் அதிகாரம் செலுத்தலாம் என்று மறைமுகமாக அர்த்தம். அப்படி யானால், அந்த தமாஷா வரியின் மூலமாக வந்திருக்க வேண் டிய வரிகள் கூட நம்மைவிட்டுப் போய்விட்டது. இந்தச் சபை யிலே கூட அதை விவாதிக்க முடியாத ஒரு சூழ்நிலை எல்லாம் அன்றைக்கு ஏற்பட்டது, பரவாயில்லை, அது பிறகு வரும் என்று நம்புகிறேன்.

அது மட்டுமல்ல, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், இந்தி திணிக்கப்படக்கூடாது என்பதிலே அண்ணா உறுதியாக இருந்தார். நாங்களும் உறுதியாக இருக்கிறோம். இந்த மன்றத்திலே கலைஞர் அவர்கள், மாநில சுயாட்சி கொள் கையைத் தீர்மானமாகக் கொண்டு வந்து அன்றைக்கு நிறைவேற்றி புனிதமான காரியத்தைச் செய்ததைப்போல, இதே மன்றத்திலே, இன்னொரு புனிதமான தீர்மானம் அதற்கு முன்னால் நிறை வேற்றப்பட்டது. அதுதான், இங்கே இந்திக்கு இடம் இல்லை, இரு மொழிக் கொள்கைக்குத்தான் இடம் என்று அன் றைக்கு அண்ணா அவர்கள் நிறைவேற்றிய தீர்மானமாகும்.

நான் கேட்கிறேன், இன்றைக்கு நம்முடைய ஆளுங்கட்சிக் காரர்கள் இந்திரா அம்மையார் மீது மிகவும் நம்பிக்கை வைத் திருக்கிறார்கள். இந்திய மீனாட்சி என்று சொல்கிற அளவுக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள், வரவேற்கிறேன். நான் அதை ஒன் றும் குறை சொல்லவில்லை, ஆனால், நான் சொல்லவிரும்பு வதெல்லாம், இந்திரா அம்மையார் அவர்கள் இந்தியைத் திணிக்க மாட்டார்கள் என்ற அந்த நம்பிக்கையை அவர்கள் ஏற்றுக்கொண் டிருக்கிறார்கள். சட்டமன்றத் தேர்தலிலே வேறு ஒரு நிலை எடுத்தார்கள், இப்பொழுது வேறு நிலை எடுத்திருக்கிறார்கள். அதுதான் அவர்கள் நிலை. அது வேறு விவகாரம். ஆனால், என்னைப் பொறுத்தமட்டில், நாளையதினம், இந்திரா அம்மையார் இந்தியைத் திணிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிச்சயமிருக்கிறது. உங் களுக்கு லேட்டாக அந்த நம்பிக்கை வந்திருக்கிறது. பரவா யில்லை, ஏற்றுக்கொள்கிறோம்' ஆனால் நாளைக்கு அந்த அம் மையாருக்குப் பிறகேகூட, யாராவது டெல்லியிலே இருக்கக்கூடிய